மிங்கைகுயபார்
சுடம்



மூல ஆசிரியர் :

பெர்ல் எஸ். பக்

தமிழாக்கம் :

எஸ். ஜெயலட்சுமி


வீற்பனை உரிமை

மெர்க்குரி புத்தகக் கம்பெனி

ராஜ வீதி - கோயமுத்தூர் - 1.

முதற் பதிப்பு: 1262
'மல்லிகா' வெளியீடு: 43 (28)

011.3MBU.P
3/N63



விலை ரூ. 12 - 50

புரோகிரசிவ் பிரிண்டர்ஸ்,
சென்னை-1.

முன்னுரை

உலகப் புகழ் பெற்ற திருமதி பெர்ல் எஸ். பக்கின் 'Pavilion of Woman' என்ற ஆங்கிலக் கதையின் மொழி பெயர்ப்பே இந்த நவீனம். சீனத்துப் பின்னணியை மையமாக வைத்து, சிறந்த நாவல்கள் பல எழுதி இலக்கிய உலகில் புகழினையும், நோபல் பரிசினையும் பெற்ற அமெரிக்க ஆசிரியையான அவருடைய ஒப்பற்ற நவீனம் இந்த 'மங்கையர் கூடம்' என்று சொன்னால் அது மிகையாகாது.

சற்றேறக்குறைய ஐம்பதாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தை ஒட்டிய, சீன மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டக்கூடிய அற்புதமான உணர்ச்சிமயமான நாவல் இது. காலம் ஏதாயினும் வாழ்க்கையின் நுண்ணிய பல அம்சங்களும், பிரச்னைகளும் உள்ளடங்கிக் காணப்படுகின்றது இந் நாவலில்.

பொதுவாக, ஆண்—பெண் இருவர்க்கிடையே ஏற்படக் கூடிய பல்வேறு உறவு நிலைகளை அழகிய முறையில் சித்தரித்துக் காட்டுகிறார் ஆசிரியை.

நாவலின் நடுநாயகமாக விளங்கும் ஸ்ரீமதி ஊ என்ற பாத்திரப் படைப்பும், இலகுமெனத் திகழும் சகோதரர் ஆண்ட்ரூ என்ற பாத்திரப் படைப்பும் ஆன்மாவை விழிப் படையச் செய்யும் உன்னதச் சித்திரங்களாகும்.

ஸ்ரீமதி ஊவின் மனத்தின் எழுச்சி—வளர்ச்சி—பரிபக்குவ நிலை—இவையே கதையாக வளர்கிறது. சராசரி மனிதனுக்கு

ஏற்படக் கூடிய குழப்ப நிலைகளும், ஆசை எண்ணங்களும், சஞ்சல புத்தியும் நவீனமெங்கும் கொப்பளித்துக் குமுறு வதைக் காண்கிறோம்.

சகோதரர் ஆண்ட்ரூ வாழ்க்கையில் பூரணத்துவத்தைக் கண்டவர். உலக வாழ்க்கையின் இன்ப—துன்பங்களை கடந்து நின்று பெரு வாழ்வு எய்தியவர். இகவாழ்வில் பொதுவாக அனைவரும் அநுபவிக்கத்தக்க இன்பத்தை அடையாதவரா யினும் பரலோகத்தில் நிலையான இன்பத்தை அடைந்தவர். அவர் அறிவுக் கடல். சாதாரண மனிதனுக்கு எது இன்பம் எனத் தோன்றுகிறதோ—அதை—அந்த இன்பத்தை—அவர் மாயை எனக் கண்டவர். அன்பின் வழியைப் பின்பற்றி அழியாத் தன்மை பெற்ற அமரத்துவம் பெற வழிகாட்டி யவர்.

மற்றும் நாவலில் இடம்பெறும் சகோதரி ஹேஷியா, கேங், லின்யி, மெங், இங், லியாங்மோ, பெங்மோ, த்ஸேமோ, சியூமிங்—மற்றும் பலரும் வாழ்க்கை இன்பத்தின் பலதிறப் பட்ட கூறுகளை நமக்குக் கோடிட்டுக் காட்டுகிறார்கள்; வாழ்க்கை இன்பத்தின் எல்லைக் கோடுகளையும் சுட்டிக் காட்டு கிறார்கள்.

வாழ்க்கையின் இன்பம் என்று நாம் எதை எதைக் கருது கிறோமோ, அவைகளையே நாவலின் மையமாக வைத்துத் திறம்பட விளக்கியுள்ளார் திருமதி பெர்ல்பக்.

பொதுவாக இந்நாவலின் குறிக்கோள் இதுதான்: ஆண்—பெண் இருவர் வாழ்விலும் அறிவின் விழிப்பு ஏற்படு கையில் உணர்ச்சிக்கும் கொள்கைக்கும் பெரும் போராட்டம் நிகழும். ஆண்கள் சுதந்திர வாழ்க்கையை மிகச் சுலபமாகவும், சர்வ சாதாரணமாகவும் பின்பற்றத் தொடங்கி விடுவதைப் போன்று, பெண் இனத்தாரால் முடிவதில்லை. பற்பல தடை களையும் மீறி சுதந்திர வாழ்வை மேற்கொள்ள நினைக்கும் போது எண்ணற்ற இடையூறுகளும், சொல்லொணாத் துன்பங் களும் வந்து சூழ்கின்றன. பெண்கள் பொதுவாக, பிறரையே

சார்ந்து வாழ வேண்டியிருப்பதால் அவர்கள் தங்களுக்காக வாழ்வது என்பது கடினமாகவும் கஷ்டமாகவும் ஆகிவிடு கின்றது. காரணம், பெண்களிடமிருந்து இதற்கேற்ற மனத் திட்பத்தையும், துணிவையும் எவரும் எதிர்பார்ப்பதே இல்லை.

மக்கள் அனைவரும் கடமைக்காக அல்லாமல் அன்பிற் காகவும் வாழ வேண்டும். காரணம், சோர்வு வீழ்ச்சிகளும், துன்ப நினைவுகளும் அன்பில் அழியும்; அன்பிற்கு அழிவில்லை யல்லவா?

இந்நாவல் பொழுது போக்கு நாவல் என்ற முறையில் அமைந்ததோடல்லாமல், மிகச் சிறந்த கருத்து நவீனமாகவும், ஆழ்ந்து படித்தற்கேற்ற வாழ்க்கையின் உண்மைகளை உணர்த்தும் அற்புத கதை நவீனமாகவும் அமைந்திருக்கிறது.

வாழ்க்கையின் பயனை அறிந்து கொள்வதற்கும், அதன் இன்பத்தினை நுகர்ந்து உலகில் நெறிப்படி வாழ்வதற்கும் இந்த நவீனம் வழி செய்யும் என்பது என் கருத்து.

இந்த அழகிய நவீனத்தை மிகச் சிறந்த முறையில் நூல் வடிவாகக் கொணர்ந்த பதிப்பகத்தாருக்கும், இந்நூலை தமிழில் வெளியிட அநுமதித்தந்த அப்பர் இந்தியா பப்ளிஷிங் ஹவுஸ் நிறுவனத்தாருக்கும் என் நன்றி.

எஸ். ஜெயலட்சுமி.

பதிப்புரை

மனித வாழ்க்கையின் அகல—ஆழத்தை, ஏற்றத் தாழ்வுகளை, வழுக்கல் சறுக்கல் களையே நவீனத்தின் கதைப்பொருளாகவும் கருப்பொருளாகவும் கொண்டு நவீனத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்லும் ஆசிரியர்களுள் பெர்ல் எஸ். பக் மிகச் சிறந்தவர் என்பதை இலக்கிய உலகறியும். நவீன இலக்கிய உலகில் இவர் தனக்கென தனி இடத்தைத் தேடிக்கொண்டவர்; உலகப் பரிசான நோபல் பரிசைப் பெற்றவர்.

அந்த ஆசிரியையின் உணர்ச்சிக் குமுறலான 'Pavilion of Woman' என்ற ஆங்கில நூல்தான் 'மங்கையர் கூட'மாக தமிழில் வெளிவந்துள்ளது.

மக்களின் சஞ்சலம், சபலம், ஆசைவெறி, மோகவெறி, பந்தபாசம் போன்ற மன இயல்புகளைத் தமது அருமையான பாத்திரப் படைப்புகளின் மூலமாகச் சித்தரித்திருக் கிறார். அவற்றின் சர்வசாதாரண கூறுபாடு களை வைத்தே மிகச் சிறந்த உண்மைகளை நமக்கு விளக்குகிறார்.

இந்த நவீனத்தைத் திறமையாக சுவை யான தமிழில் தந்தவர் திருமதி எஸ். ஜெய லட்சுமி. பெண் ஆசிரியை எழுதிய நவீனத்தை பெண் ஆசிரியையே மொழி பெயர்த்தது மிகப் பொருத்தமானதே. பெண்ணின் உளப்பாங்கு மற்றொரு பெண் ணிற்குத்தானே தெரியும்! பாம்பின்கால் பாம்பறியும் அல்லவா?

நல்ல தமிழில்—மொழி பெயர்ப்பு என்றே தெரியாமல் விறுவிறுப்பான நடையில் கதை ஓட்டத்தைத் தடைபடுத்தாமல் மொழி பெயர்த்த ஆசிரியைக்கு நன்றி.

பிறநாட்டு நல்லறிஞரின் கதை நவீ னத்தைத் தமிழுலகம் வரவேற்குமாக!

—பதிப்பாளர்.

மங்கையர் கூடம்

1

அன்று அவளுடைய நாற்பதாவது பிறந்த நாள். அதி காலையில் எழுந்த ஸ்ரீமதி ஊ, தனது அலங்கரித்துக் கொள்ளும் நிலைக்கண்ணாடியின் முன்பு வந்து உட்கார்ந்து அதில் தோன்றிய தனது பிம்பத்தை அமைதியுடன் உற்று நோக்கலானாள். இதே போல் அவள் முன்பு ஒருநாள் செய்திருக்கிறாள். அன்று அவளுடைய மணமான மறுநாள். அப்போது அவளுக்கு வயது பதினாறு. எப்பொழுதும் அதிகாலையிலேயே எழுந்திருக்கும் வழக்க முடைய அவள், அன்றும் படுக்கையறையிலிருந்து விரைவிலே எழுந்து, புதிய மணப்பெண்ணின் ஆடைகளுடனே இதே அறைக்குள் வந்து இதே நிலைக் கண்ணாடியின் முன்பு அமர்ந்தாள். அன்றும் இதே போல், தனது சஞ்சலமற்ற சுபாவத்தின்படி, அமைதியாக உட்கார்ந்து தனது இளம் முகத்தை ஆராய்ந்து பார்க்கலானாள்.

மணமான முதல் நாள் காலையான அன்று அவள், 'நேற்று நான் இருந்தது போலவே இன்று இருக்கிறேன் என்று சொல்ல முடியுமா?' என்று தனக்குத் தானே வினவிக் கொண்டாள்.

நேற்று கன்னிகைத் தன்மை அறியாது காணப்பட்ட அதே முகத்தில் இன்று அது அழிந்து காணப்பட்டது. தனது அகன்ற தாழ்வான நெற்றி, நீண்ட கண்கள், அழகிய மூக்கு, நீண்ட வட்டவடிவமான கன்னங்கள், அழகிய சிறு வாய் இவற்றை உற்று நோக்கினாள். அன்று காலை அவளுடைய வாய் அதிகமாக சிவந்து காணப்பட்டது. அச்சமயம் அவளுடைய புதிய வேலைக்காரியான இங் அவசரமாக உள்ளே நுழைந்தாள்.

அவளே அங்கு எதிர்பாராத இந் தடுமாற்றத்துடன், "ஓ, நீங்கள் இங்கு இருக்கிறீர்களா? நீங்கள் இன்று இவ்வளவு சீக்கிரம் எழுந்திருக்க மாட்டீர்கள் என்று நினைத்தேன்" என்றாள்.

ஸ்ரீமதி ஊவினுடைய கன்னங்கள், சிவந்த வாய்க்கு மேல் எப்போதும் போல் முகத்தைப் போன்ற வெண்மையுடன் விளங்கியது. "நான் எப்போதும் அதிகாலையில் எழுந்திருப் பதைத் தான் விரும்புகிறேன்" என்றாள் அவள் தனது மதுர மான குரலில். முந்தின இரவுதான் அக்குரலைப் பற்றி, அவள் முன்பு பார்த்தறிந்திராத அவ்வாலிபன், அது பாடுகின்ற பட்சியின் குரலை ஒத்திருக்கிறது என்று கூறியிருந்தான்.

இச்சமயம், அதாவது இருபத்திநான்கு வருடங்களுக்குப் பிறகு, தனது எஜமானியின் எண்ணங்களை ஊகித்தறிந்தவள் போன்று இங் பேசலுற்றாள். ஸ்ரீமதி ஊ அப்பெரிய சிவப்பு மர நாற்காலியில் உட்கார்ந்திருக்க, இங் பின்புறம் நின்று, அவளுடைய கரிய, பளபளப்பான நீண்ட கூந்தலை வாரி முடிப்பதில் ஈடுபட்டிருந்தாள். பல வருஷங்களாகச் செய்து வந்த பழக்கத்தின் காரணமாக அவளுடைய கைகள் தாமாக அதைச் செய்து கொண்டிருக்க, அவள் கண்ணாடியில் தோன்றிய அந்த அழகிய முகத்தை நோக்கி பேசினாள்.

"அம்மா! நீங்கள் இந்த இருபத்திநான்கு வருஷங்களில், ஒரு சிறிதும் மாறவேயில்லை!" என்றாள்.

"அன்றைய தினத்தை நீயும் நினைவு வைத்திருக் கிறாயா?" என்று கேட்ட ஸ்ரீமதி ஊ, கண்ணாடியின் மூலம் இங்கை அன்புடன் பார்த்தாள். இங் இப்போது பெருத்திருந் தாள். அவள் அவர்கள் வீட்டுத் தலைமை சமையல்காரனை மணந்து இருபது வருடங்களாயின. ஆனால் ஸ்ரீமதி ஊவோ முன்போலவே கொடி போன்றிருந்தாள்.

இங் பலமாகச் சிரித்து விட்டு, "அன்று உங்களை விட எனக்கு அதிக வெட்கமாக யிருந்தது. அப்போது என்னவோ ஒரு காரணமுமில்லாத வெட்கம்! ஆண் பெண்களின் தொடர்பு அப்போது என்னவோ மிக விசித்திரமாகத் தோன்றியது! இப்போதோ எல்லாம் சர்வ சகஜமாகி விட்டது" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ பதில் கூறாமல் மௌனமாகப் புன்னகை செய்தாள். அவள் இங்கிற்குப் பேச்சு சுதந்திரத்தைப் பூரண மாக அளித்திருந்தாள். ஆனால் தனக்குப் பேச்சை வளர்த்த

விருப்பமில்லாத சமயங்களில் ஒரு புன்னகை செய்வதோடு நிறுத்திக் கொள்வாள். ஆகவே இங் இப்போது மௌன மானாள். அவள் தன் கையில் பிடித்திருந்த மிருதுவான கேசம் சரியாக வராததுபோல் பாவனை செய்து அதிருப்தியுடன் உதட்டை அழுத்திக் கொண்டு அதைக் கீழே ஒரு முறை விட்டுவிட்டு மறுபடியும் எடுத்து சரி செய்தாள். வாரி முடித்து விட்டு இரண்டு பச்சைக் கல்லிழைத்த ஊசிகளைக் கொண்டை யின் இருபுறமும் செருகி விட்டு, வாசனை தைலத்தை கையில் ஊற்றி மீண்டும் ஸ்ரீமதி ஊவின் தலையில் தடவி விட்டாள்.

"அந்த பச்சைக் கல்லிழைத்த காதணிகள் இருக் கின்றனவா?" என்று ஸ்ரீமதி ஊ தனது இனிய குரலில் கேட்டாள். அக்குரலிலிருந்த குழைவு, அதில் பொதிந்திருந்த பொருளை மறைத்தது.

"இன்று தாங்கள் அதை அணிய விரும்புவீர்களென்று எனக்குத் தெரியும், இதோ தயாராக வைத்திருக்கிறேன்!" என்றாள் இங்.

ஒரு சிறு வெல்வட் பெட்டியைத் திறந்து அதிலிருந்த காதணிகளை எடுத்து ஜாக்கிரதையாக ஸ்ரீமதி ஊவின் சிறிய காதுகளில் பொருத்தினாள் இங். இருபத்திநான்கு வருஷங் களுக்கு முன் இளைஞரான ஸ்ரீமான் ஊ, இதே சமயத்தில் இந்த அறைக்குள் பிரவேசித்தார். இங் தனது எஜமானிக்கு நீள கைவைத்த சிவப்பு ஸேடின் சட்டையையும், பட்சிதரும் பூக்களுமாகத் தையல் வேலைப்பாடு செய்திருந்த கருப்பு பட்டு பாவாடையையும் அணிவித்திருந்தாள். ஸ்ரீமான் ஊ தமது கையில் இந்தப் பெட்டியைப் பிடித்திருந்தார். அவருடைய கண்களில் நித்திரையினுலுண்டாகும் சுகம் நிரம்பி யிருந்தது. மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்பவரான அவர் பணிப் பெண்ணின் முன்பு தமது மனைவியுடன் பேசாமல், இங்கிடம் அப்பெட்டியைக் கொடுத்து," இதை உன் எஜமானியின் காதுகளில் அணிவித்து விடு" என்று கூறினார்.

அந்நகையின் பிரகாசத்தைக் கண்டு இங் வாய்விட்டுக் கூவியவாறு, அதை மணப்பெண்ணின் கண்ணெதிரே பிடித்துக் காட்டினாள். அவள் கண்களை உயர்த்தித் தன் கணவனை ஒரு கணம் பார்த்து விட்டு, மிகுந்த வெட்கத்துடன் மறுகணம் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள். "மிக்க வந்தனம்" என்று மெதுவாகக் கூறினாள்.

அவர் தலையை அசைத்துவிட்டு, வேலைக்கார பெண் அவளுக்கு அதை அணிவித்து விடுவதைப் பார்த்தவாறு

நின்றிருந்தார். ஸ்ரீமதி ஊ அவ்விளைஞரின் ஆசையும் பெருமையும் ததும்பிய அழகிய முகத்தைக் கண்ணுடியில் பார்த்தாள்.

"ஆ!" என்றார் அவர் பெருமிதம் கொண்டவராய். அவர்களுடைய கண்கள் கண்ணுடியில் சந்தித்தன. இருவரும் ஒருவருடைய அழகை மற்றொருவர் பருகினர். அவர் இங்கை நோக்கி வெடுக்கென்று, "போய் எனக்கு தேநீர் கொண்டு வா" என்று கூறினர். அக்குரலுக்கேட்டுத் திடுக்கிட்டுப் போன அப் பெண் விரைந்து வெளியே சென்றாள்.

இரவில் இருந்தது போல், மீண்டும் இருவரும் தனியே விடப்பட்டனர். அவர் அவளருகே வந்து தமது கையை அவளது தோளின் மீது வைத்துக் கொண்டார். கண்ணுடியில் தோன்றிய அவளது முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீ அழகில்லாமல் மட்டும் இருந்திருந்தால் நேற்றிரவு படுக்கையிலேயே உன்னைக் கொன்றிருப்பேன். எனக்கு அழகற்ற பெண்களைக் கண்டாலே பிடிக்காது" என்று கூறினர்.

அவருடைய கையின் கீழ் அசையாமல் நின்று கொண்டிருந்த அவள் சற்றே புன்னகை செய்து, "அதற்கு என்னைக் கொல்ல வேண்டுமா? எங்கள் வீட்டிற்குத் திருப்பி அனுப்பினாலே போதுமே!" என்றாள்.

அன்று அவள் மிகவும் அதிர்ச்சியடைந்திருந்தாள். அவளுடைய இந்தக் கணவன் அழகாயிருப்பது போலவே புத்திசாலியாகவும் இருப்பானா? அப்படி கேட்பது ஒருவேளை அதிகமாக இருக்கலாம். ஆனால் அப்படி இருக்கக் கூடுமானால்...!

இந்த சமயம்...அதற்கு இருபத்திநான்கு வருஷங்களுக்குப் பிறகு, இப்போது இங், "இந்த நகை முன்பு உங்களுக்கு எவ்வளவு அழகாயிருந்ததோ அப்படியே இப்போதும் இருக்கிறது. வேறு எந்த பெண் நாற்பது வயதில் இப்படி எழிலுருவாய் இருக்க முடியும்! எஜமான் வேறு கல்யாணம் செய்து கொள்ள விரும்பாததில் ஒன்றும் ஆச்சரியமே இல்லை" என்று சொன்னாள்.

"உஷ்! பலமாகப் பேசாதே! எஜமானர் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறார்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"உங்களுடைய நாற்பதாவது பிறந்த நாளன்றுவது அவர் சீக்கிரம் எழுந்திருக்கட்டுமே!" என்று இங் பதிலளித்து விட்டுத் தன் மூக்கைப் புறங்கையால் தேய்த்துக் கொண்டாள். இத்தனை வருஷங்களுக்குப் பிறகுதான் ஸ்ரீமான் ஊவை நன்கு அறிந்திருந்ததாக அவள் எண்ணினாள். ஒன்று என்னவோ நிச்சயம்! அவ்வீட்டிலுள்ளோர் அனைவரும் ஒரே மனதாக நேசிக்கும் தமது அழகிய மனைவியின் மீது அவர் மிகுந்த ஆசை வைத்திருந்த போதிலும் அவர் இன்னும் போதிய அளவுக்கு அவளுடைய பெருமையை அறிந்து கொள்ளவில்லை என்பது இங்கின் அபிப்பிராயம். ஆம்! இவ்வீட்டில் வாழ்ந்துவந்த சுமார் அறுபது நபர்களில், ஸ்ரீமதி ஊவை நேசிக்காதவர் யார்? பெரிய எஜமானியாகட்டும் சின்னஞ்சிறு பேரக்குழந்தையாகட்டும் அல்லது ஹோன ஒரு வேலையாளாகட்டும் இவர்களில் யார்தான் அவளிடம் அன்பில்லாதவர்கள்? புதிதாக வரும் வேலைக்காரிகள் யாராவது எஜமானியம்மாளின் கண்டிப்பைப் பற்றி, எஜமானி மூலை முடுக்குகளிலிருக்கும் குப்பையைக் கூட பார்த்து விடுகிறாள் என்று ஏதாவது முனகினால் இங் அவளுடைய காதைப் பிடித்துத் திருகுவாள்.

"இது மேன்மை தங்கிய ஊ அவர்களின் குடும்பமாக்கும்! சாதாரண வேங் அல்லது ஹூவா இவர்களின் குடும்பம் என்று எண்ணிக்கொண்டாயா?" என்று இரைவாள். அவளுடைய கணவனை தலைமைச் சமையல்காரன் இதைக்கேட்டு பல்லியிளிப்பான். எஜமானிக்கு எதிராகப் பேசினால் இங் தன்னை சிறிதும் மதிக்கமாட்டாள் என்ற உண்மையை அவன் தன் வாழ்க்கையில் நன்கு அறிந்திருந்தான். ஆனால் உண்மையில், இந்த வீட்டில், நாட்டு பெண்களுக்குக் கூட குறை கூறிக்கொள்ளும்படியாக ஒன்றுமே இருக்கவில்லை. ஸ்ரீமதி ஊவின் திறமையான ஆட்சியில் அவ்விதம் நீதியும் கருணையும் ஒருங்கே அமைந்திருந்தது.

"இங், இப்போது முதலில் எனக்கு காலை உணவு கொண்டு வந்து கொடு. சாப்பிட்டதும் நான் சிறிது நேரம் என்னுடைய பெரிய மகனுடன் பேசவேண்டும். அதற்குப் பிறகு நீ என்னை மத்தியான விசேஷத்திற்காகத் தயார் செய்து விடுவாயாம்! ஆனால் உன் எஜமானரைக் கொஞ்சம் வளர்த்துக் கொண்டிரு. அவர் எழுந்ததும் எனக்கு உடனே தெரியப்படுத்து" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

"அப்படியே, அம்மா" என்று பதிலளித்து விட்டு, இங் நிலை விழுந்து விட்ட சீப்பைக் குனிந்து எடுத்தாள். ஸ்ரீமதி

ஊ உபயோகித்து வந்த அச்சிப்பு, வாசனை மிகுந்த சந்தன மரத்தினுலானது. அவள் உபயோகித்து வந்த தைலமும் சந்தனுநித் தைலமே. இங் சிப்பிலிருந்த நீண்ட மயிர்களை எடுத்து கவனமாகத் தன் விரலில் சுற்றி, அதை ஒரு நீலநிற பீங்கான் ஜாடியில் போட்டு வைத்தாள். தன் எஜமானியின் வயதான காலத்தில் இவை அவளுடைய கொண்டையைப் பலப்படுத்துவதற்கு, அவசியமாக இருக்குமென்று இங் அவற்றைப் பத்திரப்படுத்தி வந்தாள்.

ஸ்ரீமதி ஊ சிந்தனையோடு நாற்காலியிலிருந்து எழுந்தாள். இந்த நாளை அவள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். செல்வம் மிகுந்த பழம்பெரும் குடும்பங்களில் அந்த வீட்டு எஜமானியின் நாற்பதாவது பிறந்த நாள் மிகுந்த பெருமைக்குகந்த தினமாக யிருந்தது. இருபத்தி இரண்டு வருஷங்களுக்கு முன்பு தன் மாமியாருக்கு வந்த இதே பிறந்த நாள் வைபவம் அவளுக்கு நன்றாக நினைவிலிருந்தது. அன்றையதினம், அவளுடைய மாமியார் அத்தனை பெயர்களடங்கிய அவ்வளவு பெரிய வீட்டின் முழுப்பொறுப்பையும் தன் மருமகளிடம் கொடுத்து விட்டாள். இந்த இருபத்திரண்டு வருஷங்களாக ஸ்ரீமதி ஊ அவ்வீட்டுப் பொறுப்பை மிக்கத் திறமையுடன் நிர்வகித்து வந்தாள். வெளிப்பார்வைக்கு அவள் அதிக மாறுதல்கள் செய்யவில்லை. ஏனெனில் மாமியாருக்கு அது பிடிக்காமல் போகலாம்! ஆனல், அவசியமான சீர்திருத்தங்களை அவள் செய்யாமலும் இருக்கவில்லை. ஒரு முறை மெழுகுப் புறத்தில் இருந்த அறைகளுக்கு அடுத்திருந்த தோட்டத்தில் மண்டிக் கிடக்கும் பியோனிச் செடிகளை அகற்றி விடவேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு எழுந்தது. அந்த வருஷத்து குளிர்காலத்தில் அவற்றை மடியும்படி விட்டு விட்டாள். இளவேனிற்காலத்தில் அவை மீண்டும் துளிர்த்து வரவில்லை. அப்போது அவள் பெரிய எஜமானியிடம், சமத்காரமாகப் பேசி, இந்த செடிகள் நிலத்திலிருந்த சத்துக்களை இழுத்து விட்டிருக்க வேண்டும். ஆதலால் ஒன்றிரண்டு தலை முறைகளுக்கு வேறு ஏதாவது செடிகள் வைப்பது நல்லது என்ற வார்த்தைகளை பெரிய எஜமானியிடமிருந்தே வரும்படி செய்தாள்.

அப்போது ஸ்ரீமதி ஊவின் வயது பதினெட்டு. "நார்ஸிஸஸ் வைக்கலாமா? ஆர்ச்சிட் அல்லது வேறு பூங்கொடிகள் ஏதாவது வைக்கலாமா? உங்களுக்குப் பிடித்ததையே வைக்க விரும்புகிறேன். அம்மா" என்று கூறினுள். ஆர்ச்சிட் வைக்க வேண்டுமென்பதே அவள் விருப்பம். ஆதலால் அதை நடுவில் அலட்சியமாகப் போட்டு வைத்தாள். அதை நடுவில்

சொல்வதால் அவள் அதை அதிகம் விரும்பவில்லை என்று பெரியம்மாள் என்னுவாள்.

"ஆர்ச்சிட் வைக்கலாம்" என்று பெரியம்மாள் உடனே கூறிவிட்டாள். மருமகள் பேரில் அவளுக்கு அதிக வாஞ்சை தான்! ஆனல் அதற்காகத் தன் அதிகாரத்தைச் செலுத்தாம விருக்க அவள் விரும்பவில்லை.

"சரி" என்று அதற்குப் பணிவுடன் கூறுவாள் ஸ்ரீமதி ஊ. ஐந்து வருஷத்திற்குள் அவளுடைய ஆர்ச்சிட் தோட்டமே அந்நகரத்தில் மிகச் சிறந்ததாக விளங்கியது. அவள் அத் தோட்டத்தை அதிக கவனத்தோடு பாதுகாத்து வந்தாள். ஆருவது மாதத்தின் முற்பகுதியில் அவை வெகுத்த ஊதா வர்ண புஷ்பங்களைப் புஷ்பிக்க ஆரம்பிக்கும். எட்டாவது மாதத்தில் கருஞ்சிவப்பு நிற புஷ்பங்களும் ஒன்பதாவதில் பஞ்சள் நிறப் புஷ்பங்களும் அபரிமிதமாக பூக்கும்.

அவள் அவ்வறையிலிருந்து எழுந்து தோட்டத்திற்குள் சென்று, வாசனைபற்றிருந்த அம்மலர்களில் இரண்டைப் பறித்துக் கொண்டு மீண்டும் அந்த அறைக்கே வந்தாள். அதற்குள் அவளுடைய காலையுணவு தயாராக யிருந்தது. அவள் எப்போதும் காலையில் அதிகம் உண்ணுவதில்லையாதலால் உணவு குறிப்பிட்ட அளவுள்ளதாகவே இருந்தது. அறைக்கு நடுவேயிருந்த சதுரமான மேஜையின்மீது, வெள்ளி பூண் போட்ட பளபளப்பான ஒரு சிறிய மரப்பாத்திரத்தில் அரிசி கஞ்சியும், மற்றும் இரண்டு மூன்று கிண்ணங்களில் உப்பு போட்டு வறுத்த உணவுகள் சிலவும் தேநீரும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுடன் கூட, வெள்ளி சங்கிலியால் இணைக்கப்பட்ட தந்தக் கோல்களும் வைக்கப்பட்டிருந்தன. அவள் அக் கோல்களைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

ஒரு வேலைக்காரப் பெண் சிரித்த முகத்தோடு, கடைக்கடியிருந்த ரொட்டிகளை ஒரு தட்டில் ஏந்தியவாறு வந்தாள். பிறந்த நாள் வைபவத்திற்காகப் பிரத்தியேகமாக செய்யப்பட்டவை அவை. சிரஞ்சீவித் தன்மையைக் குறிக்கும் பொருட்டு அவை 'பீச்' என்னும் புஷ்பத்தின் வடிவத்தில் செய்யப்பட்டிருந்தன. நீண்ட ஆயுளைக் குறிக்கும் பொருட்டு அவற்றில் வெப்பு வர்ணம் தெளிக்கப் பட்டிருந்தது.

பணிப்பெண், மகிழ்ச்சி நிறைந்த தனது கட்டளையான குரலில், "தாங்கள் நீண்ட ஆயுளோடு இருக்க வேண்டும் அம்மா" என்று வாழ்த்தினுள். அவள் மேலும், "எஜமானிக்கு காலையில் இந்த இனிப்புப் பண்டங்களெல்லாம் பிடிக்கா

தென்று எனக்குத் தெரியும். ஆனால் வேலைக்காரர்களாகிய நாங்கள் இதை வீட்டின் க்ஷேமத்திற்காக கொண்டுவர வேண்டுமல்லவா? சமையல்காரன் இதைத் தானாகவே செய்திருக்கிறான்" என்றாள்.

ஸ்ரீமதிஹூ அன்புடன், "வந்தனம். உங்கள் எல்லோருக்கும் என்னுடைய அன்பார்ந்த வந்தனம்" என்றாள். மரியாதைக்காக அவள் ஆவி விட்டுக் கொண்டிருந்த அந்த ரொட்டிகளில் ஒன்றை எடுத்து விண்டாள். அதன் நடுவே பீன்ஸையும் சிவப்பு சர்க்கரையையும் சேர்த்து செய்திருந்த ரஸம் நிறைந்திருந்தது. "ஓ! இது மிக நன்றாகயிருக்கும் போலிருக்கிறதே!" என்று கூறிவிட்டு அதைச் சாப்பிடத் தொடங்கினாள்.

இதனால் சிறிது தைரியமடைந்த அவ்வேலைக்காரி, அவளருகே வந்து, தனது குரலைத் தாழ்த்திக் கொண்டு, "நான் இதை உங்களிடம் சொல்லக் கூடாது தான். ஆயினும் இந்த வீட்டின் நலத்தை உத்தேசித்துத் தான் சொல்கிறேன். இந்தக் கிழச்சமையல்காரன் உங்களிடம் விறகிற்காக மூன்று மடங்கு விலை வாங்குகிறான். நேற்று நான் கடைத்தெருவில் விசாரித்தேன். இன்னும் புதியது வரவில்லையல்லவா? அதனால் விலை அதிகமாகத் தானிருக்கிறது. ஆனாலும் எவ்வளவு நல்ல விறகு வேண்டுமானாலும் ஒரு கட்டு எண்பது பணம் தான். இவன் உங்களிடம் இருநூறு பணம் வசூலிக்கிறான். இன்று உங்களுடைய தாதியாகயிருப்பதால் தான் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணியிருக்கிறான்" என்றாள்.

ஸ்ரீமதி ஹுவினுடைய பிரகாசம் பொருந்திய விழிகளில் சிந்தனைக்குறி தோன்றியது. அவள் சாந்தமாக, "அவன் கணக்குகளைக் கொண்டுவரும்போது நான் இதைக் கவனிக்கிறேன்" என்றாள். அவ்வேலைக்காரி ஒரு கணம் நின்று பார்த்து விட்டுப் பிறகு சென்று விட்டாள்.

ஸ்ரீமதிஹூ ரொட்டியை வைத்து விட்டு, உப்புப் பண்டங்களில் ஒன்றைத் தந்தக் கோல்களால் எடுத்துக் கொண்டாள். அவளுடைய சிந்தனைக் கயிறு தொடர்ந்து சென்றது. அன்று தனது ஸ்தானத்தை மூத்த மருமகளாகிய மெங்கினிடம் கொடுப்பதாக அவளுக்கு உத்தேசமில்லை. அவளுக்கு இருப்பது நான்கு பிள்ளைகள். அவர்களில் இருவருக்கு கல்யாணமாகியிருந்தது. அவளுடைய மாமியாருக்கு இருந்தது ஒரேபிள்ளை தான். ஆதலால் நாட்டு பெண்களிடையே தகராறு எழுவதைப் பற்றிய கேள்வியே எழவில்லை. தவிரவும் அவளுடைய முதல் மகனுகிய லியாங்மோவின் மனைவி வயதில் சிறியவளாகயிருந்தாள். லியாங்மோவிற்குப் பழைய வழக்கப்படியே விவாகம் நடந்தது. ஸ்ரீமதி ஹுவே தன் மகனுக்காக பெண் தேர்ந்தெடுத்தாள். அவளுடைய பால்ய சிநேகிதியான ஸ்ரீமதி கேங்கின் பெண்ணையே தன் மகனுக்கு மணம் செய்வித்தாள். பத்தொன்பது வயதாகியிருந்த லியாங்மோவிற்கு அவ்வளவு சீக்கிரம் கல்யாணம் செய்விக்க ஸ்ரீமதிஹூ விரும்பவில்லை.

ஆனால் படிப்பதற்காக ஷாங்காய் சென்றிருந்த அவளது இரண்டாவது மகன் த்ஸேமோ, தன்னைவிட இரண்டு வயது பெரியவளாகயிருந்த ருலான் என்ற பெண்ணின் மீது காதல் கொண்டு, பதினெட்டு வயதிலேயே கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினான். ருலான், மூத்த மருமகளாகிய மெங்கைவிட, வயதில் பெரியவள். இதனால் மெங்கிற்கு மூத்த மருமகள் என்றதால் ஏற்பட்ட அதிக உரிமை ஒரு சிறிதும் குறையவில்லை. ஆயினும் இவ்வித குழப்பம் ஏற்பட்டபோது, ஸ்ரீமதிஹூ, த்ஸேமோவை சரியான படி கவனிக்காமல் விட்டதற்காகத் தன்னையே நொந்து கொண்டாள், இப்போது தன்னுடைய ஸ்தானத்தைச் சில வருஷங்களுக்கு நீடித்து வகிப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை. அந்த காலத்திற்குள் இன்னும் எவ்வளவோ நடக்கலாமே!

ஆதலால் அவள் இன்று வீட்டில் ஒரு மாறுதலையும் அறிவிப்பதாக யில்லை. முன்னேற்பாட்டின்படி நடக்கப் போகும் விசேஷத்தில் கலந்து கொண்டு அவர்கள் கொடுக்கும் பரிசுகளை ஏற்றுக் கொள்வது, அருமை பேரக் குழந்தைகளுக்கு அன்பளிப்பு செய்வது, மாமியாரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வது—ஆகியவையே அவள் செய்யப் போவது. அவளுடைய வயதான மாமியார் பகல் விருந்திற்கு வருவதற்காக இப்போதிருந்தே தயார் செய்து கொண்டிருந்தாள்.

ஸ்ரீமதிஹூ இந்த நாளை வெகுகாலமாக ஆவலோடு எதிர் பார்த்திருந்தாள். அந்த ஆவலில் ஒருவித அலாதியான நிம்மதியும் உள்ளூர சிறிது வருத்தமும் கலந்திருந்தது. அவளுடைய வாழ்க்கையின் முதல்பாகம் முடிவடைந்து விட்டது. இரண்டாவது பகுதி ஆரம்பமாகப் போகிறது. மூதுமையைக் கண்டு அவள் அஞ்சவில்லை. வயது, அவளுடைய பெருமையையும் மதிப்பையும் குடும்பத்தாரிடமும் நண்பர்களிடமும் வருடத்திற்கு வருடம் உயர்த்திற்றே யொழிய குறைக்கவில்லை. அழகு குறைந்து விடுமோ என்ற பயமும்

அவளுக்கு இருக்கவில்லை. வயதிற்கேற்ப அவள் தன்னிடம் சிற்சில மாறுதல்களைச் செய்து வந்ததால், வயதானதே தெரியாமல் அவளுடைய அழகு முன்போலவே பிரகாசித்தது. இப்போது முன்பு சிறுவயதில் அணிந்ததுபோல் பளபளப்பான வர்ணமுள்ள பூப்போட்ட உடைகளை அணிவதில்லை. வெளுத்த நீலம் அல்லது பச்சை போன்ற வர்ணமுள்ள ஆடைகளையே அணிந்து வந்தாள். அந்த வெளுத்த நிற உடைகள் அவளது நிறத்திற்கும் அழகிற்கும் சோபிதமாகமே யிருந்தன. மொத்தத்தில் முதுமையினால் அவளுடைய அழகு சிறிதும் குறையாமல், மேலும் மென்மையையும் உயர்வையும் அடைந்திருந்தது. அவள் தன்னுடைய அழகு சற்றும் குறையவில்லை என்பதை நன்றாக உணர்ந்திருந்ததால், தான் முன்பே செய்ய உத்தேசித்திருந்த காரியத்தைச் செய்து முடிக்கத் தயாராக யிருந்தாள். அழகையிழந்த ஒரு பெண்ணாக யிருந்திருந்தால் அவமானமும் பொறுமையும் கொண்டு இதைச் செய்யத் தயங்கி இருக்கக் கூடும். ஆனால் அவளுக்குப் பொறுமை கொள்ளும்படியான அவசியம் இருக்கவில்லை. அவள் செய்யப் போகும் காரியம் அவள் நன்கு யோசித்து தெளிந்த, அவளுடைய சொந்த அபிலாஷையாக யிருந்தது.

அவள் காலையுணவை முடித்துக் கொண்டாள். சிறு குழந்தைகளைத் தவிர வீட்டில் இன்னும் வேறுயாரும் எழுந்திருக்கவில்லை. சிறு குழந்தைகளையும் அவர்களுடைய தாதிகள் அப்பெரிய வீட்டில் எங்கோ ஒரு மூலையில் வைத்து விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தனர். ஸ்ரீமதியை கொண்டு வரச்சொன்னலொழிய குழந்தைகளைத் தாங்களாக அவளிடம் யாரும் கொண்டு வருவதில்லை. ஆகவே ஸ்ரீமதியை அறைக்கு வெளியே வாசலில் யாரோ வரும் காலடியோசையைக் கேட்டு ஆச்சரியமடைந்தாள். அதற்குள் ஒரு குரல் கேட்டது.

"என்னுடைய ஆருயிர் சிநேகிதியின் நாற்பதாவது பிறந்தநாள் வைபவம் தினம் தினமும் வரக்கூடியது அல்லவே. ஆகவே நான் இவ்வளவு சீக்கிரமாக வந்ததனால், பரவாயில்லையே" என்றது அக்குரல்.

ஸ்ரீமதியை, அது மெங்கின் தாயான ஸ்ரீமதி கேங்கின் குரல் என்பதை உடனே அறிந்து கொண்டாள். உடனே வாசற்புறம் விரைந்து சென்று அவளை வரவேற்றாள். அவளுடைய கையில் இன்னமும் அந்த ஆர்ச்சிட் புஷ்பங்கள் இருந்தன. ஸ்ரீமதி கேங் வாசலைக் கடந்து தனது சிநேகிதியை நோக்கி வந்தாள். ஸ்ரீமதி ஹாவைப் போல் அழகுடனே விளங்காமல், ஸ்ரீமதி கேங் இத்தனை வருஷங்களில் மிகவும்

பெருத்திருந்தாள். ஆனால் இதன் காரணமாக அவளுடைய தங்கமான மனதில் ஸ்ரீமதி ஹாவின் மேலிருந்த அன்பு சிறிதும் குறைந்து விடவில்லை.

ஸ்ரீமதி கேங், "ஏய்லியன், உன்னுடைய பிறந்தநாள் வாழ்த்து கூறுவதற்கு நான்தான் முதலாவதாக வந்திருக்கிறேன் போலிருக்கிறது" என்று கூறினாள்.

ஸ்ரீமதியை புன்னகை செய்து, "ஆம். நீதான் முதல்" என்றாள். வேலைக்காரர்களின் வாழ்த்து கணக்கில்லை போலும்!

"அப்போது நான் அப்படி ஒன்றும் ரொம்ப சீக்கிரம் வந்து விடவில்லை" என்று கூறிய ஸ்ரீமதி கேங் இங்கைக் கோபத்துடன் பார்த்தாள். இங் வாசலில் அவளைச் சற்று தாமதப்படுத்தி விட்டாள். ஏனெனில் ஸ்ரீமதியை காலையுணவு அருந்தும்போது யாரும் குறுக்கே சென்று தொந்தரவு செய்யக்கூடாதென்பது அவ்வீட்டின் வழக்கம். நடுவில் யாராவது சென்றால் அவள் சாப்பிடுவதை விட்டு எழுந்து விடுவாள். ஆதலால் இங் இப்போது ஸ்ரீமதி கேங்கைக் கண்டு பயப்படவில்லை. ஏன், ஒரு பெரிய நீதிபதியே வந்திருந்தால் கூட இங், தன் எஜமானியின் சௌகரியத்தின் பொருட்டு அவரை வெளியே ஒருமணி நேரம் காக்கவைக்கத் தயங்க மாட்டாள்.

"உன்னை இன்று எல்லோருக்கும் முதல் பார்த்ததில் எனக்கு அதிக சந்தோஷ முண்டாகிறது" என்று ஸ்ரீமதியை கூறியவாறு தனது மெல்லிய கரத்தால் ஸ்ரீமதி கேங்கின் தடித்த விரல்களைப் பற்றிக் கொண்டாள். பின் அவளை அழைத்துக் கொண்டு ஆர்ச்சிட் தோட்டத்திற்குள் சென்றாள். அங்கிருந்த வில்லோ மரத்தின் கீழ் இரண்டு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அம்மரம் அந்த ஆசனங்களுக்குக் குடைபிடிப்பதுபோல் வளைந்து நிழல் கொடுத்தது. இருவரும் அம்மரத்தை நோக்கிச் சென்றனர். அம்மரத்திற்கருகே ஒரு சிறு தாமரைக் குளம் இருந்தது. அதில் ஆம்பல் செடிகள் நிறைய வளர்ந்திருந்தன. இரண்டு நீலநிற புஷ்பங்கள் நீரின் மேல் மிதந்து கொண்டிருந்தன. ஸ்ரீமதி ஹாவிற்கு இந்த புஷ்பம் பிடிக்காது. மென்மையற்றிருந்த அம்மலர்களிலிருந்து வந்த வாசனை மூக்கைத் துளைத்தது. தண்ணீரில் சிறு சிறு வெள்ளி மீன்கள் அப்பூக்களின் நடுவே நீந்திக் கொண்டிருந்தன. நடுநடுவே சற்று நின்று அவை தண்ணீருக்கு மேல் தலையைத் தூக்கிப் பார்த்தன. மீன்களுக்கு தின்பதற்கு ஒன்றும் கிடைக்காமற் போகவே, வால்களினால் தண்ணீரில் நீண்ட கோடுகளை உண்டாக்கியவாறு சென்று மறைந்தன.

"உன்னுடைய பேரனுக்கு இப்போது எப்படி யிருக்கிறது?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ, தன் சிநேகிதியை நோக்கி. இத்தனை வருஷங்களில் ஸ்ரீமதி ஊவிற்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இறந்து விட்டனர். ஸ்ரீமதி கேங்கிற்குப் பதினேழு குழந்தைகள் இருந்தன. அவற்றில் ஆறு பெண்கள். ஸ்ரீமதி ஊவின் வீட்டில் காணப்பட்ட இந்த அமைதியையும், ஒழுங்கையும் அவள் வீட்டில் ஒரு நாளும் காண முடியாது. மிகவும் எளிய சுபாவம் கொண்ட அவளைச் சுற்றி குழந்தைகள் சதா கும்மாளமடித்த வண்ணமிருப்பர். பணிப் பெண்களின் அரட்டையும், ஆட்களின் ஆரவாரமும், கூச்சலும் எப்போதும் அங்கு நிறைந்திருக்கும். இவை எப்படியிருந்தபோதிலும் ஸ்ரீமதி ஊவிற்கும் ஸ்ரீமதி கேங்கிற்கும் இடையே அத்யந்த சிநேகமிருந்தது. அவர்களுடைய தாய்மார்கள் இருவரும் சிநேகிதிகளாக யிருந்தனர். ஒருவர் வீட்டிற்கு மற்றொருவர் செல்லும்போது அவர்கள் தங்களுடைய பெண்ணையும் உடன் அழைத்துச் செல்வர். நேரம் போவது தெரியாமல் இருவரும் மணிக்கணக்காக அரட்டையடித்துக் கொண்டிருப்பர். ஆகவே அப்போதிருந்தே சிறுமிகள் இருவரும் சகோதரிகளைப் போல பழக நேர்ந்தது.

மகிழ்ச்சியால் மலர்ந்திருந்த ஸ்ரீமதி கேங்கின், சிவந்த வட்ட வடிவமான முகம் இதைக் கேட்டதும் வாடி விட்டது. "அப்படியேதானிருக்கிறது. நான் அவனை அன்னியர்களின் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?" என்றாள் வேதனையுடன். "ஏன், நிலைமை அபாயகரமாக இருக்கிறதா?" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

"இன்னும் சில தினங்களில் மோசமாகி விடும். ஆனால் அயல் நாட்டு வைத்தியர்களுக்கு உடலை அறுத்துப் பார்க்காமல் என்ன வியாதி என்பதைக் கண்டு பிடிக்கத் தெரியாது என்கிறார்கள். பையனோ மிகவும் சிறியவன். ஐந்து வயதுதான் ஆகிறது. இம்மாதிரி சிகிச்சைகளுக்கு அவன் மிகவும் சிறியவனாயிற்றே என்றுதான் யோசிக்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"நானோ வரை பொறுத்திரு. இன்றைய சந்தோஷத்தைக் கெடுக்க வேண்டாம்," என்றாள் ஸ்ரீமதி ஊ. அடுத்த கணமே தான் சுயநலமாகப் பேசி விட்டதாக அஞ்சி அவள், "எங்கள் பாட்டி தயாரிக்கும் முறைப்படி ஒரு மருந்து தயார் செய்து அனுப்புகிறேன். இந்த மாதிரி இருமலுக்கு அது நல்லது. என்னுடைய முதல் மகனுக்கும் மூன்றாவது மகனுக்கும் கூட இது மாதிரி செய்து கொடுத்திருக்கிறேன். அவர்களுடைய தகப்பனாருக்கும் இதைச் செய்துகொடுத்திருக்கிறேன். இரண்டு வருஷமாக குளிர் காலங்களில் அவருக்குத் தான் இருமல் வந்து விடுவது உனக்குத் தெரியுமே. நான் செய்து இங்கினிடம் ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொடுத்தனுப்புகிறேன்," என்றாள்.

ஸ்ரீமதி கேங் நன்றி தழும்ப, "ஏய்லியன் உன்னுடைய அன்பே அன்பு" என்றாள். காலை இன்னும் அதிக நேரமாகவில்லை. தோட்டம் குளிர்ந்திருந்தது. ஆனால் ஸ்ரீமதி கேங் சட்டைப் பையிலிருந்து ஒரு சிறிய விசிறியை எடுத்து விசிறிக் கொள்ள ஆரம்பித்தாள். அவள் ஒரு முறை சிரித்து விட்டு, "பனி மறைவதுதான் தாமதம்! உடனே எனக்கு வியர்க்க ஆரம்பித்து விடுகிறது" என்றாள்.

ஒரு கணம் இருவருக்குமிடையே மௌனம் நிலவியது. பின், ஸ்ரீமதி கேங், பொறுமை யென்பது எள்ளளவுமின்றி அன்போடு தன் தோழியைப் பார்த்து, "ஏய்லியன் உன் பிறந்த நாளுக்கு என்ன பரிசு கொண்டு வருவதென்றே தெரியவில்லை... இதைக் கொண்டு வந்தேன்..." என்று கூறி தொள தொள வென்றிருந்த தனது ஊதா நிற சில்க் சட்டையின் பையிலிருந்து ஒரு சிறிய பெட்டியை எடுத்துக் கொடுத்தாள்.

அது என்னவென்பதை ஸ்ரீமதி ஊ உடனே அறிந்துக் கொண்டாள். "ஆ! மேய்ச்சன், உண்மையாகவா நீ இந்த முத்தை எனக்குக் கொடுத்துவிட விரும்புகிறாய்?" என்று கேட்டாள். ஆம் என்று தலையை அசைத்தாள் ஸ்ரீமதி கேங். அவளுடைய கள்ளங்கபடமற்ற முகத்தில் வேதனையின் சாயல் தோன்றி மறைந்தது. அதைக் கவனித்த ஸ்ரீமதி ஊ அதன் காரணத்தை வினவினாள். ஸ்ரீமதி கேங் ஒரு கணம் தயங்கி விட்டு, "கடைசியாக ஒரு தடவை நான் இதை அணிந்து கொண்டிருந்தபோது, என் பிள்ளைகளின் தகப்பனார் அவை முழுவதும் பழத்தின் மீது விழுந்த பனித்துளிகளைப் போலிருக்கின்றன என்று கூறினார்" என்றாள். அவள் புன்னகை செய்த போதிலும், அவளுடைய கண்களிலிருந்து நீர் வழிந்தது. அவை ஸேடின் சில்க் ஆடையின் மீது உருண்டோடி கீழே விழுந்தன. அவள் தன் கண்ணீரைப் பொருட்படுத்தவில்லை.

ஸ்ரீமதி ஊ, இதைக் கவனித்தும், கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். அவள்

கையில் அம் முத்துக்கள் அடங்கிய அச் சிறு பெட்டி இருந்தது. ஸ்ரீமதி கேங், தன் கணவனால் தனக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி அவளிடம் அடிக்கடி கூறிக் கொள்வாள். அவர்களிடையே, ஸ்ரீமான் ஹவைப் பற்றிய பேச்சே வராது. ஸ்ரீமதி கேங்தான் எப்போதாவது ஒரிரண்டு வார்த்தைகள் விசாரிப்பாள்.

"ஏய்லியன்! உன்னுடைய பிள்ளைகளின் தகப்பனாரால் உனக்கு ஒருவிதத் துன்பமும் ஏற்படுவதில்லை. இதுவரை விபச்சார விடுதிகளின் பக்கமாகக் கூட அவர் போனதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் எங்கள் வீட்டுக்காரர்—அவரும் நல்லவர்தான்—இருந்தாலும்..." என்று கூறி பெரு மூச்செறிவாள் ஸ்ரீமதி கேங்.

முன்பு ஒரு முறை ஸ்ரீமதி ஹ, "மேய்ச்சன், அவர் காலேக்குள் ஒழுங்காக வீடு வந்து சேர்ந்து விடுகிறாரல்லவா? அப்படியிருக்கையில் அவரை அவர் இஷ்டப்படி செல்லும்படி விட்டு விடேன்" என்று கூறியிருக்கிறாள். அப்போது ஸ்ரீமதி கேங்கின் முகத்தில் தோன்றிய வெட்கத்தை அவள் இன்னும் மறக்கவேயில்லை. "அது என்னால் முடியாது. பொறுமையினால் என் நெஞ்சம் வெடித்து விடும்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

பொறுமை என்பதை அநுபவித்தறியாத ஸ்ரீமதி ஹ உடனே மௌனமாகி விட்டாள். சிநேகிதியின் இந்த குணத்தை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஸ்ரீமான் கேங்கை நினைத்துப் பார்த்தால் அவளுக்கு இன்னும் நிகைப்பாயிருந்தது. ஸ்ரீமான் கேங் மிகுந்த செல்வம் படைத்த ஒரு வியாபாரி. அழகு படைத்தவரல்ல. அறிவிலும் சிறந்தவரல்ல. சாதாரண ஒரு மனிதர். இவரை மணந்து கொள்வதில் என்ன மகிழ்ச்சியிருக்கக் கூடுமென்று அவளுக்கு விளங்கவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஸ்ரீமதி ஹ, "நான் வெகு நாட்களாக உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். முதலில் அதைப் பற்றி யோசித்தபொழுது உன்னிடம்சொல்லி யோசனை கேட்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால்—கேட்கவில்லை. இப்போது அதில் யோசனை கேட்பதற்கு ஒன்றுமில்லை. நானே ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டேன்" என்றாள்.

ஸ்ரீமதி கேங் விசிறியவாறு, மேலே கேட்பதற்குத் தயாராக இருந்தாள். விசிறியிலிருந்து வந்த மெல்லிய காற்று அவளுடைய கண்ணீரை உலரச் செய்து விட்டது. குழந்தை

யின் மனத்தையுடைய அவளால் ஒரு கணத்தில் சிரிப்பை மறந்து அழவும், அழுகையை மறந்து சிரிக்கவும் முடிந்தது. இவர்கள் இருவருடைய சிநேகிதத்தில் ஸ்ரீமதி கேங், தான் தான் தாழ்ந்தவள் என்பதை அறிவாள். ஸ்ரீமதி ஹவைப் போல் அவளுக்கு அழகில்லை என்பது மட்டுமல்ல. அவளைப் போல் எந்தக் காரியத்தையும் அவளால் திறமையுடன் செய்ய முடியாது. அவளுடைய வீடும் இதைப் போலவே இவ்வளவு பெரியதாகவும் அழகானதாகவும் இருந்தது. அவள் பெரு முயற்சி செய்தும், இதைப்போல் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்துக் கொள்ள அவளால் முடிவதில்லை. அவள் எவ்வளவு கூறினாலும் அதைப் பொருட்படுத்தாமல் வேலையாட்கள் தங்கள் இஷ்டப்படியே யாவற்றையும் செய்து வந்தனர். பொதுவாக அவ் வீட்டில் ஒழுங்கைவிட சௌகரியத்தையே முக்கியமாகக் கருதுவது வழக்கமாகி விட்டது. அக் குறையைத் தன் வீட்டில் அவள் அதிகம் உணராவிட்டாலும் இங்கு வந்தபோது நன்றாக உணர்ந்தாள். ஆனால் அவள் ஸ்ரீமதி ஹவிடம் வருகிற பேர் அவளுடைய சகவாசத்தால் உயர்வை அடைகிறார்கள் என்று கூறுவது வழக்கம். அதன் காரணமாகவோ என்னவோ, ஸ்ரீமதி ஹ அவர்கள் வீட்டிற்கு எப்போதோ ஒரு முறை சென்றாலும், அதைப் பாராட்டாமல் அவள் பத்து முறை வந்து செல்வாள். "என்னவோ சொல்ல வந்தாயே, அதைச் சொல்லு" என்றாள் ஸ்ரீமதி கேங் இப்போது.

ஸ்ரீமதி ஹ தனது நீண்ட கரிய விழிகளை உயர்த்தினாள். அவ் விழிகளில் தோன்றிய ஒளியும் குறுகுறுப்பும் அவளுடைய வயதை மிகவும் குறைத்துக் காட்டின. அவள் தனது சுபாவமான அமைதியுடனும் தெளிவுடனும், "மேய்ச்சன், நான் என்னுடைய பிள்ளைகளின் தகப்பனாரை, ஒரு விலை மகளை இரண்டாவது மனைவியாக ஏற்றுக் கொள்ளச் சொல்லலாமென்று தீர்மானித்திருக்கிறேன்" என்றாள்.

ஸ்ரீமதி கேங் வாயைப் பிளந்தாள். அவளுடைய அழகுகளில் ஒன்றான சிறிய வெண்ணிறப் பற்கள் முழுவதும் தெரிந்தன. "ஏன்—அவர்—அவர் கூடவா?" என்று திக்கு முக்காடிக் கொண்டு கேட்டாள்.

"இல்லை. அதொன்றுமில்லை. ஆனால் உண்மையில், ஆண்களின் கொண்டாட்டங்களில் அவர் என்ன செய்கிறார் என்பதை நான் ஒரு முறையாகிலும் கேட்டதில்லை. அதற்கும் நமக்கும் என்ன சம்மந்தமிருக்கிறது. குடும்பத்தை அது பாதிக்காமலிருக்கும் வரை சரிதான். இது நான் எங்கள்

இருவருடைய நன்மையையும் உத்தேசித்து செய்வது" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

ஸ்ரீமதி கேங், "ஆனால்—உனக்கு எப்படி இது நன்மையாகும்?" என்று கேட்டாள். அக்கணம் அவளுக்கு தான் ஸ்ரீமான் கேங்கிடம் கொண்டிருக்கும் அன்பு இதைவிடப் பன்மடங்கு உயர்ந்ததாகத் தோன்றியது. ஏன், இது மாதிரியான ஒரு காரியம் செய்ய வேண்டிய அவசியம் அவளுக்கு ஒரு நாளும் நேராது. ஒரு விலைமகளை வீட்டிற்குள் கொண்டு வந்து வைத்துக் கொள்வதாவது! அவளுடைய குழந்தைகள் மற்றக் குழந்தைகளுடன் சண்டையிட்டுக் கொள்ளாதா? முதல் மனைவியோடு அவள் சச்சரவிடமாட்டாளா? வீடு விபச்சார விடுதிகளை விட அல்லவா கேவலமாகி விடும்!

ஸ்ரீமதி ஊ, தாமரைக் குளத்தின் தெளிந்த நீரை வெறித்து நோக்கியவாறு, "என்னுடைய விருப்பம் தான் இது!" என்றாள். ஒரு மணி நேரத்திற்கு முன்பு பறிக்கப்பட்ட அந்த ஆர்ச்சிட் புஷ்பங்கள் அப்போதே பறிக்கப்பட்டவைகளைப் போல் சிறிதும் வாடாமல் இருந்தன. அவளுடைய அமைதியான சுபாவத்தின் காரணமாக பூக்கள் கூட அவளருகே அதிக நேரம் வாடாமலிருந்தன போலும்!

ஸ்ரீமதி கேங், கம்பீரப் பார்வையுடன், "ஆனால் அவர் ஒத்துக் கொள்வாரா! அவர் எப்போதுமே உன்னிடம் உயிராகத்தானே இருந்திருக்கிறார்?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ அதே அமைதியுடன், "முதலில் ஒப்புக் கொள்ளத்தான் மாட்டார்" என்றாள்.

இப் புதிய விஷயத்தைக் கேட்டதும் ஸ்ரீமதி கேங்கிடமிருந்து கேள்விக்குமேல் கேள்விகளாகப் பிறந்தன. பேச்சு வேகத்திலே அவளுடைய விசிறி கூட கீழே நழுவி விழுந்து விட்டது. "ஆனால் பெண்ணைத் தேர்ந்தெடுப்பது யார்? நீயா? அவரா? ஏய்லியன், அவளுக்கு குழந்தைகள் பிறந்தால் நீ எப்படிச் சகிப்பாய்? அப்பப்பா! ஒரு கணவனுக்கு இரண்டு மனைவிகள் இருப்பதால் ஏற்படும் துன்பங்கள் உனக்குத் தெரியாதா?" என்றாள்.

"என்னுடைய விருப்பத்தால் அவர் அவளை ஏற்றுக் கொள்ளும்போது நான் இதைப்பற்றிக் குறை கூற முடியாது அல்லவா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"ஏய்லியன், நீ அவரை வற்புறுத்த மாட்டாயே!" என்றாள் ஸ்ரீமதி கேங் முறையிடும் குரலில்.

"நான் ஒரு போதும் அவரை எதற்காகவும் வற்புறுத்தியது கிடையாதே!" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இதற்குள் யாரோ இருமும் சப்தம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர். இங், குறும்புச் சிரிப்புடன் கதவருகே நின்று கொண்டிருந்தாள். ஸ்ரீமதி ஊவிற்கு அவளுடைய சிரிப்பின் அர்த்தம் விளங்கிவிட்டது.

"என்ன? சிறிய சகோதரி ஹேஷியா வந்திருக்கிறாளா? இன்று பார்த்துத்தானா அவள் வரவேண்டும்?" என்றாள் ஸ்ரீமதி ஊ ஏளனமாக.

ஆமெனக் கூறிய இங் ஒருமுறை சிரித்துவிட்டுப் பிறகு ஒருவாறு சிரிப்பை அடக்கிக் கொண்டு, மெதுவான குரலில், "ஐயோ கடவுளே! உரக்கப் பேசினால் எங்காவது அவள் காதில் விழுந்துவிடப் போகிறது. அம்மா, அவளுக்கு நாம் பேசுவதில் ஒரு வார்த்தைகூடப் புரிவதில்லை. உங்களுடன் யாரோ விருந்தினர்கள் பேசிக்கொண்டிருப்பதாகக் கூறினேன்" என்றாள்.

"இன்றுதான் என்னுடைய பிறந்த நாள் என்று சொல்லவில்லையே. நான் வேண்டாமென்று தான் அவளை அழைக்காமல் விட்டேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ. அதற்கு இங், "நான் என்ன அவ்வளவு முட்டாளா? ஆனால் ஸ்ரீமதி கேங் இங்கு இருக்கிறார் என்று மட்டும் கூறினேன்" என்று பதிலளித்தாள்.

ஸ்ரீமதி கேங் அவசரமாக எழுந்து, "நான் போகிறேன். எனக்கு இன்று அந்த வெள்ளைக்காரியின் உபதேச மொழிகளைக் கேட்டுக் கொண்டிருக்க நேரமில்லை. ஏய்லியன், வீட்டில் நிறைய வேலை இருக்கிறது. அப்படியே போட்டுவிட்டு வந்தேன். உனக்குப் பரிசு கொடுத்துவிட்டுப் போவதற்காகவே வந்தேன்" என்று கிளம்பினாள்.

ஸ்ரீமதி ஊ அவளைக் கைகளால் தடுத்த வண்ணம், "மேய்ச்சன், போகாதே. சற்று இரு. அவளுடன் இருவருமாக சிறிது நேரம் பேசிக்கொண்டிருப்போம். அவள் அரைமணி நேரத்திற்குள் போகவில்லையென்றால் நீ கிளம்பலாம்" என்றாள்.

எவருடைய வார்த்தையையுமே தட்டமுடியாத சுபாவம் படைத்திருந்த ஸ்ரீமதி கேங் அன்பிற்குகந்த தோழியின்

வார்த்தையை மறுத்துக் கூறுமல் உவகையோடு மீண்டும் உட்கார்ந்து கொண்டாள். இங் வெளியே சென்று ஐரோப்பிய பெண்மணி ஒருவளை அழைத்து வந்தாள். "ஓ! ஸ்ரீமதி ஊ! ஸ்ரீமதி கேங்!" என்று கூவியவாறு அப் பெண்மணி வந்தாள். சகோதரி ஹேஷியா நடுத்தர வயதுள்ள ஒரு ஆங்கிலப் பெண்மணி. உயரமாக, ஒல்லியாக வெளுத்திருந்தாள். தலையிலிருந்த கொஞ்சம் மயிரும் செம்பட்டையாக யிருந்தது. கண்கள் மீனைப்போலவும் மூக்கு மெல்லியதாக உயர்ந்தும் உதடுகள் நீலமாகவும் இருந்தன. அவள் கோடுகள் போட்ட ஒரு நூல் துணியை மேலுட்டு முறையில் தைத்து உடுத்திருந்தாள். அவ்வுடை அவளுடைய வயதை மேலும் அதிகப்படுத்திக் காட்டியது. அவ்வுடையால் அவளுடைய அழகு குறைந்து காணப்பட்டதென்றாலும், எவ்வளவு அழகாக அவளுக்கு அலங்காரம் செய்தாலும் கூட அவள் ஒரு அழகிய பெண்மணியாக விளங்க முடியாது என்பது இவ்விரு சீனப் பெண்மணிகளும் வெகு நாளைக்கு முன்பே தீர்த்துவிட்ட முடிபு. ஆனால் அவளுடைய நல்ல குணத்தையும் தனிமையையும் கண்டு இரங்கி அவளிடம் அன்பும் இரக்கமும் கொண்டனர். அந்நகரத்தில் அவளுடைய இனத்தார் வெகு சிலரே இருந்தனர். ஸ்ரீமதி ஊ, ஸ்ரீமதி கேங் இருவரும் மற்ற பெண்மணிகளைப் போல் அவளை, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி உடனே அனுப்பி விடுவதில்லை. இருவரும் அவளிடம் மிகுந்த அன்பு காட்டினர். சிறிய சகோதரி ஹேஷியா ஒரு கன்னிகையாதலால் அவளெதிரே விலைமகளைப் பற்றிய பேச்சைப் பேசாமல் இருவரும் தங்கள் பேச்சை அத்தோடு விட்டுவிட்டனர்.

"தயவு செய்து உட்காருங்கள், சகோதரி ஹேஷியா! காலை உணவு அருந்திவிட்டீர்களா?" என்று ஸ்ரீமதி ஊ கனிவுடன் உபசரித்தாள். சகோதரி ஹேஷியா நகைத்தாள். அவ்வூருக்கு அவள் வந்து பல வருடங்களாகியும் அவள் இன்னும் இந்தப் பெண்மணிகளோடு சகஜமாக யிருக்கக் கற்றுக் கொள்ளவில்லை. அவள் எப்போதும் விடாமல் சிரித்துக்கொண்டேதான் பேசுவாள். "நான் குடியானவர்களைப் பற்றி எழுந்திருக்கிறேன்" என்று ஏதோ உளறினாள். அவள் சீன பாஷையைச் சிரத்தையோடு தினமும் படித்து வந்தாள். அவளுடைய காது சற்று மந்தமாதலால் இன்னும் அதை அந்நியர்கள் பேசுவது போலவே பேசினாள். அவர்களுக்கு இவளுடைய குழப்பம் வழக்கம் தானானாலும் இப்போது ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் திகைப்போடு பார்த்துக் கொண்டனர்.

"என்ன? குடியானவர்களைப் பற்றியா?" என்று வினவினாள் ஸ்ரீமதி கேங்.

"குடியானவர்களைப் பின்பற்றி என்றிருக்கும்! இரண்டும் ஒன்றுபோலதானே சப்திக்கின்றன!" என்றாள் ஸ்ரீமதி ஊ மெல்ல.

"ஓ! அப்படியா கூறினேன்? மன்னித்துக்கொள்ளுங்கள்? நான் ஒரு முட்டாள்!" என்று அவள் சிரித்தவாறே கூவினாள்.

ஆயினும் அவளுடைய முகமும் கழுத்தும் குபீரென்று சிவந்து விட்டதை ஸ்ரீமதி ஊ கவனித்தாள். அந்த அந்நியப் பெண்ணின் நெஞ்சம் படும் அவஸ்தையை அவள் ஒருவாறு உணர்ந்தாள்.

"இங், தேநீரும் சில கேக்குகளும் கொண்டு வா. பிறந்த நாள் கேக்கிலும் சிலவற்றை எடுத்து வா" என்று கூறிவிட்டு, "என்னுடைய அயல்நாட்டு சிநேகிதிக்கு இன்று எனது பிறந்தநாள் என்பதை நான் தெரிவிக்க வேண்டாமா?" என்றாள்.

"ஒஹோ! இன்று உங்கள் பிறந்த நாளா? எனக்குத் தெரியவே தெரியாது!" என்று கூவினாள் சிறிய சகோதரி ஹேஷியா.

"எப்படித் தெரிய முடியும்? இன்றோடு எனக்கு நாற்பது வயதாகிறது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

சகோதரி ஹேஷியா ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தாள். பிறகு கைகளை உதறிக் கொண்டு சங்கோஜத்துடன் அர்த்தமற்ற சிரிப்பை சிரித்துக் கொண்டு, "நாற்பதா? ஏன், ஸ்ரீமதி ஊ...உங்களைப் பார்த்தால் இருபது வயது மாதிரி அல்லவா இருக்கிறது?" என்றாள்.

"உங்களுடைய வயது என்ன, சகோதரி ஹேஷியா?" என்று ஸ்ரீமதி கேங் விநயத்தோடு கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ அவளைச் சற்று கோபத்தோடு பார்த்து, "மேஷ்ச்சன், மேலுட்டவர்களின் வழக்கங்களில், ஒரு பெண்ணின் வயதைக் கேட்பது மரியாதைக் குறைவானது என்று கருதப்படுகிறது. நான் இதை உனக்குச் சொல்லிய தில்லை. ஷாங்காயிலிருந்து வந்த எனது இரண்டாவது மருமகளுக்கு அயல் தேசத்தாரோடு நல்ல பழக்கம். அவள் எனக்குக் கூறியிருக்கிறாள்" என மொழிந்தாள்.

"மரியாதைக் குறைவானதா! ஏன்?" என்ருள் ஸ்ரீமதி கேங் திகைப்போடு.

"ஹஹ்ஹஹ்ஹா" என்று சிரித்தவண்ணம் சகோதரி ஹேஷியா, "அதனல் பரவாயில்லே...நான் இங்கு வெகுநாட் களாக யிருப்பதால் எனக்கு இதெல்லாம் பழக்கம் தான்..." என்ருள்.

ஸ்ரீமதி கேங், சிறிது தணிந்த உற்சாகத்துடன், "அப்படி யானல்...உங்களுடைய வயது என்ன?" என்று மீண்டும் கேட்டாள்.

சகோதரி ஹேஷியாவின் முகம் உடனே சுருங்கிற்று. "ஓ...அது முப்பத்தியா—," என்று மெல்லிய குரலில் அவசர மாகக் கூறினுள். ஸ்ரீமதி கேங்கிற்குச் சரியாகப் புரியவில்லே. "முப்பத்தி ஆறு?" என்று கேட்டாள் விநயமாக மீண்டும்.

"இல்லே, இல்லே, முப்பத்தி ஆறு அல்ல. அவ்வளவு அதிக மல்ல" என்று கூறி மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தாள் அவள். ஆனல் அச் சிரிப்பில் சிறிது கோபம் கலந்திருந்ததை ஸ்ரீமதி ஊகவனித்தாள். "சரி, கிடக்கட்டும். வயதைப் பற்றி இப்போது என்ன? வாழ்க்கையின் ஒவ்வொரு படித்தையும் நன்முக அனுபவித்துக் கழித்துக்கொண்டே போவது நல்லதுதான்" என்று கூறினுள். மற்றவர்களுடைய உணர்ச்சிகளே ஒரு நொடியில் புரிந்துகொள்ளும் திறனுண்டு அவளுக்கு. இந்த வெள்ளேக்காரப் பெண் இன்னும் மணமாகாதவளாகயிருந்த தால் வயதைப் பற்றிய பேச்சு அவளேப் புண்படுத்திற்று என்பதை அவள் நன்கு உணர்ந்தாள். ஒரு வயதான கன்னிகை யாகயிருப்பது எவ்வளவு கடினமானது என்பதற்கு ஒரு உதாரணத்தை அவள் தன்னுடைய தாயாரின் குடும்பத்தி லேயே பார்த்திருக்கிருள். அவளுடைய பாட்டியின் சிறிய சகோதரி ஒருவள் தான் மணக்கவிருந்த ஆடவன் கல்யாணத் திற்கு முன்பே இறந்து விட்டதால், மணந்துகொள்ளாமலே வாழ்நாள் முழுவதும் இருந்து விட்டாள். அக் குடும்பத்தினர் அவளேக் கண்டு வியந்தபோதிலும், தங்கள் வீட்டில் ஒரு மணமாகாத வயதான பெண்மணி தாபத்தினுல் வருந்திக் கொண்டிருக்கிருள் என்ற விஷயம் அவர்களே உறுத்திக் கொண்டேயிருந்தது. முடிவில் அவள், தன்னுடைய சொந்த அமைதியை விரும்பி கன்னிகா மடத்தில் சேர்ந்துவிட்டாள். ஒரு விதத்தில் இந்த மேற்கத்திய பெண்மணியும் ஒரு கன்னிகா ஸ்திரீ தானே!

ஸ்ரீமதி ஊ, "இன்னும் சற்று நேரத்தில் விருந்தினர்கள் வர ஆரம்பித்து விடுவார்கள். சகோதரி ஹேஷியா, அவர்கள் வருமுன் உங்கள் வேதத்திலிருந்து எங்களுக்குக் கொஞ்சம் படித்துச் சொல்லுங்கள்" என்று மிகுந்த அன்போடு கூறினுள். அவ்வந்நியப் பெண்ணுக்கு இதைவிட அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியது வேருென்றுமில்லே என்பது அவளுக்குத் தெரியும்.

சகோதரி ஹேஷியா அவளே நன்றி ததும்ப நோக்கினுள். பிறகு எப்போதும் தன்னுடன் எடுத்து வரும் தனது கருப்புப் பையிலிருந்து, தோல் அட்டையுடன் கூடிய ஒரு பெரிய புத்தகத்தையும் ஒரு கருப்பு மூக்குக் கண்ணுடிப் பெட்டி யையும் வெளியே எடுத்தாள். மூக்குக் கண்ணுடியை எடுத்துத் தனது உயர்ந்த மூக்கில் போட்டுக்கொண்டு புத்தகத்தைப் பிரித்தாள்.

"ஸ்ரீமதி ஊ! இன்று உங்களுக்கு மணல்மீது வீடுகட்டினவ னுடைய கதையைச் சொல்லுமாறு எனக்குத் தெரிவிக்கப்பட் டிருக்கிறது" என்று சிரத்தையோடு கூறினுள்.

ஸ்ரீமதி கேங் எழுந்து விட்டாள். "என்னே மன்னித்துக் கொள்ளுங்கள். வீட்டில் எனக்கு நிறைய வேலேயிருக்கிறது" என்று தனது உரத்த குரலில் கூறி விடைபெற்றுக் கொண்டு தனது கனத்த சரீரத்தைச் சிரமத்துடன் தூக்கிக்கொண்டு நடந்து சென்ருள்.

ஸ்ரீமதி ஊ எழுந்து நின்று, அவள் சென்றதும் மீண்டும் உட்கார்ந்து கொண்டாள். பிறகு இங்கைத் தன்னருகே அழைத்து, ஸ்ரீமதி கேங்கின் பேரனுக்குத் தான் செய்து அனுப்புவதாக வாக்களித்த மருந்தை, செய்வதற்கான வழி களேத் தெரிவித்து அதை உடனே செய்து அனுப்பும்படி பணித் தாள். பின் ஹேஷியாவின் பக்கம் திரும்பி, புன்னகையுடன், "உங்களுடைய கடவுள் மணல்மீது வீடு கட்டினவனுக்கு என்ன கூறினுரென்று சொல்லுங்கள்" என்ருள்.

"உங்களுக்கும் அவர் கடவுள் தான். நீங்கள்தான் ஒத்துக்கொள்ள வேண்டும்" என்ருள் சகோதரி ஹேஷியா.

"அப்படியானுல் அவர் மிகுந்த கருணையுள்ளவராகயிருக்க வேண்டும். அவரிடம் எனக்காகப் பிரார்த்தித்துக்கொள்ளுங் கள். சரி, இப்போது மேலே தொடரலாமே" என்ருள் ஸ்ரீமதி ஊ மேலும் விநயத்தோடு.

ஸ்ரீமதி ஊவின் இப்பெருந் தன்மையான நடத்தையே சகோதரி ஹேஷியாவை அருகே நெருங்கவொட்டாமல் செய்தது. அவள் கூச்சத்தோடு படிக்க ஆரம்பித்தாள். அவளுடைய தவறான உச்சரிப்பினால் கதையைப் புரிந்து கொள்வது கடினமாகயிருந்தது. குளத்தில் விளையாடிக்கொண்டிருந்த மீன்களை வெறித்துப் பார்த்தவாறு, ஸ்ரீமதி ஊ கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். தோட்டத்தின் கதவு பக்கமாக இருமுறை இங் வந்து நின்று, குனிந்து கொண்டிருந்த ஹேஷியாவின் தலைக்கு மேல் ஏதோ சைகை காட்டினாள். அதற்கு ஸ்ரீமதி ஊ லேசாகத் தலையை அசைத்தாள். சகோதரி ஹேஷியா கதையைப் படித்து முடித்ததும், ஸ்ரீமதி ஊ எழுந்தவாறே, "மிக வந்தனம், கதை மிகவும் நன்றாக யிருந்தது. எனக்கு நேரம் இருக்கும்போது, மீண்டும் தயவு செய்து வாருங்கள்" என்றாள்.

ஒரு பிரார்த்தனையையும் நடத்தவேண்டுமென்று எண்ணி வந்த சகோதரி ஹேஷியா ஏமாற்றத்துடன் தனது புத்தகம், பை, கண்ணாடி முதலியவைகளைத் தூக்கிக் கொண்டு தடுமாற்றத்துடன் எழுந்தாள். "ஒரு பிரார்த்தனையும் செய்வோமே!" என்றாள். அவளுடைய தவறான உச்சரிப்பு, 'பிரார்த்தனை' என்ற வார்த்தையை 'கேக்' என்று பொருள் கொள்ளும்படி செய்தது. ஒரு கணம் ஸ்ரீமதி ஊவிற்கு ஒன்றும் புரியவில்லை. அவர்கள்தான் கேக் சாப்பிட்டு விட்டார்களே! பிறகு அவளுக்குப் புரிந்தது. ஆனால் அன்பின் மிகுதியினாலேயே அவள் சிரிக்காதிருந்தாள். "நீங்கள் வீட்டில் எனக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். எனக்கு இப்போது இன்னும் மற்ற வேலைகள் இருக்கின்றன" என்று கூறினாள்.

பேசியவாறே அவள் கதவை நோக்கி நடந்தாள். அதற்குள் இங் அங்கு தோன்றி, சகோதரி ஹேஷியாவை அவசரமாக அழைத்துச் சென்று விட்டாள். தனியே விடப்பட்ட ஸ்ரீமதி ஊ மீண்டும் அக் குளத்தருகே வந்து நின்று அதனுள் பார்க்கலானாள். அவளுடைய கொடி போன்ற தேகம், தெளிந்த நீருக்குள், தலையிலிருந்து கால் வரை தெளிவாகத் தெரிந்தது. தன்னுடைய கையில் அந்த ஆர்ச்சிட் புஷ்பங்கள் இன்னமும் இருப்பதை அவள் அப்போதுதான் கவனித்தாள். கையைத் தூக்கி அவற்றை தண்ணீருக்குள் எறிந்தாள். மீன்களின் கூட்டம் ஒன்று ஓடிவந்து பூக்களைக் கொத்திப் பார்த்துவிட்டு, மீண்டும் ஓடி விட்டன.

"ஒன்றுமில்லை! வெறும் பூக்கள்தான்" என்று கூறி அவற்றைப் பார்த்து நகைத்தாள் அவள். எந்நேரமும் பசி

தான் போலும் அவைகளுக்கு! மனல்மீது கட்டிய வீடு என்றால்...? ஆனால் அவள் அவ்வளவு மூடமாக எப்படியிருக்க முடியும்? அவள் வசித்து வந்த இந்த வீடு கட்டப்பட்டு பல நூற்றாண்டுகளாகின்றன. ஊ குடும்பத்தாரின் இருபது சந்ததிகள் இவ் வீட்டில் வாழ்ந்து மறைந்திருக்கின்றன.

இதற்குள் அவளுடைய மூத்தமகனுடைய குரல் கதவருகேயிருந்து வருவதைக் கேட்டுத் திரும்பினாள். "அம்மா, உனக்கு வாழ்த்து கூறுவதற்கு நான் முன்பே வந்திருக்க வேண்டும்" என்றான் அவன்.

"உள்ளே வா மகனே" என்றாள் அவள் கனிவுடன்.

"இறைவன் உனக்கு நீண்ட ஆயுளை அளிக்க வேண்டும், அம்மா" என்று கூறிக்கொண்டே, விளையாட்டாக சற்றே குனிந்து வணங்கியவாறு அவன் உள்ளே வந்தான். பெரியவர்களின் பிறந்த தினத்தன்று அவர்கள் முன்னால் குனிந்து வணங்குவது பழைய சம்பிரதாயம். ஆனால் ஊ குடும்பத்தினர் பழைய சம்பிரதாயங்களைச் சிரத்தையோடு கடைப்பிடிப்பவர்களல்ல. ஆயினும் பழைய வழக்கத்தின் நினைவினால் லியாங்மோ அவ்விதம் வணங்கினான்.

ஸ்ரீமதி ஊ அவனுடைய வாழ்த்துக்களை உவகையோடு ஏற்றுக் கொண்டு அவனுக்குப் பதில் வணக்கம் தெரிவித்தாள். "மிக்க வந்தனம் மகனே! இப்போது சற்று உட்கார். நான் உன்னோடு பேசவேண்டும்" என்றாள்.

அவள் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, மற்றொன்றில் அவனை உட்காரச் சொன்னாள். அவன் மரியாதையோடு நாற்காலியின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

இளமை ததும்பும் அவனுடைய சுந்தர முகத்தைப் பார்த்தவாறு அவள், "நீ மிகவும் அழகாயிருக்கிறாய், மகனே" என்றாள். அவனுடைய தகப்பனார் அந்த வயதில் இருந்ததைவிட அவன் இன்னும் அழகாயிருக்கிறான் என்றே சொல்லலாம். ஏனெனில் அவளுடைய மென்மை குணங்களில் சில அவனிடம் அமைந்திருந்தன.

இன்று காலை, அவன் வெளுத்த பச்சை நிறத்தில், நீண்ட மெல்லிய சில்க் அங்கி ஒன்றை அணிந்திருந்தான். அவனுடைய குட்டையான, கரிய தலைமயிர் பின்னுக்கு வாரி விடப்பட்டிருந்தது. அவனுடைய உடல் நல்ல போஷாக்கினாலும் உணவினாலும் மென்மை பெற்றிருந்தது. அவ

னுடைய கண்களில் சுகவாழ்க்கையினுலுண்டாகும் திருப்தி நிறைந்திருந்தது.

'நான் செய்து வைத்த கல்யாணத்தினுல் அவன் ஆனந்தமடைந்திருக்கிறான்' என்று அவள் தனக்குள் திருப்தியுடன் எண்ணமிட்டாள். "என்னுடைய பேரன் எப்படி இருக்கிறான்?" என்று கேட்டாள் அவனை.

"நான் இன்னும் இன்று காலையிலிருந்து அவனைப் பார்க்கவில்லை. ஆனல் உடம்பு சுகமில்லையென்றல் தெரிந்திருக்கும்" என்று யதிலுரைத்தான் அவன்.

தாயாரின் மலர்ந்த முகத்தைக் காண அவனுடைய முகமும் மலர்ந்தது. அவர்களிடையே அத்யந்த அன்பு இருந்தது. அவன் தன்னுடைய சொந்த அறிவை நம்பினதைவிட தனது தாயாரின் அறிவுக் கூர்மையிலேயே அதிக நம்பிக்கை வைத்திருந்தான். அவளுடைய இரண்டாவது மகன் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று கூறிய பொழுது, இளையவனுக்கு முதலில் செய்வதால் வீட்டில் குழப்பம் உண்டாகும் என்று பெரியவனைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி அவள் வேண்டிக் கொண்டாள். அப்போது உடனே அவன், "எனக்காக நீயே ஒரு பெண் பார்த்துவிடு, அம்மா. நான் என்னை அறிந்திருப்பதைவிட நீதான் என்னை நன்றாக அறிந்திருப்பாய்" என்று கூறி விட்டான். இப்போது அவன் தன்னுடைய அழகிய மனைவி மெங்கினுடன் பூரண திருப்தியுடன் வாழ்ந்து வந்தான். அவளும் மணமான ஒரு வருடத்திற்குள் அவனுக்கு ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுத்தாள். இப்போது மீண்டும் கர்ப்பமாயிருந்தாள்.

"நான் இன்றைக்குச் சொல்ல வேண்டுமென்று ஒரு நல்ல செய்தி வைத்திருக்கிறேன், அம்மா" என்றான் லியாங்மோ.

"ஆம், இன்று நல்ல செய்தி கேட்கவேண்டிய நாள் தான்" என்றாள் ஸ்ரீமதி ஹு.

"என்னுடைய பிள்ளைகளின் தாய் மீண்டும் கர்ப்பமாயிருக்கிறாள்" என்று அவன் பெருமையுடன் தெரிவித்து விட்டு மேலும், "இப்போது இரண்டு மாதமாகி விட்டதால் அவளுக்கு நிச்சயமாகி விட்டது. மூன்று நாட்களுக்கு முன்பு தான் எனக்குக் கூறினாள். நான் இதைக் குடும்பத்திற்குத் தெரிவிப்பதற்கு அம்மாவின் பிறந்த நாள் வரை காத்திருப்போம் என்று கூறினேன்" என்றான்.

"மிகவும் சந்தோஷகரமான செய்திதான். அவளுக்கு நான் ஒரு பரிசு அனுப்புகிறேன் என்று சொல்லு" என்றாள் உவகையுடன் ஸ்ரீமதி ஹு. அதே சமயம் அவளுடைய கண்கள் அருகிலிருந்த பீங்கான் மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த அச்சிறுமுத்துப் பெட்டியின்மீது விழுந்தன. அப்பெட்டியைக் கையிலெடுத்துத் திறந்தவண்ணம், "இதோ இருக்கிறது! ஒரு மணிக்கு முன்பு அவளுடைய சொந்தத் தாயே இந்த முத்துத் தோடுகளை எனக்குக் கொடுத்து விட்டுச் சென்றாள். முத்துக்கள் சிறு பெண்களுக்குத்தான் ஏற்றவை. இதை நான் என் மருமகளுக்குக் கொடுத்துவிடுவதே பொருந்தும். நீ மெங்கிடம் செல்லும் போது—இல்லை, நானே உன்னுடன் வருகிறேன். முதலில், நான் இன்றைய விருந்திற்காகவும் வருகிறவர்களுக்காகவும் செய்ய வேண்டியது ஏதாவது இருக்கிறதா? சொல் மகனே!" என்றாள்.

"ஒன்றுமில்லை! அம்மா. நாங்கள் எல்லாம் உனக்காகச் செய்வோம். ஒரு நாளைக்காவது உனக்கு நிம்மதியைக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் அனைவரும் விரும்புகிறோம். நீ ஒன்றைப் பற்றியும் கேட்கக் கூட வேண்டியதில்லை. வெறுமே உட்கார்ந்து யாவற்றையும் அனுபவித்தால் அதே போதும் எங்களுக்கு. ஆமாம்...அப்பா எங்கே?" என்று கேட்டான்.

"என் பிறந்த நாளான இன்றுகூட அவருக்கு சீக்கிரம் எழுந்திருப்பதென்றல் சிரமம் தான். ஆனல் சீக்கிரம் எழுந்திருப்பதைவிட நேரம் கழித்து எழுந்தாலே சுறுசுறுப்பாகவும் குதூகலமாகவும் இருக்கிறார். ஆதலால் அவரை எழுந்திருக்க வேண்டாமென்று நான் சொல்லி விட்டேன். இல்லாவிடில் இன்றைய கொண்டாட்டத்தைப் பூரணமாக அவரால் அனுபவிக்க முடியாது" என்றாள் ஸ்ரீமதி ஹு புன்னகையுடன்.

"நீ எங்கள் எல்லோரிடமும் மிகுந்த அன்பைக் காட்டுகிறாய்" என்றான் லியாங்மோ.

இதைக் கேளாதவள் போல் அவள் சாந்தம் குடிகொண்ட தனது விழிகளால் அவனை உற்று நோக்கியவாறு, "என் மகனே, சந்தேகமில்லாமல் இதற்கும் ஒருநாள் தடை வரக்கூடும். ஆகவே நான் செய்ய உத்தேசித்திருக்கும் காரியத்தை இப்போதே உன்னிடம் சொல்லி விடுகிறேன். நான் அதைப் பற்றி முடிவு செய்து விட்டபோதிலும், மூத்தமகன் என்ற முறையில் அதை உனக்குத் தெரிவிக்க வேண்டியது

எனது கடமை. நான் உனது தகப்பனரை வேறொரு இளம்பெண்ணை மனைவியாக ஏற்றுக் கொள்ளச் சொல்லலாமென்று தீர்மானித்திருக்கிறேன்" என்று கூறினர்.

இத்தனை பெரிய விஷயத்தை அவள் அமைதியுடன் சாதாரணமாகக் கூறவே, முதலில் லியாங்மோ ஒன்றும் புரியாமலே அதற்கு செவிசாய்த்துக் கொண்டிருந்தான். புரிந்ததும் அவனுக்குத் தலைமேல் இடிவிழுந்தது போலிருந்தது. மனதில் குழப்பம் நிறைந்தது. அவனுடைய முகம் வெளிறிப் போய்விட்டது.

"அம்மா! அம்மா! இது என்ன? என் தந்தை...அவர் கூடவா..." என்று மேலே கூறமுடியாமல் திணறினான்.

"இல்லை, இல்லை. அப்படி ஒன்றுமில்லை" என்றாள் அவள். லியாங்மோவும் இதே கேள்வியை முதலில் கேட்டது அவளுக்கு வேதனையை அளித்தது. அவளுடைய கணவன், அப்படிப்பட்ட குணமுள்ளவராகவா எல்லோருக்கும் தோன்றுகிறார்! அவள் உடனே அக்கேள்வியை ஒதுக்கிவிட்டு லியாங்மோவை நோக்கி, "உன்னுடைய தந்தைக்கு நாற்பத்தைந்து வயதாகிய போதிலும், அவர் இன்னும் யௌவனமும் அழகும் குன்றாமல் இருப்பதால், அவருடைய மகனான உனக்குக்கூட அம்மாதிரி கேள்வி கேட்கத் தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. இல்லை, அவர் ஒரு நாளும் நம்பிக்கைத் துரோகம் செய்தவரல்ல. இதில் அவருடைய தவறு ஒன்றுமேயில்லை" என்றாள்.

சிறிது நேரம் கழித்து அவள் சற்றே கூச்சத்துடன் தொடர்ந்து பேசவாரம்பித்தாள். லியாங்மோ அவள் அவ்விதம் பேசியதை என்றுமே கண்டதில்லை. அவள், "இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய சொந்த காரணங்கள் இருக்கின்றன. ஆனால் என்னுடைய மூத்தமகன் என்ற முறையில் உன்னிடமிருந்து உறுதி பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். அவள் வந்தால் நீ அவள் வருகையை ஆமோதித்து, மற்றவர்களையும் ஒத்துக்கொள்ளச் செய்ய வேண்டும். இதனால் பல பேச்சுகளுக்கும் குழப்பங்களுக்கும் இடம் உண்டாவது சகஜம்தான். என்னால் அதைப் பொருட்படுத்த முடியாது. ஆனால் நீ அதைக் கவனித்து சரி செய்து உன்னுடைய பெற்றோர்களின் மரியாதையைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினாள்.

அவனுடைய முகம் இன்னும் வெளிறியே இருந்தாலும், இதற்குள் ஒருவாறு சமாளித்துக் கொண்டான் லியாங்மோ. அவன் தனது தாயினுடையதைப் போலவே இருந்த தனது

கரிய புருவங்களை நெரித்துக் கொண்டு, "வாஸ்தவத்தில் இது உன்னையும் அப்பாவையும் பொருத்த விஷயம். என்னுடைய ஸ்தானத்தை மீறிவர அனுமதிப்பாயாகில், நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது யாதெனில், இதில் அப்பாவுக்கு இஷ்டமில்லாவிடில் நீ அவரை இதைச் செய்யச் சொல்லக்கூடாது. நமது குடும்பம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கிறது. புதிய பெண் ஒருத்தி வந்தால் எப்படி இருப்பாள் என்று நமக்கு எப்படித் தெரியும்? அவளுடைய குழந்தைகள் உன்னுடைய பேரக் குழந்தைகளின் வயதில் இருக்கும். இதனால், தலைமுறைகளுள் கலவரம் ஏற்படாதா? அவள் வயதில் சிறியவளாகயிருந்தால், உன் மருமக்கள் அவளுக்கு அப்பாவினிடமுள்ள அந்தஸ்தைக் கண்டு பொறுமை கொள்ள மாட்டார்களா? இதனால் அநேக கஷ்டங்கள் வரும் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான் லியாங்மோ.

"உன்னுடைய வயதில், எங்கள் வயதையடைந்த ஆண்-பெண்களுள் ஏற்படக்கூடியத் தொடர்புகளைப் பற்றி அறிந்து கொள்வது கடினமாகயிருக்கலாம். உன்னுடைய தந்தையும் நானும் மிகமிக சந்தோஷத்துடன் வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறோம். அதனாலேயே நான் இக்காரியத்தைச் செய்யத் துணிந்தேன். என் மகனே, தயவு செய்து நீ வீணாக அலட்டிக் கொள்ளாதே. நான் இப்போது உன்னை வேண்டுவதெல்லாம், நீ இதுநாள் வரை செய்ததுபோல் இதற்கும் என் சொற்படி கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதே. என்னுடைய பிள்ளைகள் அனைவரிலும் நீயே எனக்குச் சிறந்தவனாக இருந்து வந்திருக்கிறாய். நீ இப்போது சொல்வது உன் தம்பி மார்களையும் பாதிக்கும். அதே போல் மெங் சொல்வது, மற்ற நாட்டுப் பெண்களையும் பாதிக்கும். ஆகையால் மெங் கிற்கும் நீதான் எடுத்துச் சொல்ல வேண்டும்" என்றாள் ஸ்ரீமதி ஹு.

லியாங்மோவின் உள்ளத்தில் பெரும் போராட்டம் எழுந்தது. ஆயினும் இத்தனை நாட்களும் தாயாருக்குக் கீழ்ப்படிந்தே நடந்து வந்த அவனால் இப்போதும் கீழ்ப்படிவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. "நான் என்னால் முடிந்ததைச் செய்கிறேன், ஆனால் குதூகலமான இன்றைய தினத்தில் எனக்கு இதனால் மிகுந்த துயரமுண்டாகிறது என்பதை என்னால் ஒளிக்க முடியாது" என்றான்.

அவள் லேசாகச் சிரித்து, "இதனால் உண்மையில் நான் பின்னால் வரக்கூடிய கஷ்டங்களையெல்லாம் தவிர்க்கிறேன்" என்றாள். தன்னைவிட வயதில் மிகச் சிறியவனான அவனுக்குத்

தான் சொல்வதெல்லாம் புதிராக இருக்கிறது என்பதைக் கண்டாள் அவள். பிறகு உடனே எழுந்து அச்சிறு பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு, "வா, மெங்கைப் பார்த்து வருவோம். அவளுக்கு நான் இந்தப் பரிசை அளிக்கவேண்டும்" என்று அழைத்தாள்.

அவன் எழுந்து தாயினருகே நின்றான். அவனுடைய தந்தை வாலிபத்தில் இருந்தது போலவே அவனும் வாலிபமும் பலமும் பொருந்தி, அவளைவிட அதிக உயரமாக இருந்தான். தனது குறுகிய கையை அவனுடைய கைமேல் மிகுந்த அன்போடு வைத்தவாறு ஒருகணம் நின்றாள். அவளுடைய அபூர்வமான இச்செய்கை அவனைத் திடுக்குறச் செய்தது. அவள் எப்போதும் தன் சொந்த குழந்தைகள் தன்னைத் தீண்டுவதைக் கூட விரும்பமாட்டாள். அவன் குனிந்து அவளுடைய சாந்தம் நிறைந்த முகத்தை நோக்கினான்.

"உன் மூலம், நான் என்னுடைய வீட்டைப் பாதையின் மீது கட்டிவிட்டேன்" என்றாள் மிகத் தெளிவாக அவள்.

* * * *

அந்தப் பெரிய வீட்டின் ஒரு பகுதியான தன்னுடைய சிறிய வீட்டின் முன்புறமிருந்த, திறந்த வாசலில் மெங் தனது சிறு பையனுக்கு விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தாள். அவளுடன் அந்தப் பையனுக்குப் பால் கொடுக்கும் தாதியும் இருந்தாள். அவள் தன் குதிங்காலின்மேல் உட்கார்ந்தவாறு, இதை வேடிக்கை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள். அச்சிறுவனுடைய தாயும் தாதியுமான அந்த இளம் நங்கைகள் இருவரும், அவனை நாள் முழுவதும் போற்றிச் சீராட்டி வந்தனர். இரவில் சிறுவன் தாதியின் அணைப்பில் தூங்குவான். இரு பெண்களுக்கும் பொதுவான இந்த அன்பினால் அவர்களிடையே ஆழ்ந்த நட்பு ஏற்பட்டது. அவர்கள் தங்களுடைய சுகத்தை ஆனந்தமாகத் தியாகம் செய்து, அச்சிறுவனின் தேவைகள் யாவற்றையும் அன்புடனும் சிரத்தையுடனும் பூர்த்தி செய்து வந்தனர்.

மெங்கின் உடல் குழந்தை பெறுவதற்கு ஏற்றதாகயிருந்தது. அவளிடம் தாய்ப்பால் நிறைய இருந்தது. ஆனால் அவளாவது மற்றவர்களாவது குழந்தைக்குப் பால் கொடுத்து அவள் தனது உடலழகைக் கெடுத்துக் கொள்ள முடியும் என்று கனவில் கூட கருதவில்லை. ஆதலால் லியன், குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்தாள். அவள் ஊர் நிலங்களிலிருந்த ஒரு குடியானவனின் இளம் மனைவி.

அவளுடைய சிறுபையன் அங்கு, தாய்ப்பாலுக்குப் பதிலாகத் தன் பாட்டியினால் மாவும், தண்ணீரும், அரிசிக் கஞ்சியும் ஊட்டப்பட்டு வளர்ந்து வந்தான். ஆதலால் அவன் வளராமல் இளைத்து சோகை பிடித்து இருந்தான். இங்கு லியனின் பாலைக்குடித்து வளர்ந்த குழந்தையோ கொழுகொழுவென்று அழகாக இருந்தது. லியன் மாதத்திற்கொருமுறை வீட்டிற்குப்போக அனுமதித்திருந்தார்கள். அவள் தன் குழந்தையைப் பார்த்து விம்முவாள். அவனை எடுத்துப் பால் கொடுப்பாள். தாய்ப்பாலையே ருசி பார்த்திராத அக்குழந்தை, பாலைக்குடிக்க மறுத்து முகத்தை மறுபுறம் திருப்பிக் கொள்ளும். அவளால் அந்த ஒருநாள்கூட அங்கு தங்க முடியாதவாறு அவளுடைய மார்பு வலிக்க ஆரம்பித்து விடும். ஆகவே அன்று மத்தியானமே திரும்பி விடுவாள். இந்தக் குழந்தையோ இங்கு பசியுடனும் ஆத்திரத்துடனும் காத்துக் கொண்டிருக்கும்.

இந்தக் குழந்தையைப் பார்த்ததும் அவள் தன்னுடைய இளைத்த சோகை பிடித்த குழந்தையை மறந்து விடுவாள். கைகளை விரித்தவாறு ஆவலுடன் அதனிடம் ஓடுவாள். அக்குழந்தை தாயின் மடியிலிருந்து கத்திக் கொண்டு அவளிடம் ஓடிவந்து தன் பசியைத் தீர்த்துக் கொள்ளும். அவ்விரு பெண்களும் குழந்தையின் சுகத்தைத் தங்களது உடலிலேயே உணர்ந்து திருப்தியடைவார்கள்.

குழந்தையோடு அவ்விருவரையும் பார்த்தால், குழந்தையினுடைய தாய் யார் என்பதை அவர்களுடைய முகத்தைக் கொண்டு கண்டறிவது கஷ்டம். உண்மையில், குழந்தைக்கும் எந்த வித்தியாசமும் தெரிந்ததாகத் தோன்றவில்லை. அவன் இருவரையும் பார்த்து மகிழ்ச்சியுடன் சிரித்தான். அவன் அன்று தான் நடப்பதற்குப் பழகிக் கொண்டிருந்தான். மாற்றி மாற்றி ஒருத்தியிடமிருந்து இரண்டடி வைத்து மற்றவள் மீது விழுந்து சிரித்து மகிழ்ந்தான்.

மெங் குதூகலமான சுபாவமுடையவள். அதுவும் சில தினங்களாக அதிக ஆனந்தத்தில் மூழ்கியிருந்தாள். இரண்டாவது குழந்தை பிறக்கப் போவதை அவள் லியாங்மோவைத் தவிர வேறு யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் வேலைக்காரர்களுக்குத் தெரியும். அவளுடைய பணிப் பெண் தான் அவளுக்கு, அவள் இரண்டு மாதமாக தூரமாகாமலிருக்கிறாள் என்பதை நினைவுறுத்தினாள். வேலைக்காரர்களின் விடுதியில் இம்மகிழ்ச்சி ரகசியமாக அனுபவிக்கப்பட்டு வந்தது. ஆனால் பெரிய வீடுகளில் வேலைக்காரர்கள் ஒருவித லட்சியமுமில்

லாமல் மேஜை நாற்காலிகளை உபயோகிப்பது போல தானே உபயோகிக்கப்படுகிறார்கள்.

லியன் இதை அறிந்ததும் பின்னும் அதிக ஆனந்தம் கொண்டாள். இம்மாதிரியான பால் கொடுக்கும் பல தாதி களைக் கொண்ட வீடு அதிர்ஷ்டம் வாய்ந்தது. அவளுக்கு வரவர தன் குழந்தையின் மீது இருந்த அன்பு மறைந்து விட்டது. அவளுடைய ஆசை முழுவதும் இப்போது தான் பாலூட்டி வளர்க்கும் குழந்தையிடமே சென்றது. அவ ளுடைய சொந்த வீட்டில் வறுமையும் துன்பமும், வயிற் றிற்குப் போதாத உணவும் தாலிருந்தது. அவளுடைய மாமியார் பொல்லாதவள். அவளைக் கண்டபடி ஏசி அவள் வீட்டிற்குக் கொண்டு வரும் கூலிகளைப் பிடுங்கிக் கொள்வாள். வந்த புதிதில் அவள் தன் வீட்டின் நினைவினால் இரவு பகலாக அழுது கொண்டிருந்தாள். அவளுடைய மாமியார் அவளை இங்கு அனுப்பி விட்டதற்காக வருந்தினாள். ஆனால் விரை விலேயே நல்ல உணவை உண்டு வேலையில்லாமல் சும்மா யிருப்பதையே சுகமென்று கருதத் தொடங்கினாள். பைய னுக்குப் பாலூட்டுவதைத் தவிர அவளிடம் வேறொன்றும் கேட்கப்படவில்லை. அவளை நன்றாக உண்டு உறங்கி சுகமாக இருக்கச் சொன்னார்கள். சுகத்தை விரும்பிய அவளது இளம் சரீரம் இதற்கு சீக்கிரத்திலேயே வளைந்து கொடுத்தது. இதையே தன் வீடாகப் பாவிக்க ஆரம்பித்தாள். தான் வளர்த்த பையனையே சொந்த பையனுக்கும் மேலாக நேசிக்கத் தொடங்கினாள்.

பரிபூரண திருப்தியுடன் இருந்த அவள் இன்னொரு குழந்தை பிறக்கப் போகும் செய்தியை அறிந்து மிகவும் ஆனந்தித்தாள். தனது மகிழ்ச்சியை சிறிய எஜமானிக்கு, அன்று காலை தெரிவிக்க வேண்டுமென்று மிகவும் விரும்பினாள். ஆனால் கூடவே தயக்கமும் ஏற்பட்டது. சோம்பேறியான இந்தப் பணக்காரப் பெண்களிடம் ஒரு கஷ்டமிருந்தது. அவர் கள் இஷ்டமிருந்தால் எதையும் அனுமதிப்பார்கள். இல்லா விடில் எதிர்பாராத விதமாக திடீரென்று பெருங்கோபம் கொள்வார்கள். ஆகவே அவள் ஒன்றும் கூறாமல் மேலும் மேலும் சிரித்தவாறு, அச்சிறுவனைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

"ஒரு குட்டி தேவதை இது! இதைப் போல் நான் எங்குமே கண்டதில்லையம்மா!" என்று ஆசையுடன் கூறினாள் லியன்.

மெங் சிரித்து விட்டு ஏதோ சொல்வதற்குள், காலடி யோசை கேட்டது. குழந்தை லியனிடம் ஓடிச் சென்று நின்று கொண்டு, அங்கு வந்த தனது பாட்டியையும் தந்தையையும் வெறித்து நோக்கியது. மெங் எழுந்தாள்.

"இங்கேயா இருக்கிறாய், மெங்?" என்று கூறியவாறு வந்த ஸ்ரீமதி ஹு, "உட்காரு, குழந்தாய். வீணாக அலட்டிக் கொள்ளாதே. இங்கே வாப்பா! பேரக் குழந்தை! என் னிடம் வா" என்றாள்.

லியன், சிறுவனைத் தன் கையால் அணைத்தவாறு முன்னால் மெதுவாகத் தள்ளினாள். சிறுவன் ஸ்ரீமதி ஹுவின் காலருகே நின்று கொண்டு, அவளைத் தன் அகன்ற கரிய விழிகளின் கடைக் கண்ணால் வெறித்து நோக்கி விட்டுப் பிறகு தனது விரல்கள் அனைத்தையும் வாய்க்குள் போட்டுக் கொண்டான். அவள் மெதுவாக அவனுடைய விரல்களை வெளியே எடுத் தாள்.

"குழந்தையின் அழகே அழகு! நீ அவனுக்குப் பெயர் வைத்து விட்டாயா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஹு.

"அதற்கென்ன அவசரம்? பள்ளிக்கூடத்திற்குப் போகும் வரை அது அவசியமில்லையே" என்று பதிலளித்தான் லியாங்மோ.

அவள் கீழே நின்ற சிறுவனை நோக்கினாள். அவன் அவர்கள் மத்தியில் எல்லோருக்கும் நடுநாயகமாக நின்றான். அவர்கள் எல்லோரும் அவரவர்களுடைய ஆசைகளையும் நம்பிக்கைகளையும் அவன் மீது வைத்திருந்தனர். இச் சிறு உருவத்தின் மூலமா அவர்கள் தங்கள் மனக் கோட்டையைக் கட்டினர். இல்லை, இச் சிறுவனின் பொருட்டாக அவர்கள் அவ்வளவு சிரத்தை கொள்ளவில்லை. அவன் ஒருக்கால் இறந்துபோகும் பட்சத்தில் வேறொருவன் அவனுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளக்கூடும். ஆனால், மனித வாழ்வு தொடர்ந்து சென்று கொண்டேயிருக்கிறது என்ப தற்கு ஓர் அறிகுறி அவன். அதுவே அவர்களை அவனைப்பற்றி கனவு காணச் செய்தது.

கவர்ந்திழுக்கும் அந்த அழகிய சிறு முகத்திலிருந்து தன் பார்வையைத் திருப்பிக் கொண்டு அவள் தான் வந்த காரி யத்தை நினைவு கூர்ந்தாள்.

"மெங், நீ இன்னும் அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கப் போகிறாய் என்று லியாங்மோ கூறினான். உனக்கு என்

மகிழ்ச்சியைத் தெரிவித்து விட்டு, ஒரு பரிசும் கொடுத்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றாள்.

மெங் முகம் சிலக்க, தன்னுடைய சிறிய தலையை மறு புறம் திருப்பிக் கொண்டாள். அவளுடைய அழகில் இருந்த ஒரு குறை அவளுடைய தலைமயிர் தான். அவள் அதை வாசனை மிருந்த சந்தனுதித் தைலத்தை விடாமல் உபயோகித்து வாரி வந்த போதிலும், அது சுருண்டு கொண்டே போயிற்று. சந்தோஷத்திற்கிடையே அவளுக்கு எங்கே தனது மாமியார், தன்னுடைய மயிர் சுருண்டு கொள்வதைப் பார்த்துவிடப் போகிறாளோ என்ற பயமும் கலந்து கொண்டது. ஸ்ரீமதி ஊவிடம் அவள் மிகுந்த அன்பு வைத் திருந்தபோதிலும் கூடவே அவளிடம் பயமும் இருந்தது. ஸ்ரீமதி ஊவின் அழகிய தலையில் ஒரு மயிர் கலைந்திருந்ததை யாரும் பார்த்ததில்லை.

மெங் அப் பரிசைப் பெற்றுக் கொள்வதற்காக, பயத்தை யும் மறந்தவளாய்த் தனது இரு கரங்களையும் ஆவலோடு நீட்டினாள்.

"என்னுடைய அம்மாவின் முத்துக்கள் அல்லவா இவை!" என்று கூறி ஸ்தம்பித்துப் போனாள்.

"அவள் எனக்குக் கொடுத்தாள். ஆனால் எனக்கு இப்போது முத்துக்கள் அணியும் வயதல்லவே! பார், இந்த வீட்டில் எல்லாம் நன்மைக்கே நடக்கிறது. நீ இன்று எனக்கு இந்த சந்தோஷகரமான விஷயத்தைத் தெரிவித்தாய். என்னிடமும் உனக்குக் கொடுப்பதற்காக இவை வந்து சேர்ந்தன" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"இந்த முத்துக்களுக்காக நான் மிகுந்த ஆசைப்பட்ட துண்டு!" என்று கூறி விட்டு மெங் அப் பெட்டியைத் திறந்து முத்துக்களை ஆசையோடு பார்த்தாள்.

"அதை இப்போதே அணிந்து கொள்" என்று உத்தர விட்டான் லியாங்மோ. மெங் அதன்படியே செய்தாள். அவளுடைய மிருதுவான கன்னங்கள் மேலும் சிவந்தன. சிறுவன் உள்பட எல்லோரும் அவளையே பார்த்துக் கொண் டிருந்தனர். அவள் தன் மெல்லிய கரங்களால், சற்றும் நடுக்குறுமல், அவற்றைக் காதில் அணிந்து கொண்டாள்.

"நான் இதை எடுத்துக் காதில் போட்டுக்கொண்டு, இதை எனக்கே கொடுத்து விடும்படி என் அம்மாவிடம் அநேக முறை கேட்டிருக்கிறேன்" என்று கூறினாள் மெங்.

"இப்போது அவை உனக்குக் கிடைத்து விட்டன" என்று கூறிய ஸ்ரீமதி ஊ, மகனின் பக்கம் திரும்பி, "இப்பொழுது அம் முத்துக்கள் எப்படி ரோஜா நிற வர்ணம் பெற்று விட்டன பார்! முதலில் அவை வெளுப்பாக இல்லை" என்று கூறினாள்.

அது வாஸ்தவம்தான். மெங்கினுடைய மெண்மையான தேகத்தில் அவை மிக அழகாக, நிறம் ஏறி பிரகாசித்தன.

"ஐயையோ! எஜமானி இவ்வளவு அழகாயிருக்கக் கூடாது. அப்போது பெண் குழந்தைதான் பிறக்கும்!" என்று கூறினாள் லியன்.

எல்லோரும் சிரித்தனர். ஸ்ரீமதி ஊ சிரிப்பதை நிறுத்தி விட்டு, போவதற்காக எழுந்த வண்ணம், "பெண்ணுகையிருந் தால் நான் மிக மகிழ்ச்சியோடு அதை வரவேற்பேன். உலகத்தில் ஆணைப்போல் பெண்ணும் இருக்க வேண்டிய தவசியம் என்பதை நாம் மறந்து விடுகிறோம். ஆனால் அதுவே உண்மை. இல்லையா மெங்?" என்றாள். மிகுதியான வெட்கத் தினால் மெங் பேசாதிருந்தாள்.

* * *

பிறந்த நாள் வைபவத்தின் விருந்து நேரமும் வந்தது. ஸ்ரீமதி ஊ பெரிய எஜமானிக்கு, அதாவது அவளுடைய மாமி யாருக்கு இடது பக்கத்தில் அமர்ந்திருந்தாள். பெரியம்மா ளுக்கு அவளுடைய வயதையும் தலைமுறையையும் உத்தேசித்து எல்லோரையும் விட உயர்ந்த ஆசனம் அளிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீமான் ஊ அவருடைய தாயின் வலதுபுறத்தில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார். அவருக்கருகே லியாங்மோ உட் கார்ந்திருந்தான். இரண்டாவது மகன் த்ஸேமோ ஸ்ரீமதி ஊவுக்கு இடது பக்கத்திலும் அவளுக்கு அடுத்தாற்போல் மூன்றாவது மகன் பெஸ்மோவும் அமர்ந்திருந்தனர். நான்கா வது மகன் என்மோ ஏழு வயது சிறுவன். அவன் இப்போது தன் தகப்பனாருடைய அறையில் வந்து வசிக்க ஆரம்பித்திருந் தான். அவன் தந்தையினருகே அவருடைய கைகளின் அணைப்பில் நின்று கொண்டிருந்தான். இவ்வாறாக குடும்பத் தினர் யாவரும் அவரவர்களுடைய இடங்களை எடுத்துக் கொண்டனர். பிள்ளைகளுக்கு அடுத்தபடியாக முதல் இரண்டு பிள்ளைகளின் மனைவிகள் உட்கார்ந்திருந்தனர். மெங் மடியில் குழந்தையுடன் உட்கார்ந்திருந்தாள். ஒரு பணிப்பெண், குழந்தை தொந்தரவு செய்தால் எடுத்துக்கொண்டு போவதற் காக அருகிலேயே தயாராக நின்றாள். பெரிய எஜமானி,

பேரனுடைய மகனைப்பற்றி மிகப்பெருமை கொண்டிருந்தாள். ஆனால் ஸ்ரீமதி ஊவைப்போல் அவள் எல்லையற்ற பொறுமை யுடையவள் அல்ல. வெகு விரைவில் அவளுக்குக் கோபம் வந்து விடும்.

வாஸ்தவத்தில் எதுவுமே ஸ்ரீமதி ஊவைக் கோப மூட்டுவ தில்லை. முத்தைப் போன்ற வெண்ணிறமுடைய அவளது முகம், தன் குடும்பத்தினர் யாவரையும் ஒன்றுகச் சேர்த்துக் காண மகிழ்ச்சியினால் மலர்ந்திருந்தது. மற்றும் ஆறு மேஜை கள் போடப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றிலும் எட்டு பேர்கள் உட்கார்ந்திருந்தனர். அவைகளில் அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் தத்தம் குழந்தைகளுடன் உட் கார்ந்திருந்தனர். ஒரு மேஜையில் ஸ்ரீமதி கேங் தலைமை வகித்தாள். எல்லோரும் தாங்கள் வருவதற்கு முன்னதாகவே தத்தமது பரிசுகளை அனுப்பி விட்டனர். அப்பரிசுகள் பல வகைப்பட்டனவாக யிருந்தன. அவற்றில் பூக்கள் வைக்கும் பேழைகள், தேதிப் பெட்டிகள், தின்பண்டங்கள், கேக்குகள், சில்க் துணிகள் முதலியனவும் இருந்தன. சில்க் துணிகளின் மீது தங்கக் காகிதங்களை எழுத்துக்களாகக் கத்தரித்து ஒட்டி வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தனர். ஸ்ரீமான் ஊ சித்திர வேலைப்பாடுகள் செய்த கனத்த பட்டாடைகளையும், அவரு டைய தாய் உயர்ந்த ரக டீ பெட்டிகள் இரண்டையும், தங்கள் சொந்தப் பரிசாக வழங்கியிருந்தனர்.

குடும்பத்தாருடைய பரிசு மிக்க விலையுயர்ந்ததாயிருந் தது. அந்நகரத்தில் இருந்த மிகச் சிறந்த சைத்திகன் மூலம், நீண்ட ஆயுளைக் கொடுக்கும் தெய்வத்தின் உருவத்தை வரை யச் செய்திருந்தனர். ஸ்ரீமதி ஊவிற்கு வாழ்த்துக் கூற வந்த வர்கள் அதைப் பார்த்து விட்டு, அதன் அழகை ஒருமுகமாகப் புகழ்ந்தனர். அப்படம் முக்கியமான இடத்தில் மாட்டப் பட்டிருந்தது. அதில் சிறுசிறு விஷயங்கள் கூடக் கவனிக்கப் பட்டிருந்தன. அந்தத் தேவதையின் கையில் அழியாத் தன்மை யைக் குறிக்கும் 'பீச்' என்ற புஷ்பம் இருந்தது. அவளருகே ஒரு கலைமான் நின்றிருந்தது. சிவப்பு வெளவால்கள் ஆசீர் வாதம் கொடுப்பதற்கு அறிகுறியாக, அத்தேவதையின் தலைக்குமேல் பறந்து கொண்டிருந்தன. அவளுடைய இடையிலிருந்து வேதை மருந்தைக் கொண்ட ஒரு சுரை குடுக்கை தொங்கிற்று. சைத்திகன் அதிகநாள் நீடித்து வாழும் பூண்டுகளைக்கூட மறவாமல் அவைகளை தேவதையின் செங்கோலில் கட்டி விட்டிருந்தான்.

ஸ்ரீமதி ஊவிற்குப் பின்னால் சுவற்றில் ஒரு சதுரமான சிவப்புப் பட்டு தொங்கவிடப் பட்டிருந்தது. அவற்றினூடே நீண்ட ஆயுளைக் குறிக்கும் சொற்கள் கருப்பு வெல்வட்டினால் தைக்கப்பட்டிருந்தன. பளபளவென்றிருந்த இப்பட்டினூடே ஸ்ரீமதி ஊவின் தலை தனி அழகுடன் மனோகரமாக விளங் கியது.

விருந்தினர்களுடைய வாழ்த்துக்களுக்கும் நல்லாசி களுக்கும், தன் தாயாரின் சார்பாக, லியாங்மோ பதில் வணக் கம் தெரிவித்தான். அவர்கள் அமர்வதற்கு முன் அவனும் மெங்கும், வீட்டின் முதல் மகன், மருமகள் என்ற முறையில், தங்கள் தாயின் சார்பாக ஒவ்வொரு மேஜைக்கும் சென்று அவர்களுக்கு வந்தனமளித்தனர். யாவும் மிக சகஜமாகவும் சம்பிரதாயப்படியும் நடைபெற்றன. அதிலிருந்து ஊ குடும் பத்தினர் பழைய வழக்கங்களை மதித்ததோடு புதிய வழக்கங் களின் நன்மையையும் புரிந்து கொண்டிருந்தனர் என்பது வெளியாயிற்று. ஸ்ரீமதி ஊ, அடிக்கடி தனது ஆசனத்திலிருந்து எழுந்து விருந்தினர்களிடையே சென்று, யாவும் ஒழுங்காகப் பரிமாறப்பட்டிருக்கின்றவா என்று கவனித்தாள். அவள் இம்மாதிரி செய்தபொழுது விருந்தினர்கள் எழுந்து அவளை, வீணாக அதிகமாகக் கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர். அவள் அதற்குப் பதிலாக அவர்களை மீண்டும் உட்கார்ந்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டாள்.

இவ்வாறு அவள் இருமுறை செய்ததும், மூன்றும் முறை ஸ்ரீமான் ஊ அவளைத் தடுத்து, "தயவு செய்து நீ மீண்டும் எழுந்திருக்க வேண்டாம். என் பிள்ளைகளின் தாயே! தித்திப் புப் பலகாரம் பரிமாறும்போது நான் உனக்குப் பதிலாகக் கவனிக்கிறேன்" என்றார்.

ஸ்ரீமதி ஊ தலையைச் சற்றே சாய்த்துப் புன்னகை செய்து தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். இதற்குள் பெரிய எஜமானி மிகப்பெரிய மாமிசத் துண்டம் ஒன்றை வாயில் போட்டுக் கொண்டு விட்டாள். அதிலிருந்த குழம்பு அவளுடைய ஆடைகளின்மீது வடிந்தது. இதைக் கண்ணுற்ற ஸ்ரீமதி ஊ சட்டென்று தனது தந்தக் கோல்களால் அதை பிடித்துக் கொண்டு, அதை அவள் சாப்பிடும்வரை அப்படியே பிடித்திருந்தாள். கிழவி, பேச நிகைத்து வழக்கமான ஆங்காரத்துடன், "இம்" என்று கத்தினாள்.

எஜமானியின் அருகிலேயே எப்போதும் தயாராக நிற்கும் இங் உடனே வந்தாள். "இங், உன்னுடைய புருஷனுக்கு மூளை என்பது கொஞ்சமாவது இருக்கிறதா? இந்த மாமிசத் துண்டங்களைச் சிறியதாக நறுக்க வேண்டுமென்று அந்த நிர்மூடத்திற்குச் சொல். எங்களுக்கு என்ன, புலி சிங்கங்களைப் போன்ற வாய் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறான் அவன்?" என்றாள் கோபத்துடன்.

"நான் அவருக்குச் சொல்கிறேன், பெரியம்மா!" என்றாள் இங்.

ஆனால் வயிறு நிறைந்ததும் பெரியம்மாளின் கோபமும் உடனே மறைந்து விட்டது. மீண்டும் குதூகலத்துடன் தனது கரகரப்பான உரத்த குரலில் அவள் எல்லோருடனும் பேச ஆரம்பித்தாள்.

அறையைச் சுற்றி ஒரு பார்வை பார்த்து விட்டு அவள், "வெள்ளைக்காரர்கள் பெரிய பெரிய மாமிசத் துண்டங்களை அப்படியே சாப்பிட்டு விடுவார்களாம். நான் பார்க்கா விட்டாலும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்கள் ஆட்டின் முழு காலையாவது அல்லது ஒரு குழந்தை அளவு பெரிதுள்ள மாட்டின் மாமிசத்தையாவது அப்படியே மேஜைமீது வைத்துக் கொள்வார்களாம். அதைக் கத்தியால் அறுத்துத் துண்டமாக்கிக் கொண்டு, பிறகு தங்களுடைய இரும்பு முட்கருவியால் அதை எடுத்து வாயில் திணித்துக் கொள்வார்களாம்" என்று கூறினாள்.

எல்லோரும் நகைத்தனர். ஸ்ரீமான் ஹு, "அம்மாவிற்கு இன்று ரொம்ப குஷி இளம்பியிருக்கிறது" என்றார். தனது தாயாரின் தவறான பேச்சுக்களை அவர் ஒருபோதும் திருத்த முன்வருவதில்லை. முதலாவது, அவர் அவளுடைய மகிழ்ச்சியைக் குலைக்க விரும்புவதில்லை. இரண்டாவது அதை எப்படிச் சொன்னாலும் அதனால் வித்தியாசம் ஒன்றும் ஏற்படப் போவதில்லையே! ஆதலால் அதற்காக வீண் சிரமம் எடுத்துக் கொள்வானேன் என்று பேசாதிருந்து விடுவார்.

இதற்குள் எட்டுவகை அருமையான பழங்கள் சேர்த்து செய்யப்பட்ட இனிப்புப் பலகாரம் கொண்டு வரப்பட்டது. அதைக் கொண்டு வந்தால் விருந்தில் பாதிபாகம் ஆகிவிட்டது என்று பொருள். அம்மதுரமான இன்பண்டத்தைக் கண்டதும் யாவருக்கும் குதூகலமுண்டாயிற்று. கதவருகே இங்கினுடைய கணவன், பாதி மறைந்தவாறு நின்று கொண்டு, விருந்தினர்களின் புகழுரைகளைக் கேட்பதற்காகத் தயாராக

யிருந்தான். அவனைக் கவனித்த ஸ்ரீமதி ஹு, இங்கின் பக்கம் திரும்பி, "அவனை இங்கே வரச்சொல்லு" என்று உத்தரவிட்டாள்.

இங்கினுடைய பருத்த கன்னங்கள் பெருமையால் பூரித்துச் சிவந்தன. ஆனாலும் மரியாதைக்காகத் தன் புருஷனைப் பொருட்படுத்தாதவளைப் போல் பாசாங்கு செய்தாள்.

அவள் உரத்த குரலில், "அம்மா, ஒன்றுக்கும் உதவாத என்னுடைய கணவரைப் பற்றி நீங்கள் வீண் சிரமம் எடுத்துக் கொள்ளாதீர்கள்" என்றாள்.

"இல்லை, கூப்பிடு" என்றாள் ஸ்ரீமதி ஹு.

இங் இஷ்டமில்லாதவளைப்போல் நடித்துக் கொண்டு தன் புருஷனை வரச் செய்தாள். அவன் தன் அழுக்கடைந்த முன் துணியைப் பெருமையுடன் தடவியவாறு, ஸ்ரீமதி ஹுவின் முன்னால் வந்து நின்றான். சிறந்த சமையல்காரர்கள் எப்போதும் சுத்தமான துணியை அணிவதில்லை என்பதை அவள் அறியாதவளல்ல!

ஸ்ரீமதி ஹு தனது அன்பான முறையில், "நீ இந்த அருமையான பண்டத்தைச் செய்திருப்பதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். அது எப்போதுமே நன்றாகயிருக்கும். இன்றோ எப்போதையும் விட மிக நன்றாகயிருக்கிறது. உன்னுடைய பொறுப்புள்ள வேலையையும் விசுவாசத்தையும் இது எடுத்துக் காட்டுகிறது. நான் இதைக் கண்டிப்பாக நினைவு வைத்திருப்பேன்" என்று கூறினாள்.

விருந்து முடிந்த பிறகு வேலைக்காரர்களுக்குக் கொடுக்கப் போகும் பரிசுகளையும் இனாம்களையும் பற்றி எஜமானி குறிப்பிடுகிறாள் என்பதைச் சமையல்காரன் நன்கு அறிவான். ஆனால் மரியாதைக்காக அதைக் காட்டிக் கொள்ளாமல் வேறு விதமாக எண்ணிக் கொண்டவனைப்போல், "தயவு செய்து அதைப் பெரிதாகக் கொள்ளாதீர்கள். நான் அதற்கு அருகனல்ல" என்று கூறினான்.

"சரி, போ வெளியே" என்று அதட்டினாள் இங். ஆனால் அவளுடைய கண்களிலோ பெருமை தாண்டவமாடியது. அவனும் மிகத் திருப்தியோடு சென்று விட்டான். அவனுக்குப் பின்னால் சென்ற இங், அதிக பெருமையை வெளிப்படுத்தி, தன்னுடைய தருக்குமேல் போகக்கூடாதென்று, பெரு முயற்சியோடு தன் மகிழ்ச்சியை அடக்கிக் கொண்டாள்.

இப்போது ஸ்ரீமான் ஊவிற்குத் தான் வாக்களித்ததைப் பூர்த்தி செய்ய வேண்டி வந்தது. அவர் ஒவ்வொரு மேஜைக்கும் சென்று, இனிப்புப் பலகாரத்தை நன்றாகச் சாப்பிடும்படி விருந்தினர்களை உபசரித்தார். சிந்தனை தோய்ந்த கண்களோடு ஸ்ரீமதி ஊவும் அவரைத் தொடர்ந்து சென்றாள். ஸ்ரீமதி கேங்கின் மேஜையில் அவளருகே மிக்க அழகு வாய்ந்த அவளுடைய மூன்றாவது பெண் உட்கார்ந்திருந்தாள். அந்த மேஜைக்கருகே ஸ்ரீமான் ஊ சற்று தாமதித்துக் கொண்டு நின்றிருந்தார் என்று ஸ்ரீமதி ஊவிற்குத் தோன்றியது. அது உண்மைதானா அல்லது அவளுடைய கற்பனையா...!

அதற்குள் கிழவியம்மாள், "கொஞ்சம் புட்டு எடுத்துப் போடுங்களேன் யாராவது" என்று முறையிட்டாள். உடனே ஸ்ரீமதி ஊ, கைகளின் மீதிருந்த துணிகளைத் தள்ளிவிட்டுக் கொண்டு, ஒரு பீங்கான் கரண்டியால் புட்டை எடுத்து, மாமியாருக்குப் பரிவுடன் அளித்தாள்.

"ஸ்பூன்—எங்கே என்னுடைய ஸ்பூன்?" என்று பெரியம்மாள் முனகினாள். ஸ்ரீமதி ஊ அவளுடைய கையில் ஒரு ஸ்பூனை வைத்தாள்.

பிறகு மீண்டும், சிந்தனையோடு ஸ்ரீமான் ஊவைக் கவனிக்கத் தொடங்கினாள். எல்லோரும் மௌனமாக அனுபவித்துச் சாப்பிடுவதில் ஈடுபட்டிருந்தனர். இப்போது சந்தேகமற, ஸ்ரீமான் ஊ ஸ்ரீமதி கேங்கின் அழகிய பெண்ணின் அருகில் தாமதித்துக் கொண்டு நின்றிருந்தார் என்பது தெரிந்தது. அப்பெண் நவநாகரிகத்தின் முதல் படியில் இருந்தாளாகத் தெரிய வந்தது. அவளுடைய தலைமயிர் மேலோட்டு முறையில் தோளாடு வெட்டப்பட்டு சுருட்டிவிடப் பட்டிருந்தது. ஷாங்காய் எதிரிகளினால் கைப்பற்றப்படுவதற்கு முன் அங்கு அவள் ஒரு வருஷம் பள்ளியில் சேர்ந்து படித்துவிட்டு வந்திருந்தாள். ஆகவே, இப்போது அவள் இச்சிறிய நகரத்தில் இருப்பதற்குப் பிடிக்காமல் தன் தாய் தந்தையார்களை அடிக்கடி தொந்தரவு செய்து வந்தாள்.

அப்பெண் ஸ்ரீமான் ஊ ஏதோ கேட்டதற்குத் தன் தலையை நிமிர்த்தித் துடிப்பாகப் பதில் கூறினாள். ஸ்ரீமான் ஊ சிரித்துவிட்டு மேலே சென்று விட்டார். ஸ்ரீமதி ஊ, அந்த இனிய பண்டத்திலிருந்து ஒரு ஸ்பூன் எடுத்துச் சாப்பிட்டாள். ஸ்ரீமான் ஊ திரும்பி வந்ததும் அவரைத் தனது சந்தோஷமற்ற விழிகளால் நோக்கி, "மிக்க வந்தனம்! என்னுடைய

பிள்ளைகளின் தகப்பனாரே" என்று கூறினாள் யாழினும் இனிய குரலில்.

விருந்து குதூகலத்துடன் மெதுவாக நடந்து கொண்டிருந்தது. இனிப்புப் பலகாரத்திற்குப் பின் மாமிசவகைகள் கொண்டு வரப்பட்டன. கடைசியாக விசேஷமான ஒரு வகைத் தின்பண்டம் ஆறு கிண்ணங்களில் வைக்கப்பட்டு கொண்டு வரப்பட்டன. சமையற்காரன் அரிசிக்குப் பதிலாக கோதுமை மாவினால் நீளநீளமான கேக்குகளைத் தயாரித்திருந்தான். பிறந்த நாளுக்கென்று விசேஷமாகச் செய்யப்பட்டவைகளில் அது ஒன்று. சாப்பிடுவதில் மிக நாசுக்காகயிருக்கும் ஸ்ரீமதி ஊ, மாமிச உணவுகளை மறுத்து விட்டாள். ஆனால் கோதுமை கேக்கில் சிலவற்றை அவள் சாப்பிட வேண்டியிருந்தது. சமையல்காரன் சிரத்தையுடன் அவற்றை மிகமிக நீளமாகச் செய்திருந்தான். அவை நீண்ட ஆயுளைக் குறிப்பன. ஸ்ரீமதி ஊ அதைச் சாமர்த்தியமாகத் தனது தந்தக் கோல்களில் சுற்றிக் கொண்டு சாப்பிட்டாள்.

ஆனால் பெரிய எஜமானிக்கு இத்தகைய பொறுமை கிடையாது. தின்பண்டம் நிறைந்த அக்கோப்பையை அவள் இடது கையால் வாயருகே பிடித்துக் கொண்டு அவற்றைத் தந்தக் கோல்களால் வாய்க்குள் திணித்துக் கொண்டு, குழந்தையைப் போல் சப்பிச் சப்பிச் சாப்பிட்டாள். அவள் எல்லாவற்றையும் ரஸித்து ஆனந்தமாகச் சாப்பிட்டாள். "இன்று இரவு எனக்கு உடம்புக்கு வந்து விடும். ஆனால் எவ்வளவு பட்டாலும் அது தகும். மகளே! இது உன்னுடைய நாற்பதாவது பிறந்த நாளன்றைய விருந்தல்லவா!" என்றாள் உரத்த குரலில்.

"திருப்தியாகச் சாப்பிடுங்கள், அம்மா!" என்றாள் ஸ்ரீமதி ஊ.

விருந்தினர்கள் ஒவ்வொருவராக மதுக்கிண்ணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்திருந்து, நல்வாழ்த்துக்கள் கூறிவிட்டு அதைக் குடித்தனர். ஸ்ரீமதி ஊ எப்போதும் மிகுந்த அடக்கத்துடன் நடந்து கொள்ளும் பெண்மணியாதலால் அவள் இதற்குத் தானாகவே பதிலளிக்கவில்லை. அவள் ஸ்ரீமான் ஊவைப் பார்க்கவே, அவர் அவளுக்குப் பதிலாக எழுந்து எல்லோருடைய ஆசிகளையும் ஏற்றுக் கொண்டார். ஸ்ரீமதி கேங் மட்டும் தன் சிநேகிதியைப் பார்த்து மௌனமாகத் தன்னுடைய கிண்ணத்தை உயர்த்தினாள். ஸ்ரீமதி ஊவும் தன்னுடைய கிண்ணத்தை உயர்த்தவே, இருவரும்

ரகளியமாகத் தங்களுக்குள் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டவர்களாக மதுவை அருந்தினர்.

பெரிய எஜமானி வயிறு நிறையச் சாப்பிட்டு முடித்து விட்டாள். நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு குடும்பத்தார் எல்லோரையும் கவனித்தாள். சட்டென்று, "லியாங்மோவிற்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறது" என்றாள்.

எல்லோரும் லியாங்மோவைக் கவனித்தனர். அவன் நிஜமாகவே உடம்பு சரியில்லாதவனைப்போல் மௌனமாக ஒரு புன்னகை செய்தான். பின் அவசரமாக, "நான் நன்றாகத் தானே இருக்கிறேன், பாட்டி," என்று கூறினான்.

மெங் கவலையோடு அவனைப் பார்த்தாள். "இன்று காலையிலிருந்தே நீங்கள் ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறீர்கள்! நானும் கவனித்தேன்" என்றாள் தாழ்ந்த குரலில்.

இதைக் கேட்டு அவளுடைய சகோதரர்களும் மற்றவர்களும் அவனையே பார்த்தனர். ஆனால் அவன் தலையை அசைத்தான். ஸ்ரீமதி ஹு ஒன்றும் பேசவில்லை. தான் காலையில் கூறினதை அவனால் இன்னமும் ஒப்புக் கொள்ள முடியவில்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள். அவன் அதே சமயம் முறையிடும் வண்ணம் அவனைப் பார்த்தான். ஆனால் அவள் சற்றே சிரித்துவிட்டுத் தன்னுடைய பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

திருப்பிய அவளது பார்வை புத்திகூர்மையும் சூட்சமமும் வாய்ந்த அவளது இரண்டாவது மருமகளின் மீது விழுந்தது. த்ஸேமோவின் மனைவி ருலான் விருந்து நேரம் முழுவதும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆனால் அவளுடைய துருதுருக்கும் கண்களோ, வாயால் பேசுவதற்கு மேலாகப் பேசின. மகனுடைய முறையீட்டையும் அதற்குத் தாய் அளித்த பதிலையும் அவள் கவனித்து விட்டாள் என்பதை ஸ்ரீமதி ஹு அறிந்து கொண்டாள். ஆனால் த்ஸேமோவோ, அங்கு நடந்தவற்றைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. பொறுமையற்ற இளைஞனான அவனுக்குப் பிறந்தநாள் கொண்டாட்டம் அளவுக்கு மேல் நீண்டுகொண்டே போவதாகத் தோன்றியது. அவன் நாற்காலியின் பின்புறம் சாய்ந்து கொண்டு அமைதியற்றவனாய் கால்களினால் மேஜை தட்டிக் கொண்டிருந்தான்.

அதிகமாகச் சாப்பிட்டு விட்ட ஏதோ ஒரு குழந்தை, செங்கல் தரைமீது குபீரென்று வாயிலெடுத்து விட்டது. உடனே வேலைக்காரர்களிடையே கலவரம் ஏற்பட்டது.

"நாயை உள்ளே கூப்பிடுங்கள்" என்று ஸ்ரீமதி கேங் யோசனை கூறினாள். ஆனால் கலவரமாயிருந்த அவ்விடத்திற்கு விரைந்து சென்ற இங் அவளிடம் மன்னிப்புக் கோரிய வண்ணம், "எங்கள் எஜமானி மேஜைக்கடியில் நாயைக் கொண்டு வருவதை அனுமதிக்க மாட்டார்கள்" என்று விளக்கிக் கூறினாள்.

ஸ்ரீமதி கேங்கின் அந்த அழகிய பெண் கோபத்துடன் உதட்டைப் பிதுக்கியவாறு, "நீயே பார் அம்மா! ஒருவரும் அம்மாதிரி செய்வதில்லை யென்று கூறினேனே, கேட்டாயா! அது மிகவும் பழைய காலத்து வழக்கம். நீ அதை நம் வீட்டில் செய்யும்போது எனக்கு மிகவும் அவமானமாக இருக்கிறது" என்றாள்.

"சரி, சரி, இப்போது பேசாமலிரு. மற்றவர்கள் எதிரில் உன்னுடைய அவமானத்தைப் பற்றி ஆரம்பித்து விடவேண்டாம்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"சிறு பெண்களுக்கே இப்போது அதிக வாயாகிவிட்டது" என்றார் ஸ்ரீமான் கேங். ஆனால் அவருக்கு லின்யியின்மீது அதிகப்பிரியம். அவருடைய பெண்களில் எல்லோரையும்விட அவள்தான் அதிக அழகு. இதைக் கூறிவிட்டு அவர் தம் பெண்ணைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

கிழவியம்மாள் தட்டுத் தடுமாறிக் கொண்டு எழுந்து, "நான் படுக்கைக்குப் போக வேண்டும். காய்ச்சல் வருவதற்கு இப்போதே தயார் செய்து கொள்ளவேண்டும்" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஹு எழுந்து, "ஆம், நீங்கள் உங்கள் அறைக்குச் செல்லுங்கள், அம்மா, நாங்கள் விருந்தினர்களோடு மற்றொரு அறைக்குச் செல்கிறோம்" என்று கூறி இரண்டு வேலைக்காரிகள் பெரிய எஜமானியை அழைத்துச் செல்லும் வரை பார்த்துக் கொண்டு நின்றாள். விருந்தினர்கள் எழுந்து விட்டனர்.

அவள் ஸ்ரீமான் ஹுவை நோக்கி, "நீங்கள் உங்கள் நேதிதர்களை பெரிய ஹாலுக்கு அழைத்துச் செல்கிறீர்களா? நாங்கள் எங்களுடைய உட்காரும் அறைக்குச் செல்கிறோம்" என்று சுதிய்யாகக் கூறினாள். பேசியவாறே அவள் நடக்கவும்,

பெண்மணிகள் அவளைத் தொடர்ந்து சென்றனர். ஆண்கள் தனியே பிரிந்து ஸ்ரீமான் ஊவுடன் சென்றனர்.

குழந்தைகள் வாசலுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். தூங்கிவிட்ட குழந்தைகளை தாதிகள் மடியில் படுக்க வைத்துக் கொண்டனர்.

ஸ்ரீமதி ஊ கதவருகே சற்று நின்று, அசௌக்யமாயிருந்த குழந்தையை வைத்துக் கொண்டிருந்த தாதியைப் பார்த்து, "குழந்தையை மூங்கில் தட்டி அறைக்கு எடுத்துக் கொண்டு போய் சிறிது நேரம் தூங்க வை. அங்கு நல்ல குளிர்ச்சியாக யிருக்கும்" என்றாள், அக்குரலின் கனிவைக் கேட்ட குழந்தை விசித்து அழுவதைக் கூட நிறுத்திவிட்டது.

உட்காரும் அறையில் ஸ்ரீமதி ஊ, பெண்களின் நடுவே மிக்க நாசுக்காகவும் கம்பீரமாகவும் வீற்றிருந்தாள். அவள் அதிகம் பேசவில்லை. அவள் எப்போதுமே அதிகமாகப் பேசுவது வழக்கமில்லையாதலால் அவளுடைய மௌனத்தை யாரும் கவனிக்கவில்லை. அவர்களுடைய பேச்சில் ஏதாவது தீர்ப்பு கூற வேண்டி வந்த சந்தர்ப்பங்களில் மட்டும் அவர்கள் தங்களையுமறியாது அவள் பக்கம் திரும்பினர். ஏனெனில் இவ்வீட்டில் அவளுடைய தீர்ப்பே முடிவான தீர்ப்பு என்பதை அவர்கள் அறிவார்கள். பாறைகளினூடே தண்ணீர் நழுவிச் செல்வதைப் போன்ற அத்தகைய இனிமையும் குழைவும் கலந்த மிருதுவான குரலில் தன்னுடைய தீர்மானத்தைத் தெளிவாக, மிகச் சில வார்த்தைகளால் தெரியப்படுத்தி விடுவாள்.

அவர்களுடைய பேச்சின் சுவாரஸ்யம் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது. ஒரு சிறு நாடகக் கூட்டத்தினர் நடித்துக் காட்டுவதற்காக அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் தங்கள் வித்தைகளையெல்லாம் செய்து காண்பித்துக் கொண்டிருந்தனர். குழந்தைகள் அதைப் பார்த்து மகிழ்ந்தனர். பெரியவர்கள் பேச்சில் ஈடுபட்டவண்ணம், உயர்ந்த ரகத் தேநீரைப் பருகியவாறு ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சிறு பெண்களுக்கு மத்தியில் வயதானவர்களுக்குப் பேசவதற்கு ஒன்றுமில்லையாதலால், ஸ்ரீமதி கேங் சிறிது நேரம் படுத்துத் தூங்கினாள். ஸ்ரீமதி ஊ இங்கை, "பெரிய எஜமானிக்கு உடம்பு எப்படியிருக்கிறதென்று பார்த்து வா" என்று அனுப்பினாள்.

இங் போய்விட்டு, சிரித்துக் கொண்டே திரும்பி வந்தாள். "அம்மாவுக்கு உடம்பு சுகமில்லை. எல்லாவற்றையும் வாந்தி

பண்ணிவிட்டார்களாம். ஆனால் அம்மாள் இத்தனை கஷ்டமும் தரும் என்றே இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினாள்.

யாவரும் நகைத்தனர். சிரிப்பு சப்தத்தைக் கேட்டு ஸ்ரீமதி கேங் விழித்துக் கொண்டாள். அவள் ஸ்ரீமதி ஊவிடம், "நாங்கள் வீட்டிற்குப் போவதற்கு நேரமாகிவிட்டது. உன்னை நாங்கள் அதிகம் தொந்தரவு செய்யக் கூடாது. ஏனெனில் நீ இன்னும் நூறு வயது வரை இருக்க வேண்டுமல்லவா?" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ புன்னகை பூத்தவண்ணம் எழுந்து விருந்தாளிகள் ஒவ்வொருவருக்காக விடை கொடுத்து அனுப்பினாள். விருந்தாளிகள் கொண்டு வந்த தின்பண்டங்கள், பரிசுகள், பணம் முதலியவை வேலைக்காரர்களுக்கு வழங்குவதற்காக எடுத்து வைக்கப்பட்டிருந்தன. இங் அவைகளைத் தட்டுகளில் வைத்து எடுத்து வந்தாள். அவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வேலைக்காரர்கள் ஆஜராயினர். கைகளை மார்பின் மீது சேர்த்துக் கூப்பியவண்ணம் அவர்கள் மிக்க மரியாதையோடு ஸ்ரீமதி ஊவின் முன்பு வணங்கினர். அவர்களுக்கு பதில் வணக்கம் தெரிவித்து, அவள் பரிசுகளை வழங்கினாள். வேலைக்காரர்களுக்கு முன்னமே சமையல் அறையில் நல்ல விருந்தளிக்கப்பட்டிருந்தது.

கடைசியாக, அவள் மீண்டும் தனிமையில் விடப்பட்டாள். அவளுடைய உடலும் உள்ளமும் மிகுந்த சோர்வையடைந்திருந்தது. மிக ஒயிலாக நிமிர்ந்து விளங்கிய அவளது சரீரத்தில் கணுக்கள் தோறும் வலியெடுத்தது. தொண்டையிலும் மார்பிலும் இடுப்பிலும் வலியெடுத்தது. வாடி உதிர்ந்த புஷ்பம் போல் காணப்பட்ட அவளுக்குத் தனக்கு மிகவும் வயது முதிர்ந்து விட்டதைப் போன்ற உணர்ச்சி தோன்றியது. சட்டென்று அவள் தனது மெல்லிய தோள்களை நிமிர்த்தி விட்டுக் கொண்டாள். இவ்வளவு சீக்கிரம் சோர்வடைவதாவது...! அது எப்படி முடியும்? பிறந்த நாள் தினம் கூட இன்னும் முடியவில்லையே!

* * * *

ஒரு மணி நேரம் இளைப்பாறியதும் அவள் எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாக ஏழுமுறை நடந்தாள். பிறகு ஜன்னலருகே சென்று தாழ்ந்திருந்த ஜன்னலின் சட்டத்தின்மீது சாய்ந்து நின்றாள். அதிக அகலமும் நீளமும் கொண்ட அந்த ஜன்னலின் பின்புறமாக இரும்புவலை அடிக்கப்

பட்டிருந்தது. அதற்கு வெளிப்புறம் இருந்த வாசலில்தான் அவள் அன்று காலையில் ஸ்ரீமதி சேங்கிலுடனும் பிறகு லியாங்மோவுடனும் பேசிக்கொண்டிருந்தாள். அவள் செய்யப் போகும் காரியத்தைக் கேட்டதும் அவர்கள் எப்படி அதிர்ச்சி யடைந்தார்கள் என்பதை நினைத்துக் கொண்டபோது, அவளையுமறியாமல் அவளது முகத்தில் புன்னகை தோன்றியது. ஆனால் அப் புன்னகையில் மகிழ்ச்சியோ துக்கமோ எதுவும் கலந்திருக்கவில்லை.

அச்சமயம் வாசலின் வட்டக் கதவின் வழியாக வந்து கொண்டிருந்த இங் அந்த புன்னகையைப் பார்த்துவிட்டாள். "அம்மா! இந்த நிலா வெளிச்சத்தில் உங்களைப் பார்த்தால் ஓர் இளம் நங்கையைப் போலிருக்கிறது" என்று கூவினாள் அவள்.

அவளுடைய முகத்திலிருந்த புன்னகை மறையவில்லை. அவள் திரும்பிச் சென்று கண்ணாடிக்கு எதிரில் அமர்ந்துகொண்டாள். இங் உள்ளே வந்து அவளுடைய மேலாடைகளை யெல்லாம் களைந்தெடுத்தாள். பிறகு அவள் ஸ்ரீமதி ஊவின் நீண்ட கூந்தலை அவிழ்த்துவிட்டு, அழகிய பற்களைக் கொண்ட சந்தனச் சீப்பினால் அழுத்தி வாரத் தொடங்கினாள். அந்த சாந்தம் நிறைந்த முகத்தைக் கண்ணாடியில் பார்த்தவாறு இங் அக் கண்கள் இன்று எவ்வாறு மேலும் அகன்று கருத்து விளங்குகின்றன என்று அதிசயித்தாள்.

"ரொம்பவும் களைத்துப்போய் விட்டார்களா, அம்மா?" என்று கேட்டாள் இங்.

"அப்படி ஒன்றுமில்லை" என்று பதிலளித்தாள் ஸ்ரீமதி ஊ.

இங் மேலும் தொடர்ந்து, "இன்றைய பொழுது மிகவும் நீண்டு விட்டது. உங்களுக்கு இன்றோடு நாற்பது வயதாகிறது அம்மா. நீங்கள் இனி வேறுவிதமான வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் இனி இவ்வளவு கடினமாக வேலை செய்யக் கூடாது. மூத்த மகனிடம் வீட்டு நிர்வாகத்தையும் கடைகளின் நிர்வாகத்தையும் ஒப்புவித்து விடுங்கள். சமையலறை விஷயங்களை உங்கள் மருமகளை மேற்பார்க்கச் சொல்லுங்கள். ஏன், இரண்டாவது மருமகளை வேலைக்காரர்களைக் கவனித்துக் கொள்ளச் சொல்லலாமே! நீங்கள் இனி ஒய்வெடுத்துக் கொண்டு உங்கள் அறையில் உட்கார்ந்துகொண்டு படிப்பதும் பூக்களைப் பார்த்து மகிழ்வதும், வாழ்க்கையில் உங்களுக்கேற்பட்டுள்ள பாக்கியங்களை நினைத்து மகிழ்வதிலும், பேரக் குழந்தைகளுடன் குலாவி விளையாடுவதிலும்தான் உங்களுடைய பொழுதைக் கழிக்க வேண்டும்" என்று கூறி முடித்தாள்.

"நீ சொல்வதும் வாஸ்தவம் தான்" என்று ஸ்ரீமதி ஊ பதிலளித்துவிட்டு, "நானே இதைப்பற்றி யோசித்துக் கொண்டு தானிருக்கிறேன். இங், நான் என்னுடைய பிள்ளைகளின் தகப்பனாரை வேறொரு சிறு பெண்ணை மணவியாக வைத்துக் கொள்ளும்படி கேட்கப் போகிறேன்" என்றாள்.

இவ்வளவு அமைதியாகக் கூறப்பட்ட விஷயத்தை அவளால் உடனே புரிந்துகொள்ள முடியவில்லை என்பதை ஸ்ரீமதி ஊ அறிவாள். ஒருகணத்திற்குப் பிறகு அவள் தலையில் சீப்பு அப்படியே நின்றுபோனது. இங்கினுடைய கைகள் அவளுடைய பிடரி மயிரைச் சேர்த்து இறுக்கிப் பிடித்தன.

"நீ இதற்கு உன்னுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பது அவசியமில்லை" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ. சீப்பு மறுபடியும் வேகமாக நகர ஆரம்பித்தது. "நீ என்னுடைய மயிரைப் பிடித்து இழுக்கிறாய்" என்றாள் ஸ்ரீமதி ஊ மீண்டும்.

இங் சீப்பைத் தரையில் எறிந்து விட்டு, "தங்களைத் தவிர இந்தக் கைகள் வேறு யாருக்கும் பணிவிடை செய்யாது" என்று பொறுமினாள்.

"உன்னை யாரும் அப்படிச் செய்யச் சொல்லவில்லையே" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இங் தரை மீது ஸ்ரீமதி ஊவின் அருகே முழந்தாளிட்டு உட்கார்ந்து கொண்டு விம்மலானாள். கண்களிலிருந்து வழிந்த நீரை அன்றைய விசேஷத்திற்காக அவள் அணிந்திருந்த புதிய ஸேடின் சட்டையின் ஒரு முனையினால் துடைத்துக் கொண்டாள். விம்மிய வண்ணம் அவள், "ஆ! என்னம்மா! என் ஆருயிர் செல்வமே! தங்களை அவர் வற்புறுத்துகிறாரா? தங்களுடைய நல்ல குணத்தையும் அழகையும் அடியோடு மறந்து விட்டாரா? எனக்கு ஒன்றும் மட்டும் சொல்லுங்கள்..."

ஸ்ரீமதி ஊ உறுதியான குரலில், "இது என்னுடைய சொந்த விருப்பமேயன்றி வேறல்ல. இங், பேசாமல் எழுந்திரு. இப்போது எஜமானர் வந்தால் நான் உன்னை அடித்து விட்டேனென்று என்று எண்ணிக் கொள்வார்..."

இங் விசித்துக் கொண்டே, "தாங்களா அடிப்பவர்? உங்கள் ரத்தத்தை உறிஞ்சும் ஒரு கொசுவைக் கூட கையை நீட்டி அடிக்க முடியாதவராயிற்றே தாங்கள்!" என்றுள். இப்படிக் கூறிய போதிலும் அவள் எழுந்து தரையில் கிடந்த சேப்பை எடுத்துக் கொண்டு, கண்ணீரிடையே திணறியவாறு மீண்டும் எஜமானியின் தலையை வாரத் தொடங்கினுள்.

ஸ்ரீமதி ஊ சாந்தமும் உறுதியும் நிறைந்த குரலில் பேச ஆரம்பித்தாள். "இங், நான் எதற்காக முதலில் உன்னிடம் சொன்னேனென்றுல், நீ வேலைக்காரர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்வதற்காகத்தான். உங்களிடையே இதைப் பற்றி அதிகப் பேச்சு எழக்கூடாது. யாரைப் பற்றியும் எத்தகைய புகாரும் கிளம்பக் கூடாது. அந்தப் புதிய பெண் வரும்போது..."

"யார் அது?" என்றுள் இங் குறுக்கிட்டு.

"எனக்கு இன்னும் தெரியாது" என்றுள் ஸ்ரீமதி ஊ.

"எப்போது வருவாள்?" என்றுள் இங் மீண்டும்.

"நான் இன்னும் அதைத் தீர்மானிக்கவில்லை. ஆனால் அவள் வரும்போது அவளை இவ் வீட்டின் மதிப்பிற்குகந்த வளாக எல்லோரும் வரவேற்க வேண்டும். அவளுடைய ஸ்தானம் என்னைவிடச் சற்று அந்தஸ்தில் குறைந்ததாகவும் பிள்ளைகளின் மனைவிகளுக்குச் சற்று உயர்ந்ததாகவும் இருக்கும். அவள் நாட்டியக் காரியாகவோ, கூத்தாடிச்சியாகவோ இருக்க மாட்டாள். நல்ல குடும்பப் பெண்ணுகத் தானிருப்பாள். எவ்விதக் கலவரமுமின்றி வாவும் ஒழுங்காக நடக்கவேண்டும். எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னுடைய பிள்ளைகளின் தகப்பனுரைப் பற்றியோ அல்லது அந்த இளம் பெண்ணைப் பற்றியோ ஒரு வார்த்தை கூட எழக்கூடாது. ஏனெனில் என் விருப்பத்தின்படி நானே தான் அவளை வரவழைக்கிறேன்" என்று கூறினுள் ஸ்ரீமதி ஊ.

இங்கினுல் இதைத் தாளமுடியவில்லை. "எஜமானியம்மா, இத்தனை வருஷங்களாக நாம் ஒன்றுக இருந்திருக்கிறோம். அதற்காகவாவது நான் உங்களை ஏன் என்று கேட்கலாமா!" என்று கேட்டாள்.

"நீ தாராளமாகக் கேட்கலாம். ஆனால் நான் பதில் தான் சொல்லமாட்டேன்" என்றுள் ஸ்ரீமதி ஊ அமைதியுடன்.

இங் மௌனமாக அந்த நீண்ட கூந்தலை வாரிவிட்டு, வாசனைத் தைலத்தைத் தடவி, பின்ன ஆரம்பித்தாள். பிறகு ஸ்ரீமதி ஊ குளிக்கப் போவதற்காகப் பின்னலை முறுக்கி மேலே கட்டினுள். பின்னர் குளிக்கும் அறையில் தண்ணீர் தயாராக யிருக்கிறதா என்பதைப் பார்வையிடச் சென்றுள். ஸ்நான அறையில் பச்சை நிறக் கோடுகளிட்ட ஒரு பெரிய வட்டவடிவமான பீங்கான் தொட்டி வைக்கப்பட்டிருந்தது. இரண்டு வேலையாட்கள் பெரிய மரப் புக்கெட்டுகளில் வெந்நீரையும் குளிர்ந்த ஜலத்தையும் எடுத்து வந்து, வெளிப்புற மிருந்த கதவின் வழியே உள்ளே வந்து ஊற்றிவிட்டுச் சென்றனர். இங் ஜலத்தின் சூடு சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு, ஒரு புட்டியிலிருந்த வாசனை தைலத்தை அதில் ஊற்றினுள். பிறகு புதிய சோப் ஒன்றையும் சில்க் துண்டுகளையும் கையில் எடுத்துக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்றுள்.

"ஸ்நானத்திற்கு எல்லாம் தயாராக யிருக்கிறது" என்று தினம் கூறும் வழக்கம் போல் கூறினுள்.

ஸ்ரீமதி ஊ குளிக்கும் அறைக்குள் சென்று, இங்கின் கையைப் பிடித்துக் கொண்டு தண்ணீர் தொட்டிக்குள் இறங்கி அதில் உட்கார்ந்து கொண்டாள். இங் அவளை ஒரு குழந்தையைக் குளிப்பாட்டுவது போல் குளிப்பாட்டினுள். தண்ணீர் தெளிந்திருந்தது. பீங்கான் தொட்டியின் கறுத்த பச்சையினூடே ஸ்ரீமதி ஊவின் அழகிய தேகம் தந்தத்தினுல் கடைந்து தெடுத்தது போல் விளங்கியது. இவ்விதம் தோள் வரை தண்ணீரில் அமிழ்ந்து உட்கார்ந்திருந்தவாறு அவள் தன்னுடைய அறிவுத் திறனைப் பரிசீலனை செய்யலானுள். அவளுடைய தேகத்தின் எழிலோ இப்போதும் சற்றும் குறையாமலிருந்தது.

தொட்டியை விட்டு எழுந்ததும், இங் அவளை சில்க் துணியினுல் போர்த்து நன்கு ஈரம் போகத் துடைத்து இரவில் அணிந்து கொள்ளும் வேறு புதிய ஆடைகளை அணிவித்தாள். பிறகு அவளுடைய கால்கைகளின் நகங்களைத் தடவி விட்டாள். எல்லாம் முடிந்ததும் அவள் படுக்கை யறையின் கதவைத் திறந்து விட்டாள். அது இன்னும் காலியாகவே யிருந்தது. எப்போதும் ஸ்ரீமான் ஊ இங் வெளியே போகும் வரை உள்ளே வரமாட்டார். அவர் உள்ளே வராமற்போன இரவுகளும் உண்டு. ஆனால் அவை மிகக் குறைவு. ஸ்ரீமதி ஊ, அவ்வயர்ந்த கட்டில்களின் அருகே போடப்பட்டிருந்த பெஞ்சியின் மீது ஏறி படுக்கைக்குச் சென்றுள். படுக்கையைச் சுற்றிலும் பட்டுத் திரைகள் போடப்பட்டிருந்தன.

"படுக்கைத் திரைகளை இழுத்து விடட்டுமா? நிலா வெளிச்சம் மிக அதிகமாக யிருக்கிறதே!" என்று கேட்டான் இங்.

"வேண்டாம். நிலவு வெளிச்சம் நன்றாக வரட்டும்" என்றாள் ஸ்ரீமதி ஊ. ஆகையால் திரைகள் வெள்ளி கொக்கி களில் மாட்டியபடியே இருந்தன. இங் தேநீர் சூடாக யிருக்கிறதா என்று அப்பாத்திரத்தைத் தொட்டுப் பார்த்து விட்டு, ஸ்ரீமதி ஊ உபயோகிக்கும் சிறிய வெள்ளி புகைக் குழாய் தயாராயிருக்கிறதா என்று பார்த்தாள். தூக்கம் வராத இரவுகளில் சில சமயம் ஸ்ரீமதி ஊ புகை பிடிப்பது வழக்கம். பிறகு இங் மெழுகுவர்த்தியின் பக்கத்தில் தீப்பெட்டி யிருக்கிறதா என்று பார்த்தாள்.

"சரி, நாளைக்குச் சந்திப்போம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இங் அவளுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு வெளியே சென்று விட்டாள்.

பட்டு மெத்தையின் மீது, பட்டு விரிப்புகளினூடே, ஆடாமல் அசையாமல், நேராக நிமிர்ந்து படுத்திருந்தாள் ஸ்ரீமதி ஊ. அவளுடைய படுக்கைக்கு எதிர்ப்புறமிருந்த சுவரின் மீது நிலவு வெளிச்சம் விழுந்தது. நிலவு வெளிச்சம் அதிகப் பிரகாசமாக யிருந்ததால் அங்கு மாட்டப்பட்டிருந்த படத்திலிருந்த சித்திரம் தெளிவாகத் தெரிந்தது. அது சைத்ரிகன் ஒருவனால் வரையப்பட்ட சாதாரணப் படம். அதில் அதிக வர்ணத்தை உபயோகிக்காமல் அவன் அதிக இடத்தை உபயோகித்திருந்தான். எழுதுகோலின் மிகச்சில அசைவுகளினால் அவன் ஒரு செங்குத்தான மலைப் பாறையை யும் ஒரு மலைச்சிகரத்தையும் சிருஷ்டித்து அதில் ஒரு மனித உருவம் குனிந்து கொண்டு மிகச் சிரமப்பட்டு மேலே ஏறிப் போக முயற்சிப்பது போல் எழுதியிருந்தான். அவ்வுருவம் ஆணா பெண்ணா என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை; அது ஒரு மனித உருவம் என்பது மட்டும் விளங்கியது.

சில சமயங்களில் அவ்வுருவம் அது இருந்த இடத்திலிருந்து வெகு தூரம் உயரே ஏறிவிட்டதைப் போல் தோன்றும். சில சமயங்களில் முன்பிருந்ததை விட பல மைல்கள் கீழே இறங்கி வந்து விட்டது போல் தோன்றும். ஆனால் இது முற்றிலும் ஜன்னலிலிருந்து விழும் வெளிச்சத்தைப் பொருத்திருக்கிறது என்பதை ஸ்ரீமதி ஊ அறிவாள். இன்றிரவு ஜன்னலின் ஒரு பக்கத்து ஓரத்து நிழல் படத்தின் மேல் விழுந்து அதைப் பாதியில் வெட்டியது. படத்தின் மேல் பகுதியில் வெளிச்சம்

விழுந்தது. வெளிச்சம் அவ்விதம் விழுந்ததன் காரணமாக அம்மனித உருவம் திடீரென்று மலையுச்சியின்வெகு சமீபம் சென்று விட்டதாகத் தோன்றியது. ஆயினும் அவ்வுருவம் இருந்த இடத்தை விட்டு ஒரு சிறிதும் நகரவில்லை என்பதை அவள் அறிவாள்.

எண்ண அலைகள் ஓய்ந்த நிலையில் அவள் அசையாமல் படுத்திருந்தாள். அவள் எதையும் நினைக்கவில்லை. எதைப் பற்றியும் நினைவுபடுத்திக் கொள்ளவுமில்லை. அவள் எதற் காகவும் காத்துக் கொண்டிருக்கவுமில்லை. அவள் எதையாவது எதிர்பார்த்துக் கொண்டிருக்கவும் இல்லை. அவர் இன்றிரவு வராவிடில் அவள் பேசாமல் தூங்கி விடுவாள். மற்றொரு சமயம் அவருக்குச் சொல்லிக் கொள்வாள். எல்லாவற்றிற்கும் அதற்கென்று ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது வரை பொறுத்திராமல், நாம் காலத்தைப் பலவந்தப்படுத் தினால், காரியம் கெட்டுப் போகிறது. தக்க தருணத்தை அறிந்து செய்வதே சிலாக்கியமானது. தக்க தருணம் வரவும் அவளுடைய சக்திகள் யாவும் திரண்டு வந்து அவளுடைய தீர்மானத்திற்கு உறுதியைக் கொடுக்கும். அப்போது அக் காரியம் செவ்வனே நிறைவேறும்.

இவ்வாறு அவள் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போது, வாசலில் ஸ்ரீமான் ஊவினுடைய காலடியோசை கேட்டது. அவர் வெளியறை, உட்காரும் அறை இவைகளைக் கடந்து படுக்கையறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து நின்றார். அவர் மது அருந்தியிருந்தார். அவருடைய சுவாசத்திலும் உடலிலுமிருந்து வந்த ஒயினின் நெடி ஸ்ரீமதி ஊவின் தீக்ஷண்யமான நாசியை எட்டிற்று. ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் அவர் எப்போதும் அளவுக்கு மிஞ்சி குடிப்பதில்லை. ஆனால் இன்றிரவோ அவர் தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து குடித்திருப்பார். ஒரு கொண்டாட்ட தினத்தில், எல்லோருமாகச் சேர்ந்து இவ்விதம் குடிப்பது சகஜமானதே அல்லவா? அவருடைய கையில் புகைக் குழாய் இருந்தது. அதை மேஜையின் மீது வைப்ப தற்காக போனவர் ஒரு கணம் தாமதித்து விட்டு அதைக் கையிலேயே பிடித்தவாறு நின்றார்.

"உனக்கு மிகவும் களைப்பாக யிருக்கிறதா?" என்று திடீரென்று கேட்டார் அவர்.

"இல்லை, களைப்பு ஒன்றுமில்லை" என்றாள் அவள் அமைதியுடன்.

அவர் புகைக் குழாயைக் கீழே வைத்து விட்டு, கட்டிலின் திரைகளைக் கொக்கியிலிருந்து எடுத்து விட்டு விட்டு, அதன் பின்புறமாக வந்து கட்டிலின் மேல் அமர்ந்தார்.

இந்த இருபத்தி நான்கு வருடங்களாக அவர்களுடைய வாழ்க்கையின் நியதி ஒரே மாதிரியாக இருந்து வந்திருக்கிறது. அவள் அதை சற்றுவது மாற்ற வேண்டும் என்று விரும்பினாள். அதுவும் இதுதான் அவர் அவளுடன் கழிக்கப்போகும் கடைசி இரவு. ஆனால் ஏற்கெனவே அவள் யோசித்து, மாறுதல் எதுவும் செய்யாமலிருப்பதே உசிதம் என்ற முடிவுக்கு வந்திருந்தாள். ஏனெனில் அதனால் அவளுடைய தீர்மானத்தின் விவேகத்தைக் கூறி அவரைச் சமாதானப்படுத்துவது மேலும் கடினமாகி விடும்—அதாவது அவரைச் சமாதானப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால்—ஏன் அவர் இதைப்பற்றி ஒருக்கால் மகிழ்ச்சி அடைந்தாலும் அடையலாம். அதையும் எதிர்பார்த்து அவள் தன்னை அதற்குத் தயாராக்கிக் கொள்ள முயற்சித்தாள். அப்படி அவர் மகிழ்ச்சியடையும் பட்சத்தில் அது அவளுக்கு சுலபம்தானே! ஆனால் அவர் மகிழ்ச்சியடைய மாட்டார்! ஒரு வேளை அவர் அவளுடைய தீர்மானத்தைக் கடைசி வரை ஒத்துக் கொள்ள மறுத்தாலும் மறுக்கலாம். ஆனால் அவர் மறுக்க மாட்டார்...அதுவும் கடைசி வரை நிச்சயமாக மறுக்க மாட்டார் என்றுதான் நம்பினாள்.

ஆதலால் இன்றும் வழக்கம்போல் இருந்து விடத் தீர்மானித்தாள். கடுமையையோ அல்லது அதிக சிரத்தையோ காட்டிக் கொள்ள அவள் விரும்பவில்லை. தனது சுபாவமான இனிமையுடனும் மகிழ்வுடனும் நடந்து கொள்ளத் தீர்மானித்தாள். எதிலும் குறைவு இருக்கக் கூடாது, ஆனால் அதற்காக எதுவும் அளவுக்கு மிஞ்சியும் போகக் கூடாது என்பதே அவள் கொள்கை. எந்தக் காரியத்தையும் குறைவுமில்லாமல் அளவுக்கு மிஞ்சியும் போகாமல் பூரணமாக நிறைவேற்றுவதே அவளிடம் அமைந்த ஒரு தனிச் சிறப்பாக யிருந்தது.

அவரே இன்று வழக்கம் போலல்லாமல், சஞ்சலத்துடன் காணப்படுவதைப் பார்த்து அவளுக்கும் சிறிது மனக்கலக்க முண்டாயிற்று.

அவர் மெல்ல, "நீ இன்று எல்லா நாட்களையும் விட மிக அழகாக யிருந்தாய்! மற்றவர்கள் எல்லோரும் அப்படித் தான் கூறினார்கள்" என்றார்.

அவள் தலையணையில் சாய்ந்தவண்ணம் தனது கண்களுக்கு மேல் தோன்றிய அவருடைய கண்களை நோக்கியவாறு அழகிய புன்னகை பூத்தாள். படுக்கையருகிலிருந்த சிறிய மேஜை மீதிருந்த ஒரே ஒரு மெழுகுவர்த்தியிலிருந்து வந்த அரை குறை வெளிச்சத்தின் மூலம், அவள் அவருடைய கரிய விழிகள் பளபளப்பதையும், அவற்றில் அவள் அதுவரை பார்த்திருப்பதைக் காட்டிலும் அதிக தீவிரமான ஒளி வீசுவதையும் கவனித்தாள். அவள் தனது கண்களை மூடிக் கொண்டாள். அவளுடைய நெஞ்சம் பட படவென்று அடித்துக் கொண்டது. அவளுடைய இந்தத் தீர்மானத்தினால் அவள் பின்னால் வருந்த வேண்டி நேருமா? அடுத்த இரண்டு மணி நேரம், அவள் அலுங்காமல் படுத்தவாறு, தனக்குள்ளேயே இக் கேள்வியை அநேக முறை கேட்டுக் கொண்டாள். இதற்காகப் பின்னால் வருந்த நேருமா? அல்லது இது நன்மையாகவே முடியுமா?

இரண்டு மணி நேர சிந்தனைக்குப் பிறகு, தான் இதற்காக நிச்சயம் வருந்த மாட்டோம் என்ற உறுதி அவளுக்கேற் பட்டது. அவர் நித்திரையில் ஆழ்ந்திருந்தார். அவள் சப்தம் செய்யாமல் எழுந்து ஸ்நான அறைக்குச் சென்று, குளிர்ந்த ஜலத்தில் மீண்டும் ஒரு முறை ஸ்நானம் செய்தாள். திரும்பவும் அவள் படுக்கைக்குச் செல்லவில்லை. ஸ்ரீமான் ஊ குறட்டை விட்டுக் கொண்டு மெய்ம்மறந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவள் தனது சிறிய புகைக்குழாயை எடுத்து, அதை இலைய புகையிலையினால் நிரப்பி, பற்ற வைத்தாள். பிறகு ஜன்னலருகே சென்று ஆகாயத்தை நோக்கியவாறு நின்றாள்.

நிலா மிகவும் கீழே இறங்கி விட்டது. இன்னும் ஐந்து நிமிஷங்களுக்குப்பின், அது இப் பழமையான வீட்டின் வரிசை வரிசையான நீண்ட கூரைகளுக்குப் பின்னால் மறைந்தே போய் விடும். அவளுடைய அந்தராத்மாவில் அமைதி குடி கொண்டிருந்தது. அவள் இனி தான் உயிரோடிருக்கும் வரை, இந்த அறையில் மறுபடியும் படுக்கவே மாட்டாள். அவள் தனக்கேற்ற இருப்பிடத்தை ஏற்கெனவே தேர்ந்தெடுத்தாகி விட்டது. அவளுடைய மாமியார் வசித்து வந்த பகுதியை அடுத்து, முன்பு ஸ்ரீமான் ஊவினுடைய தகப்பனார் வசித்து வந்த பகுதி இப்போது காலியாக இருந்தது. தான் அங்கு இருந்தால் வயதான மாமியாரை பகலில் கவனித்துக் கொள்வதுபோல் இரவிலும் கவனித்துக் கொள்ள முடியும் என்ற காரணத்தைக் கூறி விடலாம் அவள். அந்த

பிரம்மாண்டமான வீட்டின் மத்திய ஸ்தானத்தில் அப் பகுதி அழகாக அமைந்திருந்தது. அவள் இனி அங்கு தனிமையில் அமைதியாக வசிப்பாள். அவளுடைய வாழ்வில் இதுநாள் வரை அவளது உள்ளத்தில் குடி கொண்டிருந்த அபிலாஷை நிறைவேறும் காலம் வந்து விட்டது.

படுக்கையில் படுத்திருந்த ஸ்ரீமான் ஊ திடீரென்று பலமாகக் கொட்டாவி விட்டபடி விழித்துக் கொண்டார். "நான் என்னுடைய அறைக்குப் போய் விடுகிறேன். இன்று நீ மிகவும் களைத்திருப்பாய். ஆதலால் நீ நன்றாகத் தூங்க வேண்டும்" என்றார்.

அவர் வெளி விவகாரங்களில் நடந்து கொள்வதுபோல மனைவியிடத்திலும் மிக்க மரியாதை காண்பித்தே நடப்பவர். அவர் இவ்வாறு கூறும் சமயங்களில் அவள் வழக்கமாக, "வேண்டாம், தயவு செய்து போகாதீர்கள். என்னால் நன்றாகத் தூங்க முடியும்" என்றே கூறுவாள் பதிலுக்கு.

ஆனால் இன்றிரவோ அவள் அவ்வாறு பதிலளிக்கவில்லை. அவள் தன்னுடைய தலையைத் திருப்பாமலே, "மிக்க வந்தனம், என்னுடைய பிள்ளைகளின் தகப்பனாரே! நீங்கள் சொல்வதும் சரிதான்" என்று மொழிந்தாள்.

இதைக் கேட்டு திகைப்புற்றவராய் அவர் படுக்கையிலிருந்து அவசரமாய் எழுந்து தடுமாற்றத்துடன் கட்டிலின் கீழிருந்த செருப்புகளைத் துழாவினார். அவருக்கு அவை அகப்படவில்லை. உடனே அவள் சட்டென்று எழுந்து வந்து மேஜை மண்டியிட்டு உட்கார்ந்து, அவைகளைக் கண்டெடுத்து அவருடைய கால்களில் அணிவித்தாள். அவர் ஒரு பெரிய குழந்தையைப் போல், திடீரென்று தம்முடைய தலையை அவளது தோளின் மீது சாய்த்துக் கொண்டு கைகளால் அவளுடைய உடலைச் சுற்றி பிடித்துக் கொண்டார்.

"ஒரு மல்லிகை புஷ்பத்திற்கு உன்னிடமிருந்து வீசும் மணம் இருக்காது!" என்றார் அவர் தாழ்ந்த குரலில்.

அவள் அவருடைய அணைப்பில், மெல்ல நகைத்தவாறு, "நீங்கள் இன்னும் குடி மயக்கத்திலேயே இருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"குடியா—குடி—குடி" என்று அவருடைய வாய் முணு முணுத்தது. அவர் அவளைத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டார். சற்றே பீதியடைந்த அவள், "வேண்டாம், சும்மா

யிருங்கள். இதோ, நான் உங்களுக்கு எழுந்திருக்க உதவி செய்யட்டுமா?" என்று கேட்டவாறு சட்டென்று இரும்பைப் போன்ற வலிவோடு, அவரையும் சேர்த்து மேலே இழுத்தவாறு எழுந்து நின்றாள்.

உடனே நன்றாக விழித்து கொண்டு விட்ட அவர், "ஏன் நான் ஏதாவது தவறுசெய்து விட்டேனே?" என்று கேட்டார். இப்போது அவருடைய கரிய விழிகள் தெளிவாயிருந்தன.

"இல்லை, இந்த இருபத்திநான்கு வருஷமாகயில்லாமல் இப்போது எப்படி நீங்கள் தவறிழைக்க முடியும்? ஆனால்... நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்று கூறினாள்.

"முடிவுக்கு வந்து விட்டாயா?" என்று திருப்பிக் கேட்டார் அவர்.

"இன்றோடு எனக்கு நாற்பது வயதாகிறது" என்றாள் அவள். திடீரென்று அவளுக்கு வீடு முழுவதும் எல்லோரும் துயிலில் ஆழ்ந்திருக்கும் இந்த நட்டநடுநிசி வேளையே, தக்க தருணம் என்ற உணர்வு ஏற்பட்டது. அவர் கட்டிலின் மீது உட்கார்ந்திருக்க அவள் அவரை விட்டு விலகிச் சென்று அங்கு எரிந்து கொண்டிருந்த ஒரு மெழுகுவர்த்தியின் மூலம் மற்ற விளக்குகளையும் ஏற்றினாள். ஒவ்வொன்றாக அவை பிரகாசம் பெற்று அறை முழுவதையும் ஒளியினால் நிரப்பின. பிறகு அவள் மேஜைக்கருகேயிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். அவர் அவளை வெறித்து நோக்கியவண்ணம் உட்கார்ந்திருந்தார்.

"நான் இந்த நாளுக்காக எத்தனையோ வருடங்களாக என்னை தயார் செய்து கொண்டிருந்தேன்" என்று ஆரம்பித்தாள். அந்நிலவொளியில், வெண்பட்டாடைகளை உடுத்து, மென்மையே உருவாகி உட்கார்ந்திருந்த அவள் தன்னிரு கைகளையும் மடிமீது சேர்த்து வைத்தவாறு, தன்னுள் அடங்கியிருக்கும் சக்திகளையெல்லாம் ஒன்று சேர்க்கலானாள்.

கைகளை முழங்கால்களுக்கிடையே சேர்த்து வைத்தவாறு அவளை இன்னும் வெறித்து நோக்கிக் கொண்டிருந்த அவர் சற்றே முன்புறம் சாய்ந்து கொண்டார்.

"நான் உங்களுக்கு எப்போதும் ஓர் உத்தம மனைவியாகவே இருந்து வந்திருக்கிறேன்" என்றாள் அவள்.

"ஏன், நான் உனக்கு ஓர் உத்தம கணவனாக இருக்கவில்லையா?" என்று கேட்டார் அவர்.

"அது வாஸ்தவம் தான். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதில் நம்மைபோல் இவ்வளவு சிறப்பாக வாழ்க்கை நடத்தியவர்கள் வேறு எவரும் இருக்க மாட்டார்கள். ஆனால் இப்போது என்னுடைய வாழ்க்கையில் பாதிபாகம் முடிவடைந்து விட்டது" என்று கூறினாள்.

"பாதி பாகம் தானே!" என்று கேட்டார் அவர்.

அவள் மேலும் தொடர்ந்து, "ஆயினும் உங்களுடைய பாதிபாகம் இன்னும் வெகுதூரத்திலிருக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே இந்த வித்தியாசத்தை ஆண்டவன் படைத்திருக்கிறான்" என்றாள்.

அவர் அவள் மற்றது எதையும் சொல்வதைக் கேட்பது போல் இதையும் கேட்டுக் கொண்டிருந்தார். அதாவது அவளுடைய வார்த்தைகள் எப்போதுமே வெறும் ஒலிவடிவங்களாக மட்டுமிராமல், அதற்கு மேம்பட்ட பொருள் கொண்டவை. ஆனால் அது தம்முடைய புரிந்து கொள்ளும் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதையும் நன்கு உணர்ந்தவர் போல் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவள் மேலும், "நீங்கள் இன்னும் இளமை குன்றாதிருக்கிறீர்கள். உங்களுடைய சக்திகள் யாவும் மங்காமல் சுடர் விட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் இன்னும் அதிக பிள்ளைகளைப் பெறவேண்டும். ஆனால் நான் என்னுடையதைப் பூர்த்தி செய்து விட்டேன்" என்றாள்.

அதுவரை சோம்பலாக உட்கார்ந்திருந்த அவர், நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். அவருடைய அழகிய முகத்தில் கடுமை தோன்றியது. "என்ன சொல்கிறாய்? நீ சொல்வதை நான் புரிந்து கொண்டேன் என்று சொல்ல முடியுமா?"

"ஆம்! நீங்கள் புரிந்து கொள்ளத்தான் செய்கிறீர்கள்!"

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு, இந்த இருபத்திநான்கு வருஷங்களையும் அவர்கள் இதே வீட்டில் ஒன்றுசேர்ந்து கழித்ததை நினைத்துக்கொண்டனர். இதே வீட்டில் அவர்களுடைய பிள்ளைகள் இப்போது உறங்கிகொண்டிருக்கின்றனர். வயதின் காரணமாக ஆழ்ந்த நித்திரையற்ற பெரிய எஜமானியோ, இன்றோ நாளையோ என்று மரணத்தை எதிர்பார்த்த வண்ணமிருக்கிறாள்.

அவர் கரகரத்த குரலில், "நான் இன்னொரு பெண்ணை ஏற்க விரும்பவில்லை. நான் என்றுமே மற்ற பெண்களை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. நான் பார்த்திருக்கிற எல்லாப் பெண்களையும் விட நீயே மிகவும் அழகாயிருந்திருக்கிறாய். இப்போதும் நீதான் மற்ற பெண்களைவிட அதிக அழகாயிருக்கிறாய்" என்றார்.

பிறகு அவர் தயக்கத்துடன், அவளுடைய முகத்தை ஏறெடுத்துப்பாராமல், கண்களைத் தாழ்த்தியவாறே, "இன்று அந்த சிறு பெண் வந்திருந்ததே, அதைப் பார்த்தபோது கூட, நீ அவளை விட எவ்வளவு அழகாயிருக்கிறாய் என்று நினைத்துக் கொண்டேன்" என்றார்.

உடனே அவள் அவர் எந்த இளம்பெண்ணைக் குறிப்பிடுகிறார் என்பதைப் புரிந்துகொண்டாள். "ஆம்! லின்யி மிகவும் அழகாகத்தானிருக்கிறாள்!" என ஆமோதித்தாள். அதே சமயம் மனதிற்குள், தன்னுடைய தீர்மானத்தை மீண்டும் உறுதிபடுத்திக் கொண்டாள். அவர்களுடைய சம்பாஷணை மேலும் தொடர்ந்து, அவருக்காக ஒரு பெண்ணை யார் தேர்ந்தெடுப்பது என்ற விஷயத்திற்கு வரும்பொழுது, அவள் தானே தேர்ந்தெடுப்பதாகக் கூறவேண்டும். தலைமுறைகள் ஒன்றோடொன்று கலந்து போனால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். லின்யி, மெங் இருவரும் அவளுடைய உயிர் தோழியின் பெண்கள். லின்யியின் அக்காவான மெங்கை லியாங்மோ ஏற்கெனவே மணந்திருக்கிறாள்!

அவர் தமது உதடுகளைக் கடித்து விட்டுக்கொண்டார். "முடியாது. உன்னுடைய யோசனைக்கு நான் ஒருநாளும் இணங்கமாட்டேன். என்னுடைய நண்பர்கள் என்ன சொல்வார்கள்? நான் ஒரு போதும் பெண்களுக்குப் பின்னால் ஓடுபவனாக இருந்ததில்லையே" என்றார்.

அவள் மெல்ல நகைத்தாள். ஆனால் அதே சமயம், தனது நெஞ்சில் ஒரு வாள்முனை லேசாகக் குத்திக்கொண்டிருப்பதைப் போன்ற உணர்ச்சி தனக்கேற்பட்டதைக் கண்டு அவளுக்கே வியப்புண்டாயிற்று. தமது நண்பர்கள் என்ன சொல்வார்கள் என்று அவர் எண்ணத் தொடங்குவாரானால், அவள் நினைத்ததைவிட வெகு சீக்கிரத்திலேயே அவரை ஒப்புக்கொள்ளச் செய்துவிடலாம்.

• "ஒரு பெண்பிள்ளை நாற்பது வயதிற்கு மேல் குழந்தை பெற்றால் அதுவும் கேவலமாகத் தானிருக்கும். உங்களுடைய

நண்பர்கள் அதற்குக் கூடத்தான் உங்களைப் பழி சொல்வார்கள்" என்று கூறினாள் அவள்.

"நீ குழந்தை பெறவேண்டும் என்பது அவசியமா என்ன?" என்றார் அவர் சிறிதும் கடுமை குறையாமல்.

"அது என்றும் ஏற்படக் கூடியதே. நான் உங்களை வீணே குழப்பத்தில் ஆழ்த்த விரும்பவில்லை" என்று கூறினாள் அவள்.

தமது நண்பர்களைப் பற்றி அவரும் தனக்கேற்படக் கூடிய அவமானத்தைப் பற்றி அவளுமாக சிறிது நேரம் பேசினர். இன்னும் அவர்களுக்குள் இது விஷயம் ஒத்துவரவில்லை. அவருடைய உள்ளத்தில் தன்பாலிருக்கும் பற்றுகளையெல்லாம் அவள் அடியோடு பிடுங்கி எடுத்து விடவேண்டும்—அதாவது அவை மிக ஆழமாக இல்லாமலிருக்கும் பட்சத்தில்.

அவர் அவளை நோக்கி, "உனக்கு என் மேலிருந்த அன்பெல்லாம் எங்கே சென்று விட்டது?" என்று வினவினார்.

அவள் முன்புறம் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். இது உள்ளத்தோடு உள்ளம் பேசும் பேச்சு. அவள் கனிவு நிறைந்த குரலில், "நான் உங்களை முன்போலவே இப்போதும் நேசிக்கிறேன். நான் உங்களுடைய சந்தோஷத்தைத் தவிர வேறு எதையும் விரும்பவில்லை" என்றாள்.

"இது எப்படி என்னுடைய சந்தோஷமாகும்?" என்றார் அவர் துயரத்தோடு.

"நான் எப்போதும் உங்களுடைய சந்தோஷத்தை என் கையிலே வைத்திருந்தேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று கூறி அவள் தன்னுடைய கைகளை, அவை ஒரு இருதயத்தைப் பிடித்திருப்பனபோல் சேர்த்து மேலே உயர்த்தினாள். "கல்யாண தினத்தன்று முதன் முதலில் நான் உங்களைப் பார்த்த அக்கணத்திலிருந்து உங்களுடைய சுகம் என் கையிலேயே இருந்து வந்திருக்கிறது. நான் சாகும் வரையிலும் இதைப் போலவே அதைப் பாதுகாப்பேன்" என்றாள்.

"நீ எனக்கு முன்னால் சாவதாகயிருந்தால் என்னுடைய சந்தோஷமும் உன்னுடனேயே புதைந்து போய் விடும்" என்றார் அவர்.

"இல்லை, அதற்காகத் தான் நான் சாவதற்கு முன், நானே வேறொருத்தியைத் தயார் செய்து அவள் கையில்

அதை ஒப்படைத்துச் செல்லலாம் என்று உத்தேசித்திருக்கிறேன்" என்று கூறினாள் அவள்.

தனது வார்த்தைகள் அவர் மேல் நன்கு பலனளிப்பதைக் கண்டாள் அவள். அவர் அசையாமல் அவளுடைய கைகளையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். இன்னும் தனது கைகளைச் சேர்த்து ஒரு கிண்ணத்தைப் போல் வைத்தவாறு, "என்னை நம்புங்கள்" என்றாள்.

"எப்போதும் நான் உன்னை நம்பித்தான் இருந்திருக்கிறேன்" என்றார் அவர்.

அவள் தன்னுடைய கைகளைக் கீழே விட்டு விட்டாள்.

அவர் தீவிரமாகப் பேசலானார். "நான் உனக்கு வாக்கு கொடுக்கவில்லை...என்னால் முடியாது...இவ்வளவு சீக்கிரம்—"

"நீங்கள் வாக்கு கொடுக்க வேண்டியதில்லை. என்னால் முடிந்தால் கூட நான் உங்களை வற்புறுத்த மாட்டேன். நான் என்றாவது உங்களை எதற்கும் வற்புறுத்தியதுண்டா? சரி, இப்போது இதை விட்டுத் தள்ளுவோம். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் போர்த்து விடுகிறேன். விடிவதற்கு சிறிது நேரமே இருப்பதால் வரவர குளிர் அதிகமாகிறது. நீங்கள் இப்போது தூங்குங்கள். காலையில் கூட நீங்கள் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டாம்!"

இவ்விதம் கூறி அவள் அவருடைய தோள்களையும் கைகளையும் மிருதுவாகப் பற்றிப் படுக்க வைத்தாள். மனமில்லாமலே அவர் அவளுக்குக் கீழ்ப்படிந்தார். ஆனால் திரும்பத் திரும்ப, "நான் உனக்கு ஒன்றும் வாக்குறுதி கொடுக்கவில்லை யென்பதை நினைவு வைத்துக் கொள்" என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்.

"இல்லை, இல்லவே இல்லை" என்று அதை ஒப்புக் கொண்ட அவள் அவருக்குப் போர்த்து விட்டு காற்று வருவதற்காக ஒரு திரையை மேலே தூக்கி விட்டு விட்டு, மற்றொரு திரையைக் காலையில் வரும் வெளிச்சம் முகத்தில் படாமலிருப்பதற்காக கீழே இறக்கி விட்டாள்.

ஆனால் அவர் அவளுடைய கைகளை இறுகப் பிடித்துக் கொண்டார். "நீ எங்கே தூங்குவாய்?" என்று கேட்டார், வற்புறுத்தலோடு.

அவள் பாதி விளையாட்டாக, "ஓ—என்னுடைய படுக்கை தயாராகயிருக்கிறதே" என்றாள். பிறகு, "நாம்

நாளை சந்திப்போம். விட்டில் ஒருவித மாறுதலும் ஏற்படாது. நம்முடைய சிநேகத்திற்கும் அன்பிற்கும் எவ்வித பங்கமும் நேராது என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இதற் காக நாம் பயமோ அவமானமோ கொள்ளத் தேவையில்லை" என்றாள்.

தைரியமூட்டும் அவளுடைய அழகிய குரலைக் கேட்டு சமாதானமடைந்தவராய் அவர் அவளைப் போகவிட்டார். எப்போதும் அவளால் அவருக்கு மகிழ்ச்சியூட்ட முடியும். ஆனால் அவள் சொன்னவற்றின் பொருளை முற்றிலும் அவர் நம்பியதாகத் தெரியவில்லை.

அவர் தூக்கத்தில் ஆழ்ந்ததும், அவள் தனியே, சப்த மில்லாமல் மற்ற பருநிகளைக் கடந்து சென்று, பெரிய எஜமானியின் அறைகளுக்குப் பக்கத்திலிருந்த பகுதியை அடைந்தாள். அவளுடைய உத்தரவின் பேரில், பெரிய எஜமானர் இறந்த பின் இத்தனை வருடங்களாக அவை சுத்த மாகவும் தயாராகவும் வைக்கப்பட்டிருந்தன. சில நாட் களுக்கு முன்பே அவள் அதைப் பார்வையிட்டு, அந்த கட்டிலின் மீது புதிய படுக்கைகளைப் போட்டுத் தயாராக வைக்கும்படி சொல்லியிருந்தாள். அப்புதிய படுக்கையில் இப்போது ஏறி படுத்துக் கொண்டாள். அது சில்லென்று குளிர்ந்து போயிருந்ததாலும் முற்றிலும் புதியதாகயிருந்த தாலும் ஒரு கணம் அவள் உள்ளம் நடுங்கியது. திடீரென்று மரணம் சமீபத்தில் வந்து விட்டதைப் போல் அவளுக்கு மிகுந்த தளர்ச்சி உண்டாயிற்று. சிறிது நேரத்தில், ஒரு வகையான மரணத்தில் ஆழ்ந்து விட்டவள் போல், அவள் மிக ஆழ்ந்த நித்திரையில் மூழ்கினாள்.

* * *

2

ஆனால், காலை நேரம் தான் இரவு நடந்தவற்றிற்கெல்லாம் உறுதி கொடுத்து நிச்சயப்படுத்துகிறது. எதுவும் சரியாக, தப்பா என்பதைப் பகல் நேரம் தான் தெளி வாகப் புலப்படுத்துகிறது. தனது நாற்பதாவது பிறந்த நாளுக்கு மறுநாள் காலையாகிய அன்று, ஸ்ரீமதி ஊ, தன் மேலிருந்த சுமையெல்லாம் இறங்கி விட்டது போன்ற ஒரு புதிய உணர்ச்சியுடன் எழுந்தாள். அவள் நன்றாக அறிந்ததாயினும் சற்றும் பழக்கமில்லாததாகிய அவ்வறை யைச் சுற்றி நோக்கினாள். வருடக் கணக்காக அவள் படுத்து உபயோகித்து வந்த அறையிலிருந்து இவ்வறை முற்றிலும்

வேறுபட்டிருந்தது. அந்த அறை, ஓர் ஆடவனுக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டு, அவனுக்காக பிள்ளைகளைப் பெற்று கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படும் ஓர் இளம் பெண்ணிற்கு ஏற்றவாறு அலங்கரிக்கப் பட்டிருந்தது. அந்த படுக்கையின் திரைகளில் செய்திருந்த தையல் வேலைப்பாடு களில் கனிகளும் செழுமையைக் குறிக்கும் பொருட்களுமாக நிறைந்திருந்தன. நேற்று இரவு அவள் விட்டு வந்த அவ்வறை, அவளுடைய மாமியார் தன்னுடைய ஒரே மகனின் மணப் பெண்ணாக அவளை அங்கு அனுப்பியபோது எப்படி இருந் ததோ, அதே போல் இப்போதும் இருந்தது. அவளுடைய மாமியார் சாயம் கலங்காத நல்ல உயர்ந்தரகத் துணிகளை திரைகளுக்காக வாங்கி யிருந்தாளாதலால், இந்த இருபத்தி நான்கு வருடங்களுக்குப் பிறகும் அவற்றை எடுத்து விட்டு வேறு புதியது வாங்க வேண்டிய அவசியமே நேரவில்லை. ஸ்ரீமதி ஊ அதிகப்படியாக அவ்வறையில் கொண்டு வைத்தது, மலைமேல் மிகுந்த பிரயாசையோடு ஏறிக்கொண்டிருக்கும் மனித உருவத்தைக் கொண்ட அச்சித்திரம் ஒன்றே ஒன்றைத் தான். அந்தப் படம் இங்கு இப்போது இல்லாமலிருந்தது அவளுக்கு என்னவோ போலிருந்தது. இன்று அவளுடைய துணிமணிகள், மற்ற சாமான்களோடு அதையும் இங்கே கொண்டுவரச் சொல்லிவிட வேண்டும். அதுவும் தவிர, அவளுடைய பழைய அறையும் புதிதாக வரும் இளம் பெண் ணுக்கு ஏற்றதாகி விடும்! கனிகளும், செழிப்பைக் குறிக்கும் சித்திரங்களும் இனி அவளுக்காக இருக்கட்டுமே!

ஸ்ரீமதி ஊ, அப்புதிய படுக்கையில் தனியாகப் படுத் திருந்தாள். இது அவள் விட்டு வந்த படுக்கையைக் காட்டி லும் அகலமாயிருந்தது. அதில் படுத்திருந்தவாறே அவள் தனது உள்ளத்தை நுணுக்கமாக ஆராயலானாள். சிவப்பு ஸேடின் திரைகளோடு கூடிய தனது மணப்படுக்கையில் வேறொருத்தி வந்து இடம் பெறுவாள் என்பதை நினைக்க அவளுக்குத் துன்பம் உண்டாகிறதா? ஆனால் அவள் உள்ளத்தில், பின்னால் ஏதாவது நேரக்கூடும் என்ற ஒருவித தெளிவற்ற வேதனை உண்டாயிற்று. ஆனால் அது சமீபத்தில் வீரக்கூடியதுமல்ல அல்லது, அவளுடைய சொந்த நலத்தை உத்தேசித்ததுமல்ல. அது ஒரு ஆழ்ந்த வேதனை. எண்ணிப் பார்க்க முடியாத, சர்வ வல்லமையும் அறிவும் பொருந்திய இறைவன், ஒரு தனி ஆத்மாவுக்கு எதிராக ஒன்றை விதிக்கும்போது, அவ்வாத்மா அனுபவிக்க வேண்டிய பெரும் வேதனை அது. அவளுடன்கூட ஸ்ரீமான் ஊவும் வாழ்க்கையின் பிற்பகுதியைத் தொடங்கு வதற்குத் தயாராக இருக்கக் கூடுமானால் அது அவளுக்கு

எவ்வாறு மட்டற்ற மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொடுத்திருக்கும் என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் அவர் எதையோ தியாகம் செய்கிறோம் என்ற மனப்பான்மையில் அதைச் செய்யக்கூடாது. தமது சொந்த விருப்பத்தினால், வாழ்க்கைப் பாதையில் அவள் அடைந்திருந்த இடத்தை அவள் அடைந்த அதே சமயம் அடைந்திருக்கக் கூடுமானால், அது அவளுக்கு எத்தகைய அதிசயகரமான திருப்தியை அளித்திருக்கும்?

அவள் அதிக நேரம் சிந்தித்தாள். ஏன் இறைவன் ஆணைப் போல் பெண்ணுக்கு இருமடங்கு நீண்ட ஆயுளை அளிக்கவில்லை? அப்போது ஆண் உயிரோடிருக்கும் வரை பெண்ணின் அழகும் யௌவனமும் நீடித்திருந்து அதற்குப் பிறகே அடுத்த தலைமுறையோடு அழிந்து போவதாக இருக்குமல்லவா? மனிதனுடைய விதையை ஊன்றும் சக்திக்கு ஒரு பெண்ணினால் பூர்த்தியாக வேண்டிய தேவை ஏன் அதிக காலம் நீடித்திருக்க வேண்டும்?

'ஆதலால் பெண்கள் ஆண்களைவிட அதிகமாகத் தனிமையில் இருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையின் ஒரு பகுதி தனிமையில் கழிக்கப்பட வேண்டும். ஆண்டவன் அவ்வாறு அவர்களைப் படைத்திருக்கிறான்' என்று எண்ணமிட்டாள்.

அவளுடைய அறிவு இம்மாதிரியான வெறுமையான கேள்விகளினின்றும் அவளை மீட்டது. கடவுள் விதித்திருப்பதை யாரேனும் மாற்றமுடியுமா? தெய்வம் உயிர் வாழ்வது ஒன்றையே பிரதானமாகக் கருதி ஆணினிடம் விதையையும் பெண்ணினிடம் பூமியையும் கொடுத்திருக்கிறது. பூமியோ ஏகமாக பரந்து கிடக்கிறது. ஆயினும் விதை யில்லாமல் பூமியிருந்து யாது பயன்? மனிதனுடைய எலும்பு சுண்ணும்பாகப் போன பின்னும் ரத்தம் தண்ணீராக மாறிய பின்னும் அவனுடைய தேவை நீடித்திருப்பதற்கு உண்மையான காரணம் என்னவெனில், மனித வாழ்வு அழிந்து போகாமலிருக்கும் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் விட குழந்தைகளைப் பெறுவதையே தெய்வம் மிகமுக்கியமானதாக ஏற்படுத்தியிருப்பதுதான். ஆதலால் மனிதனுடைய கடைசி விதை வரை யாவும் விதைக்கப் பட்டு விட வேண்டும். மனிதனுக்கு வயது ஆக ஆக, அவனுடைய கடைசி விதைகளும் நல்ல பலனளிக்க வேண்டுமென்றால், அது உரம் வாய்ந்த பூமியில் விதைக்கப்படவேண்டும். ஆதலால் எந்த பெண்ணும் தன்னுடைய யௌவனமும் பலமும் போன

பிறகும் ஒரு மனிதனை விடாமல் பற்றிக் கொண்டிருப்பது, கடவுளின் நியதியை எதிர்ப்பது போலாகும்!

இவ்வாறு நன்கு ஆலோசிக்கவும், எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய துன்பத்தைப் பற்றிய அவளுடைய கவலை தானாக மறைந்து விட்டது. மனப்பாரம் இறங்கியவளாய் அவள் அமைதி அடைந்தாள். அவளுக்குத் தான் மீண்டும் ஒரு சிறு பெண்ணாக மாறிவிட்டது போலவும் புத்துயிரே பெற்றுவிட்டது போலவும் தோன்றியது. இரவில் படுத்தால் காலைவரை தடையில்லாமல் தூங்கலாம் என்பதை எண்ணுவதற்கே எவ்வளவு விநோதமாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது! அல்லது அப்படி விழித்திருந்ததாலும் தான் மட்டும் விழித்திருக்கலாம். மற்றவரை எழுப்பி விடுவோமோ என்று அஞ்ச வேண்டியதில்லை. அவளுடைய உடல் அவளுக்கு மீண்டும் கிடைத்து விட்டது! அவள் கைமேல் இருந்த துணியை விலக்கி விட்டுத் தனது சதையை ஆராய்ந்து பார்த்தாள். அது இளமையில் இருந்தது போலவே உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது. நல்ல உணவுக்கும் பராமரிப்புக்கும் குறைவில்லை. அத்தோடு இப்போது இப்புதிய சுதந்திரமும் கிடைத்திருக்கிறது. ஆகவே அவள் நிச்சயம் மிகமிக இளமையாகும் வரை உயிரோடிருப்பாள்! ஆனால் அவள் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்றால் அவள் எல்லோரிடமும், கொள்ளும் தொடர்பில் அதி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதிலும் அவரிடம் நடந்து கொள்வது தான் அதி முக்கியம். அவள் அவரிடம் தான் கொண்டுள்ள தொடர்புகள் அடியோடு அற்றுப் போகும்படி விடக்கூடாது. அவர்களுடைய தொடர்பு இனி உடலைப் பொருத்ததாக இருக்காததாலால் உண்மையில் அது அவ்வளவு சுலபமானதல்ல. இனி அவர்களுக்குள்ள சம்பந்தம் உள்ளத்தையும் ஆத்மாவையும் சார்ந்ததே. அவர் தன்னைச் சார்ந்திருப்பதற்கான புதிய வழிகளை அவள் கண்டு பிடித்தாக வேண்டும். ஆயினும் அவ்வழிகள், அவரைப் புதிதாக வருபவளிடமிருந்து பிரிப்பதாகவும் இருக்கக்கூடாது!

அவள் வாய்க்குள், "நான் எப்படியாவது எல்லோருக்கும் என்னுடைய கடமையைச் செலுத்த வேண்டும்" என்று கூறியவாறு, தன்னுடைய கரத்தின் மீது மீண்டும் துணியை இழுத்து விட்டுக் கொண்டாள்.

அந்த இளம் பெண் எப்படி இருக்கவேண்டும்? ஸ்ரீமதி ஊ அவனைப்பற்றி அதிகம் சிந்தித்திருந்தாள். இப்போது மீண்டும் அவனைப்பற்றி எண்ணமிடத்தொடங்கினாள். நிச்சயம் அவள் இவனைப் போலல்லாமல் மிகவும் வேறுபட்டிருக்க

வேண்டும். அவள் ஒரு இளம் நங்கையாக இருக்கவேண்டும். ஆனல் நாட்டுப் பெண்களுக்கு சற்றே வயதில் மூத்தவளாக இருக்கவேண்டும். இல்லாவிடில் அதனல் குடும்பத்தில் தகராறு ஏற்பட்டாலும் ஏற்படலாம். இருபத்திரண்டு வயதுடையவளாகயிருந்தால் சரியாகயிருக்கும். அவள் அதிகம் படித்தவளாக இருக்கக் கூடாது. ஏனெனில் ஸ்ரீமதி ஊ தானே நன்ருகப் படித்தவள். அவள் நவநாகரிகமடைந்த பெண்ணு கவும் இருக்கக்கூடாது. ஏனெனில் நாகரிகமான பெண்ணுக யிருந்தால் அவள் ஒரு விலேமகளாக மட்டும் இருப்பதோடு திருப்தியடைய மாட்டாள். வெகு சீக்கிரத்திலேயே அவள் ஸ்ரீமதி ஊவைத் தன் வழியிலிருந்து ஒதுக்கித் தள்ளி விட்டு, ஸ்ரீமான் ஊவினுடைய முழு நேரத்தையும் உள்ளத்தையும் தனக்கே உரிமைப் படுத்திக் கொள்ள முயல்வாள். அது குடும்பத்தில் பிள்ளேகளுக்கு எதிரே பெருத்த அவமானத்தை உண்டாக்கும். கொஞ்சம் வயதான மனிதன் கௌரவத்தினல் ஒரு விலேமகளேக் கொள்ளலாமே யொழிய அவள் வசப்பட்டு விடக்கூடாது. அவள் லட்சணமாகத் தான் இருக்கவேண்டும். ஆயினும் குடும்பத்திலுள்ள மற்ற இளேஞர்களேக் கவர்ந் திழுக்கும் படியோ அல்லது ஸ்ரீமான் ஊவையே மயக்கி விடும்படியாகவோ அவ்வளவு அழகாக இருக்கக் கூடாது. சுமாராக அழகாக இருந்தால் போதுமானது. ஸ்ரீமதி ஊவின் அழகு ஒரு விதமென்றல் அவளுடைய அழகு வேறு மாதிரியாக இருக்க வேண்டும். அதாவது அவள் சற்று பருத்தவளாகவும் சிவப்பு நிறமுடையவளாகவும் இருக்க வேண்டும். அவள் உருவத்தில் சற்று பெரியவளாகயிருந்தாலும் பாதகமில்லே.

இவ்வளவும் நாட்டுப்புறத்தில் வளர்ந்திருக்கக் கூடிய ஒரு பெண்ணிடம் இருக்க வேண்டுமென்று கருதினுள் ஸ்ரீமதி ஊ. மேலும், ஒரு நாட்டுப் புறத்துப் பெண்ணுகயிருந்தால் நல்ல வலுவான தேகத்தோடு இருப்பாள். கெட்ட பழக்க வழக்கங் கள் ஒன்று மிராது. அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் நன்ருக இருக்கும். குழந்தைகள் பிறக்க வேண்டியதும் அவசியம் தான் ! ஏனெனில் எந்தப் பெண்ணும் குழந்தை யில்லாமல் திருப்தியாக இருக்க மாட்டாள். குழந்தை யில்லாமற்போனல் அவள் வெறுப்பு மேலிட்டு முன்கோபியா வதுடன், தன்னேப் பற்றியே அதிக எண்ணம் கொண்டவளாய், கணவன் மேலுள்ள தன்னுடைய உரிமைகளே அதிகப்படுத்த முயல்வதுடன் அவனுக்கும் வீணே தொந்தரவு கொடுப்பாள். இப்புதிய பெண்ணினல் கண்டிப்பாக, ஸ்ரீமான் ஊ வருத்தப் படும்படி நேரக் கூடாது. அவள் சற்று அசட்டு புத்தியுள்ள வளாக இருக்க வேண்டும். அப்போது தான் அவர் எதைக்

கொடுத்தாலும் அதை வைத்துக்கொண்டு திருப்தியோடிருப் பாள். எனக்கும் அவருக்குமுள்ள தொடர்பு என்ன என்பதைக் கூர்ந்து கவனிக்க மாட்டாள் என்று எண்ணமிட்டாள்.

இப்போது அவள் மனதில் அப்பெண் எவ்வாறிருக்க வேண்டுமென்று தெளிவாகப் புலப்பட்டது. அவள் சற்று அசடாகவும், ஆரோக்கியமும் அழகும் வாய்ந்த இளம் பெண்ணுக இருக்க வேண்டும். சாப்பாட்டில் அதிகப் பிரியம் உள்ளவளாகவும் முன்பின் பெருஞ்செல்வம் படைத்த வீட் டைப் பார்த்திராதவளாகவும் இருக்கவேண்டும். அப்போது தான் அவளுக்கு இவ்வீட்டைப் பற்றி மனதில் சிறிது பயம் இருக்கும். ஆனல் அழுத்தமும் கர்வமும் கொண்ட பெண்ணுக யிருக்க கூடாது. அப்பயம் அகங்காரமும் கோபமுமாக உருவெடுத்து விடும். அவள் சஞ்சலமற்றவளாய், "இம் மாதிரியான சாதாரண இளம் பெண்கள் கிடைப்பதொன்றும் அரிதில்லே" என்று எண்ணமிட்டாள்.

சீக்கிரம் எழுந்து வீட்டில் கவனிக்க வேண்டியவைகளே யெல்லாம் கவனித்து முடித்ததுமே, மெங்கின் கல்யாணத்திற் காக நடுவிலிருந்து தரகு பேசின அந்தக் கிழவியை அழைத்து வரச் சொல்ல வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். ஸ்ரீமதி ஊ, தன்னுடைய சிநேகிதிக்கும் தனக்குமிடையே கூட ஒரு தரகு சொல்பவளே நியமித்துக் கொண்டாள். ஏனெனில் ஸ்ரீமதி கேங் அவளது அன்பின் மிகுதியினல் ஒன்றையும் கரா ராகப் பேசி முடித்துக் கொள்ள மாட்டாள். பின்னல் அதனல் கல்யாணத்தில் ஏதாவது மனஸ்தாபம் ஏற்படலாம் என்று கருதியே அவள் அவ்விதம் செய்தாள். அவள் உற்சாகத்துடன் தனக்குள், 'அந்தக் கிழவி லியூமாவை இன்று வரச் சொல்ல வேண்டும். எனக்கு என்ன வேண்டுமென்பதைத் தெளிவாக அவளிடம் சொல்லி விடவேண்டும். கடையில் ஒரு பொரு ளுக்கு 'ஆர்டர்' கொடுப்பது போலத்தானே இதுவும்!' என்று நினேத்துக் கொண்டாள்.

பிறகு அவள் தன் வாழ்க்கையின் மிகுதி நாட்களேக் கழிக்கப் போகும் அவ்வறைகளில் தன் மனதைச் செலுத் தினுள். இங்கு அவள் சில மாறுதல்களேச் செய்ய வேண்டி யிருக்கலாம். அவளுடைய மாமனரான அக்கிழவரிடம் அவள் அதிகப் பிரியம் வைத்திருந்தாள். அவருக்கு சொந்த பெண் இல்லேயாதலால் அவர் இவளிடம் மிகுந்த அன்பு காட்டினர். அழகாயிருந்ததைப் போலவே அவள் நல்ல புத்திசாலியாகவும் புடித்தவளாகவும் இருந்தாள் என்பதை அறிய அவர் உண்மை யில் மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஒரு மாமனர் தன்னுடைய

மருமகளுடன் பேசக்கூடாது என்ற பழைய வழக்கத்தை அவர் தூரத்தள்ளி வைத்து விட்டார். தமது புத்தகச் சாலையிலிருக்கும் பழைய புத்தகங்களில் சிலவற்றைப் படித்து காண்பிப்பதற்காக அவர் அடிக்கடி அவளைக் கூப்பிட்டனுப்புவார். அவர் உயிரோடிருந்த காலத்தில் அவள் அடிக்கடி தானே அங்கு வந்து புத்தகங்களை எடுத்து படிப்பாள். சில புத்தகங்களை அவர் பெண்கள் தொடுவதற்கு லாயக்கில்லை என்று ஒதுக்கி வைத்திருந்தார். அவளும் அவற்றை எப்போதும் தீண்டியதில்லை. ஆனால் இப்போதோ, அவளுடைய வாழ்க்கையின் பாதிபாகம் முடிவடைந்து விட்டது. இனி அவள் தனிமையில் வசிக்கப் போகிறாள். ஆகவே இனி அவற்றைப் படிக்க ஒருவிதத் தடையுமில்லை.

இந்த அறையிலுள்ள இத்தனை புத்தகங்களும் இனி தனக்கே சொந்தம் என்று எண்ண அவளுக்கு மிக்க ஆனந்தமாக இருந்தது. நடுவில் இத்தனை வருடங்களாக அவளுடைய வாழ்க்கையில், புத்தகங்களில் கவனம் செலுத்துவதற்கு அவளுக்குப் போதிய நேரம் கிடைக்கவில்லை. ஸ்ரீமான் ஹவிற்குப் புத்தகம் என்றாலே கசப்பு. ஆதலால் அவள் புத்தகமும் கையுமாக இருப்பதைப் பார்க்க அவர் விரும்பவில்லை. இத்தனை வருடங்களாகத் தனது உடலையும் உள்ளத்தையும் மற்றவர்களுக்காகவே செலவழித்த பிறகு, இப்போது பழைய படி மீண்டும் அறிவென்னும் இன்ப ஊற்றைப் பருக அவளது உள்ளத்தில் பேரவா எழுந்தது.

நேரம் ஆக ஆக, அவ்வறைகள் அவளுக்கு மிகவும் பழக்கமானவைபோல் தோன்றின. அவளுடைய மாமனார் இறந்து போய் இப்போது வெகுகாலமாகி விட்டதால் அவருடைய உயிருடன் கூடிய தோற்றம் அவளுக்கு நன்றாக நினைவிருக்கவில்லை. அவரை இப்போது நினைத்துப் பார்த்தால், அவருடைய அறிவு முதிர்ந்த மனமும் அமைதி நிறைந்த வயதான குரலும் தான் அவளுடைய நினைவுக்கு வந்தன. அவருடைய உயிரோடு கூடிய தோற்றத்தின் ஞாபகம் இப்போது முற்றிலும் மறைந்து விட்டதால் இவ்வறைகளில் ஒன்றும் வித்தியாசமாகத் தோன்றவில்லை. ஆதலால் எதையும் மாற்ற வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. கட்டிலில், சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்ட மெல்லிய ஊதா வர்ணத்திரை போடப்பட்டிருந்தது. அவை மோகத்தைப் பற்றியும் பேசவில்லை. பிள்ளை பெறுவதைப் பற்றியும் பேசவில்லை. வெள்ளையடிக்கப் பட்டிருந்த சுவர்கள், அதிக நாட்களானதால் பழுப்பேறி போயிருந்தன. மேலே இருக்க உத்திரங்கள் வெளியே தெரியும்படி அமைக்கப் பட்டிருந்தன. கதவு, ஜன்னல்கள்,

மேஜை நாற்காலிகள் முதலியவை கனமாகவும் வழவழப்பாகவும் இருந்தன. அவற்றின் மீது பல தலைமுறைகளுக்கு நிலைக்கக் கூடியதான கரிய நிங்போ வார்னிஷ் பூசப்பட்டிருந்தது. பெரிய பெரிய சதுர ஓடுகளால் தரை போடப்பட்டிருந்தது. வெகு நாட்களாகி விட்டதால் தரையில் கட்டிலுக்கு இழே ஓரிடத்திலும் புத்தக அறையின் வாசற்படிக்கு அருகேயும் ஓரிடம் பெயர்ந்து போயிருந்தது. அம்மூன்று அறைகளில் படுக்கையறை ஒன்று. மூன்றாவதாக இருந்த நீண்ட அறைதான் உட்காரும் அறை. அதற்கு முன்புறத்தில் திறந்த வெளியாகக் கொஞ்சம் இடம் இருந்தது. இந்த இடத்தில் மட்டும் சில மாறுதல்களைச் செய்யவேண்டி ஏற்படலாம். அங்கிருந்த மரங்கள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு அடர்ந்து வளர்ந்திருந்ததனால் போதிய சூரிய வெளிச்சம் வரவொட்டாமல் தடுத்துக் கொண்டிருந்தன. அதற்கடியிலிருந்த பாறைகள் பாசிபிடித்து வழுக்கலாக இருந்தன.

யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டு, "உள்ளே வா!" கூறினாள் ஸ்ரீமதி ஹ.

பீதியடைந்து காணப்பட்ட இங் உள்ளே வந்து தடுமாறிக் கொண்டே, "நீங்கள் இங்கு இருப்பீர்களென்பது, எனக்குத் தெரியவே தெரியாது. நான் வீடு முழுவதும் சென்று தேடி விட்டு வருகிறேன். உங்களுடைய அறைக்குச் சென்று தூங்கிக்கொண்டிருந்த எஜமானரை எழுப்பி விட்டுவிட்டேன். அவர் மிகவும் கோபித்துக் கொண்டார்" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஹ அமைதியுடன், "இனி நான் உயிரோடிருக்கும் வரை தினமும் காலையில் என்னை நீ இங்கு வந்து காணலாம்" என்று மொழிந்தாள்.

* * *

பொழுது ஏற ஏற இந்த செய்தி வீடு முழுவதும் பரவியது. மகன் தன் பெண்டாட்டியிடம் சொல்ல, அவள் அதை மற்றவளிடம் சொல்ல, இங் சமையல்காரனிடம் சொல்ல, அவன் அதைத் தனக்குக் கீழிருப்பவனிடம் சொல்ல், இப்படியாக அன்று பொழுது சாய்வதற்குள், வீட்டில் உள்ள சகலமான பேருக்கும், ஸ்ரீமதி ஹ பெரிய எஜமானர் இருந்த விடுதிக்கு வந்துவிட்டாள் என்ற விஷயம் தெரிந்துவிட்டது. வேலைக்காரர்களிடமிருந்து இதை அறிந்த பெரிய எஜமானியின் பணிப்பெண் அவளிடம் இதைத் தெரிவித்தாள். பெரிய எஜமானியால் இதை நம்ப முடியவில்லை. வேண்டுமென்றே தான் ஸ்ரீமதி ஹ இவ்விஷயத்தைத் தன்னுடைய மாமியாரிடம்

சொல்லவில்லை. வேலைக்காரியின் மூலமாக இவ்விஷயம் அவளுக்கு எட்டும் என்பது ஸ்ரீமதி ஊவுக்குத் தெரியும். அதுவே நல்லது. ஏனெனில், அப்போது அவளுக்கு முதலில் வரும் ஆத்திரம் எதிரிலிருக்கும் யார் மேலாவது பாயும். அந்த எதிரிலிருக்கும் நபர் ஒரு வேலைக்காரியாக இருப்பதே தேவலாமல்லவா? அதற்குப் பிறகு அவள் முதலில் மகனைச் சண்டை பிடிப்பதா அல்லது மருமகளைத் திட்டுவதா என்று புரியாமல் திண்டாடுவாள். அவள் முதலில் ஸ்ரீமதி ஊவிடம் வந்தால், இவளைத்தான் குற்றம் சாட்டுகிறாள் என்று அர்த்தமாகும். அல்லது முதலில் மகனிடம் சென்றால், அவருடையதுதான் தவறு என்று கருதுகிறாள் என்று பொருளாகும்.

இன்னும் நடுப்பகலாகவில்லை. இப்போது தனக்குச் சொந்தமாகிவிட்ட அவ் வுட்காரும் அறையில் ஸ்ரீமதி ஊ அமர்ந்து, அம்மாத விட்டுக் கணக்குகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். அப்போது தன்னுடைய மாமியார், ஒரு வேலைக்காரி முன்னாலிருந்து அழைத்துவர, அவ்வெளி வாசலின் வழியாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். இதற்குள் அம்மரங்களை வெட்டி அப்புறப்படுத்தியாகிவிட்டது. பாசி பிடித்திருந்த பாறைகளையும் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்தாகி விட்டது. கிழவியம்மாள் ஒரு கையால் வேலைக்காரியின் கையையும் மற்றொரு கையில் நாகப்பாம்பின் தலையைக் கொண்ட அவளுடைய நீண்ட தடியையும் பிடித்துக் கொண்டு வந்தாள். அங்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிப்பதற்காகச் சற்று நேரம் நின்றாள். முன்பு நிழல் மண்டிக் கிடந்த அவ்வாசலில் இப்போது நன்றாக சூரிய வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. அங்கு நடுவில் இருந்த சிறிய குளத்திலிருந்த மீன்கள் இப்புதிய வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் அடியில் சேற்றில் போய் பதுங்கிக் கொண்டிருந்தன. ஆகவே குளம் காலியாக இருந்தது. ஆனால் இரண்டு அழகிய நீலநிற பட்டுப்பூச்சிகள் புதிய வெளிச்சத்தைக் கண்டு அங்கு வந்து தண்ணீருக்கு மேல் நர்த்தனம் செய்து கொண்டிருந்தன.

பெரிய எஜமானி குற்றம் சாட்டும் குரலில், "சீன மரத்தின் பெருமையையே நீ வெட்டி எறிந்து விட்டாயாக்கும்!" என்றாள்.

இதற்குள் அங்கிருந்து எழுந்து அவளருகில் வந்துவிட்ட ஸ்ரீமதி ஊ, புன்னகை செய்து, "அவை வெகு சீக்கிரம், சுலபமாக மீண்டும் வளர்ந்து விடும். இவைகூட நாம் நட்டதல்லவே. அவை தானாகவே இரண்டு பாறைகளுக்கும் நடுவில் முளைத்திருக்கின்றன" என்றாள்.

பெரிய எஜமானி, பெருமூச்செறிந்துவிட்டு அறையை நோக்கி நடந்தாள். ஸ்ரீமதி ஊ அழைத்துச் செல்வதற்காக அவளுடைய கையைப் பற்றினாள். ஆனால் அவள் மிகுந்த எரிச்சலுடன் அவளைத் தூரத் தள்ளிவிட்டு, "என்னைத் தொடாதே! நான் உன்னிடம் எவ்வளவு கோபமாயிருக்கிறேன், தெரியுமா?" என்றாள்.

ஸ்ரீமதி ஊ வாய் திறவாமல் அவளைத் தொடர்ந்து உள்ளே சென்றாள். பெரிய எஜமானி தனது கட்டையான உரத்த குரலில், "நீ இங்கு வரப்போவதாக என்னிடம் சொல்லவேயில்லையே. இந்த வீட்டில் எது நடந்தாலும் எனக்கு யாரும் தெரியப்படுத்துவதே யில்லை" என்று முறையிட்டு விட்டு உட்கார்ந்து கொண்டாள்.

ஸ்ரீமதி ஊ மன்னிப்பு கோரிய வண்ணம், "நான் உங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். அது என்னுடைய தவறுதான். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறினாள்.

பெரிய எஜமானி கோபத்துடன் உறுமியவாறு, "என்னுடைய மகனுடன் நீ சண்டை போட்டுக்கொண்டு வந்து விட்டாயா" என்று கேட்டாள்.

"இல்லவே இல்லை. நாங்கள் ஒருநாளும் சண்டை போட்டுக் கொண்டதே கிடையாது" என்று பதிலளித்தாள் ஸ்ரீமதி ஊ.

அவளுடைய மாமியார் அதிகாரத்துடன், "என்னிடம் வெறும் வார்த்தைகளை அளக்காதே. என்னால் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும்" என்றாள்.

"அம்மா! உங்களிடம் நான் வெறும் வார்த்தைகளைச் சொல்லவில்லை. நேற்றோடு எனக்கு நாற்பது வயதாகிறது. நான் வெகு நாட்களாகவே, இந்த நாள் வந்ததும் மனைவி என்ற என்னுடைய கடமையிலிருந்து விலகிக்கொண்டு, அதற்குப் பதில் என்னுடைய எஜமானரை வேறொரு இளம் பெண்ணை ஏற்று கொள்ளச் சொல்லலாமென்று தீர்மானித்திருந்தேன். அவருக்கு நாற்பத்தைந்து வயதுதானே ஆகிறது. அவருக்கு இன்னும் எத்தனையோ வருஷங்கள் பாக்கியிருக்கின்றன" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவளுடைய மாமியார், மெலிந்திருந்த தனது கைகளைக் கோர்த்து பாம்பின் தலையைக் கொண்ட அத்தடியின் மீது ஊன்றிக்கொண்டு உட்கார்ந்தவாறு, மருமகளின் முகத்தையே

உற்றுப் பார்க்கலானாள். "அவன் வேறு யாரையாவது விரும்புகிறானா! அவன் அம்மாதிரி உல்லாச விடுதிகளுக்குப் போவதாயிருந்தால், நான்...நான்...".

ஸ்ரீமதி ஊ, "இல்லை, வேறு ஒரு பெண்ணையும் அவர் விரும்பவில்லை. உங்களுடைய மகனைப்போல் சிறந்த மனிதரை வேறெங்கும் காண முடியாது. அவர் எப்போதும் என்னிடம் மிகவும் அன்பாகத்தானிருக்கிறார். நான்தான் என்னுடைய சுயநலத்தால், இத்தனை நாளுமிருந்த அன்பை இனியும் அப்படியே அழியாமல் காப்பதற்காக இவ்விதம் செய்ய விரும்புகிறேன். இந்த வயதுக்கு மேல் இனிக் குழந்தைகள் பிறந்தால் நன்றாக யிராது. குழந்தை பிறந்து விடுமோ என்ற பயம் அன்பையும் மீறி பிடித்துக்கொள்ளும். என்னுடைய சக்திகளெல்லாம் குன்றி விட்ட பிறகு, இனிமேல் கண்டிப்பாக குழந்தைகள் பிறக்கக்கூடாதுதான். ஆனால் அவருடைய சக்திகள் இன்னும் குன்றவில்லையே" என்றாள்.

பெரியம்மாள் கடுமையாக, "ஊரார் என்ன சொல்வார்கள்? அவன் ஏதோ வழிதவறி செய்திருக்கவேண்டும். அதனால்தான் நீ அவனை விட்டுப் பிரிந்து விட்டாய் என்று தானே சொல்வார்கள்? நீ உன் சொந்த விருப்பத்தினாலேயே விலகிக் கொள்கிறாய் என்பதை யார் நம்புவார்கள்? உண்மையில், உனக்கு அவனைப் பிடிக்காமல் போனாலொழிய அது எப்படி சாத்தியம்?" என்று கேட்டாள்.

"அவரிடம் எனக்குள்ள அன்பு சற்றும் குறையவில்லை" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"புருஷனும் மனைவியும் ஒன்றாகப் படுத்துக்கொள்வதில்லை யென்றால், அது எத்தகைய அன்பாக யிருக்கும்?" என்று கேட்டாள் பெரிய எஜமானி.

ஸ்ரீமதி ஊ சற்றுநேரம் பதிலளிக்கவில்லை. கடைசியில், "எனக்குத் தெரியவில்லை. நான் அதைப்பற்றி அதிகம் யோசித்திருக்கிறேன். ஒருவேளை, இனியாவது அதைப்பற்றித் தெரிந்து கொள்வேனோ என்னவோ!" என்று கூறினார்.

பெரிய எஜமானி அடங்கா சினத்துடன் உரத்த குரலில், "இதனால் எங்களுக்கெல்லாம் சங்கடம் உண்டாகாது என்று நினைக்கிறேன். புதிய தொல்லைகளை உண்டு பண்ணுவதற்காக, இவ்வீட்டிற்குள் ஒருத்தி வந்து சேரமாட்டாள் என்று நம்புகிறேன்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ அதை ஆமோதிக்கும் குரலில், "ஆம், அதற்கு முற்றிலும் நானே பொறுப்பாளி. அம்மாதிரி ஏதாவது நேர்ந்தால் அந்தப் பழி முற்றிலும் என்னையே சாரும்" என்று கூறினாள்.

"யார் அந்தப் புதிய பெண்?" என்று அதிகாரத்துடன் கேட்டாள் பெரிய எஜமானி. அவளுடைய கோபம் இன்னும் தணியவில்லை. ஆயினும் அவள் தன்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாகத் தன்னுடைய கோபம் கொஞ்சம் கொஞ்சமாக மறைவதை உணர்ந்தாள். எந்த ஸ்திரீயும் நாற்பது வயதிற்கு மேல் குழந்தைபெற விரும்பமாட்டாள் என்பது உண்மை தான். அவளுக்கே இம்மாதிரியான சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அக்குழந்தை பிறந்தவுடனேயே இறந்து விட்டது. அப்போது அவளுக்கு அந்த வயதில் தான் கர்ப்பமாயிருக்கிறோம் என்பதை அறிய எவ்வளவு வெட்கம் உண்டாயிற்று? அது நடந்து இப்போது முப்பது வருஷங்கள் ஆகியும் நேற்றே நடந்ததுபோல் அவ்வளவு தெளிவாக அவளுக்கு ஞாபகம் இருந்தது. அதுவரையிலும் அவளுக்கு இன்னும் பிள்ளைகள் பெறவேண்டும் என்ற ஆசையிருந்தது. வயது நாற்பதானதும், அவளுக்கு அவ்விருப்பம் மறைந்து விட்டது. அதிருப்தியோடு காத்துக் கொண்டிருந்த அம் மாதங்களில் அவள் தன் கணவனை ஏசி சண்டைபிடித்த வண்ணமாகவே இருந்தாள்.

குழப்பமடைந்திருந்த அம்மனிதரை நோக்கி, 'போய் எங்காவது ஒரு தாசியைத் தேடிக்கொள்ளும். அவள் தான் எப்போதும் தயாராக இருப்பாள்' என்று ஏசியது நினைவுக்கு வந்தது.

இதைக் கேட்டு மிக்க வருத்தமடைந்தவராய், பெரியவர் அவளருகே வருவதையே நிறுத்திவிட்டார். ஆனால் அதற்குப் பிறகு அவர் அவளிடம் அவ்வளவு அன்பாகவும் இருக்கவில்லை. அதிக புத்தகங்களைப் படிக்கும் மனிதனின் இயல்பின்படி அவர் அதிக கூச்சமுள்ளவராகவும் சாதுவாகவும் இருந்தார். அவருடைய அதிக அடக்கமான சுபாவம் அவளுக்கு எரிச்சலை மூட்டிற்று. ஆனால் அதற்குப்பிறகு அவர் அவள்வரை முற்றும் மௌனியாகி விட்டார். இவையெல்லாம் எப்படியோ நடந்து விட்டது. அவள் எவ்வாறு அவரிடமிருந்து ஒரு குழந்தையைப்பெற விரும்பவில்லையோ அவ்வாறே அவரும் அவள் ஒரு குழந்தையைப் பெற்றுத் தரவேண்டுமென்று விரும்பவில்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இப்போதும் தான் அவர்மீது கொண்ட கோபத்தை நினைத்துப் பார்த்தபோது,

அவளுக்குத் தான் ஏதோ பெரிய தவறு செய்து விட்டதாகவே தோன்றிற்று. நடந்ததெல்லாம் இயற்கையின் ஒரு விளையாட்டேயன்றி வேறென்றல்ல! அப்படியிருக்கையில் அவள் எதற்கு அந்த நல்ல மனிதரை ஏசி இருக்க வேண்டும்?

அவள் பெருமூச்செறிந்தாள். தான் முன்பே ஒருமுறை கேட்டுவிட்டதை மறந்து, "யார் அந்தப் பெண்?" என்று மீண்டும் கேட்டாள்.

"நான் இன்னும் பார்த்து நிச்சயிக்கவில்லை" என்றாள் ஸ்ரீமதி ஊ.

கூட வந்திருந்த பணிப்பெண் இவை யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் பெரிய எஜமானிக்கு மிக சிரத்தையுடன் பணிவிடைகள் செய்வதுபோல் பாவனை செய்து கொண்டு, தேநீர் ஊற்றிக் கொடுப்பதும், விசிறுவதும், சூரிய வெளிச்சம் அவள்மீது படாதவாறு திரையை இழுத்து விடுவதுமாக அதிக உபசரணைகள் செய்து கொண்டிருந்தாள். இதை முன்பே கவனித்த ஸ்ரீமதி ஊ, அவள் எல்லாவற்றையும் கேட்பதே நல்லதென்று பேசாதிருந்தாள். வேலைக்காரர்களும் உண்மையான விஷயம் இன்னது என்பதை நேரிடையே கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லதே அல்லவா!

பெரியம்மாள் அழுத்தமாக, "தருந்த பெண்ணைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கஷ்டம்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ, "நான் அப்படி நினைக்கவில்லை. பெண் எப்படி இருக்க வேண்டுமென்று நான் தீர்மானித்து விட்டேன். அப்படியே கிடைக்க வேண்டும் என்பதைத் தவிர வேறென்றும் கஷ்டமில்லை" என்றாள்.

"எப்படியும் குற்றம் எல்லாம் என்னுடைய மகனின்மேல் தானிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது!" என்றாள் பெரிய எஜமானி.

ஸ்ரீமதி ஊ கெஞ்சும் குரலில், "தயவுசெய்து அவரை குற்றம் சொல்லாதீர்கள். அதனால் அவர் தான் நிஜமாகவே ஏதோ தவறு செய்து விட்டதாக எண்ணிக் கொள்வார். உண்மையில் இதில் அவருடைய குற்றம் ஒன்றுமேயில்லை. எனக்கு நாற்பது வயதாகிவிட்டது என்ற காரணத்திற்காக அவருடைய மனதை நோகும்படி செய்யக்கூடாது. அது மிகவும் அநியாயமானது" என்றாள்.

அவளுடைய மாமியார் பெருமூச்செறிந்து, "ஐயோ, கடவுளே! ஏனோ இந்த மாதிரி ஆண் பெண்களை வெவ்வேறு விதமாகப் படைத்திருக்கிறாயோ!" என்றாள்.

ஸ்ரீமதி ஊ இதற்குப் புன்னகை செய்து," நீங்கள் கடவுளை குறைகூறுவதை நான் தவறு என்று சொல்லமாட்டேன்" என்றாள்.

இதற்குமேல் சொல்வதற்கு ஒன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை பெரியம்மாளுக்கு. பல வருஷங்களுக்கு முன் இதே மாதிரி தனக்கு நேர்ந்த துன்பமான அனுபவத்தை அவள் நன்றாக நினைவு வைத்திருந்தாள். அவள் தன் கணவனிடம், வேறொரு பெண்ணைத் தேடிக்கொண்டு போகச்சொல்லி கோபத்தில் கத்தினாளே யொழிய, அவர் அவ்விதம் செய்திருந்தால் அவள் அதைப் பொறுத்திருக்கவே மாட்டாள். அவளுடைய மருமகளாகிய இந்த பெண்மணியோ அவளைவிட அதிக புத்திசாலியாக இருக்கிறாள் போலும்!

வயதாகிவிட்ட காரணத்தினால், அவளுடைய நினைவு அடிக்கடி தடுமாறியது. அவள் தன்னைச் சுற்றிலும் பார்த்தவாறு, "நீ இந்த அறையில் எல்லாவற்றையும் மாற்றிவிடப் போகிறாயா?" என்று கேட்டாள்.

"நான் ஒன்றையும் மாற்றப் போவதில்லை. என்னுடைய பழைய அறையிலிருந்து அந்த ஒரு சித்திரத்தை மட்டும்தான் கொண்டு வந்திருக்கிறேன். எனக்கு அதன் மேல் ஒரு அலாதி பிரியம் உண்டு" என்று பதிலளித்தாள் ஸ்ரீமதி ஊ. அவள் உட்கார்ந்திருந்ததற்கு எதிர்ப்புறத்தில் அப்படம் மாட்டப்பட்டிருந்தது. அவள் அன்று காலை தன்னுடைய ஆகாரத்தை முடித்துக் கொண்டதுமே, இங்கிடம் சொல்லி ஒரு ஆளைவிட்டு அதை எடுத்து வந்து அங்கு மாட்டச் சொல்லிவிட்டாள். முன்போல் அப்படத்தை படுக்கையறையில் அவள் மாட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் இந்த படுக்கையறையில் அவள் தூங்கும்போது மட்டும் தானே இருக்கப் போகிறாள்!

அவளுடைய மாமியார் எழுந்து சென்று, அப்படத்திற்கு எதிரே, தன்னுடைய தடியை ஊன்றிக் கொண்டு நின்றாள். "அந்த மலையில் ஏறிக் கொண்டிருப்பது ஒரு ஆணா அல்லது பெண்ணா?" என்று கேட்டாள்.

"தெரியவில்லை. ஆனால் அது அவ்வளவு முக்கியமுமல்ல" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"தனிமை! இத்தனை மஹிலகளுக்கும் நடுவில் தனிமையில் போகிறேனே! எனக்கு மஹிலகள் என்றாலே எப்போதும் வெறுப்பு" என்று முணுமுணுத்துக் கொண்டாள் பெரிய எஜமானி.

"ஆனால் அவன் அப்படி தனிமையை பொருட்படுத்து பவனாக இருந்தால் அங்கு போயிருக்கவே மாட்டானல்லவா?" என்றாள் ஸ்ரீமதிஜா.

பெரியம்மாளுக்கு எப்போதாவது வருத்தம் ஏற்பட்டால் உடனே கூடவே பசியும் எடுக்கும். அந்தப் படம் அவளுக்கு மிக்க வருத்தத்தை உண்டாக்கிற்று. அவள் ஸ்ரீமதி ஜாவை மிக்க பரிதாபகரமாகப் பார்த்து, "எனக்குப் பசிக்கிறது. நான் இவ்வளவு நேரமாக ஒன்றும் சாப்பிடவில்லை" என்றாள்.

ஸ்ரீமதிஜா அந்த வேலைக்காரியிடம், "அம்மாவை அவருடைய அறைக்கு அழைத்துச் செல். அவருக்குச் சாப்பிடுவதற்கு எது பிரியமோ அதைக் கொடு" என்றாள்.

பெரிய எஜமானி சென்று விட்டதும் அவள் மீண்டும் வீட்டுக் கணக்கைப் பார்க்க ஆரம்பித்தாள். பிறகு அந்த நாள் முழுவதும் யாருமே அவளருகில் வரவில்லை. வீட்டுக் காரியங்கள் உற்சாகமின்றி சப்தமில்லாமல் நடந்து கொண்டிருந்தன. ஸ்ரீமான் ஜா தன்னைப் பார்க்க வருவாரோ மாட்டாரோ என்றெண்ணி வியந்தாள் அவள். அவரைப்பற்றி நினைக்கும்போது தன்னுள் சிறிது கூச்சம் ஏற்படுவதைக்கண்டு அவளுக்கே ஆச்சரிய முண்டாயிற்று. ஆனால் ஸ்ரீமான் ஜா அன்று அந்தப் பக்கமே வரவில்லை. அந்தப் பெரிய வீட்டில் அப்போது என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அவள் நன்றாக அறிவாள். பிள்ளைகளும் அவர்களுடைய மனைவிமார்களும் எல்லோருமாகச் சேர்ந்து, என்ன செய்வது, என்ன சொல்வது என்பது பற்றி பகல்முழுவதும் விவாதித்திருப்பார்கள். மற்றும் அங்கிருந்த உறவினர்களையும் கலந்தாலோசித்திருப்பார்கள். அவர்கள் இன்னும் ஒருவிதமான முடிவுக்கும் வந்திருக்கமாட்டார்கள். ஆதலால்தான் ஒருவரும் அவளிடம் வரவில்லை. பெரியவர்கள் யாரும் வராததால் குழந்தைகளும் அவளிடம் கொண்டுவரப்படவில்லை. வேலைக்காரர்களுக்கோ வீட்டில் உள்ள குழப்பங்கள் தீர்ந்து பழைய நிலை வரும்வரை மௌனமாகத் தங்கள் வேலையில் ஈடுபட்டிருப்பதுதான் நேர்மையாகும் அல்லவா? இங் மட்டும் நாள் முழுவதும் கூட இருந்து அவளுக்குப் பணிவிடைகள் செய்துகொண்டிருந்தாள். அவளும் ஒன்றுமே பேசவில்லை. ஆயினும் அவள் ஒவ்வொரு முறையும் உள்ளே வந்தபோது, அவளுடைய கண்கள் அப்

போதே அழுதுவிட்டு வந்ததுபோல் அதிகமாகச் சிவந்து காணப்பட்டன. ஸ்ரீமதி ஜா இது ஒன்றையும் கவனிக்காதவள் போலிருந்தாள். பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக ஆன செலவுகளையும், மற்றக் கணக்குகளையும் பார்ப்பதற்கே அன்று முழுவதும் அவளுக்குச் சரியாக இருந்தது.

அவள் ஒவ்வொரு கணக்குப் புத்தகமாக பார்த்துக் கொண்டே வந்தாள். முதலில் காரியஸ்தன் எழுதிவைத்திருந்த வீட்டுக் கணக்குகளைப் பார்த்தாள். பிறகு துணி மணிகள் புதிதாக வாங்கியவை, சரி செய்யப்பட்டவை முதலிய கணக்குகளைப் பார்த்தாள். பிறகு வீட்டைப் பழுது பார்ப்பதற்காக ஏற்பட்ட செலவுகள். இம்மாதிரியான பெரிய வீடுகளில் பழுது பார்ப்பதற்காக அதிக செலவு ஏற்படும். கடைசியாக நிலக் கணக்குகளைப் பார்வையிட்டாள். ஜா குடும்பத்தாரின் பிதுரார்ஜிதமான நிலங்கள் அதிகமாக இருந்தன. அவை நல்ல விளைச்சல் உள்ளவை. அந்நிலங்களிலிருந்தும் கடைகளிலிருந்தும் வந்த வருமானத்தினால் குடும்பம் நடந்தது. ஸ்ரீமான் ஜாவாவது அவருடைய பிள்ளைகளாவது வேலைக்காக வெளியே போனதேயில்லை. அவருடைய தூரத்து உறவினர்கள் சிலர் மட்டும் மற்ற நகரங்களுக்குச் சென்று வியாபாரம் செய்தோ அல்லது பாங்கி, கடை இவைகளில் வேலைக்கு அமர்ந்தோ பிழைத்து வந்தனர். ஆனால் அவர்களும் கூட சில சமயங்களில் வேலையில்லாதபோது இங்குவந்து சிறிது நாள் ஓய்வெடுத்துக்கொண்டு போவார்கள். வீட்டை நிர்வகித்து வந்ததுபோல் ஸ்ரீமதி ஜாவே நிலங்களையும் நிர்வகித்து வந்தாள். பல வருஷங்களாக, ஸ்ரீமான் ஜா, வருஷத்திற்கொருமுறை, அதாவது வருஷக் கடைசியில் ஒரு முறை வரவு செலவு கணக்குகளைப் பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதில்லை. ஆனால் ஸ்ரீமதி ஜா வீட்டுக் கணக்குகளை மாதம் இருமுறையும் நிலத்து கணக்குகளை மாதம் ஒரு முறையும் சரிபார்த்து வந்தாள். அரிசியும் கோதுமையும் எவ்வளவு விளைந்திருக்கின்றன, முட்டை, காய்கறிகள், விறகுகள் இவை எவ்வளவு இருக்கின்றன என்பதெல்லாம் அவளுக்கு நன்றாகத் தெரியும். அந்த நிலத்திலிருக்கும் காரியஸ்தன் ஏதாவது மாறுதல்களோ, விபத்துகளோ நடந்தால் வந்து அவளிடம் அறிவிப்பான். சில சமயங்களில் அவள் இதைப்பற்றி ஸ்ரீமான் ஜாவிடம் கலந்து பேசுவாள். சில சமயங்களில் யோசனை கேட்கமாட்டாள். அது அவளுடைய உள்ளச் சோர்வை பொருத்திருந்தது. அவள் மிகவும் சோர்ந்திருக்கும் சமயங்களில் அவருடன் கலந்து பேசவிரும்பாமல், தானே அவ்விஷயங்களை முடிவு செய்து விடுவாள்.

இன்று, நடுவில் அந்தப் படத்தைக் கொண்டு வந்து மாட்ட சொல்வதற்கும் அம்மரங்களை வெட்டிக்கொண்டு போவதை மேற்பார்ப்பதற்கும் எடுத்துக் கொண்ட நேரம் போக, அதிகாலையிலிருந்து மாலை இருட்டும்வரை, அவள் கணக்குகளைப் பார்க்கும் வேலையிலேயே ஆழ்ந்திருந்தாள். அவ்விட்டிலேயே அவள் ஒருத்திதான் உயிரோடிருப்பது போல், அவளைச் சுற்றிலும் வீடு முழுவதும் ஒரே நிசப்தத்தில் மூழ்கியிருந்தது. இந்த அமைதி அவளுக்கு மிக்க ஆறுதலாக இருந்தது. ஆனல் தினமும் இப்படியே இருப்பதை அவள் விரும்புமாட்டாள். ஏனெனில் கலகலப்பில்லாத வாழ்க்கை மரணத்திற்கு ஒப்பாகும். ஆனல் நாற்பது வருடங்களுக்குப் பிறகு, ஒரே ஒரு நாளை, முற்றிலும் தனிமையிலும் அமைதியிலும், அவளை ஏதாவது கேட்டு தொந்தரவு செய்வதற்கு ஒற்றைக் குரல்கூட எழும்பாமல், நிம்மதியாக இருப்பது அவளுக்கு மிகவும் இன்பமாக இருந்தது. வரவு செலவு கணக்குகள் சரியாகவும் திருப்திகரமாகவும் இருந்தன. வரவை விட செலவு குறைவாக செய்யப்பட்டிருந்தது. தானியக் களஞ்சியங்கள் இன்னும் காலியாகவில்லை. அதற்குள் புதியவை அறுவடையாகப் போகின்றன. இறைச்சியறையில், மாமிச பண்டங்கள் உப்பு போட்டு வைத்தவையும் புதியவைகளும் நிறைந்து கிடந்தன. நீர் முலாம்பழங்கள் எல்லாம் பழுத்து விட்டன. அவைகளைக் குளிர வைப்பதற்காக கிணறுகளில் தொங்க விட்டிருந்தார்கள். நிலத்துக் காரியஸ்தன் தனுடைய பாம்பைப் போன்று வளைந்து வளைந்திருந்த கையெழுத்துக்களால் எழுதி யனுப்பியிருந்தான், "பத்தொன்பது நீர் முலாம்பழங்கள் வடக்கில் இருக்கும் இரண்டு கிணறுகளிலும் தொங்க விடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஏழு மஞ்சள் பழங்கள். மற்றவையெல்லாம் சிவப்பு" என்று. இன்றிரவு தூங்குவதற்கு முன் ஒன்றைக்கொண்டு வரச் சொல்ல வேண்டும். அவை மூத்திரப் பைகளுக்கு மிகவும் நல்லது என்று அவள் எண்ணிக்கொண்டாள்.

கணக்குப் புத்தகங்களை மூடி வைத்த பிறகு, அவள் அமைதியான அத்தனிமையின் இனிமையில் தோய்ந்தவளாய் அப்படியே உட்கார்ந்திருந்தாள். இருதயத்திலிருக்கும் விஷம் மூச்சின் மூலமாக வெளியேற்றப்படுவதுபோல், தன்னுள்ளத்தில் குடிகொண்டிருக்கும் சோர்வெல்லாம் வெளியேறிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது அவளுக்கு. அவள் எண்ணியிருந்ததைவிட, உண்மையில் பன்மடங்கு அதிகமாக அலுத்துப் போயிருந்தது அவள் உள்ளம். அவளுடைய உடலையும் உள்ளத்தையும்விட, அவளுடைய ஆத்மாவே அதிக

சோர்வடைந்திருந்தது. அவளது ஆத்மாவிலும் அது எங்கு படிந்திருந்தது என்பதை அவளால் கண்டுகொள்ள முடியவில்லை. அவளுடைய உள்ளம் அதிகமாகச் சோர்ந்திருக்கவில்லை. அது மிக்க ஆத்திரத்தோடும் ஆவலோடும் தன்னை வேலையிலீடுபடுத்திக்கொள்ளக் காத்திருந்தது. வீட்டுக் கணக்குகளைப் பார்ப்பதற்கும், சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் மற்ற விஷயங்களைத் தீர்மானிப்பதற்குமன்றி அவள் உள்ளம் இதுகாறும் வேறெதற்கும் உபயோகப்படவில்லையே! இல்லை, அவளுடைய சோர்வு அவளுடைய அந்தராத்மாவில் எங்கேயோ படிந்து கிடந்தது. ஒருவேளை அவளுடைய வயிற்றிலோ, கர்ப்பத்திலோ இருக்கலாம். இந்த இருபத்தி நான்கு வருஷங்களாக, குழந்தைகள் பிறப்பதற்கு முன்னும், பிறந்த பின்னும் அவர்களுக்கு உயிரூட்டி வளர்ப்பதிலேயே தன்னுடைய வாழ்நாளைக் கழித்திருந்தாள். இப்போது அந்த பிள்ளைகளை மற்றக் குழந்தைகளுக்குப் பிறப்பைக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். தாயும் பாட்டியுமாக இருந்த அவள் இதுநாள்வரை அதிலேயே மூழ்கியிருந்தாள். இப்போது அதெல்லாம் முடிந்து விட்டது.

இந்தச் சமயம் அவளுக்கு ஒரு காலடியோசை கேட்டது. அருகில் வர வர, சுற்களின்மேல் சற்றே உராய்ந்துகொண்டு வந்த அந்த உறுதியான காலடியோசை தெளிவாகக் கேட்டது. ஒரு கணம் அவளுக்கு வியப்பு உண்டாயிற்று—தோல் செருப்பு களா? பெண்களில் யார் தோல் செருப்பு அணிகிறார்கள்? ஆம், அது ஒரு பெண்ணின் காலடியோசைதான். பிறகு அவளுக்குத் தெரிந்தது? அவள் ருலான். அவளுடைய இரண்டாவது மகன் த்ஸேமோவின் மனைவியாகிய ஷாங்காய் பெண் அவள். ஒரு நிமிஷத்திற்குக்கூட தன்னுடைய தனிமையையும் மௌனத்தையும் கலைக்க விரும்பாத அவள் வெறுப்போடு பெருமூச் செறிந்தாள். ஆனல் அவள் உடனே தன்னையே கடிந்து கொண்டாள். அவள் குடும்பத்திலிருந்து விலகிக்கொண்டு விட்டாள் என்று ஒருவரும் எண்ணக்கூடாது. அப்படியில்லாமல், அவள் அங்கு இருப்பதால் இனி அதுவே வீட்டின் மத்தியஸ்தானம் என்று அவர்கள் எண்ணி கொள்ளட்டுமே!

"இங்கே வா, ருலான்" என்று அழைத்தாள் அவள் இனிமையும் குதூகலமும் நிறைந்த குரலில். இதைக் கூறி நிமிர்ந்து பார்த்த அவள், அப்பெண்ணினுடைய கரிய விழிகள் தன்னுடைய முகத்தைத் துருவி பார்ப்பதைக் கண்டாள். ஒல்லியாகவும் உயரமாகவும் இருந்த அவ்விளம்பெண் கதவருகேயே நின்றாள். அவளுடைய நீண்ட அங்கி ஷாங்காயின் அன்னிய நாகரிகத்தின்படி இடுப்பில் பிடிக்கப்பட்டிருந்தது.

அவளுடைய மார்பு தட்டையாகயிருந்தது. அவளுடைய கன்னங்களின் எலும்புகள் அகண்டு தூக்கிக்கொண்டிருந்தன. அவளை அழகி என்று சொல்ல முடியாது. ஸ்ரீமதி ஊவின் நீண்ட வட்டவடிவமான முகம் உயர்ந்த ரகக் கலையழகைச் சேர்ந்தது. ருலானின் முகம் கண்ணுக்கு அருகே அகண்டும் தாவாங்கட்டை குறுகியும் இருந்தது. அவளுடைய வாய் சதுரமாகவும், கடுமையைக் காட்டுவதாகவும் இருந்தது.

ஸ்ரீமதி ஊ, அந்தக் கடுமையைப் பொருட்படுத்தாது, "வா, குழந்தாய்! உள்ளே வந்து உட்கார். நான் இப்போது தான் நம்முடைய குடும்பக் கணக்குகளையெல்லாம் பார்த்து முடித்தேன். இந்த தடவை நமக்கு நல்ல அதிர்ஷ்டம். நிலத்தில் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது" என்றாள்.

அப்பெண் ஒரு நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டாள். இந்தப் பெண் மிகவும் சாதாரணமாகத் தானிருந்தாள். ஆனால் அவளிடமும் சில அழகுகள் இல்லாமல் போகவில்லை என்று எண்ணிக் கொண்டாள். அவளை நோக்கிய ஸ்ரீமதி ஊ வீட்டிலுள்ள மற்ற இளம் பெண்களைப்போல் இவள் மரியாதையாகவும் விநயமாகவும் நடந்து கொள்ளவில்லை. அதற்குப் பதில் முரட்டுத்தனமாகவும் துடுக்காகவும் நடந்து கொள்வதிலேயே இவள் இன்பமடைகிறாள் என்று நினைத்தாள். ஸ்ரீமதி ஊ அவளைச் சிறிது உற்சாகத்தோடு கவனித்தாள். ருலானுடன் அவள் தனியே பேசுவது இதுவே முதல் தடவை.

"நீ உன்னுடைய அழகிய வாயைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும், குழந்தாய்" என்றாள் ஸ்ரீமதி ஊ மிருதுவான குரலில். அதைக் கண்டிப்பது போலவுமல்லாமல், புத்திமதி கூறுவது போலவுமல்லாமல், பாரபட்சமற்ற தீர்ப்பைக் கூறும் முறையில் அவள் சொல்வது, எப்போதுமே இளம்பெண்களை நிலைகுலையச் செய்யும்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றாள் ருலான் தடுமாற்றத்துடன். அவள் பேசியபோது அவளுடைய உதடுகள் துடித்தன.

"இப்போது அவை துடிக்கும்போது மிக அழகாயிருக்கின்றன. ஆனால் பெண்களின் வாய் வயதாக ஆக மாறிக் கொண்டே வருகிறது. உன்னுடைய வாய் உறுதியாகுமானால் அவை மிக அழகாயிருக்கும். இல்லாவிடில் மொத்தமாகவும் முரடாகவும் ஆகி விடும்" என்று மேலும் கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அவள் கூறிய விதம், இதைப்பற்றி அவளுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்ற பாவத்தில் இருந்தது. உள்ளதை உள்ளபடி சொல்வது போலிருந்தது. அவளுடைய குரலில் சற்றேனும் ஆவல் தொனித்திருக்குமாயின், ருலான் உடனே அவளுக்குத் தன்னுடைய வாய் எப்படியிருக்கிறது என்பதைப் பற்றி அக்கறையில்லை என்று தெரிவித்திருப்பாள். ஆனால் அக்குரலில் வெளிப்பட்ட பற்றின்மையைக் கண்டு குழப்பமடைந்த அவள் தனது சிவந்த உதடுகளைக் கடித்துக்கொண்டு தனது கரிய புருவங்களையும் நெரித்துக் கொண்டாள்.

ஸ்ரீமதி ஊ, தான் உட்கார்ந்திருந்த நாற்காலி சௌகரியமாகயில்லையென்று, பின்புறம் வளைவாகயிருந்த மற்றொரு நாற்காலியில் சென்று அமர்ந்து கொண்டாள். பிறகு, "நீ ஏதாவது முக்கிய விஷயமாக என்னிடம் பேச வந்திருக்கிறாயா?" என்று கேட்டாள். இந்த நாற்காலி சாய்ந்து கொள்வதற்கு சௌகரியமாக இருந்தபோதிலும், அவள் சாய்ந்து கொள்ளாமல் நிமிர்ந்து உட்கார்ந்தவாறு, தன்னுடைய சிறிய புகைக்குழாயை நிரப்பிப் பற்ற வைத்து, வழக்கம்போல் இரண்டு முறை புகையை இழுத்தாள்.

கலக்கமடைந்திருந்த ருலான், "அம்மா" என்று வேகமாக ஆரம்பித்துவிட்டு மேலே என்ன சொல்வது என்று அறியாதவளாய் நிறுத்தினாள்.

"என்ன, குழந்தாய்!" என்றாள் ஸ்ரீமதி ஊ மிருதுவாக.

"அம்மா!" என்று மீண்டும் ஆரம்பித்த ருலான், "நீங்கள் எல்லாவற்றையும் தலைகீழாக்கி விட்டீர்கள்" என்றாள்.

"அப்படியா!" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ இனிமையும் ஆச்சரியமும் நிரம்பிய குரலில்.

"ஆம்" என்று கூறிய ருலான் மேலும், "த்ஸேமோ நான் இங்கு வந்து உங்களிடம் பேசக்கூடாதென்று தடுத்தார். அது பெரிய பிள்ளையாகிய லியாங்மோவின் கடமை என்று கூறினார். ஆனால் லியாங்மோ, அதனால் ஒன்றும் பயன் ஏற்படப்போவதில்லை யென்று கூறிவர மறுத்து விட்டார். மெங்கால் அழுவதைத் தவிர வேறென்றும் செய்ய முடியாது. ஆனால் நான் அழவில்லை. யாராவது ஒருவர் உங்களிடம் வந்து பேசித்தானே ஆகவேண்டும் என்று கூறினேன்" என்றாள்.

"உன்னைத் தவிர வேறுயாரும் வரவில்லையே" என்று கேட்டாள் புன்னகை செய்தவாறு ஸ்ரீமதி ஊ.

ருலான் பதிலுக்குப் புன்னகை செய்யவில்லை. சுவலியி லாழ்ந்திருந்த அவளுடைய இளம் முகத்தில், வெட்கத்தை அடக்கி உறுதியை மேற்கொள்ள முடியாததால் ஏற்பட்ட வேதனை படர்ந்தது. மீண்டும் அவள் ஆரம்பித்தாள்: "அம்மா, உங்களுக்கு என்றுமே என்னைப் பிடிக்காது என்பதை நான் அறிவேன். வேறு ஒருவருமே வராததால் நான் வர வேண்டியதாகி விட்டது" என்றாள்.

ஸ்ரீமதி ஊ, "இல்லை. நீ சொல்வது தவறு. இந்த உலகத்திலேயே நான் யாரையும் வெறுப்பதில்லை. அந்த அந்நிய ஆத்மாவான சகோதரி ஹுஷியாவைக்கூட நான் வெறுப்பதில்லை" என்று கூறினாள்.

ருலான், நாற்காலியில் வேகமாகப் பின்னுக்குத் தள்ளி உட்கார்ந்துகொண்டு, "உண்மையில் நீங்கள் என்னை விரும் புவதில்லை. அது எனக்குத் தெரியும். நான் த்ஸேமோவை விடப் பெரியவளாக இருக்கிறேனென்று உங்களுக்கு என்னை பிடிப்பதில்லை. மேலும் உங்களுடைய ஏற்பாட்டினால் அல்லாமல், ஷாங்காயில் நாங்கள் காதல் கொண்டு எங்க ளுடைய கல்யாணத்தை நாங்களே நிச்சயம் செய்துகொண் டோம் என்றதனால் ஏற்பட்ட கோபம் உங்களுக்கு இன்னும் போகவேயில்லை. அதற்காக என்னை நீங்கள் இன்னும் மன்னிக்கவேயில்லை" என்று வாதித்தாள்.

ஸ்ரீமதி ஊ, அதை ஆமோதித்தவளாய், "உண்மையில், முதலில் நான் அதை விரும்பவில்லைதான். ஆனால் பிறகு நன்கு யோசித்துப் பார்த்ததும், நான் வேண்டுவதெல்லாம் த்ஸேமோவின் சந்தோஷம்தானே என்ற உண்மையை உணர்ந்தேன். அவன் உன்னோடு சந்தோஷமாக இருக்கிறான் என்பதை உன்னைப் பார்த்ததும் அறிந்து கொண்டேன். ஆதலால் உன்னைப் பற்றியும் எனக்கு மகிழ்ச்சியே உண்டா யிற்று. நீ அவனைவிட வயதில் மூத்தவள் என்பதற்கு நீ என்ன செய்ய முடியும்? ஆனால் இவ்விஷயம் குடும்பத் தாருக்குக் கலக்கத்தைக் கொடுத்தது என்பது வாஸ்தவமே. ஆனால் நான் அதைச் சரிப்படுத்தி விட்டேன். எந்தக் காரியத் தையும், வேண்டுமானால், ஒழுங்குப்படுத்தி விடலாம்" என்று கூறினாள்.

ருலான் தன்னுடைய சுபாவமான படபடப்புடனும் வேகத்துடனும் பேசவாரம்பித்தாள். "ஆனால், நான் மெங்கையும் மற்றவர்களையும் போலிருந்தால், நீங்கள் இப் மாதிரி செய்ததைக் குறித்து இவ்வளவு தூரம் வருந்த

மாட்டேன். அம்மா, நீங்கள் அப்பாவை மற்றொரு பெண்ணை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கக் கூடாது!"

ஸ்ரீமதி ஊ, சாந்தமாக, "இது அவரை அனுமதிப்பதும் அனுமதிக்காததுமான விஷயமல்ல. நான்தான் அவருக்கு இதுவே மிகச் சிறந்தது என்று தீர்மானித்திருக்கிறேன்" என்று கூறினாள்.

ருலானின் சிவந்த முகம் வெளுத்துவிட்டது. "அம்மா, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது உங்களுக்குத்தெரியுமா?" என்று வினவினாள்.

"எனக்குத் தெரியும் என்றுதான் எண்ணுகிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"ஜனங்கள் நம்மைப் பார்த்து சிரிப்பார்கள். வைப்பாட் டியை வைத்துக்கொள்வது மிகமிகப் பழைய வழக்கம் அல்லவா?" என்றாள் ருலான்.

"ஒருவேளை ஷாங்காய் ஜனங்களுக்கு அம்மாதிரி இருக் கலாம்!" என்றாள் ஸ்ரீமதி ஊ. அவளுடைய குரல் ஒலித்த மாதிரியானது ஷாங்காய்க்காரர்கள் என்ன சொல்வார்கள் என்பது ஒரு பொருட்டேயில்லை என்பதைப் போலிருந்தது.

ருலான் நிராசையுடன் அவளை வெறித்துப் பார்த்தாள். அவளுடைய மாமியாரான இந்த ஸ்திரீ, சாந்தமே உரு வெடுத்தவளாய், மிகமிக அழகாகவும் எவ்விதத்திலும் குறை கூறமுடியாதபடி மிகச் சிறந்தும் விளங்கினாள். இவள் கோபத்துக்கும் நிந்தனைக்கும் எட்டாத தூரத்தில் இருந்தாள். இவளை எதிர்த்துக்கொண்டு தான் த்ஸேமோவுடன் கூடி வாழ்ந்திருக்க முடியாது என்ற விஷயத்தை வெகு நாட்களுக்கு முன்பாகவே அறிந்துகொண்டிருந்தாள் ருலான். அவன்மேல் அவனுடைய தாயாரின் பிடிப்பு மிகப் பலமாகயிருந்ததால் அவன் அதை எதிர்த்துப் போராடக்கூட முயற்சிக்கவில்லை. தன்னுடைய தாய் எதைச் செய்தாலும் முடிவில் அது தன்னுடைய நன்மைக்காகவே யிருக்கும் என்பதை நன்றாக உணர்ந்திருந்தான் அவன். இன்று பெண்களெல்லோரும் கூடி, புதியவள் ஒருத்தி வரப்போவதைப்பற்றி காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, லியாங்மோ மௌனமாக உட் கார்ந்திருந்தான். த்ஸேமோ தன்னுடைய கடைசி தம்பி யாகிய என்மோவுடன் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந் தான். அவன் தோள்களை ஒருமுறை குலுக்கிவிட்டுக்கொண்டு, "நமது தாய் வேறு ஒரு பெண் வரவேண்டுமென்று விரும் பினால் அதற்கு ஒரு காரணம் இல்லாமலிருக்காது. அவள்

காரணமில்லாமல் தான் எதையும் செய்வதில்லையே" என்று கூறிவிட்டு என்மோவிடம், "என்மோ, இப்போது நீ ஆட வேண்டும்" என்றான்.

என்மோ இந்தக் கலவரங்களைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் விளையாடிக் கொண்டிருந்தான். அவனுக்கு எல்லா அண்ணன்மார்களிலும் த்ஸேமோவைத் தான் மிகவும் பிடிக்கும். ஏனென்றால் அவன் தினமும் இவனுடன் விளையாடுவான். அவனில்லா விட்டால் பெண்களும் குழந்தைகளும் நிறைந்திருந்த அவ்வீட்டில் அவன் தனிமையினால் மிகவும் வருந்தியிருப்பான்.

"காரணமா! என்ன காரணம்?" என்று எரிச்சலோடு கத்தினாள் ருலான்.

த்ஸேமோ சதுரங்கப் பலகையிலிருந்து தன் கண்களை அகற்றாமலே, "உன் நாவை அடக்கு" என்று கடுமையாகக் கூறினான்.

அவளை எதிர்த்துப் போக அவளுக்குத் துணிவுண்டாகவில்லை. அவன் அவளைவிடச் சிறியவனாகயிருந்த போதிலும், அவனுடைய தாயாரிடமுள்ள கம்பீரத் தன்மை அவனிடமும் அமைந்திருந்ததால், அது அவளுடைய படபடப்பையும் ஆத்திரத்தையும் அடக்கிற்று. ஆனால் அவள் மனதிற்குள், தான் மட்டும் தனியாகவே போய் ஸ்ரீமதி ஊவைப் பார்த்து விடுவது என்று முடிவு செய்து கொண்டாள்.

அவள் கைகள் இரண்டையும் இறுகப் பிடித்துக்கொண்டு ஸ்ரீமதி ஊவை நோக்கியவாறு உட்கார்ந்திருந்தாள். "அம்மா, ஒரு மனிதர் ஒரு விலைமகளை எடுத்துக் கொள்வது இப்போது சட்டத்திற்கே விரோதமானது. அது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"எந்த சட்டத்திற்கு?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"புதிய சட்டங்களுக்கு. அதாவது எதிர்த்த கட்சியின் சட்டங்களுக்கு". என்றாள் ருலான்.

"இந்தப் புதிய சட்டங்கள் புதிய அரசியல் திட்டத்தைப் போல் இன்னும் ஏட்டளவிலே தானே இருக்கிறது?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

தான் அரசியல் என்ற வார்த்தையை உபயோகித்ததைக் கேட்டு ருலான் திடுக்கிட்டு விட்டாள் என்பதை அவள் கவனித்தாள். அவளுக்கு அரசியலைப் பற்றி ஏதாவது

தெரிந்திருக்கக் கூடும் என்று ருலான் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

"இந்த வழக்கத்தை ஒழிப்பதற்காக நாங்கள் எத்தனை பேர் என்ன பாடுபட்டோம்! கோடை காலத்து வெயிலில் ஷாங்காயின் தெருக்களில் நாங்கள் எல்லோரும் ஊர்வலம் செல்வோம். வியர்வை உடம்பில் அருவியாகக் கொட்டும். மேற்கத்திய நாடுகளைப் போல் ஒருவனுக்கு ஒரே ஒரு மனைவியைத் தான் மணந்து கொள்ள உரிமை உண்டு என்ற கொள்கையை வற்புறுத்துவதற்காக நாங்கள் கொடிகளைப் பிடித்துக் கொண்டு சென்றோம். 'விலைமகளைக் கொள்ளும் வழக்கம் ஒழிக' என்று வெள்ளை எழுத்துகளால் எழுதிய ஊதாநிற வர்ணக் கொடியை நானே என் கையால் பிடித்துக் கொண்டு சென்றேன். இப்போது என் சொந்த குடும்பத்திலேயே அதுவும் என்னுடைய மாமியாரே இந்த பழைய வழக்கத்தைச் செய்தால்... இக்கொடிய வழக்கம்...அம்மா, பழைய கொடிய வழக்கங்களைக் கைக்கொள்ளுவது..." என்றாள் ருலான்.

ஸ்ரீமதி ஊ அறிவுக்குகந்த முறையில், "என் குழந்தாய், த்ஸேமோ என்றாவது வேறு ஒரு பெண்ணை, அதாவது உன்னைவிட உற்சாகத்திலும் பேச்சிலும் குறைந்தவளாய், சாதுவாக இணங்கி நடக்கும் ஒருத்தியை மணந்துகொள்ள விரும்பினால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

"நான் உடனே அவருடன் விவாகரத்து செய்து கொள்வேன். இன்னொரு பெண்ணோடு நான் அவரை ஒருநாளும் பங்கு போட்டுக் கொள்ள மாட்டேன்" என்றாள் ருலான் பெருமையுடன்.

ஸ்ரீமதி ஊ மீண்டும் புகைக்குழாயைப் பற்ற வைத்து இரண்டுமுறை புகை பிடித்தாள். "ஒரு ஆணின் வாழ்க்கை பல பாகங்களாகப் பிரிந்திருக்கிறது. வயது ஆக ஆக ஒரு பெண் இதை அறிந்து கொள்கிறாள்" என்றாள்.

ருலான் வற்புறுத்தலாக, "ஆண் பெண்களின் சமத்துவத்தில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ, "ஆம், இருவரும் சமம்தானென்றாலும் அதற்காக இருவரும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்பது அவசியமல்லவே! முக்கியத்துவத்தில் இருவரும் சமமே. வாழ்க்கைக்கு அவர்களுடைய தேவை சமமாகத் தானிருக்கிறது. ஆயினும் இருவரும் ஒரே மாதிரியானவர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?" என்றாள்.

"இக்காலத்தில் நாங்கள் அப்படி எண்ணுவதில்லை. ஒரு ஸ்திரீ ஒரு புருஷனோடு திருப்தியடைகிறாள் என்றால் ஒரு புருஷன் மனைவியோடு திருப்தியடைய வேண்டியதுதான் என்பது எங்கள் கொள்கை" என்றாள் ருலான்.

ஸ்ரீமதி ஊ புகைக்குழாயைக் கீழே வைத்துவிட்டு சிந்தனையோடு, "நீ மிகவும் சிறிய பெண்ணாயிருக்கிறாய், உனக்கு அதை எப்படி விளக்கிச் சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. இதோ பார், சூழ்ந்தாய்...திருப்தி என்பது தான் அங்கிருக்கும் முக்கியமான விஷயம்—ஆணினுடைய திருப்தி, பெண்ணினுடைய திருப்தி இரண்டும் முக்கியமே. அதில் ஒருவர் பரிபூரணத் திருப்தி அடைந்து விட்டால், மற்றவரைப் பார்த்து, 'இதோ எனக்குத் திருப்தியாகி விட்டது. ஆதலால் நீயும் இதோடு நிறுத்திக் கொள்' என்று சொல்லலாமா?" என்று கேட்டாள்.

"ஆனால், லியாங்மோ தனது தந்தை வேறொரு பெண்ணை விரும்பவில்லை என்று சொன்னாரே" என்றாள் ருலான் விடாமல்.

'ஆ! லியாங்மோ அவனுடைய அப்பாவுடன் இன்று பேசியிருக்கிறானே!' என்று மனதிற்குள் வியந்து கொண்டாள் ஸ்ரீமதி ஊ. ஒருகணம் அவள் மனம் தனது கணவனைப் பற்றி எண்ணி இரங்கியது. அவர் பாவம், தமது சொந்த குற்றம் ஒன்றுமில்லாமலே, பிள்ளைகளின் கருணைக்குப் பாத்திரமாக வேண்டி நேரிட்டு விட்டது!

"நீ ஒரு மனிதனுடன், அவனுடைய மனைவியாகயிருந்து இருபத்தைந்து வருடங்கள் வாழ்ந்து விடுவாயாகில், பிறகு உனக்கு வாழ்க்கையில் அறிந்து கொள்வதற்கு மிகுதி ஒன்றுமே இராது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பிறகு அவள் ஒரு பெருமூச்செறிந்தாள். திடீரென்று அவளுக்கு இந்தப் பெண் எழுந்து போய் விட்டால் தேவலையே என்று தோன்றியது. ஆனாலும் முன்னைவிட இப்போது அவள் மீது அவளுக்குச் சிறிது பிரியம் உண்டாயிற்று. இம்மாதிரி இங்கு தனியாக வந்து, இந்தத் துடுக்கான, முட்டாள்தனமான வார்த்தைகளைச் சொல்வதற்கும் துணிவு வேண்டுமே!

அவள் ருலானின் பக்கமாகச் சாய்ந்து கொண்டு, "குழந்தாய்! எப்படியும் தெய்வம் பெண்களுக்குக் கருணையே புரிந்திருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். ஒரு பெண்

வாழ்நாள் முழுவதும் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டேயிருக்க முடியாது. ஆதலால் ஒரு பெண் நாற்பது வயதை யடைந்ததும் தெய்வம் அவளுக்குச் சொல்வதாவது: 'பரிதபிக்கத் தக்க ஆத்மாவையும் உடலையும் உடைய பெண்ணே, மிகுதியிருக்கும் வாழ்நாட்களை நீ உனக்காக எடுத்துக் கொள். இதுவரை நீ உன்னைப் பகிர்ந்து பகிர்ந்து மற்றவர்களுக்குக் கொடுத்து வந்தாய். இப்போது மிகுதியிருப்பதை எடுத்துக் கொண்டு அதை மீண்டும் பூரணமாக்கிக் கொள். அதன் மூலம் வாழ்க்கையில் உனக்கென்று ஏதாவது சுகம் ஏற்படட்டும். இத்தனைக் காலம் மற்றவர்களுக்குக் கொடுப்பதனால் மட்டும் சுகமடைந்தாய். இப்போது உனக்கென்று எடுத்துக்கொள்வதால் கொஞ்சம் சுகம் அடைவாய்' என்பதுதான். எனவே, இனி மிகுந்திருக்கும் எனது வாழ்நாட்களை என்னுடைய மனதையும் ஆத்மாவையும் பக்குவப்படுத்துவதிலேயே செலவழிப்பேன். எனது உடலைப்பற்றியும் அக்கறை எடுத்துக் கொள்வேன். ஆனால் அது ஒரு புருஷனை மகிழ்விக்கட்டும் என்பதற்காக அல்ல. அதில் நான் வாசம் செய்கிறேன். அதை நான் சார்ந்திருக்கிறேன் என்பதற்காகவே" என்று கூறி முடித்தாள்.

"எங்கள் எல்லோரையும் நீங்கள் வெறுக்கிறீர்களா?" என்று கேட்டாள் அப்பெண். அவளுடைய கண்கள் அகன்று விரிந்தன. இப்போதுதான் முதல் தடவையாக ஸ்ரீமதி ஊ, அக்கண்கள் மிகவும் அழகாயிருக்கின்றன என்பதைக் கவனித்தாள்.

"நான் உங்கள் எல்லோரையும் இப்போது முன்னிலும் அதிகமாக நேசிக்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எங்கள் அப்பாவைக் கூடவா?" என்று வினவினாள் அப்பெண்.

"ஆம், அவரையும்தான். இல்லாவிடில் எதற்காக அவருடைய சுகத்தை நான் இவ்வளவு ஆவலுடன் விரும்பப் போகிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

ஒரு கணம் பேசாதிருந்து விட்டுப் பிறகு ருலான், "என்னால் உங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் எந்தப் பொருளுடன் சொல்கிறீர்கள் என்பதே எனக்குப் புரியவில்லை என்று நினைக்கிறேன்" என்றாள்.

"நீ மிகவும் சிறிய பெண். நான் செய்ய விரும்புவதைப் புரிந்து கொள்ள நீ கொஞ்ச நாட்கள் பொறுத்திருக்க வேண்டும், குழந்தாய்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"நீங்கள் செய்ய விரும்புவது இதுதான் என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என்றுள் ருலான் சந்தேகத்துடன்.

"ஆம், நிச்சயமாக நான் அறிவேன்" என்றுள் ஸ்ரீமதி ஊ அன்புடன்.

ருலான் எழுந்து விட்டாள். "நான் போய் அவர்களுக் கெல்லாம் சொல்லுகிறேன். ஆனால் அவர்களில் ஒருவருக் காவது இதைப் புரிந்து கொள்ள முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றுள்.

ஸ்ரீமதி ஊ புன்னகை செய்து, "அவர்கள் எல்லோரை யும் என்னிடம் சற்றுப் பொறுமையாக இருக்கும்படி சொல்லு" என்றுள்.

"நல்லது, நீங்கள் அதைப்பற்றி உறுதியாக இருக்கும் பட்சத்தில்..." என்று இன்னும் தயங்கியவாறே கூறினுள் ருலான்.

"அது நிச்சயம்தான். சந்தேகத்திற்கே இடமில்லை" என்றுள் ஸ்ரீமதி ஊ.

ருலான் சென்று விட்டதும் மீண்டும் தனிமையையும் மௌனத்தையும் அடைய அவளுக்கு இன்பம் உண்டாயிற்று. தானில்லாமல் தன் குடும்பத்தார் ஒன்று சேர்ந்திருப்பதையும் அவர்கள் இன்னது செய்வது என்பதை அறியாதவர் களாய் திகிலும் குழப்பமும் அடைந்திருப்பதையும் எண்ணித் தனக்குள் நகைத்துக் கொண்டாள் அவள். அவர்களுக்குத் தெரிந்தவரை, அவள் தனக்காகவென்று தனியாகச் செய்து கொள்ளும் காரியம் இதுவே முதலாவது. ஆனால் அவள் அவ்வாறு சிரித்துக் கொண்டபோது, அவள் உள்ளத்தில் பூரணமான அமைதி நிறைந்திருந்தது. வழக்கமாக அவள் படுக்கும் நேரத்திற்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. ஆகையால் அவள் இங்கிற்காகக் காத்திராமல், தானே சென்று ஸ்நானம் செய்து விட்டு, இரவில் அணியும் வெண்பட்டாடைகளை அணிந்து, நீலத் திரைகளுடன் கூடிய படுக்கையில் சென்று படுத்துக் கொண்டாள்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வந்த இங், அங்கு நிலவிய நிசப்தத்தைக் கண்டு பீதியடைந்தவளாய், படுக்கையறைக் குள் ஓடிச் சென்று பார்த்தாள். திரைகள் இழுத்து விடப் படாமலிருந்த அந்தப் படுக்கையில் அவளுடைய எஜமானி, ஆடாமல் அசையாமல் படுத்திருப்பதைக் கண்டாள்.

நெஞ்சம் துடிக்க, அருகில் ஓடிப்போய் அசைவற்று படுத் திருந்த அவ்வுருவத்தை உற்றுப் பார்த்தாள்.

"ஐயோ, கடவுளே, எங்கள் எஜமானியின் உயிர்போய் விட்டதே" என்று புலம்பினுள்.

ஸ்ரீமதி ஊ செத்துப் போகவில்லை. அவள் உறங்கிக் கொண்டுதானிருந்தாள். ஆனால் இங் அவள் இம்மாதிரி தூங்குவதைக் கண்டதேயில்லை. அவளுடைய புலம்பல் கூட ஸ்ரீமதி ஊவைத் தூக்கத்தினின்றும் எழுப்பவில்லை. "விடியற்காலையில், ஒரு பறவை சிறகையடித்தால்கூட விழித்துக் கொள்வார்களே—" என்று வியந்து போனுள் இங். ஸ்ரீமதி ஊவின் பரிசுத்தமான அழகிய முகத்தைப் பார்த்த வாறே நின்றுள் இங். பிறகு பின்னல் நகர்ந்து கொண்டு கட்டிலின் திரைகளை இழுத்து விட்டாள்.

"பாவம், என்ன சோர்வு! இந்தப் பிரம்மாண்டமான வீட்டிலுள்ள அனைவரும் எஜமானியை, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளைப்போல் உறிஞ்சு அல்லவா எடுத்து விடுகிறார்கள்!" என்று முணுமுணுத்துக் கொண்டாள் இங்.

பின், வெளி வாசலுக்குச் சென்று இருபுறமும் பார்த் தாள் பயத்துடன். ஆனால் ஒருவரும் வரவில்லை. நிச்சயம் ஸ்ரீமான் ஊ வரவில்லை.

* * *

லியாங்மோவினுடைய பகுதியில், நீர்கடிகாரம் பாதி இரவு கழிந்து விட்டது என்பதைக் கூட காட்டி விட்டது. ஆயினும் பெரிய பிள்ளைகள் இருவரும் அவர்களுடைய மனைவிமார்களுமாகச் சேர்ந்து நிறுத்தாமல் பேசிக் கொண்டேயிருந்தனர். அவ்விரண்டு இளம் கணவன்மார் களும் அதிகமாகப் பேசவில்லை. அவர்கள் தங்கள் தகப் பனருக்காக வருத்தமும் வெட்கமும் அடைந்தனர். அவரும் அவர்கள் இப்போது இருப்பது போல் ஒரு காலத்தில் இளைஞராகத் தானிருந்திருப்பார். அவருடைய வயதை யடையும் போது, அவர்களுக்கும் அவர்களுடைய மனைவி களுக்குமிடையே இப்படித்தான் நடக்குமோ! அவர்களுக்குத் தங்களிடமே அவநம்பிக்கை உண்டாயிற்று. ஆயினும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அந்த இரண்டு இளம் பெண்களில், மெங்தான் அதிக மௌனமாக யிருந்தாள். அவளுடைய வாழ்க்கையில் சந்தோஷமும் திருப்தியும் நிறைந்திருந்ததால், அவளுக்கு

ஒருவருடனும் சண்டை பிடிக்க வேண்டுமென்றே தோன்ற வில்லை. ஆண்களிலே, லியாங்மோதான் அழகிலும் குணத் திலும் சிறந்தவன். அவனுக்கு இணை வேறு யாருமே இல்லையென்று எண்ணியிருந்தாள் மெங். அவனையடையத் தான் எவ்வளவு கொடுந்து வைத்திருக்க வேண்டுமென்று எண்ணியெண்ணி பூரித்தாள் அவள். அவளுக்குப் பிடிக்காத தென்று அவனிடம் ஒன்றுமேயில்லை. அவனுடைய பலம் பொருந்திய உடல், இனிய சுபாவம், அவன் எக்காரியத்தையும் செய்யும் அழகு, அவனுடைய எல்லையற்ற பொறுமை, அன்பு, மகிழ்ச்சி ததும்பும் சிரிப்பு, அவனுடைய உதடுகள் அசைந்த விதம், அவனது அழகிய கன்னங்கள், மிருதுவான கரிய தலைமயிர், பலம்பொருந்திய மிருதுவான கைகள், ஈரமற்றுக் குளிர்ந்திருந்த உள்ளங் கைகள்—இவை யாவற்றின் மென் மையையும் அவள் நன்கு உணர்ந்து அவைகளைப் பேரானந்தத் துடன் அனுபவித்து வந்தாள். அவனிடம் அவள் ஒரு குற்றத்தையும் காணவில்லை. அவனில் தன்னையே மறந் திருந்தாள். அம்மாதிரி தன்னையிழந்து விடுவதிலேயே ஆனந்தமும் கொண்டிருந்தாள்.

அவனின்றி அவளுடையது என்று அவளுக்கு ஒன்றுமே யிருக்கவில்லை. அவளுடையவளாகவே யிருப்பது, இரவில் அவனுடைய அணைப்பில் படுத்திருப்பது, பகலில் அவனுக் குகந்த பணிவிடைகள் செய்வது, அவனுடைய துணிகளை மடித்து வைப்பது, தானே அவனுக்காக உணவு கொண்டு வருவது, தேநீர் ஊற்றிக் கொடுப்பது, புகைக் குழாயைத் தயார் செய்து கொடுப்பது, அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்பது, அவனுக்கு லேசாகத் தலைவலி வந்தாலும் அதற்கான சிசுருஷைகளைச் செய்வது, ஆகாரம் நன்றாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்ப் பது, ஒயின் சரியான சூட்டில் இருக்கிறதா என்று பார்ப்பது— இவைகளே அவளுடைய மனதிற்குகந்த வேலைகள். இவற்றை யெல்லாம் விட அவனுடைய குழந்தைகளைப் பெறுவதே அவளுக்கு மிகவும் இன்பகரமாக யிருந்தது. அவனுக்காக நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே அவளுடைய அபிலாஷை. அவனுடைய அழியாத் தன்மை நிலைநாட்டுவதற்கான சாதனம் அல்லவோ அவள்!

இப்போதும், லியாங்மோ அவள் கூட இருக்கும்போது, அவள் அவனைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். அந்த இன்பமயமான எண்ணங்களின் மூலமாகவே மற்றவர் களுடைய வார்த்தைகளையும் எடுத்துக் கொண்டான். அதாவது அவனுடைய தகப்பனார் வேறு ஒரு பெண்ணை

வைத்துக் கொள்ளப் போகிறார் என்பதானது, அவளுடைய கண்களில் லியாங்மோவின் மதிப்பை மேலும் உயர்த்திற்று. லியாங்மோவைப் போல் யாருமே கிடையாது. அவன் தன் தந்தையைக் காட்டிலும் சிறந்தவன், புத்திசாலி, அதிக நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்று எண்ணினாள். லியாங்மோ அவளுடனேயே மிகத் திருப்தியோடிருக்கிறான்.

ருலான் பேசிக் கொண்டிருந்தபோது, மெங் லியாங்மோ வைப் பற்றி எண்ணமிட்டவாறே, அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ருலான் விடாமல், "மெங், நீ தான் மூத்த மருமகள். நீ என்ன நினைக்கிறாய்?" என்று வற்புறுத்திக் கேட்கவும், மெங் தான் நினைப்பது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக லியாங்மோவின் பக்கம் திரும் பினாள்.

இதை நன்கு அறிந்திருந்த ருலான், மெங் சுய அறிவில்லாமல் இருப்பதற்காக அவளிடம் வெறுப்பு கொண் டாள். அவளும் தான் தன்னுடைய இளம் கணவனிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தாள். அவர்கள் தனியே இருக்கும் போது, அவள் த்ஸேமோவிடம் அநேக முறை, அவன் லியாங்மோவைப் போல் முட்டாளாக இல்லாமலிருப்பதால் தான் அவனைப் பின்னும் அதிகமாகக் காதலிப்பதாகக் கூறி இருக்கிறாள். அவள், மனதிற்குள் த்ஸேமோ மூத்த பிள்ளையாக இல்லையே என்று மிகவும் வருந்தினாள். லியாங்மோவை விட அவன் சக்தியிலும், புத்தி சாதுரியத் திலும் சுறுசுறுப்பிலும் சிறந்தவனாகவும் பேச்சில் வல்லவனை வும் இருந்தான். லியாங்மோ அவனுடைய தகப்பனாரைக் கொண்டிருந்தான். த்ஸேமோவோ தனது தாயாரைக் கொண்டிருந்தான்.

ருலான் அவனுடன் சண்டையிட்டபோதிலும் அவனை மிகவும் காதலித்தாள். ஆனால் அவனுடன் அதிகமாகச் சண்டை பிடித்தாள். சண்டை பிடித்த பிறகு அதற்காகத் தன்னையே நொந்து கொள்வாள். ஒவ்வொரு சண்டையின் முடிவிலும் அவள் மிகுந்த எரிச்சலோடு தன்னையே நொந்து கொள்வாள். ஆனால் அவளுடைய இந்த பச்சாதாபத்திற்கு, அவளையுமறியாது அவள் உள்ளத்தில் ஒளிந்திருந்த பயம் தான் காரணம். ஏனெனில் த்ஸேமோவை விட அவள் பெரிய வளாக யிருந்தாள். அதையும் தவிர அவன் அவளைக் காதலிக் கும் முன்பே அவள் அவன் மீது காதல் கொண்டு விட்டாள். இதுவே அவளுடைய மனதில் ரகசியமாக ஒளிந்திருந்த அவமானம். அவர்கள் பள்ளியில் சந்தித்தபோது அவள்

அவனை எப்படியாவது அடைய வேண்டுமென்று ஆவலுற் றாள். அவனைத் தேடிச் செல்வதற்காக ஏதாவது காரணத் தைக் கற்பித்துக் கொடுத்தது அவள் மனம். அடிக்கடி அவளுக்குப் புத்தகங்களில் சில இடம் தெரியாமல் போய் விடும் அல்லது பிரசங்கத்தின் குறிப்புக்கள் காணுமற் போய் விடும். இப்படியாக ஏதாவது ஒரு காரணம் அவனைச் சந்திக்க வேண்டிய அவசியத்தை உண்டு பண்ணும். அவள்தான் அவர்களுடைய சிநேகிதத்தை முதலில் ஆரம்பித்தாள். அவளுடைய கைதான் முதலில் அவனுடையதை ஸ்பரிசித்தது. இந்த அவமானம் அவளுடைய மனதில் ரகசியமாகப் புதைந்து கிடந்தது.

ஆனால் அவள் தைரியத்தோடு இவற்றையெல்லாம் நிராகரித்துவிட்டு, தான் பழைய காலத்துப் பெண்ணைகை யில்லாமல் நவீன பெண்மணியாக யிருப்பதால் ஆண்களைக் கண்டு பயப்படுவதில்லையென்றும், ஆண் பெண்கள் இருவரும் சமம் என்பதே தன்னுடைய கொள்கை என்றும் அவனுக்கும் தனக்கும் காரணம் கூறிக்கொண்டாள். ஆனால், த்ஸேமோ உலகமறியா இளைஞனுகவும், பெண்களை முன்பின் பார்த்தறிந் திராதவனுகவும் இருந்ததால், தன்னுடைய தீவிரமான காதலின் சக்தியை எதிர்க்கவொண்ணுது அதற்குப் பணிந்து விட்டானேயல்லாமல், முழு மனதோடு அவன் தன்னைக் காதலிக்கவேயில்லை என்பதை அவள் அறிந்திருந்தாள். "நீங்கள் உங்கள் கட்டுப் பெட்டியான தாயாரிடம் பயம் கொண்டிருக்கிறீர்கள்" என்று கத்தினுள் அவள் அவனிடம்.

அதற்கு அவன் சிந்தனையுடன், "ஆம், அவள் செய்வது எப்போதும் சரியாகவே யிருப்பதால்தான் நான் அவளிடம் பயப்படுகிறேன்" என்று பதிலளித்தான்.

"ஒருவராலும் தவறு செய்யாமலே இருக்க முடியாது" என்றுள் ருலான்.

த்ஸேமோ அதற்கு சிரித்துவிட்டு, "நீ என்னுடைய தாயை அறியமாட்டாய். எப்போதாவது அவள் தவறு செய்ய வேண்டுமென்று நான் விரும்பினுல்கூட, அவள் தவறு செய்யமாட்டாள் என்பது எனக்குத் தெரியும். இந்த உலகத் திலேயே புத்தியில் மிகச் சிறந்த பெண்மணி ஒருத்தி உண்டென்றுல் அது அவள்தான்" என்று கூறினுன்.

இவ்வார்த்தைகளை அவன் மனதில் ஒன்றுமில்லாமல் கூறிய போதிலும், அவை ருலானின் இருதயத்தில் ஒரு வாள் சென்று பதிந்ததுபோல் பதிந்தன. ஊ குடும்பத்திற்கு வரும்

போதே, த்ஸேமோவினுடைய தாயாரிடம் வெறுப்பையும் பொருமையையும் காட்டுவதற்குத் தயாராக வந்தாள். ஆனுல் அவ்வாறு செய்ய முடியாமல் போகவே அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ஸ்ரீமதி ஊ, எல்லோரிடமும் பேத மில்லாமல் ஒரே மாதிரியாகக் காட்டிய அன்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவள் ருலானின் பகைமையை அறிந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. அவள் மற்றவர்களுடைய அன்பையும் வெறுப்பையும் சிறிதும் பொருட்படுத்துவதில்லை என்பதை விரைவிலேயே அறிந்துகொண்டாள் ருலான்.

அவளால் ஸ்ரீமதி ஊவிடம் பொருமையும் கொள்ள முடியவில்லை. அவர்களுடைய சண்டையில் ஒருமுறை அவள் த்ஸேமோவிடமே இதைத் திருப்பிவிட்டாள். "நீங்கள் உங்கள் அம்மாவிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறீர்களே. ஆனுல் அவர் ஒன்றும் அப்படி உங்கள்மீது ஆசை வைத்திருப்ப தாகத் தெரியவில்லையே" என்றுள்.

த்ஸேமோ தனது வழக்கமான அமைதியுடன், "என் னிடம் அவ்வளவு அதிகமாக யாரும் அன்பு வைக்கவேண்டும் என்று நான் விரும்பவில்லை" என்றுன்.

அவளுடைய துடிதுடிக்கும் நெஞ்சில் மீண்டும் ஒரு அம்பு வந்து பாய்ந்தது. அவன் அதை எடுக்க முயற்சிக்கவில்லை. ஆனுல் அவளும் மிகச் சுலபமாகப் புண்பட்டுப் போனுள். கர்வம் நிறைந்த அவளுடைய உள்ளம் புண்பட்டுப் போவ தற்கு எப்போதும் தயாராக இருந்தது.

"அப்படியானுல் நான் உங்களை அளவுக்கு மிஞ்சி காதலிக் கிறேன் என்கிறீர்களா?" என்று வெடித்துக்கொண்டு வரும் ஆத்திரத்துடன் கேட்டாள் அவள்.

இதற்கு அவன் மறுமொழி கூறவில்லை. அகன்ற தோள் களையும் குறுகிய இடையையும் உடைய அவன் கட்டழகு வாய்ந்தவனுகயிருந்தான். என்மோவைத் தவிர மற்ற பிள்ளைகள் எல்லாருமே நன்றுக இருந்தனர். என்மோ இன்னும் மிகவும் தடித்திருந்தான். ஆனுல் அவர்கள் எல்லாரையும்விட த்ஸேமோவினிடம் ஒரு தனி கம்பீரம் இருந்தது. இதுவே ருலானை வதைத்து எடுத்தது. அது அவனுடைய ஆத்மாவின் குண விசேஷமா, அல்லது அவனது முகத்தின் அழகா, அல்லது அவனது பொன் வர்ண மேனியின் மென்மையா, எதுவென்பதை அவளால் அறிய முடியவில்லை. இவ்வுண்மையை அவளிடமிருந்து அவன் மறைத்தானை

அல்லது அவள்தான் அவன் மறைத்ததாக எண்ணிக் கொண்டாளோ, எப்படியோ அவளுக்கு அது தெரியாது.

அவனே அடிக்கடி, "நீங்கள் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டு வற்புறுத்துவாள்.

சில சமயம் அவன் அவளுக்குச் சொல்வான். மற்ற சமயங்களில் கடுகடுப்புடன், "என்னைச் சற்றுத் தனியாகத் தான் விடேன்" என்பான்.

"என்மீது உங்களுக்கு அன்பே கிடையாது" என்று அடிக்கடி கூறி கோபிப்பாள் அவள்.

"எனக்கு அன்பு இல்லையா?" என்பான் பதிலுக்கு. அவள் தன்னுடைய துடுக்கான நாக்கைச் சரித்துக் கொள்வாள். அவள் விரும்பியபடியே மிகுந்த அன்போடு அவன் அவளிடம் நடந்துகொண்ட சமயங்களும் உண்டு. ஆனால் அது எப்போது வரும் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? அவன் குதூகலமாக யிருப்பதைக் கண்டு இவள் தனக்குத்தானே மருகிப் போவாள். தனது காதலுக்கே அடிமையாகிவிட்ட அவள், அதிலிருந்து விடுதலை பெறும் வழியை அறியாமல் ஏங்கினாள். எனெனில் அது அவளை தன் வசமிழந்து அவனையே சார்ந்திருக்கும்படிச் செய்தது. ஆனால் அவள் தானே மாட்டிக்கொண்ட விலங்கை இப்போது எப்படி நீக்க முடியும்? அவளுடைய மனம் கொந்தளித்துக் கொண்டேயிருந்தது. வாழ்க்கையைப் பற்றி அவள் முன்பு கண்ட கனவெல்லாம் இப்போது மண்ணோடு மண்ணாகி விட்டது. இந்த வீட்டில் அவள் சிறைப்பட்டுக் கிடந்தாள். ஆனால் அதற்கு அவனைத் தவிர வேறு யார் ஜவாப்தாரி!

அவள் தன்னுடைய மனக் கொந்தளிப்பைக் கூடியவரை வெளிக்காட்டாது இருந்தாள். இருந்தும் அவளால் அதை முழுவதும் மறைக்க முடியவில்லை. அவள் முன் கோபியாகவும் துடுக்கான வாயும் உடையவளாக யிருந்ததால் வேலைக்காரர்களை அதிகமாகக் கஷ்டித்துத் திட்டினாள். இவ்வீட்டில் அவர்களுக்கு இம்மாதிரி அவமதிப்படைந்து வழக்கமில்லாததால், அவர்கள் மற்றவர்களிடம் செய்வதுபோல் இவளிடம் நன்முகச் செய்யவில்லை. சமையலறைகளில் இவளைப்பற்றி எல்லோரும் பேசிச் சிரித்தனர். அவ்வாறு சிரித்ததைப் பற்றி, ஒரு வேலைக்காரியாவது தவறாமல் அவளிடம் வந்து சொல்வாள். அவளுக்கு மிகுந்த எரிச்சல் உண்டாகும். இங்கு எல்லாரும் அசௌகரியமாகவும் அநாகரிகமாகவும் இருப்பதாகத் தோன்றும்.

"ஷாங்காயில் எங்கள் வீட்டில் தண்ணீர் குழாயில் தானாகவே வரும். விளக்குகள் மின்சாரத்தினால் தானாகவே எரியும்" என்று கூறி, இங்கு பக்கட்டுகளில் ஜலம் எடுத்து வருவதையும், மெழுகுவர்த்தி, எண்ணெய் விளக்குகள் ஏற்றுவதையும் குறை கூறுவாள். ஆனால் இங்கு அவளை யார் லட்சியம் செய்பவர்கள்! அவ்வீட்டில் இருந்த அறுபது நபர்களில் இவள் ஒரே ஒருத்தி. இன்னும் இவளுக்குக் குழந்தை கூடப் பிறக்கவில்லை.

ஆதலால், இன்றிரவு, தனது தந்தையைப் பற்றி அதிக நேரம் விடாது அவள் குறைகூறிக் கொண்டிருப்பதைக் கேட்க த்ஸேமோவுக்கு மிகுந்த அலுப்புண்டாயிற்று. அவன் கொட்டாவிவிட்டு, சோம்பல் முறித்துக்கொண்டு, பிறகு பலமாகச் சிரிக்க ஆரம்பித்தான். "பாவம்! எங்கள் தந்தை! ருலான், பார்க்கப் போனால், நீ சொல்வதைக் கேட்டு நாங்கள் எங்கள் தந்தையைப் பார்த்துத்தான் பரிதாபப்படவேண்டும். நாம் அந்தப் பெண்ணை போகும் வழியில் வரும் வழியில் பார்ப்பதோடு சரி. ஆனால் அவர் அவளை இரவு பகல் கட்டியழுதாக வேண்டுமே. சரி, வா பெண்ணே, இப்போது நடு நிசியாகிவிட்டது. நீயும் சென்று படுத்துக்கொண்டு சிறிது இளைப்பாறு. எனக்கும் கொஞ்சம் ஓய்வைக் கொடு" என்றான்.

பிறகு எழுந்து உடம்பை ஒருதரம் உதறிவிட்டுக் கொண்டு, கைகளால் தலையை ஒருமுறை தேய்த்துக்கொண்டான். அவன், பிறகு ஒரு நாயைப் பார்த்து சீட்டியடிப்பது போல், அவளைப் பார்த்து சீட்டியடித்துவிட்டுச் சென்று விட்டான். அவள் அவனைப் பின் தொடர்ந்து பேசாமல் அவர்களுடைய அறைக்குச் செல்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்!

* * *

3

இரவு முழுவதும் நல்ல நித்திரை செய்த பிறகு, மறுநாள் காலை ஸ்ரீமதி ஊ கண் விழித்தாள். அவளுடைய ஒரு விசேஷ மென்னவென்றால், இரவு தூக்கத்திற்குப் பிறகு, காலையில் கண்விழித்ததும், அவளுக்குத் தான் போக வேண்டிய பாதை இன்னதென்று, கரிய கடலின் மீது நிலவு வெளிச்சம் விழுந்தது போல், அவ்வளவு தெளிவாகத் தெரிந்துவிடும். இப்போதும் அவளுக்குத் தன் பாதை தெளிவாகப் புலப்பட்டது.

'இன்றே அந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்' என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள். இம்மாதிரி இரண்டுங்கெட்டான் நிலையில் குடும்பம் ஒழுங்காக நடைபெற முடியாது. ஆதலால் இன்றே அவள் அத்தரகுக் காரகிழவியை வரவழைத்து, நாட்டுப்புறத்து இளம் பெண்களில் தகுதியானவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரிக்கவேண்டும். அவள் ஏற்கனவே தனக்குத் தெரிந்தவர்கள் எல்லோரையும் நினைவுப்படுத்திப் பார்த்துவிட்டாள். ஆனால் அவள் விரும்பியபடி அவர்களில் ஒருவருமே இருக்கவில்லை. அவர்கள் எல்லோரும், ஒன்று அந்தஸ்தில் மிகவும் உயர்ந்திருந்தார்கள் அல்லது ரொம்பவும் தாழ்ந்திருந்தார்கள். பணக்காரப் பெண்களோ கர்விகளாக இருப்பார்கள். அவர்களால் சங்கடமே உண்டாகும். அயல் நாட்டுப் படிப்பு படித்தவர்களோ, இவளையே வெளியேற்றப் பார்ப்பார்கள். பரம ஏழை வீட்டுப் பெண்ணும் கர்வத்திலும் பொறுமையிலும் இவர்களுக்குக் குறைந்தவளாக இருக்கமாட்டாள். ஆகவே, அதிக பணமுடையவளாகவுமல்லாமல், மிகவும் ஏழையாகவுமல்லாமல் இருக்கும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியைக் கண்டு பிடித்தாக வேண்டும். அப்பெண்ணுக்குப் பயமோ பொறுமையோ உண்டாகாது. அப்பெண் முற்றிலும் புதியவளாகவே இருந்தால் மிகவும் நல்லது. அவளுடைய குடும்பத்தார் அந்நியர்களாவும், ஏன், தூரத்திலிருப்பவர்களாகவும் இருந்தால் இன்னும் நல்லது. ஏனெனில் அப்போது அவள் தன்னுடைய பழைய வாழ்க்கையை அடியோடு மறந்துவிட்டு, இங்கு முற்றிலும் புதிய வாழ்க்கையைத் தொடங்கிக் கொள்வாள்.

இங், தேநீரும் சிலவகைத் தின்பண்டங்களும் எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள். காலை வந்தனங்கள் எல்லாம் தெரிவித்து முடிந்ததும் ஸ்ரீமதி ஊ, "சாப்பிட்டதும் நான் அந்த கிழவி லியூமாவைப் பார்க்கவேண்டும்" என்றாள்.

"சரி, அம்மா" என்றாள் இங் வருத்தத்துடன்.

மௌனமாக அவள் ஸ்ரீமதி ஊ எழுந்து உடை மாற்றிக் கொள்வதற்கு உதவி செய்தாள். பிறகு அவளுடையபட்டைப் போன்ற மிருதுவான நீண்ட தலைமயிரை வாரி முடித்தாள். பிறகு சென்று ஸ்ரீமதி ஊவிற்காக காலையுணவை எடுத்து வந்தாள். ஆனால் அவள் இத்தனை நேரமும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஸ்ரீமதி ஊவும் ஒன்றும் கூறவில்லை. ஒரு பொம்மையைப்போல் தனது மெல்லிய அழகிய உடலை அலங்கரிக்கும்படி இங்கின் கையில் விடுத்துப் பேசாதிருந்தாள்.

அவளால் நன்றாகத் திருப்தியாகச் சாப்பிட முடிந்தது; அவள் மனம் நிறைந்திருந்தது.

அவள் தேநீரை அருந்தி முடிப்பதற்கும் லியூமாவைக் கூட்டிக்கொண்டு இங் வருவதற்கும் சரியாகயிருந்தது. லியூமா தான் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை முன்பே அறிவாள். ஒவ்வொரு பெரிய பணக்கார குடும்பத்திலும் அவளுடைய உளவாட்கள் இருந்தனர். அவளிடம் பணம் வாங்கிக் கொண்டு அவர்கள், அவ்வீட்டில் ஆண் பெண்களிடையே ஏதாவது தகராறு ஏற்பட்டால் உடனே அதை அவளுக்குத் தெரிவிப்பார்கள். வேட்டை நாய் மோப்பத்தால் கொடிய மிருகங்களைக் கண்டுபிடிப்பதுபோல், அவளுடைய அகண்ட சப்பையான மூக்கிற்கும் ஆண்பெண்களின் வாசனைகளை அறிந்து அவர்களைப் பிணைத்து வைக்கும் ஆற்றல் மிகுந்திருந்தது. இப்போதும் அவளுக்கு ஸ்ரீமான் ஊவிற்காகத் தான் ஒரு பெண் தேடுகிறார்கள் என்னும் விஷயம் தெரியும். ஆனால் அது தனக்குத் தெரிந்தாற்போல ஸ்ரீமதி ஊவிடம் காட்டிக் கொள்வதற்கு அவளுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது! ஆதலால் அவள், ஸ்ரீமதி ஊ அவளது மூன்றாவது மகன் பெங்மோவிற்கு ஒரு பெண் பார்ப்பதற்காகவே தன்னை அழைத்திருப்பதாக பாவனை செய்து கொண்டாள்.

மனித உள்ளங்களின் போக்குகளை அறிவதில் திறமை வாய்ந்தவளான ஸ்ரீமதி ஊவிற்கு, லியூமா வேலைக்காரர்களின் வாய் மூலமாக சகலமான விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பாள் என்பது நன்றாகத் தெரியும். ஆனால் லியூமா, தன்னை ஏமாற்றிக் கொண்டிருப்பதாகவே எண்ணிக் கொண்டிருக்கட்டுமென்று பேசாதிருந்து விட்டாள்.

"மிகவும் சீக்கிரம் எழுந்து விட்டீர்களே, அம்மா" என்றாள், மூச்சு வாங்க உள்ளே வந்து நின்ற லியூமா. அவள் பருத்து, குள்ளமாகயிருந்தாள். சிறிய வயதில் அவள் விபசார விடுதிகளில் இருந்தவள். சிறுவயதிலேயே அவள் பருக்க ஆரம்பித்துவிட்டாள். ஆதலால், தான் போவதைவிட, மற்றப் பெண்களை ஆண்களிடம் கொண்டு போய் விடுவதிலேயே அதிக பணம் சம்பாதிக்க முடியும் என்பதைக் கண்டு கொண்ட அவள், தான் அதுவரை சேமித்து வைத்திருந்த பணத்தை வரதக்ஷணையாகக் கொடுத்து, ஒரு சிறிய கடைக்காரனை மணந்து கொண்டு, நல்ல குடும்பங்களிடையே தரகு வேலை செய்யும் தொழிலை எடுத்துக் கொண்டாள்.

"எனக்கு காலைநேரத்திலே எழுந்திருப்பது தான் பிடிக்கும்" என்றாள் ஸ்ரீமதி ஊ. லியூமா தன்னிடத் தாழ்ந்த

வளாதலால் அவள் அவளுக்காக எழுந்திருக்கவில்லை. ஆனால் அவளை ஒரு நாற்காலியில் உட்காரும்படி அன்புடன் கூறினாள். இங், அவளுக்குத் தேநீர் ஊற்றிக் கொடுத்து விட்டு சென்று விட்டாள்.

லியூமா தேநீரை பலமாக சப்பிக் குடித்தாள். ஸ்ரீமதி ஊ இந்த இடத்திற்கு வந்து விட்டதைப் பற்றி அவள் ஒன்றும் கூறவில்லை. அதற்குப் பதில் அவள் தன்னுடைய கரகரத்த குரலில், "நீங்கள் முன்னைவிட இப்போது இன்னும் அழகாயிருக்கிறீர்கள். உங்கள் எஜமானர் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவர்" என்றாள்.

விலைமகளைப் பற்றிய விஷயம் வெளிவரட்டும் என்ற நோக்கத்துடன்தான் இதைக் கூறினாள் அவள், உடனே ஸ்ரீமதி ஊ பெருமூச்செறிந்து, 'ஐயோ இந்த அழகு என்னைத் திற்காயிற்று' என்று கூறுவாள் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் ஸ்ரீமதி ஊ இதற்காக அவளுக்கு வந்தனமளித்தாள்.

லியூமா சதுரமான வெள்ளைத் துணி ஒன்றை எடுத்து அதை வாயில் வைத்துக்கொண்டு இருந்தாள். இவ்வீட்டில் தரையின் மீது உமிழக்கூடாது என்பதை அவள் அறியாதவளல்ல. ஸ்ரீமதி ஊ இவ்விஷயங்களில் அயல் நாட்டினரைப் போல் அவ்வளவு கண்டிப்பாக இருந்தாள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

அவள் மீண்டும் ஆரம்பித்தாள். "உங்களுடைய மூன்றாவது பையனுக்காக ஒரு அழகிய பெண்ணைப் பார்ப்பீர்களென்று எண்ணி சில படங்களை என்னுடன் கொண்டு வந்திருக்கிறேன்" என்றாள்.

பிறகு, ஒரு நீலநிறக் கைக்குட்டையில் முடித்து வைத்திருந்த அப்படங்களைத் தன் மடி மீதிருந்து எடுத்து அவிழ்த்தாள். அதற்குள் அயல்நாட்டு பத்திரிகையின் பழைய பிரதி ஒன்று இருந்தது. அதில் சினிமா நடிகைகளின் படங்கள் இருந்தன. அப்பத்திரிகையைப் பிரித்து அதிலிருந்து சில போட்டோக்களை எடுத்தாள்.

"என்னிடம் இப்போது மூன்று இளம் பெண்கள் இருக்கின்றனர். மூன்றும் ரொம்ப நல்ல இடங்கள்" என்றாள் அவள்.

"மூன்றே மூன்றுதானா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ குறுநகையுடன்.

இந்தக் கிழவி லியூமாவைப் பார்க்கும் பொழுதெல்லாம், அவள் மனத்திற்குள் சிரித்துக்கொள்வாள். ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே உள்ள காமமே அவளுடைய வியாபார சரக்காக இருந்தது. அரிசி, காய்கறி, முட்டை இவைகளைப் பேரம் பேசுவதுபோல் அவ்வளவு வெளிப்படையாக இதையும் விலை பேசினாள் அவள்.

லியூமா அவசரத்துடன், "மூன்றுதான் என்னிடம் இருப்பதெல்லாம் என்று நான் சொல்லவில்லையே. இந்த ஊரில் மற்ற தரகர்களைக் காட்டிலும் என்னிடம்தான் அதிகம், பேர் வருகின்றார்கள். ஆனால் இம்மூன்றும் என்னிடமுள்ள மிகச் சிறந்த வரன்கள். இந்த இளம் பெண்கள் மூவரும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கலியாணத்தில், மிகச் சிறந்த ஆடைகளும், நாற்காலி, மேஜை முதலிய சாமான்களும் பணமும் அவர்களால் கொடுக்க முடியும்" என்றாள்.

"எங்கே, அந்த வெளிநாட்டு பத்திரிகையை இப்படிக் கொடு, பார்க்கலாம்" என்றாள் ஸ்ரீமதி ஊ. தன்னுடைய ஸ்தானத்தில் நியமிப்பதற்காக வேறு ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டிய இந்தச் சமயம் வந்ததும் அவளுக்குக் கொஞ்சம் பயம் உண்டாயிற்று. ஒருவேளை அவள் தன்னுடைய அறிவுக்கு மேற்பட்ட காரியத்தை ஏற்றுக்கொண்டு விட்டாளோ என்னவோ!

"இந்தப் பெண்களில் யாரும் என்னுடையவர்களல்ல. இவையெல்லாம் அமெரிக்காவில் இருக்கும் பெண்களின் மின்சார நிழல் உருவங்களே" என்றாள் லியூமா.

இதற்கு ஸ்ரீமதி ஊ மெல்ல நகைத்து விட்டு, "அது எனக்குத் தெரியும். ஒரு பெண்ணிடம் அவர்கள் எதை அழகு என்று கருதுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே அதைப் பார்க்க விரும்பினேன்" என்று கூறினாள்.

அவள் லியூமாவிடமிருந்து அப்புத்தகத்தை வாங்கிக் கொண்டாள். லியூமா, அதை மிகவும் பத்திரமாக வைத்திருந்ததால், அது அழுக்கடைந்திருந்த போதிலும் கசங்கியிருக்கவில்லை. அவர்கள் இருவருக்கும் அந்நிய மொழி தெரியாததால், அப்பெயர்கள் அவர்களுக்கு விளங்கவில்லை.

ஸ்ரீமதி ஊ புத்தகத்தைப் பிரித்து, மலர்ந்திருந்த அம்முகங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தாள். "எல்லோரும் ஒரு மாதிரிதானிருக்கிறார்கள். ஏன், அந்நிய தேசத்தினர் எல்லோரும் ஒரே மாதிரி தானிருக்கிறார்கள்" என்றாள்.

லியூமா உரக்கச் சிரித்துவிட்டு, "ஆனால் நிச்சயம்; சிறிய சகோதரி ஹேஷியா, இம்மாதிரி இல்லை. இவர்களை யெல்லாம் என்னால் கல்யாணம் செய்து கொடுத்துவிட முடியும். ஆனால் அவளை மட்டும் முடியவே முடியாது" என்று கூறினாள். அவ்வூரில் உள்ள எல்லோருக்கும் சகோதரி ஹேஷியாவைத் தெரியும். கடைகளிலும் தெருவுகளிலும் வீடுகளிலும் எங்கும் அவளைப் பற்றிய ஹாஸ்ய துணுக்குகள் வழங்கப் பட்டு வந்தன. அவளுடைய, நல்ல மனதை எல்லோரும் ஒத்துக்கொண்ட போதிலும் அவளைப் பற்றிய ஹாஸ்ய பேச்சுக்களை ரஸிக்காமல் விடவில்லை. அவளுடைய கிழ வேலைக்காரன் ஒருவன் தான் அவளுக்காகப் பரிந்து பேசுவான்.

கடைத் தெருவில், கசாப்புக் கடைக்காரன் அவளைக் கேலி செய்வான். சகோதரி ஹேஷியாவின் மத்தியான சாப்பாட்டிற்காக ஒரு சிறிய மீனை நிறுத்துக் கொடுத்தவாறே அவன் அக்கிழவனை, "அவள் சொல்வதெல்லாம் உனக்குப் புரிந்து விட்டதாக எண்ணிக் கொள்ளாதே" என்றான் கேலியாக.

அதற்கு கிழவன், "என்னால் முடியும். அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பது எனக்குத் தெரிந்தால், என்னால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்" என்று சொல்வான்.

ஸ்ரீமதி ஊ லியூமாவைப் பார்த்து, "சகோதரி ஹேஷியா ஒரு கன்னிகா ஸ்திரீ. அதுவும் அயல் தேசத்தவள். கன்னிகா ஸ்திரீகள் பெண்களே அல்ல. அதுசரி, இம்மாதிரி புத்தகம் உனக்கு எங்கு கிடைத்தது?" என்று கேட்டாள்.

லியூமா பெருமையுடன், "நான் விலைக்கு வாங்கினேன். ஐந்தாறு வருஷங்களுக்கு முன் என்னுடைய நண்பன் ஒருவன் ஷாங்காய்க்குப் போனபோது நான் அவனிடம் இம்மாதிரி ஒரு புத்தகம் வேண்டுமென்று சொன்னேன், அவன் வாங்கி வந்தான். அதற்காக ஐந்து டாலர்கள் கொடுத்தேன்" என்றாள்.

"அயல் நாட்டுப் பெண்ணின் படம் உனக்கெதற்கு?" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

"சிலபேர் இம்மாதிரி முகங்களைப் பார்க்க விரும்புகிறார்கள். அது அவர்களுடைய ஆசையைக் கிளப்பி, என்னுடைய தொழிலை விருத்தியாக்குகிறது. மேலும் இக்காலத்து யுவர்கள் நவீன பெண்களை விரும்புகிறார்கள். அவர்கள் இவற்றில்

ஒன்றைக் காட்டி, இம்மாதிரிப் பெண் வேண்டுமென்று கூறுகிறார்கள். நானும் எங்கிருந்தாவது, கூடியவரை அம் மாதிரியே இருக்கும் பெண்ணைத் தேடிக்கொடுக்கிறேன்" என்று விரித்துக் கூறினாள் லியூமா.

ஸ்ரீமதி ஊ விரைவாக அப்புத்தகத்தை மூடி லியூமாவிடம் திருப்பிக் கொடுத்தாள். "அந்த மூன்று போட்டோக்களையும் காட்டு பார்ப்போம்!" என்றாள்.

பின், லியூமாவின் அழுக்கு பிடித்த கைகளைத் தொடா மல் அவைகளை எடுத்துக்கொண்டு, ஒவ்வொன்றாக அதைப் பார்வையிட்டாள்.

"இவர்களும் ஒரே மாதிரியாகத் தானே இருக்கிறார்கள்" என்றாள் ஆட்சேபத்துடன்.

"பின், எல்லோரும் வெவ்வேறு மாதிரியா இருக்கிறார் கள்? பிரகாசமான கண்கள், பளபளப்பான கேசம், சிறிய மூக்கு, சிவந்த உதடுகள் இவை எல்லோருக்கும் தானே இருக் கின்றன. அவர்களுடைய உடையை எடுத்துவிட்டால் ஒரு பெண்ணுக்கும் மற்றொரு பெண்ணுக்கும் என்ன வித்தி யாசமிருக்கிறது" என்று கூறி தன்னுடைய தொள தொளப் பான சில்க் சட்டையின் அடியிலிருந்த வயிறு குலுங்கும்படி பலமாகச் சிரித்தாள். "ஆனால் இதை நாம் புருஷர்களிடம் சொல்லிவிடக் கூடாது, என் செல்வமே!...அப்படிச் சொன் னால் என்னுடைய தொழிலே கெட்டுவிடும். ஒருவன் விரும்பும் இளம் பெண்ணுக்கும் மற்ற பெண்களுக்கும் முத்திற்கும் மரகதத்திற்கும் உள்ள அவ்வளவு வித்தியாசம் இருக்கிற தென்று அவனை நினைக்கும்படி செய்யவேண்டும்" என்று கூறி மீண்டும் வயிறு குலுங்கச் சிரித்தாள்.

ஸ்ரீமதி ஊ லேசாகப் புன்னகை செய்துவிட்டு, அப் போட்டோக்களை மேஜைமீது வைத்தாள். கரிய தலை மயிரோடு கூடிய அவ்வழகிய முகங்கள் அவளையே பார்த்தன. அவள் அவற்றைத் தலைகீழாகத் திருப்பி லவத்தாள்.

"தூரத்தில் வசிக்கும்படியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் யாராவது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"உங்களுக்கு எப்படி வேண்டுமென்பதைத் தெளிவாக என்னிடம் சொல்லுங்கள்" என்றாள் லியூமா. அவள் இப்போது பேச்சின் முக்கியமான கட்டத்திற்கு வந்து விட்டோம் என்பதை உணர்ந்தவளாய்த் தனது திறமை

யெல்லாம் ஒன்றுகூட்டி இவ்விஷயத்தில் முடிவுகட்டி செலுத்திவிடுவாள்.

"நான் விரும்புகிறபடியே எனக்குக் கிடைக்க வேண்டுமே" என்றாள் இன்னும் தயக்கம் நீங்காத ஸ்ரீமதி ஊ.

லியூமா, ஆவலுடன், "அப்போது கண்டுபிடித்து விடலாம். அவள் இன்னும் மேலுலகத்திற்குச் செல்லாமல் இவ்வுலகத்திலேயே இருப்பவளாயிருந்தால் கண்டுபிடித்தாற் போல்தான்" என்றாள்.

"ஓர் இளம் பெண் தேவை" என்று ஸ்ரீமதி ஊ இன்னும் தயக்கத்துடனேயே கூறினாள். அந்தப் பெண்ணைப் பற்றி குடும்பத்தினரின் முன்னிலையில் பேசியபோது, அவளுக்குச் சற்றும் தடுமாற்றம் உண்டாகவில்லை. ஆனால் ஆண் பெண்களையே தன் வியாபாரமாகக் கொண்டிருந்த கடும் சித்தம் படைத்த இக்கிழவியினிடம் தான் எதையும் ஒளிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டாள்.

லியூமா, தன்னுடைய சிறிய கூரிய விழிகளால் ஸ்ரீமதி ஊவின் முகத்தை நிலையாகப் பார்த்தவாறு பதிலுக்குக் காத்திருந்தாள். ஸ்ரீமதி ஊ, தனது தலையைத் திருப்பிக்கொண்டு, வெளிவாசற்புறமாகப் பார்க்கலானாள். அன்றைய காலைநேரம் மிகவும் அழகாயிருந்தது. அங்கு புதிதாக சுடுவிச் சுத்தம் செய்யப்பட்டிருந்த பாறைகளின்மீது கூரிய கிரணங்கள் விழுந்து, அவற்றில் சிவப்பு, ஊதா, மஞ்சள் முதலிய வர்ண ஜாலங்களை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

ஸ்ரீமதி ஊ, பலமற்ற குரலில், "பார்ப்பதற்கு நன்றாக இருக்க வேண்டும். ரொம்ப அழகு வேண்டியதில்லை. ஓர் இளம் பெண்ணென்றால், ரொம்ப சிறியவளுமல்ல; இருபத்திரண்டு வயதுடையவளாக இருக்கலாம். வட்டமான கன்னங்களுடன் இளமை வாய்ந்தவளாகவும் குழந்தை சுபாவமுள்ளவளாகவும் இருக்கவேண்டும். ஒருவரையே ஆழ்ந்து நேசிக்கும் தன்மையில்லாமல், யாரையும் எளிதில் நேசிக்கக்கூடியவளாகவும் இருக்கவேண்டும். அதாவது ஒருவனையே தீவிரமாக நேசிப்பவளாக இருக்கக்கூடாது. நல்ல குணமும் குழந்தைகளின் மேல் அதிகப் பிரியமும், ஏதாவது புதிய உடைகள், தின்பண்டங்களைக் கண்டால், உடனே தன்னுடைய கஷ்டத்தை மறந்துவிடும் சுபாவமுடையவளாகவும் இருக்க வேண்டும். அவளுடைய வீடு தூரத்தில் இருக்கவேண்டும். ஏனெனில் அப்போது தான் அவள் தன் வீட்டிற்கு அடிக்கடி போக வேண்டுமென்று தொந்தரவு செய்யாதிருப்பாள்"— என்றாள்.

"நீங்கள் சொல்வது போலவே என்னிடம் ஒரு பெண் இருக்கிறாள்" என்றாள் லியூமா வெற்றியுடன், ஆனால் அடுத்த கணமே அவளுடைய வட்டமான முகம் வாடியது. "இல்லை, அது பிரயோஜனமில்லை. அந்தப் பெண் ஒரு அநாதை. உங்களுடைய பிள்ளைகளில் ஒருவன் ஊர் பேர் தெரியாத ஒரு அநாதையை மணந்து கொள்வதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். இல்லை இல்லை, அது கீழ்த்தரமான ரத்தத்தைக் கொண்டு வந்து குடும்பத்தில் கலப்பதாகும்" என்று கூறினாள்.

வெளி வாசலையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீமதி ஊ தன் பார்வையைத் திருப்பி, லியூமாவின் முகத்தைப் பார்த்தாள். பிறகு அமைதியுடன், "இந்தப் பெண்ணை நான் பெங்மோவிற்காகப் பார்க்கவில்லை. அவனுக்கு வேறு இடங்கள் இருக்கின்றன. இல்லை, இந்தப் பெண் என்னுடைய எஜமானருக்கு ஒரு சிறிய மனைவியாக இருக்கப் போகிறாள்" என்று கூறினாள்.

லியூமா, மிகவும் ஆச்சரியமும் பயமும் அடைந்து விட்டதாகப் பாசாங்கு செய்தாள். தனது தடித்த உதடுகளைக் கடித்துக்கொண்டு, மீண்டும் தன்னுடைய கைக்குட்டை எடுத்து கண்களை மூடிக்கொண்டு, "ஐயோ, பாவமே! அவர் கூடவா"...என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ தனது தலையை அசைத்து "அவரைத் தவறாக எண்ணுதே. இது முற்றிலும் என்னுடைய சொந்த விருப்பமேயல்லாது, அவருக்கு இதில் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. நான்தான் அவரை வற்புறுத்துகிறேன்," என்றாள்.

லியூமா, கண்களை மூடியிருந்த கைக்குட்டையை எடுத்துத் தனது பெருத்த மார்பில் செருகிக் கொண்டு, சுறுசுறுப்போடு, "அப்படியாயின் இந்த அனுதைப் பெண்ணே மிகவும் பொருத்தமானவள். நல்ல வலுவுள்ள பெண். மிகவும் உபயோகமாக இருப்பாள்" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ இடைமறித்து, "எனக்கு ஒரு வேலைக்காரி வேண்டுமென்பதற்காக நான் பார்க்கவில்லை. இந்த வீட்டில் எனக்கு ஏத்தனையோ வேலையாட்கள் இருக்கின்றனர். இங்தான் எனக்கு எப்போதும் பணிவிடை செய்பவள். வேறு யாராவது வந்தால் அவள், அவளுக்கு விஷம் கொடுத்து விடுவாள். இல்லை, அவள் ஒரு வேலைக்காரப் பெண்ணாகயிருக்கும் பட்சத்தில் அவள் தேவையில்லை" என்று கூறினாள்.

லியூமா துணுக்குற்று, "இல்லை, அவள் வேலைக்காரியில்லை. நான் சொல்ல வந்தது அவள் ஆவலோடு தயாராகயிருக்

கிறாள். சாதுவான பெண். ரொம்ப அடக்கம்...'' என்று முடிக்கு முன், ஸ்ரீமதி ஊ, ''ஆனால் அவள் தேக சுகமுள்ளவளாகவும் குதூகலமான சுபாவமுள்ளவளாகவும் இருக்க வேண்டும்'' என்று கூறினாள்.

லியூமா, ''அது உண்டு. உண்மையில் அவள் பார்ப்பதற்கு மிகவும் நன்றாகத்தானிருப்பாள். அவள் ஒரு அழகியாக இராமலிருந்தால், நான் எவ்வளவு நாட்களுக்கு முன்பே அவளுக்கு மணம் செய்து வைத்திருப்பேன். ஆனால், உங்களுக்கே இதெல்லாம் தெரியும்! நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் மகனுக்குத் தாழ்ந்த குலத்திலிருந்து பெண் கொள்ள விரும்புவதில்லை. அவளை மணக்க முன் வருகின்றவர்களோ, அவளுக்கு ரொம்ப தாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவள் நல்ல பலமுள்ளவளாக இருப்பினும், கீழான குலத்தைச் சேர்ந்தவளல்ல. உண்மையில் நான் அவளைக் கொஞ்சகாலம் உல்லாச விடுதியில் விட்டு வைத்து, யாராவது வயதான மனிதன், அவளை இளைய மனைவியாக வைத்துக் கொள்ள விரும்பினால் கொடுத்து விடலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் தெய்வம் அவளுக்குக் கருணை புரிகிறது போலும்! அவளுடைய தக்க வயதில், நீங்கள் அதேபோல் ஒரு பெண் தேடவேண்டி ஏற்பட்டிருக்கிறதே--'' என்றாள்.

''அவளுடைய படம் ஏதாவது இருக்கிறதா'' என்று ஸ்ரீமதி ஊ கேட்டாள்.

''இல்லையே! நானும் அவளைப் போட்டோ எடுக்க எண்ணியதில்லை. அவளும் எடுத்துக் கொள்ள எண்ணியதில்லை. உண்மையென்ன வென்றால்...'' என்றாள் லியூமா. மீண்டும் கைக்குட்டை வெளியே வந்தது. அதை வாயில் வைத்துக் கொண்டு அதனுள் இருமினாள். ''அந்தப் பெண்ணினிடமுள்ள ஒரு குறை என்னவென்றால் அது சுதுவாதறியாத மூடமாகயிருக்கிறது. இருக்கும் குற்றத்தை இப்போதே உங்களிடம் சொல்லி விடுவது நல்லதல்லவா! அவளுக்குப் படிக்கத் தெரியாது. அம்மா, முன்பெல்லாம் படிக்கத் தெரியாததே நல்லதென்று கருதப்பட்டது. ஆனால் இப்போது பையன்களைப் போல் பெண்களும் படிப்பது ஒரு நாகரிகமாகி விட்டது. எப்படியோ இந்த அந்நிய பழக்கங்களெல்லாம் நம் நாட்டிற்குள் வந்து புகுந்து விட்டன'' என்றாள்.

''அவளுக்குப் படிக்கத் தெரியாததைப் பற்றி எனக் கொன்றும் ஆட்சேபனையில்லை'' என்றாள் ஸ்ரீமதி ஊ. லியூமாவின் சுருக்கம் நிறைந்த முகம் மகிழ்ச்சியால் விரிந்தது. அவள் தன் முழங்கால்களின் மீது கைகளைத் தட்டிக் கொண்டு,

''அப்படியென்றால் ரொம்ப சரியாகி விட்டது எஜமானியம்மா. நீங்கள் எப்போது சொன்னாலும் நான் அவளை அழைத்து வரத் தயார். அவள் கிராமத்தில் ஒரு பண்ணையில் அவளுடைய வளர்ப்புத் தாயாரோடு இருக்கிறாள்'' என்றாள்.

''அவளுடைய வளர்ப்புத் தாய் யார்?'' என்று விசாரித்தாள் ஸ்ரீமதி ஊ.

லியூமா ஆவல் தணியாதவளாய், ''அவளைப் பற்றி என்ன? அவள் யாரென்று உங்களிடம் சொல்வதற்குக் கூடலாயக்கில்லை. அவள் ஒரு நாளிரவு நகரத்தின் சுவற்றிற்கு அப்பால் இருந்து ஒரு குழந்தையைக் கண்டெடுத்தாள். யாரோ ஒரு பெண் குழந்தையை அங்கு விட்டுச் சென்றிருக்கின்றனர். அந்தக் கிழவி தன் தம்பியின் பிறந்த நாளாகிய அன்று அவனெடு எங்கோ விருந்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அவன் ஒரு சிறிய கடையின் சொந்தக்காரன்--இல்லை, இல்லை, அவனைப் பற்றி இதெல்லாம் எதற்கு! அவள் ஒரு குழந்தை அழும் சப்தத்தைக் கேட்டு இக் குழந்தையைப் பார்த்தாள். அவள் ரொம்ப ஏழையாதலால் இன்னொரு வயிறைத் தன்னெடு வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கமாட்டாள். ஆனால் அவளுக்கு ஒரு மகன் இருந்தான். இந்தப் பெண்ணைப் பார்த்ததும் இந்தப் பெண் ஒரு நாளைக்கு தன் மகனுக்குப் பெண்டாட்டியாவாள் என்று நினைத்தாள். வேறு பெண் வெளியே தேடவேண்டுமென்றால் அதற்கும் செலவு செய்து தானே ஆகவேண்டும்? அதனால் அவள் அதை எடுத்துச் சென்று தானே வளர்க்கத் தொடங்கினாள். ஆனால் தன் மகன் கல்யாணம் செய்து கொள்ளாமலே, காய்ச்சலில் படுத்து இறந்து விடுவான் என்பதை அவள் எப்படி அறிவாள்! அந்தப் பையன் பிளேக் வந்து இறந்து போனான். இந்தப் பெண் மாத்திரம் கணவனில்லாமல் இப்போது இருக்கிறது'' என்று கூறி முடித்தாள்.

ஸ்ரீமதி ஊ தன்னுடைய பார்வையை லியூமாவின் முகத்திலிருந்து நீக்காமலே, இவை யாவற்றையும் கேட்டு வந்தாள். ''இந்தப் பெண்ணை ஒரேயடியாகக் கைவிட்டு விடுவதற்கு அவள் சம்மதிப்பாளா?'' என்று கேட்டாள்.

''அவள் சம்மதிக்காமலென்ன [illegible] அவளோ பரம ஏழை. அதுவுமல்லாமல் இப்பெண்ணிடம் அவளுக்கு ரத்த பாசம் ஒன்றுமில்லையே'' என்றாள் லியூமா.

ஸ்ரீமதி ஊ மீண்டும் வெளிவாசற்புறம் நோக்கலானாள். சூரியன் சுவரைக் கடந்து வந்து விட்டது. அங்கிருந்து

110731

மூங்கில் மரங்களின் கரிய நிழல் பாறைகளின் மீது குட்டை யாவும் தடித்தவையாகவும் விழுந்தன. "நான் அவளைப் பார்த்தால் பரவாயில்லை" என்று என்று அவள் யோசனை யோடு கூறினாள். பின் சற்று நேரம் தனது மெல்லிய விரலை உதட்டின் மேல் வைத்தவாறு அமர்ந்திருந்தாள். யோசனை யில் ஆழ்ந்திருக்கும்போது, அவள் அவ்வாறு செய்வது வழக்கம். பிறகு தொடர்ந்து, "இல்லை, எதற்கு? நீ எதற்காக என்னை ஏமாற்றப் போகிறாய், இல்லையா? நீ சொல்வது போல் ஒரு பெண்ணின் குணத்தை நிர்ணயித்து விட்டால், மற்றபடி அவளுக்கும் மற்ற பெண்களுக்கும் என்ன வித்தியாசமிருக்கப் போகிறது?" என்று கூறினாள்.

"நீங்கள் எவ்வளவு கொடுப்பீர்கள், அம்மா?" என்று கேட்டாள் லியூமா.

"அவளுக்கு நான் உடைகள் எல்லாம் கொடுத்தாக வேண்டும், அல்லவா?" என்றாள் ஸ்ரீமதி ஊ சிந்தனையுடன்.

"ஆம். ஆனால் அக்கிழவி அவளுடைய சொந்தத் தாயில்லை யாகையால், இதைப் பற்றி அவள் கவலை கொள்ளமாட்டாள். அவள் தன்னுடைய கையில் நிறைய பணம் கிடைக்க வேண்டு மென்பதை மட்டும்தான் பார்ப்பாள்" என்று கூறினாள் லியூமா,

ஸ்ரீமதி ஊ அமைதியுடன், "ஒரு நாட்டுபுறத்துப் பெண் ணுக்கு நூறு டாலர்கள் கொடுத்தால், அது குறைவான தொகை என்று கூறமுடியாது. ஆனாலும் நான் அதிகம் கொடுக்கிறேன். இருநூறு என்று வைத்துக் கொள்" என்றாள்.

"இன்னும் ஐம்பது சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றாள் லியூமா நயந்த குரலில். அவளுடைய கரிய உடலிலிருந்து வியர்வை பொங்கிற்று. "அப்போது இரு நூறையும் முழுசாக அவளிடம் கொடுத்து விடுவேன். அவளும் அப்பெண்ணை இன்றே அனுப்பிவிடச் சம்மதிப்பாள்" என்றாள்.

"சரி, அப்படியே இருக்கட்டுமே" என்று உடனே கூறி விட்டாள் ஸ்ரீமதி ஊ. அவள் தன்னையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த லியூமாவின் சிறிய கண்களில் ஒரு கணம் ஏமாற்றம் நிறைந்த வருத்தம் தோன்றியதைக் கவனித்தாள். உடனே, "நீ இன்னும் அதிகமாகக் கேட்காமற் போனதே என்று வருந்த வேண்டியதில்லை. எனக்குச் சரியான தொகை எவ்வளவென்றும் அதிகமாகச் சேர்த்துக் கொடுப்பது எவ்வள வென்றும் தெரியும்" என்று கூறினாள்.

"உங்களுடைய அறிவாற்றலை நான் அறியமாட்டேனா?" என்றாள் லியூமா. பிறகு படங்களை யெல்லாம் ஒன்றுசேர்த்து அடுக்கினாள். பிறகு சற்று கழித்து, "நீங்கள் இப்போது நிச்சயம் உங்கள் பையனுக்கு ஓர் அழகிய பெண் வேண்டு மென்று பார்க்கவில்லையா? இரண்டு பெண்களுக்கு ஒரே சமயத்தில் நிச்சயமானால், நான் என்னுடைய தொகையைக் குறைத்துக் கொள்வேன்" என்றாள் லியூமா.

ஸ்ரீமதி ஊ, உறுதியாக, "இல்லை, பெங்மோவிற்கு இன்னும் வயதாகவில்லை, அவன் கொஞ்சம் பொறுத்திருக்க லாம்" என்றாள்.

"ஆம், அது உண்மைதான்," என்று ஆமோதித்தாள் லியூமா. இன்றைய தரகு விஷயம் நன்றாக அமைந்து விட்ட தால் மகிழ்ச்சியால் அவளுக்குக் கண்ணில் ஜலமே வந்து விட்டது. ஆதலால் அவள் ஸ்ரீமதி ஊ கூறிய எதையும் ஒத்துக்கொள்ளத் தயாராக இருந்தாள். "ஆம், அம்மா! வய தானவர்களால் தான் பொறுத்திருக்க முடியாது. கிழவர் களைத் தான் முதலில் கவனிக்க வேண்டும். நீங்கள் கூறுவது தவறாக என்றேனும் இருந்ததுண்டா! உங்களுக்கு எல்லோரு டைய மனமும் நன்றாகத் தெரியும்" என்று கூறினாள்.

பிறகு அவள் அப்பட புத்தகத்தைத் தன் கைக்குட்டை யில் வைத்துக் கட்டிக் கொண்டு, போவதற்கு எழுந்தாள். "இப்போதே நான் அந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள்.

"இன்று மாலை இருட்டும் நேரத்திற்கு அவளை அழைத்து வா" என்றாள் ஸ்ரீமதி ஊ.

லியூமா, "நல்லது. நிரம்ப சரியான நேரம். இன்று பகல் முழுவதும் அவளுக்குத் துணி துவைத்து, குளித்து, சுத்தம் செய்து கொள்வதற்கும் தலைவாரிக் கொள்வதற்கும் நேரம் சரியாக இருக்கும்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ, "அவள் தன்னுடன் எதையும் கொண்டுவர வேண்டாம். கையிலோ பெட்டியிலோ எதுவும் இங்கு கொண்டு வரவேண்டாம். என்னிடம் அவள் வெறும் கையோடு மேலே என்ன உடுத்தியிருக்கிறாளோ, அதோடு மட்டும் வரவேண்டும் என்று சொல்லு" என்றாள்.

"அப்படியே செய்கிறேன், அப்படியே செய்கிறேன்" என்று மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டு, பலமுறை வணங்கிய வாறு லியூமா, சிறு வயதில் மிக மோசமாகக் கட்டப்பட்டு

இப்போது தடித்த காம்புகளைப் போன்றிருந்த கால்களினல் விரைந்து வெளியே சென்ருள்.

அவள் சென்றதுமே இங் புதிய தேநீரை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள். அவள் ஒன்றுமே பேசவில்லே. ஸ்ரீமதி ஊவும் ஒன்றும் பேசாமல் மௌனமாக இங் அக்கிழவி உட்கார்ந்திருந்த நாற்காலியைத் துடைப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இங் அவள் குடித்த தேநீர் கிண்ணத்தை, ஏதோ தொடக்கூடாததை எடுப்பதுபோல் இருவிரலால் பிடித்துக் கொண்டாள். அவள் அதை எடுத்துக்கொண்டு வெளியே செல்ல ஆரம்பித்தபொழுது, ஸ்ரீமதி ஊ, "இன்று சாயந்திரம் இருட்டும் வேளேக்கு, ஓர் இளம்பெண் இங்கு வருவாள்" என்று கூறினுள்.

இங், அக்கிண்ணத்தை இருவிரல் நுனியால் பிடித்தவாறே அசையாமல் நின்று கேட்டாள்.

"அவளே நேரே என்னிடம் அழைத்து வா. அவளுக்காக இந்த அறையில் ஒரு சிறிய மூங்கிற் கட்டிலேக்கொண்டு வந்து போடு" என்ருள் ஸ்ரீமதி ஊ.

"சரி, அம்மா" என்று கூறும்போதே இங்கிற்கு துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. அவள் விரைந்து சென்று விட்டாள்.

* * *

பகல்பொழுது இரவை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. ஸ்ரீமதி ஊ தினமும் மத்தியான சாப்பாடு முடிந்ததும் தன்னுடைய படுக்கையறைக்குச் சென்று ஒரு மணி நேரம் இளேப்பாறுவது வழக்கம். ஆனல் இன்ருே அப்படியே, நிழல் படிந்திருந்த படுக்கையறைக்குச் சென்றதும், தன்னல் தூங்கவோ, இளேப்பாறவோ இயலாது என்பதை உணர்ந்தாள். அது, அவ்வறை அவளுக்கு இன்னும் பழக்கமாகவில்லே என்பதால் அல்ல. வாஸ்தவத்தில் அவ்வறைகளிலேயே அவள் நெடுநாளாக இருந்ததுபோல் அவை அவ்வளவு பழகி விட்டன. அவளுக்கே தனக்கு அங்கு உண்டான மனத் திருப்தியைக் கண்டு மிக்க அதிசயம் உண்டாயிற்று. அவளுடைய அமைதியின்மைக்குக் காரணம் அவ்வறைகள் அல்ல. அவளுடைய சொந்த மனமேதான்!

"நான் இன்று தூங்கப் போவதில்லே" என்று இங்கிடம் கூறினுள்.

இங் அவளே வெறித்துப் பார்த்தாள். பிறகு, "நீங்கள் இன்று மத்தியானம் தூங்குவதுதான் நல்லது. இரவில் இவ்

வீட்டில் ஒரு வேற்று மனுஷியோடு நீங்கள் எங்கே நன்ருகத் தூங்கப் போகிறீர்கள்?" என்ருள் கவலேயுடன்.

"எனக்குத் தூங்க வேண்டிய அவசியமேயில்லே போலிருக்கிறதே" என்ருள் ஸ்ரீமதி ஊ. இங்கினுடைய கவலேயைக் கண்டதும், அவளுடைய சஞ்சலம் மறைந்து விட்டது. அவளுக்குக் குறும்புத்தனமாக ஏதாவது செய்ய வேண்டுமென்ற இச்சை உண்டாயிற்று. தன் கைகளினல் இங்கைப் பிடித்து, விளேயாட்டுத்தனமாகத் தள்ளி விட்டாள். "போ, இங், நீ போ! நான் ஒரு புத்தகத்தை எடுத்து ஆனந்தமாக படித்துக் கொண்டிருக்கிறேன்" என்று உத்தரவிட்டாள்.

"தங்கள் இஷ்டம்" என்று கூறிய இங் என்றுமில்லாத வழக்கமாக வெடுக்கென்று திரும்பிச் சென்று விட்டாள். ஆனல் அறைக்கு நடுவே, புன்னகை தவழ்ந்தத் தனது மெல்லிய உதட்டின் மேல் விரலே வைத்துக்கொண்டு நின்றிருந்த ஸ்ரீமதி ஊ, இதைக் கவனிக்கவில்லே. பிறகு அவள் வேகமாகத் தலேயை ஒரு முறை அசைத்து விட்டு, புத்தக அறையை நோக்கிச் சென்ருள். அவளுடைய பாதம் அறையின் கதவிற்கு முன்னலிருந்த அச் சிறு பள்ளத்தில் மாட்டிக் கொண்டது. இதற்கு முன்னல் எத்தனே கணக்கற்ற பாதங்கள் அதில் வீழ்ந்து மாட்டிக் கொண்டிருக்குமோ!

அக் குழியைக் காலால் தடவியவாறு, 'ஆனல் அவர்கள் எல்லோரும் ஆண்கள்!' என்று எண்ணமிட்டாள்.

அவள் தன் வாழ்க்கையிலே, இதுவரை இத்தகைய தைரியத்தையும் சுதந்திர உணர்ச்சியையும் கொண்டதேயில்லே. அவள் என்ன செய்கிருள் என்பதைப் பார்க்க இங்கே ஒரு ஆத்மாகிடையாது! இந்த நேரத்தில் அவள் முற்றிலும் தனக்கே உரியவளாக இருந்தாள். நல்லது, இப்போது படிக்கக் கூடாதென்று ஒதுக்கி வைத்திருந்த புத்தகங்களே அவள் படிக்கலாம். அதற்குரிய நேரம் வந்து விட்டது! அவளுடைய மாமனர் இப் புத்தகங்கள் பீரோவில் எங்கிருக்கின்றன என்பதை அவளிடம் கூருமல் ஒளித்து வைத்ததில்லே. அவர் அவள் நன்கு படித்தவள் என்பதை அறிந்து கொண்டதும் அவளே ஒரு நாள் தன்னுடைய புத்தக அறைக்கு அழைத்துச் சென்று தாமே, ஊதா நிறத் துணியினல் உரையிடப்பட்டிருந்த அக்கட்டு கட்டான புத்தகங்கள் இருந்தத் தட்டைக் காண்பித்து, "குழந்தாய்! இந்தப் புத்தகங்களெல்லாம் நீ படிக்கத் தகாதவை" என்று அவளிடம் தமது சுபாவமான கம்பீரத்துடன் கூறினர்.

"ஏன், நான் பெண்ணையிருக்கிறேன் என்பதினாலா?" என்று அவள் கேட்டாள்.

அவர் தலையை அசைத்து விட்டு, "மேலும் நான் என்னுடைய மகனைக் கூட பதினைந்து வயது முடிந்து, குழந்தைப் பருவத்தைத் தாண்டும் வரை இவற்றைப் படிக்க அனுமதிக்க வில்லை" என்று கூறினார்.

"என்னுடைய கணவர் இவை யெல்லாவற்றையும் படித் திருக்கிறாரா?" என்று அவள் வினவினாள்.

பெரியவர் திகைத்துப் போய் விட்டார். "அவன் படித் திருப்பான் என்று நினைக்கிறேன். நான் கேட்டுப் பார்த்த தில்லை. ஆனால் எல்லா இளைஞர்களுமே இவற்றைப் படிக் கிறார்கள் என்று நினைக்கிறேன். அதனால் தான் நான் அவற்றை இங்கு வைத்திருக்கிறேன். நான் அவனைக் கூப்பிட்டு, 'நீ இப் புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்றால், உனக்குப் பதினைந்து வயதாகும் வரை பொறுத்திரு. பிறகு நீ இங்கேயே என்னுடைய அறையில் வந்து படிக்கலாம். உன்னுடைய பள்ளிப் புத்தகங்களுக்கு இடையே திருட்டுத்தனமாக வைத்துக் கொண்டு படிக்க வேண்டும் என்பதில்லை யென்று கூறினேன்" என்றார்.

அவள் தன்னுடைய தெளிவான கேள்விகளில் இன் னொன்றை விடுத்தாள். "அப்பா! நீங்கள் என் கணவருக்கு பதினைந்து வயதில் வரக் கூடிய அறிவை, என்னால் என்றுமே எட்ட முடியாது என்று எண்ணுகிறீர்களா?" என்று கேட் டாள்.

இக் கேள்வியைக் கேட்டு அவர் மேலும் திகைப்படைந் தார். படித்து பண்டிதராயிருந்த போதிலும் அவர் உண்மை யான உள்ளம் படைத்தவர். அவர் தமது வெளுத்து நரைத் திருந்த உயர்ந்த புருவங்களை நெரித்துக் கொண்டார்.

பின், கடைசியாக, "உன்னுடைய அறிவு ஒரு பெண் ணிற்கு இருக்க வேண்டியதைக் காட்டிலும், மிகச் சிறந்திருக் கிறது என்பதில் சந்தேகமில்லை. மகளே, உனக்கிருக்கும் மூளைக்கு நீ ஒரு ஆண் மகனைப் பிறந்திருந்தால், நீ பெரிய பெரிய பரீக்ஷைகளுக்கு உட்கார்ந்து, அவைகளில் சிறப்புடன் தேறி, நாட்டில் நீ ஒரு பெரிய பதவியை அடைந்திருக்கக் கூடும். ஆனால் நீ ஆணைப் பிறக்காமல் பெண்ணை அல்லவா பிறந்திருக்கிறாய்? ஒரு பெண்ணினுடைய ரத்தம் அறிவைத் தடை செய்கிறது. அறிவில் அவளுடைய இருதயத்தின்

துடிப்பு கலந்து விடுகிறது. பெண்ணினுடைய வாழ்க்கை அறிவைத் தனது எல்லைக்குள் கட்டுப்படுத்தி வைக்கிறது. ஒரு பெண்ணிடம் உடலை மீறிய அறிவு வளர்வது நல்லதல்ல" என்று கூறினார்.

அவள் மட்டும் அவ்வளவு நுண்ணிய அறிவு படைத்த வளாக இல்லாமலிருந்தால் அவளுடைய அடுத்த கேள்வி விரசமாக இருந்திருக்கும். ஆனால் அவளுக்கு பெரியவர் தன் மேல் அன்பு வைத்திருக்கிறார் என்பதும், தனது உள்ளத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதும் நன்றாகத் தெரியும். ஆதலால் அவள் மீண்டும், "அப்பா, அப்படியானால் ஒரு பெண்ணின் அறிவைக் காட்டிலும் அவளுடைய உடலே அதிக முக்கியமானது என்பது இதன் பொருளா?" என்று வினவினாள்.

பெரியவர் இதைக் கேட்டுப் பெருமூச்செறிந்தார். அந் நீண்ட மேஜைக்கருகே இருந்த சிவப்பு மர நாற்காலியில் அவர் அமர்ந்திருந்தார். அவரைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டே அவள் இப்போது சென்று அதில் உட்கார்ந்தாள். வெகு காலத்திற்கு முன் கழிந்து சென்ற அந்நாளை இப்போது நினை வூறுத்திக் கொண்டாள். அவர் வெண்மையாக நரைத்திருந்த தமது சிறிய தாடியைத் தடவிக் கொடுத்தவாறே உட்கார்ந் திருந்தார். அவருடைய கண்களில் துயரத்தின் சாயல் படிந் திருந்தது. "ஆம், வாழ்க்கையானது ஒரு பெண்ணின் அறிவை விட அவளது சரீரமே முக்கியமானது என்பதைத் தான் நிரூபித்திருக்கிறது. அவளால்தான் புதிய உயிர்களைப் பிறப்பிக்க முடியும். அவளில்லாவிடில் மனித வம்சமே பூண் டோடு அழிந்து விடும். அவளுக்கு இவ் வரப்பிரசாதத்தைத் தெய்வம் வழங்கியிருக்கிறது. அதனாலேயே அவளுடைய உடல் மனிதனுக்கு சொல்லற்கரிய அருமை வாய்ந்ததாகயிருக் கிறது. அவளுடைய படைக்கும் தன்மையின்றி மனிதன் பூரணத்வம் அடைய முடியாது. விதை அவனுடையதே என்றாலும், அவளால்தான் அவனைப் போல மற்றொரு ஜீவனை உருவாக்க முடியும்" என்று கூறினார்.

அவள் கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தாள். தனது பதினாறாவது வயதில் அப்போது அவ்வறிவு மிக்க பெரிய வருக்கு முன்னால் நின்று கொண்டிருந்ததை இப்போது தன் மனக்கண் முன் கண்டாள் அவள். பிறகு அவளுடைய அடுத்த கேள்வி பிறந்தது.

"அப்படியானால் ஒரு பெண்ணைப் பிறந்த எனக்கு மூளை இருப்பது எதற்கு?" என்று வினவினாள்.

பெரியவர் அவளை நோக்கியவாறே மெதுவாகத் தலையை அசைத்தார். அவருடைய கண்களில் ஓர் அபூர்வமான ஒளி தோன்றியது. "எனக்குத் தெரியவில்லை. நீ இவ்வளவு அழகாயிருப்பதற்கு நிச்சயம் உனக்கு ஒரு மூளை இருக்க வேண்டியதில்லை" என்றார்.

இதை அவர் கூறியதும், இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது. அவளது இளமை நிறைந்த கலகலப்பான சிரிப்பும் அவரது வயதான வறட்சி நிறைந்த சிரிப்பும் சேர்ந்து ஒலித்தன. பிறகு அவர் மீண்டும் சிந்தனையிலாழ்ந்தார்.

அவர், "நீ இப்போது கேட்ட விஷயத்தைப் பற்றி நான் அதிகம் சிந்தித்திருக்கிறேன். அதிலும் நீ என் வீட்டிற்கு வந்ததிலிருந்து என் சிந்தனை மேலும் அதிகமாகி விட்டது. நீ அழகும் குணமும் உள்ளவளாக யிருக்கிறாய். உன் பாட்டனார் இம் மாகாணத்தின் வைசிராயாக யிருந்திருக்கிறார். உயர்ந்த இடம் என்பதற்காக உன்னை நான் என் மகனுக்காகத் தேர்ந்தெடுத்தேன். உனக்கு நல்ல அறிவும் இருக்கிறது என்று இப்போது தெரிகிறது. ஒரு குடம் நிறைந்த பொன்னோடு மேலும் நகைகளைச் சேர்த்தது போலாயிற்று. ஆனாலும் உனக்கு என் வீட்டில் இத்தனை அறிவு தேவையேயில்லை என்பது எனக்குத் தெரியும். சிறிது மூளை இருப்பது நல்லதுதான். அது வீட்டுக் கணக்குகளைப் பார்க்கவும், வேலையாட்களைக் கவனிக்கவும், நமக்குக் கீழ்ப்பட்டவர்களை அடக்கியாளவும் உதவும். ஆனால் உன்னிடம் விவேகமும் ஆத்ம விசாரணையும் இருக்கிறது. நீ அதை வைத்துக் கொண்டு என்ன செய்வாய்? அது தான் எனக்குப் புரியவில்லை. ஆனால் குணத்தில் தாழ்ந்த வேறு பெண்ணை யிருந்தால் நான் மிகவும் கவலையடைந்திருப்பேன். ஏனெனில் உன்னுடைய உலகமாகிய இந்த நான்கு சுவற்றிற்குமிடையே அடங்கியிருக்க வேண்டிய நீ மற்றவர்களுக்கு ஒரு பெரும் தொந்தரவாகி விடுவாய். ஆனால் உன்னிடம் நல்ல பகுத்தறிவும் இருப்பதால் நீ யாருக்கும் தொந்தரவு கொடுக்க மாட்டாய். இவ்வளவு சிறிய வயதில் இம்மாதிரி அறிவு இருப்பது மிகவும் அபூர்வம். உன்னால் உன் மனதை அடக்கிக் கொள்ள முடியும்" என்று கூறினார்.

அவள், அவர் முன்னால் அசையாமல் நின்று கொண்டிருந்தாள். அதை அவர் நிமிஷ நேரம் கூர்ந்து, "உட்கார், குழந்தாய்! உட்கார்ந்து கொள். உனக்குக் கால் வலிக்கும். மேலும் நீ இனி என் முன்னால் நின்று கொண்டுதானிருக்க வேண்டும் என்பதில்லை" என்றார்.

அவள் தாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த பேச்சின் நினைவிலேயே ஆழ்ந்து போயிருந்ததால் அவர் கூறியதை கவனிக்கவில்லை.

தன்னிரு கைகளையும் முன்புறம் கோர்த்தவாறு நின்று கொண்டேயிருந்தாள்.

பின் அவருடைய அடுத்த கேள்வி பிறந்தது. "நீங்கள் சொல்வது போல் நான் இருந்தால், அதனால் என்னிடம் என் கணவருக்குள்ள அன்பு குறைந்து விடுமோ?" என்று கேட்டாள்.

பெரியவருடைய முகம் அதி தீவிர சிந்தனையைக் காட்டிற்று. அவர் தம்முடைய தாடியைத் தடவலானார். அம் மெல்லிய குறுகிய கையும் அதன் நரம்புகளினூடே பொன்னிலை கனிப் போல் படிந்திருந்த அவருடைய கருங்கிய சதையும் இப்போதும் அவள் கண் முன்னாலேயே நின்றது.

"ஆம், அதுதான் நான் கூட பல முறை என்னையே கேட்டுக் கொள்வது!" என்று கூறி ஆழ்ந்த பெருமூச்செறிந்தார். "இந்த அறிவு என்பது இருக்கிறதே? இது கிடைப்பது பெரும் பாக்கியம். அதனாலேயே அது ஒரு பெரும் சுமையாகி விடுகிறது. ஏழ்மையும் செல்வமும் மனிதர்களைச் சிநேகிதர்களாகவோ விரோதிகளாகவோ செய்வதைக் காட்டிலும் இந்த அறிவுதான் மனிதர்களுள் அதிக வேற்றுமையை உண்டாக்குகிறது. முட்டாளாக யிருப்பவன் அறிவுள்ளவனிடம் பயமும் பகையும் கொள்ளுகிறான். ஒரு அறிவாளியிடம் எவ்வளவு தான் நல்ல குணங்கள் இருந்தாலும் அவன் அதன் மூலம் தன்னை விட அறிவில் தாழ்ந்தவனிடமிருந்து அன்பைப் பெற்று விடலாம் என்று எண்ணி விடக் கூடாது" என்று கூறினார்.

"ஏன்?" என்று கேட்டாள் அவள். அவளுடைய மனதில் ஒரு புதிய திகில் உண்டாயிற்று. அப்போதெல்லாம் அவள் தன்னைப்பற்றி சிறிது கர்வம் கொண்டிருந்தாள். அவள் தன்னுடைய அறிவிலும் சாமர்த்தியத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய மாமனாரோ, அவள் அதன் காரணமாக வெறுக்கப்படுவாள் என்றல்லவோ கூறுகிறார்.

பிறகு பெரியவர் தமது குரலிலும் முகத்திலும் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல், "ஏனெனில் ஒரு மனிதன் முதன் முதலில் தன்னிடம் தான் அதிக அன்பு வைக்கிறான். அப்போது தான் அவன் தனக்கு எவ்வளவு துயரங்கள் வந்த

போதிலும் மேலும் உயிர் வாழ விரும்புவான் என்பதற்காக கடவுள் அம்மாதிரி ஏற்படுத்தியிருக்கிறார். அவனுடைய சுயாபிமானத்தை தாழ்த்தும் வேறு எந்த அன்பும் அவனிடம் நிலைக்காது. ஏனெனில் சுயாபிமானம் அதிக தூரம் புண் பட்டுப் போனால் அவன் சாவதற்குத் துணிந்து விடுவான். இது தெய்வ சித்தத்திற்கு விரோதமானது" என்று முடித் தார்.

"அப்படியானால் என்னுடைய கணவர் என்னை வெறுக்க ஆரம்பிப்பாரோ?" என்று மீண்டும் கேட்டாள்.

பெரியவர் அவள் தமது மகனைவிடப் புத்திசாலியாக இருக் கிறாள் என்பதை நேராகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லி, அவளை எச்சரிக்கை செய்கிறார் என்பதை அவள் அறிந்து கொண்டாள்.

பெரியவர், "குழந்தாய்! எந்த மனிதனும் தன்னுடைய படுக்கையில் படுத்துறங்கி தன் வீட்டில் வாழ்ந்து வரும் தன் மனைவி தன்னைவிடப் புத்திசாலியாக இருப்பதை விரும்ப மாட் டான். அவளைத் தான் கோவிலில் வைத்துக் கும்பிடுவதாக வேண்டுமானால் அவன் கூறலாம். ஆனால் அம்மாதிரி வழிபாடு தினசரி வாழ்க்கையை வறட்சியாக்குகிறது. ஒரு மனிதனால் தன் வீட்டைக் கோவிலாக்க முடியாது. ஒரு தேவியைத் தன் மனைவியாகக் கொள்ளவும் முடியாது. அவனிடம் அதற்குப் போதிய சக்தி இருப்பதில்லை" என்று கூறினார்.

"ஏன் அப்பா. நான் அந்த மோசமான புத்தகங்களைப் படித்து விடுவதே நல்லதல்லவா?" என்று அவள் திடீரென்று கேட்டாள். இதைக் கேட்டு அவர் திடுக்கிட்டுப் போய் விட்டார். அவருடைய கண்களில் நம்பிக்கையின்மை தோன் றியது. அதைக் கண்டதும் அவளுக்கு ஆச்சரியமும் சிறிது பயமும் தோன்றியது. அவர் அதுவரை அவளைத் தமது சுபாவமான கூச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் அவளைப் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காக மேஜை மீதிருந்த தேநீர் பாத்திரத்தின் மேல் கவனம் செலுத்தினார்.

அவள் இரண்டடி முன் வந்து, "இருங்கள், நான் உங் களுக்குத் தேநீர் ஊற்றிக் கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டு அவருக்குத் தேநீர் ஊற்றிக் கொடுத்தாள், அவர் ஒரு நிமிஷம் தேநீரை உறிஞ்சியவாறு மௌனமாக இருந்தார். பிறகு அவளை இன்னும் பாராமலே, "குழந்தாய்! ஒரு வேளை நான் சொல் வது உனக்குப் புரியாதிருக்கலாம். ஆயினும் புரிந்து கொள் ளாமலே, நான் சொல்வதை நம்பு. நீ இந்தப் புத்தகங்களைப்

படிக்காமலிருப்பதே நல்லது. தன்னுடைய மனைவி அதிகம் தெரிந்து கொள்ளாமலிருப்பதையே ஒரு கணவன் விரும்பு கிறான். ஏற்கெனவே நீ இந்த சிறிய வயதில் அதிக புத்திசாலி யாக இருக்கிறாய். உனக்கு இந்தப் புத்தகங்கள் தேவையில்லை. இளமையின் பரிசுத்தத்துடன் கூடிய உன்னுடைய மனதை என்னுடைய மகனை மகிழ்விக்க வேண்டிய உனது கடமையில் செலுத்து. அதன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்தே அன்பை அறிந்துக் கொள். புத்தகத்தின் மூலம் வேண்டாம்" என்றார்.

ஒரு கணம் அவளுக்கு இது தன்னுடைய கேள்விக்கு உரிய பதிலே யல்ல என்று தோன்றிற்று. மேஜையைப் பிடித்த வாறு அவரையே பார்த்துக் கொண்டே நின்ற அவளுக்குத் திடீரென்று, உலகத்தில் அறிவில் மிகச் சிறந்தவர் அவர்தான் என்ற எண்ணம் தோன்றியது. தன்னுடைய அறிவு அவருடைய அறிவின் நிலையை எட்டும் வரை தான் அவரை நம்புவதே நல்லது என்று உணர்ந்தாள்.

"தங்கள் சொற்படியே நடப்பேன், அப்பா" என்று கூறினாள் அவள். அதேபோல் இருபது வருஷங்களுக்கு மேலாக அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தே நடந்திருக் கிறாள்.

ஆனால் இன்று, அவர்கள் முன்பு உட்கார்ந்திருந்த அதே அறையில் தனிமையில் உட்கார்ந்து, ஒரு காலத்தில் அவரு டையதாக யிருந்த அதே நாற்காலியில் இப்போது உட்கார்ந் திருக்கும்போது, அவளுக்குத் தன்னுடைய அறிவு அவருடைய அறிவை இப்போது எட்டி விட்டது என்று தோன்றிற்று. ஆகவே அவள் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய காலமும் பூர்த்தியாகி விட்டது. கடைசியாக, அப்பெரிய வரிடமிருந்தும், அவளுக்கு விடுதலை கிடைத்து விட்டது!

அவள் எழுந்து, நெஞ்சில் ஒரு விசித்திரமான படபடப் புடன், படிக்கக் கூடாதென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அப் புத்தகங்களை நோக்கிச் சென்றாள். அவற்றில் சில புத்த கங்களின் பெயர் அவளுக்கு முன்பே தெரியும். உண்மையான அறிவாளிகள், அவை தங்களுடைய அறிவுக்குத் தாழ்ந்தவை யென்று அவற்றைப் படிப்பதில்லை என்று சொல்லக் கேட் டிருக்கிறாள். உயர்ந்த விஷயங்களில் மனதைச் செலுத்த முடியாத கீழ்த்தரமான, பக்குவமடையாத மனிதர்களே அவற்றைப் படிக்கிறார்கள் என்றும் சொல்லப்படுவது வழக்கம். ஆயினும் அவற்றைப் பண்டிதர்கள் உட்பட

எல்லோரும்தான் படிக்கிறார்கள் என்பதை அவள் அறிவாள். அவளுடைய மாமனார் கூட அவற்றைப் படித்திருக்கிறார். தமது மகனையும் படிக்க அனுமதித்திருக்கிறார். தாம் அனுமதிக்காவிட்டாலும் அதை அவன் எவ்வாறேனும் படித்தே தான் தீருவான் என்பதை அறிவார்.

ஸ்ரீமதி ஊ தனக்குள், 'எல்லா ஆண்களும் அறிந்திருப்பதை ஒரு பெண் அறிந்து கொள்ளக் கூடாதா?' என்று வினவிக் கொண்டாள்.

அவள் கைக்கு வந்த ஒரு புத்தகத்தை எடுத்தாள். அது ஒரு நீளமான புத்தகம். துணியினால் உரையிடப்பட்டிருந்த அப் பெட்டியில் மெல்லியதாக யிருந்த அநேகப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்தப் புத்தகத்தின் பெயரை அவள் முன்பே கேட்டிருக்கிறாள். அவளுடைய தாயாருடைய குடும்பத்தையும் ஊ குடும்பத்தையும் போன்ற பெரிய வீடுகளில் இருந்த அநேக பெண்களில் சிலர் வெளிப்படையாக ஆபாசமாகப் பேசுபவர்களாக இருந்தனர். அவர்கள் இதைப் பற்றி யெல்லாம் பேசுவதுண்டு. ஆக, "ஹ்சீ மென் சிங்கும் அவனுடைய ஆறு மனைவிகளும்" என்ற கதையை எவ்வாறோ எல்லோரும் அறிந்திருந்தனர். அதன் முதல் பாகமாகிய புத்தகத்தின் லேடின் துணி உரைக்கு மேல் "பொன் கிண்ணத்திலிருக்கும் மலர்" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

'இந்தப் புத்தகங்களை அநேகர் எடுத்துப் படித்திருக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள். சந்தேகமில்லாமல் வம்ச வம்சமாக ஊ குடும்பத்தின் புருஷர்கள் அனைவரும் படித்திருப்பார்கள். ஆனால் அவள்தான் அவற்றைக் கையால் எடுத்துப் பார்க்கும் முதற் பெண்மணியோ என்னவோ!

அவள் புத்தகத்தை எடுத்துக் கொண்டு மேஜைக்குச் சென்று, முதலில் அதிலிருந்த படங்களைப் பார்த்தாள். ஒரு சைத்திரனால் வரையப்பட்டிருந்த அவ்வழகிய படங்கள் சிற்றின்ப சுகத்தை வெளிப்படுத்துவனவாக யிருந்தன. அவள் முக்கியமாக, 'ஹ்சீ மென் சிங்கின்' முகத்தை கவனமாக ஆராய்ந்தாள். சைத்திரன் படங்களின் மூலம் அம் மனிதனுடைய அழிவு நேர்ந்த விதத்தை மிக அழகாக வர்ணித்திருந்தான். தனது இளமையின்பத்தைப் பெண்களின் சரீரத்தின் மீதுள்ள ஆசையின் மூலமாகப் பூரணமாக அனுபவித்த அழகிய இளைஞனை ஹ்சீ மென் சிங்கின் மகிழ்ச்சி ததும்பிய முகம், கடைசியில், தண்ணீரில் மூழ்கி அழிவையடையும் மனிதனின் கோரமான முகத்தைப் போல் அருவருக்கத்தக்க

முறையில் இருந்தது. ஒவ்வொரு படத்தையும் மிக்க கவனத்தோடு பார்த்துக் கொண்டு வந்த ஸ்ரீமதி ஊ அக் கதையின் ஆழ்ந்த கருத்தை அறிந்து கொண்டாள். அது தன்னுடைய மனம், ஆத்மா இவற்றை அடியோடு மறந்து விட்டு வாழ்ந்த ஒரு மனிதனுடைய கதை. அம் மனிதனின் ஆத்மா, அச் சரீரத்தில் வீணே அலைந்து பசியால் வருந்தி மடிந்த கதை அது.

அவள் படிக்க ஆரம்பித்தாள். மணி பறந்தது. அடுத்த அறையில் இங் ஏதோ சப்தம் செய்வது அவளுக்குக் கேட்டது. ஆனால் இங் கதவருகே நின்று அவளைச் சற்று நேரம் விறைத்துப் பார்த்துவிட்டுச் சென்றது அவளுக்குத் தெரியாது. அறைக்குள் இருள் பரவி இனிமேல் படிக்க முடியாது என்ற நிலைமை வந்த பிறகுதான் அவளுக்கு இத்தனை நேரம் கழிந்து விட்டது தெரிந்தது. தான் எங்கிருக்கிறோம் என்பதையே மறந்து விட்டவள்போல் அவள் தன்னைச் சுற்றிலும் பார்த்தாள்.

'நான் பெரியவரின் சொற்படி நடந்திருக்க வேண்டிய தில்லை. வெகு காலத்திற்கு முன்பே நான் இவைகளைப் படித்திருக்க வேண்டும்' என்று அவள் தனக்குத் தானே கூறிக் கொண்டாள். ஆனால் இப்போது படிப்பதை நிறுத்திவிட்டதும் மீண்டும் அதைத் துவங்க அவள் விரும்பவில்லை. இதுவே அவளுக்கு அலுப்பை உண்டாக்கி விட்டது. அப்புத்தகங்களை எடுத்துப் பெட்டியில் வைத்து, அதன் சிறிய தந்தக் கொக்கியை மாட்டி, அதைப் பீரோவில் எடுத்து வைத்தாள். பிறகு அவள் தன் கையை கன்னத்தின் மீது வைத்தவாறு அறையின் குறுக்கே நடக்கலானாள். இல்லை...அவள் இளம் பெண்ணாக யிருந்தபோது அப்புத்தகத்தைப் படிக்காமல் இருந்ததே நல்லது. அதை மூடி உள்ளே வைத்த பிறகுதான் அது உண்மையில் எத்தகைய தீமை வாய்ந்த புத்தகம் என்பது அவளுக்குப் புலப்பட்டது. திறமை வாய்ந்த அவ்வாசிரியர் அப்புத்தகத்தை, வாசகன் எவ்வாறு அதற்குப் பொருள் கொள்ள விரும்புகிறானே அவ்வாறே அவனுக்குக் கிடைக்கும்படி சிருஷ்டித்திருந்தார். தீமையை விரும்புகிறவனுக்கு அதில் தீமையே நிறைந்திருந்தது. ஆனால் அறிவாளிகளுக்கோ அப்புத்தகம் துன்பம் நிறைந்த உண்மைகளை விளக்குவதாயிருந்தது. பெரியவர் கூறியது மிகவும் சரியானதுதான். இம்மாதிரியான புத்தகம் இளம் வயதுடையவர்களின் கையில் அகப்பட்டாகாது. அவளே இருபது வருஷங்களுக்கு முன் இதைப் படித்திருந்தால், அதில் அடங்கியிருக்கும் ஆழ்ந்த கருத்தைப் புரிந்து கொண்டிருக்க முடியுமா? அவள் அதனால்

மிக வெறுப்படைந்திருக்க மாட்டாளா? அவளால் இரவில் படுக்கைக்கு அவ்வளவு சுலபமாக இணங்கி போயிருக்க முடியுமா? இப்போதும் பெரியவர்தான் சிறந்த அறிவாளி என்பதில் ஐயமில்லை. இளம் உள்ளங்கள் அதிக அறிவைப் பெற்றுக்கொள்ளத் தயாராக யிருப்பதில்லை. வாழ்க்கையில் ஒவ்வொரு வருடமாக அவர்கள் கழித்துச் செல்லச் செல்ல, இதுவும் சிறிது சிறிதாகக் கொடுக்கப்படவேண்டும். வாழ்க்கையை முதலில் வாழ்ந்த பிறகே ஒருவன் இவற்றைத் துன்பப் படாமல் அறிந்துகொள்ள முடியும்.

இம்மாதிரி அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே, இங் கதவருகே தோன்றினாள். அந்தி நேரத்தின் மங்கிய ஒளியில் அவளுடைய கரிய நிழல் தெரிந்தது. அவளுக்குப் பின்னால் வெளிவாசலில் மற்றொரு உருவத்தின் நிழலும் தெரிந்தது.

"அம்மா, அந்தக் கிழவி லியூமா வந்திருக்கிறாள். அந்தப் பெண்ணும் வந்திருக்கிறாள்" என்று கூறினாள் இங்.

ஸ்ரீமதி ஊ ஒரு நிமிஷம் பேசாமல் யோசனையிலாழ்ந்தாள். பிறகு ஒரு நாற்காலிக்குச் சென்று அதன்மீது அமர்ந்து கொண்டாள்.

"மெழுகுவர்த்தியை ஏற்று. அந்தப் பெண்ணை மாத்திரம் இங்கு அழைத்து வா. அந்தக் கிழவியை நான் இப்போது பார்க்கப் போவதில்லை" என்று உத்திரவிட்டாள்.

இங் மௌனமாகச் சென்றாள். கதவருகே அப்பெண் வந்து நின்றாள். மெழுகுவர்த்தியின் முழு வெளிச்சமும் அவள் மீது வீழ்ந்தது. ஸ்ரீமதி ஊவும் ஏறக்குறைய, இதே மாதிரியான முகத்தையும் உருவத்தையும் தான் கற்பனை செய்து வைத்திருந்தாள். ஆரோக்கியம் வாய்ந்த, அப்பெண்ணின் கண்ணங்கள் சிவந்திருந்தன. அவள் குழந்தைத்தனம் நிறைந்தத் தனது வட்டக்கரிய விழிகளால் ஸ்ரீமதி ஊவை நோக்கிக் கொண்டு நின்றாள். அவளுடைய கரிய முடி, நாட்டுப்புறத்துப் பாணியில் பின்புறம் கொண்டையிடப்பட்டும் முன்புறம் கொஞ்சம் நெற்றியில் தொங்கவிடப்பட்டுமிருந்தது. அவள் கையில் ஒரு சிறிய துணி மூட்டை இருந்தது.

ஸ்ரீமதி ஊ, "உன் கையில் என்ன அது? நீ ஒன்றும் எடுத்துவரக் கூடாது என்று நான் சொல்லியிருந்தேனே" என்றாள். கள்ளங்கபடமற்ற ஒரு குழந்தையைப் போன்ற சுபாவத்துடன் காணப்பட்ட அப்பெண்ணிடம் இந்த எளிய வார்த்தைகளைத்தான் அவளால் கூற முடிந்தது.

அப்பெண், "நான் உங்களுக்காக சில மூட்டைகள் கொண்டு வந்திருக்கிறேன். என்னிடம் வேறு ஒன்றுமே இல்லை. இது உங்களுக்குப் பிடிக்கும் என்று எண்ணினேன். இவையெல்லாம் புதியவை" என்று கூறினாள். இனிமையாகவும் தெளிவாகவும் இருந்த அவளுடைய குரலில் சிறிது கூச்சம் கலந்திருந்தது.

"இங்கு வா, மூட்டைகளை என்னிடம் காட்டு பார்க்கலாம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அப்பெண் அந்த அறையில் பரவியிருந்த அந்த ஆழ்ந்த அமைதியைக் கலைத்துவிட அஞ்சுபவள் போல, மெல்ல அடி யெடுத்துவைத்து நடந்து வந்தாள். கீழே குனிந்து அவளுடைய பாதங்களைப் பார்த்த ஸ்ரீமதி ஊ, "உன்னுடைய பாதங்கள் கட்டப்படவில்லை போலிருக்கிறதே" என்றாள்.

அதைக் கேட்டு வெட்கமடைந்த அப்பெண், "அவைகளைக் கட்டுவதற்கு ஒருவரும் இருக்கவில்லை. அதுவும் தவிர எனக்கு எப்போதும் வயல்களில் வேலை செய்யவேண்டி யிருந்தது" என்று பதிலளித்தாள்.

அதற்கு இங், "அவளுடைய கால்கள் மிகப் பெரியதாயிருக்கின்றன. அம்மா! சந்தேகமில்லாமல் அவள் நாட்டுப் புறத்துப் பெண்களைப் போல் வெறுங் கால்களோடு நடந்திருக்கிறாள். அவளுடைய கால்கள் மிக முரடாயிருக்கின்றன" என்றாள்.

அப்பெண் கவலையோடு இங்கின் முகத்தையும் ஸ்ரீமதி ஊவின் முகத்தையும் மாறி மாறி பார்த்துக்கொண்டு நின்றாள்.

"வா, எனக்கு மூட்டைகளைக் காண்பி, பார்ப்போம்" என்றாள் ஸ்ரீமதி ஊ மீண்டும்.

அந்தப் பெண் முன்னால் வந்து அம்மூட்டையை ஜாக்கிரதையாக மேஜையின் மீது வைத்தாள். பிறகு அவள் கைக்குட்டையை அவிழ்த்து அம்மூட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்துப், பரிசோதித்துப் பார்த்தாள். "நல்ல வேளை, ஒன்றுகூட உடையவில்லை. எங்கு இருட்டில் தடுக்கி விழுந்து அவற்றை உடைத்து விடுகிறேனோ என்று நான் பயந்து கொண்டே வந்தேன். மொத்தம் பதினைந்து இருக்கின்றன..." என்று கூறித் தயங்கினாள். ஸ்ரீமதி ஊ அவள் தன்னை எப்படி அழைப்பது என்று தெரியாமல் விழிக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டாள்.

"நீ என்னை அக்கா என்று கூப்பிடலாம்" என்றாள்.

ஆனால் அப்பெண் கூச்சத்தால் அவ்வாறு அழைக்காமல், மேலும், "பதினைந்து முட்டைகளில் ஒன்றுகூட ஏழு நாட்களுக்கு மூத்ததில்லை. நீங்கள் இவற்றைச் சாப்பிடலாம்" என்று கூறினாள்.

"ரொம்ப சந்தோஷம். அவை மிகவும் புதியவைகளாகத்தான் காணப்படுகின்றன" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அப்பெண், தன்னருகே நின்று கொண்டிருக்கும்போதே அவள் அதற்குள் அவளைப்பற்றிய அநேக விஷயங்களைக் கவனித்துக் கொண்டாள். அவளுடைய சுவாசம் மிருதுவாகவும் இனிமையாகவும் இருந்தது. அவளுடைய சரீரத்திலிருந்து ஆரோக்கியத்தை வெளிப்படுத்தும் நறுமணமே உண்டாயிற்று. அவளுடைய பற்கள் உறுதியாகவும் வெண்மையாகவும் இருந்தன. கைக்குட்டையை அவிழ்த்த அவளுடைய கைகள் முரடாகவும் கறுத்தும் இருந்தபோதிலும் அவற்றின் அமைப்பு நன்றாகயிருந்தது. துவைத்து உடுத்திருந்த ஊதா நிற நூல் ஆடைகளுள் மறைந்திருந்த அவளுடைய உடல் அளவசியமான சதையின்றி நல்ல கட்டோடு அமைந்திருந்தது. அவளுடைய கழுத்து மென்மையாக இருந்தது. முகம் கபடமற்று தெள்ளிய அழகோடு விளங்கியது.

ஸ்ரீமதி ஊவால் அவளை நோக்கிப் புன்னகை செய்யாமல் இருக்க முடியவில்லை. அவள், "உனக்கு இங்கு இருக்கப் பிடிக்குமென்று நினைக்கிறாயா?" என்று கேட்டாள். ஒரு குடியானவனிடமிருந்து ஒரு மாட்டை விலைக்கு வாங்குவது போல் வாங்கியிருக்கும் இவ்விளம் பெண்ணைப் பார்த்து அவளுக்குப் பரிதாபம் உண்டாயிற்று. வெய்யிலினால் கறுத்திருந்த அவளது கன்னங்களையும், முரட்டுத் துணிகளையும் மீறி அவளிடம் சில மென்மைகளும் உயர்ந்த தன்மைகளும் வெளிப்பட்டன.

இந்த அன்பைக் கவனித்த அந்தப் பெண்ணின் தெளிவான கரிய விழிகளில் சிரத்தையும் பக்தியும் தோன்றின. "நீங்கள் ரொம்பவும் நல்லவர்கள் என்றும், மற்றவர்களைப் போன்றவரல்லர் என்றும் லியூமா எனக்குக் கூறினாள். எல்லோரையும் விட முக்கியமாக உங்களுக்குத் திருப்திகரமாக நடந்துகொள்ள வேண்டுமென்று அவள் கூறினாள். நான் அவ்வாறே செய்வேன்" என்றாள் ஆவலுடன்.

ஸ்ரீமதி ஊ, "அப்படியானால் உன்னுடைய வாழ்க்கையைப்பற்றி உனக்கு நினைவிருக்கும் வரை எல்லாவற்றையும்

என்னிடம் சொல்லவேண்டும். ஒன்றையும் ஒளிக்கக் கூடாது. நீ உண்மையாக நடந்து கொண்டாயானால் அதுதான் எனக்கு மிகவும் பிடிக்கும்" என்று கூறினாள். அப்பெண்ணின் சிரத்தை நிறைந்த அன்பை உணர்ந்த அவளுக்கு மனதில் தான் ஏதோ குற்றம் செய்வது போல் ஒரு வேதனை உண்டாயிற்று. அது அவளுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"நான் உங்களிடம் எல்லாவற்றையும் கூறிவிடுகிறேன்" என்று வாக்களித்த அந்தப் பெண், "ஆனால் முதலில் இந்த முட்டைகளை சமையலறையில் கொண்டுபோய் கொடுத்து விட்டு வந்து விடட்டுமா?" என்று கேட்டாள்.

"இல்லை, வேண்டாம்" என்றாள் ஸ்ரீமதி ஊ தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு. இவளைப் பார்த்ததும் அங்கிருக்கும் வேலைக்காரர்கள் எத்தகைய அதிர்ச்சியடைய மாட்டார்கள்! பிறகு அவள், "இங்கு இதை சமையலறைக்கு எடுத்துச் செல்வாள். நீ எனக்கு எதிரே இருக்கும் அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள். நாம் பேசலாம்" என்றாள்.

அவள் முட்டைகளை மீண்டும் கட்டிவைத்து விட்டு, நாற்காலியின் மீது ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டாள். ஆனால் அவள் சற்று கலக்கமடைந்து காணப்பட்டாள்.

"உனக்குப் பசிக்கிறதா?" என்று ஸ்ரீமதி ஊ கேட்டாள்.

"இல்லை, உங்களுக்கு என் நன்றி" என்றாள் அப்பெண் அதிஜாக்கிரதையுடன். அவள் முன்புறம் நோக்கியவாறு கைகளை இறுகப் பிடித்தவண்ணம் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தாள்.

புன்னகை செய்த ஸ்ரீமதி ஊ, "எங்கே, இப்போது உண்மையாகச் சொல் பார்க்கலாம். உனக்குப் பசிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

அப்பெண் திடீரென்று கலகலவென்று நகைத்தாள். பிறகு வெகுளியாக, "நான் ஒன்றுமறியாத ஒரு நிர்மூடம். என்னால் மரியாதைக்காக கூட பொய் சொல்ல முடியாது. ஆனால் லியூமா, நீங்கள் என்னைப் பசியாயிருக்கிறாயா என்று கேட்டால் கூட, நான் இல்லை யென்று கூறி அதற்கு வந்தனம் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தாள். இல்லாவிடில் முதலிலேயே நான் மிகவும் ஆசை பிடித்தவள் என்று நீங்கள் எண்ணிக் கொள்வீர்கள் என்று கூறினாள்" என்றாள்.

"நீ வருவதற்கு முன்பு சாப்பிட்டு விட்டு வரவில்லையா?" என்று ஸ்ரீமதி ஊ விசாரித்தாள். அப்பெண்ணின் முகம் சிவந்து விட்டது. "எங்களிடம் அதிக உணவு கிடையாது. என்னுடைய வளர்ப்புத்தாய் வந்து...அவள் கூறினாள்..." என்று தயங்கினாள்.

ஸ்ரீமதி ஊ, அதற்குள் குறுக்கிட்டு, "இங் சாப்பாடு கொண்டு வா?" என்று உத்திரவிட்டாள். அப்பெண் பெருமூச் செறிந்து, தன் உடலைத் தளர்த்திக் கொண்டு, ஸ்ரீமதி ஊவின் முகத்தைப் பார்க்கும் வண்ணம் திரும்பி உட்கார்ந்து கொண் டாள். ஆனால் அவளை ஏறிட்டுப் பார்க்கவில்லை.

அவளிடம் ஏதாவது குற்றம் இருக்கிறது என்றால் அது அவள் உருவத்தில் கொஞ்சம் பெரியவளாயிருப்பது தான் என்று ஸ்ரீமதி ஊ எண்ணினாள். இவள் வடக்குப் பிரதேசத் தைச் சேர்ந்தவளாயிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஒரு வேளை அவளுடைய குடும்பத்தார் மஞ்சள் நதியின் வெள்ளத்திற்கோ, பஞ்சத்திற்கோ அல்லது ஏதாவது ஒரு விபத்திற்கோ ஆளாகி, அகதிகளாக இங்கே வந்திருப்பார்கள். அவர்கள் வேறு வழியின்றி ஒரு பெண் குழந்தையை சாகும்படி இங்கே விட்டுச் சென்றிருக்கலாம்.

"லியூமா, நீ ஒரு அழகைப் பெண் என்று கூறினாள். உனக்கு உன்னுடைய குடும்பத்தைப்பற்றி ஏதேனும் தெரியுமா?" என்று ஸ்ரீமதி ஊ கேட்டாள்.

அப்பெண் தலையை அசைத்து விட்டு, "அவர்கள் நான் பிறந்தவுடனேயே என்னை விட்டுச் சென்று விட்டனர். அவர்கள் என்னை விட்டுச் சென்ற இடத்தைத்தான் நான் அறிவேன். நாங்கள் நகரத்தின் கடைத் தெருவுக்கு வரும் பொழுது, அநேக முறை என்னுடைய வளர்ப்புத்தாய் எனக்கு அதைக் காட்டியிருக்கிறாள். அவள், என்மீது பட்டுத் துணி ஒன்று போர்த்தப்பட்டிருந்தது என்பதைத் தவிர வேறு எவ்வித அடையாளமும் இல்லை என்று கூறியிருக்கிறாள். அதுவும் ஒரு கிழிந்த சில்க்தான்" என்றாள்.

"உன்னிடம் அந்தத் துணி இப்போது இருக்கிறதா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

அப்பெண் 'ஆம்' எனத் தலையை ஆட்டி விட்டு, "உங்க ளுக்கு எப்படித் தெரிந்தது?" என்று மிக்க அதிசயத்துடன் கேட்டாள்.

"உனக்குச் சொந்தமான அந்த ஒரே பொருளை நீ உன்னுடன் எடுத்துவர விரும்புவாய் என்று ஊகித்தேன்" என்று கூறிய ஸ்ரீமதி ஊ அவளுடைய அகன்ற விழிகளை நோக்கிப் புன்னகை செய்தாள்.

"ஆனால் முன்பின் தெரியாத ஒரு அந்நியளுடைய மனதைத் தாங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்?" என்று மேலும் விடாது கேட்டாள் அப்பெண்.

"அந்தத் துணியை என்னிடம் காட்டு" என்றாள் ஸ்ரீமதி ஊ. மனித உள்ளத்தின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளும் சக்தி வாய்ந்த தன்னுடைய நுண்ணறிவைப் பற்றி இப்பெண் ணிடம் கூற அவள் விரும்பவில்லை.

அப்பெண், ஸ்ரீமதி ஊ சொல்லுவது எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டவள் போல் சற்றும் தயங்காமல் தன் சட்டைத் துணிக்குள் கையை விட்டு மடித்து வைத்திருந்த ஒரு சில்க் துணியை வெளியே எடுத்தாள். அது சுத்தமாகத் துவைத்து வைக்கப்பட்டி ருந்தது. ஆனால் அதன் சிவப்பு நிறம் வெளுத்துச் சாயம் போயி ருந்தது. ஸ்ரீமதி ஊ அதைப் பிரித்தாள். அது ஒரு பெண் ணின் குட்டையான மேலங்கி. அதன் அகலம் குறைவாகவும் கை நீளமாகவும் இருந்தது.

"இது உன்னுடைய தாயாருடையதானால், அவளும் உயரமாக இருந்திருக்கவேண்டும்" என்று கூறினாள்.

"உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே!" என்று அப்பெண் கூவினாள்.

ஸ்ரீமதி ஊ அதில் செய்திருந்த தையல் வேலைப்பாட்டைக் கவனித்தாள். அந்த அங்கி பழைய காலத்துப் பாணியில் தைக்கப்பட்டிருந்தது. சட்டையின் முன்புறத்திலும் காலரைச் சுற்றியும் அடர்த்தியாகப் பூவேலை செய்திருந்தது. அதே போல் கைகளிலும் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஸ்ரீமதி ஊ, "இது மிக அழகானத் தையல் வேலைப்பாடு. சிறு சிறு முடிகள் போட்டு செய்யும் பெகிங் வேலைப்பாடு இது" என்றாள்.

அந்தப்பெண் வாயைப் பிளந்தாள். "நான் இவ்வளவு நாளும் அறிந்திராததை யெல்லாம் நீங்கள் சொல்லுகிறீர் களே!" என்றாள்.

"ஆனால் என்னாலும் அவ்வளவுதான் சொல்ல முடியும்" என்று கூறி ஸ்ரீமதி ஊ அத்துணியை மடித்து அப்பெண்ணிடம் நீட்டினாள்.

ஆனால் அப்பெண் அதை வாங்கிக்கொள்ள முன்வரவில்லை. "நீங்கள் எனக்காக அதை வைத்திருங்கள். இங்கு அது எனக்குத் தேவையில்லை" என்று கூறினாள்.

"நீ விரும்பினால் நான் அதை வைத்திருக்கிறேன். ஆனால் பின்னால் நீ எப்போதாவது வேண்டுமென்று விரும்பினால் உனக்கு அதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

"நீங்கள் என்னை இங்கு தங்குவதற்கு அனுமதித்தீர்களே யானால், அது எனக்கு மீண்டும் தேவையாக யிருக்கவே இருக்காது" என்று அப்பெண் கெஞ்சும் குரலில் கூறினாள்.

ஸ்ரீமதி ஊ அதற்குள் தன்னுடைய சம்மதத்தைக் கொடுத்துவிட விரும்பவில்லை. "நீ உன்னுடைய பெயரைக் கூட இன்னும் எனக்குத் தெரிவிக்கவில்லையே" என்றாள்.

அப்பெண்ணின் முகம், ஒரு குழந்தையின் முகத்தைப் போல், ஏமாற்றத்தால் வாடியது. அவள் பணிவுடன், "எனக்குச் சரியான பெயர் ஒன்றும் கிடையாது. என்னுடைய வளர்ப்புத் தாய் தந்தையர் எனக்கு ஒரு பெயரும் கொடுக்கவில்லை, அவர்களுக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. எனக்கும் தெரியாது" என்று கூறினாள்.

"ஆனால் உன்னை ஏதாவது சொல்லி கூப்பிட்டிருப்பார்களே!" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அவர்கள் நான் சிறியவளாயிருக்கும்போது சிறிய அணுதை என்று கூப்பிட்டார்கள். பெரியவளானதும் பெரிய அணுதை என்று கூப்பிட்டனர்" என்றாள் அப்பெண்.

"ஆம், அது ஒரு பெயராகாது" என்று அன்புடன் ஆமோதித்த ஸ்ரீமதி ஊ, "உன்னுடன் நான் இன்னும் கொஞ்சம் பழகினதும், உனக்கு நான் ஒரு பெயர் கொடுக்கிறேன்" என்று கூறினாள்.

"உங்களுக்கு மிக்க வந்தனம்" என்று அப்பெண் பணிவுடன் கூறினாள்.

அப்போது இங், இரண்டு பாத்திரங்களில் உணவு எடுத்துக் கொண்டு வந்து அவற்றை மேஜைமீது வைத்தாள். அவன்

அவற்றைக் கீழே வைத்ததும், ஸ்ரீமதி ஊ அவ்விரண்டு பாத்திரங்களில் இருந்தவற்றைக் கவனித்தாள். இங் வேலைக்காரர்களின் சாப்பாட்டைக் கொண்டு வந்திருந்தால் அவள் அதைத் திருப்பியனுப்பியிருப்பாள். ஆனால் இங் ஊகமுள்ளவள். அவள் குடும்பத்தார் சாப்பிடும் அவ்வளவு நல்ல உணவைக் கொண்டு வரவில்லை. ஆயினும் அது வேலைக்காரர்களுடைய உணவைவிட மிகவும் உயர்ந்தது. ஒரு பாத்திரத்தில் கறிக் குழம்பும் மற்றொன்றில் பன்றியிறைச்சியும் முட்டைக்கோசும் கொண்டு வந்திருந்தாள். ஒரு சிறிய மரப் பக்கெட்டில் சாதமும் ஒரு சிறியச் செம்பில் தேநீரும், தேநீர் அருந்தும் கிண்ணமும் சாப்பிடும் கோல்களும் கொண்டு வந்திருந்தாள். கோல்கள் குடும்பத்தார் உபயோகிக்கும்படியான, வெள்ளிச் சங்கிலியோடு கூடிய தந்தக் கோல்களல்ல; அல்லது வேலைக்காரர்கள் உபயோகிக்கும் சாதாரண மூங்கிற் குச்சிகளுமல்ல. அவை குழந்தைகள் உபயோகிப்பதைப்போன்ற சிவப்பு சாயம் பூசிய மரக்கோல்கள்.

"அவளுக்குப் பரிமாறு" என்று ஸ்ரீமதி ஊ உத்திரவிட்டாள்.

அதுவரை தயங்கிய இங், உடனே மௌனமாக உதட்டை இறுகக் கடித்தவாறு, அதற்குப் பணிந்தாள்.

ஆனால் அந்தப் பெண் ஒன்றையும் கவனிக்கவில்லை. அவள் இங் கொடுத்த பாத்திரத்தை, நாட்டுப்புறத்து வழக்கப்படி மரியாதைக்காக சற்றே எழுந்தவாறு இரு கைகளாலும் வாங்கிக் கொண்டாள். எல்லாம் மிக அதிகமாக யிருக்கிறது என்று கூறினாள். அப்பெண் உண்மையான பசிக்கும், மரியாதையாக யிருக்கவேண்டும் என்ற விருப்பத்திற்குமிடையே அல்லற்படுவதை, ஸ்ரீமதி ஊ உடனே கண்டு கொண்டாள். ஆதலால் அவள் அவளைத் தனியே விட்டுச் செல்வதற்காக ஏதோ ஒரு சாக்கைச் சொல்லிவிட்டு எழுந்தாள்.

"நான் இதோ வந்து விடுகிறேன். அதற்குள் நீ நன்றாகச் சாப்பிடு" என்று கூறிச் சென்றாள்.

அவள் தன் உட்காரும் அறைக்குச் சென்றாள். அங்கு அப்பெண்ணிற்காக, இங் மூங்கிற் கட்டிலின் மீது படுக்கை தயாரித்து வைத்திருந்தாள். சிந்தனை செய்தவாறு ஸ்ரீமதி ஊ அதைப் பார்த்தாள். அவள் அப்பெண்ணை சில நாட்கள்வரை இங்கேயே தங்கச் சொல்லவேண்டும். ஏன் ஒருவேளை அப்பெண் அந்தக் குடும்பத்தில் அவளது ஸ்தானம் இன்னது

என்பதை நன்றுகப் புரிந்து கொள்ளும்வரைகூட, அவளை இங்கேயே வைத்திருக்க வேண்டியிருக்கலாம். அதுவும்தவிர அவளும் அப்பெண்ணை நன்றுகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவள் அப்பெண்ணை இந்த இடத்திலிருந்து மற்றொரு பகுதிக்கு அனுப்புவதற்கு முன் அவர்கள் இருவருக்கு மிடையே ஒரு ஸ்திரமான பிடிப்பு ஏற்பட்டுவிட வேண்டும். இல்லாவிடில் பின்னல் வீட்டில் ஏதேனும் கலவரம் ஏற்பட லாம். அவள் மிக நுணுக்கமும் கடினமும் வாய்ந்த ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டிருக்கிறாள். அதைச் செய் வதற்கு மிக்க சாமர்த்தியம் வேண்டும். இவ்வாறு சிந்தனை யுடன் அவள் தன் உதட்டின்மேல் இருவிரல்களை வைத்தவாறு நின்றுகொண்டிருந்தாள். அவள் சிறு பெண்ணுகையிருந்த போது, அவர்களுடைய நிலங்களில் வஸந்தகாலத்தில் பட்டு நூல் எடுப்பார்கள். அவளும் அவர்களுக்கு உதவியாக அதில் கலந்து கொள்ள மிகவும் விரும்புவாள். பட்டுப் புழுக்கள் தங்கள் கூடுகளைக் கட்டி முடித்ததும் தக்க தருணம் பார்த்து அவற்றைக் கொதிக்கும் வெந்நீர் நிறைந்த தொட்டிகளில் போடவேண்டும். சற்று தாமதித்தாலும் அந்தச் சரியான நேரம் போய்விடும். சற்று தவறினால் அப்புழுக்கள் பூச்சி களாக மாறி பட்டு நூல்களை அறுத்துவிடும். அவளால் அந்த நேரத்தைச் சரியாக அனுமானிக்க முடியும். குடியானவ ஸ்திரீ கள் அவளுடைய இந்த புத்திக் கூர்மையைக் கண்டு மலைத்துப் போவார்கள். அவள் அப்போது தனக்கு இருந்த தன்னம் பிக்கையை இப்போது நினைவுறுத்திக் கொண்டாள்.

"இப்போது போடுங்கள்" என்று அவள் கூறியதும் பட்டுப் புழுக்கள் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்த வைக்கோல் கனை வெந்நீர் தொட்டிகளில் போட்டு விடுவார்கள். பிறகு அவளும் தன்னுடைய மெல்லிய விரல்களினால் அக்கூட்டின் முனையைக் கண்டு பிடித்து பட்டு நூலைப் பிரித்து எடுப்பாள். அவளுடைய அப்பழைய அனுமானிக்கும் சக்தி இப்போது மீண்டும் அவளுள் கிளர்ந்தெழுந்தது. ஆனால் அது இப்போது அவளைக் கைவிட்டுவிடக் கூடாது. அப்படி நேருமாயின் அவள் உயிரோடிருக்கும்வரை, ஸ்ரீமான் ஹவின் நிந்தனைக்கு ஆளாக வேண்டி வரும்!

அவள் இந்த அறையிலிருந்து தன்னுடைய படுக்கை யறைக்குச் சென்று, பட்டு செருப்பணிந்திருந்த தனது பாதங் களால் வழவழப்பான அத்தரையின்மீது சப்தம் செய்யாமல் முன்னும் பின்னுமாக நடக்கலானாள்.

அந்தப்பெண் ஒரு குழந்தையைப்போல் சிறிதும் கள்ளம் கபடில்லாமல் இருக்கிறாள். அவளுடைய மனதையும் சுபாவத்தையும் யார் வேண்டுமானாலும் அறிந்து கொள்ள லாம். ஆனால் இதன் பொருள் அவளுடைய மனம் இன்னும் தேர்ச்சியடையவில்லை என்பதே. அவள் எவ்வாறு திரும்பு வாள் என்பது எப்படித் தெரியும்? அப்படியும் அவள் ஒரு மூடப்பெண்ணுமல்ல. துறுதுறுவென்று அலைந்த அவளுடைய விழிகள் அவள் புத்திசாலி என்பதைக் காட்டின. அவளுடைய மிருதுவான உதடுகள் அவள் கீழ்த்தரமானவள் அல்ல என்பதை நிரூபித்தன. ஒருவேளை அவள் அதிக புத்திசாலி யாகவும் இருக்கக்கூடும். இதைத் தவிர அழகிய வேலைப் பாடமைந்த அந்தப் பட்டுத்துணியும் இருக்கிறது! அவள் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்கமாட் டாள்—அதாவது அவளுடைய தாய் மட்டும் ஒரு பணக்கார குடும்பத்தில் வேலைக்காரியாக இருந்திராமல் இருந்தால்... ஆம், அவளுடைய தாய் ஒரு செல்வந்தரின் குடும்பத்தில் வேலைக்காரியாக இருந்து, அவளுடைய பிள்ளைகளில் ஒருவன் மூலம் இவளைப் பெற்றிருக்கலாம். இந்த அங்கியை அந்த எஜமானி இவளை வேலையை விட்டு நீக்கியபோது கொடுத் திருக்கலாம். அல்லது தாசிகளின் இல்லத்தைச் சேர்ந்த பெண் யாராவது வேண்டாமற் பிறந்த இக்குழந்தையை அத் துணியோடு விட்டுச் சென்றிருக்கலாம்...

'இப்பெண் எந்த இனத்தைச் சேர்ந்தவள் என்று கண்டு பிடிப்பது முடியாத காரியம்' என்று ஸ்ரீமதி ஹ தனக்குள் கூறிக்கொண்டாள்.

அவள் முன்பின் தெரியாத இந்த ஆத்மாவைத் தன்னு டைய வீட்டிற்குள் சேர்த்துக் கொள்வதை விரும்புகிறாளா? அவளாலேயே இதற்குப் பதில் கண்டு பிடிக்க முடியவில்லை. சற்று நேரம் கழித்து அவள் மீண்டும் புத்தக அறைக்குச் சென்றாள். நிழல் சூழ்ந்திருந்த அப்பெரிய அறையில் அப்பெண், பீதியடைந்தவளாய் ஒடுங்கிப்போய் உட்கார்ந் திருந்தாள். சாப்பாடு முடிந்து, இங் அப்பாத்திரங்களை எடுத்துச் சென்று விட்டாள். தனியே உட்கார்ந்திருந்த அப்பெண் ஸ்ரீமதி ஹவைக் கண்டதும், பயந்தெளிந்தவளாய் முகத்தில் மகிழ்ச்சி தோன்ற எழுந்துநின்றாள்.

"நான் இப்போது என்ன செய்வது, அக்கா?" என்று கேட்டாள் அப்பெண். அவள் அவ்வாறு நம்பிக்கையுடன் அழைத்தது, ஸ்ரீமதி ஹவின் மனதை, அவளுடைய இஷ்டத் திற்கு விரோதமாகவே, குளிரச் செய்தது. அவள் இவ்வளவு

விரைவில் தன்னுடைய அன்பைக் கொடுத்துவிடத் தயாராக இல்லை.

"நீ இந்த நேரத்தில் எப்போதும் என்ன செய்வாய்?" என்று அவள் கேட்டாள்.

"நான் இரவில் சாப்பிட்டதும் படுக்கைக்குச் சென்று விடுவேன். இருட்டியதற்குப் பிறகு, உட்கார்ந்திருப்பதால் மெழுகுவர்த்திதான் வீணாகிறது" என்று அப் பெண் பதில் கூறினாள்.

ஸ்ரீமதி ஊ நகைத்து விட்டு, "அப்போது நீ போய் படுத்துக்கொள்" என்று கூறி அவளை அச் சிறிய படுக்கை போட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள். "அதோ உன்னுடைய படுக்கை இருக்கிறது. அந்தக் கதவிற்குப் பின்னால் இருக்கும் அறையில் நீ படுத்துக் கொள்ள தயார் செய்து கொள்ளலாம்" என்றாள்.

அப் பெண் "நான் தயாராகத்தான் இருக்கிறேன். நான் வரு முன்புதான் குளித்து விட்டு வந்தேன். மேல் துணிகளை மட்டும் எடுத்து விட்டால் அவ்வளவுதான்" என்று பதிலளித்தாள்.

"சரி, அப்போது உன்னை நாளைக்கு மீண்டும் பார்க்கிறேன்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

"சரி" என்று கூறிவிட்டு அப் பெண், "ஆனால் உங்களை ஒன்று கேட்கிறேன், அக்கா. உங்களுக்கு இரவில் எதற்காவது வேண்டியிருந்தால், தயவு செய்து என்னைக் கூப்பிடுங்கள்" என்றாள்.

"எனக்குத் தேவையாக யிருந்தால் உன்னைக் கூப்பிடுகிறேன்" என்று கூறி விட்டு ஸ்ரீமதி ஊ, தனது அறைக்குள் சென்று விட்டாள்.

அவள், கட்டிலில் படுத்து வெகு நேரமாகியும் அவளால் தூங்க முடியவில்லை. நள்ளிரவுக்குச் சற்று முன்பு அவள் எழுந்து அடுத்த அறைக்குச் சென்று ஒரு மெழுகுவர்த்தியைப் பொருத்திக் கொண்டு, தூங்கிக் கொண்டிருந்த அப்பெண்ணைக் கூர்ந்து பார்த்தாள். வலது புறமாக சாய்ந்தவாறு, தனது கையைக் கன்னத்தின் அடியில் வைத்துக் கொண்டு, அப்பெண் புரளாமல், அசையாமல் படுத்திருந்தாள். வாயை மூடி, சுலபமாகச் சுவாசித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய சிவந்த முகம் அவள் விழித்திருக்கும்போது இருப்பதை விட

தூங்கும்போது அதிக அழகோடு விளங்கியது. ஸ்ரீமதி ஊ அப் பெண் புரளாமல், குறட்டை விடாமல் படுத்திருப்பதைக் கவனித்தாள். போர்வை இடுப்பு வரை ஒழுங்காக இழுத்து விடப்பட்டிருந்தது. அவள் தனது நூல் உள் அங்கிகளை அணிந்து படுத்திருந்தாள். ஆனால் கழுத்துப் பட்டையைத் தளர்த்தி விட்டிருந்ததால் அவளுடைய வட்டக் கழுத்தும் உடலில் சிறிது பாகமும் தெரிந்தன. அவளுடைய உடல் அழகும் வளவனமும் உறுதியும் பெற்றிருந்தது.

அவள் இன்னமும் விழித்துக் கொள்ளாமலே நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அது நல்லது தான்! ஸ்ரீமதி ஊ எப்போதும் மிக லேசாக நித்திரை செய்பவள். ஸ்ரீமான் ஊ இப்படி அப்படித் திரும்பினால் கூட விழித்துக் கொண்டு மீண்டும் தூங்க முடியாமல் கஷ்டப்படுவாள். ஆனால் இப் பெண் இரவில் நன்றாகத் தூங்கி, காலையில் பூரண உற்சாகத்தோடு எழுந்திருப்பாள். ஸ்ரீமதி ஊ, கையிலிருந்த மெழுகுவர்த்தியை விலக்கிப் பிடித்துக் கொண்டு, அப் பெண்ணின் முகத்தருகே குனிந்து பார்த்தாள். இப்போதும் அதே இனிமையான சுவாசம்! பிறகு நிமிர்ந்து, தனது அறைக்குச் சென்று, இரு விரல்களால் மெழுகுவர்த்தியைக் கிள்ளி, அணைத்து விட்டு, மீண்டும் படுத்துக் கொண்டாள்.

விடிவதற்கு முன், அடுத்த அறையிலிருந்து வந்த சிறு சப்தங்களால் அவள் விழித்துக் கொண்டாள். மூங்கிற் கட்டில் ஒசைப்பட்டது. யாரோ நடக்கும் சப்தம் கேட்டது. அவள் வழக்கம்போல் உடனே நன்றாக விழிப்படைந்தவளாய், கவனமாகக் காது கொடுத்து கேட்டபடி படுத்திருந்தாள். அப் பெண், இந்நேரத்தில் எங்காவது ஓடி விடுவதற்குத் தயார் செய்து கொண்டிருக்கிறாளா என்ன? அவள் எழுந்து, தனது ஆடைகளைச் சரி செய்து கொண்டு, மெழுகுவர்த்தியை ஏற்றி எடுத்துக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்றாள். அந்தப் பெண் ஒரு முக்காலியின் மீது உட்கார்ந்து கொண்டு, தன்னுடைய நீண்ட கூந்தலை வாரிக் கொண்டிருந்தாள். காலில் மேஜோடு, செருப்பு முதல் கொண்டு எல்லாவற்றையும் அணிந்து தயாராக இருந்தாள் அவள்.

"எங்கே போகப் போகிறாய் நீ?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. அவளுடைய குரலைக் கேட்டு அப்பெண் திடுக்கிட்டுப் போய் தன் கையிலிருந்த பெரிய மரச் சீப்பைக் கீழே போட்டு விட்டாள். அவளுடைய தலை மயிர் அவளது முகத்தின்மீது தொங்கிக் கொண்டிருந்தது.

"நான் எங்கேயும் போகவில்லை" என்று கூறி எழுந்து நின்ற அவள் ஸ்ரீமதி ஊவையே கண்ண கொட்டாமல் பார்த்தாள். தலை மயிருக்கிடையே அவளுடைய கரிய விழிகள் பள பளவெனப் பிரகாசித்தன. "நான் இப்போதுதான் எழுந்து கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"ஆனால் இந்த நேரத்தில் எதற்காக எழுந்து கொண்டிருக் கிறாய்?" என்று மீண்டும் கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

அந்தப் பெண் ஆச்சரியத்துடன், "எழுந்திருக்கும் நேர மாகி விட்டதே. ஒரு காக்கை கத்துவதைக்கூட கேட் டேனே" என்றாள்.

ஸ்ரீமதி ஊ திடீரென்று விசித்திரமாகச் சிரித்து விட்டு, "நீ எதற்காக எழுந்திருக்கிறாய் என்பதை என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. ஆம், நீ ஒரு நாட்டுப் புறத்துப் பெண் அல்லவா! ஆனால், குழந்தாய், நீ இங்கு இந் நேரத்தில் எழுந்திருக்க வேண்டிய அவசியமில்லை. வேலைக் காரர்கள் கூட இன்னும் ஒரு மணி நேரத்திற்கு எழுந்திருக்க மாட்டார்கள். அதற்குப் பிறகு ஒரு மணி நேரம் கழித்துத் தான் நாங்கள் எழுந்திருப்போம்" என்று கூறினாள்.

"அப்படியானால் நான் மறுபடியும் படுத்துக் கொள்ள வேண்டுமா?" என்றாள் அப்பெண்.

"பின் வேறு என்ன செய்வாய்?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அப் பெண், "நான் இந்த அறைகளைப் பெருக்குகிறேன் அல்லது வெளி வாசலைப் பெருக்குகிறேன்" என்றாள்.

"நல்லது, உன்னிஷ்டம் போல் செய்" என்று பதிலளித் தாள் ஸ்ரீமதி ஊ.

"நான் சப்தமிடாமல் செய்வேன். நீங்கள் மறுபடியும் போய்த் தூங்குங்கள், அக்கா" என்று கூறினாள் அப்பெண்.

ஸ்ரீமதி ஊ, மறுபடியும் சென்று படுத்துக் கொண்டாள். அப் பெண் தாழ்வாரத்திலிருந்து கண்டெடுத்த ஒரு விளக்கு மாற்றால் பெருக்கும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவள் அவ்வாறு உள்ளேயும் வாசலிலும் பெருக்கும்போது, மிக ஜாக்கிரதையுடன் ஒசைப்படாமல் காலடியெடுத்து வைத்தாள். பிறகு அவளையுமறியாமல், ஸ்ரீமதி ஊ தூக்கத்தி லாழ்ந்துவிட்டாள். அவள் மறுபடி விழித்துக் கொண்டபோது வெகு நேரமாகியிருந்தது. அறைக்குள் சூரிய வெளிச்சம்

நன்றாகப் பரவி யிருந்தது. படுக்கை யருகே இங் காத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அவள் அவசரமாக எழவும் அலங்கரிக்கும் வைபவம் ஆரம்பித்தது. இங், அப் பெண்ணைப் பற்றி ஒன்றும் கூற வில்லை. ஸ்ரீமதி ஊவும் ஒன்றும் கேட்கவில்லை. அறைக்குள் நிசப்தம் நிலவி யிருந்தது. எவ்வித சப்தமும் அவள் காதில் விழவில்லை.

அந்த மௌனம் சகிக்கக் கூடாமல் போகவே ஸ்ரீமதி ஊ, "எங்கே அந்தப் பெண்?" என்று இங்கைக் கேட்டாள்.

அதற்கு இங், "அவள் அங்கு வாசலில் தைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் ஏதாவது செய்ய வேண்டு மென்றாள். ஆதலால் நான் குழந்தைகளின் செருப்புத் துணிகள் சிலவற்றைக் கொடுத்தேன்" என்று பதிலளித்தாள்.

அவளுடைய குரலில் தொனித்த ஏளனத்தைக் கண்டு, அப்பெண் சுறுசுறுப்பாக ஒரு வேலைக்காரியைப்போல், வேலை செய்ய விரும்புவதை அவள் ஒரு பெரிதாக மதிக்கவில்லை என்பதை ஸ்ரீமதி ஊ புரிந்து கொண்டாள். அவள் மேலே ஒன்றும் கூறவில்லை. இங்கின் விருப்பு வெறுப்பைக்கொண்டு அவள் எதையும் தீர்மானிக்கப் போவதில்லை!

காலை யுணவை அருந்தி விட்டு, அவள் வெளி வாசலுக்குச் சென்றாள். அங்கு, அப் பெண் மூங்கில் மரத்தின் நிழலில் ஒரு சிறு முக்காலியின் மீது உட்கார்ந்திருந்தாள். செருப்பிற் கான மொத்தத் துணியை, அவள் தன் விரல்களால் லாகவ மாக ஊசியை நுழைத்து, வேகமாக தைத்துக் கொண்டிருந் தாள். அவள் தன்னுடைய நடு விரலில் ஒரு பித்தளை மோதிரத்தை விரலுறையாக அணிந்திருந்தாள். ஸ்ரீமதி ஊவைப் பார்த்ததும் அவள் எழுந்து பேசாமல், அவள் சொல்லுவதைக் கேட்கத் தயாராக நின்றாள்.

"உட்கார்ந்து கொள்" என்று கூறி விட்டு ஸ்ரீமதி ஊ, அங்கிருந்த தோட்டத்துப் பளிங்கு ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டாள்.

அவள் உட்கார்ந்திருந்தது, அவ் வாசலில் இருந்த வட்டக் கதவு, அவளுக்கு நேர் பின்புறத்தில் இருக்கும்படி இருந்தது. அப் பெண் அக் கதவை நேரே நோக்கியவாறு உட்கார்ந்திருந் தாள். அவள் மறுபடியும் முக்காலியின் மீது உட்கார்ந்து கொண்டு, ஊசியைக் கையில் எடுத்ததும், நிமிர்ந்தவள்

கதவருகே யாரோ நிற்பதைப் பார்த்து விட்டாள். ஸ்ரீமதி ஊ, அவளுடைய பெரிய விழிகள் உயர்ந்து மீண்டும் தாழ்ந்து விட்டதையும் அவளுடைய கன்னங்களின் சிவப்பு நிறம் இன்னும் அதிகமானதையும் கவனித்தாள். அப் பெண்ணின் இந்த நடத்தையிலிருந்து, அது யாராவது ஆண் பிள்ளையாக இருக்க வேண்டும். ஒரு வேளை அது சமையற்காரனாக இருக்க லாம் என்று எதிர்பார்த்துத் திரும்பினாள்.

ஆனால் அவன் சமையற்காரன் அல்ல. அவன் ஊவி னுடைய மூன்றாவது மகன் பெங்மோ. அவன் ஒரு கையால் கதவின் ஒரு பக்கத்தைப் பிடித்தவாறு, அப் பெண்ணையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

"பெங்மோ, உனக்கு என்ன வேண்டும்?" என்று ஸ்ரீமதி ஊ கேட்டாள்.

அவன் அவ்விதம் அவள் எதிர்பாராதவாறு வந்து விட்டதைப் பற்றி அவளுக்கு மிக்க கோபம் உண்டாயிற்று. இந்த மகனிடம் தனக்கு எப்போதுமே அன்பு குறைவு என்பதை அவள் அறிவாள். இவன் லியாங்மோ, த்ஸேமோ வைப் போல் பணிவாக யில்லாமல் முரட்டுக் குணமுடைய வனாகயிருந்தான். சிறிய என்மோவைப் போல் விளையாட்டுத் தனமாகவும் இல்லை. அவன் சிறியவனாக யிருக்கும்போது குடும்பத்தாருடன் இருப்பதைவிட வேலைக்காரர்களுடன் இருப்பதையே அதிகம் விரும்புவான். அவள் இதை அவனு டைய தாழ்மைக்கு ஒரு அறிகுறியாகக் கருதினாள். அவள் வெளிப்படையாக மற்றவர்களை நடத்தியது போலவே இவனை யும் நடத்திய போதிலும், தன்னுடைய மனதில், அவனிடம் அன்பு குறைவு என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இந்த வித்தியாசத்தை உணர்ந்திருந்தானாதலால், தனது பதினேந் தாவது வயதிலிருந்தே, அவன் அவள் சொல்லியனுப்பினா லொழிய அவளிடம் வருவதில்லை.

அவன் பதிலளிக்காததைக் கண்டு ஸ்ரீமதி ஊ மீண்டும், "பெங்மோ! நீ எதற்காக வந்தாய்?" என்று கேட்டாள்.

அவன் இன்னும் அப்பெண்ணின் மேலிருந்த தனது கண்களை எடுக்கவில்லை. அதை உணர்ந்தவள்போல் அப்பெண் மீண்டும் ஒரு முறை தன் கண்களை உயர்த்தி அவனைப் பார்த்து விட்டுத் தாழ்த்திக் கொண்டாள்.

பெங்மோ, தடுமாற்றத்துடன், "நான்—நான்—நீ சுகமா என்று பார்த்து விட்டுப் போக வந்தேன்—அம்மா—" என்றான்.

"நான் நன்றாகத் தானிருக்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ உள்ளடங்கிய கோபத்துடன்.

"வேறு விஷயமும் பேச வேண்டும்" என்றான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊ எழுந்து, "அப்படியானால் புத்தக அறைக்குப் போவோம் வா" என்றாள்.

அவள் முன்செல்ல, அவன் அவளைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றான். ஆனால் இருவரும் உட்காரவில்லை. அவன் அப்பெண்ணிருந்த பக்கம் கையைச் சுட்டிக்காட்டி, "அம்மா, இதுவா அப்பெண்?" என்று கேட்டான்.

ஸ்ரீமதி ஊ, "பெங்மோ! இதைக் கேட்பதற்காகத் தான் இங்கு வந்தாயா? இது உன்னுடைய விஷயமல்ல" என்றாள் கடுமையாக.

அவன் ஆர்வத்துடன், "ஆம், அம்மா. என்னையும் சம்மந்தப்பட்டது தான் இது. நான் எனக்காகச் சொல்லுகிறேனென்று எண்ணுகிறாயா! என்னுடைய நண்பர்களெல்லாம் என்னைப் பார்த்துப் பரிகசிப்பார்கள்..." என்றான்.

"இதைத்தான் என்னிடம் சொல்ல வந்தாயா?" என்று ஸ்ரீமதி ஊ வினவினாள்.

"ஆம்" என்று கத்திய பெங்மோ, "முன்பே மோசமாக இருந்தது. அதுவும் அவளைப் பார்த்த பிறகு—அவள் மிகவும் சிறியவள்—அப்பாவோ—எவ்வளவு வயதானவர்" என்று கூறினான்.

ஸ்ரீமதி ஊ அதே கடுமையான குரலில், "நீ இப்போதே உன்னுடைய அறைக்குத் திரும்பிச்செல்! நீ முதலில் ஒரு ஆளை அனுப்பி எனக்கு இப்போது சௌகரியமா இல்லையா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் வந்ததே பெரிய அதிகப்பிரசங்கித்தனம்! அப்பாவின் விஷயத்தைப் பொருத்த வரை, நீ அதில் தலையிட வேண்டியதில்லை. பெரியவர்களுக்கு சிறியவர்களின் யோசனை தேவையில்லை" என்று கூறினாள்.

அவளுக்கு பெங்மோவின் பிடிவாதம் நன்றாகத் தெரியும். ஆதலால் இப்போது அவனுடைய பிடிவாதம் தளர்ந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். அவனுடைய அழகியமுகம் சிவந்து துடித்தது. அவன் மேலே வேறு வார்த்தையின்றி அறையையும் வாசலையும் கடந்து, பின்னால் ஒரு முறைகூட திரும்பிப் பாராமல் சென்று விட்டான்.

ஆனால் ஸ்ரீமதி ஊ இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து விட்டதைப் பற்றி மிகுந்த கவலையுற்றாள். அவள், பழைய வழக்கங்களில், தனக்கு உசிதமாகத் தோன்றுத வற்றைச் சற்றும் தயங்காமல் ஒதுக்கித் தள்ளி விடுவது வழக்கம். அப்படியிருந்த போதிலும், ஆண் பெண்களை இளம் வயதில் தனித்தனியே பிரித்து வைக்கும் வழக்கத்தை மட்டும் விடாமல் பின்பற்றி வந்தாள். இந்த வீட்டில், அவள், தன்னுடைய பிள்ளைகளை ஏழு வயதுக்கு மேல் பெண்களிட மிருந்து தனியே விலக்கி வைத்து விடுவது வழக்கம். இது விஷயத்தில், பையன்கள் கேட்கும் கேள்விகளுக்கு முட்டாள் தனமாகப் பதிலளிக்கும் வேலைக்காரர்களைக் கூட அவள் கண்டிப்பதில்லை. ஒரு தடவை, பெங்மோ, வீட்டுக் காரியஸ் தனை, "ஏன் என்னை இப்போதெல்லாம் என் சொந்தக்காரப் பெண்களுடன் விளையாட விடுவதில்லை?" என்று கேட்டுக் கொண்டிருப்பதை அவள் பார்த்தாள்.

அதற்கு அந்த ஆள், "பையன்களும் பெண்களும் சேர்ந்து விளையாடக் கூடாது. விளையாடினால் காலில் புண் வந்து விடும்" என்று பாதி விளையாட்டாகக் கூறினான்.

எப்போதும் மூடத்தனத்தை உடனே திருத்த முயலும் ஸ்ரீமதி ஊ இதற்குப் பேசாதிருந்து விட்டாள்.

இப்போது பெங்மோ, அப்பெண் இந்த வீட்டில், தன்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன் அவளைப் பார்த்து விட்டான். அவளும் அவனைப் பார்த்து விட்டாள். இதிலிருந்து என்ன விபரீதம் விளையும் என்பதை யாரால் சொல்ல முடியும்? அவள் அறையில் முன்னும் பின்னுமாக நடக்கலானாள். ஒவ்வொரு முறையும் அவள் அக் கதவைத் தாண்டிச் சென்றபோது, அப்பெண் அச்செருப்புத் தையில் கவனமாகத் தன் கழுத்தைக் குனிந்து கொண்டு தைத்துக் கொண்டிருப்பதையும் அவளுடைய கைகள் ஊசியை உள்ளே விட்டுவிட்டு வெளியே இழுத்துக் கொண்டிருப்பதை யும் பார்த்தாள். அவளுடைய மனம் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தது. இவ் விஷயத்தை இப்போதே தீர்மானித்துவிட வேண்டியது தான். அவள் இப்பெண்ணை இங்கு, வைத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் அப்பெண் தனது கடமை இன்னது என்பதை நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். அவள் துரிதமாக நடந்து சென்று அப்பெண்ணினருகே உட்கார்ந்தாள்.

வெடுக்கென்று, "நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். நீ இந்த வீட்டில் இருக்கலாம்" என்றாள்.

கையில் ஊசியைத் துணியில் குத்துவதற்குத் தயாராக வைத்திருந்த அப்பெண் வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள். ஸ்ரீமதி ஊவைக் கண்டு மரியாதையுடன் எழுந்து நின்றாள்.

அவள் மூச்சைப் பிடித்துக் கொண்டு, "அப்படியானால் உங்களுக்கு என்னைப் பிடிக்கிறதா?" என்று கேட்டாள்.

"ஆம், அதாவது நீ உன்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்தாயானால்—உனக்குப் புரிகிறதா? நீ என்னுடைய எஜமானருக்குப் பணிவிடை செய்வதற்காக வந்திருக்கிறாய்... அதாவது என்னுடைய ஸ்தானத்தை சில விஷயங்களில் எடுத்துக் கொள்வதற்காக வந்திருக்கிறாய்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எனக்குப் புரிகிறது" என்றாள் அப்பெண் தீனமான குரலில். அவளுடைய கண்கள் ஸ்ரீமதி ஊவின் முகத்தில் பதித் திருந்தன.

ஸ்ரீமதி ஊ மேலும் தொடர்ந்து, "எங்கள் வீட்டில் இன்னும் சில பழைய வழக்கங்கள் எல்லாம் அப்படியே இருக் கின்றன என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். ஆண் களுடைய பகுதிக்கும் பெண்களுடைய பகுதிக்கும் எப்போதும் போக்குவரத்து கிடையாது" என்றாள்.

"ஆம், ஆம், அது சரி" என்று உடனே அதை ஆமோதித்த அப்பெண் தனது கைகளைக் கீழே தொங்க விட்டுக் கொண் டாள். ஆனால் அவளுடைய கண்கள்மட்டும் அசையவில்லை.

தனது சுபாவத்திற்கு முற்றிலும் வேறுபட்டதான அதே கடுமையுடன் ஸ்ரீமதி ஊ, "அப்படியிருக்கும் பட்சத்தில் இந்தக் காரியத்தை முடிக்காமலிருப்பதற்கு ஒரு காரணமு மில்லை" என்றாள்.

"ஆனால் எனக்கு ஒரு பெயர் கிடையாதா? இவ்விட்டில் எனக்கு ஒரு பெயர் வேண்டாமா?" என்றாள் ஆவலுடன் அப்பெண்.

அவளுடைய இக்கேள்வி ஸ்ரீமதி ஊவின் மனத்தைத் தொடும்படியாக இருந்தது. அவள், "ஆம், உனக்கு ஒரு பெயர் வேண்டுமல்லவா? இதோ நான் கொடுக்கிறேன். நான் உனக்கு சியூமிங் என்று பெயர் வைக்கிறேன். அதன் அர்த்தம் பிரகாசம் நிறைந்த சரத்ருது என்பதே. இத்துப் பெயரிலேயே உன்னுடைய கடமை இன்னதென்பதை நன்கு விளக்கி விட்டேன். அவருடைய சரத்காலம் என்றாள்

அதைப் பிரகாசிக்கச் செய்வது உன்னுடைய கடமை" என்றுள்.

"சியூமிங்! என் பெயர் சியூமிங்" என்று அப்பெண் அப்பெயரைச் சுவைப்பவள் போல் கூறிக் கொண்டாள்.

* * *

4

ஸ்ரீமான் ஹ, ஸ்ரீமதி ஹவின் பக்கமே தலைகாட்டவில்லை. அது அப்படியே இருக்கட்டுமென்று அவளும் விட்டு விட்டாள். அவருடன் இத்தனை வருஷங்கள் பழகிய அவளுக்கு இப்போது அவர் மனதில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியாதா? அப் பெண் வேண்டாமென்று அவர் தீர்மானமாக இருந்திருந்தால், அவர் ஸ்ரீமதி ஹவிடம் வந்து கோபத்துடனும் உறுதியுடனும், ஏன் சற்று பரிகாசத்துடனும் கூட, வேண்டாமென்று மறுத்துக் கூறியிருப்பார். ஆனால் அவர் அவளருகே வராமல் தூரவே விலகி யிருந்தது, அவருக்கு அப் பெண் தமது அறைக்கு வருவது சம்மதம்தான் என்பதை நிரூபித்தது. அதோடு அவர் தமக்கு அவ்விருப்பம் இருப்பதைத் பற்றி தம் மனதிலேயே ஸ்ரீமதி ஹவிடம் வெட்க மடைந்திருந்தார். அவர் இதற்காக தம்மீதே வெறுப்படைந் திருக்கவும் கூடும். ஆனால் அவ்வெறுப்பு அந்த ஆசையை அடக்கும் அளவுக்குப் போதியதாக இருந்திராது என்பதும் அவளுக்குத் தெரியும். பொதுவாக அவர் எப்பேர்ப்பட்டவர் என்பதை அவள் அறிந்தவள் தான். அவருக்கு ஒரு உயர்ந்த மனிதனுடைய குணாதிசயங்கள் என்னென்ன என்பதெல்லாம் நன்றாகத் தெரியும். அதை வியப்பதோடு தாமும் அக்குணங் களை யடைய வேண்டுமென்ற ஆவலும் கொள்பவர். ஆயினும் தமது சரீரத்தின் தேவைகளைப் புறக்கணிக்க மாட்டாமல் அதற்குக் கட்டுப்பட்டுக் கிடக்கும் மனிதர்களின் ரகத்தைச் சேர்ந்தவர் அவர்.

அவரால் எப்படி ஒரு நல்ல விருந்தைச் சாப்பிட்டு அனுபவிக்கும் சுகத்தைத் துறக்க முடியாதோ, அதே போல் அவர் எவ்வளவுதான் உயர்ந்த ஒழுக்கத்தை விரும்பிய போதிலும், அவரால் ஒரு இளம் பெண்ணின் இன்பத்தைத் நிராகரம் செய்யமுடியாது. இத்தனை காலமாக ஸ்ரீமதி ஹ ஒருத்தியிடமே திருப்தியாக இருந்த போதிலும், அவர் அவ்வளவு வைராக்யம் கொண்டவரல்ல. ஆனால் ஸ்ரீமதி ஹ மட்டும், அழகில் சற்று குறைந்தவளாகவோ, அல்லது மனோவி என்ற பொறுப்பி லிருந்து சிறிதும் வழுவுபவளாகவோ இருந்திருந்தால், அவர் நிச்சயம் வேறு வீதம் சென்றிருப்பார். இதை அவருடைய மனம் நன்றாக அறியும். அவள் அவரை எல்லா விதத்திலும்

திருப்தி செய்ய மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டிருந்தாள். அவர் புத்தகத்திலிருந்து ஏதாவது ஒன்றை அறிந்துகொள்ள விரும்பினால் உடனே அவள் அதைத் தான் முதலில் படித்துப் பிறகு அவருக்குச் சொல்வாள். ஏதாவது அயல் நாட்டுப் பண்டங்களைப் பற்றி அவர் தெரிந்துகொள்ள ஆவலுற்றால், அவள் அதை அறிந்து அவருக்குத் தெரிவிப்பாள்.

இத்தனை வருஷங்களில் அவருடைய எந்த ஒரு ஆசையும் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததில்லை. இது எப்படி யென்றால், அவள் எப்போதும் அவருடைய விருப்பங்களை சொல்லு முன்னரே ஊகித்து அறிந்து கொள்வாள். அவருக்கே இன்னதென்று தெளிவாகயிராத ஆசையிருந்தால், அதை அவள் சாமர்த்தியமாக அவருடன் பேச்சுக் கொடுத்து அது வெளிப்படும்படிச் செய்வாள். அது நிவிரமாகவும் அவசரமாகவும் இருந்தால், அதைப் பூர்த்தி செய்வதில் சற்றும் தாமதிக்க மாட்டாள். இவ்வாறு அவள் அவருக்கு ஒரு உத்தம மனைவியாக இருந்திருக்கிறாள்.

ஆனால் அவளும் அவரிடம் அதிருப்தி கொண்டதில்லை. திடீரென அவளுக்கு அவரிடமிருந்து எவ்வித ஏமாற்றமும் உண்டாகவில்லை. முதலில் அவள் அவருடைய வியப்பும் வேடிக்கையும் குடிகொண்ட கேள்விகளை அவருடைய தடை பட்டிருந்த உள்ளத்தில் தோன்றிய எழுச்சி என்று எண்ணிக் கொண்டாள். ஏனெனில் அவர் பிறந்ததிலிருந்து தமது தாயிடமே வளர்ந்தவர். அவளுடைய மாமியார், தனது ஒரே பிள்ளையாகிய அவரைப் பெரியவரின் கண்காணிப்பில் விட வில்லை. பல குழந்தைகள் பிறந்தும் எல்லாம் இறந்து விட்டதால், எஞ்சிய இந்த ஒரே மகன் அவளுக்கு மிக அபூர்வ மாகவும் அருமையாகவும் இருந்தார். முதலில் பெரியவர், தம் மகனைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கவேண்டுமென்று விரும் பியபோது, பெரியம்மாள் அவருடன் கடுமையாகச் சண்டை யிட்டாள். இது பையனுடைய ஏழாவது வயதில் நடந்தது. அதுவரை, இம்மாதிரியான குடும்பங்களில் உள்ள வழக்கப்படி, பெரிய எஜமானர் பையனை, அவனுடைய தாயாருடன் இருக் கட்டுமென்று விட்டு வைத்திருந்தார். ஆனால் பையனுக்கு ஏழு வயதானதும் அவன் தமது படிப்புக்கு வரவேண்டிய காலம் வந்துவிட்டது என்று அவர் அறிவித்தார்.

பெரியம்மாள், அதற்குப் பின் ஒவ்வொன்றாக ஏதோ சாக்குபோக்குச் சொல்லிக்கொண்டு வந்தாள். முதலில் அவனுக்குத் தொண்டையில் கோளாறு ஏற்பட்டது. ஆதலால் அவன் இரவில் அவனைக் கவனித்துக் கொள்வதற்காக

அங்கேயே வைத்திருக்க வேண்டியிருந்தது. அடுத்தபடியாக பையன் நன்றாகச் சாப்பிடுவதில்லை. அவனை நயத்தினால்தான் சாப்பிட வைக்கவேண்டும் என்று கூறினாள். பெரியவர் கண்டிப்பாக இருந்தால் அவள் அழுவாள். அவர் கோபம் கொண்டால் இவள் அதற்குமேல் கோபம் கொள்வாள். ஆனால் பெரியவர் கல்லினும் கடுமையாக இருந்ததால் கடைசியாக அவள் விட்டுக் கொடுக்கும்படி நேரிட்டது. பையனுக்கு ஒன்பது வயது ஆனதும் அவன் தன் தந்தையின் படுக்கை யறைக்கு அடுத்திருந்த ஒரு சிறிய அறைக்கு வந்துசேர்ந்தான். பெரியவர் தமது ஒரே மகனை அவனுக்குக் கல்வியும் ஒழுங்கும் புகட்டுவதற்கு முனைந்தார்.

அந்தோ, இந்த சிறு அறையிலும், மறுபக்கத்தில் வேறு ஒரு கதவு இருந்தது! அக்கதவின் மூலம் அவ்வடங்காத அழகிய சிறுவன், இரவில் தனது தாயிடம் மெல்ல நழுவிச் சென்று விடுவான். பெரியவர் பொறுமையுடனும் அன்புடனும் தம் மகனுக்குப் போதித்ததெல்லாம் ஒன்றிற்கும் உதவாமற் போயின. அவர் தன்னடக்கத்தை அவனுக்குப் போதித்துக் கொண்டிருக்க, அங்கே அவன் தாய், தனது அன்பின் மிகுதியினால் அவன் படித்துக்கொண்டிருக்க வேண்டிய நேரத்தில், அவனுக்கு விளையாடுவதற்கு உதவி செய்தாள். தின்பதற்கு ருசியான, உயர்ந்த தின்பண்டங்களைக் கொடுத்தாள். அவற்றை அதிகமாகச் சாப்பிட்டு அவனுக்கு வயிற்று வலி உண்டானபோது அவள் அவ்வலியைப் போக்குவதற்காக அவனுக்குக் கஞ்சா குடிக்கும் வழக்கத்தைக் கற்று கொடுத்தாள். பையனுடைய சொந்த தேகநிலையும், அவனுடைய துறுதுறுத்த குணமும்தான் அவனை கஞ்சா குடிப்பதிலிருந்து காப்பாற்றியது. இவ்விதமாக, பையன் இருபது வயதடைந்தபோது, பெரியவர் தமது மனைவி தம்மை ஜெயித்து விட்டதைக் கண்டார். பிறகு கடைசியாக ஒரு முறை தம் மகனை எச்சரித்துவிட்டு அவனுக்குப் போதிக்கும் முயற்சியைக் கைவிட்டார்.

அவர் எச்சரிக்கை செய்கையில் முடிவாக, "மகனே! நீ ஆண்களோவிட பெண்களே சிலாக்கியமென்று உன் தந்தையை விட்டு உன் தாயையே தேர்ந்தெடுத்துக் கொண்டாய். காரிய சித்தியைக் காட்டிலும் உனக்கு சுகமே பெரிதாகி விட்டது. பரவாயில்லை. அப்படியே இருக்கட்டும்! ஆனால் இப்போது வீட்டின் நன்மையை உத்தேசித்து நாம் செய்ய வேண்டியது, உன் பலஹீனத்தைப் போக்கக் கூடிய ஒரு பெண்மணியை உனக்கு மனைவியாகத் தேர்ந்தெடுக்க வேண்டியதுதான்" என்று கூறினார்.

மகன், தனது தந்தையின் குரலில் தொனித்த வியாகூலத்தைக் கண்டு பெரிதும் பயமடைந்து போனான். அவ்வாறு பீதியடைந்து போகும்போது அவன் எப்போதும் தன்னுள் கூடியவரை விரைந்து தன் தாயிடம் சென்று விடுவான். இப்போதும் அங்கே சென்று, சில நிமிஷங்களில் தன்னுடைய மன சஞ்சலத்தை மறந்தான்.

இதற்குப் பிறகு, கொஞ்ச நாட்களிலேயே, ஸ்ரீமதி ... அவ்வீட்டிற்கு வந்து விட்டாள். அவளுக்குக் கல்யாணமான பத்தாவது நாள், அவளுடைய மாமனார் அவனைத் தமது அறைக்கு வரும்படி சொல்லியனுப்பினார். அவளிடம் தம் மகனைப் பற்றி இவ்வாறு கூறினார். "அவன் நீ எப்படி உருவாக்குகிறாயோ அவ்வாறே ஆகிறவன். சிலர் தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்கிறார்கள். ஆனால் இவன் எப்போதுமே பெண்களினால் உருவாக்கப்பட வேண்டியவனாகத்தான் இருப்பான். ஆயினும் இதை அவன் அறியும்படி நீ நடந்து கொள்ளக்கூடாது. அவனுடைய பலஹீனத்திற்காக ஒருபோதும் அவனைக் குறை கூறாதே. அப்படிச் செய்தால் அவனுக்கு இருக்கும் சக்தியும் போய்விடும். நீ யில்லாவிடில் அவன் ஒன்றிற்கும் உதவாமற் போய் விடுவான் என்று எண்ணும்படி நீ விடக்கூடாது. ஏனெனில் அப்போது அவன் உண்மையிலேயே மிகவும் உதவாக் கரையாகப் போய் விடுவான். அவனிடமுள்ள ஒரு சில பலம் வாய்ந்த சக்திகளைப் பிடித்துக் கொண்டு நீ உன்னுடைய கட்டிடத்தைக் கட்டிக்கொள்ள வேண்டியது தான். அவனுடைய சக்திகள் குன்றியிருக்கும் இடத்தில் அவற்றை ஒருபோதும் நம்பாதே. உன்னுடைய சக்தியைக் கொடுத்து ரகசியமாக உதவு" என்று கூறினார்.

அவள் அப்போது வயதில் மிகவும் சிறியவள். அவளுடைய புதிய இளம் கணவன் அழகும் வெளவனமும் கொண்டவனாகயிருந்தான். அவள் கணவனின் புதிய காதலில் மூழ்கியிருந்தாள். அவளுக்கு அப்போது எதைப் பற்றியுமே பயம் தோன்றவில்லை.

அவள் வெகுளியாக, அவரை நோக்கி, "நான் அவரைக் காதலிக்கிறேன்" என்றாள்.

அவர் திடுக்கிட்டுப் போனார். ஏனெனில் பெண்கள் இவ்வளவு துணிச்சலாகப் பேசுவது வழக்கமில்லையல்லவா! ஆனால் அவள் இவ்வார்த்தைகளைக் கூறியபோது, அவளுடைய குரலில் இருந்த இனிமையையும் மிருதுத் தன்மையையும்,

முகத்தில் தோன்றிய கள்ளங்கபடமற்ற மேன்மையையும் கண்டபோது அவருக்கு அவளைக் கண்டிக்க மனம் வரவில்லை.

கண்டிப்பதற்குப் பதில் அவர் தம் தலையை சற்று சாய்த்துக்கொண்டு, "அப்படியானால் ஒரு பெண்ணிடம் இருக்கக் கூடிய மிகக் கூரிய ஆயுதம் உன்னிடம் இருக்கிறது" என்றார்.

பத்து வருஷங்களுக்கு முன்புதான் ஸ்ரீமதி ஊ தான் மணந்து கொண்ட அம்மனிதரை ஒருவாறு பூரணமாக அறிந்து கொண்டாள் என்று சொல்லலாம். அவரிடம் அவளுக் கிருந்த ஆர்வத்துடன் கூடிய அன்பு இன்னமும் சற்றும் குறைய வில்லை. அவருடைய மனம், ஆத்மா இவைகளின் எல்லையை, அவள் மிகமிக மெதுவாக, படிப்படியாக, ஏமாற்றத்தின் வேதனையை உணராதபடி, அவ்வளவு மெதுவாக அறிந்து கொண்டாள். இவை அடங்கியிருந்த எல்லை மிகவும் குறுகியது. முதலில் அவருடைய ஆவலும் வியப்பும் தோய்ந்த கேள்விகளை அவருடைய அறிவின் கிளர்ச்சி என்று எண்ணி வியந்த அவள் நாளடைவில் அவை சாரமற்ற வார்த்தைகள் என்பதைக் கண்டு கொண்டாள். அவை பொழுதைப் போக்க ஒரு வழியேயன்றி வேறில்லை. அதற்கு முடிவு என்பதும் இடையாது. ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையிலேயே அவருக்கு அதில் அலுப்புத் தோன்றி அதை மேலும் ஆராய்வதை விட்டு விடுவார். பின் அவருடைய அடுத்த ஆவல் எதில் சென்றிருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து அதைப் பூர்த்தி செய்வது அவளது கடமை!

இச்சமயத்தில்தான் அவள், அவருடைய எல்லைக்குள் ளேயே அடங்கியிருப்பதை விடுத்து, அதை விட்டு வெளியேறி தனது சொந்த அறிவின் எல்லையை அது போகும்வரை விடுக்க லானாள். ஆனால் இதை அவள் அவரிடம் கூறவில்லை. உண்மையில் அவர், அவள் சொல்லுவதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலிருக்கையில் எதற்காக அவள் கூற வேண்டும்? ஆனால் அவருடையது, அவருடைய எல்லைக்குள் இன்னமும் அவருக்கு வேண்டிய அளவு மிகுந்திருந்ததால் அவர், அவள் தம்முடனேயே இருக்கிறாள் என்று எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் அவள் அப்போதே தன்னுடைய நாற்பதாவது பிறந்த நாளைப் பற்றிக் கனவு காண ஆரம்பித்திருந்தாள். அந்நாள் வந்தால் தான் என்னென்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் திட்டம் வகுக்கலானாள்.

இன்று அவள் தனக்குள், ஸ்ரீமான் ஊவிடம் தானே சென்று, சியூமிங் என்ற அப்பெண் வந்து விட்டதைப் பற்றியும், அவள் தயாராகயிருக்கும் விஷயத்தைப் பற்றியும் அறி

வித்து வரவேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டாள். வேலைக்காரர்களின் மூலம் இதை அவர் முன்பே அறிந்திருப் பார். ஆயினும் அவள் தானே சென்று இதை அவரிடம் சொல்லத்தான் வேண்டும். பெங்மோ அப்பெண்ணைப் பார்த்து விட்டதால், இனி தாமதம் செய்வது சரியல்ல. ஒரு வாலிபன் ஒரு இளம்பெண்ணைப் பார்ப்பதில் பிரமாதமாக ஒன்றும் இல்லாமலிருக்கலாம். ஆயினும் அது பிரமாதமாக ஆகவும் ஆகலாம். இளமையின் இத்தருணத்தில், இம்மாதிரியான யதேச்சையான எவ்வித சந்திப்பும், பெரும் விபரீதத்தை உண்டு பண்ணக் கூடும். ஸ்ரீமான் ஊவின் மனம் நல்ல நிலையிலிருந்தால், சியூமிங்கை கூடிய விரைவில் தயார் செய்து அவரிடம் அனுப்பி விடுவதே உசிதமான செயல்.

வேனிற்காலத்தின் ஒளி நிறைந்த அன்று காலை, சியூமிங் சந்தோஷமாகவே காணப்பட்டாள். ஸ்ரீமதி ஊ, நல்ல ரகத்தைச் சேர்ந்த பூப்போட்ட நூல் துணிகளும், மத்திய ரகத்தைச் சேர்ந்த சில்க் துணிகளும் வாங்கி வரும் பொருட்டு இங்கைக் கடைக்கு அனுப்பியிருந்தாள். கடை குமாஸ்தா பலவகைத் துணிகளை எடுத்துக்கொண்டு வந்திருந்தான். இவைகளிலிருந்து ஸ்ரீமதி ஊ, சியூமிங்கிற்கு மூன்று மாற்று உடைகள் தைப்பதற்குப் போதுமான துணிகளைப் பொறுக்கி எடுத்தாள். அவள் அப்பெண்ணை மகிழ்விக்க விரும்பி, அவளையே தனக்குப் பிடித்த வர்ணமும் மாதிரியும் கொண்ட துணிகளை எடுத்துக்கொள்ளுமாறு கூறினாள். அப்பெண் பகட்டாயிராத வெளுத்த வர்ணங்களையும் சிறிய பூக்களையுமே கொண்ட துணிகளை விரும்பி எடுத்துக் கொண்டதைப் பற்றி அவள் மகிழ்ச்சியடைந்தாள். அப்பெண் உடனே அத்துணி களைத் தானே தைப்பதற்கு உட்கார்ந்ததைக் கண்டு அவளுக்கு மேலும் திருப்தி உண்டாயிற்று.

சியூமிங், மேஜைக்கருகே நின்று கொண்டு, பூக்கள் போட்ட அந்நூல் துணியை முதலில் மேஜைமீது விரித்து வைத்தாள். பிறகு கையில் கத்தரிக்கோலை உயர்த்திப் பிடித்த வாறு சற்று நேரம் நின்றாள்.

"உங்களுடைய உடைகளைப் போல் கத்தரிக்கட்டுமா, அக்கா?" என்று கேட்டாள். அவள் அணிந்திருந்த உடை நாட்டுப்புறத்தவர்களுடையதைப் போல், கைகள் அகன்றும் உயரம் குறைந்தும் இருந்தது.

"இவ்விட்டின் பாஷனுக்கு ஒத்தபடி சரியாக வெட்டி இவ் உனக்குக் கற்றுக்கொடுப்பான்" என்று ஸ்ரீமதி ஊ பதிலளித்தாள்.

இங், துணியை அளவெடுத்து, அதை வெண்மையான சாக்கட்டியினுல் குறித்துக் கொண்டு, பிறகு சியூமிங்கின் கடைந்தெடுத்ததைப் போன்ற மெல்லிய உடலுக்குப் பொருந்துமாறு அதைக் கத்தரித்துக் கொடுத்தாள்.

அவள் இதைச் செய்து கொண்டிருக்கையில், அப்பெண் ஆனந்தத்தின் மிகுதியினுல் தன்வயமிழந்தவளாய் நின்ருள். "என்னுடைய வாழ்நாளில் புதிய உடையை நான் அணிந்ததில்லே" என்று மெல்லக் கூறினுள்.

துணிகளைக் கத்தரித்தானதும், அவள் ஊசியைக் கோர்த்துக் கொண்டு, தனது ஆள் காட்டி விரலில் பித்தளே மோதிரத்தை மாட்டிக் கொண்டு உட்கார்ந்து, ஆனந்தக் கனவில் மூழ்கியவளாய், மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் தைக்க ஆரம்பித்தாள். இங், அவளுடையதையல் சிறியதாயும் ஒழுங்காகவும் இருக்கிறதா என்று கவனித்தாள். சியூமிங் கைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீமதி ஊவின் நெஞ்சில் தான் அப்பெண்ணுக்கு ஏதோ தவறிழைப்பது போன்று ஒரு இனம் தெரியாத வேதனே ஏற்பட்டது. அவள் உடனே ஸ்ரீமான் ஊவைப் போய் பார்க்கத் தீர்மானித்துக் கொண்டாள். பிறகு இங்கை, ஒரு நிமிஷம் அடுத்த அறைக்கு வரும் படி அழைத்துச் சென்று, அங்கு அப்பெண்ணிற்கு கேட்காத வாறு அவளிடம், "நீ அவளுக்கு உதவி செய்ய வேண்டும். உள்ளாடைகள், வெளியாடைகள் இரண்டும் ஒரு முறை அணிவதற்கு வேண்டிய அளவு சீக்கிரம் தயாராக வேண்டும். இன்றைய நிலேமை எப்படி இருக்கிறது என்று பார்த்துக் கொண்டு, நான் நானேக்கே அப்பெண்ணே இங்கேயிருந்து அனுப்பிவிடலாமென்று பார்க்கிறேன்" என்ருள்.

"சரி, அம்மா" என்ருள் இங், மகிழ்ச்சியோ துக்கமோ அற்ற குரலில் ஜாக்கிரதையுடன்.

பிறகு ஸ்ரீமதி ஊ, தன் அறையை விட்டு வெளியே சென்ருள். இங்கு வந்த பிறகு இப்போதுதான் அவள் தன் அறையை விட்டு முதல் தடவையாக வெளியே வருகிருள். கடமையின் காரணமாக அவள் தன் மாமியாரைப் பார்ப்பதற்காக நடுவில் தாமதித்தாள். பெரிய எஜமானி சுகத்துடனும், வழக்கத்தை விட அதிக குதூகலத்துடனும் தன் அறைக்கு வெளியே வாசலில் சூரிய வெளிச்சத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். பணிப் பெண் ஒருத்தி, அன்று சற்று வீக்கம் கொண்டிருந்த அவளது பாதத்தையும் கணுக்காலையும் எண்ணெய் போட்டு நீவிக் கொண்டிருந்தாள்.

பெரிய எஜமானி, "இது இந்த 'ஸ்ராப்கள்' செய்யும் வேலே, எப்போதும் அவை என் காலில் வீக்கத்தை உண்டு பண்ணுகின்றன. ஆனுல் எந்த நிமிஷம் சுவப் பெட்டியில் போய் படுக்கப் போகிருமோ என்ற நிலேயில் நான் இருக்கும் போது, இந்தக் காரணத்திற்காக நான் அதைச் சாப்பிடாமல் விடமுடியுமா? எப்படியும் எனக்கு என் கால்களால் ஒரு உபயோகமும் இல்லே. ஸ்ராப்களுடன் கூட, அதன் விஷத்தைப் போக்குவதற்காக நான் அதிக ஒயின் குடிக்கிறேன்" என்ருள்.

பெரிய எஜமானி, மருமகளோடு தான், அவள் ஒரு விலே மகளைக் கொண்டு வந்து வைப்பதற்காக, கோபம் கொண்டிருந்ததை அடியோடு மறந்து விட்டவள் போல் காணப் பட்டாள். ஸ்ரீமதி ஊவும் அதை அவளுக்கு நினேலூட்டவில்லே. அவள், கிழவியின் வீங்கியிருந்த காலேச் சோதித்துப் பார்த்து விட்டு, ரத்தம் கீழே இறங்குவதைவிட மேலே ஏறுவது நல்ல தென்று, அப் பணிப்பெண்ணே மேற்புறமாகத் தேய்க்கச் சொன்ஞள். பின் தன் வழியே சென்ருள்.

ஸ்ரீமான் ஊ தமது அறையில் இல்லாமல் அவளுடைய பழைய அறையிலேயே தான் இருப்பார் என்று எதிர் பார்த்து, அவள் அங்கேயே சென்ருள். அப்பகுதியில் இருந்த அவளது வெண்ணிற ஆர்ச்சிட் புஷ்பங்கள் வாடிக் கொண் டிருந்தன. அவள் குனிந்து அந்த இலேகளில் பூச்சிக்கூடு ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தாள். அவற்றில் ஒன்றும் காணப்படவில்லே. அதே சமயம் உள்ளே அறையில், ஸ்ரீமான் ஊ, இரவில் அணியும் ஆடைகளோடு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். உஷ்ணமாகயிருந்ததால், அவர் தொளதொள வென்றிருந்த ஒரு வெள்ளே சில்க் கால் சட்டையும் மேலே ஒரு குட்டையான அங்கியையும் அணிந்திருந்தார். பித்தான் போடாமல் விட்டிருந்த அவ்வங்கியின் கீழ் அவருடைய அழகிய மார்பு தெரிந்து கொண்டிருந்தது. அவர் மூங்கில் மரங்களின் வர்ணப் படம் வரைந்திருந்த வெண்பட்டு விசிறியினுல் விசிறிக் கொண்டிருந்தார். அவர் கையில் தேநீர் கிண்ணமும், மேஜை மீது அவர் காலேயுணவு அருந்தி விட்டு வைத்திருந்த பாத்திரங்களும் இருந்தன. ஆரோக்யத்துடன் கூடிய அவரது அழகிய முகத்தில் சிறிது குழப்பமும் வருத்தமும் தென்பட்ட தைக் கவனித்தாள் அவள். ஆனுல் பழைய வழக்கத்தினுல் அவன் முகமலர்ச்சியோடு, "இப்போது மறுபடியும் இங்கு பியோனிச் செடிகளே நடவேண்டிய காலம் வந்து விட்டது என்று நினேக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள், என் பிள்ளேகளின் தகப்பனுரே?" என்று கேட்டான்.

"நான் எப்போதுமே இந்த வெளுத்த ஆர்ச்சிட் புஷ்பங்களை விரும்புவதில்லை. ஏதாவது வர்ண புஷ்பங்களாக இருந்தால் நன்றாக இருக்கும்" என்று அவர் பதில் கூறினார்.

"இன்றைக்கே இவைகளை எடுத்து விட்டு பியோனிகளை வைத்து விடச் சொல்கிறேன். அவைகளை அப்படியே சட்டியோடு வாங்கி வைத்து விட்டால், அவை ஒரு தடங்கலுமில்லாமல் தாமாகவே பூத்துக் கொண்டிருக்கும்" என்று கூறினாள்.

அவர் எழுந்து மெதுவாக நடந்து அறையை விட்டு வெளியே வந்தார். வந்து அவளருகே நின்று கொண்டு, அந்த ஆர்ச்சிட் புஷ்பங்களை நோக்கலானார். "சிவப்பு, ரோஸ் பியோனிகளும் அவைகளில் ஐந்து ஐந்து செடிகளுக்கு இடையே ஒவ்வொரு வெள்ளையும் வைக்கலாம் இல்லையா?" என்று கணக்காகக் கூறினார்.

"அது சரியான கணக்கு தான்" என்று கூறி விட்டு, "என்மோ எங்கேயிருக்கிறாள்?" என்று கேட்டாள். அவளுடைய கடைசி பிள்ளை அநேகமாக எப்போதும் அவளுடைய தந்தையின் அருகில்தான் இருப்பான்.

ஸ்ரீமான் ஹ, விரக்தி நிறைந்த குரலில், "நான் நேற்று அவனைக் கிராமத்திற்கு அனுப்பி விட்டேன். இவ்விட்டில் நடந்து கொண்டிருக்கும் குழப்பங்களைத் தாங்க அவனுக்கு வயது போதாது" என்று கூறினார்.

"அது மிக மிக உசிதமான காரியம். உங்களுடைய யோசனையே எப்போதும் சிறந்தது தானே!" என்று கூறிவிட்டு அவள் அவரைக் கனிவுடன் நோக்கினாள். நல்ல உயரமுள்ளவர் அவர். சாப்பாட்டுப் பிரியராதலால் அவருடைய உடல் நல்ல வலுவுடனும் பொலிவுடனும் இருந்தது.

"இன்று எப்படி இருக்கிறீர்கள்? பார்ப்பதற்கு நீங்கள் 'ச்சுவின் ராஜகுமாரன்' போலல்லவோ இருக்கிறீர்கள்!" என்றாள் அவள்.

"நன்றாகத் தானிருக்கிறேன்" என்றார் அவர் பொறுமையற்ற குரலில். அதைக் கண்டு அவள் குறுநகை செய்தாள்.

"நான் உங்களை மறந்து விடவில்லை" என்று கூறிய அவளது குரலில் இனிமையும் அன்பும் மிகுந்திருந்தது.

"நீ மறந்து விட்டாய் என்றுதான் எண்ணினேன்" என்று அதிருப்தியுடன் கூறிய அவர், தமது மேல் சட்டையைத்

திறந்து, தமது மார்பை ஒரு கணம் வெகு வேகமாக விசிறிக் கொண்டார். "தனிமையில் நான் என்ன அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன்! நீ ஒரு தீர்மானத்திற்கு வரட்டுமென்று தான் காத்துக் கொண்டிருந்தேன். நான் உனக்கு நல்ல கணவனாக இருக்கவில்லையா, ஏய்லியன்? வேறு ஒரு மனிதனாகியிருந்தால் இத்தனை நாள் பிரிவைப் பொறுத்தேயிருக்க மாட்டான். இத்தனை நாளும், போதும்—சொல்லவே வேண்டாம்" என்றார்.

"நான் உங்களை ஒரு கணம் கூட மறக்கவில்லை. மிகவும் தீவிரமாகத் தேடி ஒரு இளம் பெண்ணைக் கண்டு பிடித்திருக்கிறேன். அவள் இப்போது இங்கு தான் இருக்கிறாள்" என்று கூறினாள் அவள்.

ஸ்ரீமான் ஹவின் முகம் சுபீரென்று மலர்ந்தது. "ஏய்லியன்! என்னிடம் மறுபடியும் அதைப் பற்றி பேசாதே" என்றார்.

"அவள் இங்கே இருக்கிறாள் என்பதை நீங்கள் கேள்விப் பட்டிருக்க வேண்டுமே" என்றாள் மேலும் ஸ்ரீமதி ஹ தனது தெளிவான குரலில்.

"நான் வேலைக்காரர்களுடைய பேச்சைக் காது கொடுத்து கேட்பதில்லை" என்று கூறிவிட்டு அவர் கம்பீரமாகப் பார்த்தார். ஆனால் அவள் அவர் தம்மைப் பற்றி ஜம்பமாக சொல்லிக் கொள்வது இது என்பதை அறிவாள். ஏனெனில் அவர் தமது வேலைக்காரன் சொல்வது எல்லாவற்றையும் காது கொடுத்து கேட்பது வழக்கம். அவனுடைய வேடிக்கையான பேச்சுக்களைக் கேட்டுச் சிரித்து மகிழ்வார். கோமாளித்தனமாகயிருந்த அவனும் தன் எஜமானருக்கு சிரிப்பது என்றால் மிகவும் பிடிக்கும் என்று தெரிந்து, வேடிக்கையாகப் பேசி அவரைச் சிரிக்க வைப்பான்.

ஸ்ரீமதி ஹ அங்கிருந்த ஒரு ஆசனத்தை நோக்கி நகர்ந்தாள். அதில் அமர்ந்து கொண்டு தனது வழக்கப்படி மடிமீது கைகளைச் சேர்த்து வைத்துக் கொண்டாள். அவள் மெல்ல, "அந்த இளம் பெண் மிகவும் ஏற்றவள் தான். யௌவனமும் ஆரோக்யமும் கொண்டவளாக மிருக்கிறாள். அழகாகவும் இருக்கிறாள். மிகவும் வெகுளியாக..." என்று கூறிக்கொண்டே போனாள்.

"உனக்குப் பொறுமை என்பது கொஞ்சமும் கிடையாதா?" என்று அவர் குறுக்கிட்டு மிக்க கோபத்துடன் கேட்டார். அக் காலை இளவெயிலில் அவர் அப்படி நின்று

கொண்டிருந்த தோற்றம் அவளுக்கு மிக்க உவகையை உண்டு பண்ணியது. பளபளவென்றிருந்த கரிய மயிர், பொன்னிற மேனி, அழகிய உதடுகள், துணிச்சலாகப் பார்க்கும் பெரிய கண்கள்...

அவள் புன்னகையோடு, "நீங்கள் இவ்வளவு சுந்தர புருஷராக இருப்பதற்கு, அப்பெண் மட்டும் ஒரு குழந்தையைப் போல் அவ்வளவு எளிய சுபாவத்தோடு, நமக்கு மத்தியில் அவள் ஒரு பொருட்டேயில்லை என்பது போல் இல்லாமலிருந்தால், நான் ஒரு வேளை பொறுமை கொள்ளலாம்" என்று கூறினாள்.

"நீ ஏன் இவ்வளவு கொடூரமுள்ளவளாகி விட்டாய் என்று தான் எனக்குப் புரியவில்லை. ஏய்லியன், போன வாரம் கூட எப்போதும் போல் இருந்தாயே...இப்போது..." என்று கூறினார் அவர் முறையிடும் குரலில்.

அவள் இன்னும் புன்னகை செய்தவாறே, "நான் என்னுடைய நாற்பதாவது பிறந்த நாளைக் கடந்து விட்டேன்" என்று கூறிவிட்டு, அருகிலிருந்த நாற்காலியைக் காட்டியவாறு, "வாருங்கள், உட்காருங்கள்" என்று அழைத்தாள் நயந்த குரலில்.

அவர் உட்காரும் போது, அவள் கதவருகே பெங்மோ வந்ததைப் பார்த்தாள். அவன் தன் பெற்றோர்கள் இருவரும் அருகருகே உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு, வேகமாகத் திரும்பிச் சென்றான்.

"பெங்மோ!" என்று அவள் கூப்பிட்டாள். ஆனால் அது அவன் காதில் விழவில்லை யாதலால் திரும்பி வராமல் சென்று விட்டான்.

அவள் ஸ்ரீமான் ஹுவிடம், "நம்முடைய மூன்றாவது பிள்ளையாகிய இவனுக்கும் கல்யாணம் செய்து வைத்து விடவேண்டும். நான் இப்போதே—அதாவது நாளைக்கு ஸ்ரீமதி கேங்கைப் பார்த்துப் பேசி, லின்யியைத் தரும்படி கேட்கட்டுமா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"எப்போதும் நீ தானே பிள்ளைகளுக்குப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கிறாய்!" என்று பதிலளித்தார் அவர்.

"த்லேமோ அவனைதான் பார்த்துக் கொண்டான்" என்று அவருக்கு நினைவூட்டிய அவள், "இந்தத் தவறு

பெங்மோவின் விஷயத்திலும் நேராமல் தவிர்க்க விரும்புகிறேன்" என்றாள்.

"நல்லது தான்" என்றார் அவர். லின்யியைப் பற்றி பேசியதில் அவருக்கு ஒருவித உற்சாகமும் ஏற்படாததைக் கண்டு அவள் திருப்தி கொண்டாள். அவர் அவளை மறந்து விட்டார். அவர் தம்மைப் பற்றித் தான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஏதோ ஒரு புதிய செட் துணிகளையோ ஒரு ஜதை பாதரக்ஷைகளையோ தருவிப்பவள் போல் அவள் அவரிடம் நேர்முகமாகப் பேசத் தீர்மானித்துக் கொண்டாள்.

"உங்களுக்கு ஆக்ஷேபம் ஒன்றுமில்லாமலிருக்கும் பக்ஷத்தில் அப்பெண்ணை நாளைக்கு உங்களிடம் அனுப்புகிறேன்" என்றாள்.

மீண்டும் ஸ்ரீமான் ஹுவின் முகத்தில் சிவப்பேறியது. அவர் தமது சட்டையின் சிறிய ஜேபியில் இருவிரல்களை விட்டு, அயல்நாட்டு சிகரெட் பெட்டி ஒன்றை வெளியே எடுத்து, அதிலிருந்து ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். பிறகு அப்புகைச் சுருள்களிடையே, "நீ எப்பேர்ப்பட்ட கொடூரமான பிடிவாதம் உள்ளவள் என்பது தான் எனக்குத் தெரியுமே! உன்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாகச் செல்வதென்றால் நான் முட்டிக் கொண்டு சாகவேண்டியது தான்! நான் எதற்குச் சாகவேண்டும்?" என்றார்.

"என்னுடைய பிடிவாதத்தினால் எப்போதாவது நான் உங்களுக்கு சந்தோஷக் குறைவை உண்டு பண்ணியிருக்கிறேனா?" என்று கேட்டாள். அவளுடைய குரலில் சிரிப்பு மிதந்தது. "அந்தப் பிடிவாதம் உங்களுடைய நன்மையை உத்தேசித்தே இருக்கவில்லையா?" என்றும் ஒரு கேள்வியைக் கேட்டாள்.

"என்னிடம் மீண்டும் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசாதே" என்று கூறி அவர் ஒரு முறை பெரும் புகையை ஊதி விட்டார். "அந்தப் பெண்ணைப் பற்றி மீண்டும் என்னிடம் பேசாதே" என்றார் கண்டிப்பான குரலில்.

"ஆம், அதைப் பற்றி நாம் எதற்கு பேசவேண்டும்" என்று ஆமோதித்த அவள், "நான் நாளை இரவு அவளை உங்களிடம் அனுப்புகிறேன்" என்றாள்.

• அப்போது வாசலின் கதவைத் தாண்டி வெளியே உருவம் செல்வதைக் கண்டான். அது லியாங்மோ என்பதை அறிந்து

கொண்டான். அவனும் அவ்வாசலைக் கடந்து செல்வதாகக் காணப்பட்டது.

"லியாங்மோ!" என்று அழைத்தாள் அவள். ஆனால் அவனும் போனவன் திரும்பி வரவில்லை.

ஸ்ரீமான் ஊ, சட்டென்று எழுந்து ஸ்ரீமதி ஊவிடம், "இப்போது தான் நினைவுக்கு வருகிறது. நான் டீக்கடையில் ஒருமனிதனை வந்து சந்திப்பதாகச் சொல்லியிருந்தேன். மூன்று தலை முறைகளுக்கு முன் என்னுடைய பாட்டனார் ஒருவர் தமது வேலைக்காரன் ஒருவனுக்கு, அவன் தமது உயிரைக் காப்பாற்றினான் என்பதற்காகக் கொஞ்சம் நிலம் கொடுத்திருந்தாராம் அல்லவா! அதை இப்போது நாம் மறுபடியும் வாங்கி விடலாம் என்று நமது காரியஸ்தன் கூறுகிறான். அந்த மனித னுடைய குடும்பத்தார் அதை விற்று விடத் தயாராக யிருக்கி றார்கள். அதை வாங்கினால் நமது நிலமும் முன் போல் ஆகி விடும்" என்றார்.

"மிகச் சிறந்த யோசனை. ஆனால் ஏக்கரின் ஐந்தில் ஒரு பாகத்திற்கு எழுபத்தைந்து டாலருக்கு மேல் செல்லக் கூடாது" என்று கூறினாள் அவள்.

"என்பது கொடுக்க வேண்டியிருக்கலாம்" என்றார் ஸ்ரீமான் ஊ.

"அதற்கு மேல் போகாமலிருந்தால் நல்லது. நாம் நம்மு டைய குழந்தைகளைப் பற்றியும் யோசிக்க வேண்டுமல்லவா?" என்றாள் அவள்.

"என்பதற்கு மேல் போகாது" என்று உறுதி கூறிய ஸ்ரீமான் ஊ திரும்பி தம் அறைக்குச் சென்றார். அவளும் எழுந்து தன் வேலையைக் கவனிப்பதற்காகச் செல்ல ஆரம்பித் தாள். ஆனால் வாயிற்படி வரை சென்ற ஸ்ரீமான் ஊ, திரும்பி அவளைப் பார்த்து, "ஏய்லியன், பின்னால் எவ்வித பழியையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது" என்று உரக்கக் கூறினார்.

"யார் உங்களைப் பழி சொல்ல முடியும்? சரி, அதிருக் கட்டும். அவளுடைய பெயரை உங்களுக்குச் சொல்ல மறந்து விட்டேனே! அவள் பெயர் சியூமிங். உங்களுடைய சரத் காலத்தில் அவள் பிரகாசம் கொடுப்பவளாக இருப் பாள்" என்று கூறினாள் அவள்.

ஸ்ரீமான் ஊ இதைக் கேட்டு, ஒரு முறை தமது வாயைத் திறந்து ஏதோ சொல்ல நினைத்தார். பிறகு அறைக்குள் சென்று விட்டார்.

ஸ்ரீமதி ஊ சிந்தனை செய்தவளாய், வாடிக் கொண்டிருந்த அந்த ஆர்ச்சிட் புஷ்பங்களை நோக்கினாள். "அவருக்கு என்னை சபித்துவிட வேண்டும் என்றிருக்கிறது! ஆனால் பாவம், எப்படி சபிப்பது என்று தெரியாமல் விழிக்கிறார்" என்று எண்ணிக் கொண்டாள்.

திடீரென்று அவள் உள்ளத்தில் சோர்வும் தன்னுடைய அமைதி நிறைந்த அறைக்குச் சென்றுவிட வேண்டுமென்ற ஏக்கமும் உண்டாயிற்று. ஆனால் அவ்வாறு செய்ய முடியா தென்று அவளுக்குத் தெரியும். அவள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளைப் போய் பார்க்க வேண்டிய கடமை இருக்கிறது. ஒவ்வொரு மகனை அவர்கள் எல்லோ ரையும் அவள் சென்று பார்க்க வேண்டும்.

அடுத்தது லியாங்மோவும் அவனது குடும்பமும் வசித்து வந்த பகுதி. அவள் அவனைப் பார்க்க அங்கு சென்றாள். அங்கு வாழ்வும் ஆனந்தமும் நிறைந்திருந்தது. லியாங் மோவின் சிறிய பையன் வெளியே வாசலில் தாதியுடன் விளை யாடிக் கொண்டிருந்தான். ஸ்ரீமதி ஊ வந்ததும் அவன் அவ ளிடம் ஓடி வந்தான். அவள் அவனுடைய கன்னத்தைச் செல்லமாக நிமிண்டியவாறு, குனிந்து அவனை உச்சி முகர்ந் தாள்.

"சிறிய சர்க்கரை கட்டி! ஆ! உன்னுடைய கன்னம்தான் எத்தனை அழகாயிருக்கிறது!" என்று கூறினாள் வாஞ்சை யுடன்.

லியாங்மோ, அவளுடைய குரலைக் கேட்டு, வீட்டிற்குள்ளி ருந்து வெளியே வந்தான். அவன் வெளியே போவதற்குத் தயாராக உடைகள் அணிந்திருந்தான்.

"அம்மா, இதோ நான் இங்கிருக்கிறேன். இந்தத் தடவை விஜயச்சலெல்லாம் எப்படி இருக்கிறது என்பதை நம் நிலத் தைப் பார்த்து வருவதற்காக நான் இப்போதுதான் புறப்பட் டேன். அறுவடையாவதை அனைக்க வேண்டுமல்லவா?" என்றான்.

"நீ இப்போது போக வேண்டாம், மகனே" என்று கூறிய ஸ்ரீமதி ஊ, அவனுடைய நீட்டிய கையை ஆதரவிற்காகப் பிடித்துக் கொண்டாள். அவன் அங்கிருந்த தேவதாரு மரத்

தின் அடியில் போட்டிருந்த ஆசனத்திற்கு, தனது தாயைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான். அம்மரம் அவ்வாச னங்களுக்கு நிழல் கொடுக்கும்வண்ணம் அதற்கு மேல் வனோவாக வளர்க்கப்பட்டிருந்தது.

"நான் உன்னை ஒன்று கேட்க வந்தேன். நீயும் உன் அப் பாவுடன் டீக்கடைக்குச் செல்ல வேண்டும். 'வேங் குடும்பத் தார் இந்த மூன்று தலைமுறைகளாக வைத்திருந்த ஒரு பகுதி நிலத்தை நாம் மறுபடியும் வாங்கிவிட வேண்டுமென்று அவர் நினைக்கிறார். இப்போதுள்ளவன் ஒரு கஞ்சாக் குடியன் என்பது தான் உனக்குத் தெரியுமே ! ஆதலால் அந்நிலத்தை மீண்டும் நம் கைக்குள் கொண்டு வருவதற்கு இதுவே நல்ல சந்தர்ப்பம். ஆனால் நீயும் கூடப்போய், எழுபது டாலர்களுக்கு மேல் போகாதவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். உன் தந்தை என்பது டாலர் என்கிறார். ஆனால் அதை எழுபதற்கே வாங்கி விடமுடியும். ஜனங்கள் நாம் பெரிய பணக்காரர்கள் என்று எண்ணி நம்மைக் கொள்ளையடிக்கிறார்கள். கொள்ளை யடிக்கிற மாதிரி, இங்கு யாரும் பணம் வைத்திருக்க வில்லையே" என்றாள்.

"நானும் போகிறேன் அம்மா" என்று கூறிவிட்டு அவன் மேலே தயங்குவதைக் கவனித்தாள் அவள். அவன் சியூமிங் கைப் பற்றி கேட்க விரும்புகிறான் என்பது உடனே அவளுக்கு விளங்கி விட்டது. ஆனால் அவள் தன் பிள்ளைகளிடம் அப் பெண்ணைப் பற்றி பேசுவதில்லை என்று தீர்மானித்துக் கொண் டிருந்தாள். ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர்கள் மற்றொரு தலைமுறையைச் சேர்ந்தவர்களைப் பற்றி விவாதிப்பது தகுதி யல்லவே !

"மெங் எங்கே? நான் அவளை என்னுடைய பிறந்த நாளைக்குப் பிறகு பார்க்கவேயில்லை. அவளை ஒன்று கேட்க வேண்டுமென்று நினைத்தேன்—உன்னைக் கூடத்தான்—மகனே பெங்மோவுக்கு லின்யியைக் கேட்கலாமா? நீ என்ன சொல்லு கிறாய்?" என்று கேட்டாள்.

"லின்யியா?" என்றான். அவன் அதைப் பற்றி எண்ணி யதேயில்லை. ஆனால், "பெங்மோ, நீங்கள் அவனுக்காகப் பெண் பார்ப்பதை ஒத்துக் கொள்வானா?" என்று கேட்டான்.

ஸ்ரீமதி ஊ தனது சுபாவப்படி மெல்ல நகைத்தவாறு, "அவன் ஒத்துக்கொள்ளா விட்டால், அவன் தானே லின்யியை மணந்துகொள்ளத் தீர்மானிக்கும்படி செய்கிறேன்.

நான் யாரையும், எதையும் செய்யும்படி வற்புறுத்துவ தில்லையே" என்றாள்.

அப்போது மெங் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தாள். அவளிடமிருந்த ஒரு பெரிய குற்றம் என்னவென்றால் அவள் தினமும் காலையில் எழுந்து ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் வரை தூங்கு மூஞ்சித்தனமாகவும் சோம்பலாகவும் உட்கார்ந்திருப்பாள். இன்று காலை ஸ்ரீமதி ஊ வந்தபொழுது அவள் இரவில் அணியும் ஆடைகளுடன் தலையை வாராமல் அலங்கோலமாக உட்கார்ந்திருந்தாள். அவள் அவசரமாக உள் அறைக்குச் சென்று, தன்னைக் கொஞ்சம் சரிப்படுத்திக் கொண்டாள். அவள் வெளியே வந்தபோது, பார்ப்பதற்கு பாதி விரிந்தும் விரியாமலுமிருந்த ஒரு ரோஜா மொட்டைப் போல் காணப்பட்டாள். கர்ப்பத்தின் ஆரம்ப கிலியாதலால் சோர்வால் தளர்ந்து நலிந்து காணப்பட்டாள். அவளுடைய அகன்ற விழிகளில் கண்ணீர் மல்கியிருந்தது. அவளுடைய உதடுகள் பிரிந்திருந்தன. அவள் காதுகளில் ஸ்ரீமதி ஊ கொடுத்த முத்துக்களை அணிந்திருந்தாள்.

அவள் முகமன் கூறும்வண்ணம், "அம்மா, நீங்கள் வந்தி ருக்கிறீர்களா !" என்று அழைத்தவாறு வந்தாள்.

"அந்த முத்துக்கள் தான் உனக்கு எவ்வளவு பொருத்த மாகயிருக்கிறது !" என்று ஸ்ரீமதி ஊ கூறிவிட்டு லியாங் மோவைப் பார்த்தாள். "நீ, போ மகனே !" என்று உத்தர விட்டாள். அவளுடைய வார்த்தையில் தொனித்த குழை வும் இனிமையும் அது அதிகாரத்துடன் கூறப்பட்டது என் பதை முற்றிலும் மறைத்தன. "மெங்குடன் நான் சற்று நேரம் பேசவேண்டும்" என்று கூறினாள்.

அவன் எழுந்து சென்றதும் அவள் மெங்கைத் தலையிலி ருந்து கால்வரை ஏற இறங்கப் பார்த்தாள். "நீ இன்னும் காலையில் வாந்தி பண்ணுகிறாயா?" என்று அன்புடன் வினவினாள்.

"இப்போது தான் அது ஆரம்பித்திருக்கிறது. கும்மா பிரட்டுகிறது. ஆனால் ஒன்றும் வரமாட்டேனென்கிறது" என்று மெங் பதிலளித்தாள்.

"இன்னும் பத்து நாட்கள் சென்றால் அதிகம் வாந்தி யெடுக்கும். நல்ல புஷ்டியான குழந்தையாயிருக்கும். அதனும் பயனுக இருந்தால் தாயாரை மூன்று மாதத்திற்கு வாந்தி எடுக்கும்படி செய்யும்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

"அந்தச் சிறிய கழுதை அப்படித்தான் செய்தது" என்று மெங் தன்னுடைய, சிவந்த உதட்டைக் கடித்துக் கொண்டு, தன் சிறிய மகளைப் பார்த்து கூறினாள். அவன் அப்போது தான் மும்முரமாகத் தாதியின் மீது ஏறி குதிரை சவாரி செய்து கொண்டிருந்தான்.

எப்போதும் மெங்குடன் பேசும்பொழுது, ஸ்ரீமதி ஊவிற்கு முக்கியமான விஷயத்தை எடுப்பதற்கு சற்று நேரம் தாமதிக்க வேண்டியிருக்கும். ஸ்ரீமதி கேங்கின் குழந்தைகளில் ஒருவராவது மனதிலோ சரீரத்திலோ, அவளுடைய விசாலத் தன்மையைக் கொள்ளவில்லை. மெங்கின் சிறிய தடித்த உருவத்தையும், அவளுடைய மிகச் சிறிய முகத்தையும் கைகளையும் நோக்கியவாறு இவ்விதம் எண்ணமிட்டாள் ஸ்ரீமதி ஊ. அது அவளுடைய சிநேகிதி, தன் குழந்தைகளில் தன்னை ஒன்பது பாகமாகப் பிரித்துக் கொடுத்து விட்டது போலிருந்தது. ஸ்ரீமதி ஊ தன்னுடைய குழந்தைகளைப் பெற்றபோது, தன்னுடையதிலிருந்து எதையும் பிரித்துக் கொடுத்து விட்டது போல் உணர்ந்ததில்லை. அவள் அவர்களை முற்றிலும் வேருகத்தான் பிறப்பித்தாள். அவர்கள் பிறந்த திலிருந்து அவர்கள் வேறு, இவர்கள் வேறுதான்! ஆனால் மேய்ச்சன் தன் குழந்தைகளிலிருந்து, தான் வேருகப் பிரிந்ததேயில்லை. அவள் ஒவ்வொரு குழந்தையிடமும், அவர்கள் தன் அங்கங்களில் ஒன்றைப் போல் அவ்வளவு ஒட்டிக் கொண்டிருந்தாள்.

"மெங், என் குழந்தாய்!" என்று இப்போது ஆரம்பித்தாள் ஸ்ரீமதி ஊ. "நான் உன்னிடம் ஒரு யோசனை கேட்க வந்திருக்கிறேன். உன் தாயாரிடம் பெங்மோவிற்காக உன் தங்கை லின்யியைக் கேட்கலாமென்றிருக்கிறேன். உன்னுடைய அபிப்ராயம் என்ன? அவர்கள் இருவருக்கும் ஒரே வயதாகத்தானிருக்கும். உன்னுடைய தங்கை பெங்மோவை விட நான்கு மாதம் சிறியவள் என்று நினைக்கிறேன். அவள் அழகாயிருக்கிறாள். பெங்மோவிற்கும் ஒன்றும் குறைவில்லை. இருவரும் நல்ல திடகாத்திரமாக யிருக்கிறார்கள். நான் இன்னும் ஜாதகங்களைப் பார்க்கவில்லை. ஆனால் அவர்களுடைய பிறப்பு மாதங்கள் பொருத்தமாகத் தானிருக்கின்றன. அது எனக்குத் தெரியும்" என்றாள்.

"என்னுடைய தங்கை இங்கு வருவதாயிருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று மெங், ஆனந்தத்துடன் கூவி, தனது விரல்களிலுள்ள மோதிரங்கள் ஒன்றோடொன்று உராயுமாறு கையைக் கொட்டினாள். ஆனால் அடுத்த கணம்

அவளுடைய குதூகலம் மறைந்தது. "அம்மா, ஆனால் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும். பெங்மோ பழைய காலமாகயிருக்கிறான் என்று லின்யி நினைக்கிறாள்," என்றாள்.

"ஏன்! எதனால்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ ஆச்சரிய மிகுதியுடன்.

"அவன்! படிப்பதற்காக வெளியூர் சென்றதில்லை அல்லவா? இந்த வீட்டிலேயே இருந்து தானே வளர்ந்திருக்கிறான்" என்று விவரித்துக் கூறினாள் மெங்.

"உன் தாயார் லின்யியை அந்த வருஷம் படிப்பதற்காக ஷாங்காய்க்கு அனுப்பியிருக்கவே கூடாது" என்றாள் ஸ்ரீமதி ஊ. கடமையினால் அவளுடைய உதடுகளிலிருந்த அழகிய கோடுகள் இறுகின.

"ஆனால் இப்போதுகூட வேண்டுமென்றால் பெங்மோ பள்ளிக்குப் போகலாமே" என்று கூறிய மெங், கையால் வாயை மூடிக்கொண்டு, ஒரு கொட்டாவி விட்டாள்.

"பெங்மோவை இப்போது நான் வெளியே அனுப்பமாட்டேன். அவன் இன்னும் விவரம் தெரியாதவன். இவ்வீட்டில் என் பிள்ளைகள் எல்லாம் தேர்ச்சி பெற வேண்டுமே அல்லாமல் ஒரு அயல்நாட்டுப் பள்ளியில் தேர்ச்சி பெற வேண்டுமென்று நான் விரும்பவில்லை" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

மெங் ஒருபோதும் விவாதம் செய்வதேயில்லை. "நான் லின்யியைக் கேட்கட்டுமா?" என்று அவள் கேட்டாள்.

"வேண்டியதில்லை. நானே உன் தாயாரிடம் இதைப் பற்றிப் பேசிக்கொள்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ கம்பீரத்துடன்.

ஒரு கணம் ஸ்ரீமதி ஊவிற்கு மெங்கின் மீது சற்று வெறுப்பு உண்டாயிற்று. அவள் அதைப் பற்றி எண்ணிப் பார்க்குமுன், மெங்கின் குழந்தையைப் போன்ற முகத்தில் நிலவி போன்ற உணர்ச்சி தோன்றியது.

"ஆ! கடவுளே" என்று கூவி அவள் தனது வயிற்றை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டாள்.

"ஏன்! என்ன செய்கிறது?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"எனக்குப் புலப்படுவது குழந்தையாயிருக்குமா?— இவ்வளவு சீக்கிரத்திலா—" என்றாள் மெங் மிகுந்த கவலையுடன்.

"அப்போது இன்னொரு பையன் என்று தெரிகிறது. பையனாக இருந்தால் தான் இவ்வளவு சீக்கிரத்தில் தெரியும்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

மெங்கின் இந்த மாதிரி நிலையில், தான் அவளிடம் பொறுமையிழந்து எரிச்சலைக் காட்டுவது நன்றாயிராது என்று எண்ணி அவள் தன்னை அடக்கிக் கொண்டாள். இளம் பெண்களிடம் அவர்கள் தங்கள் இயற்கைத் தொழிலைச் சரிவர செய்ய வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றும் வேண்டப் படுவதில்லை. இதையோ மெங் சரியாக நிறைவேற்றுகிறாள்!

அவள் எழுந்து விட்டாள். "நீ சூடான பானம் ஏதாவது குடிக்க வேண்டும், குழந்தாய்! அரிசிக் கஞ்சி மிகவும் நல்லது. குழந்தை நெண்டினால், அது பசியாயிருக்கிறது என்று அர்த்தம்" என்று கூறினாள்.

"நான் சாப்பிடுகிறேன். இப்போதுதான் நான் காலை யுணவை அருந்தினேன். ஆனால் இரவு பகலாக எப்போதும் அதிகப் பசியெடுக்கிறது, அம்மா" என்றாள் மெங்.

"நன்றாகச் சாப்பிடு. உனக்கும் குழந்தைக்குமாகச் சேர்த்து சாப்பிடு" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பிறகு அவள் வெளியே வந்து, தனக்குப் பழக்கமான அவ் வழகிய வீடுகளை ஒவ்வொன்றாகக் கடந்து சென்றாள். பல வருஷங்களுக்கு முன், அவள் தனது ஆத்மாவிலிருந்து பிரிந்து வந்து, இந்த ஊ குடும்பம் என்னும்படியான நதியின் பிரவாகத்தில் கலந்து கொண்டாள். இப்போது அப்பிரவாகத் திலால் தான் அடித்துக் கொண்டு போகப்படுவது போன்ற உணர்ச்சி தோன்றியது அவளுக்கு. வாழ்க்கையும் கல்யாண மும், குழந்தை பிறப்பும், புதிய பிறப்புமாக அந்நதி இடை யறாது ஓடிக்கொண்டே யிருக்கிறது. குழந்தை பெறுவதைத் தவிர வேறொன்றையும் அறியாத மெங்கிடம் அவள் ஏன் கோபம் கொள்ள வேண்டும்?

'என்னுடைய சொந்தப் பிள்ளைகளுடன், நானும் தான் அவ் வாழ்க்கையாகிய நதியில் எனக்குரித்தான பங்கைச் செய்து முடித்திருக்கிறேன்' என்று ஸ்ரீமதி ஊ தனக்குள் கூறிக் கொண்டாள். அவளுடைய தற்போதைய கடமை, அப் பிரவாகம் ஒவ்வொரு தலைமுறையிலும் தடங்கலில்லாமல் சுத்தமாகச் செல்லுகிறதா என்று கவனித்துக் கொள்ள வேண்டியதுதான். இந்த ஒரு கடமையைத் தவிர மற்றபடி அவள் சுதந்திரமாகவே இருக்கிறாள். அவள் தன் தலையை

உயர்த்தி அக் காலை நேரக் காற்றை ஒரு முறை ஆழ்ந்து சுவாசித்தாள்.

இப்போது த்சேமோ இன்னும் பாக்கியிருக்கிறான். பெங்மோலை, அவள் லின்யியின் மனதை அறியும் வரை பார்க்கப் போவதில்லை. என்மோ போய்விட்டான். த்சேமோ லையும் ருலானையும் பார்த்து விசாரித்து விட்டு வந்துவிட் டால், அவளுடைய அன்றைக் கடன் முடிந்துவிடும்.

த்சேமோவின் பகுதிதான் இருப்பதற்குள் மிகவும் மோச மாகயிருந்தது. முன்னிலிருந்த அக் குறுகிய இடத்தில் நடந்து சென்ற போது, அவனுடைய கல்யாணத்திற்காகத் தான் இல் விதம் அவனைப் பழிவாங்கியதற்காக அவளுக்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று. வடக்கே நோக்கியவாறு இரண்டே இரண்டு அறைகள்தாம் அப் பகுதியில் இருந்தன. குளிர் காலத்தில் அவர்களுக்குச் சூரியனுடைய ஹிதமான உஷ்ணம் கிடைக்காது, கோடை காலத்தில் மழையால் வருந்துவார்கள்.

த்சேமோ முன்புறத்துப் பெரிய அறையில் இருந்தான். அவன் ஒரு பாட்டிலிலிருந்து சிந்திவிட்ட அவல்நாட்டு மசி யைத் துடைத்துக் கொண்டிருந்தான். அவள் அவனைப் பார்த்ததும் அவன் மிக்க கோபமாயிருக்கிறான் என்று தெரிந்து கொண்டாள். அவனுடைய இந்த மகன் அடிக்கடி இவ்வாறு கோபமடைவது வழக்கம். அவன் தன் அழகிய உதட்டைக் கடித்துக் கொண்டு, கண்களில் குரூரம் தாண்டவமாட இன்றும் அதே மாதிரி சிடுசிடுப்புடன் இருந்தான்.

ஸ்ரீமதி ஊ, வாசற்படியில் நின்று, "நல்லது, மகனே! நீ மட்டுமா இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"ருலானுக்கு உடம்பு சுகமில்லை" என்று கூறினான் அவன், தன் கையிலிருந்த மசி தோய்ந்த அத் துணியைத் தரையில் எறிந்தவாறு.

"உடம்பு சுகமில்லையா? எனக்கு ஒருவருமே சொல்ல வில்லையே" என்று ஸ்ரீமதி ஊ கூறி, உயர்ந்திருந்த அவ் வாயிற் படியின் மீது காலை வைத்து ஏறி உள்ளே சென்றாள்.

"அவளைப் பார்த்தால் உடல் நலமில்லை போல் காணப் பட்டது. அதனால் நான் அவளைப் படுக்கையிலேயே இருக்கச் சொன்னேன்" என்றான் த்சேமோ.

"நான் உள்ளே போய் அவளைப் பார்க்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பின் அவ்விரண்டு அறைகளுக்கும் மத்தியில் தொங்கிய சிவப்பு சில்க் திரையை ஒதுக்கி விட்டு உள்ளே சென்றாள். ருலான் வந்த பிறகு அவள் இப்போதுதான் முதல் தடவையாக இவ்வறைக்கு வருகிறாள். அதில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருப்பதை அவள் கவனித்தாள். படுக்கைகள் திரையில்லாமலிருந்தன. அதற்குப் பதில் ஜன்னல்களில் திரைகள் தொங்கின. சுவர்களில் அயல்நாட்டுப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. சுவரோரம் இருந்த புத்தகத் தட்டுகளில் அநேக அயல்நாட்டுப் புத்தகங்கள் காணப்பட்டன.

திரைகளற்றிருந்த படுக்கையில் ருலான், தலையணைகளை உயரமாக வைத்து, அதன்மேல் தலையை வைத்துப் படுத்திருந்தாள். அவளுடைய குட்டையான கேசம் பின்புறம் விழுந்து அவளுடைய காதை நன்றாகக் காட்டிற்று. அவளுடைய காதுகள் சிறிய சிப்பிகளைப் போல் அழகாக இருந்தன. ஸ்ரீமதி ஊ அதைக் கவனிக்கத் தவறவில்லை.

அவள் அன்புடன், "உன்னுடைய காதுகளை நான் இதற்கு முன்பு பார்க்கவேயில்லையே! எவ்வளவு அழகாயிருக்கின்றன! நீ அவசியம் காதணிகளை அணிய வேண்டும். உனக்கு ஒரு ஜதை பொன் அணிகள் அனுப்புகிறேன்" என்றாள்.

ருலான் தனது கரிய, பளபளப்பான விழிகளை ஸ்ரீமதி ஊவின் மீது திருப்பினாள். அவள் என்றுமில்லாத பணிவுடன், "ரொம்ப வந்தனம், அம்மா!" என்றாள்.

ஸ்ரீமதி ஊ இப் பணிவைக் கண்டு திடுக்கிட்டாள். "உன் உடல் நிலை மிகவும் மோசமாக இருக்கிறதா என்ன?" என்றாள்.

"நான் மிகவும் களைத்திருக்கிறேன்" என்றாள் ருலான்.

"ஒரு வேளை உன்னுள் மகிழ்ச்சியைக் கொண்டிருக்கிறாயோ?" என்று குறிப்பிட்டாள் ஸ்ரீமதி ஊ.

ஆனால் ருலான் தலையை அசைத்து, "மிகவும் களைப்பாகயிருக்கிறேன், அவ்வளவுதான்" என்று மீண்டும் கூறினாள். பிறகு தன் விரல்களால் தலையணையின் உறையை நெருட ஆரம்பித்தாள்.

ஸ்ரீமதி ஊ, "அப்போது, நன்றாக ஓய்வெடுத்துக் கொள். இவ் வீட்டில் வேறு யாராலுமே செய்ய முடியாதபடி அப்படி ஒரு வேலையும் இல்லையே" என்று கூறி, தலையை அசைத்து ஒரு புன்னகை செய்து விட்டு மறுபடியும் வெளியே தளேமோவிடம் சென்றாள்.

அவன் தன் கையில் ஒரு வெளிநாட்டுப் பேனாவை வைத்துக் கொண்டு அம்மொழியின் எழுத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக எழுதிக் கொண்டிருந்தான். அவள் திரும்பி வந்ததும் பேனாவைக் கையில் பிடித்த வண்ணமே எழுந்து நின்றான்.

"என்ன எழுதிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள் அவள்.

"நான் ஆங்கிலம் எழுதிப் பழகிக் கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

"யார் உனக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்?" என்று அவள் கேட்டாள். அவன் வெட்கமடைந்தவனாய், "ருலான்" என்று கூறினான். அவன் அவமானமடைந்ததை உணர்ந்து அவள் உடனே அவசரமாகப் பேச்சை மாற்றினாள்.

"ருலான் மிகவும் சோர்ந்திருக்கிறாள். அவள் நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளட்டும்" என்று கூறினாள்.

அவன் ஆவலுடன், "நான் அவளைக் கட்டாயப் படுத்தத்தான் போகிறேன். அவள் அதிக வேலை வைத்துக்கொள்கிறாள். நேற்று நகர சபைக் கட்டிடத்தில் நடந்த தேசிய மறுமலர்ச்சி கமிட்டி மீட்டிங்கிற்குச் சென்றிருந்தாள். அவளைத்தான் அதற்குத் தலைவியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களாம். அவள் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது ஒரேயடியாகச் சோர்ந்து போயிருந்தாள்" என்று கூறினான்.

ஸ்ரீமதி ஊ, "தேசிய மறுமலர்ச்சி வேலையா மறுபடியும்? அது மிகவும் தொல்லை பிடித்த வேலையல்லவா?" என்றாள்.

"நானும் அதைத்தான் சொன்னேன்" என்று தளேமோ அதை ஆமோதித்தான்.

அவள் தலையை அசைத்துவிட்டு வெளியே சென்றாள். தனது அறைகளை நோக்கி, வழக்கத்திற்கு விரோதமாக, துரிதமாக நடந்தாள். சியூமில் வாசலில் முக்காலியின் மீது உட்கார்ந்து அப்புதிய துணிகளைத் தைத்துக்கொண்டிருந்தாள். ஸ்ரீமதி ஊ அவளருகே சென்று நின்றதும் அவள் எழுந்திருக்கப் போனாள். ஆனால் ஸ்ரீமதி ஊ தன்னுடைய கையால் அவளுடைய தோளைப் பிடித்து மெல்ல அமுத்தியவாறு, "நீ உட்கார்ந்து தைத்துக் கொண்டிரு. நானைக்குத்தான் அந்த நாள். நீ உன்னை அதற்குள் தயார் செய்து கொள்ள வேண்டும்" என்று உத்தரவிட்டாள்.

அப்பெண் உட்கார்ந்து கொண்டு, நூலோடு கீழே தொங்கிக் கொண்டிருந்த ஊசியை மீண்டும் கையில் எடுத்துக் கொண்டாள். அவள் ஒரு வார்த்தையும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு வெகு லாகவமாகவும் விரைவாகவும் தன் விரல்களை ஓட்டித் தைக்க ஆரம்பித்தாள். அவளுடைய குனிந்த தலையைப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீமதி ஊ, பீச் புஷ்பத்தைப் போன்ற சிவப்பு வர்ணம் அவளது தோள் பட்டைகளிலிருந்து அவளது அழகிய கழுத்தின் பின்புறம் முழுவதும் பரவி, அவளது தலையின் மயிர்கால்கள் தோறும் பாய்ந்ததைக் கவனித்தாள்.

* * *

ஸ்ரீமதி ஊ, சியூமிங்கை மறுநாள் இரவுக்குள் ஸ்ரீமான் ஊவின் பகுதிக்கு அனுப்பும் விதம் இன்னதென்று தனக்குள் ஒருவித முடிவு செய்து கொண்டாள். அதை இரவில் ஒருவித சந்தடியுமின்றிச் செய்து விட்டால் அதனால் எவ்வித கலவரமும் உண்டாகாது. இந்த வைபவத்தைக் கொண்டாடுவதில் அர்த்தமேயில்லை. இது அவளும் ஸ்ரீமான் ஊவும் சம்பந்தப் பட்ட அவர்களுடைய தலைமுறையைச் சேர்ந்த சொந்த விஷயம். அதில் சிறியவர்களைக் கலந்துகொள்ளச் செய்வது, அவர்களைக் குழப்பமடையச் செய்வதேயாகும்.

ஆதலால் மறுநாள் அவள் இங்கை, அப் பெண்ணுக்கு அலங்கரித்துக் கொள்ளுவதில் சில முக்கியமான சிறு விஷயங் களில் உதவி செய்யுமாறு பணித்தாள். ஏனெனில், அப் பேதைப் பெண்ணுக்கு இது விஷயத்தைப் பற்றி என்ன தெரியும்! பிறகு அவள் அன்று முழுவதையும் புத்தக அறையி லேயே கழித்தாள். அவளுக்கு மீண்டும் அவ் விலக்கப்பட்ட புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்ற இச்சை எழவில்லை. அவைகளைத் தான் இனித் திறக்கவே வேண்டியிராது என்று எண்ணினாள். அவளுக்கு இனி ஆண்களோடு என்ன தொடர்பு வேண்டிக் கிடக்கிறது! அதற்குப் பதில் ஒரு சரித்திரப் புத்தகத்தைப் பிரித்து, காலத்தின் ஆதியிலிருந்து, அதாவது பூமியும் வானமும் தனித்தனியே பிரிந்திராமல் ஒன்றுகச் சேர்ந்து பிரளயமாகக் குழம்பிக் கிடந்த காலத்தின் ஆரம்பத் தைப் பற்றி படிக்கத் தொடங்கினாள்.

அந்நாள் முழுவதும் அவளுக்கு, தான் தன் சரீரத்தி லிருந்து இளம்பி வானவெளியில் மிதந்து கொண்டிருப்பது போலிருந்தது. அவளிடம் ஒருவருமே வரவில்லை. அவளுக்குத் தெரியும், வீடு முழுவதும் அவள் என்ன செய்யப்போகி றாளோ என்று எதிர்பார்த்து, காத்துக் கொண்டிருக்கிறது

என்பது. அவள் சியூமிங்கை அவரிடத்தில் கொண்டு சேர்த்து ஒழுங்கு செய்யும்வரை ஒருவரும் அவளருகில் வரமாட்டார் கள். குடும்பத்தின் மத்திய ஸ்தானத்திலேயே விஷயங்களெல் லாம் குழம்பிக் கிடக்கும் வரை, யாருக்கும் என்ன பேசுவது, எப்படி பேசுவது என்பதொன்றும் தெரியாது. அவளைப் பார்ப் பதற்காக நிலத்து காரியஸ்தன் ஒருவன் மட்டிலும் வந்தான். பிற்பகலில் நேரம் கழித்து வந்த அவன் எஜமானியிடம் நிலம் வாங்கின விஷயத்தைப் பற்றித் தான் அறிவித்துவிட்டுப் போக விரும்புவதாகச் சொல்லியனுப்பினன். அவன் அவளை வருவதற்கு உத்திரவு கொடுத்தாள். அவன் அறையின் வாயிற்படிக்கு வந்ததும், அவள் புத்தகத்தை விட்டுத் தன் தலையை உயர்த்தி, அதை முடாமலே, அவனை உள்ளே வரு மாறு பணித்தாள். அவன் உள்ளே வந்து அவள் முன் நின்று கொண்டு, தன் ஜேபியிலிருந்து ஒரு மடித்த காகிதத்தை வெளியே எடுத்தான்.

"அம்மா, வேங் நிலத்தை வாங்கியதற்காக எழுதின பத்திரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். என்பது டாலர் கள் மேல் பேசித்தான் வாங்கினோம். எஜமானர் தலையிடாமல் இருந்திருந்தால், நான் அதை எழுபதிற்கே வாங்கியிருப்பேன். ஆனால் அவர் அந்நிலம் பரிசாகக் கொடுக்கப்பட்டதால், இப் போது நாமும் கடுமையாக இருக்கக் கூடாதென்று கூறிவிட் டார்" என்றான்.

ஸ்ரீமான் ஊவைப் பற்றி அவன் குறை கூறியதற்கு அவள் ஒன்றும் சொல்லவில்லை. "எங்கே அந்தப் பத்திரத்தைக் கொடு" என்று கூறிக் கையை நீட்டினாள். அவன் அப்பத்தி ரத்தை அவளிடம் கொடுத்தான்.

"இவ்வளவுதானே" என்று கேட்டாள் அவள். சந்தேக மில்லாமல் இந்த மனிதனுக்கும் இவ்வீட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும். அவன் வேறு ஒரு புதிய முகத்தைத் தேடுபவன் போல் அறையைச் சுற்றிலும் ஒரு முறை வேகமாகத் தன் பார்வையைச் செலுத்தியதை அவள் கவனித்தாள்.

"அவ்வளவுதானே!" என்று மீண்டும் கேட்டாள்.

அவன் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டு வந்தான். ஒரு சாதாரண நாட்டுப்புறத்து ஆசாமியாகிய அவனால் தன் மனதிலுள்ளதை ஒளிக்க முடியவில்லை. அவளுடைய விரித் திருந்த உதடுகளையும் கண்களின் சலனத்தையும் பார்த்து, அவளுடைய மனதிலுள்ளதை அவன் ஒரு புத்தகத்தைப் படிப்பதுபோல் அவ்வளவு தெளிவாகப் படித்தான்.

"தல்லது?" என்ருள் கடுமையுடன்.

இக்கடுமையைத் தாங்கவொண்ணுமல் அவன் தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டான். "வேறு ஒன்றுமில்லே. அம்மா, இது ஒன்றுதான். நீங்கள் சரியென்ருல், புதிய நிலத்தில் பின்ஸைப் பயிரிடலாம் என்று நினைக்கிறேன். நாளாகி விட்டதால் இப்போது வேறெதுவும் பயிரிட முடியாது" என்ருன்.

"பின்சும் அதற்குப் பிறகு குளிர்காலத்தில் கோதுமையும் பயிரிடலாம்" என்ருள்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன்" என்ருன் அவன்.

அவன் மேலும் தயங்கவே, அவளுக்கு அப்போதுதான், அவன் நிலம் வாங்கியதற்குப் பரிசாக ஒரு சிறு தொகையைப் பெற விரும்புகிருன் என்பது புரிந்தது. அவள் எழுந்து தனது உள் ஜேபியிலிருந்து ஒரு சாவியை எடுத்து, சுவரில் பதித்திருந்த ஒரு மரப்பெட்டியைத் திறந்தாள். அதன் கதவைத் திறந்து மற்ருரு இரும்பு பூணிட்ட மரப் பெட்டியை வெளியே எடுத்தாள். பின் அதிலிருந்து பத்து வெள்ளி டாலர்களை அவன் கண்ணெதிரே எண்ணி எடுத்தாள்.

"இதோடு என் நன்றியையும் உனக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்ருள் அவள் தன் அந்தஸ்திற்குரிய மரியாதையுடன்.

முதலில் அதைப் பெற்றுக்கொள்ள மறுப்பவன்போல் கையைப் பின்னுக்கிழுத்து தலையை ஆட்டிவிட்டு பிறகு அவன் அதை வாங்கிக் கொண்டான். "மிக்க வந்தனம் அம்மா, மிக்க வந்தனம்" என்று மீண்டும் மீண்டும் கூறிய வண்ணம், அவன் பின்புறமாகவே நடந்து சென்று, அறையை விட்டு வெளியேறினன். அவன் வாசலில் வெளிக்கதவை நோக்கிச் செல்லும் போது, நேராக நிமிர்ந்து கொண்டு வலது புறமும் இடதுபுறமும் பார்த்துக் கொண்டே போவதை அவள் பார்த்தாள்.

ஆனல் சிூமிங் அங்கே எதிரே காணப்படாததைக் கண்டு அவள் மகிழ்ச்சி கொண்டாள். அப்பெண்ணிடம் தன்னை வினம்பரப் படுத்திக் கொள்ளாமல் மறைந்திருக்கும் மேன்மையான குணம் இருந்தது. இது அவளிடம் அவளுக்கிருந்த நன்மதிப்பை அதிகமாக்கிற்று. ஸ்ரீமதி ஊ மேஜை மீது திறந்து வைத்திருந்த புத்தகத்தை மூடி, அதன் உறையில் போட்டு வைத்து விட்டு உட்காரும் அறைக்குச் சென்ருள்.

இங் அவளுக்கும் சிூமிங்கிற்கும் தனித்தனியே இரவு சாப்பாட்டைக் கொண்டு வந்திருந்தாள். ஸ்ரீமதி ஊ அப்பெண்ணின் சாப்பாட்டைப் பரிசோதித்துப் பார்த்தாள். பிறகு அவள் குனிந்து அதை முகர்ந்து பார்த்தாள்.

"வெங்காயம், வெள்ளைப்பூண்டு அல்லது வேறு அதிக நாற்றமுடைய பொருள்கள் எதையும் நீ இதில் சேர்க்கவில்லையே?" என்று விசாரித்தாள் இங்கைப் பார்த்து.

"என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும்" என்ருள் இங் சுருக்கமாக.

"மீனகு சேர்க்கவில்லையே? அது நெஞ்சைக் கரிக்கும்" என்று மேலும் வற்புறுத்திக் கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"ஒரு குழந்தை சாப்பிட முடியாதது இதில் ஒன்று மில்லே" என்று பதிலளித்தாள் இங். அவளுடைய அன்பு தவழும் முகம் விரோதத்தையும் அலட்சியத்தையும் காட்டிற்று. அவள் தன் எஜமானியுடன் தான் இணங்கி வரவில்லை என்பதைக் காண்பிக்க விரும்பினுள். ஸ்ரீமதி ஊ தன்னுடைய வேலைக்காரியின் கோபம் நிறைந்த கண்களையும் இறுகின வாயையும் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"இங், நீ நம்பிக்கையும் விசுவாசமும் ஒருங்கே உருவெடுத்தாற்போல் இருக்கிருய். ஆனல் நீ எனக்கு உண்மையாகவே பணிவிடை செய்ய விரும்புவாயானல், நான் எதையும் எனக்கு இஷ்டமிருந்தால்தான் செய்கிறேன் என்பதை முதலில் அறிந்துகொள்" என்ருள்.

இங் இதற்குப் பதிலளிக்கவில்லே. "அம்மா, உங்களுடைய சாப்பாடு உங்களுடைய அறையில் தயாராக இருக்கிறது" என்ருள் மேலும் சுருக்கமாக.

ஆகவே, ஸ்ரீமதி ஊ, தன்னறையில் தனியாகவே, வழக்கப் படி மிக மெதுவாகச் சாப்பிட்டாள். பிறகு அவள் சற்று நேரம் அங்கேயே தாமதித்து, தன் புகைக்குழாயால் புகை பிடித்தாள். பின் அவள் வெளிவாசலுக்குச் சென்ருள். அன்று முழுவதும் ஒரு தோட்டக்காரன் வேலை செய்து, அங்கிருந்த ஆர்ச்சிட் செடிகளையெல்லாம் இங்கு கொண்டு வந்து நட்டிருந்தான். அவள் முன்பே அச்செடிகளை எங்கெங்கு வைப்பதென்று கூறியிருந்தாள். அதே போல் இப்போது எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. அச்செடிகளின் பூக்களின் மொட்டுகளையும் படர்ந்திருந்த இலைகளையும் வெட்டி யெறிந்து விட்டு அவன் ஒவ்வொரு செடியிலும் ஒரே ஒரு

கொத்து இளம் துளிர் இலைகளை மட்டும் விட்டிருந்தான். அவை இனி பிழைத்துக் கொண்டு விடும். இன்று காலை அவை பூத்து மலர்ந்திருந்த இடத்தில் இப்போது பியோனிச் செடிகள் பூக்களோடு திகழ்ந்தன!

இருள் பரவிய பின் ஒரு மணிநேரம் வரை அவள் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். ஒரு மணிநேரம் கழித்து மீண்டும் வீட்டிற்குள் சென்றாள். சியூமிங் குளித்துவிட்டு, தலையைச் சீவிப் புதிய உடைகளை அணிந்து கொண்டிருந்தாள். அவள் அச்சிறிய கட்டிலின் மீது ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய முகபாவத்திலிருந்து ஒன்றையும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் காதிற்குமேல் வாரி முடித்திருந்த அவளுடைய தலைமயிருக்கடியிலிருந்து, இரு சிறு அருவிகளைப்போல் வியர்வைத்துளிகள் ஓடிக்கொண்டிருந்ததை ஸ்ரீமதி ஊ பார்த்தாள். அவள் அப்பெண்ணின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"நீ பயப்படக் கூடாது. அவர் மிகவும் அன்புள்ள மனிதர்" என்றாள்.

அப்பெண் தனது இமைகளை ஒருமுறை உயர்த்தி வேகமாக அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு மீண்டும் தாழ்த்திக் கொண்டாள்.

"அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது ஒன்றுதான் உனது கடமை" என்றாள் ஸ்ரீமதி ஊ. இவ்வார்த்தைகளைக் கூறியபோதிலும் அவளுக்கு மனதில் தான் ஏதோ கொடுமை செய்வது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. எதற்கு அவள் அவ்வாறு எண்ண வேண்டும்? இப்பெண் இன்னும் ஒரு சிறு குழந்தையல்லவே! அவளுடைய கணவனுக்கு இருந்திருக்க வேண்டிய மனிதனே இறந்து விட்டான். அவள் அவளுடைய வளர்ப்புத் தாயினுடைய விட்டிலேயே இருந்தாலும் யாரையாவது ஒருநாள் மணந்து கொள்ளத்தானே வேண்டியிருக்கும்? ஒரு இளம் விதவையின் நிலையிலிருந்த அவள் எவ்வித விதியை எதிர்பார்க்க முடியும்? பல குழந்தைகளுள்ள, மனைவியை இழந்த ஒரு ஏழைக் குடியானவனுக்கு இரண்டாந் தாரமாகத்தான் வாழ்க்கைப்பட நேரிடும்! சந்தேகமில்லாமல் இந்த விதி அதைவிட எவ்வளவோ மேலல்லவா?

இவ்வாறு ஸ்ரீமதி ஊ தன் மனத்தைக் கடினமாக்கிக் கொண்டாள். அப்பெண் திருட்டுத்தனமாக, கையினால் கன்னத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

பிறகு சட்டென்று ஸ்ரீமதி ஊ, அங்கு காத்துக்கொண்டு நின்றிருந்த இங்கைப் பார்த்து, "சரி, இப்போது இவளை அழைத்துக்கொண்டு போ" என்றாள்.

இங் முன்னால் வந்து, அப்பெண்ணின் சட்டையின் ஒரு ஓரத்தை இருவிரல்களால் பற்றிக்கொண்டு, "வா" என்றாள்.

சியூமிங் எழுந்தாள். அவள் தனது சிவந்த வாயைத் திறந்துகொண்டு, மூச்சு தடுமாற, பின்புறமாகத் தன்னை இழுத்துக் கொண்டாள். அவளுடைய கண்கள் மேலும் விரிந்து கறுத்தன.

இங், கடுமையாக, "வா, பின்னே. எதற்கு இந்த வீட்டில் உன்னை கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள் என்று எண்ணினாய்?" என்றாள்.

அப்பெண் இங்கின் முகத்தையும் ஸ்ரீமதி ஊவின் முகத்தையும் மாறிமாறிப் பார்த்தாள். இருவருடைய முகத்திலும் அவளுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடிய எவ்வித அறிகுறியும் காணுமற் போகவே, அவள் பேசாமல் தன் தலையை குனிந்து கொண்டு, இங்கைத் தொடர்ந்து சென்றாள். அறையைக் கடந்து, வாசலைக் கடந்து, பின் அப்பகுதியையே கடந்து சென்று விட்டாள் அப்பெண்.

தனியே விடப்பட்ட ஸ்ரீமதி ஊ, சற்றுநேரம் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவளுடைய உடலும் அசையவில்லை. உள்ளத்திலும் ஒரு எண்ணமும் எழவில்லை. அவள் இவ்வாறு, தன் வயமிழந்த நிலையில், உணர்ச்சிகளை அதன் போக்கில் விடுத்து பேசாதிருந்தாள். அவளுக்கு வேதனை உண்டாயிற்று? இல்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவள் தன் செய்கையைக் குறித்து வருந்துகிறாளா? அதுவும் இல்லை. இம்மாதிரியான சூனிய நிலையில் ஆத்மா தன்னுடைய சொந்த மரணத்தைத்தானே காண்கிறது!

பிறகு அவள் தன் தலையை, உயர்த்தியபோது, அவளுடைய உதடுகள் துடித்தன. ஒரு ஆத்மா பிறப்பதற்கு முன் கர்ப்பத்தில் இவ்வாறுதானே ஒரு விதச் சூனிய நிலையில் இருக்கிறது? ஆதலால், அவளும் இப்போது மறுபிறப்பை அடைகிறாள்! அவள் எழுந்து வாசலுக்குச் சென்று இருண்ட ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினாள். எங்கும் இருள் பரவியிருந்தது. அவ் வாசலுக்கு நேரே இருந்த வானத்தில் அங்கிருந்த நட்சத்திரங்களை மறைத்துக் கொண்டு ஒரு சிறிய

மேகக் கூட்டம் கூடியிருந்தது. விடிவதற்கு முன் நிச்சயம் மழை பெய்யும்.

மழை பெய்யும் இரவுகளில், அவள் எப்போதும் நன்றாகத் தூங்குவது வழக்கம்.

இங் திரும்பி வந்தாள். இருட்டிலிருந்ததால் இவளைப் பாராமல் சென்று விட்டாள். உள்ளே சென்று அறைகள் காலியாயிருப்பதைக் கண்டு அவள் பீதி அடைந்து போனாள்.

"ஐயோ, கடவுளே! எங்கே போய் விட்டார்கள்? அம்மா..." என்று இங்கின் அலறும் குரல் வெளியே கேட்டது.

ஸ்ரீமதி ஊ, கதவருகே வந்து நின்று அமைதியுடன், "நான் இங்கேயிருக்கிறேன், முட்டாளே! மழை வருகிறதா இல்லையா என்று பார்ப்பதற்காக வெளியே வந்தேன்" என்றாள்.

இங்கின் முகம் பயங்கரமாக வெளுத்திருந்தது. அவள் கையால் தன் நெஞ்சை அமுக்கிக் கொண்டு, "ஆ! அம்மா— நான் என்னென்ன எண்ணிவிட்டேன்—" என்று திணறினாள்.

ஸ்ரீமதி ஊ, நகைத்து விட்டு, "நீ மட்டும் இம்மாதிரி எண்ணமிடுவதை நிறுத்திவிட்டாயானால் நீ எவ்வளவோ சந்தோஷமாக இருப்பாய். நீ யோசனை செய்யும் வேலையை என்னிடம் விட்டுவிடு, இங். உனக்கு அது அவசியமேயில்லை" என்று கூறினாள்.

இங் பெருமூச்செறிந்து, தன் கைகளை மேலே விட்டாள். "நீங்கள் இப்போது படுக்கைக்குச் செல்லப் போகிறீர்களா அம்மா, வழக்கம் போல்?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ, இனிய குரலில், "ஏன் கூடாது? இப்போது மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. இதோ கூரையின் மீது மழைத்துளிகள் விழும் சப்தம் நன்றாகக் கேட்கிறதே" என்றாள்.

ஒரு மணி நேரத்திற்கும் பின் அவள் தூங்குவதற்கு ஆயத்தமானாள். அப்போதே குளித்து விட்டு, இரவில் அணியும் வெண் பட்டாடைகளை உடுத்து அக்கட்டிலில் சென்று படுத்தாள்.

இங் திடீரென்று விம்ம ஆரம்பித்தாள். "எந்தப் புதிய பெண் உங்களைப்போல் இவ்வளவு அழகாயிருக்க முடியும்?" என்று விம்மலுக்கிடையே கூறி அழுதாள்.

ஸ்ரீமதி ஊ, அப்போதுதான் தலையை மேல் தன் தலையைச் சாய்த்திருந்தாள். அவள் தலையைத் தூக்கி, "நான் பேசாமலிருக்கும்போது உனக்கு இம்மாதிரி அழுவதற்கு என்ன தைரியம்?" என்று அதட்டினாள்.

இங் தன் விம்மலை அடக்கிக் கொண்டு, எழுந்து படுக்கைத் திரைகளை இழுத்து விட்டாள். அச் சில்க் திரைகளினூடே மூடப் பெற்ற ஸ்ரீமதி ஊ, தனது கைகளைக் கோர்த்து மார்பின் மீது வைத்துக் கொண்டு கண்களை மூடினாள். அவள் தலைக்கு மேல் உயரே, கூரையின் மீது சோவென்று மழை பெய்யும் இதமான சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

* * *

இருளில் சென்ற சியூமிங், தனக்கு முற்றிலும் புதியதான ஒரு இடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அவன் இங்கு வந்ததிலிருந்து ஸ்ரீமதி ஊவின் அறையை விட்டு ஒரு முறை கூட வெளியே செல்லவில்லை. அதை விட்டு இப்போது அனுப்பப்பட்டதும் அவளுக்கு, முன்பு ஒரு முறை தன்னைப் பெற்றவள் நகரத்தின் சுவற்றிற்கு வெளியே தனியே அனுதையாக விட்டுச் சென்றது போல், இப்போதும் தான் முற்றிலும் ஆதரவற்ற அனுதையாகி விட்டது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. ஆனால் அப்போது அவள் அவ்வாறு விட்டு விட்டுப் போனதைப் பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. இப்போதோ அவள் அதை உணர்ந்தாள்.

ஆனால் அவளுடைய வாழ்க்கையில், அவள் வெகு காலத்திற்கு முன்பிருந்தே மௌனமாக இருக்கக் கற்றுக் கொண்டிருந்தாள். அவள் பேசினாலும் அதைக் கேட்பதற்கு ஒரு பிராணி கூட இருந்ததில்லை. இங், இன்னும் அவளது சட்டையின் கையை இரு விரலால் பற்றியே அழைத்துச் சென்று கொண்டிருந்தான். இந்த மெல்லிய இழுப்பையே அவள் ஆதரவாகக் கொண்டு சென்று கொண்டிருந்தாள். ஆனால் அவள் இங்குடன் பேச்சு கொடுக்கவில்லை.

இங் பேசாமல், கல் தளங்களின்மீது நடந்து ஒவ்வொரு பகுதியாகக் கடந்து சென்று கொண்டிருந்தான். பெரிய எஜமானியின் பகுதி நிசப்தமாகயிருந்தது. அந்த வயதான அம்மாள் சூரியன் அஸ்தமித்ததுமே படுத்து விடுவாள். மேற்குப் பக்கத்தில் எங்கிருந்தோ ஒரு குழந்தை அழும் சப்தம் கேட்டது. அது மூத்தமகனுடைய பிள்ளை. வடக்குப் பக்கத்திலிருந்து ஒரு பெண் அழும் குரலை இங்தான் கேட்டானோ, அல்லது கேட்டதாக எண்ணிக் கொண்டானோ, தெரியவில்லை! அவன் நின்று உன்னிப்பாகக் கவனித்தான். "ஹா! யார் இது

இப்படி இரவில் அழுவது?" என்று தனக்குள் கூறிக் கொண்டாள்.

சியூமிங் தனது தலையை உயர்த்தினாள்.

"ஓ! இப்போது கேட்கவில்லை. ஒரு வேளை புரு கிரு ஏதாவது கத்தியதோ என்னவோ!" என்றாள் இங்.

அவர்கள் மேலும் நடந்தனர். சியூமிங்கின் இதயம் துடிக்க ஆரம்பித்தது. அவளுடைய ஒவ்வொரு நரம்பும் வேகமாக அடித்துக் கொண்டது. அவள் சில்லென்ற காற்று தன் மேல் படுவதை உணர்ந்தாள். ஆம், அவள் ஒரு ஸ்திரீயின் அழுகுரலைக் கேட்டாள். ஆனால் இந்த வீடுகளிலிருக்கும் எந்தப் பெண் அழுவாள்? அவள் இதைக் கேட்கவில்லை. அது என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் மட்டும் அவளால் என்ன செய்து விட முடியும்? அவளுடைய திக்கற்ற நிலைமை அவளைப் பயத்திலாழ்த்தியது. அவளும் கூட, வாய்விட்டு விம்மியழ விரும்பினாள். அவள் இப்போது ஏதாவது பேசியாக வேண்டும். ஏதாவது ஒரு உயிருள்ள பிராணியிடம் பேசி அதன் மறுமொழியாக அதனுடைய குரலைக் கேட்டேயாகவேண்டும்! அது யாராயிருந்தாலும் பாதகமில்லை! இந்த வேலைக்காரப் பெண்ணாகயிருந்தாலும் பரவாயில்லை!

அவள் மென்று விழுங்கிக் கொண்டு, "அவர்கள் என்னை வேண்டுமென்று நினைத்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. கேளிக்கை இல்லங்களிலிருந்து யாராவது ஒரு பெண் வந்தால் அவளை அவர் விரும்புவார் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு—அப்பெண்களுக்கு எப்படி—என்று எல்லாம் தெரிந்திருக்கும்—நான் நாட்டுப் புறத்தில் வளர்ந்தவள் தானே" என்றாள்.

"எங்கள் எஜமானி இம்மாதிரி பெண்ணை இவ்வீட்டில் சேர்க்கமாட்டார்கள்" என்றாள் இங் கடுமையுடன்.

சியூமிங் எதுவும் சொல்வதற்கு முன் அவர்கள் அங்கு சென்று விட்டார்கள். அவ்வாசலில் பியோனிகள் நிறைந்திருந்தன. உள்ளிருந்து வந்த விளக்கின் அரைகுறை வெளிச்சத்தில் அவை நிழல் தெரிய அழகுற அசைந்து கொண்டிருந்தன. முன்னால் சென்ற இங், "இங்கு ஒருவரும் இல்லை" என்று அறிவித்தாள். சியூமிங் அவளைத் தொடர்ந்து சென்றாள். அவள் இதுவரை அவ்வளவு பெரிய அறையைப் பார்த்ததேயில்லை. அங்கு விலையுயர்ந்த நாற்காலி மேஜைகள் போடப்பட்டிருந்தன. சுவர்களில் வர்ணச் சித்திரப்படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. கதவுகளில் தொங்கிய வேலைப்

பட்டாக்களை இரவுக் காற்று மெல்ல அசையச் செய்தன. தந்தம் போன்ற கவற்றின் வெண்மையினூடே அவை மிகச் சிவப்பாகத் திகழ்ந்தன. அவள் மருட்சியுடன் உள்ளே காலெடுத்து வைத்தாள். இதுதான் அவள் வசிக்க வேண்டிய இடம்—அதாவது அவருடைய மனதை அவள் மகிழ்வித்தால்...ஆனால் அவர் எங்கே?

அவளும் கேட்கவில்லை. இங் கூட அவரைப் பற்றி பேசவில்லை. அவள் அதே இரக்கமற்ற முறையில், சியூமிங்கை படுக்கைக்கு அனுப்பத் தயார் செய்து கொள்வதற்கு உதவி செய்தாள். அப்பெண் கட்டிலின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்த போது, அவளுடைய வெளுத்திருந்த முகத்தைப் பார்த்த போது தான் இங்கிற்கு அவள் மீது இரக்கம் உண்டாயிற்று.

அவள் உரத்த குரலில், "இது மிக்க கௌரவம் வாய்ந்த வீடு என்பதை நீ நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நீ உன்னுடைய கடமையைச் சரியாகச் செய்தால், இங்கு பயப்படவேண்டியதற்கு அவசியமேயில்லை. அவர் மிகவும் கருணையுள்ளவர். எஜமானியோ கருணையோடு புத்தி கூர்மையும் படைத்தவர்கள். பெண்களுள் நீ மிகவும் அதிர்ஷ்டம் செய்தவன். ஆதலால் நீ ஏன் பயப்படுகிறாய்? உனக்குத் திரும்பிப் போய்விட ஏதாவது இடம் இருக்கிறதா? அல்லது உன்னைத் திருப்பி அழைத்துக்கொள்ள உன் தாய்தான் இருக்கிறாளா?" என்றாள்.

தலையை அசைத்த சியூமிங்கின் முகம் ரத்தமெனச் சிவந்தது. அவள் பேசாமல் படுத்துக்கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். இங் திரைகளை இழுத்து விட்டுச் சென்று விட்டாள்.

திரைக்குள் தனிமையில் படுத்திருந்த சியூமிங்கின் மனதில் பெரும் பீதி உண்டாயிற்று. இன்னும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் அவளுக்கு என்ன நேரிடுமோ? அப் பிரம்மாண்டமான வீடு அவளைத் தன்னுள் அடக்கிக்கொண்டு விட்டது. எங்கிருந்தோ 'மாஜாங்' கட்டைகளை உருட்டி விளையாடும் சப்தம் கேட்டது. வேலைக்காரர்கள் வம்பளந்து கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது—அல்லது ஒரு வேளை வீட்டுப் பின்னாலோ? அல்லது அவர் தான் சிநேகிதர்களோடு பேசிக் கொண்டிருக்கிறாரோ? இதைப் போன்ற வீட்டில், ஒரு விலைமகன், இத்தகைய முறையில், அவரை முன்பின் பார்த்தறியாதவளாய், எங்காவது கொண்டு வரப்பட்டிருக்கிறாளா? இது எப்படி இருக்கிறது என்றாள், அவள் விலைமகளாக

யில்லாமல் ஒரு மனைவியாக வருவது போலல்லவா இருக்கிறது? ஆஞல் அந்த வீட்டு எஜமானிதான் அவளுடைய மனைவி. இவள் அல்ல. அந்த மனைவியைப் போல் எவ்விதம் அவ்வளவு அழகாக இருக்க முடியும்? ஒவ்வொரு அசைவிலும் அழகு ததும்ப விளங்கும் அந்த மனைவிக்குப் பிறகு இவள் எவ்வாறு அவரை மகிழ்விக்க முடியும்?

'என் உடல் தான் எவ்வளவு முரடாகயிருக்கிறது. என்னுடைய கைகள்கூட எவ்வளவு முரடாயிருக்கிறது!' என்று எண்ணியவாறு, இருளில் தன் கைகளை ஒரு முறை உயரே தூக்கிப் பின் மேே போட்டாள். சொரசொரவென்றிருந்த அக் கைகளில் மென்மையான அந்த சில்க் விரிப்புகள் சிக்கிக் கொண்டன.

அவளுக்கு அப்பெண்ணின் அழுகுரல் ஞாபகம் வந்தது. அவ்வீட்டில் இன்னும் வேறு யார் யார் இருக்கிறார்கள்? பின்னைகளும் அவர்களுடைய மனைவிமார்களும் இருப்பார்கள். அவர்களெல்லோரும் அவளிடம் வெறுப்பு கொள்ளாதபடி, அவள் அவர்களுடன் சமாதானமாக நடந்து கொள்ள வேண்டும். இன்னும் அநேக வேலைக்காரர்கள் இருப்பார்கள். அவர்களும் இங்கைப் போல் இவ்வளவு அன்பாக இருப்பார்களா? வேலைக்காரர்களை அவர்கள் எவ்வாறு அழைக்கிறார்களோ? அவளுக்கு வேலை ஏதாவது ஆகவேண்டியிருந்தால், அவளிடம் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே. அவளைத் தானே செய்து கொள்ளட்டும் என்று விட்டு விடுவார்களோ?'

'ஐயோ, என்னுடைய பழைய படுக்கையிலேயே நான் இப்போது இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்' என்று அவள் தன் மனத்திற்குள் புலம்பினாள். அவள் தன் வாழ்நாள் முழுவதும், தன் வளர்ப்புத் தாயின் அறைக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறு கொட்டிலில்தான் தூங்கியிருக்கிறாள். இரண்டு பெஞ்சுகளின் மீது பலகைகளைப் போட்டு அதைத்தான் அவள் கட்டிலாக உபயோகித்து வந்தாள். இரவில், அருகிலிருக்கும் மாடுகள் மூக்க விடும் சப்தமும், கூண்டிலிருக்கும் கோழிகள் சிறகை அடித்துக் கொள்ளும் சப்தமும் அவளுக்கு நன்றாகக் கேட்கும். அப் பலகையின் மீது ஒரு நூல் மெத்தையைப் போட்டுக் கொள்வாள். அதையே வேண்டும்பொழுது தன் மேல் சுற்றிக் கொண்டு போர்வையாகவும் உபயோகித்துக் கொள்வாள். கூரையின் சந்தில் சில குருவிகள் வசித்து வந்தன. சில சமயங்களில், காலையில் அவை அவளுடைய முகத்தின் மீது எச்சமிட்டதும், அவள் விழித்துக் கொள்வாள்.

பிறகு அவள், தன்னுடைய வளர்ப்புத்தாயின் அந்த மகனை—அவனை எப்போதும் அவள் சகோதரனுக எண்ணியதில்லை—நினைத்துக் கொண்டாள். சிறிது விவரம் தெரிய ஆரம்பித்ததுமே, அவள் அப் பையனுக்கு மனைவியாவதற்காகத்தான், தான் அவ்வீட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்து கொண்டாள். அவன் அவளை முதலிலிருந்தே அறிந்திருந்ததால் அவளுக்கு அவன்மேல் காதல் உண்டாகவில்லை. கிராமத்தில் இருந்த மற்ற எல்லோரையும் போல் அவனும் ஒரு குடியானவப் பையன்! அவனை நினைத்துக்கொண்டபோது அவனுடைய தட்டையான முகமும் கன்னங்களும் அவள் கண்முன் தோன்றின. அவள் சிறு பெண்ணுகயிருந்தபோது அவன் அப்படித்தான் இருந்தான். பிறகு அவன் உயரமாக வளர்ந்து ஒல்லியாக ஆனபோதுதான் அவனுக்கு அவனைக் கண்டு சிறிது கூச்சம் உண்டாக ஆரம்பித்திருந்தது. அப்போதே அவன் இறந்துபோய் விட்டான். அப்போது அவனுடைய கல்யாண உடைகள்கூட எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவள் அவனைத் தன் கணவனை பாவித்து நடக்குமுன், மிக இளம் வயதில் அவன் இறந்துபோய்விட்டான். அவன் இறந்து போனதற்காக அவனுடைய வளர்ப்புத் தாய் அவனை ஏசினாள்.

"என் வீட்டிற்கே ஒரு சாபம் போல் நீ வந்து சேர்ந்திருக்கிறாய். உன்னை நான் அந்த நகரத்து கவற்றருகேயே செத்துப் போகும்படி விட்டிருக்க வேண்டும். நீ என்னுடைய மகனுக்காகப் பிறந்தவளல்ல" என்று வைதாள்.

இவ்வார்த்தைகள் தன்னை எவ்வளவு புண்படுத்தின என்பதை அவள் இப்போது நினைத்துக் கொண்டாள். அந்தப் பண்ணை வீட்டைத்தான் அவள் தன் வீடென்று எண்ணியிருந்தாள். அந்த ஸ்திரீயைத் தான் தனது தாயார் என்று மதித்திருந்தாள். அந்த ஸ்திரீயும் இவளிடம் எப்போதுமே இரக்கமில்லாமல் நடந்து கொண்டவளல்ல. எனினும் இவ்வார்த்தை களை அவள் கூறியதற்குப் பின், சியூமிங் தான் மீண்டும் ஒரு அனுதையாகி விட்டதை உணர்ந்தாள். அவள் அவ்வீட்டைச் சேர்ந்தவளல்ல. விதவை வந்து தரகு பேசி முடித்தபோது அவள் ஒன்றுமே சொல்லவில்லை.

'ஆதலால் இங்கு வருவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது எனக்கு?' என்று அவள் இப்போது தன்னையே கேட்டுக்கொண்டாள்.

அவள் இவ்வாறு எண்ணிக் கொண்டிருந்த சமயம், ஒரு காலடியோசை கேட்டது. அதைக் கேட்டதும், ஒரு கணம்

அவளுடைய இரத்த ஓட்டம் அப்படியே நின்றுவிட்டது. அவள் பட்டுத் தலையணையை வெடுக்கென்று எடுத்துத் தனது கன்னத்தின்மீது வைத்துக்கொண்டு மூடியிருந்த அத் திரையை வெறித்து நோக்கினாள். திரைகள் விரிந்தன. அவள் ஒரு அழகிய முகத்தை—யௌவனமாகவுமில்லாமல், வயதான தாகவுமில்லாமல்—குடியிலல் சிவந்திருந்த ஒரு அழகிய முகத்தைப் பார்த்தாள். மதுவின் நெடி கட்டிலுக்குள் பரவியது. ஒரு முழு நிமிஷ நேரம் அவர் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றார். பிறகு மெதுவாகத் திரையை மீண்டும் மூடிவிட்டுச் சென்றார்.

வெகு நேரம் அவளுக்கு வேறு எவ்வித சப்தமும் கேட்கவேயில்லை. அவர் சென்று விட்டாரா? அசைவதற்குக் கூட அவளுக்குத் துணிவு உண்டாகவில்லை. அவ்விருளிலேயே காத்திருந்த படி அவள் படுத்திருந்தாள். அவருக்கு அவளை பிடிக்கவில்லையென்றால் நாளைக்கு அவளை அனுப்பி விடுவார்கள். ஆனால் அவள் எங்கு செல்வாள்? அவர்கள் அவளை அனுப்பும்போது அவளுக்குக் கொஞ்சம் பணமும் கொடுப்பார்களா? இம்மாதிரி வேண்டாமென்று தள்ளப்பட்ட விலைமகளிரின் கதி என்ன ஆகியிருக்கிறது? இம்மாதிரி விதியை நினைத்தபோது அவளுக்குச் சொல்லொணா பீதி உண்டாயிற்று. இப்போது அவளுக்கு இவ்விதியை விட வேறு எது வந்தாலும் பரவாயில்லை என்றாகிவிட்டது.

அவள் வேகமாக எழுந்து உட்கார்ந்து, ஒரு கையால் திரையை விலக்கிக் கொண்டு வெளியே எட்டிப் பார்த்தாள். அங்கு அவர் ஒரு பெரிய நாற்காலியில் அசைவற்று உட்கார்ந்திருந்தார். அவர் மேலாடைகளையெல்லாம் கழற்றுவிட்டு வெறும் வெள்ளை சில்க் உள்ளாடைகளை மட்டும்தான் அணிந்திருந்தார். ஆனால் அவர் எப்படி அவளுக்குக் கேட்காதபடி, சிறிது சப்தம் கூட செய்யாமல் அவற்றைக் களைந்திருக்கிறார்!

இருவரும் ஒரு நிமிஷம், ஒருவரை ஒருவர் பார்த்தவாறு இருந்தனர். பிறகு அவள் அவசரமாக, திரைகளை மூடிவிட்டு, படுத்துக்கொண்டு, முகத்தைத் தன் கைகளால் மூடிக்கொண்டாள். அவர் வருகிறார்! ஒட்டுத் தரையின்மீது நடந்துவரும் அவருடைய மெல்லிய அழுத்தமான காலடியோசை அவளுக்குக் கேட்டது. சில்க் திரைகள் பிய்ந்துவிடுவது போன்ற வேகத்துடன் விலக்கப்பட்டன. பிறகு அவருடைய கைகள் தனது கைகளை தன் முகத்திலிருந்து பிடித்து இழுப்பதை அவள் உணர்ந்தாள்.

ஸ்ரீமதி ரூ ஆழ்ந்த நித்திரையிலிருந்து விழித்து எழுந்தாள்.

5

அவள் இம்மாதிரி ஒரு போதும் ஆழ்ந்த நித்திரை செய்ததில்லை. அது காலை நேரம். அவள் இரவு முழுவதும் ஒரு முறைகூட விழித்துக் கொள்ளவேயில்லை. அவள் எழுந்தபோது அவள் மனம் சலனமற்றிருந்தது. முதல் நாள் இரவு இங் அவளுடைய கட்டிலுக்கருகே இருந்த மேஜையின்மீது வைத்துச் சென்ற புதிய மெழுகுவர்த்தி இன்னமும் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது.

முதன் முதலில் அவளுக்குப் பரிபூரண ஒய்வினல் ஏற்படும் ஆனந்த உணர்ச்சிதான் ஏற்பட்டது. சோர்வு என்பது அவளுடைய உடலையும் உள்ளத்தையும் விட்டு அகன்று விட்டது. ஆனல் இம்மாதிரியான சுகத்தைத் தான் முன்பே அனுபவித்திருப்பது போல் தோன்றியது அவளுக்கு. அவள் தனது நிலைவை, தனது செல்வமும் போகமும் நிறைந்த வாழ்க்கையின் கடந்த காலத்தை நோக்கித் திருப்பி ஆராய்ந்தாள். தனது குழந்தைகள் ஒவ்வொருவரும் பிறந்த பின் அவள் இம்மாதிரியான சுகத்தை அனுபவித்திருக்கிறாள். ஒவ்வொரு முறையும் அந்தப் பத்து மாதங்களில், தனது கருவிலே இருந்த சுமை நாளுக்கு நாள் பெருகித் தன்னை ஆக்ரமித்துக்கொள்ளும்போது அவள் மிகுந்த துன்பமுறுவாள். அச்சமயம் அவளுடைய நுண்ணறிவும் தன்னடக்கமுமே சூழ் நிலைக்குத் தக்கவாறு அவளது சுபாவமான அன்புடன் நடந்து கொள்வதற்குப் பெரிதும் உதவியது. பிறகுதான் குழந்தை பிறக்கும் நேரம் வரும்! அவளைப் பொருத்தவரை, பிறப்பை விட, தன் தேகத்தைத் தான் மீண்டும் அடையலாம் என்ற ஆவலே பெரிதாகயிருந்தது. சட்டென்று அவ் வேதனை நின்று, பிரிந்து தனியே வெளிவந்த குழந்தையின் அழுகுரலைக் கேட்கும்போது அவளுக்கு முதலில் தன்னுடைய சுதந்திரத்தைப் பற்றிய எண்ணம்தான் தோன்றும். அக் குழந்தையை கழுவி, உடை அணிவித்து அவளிடம் கொண்டு வந்து காட்டும் போதுதான், அவள், அது தன்னில் ஒரு பாகம் என்பதற்காக அல்லாமல், குழந்தை வாஸ்வதத்தில் எண்ணவாகயிருக்கிறது என்பதற்காக அக் குழந்தையை நேசிக்கத் தொடங்குவாள். உண்மையில், அவள் தன்னை எவ்விதத்திலும் பிரித்துக் கொடுக்க விரும்பியதில்லை. அவள் மீண்டும் தன்னை முழுமையாக்கிக் கொள்ளவே விரும்பினாள்.

ஆகவே, அன்று காலை அவளுக்குத் தான் முன்னைவிட இப்போது இன்னும் அதிக பூரணத்துவத்தையும் அமைதியையும் அடைந்திருப்பதாகத் தோன்றியது. அவளுடைய கடமைகள்

யாவற்றையும் அவள் நிறைவேற்றி விட்டாள். இவ்விட்டில் உள்ள எவருக்கும் அவரவர் விரும்பியது கிடைக்காமற் போகவில்லை...ஆனால்...அவளுக்குத் தன்னுடைய மூன்றாவது மகன் பெர்மோவின் ஞாபகம் வந்தது. அந்தோ! அவனுக்கு மணம் முடித்து வைக்கும் வரை அவளுடைய கடமை பூர்த்தி யாகாது.

இந்த எண்ணம் எழுந்ததும், அவள் எழுந்து தனது குறுகிய பாதங்களை, படுக்கைக் கருகேயுள்ள நீண்ட பெஞ்சின் மீது இங்கு தயாராக வைத்திருக்கும் கறுப்பு வெல்வெட் செருப்புக்குள் நுழைத்துக் கொண்டாள். ஸ்ரீமதி ஹானின் பாதங்கள், இயற்கையாக இருக்க வேண்டியதைக் காட்டிலும் சற்று குறுகலாகவிருந்தன. பல வருஷங்களுக்கு முன், அதாவது அவள் ஐந்து வயது சிறுமியாக இருந்தபோது அவளுடைய தாய் அவளது பாதங்களைக் கட்டுவதில் முனைந்தாள். அப்போது அவளுடைய தந்தை 'லீஹுங்சேங்' அரசரோடு அயல்நாடுகளில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவள் தனது தந்தை அத் தேசங்களில் எடுத்துக் கொண்ட போட்டோக்களை யெல்லாம் பார்ப்பாள். அவளுடைய தாதி அவருடைய அறிவாற்றலைப் பற்றியும் கருணையுள்ளத்தைப்பற்றியும் அவளுக்குக் கூறுவாள். அவள் பிடிவாதம் பிடிக்கும் சமயங்களில் அவளுடைய தாய் அவரைப் பற்றிக் கூறுவாள். அவள் அடிக்கடி, "உன் தந்தை இதைப் பார்த்தால் உன்னை என்ன சொல்வார்?" என்று கேட்பாள். ஏனெனில் அச்சிறுமிக்கு இதற்கு பதில் சொல்லத் தெரியாதாதலால், அவள் தன் பிடிவாதத்தை உடனே விட்டு விடுவாள். ஒருநாள் அவளுடைய தாய் அவளைக் கூப்பிட்டாள். அப்போது தன்னுடைய தாய், பட்டை பட்டையான நீண்ட வெள்ளை துணிகளை வைத்திருப்பதைப் பார்த்ததும் அச் சிறுமி ஓவென்று அழ ஆரம்பித்தாள். இவ்வாறு தன்னுடைய அக்காளிற்கு செய்யப்பட்டதை அவள் பார்த்திருக்கிறாள். முன்பு ஓடியாடி ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்த அவளுடைய அக்கா இப்போது நாள் முழுவதும் மௌனமாக உட்கார்ந்து தையலில் ஈடுபட்டிருப்பதையும், கட்டப்பட்டு புண்ணாகியிருந்த பாதங்களால் அவள் நிற்கக் கூட சக்தியற்றவளாகிவிட்டதையும் அவள் அறிவாள்.

அவளுடைய தாய், தனது இரண்டாவது மகளாகிய இவளைக் கடுமையுடன் பார்த்து, "உன்னுடைய தந்தை வீட்டிற்கு வரும்போது, உன்னுடைய பாதங்கள் ஒரு குடியானவப் பெண்ணுடைய பாதங்களைப் போல் அகன்று

இருப்பதைப் பார்த்தால் என்ன சொல்வார்?" என்று கேட்டாள்.

சிறுமி விம்முவதை நிறுத்திவிட்டு, சிணுங்கியவாறு, தனது பாதங்களைக் கட்டுமாறு விடுத்தாள்.

இப்போது ஸ்ரீமதி ஹானிற்கு அம்மாதம் ஏற்பட்ட வலியின் வேதனை நன்றாக நினைவிருந்தது. பிறகு அவளுடைய தந்தை வீட்டிற்குத் திரும்பி வரப்போவதாகக் கடிதம் வந்தது. அவள் தனது தந்தையின் பொருட்டு மேலும் ஒரு பதினைந்து நாட்கள் வரை வலியைப் பொறுத்துக் கொண்டாள். அவர் வீட்டிற்கு வந்ததும், அச்சிறிய பாதங்களால் அவரிடம் நடந்து போக மிகவும் பாடுபட்டாள். அவளுக்கு அடுத்தபடியாகக் கிடைக்க இருந்த ஆனந்தத்திற்கு ஈடாக எதைச் சொல்லமுடியும்? அவள் அவருடைய முகத்தைப் பார்க்கவோ, அவரை அழைக்கவோ செய்யுமுன், அவர் கோபத்துடன் கூச்சலிட்டு விட்டுத் அவளைத் தமது கையில் எடுத்துக் கொண்டார்.

"இத்தத் துணிகளையெல்லாம் முதலில் குழந்தையின் பாதத்திலிருந்து அவிழ்த்து விடுங்கள்" என்று உத்தரவிட்டார். உடனே அங்குக் கூச்சலும் முனகலும் கிளம்பின. பெரியவர்களிடையே ஏற்பட்ட அச்சண்டையில் கூறப்பட்ட ஒரு வார்த்தைகூட அவளுக்கு நினைவிருக்கவில்லை. ஆனால் அப்போது ஏற்பட்ட குழப்பம் மாத்திரம் அவளுக்கு நினைவிருந்தது. அவளுடைய தாய் கத்தினாள். பாட்டி கோபத்துடன் கூச்சலிட்டாள். அவளுடைய தாத்தா கூட கோபத்தோடு ஏதோ கூறினார். ஆனால் அவளுடைய தந்தையோ உட்கார்ந்து, அவளைத் தன் மடிமீது அமர்த்திக்கொண்டு, தமது கைகளாலேயே, அக்கட்டுகளை அவிழ்த்து, அவளுடைய பாதங்களை விடுவித்தார். விடுபட்ட அப்பாதங்களினுல் அப்போது ஒருங்கே ஏற்பட்டன வேதனையும் இன்பமும்! அவர் அச்சிறு பாதங்களை ஒவ்வொன்றாகக் கையால் தடவி மீண்டும் அவற்றில் இரத்த ஓட்டம் ஏற்படும்படி, மெல்லத் தேய்த்து விட்டார். ஒடுங்கிக் கிடந்த இரத்தக் குழாய்களில் மீண்டும் ரத்தம் ஓடியதும் முதலில் அது வேதனையைக் கொடுத்தது. பிறகு அது ஆனந்தத்தைக் கொடுத்தது.

"கூடாது—இது தகாது—" என்று அவர் வாய்க்குள் முனகினார்.

அவள் அழுதுகொண்டே அவருடைய மார்பில் புதைத்து கொண்டாள். "நீங்கள் வீட்டிற்கு வந்திராவிட்டால் என்ன ஆகியிருக்கும்!" என்று விம்மினாள். அவளைச் சமாதானம்

தற்காக அவர் சமயத்தில் வந்து சேர்ந்தார். சில மாதங்களுக்குப் பிறகு அவளால் மறுபடியும் ஓட முடிந்தது. ஆனால் அவளுடைய அக்காவிற்கு மிகத் தாமதமாகி விட்டது. அவளுடைய பாதங்களிலிருந்த எலும்புகள் ஒடிந்து போய் விட்டன.

அதற்குப் பிறகு மூன்று வருஷங்கள் வீட்டில் மிகுந்த கலவரம் தான் நிறைந்திருந்தது. அவள் தந்தை அயல் நாடுகளிலிருந்து புதிய முறைகளையெல்லாம் கற்று வந்திருந்தார். அவளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். மூன்று வருஷங்களுக்குப் பிறகு, அவர் ஒரு கோடை காலத்தின் முடிவில், திடீரென்று காலராவினால் இறந்து விட்டபொழுது, அவளுடைய காலை மீண்டும் கட்டுவதற்கு இயலாமல் மிகவும் தாமதமாகி விட்டது. அவள் ஏற்கெனவே படிக்கக் கற்றுக்கொண்டு விட்டதால், மீண்டும் அவளை அறியாமையில் ஆழ்த்தவும் இயலாமல் போயிற்று. அவளுக்கு மேலும் தொடர்ந்து படிக்கவும் அனுமதி கிடைத்தது. ஏனெனில் அவளுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. அவளுடைய மாமனார், அவளுக்குப் படிக்கத் தெரிந்திருப்பதைப் பற்றியும், அவளுடைய கால்கள் கட்டப்படாமல் இருப்பதைப் பற்றியும் மிக மகிழ்ச்சி கொண்டிருந்தார். அவளுடைய தாய், "நாம் என்ன புண்ணியம் செய்தோமோ, இவ்வளவு பெரிய பணக்கார குடும்பத்தினர் இவ்வளவு கருணையுள்ளவர்களாகக் கிடைத்திருக்கிறார்கள்" என்று கூறினாள்.

இப்போது, தனது குறுகிய பாதங்களைச் செருப்பிற்குள் நுழைத்தவாறே அவள் தன் தந்தையைப் பற்றி நினைத்துக் கொண்டாள். அதே மாதிரியான ஆனந்தமும் விடுதலையின் பரமும் அவளுக்கு இப்போது உண்டாயிற்று. அவள் புன்னகை செய்து கொண்டாள். அதே சமயம் உள்ளே வந்த இங் அதைப் பார்த்து விட்டாள்.

அவள் நிந்திக்கும் குரலில், "அம்மா, நீங்கள் இன்று காலை ரொம்பவும் சந்தோஷமாக யிருக்கிறீர்கள் போலிருக்கிறது" என்றாள். அவள் எவ்வளவுதான், தன் முகத்தைக் கடுமையாக வைத்துக்கொள்ள முயன்றபோதிலும், அவளையும் மீறி அவளது முகத்தில் புன்னகை தோன்றியது. உங்களைப் பார்த்தால் ஒரு போக்கிரித்தனம் நிறைந்த குழந்தையைப் போலிருக்கிறது" என்றாள்.

ஸ்ரீமதி ஊ குதூகலம் நிறைந்த குரலில், "இங், நீ என்னைப் புரிந்துகொள்ள மட்டும் முயற்சிக்காதே. நீ ஏன் உன்னை

இவ்வளவு கஷ்டப்படுத்திக் கொள்கிறாய்? நாம் எப்போதும் இருந்ததுபோலவே இனியும் இருக்கலாமே! சரி, இன்றைய தினம் அழகு நிறைந்ததாக இருக்கிறதா இல்லையா சொல்லு பார்க்கலாம்" என்றாள்.

"நேற்று மழையே பெய்யாதது போலல்லவா இருக்கிறது" என்று பதிலளித்தாள் இங்.

ஸ்ரீமதி ஊ, "அப்படியானால் என்னை வெளியே செல்வதற்காகத் தயார் செய்துவிடு. நான் சாப்பிட்டதும் ஸ்ரீமதி கேங்கைப் பார்ப்பதற்காகப் போகவேண்டும். அவளிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும். அவர்களுடைய லின்யியை நம் பெங்மோவிற்குப் பார்க்கலாமா? உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டாள்.

இங் யோசனையுடன், "ஒரே கயிற்றில் இரண்டு முடிச்களா? நல்லது. அம்மா, கெட்ட காரியத்தை விட ஒரு நல்ல காரியத்தை மீண்டும் செய்வதில் தவறொன்றுமில்லை. சின்ன எஜமான்களில் பெரியவர் கேங்கின் மூத்த பெண்ணோடு சந்தோஷமாக வாழ்கிறார். ஆனால் இரண்டாவது எஜமானரோ நேற்றிரவு தமது மனைவியை அடித்துக்கொண்டிருந்தார்" என்று கூறினாள்.

"த்ஸேமோ ருவான் அடிக்கிறானா?" என்று கூவினாள் ஸ்ரீமதி ஊ அதிசயத்துடன்.

"அந்த அம்மாளின் அழுகுரலை நான் கேட்டேன். சின்ன எஜமானர் அந்த அம்மாளை அடித்திருக்க வேண்டும்" என்றாள் இங்.

ஸ்ரீமதி ஊ பெருமூச்செறிந்து, "இந்த வீட்டில் எனக்கு நிம்மதி என்பது ஒருபோதும் கிடைக்கப் போவதில்லையா!" என்றாள்.

அவள் விரைவாகத் தன் காலுயுறையை முடித்துக் கொண்டு, த்ஸேமோவின் பகுதியை நோக்கிச் சென்றாள். ஆனால் த்ஸேமோ அதற்கு முன்பே எழுந்திருந்து எங்கோ போய்விட்டான். ருவான் இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை என்று அங்கிருந்த வேலைக்காரி கூறினாள். ஒரு வேலைக்காரியைப் போய், ஏன் தன் மகன் பெண்டாட்டியை அடித்தாய் என்று கேட்பவளல்ல ஸ்ரீமதி ஊ. ஆகவே, அவள், "என்னுடைய மகன் வந்தால், நான் அவனை இன்றிரவு பார்க்கிறேன் என்று சொல்லு" என்றாள்.

பிறகு அவள் தன் நினைவு வழக்கப்படி, சமையல்கட்டை மற்ற குடும்பத்தாரின் பகுதிகளையும் பார்வையிட்டாள். வேலைகளைப் புகழ்ந்தும், சில வேலைகளைத் திருத்தியும் ஒவ்வாறாக வீடு முழுவதையும் பார்வையிட்டதும், தன் உடைய சொந்த அறைக்குத் திரும்பிச் சென்றாள்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அவள் ஊ வீட்டின் எல்லையைத் தாண்டி வெளியே சென்றாள். சுமார் இரண்டு கருஞ்சுகளுக்கு முன் ஸ்ரீமான் ஊ அந்நிய தேசத்து மோட்டார் வண்டி ஒன்றை வாங்கியிருந்தார். ஆனால் தெருக்கள் மிகவும் குறுகலானதாக இருந்ததால் அதை ஸ்ரீமதி ஊ உபயோகிக்க விரும்பியதில்லை. அந்தப் பெரிய மோட்டார் வண்டி தெரு முழுவதையும் அடைத்துக்கொண்டு செல்லுகையில் பொதுமக்கள், தெருவில் செல்பவர்கள் ஒரத்திலிருக்கும் வீட்டு சுவர்களோடு ஒட்டிக்கொண்டு நிற்கவேண்டியிருப்பதைக் காண அவள் விரும்பவில்லை. அதேபோல் ரிக்ஷாவின் நிறப்பான முறையையும் அவள் விரும்பவில்லை. ஸ்ரீமான் ஊ அவளுக்கு ஒரு ரிக்ஷாவை ஒருமுறை பரிசாகக் கொடுத்திருந்தார். அவளுக்கு இன்னமும் பழைய வழக்கப்படி மூடிய பல்லக்கில் செல்லும் முறையே பிடித்திருந்தது. அந்தப் பல்லக்கு அவளுடைய தாய் அவளுக்குச் சீதனமாகக் கொடுத்தது. அவள் இங்கை, ஒரு ரிக்ஷாவில் தன்னைத் தொடர்ந்து வரும்படி கூறினாள். பல்லக்கு தூக்குபவர்களில் ஒருவன் அதன் நிரையைத் தூக்கிப் பிடிக்க அவள் அதில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். உள்ளே உட்கார்ந்தவாறே, தெருவில் நடப்பதை வேடிக்கை பார்த்து மகிழ்வதற்காக அத்நிரையில் ஒரு சிறு கண்ணாடி ஜன்னல் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் வெளியே இருப்பவர்களால் உள்ளே உட்கார்ந்திருப்போரைப் பார்க்க முடியாது.

இவ்வாறு ஜனங்கள் நிறைந்த தெருக்களில், பல்லக்கில் அமர்ந்து சென்ற அவளுக்குத் தன்னால் ஒருவருக்கு இடையூறு ஏற்படவில்லை என்று நினைக்கத் திருப்தியாகயிருந்தது. மிக லேசாக இருந்த அவனைத் தூக்கிச்செல்வதில் அந்த ஆட்களுக்கும் சிரமமேற்படவில்லை. பல்லக்கு குறுகியதாக இருந்ததால் அவ்வாட்கள் ஒருவர் மீதும் இடிபடாமல் சென்றனர். அவர்களில் முன்னால் இருந்த ஒருவன், குறுக்கே வருபவர்களை நோக்கி, "தயவு செய்து உங்கள் கண்ணொளியைத் தாருங்கள்" என்று கூவிக்கொண்டே சென்றான். இதை அவள் மிகவும் விரும்பினாள். இவ்வாறுதான் செல்வந்தர்கள் ஏழைகளுக்கு மரியாதை கொடுக்கவேண்டும்! உயர்ந்தோர் தாழ்ந்தோருக்கு மரியாதை செய்யவேண்டும். ஸ்ரீமதி ஊவால், ஒருவருக்கு

எந்த விதத்திலும் தாழ்ச்சி செய்வதைச் சகிக்க முடியாது. அவள் ஊ குடும்பத்திற்கு எஜமானியாயிவ காலத்திலிருந்து, அவ்விட்டில் ஒரு அடிமை கூட அடி வாங்கியதில்லை. எந்த வேலையாளும் அவமரியாதை அடைந்ததில்லை. வெ சமயங்களில் நாணயமற்ற ஒருவனையோ அல்லது தகுதியற்ற ஒருவனையோ வேலையிலிருந்து நீக்கவேண்டிய அவசியம் ஏற்படுவதுண்டு. ஆனால் அதற்கு இந்த வழியை ஒருபோதும் அவள் பிரயோகித்ததில்லை. அவள் வேறு விதமாக அவனை மற்றவர்கள் எதிரே அவமானமடையாதபடி, சொல்லி அனுப்பிவிடுவாள். ஆதலால்தான் அவளுக்கு இங் கூறியதைப் பற்றி நினைக்கையில்—அதாவது த்ஸேமோ குவானை அடித்து விட்டான் என்பதைக் கேட்டதும் மிகுந்த வருத்தமுண்டாயிற்று.

"உண்மையான விஷயத்தை சரியானபடி விசாரிக்காமல் என்னால் இதை நம்பமுடியாது" என்று எண்ணிக்கொண்டு அவ்விஷயத்தைத் தன் மனத்திலிருந்து அகற்றி வைத்தாள்.

ஊ குடும்பத்திற்கும் கேங் வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் குறைவானதல்ல. இதிலிருந்து அதற்குப் போக ஏறக்குறைய அந்நகரத்தையே முழுவதும் கடந்து செல்லவேண்டியிருந்தது. ஸ்ரீமதி ஊ இதற்கு அவசரப்படவில்லை. முந்தின இரவு பெய்த மழையால் குளிர்ச்சியுற்றிருந்த சூரியனின் ஒளி தெருக்களில் பரவியிருப்பதை மகிழ்வுடன் அனுபவித்தாள். தெருக்கள் நன்றாகக் கழுவப்பட்டு சுத்தமாகயிருந்தன. பிரகாசமாயிருந்த அத் தினத்தில் ஜனங்கள் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டனர். கடைத்தெருவில் ஜனங்கள் சுறுசுறுப்பாக நடமாடிக்கொண்டிருந்தனர். சுற்றுப்புற கிராமங்களிலிருந்து குடியானவர்கள் புதிய பச்சை முட்டைகோஸ்களையும், கூடை கூடையாக முட்டைகளையும், விறகுச் சுமைகளையும் தூக்கிக்கொண்டு நகரத்துக்குள் வந்து கொண்டிருந்தனர். வாழ்க்கை பெருவெள்ளம் இவ்வாறு ஓடிக்கொண்டிருப்பதைக் காண ஸ்ரீமதி ஊவிற்கு எப்போதும் மிகவும் மகிழ்ச்சி உண்டாகும். இந்த நகரத்தில் உள்ள வீடுகளில் பெரியது ஊ குடும்பம் ஒன்றே ஒன்றுதான். இந்நகரில் இவ்வளவு ஜனங்கள் வசித்து வருகின்றனர். அவர்களும் ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து வாழ்ந்து குழந்தைகளைப் பெற்று, பிறகு குழந்தைகளின் குழந்தைகளைப் பெற்று பெருகி வாழ்கின்றனர். இதைப்போன்ற நகரங்கள் இத்தேசத்தில் ஏராளமாகவோ இருக்கின்றன. இதைப்போன்ற தேசங்கள் உலகில் எத்தனையோ உண்டு. எங்கெங்கும் மக்கள் இதே மாதிரியான வாழ்க்கையைத்தானே, வேறெது விதமாக

வாழ்ந்து வருகின்றனர். அவளுடைய உள்ளம் இவ்வளவு தூரம் வியாபித்திருந்தது. எண்ணற்ற துன்பங்கள் எங்கும் நிறைந்திருக்கையில் ஒரு துன்பம் என்ன பெரியது? அல்லது சந்தோஷக் கடலாக இருக்கும் உலகில் ஒரு சந்தோஷம்தான் என்ன பெரிது? அவள் மனம் இவ்விதமான சிந்தனைகளிலேயே லயித்திருக்க விரும்பியது.

சுமார் ஒரு மணிநேரம் ஆகுமுன்பு பல்லக்கு, கேங் வீட்டின் வாசலையடைந்து, அங்கு இறக்கி வைக்கப்பட்டது. இங், முன்பாகவே ஒரு வேலையாளின் மூலம் ஸ்ரீமதி ஊ வருவதைப் பற்றித் தகவல் சொல்லி அனுப்பியிருந்தாள். ஆதலால் அவளை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். சிவப்பு வர்ணம் பூசப்பட்ட அப்பெரிய கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு ஆள் அங்குக் காத்துக்கொண்டிருந்தான். இங் நிக்ஷாவிலிருந்து விரைந்து வந்து ஸ்ரீமதி ஊ பல்லக்கிலிருந்து இறங்குவதற்கு உதவி செய்தாள். அவள் தன் கையில் ஸ்ரீமதி ஊவின் அலங்கரித்துக்கொள்ளும் பொருள்களடங்கிய சிறிய பெட்டியை வைத்திருந்தாள். அவள் அதை எங்கு சென்றாலும் எடுத்துச் செல்வது வழக்கம். ஸ்ரீமதி ஊ தலையைச் சரி செய்து கொள்ளவோ, அல்லது சிறிது முகப்பவுடரை உபயோகிக்கவோ விரும்பலாம் என்று இங் அதைத் தயாராக வைத்திருப்பாள்.

பிறகு அவர்கள் முன் வாசற் கதவைக் கடந்து உள்ளே ஒரு பகுதியைத் தாண்டிச் செல்லுமுன், ஸ்ரீமதி கேங், தானே தன் சிநேகிதியை வரவேற்க வந்துவிட்டாள். இரண்டு பெண்மணிகளும் கைகோர்த்துக் கொண்டனர்.

"நீ வந்தது பற்றி எனக்கு என்ன சந்தோஷம் தெரியுமா? ஏய்லியன்?" என்று ஸ்ரீமதி கேங் ஆவலோடு கூறினாள். அவள் ஸ்ரீமதி ஊவின் வாயிலிருந்தே எல்லாவற்றையும் விவரமாகக் கேட்க வேண்டுமென்று அதிக ஆவலோடு இருந்தாள். இந்த இரண்டு வீடுகளிலும் வேலைக்காரர்கள் எப்போதும் வந்து போய்க் கொண்டிருந்ததால், அவன் ஸ்ரீமதி ஊ தான், சொன்னபடியே செய்து விட்டாள் என்பதை அறிந்து கொண்டிருந்தாள். முந்தின இரவு சியூமிங் ஸ்ரீமான் ஊவின் பகுதிக்குச் சென்று விட்டாள் என்பதுகூட அவளுக்குத் தெரியும்.

ஸ்ரீமதி ஊ, "நான் உன்னுடன் அநேக விஷயங்களைப் பற்றி பேச வேண்டுமென்று வந்திருக்கிறேன். ஆனால் நான் மிகவும் சீக்கிரம் வந்துவிட்டேன்—ஒருக்கால் உனக்குத் தொந்திரவாக இருக்குமோ என்னவோ?" என்று கூறினாள்.

"என்ன அப்படிச் சொல்கிறாய்?" என்றாள் ஸ்ரீமதி கேங் பதிலுக்கு. அவள் தன்னுடைய தோழியின் வெளவளமும், அழகும் ததும்பிய முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். அதில் ஒரு சிறிதும் மாறுதல் தென்படவில்லை. அமைதி நிறைந்த கண்களும், உறுதியுடன் கூடிய அழகிய வாயும், முத்தைப் போன்ற வெண்மையான தேகமும் என்றும்போல் எழிலுடன் விளங்கின.

"நீ எப்போதும் இவ்வளவு அழகாகவே இருக்கிறாய்!" என்றாள் ஸ்ரீமதி கேங் அன்புடன். இதை கூறியபோதே, மனதில் சிறிதேனும் பொருமையில்லாத போதிலும், இன்னும் அலங்கோலமாகக் கிடந்த தன் தலையைப் பற்றி அவள் எண்ணிக்கொண்டாள்.

"நான் அதிகாலையிலேயே எழுந்து விடுவேன். வா, உள்ளே போவோம். நீ தலையை வாரிக்கொள்ளும் வரை நான் காத்திருக்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

ஸ்ரீமதி கேங் விரைந்து, "என்னுடைய தலையைப் பற்றிக் கவலைப்படாதே. நான் மத்தியானமாகத்தான் தலைவாரிக் கொள்வேன். காலை நேரம் எவ்விதமோ மிக விரைவாகச் சென்று விடுகிறது" என்றாள்.

அவள் சுற்றிலும் பார்த்துவிட்டுச் சிரித்தாள். ஏனெனில் அவள் பின்னால் எங்கிருந்தோ ஒரு டஜன் குழந்தைகள் வந்து விட்டன. அவர்கள் அவளுடைய குழந்தைகளும் பேரக் குழந்தைகளுமாவர். எல்லோரிலும் சிறியவனுக்கிருந்த ஒரு குழந்தைக்கு இன்னும் நடக்கத் தெரியவில்லை. அதன் இடுப்பில் ஒரு துணியைக் கட்டி அதன் இரண்டு ஓரங்களையும் ஒரு சிறிய வேலைக்காரப் பெண் பிடித்துக் கொண்டிருந்தாள். பையன் அதில் தொங்கிக்கொண்டு நின்றிருந்தான். ஸ்ரீமதி கேங் குனிந்து அவனைத் தன் கையில் தூக்கிக் கொண்டாள். குழந்தை இன்னும் குளிப்பாட்டாமல் மிகவும் அழுக்காகியிருந்தது. ஆனால் அது சேடின் சில்க் சட்டையை மட்டும் அணிந்திருந்தது. ஸ்ரீமதி கேங் அது இப்போதுதான் நேரே குளித்துவிட்டு வந்ததுபோல் அதை அன்புடன் அணைத்து உச்சி முகர்ந்துகொண்டாள்.

இரண்டு சிநேகிதிகளுமாக உள்ளே சென்றனர். மேலும் இரண்டு பகுதிகளைக் கடந்த பிறகு ஸ்ரீமதி கேங்கின் சொந்த அறையை அடைந்தனர். அவள் அங்குதான் இதுவரை தூக்கிக்கொண்டு வந்த குழந்தையை மேலே இறக்கிவிட்டு, அவளைத் தொடர்ந்து வந்த குழந்தைகளையும், வேலைக்காரச்

சிறுமிகளையும் பார்த்து, தனது பருத்த கைகளை ஆட்டிப் போகச் சொன்னாள். "நீங்கள் எல்லோரும் போங்கள்" என்று கூறினாள். அவர்களுடைய முகங்கள் உடனே வாடி விட்டதைக் கண்டு அவள் தொளதொளவென்றிருந்த தன் னுடைய அங்கியின் ஜோபிக்குள் கையைவிட்டு கை நிறைய காககள் எடுத்தாள். அவ்வேலைக்காரச் சிறுமிகளில் பெரிய வளிடம் இதைக் கொடுத்து, "போய் அவர்கள் எல்லோருக்கும் பட்டாணி கடலை வாங்கிக் கொடு" என்று உத்தரவிட்டாள். ஆவலோடு சென்ற குழந்தைகளின் பின்னால், "தோலோடு வாய்க் கொடு. அப்போது தான் அதைச் சாப்பிடுவதற்கு அதிக நேரம் பிடிக்கும்" என்று கூறினாள்.

குழந்தைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு தெருப் பக்கம் ஓடியதைக் கண்டு ஸ்ரீமதி கேங், தனது சுபாவப்படி பலத்த குரலில் கடகடவென்று சிரித்தாள். பிறகு அவள் ஸ்ரீமதி ஊவின் கையை மறுபடியும் பிடித்துக்கொண்டு தன்னுடைய அறைக்கு அழைத்து சென்று கதவைத் தாளிட்டாள்.

"இப்போது நாம் தனியாக இருக்கிறோம்" என்றாள். ஸ்ரீமதி ஊ உட்கார்ந்ததும் அவளும் உட்கார்ந்துகொண்டு அவளை நோக்கிச் சாய்ந்து, "எனக்கு எல்லாவற்றையும் சொல்லு" என்றாள்.

ஆனால் ஸ்ரீமதி ஊ திகைப்பும், ஆச்சரியமும் கண்களில் ஒருங்கே தோன்ற தன் சிநேகிதியை ஏறிட்டுப் பார்த்தாள்.

சற்று நேரம் கழித்து அவள், "அது ஒரு விசித்திரமான விஷயம். ஆனால், அதில் ஒன்றும் சொல்வதற்கு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்றாள்.

"அது எப்படியிருக்க முடியும்?" என்று கூவிய ஸ்ரீமதி கேங் மேலும், "கோழி முட்டைகளை வைத்திருப்பதுபோல் நான் அத்தனை கேள்விகளைத் தயாராக வைத்திருக்கிறேன். அந்த பெண்—யார் அவள்—உனக்கு அவளைப் பிடித்திருக்கிறதா? அவருக்கு அவளைப் பிடித்திருக்கிறதா?" என்று அடுக்கினாள்.

"எனக்கு அவளைப் பிடித்திருக்கிறது" என்றாள் ஸ்ரீமதி ஊ ஸ்ரீமதி கேங் சற்று நேரம் பேசாதிருந்தபோது, அவளுக்குத் தான் வேண்டுமென்றே அன்று காலையிலிருந்து ஸ்ரீமான் ஊவைப் பற்றியும் யூமின்கைப் பற்றியும் நினைக்காதிருக் கிறோம் என்ற விஷயம் புலப்பட்டது. அவர் அவளை விரும்பு கிறாரா? ஒரு பாம்பைப் போல் இக்கேள்வி அவள்

மனத்துள் துள்ளி எழுந்தது. ஆனால் அதற்குப் பதில் கூறுமலே மேலே தொடர்ந்து செல்ல அவள் தன்னையே வற்புறுத்திக் கொண்டாள்.

"நான் அவளுக்கு ஒரு பெயர் வைத்தேன்—சியூமிங் என்று. அவள் ஒரு சாதாரண பெண்தான். ஆனால் மிகவும் நல்ல பெண். அவருக்கு அவளை நிச்சயம் பிடிக்கும் என்று நினைக்கிறேன். ஏன் எல்லோருக்குமே அவளைப் பிடிக்கும். ஏனெனில் அவளிடம் வெறுக்கத் தக்கது ஒன்றுமேயில்லை. அவளிடம் வீட்டில் எவரும் பொறுமை கொள்ளமாட்டார் கள்" என்றாள்.

"தெய்வமே" என்று ஆச்சரியத்துடன் வாயைப் பிளந் தாள் ஸ்ரீமதி கேங். பிறகு, "நீ இவை எல்லாவற்றையும், உன் பேரக் குழந்தைக்கு ஒரு புதிய தாதியை அமர்த்தி விட்டதுபோல் சொல்லுகிறாய்! ஏன், என் தகப்பனார் ஒரு விலை மகளை வைத்துக்கொண்டபோது, என்னுடைய தாய் அழுது கொண்டு, தற்கொலை செய்துகொள்ளப் போய்விட்டாள். நாங்கள் அவளை இராப் பகலாகக் கவனித்துக்கொள்ள வேண்டி யிருந்தது. இரண்டாவதாக ஒருத்தியை ஏற்றுக்கொண்ட போது முதலாவது விலைமகள் ஒரு நகையை விழுங்கிவிட்டாள். இவ்வாறாக அவர் ஒவ்வொருத்தியாக ஐந்து பேர்களை எடுத்துக் கொண்டபோது நடந்தது. அவர்களெல்லோரும் அவருக்காகச் சண்டையிட்டுக்கொண்டு, ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டனர்" என்று கூறிவிட்டுக் கடகடவென்று சிரித்தாள். பிறகு மேலும், "அவர்கள் அவருடைய செருப்பை வேட்டை யாடுவார்கள். அன்றிரவு தாம் போக எண்ணியிருந்த அறையில் அவர் தமது செருப்புகளை விடுவார். அதை மற்றொருத்தி திருடிக்கொண்டு போய் விடுவாள். முடிவில், சண்டையில்லாம லிருப்பதற்காக அவர் தமது நேரத்தை அவர்களுக்குச் சரிசம மாகப் பிரித்துக் கொடுத்துவிட்டார்!" என்றாள்.

ஸ்ரீமதி ஊ அமைதியுடன், "அவர்கள் எல்லோரும் சுத்த மூடப் பெண்களாக இருந்திருக்க வேண்டும். அந்த விலை மகளிர்—நான் உன் தாயைச் சொல்லவில்லை, மேய்ச்சன். அவள் ஒரு மனிதனுடைய இதயத்தில் நம்பிக்கை வைத் திருந்தது இயற்கைதான். ஆனால் இந்த விலைமகளிர்...!" என்றாள்.

ஸ்ரீமதி கேங் ஆதுரத்தோடு "உன்னைப்போல் ஒரு பெண்மணியும் இருந்ததில்லை, ஏய்யென். சரி, இதையாவது என்னிடம் சொல்லு—உன்னால் நேற்றிரவு தூங்க முடிந் ததா?" என்று கேட்டாள்.

"நேற்றிரவு நான் நன்றாகத் தூங்கினேன். நேற்று நல்ல மழை பெய்ததல்லவா?" என்றாள் ஸ்ரீமதி ஹா.

"ஓ! மழை நன்றாகப் பெய்ததா!" என்று கூவிய ஸ்ரீமதி கேங் சிரிப்பை அடக்கமாட்டாமல் கண்ணில் ஜலம் வரும் வரை பலமாகச் சிரித்தாள். பிறகு தன் கண்களில் வழிந்த நீரைத் துணியால் துடைத்துக் கொண்டாள்.

ஸ்ரீமதி ஹா புன்னகை செய்தவாறு, இது ஒயட்டுமென்று காத்துக் கொண்டிருந்தாள். பிறகு அவள் தீவிரத்துடன், "எனக்கு உண்மையாகவே உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது, மேய்ச்சன்" என்றாள்.

தன்னுடைய தோழியின் இம்மாதிரியான குரலைக் கேட்டதுமே ஸ்ரீமதி கேங் யோசனையில் ஆழ்ந்து விடுவாள். "சரி, நான் இவி சிரிக்கவில்லை. என்ன விஷயம் அது?" என்றாள்.

"என் மகன் பெங்மோ இருக்கிறானே, அவனை இப்போது வெளியூர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது உசிதம் என்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஹா.

இக்கேள்வியை அவள் மிக்க சாதுரியமாகக் கேட்டாள். ஸ்ரீமதி கேங் அது அவசியமில்லை என்று தெரிவித்தால் அவள் உடனே லின்யியைக் கொடுக்கும்படி கேட்டுவிடுவாள். அப்படி இல்லையென்றால்...

"இது முற்றிலும், அந்தப் பையன் என்ன செய்ய விரும்புகின்றான் என்பதைப் பொருத்திருக்கிறது" என்று கூறினாள் ஸ்ரீமதி கேங். அவளுடைய வட்ட வடிவமான அகன்ற முகம் தளர்ந்து சுருங்கியது.

ஸ்ரீமதி ஹா, "அவன் விரும்புவது என்ன என்பதை அவன் ஒருபோதும் வெளியே காட்டிக்கொண்டதில்லை. நன்றாக வளர்ந்திருக்கிறான் அவ்வளவுதான். ஆனால் பதினேழு வயது ஆனதும் ஒரு தாய், தன் மகனைக் கவனிக்க ஆரம்பித்துவிட வேண்டும்" என்றாள்.

"அது வாஸ்தவம்தான்" என்றாள் ஸ்ரீமதி கேங் உதட்டைக் கடித்தவாறு. நிமிர்ந்து விரைப்பாகக் காணப்படும் தேகமும், கர்வத்துடன் தூக்கிய தலையையும் கொண்ட பெங்மோவைப் பற்றி அவள் எண்ணமிட்டாள்.

உடனே ஸ்ரீமதி ஹா வெளிப்படையாக, "இதோ பார், உன்னிடம் நான் ஏன் ஒளிக்காமல் உண்மையைக் கூறிவிடக் கூடாது? நமது ரத்தத்தை மறுமுறையும் ஒன்றாகக் கலப்

பதற்கு நான் உத்தேசித்திருக்கிறேன். பெங்மோவும் லின்யியும்—நீ என்ன சொல்லுகிறாய்?" என்றாள்.

ஸ்ரீமதி கேங் தன் கைகளைக் கொட்டி மகிழ்ச்சியுடன், "மிகவும் நல்ல காரியம்" என்று கூவினாள். ஆனால் அடுத்த கணமே அவளது குதூகலம் மறைந்தது. அவள் புலம்பும் குரலில், "ஆனால் இந்த லின்யி இருக்கிறானே—நான் நல்லது என்று சொல்வது ஒரு புறமிருக்கட்டும், அவள் என்ன சொல்வாள் என்பது எனக்கு எப்படித் தெரியும்?" என்றாள்.

"நீ அவனை அந்த அந்நியரின் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியே இருக்கக்கூடாது. நான் அப்போதே உனக்குச் சொன்னேன்" என்றாள் ஸ்ரீமதி ஹா.

ஸ்ரீமதி கேங் வருத்தத்துடன், "நீ சொன்னது சரியாய் போய்விட்டது. இப்போது அவளுக்கு வீட்டில் எதுவுமே சரிப்படுவதில்லை. எல்லாவற்றையும் குறைகூறுகிறாள். பாவம், அவளுடைய அப்பா தரையில் எச்சில் துப்பினாலும் உடனே அவரோடு சண்டைக்குப் போய்விடுகிறாள். துப்புவதற்காகப் பீங்கான் ஜாடிகளைத் தரையில் வைக்க வேண்டுமாம். ஆனால், வைத்தால் குழந்தைகள் அவற்றை எடுத்துக் கீழே போட்டு உடைத்து விடுகின்றன. குழந்தைகளுக்கு இடுப்பில் துணி கட்ட வேண்டுமென்கிறாள். இல்லாவிட்டால் அவளுக்குக் கோபம் வந்துவிடுகிறது. இந்த வீட்டில் இரண்டு கெட்டானுகையிருக்கும் பேரக் குழந்தைகளே பதின்மூன்று இருக்கின்றன. அவைகளுக்கு மூத்திரம் வந்தால் அடக்கிக் கொள்ளக்கூடத் தெரியாது. அவர்களுக்கு எப்படித் துணி கட்ட சாத்தியமாகும்? நமது முன்னோர்கள் நமக்கு இடுப்புத் துணி கட்டாமலேதான் நமக்கு அறிவு புகட்டினர். அவர்களுடைய அறிவை நாம் காற்றிலே பறக்கவிட்டுவிட முடியுமா? அப்படியும் இங்கு சுத்தம் செய்வதற்கென்றே மூன்று வேலைக்காரப் பெண்கள் இருக்கிறார்கள்" என்று கூறினாள்.

"எங்கள் வீட்டில், அவளுடைய சொந்தக் குழந்தைகளைத் தவிர வேறு குழந்தைகளால் அவளுக்கு ஒரு தொந்திரவும் ஏற்படாது. ஒரு பெண் தன் சொந்தக் குழந்தைகளின் மூலம் வாழ்க்கையில் எவ்வளவோ கற்றுக் கொள்கிறாள்" என்றாள் ஸ்ரீமதி ஹா.

ஆனால் ஸ்ரீமதி கேங்கிடம் இருந்த அன்பினால், அவளால் தனக்கு இவ்விஷயத்தில் லின்யியிடம் அனுதாபம் உண்டாகிறது என்பதைச் சொல்ல முடியவில்லை. இந்த வீட்டில் பால் கொடுக்கும் தாதிகளும் பணிப்பெண்களும் விடாது

குழந்தைகளை தரையிலேயே அசுத்தம் செய்யும்படி விடுத்தனர். கடைசியில் கால் வைக்கக்கூட இடமில்லாமல் தரை முழுவதும் நனைந்து விடும். ஸ்ரீமதி ஊ தன்னுடைய வீட்டில் இது மாதிரியான சோம்பேறித் தனமான வேலையை ஒரு போதும் அனுமதிப்பதில்லை. பணிப்பெண்கள் சிறு குழந்தைகளை எங்காவது ஒரு மூலைக்கோ அல்லது மரங்களுக்குப் பின்னாலோ எடுத்துச் சென்றுக வேண்டும்.

ஸ்ரீமதி கேங் தன் சிநேகிதியைப் பார்த்து சிறிது சந்தேகத்தோடு, "நீ அவளை ஏற்றுக் கொள்வது எனக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும். அவளுக்கும் கல்யாணமாக வேண்டும். அவளுடைய மனதும் திருந்த வேண்டும். ஆனால் நான் உன்னை மிகவும் அதிகமாக நேசிப்பதால், அவளுடைய குற்றங்குறைகளை உன்னிடம் கூறாமல் என்னால் மறைக்க முடியாது. அவள் பெங்மோவை மணந்து கொள்ள சம்மதித்தாலும், அவனுக்கு ஒரு அந்நிய பாஷையாவது தெரிந்திருக்க வேண்டுமென்று கேட்பாள் என்று எனக்குத் தோன்றுகிறது. அவனுக்கு ஒரு அந்நிய பாஷையாவது பேசத் தெரியாதிருந்தால் அதை அவள் பெருத்த அவமானம் என்று கருதுவாள்" என்றாள்.

"ஆனால் அவன் யாருடன் அந்த பாஷையில் பேசுவான்? அவனும் அவளும் ஒன்றாக உட்கார்ந்து கொண்டு அந்த பாஷையில் பேசுவார்களா? அது மிக வேடிக்கையாக இருக்கும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அது வாஸ்தவமே! ஆனால் இந்தக் காலத்தில் இளம் பெண்கள், அன்னிய பாஷையில் பேசுவதை ஒரு பெரிய பெருமையாக நினைக்கிறார்கள்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

இரண்டு பேரும் யோசனையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு ஸ்ரீமதி ஊ, தெளிவாக, "லின்யி ஒன்று, பெங்மோ இப்போது இருப்பது போலவே இருப்பதைக் கொண்டு திருப்திபட்டுக் கொள்ள வேண்டியது. இல்லாவிட்டால் நான் இந்த விஷயத்தையே விட்டுவிட வேண்டியதுதான். யுத்தம் எப்போது வருமோ என்றிருக்கிறது நிலைமை! இப்போது என்னுடைய பிள்ளைகளை நான் கடற்கரைப் பட்டினங்களுக்கு அனுப்பமாட்டேன். இங்கு நமக்கு பயமில்லை. ஏனெனில் நமது மாகாணம் கடலுக்கு வெகு தூரம் தள்ளியிருக்கிறது" என்றாள்.

ஸ்ரீமதி கேங் திடீரென்று உற்சாகத்துடன், "பொறு, ஒரு வழி இருக்கிறது. இந்நகரத்தில் அயல்நாட்டுப் பாதிரி

ஒருவர் தங்கி இருக்கிறார். அவரை பெங்மோவிற்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தால் என்ன? அப்போது நான் லின்யியிடம் பேசும்போது பெங்மோ அந்நிய பாஷை கற்றுக் கொள்கிறான் என்று சொல்லி விடுவேன்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ சந்தேகத்தோடு, "அயல் தேசத்து மனிதனை? ஒரு அந்நியனை எப்படி நாம் நம் வீட்டிற்குள் வர அனுமதிக்க முடியும்? அதனால் ஏதேனும் கலவரம் உண்டானால்...? மேற்கத்தியர் எல்லோரும் அதிக காமமும் வெறியும் கொண்டவர்களென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றாள்.

ஸ்ரீமதி கேங், "இவர் ஒரு பாதிரியார். இம்மாதிரியான எண்ணங்களுக்கு உட்பட்டவரல்லர்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ சற்றுநேரம் அவ்விஷயத்தைப் பற்றித் தீவிரமாக யோசித்தாள். பிறகு முடிவில், "நல்லது. லின்யி இதை மிகவும் வற்புறுத்தினால் பெங்மோவை நம்மிடமிருந்து வெளியே அனுப்புவதைவிட இதுவே பரவாயில்லை" என்றாள்.

"ஆம். இதுவே நல்லது" என்று ஆமோதித்தாள் ஸ்ரீமதி கேங்.

ஸ்ரீமதி ஊ எழுந்து விட்டாள். "அப்போது நீ லின்யியிடம் பேசிப் பார். நான் பெங்மோவிடம் பேசிக் கொள்கிறேன்."

"பெங்மோ ஒத்துக் கொள்ளா விட்டால்..." என்று கேட்டாள் ஸ்ரீமதி கேங்.

ஸ்ரீமதி ஊ, "அவன் ஒத்துக் கொள்வான். ஏனெனில் நான் சரியான தருணம் பார்த்துதான் சொல்லுவேன். ஒரு மனிதனிடம், அவன் வயதில் சிறியவனானாலும் பெரியவனானாலும், பேசுவதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது தக்க தருணம் பார்த்துப் பேசுவதுதான்" என்றாள்.

"நீ எவ்வளவு நன்றாக எல்லாம் அறிந்திருக்கிறாய்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

பின் இருவருமாக எழுந்து கைகோர்த்துக் கொண்டு அறையைவிட்டு வெளியே சென்றனர். அங்கு தேநீரும் சில இன்பண்டங்களும் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

"நீ இருந்து ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுப் போகமாட்டாயா?" என்ருள் ஸ்ரீமதி கேங்.

ஸ்ரீமதி ஊ தலையை அசைத்து, "இல்லே, நான் மரியாதையில்லாமல் செல்வதற்காக மன்னித்துக் கொள். நான் இப்போதே போகிறேன். இன்றே ஒரு வேளே பெங்மோவிடம் பேசுவதற்குச் சரியான சமயம் வாய்க்கலாம்" என்ருள்.

பெங்மோ சியூமிங்கை, அவள் அவனுடைய தகப்பனுரிடம் போவதற்கு முன்பே பார்த்து விட்டதால், அவன் மனம் சிறிது சஞ்சலமடைந்திருக்கலாம் என்று தான் சந்தேகித்ததை ஸ்ரீமதி கேங்கிடம் கூட தெரிவிக்க அவள் விரும்பவில்லே. தேநீர் தயாரித்துக் கொண்டு வந்த பணிப்பெண்ணுக்கு இணமாக அவள் ஒரு சிறு தொகையை அங்கு வைத்து விட்டு, விடை பெற்றுக் கொண்டாள். அதுவரை வேலேக் காரர்களின் பகுதியில் வம்பளந்து கொண்டிருந்த இங், அங்கிருந்து வரவே, அவள் மீண்டும் வீடு திரும்பினுள்.

அவள் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் அவள் முதல் முதலில் சந்தித்தது பெங்மோவையல்ல. அந்த அந்நிய பெண் மணியான சிறிய சகோதரி ஹேஷியாவைத்தான். அந்நகரத்தில் இருந்த மிகப்பெரிய குடும்பங்களாகிய ஊ குடும்பத்திலும் கேங் குடும்பத்திலும் என்னென்ன நடக்கிறது என்பதை அங்குள்ள எல்லோருடைய வீட்டு வேலேக்காரர்களும் அறிவார்கள். ஆகவே சகோதரி ஹேஷியாவின் வேலேக்காரனும் இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டு அதை அவளிடம் சொல்லியிருப்பான் என்று ஸ்ரீமதி ஊ ஊகித்துக் கொண்டாள்.

சகோதரி ஹேஷியா அப்போதுதான் வாசற்கதவைத் தாண்டி உள்ளே முதற்பகுதியைக் கடந்து கொண்டிருந்தாள். அவள் ஸ்ரீமதி ஊவைப் பார்த்ததுமே நின்று, "ஓ! ஸ்ரீமதி ஊ, நான் இப்போதுதான் கேள்விப்பட்டேன்— இது உண்மையாகயிருக்க முடியுமா?" என்று கத்தினுள்.

ஸ்ரீமதி ஊ அன்புடன், "உள்ளே வாருங்கள். இன்றைய தினம் மிக அழகாகயில்லே! இந்த நாட்களில் ஆகாயம் இம்மாதிரி மப்பில்லாமல் இருப்பது அபூர்வம் அல்லவா? நாம் இங்கேயே வெளியே உட்கார்ந்து கொள்ளலாம். இங் ஏதாவது நமக்குச் சாப்பிடுவதற்குக் கொண்டு வரட்டும். இப்போது லிட்டத்தட்ட நடுப்பகல் ஆகியிருக்குமே" என்று அவளே, மற்ற பகுதிகளைக் கடந்து, தன்னறைக்கு அழைத்துச் சென்ருள்.

"தயவு செய்து உட்காருங்கள். நான் ஒரு நிமிஷம் என்னுடைய அறைக்குச் சென்று விட்டு வந்து விடுகிறேன். நீங்கள் இங்கேயே உட்கார்ந்து இக்காலே நேர அழகை அனுபவியுங்கள்" என்று கூறி வணக்கம் தெரிவித்து விட்டுத் தன்னறைக்குள் சென்ருள். இங் அவளேத் தொடர்ந்து வந்தாள்.

அவள் வெறுப்புடன், "நமக்கு இன்று மறுபடியும் மழை வரப்போகிறது. ஏனெனில் பேப்கள் எல்லாம் வெளியே கிளம்பி விட்டன" என்று முணுமுணுத்தாள்.

"சட், பேசாதிரு" என்ருள் ஸ்ரீமதி ஊ. ஆனுல் அவளுடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அவள் கண்ணுடியின் முன்பு உட்கார்ந்து கொண்டு கலேந்திருந்த மயிரைச் சரி செய்து கொண்டாள். பிறகு கைகளேயும் முகத்தையும் துடைத்து விட்டுக் கொண்டு மீண்டும் வெளியே சென்ருள்.

சகோதரி ஹேஷியாவின் வெளுத்த முகம் அனுதாப உணர்ச்சியினுல் மேலும் கலங்கியிருந்தது. அவள் தன்னுடைய சுபாவமான அசட்டுத் தனத்துடன் வேகமாக நாற்காலியிலிருந்து எழுந்தாள்.

அவள் பெருமூச்செய்தியவாறு, "ஆ! நீங்கள் எவ்வளவு நல்லவர். உங்களுக்கு எப்பேர்ப்பட்ட கஷ்டம் வந்திருக்கிறது. நான் கனவில்கூட நினேக்கவில்லே. ஸ்ரீமான் ஊ மற்றவர்களிலிருந்து மிகவும் வேறுபட்டவர்போல் காணப்பட்டாரே... நான் நினேத்தேன்..." என்ருள்.

ஸ்ரீமதி ஊ குதூகலம் நிறைந்த புன்னகையுடன், "இன்று காலே நீங்கள் வந்ததைப்பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?" என்ருள்.

இருவரும் உட்கார்ந்து கொண்டனர். சிறிய சகோதரி ஹேஷியா மிகுந்த சிரத்தையுடன் அவளே நோக்கி, "எது வேண்டுமானுலும் செய்கிறேன், அன்பு மிக்க ஸ்ரீமதி ஊ. இவ் சமயங்களில் ஆண்டவன் தனது அன்பர்களேயே தண்டித்து வேடிக்கை பார்க்கிறூர்" என்று கூறினுள்.

ஸ்ரீமதி ஊ தனது அகன்ற விழிகளே மேலும் அகலவிரித்து, "சகோதரி, நீங்கள் என்ன இப்போது கொஞ்சம் உபதேசம் செய்ய விரும்புகிறீர்களா? அப்படியானுல்

நான் சொல்ல வந்ததைப் பிறகு சொல்லிக் கொள்கிறேன்" என்றாள்.

"உங்களுக்கு ஆறுதல் உண்டாவதற்குத்தான்—உங்களுடைய உதவிக்காகத்தான்..." என்றாள் சகோதரி ஹோஷியா.

"ஆனால், நான் மிகவும் நன்றாகத்தானே இருக்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ ஆச்சரியத்துடன்.

"பின் நான் கேள்விப்பட்டது...நான் நினைத்தேன்..." என்று சகோதரி ஹோஷியா குழப்பத்துடன் தடுமாறினாள்.

ஸ்ரீமதி ஊ மிருதுவாக, "நீங்கள் வேலைக்காரர்களுடைய வம்பு பேச்சுக்களைப் பொருட்படுத்தக் கூடாது. அவர்களுக்கு எப்போதும் தாங்கள் ஏதாவது திடுக்கிடும் செய்திகளைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமென்பதே விருப்பம். அவர்கள் சொல்லுவது போலிருந்தால், நாம் இன்று பெரும் படுக்கையாகப் படுத்திருப்போம். பிறகு நாளைக்கு செத்துப் போய் மறுபடியும் மூன்றாவது நாள் பிழைத்துக் கொண்டு விடுவோம்" என்று கூறினாள்.

சகோதரி ஹோஷியா ஸ்ரீமதி ஊவைக் கோபத்துடன் பார்த்தாள். இவள் என்ன வேடிக்கை செய்கிறாளா? ஆனால் அவள் தன் கோபத்தை வெளிக்காட்டாமல், "அப்படியானால் அது உண்மை இல்லையா?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ, "எது உண்மை அல்லது உண்மையல்ல என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நீங்கள் நிச்சயமாக நம்பலாம். இந்த வீட்டில் எனக்குத் தெரியாமலோ, என்னுடைய உத்திரவில்லாமலோ எதுவும் நடைபெறாது" என்று பதிலிறுத்தாள்.

அந்த வெள்ளைக்காரியின் வெளிறிய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவளுக்கு, அது லேசாகச் சிவந்ததைக் கண்டு இரக்கம் உண்டாயிற்று. அவள் அன்புடன் "உங்கள் மனத்தில் எப்போதுமே அன்பு நிறைந்திருக்கும். உங்களால் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டாள்.

சரியென்று தலையை அசைத்த சகோதரி ஹோஷியா தனது வெளுத்த உதடுகளிலும், கண்களிலும் ஏமாற்றம் தோன்றப் பார்த்தாள்.

ஸ்ரீமதி ஊ தனது அழகிய உதட்டை வாசனை நிறைந்த கைக்குட்டையால் ஒருமுறை துடைத்துவிட்டுக் கொண்டு

"நான் என்னுடைய மூன்றாவது மகனுக்கு அதிகக் கல்வி போதிக்க வேண்டுமென்று உத்தேசித்திருக்கிறேன்" என்று மிருதுவான குரலில் கூறினாள். அக் குரலிலிருந்த குழைவு, எப்போதும் அவளுடன் பேசுபவர்களுக்கு, அவள் எங்கோ வெகு தூரத்தில் இருப்பது போன்ற உணர்ச்சியை உண்டாக்கும். "நான் ஒரு தகுதி வாய்ந்த அந்நிய மனிதரின் மூலம் அவனுக்கு ஒரு அன்னிய பாஷையை நன்றாக பேசவும், படிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். பார்க்கப் போனால், நமது முன்னோர்களுக்குப் போதுமானவையாக இருந்தவை நமக்கு இப்போது போதுமானவையாக இல்லை. கடல்களுக்கு இப்போது ஜனங்களைப் பிரித்து வைக்கும் சக்தி இல்லை. வானும் நமக்கு மட்டுமே சொந்தம் என்பதும் போயிற்று. இந்நகரத்தில், பெங்மோவிற்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்குத் தகுதி வாய்ந்த அந்நியர்கள் யாராவது இருக்கிறார்களா? உங்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்டாள்.

தான் கேள்விப்பட்டதற்குச் சிறிதும் சம்பந்தமற்ற இவ் வேண்டுகோளைக் கேட்ட சகோதரி ஹோஷியா மிகவும் திகைத்துப் போய்விட்டாள். சிறிது நேரம் அவளால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

ஸ்ரீமதி ஊ மேலும் தொடர்ந்து, "இங்கு ஓர் ஐரோப்பிய பாதிரியார் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"பாதிரியாரா?" என்று சகோதரி ஹோஷியா வாய்க்குள் முனகிக் கொண்டாள்.

"அப்படித்தான் நான் கேள்விப்பட்டேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

சகோதரி ஹோஷியா சந்தேகத்துடன், "நீங்கள் குறிப்பிடுவது அந்த மனிதராயிருக்கும் பட்சத்தில், நீங்கள் அவரை உங்கள் மகனுக்காக வரவழைக்க விரும்புவீர்களென்று எனக்குத் தோன்றவில்லை" என்றாள்.

"ஏன், அவர் நன்றாகப் படித்தவரில்லையா?" என்று விசாரித்தாள் ஸ்ரீமதி ஊ.

"ஒரு மனிதனுக்கு அறிவு என்பது என்ன, நீங்கள் சொல்லுங்கள். அவரை ஒரு சரியான நாஸ்திகர் என்றே கூறலாம்" என்றாள் சகோதரி ஹோஷியா.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"அவர் உண்மையான நம்பிக்கையுள்ளவர் என்று நான் நினைக்கவில்லை" என்ருள் சகோதரி ஹேஷியா.

"ஒரு வேளை அவருடைய மதம் வேருயிருக்கலாம்" என்ருள் ஸ்ரீமதி ஊ.

"உண்மையான மதம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது" என்ருள் சகோதரி ஹேஷியா உறுதியுடன்.

ஸ்ரீமதி ஊ குறுநகை செய்து, "அவரிடம் இங்கு வந்து என்னைப் பார்க்கும்படி சொல்கிறீர்களா?" என்று கேட்டாள்.

உடனே அந்த வெளிறிய முகத்தில் குப்பென்று இரத்தம் பாய்ந்து சிவந்ததைக் கண்டு அவள் வியப்படைந்தாள்.

"அவர் கல்யாணமாகாதவர். நான் அவரைப் பார்க்கப் போனல் அவர் என்ன எண்ணிக் கொள்வாரோ, எனக்குத் தெரியாது" என்ருள் சகோதரி ஹேஷியா.

ஸ்ரீமதி ஊ, அவளுடைய மெலிந்த கைகளை அன்புடன் பற்றிக் கொண்டு, "உங்களுடைய பரிசுத்தத்தை யாரால் சந்தேகிக்க முடியும்?" என்று கூறினுள்.

இந்த அன்பு அந்த அன்னியப் பெண்ணின் கூச்சத்தை அகற்றியது. "என் அன்பு மிக்க ஸ்ரீமதி ஊ, உங்களுக்கு உதவி செய்யும்பொருட்டு நான் எதுவேண்டுமானலும் செய்யச் சித்தமாகயிருக்கிறேன்" என்ருள்.

அவளுடைய குரலில் தீவிர சிரத்தை காணப்பட்டது. ஆனல் எல்லாவற்றிற்கும் மேல் இந்தத் தீவிரத் தன்மையைப் பெரிதாகக் கொள்வதை விரும்பாத ஸ்ரீமதி ஊ, அதை நாசுக்காக உதாசினம் செய்து, "உங்கள் மனம் தங்கமானது" என்று கூறிவிட்டுக் கைகளைத் தட்டி இங்கை அழைத்தாள். அவள் தட்டுகளில் தேநீரும், தின்பண்டங்களும் வைத்து எடுத்து வந்தாள்.

அரைமணி நேரம் இருவரும் உணவருந்துவதில் ஈடுபட்டிருந்தனர். பின்னர் ஸ்ரீமதி ஊ தன்னுடைய விருந்தாளிக்கு விடை கொடுத்து அனுப்ப முனைந்தாள்.

அவள் மிக இனிமையாக, "இப்போது, நீங்கள் புறப்படுவதற்கு முன் ஒரு பிரார்த்தனை செய்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"நான் அதற்கு ஆவலோடு காத்திருக்கிறேன்" என்ருள் சகோதரி ஹேஷியா.

பிறகு அவள் தன் கண்களை மூடி, தலையை வணங்கி, சிரத்தை மிகுந்த குரலில், கண்ணுக்குத் தெரியாதிருந்த இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள். இவ்வாறு அவள் கூறிக்கொண்டிருக்கையில், ஸ்ரீமதி ஊ மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அவள் தன் கண்களை மூடவில்லை. அதற்குப் பதில் அவள் சகோதரி ஹேஷியாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். இவளுடைய ஆத்மா தான் எவ்வளவு சூன்யமாக இருக்கிறது! பாவம், சொந்த நாட்டைவிட்டு இவ்வளவு தூரம் வந்திருக்கும் இவள் எவ்வளவு தனிமையாக இருக்கிருள்! நல்ல தொண்டுகள் செய்வதற்காகவே அவள் கடல் கடந்து வந்திருக்கிருள் என்பதை யாவரும் அறிவர். அவள் வாராவாரம் பிச்சைக்காரப் பெண்களை அழைத்துக் கூட்டம் நடத்தி அவர்களுக்கு, தையல் முதலிய வேலைகளைச் சொல்லிக்கொடுத்து வந்தாள் என்பதும், அவள் மிக எளிய வாழ்க்கை நடத்தி வந்ததோடு, தன்னிடமிருந்ததில் பெரும் பகுதியை மற்றவர்களுக்கே கொடுத்து வந்தாள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். இந்த எளிய வாழ்க்கையில் அப்பெண் எவ்வளவு தனிமையை அனுபவித்து வருகிருள்! இதை நினைக்க நினைக்க ஸ்ரீமதி ஊவின் இதயத்தின் ஆழத்திலிருந்து கனிவு நிறைந்த அன்பு இளர்ந்தெழுந்தது. சகோதரி ஹேஷியா என்னவோ அறிவற்றவள் தான்! அவளுடைய பிதற்றல்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதென்னவோ கஷ்டம்தான்! ஆனல் அவள் மிகவும் நல்லவள். பாவம், மிகவும் தனியளாக இருக்கிருள்!

சகோதரி ஹேஷியா கண்களைத் திறந்ததும், ஸ்ரீமதி ஊவின் அழகிய பெரிய விழிகளில் நீர் துளும்பி நிற்பதைக் கண்டு அதிசயமடைந்து போனுள். தன்னுடைய பிரார்த்தனை தான் இத்தகைய அபூர்வமான பலனை அளித்து விட்டதோ என்று ஒரு கணம் எண்ணினுள். ஒருவேளை ஆண்டவன், பிற மதத்தினளான இந்தப் பெண்மணியின் இதயத்தைத் திறந்து விட்டானே!

ஆனல் ஸ்ரீமதி ஊ எழுந்து, தன்னுடைய உறுதியான தோரணையில், அவளிடம் விடை பெற்றுக் கொள்ளும் பொருட்டு, "அப்படியானல், அந்தப் பாதிரியாரைச் சீக்கிரமே இங்கு அனுப்புகிறீர்களா?" என்று கேட்டான். அவள் கேட்பது உத்திரவிடுவது போலிருந்தது.

சகோதரி ஜோஷியா, தன் விருப்பமின்றியே, தன்னையு மறியாது, இதைச் செய்வதாக வாக்களித்தாள்.

ஸ்ரீமதி ஊ, விநயத்துடன், "நான் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? சகோதரி, நீங்கள் இந்த உதவி செய்வதற்காக நான் உங்களை ஒன்று வேண்டிக்கொள் கிறேன். நீங்கள் விரும்பிய போதெல்லாம் எனக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்" என்று கூறி அவளை அனுப்பி வைத்தாள்.

* * *

அன்று நாள் முழுவதும் ஸ்ரீமதி ஊ, இங்கு கூறிய செய்தியை மறக்கவேயில்லை. அதாவது ருலான் முதல் நாள் இரவு அழுது கொண்டிருந்ததை அவள் கேட்டதாகச் சொன்னதை ஒரு கணம் கூட மறக்கவில்லை. ஆனால் ஸ்ரீமதி ஊ, வெகு காலத் திற்கு முன்பிருந்தே, இம்மாதிரியான பெரும் குடும்பங்களில், காரியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்குபடிதான் கவனிக்கப் படவேண்டும் என்பதை நன்கு அறிந்து கொண்டிருந்தாள். இந்த ஒழுங்கு முறையை அவள் எப்போதும் மனதில் நிர்மாணித்து வைத்துக்கொள்வது வழக்கம். அவள் த்ஸே மோவைப் பார்க்க முயற்சித்தாள். ஆனால் அதைத் தெய்வம் தடுத்துவிட்டது. ஆதலால் அதற்கு இன்னும் சரியான நேரம் வரவில்லை போலும்! அவளது விவேகம் அவளுக்குக் கற்பித்த படி, பெரிய விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்துகொண் டிருக்கையிலேயே சிறிய வேலைகளை ஒவ்வொன்றாகச் செய்து முடித்துக்கொண்டாள்.

மாதக் கணக்குகளைக் கொண்டுவரும்படி அவள் சமையல் காரனுக்குச் சொல்லியனுப்பினாள். அது இரண்டு நாட்கள் முன்னதாகவே பார்த்திருக்க வேண்டியது. ஆனால் வீட்டில் நேர்ந்த குழப்பங்கள் காரணமாக, அவன் அதைக் கொண்டு வராமல் வைத்திருந்தான். ஸ்ரீமதி ஊ அக் கணக்குகளைப் பார்த்து விட்டு, விறகின் விலை அதிகமாக இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

இங் எப்போதும், கணக்குகள் காட்டப்படும் இச் சமயங் களில் தானும் முன் ஜாக்கிரதையாக அங்கு வந்து விடுவாள். ஏனெனில் தன்னுடைய கணவன் சமையல் வேலையில், வேறெங்கும் தேடினாலும் கிடைக்கக் கூடாத அவ்வளவு சாமர்த்தியசாலியாக இருந்தபோதிலும், மற்ற விஷயங்களில் மிகவும் சாமர்த்தியமற்றவன் என்பது அவளுடைய அபிப் பிராயம். எஜமானி விறகைப்பற்றிக் குறிப்பிட்டதுமே, வேறு

யாராவது வேலைக்காரர்கள்தான் இது விஷயத்தைப் பற்றி அவளிடம் சொல்லியிருக்க வேண்டும் என்று உடனே தெரிந்து கொண்டாள். அந்த நடுத்தர வயதையுடைய ஒரு வேலைக்காரி தான் இவ்விதம் புகார் செய்திருக்க வேண்டுமென்று ஊகித் தாள். அவ் வேலைக்காரி ஒருமுறை தன் காதலை சமையல்கார னிடம் வெளியிட்டாள். ஆனால் இங்கினுடைய கணவனை அவன், வேற்றுப் பெண்களைப் பார்ப்பதைவிடப் பாராமலிருப் பதே உத்தமம் என்பதை அறிந்திருந்தான். ஆகவே அவள், இங்கிடமும் அவனிடமும் வேறு பெரிய குற்றம் ஒன்றும் கண்டு பிடிக்க முடியாமல், இதைப் பற்றிக் கோள் மூட்டி யிருக்கிறாள்!

ஸ்ரீமதி ஊ விறகைப்பற்றிக் குறிப்பிட்டதும், இங் தன் கணவனைப் பார்த்து, "ஏ, மூடப் பிணமே! மேற்கு வாசல் பக்கத்து கடைத் தெருவில் வாங்காதே வாங்காதே என்று நான் எத்தனை தடவை உனக்குச் சொல்வது? அங்கு எல்லாமே விராக்கிதான்" என்று கத்தினாள்.

ஸ்ரீமதி ஊ, "முதலாவது, இவ்வளவு சீக்கிரம் நாம் விறகே வாங்கக் கூடாதே. நமது நிலத்திலிருந்து வரும் விறகே நமக்கு எட்டு மாதங்கள் வரை வரவேண்டுமே! அதற்குள் புதியவை தான் வந்து விடும்" என்றாள்.

"காரியஸ்தன் விறகு வரும் சில நிலங்களை உழுது பயிரிட்டு விட்டான்" என்று கூறினான் சமையல்காரன்.

ஸ்ரீமதி ஊ இவ்விவகாரத்தை மேலும் தொடர்வது உசிதமன்று எனக் கருதி அவன் கூறிய காரணத்தை ஒத்துக் கொண்டாள். எப்படியும் அவள் தான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டாள். அவள் புத்தகங்களை மூடி அவனிடம் கொடுத்துவிட்டு, பிறகு பணப் பெட்டியை எடுத்து, மூதல் மாதத்தில் மீதிகொடுக்க வேண்டியதையும் வருகிற மாதத் திற்கு வேண்டிய சில்லரைச் செலவுகளுக்கும் தேவையான பணத்தையும் எடுத்துக் கொடுத்தாள். சாப்பாட்டிற்கு அறுபது நபர்களுக்கு மேல் இருந்த அவ்வீட்டில் இத்தொகை எப்போதும் சொல்பமாக இருப்பதில்லை.

அடுத்தபடியாக, துணிகளை வாங்குவதற்கும் சரிபார்ப் பதற்குமென்று நியமிக்கப்பட்டிருந்த ஆளும், உடைகளைத் தைப்பதற்கென்று அமர்த்தப்பட்டிருந்த இரண்டு பெண்களும் ஆஜர் ஆனார்கள். ஸ்ரீமதி ஊ அவர்களுடன், குடும்பத்தா ருக்கும் வேலைக்காரர்களுக்கும் தேவையான கோடை காலத் திற்கேற்ற உடைகளைப் பற்றியும், மாற்றப்பட வேண்டிய

படுக்கைகளைப் பற்றியும் மற்றும் அவசியமான துணிமணிகளைப் பற்றியும் பேசினாள். இது முடிந்ததும் கொத்துக்காரர்கள் வந்தனர். ஒழுகிக் கொண்டிருந்த இரண்டு கூரைகளைப் பழுது பார்ப்பதற்காக ஏற்பட்ட செலவைப் பற்றியும் வெளியே புதிதாக, சாமான்கள் சேர்த்து வைப்பதற்காகக் கட்டவேண்டியிருந்த வீட்டிற்கு ஆகக் கூடிய செலவைப் பற்றியும் தெரிவித்தனர். அவைகளுக்கும் திட்டம் வகுக்கப்பட்டது.

இது போன்ற விஷயங்களில் ஸ்ரீமதி ஊ தன் முழு கவனத்தோடு ஈடுபடுவாள். இதுவே அவளுடைய விசேஷத் திறமை. வேறு எதிலும் நினைவின்றி தான் செய்யும் காரியத்திலேயே முழுமனதோடு ஈடுபட்டிருப்பதே அவளது தனிச் சிறப்பு. ஒரு காரியத்தை முடித்ததும் அடுத்ததில் தன் முழு கவனத்தையும் செலுத்துவாள். இவ்வாறுக அன்று நாள் முழுவதும் ஒன்றன்பின் ஒன்றுக எல்லா வேலைகளையும் செய்து முடித்தாள். மாலை நேரமாகி, வீட்டு விவகாரங்கள் எல்லாம் ஒரு வழியாகத் தீர்ந்ததும்தான் அவள் தன்னுடைய சொந்த எண்ணங்களுக்கு இடம் கொடுத்தாள். அவை இப்போது பெங்மோவின்மீது சென்று நிலைத்தன.

'நான் இன்று அவனுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கும் விஷயத்தில் வெகுதூரம் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன்' என்று அவள் எண்ணிக்கொண்டாள். அன்று முழுவதும் உட்கார்ந்து வேலை செய்த அந்தப் புத்தக அறை மேஜைக்கருகே யிருந்த நாற்காலியிலிருந்து அவள் இன்னும் எழுந்திருக்கவில்லை. அவன் லின்யியைத்தான் மணக்க வேண்டும் என்ற அவளது தீர்மானம் இப்போது முன்னிலும் அதிகமான உறுதி பெற்றிருந்தது. ஆயினும் அவள் அவனிடம் மெல்ல வாயைக் கொடுத்துப் பார்க்க வேண்டும். முதலில் கொஞ்சம் எதிர்த்துக்கொண்டு போராடுவதற்கு அவனுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும். பின்பு அவள், அடுத்த அறையில் ஏதோ செய்து கொண்டிருந்த இங்கைக் கூப்பிட்டாள்.

"போய் பெங்மோவை இங்கு வரச் சொல்லு" என்று கூறிவிட்டுச் சற்று தயங்கினாள். இங் காத்துக்கொண்டு நின்றிருந்தாள்.

ஸ்ரீமதி ஊ மேலும் தொடர்ந்து, "என்னுடைய மகனை இங்கு வரச் சொல்லிய பிறகு, இரண்டாவது எஜமானியை இன்றிரவு குடும்பத்தார் எல்லோரும் சாப்பிடும்போது, அவனையும் வந்து அதில் கலந்துகொள்ளச் சொல்லு" என்றாள்.

இங் உதட்டைக் கடித்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டாள். ஸ்ரீமதி ஊ உதட்டின் மீது இரு விரல்களை வைத்தவாறு அமர்ந்திருந்தாள். இரவு சாப்பாட்டிற்குப் போக வேண்டிய நேரம் வந்துவிட்டதால், பெங்மோ இந்நேரம் அவனது அறையில் தான் இருப்பான். பெங்மோ, அவளுடைய தீர்மானத்தைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தால், அவள் கடைசி சில தினங்களாகச் செய்ததுபோல் தனியே சாப்பிடாமல், குடும்பத்தாருடன் சென்று கலந்துகொள்வாள். மீண்டும் அவள் வெளியே வந்து அவர்களிடையே தன்னுடைய ஸ்தானத்தை வகிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

சில நிமிஷங்களுக்குப் பிறகு அவளுக்குப் பெங்மோவின் காலடி யோசை கேட்டது. அவளுக்குத் தன் பிள்ளைகள் ஒவ்வொருவருடைய காலடி யோசையும் நன்றாகத் தெரியும். லியாங்மோவின் காலடி மெதுவாகவும் உறுதியானதாகவும் இருக்கும். த்ஸேமோவினுடையது அவசரமும் ஒழுங்கில்லாததாகவும் இருக்கும். என்மோ எங்கு பார்த்தாலும் ஓடுவான். ஆனால் பெங்மோவின் காலடிகள் ஒரு லயத்தோடு கூடியிருந்தன. எப்போதும் மூன்று அடிகள் வேகமாகவும் நான்காவது மெதுவாகவும் ஒரு லயத்தோடு இருக்கும். அவன் கதவருகேவந்து நின்றான். பள்ளிக்கூடத்து உடையாகிய ஊதா நிறக் கால்சட்டையும் மேலங்கியும் அணிந்திருந்தான். தலையில் அதே நிறத் துணியில் ஒரு குல்லாய் அணிந்திருந்தான். அதில் அவனுடைய பள்ளியின் பெயராகிய 'தேசிய மறுமலர்ச்சிப் பள்ளி' என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன.

ஸ்ரீமதி ஊ தன்னுடைய மகனைப் பார்த்து புன்னகை செய்தவாறு, அவனை உள்ளே வரும்படி அழைத்தாள்.

சற்றே விளையாட்டாக அவள், "தேசிய மறுமலர்ச்சி என்பதன் பொருள் என்ன?" என்று கேட்டாள்.

"அது வெறும் பெயர்தானம்மா" என்று கூறிவிட்டு, பெங்மோ அவளருகேயிருந்த ஒரு நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டான். பின் குல்லாயை எடுத்து ஒரு விரலில் மாட்டிக்கொண்டு சக்கரம்போல் சுற்றலானான்.

"அதில் உனக்கொன்றுமே அர்த்தமில்லையா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"நாங்கள் எல்லோருமே தேசிய மறுமலர்ச்சியை விரும்பத்தான் செய்கிறோம்" என்று பதிலளித்தான் பெங்மோ.

"அது என்னவென்று புரிந்து கொள்ளாமலேயா?" என்று கேட்டாள் அவள் அதே வேடிக்கையுடன்.

பெங்மோ சிரித்துவிட்டு, "தற்போது நான் அல்ஜீப் ராவோடு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இது ஒரு வழியாக முடிவடைந்ததும் தான் நான் தேசிய மறு மலர்ச்சியைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றான்.

"அல்ஜீப்ராவா? இம்மாதிரியான பலவிதமான சாஸ் திரங்கள் முதலில் இந்தியாவில்தான் தோன்றின. பிறகு அவை எவ்விதமோ ஐரோப்பாவிற்குச் சென்று விட்டன" என்றாள்.

பெங்மோ ஆச்சரியத்துடன் பார்த்தான். தன்னுடைய தாயாருக்கு எவ்விதமான புத்தக அறிவும் இருக்கக் கூடு மென்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இதை உடனே ஸ்ரீமதி ஊ அறிந்துகொண்டாள். அவளை இவ்விதம் ஆச்சரி யத்தில் ஆழ்த்துவது அவளுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

பிறகு அவள் திடீரென்று, "நீ இப்போது மிகவும் இளைத்துக் காணப்படுகிறயே? அந்த மான்கொம்பு சூரணத்தை நீ தினமும் சாப்பிடுவதில்லையா?" என்று கேட்டாள்.

"அது ஒரே நாற்றமாக நாறுகிறது" என்றான் பெங்மோ ஆட்சேபித்து.

ஸ்ரீமதி ஊ, சமாதானமாக, "அப்படியானால் நீ அதை எடுத்துக்கொள்ள வேண்டாமே. அவ்வளவு வெறுப்பாயிருப் பதை நீ எதற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என்றாள்.

"மிக்க வந்தனம் அம்மா" என்று கூறிய பெங்மோ மீண்டும் ஒருமுறை அதிசயமடைந்தான்.

ஸ்ரீமதி ஊ, பரிவுடன் அவனை நோக்கி, "பெங்மோ உன்னுடைய வாழ்க்கையைக் குறித்து நாங்கள் பேசினோம். அதற்குக் காலம் வந்துவிட்டது அல்லவா?" என்றாள்.

குல்லாய் சுழற்றுவதை நிறுத்திவிட்டு, நிமிர்ந்து பார்த்து, "என்னுடைய வாழ்க்கையா?" என்று கேட்டான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊ திரும்ப, "ஆம், உன்னுடைய வாழ்க்கையைப் பற்றித்தான். உன்னுடைய தகப்பனும் நானும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறோம்" என்றாள்.

பெங்மோ உஷ்ணத்துடன், "அம்மா, நீங்கள் எனக்கு ஒரு மனைவியைத் தேர்ந்தெடுத்தால் நான் உடனே ஒத்துக்கொண்டு விடுவேன் என்று மட்டும் எண்ணுதீர்கள்?" என்றான்.

ஸ்ரீமதி ஊ விரைந்து, "இல்லை, நிச்சயம் நான் அப்படிச் செய்யமாட்டேன். நான் செய்யக்கூடிய தெல்லாம் என்ன வென்றால் சில பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களில் உனக்கு யாரையாவது பிடித்திருக்கிறதா என்று கேட்பது தான். நான் உன்னுடைய விருப்பத்தையும் நம்முடைய குடும்பத்தின் அந்தஸ்தையும் கவனிக்க வேண்டுமல்லவா? 'சேன்' குடும்பத்துப் பெண்களைப் போன்றவர்களைப் பார்க்கும் எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டேன். அவர் களெல்லாம் ரொம்பவும் பழைய காலமாக இருக்கிறார்கள்" என்றாள்.

"அந்த மாதிரி பெண் எனக்கு வேண்டவே வேண் டாம்" என்று மொழிந்தான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊ மிக சாந்தமாக, "ஆம், வேண்டியதில்லை. ஆனால் இதில் மற்றொரு கஷ்டம் இருக்கிறது. இந்தக் காலத்தில் பெண்களும் அநேக நிபந்தனைகளைப் போட ஆரம்பித்திருக் கிறார்கள். எங்களுடைய காலத்தைப் போல் இப்போது இல்லை. நான் இவ்விஷயங்களை யெல்லாம் என்னுடைய தாயாரிடமும், என் தந்தை யில்லாததால், அவருடைய பொறுப்பை ஏற்றுக்கொண்ட எனது மாமாவிடமும் விட்டு விட்டேன். ஆனால் இப்போது பெண்கள்—பெங்மோ, அதுவும் நீ விரும்பக்கூடிய வகையில் இருக்கும் பெண்கள், குறைந்தது ஒரு அந்நிய மொழியையாவது பேசத் தெரியாதிருக்கும் ஒரு இளைஞனை மணப்பதற்குச் சம்மதிக்க மாட்டேன் என்கிறார் கள்" என்றாள்.

"நானும்தான் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் படிக் கிறேன்" என்றான் பெங்மோ இறுமாப்புடன்.

"ஆனால் உன்னால் அதை நன்றாகப் பேச முடியவில்லையே. எனக்கு அந்த பாஷை தெரியாது. இருந்தாலும் நீ அந்த வார்த்தைகளைப் பேசும்போது திக்குவதையும் நடுவில் நடுவில் நிறுத்துவதையும் நான் கவனித்திருக்கிறேன். அதற்காக நான் உன்னைக் குறை கூறுகிறேன் என்று நினைத்துக் கொள்ளாதே. உள்ளதைச் சொன்னேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எந்தப் பெண் என்னை அப்படி வேண்டாமென்று சொல்லுகிறவள்?" என்று கேட்டான் பெங்மோ கோபத் துடன்.

ஒரு படகு அலைமீது அலாக்காக ஏறி கரையை அடைவது போல், ஸ்ரீமதி ஊ இக்கோபத்தைத் தனது நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டாள். "ஸ்ரீமதி கேங்கின் மூன்றுவது பெண் லின்யி" என்றுள் அவள். அவர்களுள் இதுவரை ஒரு தொடர்பும் இல்லாதிருந்ததால் பெங்மோவின் இந்த தற் போதைய கோபமே அதை உண்டாக்குவதற்குப் போதுமான தாக இருந்தது. இதைக் கேட்டதுமே அவனுடைய உள்ளத் தில் கிளர்ச்சி உண்டாயிற்று.

"அந்தப் பெண்ணு? அவளைப் பார்த்தபோதே பெரும் கர்வக்காரி என்றுதான் தோன்றியது. அவளுடைய அந்தப் பார்வை எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை" என்றுன்.

ஸ்ரீமதி ஊ அவனை மடக்கி, "ஆனால் அவள் உண்மையில் ரொம்பவும் அழகுதான். ஆனால் அது ஒன்றும் அவ்வளவு முக்கியமல்ல. அவளையும் மற்றவர்களில் ஒருத்தியாகப் பாவித்துதான் கூறுகிறேன். நம்முடைய குடும்பத்தையும் அந் தஸ்தையும் அறிந்திருந்தும்கூட அவள் உன்னை மணப்பதற்கு ஆசேபித்தால், நாம் வேறு பெரிய இடம் பார்க்கலாமே" என்று கேட்டாள்.

பெங்மோ ஆவலுடன், "நீங்கள் என்னை வெளியூருக்குப் படிப்பதற்காக அனுப்புங்களேன்" என்றுன்.

"அதைமட்டும் நான் செய்யமாட்டேன்" என்றுள். அவளுடைய குரலில் இனிமை ததும்பிய போதிலும், அதில் சூரிய சந்திரர்களாலும் அசைக்க முடியாத உறுதி காணப் பட்டது. "இன்னும் சில வருஷங்களில் உலக முழுவதும் யுத்தம் வரப் போகிறது. இம்மாதிரியான நிலைமையில் என் னுடைய பிள்ளைகள் எல்லோரும் வீட்டிலேயேதான் இருக்க வேண்டும்" என்றுள்.

பெங்மோ அதிசயத்தில் மூழ்கியவனுய், "அம்மா உனக்கு எப்படி இதெல்லாம் தெரிகிறது?" என்று வினவினன்.

ஸ்ரீமதி ஊ அமைதியுடன், "என்னைச் சுற்றிலுமிருப்பவர் களைப்போல் நானும் ஒரு முட்டாளல்ல. சிலர் ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். அதை ஒருவரும் தடுக்காம லிருந்தால், அவர்கள் மேலும் தங்கள் காரியத்தைத் தொடர்ந்து நடத்துகிறார்கள்" என்று கூறினுள்.

அந்தப் பையன் மௌனமாகத் தன்னுடைய தாயின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவளுடையதைப்

போலவே அவனுடைய கண்களும் பெரிதாயும் கருமை யாகவும் இருந்தன. ஆனால் அவளுடையதில் இருந்த ஆழ்ந்த தன்மை அவைகளில் காணப்படவில்லை. அவன் இன்னும் வயதில் மிகவும் சிறியவன். அவள் கூறிய விஷயங்களை யெல் லாம் புரிந்துகொள்ளப் பிரயாசைப்படுகிறவன் போல் அவன் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

அவள் மேலும், "இந்த ஊரில் அந்நியப் பாதிரியார் ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் நன்முகப் படித்தவராம். அவருக்கு வேண்டுமானால் ஏதாவது பணம் கொடுத்து உனக்கு அந்நிய பாஷைகளைக் கற்றுக் கொடுப்ப தற்கு ஏற்பாடு செய்யலாம். இதற்கு நீ சம்மதிக்கிறுயா? அந்த பாஷைகள் உனக்கு ஒரு நாளைக்கு மிகவும் பயன் படலாம். கல்யாணத்திற்காக என்று மட்டும் நான் இதைச் சொல்லவில்லை. வருங்காலத்திற்கு ஏற்றதாகிய இப்புதிய மாறுதல்களை நாமும் கைக்கொள்ள வேண்டியதுதானே" என்றுள்.

அவளுடைய குரல் தெளிவாகவும் கீதம் இசைப்பது போலவும் இருந்தபோதிலும் அதில் வன்மையும் நிறைந்திருந் தது. பெங்மோ தனது தாயாரிடம் அன்பு வைத்திருந்த போதிலும் கூடவே அவளிடம் பயமும் கொண்டிருந்தான். அவள் செய்வதெல்லாம் எப்போதும் சரியாகவே இருந்தன. அவன் சில சமயங்களில் அவளுக்குக் கீழ்ப்படியாதிருந்திருக் கிறுன். அப்போதெல்லாம் அவள் அவனைத் தண்டித்ததே யில்லை. ஆயினும் அவன் எவ்விதமோ தண்டனையை அனு பவிக்கத்தான் செய்தான். அவள் கூறுவதெல்லாம் அறிவுடன் கூறிய வார்த்தைகள் என்பதை அவன் மெல்ல மெல்லத் தான் அறிந்துகொண்டான். ஆனால் அவன் ஒரு சிறிய பையனுக இருந்ததால் முதலில் ஒருகணம் சந்தேகத்துடன் தயங்கினுன்.

"ஒரு பாதிரியாரா? எனக்கு மதங்களில் நம்பிக்கையே யிடையாது" என்றுன் அவன்.

"மதங்களை நம்பு என்று நான் உன்னிடம் சொல்ல வில்லையே! அதைப்பற்றியே இப்போது நாம் பேசவில்லையே" என்று பதிலுரைத்தாள் அவள்.

பெங்மோ வெறுப்புடன், "அவர் என்னைத் தம் மதத் திற்கு மாற்ற முயற்சிப்பாரோ என்னமோ! சிறிய சகோதரி ஹுஷியா எப்போதும் அப்படித்தானே வீட்டிலுள்ளோரை மாற்றவே பார்த்துக்கொண்டிருக்கிறுள்! என்னைப் பார்க்கும்

நேரத்திலெல்லாம் அவள் உபதேச மொழிகள் அடங்கிய ஒரு காகிதத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறாள்" என்றான்.

"நீ அதற்கு இடம் கொடுக்கவேண்டும் என்பது அவசியமில்லையே! நீ அவ்வளவு பலஹீனமுள்ளவனா? ஒருவரிடமுள்ள சிறந்த குணங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு மற்றதை ஒதுக்கித் தள்ள நீ கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு மாதம் அவரிடம் படித்துப் பார். பிறகு நீ அவரை நிறுத்தி விடவேண்டுமென்று விரும்பினால், நான் அதை ஒப்புக்கொள்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இவ்வீட்டில் அவளுடைய விருப்பப்படியேதான் எல்லாம் நடக்கவேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் விளாதபடி அவள் கவனமாகப் பார்த்துக்கொள்வாள். அதுவே அவளுடைய சக்தியின் ரகசியம். அவள் எதற்கும் அவகாசம் கொடுத்து, முடிவைப்பற்றி வாக்களிக்கவும் செய்வாள். பிறகுதான் எண்ணிய கருமத்தை முடிக்க, காலத்தைப் பூரணமாக உபயோகித்துக் கொள்வாள்.

பெங்மோ மீண்டும் தொப்பியை மெதுவாகச் சுற்ற ஆரம்பித்தான். "அப்படியானால் ஒரு மாதத்திற்குத்தான்; எனக்கு இஷ்டமில்லையென்றால் ஒரு மாதத்திற்குமேல் கூடாது" என்றான்.

"ஒரே ஒரு மாதம்தான்" என்று அதை அங்கீகரித்த ஸ்ரீமதி ஊ எழுந்தாள். "சரி, வா, மகனே! இப்போது நாம் இருவருமாகச் சேர்ந்து இரவு சாப்பாட்டிற்குச் செல்வோம். உன் தகப்பனார் முன்னமே சாப்பிட ஆரம்பித்திருப்பார்" என்றாள்.

ஊ குடும்பத்தில் ஆண்களும் பெண்களும் தனித்தனியே போடப்பட்ட மேஜைகளில்தான் சாப்பிடுவது வழக்கம். அப்பெரிய சாப்பாட்டு அறையின் வாயிற்படியிலேயே, பெங்மோ தனது தாயாரைப் பிரிந்து, ஒரு புறமாகப்போடப்பட்டிருந்த ஆண்களின் மேஜைகளை நோக்கிச் சென்றான். அங்கு ஏற்கெனவே அவனுடைய தகப்பனாரும் சகோதரர்களும் மற்ற உறவினர்களும் உட்கார்ந்திருந்தனர். ஸ்ரீமதி ஊ அவளுக்கே உரிய கம்பீரத்துடன் பெண்கள் அமர்ந்திருந்த இடத்தை நோக்கிச் சென்றாள். அவளைக் கண்டதும் யாவரும் எழுந்து நின்றனர். அவர்களுடைய மத்தியில் சியூமிங்கும் இருந்ததை அவள் உடனே கவனித்தாள். அப்பெண் கூச்சத்துடன் மற்றவர்களிடமிருந்து சற்று விலகி உட்கார்ந்திருந்தாள். அவள் தன் மடியில் ஒரு சிறு குழந்தையை வைத்திருந்தாள். அவள்

குழந்தையை அணைத்துப் பிடித்தவாறே எழுந்து அதன் பின்னால் மெல்ல தன் முகத்தை மறைத்துக் கொண்டாள். ஆனால் அவள் அவ்வாறு செய்யுமுன்னரே, ஸ்ரீமதி ஊ அவளை ஒருமுறை நன்கு பார்த்துவிட்டாள். அப்பெண் வருத்தத்துடன் காணப்பட்டாள். முற்றிலும் புதியதான அவ்வீட்டில் அவள் அவ்வாறு காணப்படுவது சகஜம்தான். அவள் இங்கு வந்திருக்கிறாளே, அதுவே போதுமானது.

"தயவுசெய்து உட்காருங்கள்" என்றாள், ஸ்ரீமதி ஊ ஒருவரையும் குறிக்காமல் பொதுவாக எல்லோரிடமும். எல்லாவற்றிலும் உயர்ந்ததாகிய தனது ஆசனத்தில் சென்று அமர்ந்து, தந்தக் கோல்களைத் தனது கையில் எடுத்துக்கொண்டாள். மெங் மற்றவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள். ஸ்ரீமதி ஊ, கோல்களை மீண்டும் கீழே வைத்துவிட்டு, "மெங், தயவுசெய்து, எனக்குக் கொஞ்சம் பரிமாறேன். இன்று முழுவதும் வீட்டு விவகாரங்களைக் கவனிப்பதற்கே சரியாக இருந்தது. ஆதலால் எனக்கு சற்று அசதியாக இருக்கிறது" என்று கூறினாள்.

அவள் புன்னகை செய்தவாறு, பின்புறம் சாய்ந்து கொண்டு, தனது வழக்கமான முறையில், ஒவ்வொரு மருமகளிடமும் ஒவ்வொரு வார்த்தை பேசினாள். பிறகு அவள், தாதியின் இடுப்பிலிருந்த மெங்கின் சிறிய பையனோடு வார்த்தையாடினாள். அப்பையன் ஏதோ முரண்டு பண்ணிக் கொண்டிருந்தான். ஸ்ரீமதி ஊ, தந்தக் கோல்களால் தின் பண்டத்திலிருந்து ஒரு துண்டைப் பொறுக்கி அவனுக்குக் கொடுத்தாள். பிறகு அவள் சியூமிங்கைப் பார்த்து நேரிடையாகவே பேசினாள்.

அவள் அன்புடன், "இரண்டாவது எஜமானி! உனக்குப் பிடித்த ஆகாரத்தை நீ நன்றாகச் சாப்பிட வேண்டும். எப்போதும் மீன் உணவு மிகவும் நல்லது" என்றாள்.

நிமிர்ந்து பார்த்த சியூமிங்கின் முகம் குப்பென்று சிவந்தது. அவள் அக்குழந்தையை அணைத்துப் பிடித்தவாறே எழுந்து ஒருமுறை தலை வணங்கிவிட்டு, "ஹீனமான குரலில், "மிக்க வந்தனம், அக்கா" என்றாள். பிறகு அவள் உட்கார்ந்துகொண்டு மௌனமாக, ஒரு வேலைக்காரி எதிரே கொண்டுவந்து வைத்த சாதத்தை முதலில் குழந்தைக்கு ஊட்டலானாள்.

• ஆனால் அன்பான இச் சில வார்த்தைகள் மூலம், ஸ்ரீமதி ஊ குடும்பம் முழுவதற்குமே, சியூமிங்கின் ஸ்தானம் இன்ன

தென்பதை விளக்கிவிட்டாள். இனி அவர்கள், இக் குடும்ப வாழ்க்கையில் அவளையும் ஒரு நபராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்தச் சில வார்த்தைகளைக் கேட்டதும் யாவரும் ஒரு கணம் மௌனத்தில் ஆழ்ந்து விட்டனர். பின்னர் அதை மறைப்பதற்காக வேலைக்காரிகள் ஒருத்தியோடொருத்தி பேச, தாதி குழந்தையோடு பேச, பின் நிலைமை சரியாயிற்று.

ஸ்ரீமதி ஊ தனக்கு அளிக்கப்பட்ட உணவை ஏற்றுக் கொண்டு, தனது வழக்கப்படி மிக நாசுக்காக மெல்ல சாப்பிட ஆரம்பித்தாள். அவளுடைய பேரன், அத் தின் பண்டத்தை ஊட்டப் பெற்றச் சலுகையினால், அவளுடைய மடிமீது வந்து உட்கார வேண்டுமென்று பிடிவாதம் செய் தான். மெங் அவனைச் செல்லமாக, "நீயா, உன்னுடைய முகத்திலும் கைகளிலும் இத்தனை அழுக்குடனேயா...!" என்று கண்டித்தாள்.

ஸ்ரீமதி ஊ அப்போதுதான் கனவிலிருந்து விழித்தெழுந் தவள் போல் நிமிர்ந்து நோக்கி, "குழந்தை என்னிடமா வர வேண்டுமென்கிறான்?" என்று கேட்டாள்.

"அவன் ஒரே அழுக்காயிருக்கிறான் அம்மா" என்றாள் மெங்.

"அவன் என்னிடம் வரட்டும், விடு" என்று கூறிய ஸ்ரீமதி ஊ தனது கைகளை நீட்டிக் கொழு கொழுவென்றிருந்த அக்குழந்தையை வாங்கித் தனது மடிமீது அமர்த்திக் கொண் டாள். பிறகு வேறு சுத்தமான தந்தக் கோல்களை எடுத்து, மத்தியிலிருந்த கிண்ணங்களிலிருந்த உணவிலிருந்து சிறுசிறு துண்டங்களை எடுத்து அவனுக்கு ஊட்டலானாள். அவள் பேச வில்லை. ஆனால் ஒவ்வொரு வாய்க்கும் ஒருமுறை புன்னகை செய்தாள்.

ஆனால் அக்குழந்தை பதிலுக்குச் சிரிக்கவில்லை. அவன் ஏதோ ஆனந்தக் கனவில் மூழ்கியவன் போல் தனது சிறிய வாயைத் திறந்து திறந்து உணவை வாங்கிக்கொண்டு, அதை ஆனந்தமாகச் சுவைப்பதில் ஈடுபட்டிருந்தான். இதுவே ஸ்ரீமதி ஊ குழந்தைகளிடம் கையாளும் முறை. அவள் தன் முயற்சியின்றியே, அவர்களை அவளருகில் இருப்பதையே ஆனந்தமாகக் கருதும்படிச் செய்தாள். அவளுக்கும் அவன் மூலம் மனத் திருப்தி ஏற்பட்டது. அவன் மூலம் அவளுக்கு இவ் வீட்டிலுள்ள கடமை பூர்த்தியாகிறது. மேலும் அவன் மூலம், இவ்வீட்டில் அவள் ரகசியமாக அனுபவித்து வந்த தனிமையும் ஒருவாறு நீக்கப்பட்டது. தான் தனிமையை

அனுபவித்து வருவதைப் பற்றி அவளே அறிந்திருக்கவில்லை. யாராவது அவளிடம் அப்படிச் சொல்லியிருந்தால்கூட அவள் இவ்விதம் ஒரு தவறான எண்ணம் ஏற்படக் கூடுமோ என்று அதிசயித்து அதை மறுத்திருப்பாள். ஆனால் அவளுடைய ஆத்மா, மற்றவர்கள் வந்து சேரமுடியாதபடி அவ்வளவு தொலைவில் தனிமையாக இருந்து வந்தது. அவளுடைய ஆத்மா அவளது வாழ்க்கையின் எல்லையைக் கடந்து சென்று விட்டது. அவளுடைய உடல் வசித்து வந்த இந்த நான்கு சுவர்களைக் கடந்து அது தொலைவில் எப்போதோ சென்று விட்டது. அது உலகமெல்லாம் சற்றித் திரிந்தது. கடந்த காலத்திற்குள் சென்றது. எதிர் காலத்தை நோக்கி ஏறியது. தொடர்ந்து சென்றுகொண்டிருந்த இவ்வாழ்க்கைப் பிரயா ணத்தைப் பற்றி அவளுக்குக் கணக்கற்ற எண்ணங்கள் தோன்றின. ஆயினும் அப்போதைக்கப்போது அவளுடைய ஆத்மா இவ்வீட்டை நோக்கி வந்ததையத்தான் செய்தது. இப்போதும் அது அவ்வாறே திரும்பி வந்தது. அவள் திடீ ரென்று இக்குழந்தையையும் அவனுடைய முக்கியத்துவத் தையும் உணர்ந்தவள் போலானாள். தலைமுறைகள் அணி வகுத்து மேலும் மேலும் சென்று கொண்டேயிருக்கின்றன. அவளுடைய தலைமுறையின் முடிவு காலம் வந்து விட்டது. அவனுடையதோ இனிமேல்தான் ஆரம்பிக்கப் போகிறது.

"என்னுடைய மகனுடைய மகனே" என்று முணு முணுத்த அவள், தான் கொடுப்பதற்காகத் திறந்து காட்டிய அச்சிறு வாய்க்குள் மேலும் மேலும் சிறுசிறு துண்டங்களைப் போட்டுக்கொண்டே யிருந்தாள். அவனுக்கு ஊட்டியானதும் அவனை அவனுடைய தாயாரிடம் கொடுத்தாள்.

ஆனால் மற்றவர்கள் சாப்பிட்டாகும் முன்பே அவள் சாப் பிட்டு முடித்துவிட்டாள். அவர்களைத் தொடர்ந்து சாப்பிடு மாறு வேண்டிக்கொண்டு, எழுந்து மெல்ல அறையை விட்டுச் சென்றாள். ஸ்ரீமான் ஊவையும், அவளுடைய பிள்ளைகளையும் அவள் கடந்து சென்றபோது அவர்கள் தங்களுடைய ஆசனங் களிலிருந்து சற்றே எழுந்திருந்து அவளுக்கு வணக்கம் தெரி வித்தனர். அவள் புன்னகையுடன் தனது தலையை அசைத்து விட்டு மேலே சென்று விட்டாள்.

அன்றும் அவள் இடையில் ஒருமுறை கூட விழித்துக் கொள்ளாமல், இரவு முழுவதும் நன்றாக அயர்ந்து தூங்கி னாள்.

ஆனல் சியூமிங்கிற்கு, ஸ்ரீமதி ஊ வந்து சென்ற இந்த அரை மணி நேரமும் ஒரு திருமண வைபவமாகவே விருந்தது. முதல் நாளைய இரவால், அவள் மிகவும் கலவரமடைந்து போயிருந்தாள். அவருக்கு அவளைப் பிடித்திருக்கிறதா இல்லையா? ஸ்ரீமான் ஊ அவளிடம் ஒரு வார்த்தைகூட பேச வில்லை. விடியுமுன்னரே அவர் அவளை விட்டுச் சென்று விட்டார். அதற்குப் பிறகு அவள் மத்தியானம் வரை தூங்கிக்கொண்டே யிருந்தாள். ஒரு வேலைக்காரியைத் தவிர அவ்விடம், அன்று பகல் முழுவதும் வேறு யாரும் வரவில்லை. பின்னர் மாலையில், குடும்பத்தார் எல்லோரும் சாப்பிடும் பொழுது அதில் வந்து கலந்து கொள்ளும்படிக் கூறிவிட்டுச் சென்றுள் இங்.

பிறகு அவள் தன்னை விரைவில் அதற்காகத் தயார் செய்து கொண்டாள். அந்த நேரம் வந்ததும் அவள் சிறிது தாமதித்து மெல்ல அவ்வறைக்குள் சென்றுள். சென்றதும் அக்குழந்தையை அதன் தாதியினிடமிருந்து வாங்கிக் கொண் டாள். குழந்தை அழவில்லை. ஆனல் அவளிடம் எப்போதுமே குழந்தைகள் அழுததில்லை. அவள் கிராமத்தில் மற்ற குடியானவ ஸ்திரீகளின் குழந்தைகளை எடுத்துச் சீராட்டுவது வழக்கம். ஒவ்வொருவராக இப்போது அவளுக்கு உறவினர் களாகிவிட்ட அப்பெண்களெல்லோரும் சற்று அலட்சியத் தோடும் கூச்சத்தோடும் அவளுக்கு முகமன் கூறினர். அவள் பதிலுக்குத் தன் தலையைச் சற்றே வணங்கினுள். அவனால் சாப்பிடவும் முடியவில்லை.

ஆனல் ஸ்ரீமதி ஊ அறையை விட்டு வெளியே சென்ற தும், அவளுக்குத் திடீரென்று பசியெடுத்தது. மற்றவர்களைப் பாராமல் தவிர்ப்பதற்காக அவள் சற்றே திரும்பி உட்கார்ந்து கொண்டு இரண்டு கிண்ணம் சாதத்தையும் மாமிசத்தையும், தன்னல் கூடியவரை விரைவாகச் சாப்பிட்டு முடித்தாள்.

சாப்பாடு முடிந்ததும், அவள் மிகுந்த கூச்சத்துடன், மெங்கும் ருலானும் செல்லட்டுமென்று காத்துக்கொண்டிருந் தாள். ஆனல் இளகிய மனம் படைத்த மெங், அவளிடம் பேசுவதற்காக சற்று நின்றுள். "நான் உங்களைப் பார்ப்ப தற்காக நாளைக்கு வருகிறேன்" என்றுள்.

"நான் அதற்குத் தகுதியற்றவள்" என்றுள் சியூமிங் ஹீன மாக. அவளால் மெங்கை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. ஆயினும் அவளுக்கு இதனல் ஆறுதலும் மகிழ்ச்சியும் உண்டா யிற்று. அவள் தன் கண்களை உயர்த்தியபோது, மெங் அதன்

மூலம் அவளுடைய பீதி நிறைந்த துணையற்ற உள்ளத்தைக் கண்டாள்.

"நான் என் குழந்தையையும் எடுத்துக்கொண்டு வரு கிறேன்" என்று வாக்களித்தாள் மெங்.

சியூமிங் மற்ற பெண்களோடும் குழந்தைகளோடும் அவர் களுக்கிடையில், ஆண்களின் கண்களில் படாதவாறு தன்னை மறைத்துக்கொண்டு சென்றுள். ஆனல் அவர்கள் ஒவ்வொரு வரும் அவரவர்கள் முறைப்படி அவளை ரகசியமாகப் பூர்த் தனர்.

பியோனிச் செடிகள் வைத்திருந்த அப்பகுதிக்கு, ஸ்ரீமான் ஊ அன்றிரவு முன்னதாகவே வந்துவிட்டார். அவள் இன்னும் படுக்கைக்குக்கூடச் செல்லவில்லை. இன்னும் முடி வடையாமலிருந்த தனது புதிய துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தாள். அவருடைய காலடியோசை கேட்டது. அவர் வந்ததும் அவள் எழுந்து நின்று தன்னுடைய முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டாள். அவள் அவ்வாறு நிற்கையில் அவர் உட்கார்ந்து தொண்டையைக் கனைத்துவிட்டுக் கொண் டார். பின்னர் தமது கைகளை மடிமீது வைத்துக்கொண்டு அவளை நோக்கினர்.

அவளைப் பெயரிட்டழைக்காமல், "நீ வந்து...நீ என்னைக் கண்டு பயப்படக் கூடாது" என்று ஆரம்பித்தார்.

அவளால் பதில் கூற முடியவில்லை. இரு கைகளாலும் அத்துணிகளை இறுகப் பிடித்தவாறு அவள் அவர் முன்பு கற் சிலைபோல் நின்றுள்.

அவர் மீண்டும் ஆரம்பித்தார்: "இந்த வீட்டில் உனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியவை எல்லாமிருக்கின்றன. என் னுடைய பிள்ளைகளின் தாய் மிகவும் அன்புள்ளவள். மற்ற இளம் பெண்களும் இருக்கின்றனர். என்னுடைய மருமக்கள், மற்ற உறவினர்களின் இளம் மனைவிமார்கள், அவர்களுடைய குழந்தைகள் எல்லோரும் இருக்கின்றனர். நீ நல்ல குணமுடையவளாகக் காணப்படுகிறுய். நீ மிகவும் நன்றுய் நடந்துகொள்வாய் என்பது நிச்சயம். நீ இங்கு மிகவும் சந்தோஷமாய் இருக்கலாம்" என்று கூறினர்.

இதற்கும் அவள் பதிலளிக்கவில்லை. ஸ்ரீமான் ஊ இருமி விட்டுத் தமது பெல்ட்டைத் தளர்த்திவிட்டுக் கொண்டார். வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டதால் அவருக்கு மூச்சு

விடுவது சற்று சிரமமாக யிருந்தது. ஆனால் அவர் இன்னும் தாம் கூற விரும்பியதை முழுவதும் சொல்லி முடிக்கவில்லை.

அவர் மேலும், "என்னைப் பொருத்தவரை, உனக்குச் சில கடமைகள்தான் இருக்கின்றன. நான் வெகுநேரம் தூங்குவது வழக்கம். நான் இங்கிருந்தால் நீ என்னை எழுப்பக் கூடாது. இரவில் எனக்குத் தூக்கம் வராத சமயங்களில் நான் தேநீர் அருந்துவேன். ஆனால் தேநீர் சிவப்பாக இருக்கக் கூடாது. என்னுடைய தேகம் மிகவும் உஷ்ண தேகமாத லால் குளிர்காலத்தில்கூட என்னால் இரண்டு மெத்தைகள் போட்டுக்கொள்ள முடியாது. இவையும், இவை போன்ற மற்ற விஷயங்களையும் சந்தேகமில்லாமல் நீ தெரிந்து கொள்வாய்" என்றார்.

துணிகள் அவள் கையிலிருந்து நழுவி விழுந்தன. அவள் தன்னுடைய வெட்கத்தை அடியோடு மறந்தவளாய் அவரைப் பார்த்து, "அப்படியானால்...நான் இங்கு இருக்க லாமா?" என்று கேட்டாள். தனக்கு இந்த உலகில் தங்குவ தற்கென்று ஒரு இடம் கிடைத்தாற் போதும் என்ற ஏக்கத் தின் மிகுதியால் அவள் இவ்வாறு அவரைக் கேட்டாள்.

"நிச்சயமாக. நானும் அதைத்தானே இப்போது உனக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன், இல்லையா?" என்றார் அவர் புன்னகையோடு. அவருக்குள்ளிருந்து எழுந்த ஒரு வேகத்தால் அவருடைய முகத்தில் ஒளி வீசிற்று. இதைக் கண்ணுற்ற அவள் அதைப் புரிந்துகொண்டாள். இன்றிரவு அவள் பயப்படமாட்டாள். அவள் செலுத்த வேண்டியது மிகச் சொற்பமே. அதுவும் இவரைப் போன்ற ஒரு அன்பு உள்ளம் படைத்த மனிதருக்குச் செலுத்த வேண்டியது மிக மிகச் சொற்பமே. அதுவும் கடைசியாக அவளுக்கு நிழல் கொடுப்பதற்கு ஒரு வீடு கிடைத்து விட்டது. அதற்குப் பதிலாக இதென்ன பிரமாதம்!

* * * *

6

சிறிய சகோதரி ஹேஷியா எப்போதும் தன் கடமையைச் செய்வதில் மிகத் தீவிரமாக இருப்பவள். ஆயினும் ஸ்ரீமதி ஊ அவள் இவ்வளவு கருத்தாக யிருப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. ஏழெட்டு நாட்களுக் குப் பிறகு ஒருநாள் இங் உள்ளே ஓடி வந்தாள், அவளுடைய சிறிய வட்டமான விழிகள் அதிசயத்தால் பள பளத்தன.

"அம்மா! அம்மா!" என்று கத்திக்கொண்டே வந்தாள்.

ஸ்ரீமதி ஊ தனது ஆர்ச்சிட் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அவள் திருப்தியுடன் நின்று, உறுதியான குரலில், "இங், முதலில் உன் வாயை மூடு. உன்னைப் பார்த் தால் தூண்டில் முள்ளில் அகப்பட்ட மீன்போல் இருக்கிறது. சரி, இப்போது விஷயம் இன்னதென்று சொல்லு" என்றாள்.

இங் அவளுக்குக் கீழ்ப்படிந்தாள். ஆனால் மீண்டும் வேக மாக ஆரம்பித்தாள்: "மிகப் பெரிய மனிதர் ஒருவர்...நான் கண்டதேயில்லை அம்மாதிரி...ஒரு அந்நியர்! நீங்கள் சொல்லி யனுப்பியதாக அவர் கூறுகிறார்" என்றாள்.

"நானா?" என்றாள் ஸ்ரீமதி ஊ ஒன்றும் புரியாதவளாக. பிறகு நினைவு வந்து, "ஒரு வேளை இருக்கலாம்" என்று கூறினாள்.

இங் முறையிடும் குரலில், "அம்மா, நீங்கள் என்னிடம் ஒன்றுமே தெரிவிக்கவில்லையே! நான் வாயிற்காப்போனிடம் அந்த ஆளைக் கண்டிப்பாக உள்ளே விடவேண்டாம் என்று கூறி விட்டேன். இந்த வீட்டில் நாம் எப்போதும் அந்நியர்களை அனுமதித்ததே யில்லையே" என்றாள்.

"நான் உன்னிடம் எல்லாவற்றையும் கூறுவதில்லையே" என்று கூறிய ஸ்ரீமதி ஊ, "அவரை உடனே உள்ளே வரும்படி அழைத்து வா" என்றாள்.

இங், பதில் கூற வழியில்லாது, பேசாமல் திரும்பிச் சென்றாள். ஸ்ரீமதி ஊ மீண்டும் அவளுடைய ஆர்ச்சிட்களின் நடுவே நடக்கலானாள். இச்செடிகள் இங்கு பிடுங்கி வைக்கப் பட்டுச் சொற்ப காலமே ஆகியிருந்தாலும், அதற்குள் நன்றாக பிழைத்துக் கொண்டன. இந்த நிழலடர்ந்த இடத்தில் அவை நன்றாக வளரும். புதிதாக வைக்கப்பட்ட பியோனிகளும் இவ்விதமே நன்றாக இருக்குமோ என வியந்தாள் அவள். இதே சமயம் அவ்வாசலின் வட்டக் கதவருகேயிருந்து ஒரு ஆழ்ந்த கம்பீரமான குரல் வந்தது.

"அம்மா!"

அவள் இக்குரலை எதிர்பார்த்துத் தானிருந்தாள். ஆயினும் அது இத்தகைய சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவள் அந்த ஆர்ச்சிட் களின் மத்தியிலிருந்து, நிமிர்ந்து பார்த்தாள். அங்கு அதிக உயரமும், அகன்ற தோள்களுமுடைய ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார். அவர் காவி நிறமுடைய நீண்ட

ஆடைகளை அணிந்து இருந்தார். ஆடைக்குமேல் இடுப்பில் ஒரு கயிறு கட்டியிருந்தார். இவர்தான் அப் பாதிரியார். அவர் தமது மார்பில் தொங்கிய ஒரு சிலுவையைத் தமது வலது கரத்தால் பிடித்துக் கொண்டிருந்தார். சிலுவை கிறிஸ்துவர் களுடைய சின்னம் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவளுடைய கவனம் அதைப் பிடித்திருந்த அக் கையின் பலத் தையும், அளவையும் கண்டு வியந்தது.

அவள் தன்னுடைய மெல்லிய, தெளிவான குரலில், "உங்களை எப்படி அழைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. இல்லாவிடில் நான் உங்களுக்குப் பதில் வணக்கம் தெரிவிப் பேன். தயவு செய்து உள்ளே வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

அப் பாதிரியார் தமது பெரிய தலையைக் குவிந்து கொண்டு கதவின் வழியாக உள்ளே வாசலுக்கு வந்தார். இங், பயத் தால் வெளிறிய முகத்தோடு அவரைத் தொடர்ந்து வந்தாள்.

"என்னுடைய புத்தக அறைக்கு வருகிறீர்களா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. அவள் அறையின் கதவுக்கு முன்னால் ஒருபுறமாக ஒதுங்கி நின்று அவருக்கு வழி விட்டாள். ஆனால் அவர் தமதுகையைச் சிலுவையிலிருந்து எடுத்துவிட்டு, அதைக் கதவின் புறமாக ஆட்டிக் காட்டி, புன்னகையோடு, "எங்கள் நாட்டில் பெண்கள்தான் முதலில் செல்ல வேண்டும்" என்று கூறினர்.

அவள் மெதுவாக, "அப்படியா? அப்படியானால் பழக்க மான முறையையே கையாளுவது நல்லதல்லவா!" என்றாள்.

இவ்விதம் கூறி அவள் உள்ளே சென்று தான் வழக்கமாக உட்காரும் நாற்காலியில் உட்கார்ந்தாள். மேஜைக்கு எதிர் புறமிருந்த மற்றொன்றில் அவரை உட்காரச் சொன்னாள். இங், மெல்ல நகர்ந்து வந்து கதவின் பின்னால் பாதி மறைந்து நின்று கொண்டு விறைக்க விறைக்கப் பார்த்தாள். ஸ்ரீமதி ஊ அவளைப் பார்த்து, "இங், இங்கே வா" என்று உத்திர விட்டாள். பிறகு அவள் சிறிதே புன்னகை செய்தவாறு அப் பாதிரியை நோக்கி, "இந்த மூடப் பெண் உங்களைப் போன்ற பெரிய மனிதரைக் கண்டதேயில்லை. அதனால் தான் அப்படி விறைக்க விறைக்கப் பார்க்கிறாள். அதைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்றாள்.

அதற்குப் பாதிரியார் இவ்விசித்திரமான வார்த்தை களால் பதிலளித்தார். "மற்றவர்களுக்குச் சிரிப்பை

உண்டாக்குவதற்காகத்தான் இப்பெரிய சரீரத்தைக் கடவுள் எனக்கு அளித்தாரோ என்னவோ! அதனால் என்ன! சிரிப்பது எப்போதும் நல்லது" என்றார். அவருடைய இடி முழக்கம் போன்ற குரல் அறையில் எதிரொலித்தது.

இங், உயரே கூரையை அண்ணாந்து பார்த்தவாறு, ஹீன மான குரலில், "கடவுளே, இது என்ன, இடி இடிப்பது போலிருக்கிறது" என்றாள்.

"இங், சூடாகத் தேநீர் கொண்டுவா" என்று அவளை அமைதியுறச் செய்யும் பொருட்டு ஸ்ரீமதி ஊ கட்டளை யிட்டாள். இங், ஒரு பூனையைப் போல் பதுங்கி ஓடி விட்டாள்.

பாதிரியார், தமது பெரிய சரீரம் அந்த அகன்ற நாற் காலியில் முற்றிலும் நிறைந்திருக்க, அசையாமல் உட்கார்ந் திருந்தார். ஆயினும் அவர் பருமனை இல்லாமல் ஒல்லியாகத் தான் இருந்தார் என்பதை ஸ்ரீமதி ஊ இப்போதுதான் கவனித் தாள். அவர் மார்பில் அணிந்திருந்த சிலுவை தங்கத் தாலானது. அவர் சற்று கறுப்பாகத் தானிருந்தார். அவ ருடைய அகன்ற கரிய விழிகள் மிகவும் தெளிவாகவும், சோகம் நிறைந்தவையாகவுமிருந்தன. அவருடைய சற்றே சுருண்ட மயிர்கள், அதிக நீளமாகவோ, குட்டையாகவோ இல்லாமல் சாதாரணமாகவே இருந்தன. அவருடைய தாடி கறுப்பாகவும், மென்மையாகவும் இருந்தது. இந்தக் கரிய தாடியினூடே அவருடைய உதடுகள் மிக அதிகமாகச் சிவந்து காணப்பட்டன.

"உங்களை நான் எப்படி அழைப்பது? சிறிய சகோதரி ஹேஷியாவிடம் உங்களுடைய பெயரைக் கேட்க மறந்து விட்டேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எனக்கென்று சொந்தப் பெயர் கிடையாது. ஆனால் இங்கு என்னை ஆண்ட்ரூ என்று அழைக்கிறார்கள். எதுவானால் என்ன! எல்லாப் பெயர்களும் ஒன்றுதான். என்னைச் சிலர் ஆண்ட்ரூ அப்பா என்று அழைக்கிறார்கள், நீங்கள் என்னை 'சகோதரர் ஆண்ட்ரூ' என்று அழைக்கலாம்" என்றார்.

ஸ்ரீமதி ஊ இதை ஒத்துக் கொள்ளவுமில்லை, மறுக்கவு மில்லை. அவள் அப் பெயரை இட்டு அழைக்கவுமில்லை. அதற்குப் பதில் "உங்களுடைய மதம்?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டாள்.

"என்னுடைய மதத்தைப் பற்றி நாம் இன்று பேச வேண்டாம்" என்று கூறினர். ஸ்ரீமதி ஊ, இதற்கு சற்றே

சிரித்து விட்டு, "எல்லாப் பாதிரிகளும் தங்களுடைய மதத்தைப் பற்றித்தான் பேச விரும்புவார்கள் என்று நான் எண்ணினேன்" என்றாள்.

சகோதரர் ஆண்ட்ரூ அவளை ஒரு நீண்ட பார்வை பார்த்தார். அவருடைய கண்களில் அவ்வளவு சக்தி நிறைந்திருந்த போதிலும், அப்பார்வையில் துணிச்சல் இல்லை அது ஸ்ரீமதி ஊவிற்கு அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை. ஒரு மனிதன், முன்பின் அறியாத ஒரு பாதையை, ஒருவனுக்குக் காட்டுவதற்காகப் பிடித்துக் காட்டும் ஒரு விளக்கைப் போல் அவை ஒளி வீசின.

"தாங்கள் என்னிடம் பேச விரும்பியதாகக் கூறினார்கள். அம்மா!" என்றார். "ஆ! அதைத்தானே செய்கிறேன் நான்" என்று கூறிய ஸ்ரீமதி ஊ சற்று பேசாதிருந்தாள். இங் சமையலறைக்குச் செல்லுகையில், அந்த ராட்சத மனிதர் வந்திருக்கும் விஷயத்தைப் பரவச் செய்துவிட்டாள் என்பது அவளுக்கு இப்போதுதான் புலப்பட்டது. கதவருகே கசமுச என்ற சப்தமும் பேச்சும் கேட்டது. அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து, அங்கு குழந்தைகள் வந்து கூடியிருப்பது தெரிந்தது. அவள் சகஜமான குரலில், "குழந்தைகளே இங்கு வாருங்கள், வந்து இவரைப் பாருங்கள்" என்றாள்.

உடனே கதவருகே குழந்தைகளின் கூட்டம் ஒன்று கூடிவிட்டது. அவர்கள் காலை வெயிலில் மிளிரும் புஷ்பங்களைப் போல் காணப்பட்டனர். ஸ்ரீமதி ஊ அவர்களைப் பார்க்க மிக்க பெருமை கொண்டாள்.

"அவர்கள் உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள்" என்று விவரித்தாள். "பார்க்கட்டும்! ஏன் கூடாது?" என்று பதிலளித்த அவர் அவர்கள் பக்கம் திரும்பினார். இதைக் கண்டு அவர்கள் பின் வாங்கினார்கள். ஆனால் அவர் ஒன்றும் செய்யாமல், புன்னகை செய்து கொண்டிருப்பதைக் கண்டு, மீண்டும் அருகில் வந்தனர்.

ஸ்ரீமதி ஊ அவர்களிடம், "அவர் சிறு குழந்தைகளைச் சாப்பிடுவதில்லை சந்தேகமில்லாமல். ஒருவேளை ஒரு புத்த பிக்ஷுவைப் போல் காய்கனிகளையே சாப்பிடுபவராக இருக்கலாம்" என்றாள்.

"அது உண்மைதான்" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ.

"எப்படி நீங்கள் இவ்வளவுபெரியவராகஇருக்கிறீர்கள்?" என்று கேட்டான் ஒரு பையன் மூச்சைப் பிடித்துக்கொண்டு. அவன் ஊவின் ஒன்று விட்ட தம்பி ஒருவரின் பிள்ளை.

"கடவுள் என்னை அவ்வாறு படைத்திருக்கிறார்" என்று பதிலளித்தார் அவர்.

"ஆனால் உங்கள் பெற்றோர்களும் இம்மாதிரியே இருந்திருப்பார்களல்லவா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எனக்கு இப்போது அவர்களைப்பற்றி நினைவேயில்லை" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ மிருதுவான குரலில்.

"உங்களுடைய தேசம் எது?" என்று விசாரித்தான் ஒரு பையன். அவன் பள்ளிக்குப் போகும் வயதுடையவனதலால் அவனுக்குத் தேசங்களைப் பற்றித் தெரிந்திருந்தது.

"எனக்குச் சொந்த ஊர் எதுவும் கிடையாது. நான் எங்கிருக்கிறேனோ அதுவே என்னுடைய ஊர்" என்றார் அவர்.

"நீங்கள் அநேக வருடங்களாக இங்கிருந்திருக்க வேண்டும். எங்களுடைய பாஷையை இவ்வளவு நன்றாகப் பேசுகிறீர்களே!" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எல்லா ஜனங்களோடும் பேச வேண்டும் என்பதற்காக நான் அநேக மொழிகளைக் கற்றிருக்கிறேன்" என்றார் அவர்.

"ஆனால் நீங்கள் எங்கள் ஊரில் அதிக காலமாக இருக்கிறீர்களல்லவா?" என்று அவள் வற்புறுத்திக் கேட்டாள். அவளுக்கு இந்த மனிதரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவா ஏனோ ஏற்பட்டது!

"ஒரு வருடம் ஆகிறது" என்று அவர் பதிலளித்தார்.

இதற்குள் நன்றாகத் தைரியமடைந்துவிட்ட அக் குழந்தைகள் அவருக்கு வெகு அருகிலேயே வந்துவிட்டன. "உங்கள் கழுத்திலிருக்கும் சங்கிலியில் கோர்த்திருப்பது என்ன?" என்று அவர்களில் ஒருவன், தன் பொன் வர்ணச் சிறு விரலை ஆட்டிக் கேட்டான்.

"அது என்னுடைய சிலுவை" என்று கூறிய சகோதரர் ஆண்ட்ரூ, அக்கனமான சிலுவையை எடுத்து அவர்களிடம் நீட்டினார்.

"நான் அதைத் தொடலாமா?" என்று கேட்டது ஒரு குழந்தை.

"உனக்கு இஷ்டமிருந்தால் தொடு" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ.

ஸ்ரீமதியை கடுமையாக, "வேண்டாம் அதைத்தொடாதே குழந்தாய்" என்றாள். சகோதரர் ஆண்ட்ரூ திரும்பி அவளை நோக்கி, "ஆனால் இதில் ஒன்றும் கெடுதல் இல்லை அம்மா" என்றார்.

"அவன் தொட வேண்டாம்" என்றாள் அவள் கோபத்துடன். சகோதரர் ஆண்ட்ரூ அச்சிலுவையைத் தமது மார்பின் மீது மீண்டும் விட்டுவிட்டு, தமது பெரிய கைகளைக் கோர்த்து மடிமீது வைத்துக்கொண்டு பேசாதிருந்தார்.

இங், தேநீருடன் உள்ளே வந்தவள், வழியில் நின்ற குழந்தைகளைத் தள்ளிக்கொண்டே வந்தாள். அவள் உரைக்க, "உங்களுடைய அம்மாமார்கள் உங்களைக் கூப்பிடுகிறார்கள். உங்கள் எல்லோரையும்தான்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ தனது குரலைச் சற்றும் உயர்த்தாமலே, "உங்கள் அம்மாவிடம் எல்லோரும் திரும்பிச் செல்லுங்கள்" என்று கூறினாள். உடனே குழந்தைகள் வெளியே ஓடிவிட்டன.

சகோதரர் ஆண்ட்ரூ திடீரென்று தமது ஆழ்ந்த கண்களில் பாராட்டும் குறி தோன்ற அவளைப் பார்த்து" அவர்கள் உங்களைக் கண்டு பயப்படவில்லை. ஆனால் உங்களுக்குக் கீழ்ப்படிகிறார்கள்" என்றார்.

"அவர்கள் யாவரும் நல்ல குழந்தைகள்" என்றாள் அவள். அவர் இவ்விதம் நன்கு புரிந்துகொண்டதைப் பற்றி அவளுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

அவர் அமைதியுடன், "நீங்களும் நல்லவர்கள்தான். ஆனால் நீங்கள் உண்மையில் சந்தோஷமாயிருக்கிறீர்கள் என்று என்னால் எண்ண முடியவில்லை" என்று கூறினார்.

இவ்வளவு அமைதியுடன் கூறப்பட்ட இவ்வார்த்தைகள் அவள் மனதில் ஒரு வாள் போல் சென்று பாய்ந்தது. மறைவாக ஒளித்து வைக்கப்பட்டிருந்த கத்தி இன்ன இடத்தில் என்று அறிந்துகொள்ள முடியாதவாறு வந்து பாய்ந்ததைப் போலிருந்தது அவளுக்கு. அவள் உடனே அதை மறுத்துக் கூறலானாள். "இதற்கு முற்றிலும் நேரிடையாக, நான் மிகவும் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். நான் எவ்விதம் இஷ்டப்பட்டேனோ, அதேபோல் என்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டு விட்டேன். மேலும் என்னுடைய பிள்ளைகள்..."

அவர் ஆழ்ந்து ஊடுருவிப் பார்க்கும் தமது சக்தி வாய்ந்த கண்களை உயர்த்தினார். ஆனால் அவர் ஒன்றுமே கூறாமல் மிக்க கவனமாகக் கேட்டுக்கொண்டே வந்தார். அவருடைய இந்த மௌனமும், தீவிர சிரத்தையும் அவளைத் தடுமாறச்செய்தன. அவள் மேலும் தொடர்ந்து "அதாவது, ஒருவிதத்தில் தவிர மற்றபடி பரிபூரண சந்தோஷத்தோடு தானிருக்கிறேன். ஏதோஒரு விதமான அறிவை மேலும்அடையவேண்டுமென்ற தீவிர ஆவல் என்னுள் இருக்கிறது. எனக்கே அது இன்ன விதமானதென்று தெரியவில்லை" என்றாள்.

"ஒருவேளை அது மேலும் அதிகமான அறிவு வேண்டும் என்பதற்காகவல்லாமல் நீங்கள் ஏற்கனவே அறிந்துகொண்டிருப்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் இருக்கலாம் அல்லவா?" என்று கூறினார் அவர்.

எவ்வாறு அவள் தன்னைப் பற்றிய விஷயங்களை அந்த வேற்று மனிதரிடம் கூறிக் கொண்டிருக்கும்படி நேர்ந்தது? அவள் ஒரு கணம் இதைச் சிந்தித்துப் பார்த்துவிட்டு, தனது பதிலைக் கூறாமல் தள்ளி வைத்தாள். "எனக்காகவென்றுதான் உங்களை இங்கு வரும்படி அழைக்கவில்லை. என்னுடைய மூன்றாவது மகனுக்காகத்தான் வரவழைத்தேன். அவன் ஒரு அந்நிய பாஷையைக் கற்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்றாள்.

"எந்த அந்நிய பாஷை?" என அவர் வினவினார்.

"எந்த பாஷை மிகவும் சிறந்தது?" என்று கேட்டாள் அவள்.

"பிரெஞ்சு பாஷை மிகவும் அழகியது. இத்தாலிய பாஷை கவிரஸம் நிறைந்தது. ருஷிய மொழி சக்தி வாய்ந்தது. ஜெர்மன் பாஷையில் அதிக விஷயமிருக்கிறது. ஆனால் ஆங்கிலம்தான் எல்லாவற்றையும்விட அதிக பழக்கத்தில் இருக்கிறது" என்று கூறினார்.

"அப்படியானால் அவன் ஆங்கிலத்தையே கற்கட்டும்" என்று உறுதியுடன் கூறிய ஸ்ரீமதி ஊ தனதுகண்களை உயர்த்தி அவருடைய முகத்தை நோக்கி, "உங்களுடைய சம்பளம் என்ன?" என்று கேட்டாள்.

சகோதரர் ஆண்ட்ரூ சாந்தமாக, "நான் சம்பளம் வாங்கிக்கொள்வதில்லை. எனக்குப் பணத்தால் எவ்விதபயனும் கிடையாது" என்றார்.

"ஒரு பாதிரியாருக்குப் பணத்தினால் ஒருவித பயனும் இல்லையா?" என்று அவள் ஒரு கேலிப் புன்னகையுடன் கேட்டாள்.

"எனக்குப் பணத்தினால் ஒருவிதப் பிரயோசனமுமில்லை" என்றார் அழுத்தந்திருத்தமாக, அவர் தமக்கே வற்புறுத்திக் கூறிக் கொள்பவர்போல.

"நீங்கள் எங்களிடமிருந்து ஒன்றும் பெற்றுக்கொள்ளாமல் உங்களுடையதை மாத்திரம் கொடுத்தீர்களானால் அது எங்களைத் தாழ்ந்த நிலையில் வைப்பதாகும். உங்களுடைய மதத்திற்காக - அதாவது நீங்கள் செய்யும் நல்ல தொண்டுக்காகவாயினும், என்னிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ள மாட்டீர்களா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"இல்லை, மதத்தின் பொருட்டு பணம் வாங்காதிருப்பதே நல்லது" என்று கூறி ஒரு கணம் யோசித்துவிட்டு மேலும், "உங்கள் சொந்த ஊராகிய இந்த ஊரிலேயே, அப்போதைக்கப்போது எத்தனையோ காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அதாவது, அனுதைக் குழந்தைகளுக்காக ஒரு இருப்பிடத்தை ஏற்படுத்துவது போன்ற காரியங்கள். நானே சில அனுதைக் குழந்தைகளை வளர்க்கிறேன். அவர்களுக்குத் தகுந்த பெற்றோர்கள் கிடைக்கும் வரை அவர்களைக் காப்பாற்றுவேன். இம்மாதிரி காரியங்கள் ஆக வேண்டிய சமயத்தில் நான் உங்களிடம் உதவிக்காக வருகிறேன் அம்மா! அந்த உதவியே எனக்குப் பேருபகாரமாகும்" என்றார்.

"ஆனால் எங்கள் ஊரில் செய்யப்படும் இக்காரியங்களெல்லாம் உங்களுக்காக என்று ஆகாதே. உங்களுக்காக நான் செய்யக்கூடியது ஒன்றுமே இல்லையா"? என்றாள் ஸ்ரீமதி ஊ.

"இது எனக்காகச் செய்வதேயாகும்" என்றார் அவர். அவருடைய குரல் அறை முழுவதையும் நிறைத்தது. அவள் அதை எதிர்த்து ஒன்றுமே சொல்லவில்லை. வெளியே வாசலுக்குச் சென்றிருந்த இங் வந்து உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு அவர்கள் முன் போலவே உட்கார்ந்திருப்பதைக் கண்டு மீண்டும் வெளியே போய்விட்டாள்.

"நாம் எப்போது பாடத்தை ஆரம்பிக்கலாம்?" என்று ஸ்ரீமதி ஊ கேட்டாள். இந்த மனிதரை எதிர்த்துப் பேச அவளால் முடியவில்லை.

"தாங்கள் விரும்பினால் இப்போதே ஆரம்பிக்கலாம். எனக்கு எல்லா நேரமும் ஒன்றுதான்" என்று அவர் பதிலளித்தார்.

"நீங்கள் இனமும் மாலையில் வருவீர்களா? பகல் நேரத்தில் என்னுடைய மகன் இங்குள்ள தேசியப் பள்ளிக்குச் செல்கிறான்" என்றாள் அவள்.

"நீங்கள் எப்போது கூப்பிட்டாலும் நான் வருகிறேன்" என்றார் அவர்.

அவள் எழுந்து சென்று இங்கைக் கூப்பிட்டாள். "பெங் மோவை இங்கு வரச்சொல்லு" என்று கூறிவிட்டு, தோட்டத்திற்கும், புத்தக அறைக்கும் நடுவேயிருந்த வாசற்படியின் மீது நின்றாள். அவளுக்கு ஒரு கணம் தான் இரண்டு உலகங்களுக்கு நடுவே நின்றுகொண்டிருப்பதைப் போன்ற விசித்திரமான உணர்ச்சி தோன்றியது. பிறகு பாதிரியாரைத் தனியே உட்கார்ந்து இருக்கும்படியாக விட்டு விட்டு வெளி வாசலுக்குச் சென்றாள். அவர் தன்னைக் கூப்பிடுவார் என்று எதிர்பார்த்தவள்போல் கவனத்துடன் சற்று நின்றாள். ஆனால் அவளுக்கு ஒன்றும் கேட்கவில்லை. வாசலில் வளைவாகக் கட்டப்பட்டிருந்த வெளிச்சுவற்றின் மீது ஒரு குயில் தினமும் இந்நேரத்தில் அங்கு வந்து உட்காரும் வழக்கப்படி உட்கார்ந்து மெதுவாகவும் தெளிவாகவும் நான்கு முறை கூவிற்று. பிறகு அது அவளைப் பார்த்துவிட்டுப் பறந்து ஓடிவிட்டது. அவள் தான் இந்த அன்னிய மனிதரை இங்கு வரும்படி அழைத்துவிட்டதைப்பற்றி வருத்தமடைந்தாள். என்னென்ன விசித்திரமான விஷயங்களை அவர் அந்த வேற்று பாஷையில் சொல்லிக் கொடுப்பாரோ! அவள் மிகவும் அவசரப்பட்டு விட்டாள். அவள் கதவருகே நடந்துசென்று உள்ளே பார்த்தாள். அவரைத் தனியே விட்டு வந்ததை அவர் அவமரியாதையாக எண்ணி விடுவாரோ! ஆனால் அவர் தமது பெரிய தலையை மார்பின் மீது தொங்க விட்டுக்கொண்டு கண்களை மூடி உட்கார்ந்திருந்தார். தூங்குகிறாரா என்ன? இல்லை அவருடைய உதடுகள் அசைகின்றனவே! சற்று பயமடைந்தவளாய் அவள் பின்னால் திரும்பத் தான் இருப்பதற்கு நேரே இருந்த கதவின் வழியாக பெங்மோ வந்து கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டாள்.

"பெங்மோ!" என்று கூப்பிட்டாள் அவள்.

அவள் தனது தலையைத் திருப்பி அம்மனிதரைப் பார்த்தபோது அவர் தலையை உயர்த்தி, தம் கண்களைத் திறந்தார்! அவை பிரகாசத்துடன் ஒளி வீசின.

"பெங்மோ, இங்கு வா" என்று மீண்டும் அழைத்தாள் அவள்.

"இதோ வருகிறேன், அம்மா" என்று கூறிய பெங்மோ அடுத்த கணம் அங்கு வந்து விட்டான். அந்தப் பிரம்மாண்டமான உருவம் படைத்த பாதிரியாருக்கு முன்னால் அவன் மிகவும் இளையவனாகவும், சிறியவனாகவும் தோன்றினான். அவன் மிகவும் உயரம் என்று எப்போதும் எண்ணி வந்த அவள் இப்போது அவனை எவ்வளவு சிறியவனாகக் காணப்படுகிறான் என்று எண்ணி வியப்படைந்தாள். அவள் அவனுடைய கையைப் பிடித்து, புத்தக அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

"இவன்தான் என் மூன்றும் மகன் பெங்மோ" என்று அவள், சகோதரர் ஆண்ட்ரூவிடம் கூறினாள்.

"பெங்மோ" என்று அதைத் திருப்பிக் கூறினார் பாதிரியார். அவர் மரியாதையின் பொருட்டு மூன்றாவது சின்ன எஜமான் என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் அவர் சாதாரணமாக அவனுடைய பெயரை மட்டும் கூறினார். "நான்தான் ஆண்ட்ரூ என்பவர்" என்று கூறிவிட்டு அவர் உட்கார்ந்து கொண்டார். "உட்கார்ந்து கொள் பெங்மோ. உனக்கு ஒரு அன்னிய பாஷையைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று எனக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆங்கிலமாக இருக்கட்டும் என்று உனது தாயார் கூறியுள்ளார்" என்றார்.

"ஆனால் பாஷை மட்டும்தான்" என்ற நிபந்தனை போட்டாள் ஸ்ரீமதி ஊ. இப்போது பாடம் ஆரம்பிக்கப்போவதால், அவள் இவ்வாறு தன்னுடைய மகனின் மனதை இந்த மனிதரிடம் ஒப்புவிப்பதில் தான் உண்மையில் ஏதாவது தவறுசெய்து விட்டோமா என்று பயமடைந்தாள். ஏனெனில் ஒருவனுடைய மனதிற்குக் கற்பிப்பது என்பது அம்மனதையே ஆட்கொள்வதாகும்.

"ஆம், பாஷை மட்டும்தான்" என்று கூறினார் சகோதரர் ஆண்ட்ரூ. அவர் ஸ்ரீமதி ஊவின் குரலில் தொனித்த பயத்தைக் கவனித்து, அதற்கு உடனே பதிலளித்தார். "நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை அம்மா. நான் ஒரு கௌரவமுள்ள மனிதன்தான். நான் உங்களுடைய மகனின் மனத்தைப்பற்றி மிகவும் கவனமாக இருப்பேன்" என்றார்.

இந்த அன்னியருடைய சூட்சமமாகப் புரிந்துகொள்ளும் சக்தியைக் கண்டு ஸ்ரீமதி ஊ பிரமிப்படைந்தாள். இத்தகைய ரோமம் நிறைந்த சரீரத்தில் இம்மாதிரியான சூட்சமமான உணர்ச்சிகள் இருக்கக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் இதற்கு முன் ஒரு அன்னிய தேசத்தவரிடமும் பழகியதில்லை. அதாவது குழந்தைத்தனம் பொருந்திய சிறிய சகோதரி ஹோஷியாவைத் தவிர. அவள் சற்றே தனது தலையைக் குனிந்து

வணக்கம் தெரிவித்துக்கொண்டு வெளியே தோட்டத்திற்குள் சென்றாள்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பாதிரியார் புத்தக அறையின் கதவருகே தோன்றினார். அவர் பெங்மோவிடம் ஏதோ விளங்காத வார்த்தைகளைக் கூறிக்கொண்டிருந்தார். அவர் அதை நிதானமாகவும் தெளிவாகவும் உச்சரித்தார். பெங்மோ இவ்வுலகிலே வேறு எதையுமே கேளாதவன்போல் அவ்வளவு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

"அதற்குள் அவனுக்குச் சொல்லிக்கொடுத்து விட்டீர்களா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. அவள் அந்த மரங்களுக்கடியில் போட்டிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

சகோதரர் ஆண்ட்ரூ "இன்னும் அவனுக்கு இதைப் புரிந்து கொள்ளும் சக்தி வரவில்லை. நான் பேசுவதன் மூலமாகவே அவனுக்கு அந்த பாஷையைக் கற்றுக்கொடுக்கிறேன். இன்னும் சில தினங்களில் அவன் தானே இவ் வார்த்தைகளைப் பேச ஆரம்பித்து விடுவான்" என்று கூறிவிட்டு, பெங்மோவின் பக்கம் திரும்பி, "நாளைக்குப் பார்ப்போம்" என்றார். பிறகு ஸ்ரீமதி ஊவிற்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, கதவை நோக்கி மிக நிதானமாகத் தமது நீண்ட காலடிகளை எடுத்து வைத்துச் சென்றார்.

இந்தப் பேருருவம் படைத்த பாதிரியார் சென்று விட்டதும்தான் பொருள்கள் பழையபடி தமது சரியான அளவையும், உருவத்தையும் அடைந்தன.

"நல்லது மகனே!" என்று ஆரம்பித்தாள் ஸ்ரீமதி ஊ.

ஆனால் பெங்மோ இன்னும் திகைப்புற்றவனாகவே காணப்பட்டான். "இந்த ஒரு மணி நேரத்தில் அவர் எனக்கு எவ்வளவோ கற்பித்து விட்டார்" என்றான்.

"அவர் கற்பித்த வார்த்தைகளை எனக்குச் சொல்லு" என்று அவனைத் தூண்டினாள் அவள்.

பெங்மோ வாயைத் திறந்து ஏதேதோ சப்தங்களை உண்டாக்கினான்.

"இவற்றின் பொருள் என்ன?" என்று அவள் கேட்டாள். பெங்மோ இன்னும் குழப்பம் நீங்காதவனாய் தன் தலையை அசைத்துவிட்டு, "எனக்குத் தெரியாது—அவர் எனக்குச் சொல்லிக்கொடுக்கவில்லை" என்றான்.

அவள் ஒருவிதமான கண்டிப்புடன் "நாளைக்கு அவர் உனக்கு அதைச் சொல்லவேண்டும். இவ்வீட்டில் நம் ஒருவருக்கும் புரியாத வார்த்தைகளைக் கூறுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்" என்றாள்.

* * *

அந்தப் பிரம்மாண்டமான வீடு முழுவதும் அப்பெரிய அயல்நாட்டுப் பாதிரியைப்பற்றிய விஷயம் தீபோல் பரவி விட்டது. ஸ்ரீமான் ஊவின் காதிற்கும் இவ்விஷயம் எட்டிற்று. மறுநாள் நடுப்பகல் ஆவதற்குச் சற்று முன்பு அவர் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள் ஸ்ரீமதி ஊ. அவள் தையல் வேலை செய்யும்பெண் பிள்ளைக்கு குழந்தைகளுக்காகப் பூ வேலை செய்து தைக்க வேண்டிய புதிய செருப்புகளுக்காக சில்க் துணிகளைப் பொறுக்கிக் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

ஸ்ரீமான் ஊ அருகில் வந்ததும், "இந்தப் பெண் பிள்ளையை வெளியே அனுப்பு" என்று கூறினார்.

ஸ்ரீமதி ஊ அவர் ஏதோ கோபமுற்றிருக்கிறார் என்பதை உடனே அறிந்துகொண்டாள். அவள் உடனே அத் துணிகளை யெல்லாம் ஒருங்கே தூரே தள்ளிவிட்டு, "இன்னும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் திரும்பி வா" என்று அவளிடம் கூறி அனுப்பிவிட்டாள்.

அவ்வேலைக்காரி வெளியே சென்றதும், ஸ்ரீமான் ஊ உட்கார்ந்துகொண்டு, தமது புகைக் குழாயை எடுத்துப் பற்ற வைத்தார். "நீ பெங்மோவிற்கு படிப்பு கற்றுக்கொடுப்பதற்காக ஒரு அயல் நாட்டுப் பாதிரியை அமர்த்தியிருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். நீ என்னிடம் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட கூறவில்லையே" என்றார்.

ஸ்ரீமதி ஊ கனிவான குரலில், "ஆம், நான் உங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். அது என்னுடைய தவறுதான். நான் எவ்வாறோ இதற்காக உங்களைத் தொந்திரவு செய்வானேன். அதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்று எண்ணி விட்டேன். ஆயினும் பெங்மோவின் மனம் லின்யியை நாடிச் செல்லும்படி செய்யவேண்டியதும் அவசியம் என்று எண்ணினேன்" என்றாள்.

"ஏன்?" என்று வினவினார் ஸ்ரீமான் ஊ.

எச்சமயத்திலும், ஒரு பெண்ணிற்கு ஒரு மனிதனிடம் உண்மையே பேசுவதைக் காட்டிலும் நல்லது வேறு எதுவும் சிடையாது என்பதை அவள் வெகு காலமாகவே

அறிந்திருந்தாள். அவள் ஒருபோதும் ஸ்ரீமான் ஊவை ஏமாற்றியதில்லை. இப்போதும் அவள் ஏமாற்றவில்லை. "சியூமிங் அன்றைய தினம் இங்கு இருந்தபோது பெங்மோ அவளைப் பார்க்கும்படி நேர்ந்து விட்டது. அவர்களுள் ஏதோ தொடர்பு ஏற்பட்டுவிட்டது என்று நான் எண்ணவில்லை. ஆனால் இளமையின் பிடியில் பெங்மோ இருக்கும் இத்தருவாயில், அழகாகவும் இளமையாகவும் இருக்கும் எந்தப் பெண்ணோடும் இது நேரக்கூடும். ஆதலால் நான் அந்த நெருப்பை வேறு பக்கத்திலிருந்து விசிறி விட்டிருக்கிறேன். இவ்வீட்டில் ஏதேனும் தகாதது ஏற்பட்டால் மிகவும் சங்கடமாகிவிடும்" என்றாள்.

ஸ்ரீமான் ஊ எப்போதும்போல், இப்போதும் உண்மையை அறிந்து திகைப்படைந்தார். அவருடைய தலை மயிரிலூடே வியர்வை பொங்கி எழும்பியதைக் கண்ணுற்றாள் அவள். "நீ இம்மாதிரி விஷயங்களையெல்லாம் இவ்வளவு சுலபமாகக் கற்பனை செய்து கொள்ளாமல் இருந்தாயானால் நன்றாயிருக்கும். நீ எப்போதும் ஆண்களைப் பெண்களோடு சம்பந்தப்படுத்தியே பேசுகிறாய். எல்லா ஆண்களைப் பற்றியுமே மிகத்தாழ்ந்த அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய். நான் அதை நன்கு உணர்கிறேன். நீ என்னைக்கூட ஒரு கிழட்டு ஆட்டைப் போல் செய்து விட்டாய்" என்றார்.

"உங்களை அவ்விதம் எண்ணும்படிச் செய்திருந்தால் நான் உண்மையில் விரஸமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறேன். நான் அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்றாள் அவள் யாழைப் போன்ற குரலில். இதைக் கூறிவிட்டு அவள் சொல்லொணா பெருந்தன்மையுடன் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய இத்தகைய தன்மையே, அவள் அவ்வறையில் இல்லாமல் எங்கோ வெகு தொலைவில் இருப்பதுபோல் அவரிடமிருந்து அவளைப் பிரித்து வைத்தது. அவள் நன்றாக இதை அறிந்து கொண்டிருந்தாள். எப்போதும், எதிர்ப்பைக் காட்டுவதற்குப் பதில் தணிந்து போவதாகக் காட்டுவதே மிகவும் சக்தி வாய்ந்தது என்பதையும், ஒரு தவறை உடனே ஒத்துக் கொள்வது மனஸ்தாபத்திற்கே இடமில்லாமல் செய்து விடும் என்பதையும் அவள் அனுபவத்தில் கண்டிருந்தாள்.

ஆனால் அவர் இன்னும் மனம் புண்பட்டவராகவே காணப்பட்டார். அவன் மனதுள் தான் அம்மாதிரி அவரைப் புண்படுத்தும்படி அவ்வளவு கேவலமாக நடந்து கொண்டதைப்பற்றி அவமானமடைந்தாள். பிறகு அவள் "நீங்கள்

இப்போது பார்ப்பதற்கு எப்படி இருக்கிறீர்கள் என்பதை அறிவீர்களா? நீங்கள் இவ்வளவு அழகாயிருப்பதை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. சில நாட்களுக்கு முன்பு பார்த்ததற்கு இப்போது பத்து வயது குறைந்தவராகக் காணப்படுகிறீர்கள்" என்றாள், தன்னுடைய வசிகரமான புன்னகையுடன்.

அவருடைய முகம் சிவந்தது. அவர் சிரித்து விட்டு, "நான் அப்படியா இருக்கிறேன்? உண்மையாகவா...?" என்று கேட்டார்.

அவளுடைய கண்களில் தோன்றிய அக் கனிவைக் கண்ணுற்ற அவர், குறுக்கேயிருந்த மேஜையின் மீது அவள் பக்கமாக சாய்ந்து, "ஏய்லியன், இப்போதும் உன்னைப்போல் ஒருவரும் கிடையாது, உனக்குப் பிறகு எந்தப் பெண்ணும் எனக்கு மகிழ்ச்சியூட்டக் கூடியவளாக இல்லை. நீ வற்புறுத்தினாய் என்பதற்காகத்தான் நான் இதைச் செய்தேன்" என்று கூறினார்.

"நான் அதை அறிவேன். அதற்காக நான் உங்களுக்கு மிகவும் நன்றி பாராட்டுகிறேன். நம்முடைய வாழ்க்கையில் எப்போதும் நீங்கள் நான் விரும்பியதையே செய்திருக்கிறீர்கள். நான் இப்போது மிக அதிகமான ஒன்றைக் கேட்ட போதும் நீங்கள் அதையும் செய்து விட்டீர்கள்" என்று கூறினாள்.

உணர்ச்சியால் அவருடைய கண்களில் நீர் நிரம்பியது. "நான் உனக்காக ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு, தமது ஜேபியில் கையை விட்டுக் கை நிறைய மெல்லிய காகிதங்களை வெளியே எடுத்து அவற்றைப் பிரித்தார். அதற்குள் தலையில் அணியும் இரண்டு நகைகள் இருந்தன. பட்டுப் பூச்சியின் உருவத்தில் செய்யப்பட்டிருந்த அவற்றில் மரகதம், முத்து, தங்கம் இவற்றால் புஷ்பங்கள் மிக அழகாகச் செய்யப்பட்டிருந்தன. "நான் நேற்று இவைகளைப் பார்த்தேன். அவை உடனே எனக்கு உன்னைத்தான் நினைப் பூட்டின. ஆனால் நான் எப்போதுமே உன்னைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டு இருக்கிறேன்" என்று கூறி வியர்வையால் நனைந்திருந்த தமது நெற்றியைத் துடைத்து விட்டுக்கொண்டு, "இரவிலும் கூடத்தான்" என்று அவளைப் பாராமல் கூறினார்.

இதைக் கேட்டு அவள் பெரும் சிந்தனையிலாழ்ந்தாள். "நீங்கள் இரவில் என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அது சியூமிங்கிற்கு நியாயமாகாது. பார்க்கப் போனால், இனி அவளுடைய வாழ்க்கை முழுவதும் உங்கள் கையில்தானே இருக்கிறது" என்றாள்.

அவர் இன்னமும் சோர்வுற்றவராகவே காணப்பட்டார். "ஏன் அவளை உங்களுக்குப் பிடிக்க வில்லையா?" என்று கேட்டாள் அவள்.

"ஒ, அவளைப் பிடித்துத்தானிருக்கிறது" என்று கூறினார் அவர் சற்று அலட்சியமான குரலில். பிறகு, "ஆனால் நீ இப்போதெல்லாம் என்னிடமிருந்து விலகியே இருக்கிறாயே. நாம் நம்முடைய மிகுதி நாட்களை இது போலவேதான் தனியாகக் கழித்தாக வேண்டுமா? என்னுடைய உயிருக் குயிராய் என்னுடைய வாழ்க்கையில் எப்போதும் இருந்து வந்த நீ..." என்று கூறியபோது அவருடைய அடி உதடு முழுவதும் துடித்தது.

இதனால் மனம் மிக நெகிழ்ச்சியடைந்த ஸ்ரீமதி ஊ தன்னை யறியாமல் எழுந்திருந்து அவரிடம் சென்றாள். அவர் தமது கைகளில் அவளைப் பிடித்துக்கொண்டு, அவளுடைய சரீரத்தின்மீது தமது முகத்தை வைத்து அழுத்தினார். அவளுள்ளிருந்த ஏதோ ஒன்று நடுங்கியது. அவள் சட்டென்று ஜாக்கிரதையானாள். அவரிடம் அல்ல, அவளிட மிருந்தேதான். அவள் இதுவரை செய்து வந்த எல்லாக் காரியங்களையும் இந்த ஒரு க்ஷணத்து பலஹீனம் தோற்கடித்து விடுமோ?

"நீ, என்னுடைய முத்து, மரகதம். என்னுடைய கண்ணின் ஒளி" என்று அவர் வாய்க்குள் முணுமுணுத்தார்.

அவள் மெல்ல அவருடைய பிடியிலிருந்து தன்னை விடு வித்துக் கொண்டாள். அவளுடைய கைகள் மட்டும் அவரிடம் இருந்தன. "நீங்கள் முன்னெப்போதையும் விட இனி அதிக சந்தோஷமாக இருக்கப் போகிறீர்கள்" என்று அவள் அவருக்கு உறுதி கூறினாள்.

"நீ என்னிடம் திரும்ப வருவாயா?" என்று கேட்டார் அவர் வற்புறுத்தலோடு.

"புதிய வழிகளில் வருவேன்" என்று கூறினாள் அவள். அந்த ஒருக்கணம் சென்று விட்டதால் இப்போது அவளால் அவருடைய முகத்தைப் பார்க்க முடிந்தது. சற்றே இறுமாப்புடன் காணப்பட்ட அவருடைய உதடுகளைக் காணவும் தன் உடல் ஒரு குளிர்ந்த சலவைக்கல் துண்டமாக மாறி

விட்டதைப்போன்ற உணர்வை அடைந்தாள். அவள் தன்னுடைய கைகளையும் விடுவித்துக் கொண்டாள். அவள், "பெங்மோவைப் பொருத்தவரை, நீங்கள் அதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். அந்தப் புதிய வாத்தியார் எதற் கென்றால், லின்யி அவன் ஆங்கிலம் பேசவேண்டுமென்று விரும்புகிறாள் என்று தெரிகிறது. இல்லாவிடில் அவன் பட்டிக் காட்டான் என்று கூறிவிடுவாள். ஒரு மாதத்திற்குள் அவன் லின்யியை மணப்பதற்குத் தயாராகிருவான், இல்லையா என்று பாருங்கள்!" என்றாள்.

ஸ்ரீமான் ஹூ நகைத்தவாறு, "நீதான் எப்போதும் ஏதாவது சதி செய்து கொண்டிருப்பவளாயிற்றே. மனிதர் களுடைய வாழ்க்கையை யுக்தியாலும், புத்தியாலும் வகுப்ப வளாயிற்றே!" என்றார். அவர் மீண்டும் தமது குதூகலமான நிலையை அடைந்தவராய் எழுந்து நகைத்துக்கொண்டே, தமது தலையை ஆட்டியவாறு அங்கிருந்து சென்றுவிட்டார்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு உள்ளே வந்த இங், ஸ்ரீமதி ஹூ தன்னுடைய மௌன நிலையில் உட்கார்ந்து கொண்டிருப் பதைக் கண்டாள். அவள் இங்கைப் பார்த்ததும் தனது தலையை உயர்த்தினாள்.

"இங், என்னுடைய வாசனை சோப்புக்களிலிருந்து சிலவற்றைக் கொண்டுபோய் சியூமிங்கிற்குக் கொடுத்து, அதைத் தவிர வேறு எதையும் உபயோகிக்க வேண்டா மென்று சொல்லு" என்று கூறினாள்.

இங் அதிர்ச்சி அடைந்தவளாய் பேசாமல் இருந்தாள்.

"என்ன அந்த மாதிரி பார்க்காதே. நீ இதைவிட அதிகமாகச் செய்யவேண்டி யிருக்கிறது. என்னுடைய சந்தன சீப்புக்களிலிருந்து ஒன்றை அவளுக்குத் தலைவாரிக் கொள் வதற்காக கொண்டு போய் கொடு. என்னுடைய சந்தனத் துகள்களை அவளுடைய உள்ளாடைகளில் போட்டு வை" என்று கூறினாள் ஸ்ரீமதி ஹூ.

"நீங்கள் சொல்வதையெல்லாம் செய்கிறேன் அம்மா!" என்றாள் இங் மனக்கசப்புடன்.

இந்தச் சமயத்தில்தான் ஸ்ரீமதி ஹூ, ஸ்ரீமான் ஹூ, தமது புகைக் குழாயை அங்கு விட்டுச் சென்று விட்டதைப் பார்த்தாள். அவர் வெளியே செல்லுகையில் அங்கு ஒரு புறத்திலுள்ள மேஜையின் மீது அதை வைத்துச் சென்றிருந் தார். அவள் உடனே அதை அவர் வேண்டுமென்றே, தாம்

மீண்டும் திரும்பி வரப்போவதை அறிவிப்பதற்காக அங்கு விட்டுச் சென்றிருந்தார் என்பதை அறிந்து கொண்டாள். இம்மாதிரி புருஷன் தன்னுடைய புகைக் குழாயை விட்டுச் செல்வது அவர்கள் இருவருக்குமிடையே அறிவிப்பாக இருந்து வந்த ஒரு பழைய காலத்து வழக்கம்.

அவள் இங்கிற்கு அதைச் சுட்டிக்காட்டி தனது இனிய குரலில் கடுமை தொனிக்க, "இங், அவர் புகைக் குழாயை மறந்து விட்டார் போலிருக்கிறது. அதைக் கொண்டுபோய் அவரிடம் கொடு" என்றாள்.

இங் வாய் திறவாமல் அக்குழாயை எடுத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

* * *

ஸ்ரீமதி ஹூ சில்க் துணிகளைப் பொருத்தம் பார்த்து எடுத்துக் கொடுத்து முடிவதற்கும், அறைக்குள் வர்ணங்களைப் பார்க்க முடியாதபடி அவ்வளவு இருள் பரவுவதற்கும் சரியாக இருந்தது. அவள் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைக்கும்படி சொல்லிக் கொண்டிருக்கையில், பெங்மோ அந்தி நேரத்தின் மங்கிய ஒளியில் உள்ளே வந்தான். அவன் தனது பள்ளி உடைகளைக் களைந்துவிட்டு வெளுத்த வர்ணத்தில் நீண்ட சில்க் அங்கிகளை அணிந்திருந்தான். அதே வர்ணமான பூவேலைகள், அத்துணிகளில் செய்யப்பட்டிருந்தன. அவன் தனது குட்டையான மயிர்களைத் தனது அகன்ற நெற்றியிலிருந்து பின்புறமாக வாரிவிட்டிருந்தான். முதலில் கேஷமலாபம் விசாரித்த பிறகு, ஸ்ரீமதி ஹூ அவனுடைய சுந்தரமான தோற்றத்தைப் புகழ்ந்தாள்.

"அந்தக் கால் சட்டைகளைவிட இந்த விதமான ஆடைகள் நன்றாக இருக்கின்றன" என்று கூறினாள் அவள். இதைக் கூறியவாறே அவள் அவனுடைய புருவத்தைக் கவனித்துப் பார்த்தாள். அவை அழகாகவே இருந்தபோதிலும், அதைக் கொண்டு அதன் பின்னால் அது மறைத்து வைத்திருந்த மூளையின் தன்மை இன்னதென்று ஒருவரால் கூறி விட முடியாது. பெங்மோ காளைப் பருவத்தில் இப்போதுதான் அடியெடுத்து வைக்க ஆரம்பித்திருந்தான்.

"நேற்றிரவு கற்றுக் கொண்ட வார்த்தைகள் உனக்கு இப்போது நினைவிருக்கின்றனவா?" என்று அவள் புன்னகை யுடன் அவனைக் கேட்டாள். அவன் அயல் நாட்டுச் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். த்ஸேமோவும் அவனும் அவைகளை அதிகமாக உபயோகித்தனர். சுருள்

கருளாக எழுந்த அப்புகை எவ்விதமோ அவனுக்கு மிகவும் பொருத்தமாக இருந்ததுபோல் தோன்றிற்று. அவன் உட் காராமல், அமைதியின்றி அவ்வறைக்குள் இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தான். அவன் நடப்பதை நிறுத்தி விட்டு, அந்த அன்னிய மொழியின் வார்த்தைகளைத் தெளி வாக உச்சரித்தான்.

"அவைகளின் அர்த்தம் இப்போதாவது உனக்குப் புரிகிறதா?" என்று கேட்டாள் அவள்.

அவன் தலையை யாட்டி, "இல்லை, இன்று அவற்றின் பொருள் என்ன என்று அவரைக் கேட்க வேண்டும்" என்றான்.

பிறகு அவன் சற்று கூர்ந்து கவனித்து விட்டு, "இதோ அவர் வருகிறார்" என்று கூறினான்.

அந்தக் கற்களின் மீது தோல் பூட்ஸ் அணிந்த அந்த சக்தி நிறைந்த காலடிகளின் ஓசை அவர்களுக்குக் கேட்டது. பிறகு சகோதரர் ஆண்ட்ரூ வாயிற் காப்போன் தம்மை அழைத்து வர, அங்கே கதவிற்கு முன்னால் வந்தார். ஸ்ரீமதி ஊ எழுந்திருப்பதைக் கண்ட வாயிற் காப்போன் திரும்பிச் சென்று விட்டான்.

"நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ சாதாரணமாக உபசரிக்கும் முறையில்.

"நான் நடுப்பகல் மட்டும் ஒருவேளை சாப்பிடுவது வழக்கம்" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ கூச்சத்துடன் புன்னகை செய்தவாறு. அவர் மீண்டும் அங்கு வந்து நின்றதும், அப்பேருருவம் படைத்த அம் மனிதரின் முன் னிலையில், அவ்வறை, பெங்மோ, ஏன் தானும் கூட, எல்லோரும் குறுகிச் சிறியவர்களாய் விட்டதைப் போல் ஸ்ரீமதி ஊவிற்கு உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அவரோ தமது உருவத்தையோ அல்லது தம்மைப் பற்றியோ உணராத வராகக் காணப்பட்டார்.

அவர்கள் உட்கார்ந்து கொண்டதும் ஸ்ரீமதி ஊ, "நேற்றிரவு நீங்கள் கற்பித்த வார்த்தைகளை பெங்மோ திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறான். ஆனால் அவற்றின் அர்த்தம் என்ன என்று எங்களுக்குத் தெரிய வில்லை" என்று மொழிந்தாள்.

"ஆங்கிலேயர் ஒருவர் கூறியுள்ள வார்த்தைகளை நான் பெங்மோவிற்குக் கற்றுக் கொடுத்தேன். அதாவது அவர் இங்கிலாந்தில் பிறந்தார், அங்கேயே வாழ்ந்து இறந்தும் போனார். ஆனால் அவருடைய ஆத்மா எங்கெங்கும் திரிந்து கொண்டிருந்தது" என்று கூறினார் சகோதரர் ஆண்ட்ரூ.

அவர் சிந்திப்பவர் போல் சற்று நேரம் பேசாதிருந்து விட்டுப் பின்னர் அவ் வார்த்தைகளை வசன நடையில் கூறுவது போல் மொழிபெயர்த்துக் கூறினார்.

"காலைக் கதிரவனின் ஒளி இமக்கிலிருந்து வருவதால்
அத் திசையிலிருந்து மட்டும்தான் ஒளி வருகிறது
என்று எண்ணினாயோ!
கதிரவன் இதோ, மெல்ல, மெல்ல மேலே
ஏறுகிறான்!
இப்போது மேற்கே பார்! நிலம் ஒளி பெற்று
விட்டது."

ஸ்ரீமதி ஊவும் பெங்மோவும், காதால் அதன் ஒவ்வொரு வார்த்தையையும் தெள்ளிய நீரைப் பருகுகிறவர்களைப்போல் பருகினார்கள்.

"இது மத விஷயமில்லையா?" என்று கேட்டாள் சந்தே கத்தோடு.

"இது கவிதை" என்றான் பெங்மோ.

சகோதரர் ஆண்ட்ரூ அவளைப் பார்த்துப் புன்னகை யுடன், "எனக்கு முதல் முதல் கற்பிக்கப்பட்ட ஆங்கில வார்த்தைகளையே நான் உனக்குக் கற்றுக் கொடுத்தேன். நான் அப்போது சிறு பையனாக இத்தாலியில் இருந்த போது எனக்கும் முதலில் அவற்றில் ஒன்றும் விளங்கவில்லை" என்றார்.

"அப்படியானால் இந்த சூரியன் உலகம் முழுவதும் பிரகா சிக்கிறது அல்லவா?" என்றாள் ஸ்ரீமதி ஊ சிந்தனையுடன். பிறகு அவள் சிரித்து விட்டு, "சகோதரர் ஆண்ட்ரூ நீங்கள் என்னைப் பார்த்து நகைக்கலாம். நான் இதை விட அதிகம் அறிந்தவளாக இருந்தபோதிலும், இந்த சூரியன் எங்களுக்கு மட்டுமே உரியது என்ற உணர்ச்சி எப்போதுமே எனக்கு இருப்பதுண்டு" என்றாள்.

• "இந்த சூரியன் எல்லோருக்கும் சொந்தமானதுதான். அதன் ஒளியை நாம் ஒருவருக்கு மற்றொருவர் பிரதிபலித்துக்

காட்டுகிறேம். காலையில் கிழக்கில் உதிக்கிறது. மாலையில் மேற்கில் மறைகிறது" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ.

அவ்வறையின் நான்கு சுவர்களும் மறைந்து போவது போல் தோன்றின. அவள் தனது வாழ்க்கை முழுவதிலும் கழித்த அவ் வீட்டின் வெளிச் சுவர்கள் யாவும் மறைந்தன. அவளுக்கு ஒரு கணம் தெளிவான காட்சி ஒன்று புலப்பட்டது. இதே வானுலகத்திற்கடியில் இவ்வுலகம் முழுவதிலும் எங்கும் நிலப்பரப்புகளும், ஜனங்களும் நிறைந்திருக்கிறார்கள். ஏழு கடல்களிலும் ஒரே மாதிரியாகத்தான் அலைகள் எழும்பி விழுந்து கொண்டிருக்கின்றன.

அவள் சகோதரர் ஆண்ட்ரூ போதிக்கப் போகும் அடுத்த பாடத்தையும் இருந்து கேட்க வேண்டுமென்று ஆவலுற்றாள். ஆனால் தான் இருந்தால் பெங்மோவிற்குக் கூச்சமாக இருக்கும் என்பதை உணர்ந்தவளாய் அவள் எழுந்து, "என்னுடைய மகனுக்குக் கற்பியுங்கள்" என்று கூறி விட்டு வெளியே சென்றாள்.

* * *

"லின்யி, இப்போது பெங்மோ ஆங்கிலம் கற்றுக்கொண்டிருப்பதைப் பற்றி என்ன சொல்கிறாள்?" என்று ஸ்ரீமதி ஹு கேட்டாள் ஸ்ரீமதி கேங்கிடம். அவளுடைய தோழி ஒரு நாள் மாலை, நேரம் கழித்து, வீட்டு வேலைகளே யெல்லாம் முடித்துக் கொண்டு, அவளைப் பார்ப்பதற்காக வந்திருந்தாள். இந்த இரு பெண்மணிகளுடைய சிநேகிதத்திலும் இது ஒன்று புதுமையாக இருந்தது. அதாவது வருஷத்தில் ஒரு சில தடவைகளே ஸ்ரீமதி ஹு, ஸ்ரீமதி கேங்கைப் பார்க்கச் செல்லுவாள். ஆனால் ஸ்ரீமதி கேங்கோ வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறைகள் ஸ்ரீமதி ஹுவைப் பார்க்க வந்து விடுவாள். இருவருக்குமே இது சகஜமாகத்தான் தோன்றியது.

ஸ்ரீமதி கேங், "எனக்கே என் பெண் செய்வது அதிசயமாக இருக்கிறது. அவள் பெங்மோவுடன் பல முறைகள் பேசிப் பார்த்து விட்டு அவளுக்குப் பிடித்தால்தான் கல்யாணம் செய்து கொள்ளுவாளாம். அதற்குள் அவனுக்கு ஆங்கிலம் நன்றாகப் பேச வந்து விட வேண்டுமாம். அவனைப் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு வெட்கமற்றவளாய் சொல்கிறாள் அவள்! எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது. நான் சிறு பெண்ணாக இருந்தபோது, ஒரு புது வருடத் தினத்தன்று, ஸ்ரீமான் கேங் அவருடைய தகப்பனாரோடு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். நான் ஒரு குறும்புக்கார வேலைக்காரியின்

பேச்சைக் கேட்டு, வலை போட்டிருந்த ஜன்னல் வழியாக மெல்ல எட்டி அவரைப் பார்த்தேன். இதை அவரிடம் கூறுவதற்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை பிறந்த பிறகுதான் எனக்குத் தைரியம் வந்தது. அதுவரை அதைச் செய்ததால் ஏற்பட்ட வெட்கம் நான் ஏதோ குற்றம் செய்து விட்டது போல் என்னை அழுத்திக் கொண்டே இருந்தது" என்றாள்.

ஸ்ரீமதி ஹு கல கலவென்று நகைத்து விட்டு, "அந்த ஒரு பார்வையிலேயே சந்தேகமில்லாமல் சர்வ நாசமும் ஏற்பட்டு விட்டது அல்லவா!" என்றாள்.

"அந்த ஒரு கணத்திலேயே நான் என் மனம் முழுவதையும் அவருக்கே கொடுத்து விட்டேன்" என்றாள் ஸ்ரீமதி கேங் இப்பொழுது வெட்கம் சிறிதுமில்லாமல்.

ஸ்ரீமதி ஹு மேலும் தொடர்ந்து, "ஆ! அந்தக் காலம் அது! அவைகளுக்காகத் தயாராய் இருப்பது எவ்வளவு புத்தி சாலித்தனம் என்று எண்ணிப் பார். இளம் வயதை உடையவர்களின் மனம், எரிவதற்குத் தயாராய் இருக்கும் நெருப்பைப் போன்றிருக்கிறது. விறகும் அதைத் தூண்டி விடுவதற்கு வேண்டிய சாதனமும் இருக்கிறது. ஆயினும், நாம் எப்படி இவ்விருவர்களையும் ஒரு முறையோ அல்லது பன்முறையோ சந்திக்கும்படி ஏற்பாடு செய்வது?" என்றாள்.

அக் குளிர்ந்த மாலை நேரத்தில் அவ்விரு தோழிகளும் அங்கே அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு அருகே இருந்த மேஜையின் மீது இங் நீர் முலாம் பழத்தைக் கீறி அறுத்து வைத்திருந்தாள். அதன் மத்தியில் பளபளப்பான கரிய விதைகளோடு காணப்பட்ட மஞ்சள் நிற பாகம் ரசம் நிறைந்திருந்தது. ஸ்ரீமதி ஹு அப் பாகத்தைத் தன் தோழியின் அருகே நகர்த்தி வைத்தாள்.

அவள் கனிவுடன், "கொஞ்சம் முலாம் பழம் சாப்பிடு. இன்று நீ மிகவும் சோர்ந்து காணப்படுகிறாயே. இதைச் சாப்பிட்டால் கொஞ்சம் தெம்பாக இருக்கும்" என்று கூறினாள்.

இந்த அன்பு நிறைந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஸ்ரீமதி கேங்கின் உருண்டையான முகம் குழப்பத்தால் கலங்கியது. அவள் தனது சட்டையிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்து முகத்தை மூடிக் கொண்டு விம்ம ஆரம்பித்தாள். அவர்கள் தனியே இருந்ததால் அவள் தான் அழுவதை மறைக்கவில்லை.

ஸ்ரீமதி ஊ ஆச்சரியத்துடன், "மேய்ச்சன், இது என்ன! எதற்காக அழுகின்றாய் என்று எனக்குச் சொல்லு" என்று கேட்டாள்.

அவள் தனது கையால் அக் கைக்குட்டையை அவளுடைய முகத்திலிருந்து பிடித்து இழுத்தாள். இப் பொழுது கேங்கிற்கு அழுகையும் சிரிப்பும் ஒன்றுகச் சேர்ந்து வந்தன. அவள் தடுமாற்றத்துடன், "எனக்கு மிகவும் அவமானமாக இருக்கிறது. நான் எவ்வாறு உனக்குச் சொல்லுவேன், ஏய்லியன், நீயாகவே ஊகித்துக் கொள்ள வேண்டியதுதான்" என்றாள்.

"நீ இப்போது..." என்று ஆரம்பித்தாள் தீவிரமாக ஸ்ரீமதி ஊ.

"ஆம், அதுவேதான்" என்றாள் ஸ்ரீமதி கேங். அவளுடைய குதூகலம் தாண்டவமாடும் சிறிய பிரகாசமான விழிகளில் சோகம் நிரம்பி இருந்தது.

"உனக்கா, இந்த வயதிலா, அதுவும் ஏற்கெனவே இவ்வளவு குழந்தைகள் இருக்கையில்!" என்று கூவினாள் ஸ்ரீமதி ஊ.

"கணவனுடைய செருப்பு படுக்கையருகில் இருந்தால் கூட கர்ப்பம் தரித்துவிடும் ரகத்தைச் சேர்ந்த பெண்களில் ஒருத்தி நான்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

ஸ்ரீமதி ஊ ஒன்றும் பதில் கூறவில்லை. அவளால் அவளுடைய சிநேகிதியிடம் தான் என்ன நினைத்தாள் என்பதையோ அல்லது அவளைத் தன்னுடைய உதாரணத்தைப் பின்பற்றுத தற்காகக் குறைகூறவோ முடியவில்லை.

ஸ்ரீமதி கேங் கண்ணீரால் கறைபடிந்த அப் பெரிய கைக் குட்டையை முறுக்கியவாறு, "இதில் வேடிக்கை என்ன வென்றால் லின்யியைத் தவிர மற்றவர்களை நான் பொருட் படுத்த வேண்டியதில்லை. லின்யியால்தான் எனக்குப் பெரிய தொந்தரவு. அவள் எப்பொழுதும் என்னைப் பழித்துக் கொண்டே இருக்கிறாள். நான் மிகவும் பருமனாக இருக்கிறேனும். நான் என்னுடைய தலையை வேறு விதமாக வாரிக்கொள்ள வேண்டுமாம். எனக்குப் படிக்கத் தெரியாதிருப்பது பெரிய அவமானமாம். வீடு அசுத்தமாக இருக்கிறதாம். வீடு நிறைய குழந்தைகள் இருக்கின்றவாம். லின்யி என்னுடன் இருந்து, அவருக்கு இது தெரிந்துவிட்டால்..." என்றாள்.

"லின்யி இங்கு சீக்கிரம் வந்து சேரவேண்டியதுதான்" என்றாள் ஸ்ரீமதி ஊ. அதே சமயம் தன் மனதிற்குள் தன் சொந்த தாயாரிடமே இவ்விதம் குற்றம் கண்டுபிடிக்கும் இத்தகைய முரட்டுத்தனமும் பிடிவாதமும் கொண்ட பெண்ணைத் தன் வீட்டிற்குள் அழைத்துக்கொள்வது நல்லது தானா? என்றும் கேட்டுக் கொண்டாள்.

ஸ்ரீமதி கேங் ஆவலுடன், "நீ அவளுக்கு நல்ல பாடம் கற்பிக்கலாம். உன்னிடம் அவளுக்குப் பயம் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆனால் அவள் என்னிடமோ அவளுடைய தகப்பனாரிடமோ சிறிதும் பயப்படுவது கிடையாது." அந்தக் கண்ணீருக்கிடையேயும் அவளுக்குத் தன் கணவனைப் பற்றிய ஞாபகம் வந்ததும் சிரிப்பு வந்துவிட்டது. அவள் சிரித்துவிட்டுத் தன் கண்களை துடைத்துவிட்டுக் கொண்டு, "பாவம், அந்த மனிதர்! இன்று காலையில் இதை அவருக்குச் சொன்னதும், அவர் தன் இரு கரங்களாலும் மயிரைப் பிய்த்துக்கொண்டு, 'நான் வேறு ஒரு ஊருக்குச் சென்று, தனியே இருந்துகொண்டு ஒரு தொழிலை நடத்த வேண்டியதுதான்!' என்று கூறினார்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ இதற்குப் பதில் ஒன்றும் கூறவில்லை. அதை அவள் சிநேகிதி தவறாக எடுத்துக்கொண்டவள் போல் அவளைப் பார்த்து பாதி குத்தலாகவும் பாதி வருத்தமாகவும், "ஒரு விதத்தில் நீ அதிர்ஷ்டம் செய்தவள், ஏய்லியன்! ஏனெனில் உனக்கு உன் கணவன்மீது அன்பு கிடையாது" என்றாள்.

இவ் வார்த்தைகள் ஸ்ரீமதி ஊவின் இருதயத்தைப் பிளந்தன. நெடு நாளைய சிநேகிதியான அவளிடமிருந்து இத்தகைய குத்தலான மொழிகளைக் கேட்டு அவளுக்கு வழக்கமில்லை.

"ஒரு வேளை வித்தியாசமானது அன்பின் தரத்தில் இல்லாமல் தன்னடக்கத்தில் இருக்கலாம்" என்று பதிலளித்த அவள், அந்தப் பொன் நிறமான மூலாம் பழத்தின் ஒரு துண்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு," என்னைப் பார்த்து மற்றவர்கள் சிரிப்பதை நான் ஒரு பொழுதும் விரும்பாதிருப்பதும் காரணமாக இருக்கலாம். அதுவும் இல்லாமல் நீ என்னைவிட அதிக பலமுள்ளவளாய் இருக்கின்றாய்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"என்னுடன் சண்டை பிடிக்காதே" என்று சமாதானம் செய்யும் முறையில் கூறிய ஸ்ரீமதி கேங் தன்னுடைய தடித்த

சூடான கைகளை, குறுகிய தண்ணென்றிருந்த ஸ்ரீமதி ஊவின் கைகளின்மீது வைத்தாள். "நம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான கஷ்டம்தான். ஏய்லியன், எல்லாப் பெண்களுக்கும் இது உண்டு என்று நான் நினைக்கின்றேன். நீ அதை ஒரு விதமாக நிவர்த்தி செய்துகொண்டால், நான் ஒரு மாதிரி செய்துகொள்கிறேன்" என்றாள்.

"உன்னுடையது எவ்வாறு நிவர்த்தி செய்ததாகும்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. அவ்விதம் பேசும்பொழுது, அவளுக்கு அவளுடைய சிநேகிதியிடம் இருந்த உறுதியான அன்பு அவளுடைய உள்ளத்தைக் கவியச் செய்தது. அவள் தன்னுடைய மெல்லிய விரல்களால் அவ்வன்பு பொருந்திய பருத்த கையைச் சுற்றிப் பிடித்துக்கொண்டாள்.

ஸ்ரீமதி கேங், "நீ செய்ததுபோல் செய்வதற்கு—என் மனது பொறுக்காது. ஒரு வேளை நீ செய்வது அறிவுடைய செயலாக இருக்கலாம். ஆனால் என்னால் அறிவுள்ளவளாக இருக்க முடியாது—அதாவது என்னுடைய கணவருக்கும் எனக்கும் மத்தியில் வேறு யாராவது வருவதை என்னால் சகிக்க முடியாது". என்று பதில் கூறினாள்.

அந்தக் கணத்தில், ஸ்ரீமதி ஊவின் இருதயம் சொல்லொணா வேதனையால் பிழிந்தெடுக்கப்பட்டது என்பதை யாரே அறிய முடியும்! அவர்களுடைய கைகள் ஒன்று சேர்ந்திருந்த போதிலும் அவளுக்குத் தான் திடீரென்று மிகவும் தனிமையில் விடப்பட்டு விட்டதைப்போல் உணர்ச்சி தோன்றி அதிக பீதியை உண்டாக்கிற்று. அவள் பனியும் குளிரும் சூழ்ந்திருந்த ஒரு மலைச் சிகரத்திலே, கைவிடப்பட்டு தன்னந் தனியளாக நின்றுகொண்டிருந்தாள். அவள் உரக்க கத்தி யழ விரும்பினாள். ஆனால் அவளுடைய குரல் தொண்டையிலிருந்து எழ மறுத்தது. அந்தி நேரத்தில் மங்கிய ஒளி அவளுடைய உணர்ச்சியைக் காட்டிக் கொடுக்கவில்லை. சிந்தனையில் மூழ்கி இருந்த ஸ்ரீமதி கேங் அவளுடைய வெளிறிய முகத்தையோ, பீதியினால் விறைத்துக் கட்டை போலான அவளது தேகத்தையோ கவனிக்கவில்லை.

இந்த விசித்திரமான பீதியினிடையில், ஸ்ரீமதி ஊ சகோதரர் ஆண்ட்ரூவைக் கண்டாள். அவளுடைய தனிமையில் அப்பாதிரியினுடைய நெடிய உருவம் தோன்றியது. அவருடன் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதில் அப்பீதி கலைந்தது.

அவள் நன்றியுடன், "சகோதரர் ஆண்ட்ரூ, உள்ளே வாருங்கள். நான் என் மகனுக்குச் சொல்லியனுப்புகின்றேன்" என்றாள்.

அவள் அவ்வாறு பேசிக்கொண்டே எழுந்தபொழுது ஸ்ரீமதி கேங்கின் கையை விட்டுவிட்டு, "மேய்ச்சன், இவர் தான் பெங்மோவின் உபாத்தியாயர். சகோதரர் ஆண்ட்ரூ, இவள் தான் என்னுடைய சிநேகிதி. எனக்குச் சகோதரியும் ஆகவேண்டும்" என்றாள்.

சகோதரர் ஆண்ட்ரூ ஸ்ரீமதி கேங்கைப் பாராமலே, வணக்கம் தெரிவித்தார். பின் அவர் புத்தக அறைக்குள் சென்றார். அங்கு மெழுகுவர்த்தியின் ஒளியில், அவர் உட்கார்ந்து தம்முடைய சட்டைப்பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீமதி கேங் ரகசியமான குரலில், "அப்பா! என்ன ராட்சத உருவம்! உனக்கு அவரிடம் பயம் உண்டாக வில்லையா?" என்று கேட்டாள்.

"மிகவும் நல்ல ராட்சதர்" என்று பதிலளித்த ஸ்ரீமதி ஊ "வா, பெங்மோ இன்னும் ஒரு நிமிஷத்தில் இங்கு வந்து விடுவான். நாம் அவனைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கின்றோம் என்பது அவனுக்குத் தெரியக்கூடாது. நாம் உள்ளே போவோமா?" எனக் கேட்டாள்.

"நான் வீட்டிற்குப் போகவேண்டும். ஆனால் நான் போகு முன், லின்யி பெங்மோவுடன் பேசலாமா கூடாதா என்பதைச் சொல்லிவிடு" என்றாள் ஸ்ரீமதி கேங்.

ஸ்ரீமதி ஊ, "நான் அவனைக் கேட்டுப் பார்க்கிறேன், அவன் விரும்பினால் நான் அவனை உங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வருகிறேன் முதலில். பிறகு நீ ஒரு நாளைக்கு அவனை அழைத்துக்கொண்டு இங்கு வரலாம். இரண்டு சந்திப்புகளிலேயே அவர்கள் தங்கள் மனதைத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்" என்று கூறினாள்.

"எப்போதும் நீ சொல்வதுதான் சரி" என்று கூறிய ஸ்ரீமதி கேங் தனது சிநேகிதியின் கையைப் பிடித்து அழுத்தி விட்டு, விடைபெற்றுச் சென்றாள்.

* * *

அன்றைய இரவு ஸ்ரீமதி ஊ, பெங்மோவின் பாடம் முடிந்ததும் அவனைச் சற்று நேரம் தன்னோடு நிறுத்திக்

கொண்டாள். அன்று அவர்கள் இருவரும் படிப்பில் வெகு நேரம் ஆழ்ந்திருந்தார்கள். ஸ்ரீமதி ஊ இருளில் அவர்கள் அறியாதவாறு, கதவருகே சென்று நின்று உள்ளே பார்த்தாள். பெங்மோவின் கண்களில் தோன்றிய மிகத் தீவிரமான சிரத்தையிலும், சகோதரர் ஆண்ட்ரூவின் ஆழ்ந்த கம்பீரத்திலும் காணப்பட்ட ஏதோ ஒன்று அவளை மிகவும் பயப்படச் செய்தது. இந்தப் பாதிரியார், தம்முடைய பெரிய உருவத்தின் சக்தியினால் மட்டுமே இந்தப் பையனின் ஆத்மாவை மாற்கித் தன் வசமாக்கிக் கொள்கிறாரா என்ன?

அவள் மிகுந்த சோர்வுடன் சென்று பிரம்பு நாற்காலி ஒன்றின்மீது உட்கார்ந்து கொண்டாள். நல்லவேளை! இருட்டிய நேரமாக இருக்கிறதே என்று எண்ணிக்கொண்டாள். 'நாம்தான் என்னென்ன முயற்சிகள் செய்கிறோம். அவைதான் எத்தகைய தோல்வியில் முடிகின்றன? நான் ஒரு பாதிரியை அழைத்து என் மகனுக்குப் பாடம் கற்பிக்கும்படி செய்தேன். ஆனால் அப்போது அவர் தமது அறிவின் ஒளியை வீசி எல்லோரையும் தம்மிடம் இழுத்துக்கொள்வார் என்பதை நான் கற்பனையேனும் செய்திருக்க முடியுமா?' என அவள் எண்ணமிட்டாள்.

அந்தக்கணம் பெங்மோவின் ஆத்மா விழித்துக்கொள்ளும் தறுவாயில் இருக்கிறது என்பதை அவள் அறிவாள். அது ஒரு பெண்ணால் வசப்படுத்தப்படவில்லை யென்றால் அது ஒரு கடவுளால் வசப்படுத்தப்பட்டுவிடும். பல காரணங்களுக்காக, அவள் அவன் சந்நியாசியாவதை விரும்பவில்லை. எல்லாவற்றையும்விட முக்கிய காரணம் ஒரு துறவியின் உடல் மலடாக இருக்கிறது. இப் பயன்படாத் தன்மை கடவுளுக்கு விரோதமானது. கடவுள், ஆத்மாவைச் சரீரத்திலிருந்து திருடியெடுத்துக் கொண்டால், சரீரம் அதற்குப் பழியாக ஆத்மாவைக் கசக்கிப் பிழிந்து வாட்டி வதைத்து விடுகிறது. ஆத்மாவும் சரீரமும் ஒன்றுக்கொன்று துணையானது. ஒன்று மற்றொன்றைக் கைவிடலாகாது. இதற்கு இன்னும் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு, கோவிலில் இருக்கும் பல பாதிரிமார்கள் செய்வது போல், பெங்மோவும் பெண்களையும் பிள்ளைகளையும் பெற்றுவிட்டுப் பிறகு துறவியாவதற்கு விரும்பினாலன்றி அது தகும். அவனுடைய சரீரம் நன்கு கவனிக்கப்பட்டு விடுமாதலால், அப்போது அவன் தன்னுடைய ஆத்மாவிற்குத் தேவையானதைச் செய்யலாம். ஆனால் இப்போது முடியாது.

அவர்களிடையே குடிகொண்டிருந்த மந்திர சக்தியை அவள் சென்று கலைக்க வேண்டுமா? கதவருகே அவர்கள்

கண்ணில் படாதவாறு நின்றுகொண்டே தயங்கினாள். பிறகு அவள் திரும்பி விட்டாள். அவள் தாயென்றால் தாய் மட்டும்தான். அவளுக்கு அந்தப் பெரிய பாதிரியை எதிர்த்து நிற்கக் கூடிய சக்தி கிடையாது. பெங்மோ வேறு ஒரு காரணத்திற்காகவும் இல்லாவிட்டால்கூட, தான் அவளுக்குக் கட்டுப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே அவளுக்கு எதிராக கிளம்புவான். இல்லை, அவள் தன்னுடைய உதவிக்காக சதையோடும் ரத்தத்தோடும் கூடிய குதூகலம் நிறைந்த ஓர் அழகிய இளம் நங்கையை அடையவேண்டும். ஆம்! லின்யி சீக்கிரம் வந்துவிட வேண்டும்!

படிப்பு முடிந்து அவர்கள் வந்ததும் ஸ்ரீமதி ஊ அவ்விருளிலிருந்து, "சகோதரர் ஆண்ட்ரூ, என்னுடைய மகனுக்கு இவ்வளவு நன்றாகக் கல்வி போதித்ததைப் பற்றி எனது நன்றி. மீண்டும் நாளை சந்திப்போம்" என்று கூறினாள்.

இதைக் கூறியவாறே அவள் எழுந்து முன்னால் வந்தாள். அவர்கள் இருவரும் அவள் அங்கிருப்பதைக் கண்டு திடுக்கிட்டவர்கள்போல் நின்றனர். சகோதரர் ஆண்ட்ரூ வணங்கிவிட்டு, தமது நீண்ட ஆடைகள் காற்றில் பறக்க வேகமாகச் சென்று விட்டார். ஆனால் ஸ்ரீமதி ஊ தன் கையால் பெங்மோவின் முழங்கையைப் பிடித்துக் கொண்டாள். அவனும் தொடர்ந்து செல்வதற்கு ஆரம்பிக்கவும் அவள் அவனை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

"என் மகனே! சற்று நேரம் என்னுடன் இங்கு இரு. நான் உனக்கு மிகவும் விசித்திரமான ஒரு விஷயம் சொல்ல வேண்டும்" என்றாள்.

பெங்மோ மறுத்துக் கூறும் முறையில் கையைப் பின்னுக்கு இழுத்தான். அதை உணர்ந்த அவள் தன் கைகளை எடுத்துவிட்டு, "என் பிரிய மகனே! நான் சில சமயங்களில் மிகுந்த தனிமையை அனுபவிக்கிறேன். அத்தகைய நேரங்களில் இன்றிரவும் ஒன்றுபோல் காண்கிறது. சிறிது நேரம் நீ என்னுடன் தங்க மாட்டாயா?" எனக் கேட்டாள்.

இந்தக் குரலை எந்த மகனால் மறுக்க முடியும்? அவள் மீண்டும் அவனுடைய கையைப் பற்றி இழுத்தவாறு அன்புடன், "வா, இந்தக் குளிர்ச்சி நிறைந்த இருளில் சென்று உட்காருவோம். நான் சொல்லப் போவதை, சொல்லி முடிக்கும் வரை, நீ பதில் கூறாமல் கேட்டுக் கொண்டிருப்பாயா?" என்றாள்.

"அப்படியே செய்கிறேன் அம்மா" என்ருன் பெங்மோ. ஆனல் அவன் தன்னிடமிருந்து எப்படியாவது விடைபெற்று, தப்பித்துச் சென்று விடவேண்டுமென்று விரும்புகிருன் என்பதை அவளால் உணர முடிந்தது. ஆம், அவளால் அதற் கான அறிகுறிகளைக் காணமுடிந்தது!

"பெங்மோ" என ஆரம்பித்தாள் அவள். அவளுடைய குரல் இருளிலிருந்து வரும் இனிய கீதம்போலிருந்தது. அவனல் அவளைப் பார்க்க முடியவில்லே. அவளுடைய இனிய குரலின் நாதம் மட்டும் அவனுடைய செவிகளில் பாய்ந்து கொண்டிருந்தது. "உன்னிடம் இதை எவ்விதம் கூறுவ தென்று எனக்குப் புரியவில்லே" என்று கூறிவிட்டு அவள் சிறிது குழப்பத்துடன் மெல்ல நகைத்தாள். "நீ இப்போது நன்முக வளர்ந்து—பெரியவனுகி விட்டாய். நான் எதிர் பார்ப்பது என்னவென்ருல்—நிச்சயம் நான் இதில் என்னிஷ் டப்படியே நடக்க வேண்டுமென்று எண்ணக்கூடாது என்பது தான். லின்யி உன்னுடன் பேசவேண்டும் என்று விரும்புகிரு ளாம். லியாங்மோ உன் வயதாக இருந்தபோது இவ்விதம் ஏற்பட்டிருந்தால் அது நடக்கக் கூடாத காரியம் என்று நான் சொல்லியிருப்பேன். மெங் அம்மாதிரி கேட்கவும் நினைத் திருப்பாள் என்று நான் நினைக்கவில்லே. லின்யியும் மெங் மாதிரியில்லே. நீயும் லியாங்மோவைப் போலில்லே. உங் களுக்குள் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது" என்ருள்.

அந்த அழகிய குரல் இவ்வளவையும் அந்த இருளிலே பொழிந்தது. அவனல் நம்பமுடியவில்லே. தன்னுடைய தாயின் குரலா இது? ஒரு சிறு பெண்ணினுடையதுபோல் கூச்சத்துடனும் சிறிது நகைப்புடனும் தயங்கித் தயங்கி வருகிறது என்று வியந்தான் அவன்.

"உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் அவன் வேகத்துடன்.

"இன்று அவளுடைய தாய் என்னிடம் கூறினுள்" என்று பதிலளித்தாள் அவள்.

ஸ்ரீமதி ஊ தன்னுடைய நாற்காலியில் பின்னல் சாய்ந்து உட்கார்ந்தவாறு, கரிய வானத்தை நோக்கிச் சற்றே தனது முகத்தை நிமிர்த்திக் கொண்டு, பெங்மோவினுடைய குரலின் ஒவ்வொரு அசைவையும் நிறுத்து நிதானித்துக் கேட்டாள். ஒருக்கால் நம்மைவிட அதிகபலம் கொண்ட சக்தியை எதிர்த்துப் போராடுவதற்கு நம்மை உட்படுத்திக் கொண்டு

விட்டோமோ என்ற எண்ணம் எழுந்து அவளுக்கு அதிர்ச்சி யைக் கொடுத்தது. ஆனல் வென்று விடுவோம் என்றுதான் நம்பினுள். ஏனெனில் பெங்மோவின் சரீரம் அவள் பக்க மிருந்தது. மனிதனில் ஆத்மாவைவிட சரீரமே பலம் வாய்ந்தது.

பெங்மோவின் மௌனத்தைக் கண்டு, அவள் தான் செய்வதற்காக வருந்துபவள்போல், "ஒருவேளை நான் செய்தது மிகவும் தவருயிருக்கலாம். நான் முதலில் நினைத்தது என்னவென்ருல் லின்யியிக்கு அவ்வளவு துணிச்சல் இருக்கக் கூடுமானுல், நம் வீட்டில் அவளைச் சேர்க்கா திருப்பதே நல்லதுதான்" என்ருள்.

இதுவே சரியான வார்த்தைகள்! பெங்மோ அவள் பக்கம் சாய்ந்துகொண்டு, உஷ்ணத்தோடு பேச ஆரம்பித்தான். அவனுடைய இளமையும் பரிசுத்தமும் கொண்ட சுவாசம் தன்னுடைய முகத்தின்மேல் படுவதை அவளால் உணர முடிந்தது.

"அம்மா! உனக்கு ஒன்றும் புரியாது!"

"என்ன?" என்ருள் அவள். இளையவர்களின் இந்த பழக்கமான வார்த்தைகளைக் கேட்டு அவள் மனச் சமாதான மடைந்தாள். இப்படித்தானே எல்லாப் பிள்ளைகளும் தங்க ளுடைய தாய்மார்களிடம் கூறுகிருர்கள்!

"இப்போதெல்லாம், அநேக வாலிபர்களும் பெண்களும் ஒன்முகச் சேர்ந்து பழகுகிறுர்கள். உன்னுடைய காலத்தைப் போலவோ அல்லது லியாங்மோவினுடைய காலத்தைப் போலவோ இப்போது கிடையாது" என்று மொழிந்தான் பெங்மோ.

அவள் கவலே நீங்கியவளாய் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "நீ சொல்வதும் சரியாயிருக்கலாம். நீ சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்—அவ்வளவுதான். நீ லின்யியைப் பார்க்க விரும்பவில்லையென்ருல் நான் உன்னே ஒன்றும் சொல்லப் போவதில்லே. அது சௌகரியப்படவில்லே என்று நான் அவளுடைய தாயிடம் கூறிவிடுகிறேன். லின்யியை நீ லட்சியம் செய்யவில்லே என்பதை அறிந்து கொள்ளட்டும்" என்ருள்.

பெங்மோ மிகுந்த கம்பீரத்துடன், "நான் அவளைப் போய் பார்க்கத்தான் போகிறேன். நான் எதற்கு அதை ஆட்சேபிக் வேண்டும்" என்ருன்.

அவள் அவனே வேண்டிக் கொள்ளும் வகையில் "பெங்மோ, லின்யியை இல்லாத தெல்லாம் கற்பனே செய்து கொள்ளும்படிச் செய்யாதே. நம் விட்டிற்கு வரவேண்டு மென்று எத்தனேயோ இளம் பெண்கள் காத்திருப்பார்கள். நான் எப்போதுமே லின்யியை சற்று கோணல் புத்தி படைத் தவள் என்று எண்ணியதுண்டு" என்ருள்.

"அவள் அப்படியிருந்தால் அதையும் நானே தெளிவாகப் பார்த்து விடுகிறேனே" என்ருன் பெங்மோ உறுதியுடன்.

"அப்படியானுல் அவளுடைய தாயாரிடம் இன்னும் சில தினங்களில் நீயும் நானும்..."

"நீ எதற்கு, அம்மா?" என்று கேட்டாள் பெங்மோ தெளிவாக.

அவள் கோபத்துடன், "பெங்மோ, அவ்வளவு தூரத் திற்கு நான் விடமாட்டேன். நீ எப்படி அந்தப் பெண்ணைத் தனியாகச் சென்று பார்க்கமுடியும்?" என்ருள்.

பெங்மோவும் சிறிது கோபத்துடன், "நிச்சயம் அவளே நான் தனியாகத்தான் போய் பார்க்கப்போகிறேன். நான் என்ன சிறுகுழந்தையா, அம்மாவின் பின்னுல் நெளிந்து கொண்டு வருவதற்கு?" என்ருன்.

"நீ போகவே வேண்டாம் என்று நான் சொல்லிவிட்டால், நீ என்ன செய்வாய்?" என்ருள் அவள் திடத்துடன்.

அதே திடத்துடன் அவனும், "அம்மா, அப்படிச் சொல்லாதே. உன் வார்த்தையை மீறிச் செல்வதற்கு நான் விரும்பவில்லே" என்ருன்.

சற்று நேரம் இருவருக்குமிடையே மௌனம் நிலவியது. ஸ்ரீமதி ஊ நாற்காலியை விட்டு எழுந்து நின்றுகொண்டு, "அப்படியானுல், நீ லின்யியைப் பார்க்கப் போவதில் மிகவும் தீவிரமாக இருக்கிறுயா?" என்ருள்.

"ஆம், நிச்சயம் போவேன்" என்ருன் பெங்மோ பிடிவாதத்துடன்.

"அப்படியானுல் போய்க்கொள்" என்று கூறிவிட்டு வேகமாக அவனேக்கடந்து தன்னறைக்குள் சென்றுவிட்டாள். அங்கு இங் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். இவர்கள் பலமாகப் பேசியதைக் கேட்ட அவள், "அம்மா, இது என்ன..." என்று ஆரம்பித்தாள்.

ஆனுல் ஸ்ரீமதி ஊ கையால் சைகை காட்டி, "பொறு, அதைக் கேள்" என்று தாழ்ந்த குரலில் கூறினுள்.

அவர்கள் கூர்ந்து கவனித்தவாறு நின்ருர்கள். இங் வாயைப் பிளந்தாள். ஸ்ரீமதி ஊ கண்கள் பளபளக்க முகத்தில் சிரிப்பு தாண்டவமாட நின்று கொண்டிருந்தாள். வாசலிலிருந்து பெங்மோ கோபத்துடன் ஒங்கி ஒங்கி வேகமாக நடந்து சென்ற சப்தம் கேட்டது. ஸ்ரீமதி ஊ ஒருமுறை தன்னேக் குலுக்கிவிட்டுக் கொண்டு பின் உரக்கச் சிரித்தாள்.

"அம்மா, என்ன நடந்தது?" என்று மீண்டும் கேட்டாள் இங்.

ஸ்ரீமதி ஊ நகைத்தவாறு, "ஓ, அது ஒன்றுமில்லே. நான் அவன் ஒன்று செய்யவேண்டுமென்று விரும்பினேன். அதை அவன் செய்யப் போகிருன்—அவ்வளவுதான்" என்ருள்.

மறுநாள் பெங்மோ அவள் பக்கமே வரவில்லே. ஆனுல் அதற்கு மறுதினம் ஸ்ரீமதி கேங் மறுபடியும் வந்தாள். உடனே இரு சிநேகிதிகளின் கைகளும் ஒன்ருக இணேந்தன.

"பெங்மோவும் லின்யியும் சந்தித்து விட்டார்கள்" என்ருள் அவள்.

ஸ்ரீமதி ஊ புன்முறுவலுடன், "எப்படி இருந்தது சந்திப்பு?" என்று கேட்டாள்.

பதிலுக்குப் புன்னகை செய்த ஸ்ரீமதி கேங், "எனக்கு அழுகையும் சிரிப்பும் ஒன்ருகச் சேர்ந்து வந்தது. நான் அங்கு உட்காராதது போல் பாசாங்கு செய்துகொண்டு தூரவே உட்கார்ந்திருந்தேன். நான் அங்கிருந்துபோய் விடவேண்டு மென்று அவர்கள் விரும்பினுர்கள். நான் போனதும் அதன் காரணமாகவே அவர்களால் பேசமுடியவில்லே. இருவரும் பேச்சற்று சங்கடப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ஆனுல் ஒருவர் மேல் ஒருவர் வைத்த விழிகளே மாத்திரம் எடுக்கவில்லே. நான் ஒருசில நிமிஷங்கள்தான் அவர்களேத் தனியே விட்டுச் சென்றேன். நான் மறுபடியும் வந்து பார்த்த பொழுது இருவரும் சிறிதும் அசையாமல் முன்போலவே உட்கார்ந்திருந்தனர். பிறகு அவன் எழுந்து போவதற்குப் புறப்பட்டபோது இருவரும், 'மீண்டும் பிறகு சந்திப்போம்' என்று மட்டும் கூறிக் கொண்டனர்" என்ருள்.

"அத்த சாதாராண வார்த்தைகளே மட்டும்தான் கூறிக் கொண்டார்களா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"ஆனால், அதைத்தான் அவர்கள் எப்படிச் சொல்லிக் கொண்டார்கள், தெரியுமா? ஏய்லியன் நீ ஒருவேளை சிரிப்பாய்! ஆனால் எனக்கு அதைப் பார்த்ததும், என்னுடைய கிழவரைத் தேடிப்பிடித்து அவரருகில் சென்று உட்கார்ந்துகொள்ள வேண்டும் போலிருந்தது" என்றாள் அவள்.

"உன்னைப் பைத்தியம் என்று எண்ணியிருப்பார் அவர், சந்தேகமில்லாமல்" என்றாள் ஸ்ரீமதி ஊ கேலியாக.

ஸ்ரீமதி கேங், நகைத்தவாறு, "ஆம், ஆனால் நான் அவருக்கு ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் நான் மீண்டும் அவருக்குக் கலவரத்தை உண்டுபண்ண விரும்பவில்லை" என்றாள்.

ஸ்ரீமதி ஊ குறும்பாக, "அதனால் இப்போது என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி கேங் பெருமூச்செறிந்து, "ஆ! ஏய்லியன் சிரிக்காதே. அந்த இரண்டு இளம் குழந்தைகளையும் பார்த்த போது—எத்தனை சந்தோஷம் வரப்போகிறது—அதற்குப் பின் எத்தனை சங்கடங்கள் காத்திருக்கின்றன—என்று எண்ணிக் கொண்டேன். இளையவர்களிடம் உண்மையைச் சொல்வதற்குத் தைரியம் வரமாட்டேனென்கிறது" என்றாள்.

"கல்யாணத்தை விரைவில் முடித்து விடலாம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

ஸ்ரீமதி கேங்கும் அதை ஆமோதித்து, "எத்தனைக் கெத்தனை சீக்கிரம் முடிக்கிறோமோ அத்தனைக்கத்தனை நல்லது. காவிப் பாம்பின் அடியில் நெருப்பை மூட்டுவது பெரும் தவறு" என்றாள்.

பெங்மோ அன்று முழுவதும் தனது தாயாரின் அருகிலேயே வரவில்லை. மறுபடியும் இரவில் சகோதரர் ஆண்ட்ரூ வரும்வரை அவள் அவனைப் பார்க்கவே யில்லை. அவள் அநேக தடவை கதவருகே சென்று பார்த்தாள். பெங்மோ அவரிடம் புதிய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவன் ஒரு கடிதம் எழுத விரும்பினான். அவள் சகோதரர் ஆண்ட்ரூவின் முகத்தைப் பார்த்தபோது, அதில் அன்பும் பொறுமையும் நிறைந்திருந்ததோடு சிறிது திகைப்பும் கலந்து காணப்பட்டது. இவ்வார்த்தைகளை அவர் பெங்மோவிற்காகத் திருப்பித் திருப்பிச் சொல்லி, அவற்றை எழுதியும் காட்டினார். பொருளற்ற அவ்விசித்திரமான சப்தங்களை,

புரியாத அவ்வார்த்தைகளை ஸ்ரீமதி ஊ கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு அது புரிந்ததா இல்லையா என்பது முக்கியமல்ல, பெங்மோ அதைப் புரிந்துகொண்டான். வின்யி அதைப் புரிந்து கொள்வாள். அவளுக்கு இங்கிலீஷில் ஒரு கடிதம் எழுத வேண்டுமென்று அவன் மிகுந்த ஆவலுற்றிருந்தான். ஸ்ரீமதி ஊ இருளில் உட்கார்ந்தபடி தனக்குள் நகைத்துக் கொண்டாள். ஆனால் இவ்வளவு எளிதாகத் தான் வெற்றிகொண்டு விட்டதைக் கண்டு அவளுக்குச் சகோதரர் ஆண்ட்ரூவிடம் மிகுந்த வெட்கம் உண்டாயிற்று. அன்றிரவு அவள் அவரைப் பாராமல் விரைவிலேயே உறங்கச் சென்று விட்டாள்.

* * *

7

ஒன்பதாவது மாதத்தின் கடைசியில் ஒரு அழகிய தினத்தில் வின்யி, மணப்பெண்ணை அவ்வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அந்த நாட்கள் கல்யாணம் செய்வதற்கு ஏற்றனவாயிருந்தன. தானியங்கள் அறுவடையாவதற்குத் தயாராக யிருந்தன. நெற்கதிர்கள் நன்முக விளைந்து முற்றியிருந்தன. வெயில் காலம் கழிந்து இன்னும் பனிகாலம் ஆரம்பமாகாமல் இருந்தது.

இரண்டு குடும்பங்களும் இவ்விதம் இரண்டாவது முறை சம்பந்தம் செய்து கொள்வதைப் பற்றிக் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தன. முக்கியமாக லியாங்மோவும் மெங்கும் அதிக குதூகலமடைந்தனர். கர்ப்பம் தரித்திருந்த மெங்கின் சரீரம் நாளுக்கு நாள் பெருத்து வந்தது. அவளுடைய சோர்வெல்லாம் நீங்கி, இரவு பகல் நெடுநேரமும் அவளுக்குப் பசியெடுத்தவண்ண மிருந்தது. அழகும் குதூகலமும் நிறைந்தவளாய் அவள் தனது தங்கையை வரவேற்றாள். ஒன்றுகப் பேசிமுடித்த இரு தாய்மார்களும், தங்கள் குழந்தைகளின் விருப்பப்படியே எல்லாம் செய்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டனர். அவர்கள் லியாங்மோவிற்கும் மெங்கிற்கும் செய்ததுபோல், பழைய சம்பிரதாயப்படி கல்யாணத்தை அதிக காலம் கடத்திக்கொண்டு செய்து கொண்டிருக்கவில்லை. மூன்று நாளைய விருந்தும் கொண்டாட்டமும் பொறுமையும் அற்றவர்களான பெங்மோ, வின்யி இவர்கள் இருவருக்கும் மிக நீண்டதாக யிருந்தது. புதிய முறைப்படி அவர்கள் கல்யாணத்தைச் சுருக்கமாகச் செய்து விட வேண்டுமென்று விரும்பினர். பெரியவர்களுக்கு முன்னால் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதே போதுமானது என்று கூறினர்கள்.

அவ்விதமே செய்யப்பட்டது. ஸ்ரீமதி ஊ, ஊரா ரெல்லோரும் இவ்விருந்துகள் கிடைக்காமல் ஏமாந்து போய் விடக் கூடாதென்று அவர்களுக்காக மூன்று தினங்களும் ஒரு சாப்பாட்டு விடுதியை வாடகைக்கு அமர்த்தினாள். இவ்வேற் பாடு வீட்டில் கூட்டம் சேர்வதால் ஏற்படக்கூடிய தொல்லை களைத் தவிர்த்தது.

"இந்தப் புதிய முறைகளிலும் சில நன்மைகள் இருக்கத் தான் செய்கின்றன" என்றாள் ஸ்ரீமதி கேங் கல்யாண தினத் தன்று இரவு. இப்போது மறுமுறையாக ஆண்களெல்லோரும் ஸ்ரீமான் ஊவினுடைய பகுதியிலும் பெண்கள் ஸ்ரீமதி ஊவி னுடைய பகுதியிலுமாகக் கூடியிருந்தனர். பெண்களுக்கு மிக மதுரமான தின்பண்டங்களும், ஆண்களுக்குத் தக்க உணவு வகைகளும் பரிமாறப்பட்டன. பெங்மோவும் லின்யியும் தங்களுடைய சொந்த அறைக்குச் சென்று விட்டனர். ஒரு மாதத்திற்கு முன்புதான் வயதான உறவினர் ஒருவர் இறந்து போயிருந்தார். அவர் உபயோகித்த இரண்டு அறைகள் இப்போது காலியாக யிருந்தன. ஸ்ரீமதி ஊவின் உத்திரவால் அவை பழுதுபார்க்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருந்தன.

"ஆம், உண்மையில் லியாங்மோவின் கல்யாணத்திற்குப் பின் ஏற்பட்டதுபோல், உடைந்த நாற்காலி மேஜைகளையும் அழுக்கடைந்த தரைகளையும் இப்போது பார்க்க நேரிடாது" என்று அதை ஆமோதித்தாள் ஸ்ரீமதி ஊ.

இன்றிரவு அவள் மனதில் குதூகலம் நிறைந்திருந்தது. வீட்டிலுள்ள ஒரு நபரின் காரியங்கள் ஒழுங்காக நடந்தேறும் சமயங்களில் அவளுக்கு மிகுந்த குதூகலம் உண்டாகும். இதனால் அவளுடைய சுதந்திரம் இன்னும் அதிகமாகிறது அல்லவா! ஒரு வாரம் வரை பெங்மோ தனது சொந்த விருப்பத்தின்படி பாடம் கற்றுக் கொள்ளவில்லை. சகோதரர் ஆண்ட்ரூவும் வரவில்லை. ஸ்ரீமதி ஊவும் இதை ஆட்சேபிக்க வில்லை. இது சரீரத்திற்குரிய நேரம். சகோதரர் ஆண்ட்ரூவின் சக்தியைக் கண்டு அவள் இப்போது அஞ்சவில்லை. இனி அவர் வந்தாலும் வராவிட்டாலும் இரண்டும் அவளுக்கு ஒன்றுதான். பெங்மோவை அவள் குடும்பத்திற்காகக் காப் பாற்றிக் கொடுத்துவிட்டாள்.

அவ் வாசலில் சிவப்பு காகிதத்தால் செய்யப்பட்ட விளக்கு கள் நிறைய வைக்கப்பட்டிருந்தன. அவை இருளிலிருந்த வண்ணத்துப் பூச்சிகளைக் கவர்ந்திழுத்தன. அவைகளில் அநேக பூச்சிகள் வெளுத்த வர்ணத்துடன் மிகச் சிறியவைகளாய்

துரும்புபோல் காணப்பட்டன. ஆனால் சற்று நேரத்திற்கொரு முறை ஒரு பெரிய வண்ணத்துப் பூச்சி படபடவென்று அடித்துக் கொண்டு பறந்து வந்தது. அவற்றின் நீண்ட இறக்கைகள் வெளுத்த பச்சை நிறமாகவோ, அல்லது கருப்பும் பொன் வர்ணமும் கலந்ததாகவோ இருந்தன. அதைப் பார்த்த வுடனே பெண்மணிகள் யாவரும் ஒரேயடியாகக் கூச்சலிட் டனர். அதைப் பிடித்துக் கதவின் பின்னால் குத்திவைக்கும் வரை அவர்களால் அமைதியாகயிருக்க முடியாது. பிறகு அவர்கள் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு தின்பண்டங் களை ருசி பார்த்தவாறு அதன் அழகைப் பார்த்து வியந்தனர். எல்லோரையும் விட பெரிய எஜமானி இந்த வேடிக்கையை மிகவும் ரசித்தாள். அவள் தன் கைகளைக் கொட்டி ஆனந்தித் தாள்.

இம்மாதிரி ஒரு பூச்சியை அவர்கள் பிடித்துக் கொண் டிருந்தபோது சியூமிங் அங்கு வந்தாள். எப்போதும் அவள் வந்ததும் உடனே கவனிக்கும் ஸ்ரீமதி ஊ இப்போதும் அவளைக் கவனித்துப் பார்த்தாள். ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அந்தப் பெண் இவ்வீட்டில் தன்னுடைய ஸ்தானத்தை மெல்ல மெல்ல, நாட்கள் செல்லச் செல்ல, மௌனமாக ஏற்றுக் கொண்டிருந்தாள். அவளைப் பற்றி நல்லதாகவோ கெட்டதாகவோ யாரும் ஸ்ரீமதி ஊவின் முன்னிலையில் பேசவில்லை. ஆனால் ஸ்ரீமதி ஊவிற்கு எப்போதும் அவளுடைய ஞாபகம் இருந்து வந்தது. சில சமயங்களில் இரவில் விழித்துக்கொள்ளும் போது இவளைப் பற்றி எண்ணுவாள்—ஆனால் உடனே அதை மறந்தும் விடுவாள்.

இப்போது சியூமிங் வந்ததும் அவள் கவனித்தாள். அப் பெண் இளைத்து சற்று வெளுத்து காணப்பட்டாள். ஆனால் அவளுடைய மென்மையான சுபாவம் அவளுடைய அழகை அதிகரிக்கச் செய்திருந்தது.

ஸ்ரீமதி ஊ அரை மனதுடன் தன்னை நொந்து கொண்ட வனாய், 'அவள் எப்படி இருக்கிறாள் என்பதை நான் விசாரிக்க வேண்டும். கல்யாண வேலைகளெல்லாம் முடிந்ததும் அவளுக்குச் சொல்லியனுப்ப வேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள். பிறகு இப்போதும் சியூமிங்கைத் தன் மனத் திலிருந்து அகற்றி வைத்தாள்.

• சியூமிங் மௌனமாக, விருந்தாளிகளுக்குச் சூடான தேநீர் ஊற்றிக் கொடுக்கும் வேலையில் முனைந்தாள். அன்றைய

மத்தியான நிகழ்ச்சிகளிலும் அவள் சற்று மறைவாகவே இருந்துகொண்டு, சாப்பாட்டு விஷயங்களையும் குழந்தைகளையும் மற்ற இவைபோன்றவைகளையும் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தாள். சற்றைக்கொருதரம் யாராவது அவளை, "இரண்டாவது எஜமானி, நீங்கள் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். அதற்கு சியூமிங் எப்போதும், "இதோ இது ஒன்று மட்டும்தான்" என்று இதே வார்த்தைகளால் பதில் கூறினாள்.

இப்போது எல்லோரும் அப்புதிய வண்ணத்துப் பூச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவளும் சென்று அதைப் பார்த்தாள். அது சிறிது ஆழ்ந்த மஞ்சள் நிறமாயிருந்தது. அது புத்தரின் கையிலிருந்த எலுமிச்சம் பழத்தின் மஞ்சள் நிறத்தைப் போலிருந்தது என்று அவர்கள் கூறிக் கொண்டனர். அதன் உடல் நீண்டு கறுத்திருந்தது. ஊசியால் குத்தப்பட்ட அப்பூச்சி துடிதுடித்தது. கடைசியாக அது ஒரு முறை தனது அகன்ற இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கொண்டது. அப்போது இறக்கைகளின் கறுப்பு புள்ளிகளோடு கூடிய பச்சையும் பொன் வர்ணமும் ஒரு கணம் தெரிந்தது. பிறகு அப்பூச்சி அசைவற்று நின்றுவிட்டது.

"எவ்வளவு சீக்கிரம் அவை உயிரை விட்டுவிடுகின்றன" என்றாள் சியூமிங் திடீரென்று.

அவளுடைய குரலைக் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். அவள் தான் பேசிவிட்டதைக் கண்டு தானே ஆச்சரியமடைந்தவள் போல் பின் வாங்கினாள். அவளுடைய முகத்தில் வேதனையும் கூச்சமும் கலந்த புன்னகை தோன்றியது. அவள் அவர்கள் எல்லோரும் மீண்டும் உட்கார்ந்து கொள்ளும் வரை காத்திருந்தாள். பிறகு மெல்ல மற்றவர்களுக்குப் பின்புறமாக நழுவி, ஸ்ரீமதி ஊவிடம் வந்து, அவளுடைய தேநீர் பாத்திரத்தைத் தொட்டுப் பார்த்தாள்.

"உங்களுடைய தேநீர் ஆறிவிட்டது. நான் அதைச் சுடவைக்கிறேன்" என்றாள்.

"மிக்க வந்தனம்" என்று கூறிய ஸ்ரீமதி ஊ அசையாமல் உட்கார்ந்திருந்தாள். சியூமிங் குனிந்துகொண்டு அக்காரியத்தைச் செய்வதில் முனைந்தாள். அவள் அவ்வாறு குனிந்த போது அவளிடமிருந்து வீசிய சந்தனத்தின் நறுமணம் ஸ்ரீமதி ஊவிற்கு போதையூட்டியது. அதை முகர்ந்ததும் அவள் அப்பெண்ணின் முகத்தைப் பார்த்தாள். அதில் பணிவும் அடக்கமும் நிறைந்திருந்தது.

அவள் தாழ்ந்த குரலில், "நான் இன்றிரவு உங்களுடன் வந்து சிறிது நேரம் பேசலாமா அக்கா?" என்று கேட்டாள்.

"ஓ! நிச்சயமாக!" என்று பதிலளித்தாள் ஸ்ரீமதி ஊ. அவளுக்கு வேறு எவ்விதம் பதிலளிப்பது என்று தெரியவில்லை. இதை எவ்வாறு அவள் மறுக்க முடியும்? ஆனால் தன் மனத்திலிருந்த குதூகலம் சட்டென்று மறைந்து விட்டதை அவள் உணர்ந்தாள். என்ன புதிய தொந்திரவு அவளுக்கு வருவதற்கு இருக்கிறதோ...? அவள் தேநீரை உறிஞ்சியவாறு மௌனமாக, விருந்தாளிகள் எல்லோரும் கலைந்து செல்லும் வரை உட்கார்ந்திருந்தாள்.

அவர்கள் எல்லோரும் சென்ற பிறகு சியூமிங்கும் இங்கும் மட்டும் தனியாக இருந்தனர்.

ஸ்ரீமதி ஊ இங்கிடம், "நீ போய்விட்டுச் சிறிது நேரம் கழித்து வா" என்றாள்.

அவள் சியூமிங்கை விட்டிற்குள் அழைத்துச் செல்ல விரும்பவில்லை. அவ்வாசல் குளிர்ந்து அமைதி நிறைந்திருந்தது. கடைசியாக பூத்த கறுஞ் சிவப்பான ஆர்ச்சிட் புஷ்பங்கள் விளக்கொளியில் அழகுடன் திகழ்ந்தன. இன்றுமெங் அவளுக்காகத் தாமரைப் பூவின் நடுவிலிருக்கும் விதை நிறைந்த பாகத்தைத் தின்பதற்குக் கொண்டுவந்து வைத்திருந்தாள். அவ் விதைகளுக்குள்ளிருந்த பருப்புகள் வாசனையற்றிருந்த போதிலும் சுவையுடையனவாக யிருந்தன.

எல்லோரும் சென்ற பிறகு அவள் உட்கார்ந்து கொண்டு, அப் பெரிய விதைகளடங்கிய பூக்களில் ஒன்றை எடுத்தாள். சியூமிங் தயக்கத்துடன் சற்றே குனிந்தவாறு நின்றுகொண்டிருந்தாள்.

"உட்கார்ந்துகொள். நான் முன்பே இவ்விதைகளைப் பற்றி நினைத்துக் கொண்டேன். நாம் இதைத் தின்று கொண்டே பேசுவோம்" என்று ஸ்ரீமதி ஊ கூறினாள்.

ஆனால் சியூமிங், "இல்லை எனக்கு வேண்டாம்" என்றாள்.

"அப்படியானால் நான் தின்றுகொண்டே நீ சொல்வதைக் கேட்கிறேன்" எனப் பதிலளித்தாள் ஸ்ரீமதி ஊ. அவளுடைய மெல்லிய விரல்கள் அதன் மேல்தோலைக் கிழித்தன. அவளுடைய கைகள் எப்போதும் பார்ப்பதற்கு பலமேயற்றன போல்தான் காணப்பட்டன. ஆனால் அவற்றில் பலம் இருந்தது. அத் தோலின் உட்புறமிருந்த பாகம் மிக்க உறுதியாக

யிருந்தது. ஆயினும் அவ்விரல்களுக்கிடையே அவை மிந்து கொடுத்தன. அதற்குள்ளிருந்த அநேக விதைகளிலிருந்து அவள் ஒன்றைக் கிள்ளி எடுத்தாள். பின், சிறு வயதில் இருந்தது போலவே இப்போதும் உறுதியாகயிருந்த தன்னுடைய கூரிய சிறிய பற்களால் அதன் பச்சையான மேல்தோலைக் கிழித்து உள்ளிருந்த பருப்பை எடுத்துச் சாப்பிட்டாள்.

"நான் உங்களுக்குத் தருகிறேன்" என்று வேண்டினுள் சியூமிங்.

ஸ்ரீமதி ஊ தன்னுடைய வாயிலேயே அச் சுவையை அனுபவிக்க விரும்பினுள். அவளுக்குச் சியூமிங்கின் கைகள்மீது ஏனோ அருவருப்பு ஏற்பட்டது. "இல்லை, நானே உரித்துக் கொள்கிறேன்" என்று அவள் கூறினுள். சியூமிங் இவ் வார்த்தைகளின் உள் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவள் போல் மீண்டும் கேட்காமல் பேசாதிருந்து விட்டாள்.

ஸ்ரீமதி ஊ இவ்விதம் விதையை உரிப்பதையும் அதை மென்று தின்பதையும் பார்த்தவாறு சியூமிங் உட்கார்ந்திருந் தாள். இருவரும் பேசவில்லை. பிறகு திடீரென்று ஸ்ரீமதி ஊ தனது பசியெல்லாம் அடங்கப் பெற்றவள் போன்று, உரித்த அத் தோல்களையெல்லாம் கீழே கற்களின்மீது எறிந்தாள்.

"நீ தாய்மை நிலையடைந்திருக்கிறாய் போலிருக்கிறது" என்றுள் அவள். மிகவும் சாதாரண பெண்கள் உபயோகிக்கும் சாதாரண வார்த்தைகளையே அவள் கூறினுள்.

சியூமிங் அவளை நிமிர்ந்து பார்த்து, "ஆம், நான் என்னுள் மகிழ்ச்சியைக் கொண்டிருக்கிறேன்" என்றுள். அவள் ஒரு பெரிய குடும்பத்தில் ஒரு வாரிசை எதிர்பார்த்திருப்பவர்கள் உபயோகிக்கும் வார்த்தைகளை உபயோகித்தாள்.

ஸ்ரீமதி ஊ தன்னையும் திருத்திக் கொள்ளவில்லை. சியூமிங்கையும் திருத்தவில்லை. அவள் அதே கடுமையான குரலில் தெளிவாக, "நீ மிகவும் அவசரப்பட்டு விட்டாய் போலிருக்கிறது" என்றுள்.

சியூமிங் இதற்குப் பதிலளிக்கவில்லை. அவள் தலையைக் கவிழ்த்துக்கொண்டு மடிமீது கைகளை அகற்றி வைத்தவாறு உட்கார்ந்திருந்தாள். நிமிர்த்தி வைத்திருந்த அவளது கை களின் விரல்கள் துவண்டு கிடந்தன.

"அவர் மகிழ்ச்சியடைந்திருப்பார் என்று நான் நினைக் கிறேன்" என்றுள் ஸ்ரீமதி ஊ அதே கடுமையுடன்.

சியூமிங் தன்னுடைய உண்மை நிறைந்த அகன்ற விழிகளால் அவளை நோக்கி, "அவருக்குத் தெரியாது. நான் இன்னும் அவருக்குச் சொல்லவில்லை" என்று கூறினுள்.

"அதிசயமாக யிருக்கிறதே" என்றுள் ஸ்ரீமதி ஊ ஏளன மாக. அவள் ஏனோ சியூமிங்கின்மீது கோபம் கொண்டாள். அவளுக்கே தனது கோபத்தைக் கண்டு ஆச்சரியம் உண்டா யிற்று. அவள் சியூமிங்கை ஒரு காரியத்தின் பொருட்டு இங் வீட்டிற்குள் கொண்டுவந்தாள். அப்பெண்ணும் அதை நிறைவேற்றியே வருகிறாள். பின் அவள் எதற்காக அவள்மீது கோபம் கொள்ள வேண்டும்? ஆனால் அக்கோபம் ஒரு பச்சைப் பாம்பைப் போல் அவளுள் சுருண்டு கிடந்தது. அது வெளியே பாயவும் அதனுடைய விஷம் அவளுடைய நாக்கில் தங்கியது. "வீட்டிலமகளிர் எப்போதும் ஆண்களிடம் சொல் வதற்கு விரைந்து விடுவார்களே? ஏன் நீ மட்டும் மற்ற பெண்களிடமிருந்து வித்தியாசமாக யிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

சியூமிங்கின் கண்களில் நீர் நிறைந்தது. அவளுக்கு மேலே யிருந்த விளக்கின் ஒளியால், அவளுடைய கண்களில் கண்ணீர் பளபளப்பதை ஸ்ரீமதி ஊவால் நன்கு பார்க்க முடிந்தது.

சியூமிங், மனம் இழந்தவளாய், தாழ்ந்த குரலில், "நான் உங்களிடம் சொல்ல வேண்டுமென்று விரும்பினேன். நீங்கள் சந்தோஷப்படுவீர்களென்று எண்ணினேன். ஆனால் உங் களுக்குக் கோபம்தான் வருகிறது. இனி எனக்குச் சாவதைத் தவிர வேறென்ன வழி இருக்கிறது?" என்றுள்.

இந்த நிர்க்கதியற்ற, பரிதாபகரமான வார்த்தைகள் ஸ்ரீமதி ஊவின் அறிவைத் தெளிவுறச் செய்தன. பெரிய வீடுகளிலுள்ள வீட்டிலமகளிர் தங்களைத் தூக்கிட்டுக் கொள் வதும் நகைகளைப் பொடி செய்தோ அல்லது பச்சையான கஞ்சாவை விழுங்கியோ தற்கொலை செய்து கொள்வதும் சகஜம்தான். ஆனால் இது அவ்வீடுகளுக்குப் பெருத்த அவ மானத்தைக் கொடுத்து வந்தது. வழக்கம்போல் இப்போதும் அவள் தன் வீட்டின் பெருமையைக் காப்பதற்கு விரைந்தாள். "நீ பேசுவது முட்டாள்தனம். நீ உன்னுடைய கடமையைத் தானே செய்திருக்கிறாய்? நீ எதற்காக உன்னுயிரை மாய்த்துக் கொள்ளவேண்டும்?" என்று கேட்டாள்.

அப்பெண் அதே மனமுடைந்த குரலில், "நீங்கள் மகிழ்ச்சி கொள்வீர்களானால் அதைக் கொண்டு நானும் மகிழ்ச்சியடையலாம் என்று எண்ணினேன். உங்களுடைய தெருப்பிளை நானும் என் கைகளை உஷ்ணப்படுத்திக்

கொள்ளலாம் என்றிருந்தேன். ஆனால் இப்போது எனக்கு என்ன ஆதரவிருக்கிறது?" என்றாள்.

ஸ்ரீமதி ஊ பயந்தே போனாள். அவள், இதுவரை சியூமிங் நாட்டுப்புறத்தில் வளர்ந்த ஒரு சாதாரணப் பெண் தானே; அவள், ஒரு மிருகம் தன்னுடைய செழுமையை மகிழ்வுடன் வரவேற்பது போல் தான் சூல் கொண்டிருப்பதை வரவேற்பாள் என்று எண்ணியிருந்தாள். ஒரு பசு தன்னுடைய கன்றைப் பற்றித்தான் நினைக்கிறது. அதன் எதிர்காலப்பற்றி நினைப்பதில்லை. அவள் சியூமிங்கின் சொந்த வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்த போதெல்லாம், சியூமிங்கிற்குச் சீக்கிரம் குழந்தைப் பேறு உண்டாகும். அதைக் கொண்டு அவள் மிகவும் திருப்தியடைந்து விடுவாள் என்று எண்ணியே தன்னை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"இப்போது என்ன? நீ உன் பொருட்டாகவேனும் மகிழ்ச்சி கொள்ளவில்லையா? உனக்கு விளையாடுவதற்கும் பார்த்துச் சிரிப்பதற்கும் ஒரு சிறிய பொம்மை கிடைக்கப் போகிறது. சீராட்டுவதற்கு உனக்கென்று சொந்தமாக ஒன்று கிடைத்துவிடும். பிறக்கப் போவது பையனுகயிருந்தால், குடும்பத்தில் உன்னுடைய மதிப்பு உயரும். ஆனால் அது பெண்ணுகயிருந்தாலும் நான் சிறிதும் குறைகூற மாட்டேன் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம். என்னுடைய வீட்டில் ஆணையினும் பெண்ணையினும் இருவரையுமே வரவேற்பது தான் என்னுடைய கொள்கை. என்னுடைய சொந்தப் பெண், பேசும் சக்தி வரும் முன்னரே இறந்துவிட்ட போது, நான் ஒரு பிள்ளைக் குழந்தையைப் பறிகொடுத்து விட்டதுபோல் அழுதேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அப்பெண் பதில் பேசாமல், துயரம் நிறைந்த தனது விழிகளால் ஸ்ரீமதி ஊவைப் பார்த்தவாறு இதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீமதி ஊ மேலும் வேகமாக, "நீ தற்கொலை செய்து கொள்வதைப் பற்றிப் பேசக் கூடாது. பேசாமல் சென்று உன்னுடைய படுக்கையில் படுத்துக்கொள். அவர் வந்தால், உன்னிடம் அவருக்குச் சொல்வதற்கான நல்ல செய்திகள் இருக்கின்றன என்று கூறு" என்றாள்.

அப் பெண்ணை மீண்டும் அவளுடைய சரியான நிலைக்குக் கொண்டு வருவதற்காக அவள் கோபத்துடன் பேசினாள். ஆனால் தன்னுடைய இதயமோ ஒரு மலைச் சிகரத்திலுள்ள பனியைப் போல் உறைந்து விட்டதை அவள் உணர்ந்தாள்.

அவள் மீண்டும் தனிமையை அடைய ஏங்கியவளாய் எழுந்தாள். ஆனால் சியூமிங் பாய்ந்து சென்று அவளுடைய ஆடையின் நுனியைப் பற்றிக்கொண்டாள்.

"இன்றிரவு நான் இங்கேயே இருக்கிறேனே. முதல் நான் வந்தபோது இங்கே தூங்கியதுபோல் இன்றும் இங்கேயே தூங்க அனுமதியுங்கள். நீங்கள் எனக்காக அவரிடம் கூறுங்கள். அவரை—அவரிடம் என்னைத் தனியே விடும்படி எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினாள் அவள்.

இப்போது ஸ்ரீமதி ஊ உண்மையிலேயே மிகவும் பயந்து போனாள். அவள் கடுமையுடன், "நீ அறிவிழந்து பேசுகிறாய். நீ யாரென்பதை எண்ணிப் பார். தாய் தந்தையற்று அனுதையாய் தெருவில் கிடந்து, ஒரு குடியானவ ஸ்திரியினால் கண்டெடுக்கப்பட்டவள் நீ. கல்யாணமாவதற்கு முன்பே கைம்பெண்ணின் நிலையை அடைந்திருந்தாய்! இன்று, நீ இந்தக் குடும்பத்தில் எனக்கு அடுத்தபடியான ஸ்தானத்தில் இருக்கிறாய்! குடும்பம் என்றால் எத்தகைய குடும்பம்! எல்லோரையும் விட அதிக செல்வம் படைத்த இவ்வீட்டிற்கு இல்லுரிலுள்ள எந்தக் குடும்பத்தினரும் தங்கள் தங்களுடைய பெண்களை அனுப்புவதற்குக் காத்துக் கொண்டிருக்கின்றனர். நீ இப்போது பட்டாடைகள் அணிந்திருக்கிறாய்! உன் காதில் மரகதம் மின்னுவதென்ன, கைகளில் தங்க மோதிரங்கள் ஒளி விசுவதென்ன! நினைத்துப் பார். நீ என்னுடைய அறையில் வந்து இருக்கக் கூடாது. நான் குடும்பத்தினருக்கு இதை எவ்விதம் விளக்கிச் சொல்வது? உன்னை எந்த இடத்திற்காக விலைகொடுத்து வாங்கினேனோ, உனக்கு உரிய இடம் எதுவோ, அந்த இடத்திற்கு உடனே போய்ச் சேர்" என்றாள்.

சியூமிங் ஸ்ரீமதி ஊவின் ஆடையை விட்டு விட்டாள். அவள் உணர்வடைந்தவளாய் மெல்ல ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து வெளிக் கதவை நோக்கிச் சென்றாள். அவளுடைய பரிதாபகரமான முகத்தைப் பார்த்ததும் ஸ்ரீமதி ஊவின் கடுமை சட்டென்று மறைந்தது.

அவள் தன்னுடைய வழக்கமான அன்பு நிறைந்த குரலில், "குழந்தாய்! திரும்பிச் செல். பயப்படாதே! சில பெண்கள் முதல் குழந்தையுண்டாயிருக்கும்போது பயமும் வெறுப்பும் அடைவது உண்டுதான். ஆயினும் நாட்டுப் புறத்துப் பெண்களிடம் நான் இதை எதிர்பார்க்கவில்லை. போய் சீக்கிரமே படுத்து உறங்கிவிடு. அவர் வந்தாலும் நீ எழுந்திருக்க வேண்டியதில்லை. உனக்குப்

பிடிக்கவில்லை என்பதை அவர் அறிந்தால் உன்னைத் தொந்திரவு செய்யமாட்டார். அவர் மிகவும் நல்லவர். அன்பு நிறைந்த உள்ளம் கொண்டவர். எனக்கு அவரைத் தெரியாதா? அவரிடம் எதற்காக நீ பயப்படுகிறாய்? உனக்காக நான் நானேக்கு—அவரிடம் இவ்விஷயத்தைச் சொல்கிறேன். அதுமட்டும் நான் செய்கிறேன்" என்றாள்.

இந்த அன்பினால் ஆறுதல் பெற்றவள்போல், சியூமிங் தன் நன்றியைத் தெரிவித்து விட்டு மெல்ல சப்தமில்லாமல் சென்று விட்டாள். ஸ்ரீமதி ஊ விளக்குகளை ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் அணைக்கவும் வாசலில் இருள் பரவியது. மிகுந்த சோர்வுற்றவளாய் அவள் தன் அறைக்குச் சென்றாள். இங் வந்து அவளைத் தூங்குவதற்குத் தயார் செய்தாள். இன்றைய தினத்தைப் போல் இத்தனை சோகமும் கடுமையும் நிறைந்த வளாய்த் தன் எஜமானி காணப்படும் நாட்களில் அவள் எவ்வித கேள்வியும் கேட்கத் துணிவு கொள்வதில்லை.

அவள் மௌனமாகயிருந்த அவ்வுருவத்தைச் சுற்றித் திரைகளை இழுத்து விட்டு விட்டு, சப்தம் மிகுந்த வேலைக்காரர்களின் விடுதியை நோக்கிச் சென்றாள். அங்கு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கல்யாண விருந்தில் மிகுதியான பண்டங்களையெல்லாம் உண்டு களித்துக்கொண்டிருந்தனர். இங்கிற்கும் சாப்பாட்டின் மீது அதிக ஆசை உண்டு. அவள் தன்னுடைய பாத்திரம் நிறைய பலவகையான உணவுகளை நிரப்பிக் கொண்டு, வாசற்படியின் மீது சென்று உட்கார்ந்து கொண்டாள். அவள் ஆனந்தமாக உண்டவாறு, அவ் வேலைக்காரர்கள் வம்படித்துக் கொண்டிருந்ததையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். எஜமானரின் வேலைக்காரனான பெங் எர்ரைத் தவிர மற்ற எல்லோரையும்விட அதிக அதிகாரமுள்ளவன் இங். பெங் எர் என்பவனும் அங்கு சாப்பிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுடைய தடித்த முகம் வியர்வையால் பளபளத்தது. அவனுடைய காலருகே இரண்டு மூன்று வயதுடைய அவனது கடைசி குழந்தை நின்று கொண்டிருந்தது. அவன் மூச்சு விடுவதற்காக அவ்வப்போது நிறுத்திய சமயங்களில் அது தனது வாயைத் திறந்து கொண்டு கத்தியது. அவன் உடனே அப் பாத்திரத்தை அதன் வாயருகே பிடித்துக் கொண்டு கோல்களால் உணவை அதன் வாய்க்குள் தள்ளினான்.

"பெங் எர், எஜமானர் தினமும் பியோனிச் செடிகள் இருக்கும் பகுதியில் வந்து தூங்குகிறாரா?" என்று ஒரு பெண்ணின் பலத்த குரல் சிரிப்புடன் கத்திய சப்தம் இருளிலிருந்து வந்தது.

"நான் தினமும் காலையில் அங்கு தேநீர் எடுத்துச் செல்கிறேன்" என்று அவன் பதிலுக்குக் கத்தினான்.

அதே பலத்த குரல் மீண்டும் நகைப்புடன் கத்தியது. "இங், ஆர்ச்சிட் தோட்டத்துப் பகுதியில் எப்படியிருக்கிறது?"

ஆனால் இங் இதற்குப் பதிலளிக்கத் தாமதித்தான். அவன் தன்னுடைய பாத்திரத்தை விரைவில் காலி செய்து விட்டு, ஒரு ஜாடியிலிருந்த குளிர்ந்த ஜலத்தை எடுத்து, வாயைக் கொப்பளித்து, இருளிலிருந்து அக்குரல் வந்த திக்தை நோக்கித் தண்ணீரை உமிழ்ந்தான்.

இதைக் கண்டதும் ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் கலைந்து சென்றனர். அவர்கள் எல்லோருக்கும் இங்கிடம் அதிக பயம் இருந்தது. இவ் வீட்டில் அவள், சிங்காதனத்துக்கு வெகு சமீபத்தில் அல்லவா அமர்ந்திருந்தாள்!

* * *

விடியற்காலையில் ஸ்ரீமதி ஊவின் நித்திரை கலைந்தது. அவள் தனது நெஞ்சில் பெரும் பாரம் ஒன்று அழுத்துவதை உணர்ந்தவளாய், சிறிது பிரயாசையுடன் நன்கு விழித்துக் கொண்டாள். அந்த இரவு சுகமானதாக இருக்கவில்லை. அவள் நல்ல தூக்கத்தில் ஆழாமல் சிறிது நேரத்திற்கொருதரம் விழிப்படைவதும் மறுபடி கண் அயர்வதுமாக இருந்தாள். இதைபோல் எத்தனையோ இரவுகள் கழிந்ததுண்டு. வீட்டின் மத்தியஸ்தானத்தில் வசித்து வந்த அவள், ஒரு சரீரத்தின் சுகதுக்கங்கள் யாவற்றையும் இருதயம் அனுபவிப்பதுபோல் அவ் வீட்டின் எல்லாக் கவலையும் அனுபவித்து வந்தாள். இப்போது அவள் ஒவ்வொன்றாக நினைவுபடுத்திக்கொண்டாள். முதல் நாளிரவு-பெங்மோவின் கல்யாணத்தினத்தின் இரவு. கல்யாண தினங்கள் எப்போதுமே கவலையைக் கொடுப்பவைதாம். இருவரும் சந்தித்திருப்பார்களே! சந்திப்பு திருப்திகரமாக இருந்ததோ என்னவோ! அவர்களைப் பார்க்கும்வரை அவளால் அதைக் கண்டு பிடிக்க முடியாது. இதற்காக அவர்களைப் பார்ப்பதற்கு அவசரப்படவும் முடியாது. யாவும் அதனதன் போக்கில் சென்று கொண்டிருக்க வேண்டும். தக்க சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவள் அதைப் பார்த்துத் தெரிந்து கொள்வாள்.

அவள் பெருமூச்செறிந்து இரண்டாவது கவலை இன்னதென்பதை நினைத்துப் பார்த்தாள். அவள் சியூமிங்கிற்கு ஒரு வாக்கு கொடுத்திருக்கிறாள். அவள் அவ் வாக்கைத் திரும்ப எடுத்துக்கொள்ள விரும்பினாள். ஆனால் கொடுத்த வாக்கை

எப்படித் திரும்ப எடுத்துக்கொள்ள முடியும்? அப் பெண் அவ்வாக்கையே உறுதியாக நம்பி இரவு முழுவதும் நம்பிக்கை யுடன் கழித்திருப்பாள். இதற்குள், அவளுக்கு இருக்கும் கவலைகளெல்லாம் போதாதென்பதுபோல், இங் தனது எஜமானி விழித்திருப்பதைக் கண்டதும் உள்ளே வந்து வேறொரு செய்தியை அறிவித்தாள்.

"பெரிய எஜமானிக்கு உடம்பு சரியாயில்லே. நேற்று நடந்த விருந்தில் அவர்கள் ஒரு கரப்பான் பூச்சியைத் தின்று விட்டார்கள் போல் தோன்றுகிறதாம். அது வயிற்றில் அங்குமிங்கும் ஓடுவது போலவும், ஒரு எலியின் அளவு பெரிதாகி வயிற்றின்மீது உட்கார்ந்து கொண்டு மார்பினுள் தன் கால்களால் பிராண்டுவதுபோலவும் இருக்கிறதாம். நிச்சயம் அது கரப்பான் பூச்சியாக இராது. என்னுடைய புருஷன் எவ்வளவு தான் தப்பிதம் செய்தாலும் இத்தனை அஜாக்கிரதையாக ஒருநாளும் இருக்கமாட்டார்" என்றாள் இங்.

"கடவுளே! இருப்பதெல்லாம் போதாதோ எனக்கு" என்று ஸ்ரீமதி ஊ முணுமுணுத்துக் கொண்டாள்.

ஆனால் அவளுக்கு எல்லாவற்றையும் விட கடமையே பெரிதாகயிருந்தது. அவள் இங்கின் உதவியுடன் வெகு விரைவில் தன்னைச் சரி செய்து கொண்டு, சில நிமிடங்களுக்குப் பிறகு தனது பகுதிக்கு அடுத்திருந்த பெரிய எஜமானியின் அறைக்குச் சென்றாள். அங்கு கிழவியம்மாள், அடுக்காக வைக்கப்பட்டிருந்த தலையணைகளின் மீது சாய்ந்து கொண்டிருந்தாள். அவள் தனது ஒளி மங்கிய பார்வையை மருமகளின் மீது திருப்பினாள். "எனக்குச் சீக்கிரமாக ஏதேனும் செய். நான் சாகும் தறுவாயில் இருக்கிறேன்" என்றாள் மெலிந்த குரலில்.

இன்று காலையில் அவள் இருக்கும் நிலையைக் கண்டு ஸ்ரீமதி ஊ துணுக்குற்றாள். நேற்று அவள் குறும்புத்தனம் நிறைந்த ஒரு குழந்தையைப் போல் குதூகலத்துடன் காணப்பட்டாள். மாஜாங் என்ற விளையாட்டில் தான் ஜெயித்து விட்டதைப் பற்றி பெருமையடித்துக் கொண்டும் கிடைத்ததையெல்லாம் தின்று கொண்டும் குதூகலமாக யிருந்தாள்.

"என்னை ஏன் முன்னமேயே கூப்பிடவில்லை?" என்று ஸ்ரீமதி ஊ பெரியம்மாளின் வேலைக்காரியைக் கேட்டாள்.

"இப்போது தான் சிறிது நேரமாக நிலைமை இவ்வளவு மோசமாகயிருக்கிறது" என்று அவள் ஏதோ சாக்கு கூறினாள்.

"அம்மாளுக்கு வாந்தி எடுத்ததா! நன்றாக நிறுநீர் கழிந்ததா!" என்று விசாரித்தாள் ஸ்ரீமதி ஊ.

பெரிய எஜமானி சிரமத்துடன் தானே பேச ஆரம்பித்தாள். "மூன்று முறை கர்ப்பம் தரித்தால் எடுக்கக் கூடிய அளவு நான் வாந்தியெடுத்து விட்டேன். என்னுடைய குடல் எல்லாம் அந்தச் சட்டியிலே தான் இருக்கிறது. எனக்கு வயிற்றிற்கு ஏதாவது கொடு, மகனே. என்னுள் இப்போது வெறும் தண்ணீர் தானிருக்கிறது—தண்ணீரும் காற்றும் மட்டும் தான்" என்றாள்.

"உங்களால் சாப்பிடமுடியுமா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"எப்படியாவது என் வயிறு நிரம்ப வேண்டும்" என்றாள் கிழவி பலமற்ற குரலில். ஆனால் அக்குரலில் உறுதி நிறைந்திருந்தது.

இதனால் துணிவடைந்த ஸ்ரீமதி ஊ அரிசிக் கஞ்சியை, லேசாகப் போட்டுக் கொண்டு வரச் சொல்லி அதில் தானே சிறிது இஞ்சி சாற்றைப் பிழிந்து விட்டு, அதை ஒரு ஸ்பூனால் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கிழவிக்கு ஊட்டினாள்.

பெரிய எஜமானியை உடம்பு சுகமில்லாதபோது பார்ப்பதற்கு மிகப்பரிதாபகரமாக யிருக்கும். அவளுடைய தளர்ந்த உதடுகள் சக்தியற்று காணப்பட்டன. ஒவ்வொரு முறை ஊட்டும் போதும் ஸ்ரீமதி ஊ அவ்வாயைக் கவனித்தாள். ஒரு பல் பாக்கியில்லாமல் எல்லாம் விழுந்து விட்டன. தெரிந்து காணப்பட்ட எகிறு சுத்தமாகயிருந்தது. இந்த நாவிலிருந்து தான் எத்தனை வார்த்தைகள் வந்திருக்கின்றன! கிழவி மிகவும் முன்கோபமுடையவள். அவள் கோபமாயிருக்கும் சமயங்களில் எதிரிலிருக்கும் எவரையும் கண்டபடி திட்டி விடுவாள். இந்த நாதான் அவளுடைய ஆயுதம். இவ்வாயுதத்தைக் கண்டு பெரிய எஜமானர் பயப்பட்டு வந்தார். ஆனால் அவர் வேறு விதமான வார்த்தைகளையும் அவளிடமிருந்து கேட்டுதானிருக்கிறார்! அவளுடைய வாழ்வின் ஒளியாக இருந்து வந்த ஸ்ரீமான் ஊ, இக்கிழ வாயிலிருந்து எத்தனை குழந்தைத் தனமான பேச்சுக்களையும் சிரிப்புக்களையும் கேட்டிருக்கிறார்!

பெரிய எஜமானி, கடைசியாக, பெருமூச்செறிந்து, "இப்போது தேவலாம். எனக்கு இம்மாதிரி, ஏதாவது கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இந்த வயதில் உடலில் சக்தி எங்கு இருக்கிறது? உயிரானது, புல்லில் பற்ற வைத்த நெருப்பைப் போலிருக்கிறது. அதற்கு ஏதாவது போட்டுக் கொண்டே இருந்தால் தான் எரியும்" என்றாள்.

"சற்று நேரம் தூங்குங்கள்" என்றாள் ஸ்ரீமதி ஊ ஆதரவுடன்.

கிழவியின் கண்களில் கோபக்குறி தோன்றியது. "எதற்கு என்னைச் சும்மா தூங்கச் சொல்லிக் கொண்டிருக்கிறாய்? நான் தான் வெகு சீக்கிரத்திலேயே மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்து விடப் போகிறேனே" என்றாள்.

அவளுடைய கண்களில், கோபத்தை மறைத்துக் கொண்டு கண்ணீர் துளிர்த்தது. தனது மாமியார் அழுவதைக் கண்டு திடுக்கிட்டாள் ஸ்ரீமதி ஊ. "மகளே, இதற்கு பிறகு வேறு ஜன்மம் இருக்கும் என்று நீ நினைக்கிறாயா?" என்று அழுகையுடன் கேட்டாள் அவள்.

அவள் தன்னுடைய வற்றி வறண்டிருந்த கையால் ஸ்ரீமதி ஊவின் கையைப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய இழக் கை காய்ச்சலினால் நெருப்பாய் காய்ந்தது. எழுந்து நின்ற ஸ்ரீமதி ஊ மீண்டும் உட்கார்ந்து கொண்டாள். பெரிய எஜமானி தனது வாழ்நாள் முழுவதும் சரீர சுகத்திலேயே மூழ்கியிருந்தவள். தன் மூளைக்கு எட்டாத விஷயங்களை யெல்லாம் அறவே தள்ளிவிட்டு அவள் மிக குதூகலமாகவே தன் வாழ்க்கையைக் கழித்திருந்தாள். அவளுக்குச் செல்வமும் துணிமணிகளும் பட்டாடைகளும் கிடைத்திருந்தன. இப் பெரிய வீட்டில் அதிகாரம் செலுத்தும் பாக்கியமும் கிடைத் திருந்தது. அவளுக்கு வேறு என்ன வேண்டும்? ஆனால் தன் னுடைய சரீரத்தின் சுகத்திலேயே காலம் கழித்த அவள் இப்போது அச்சரீரத்தின் அழிவுகாலம் கிட்டியதும் பயமடைந் தாள். இச் சரீரம் அழிந்து போனதும் அவள் வேறு எங்கு செல்வாள்?

"இதற்குப் பிறகும் நம்முடைய ஆத்மா அழிவுறுமல் வாழும் என்றே நான் நம்புகிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ கவனமாக. ஒரு குழந்தையை ஏய்ப்பது போல் ஏதாவது சொல்லி அக்கிழவியை ஏமாற்றியிருக்கலாம். ஆனால் அவளால் அவ்விதம் செய்ய முடியவில்லை. பெரிய எஜமானி

இன்னமும் ஒரு சிறு குழந்தையல்லவே! சாகும் தறுவாயில் இருக்கும் ஒரு வயதான பெண்மணி அவள்.

"கோவிலில் இருக்கும் குருக்கள்மார்கள் கூறுகிறார்களே, அதைப் போல் நான் மீண்டும் வேறொரு சரீரத்தில் போய் ஜன்மமெடுப்பேன் என்று நீ நம்புகிறாயா?" என்று மீண்டும் கேட்டாள் பெரிய எஜமானி.

பெரிய எஜமானி இத்தகைய விஷயங்களைப் பற்றி முன்பு எப்போதும் பேசியதில்லை. ஸ்ரீமதி ஊ இதற்குத் தக்க விடையை அளிப்பதற்காக தன்னுள் ஒரு கணம் யோசித்தாள். ஆனால் எதிர்காலத்தில் நேரக் கூடியவைகளை யாரே ஊடுருவிப் பார்க்க முடியும்? அவள் முடிவில், "என்னால் சரியாகக் கூற முடியாது, அம்மா. ஆயினும் ஆத்மா ஒரு போதும் அழிவுறுவதில்லை என்று மட்டும் நான் நம்புகிறேன்" என்றாள்.

இதற்கு மேல் அவள் ஒன்றும் கூறவில்லை. சரீரத்தின் மூலமாகத் தங்கள் வாழ்க்கையை முற்றிலும் வாழ்ந்தவர்கள் சரீரத்தோடேயே செத்துத்தான் போவார்கள் என்று தான் உண்மையாக நம்பியதை அவள் தெரிவிக்கவில்லை. அவளால் சகோதரர் ஆண்ட்ரூ உடலைத் துறந்த போதிலும் தொடர்ந்து உயிர் வாழ்வார் என்பதைக் கற்பனை செய்ய முடிந்தது. ஆனால் கிழவியை அவ்விதம் எண்ணமுடியவில்லை.

பெரிய எஜமானி விழித்திருப்பதற்காக எவ்வளவோ முயற்சித்த போதிலும், அவளை யறியாமலே அவள் தூக்கத் தில் ஆழ்ந்து விட்டாள். ஒரு கிழப்பட்சியினுடையதைப் போல் காணப்பட்ட அவளுடைய கண்ணிமைகள் தாமாக மூடிக்கொள்ள, அவள் ஆழ்ந்து சுவாசித்தவாறு தூக்கத்தி லாழ்ந்தாள். ஸ்ரீமதி ஊவின் மெத்தென்ற கையின் மேலிருந்த அவளுடைய வற்றிய கை நழுவி கீழே விழுந்தது. போவதற்குப் புறப்பட்ட ஸ்ரீமதி ஊ வேலைக்காரியிடம் மெல்லிய குரலில், "இந்தத் தடவை எஜமானியம்மாள் எப்படி யும் பிழைத்துக் கொள்வார்கள். ஆனால் ஆகாத உணவுகளை யெல்லாம் அவர்களது கண்ணெதிரே காட்டாமல் வைத்திரு. கண்டதைச் சாப்பிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று கூறினாள்.

அவ் வேலைக்காரி, "எஜமானியின் பிடிவாதத்திற்கு முன் நானென்ன செய்வது! அவர்களுக்குக் கோபமூட்ட நான் விரும்பவில்லை" என்று முனகினாள்.

ஸ்ரீமதி ஊ கடுமையாக, "வாய்திறவாமல் நான் சொல்வதைச் செய்" என்ருள்.

அவள் ஸ்ரீமான் ஊவின் பகுதியை அடைந்தபோது, இந்த துக்கம் கொடுக்கக் கூடிய விஷயத்திலும் ஒரு நன்மை ஏற்பட்டதை எண்ணி மகிழ்ந்தாள். பெரிய எஜமானியின் தேகநிலை, அவள் இங்கு வருவதற்கான உண்மையான காரணத்தைத் தவிர வேருெரு காரணமாயும் அமைந்தது. அவள் தான் வருவதை அறிவிக்கும் பொருட்டு இங்கை முன் பாகவே அனுப்பியிருந்தாள். அவள் அவ்வாசற்கதவை அடைந்த போது, இங் அங்கே அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீமான் ஊ ஏதோ வேலையாக வெளியே சென்று விட்டு அப்போதுதான் திரும்பியிருக்கிருர் என்றும், அவர் தாம் உடைகளை மாற்றிக் கொண்டு வரும்வரை அவளை அங்கு உட்கார்ந்திருக்கும்படி கேட்டுக் கொண்டார் என்றும் அவள் தெரிவித்தாள்.

தனது வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்த அப்பழக்கமான அறைகளை நோக்கிச் சென்ருள் அவள். அங்கு வைக்கப்பட்டிருந்த பியோனிச் செடிகள் செழிப்பாக வளர்ந்திருந்தன. பூக்கும் காலம் மாறி பூக்களெல்லாம் காய்ந்து விழுந்து கிடந்தன. ஆனல் இலைகள் கரும் பச்சை நிறத்துடன் அடர்ந்து வளர்ந்திருந்தன. குளத்தில் தாமரைச் செடிகளை வளர்த்திருந்தனர். தண்ணீரில் பெரிய பெரிய தாமரை மலர்கள் மலர்ந்து காணப்பட்டன. ஒவ்வொரு மலரின் மத்தியிலும் பொன்வண்ணத் துகள்களால் மூடப் பெற்ற முற்றிய விதைகள் நிறைந்திருந்தன. அவற்றின் வாசனை அப்பகுதியையே தூக்கியடிப்பது போலிருந்தது. ஸ்ரீமதி ஊ தனது கைக் குட்டையை எடுத்து மூக்கை மூடிக் கொண்டாள். பூவின் மணம் மூக்கைத் துளைத்தது.

அவள் அறைக்குள் சென்ருள். மேஜை நாற்காலிகள் யாவும் முன்பு அவள் விட்டுச் சென்றபடியே இருந்தன. ஆனல் புதிதாக சில பொருள்கள் காணப்பட்டன. அழகிய வர்ணச் சித்திரங்களையுடைய் பீங்கான் ஜாடிகள் பல வைக்கப்பட்டிருந்தன. சில அயல்நாட்டுப் படங்கள் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தன. ஆனல் எதுவும் முன்போல் சுத்தமாகக் காணப்படவில்லை. நாற்காலிகளின் அடியிலும் மூலைகளிலும் தூசி படிந்து கிடந்ததைக் கண்டு அவள் அதிருப்தியடைந்தாள். அவள் எழுந்து கதவருகே சென்ருள். கதவின் சட்டங்கள் திறந்து விடப்பட்டிருந்தன. அவள் கதவின் பின்புறத்தைப் பார்த்தாள்.

ஸ்ரீமான் ஊ, தமது வெளிறிய நெற்றி மேல் அங்கியின் பித்தான்களைப் போட்டவாறு உள்ளே வந்தார். அவர் குதூகலத்துடன், "அந்தக் கதவிற்குப் பின்னல் ஏதாவது இருக்கிறதா, என்ன, என்னுடைய பிள்ளைகளின் தாயே?" என்று கேட்டார்.

திரும்பி நோக்கிய அவளுடைய முகம் வெட்கத்தால் சிறிது சிவந்தது. "தூசி அடைந்திருக்கிறது. காரியஸ்தனிடம் நான் சொல்ல வேண்டும். இந்த அறை முழுவதுமே நன்ருகச் சுத்தம் செய்ய வேண்டும்" என்ருள்.

ஸ்ரீமான் ஊ, இப்போது தான் அவ்வறையை முதன்முதலாகப் பார்ப்பவர் போன்று சுற்று முற்றும் பார்த்தார். "இருக்கலாம், இங்கே நீதான் தேவையாக யிருக்கிருய்" என்ருர் அவர் ஒரு கணம் சென்று. ஆனல் அவர் இதைச் சிரித்துக் கொண்டே சற்று கேலியுடன் கூறினர். சிந்தனையில் ஆழ்ந்த அவள் அதற்குப் பதில் கூருதிருந்தாள்.

இருவரும் உட்கார்ந்து கொண்டதும், அவள் அவர் பாராதவாறு அவருடைய முகத்தைக் கவனித்துப் பார்த்தாள். அவர் மிகவும் ஆரோக்கியத்துடனும் குதூகலத்துடனும் காணப்பட்டார். இதுவே அவள் விரும்பியது. இதற்காகத் தான் அவள் பிரயத்தனம் செய்ததும்! பின் அவளுக்கு ஏன் அவரை மனம் நோகச் செய்ய வேண்டும் என்ற ஒரு குரூரமான ஆசை எழ வேண்டும்?

அவள் வெடுக்கென்று, "உங்கள் தாயாருக்கு உடம்பு சுகமில்லையே! அவரைப் பார்க்கப் போயிருந்தீர்களா!" என்று கேட்டாள்.

அவருடைய புன்சிரிப்பு மறைந்தது. "ஐயோ, இல்லையே! நான் இன்று முதல் காரியமாக என் தாயைச் சென்று பார்த்திருக்க வேண்டும். ஆனல் ஒன்றன்பின் ஒன்ருக ஏதேதோ காரியமாக....." என்ருர்.

"அவரது நிலை மிகவும் மோசமாகயிருக்கிறது" என்ருள் அவள் மீண்டும்.

"அப்படியென்ருல் நீ சொல்லுவது....." என்ருர் அவர்.

அவள் "இல்லை, இல்லை. இந்தத் தடவை ஒன்றும் நேராது. ஆனல் முடிவு காலம் இன்னும் அதிக தூரத்தில் இல்லை. அவருடைய ஆத்மா விழிப்படைய ஆரம்பித்திருக்கிறது. இனி என்ன நேரப்போகிறது என்பதைப் பற்றி அது சிந்திக்க

ஆரம்பித்து விட்டது. அவர் என்னை, இதற்குப் பிறகு மறு ஜன்மமுண்டு என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்டார். இம்மாதிரி நினைவு வர ஆரம்பித்தால், சரீரம் அழிய ஆரம்பித்து விட்டது, அதனால் ஆத்மா பீதியடைந்திருக்கிறது என்று பொருள்" என்று கூறினாள்.

"நீ அவளுக்கு என்ன கூறினாய்?" என்று கேட்ட அவர் முகத்தில் சோகம் நிறைந்திருந்தது.

"எனக்கு நம்பிக்கை இருப்பதாகத்தான் கூறினேன். ஆனால் எனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் அவள்.

அவருக்கு மிகுந்த சினம் உண்டாயிற்று. "என்ன கொடிய நெஞ்சம் உனக்கு. ஒரு கிழ ஆத்மாவிடம் எப்படி நீ உன் சந்தேகத்தைக் காட்டலாம்?" என்று கோபத்துடன் கூறினார். கூறிவிட்டு அவர் சட்டையின் மேல் பித்தானைக் கழற்றி விட்டுத் தமது கழுத்துப் பட்டையின் பின்புறமிருந்த விசிறியை எடுத்து மிகுந்த சிரத்தையுடன் விசிறிக் கொள்ளலானார்.

"தாங்களாயிருந்தால் என்ன சொல்லிருப்பீர்கள்?" என்று கேட்டாள் அவள். அவர் உரக்க, "நான் அவளுக்குத் தைரிய மூட்டியிருப்பேன். அவளுக்கு மேல் உலகத்தில் இன்பத்தைத் தவிர வேறு எதுவும் காத்திருக்கவில்லை என்று கூறியிருப்பேன். இன்னும் நான்....." என்றார்.

"இதைத் தாராளமாகத் தாங்களே போய் சொல்லலாமே" என்றாள் அவள். கோபமாக யிருக்கும் சமயங்களில் அவள் ஒருபோதும் தனது குரலை உயர்த்துவதில்லை. அதற்குப் பதில் அதில் அதிக வன்மை காணப்படும். இப்போது அவளது குரலில் கடுமையும் உஷ்ணமும் கலந்திருந்தது.

ஆனால் அவர் தமது உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, மேலும் ஆத்திரத்துடன், "ஆம், கண்டிப்பாக நான் சொல்லத்தான் போகிறேன்" என்றார்.

இருவரும் மீண்டும் சமாதானமடைய விரும்பியவர்களாய் சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். அவள் சிறிதும் அசைவற்றவளாய், தனது கைகளை மடியின் மீது வைத்தபடி, தனது மெல்லிய கழுத்தை சற்றே சாய்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவரும் அசையாமல், விசிறியை மட்டும் விடாது விசிறியபடி உட்கார்ந்திருந்தார். இருவருக்கும் தாங்கள் மற்றவர் மீது கோபம் கொண்டதைப்

பற்றி ஆச்சரியம் உண்டாயிற்று. ஆனால் இருவருக்கும் காரணம் மட்டும் இன்னதென்று விளங்கவில்லை.

அவள்தான் முதலில் பேசினாள். "நான் இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டும்" என்றாள் அதே வன்மையான குரலில்.

"சொல்லு" என்றார் அவர்.

இப்போதும் அவள் உண்மையையே தெரிவிடையாகப் பேசி விடத் தீர்மானித்தாள். "சியூமிங் நேற்றிரவு என்னிடம் வந்து அவள் கருவுற்றிருக்கும் விஷயத்தை உங்களுக்குத் தெரிவிக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டாள்" என்றாள். இப்பவும் அவள் அச்சாதாரண வார்த்தைகளையே உபயோகித்தாள். அவள் தன் தலையை உயர்த்தவோ அவரைப் பார்க்கவோ செய்யாமல் முன்போலவே அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

அவருடைய விசிறி நழுவி அவளது சில்க் ஆடைகளின்மீது உராய்ந்த சப்தம் மட்டும் காதில் விழுந்தது. அவர் வெகு நேரம் மௌனமாக யிருக்கவே அவள் கடைசியாக நிமிர்ந்து பார்த்தாள். அவர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். முகத்தில் வெட்கமும் குறும்பும் கலந்த புன்னகை தாண்டவமாட தமது வலது கையால் உச்சந்தலையைச் சுற்றிச் சுற்றித் தேய்த்துக் கொண்டிருந்தார். இச்செய்கையால், அவருக்கு வேடிக்கையும் வெட்கமும் சந்தோஷமும் ஒருங்கே உண்டாகியிருந்தது என்பதை அவள் புரிந்து கொண்டாள்.

அவள் நிமிர்ந்து நோக்கியதும் அவர் வாய்விட்டுச் சிரித்தார். "எனக்கு விஷம் கொடுத்துவிடு. என்னுடைய சாதத்தில் விஷம் கலந்துவிடு. அல்லது ஔஷதில் தங்கத்தைப் பொடியாக்கிக் கலக்கி விடு. நான் மிகவும் வெட்கமற்றவனாகி விட்டேன். ஆனால், என்னுடைய பிள்ளைகளின் தாயே, நான் உனக்குக் கீழ்ப்படிந்து நடந்ததைத் தவிர—வேறெதுவும் செய்யவில்லை" என்றார்.

அவளுடைய விருப்பத்தையும் மீறி அவளுக்கு அடிவயிற்றிலிருந்து சிரிப்பு பொங்கிக்கொண்டு வந்தது. அவளுடைய உதடுகளும் கண்களும் சிரிப்பினால் துடித்தன. "உங்களுக்கு மகிழ்ச்சி உண்டாகாததுபோல் ஏன் பாசாங்கு செய்கிறீர்கள்? நீங்கள் உங்களைப் பற்றி மிகுந்த கர்வம் கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கே தெரியும்" என்றாள்.

"ஐயோ! நான் என்ன செய்வது! என் உடலில் இன்னும் சக்தி இருக்கிறதே" என்றார் அவர்.

இருவரும் சேர்ந்து சிரித்தனர். இம்மாதிரி எத்தனையோ முறை அவர்கள் தங்கள் வாழ்வில் சேர்ந்து சிரித்திருக்கின்றனர். ஆனால் இச்சிரிப்பாகிய பாலத்தின் மூலம் அவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தனர். இச்சிரிப்பின் மூலம் அவள் ஒன்றைக் கண்டு பிடித்தாள். அவள் அவரை நேசிக்கவில்லை! மேய்ச்சன் கூறியது வாஸ்தவம்தான்! அவள் அவரை இப்போதும் நேசிக்கவில்லை. முன்பும் நேசித்ததில்லை. ஆதலால் இப்போது அவள் எவ்வாறு அவரை வெறுக்க முடியும்? அவளுடைய ஆத்மா கட்டுண்டிருந்த விலங்கின் கடைசி வங்கியும் இப்போது அறுந்து விழுந்தது. காலப் போக்கில் அவை விழுந்தபோது, ஒவ்வொரு முறையும் அவள் கடமையின் பொருட்டு அதை எடுத்துத் தனது கைகளில் மீண்டும் மீண்டும் மாட்டிக் கொண்டிருக்கிறாள். ஆனால் இனி அதற்கு அவசியமில்லை! இனி அவள் அவ்விதம் செய்ய மாட்டாள். இப்போது அவளுக்கு அவரிடமிருந்து பூரண விடுதலை கிடைத்து விட்டது.

சிரிப்பு ஓய்ந்ததும் அவள், "இதோ, நான் சொல்வதைக் கேளுங்கள்! நீங்கள் அவளிடம் மிகவும் அன்பாக இருக்க வேண்டும்" என்றாள்.

"நான் எப்போதும் எல்லோரிடமும் அன்பாகத்தானிருக்கிறேன்" என்றார் அவர் அழுத்தம் திருத்தமாக.

"தயவு செய்து ஒரு நிமிஷம் விளையாடாதிருங்கள். இது அவளுடைய முதல் குழந்தை. இப்போது அவளை அதிகம் தொந்திரவு செய்யாதீர்கள். அவள் சுவற்றின் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கும் வரை அவளிடம் போகாதீர்கள்" என்றாள்.

அவர் தமது தலையைக் குறும்பாக ஆட்டிக்கொண்டு, "ஒரு வேளை ஒரு வேலை மகள் வைத்திருப்பது போதாதோ என்னமோ" என்று அவளைக் கேலி செய்து, தமது நாக்கின் நுனியால் மேலுதட்டைத் தொட்டுக் கொண்டார்.

ஆனால் இனி அவர் சொல்வது எதுவும் அவள் மனதை நோகச் செய்யாது. அவள் புன்னகை புரிந்து, "சரி, இப்போது நீங்கள் உங்கள் தாயாரைப் பார்க்கச் செல்லலாம். அவளுடைய ஆத்மாவைப் பற்றிப் பேசுவதை விடுத்து, உங்களுக்கு இன்னொரு மகன் பிறக்கப் போகிறான் என்ற விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றாள்.

*

பெரிய எஜமானி தன்னுடைய மகன் கொண்டு வந்த செய்தியைக் கேட்டுகூட உற்சாகமடையவில்லை. தன் அறைக்குத் திரும்பிச் சென்ற ஸ்ரீமதி ஊ வழியில் குழந்தைகளுடன் விளையாடுவதில் சற்று நேரம் தாமதித்து விட்டுப் பிறகு தன்னறையை நோக்கிச் சென்றபோது, இங் அவசரமாக அவளைக் கூப்பிடுவதற்காக வந்தான்.

"பெரியம்மாளின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்கள் மிகவும் பயந்துபோய், உங்களைக் கூப்பிடுகிறார்கள் அம்மா. எஜமானரும் அங்குதானிருக்கிறார். அவரும் உங்களைக் கூப்பிடுகிறார்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ உடனே விரைந்து கிழவியிருக்குமிடத்திற்குச் சென்றாள். அங்கு ஸ்ரீமான் ஊ உட்கார்ந்துகொண்டு தாயாரின் உணர்விழந்த கைகளைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவளைப் பார்த்ததும் அவர், "அவள் தவறுதலாக மறுபுறம் சாய்ந்து விட்டாள். ஐயோ, இப்படிச் செய்து விட்டாளே என்னம்மா" என்று புலம்பினார்.

கிழவியின் கண்களில் ஓர் ஒளி தோன்றியது. ஆனால் அவளால் பேச முடியவில்லை. அவள் விம்மியழுபவள்போல் வாயைத் திறந்து முகத்தைச் சுளித்தாள். ஆனால் அவளுடைய வாயிலிருந்து சப்தமோ அல்லது கண்களிலிருந்து கண்ணீரோ வரவில்லை. அவள் தன் மருமகளைப் பார்த்துப் பரிதாபகரமாக விழித்தாள்.

தனது மாமியார் முன்னிலும் அதிகமாகப் பீதியடைந்திருக்கிறாள் என்பதை ஸ்ரீமதி ஊ கண்டாள். அவள் தாழ்ந்த குரலில், தன்னைத் தொடர்ந்து வந்த இங்கிடம், "கொஞ்சம் ஒயின் கொண்டுவா, அவருடைய உடலுக்குச் சற்று உஷ்ணமுண்டாக்கினால்தான் தன்னுணர்வு வரும். 'கேன்டன் ஒயினில்' கொஞ்சம் எடுத்து அதை விரைவாகச் சுடவைத்துக் கொண்டு வா. வாயிற் காப்போனிடம், டாக்டரை அழைத்து வரும்படிச் சொல்" என்றாள்.

பெரியம்மாள் கெஞ்சுபவள்போல் ஸ்ரீமதி ஊவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் அழுகை பொங்கி நின்றது.

ஸ்ரீமதி ஊ, ஆதரவுடன், "இங் குடான ஒயின் கொண்டு வருவதற்காகச் சென்றிருக்கிறான். அதைக் குடித்தால்

உங்களுக்குத் தெம்பாக யிருக்கும். அம்மா, நீங்கள் பயப்படாதீர்கள். பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. உங்களைச் சுற்றி எல்லாம் எப்பொழுதும் போலவே நடந்து கொண்டிருக்கின்றன. குழந்தைகள் எல்லோரும் வெளியே விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். பணிப் பெண்கள் அவரவர் வேலையைச் செய்து கொண்டிருக்கின்றனர். சமையல் அறையில் மாலைச் சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையானது இத்தனை நாளும் சென்றதுபோலவே இப்போதும் சென்று கொண்டிருக்கிறது. இனியும் இப்படியே சென்றுகொண்டேயிருக்கும். நம்முடைய மூதாதையர்கள் இவ்வீட்டைக் கட்டி வாழ்ந்தனர். நாமும் நமக்குரிய காலத்தை இதில் கழித்து விட்டோம். நமக்குப் பிறகு நமது குழந்தைகள் இதில் வாழ்க்கை நடத்துவார்கள். வாழ்க்கை ஆதியந்தமில்லாமல் தொடர்ந்து சென்று கொண்டேயிருக்கிறது, அம்மா" என்று கூறினாள்.

கீதம் இசைப்பது போன்றிருந்த அவளது இனிய குரல் அமைதி நிறைந்த அவ்வறையில் கணீரென்று ஒலித்தது. இதைச் செவியுற்றதும் கிழவியின் முகத்தில் குடிகொண்டிருந்த பீதியும் அழுகையும் மெல்ல மறைந்து அவளுடைய முகபாவமும் மாறியது. அவள் இப்போதுதான் நன்கு சுவாசிக்க ஆரம்பித்தாள். பீதியினாலும் துக்கத்தினாலும் அவளுடைய மூச்சே தடைபட்டு நின்று விட்டது போலிருந்தது.

இங், ஒரு நீண்ட மூக்கையுடைய ஜாடியில் சூடான பானத்தை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள். ஸ்ரீமதி ஊ ஜாடியின் மூக்கை, கிழவியின் திறந்த வாய்க்குள் வைத்து, கொஞ்சம் கொஞ்சமாக பானத்தை வாய்க்குள் ஊற்றினாள். மூன்று முறை கிழவி அதை விழுங்கினாள். அவளுடைய கண்களில் சற்றே மலர்ச்சிக் குறி தோன்றியது. அவள் மற்றொரு முறை விழுங்கி விட்டு, "இப்போது தேவலாம்....." என்று மெல்ல முனகினாள்.

பிறகு அவள் திடீரென்று கோபமும் ஆச்சரியமும் நிறைந்த ஒரு பார்வை பார்த்தாள். சூடான பானம் அவளுடைய வயிற்றில் போய்ச் சேருவதற்கும் அவளுடைய பிடிவாதம் நிறைந்த இருதயத்தின் துடிப்பு நிற்பதற்கும் சரியாக யிருந்தது. அவளுடைய உடல் ஒரு முறை குலுங்கியது. பானம் வாயிலிருந்து வழிந்து தலையணையைக் கரைபடுத்தியது. பெரிய எஜமானியின் ஜீவன் விடுதலை பெற்றுச் சென்று விட்டது.

"ஐயோ, அம்மா" என்று ஸ்ரீமான் ஊ ஒன்றும் தோன்றாதவராய் அலறினார்.

"ஜாடியை எடுத்துவிடு" என்று ஸ்ரீமதி ஊ இங்கிற்கு உத்தரவிட்டாள் கடுமையாக. அவள் குனிந்து, தன்னுடைய சில்க் சுக்குட்டையால் பெரிய எஜமானியின் வாயைத் துடைத்தாள். பிறகு இரு கைகளாலும் அவளுடைய வலி விழுந்த தலையைத் தூக்கித் தலையணையின்மீது வைத்தாள்.

"உயிர் போய்விட்டது" என்று கூறினாள்.

"ஐயோ, என்னம்மா?" என்று மீண்டும் புலம்பிய ஸ்ரீமான் ஊ வாய்விட்டு உரக்க அழ ஆரம்பித்தார். அவளும் அவரைத் தடை செய்யவில்லை. இறந்தவர்களுக்காக உடனே செய்ய வேண்டிய காரியங்கள் பல இருந்தன. பெரிய எஜமானியைப் போன்ற வயதானவர்களின் சரீரத்திலிருந்து அதில் வாழ்ந்து வந்த ஏழு ஆவிகளும் உடனே அதை விட்டுப் போய் விடாது. இந்த ஆவிகளெல்லாம் உடலிலிருந்து வெளியே வந்து வீட்டிற்குத் தீமை செய்யாமலிருக்கும் பொருட்டு மந்திரங்களை உச்சாடனம் செய்து, பிணத்திற்குரிய சடங்குகளையெல்லாம் செய்ய வேண்டியதவசியம். அதற்குப் புரோகிதர்களை வரவழைக்க வேண்டும். ஸ்ரீமதி ஊவைப் பொருத்தவரை, அவளுக்கு இந்தப் புரோகிதர்களிடமும், அவர்களுடைய கடவுளிடமும் நம்பிக்கை கிடையாது. ஸ்ரீமான் ஊ அழுதவாறு தமது தாயாரின் கையை அன்போடு தடவிக் கொண்டிருந்ததைப் பார்த்தவாறு அவள் நின்றிருந்தாள். அவள் உள்ளத்தில் அப்போது ஏனோ சகோதரர் ஆண்ட்ரூவைக் கூப்பிட்டு, இம்மாதிரியான கெட்ட ஆவிகளை வீட்டை விட்டுத் துரத்தும்படியான காரியத்தைச் செய்யச் சொல்லவேண்டுமென்ற தீவிர ஆவல் உண்டாயிற்று. ஆனால் அவ்விதம் செய்தால் அது குடும்பத்தவர்களுக்குத் திருப்தியை அளிக்காது. இதற்குப் பிறகு ஒரு வருடம் கழித்து, இவ்வீட்டில் ஒரு குழந்தைக்கு நோய் உண்டானாலுங்கூட, பெரியம்மாவின் சரீரத்தைச் சேர்ந்த ஆவிகளைக் கவனியாமல் விட்டதால்தான் அது ஏற்பட்டது என்ற பழி உண்டாகும். ஆம், குடும்பத்தினரை உத்தேசித்து, அவள் பழைய வழக்கங்களையே கையாளுவதுதான் நல்லது.

அவள் இங்கை நோக்கி, "புரோகிதர்களைக் கூப்பிட்டனுப்பு. உடலைக் கெடாமல் பாதுகாப்பதற்காக வைத்தியரையும் வரச் சொல்லியனுப்பு" என்றாள்.

• "நான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு இங் வெளியே சென்றாள்.

"வாருங்கள், என் பிள்ளைகளின் தகப்பனுரே. நாம் சிறிது நேரம் அம்மாவைத் தனியே விட்டுச் செல்வோம். வேலைக் காரப் பெண்கள் உடலைக் கழுவி வேறு ஆடைகள் அணிவிக் கட்டும். புரோகிதர்கள் சடங்குகளைச் செய்வதற்காக வந்து விடுவார்கள், வைத்தியர்களும் வந்து உடலிற்குத் தைலம் பூசுவார்கள். நீங்கள் தூர வாருங்கள்" என்று அழைத்தாள் ஸ்ரீமதி ஊ.

அவர் பேசாமல் எழுவே, இருவருமாகச் சேர்ந்து வெளியே சென்றனர். அவள் அவர் அருகே மௌனமாக நடந்து வர, அவர் இன்னமும் விம்மியழுதவாறு ஆடையினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வந்தார். அவள் பெருமூச்செறிந்தாள். ஆனால் அழவில்லை. அவள் அழுது எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டன. தன் கண்களில் கண்ணீரே வறண்டுவிட்டது போல் அவளுக்குத் தோன்றியது. அவள் பெருமூச்செறிந் ததைக் கேட்டதும் அவர் தமது கையை நீட்டி அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டார். இவ்விதம் கைகோர்த்தவாறு இருவருமாக அவருடைய பகுதியை நோக்கிச் சென்றனர். அங்கு அவள் அவருடன் உட்கார்ந்து, அவர் தமது தாயாரைப் பற்றிய நினைவுகளையெல்லாம் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவருடைய தாய் எவ்வாறு அவரை அவருடைய தந்தை கொடுக்கும் தண்டனைகளிலிருந்து காப் பாற்றுவாள், அவருடைய தந்தை அவரைப் படிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தி உட்கார வைக்கும்போது எவ்விதம் அவள் அவருக்குத் தெரியாமல் வந்து, தின்பண்டங்கள், மதுபானம், பழங்கள் இவற்றை யெல்லாம் கொடுப்பாள், விடுமுறை தினங்களில் எவ்வாறு அவரை நாடகக் கொட்டகைகளுக்கு அழைத்துச் செல்வாள், அவர் நோயுற்றிருக்கும் சமயங்களில் எவ்விதம் அவரை மகிழ்விக்கும் பொருட்டு வித்தைக்காரர் களைக் கூப்பிட்டு வேடிக்கைகள் செய்யச் சொல்வாள், அவருக்குப் பல்வலி ஏற்படும்போது எவ்விதம் கஞ்சா புகை யிழுப்பதற்கு அனுமதிப்பாள் என்பன போன்றவற்றை அவர் கூறிக்கொண்டிருந்தார்.

கடைசியாக அவர், "அவள் மிகச் சிறந்த ஒரு தாய் என்பதில் சந்தேகமில்லை. அவள் தானும் எப்போதும் குதூகலமாயிருப்பாள். என்னையும் எப்போதும் குதூகலப் படுத்துவாள். அவள்தான் எனக்கு வாழ்க்கையை அனுபவிப் பதற்குக் கற்றுக் கொடுத்தவள்" என்று கூறினார்.

இதையெல்லாம் ஸ்ரீமதி ஊ மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு அவரைச் சாப்பிடச் செய்து, சற்று

அதிகமாகவே மது அருந்தும்படி வற்புறுத்தினாள். அவள் குடி வெறியை மிகவும் வெறுத்தாள். ஆயினும் அது சில சமயங் களில் துயரத்தின் கொடுமையைத் தணிப்பதற்கு மிகவும் உதவுகிறது அல்லவா! அவர் அவள் வரவழைத்த உயர்ந்த ரக ஒயினை அதிகமாகக் குடித்தார். குடிக்கக் குடிக்க அவருடைய பேச்சின் வேகமும் அதிகரித்தது. அவர் சொன்னதையே திருப்பித் திருப்பிக் கூறலானார். கடைசியாக அவர் தமது தலையை, மார்பின்மீது சாய்த்துக் கொண்டு உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்.

பிறகு அவள் எழுந்து சப்தம் செய்யாமல் முன்பு தன் சொந்த அறையாகயிருந்த அவ்வறையை நோக்கிச் சென்றாள். படுக்கையின் சேலை திரைகளை அகற்றி விட்டுப் பார்த்தாள். அங்கு சுவற்றின்புறம் திரும்பி படுத்துக்கொண்டிருந்தாள் சியூமிங். அவள் தலையின் பின்புறம் மட்டுமே தெரிந்தது.

ஸ்ரீமதி ஊ மெல்லிய குரலில், "சியூமிங், நீ தூங்கிக் கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டாள்.

சியூமிங் திரும்பிப் பார்க்கவும் அவளுடைய கண்கள், இருளில் பளபளவென்று தெரிந்தன.

"சியூமிங், இன்று இரவு நீ இங்கே தூங்க வேண்டிய தில்லை. நம்முடைய பெரிய எஜமானி மேல் உலகத்தை நோக்கிச் சென்று விட்டாள். அவர் துயரத்திலும், குடிமயக்கத் திலும் ஆழ்ந்திருக்கிறார். எழுந்திரு, குழந்தாய்" என்று அவள் அழைத்தாள்.

சியூமிங் வாய் திறவாது பணிவுடன் படுக்கையிலிருந்து எழுந்து வந்தாள்.

"நான் எங்கே போவது?" என்று கேட்டாள் பணிவாக.

ஸ்ரீமதி ஊ சற்று தயங்கி விட்டுக் கடைசியில், "நீ என் னுடைய அறைக்குப் போகலாம். நான் இன்றிரவு தூங்க மாட்டேன். பெரியம்மாவின் அருகேயிருந்து நான் எல்லா வற்றையும் கவனிக்க வேண்டும்" என்றாள்.

சியூமிங் தாழ்ந்த குரலில், "அப்படியானால் நானும் கூட இருந்து பார்க்கிறேன். தூங்க விரும்பவில்லை" என்றாள்.

"ஆனால் நீ சிறியவள்! நீ இரவு முழுவதும் விழித்திருக்கக் கூடாது. உன்னுடைய வயிற்றிலிருக்கும் ஜீவனையும் நீ கவனிக்க வேண்டுமல்லவா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"நான் உங்களுடனேயே இருக்கிறேனே" என்று சொல்லினாள் சியூமிங்.

ஸ்ரீமதி ஊ, அதை மறுக்க முடியாமல், "சரி, அப்படியே செய்" என்றாள்.

பிறகு ஸ்ரீமதி ஊ, தனது கணவரைப் படுக்கையில் படுக்கச் செய்து, தானே திரைகளை இழுத்து விட்டு விட்டு, தனது அன்றைய கடமையைச் செய்து முடிக்கும் பொருட்டுச் சென்றாள். இரவாகியதும் அங்கு உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் படுக்கச் சென்றனர். வேலை யாட்களும் வயதான உறவினர்களும் மட்டும் உறங்கவில்லை. பெரிய எஜமானியின் உடலைக் குளிப்பாட்டி ஆடைகள் அணிவித்தாகி விட்டது. ஸ்ரீமதி ஊ அக்காரியங்களை மேற் பார்த்தவாறு அருகே நின்று கொண்டிருந்தாள். சியூமிங் மௌனமாக அவளுக்குத் தேவையான சாமான்களை எடுத்துக் கொடுப்பதில் ஈடுபட்டிருந்தாள். சுறுசுறுப்பும் புத்திசாலித் தனமும் கொண்ட அப்பெண், வாய் திறந்து சொல்லு முன்னரே எந்த விருப்பத்தையும் அறிந்து கொண்டாள். ஆயினும் ஸ்ரீமதி ஊவிற்கு, சியூமிங் சிறிதும் வருத்தம் கொள்ள வில்லை என்பது தெற்றென விளங்கியது. இம்மரணம் அவளைச் சிறிதும் பாதிக்கவில்லை. அவளுடைய முகம் வாடியிருந்ததே யொழிய அதில் விசனம் காணப்படவில்லை. மற்றவர்களைப் போல் அவள் அழுவதுபோல் பாசாங்கும் செய்யவில்லை.

அவளைப் பார்த்தவாறு ஸ்ரீமதி ஊ, 'அவள் மனம் இன்னும் இக் குடும்பத்தோடு ஒட்டவில்லை. ஆனால் குழந்தை பிறந்தால் அவள் அவளை இதோடு பிணைத்து விடுவாள்' என்று எண்ணமிட்டாள்.

இவ்வாறாக, ஒரு தலைமுறை தன்னுடைய கடமைகள் யாவையும் பூர்த்தி செய்துகொண்டு விடைபெற்றுச் சென்று விட்டது. இனி, அந்நான்கு சுவர்களுக்கு உட்பட்டபாகத்திற்கு ஸ்ரீமதி ஊவும் அதற்கு வெளியே ஸ்ரீமான் ஊவுமே தலைவர் கள். பெரிய எஜமானியின் உடல் உடனே புதைக்கப்பட்டு விடவில்லை. ஜோதிடர்களைக் கேட்டதற்கு, அவர்கள் சரத் காலத்தின் நடுவேதான் ஒரு நல்ல நாள் வருகிறது என்று கூறினார்கள். ஆதலால் செய்ய வேண்டிய கர்மங்கள் எல்லாம் செய்தாகியதும் மிழலையைப் புனுகு மரத்தினாலான பெட்டியில் அடக்கம் செய்து, அச் சவப்பெட்டியை அருகேயிருந்த தங்களது கோவிலில் கொண்டு வைத்தார்கள். ஆதலால், பெரியம்மான் தங்களைவிட்டு வெகு தூரம் போய்விட்டான்

என்பதை குழந்தைகள் முதற்கொண்டு யாரும் உணரவில்லை. குழந்தைகள் விளையாட்டின் நடுவே கோவிலுக்குள் ஓடிச் சென்று பார்ப்பர்.

அவர்கள், "பாட்டி, பாட்டி, நாங்கள் கூப்பிடுவது உன் காதில் விழுகிறதா?" என்று கேட்பார்கள்.

பிறகு அவர்கள் பதிலுக்காகக் காதுகொடுத்துக் கவனிப்பர். சில சமயங்களில் அவர்களுக்கு ஒன்றுமே கேட்காது. காற்று பலமாக வீசும் நாட்களில் அவர்கள் ஒருவர்க்கொருவர் பாட்டி தாங்கள் கேட்டதற்குப் பதில் கூறினாள் என்று பேசிக்கொள்வார்கள்.

"பாட்டி என்ன கூறினாள்?" என்று ஸ்ரீமதி ஊ ஒரு நாள் ஒரு சிறு பெண்ணைக் கேட்டாள்.

அச் சிறுமி யோசனையுடன், "அவள் குழந்தைகளே, எல்லோரும் சென்று விளையாடுங்கள். சந்தோஷமாகயிருங்கள் என்று கூறுகிறாள். ஆனால் பெரியம்மா, பாட்டியின் குரல் மிகவும் மெதுவாகவும் தூரத்திலிருந்து வருவது போலவும் இருக்கிறது. சவப் பெட்டியில் அவள் திருப்தியாக இருக் கிறாளா?" என்று கேட்டாள்.

"ஓ! மிகவும் சௌக்கியமாகயிருக்கிறாள். சரி, இப்போது பாட்டியின் வார்த்தைப்படி நடந்துகொள்ளுங்கள். போய் விளையாடுங்கள். எப்போதும் குதூகலமாகயிருக்க வேண்டும், குழந்தாய்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

* * *

பெரிய எஜமானியின் மரணத்திற்குப் பின் சிறிது நாள் வரை குடும்பமே ஸ்தம்பித்துப்போய் நின்றுவிட்டது போலி ருந்தது. ஒவ்வொரு தலைமுறையும் காலத்திலும் இடத்திலும் வெகுதூரம் முன்னே தள்ளி வந்துவிட்டது போலிருந்தது. அவளுடைய மரணம் எல்லோரையும் முடிவை நோக்கி இன்னொரு அடி எடுத்து வைக்கச் செய்தது. ஸ்ரீமான் ஊ துக்கம் காக்க வேண்டிய நாட்களெல்லாம் கழிந்து, துக்கத்தைக் குறிக்கும் ஆடைகளை அணிவதை நிறுத்திய பிறகும், முன்புபோல் காணப்படவில்லை. அவருடைய முகத்தில் வயதான தோற்றமும் கவலையும் படர்ந்திருந்தது. இப்போதெல்லாம் அவர் சிற்சில சமயங்களில் ஸ்ரீமதி ஊவின் அறைக்கு வந்து தங்கள் இருவரது தலைமையின்கீழிருந்த அக் குடும்பத்தின் நிலவரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க லானார். அவர் தாம் ஒரு சிறந்த மகனைத் தமது தாய்க்கு

இருக்கவில்லை என்பதாக எண்ணிக்கொண்டு மிகவும் வருத்தப் பட்டார். இருவருமாகச் சேர்ந்து, விளைச்சல் விவரங்களைப் பற்றியும் நாளுக்கு நாள் சர்க்கார் வரிகளை ஏற்றிக்கொண்டு போவதைப் பற்றியும் பேசுவார்கள். பிறகு செலவு விஷயங் களைப் பற்றி விவாதிப்பார்கள். அதற்குப் பிறகு தங்கள் பிள்ளைகளைப் பற்றியும் பேரக் குழந்தைகளைப் பற்றியும் பேசி முடிப்பார்கள். இவைகளெல்லாம் முடிந்ததும் ஸ்ரீமான் ஊ தமது தாயை நினைத்துக்கொண்டு வருந்துவார்.

அவர் ஸ்ரீமதி ஊவிடம், "நீ எப்போதும் அவளிடம் மிக நன்றாக நடந்துகொண்டாய். நான் அவளை அதிகமாக நினை யாமலே இருந்துவிட்டேன்" என்பார்.

ஸ்ரீமதி ஊ அவருக்கு ஆறுதல் கூறுவாள். "எப்படி ஒருவரால் தமது சொந்தத் தாயை மறக்கமுடியும்? உங்களுக்கு அவள் உயிருட்டினாள். நீங்கள் உயிரோடிருப்பதே அவளை நினைப்பதற்காகத்தானே. உங்களுக்கு அவள் சரீரத்தை அளித்தாள். நீங்கள் உண்டு உறங்கி, உடலினால் எவ்வித வேலை செய்தாலும் அது அவளுக்காகத்தான். நான் என் னுடைய பிள்ளைகள் அடிக்கடி என்னிடம் ஓடிவந்து, "அம்மா, இதோ, இதைப் பார். அம்மா, இதைப் பார்" என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பவில்லை. அவர்கள் சுகமாக வாழ்ந்து, சந்தோஷமாக மணந்து குழந்தை களைப் பெற்றுப் பெருக்கினால் அதுவே அவர்கள் எனக்கு அளிக்கும் பரிசு. என்னுடைய வாழ்க்கை அவர்களால் பூரண மடைகிறது. அது போலவேதான் உங்கள் தாயாரின் வாழ்க்கையும்! அவள் உங்கள் மூலமாகவும் உங்களுடைய பிள்ளைகளின் மூலமாகவும் நிரந்தரமான வாழ்வைப் பெறு கிறாள்" என்று கூறுவாள்.

"நீ அப்படியா நினைக்கிறாய்?" என்பார் அவர் எல்லா வற்றையும் கேட்டுவிட்டு. பிறகு மனம் சமாதானமடைந்த வராய் அவர் அவளை விட்டுச் சென்று விடுவார்.

தனியே விடப்பட்டதும் அவள் பல விஷயங்களைப் பற்றி சிந்தனை செய்வாள். இப்போது அவளுடைய வாழ்க்கையில் இருந்து வந்த இரண்டு பாகங்கள் முன்னிலும் அதிகமாகப் பிரிந்து காணப்பட்டன. ஒன்று இவ்வீட்டிற்குள் வசித்து வந்தது. மற்றொன்று அவளுடைய உள்ளத்தில் தனியே இருந்து வந்தது. ஒவ்வொரு சமயங்களில் ஒவ்வொரு பாகம் அவ ளுடைய கவனத்தை ஆக்ரமித்து வந்தது. குடும்பத்தில் அமைதி நிலவிய காலங்களில் அவள் ஆனந்தமாகத் தனியே

வாழ்ந்து வந்தாள். ஏதாவது கஷ்டங்கள் நேர்ந்தபோது அவள் குடும்பத்தில் கவனம் செலுத்தி, தனக்குத் தெரிந்த வகையில் அதைச் சீர்திருத்தினாள்.

* * *

இலையுதிர் காலத்தின் இடையே, அவளுக்கு வீட்டில் மறு படியும் புகைச்சல் உண்டாவது தெரிய வந்தது. அதை மூளியிலேயே கிள்ளி எறியாவிட்டால் அது மிகவும் பெரிதாகி விடும் என்பது அவளுக்குத் தெரியும். லின்யியிக்கும் பெங்மோ விற்குமிடையே சச்சரவு ஏற்பட்டிருந்தது. ஒருநாள் வீட்டை மேற்பார்வையிடச் சென்றிருக்கையில் அவர்கள் மனஸ்தாபம் கொண்டிருப்பது அவளுக்குத் தெரிய வந்தது. லின்யி அழகியாக யிருந்தபோதிலும் மிகவும் துப்பு கெட்டவளாக யிருந்தாள். அவளுடைய பகுதியில் ஒழுங்கினைம்தான் குடி கொண்டிருந்தது. தன்னுடைய சினேகிதியின் பெண்ணு யிற்றே என்று ஸ்ரீமதி ஊ முதலில் இதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. ஸ்ரீமதி கேங்காலேயே தனது பெரிய குடும் பத்தைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்க முடிய வில்லை என்பதை அவள் அறியாதவளல்ல. ஆதலால் அவளுடைய பெண்களும் ஸ்ரீமதி ஊவைப்போல் அவ்வளவு கவனமாக இருக்கமாட்டார்கள் என்பதும் எதிர்பார்க்க வேண்டியதுதானே!

மெங்கும் ஸ்ரீமதி கேங்கின் பெண்ணுதலால், லின்யியைக் கண்டிப்பதைவிட அவளுடைய தமக்கையிடமே கலந்து பேசுவது உசிதம் என்று கருதி அவளிடம் சென்றாள்.

அவள் சென்றபோது காலை அதிக நேரமாகியிருந்த போதிலும் அப்போதுதான் மெங் தலைவாரிக் கொண்டிருந் தாள். அவ்வீடு தூங்கி வழிந்து கொண்டிருந்தது. மெங் இவ்வளவு தாமதமாகத் தலைவாரிக் கொண்டிருக்கிறாள் என்ப தற்காக ஸ்ரீமதி ஊ அவளை ஒன்றும் கூறவில்லை. தங்கையைக் கண்டித்தால் அதுவே அக்காவிற்கும் ஒரு நல்ல பாடமாகும் அல்லவா!

ஸ்ரீமதி ஊவைக் கண்டதும் மெங் அவசரமாகத் தனது கேசத்தை ஒதுக்கிப் பிடித்துக்கொண்டு, "அம்மா! நீங்களா! நான் இன்னும் தலைகூட வாரிக் கொள்ளாமலிருக்கிறேன். இதோ, நான் முடிந்து கொண்டு விடுகிறேன்" என்றாள் வெட்கத்துடன்.

"இல்லை, குழந்தாய்! அதை ஒழுங்காக வாரிமுடித்துக் கொள்" என்று ஸ்ரீமதி ஊ கூறிவிட்டு ஒரு ஆசனத்தில்

அமர்ந்து கொண்டாள். வேலைக்காரி மெங்கின் நீண்ட கரிய கூந்தலை வாரலானாள். ருலானும் லின்யியும் தலை மயிரைக் கழுத்தோடு வெட்டி விட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் மெங் பழைய பாணியிலேயே தனது கூந்தலை அலங்கரித்துக் கொண்டாள்.

"இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன பிரசவத்திற்கு?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"மாதக் கணக்குப்படி இன்னும் பதினேழு நாட்கள் இருக்கின்றன, அம்மா, நீங்கள் ஏதாவது எனக்கு வழி சொல்லுங்கள். முதல் தடவை நான் என்ன பாடுபட்டு விட்டேன், அம்மா" என்றாள் மெங்.

அவ்வேலைக்காரி, "என்னுடைய குழந்தைகள் எல்லாம் நான் என் புருஷனோடு வயலில் வேலை செய்து கொண்டிருந்த போதே பிறந்து விட்டன" என்று கூறினாள்.

அவளை அவர்களுக்கு வெகு நாட்களாகத் தெரியும். அவள் ஊ நிலங்களிலிருந்து வந்தவள்தான். இப்போதும் வேனிற் காலங்களில் அவள் நிலத்திற்குச் சென்றுவிட்டு அறுவடைகளெல்லாம் முடிந்த பிறகுதான் வருவாள். குளிர் காலம், மழைக் காலம் இவைகளில் வீட்டில் தங்கி வேலைகள் செய்வாள். அவள் ஒரு விதவையாகி விட்டதால் அவளைக் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்திருந்தது. ஆனால் அவள் நிலத்தின் மீது வைத்திருந்த ஆசையினால் வருஷத்தில் ஒருமுறை அங்கு சென்று வருவாள்.

ஸ்ரீமதி ஊ மெங்கைப் பார்த்து, "இரண்டாவது குழந்தைக்கு உனக்கு அவ்வளவு சங்கடம் ஏற்படாது. ஆனால் வீட்டிற்குள் சொகுசாக வளர்ந்த பெண்கள், திறந்த வெளிகளில் சுதந்திரமாக வளரும் பெண்களைப்போல் சுலபமாகப் பிரசவிக்க முடியாது" என்றாள்.

மெங் வெகுளியாக, "லின்யி என்னைவிடச் சுலபமாகப் பிள்ளை பெறுவாளா?" என்று கேட்டாள்.

"இல்லை, அவளாலும் முடியாது! ஏனெனில் அவள் அதிகம் படித்திருக்கிறாள் அல்லவா" என்றாள் அவ்வேலைக்காரி.

ஸ்ரீமதி ஊ நகைத்துவிட்டு, "அது உண்மையல்ல பெண்ணே. நான் கூடத்தான் லின்யியைப்போல் அவ்வளவு படித்திருக்கிறேன் என்று சொல்லலாம். நான் சுலபமாகத்

தான் பிள்ளைகளைப் பெற்றேன். ஆனால் நான் வாழ்க்கையில் எவ்வளவோ பாக்கியங்களை அடைந்திருக்கிறேன்" என்றாள்.

"ஆ! உங்களைப்போல் வேறொருவர் இருக்க முடியுமா? ஒரு சிலருக்குத்தான் இவ்விதம் கடவுளின் கருணை பூரணமாகக் கிடைக்கிறது" என்றாள் அப் பணிப்பெண்.

மெங் திடீரென்று, "லின்யி தனக்கு குழந்தை பிறக்க வேண்டியதில்லை என்கிறாள். லின்யி மேலும் தான் பெண் மோவை மணந்து கொள்ளாமலிருந்தால் நன்றாக இருக்கும் என்கிறாள்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ திடுக்குற்று நிமிர்ந்து பார்த்தாள். "மெங், ஜாக்கிரதையாகப் பேசு" என்று மொழிந்தாள்.

"இது உண்மைதான் அம்மா" என்று கூறிய மெங், வேலைக்காரியை நோக்கி ஆத்திரத்துடன் தரையில் காலை உதைத்தவாறு, "ஏன் என் மயிரைப் பிடித்து இழுக்கிறாய், கழுதை" என்று கத்தினாள்.

அவ்வேலைக்காரி, "நான் என்ன செய்வது! என்னை இவ்விதம் பயமுறுத்தி விட்ட உன் தங்கையைக் குறைகூறு. இம்மாதிரி ஒரு பெண் தனக்குக் குழந்தை வேண்டாம் என்று சொல்வதை நான் கேட்டதேயில்லை. விலைமகளிர்தான் தங்கள் அழகு குறைந்து விடுமே என்று பயந்து குழந்தை வேண்டாமென்பார்கள். ஆனால் இவ்வீட்டில் அவர்கள்கூட குழந்தை பெறுகிறார்களே" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ வேலைக்காரியின் இப்பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "மெங், நான் உன் தங்கை மிகவும் துப்பற்றவளாக இருக்கிறாளே என்று உன்னிடம் சொல்லி அவளை எவ்விதம் திருத்துவது என்று கேட்டுப் போகலாம் என்று வந்தேன். ஆனால் நீ சொல்வது, அறையை அலங்கோலமாக வைத்திருக்கும் விஷயத்தைக் காட்டிலும் அதிக விபரீதமான அல்லவா இருக்கிறது? நான் இவர்களுடைய விஷயத்தில் முன்னமே கவனம் செலுத்தி இருக்க வேண்டும். பெரியம்மாளின் காரியங்களைக் கவனிப்பதில் ஈடுபட்டு இருந்து விட்டேன். உனக்கு இது எப்படித் தெரிய வந்தது என்பதைச் சொல்லு" என்றாள்.

"லின்யியே தான் என்னிடம் கூறினாள்" என்றாள் மெங். அவ்விருவரும் வேலைக்காரி இருப்பதைப் பொருட்படுத்தவில்லை. பார்க்கப்போனால் ஒளிப்பதற்கு என்ன இருக்கிறது?

இவ்வீட்டில் என்னென்ன நேருகிறதோ, அதை வேலைக்காரர் களும் பார்க்க வேண்டியதும் தெரிந்து கொள்ள வேண்டியதும் நியாயம்தானே! அதில் அவர்களுக்கும் ஒரு பங்கு இருக்கிற தல்லவா?

"லின்யி உன்னிடம் என்ன சொன்னாள்?" என்று அதிகாரத்துடன் கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

மெங், "இம்மாதிரியான பெரிய வீடுகளை அவள் மிகவும் வெறுக்கிறாளாம். இதில் ஏன் கல்யாணம் செய்துகொண்டோம் என்று இருக்கிறதாம் அவளுக்கு. பெங்மோ அவளுக்கு உரிய வனாக இல்லாமல் குடும்பத்திற்கு உரியவனாக இருக்கிறானும். அதேபோல் அவளும் அவனுக்குரியவளாக யில்லாமல், அவளிஷ்டத்திற்கு விரோதமாக குடும்பத்திற்கே உரியவளாக யிருக்கிறாளாம். இவ்வீட்டை விட்டு வெளியேறிச் சென்று, தனிக் குடித்தனமாக வாழ வேண்டுமென்று அவள் விரும்பு கிறாள் என்று தெரிகிறது" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊவிற்கு தன் காதால் கேட்பதை ஒன்றையும் நம்பவே முடியவில்லை. "தனிக்குடித்தனமா? ஆனால் சாப்பாட் டிற்கு என்ன செய்வார்களாம்?" என்று வினவினாள்.

"பெங்மோ இன்னும் ஆங்கிலத்தில் அதிகத் தேர்ச்சி பெற்றானால் அவன் வேலை செய்து சம்பாதிக்கலாம் என்று அவள் சொல்லுகிறாள்."

"அவன் அதிக ஆங்கிலம் கற்க வேண்டும் என்று விரும்பு கிறாளா?"

"அதன் மூலம் அவன் சம்பாதித்தால், அதைக்கொண்டு இருவரும் தனியாக வசிப்பார்களாம்" என்றாள் மெங்.

"ஆனால் அவர்களுக்கு இங்கு ஒருவராலும் தொந்திரவு ஏற்படுவதில்லையே" என்றாள் ஸ்ரீமதி ஊ. தன்னுடைய வீட்டில் தனது அதிகாரத்தின்கீழ் இத்தகைய துணிச்சலான எதிர்ப்பு ஏற்பட்டதைக் கண்டு அவளுக்கு அடங்காச் சினம் உண்டாயிற்று.

"அவள் குடும்ப வழக்கங்களைக் குறை கூறுகிறாள். கொண்டாட்ட தினங்கள், சாவு தினங்கள், பிறந்த நாட்கள் இவற்றைக் கொண்டாடுவதும் நாட்டுப் பெண்களின் கடமைகள் என்று இருப்பதும் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை வேலைக்காரர்களிடம் விடுவதும் இது போன்ற மற்ற வழக்கங்களெல்லாம் அவளுக்குக் கட்டோடு பிடிக்க

வில்லையாம். பெங்மோ அவளைப்பற்றி நினைக்கும் முன் குடும் பத்தைப் பற்றித்தான் நினைக்கிறான் என்று சொல்கிறாள் அவள்" என்று கூறினாள் மெங்.

"அவன் அப்படித்தான் நினைக்கவேண்டும். அவனும் அப்படித்தான் நினைக்கவேண்டும். இல்வீட்டைச் சேர்ந்த வளாக யில்லாமல் இருப்பதற்கு அவள் என்ன ஒரு வெளி மகளா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

ஸ்ரீமதி ஊவிற்குத் தான் கூறியதெல்லாம் பிடிக்கவில்லை என்பதைக் கண்ட மெங் மௌனமானாள். வேலைக்காரியும் இது தான் தலையிடக் கூடிய விஷயமல்ல என்பதை உணர்ந்து வாய் திறவாமலிருந்தாள். அவள் தனது சிறிய எஜமானியின் தலையை வாரி முடித்துக் கொண்டையில் இரண்டு முத்து ஆபரணங்களைச் செருகினாள். பிறகு சீப்பிலிருந்த மயிர்களை எடுத்துத் தனது விரலில் சுற்றிக்கொண்டு அதை வெளியே எறிவதற்காகச் சென்று விட்டாள்.

இப்போது ஸ்ரீமதி ஊ, மெங்கைப் பார்த்து, கோபத் துடன், "உனக்கும் இம்மாதிரியான எண்ணங்கள் இருக் கின்றனவா?" என்று கேட்டாள்.

மெங் வெகுளியாகச் சிரித்து, "அம்மா நான்தான் ஒரு பெரும் சோம்பேறியாயிற்றே. எனக்கு இந்த வீட்டில் இருப்பது தான் பிடிக்கிறது. வீடு சுத்தமாகவும் ஒழுங்காக வும் இருப்பதற்காக நான் ஒருவித சிரமமும் படவேண்டிய தில்லை. குழந்தை கத்தும்போது யாராவது வேலைக்காரி எடுத்துக் கொண்டால் நான் தொல்லை விட்டது என்று இருக் கிறேன். எனக்கு இங்கு ஒருவித கவலையும் கிடையாது. நான் பள்ளிக்கூடத்திற்குப் போனதேயில்லை. ஆதலால் புத்தகம் படிப்பதிலும் எனக்கு சிரத்தை கிடையாது. எனக்கு என்னென்ன விஷயங்கள் தெரிய வேண்டுமோ அவற்றை என்னுடைய பிள்ளையின் தகப்பனாரே சொல்லிக் கொடுத்து விடுகிறார். அவர் எனக்கு எதெல்லாம் தெரிய வேண்டும் என்று கருதுகிறாரோ அதை நான் தெரிந்து கொண்டால் போதாதா? அதற்கு மேல் தெரிந்து கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்" என்றாள்.

"லியாங்மோ உன்னிடம் மிகவும் அன்பாகயிருக்கிறானா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

மெங்கின் கன்னங்கள் ரத்தமெனச் சிவந்தன. "அவர் எல்லா விஷயத்திலும் என்னிடம் மிகவும் அன்பாகயிருக்

இருர். அவரைப் போல் யாருமே இருக்க முடியாது. உங்களுக்கு நான் மிகுந்த நன்றி செலுத்துகிறேனம்மா" என்ருள்.

"பெங்மோ லின்யியிடம் நன்முக நடந்து கொள்வ தில்லேயா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

மெங் சிறிது தயங்கிவிட்டு, "இரண்டு பேர் சண்டை யிட்டால் முதலில் யாருடைய கை அடித்தது என்பதை எவ் ஹிதம் கூற முடியும்? ஆனல் ருலானின் மீதுதான் தவறெல் லாம் இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். அவள் எப் போதும் லின்யியின் கூடவே இருக்கிருள். இருவருமாகக் கூடி எப்போதும் தங்கள் கணவன்மார்களேப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிருர்கள். இரண்டு பேரும் மற்றவளுடைய கணவனுடைய குற்றங்களேயும் தன்னுடைய கணவன் மீதே சுமத்திக் கொள்ளுகிருர்கள்" என்ருள்.

முன்பு ஒருநாள் இரவு ருலான் விம்மியழுது கொண்டி ருந்தது ஸ்ரீமதி ஊவிற்கு நினேவுக்கு வந்தது. "ருலானுக்கும் திருப்தி இல்லேயா?" என்று மெங்கைக் கேட்டான் அவள்.

மெங் தோளே ஒரு முறை குலுக்கிக் கொண்டு, சிறிது தயங்கிவிட்டு, "லின்யி என்னுடைய தங்கை. நான் ருலா னுடன் பேசுவதில்லே" என்று பதிலளித்தாள்.

"உனக்கு ருலானேப் பிடிப்பதில்லேயாக்கும்!" என்ருள் ஸ்ரீமதி ஊ. அவளுக்குத் தான் ஆழந்தெரியாத சேற்றில் மாட்டிக் கொண்டு அதிலேயே அமிழ்ந்து போய்க் கொண் டிருப்பது போல் தோன்றியது. தன்னுடைய வீட்டில் இத் தகைய ஒரு சிக்கல் ஏற்படும் என்று அவள் சிறிதும் சந்தேகிக்க வில்லே. ஸ்ரீமான் ஊவிற்கும் தனக்கும் அடுத்தபடியாக இருக்க வேண்டிய இவர்கள் எல்லோருக்கும் இம்மாதிரி சண்டையிட்டுக் கொள்வதற்கு எத்தகைய துணிச்சல் இருக்க வேண்டும்.

"எனக்கு ருலானேக் கண்டால் பிடிப்பதில்லே" என்ருள் மெங் தனது குரலில் சிறிதேனும் வெறுப்போ மாறுதலோ இல்லாமல்.

ஸ்ரீமதி ஊ சினத்துடன், "பெண்கள் என்றிருந்தால் அவர்கள் சண்டையிட்டுத்தான் ஆக வேண்டுமா?" என்ருள்.

மெங் மீண்டும் தனது தோள்களேக் குலுக்கிக் கொள் ளுன். "ஒருவரைப் பிடிக்கவில்லேயென்ருல் உடனே அவர்

களுடன் சண்டையிட வேண்டுமா என்ன? நான் ஏன் அவளே விரும்புவதில்லேயென்ருல் அவள் எப்போதும் தான் செய்வது சரி போலவும் மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு என்பது போலவும் நடந்து கொள்கிருள். த்லேமோவிடமும் அவள் அவ்விதமே நடந்து கொள்கிருள். அம்மா, நீங்கள் இதை இன்னும் கவனியாதிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக் கிறது. நான் இதை உங்களிடம் கூறும்படி வியாங்மோவிடம் சொன்னேன். ஆனல், அவர் எப்போதும், தாம் உங்களேத் தொந்திரவு செய்ய விரும்பவில்லே என்பதாகக் கூறி விடுகிருர். ஆனல் இது பெரிய எஜமானிக்குத் தெரிந்திருந் தது. அவள் ருலானேக் கண்டிப்பது வழக்கம்" என்ருள்.

"ருலானேக் கண்டிப்பாளா? ஏன் என்னிடம் இதை ஒருவருமே தெரிவிக்கவில்லே?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ திடுக்குற்றவளாய்.

"த்லேமோ ருலானேச் சொல்வதற்கு விடுவதில்லே" என்ருள் மெங். அவளுக்கே இப்போது இதையெல்லாம் கூறுவதில் உற்சாகமுண்டாகி விட்டது. மேலும் அவள், "ருலான் மிக அதிகமாகப் படித்து விட்டாள். அவள் லின்யியை விட அதிகம் படித்தவளாயிருப்பதால் லின்யி அவள் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொள்கிருள். அவள் எப்போதும், பெண்களுக்கு எந்த விஷயங்களெல்லாம் தெரியக் கூடாதோ அதைப் பற்றியேதான் பேசிக் கொண் டிருக்கிருள்" என்று கூறினுள்.

"எவ்விஷயங்களேப் பற்றி?" என்று விசாரித்தாள் ஸ்ரீமதி ஊ.

"நிர்மாணத் திட்டங்கள், தேசியப் புரட்சி, சமஉரிமை இவற்றைப் பற்றித்தான் அவளுக்கு எப்போதும் பேச்சு" என்ருள் மெங்.

ஸ்ரீமதி ஊ சற்றே புன்னகை செய்தவாறு, "உனக்கும் இதைப் பற்றியெல்லாம் தெரியும் போலிருக்கிறதே" என்று கேட்டாள்.

"வியாங்மோவுக்கு எல்லாம் தெரியும். எனக்குத் தெரி யாது" என்ருள் மெங்.

"வியாங்மோவிற்குத் தெரிந்திருப்பதெல்லாம் உனக்கும் தெரிய வேண்டும் என்று நீ விரும்புவதில்லேயா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"இதைத் தவிர வேறு எவ்வளவோ விஷயங்கள் இருக்கிறது எங்களுக்குப் பேசுவதற்கு" என்றாள் மெங்.

"என்ன விஷயங்கள்?" என்றாள் மீண்டும் ஸ்ரீமதி ஹு.

ஆனால் மெங் இதற்கு வார்த்தைகளால் பதிலளிக்கவில்லை. அவள் கன்னம் குழியும்வண்ணம் ஒரு புன்னகை செய்து விட்டு, மறுபுறம் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஸ்ரீமதி ஹுவும் அவளை வற்புறுத்தவில்லை. அவள் சிறிது நேரம் கழித்து அங்கிருந்து கிளம்பினாள். புதிதாகத் தன்னுடைய வீட்டில் கிளம்பியிருக்கும் சங்கடங்களைப்பற்றி சிந்தித்தவளாய்த் தன்னறையை நோக்கிச் சென்றாள். அன்று அவளது உள்ளத்தில் மிகுந்த சோர்வு குடிகொண்டிருந்தது. ஆகாரமின்றி கிடப்பவனை ஓட்டப் பந்தயத்திற்கு ஓடச் சொல்வது போலிருந்தது அவளது நிலை. அவளைச் சார்ந்திருந்த இந்த இளைஞர்கள், நங்கைகள் இவர்களுடைய பொறுப்பை ஏற்றுக் கொள்ள அவளுக்கிருந்த சக்தி போதவில்லை. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை எவ்வித மாறுதலுமின்றி ஒரே பாதையில் சென்று கொண்டிருக்க வேண்டும் என்ற அவளுடைய பண்டைய காலத்திய வாழ்க்கைத் தத்துவமானது இந்த நவீன யுவர், யுவதிகளுக்கு ஒத்து வரவில்லை. அவளுக்கு சகோதரர் ஆண்ட்ரூவின் ஞாபகம் வந்தது. அவருக்குப் பரந்த உலக ஞானம் இருக்கிறது- அவள் பெங்மோவைக் கூப்பிட்டு, அவனை மீண்டும் படிப்பைத் தொடர்ந்து படிக்கச் சொல்லலாம் என்று எண்ணினாள். சகோதரர் ஆண்ட்ரூ வருவாரேயானால், அவள் தன்னைச் சார்ந்திருக்கும் இந்த இளைவர்களினால் ஏற்படும் தொல்லைகளை அவருடன் கூறிப் பகிர்ந்து கொள்ளலாம்.

பெங்மோவை அழைத்து வரும்படி அவள் இங்கை அனுப்பினாள். அவன் அச்சமயம் வீட்டில் இருந்ததாலும் செய்வதற்கு வேலை ஒன்றுமிராததாலும் உடனே வந்து விட்டான். அவனுடைய பார்வையில் காணப்பட்ட ஏதோ ஒன்றை ஸ்ரீமதி ஹு விரும்பவில்லை. அவனுக்கு ஒழுங்காக கல்யாணம் செய்து வைத்திராவிடில் அவன் ஏதோ தவருன வழியில் சென்று விட்டான் என்று அவள் சந்தேகித்திருப்பாள். அவனுடைய தோற்றத்தில் அதிருப்தியும் விசனமும் காணப்பட்ட போதிலும் அவனுடைய சரீரம் அதிக சுக போகத்தில் ஆழ்ந்திருப்பதாகக் காணப்பட்டது.

அவள் மந்தகாசப் புன்னகையுடன், "பெங்மோ, என் மகனே. உன்னுடைய பாட்டி இறந்ததிலிருந்து இந்தன

நாட்களும் எனக்கு அவ்வேலைகளையெல்லாம் கவனிப்பதற்கே நேரம் சரியாகப் போய்விட்டது. உன்னைப் பற்றிக் கேட்பதற்குக்கூட முடியாமல் போய் விட்டது. உன்னையும் மின்யியையும் குடும்பத்தில் உங்களுக்குரிய ஸ்தானத்தில் அமர்த்தியாகி விட்டது. மகனே, எங்கே உன் தாயிடம் உன் மனத்தைத் திறந்து பேசு பார்க்கலாம்" என்று கூறினாள்.

"பேசுவதற்கு ஒன்றுமில்லை, அம்மா" என்றான் பெங்மோ அலட்சியமாக.

"நீயும் மின்யியும் எப்படி இருக்கிறீர்கள்?" என்றாள் அவள் மேலும் வற்புறுத்தலோடு.

"நாங்கள் நன்றாகத் தானிருக்கிறோம்" என்றான் அவன்.

அவள் மௌனமாக அவனைப் பார்த்தாள். நல்ல உயரமும் கட்டான உடலும் கொண்ட இளம் காளையான அவன் பொலிவுடன் விளங்கினான். அவன் ஒல்லியாகயிருந்த போதிலும் மிக்க பலம் கொண்டவனாக இருந்தான். அவனுடைய முகம் சதுரமாகவும் வாய் அழகியதாகவும் வெகு சீக்கிரத்தில் கோபத்தைக் காட்டக் கூடியதாகவும் இருந்தது.

பின் அவள் திடீரென்று சிரித்துவிட்டு, "நீ குழந்தையாக இருந்தபோது எப்படி இருந்தாயோ அதே போல்தான் இப்போதும் காணப்படுகிறாய். இது எவ்வளவு விசித்திரமாகயிருக்கிறது! ஆண்கள் எப்போதும் அதிகம் மாறுவதில்லை. ஆனால் பெண்கள் எவ்வளவு விரைவாக மாறிக்கொண்டே போகிறார்கள்! சில சமயங்களில் உங்கள் ஒவ்வொருவரையும் பார்க்கும் பொழுது, நீங்கள் முதன் முதலில் என்னுடைய கையில் கொடுக்கப்பட்டபோது எப்படியிருந்தீர்களோ, அப்படியே இப்போதும் இருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது" என்றாள்.

"அம்மா, நாம் ஏன் பிறந்தோம்?" என்று கேட்டான் அவன்.

அவள் இக்கேள்வியைத் தன்னைத்தானே எத்தனையோ முறை கேட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனால் அது தன்னுடைய மகன் ஒருவனிடமிருந்து வந்ததைக் கேட்டதும் துணுக்குற்றாள். "ஒவ்வொரு தலைமுறையைச் சேர்ந்தவர்களும் அடுத்த சந்ததியை உற்பத்தி செய்ய வேண்டியது அவர்களது கடமையல்லவா?" என்று பதில் கூறினாள் அவள்.

"ஆனால் நாம் எல்லோருமே உயிர் வாழ வேண்டும் என்பது என்ன அவசியம்?" என்று வற்புறுத்திக் கேட்டான் அவன்.

"எப்போது நம்மைப் படைத்து விட்டானோ, அப்போது நமக்கு உயிர் வாழ்வதைத் தவிர வேறு வழி?" என்று கேட்டாள் அவள் பதிலுக்கு.

"நான் உயிர் வாழ்வது, என்னைப் போன்ற இன்னொருவனை உண்டாக்குவதற்கும் பிறகு அவன் உயிர் வாழ்வது எங்கள் இரண்டு பேரையும் போல் இன்னொருவனைப் பிறப்பிப்பதற்குத்தான் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அதனால் எனக்கு ஏற்படப் போகும் பயன் என்ன?" என்று அவன் கூறிக்கொண்டே இருந்தான். அவன் அவளைப் பாராமல் தனது கைகளை முன்புறம் கோர்த்தவாறு உட்கார்ந்திருந்தான். பிறகு மெதுவாக, "என்னுள் வேறு ஒன்று இருக்கிறது அம்மா, அதற்கும் உனக்குமோ அல்லது அதற்கும் எனக்குப் பிறக்கக் கூடிய ஒரு குழந்தைக்குமோ ஒரு விதச் சம்பந்தமும் கிடையாது" என்றான்.

அவள் பயந்து விட்டாள். அவளுக்கே இத்தகைய கேள்விகளும் உணர்ச்சிகளும் ஏற்பட்டதுண்டு. ஆனால் அதைத் தன்னுடைய மகனிடமிருந்து அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அவள் வருத்தத்தோடு, "ஐயோ, நான் உனக்கு ஒரு கொடிய தாயாக அமைந்து விட்டேன். உன்னுடைய தகப்பனாருக்கு இத்தகைய எண்ணங்கள் ஒரு போதும் எழுந்ததில்லை. நான் என்னுடைய விஷத்தில் உனக்குச் சிறிது கொடுத்து விட்டேன் போலிருக்கிறது" என்று கூறினாள்.

"ஆனால் எனக்கு இத்தகைய எண்ணங்கள் எப்போதுமே இருந்து வந்ததுண்டு" என்றான் அவன்.

"பின் என்னிடம் நீ கூறியதேயில்லையே" என முறையிட்டாள் அவள்.

"நான் அவை யாவும் மறைந்து போய் விடும் என்று நினைத்தேன். ஆனால் அவை விடாமல் இருந்து கொண்டே இருக்கின்றன" என்று பதிலளித்தானவன்.

அவள் மிகுந்த விசாகூலமடைந்தாள். "ஆனால் இதனால் நீயும் லின்யியும் சந்தோஷமாக வாழவில்லை என்று அர்த்தமாகாது என்று நினைக்கிறேன்" என்றாள்.

அவன் கோபத்துடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "லின்யி என்ன வேண்டுமென்கிறாள் என்று எனக்குத் தெரியவில்லை. அவள் மிகவும் சஞ்சலத்துடன் இருப்பதாகத் தெரிகிறது" என்றான்.

"நீ எப்போதும் அவளுடன் கூடவேயிருக்கிறாய். புருஷனும் மனைவியும் எப்போது பார்த்தாலும் ஒன்றாகவே இருப்பது நல்லதல்ல. மெங்கைப்போல் அவள் மற்ற பெண்மணிகளோடு வந்து சிறிது நேரம் உட்காருவதில்லை. எப்போதும் உன்னறைக்குள்ளேயே அடைந்து கிடக்கிறாள். அதனால் சோம்பேறித்தனமும் சஞ்சலமும் அலுப்பும் அவளுக்கு உண்டாவது இயல்புதானே?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அப்படியும் இருக்கலாம்" என்றான் அவன் சிறிதும் அக்கறையில்லாதவன் போல்.

அவள் கவலை தோய்ந்த முகத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். "பெங்மோ, நாம் மீண்டும் சகோதரர் ஆண்ட்ரூவை இங்கு வரச்சொல்லி அழைப்போம். நீ அவருடன் இருந்தபோது மிகவும் சந்தோஷமாக இருந்தாய் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றாள் அவள்.

"ஆனால் இப்போது சந்தோஷமடைவதே என்னவோ தெரியாது" என்றான் அவன் அசிரத்தையுடன்.

"இருக்கட்டும். நான் அவரை அழைக்கப் போகிறேன்" என்றாள் அவள் உறுதியுடன். இத்தகைய பற்றற்ற தன்மையை உறுதியினால் தான் வெல்ல வேண்டும் என்பதை அவள் நன்கு அறிவாள்.

அவன் பதில் பேசவில்லை.

அவள் மீண்டும், "பெங்மோ, நீயும் லின்யியும் இவ்வீட்டை விட்டு வெளியே போக வேண்டுமென்று விரும்பினீர்களேயானால், நான் அதைத் தடுக்க மாட்டேன். எனக்கு என்னுடைய பிள்ளைகளின் சந்தோஷம்தான் முக்கியம். இந்தத் தலைமுறைகளாகிய இந்த நீண்டச் சங்கிலியில் நான் எதற்கு ஒரு சிறிய வளையமாக மட்டும் இருக்க வேண்டும் என்று நீ கேட்பதில் தவறொன்றுமில்லை. எனக்கு வேறு பிள்ளைகள் இருக்கிறார்கள். நீ வெளியே செல்ல வேண்டுமென்று விரும்பினால் அதை என்னிடம் ஒளிக்காமல் சொல்லு" என்றாள்.

அவன் முன் போலவே அதே அசிரத்தையுடன் "நான் என்ன விரும்புகிறேனென்று எனக்கே புரியவில்லை" என்றான்.

"நீ பின்யினை வெறுக்கிறாயா? நீ முற்றிலும் மகிழ்ச்சியை இழந்தவனாய் இருக்கிறாய் என்று இதிலிருந்து தெரிகிறது. நீ அவளை மணம் செய்து கொண்டு எத்தனை காலமாகி விட்டது? மூன்றே மூன்று மாதங்கள் தானே! அவள் இன்னும் கர்ப்பம் தரிக்கவில்லை. நீ பற்றில்லாதவனாய்க் காணப்படுகிறாய். இதற்கு என்ன அர்த்தம் பெங்மோ?" என்று கேட்டாள் அவள்.

"அம்மா, இந்த விஷயங்களைக் கொண்டு உன்னால் எங்களை அளந்து விட முடியாது" என்றான் பெங்மோ.

ஆனால் அவள் மிகவும் சூக்ஷ்மமுள்ளவள். "நான் இதனால் மட்டுமே உன்னை அளந்து விடமாட்டேன். ஆனால் புருஷனும் மனைவியும் சரீரத்தின் மூலம் முதலில் ஒன்றுகச் சேரவில்லை யென்றால் மற்ற எவ்வித ஒற்றுமையும் அவர்களுள் ஏற்படாது என்பதை நான் அறிவேன். சரீரச் சேர்க்கை ஏற்பட்டால் மற்ற ஒற்றுமைகளும் தானாகவே ஏற்படும். அப்படி மற்ற வைகளில் ஒற்றுமை ஏற்படவில்லையாயினும் இருவரும் ஒன்றாகவே வாழலாம். ஆனால் சரீரம் தான் இருவருமாகச் சேர்ந்து கட்டக்கூடிய வீட்டிற்கு அஸ்திவாரம் போன்ற தாகும். மனம், ஆத்மா இன்னும் மற்ற யாவும் வீட்டின் கூரைக்கும் மற்ற அலங்காரப் பொருட்களுக்கும் ஒப்பாகும். அஸ்திவாரமின்றி இவை யாவும் சிறிதும் பயன்படாது" என்றாள்.

பெங்மோ அவளைப் பார்த்து, "அப்படியானால் என் தகப்பனார் ஏன் ஒரு விலை மகளை வைத்துக் கொண்டிருக் கிறார்?" என்று கேட்டான்.

அவன் இந்த முரட்டுத்தனத்தைப் பொருட்படுத்த வில்லை. கடுமையுடன், "எதற்கும் கால நிர்ணயம் ஒன்று இருக்கிறது. அதன்படி ஒன்றன் பின் ஒன்றாக யாவும் வரிசை யாக நடக்கின்றன" என்றாள்.

அவனுக்குத் தான் மகன் என்ற ஸ்தானத்தின் வரம்பை மீறிப் பேசி விட்டது தெரியும். அவன் தனது கிராப் தலையை ஒரு முறை தேய்த்து விட்டுக் கொண்டு, கன்னங்களைக் கைகளால் தட்டிக் கொண்டான்.

கடைசியாக அவன், "நல்லது, சகோதரர் ஆண்ட்ரூவை வரச் சொல்வோம்" என்றான். பிறகு சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்த பின், "அவர் ஒருவர் தான்

எனக்கு குருவாகயிருக்க வேண்டும். நான் இனி பள்ளிக்கூடத் திற்குப் போவதை நிறுத்தி விடப் போகிறேன்" என்றான்.

"அப்படியே செய், மகனே" என்றாள் ஸ்ரீமதி ஹு.

* * *

8

இவ்விதமாக, சகோதரர் ஆண்ட்ரூ மீண்டும் அன் வீட்டிற்கு வர ஆரம்பித்தார். நடுவில் தாம் வராத இத்தனை நாட்களைப் பற்றியோ அல்லது அந்நாட்களில் நடந்த சம்பவங்களைப் பற்றியோ அவர் எதுவும் பேசவில்லை. மாலையில் பெங்மோ படிப்பதற்காக அங்கு வந்து விட்டுச் சென்றான். ஒருநாள் பாடம் முடிந்து சகோதரர் ஆண்ட்ரூ வாசலைக் கடந்து சென்று கொண்டிருக்கையில், ஸ்ரீமதி ஹு அவரை அழைத்தாள். அவள் தான் வழக்கமாக தினமும் உட்காரும் இடத்தில் உட்கார்ந்திருந்தாள். குளிர் அதிகமாகும் வரை அவள் அங்குதான் உட்காருவாள். அன்று குளிராகயிருந்த போதிலும், இன்னும் சில தினங்களில் வெளியே உட்கார முடியாமல் போய் விடுமே என்பதனால், அவ்வழகிய மாலை நேரத்தை விட மனமில்லாதவளாய் அங்கேயே உட்கார்ந் திருந்தாள். இங் அதற்காக அவளிடம் கோபித்துக் கொண் டான். ஏற்கெனவே குளிரினால் சில்லிட்டிருந்த அவளுக்கு, புத்தக அறையில் குளிர் காய்வதற்காகக் கணப்புச் சட்டி தயாராக இருக்கிறது என்று கூறிவிட்டுச் சென்றாள் இங்.

"சகோதரர் ஆண்ட்ரூ" என்று கூப்பிட்டாள் ஸ்ரீமதி ஹு.

சகோதரர் ஆண்ட்ரூவின் நெடிய உருவம் நின்றது. அவர் திரும்பிப் பார்த்தார்.

"தாங்கள் என்னைக் கூப்பிட்டீர்களா, அம்மா?" என்று கேட்டார்.

அவள் எழுந்து, "ஆம். உங்களுக்கு நேரம் இருக்குமாயின் தயவு செய்து சிறிது நேரம் இங்கு தங்குங்கள். நான் உங்களு டன் இந்த என்னுடைய மூன்றாவது மகனைப் பற்றிப் பேச வேண்டும். எனக்கு அவனைப் பற்றிச் சிறிதும் திருப்தி ஏற் படவில்லை" என்று கூறினாள்.

சகோதரர் ஆண்ட்ரூ தமது பெரிய தலையை அசைத்தார்.

"இங், தேநீர் கொண்டு வா. கணப்புச் சட்டியைப் பக்கத்திலிருந்து கவனித்துக் கொள்" என்று அவளுக்குக்

கூறினாள் ஸ்ரீமதி ஊ. சகோதரர் ஆண்ட்ரூ ஒரு பாதிரியாதலால், ஒரு பெண்பிள்ளையுடன் தனியாயிருப்பது அவருக்குச் சங்கடமாயிருக்கலாம் என்று எண்ணி, அவருக்கு அத்தகைய சங்கடத்தை உண்டாக்காமல் தவிர்க்க விரும்பினாள்.

அவர் கூச்சமடைந்தாரோ என்னவோ, ஆனால் அதை அவர் காட்டிக் கொள்ளவில்லை. அவள் உட்காரும்படி கூறியதும் அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து அவள் கூறப் போவதை எதிர்பார்த்திருந்தார். அவருடைய ஆழ்ந்த தன்மையைக் காட்டும் கண்கள் அவள் முகத்தில் பதிந்திருந்தன. ஆனால் அவர் தன்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்க வில்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவை வானுலகிலிருந்து தன்னை நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு தெய்வத்தின் கண்களாகவே அவளுக்குத் தோன்றியது.

"பெங்மோ ஏன் மகிழ்ச்சியற்று இருக்கிறான்?" என்று அவள் நேரிடையாக விஷயத்தை ஆரம்பித்தாள்.

"அவன் ஒரு வேலையுமின்றி ரொம்பவும் சோம்பலாக இருக்கிறான்" என்று அவர் சாதாரணமாகப் பதிலளித்தார்.

"சோம்பலாகவா? ஆனால் அவனுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றனவே! ஒவ்வொரு புதிய வருஷப் பிறப் பன்றும் நான் என்னுடைய பிள்ளைகளுக்கும் நாட்டுப் பெண் களுக்கும் வேலைகளை வகுத்துக் கொடுத்து விடுவது வழக்கம். இவ்வருஷம் என்னுடைய அதிகாரத்தின்கீழ் என்னுடைய பெரிய பிள்ளை நிலங்களை மேற்பார்வை பார்க்கிறான். வரவு செலவு கணக்குகளை த்லேமோ கவனித்துக் கொள்ளுகிறான். நகரத்தில் எங்களுடைய தானியங்களை விற்பனை செய்வது முதலான காரியங்களை பெங்மோ கவனித்து வருகிறான். அவன் பள்ளிக்கூடத்தை விட்டதிலிருந்து இந்த வேலைகளையெல்லாம் கவனிப்பதற்கே அவனுக்கு எவ்வளவோ நேரம் சரியாகப் போய் விடுகிறது" என்று கூறினாள்.

"ஆயினும் அவனுக்கு அவ்வேலை போதாது. பெங்மோ விடம் அபூர்வமான அறிவும் உண்மையை நாடும் தன்மையும் அமைந்திருக்கிறது. எவ்வளவு விரைவில் எதையும் கற்றுக் கொண்டு விடுகிறான்! தாங்கள் என்ன அவனுக்கு ஆங்கிலம் மாத்திரம் தான் கற்றுக் கொடுக்கச் சொன்னீர்கள். ஆனால் அவன் ஆங்கிலம் கற்றுக் கொள்வதோடுகூட வேறு எவ் வளவோ கற்றுக் கொள்ளுகிறான். அவன் எதையுமே மறப்பது கிடையாது. நான் பல மாதங்களுக்கு முன்பு அவனுக்குப்

போதித்ததெல்லாம் அவனுடைய மனதில் ஆழப்பதிந்து இப்போது முளை விட்டு எழுந்திருக்கின்றன. சிறு சிறு கொடிகளாகத் தழைத்திருக்கும் அவை எதன் மேலாவது ஏறி, பூத்துக் கனிகளைச் சொரிவதற்காக ஒரு பற்றுக்கோலைத் தேடிக் கொண்டிருக்கின்றன. நீங்கள் நாள் முழுவதும் தான் அவனுக்கு வேலை இடுங்களேன்! அப்போதும் பெங்மோ வேலையில்லாதவன் போல் உற்சாகமற்றுத்தான் இருப்பான். அவனுடைய மனத்தையும் ஆத்ம சக்தியையும் உபயோகிக்கக் கூடியதான ஒரு வேலை அவனுக்குத் தேவையாக இருக்கிறது" என்று கூறினார் சகோதரர் ஆண்ட்ரூ.

ஸ்ரீமதி ஊ இவற்றையெல்லாம் கேட்டுவிட்டு, "நீங்கள் அவனுக்கு உங்களுடைய மதத்தைப் போதிக்க விரும்புகிறீர் கள். அதற்கு அனுமதிக்கும்படி என்னை வற்புறுத்தப் பார்க் கிறீர்கள்" என்றாள்.

"என்னுடைய மதம் எது என்பதைத் தாங்கள் அறிய மாட்டீர்களே!" என்றார் ஆண்ட்ரூ.

"ஏன் தெரியாது? சிறிய சகோதரி ஹேஷியா உங்க ளுடைய வேதப்புத்தகத்திலிருந்து அநேக முறை படித்துக் காட்டியிருக்கிறாள். உங்களுடைய அந்நிய முறைகளைப் பற்றியும் சம்பிரதாயங்களைப் பற்றியும் அவள் எனக்கு விளக்கிக் கூறியிருக்கிறாள்" என்றாள்.

"என்னுடைய மதம் வேறு; அவளுடைய மதம் வேறு" என்று கூறினார் அவ் விசித்திரமான மனிதர்.

"உங்களுடைய மதத்தைப் பற்றி எனக்கு விளக்கிச் சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டாள் அவள்.

"என்னால் அதை விளக்கிச் சொல்ல முடியாது. ஏனெனில் அது சாத்தியமில்லை. சிறிய சகோதரி ஹேஷியாவால் ஒரு புத்தகத்திலிருந்து உங்களுக்குப் படித்துக் காட்டி விட முடியும். ஒரு வித சம்பிரதாயத்தைப் பற்றி விளக்கிச் சொல்லி விட முடியும். என்னுடைய வழி அதுவல்ல. நான் அநேக புத்த கங்களைப் படிக்கிறேன். இப்படித் தான் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று எனக்கு ஒரு குறிப்பிட்ட வழக்கம் கிடை யாது" என்று கூறினார் அவர்.

"அப்படியானால் உங்கள் வழிதான் என்ன?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"என்னுடைய மதம் உண்ணுவதிலும், உறங்குவதிலும், நடப்பதிலும், வேலை செய்வதிலும், தோட்டத்தை

உண்டாக்குவதிலும், நான் கண்டெடுத்து வளர்க்கும் அனாதை குழந்தைகளைப் பாதுகாப்பதிலும், உங்களுடைய மகனுக்குப் போதிப்பதிலும், நோயாளிகளுக்கு சிசுருஷை செய்வதிலும், இறக்கும் தறுவாயில் இருப்போருக்கு அமைதியுடன் சாவதற்கு உதவுவதிலும் சகலத்திலும் இருக்கிறது" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ.

அவள் திடீரென்று, "பெரிய எஜமானி மரணமடைந்த போது உங்களைக் கூப்பிட வேண்டுமென்ற ஒரு விசித்திரமான ஆவல் என் மனத்தில் எழுந்தது. ஆனால் குடும்பத்தினர், கோவில் குருக்களையும் அழைத்துத்தான் திருவார்கள் என்றஞ்சி பேசாதிருந்து விட்டேன்" என்றாள்.

சகோதரர் ஆண்ட்ரூ, "நான் உங்கள் குருக்கள்மார்களை வேண்டாமென்று தள்ளியிருக்க மாட்டேனே! எவரேனும் ஒரு சிறிதாவது ஆறுதல் கொடுக்கக் கூடியவர்களாக இருந்தால் அவர்களை நான் ஒருபோதும் தள்ளுவதில்லை. நம் எல்லோருக்குமே ஆறுதல் தேவையாகத் தானே இருக்கிறது!" என்றார்.

"உங்களுக்குக் கூடவா?" என்று அவள் அதிசயத்தோடு கேட்டாள்.

"ஆம், எனக்கும் தான்" என்றார் அவர்.

"நீங்கள் மிகவும் தனிமையாக வாழ்ந்து வருகிறீர்கள். உங்களுடைய இரத்தத்தைச் சேர்ந்த மனிதர்கள் ஒருவரும் இங்கில்லையே" என்று கூறினாள் அவள்.

"எல்லோரும் என்னைச் சேர்ந்தவர்கள்தாம். ஒருவருடைய இரத்தத்திற்கும் மற்றவருடைய இரத்தத்திற்கும் ஒருவித வித்தியாசமுமில்லை" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ.

"உங்களுடைய இரத்தமும் என்னுடையதைப் போன்றதேயா?" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

"ஆம், அதில் சிறிதளவும் வித்தியாசம் கிடையாது. எல்லா மனிதர்களுடைய இரத்தமும் ஒரே பொருளால் ஆனதுதான்" என்றார்.

"நீங்கள் ஏன் பாதிரியாவீர்கள்?" என்று கேட்டாள் அவள். இது அநாகரிகமான ஒரு கேள்வி என்பதை அவள் அறிவாள். ஆதலால் மன்னிப்பு கோருவதற்கு விரைந்தாள். "நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். என்னால் என்னுடைய ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.. ஒரு சந்நியாசினை

நோக்கி அவர் ஏன் துறவு பூண்டார், என்று கேட்கக் கூடாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான், நீங்கள் எவ்வித குற்றமும் செய்திருக்க முடியாது; அதற்குப் பிராயச்சித்தமாகத் துறவும் பூண்டிருக்க முடியாது என்று நினைக்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"தாங்கள் மன்னிப்பு கேட்க வேண்டியதில்லை. உண்மையில் எனக்கே நான் ஏன் துறவு பூண்டேன் என்ற விஷயம் தெரியாது. ஒருவேளை நான் முதன் முதலில் ஒரு வானசாஸ்திரியாக இருந்தது காரணமாயிருக்கலாமோ என்னவோ!" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ.

"உங்களுக்கு நட்சத்திரங்களையெல்லாம் தெரியுமா?" என்று கேட்டாள் அவள் மிக்க வியப்போடு.

"அம்மா, யாராலும் நட்சத்திரங்களை அறிய முடியாது. ஆனால் அவை வானத்தில் எழுவதையும் வீழ்வதையும் தோன்றி மறைவதையும் மட்டும் காணலாம். அவைகளை நான் ஆராய்ந்து வருகிறேன்" எனப் பதிலளித்தார் அவர்.

"நீங்கள் இன்னமும் அதில் ஈடுபட்டு வருகிறீர்களா?" என்று கேட்டாள் அவள். அவரைப் பற்றி அறியத் தான் இவ்வளவு ஆவல் காட்டுவதைப் பற்றி அவளுக்கு வெட்கமுண்டாயிற்று. ஆனால் அவளால் அதைக் கேட்காதிருக்க முடியவில்லை.

"அம்மா, என்னுடைய வேலைகளெல்லாம் முடிவடைந்து, இரவில் வானம் தெளிவாக இருக்கும் நாட்களில் நான் அதைக் கவனித்து வருகிறேன்" என்று அமைதியுடன் பதில் கூறினார் அவர். சிறிதும் தயங்காமல், ஒளிவுமறைவின்றி அவர் பேசிய பேச்சு அவளைத் துணிவுறச் செய்தது. அவன் கேட்டாளே யென்பதற்காகத்தான் அவர் இதற்கெல்லாம் பதிலளித்தார். மேலும் அவருக்கு ஒளித்து வைப்பதற்கு ஒன்றுமில்லை. அதோடு அவளைப் பற்றியும் அவருக்கு எவ்வித சிரத்தையும் இல்லை.

அவள் திடீரென்று, "நீங்கள் மிகவும் தனிமையில் இருக்கிறீர்கள்! நாள் முழுவதும் ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்கிறீர்கள். இரவில் நட்சத்திரங்களுக்கு நடுவே வாசம் செய்கிறீர்கள்" என்று கூறினாள்.

"ஆம், அது வாஸ்தவமே" என்று ஒப்புக் கொண்டார் அவர்.

"உங்களுக்கு எப்போதுமே வீடு வாசல் மகிழ்விமக்கள் யாரும் வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டதில்லையா?" என்று கேட்டாள் அவள்.

"ஒரு காலத்தில் நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். எங்களுக்குத் திருமணம் நடப்பதாகயிருந்தது. பிறகு நான் தனிமையான வாழ்க்கையை மேற்கொண்டு விட்டேன். அதிலிருந்து எனக்கு அவள் மீது விருப்பமோ அல்லது அவளுடைய தேவையோ ஏற்பட்டதில்லை" என்றார் அவர்.

"இது அவளுக்குச் செய்யப்பட்ட அநீதியாகும் என்று நான் கருதுகிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ பெருந்தன்மையுடன்.

"ஆம், அப்படித்தான் நேர்ந்தது. நான் அதை உணர்ந்த போதிலும், அவளுக்கு உண்மையைச் சொல்வதைத் தவிர என்னால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. பிறகு என் தனிமையைத் தொடர்ந்து செல்வதற்காக நான் துறவு பூண்டு விட்டேன்" என்றார் அவர்.

"ஆனால், உங்கள் மதம் என்ன?" என்று கேட்டாள் அவள்.

அவர் தமது தீர்க்கமான கண்களால் அவளை ஒரு நீண்ட பார்வை பார்த்து, "என்னுடைய மதமா? அது வான வெளியிலும் சூனியத்திலும் சந்திர சூரியர்களிலும் மேகங்களிலும் காற்றிலும் அடங்கியிருக்கிறது" என்றார்.

"இவற்றில் கடவுள் இருக்கிறாரா?" என்று கேட்டாள் அவள்.

"இருக்கிறார். ஆனால் நான் அவருடைய முகத்தைப் பார்த்ததில்லை" என்று பதிலளித்தார் அவர்.

"அப்படியானால் எப்படி உங்களுக்கு அவரிடம் நம்பிக்கை உண்டாகிறது?"

"என்னைச் சுற்றிலுமுள்ள யாவற்றிலும் அவர் வியாபித்திருக்கிறார். அவர் ஆகாயத்திலும் ஜலத்திலும் வாழ்விலும் சாவிலும் மனித ஜாதியிலும் யாவற்றிலும் குடி கொண்டிருக்கிறார்" என்று கூறினார் சகோதரர் ஆண்ட்ரூ. அவருடைய கம்பீரமான குரல் பெரும்பொருளடங்கிய இவ்வார்த்தைகளை எளிய முறையில் கூறிற்று.

அவள் மேலும் துருவிக்கேட்டாள். "ஆனால் உங்களுடைய அனுதைக்குழந்தைகளைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

உங்களுக்குத் தனிமைதான் வேண்டும். மற்றவர்களுடைய துணை வேண்டியதில்லையென்றால், நீங்கள் எதற்கு வழியில் கிடக்கும் குழந்தைகளை எடுத்து வளர்க்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

அவர், வேலை செய்து செய்து வைரம் பாய்த்திருந்த தமது கைகளைப் பார்த்துக் கொண்டார். அவற்றைத் தமக்குச் சொந்தமல்லாத வேறு ஏதோ பொருளைப் பார்ப்பது போல் பார்த்து, "இந்தக் கைகளும் சந்தோஷமாக வாழ வேண்டுமல்லவா? சரீரமானது ஆத்மாவிற்கு இடைஞ்சல் செய்யாதிருக்க வேண்டுமானால் அதற்கும் போதிய வேலையைக் கொடுக்க வேண்டும்" என்றார்.

ஸ்ரீமதி ஊ, பெருகும் வியப்புடன் அவரை உற்றுப் பார்த்தாள். "உங்களைப் போன்ற மனிதர் வேறு யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

"ஒரு மனிதனைப் போல் இன்னொரு மனிதன் இருக்கவே முடியாது" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ. வெய்யிலில் வேலை செய்வதால் கருத்திருந்த அவருடைய முகத்தில் ஒளி வீசுவது போல் ஒரு புன்னகை தோன்றியது. "ஆனால் அம்மா, உங்களுடைய மகன் இருக்கிறானே, இளம் பெண்மோ, அவன் ஒரு வேளை என்னைப் போலாகலாம்; என்னைப் போலாவான் என்று நினைக்கிறேன்" என்றார்.

"நான் அதற்கு விடமாட்டேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"ஆ!" என்று கூறிய சகோதரர் ஆண்ட்ரூ புன்னகை புரிந்தார். தமது ஒளி வீசும் கண்களால் அவளை ஒரு கணம் பார்த்து விட்டுப் பின் விடை பெற்றுச் சென்றார்.

வானில் ஒரு சில நட்சத்திரங்கள் தோன்றியிருந்தன. அவள் அவற்றைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். இரண்டுமுறை அங்கு வந்து அவளைக் கண்டித்து விட்டுப் போனாள்.

ஸ்ரீமதி ஊ அவளிடம், "என்னைப் பேசாமல் விடு. எனக்கு யோசிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன" என்றாள்.

"அதைப் படுக்கையில் படுத்தவாறு யோசித்துக் கொள்ளக் கூடாதா? இந்தக் குளிரில் இங்கு உட்கார்ந்திருக்க வேண்டுமா?" என்று இம் முறையிட்டாள்.

ஸ்ரீமதி ஊ, பதிலளிக்காமற் போகவே, அவள் உள்ளே சென்று, ஒரு மெல்லிய கம்பளிப் போர்வையை எடுத்து வந்து

அவளுடைய காலைச் சுற்றிப் போர்த்து விட்டாள். இப் போதும் ஸ்ரீமதி ஊ அசையவில்லை. அவள் நாற்காலியின் பின்புறம் சாய்ந்தவாறு அந்த நட்சத்திரங்களையே நோக்கிக் கொண்டிருந்தாள். அவ்வீட்டின் சுவர்கள் ஆகாயத்திலிருந்து அவ்வீட்டை ஒரு தனிப் பகுதியாகப் பிரித்து வைத்தது போலவே, கீழே இவ்வகண்ட பூமியிலிருந்தும் அதை ஒரு தனிப் பகுதியாகப் பிரித்து வைத்தன. ஆனால் அவளுடைய எண்ண அலைகளானது மேலும் கீழும் வெகு தூரம் பரந்து விரிந்து சென்றன.

இந்த வீட்டின் அடியில் எத்தனையோ மனிதர்களின் வேர்கள் படிந்து கிடக்கின்றன. இவர்கள் பார்த்தறிந்திராத எத்தனையோ ஊ குடும்பத்தினர் அங்கு தோன்றி வாழ்ந்து, மடிந்தும் போயிருக்கின்றனர். அதற்கு முன்பும்கூட எத்தனை எத்தனையோ மனிதர்கள் அங்கு வாழ்ந்திருப்பர். ஆனால் அவ்வீட்டிற்கு இட்ட அஸ்திவாரம் அசைக்கமுடியாதவாறு அவ்வளவு பலமாகத்தான் கட்டப்பட்டிருக்கிறது. அவளுடைய மாமனார் அவளுக்கு அந்த அஸ்திவாரம் எவ்வாறு போடப்பட்டது என்பதைப் பற்றிக் கூறியிருக்கிறார். அவர் தன் தந்தையின் மூலமாகவும் அவருடைய தந்தை, தன் தந்தையின் மூலமாகவும் வழி வழியாகத் தெரிந்து கொண்ட விஷயம் அது. அதனுடைய அஸ்திவாரக்கல் மண்ணின்மீது நாட்டப்பட்டதல்ல. அது பீங்கான் கற்களின் மீதும் ஓட்டுத் துண்டுகளின் மீதும் நாட்டப்பட்டிருக்கிறதென்று அவர் கூறியிருக்கிறார். "நம்முடைய வீட்டின் அஸ்திவாரத்தின் ஆழத்தை வேறு எந்த வீடும் எட்ட முடியாது. நகரத்தின் மீது நகரமாக நமது முன்னோர்கள் ஐந்து நகரங்களைக் கட்டினார்கள். மனிதனுக்கு மேல் மனிதனாக நாமும் வாழ்ந்து வந்திருக்கிறோம். நமக்குப் பின் வருபவர்கள் நம்மீது உலவி வாழ்வார்கள்" என்றும் அவர் அப்போது கூறினார்.

வரப்போகும் ஆயிரக்கணக்கான வருஷங்களில், இந்த ஊ குடும்பத்தாரின் கட்டிடங்கள் வரவிருக்கும் இன்னும் அநேக வீடுகளுக்கு அடித்தளமாகி நிற்கும். அப்போது வாழும் மனிதர்களின் கண்களுக்கூட இவ்வண்ணம்தானே நட்சத்திரங்களை நோக்கும்! சகோதரர் ஆண்ட்ரூவின் தனிமை எத்தகையது என்பது அவளுக்கு ஒருவாறு புலப்பட்டது. அவர் எவ்விதம் அதில் ஆத்ம திருப்தி கொண்டிருந்தார் என்பதும் அவளுக்கு விளங்கியது. நட்சத்திரங்களைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அவளுக்குத்தானும் அத்தனிமையை அடைய வேண்டும் என்ற தாபம் உண்டாயிற்று.

வீட்டிற்குள்ளிருந்த இங் மிகுந்த கோபத்துடன், "அம்மா" என்று கத்தினாள். ஸ்ரீமதி ஊவிற்கோ அவளுடைய குரலே காதில் விழவில்லை.

இங் முடிவில் மிகுந்த பீதியடைந்து போனாள். அவள் சப்தமிடாமல் மெல்ல நடந்து வந்து, ஸ்ரீமதி ஊவின் முகத்தைக் குனிந்து பார்த்தாள். அது நிர்மலமாகவும் சற்றும் அசைவில்லாமலும் விளங்கியது. அவளுடைய பெரிய விழிகள் ஆகாயத்தையே நிலைத்துப் பார்த்தவாறிருந்தன. அவ் வாசலின் மங்கிய ஒளியினிடையே புத்தக அறையிலிருந்து வந்த மெழுகு வர்த்தியின் வெளிச்சம் மாத்திரம் சிறிது வந்து கொண்டிருந்தது. அவ்வொளியில், அவளுடைய பால்போன்ற வெளுத்த முகம் பிரகாசம் நிறைந்து காணப்பட்டது.

"ஐயோ, எஜமானியின் ஜீவன் பறந்து சென்று விட்டதே" என்று முனகிய இங், தனது கைகளால் வாயை மூடிக்கொண்டு, சொல்லொணா பீதியுடன், காலடியோசை கேட்காதவாறு மெல்ல வாசலைக் கடந்து சென்றாள்.

ஸ்ரீமதி ஊவிற்கு அவளுடைய குரல் எங்கோ தொலைவில் கேட்பது போலிருந்தது. இங் கிலியடைந்து போனதை அவள் பொருட்படுத்தவோ அல்லது அறியவோ இல்லை. இந்த நாற்சுவர்களிலிருந்தும் அவள் விடுதலையடைந்து விட்டாள். அவள் இதுநாள் வரை நிணைத்திருந்தபடி, அவை வானம்வரை சென்று அவ்வீட்டை மற்றவைகளிலிருந்து தனியாகப் பிரிக்க வில்லை. அவள் அச்சுவர்களைத் தாண்டி உயரே எழும்பிய போது, இவ்வகண்ட பூமியாகிய உலகம் முழுவதுமே தன் னெதிரே பரந்து விரிந்து கிடப்பதைக் கண்டாள். ஏழு கடல் களும் அவள் முன் தோன்றின. பற்பல நாடுகளும் தேசங் களும் அவள் கண்முன் வரிசை வரிசையாகக் காட்சியளித்தன. இதுவரை புத்தகங்களின் மூலமே அறிந்திருந்த அந்நாட்டு மக்களும் அவளுக்கு அறிமுகமாயினர். இரண்டு துருவங் களையும் அவற்றில் உறைந்து கிடந்த பனிக்கட்டிகளையும் அவள் பார்த்தாள். இவ்வுலக முழுவதுமே அவளுடைய காட்சியில் தெற்றெனப் புலப்பட்டது.

'நட்சத்திரங்களின் இடத்திலிருந்து பார்த்தால் யாவும் நன்றாகத் தெரியும் என்பதில் ஐயமில்லை' என்று அவள் எண்ணமிட்டாள்.

அவளுடைய வாழ்க்கையில் முதல் தடவையாக அவளுக்கு, இந்த நான்கு சுவர்களையும் கடந்து சென்று, பூமியின் மீதுள்ள எல்லாவிடத்திற்கும் பிரயாணம் செய்து யாவற்

றையும் கண்டு களித்து, அவற்றைப்பற்றி அறியவேண்டு மென்ற பேராவல் எழுந்தது.

"ஆனால் அப்போதும் நட்சத்திரங்கள் பாக்கியாக நின்று விடுமே! அவற்றின் அருகே எப்படிச் செல்ல முடியும்?" என்று அவள் சிந்தித்தாள்.

அவளுக்குப் பெரிய எஜமானியின் நினைவு வந்தது. அவளுடைய ஆத்மா பூரண விடுதலை அடைந்து விட்டது. அவளுடைய சரீரமோ சவப்பெட்டியில் மக்கி மண்ணாகி விட்டது. ஆனால் பெரிய எஜமானியின் ஆத்மா இவ்வீட்டைச் சுற்றிச் சுற்றித்தான் வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

'எனக்கு விடுதலை கிடைத்ததும் நான் இவ்வீட்டை விட்டுச் சென்று விடுவேன். பிறகு நட்சத்திரங்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக மேல் நோக்கி, மிக மிக உயரே பறந்து செல்வேன்' என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

இவ்விதம் கனவு கண்டு கொண்டிருந்த ஸ்ரீமதி ஊவிற்கு, இங் அப்பகுதியைக் கடந்து வெளியே சென்றது முற்றிலும் மறந்து விட்டது. இப்போது அவள் மூன்று பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வருவதையும் அவள் பார்க்கவில்லை. லியாங்மோ, த்ஸேமோ, பெங்மோ மூவரும் ஒன்றாக வந்து அருகே நின்று தங்களுடைய தாயைப் பார்த்தனர். லியாங்மோ முதலில் பேசினான்.

அவன் மிகவும் மெல்லிய குரலில், "அம்மா!" என்று அழைத்தான். அவன் அவளுடைய ஆத்மா சரீரத்திலிருந்து பறந்து சென்று விட்டது என்று எண்ணிப் பயந்திருந்தான். அப்படி ஆகியிருக்கும் பட்சத்தில் ஜீவனைப் பயமடையச் செய்தல் கூடாது. அது அப்போது திரும்பவே திரும்பாது. அதை மெல்ல வருந்தி அழைக்கவேண்டும். ஏனெனில் சரீரம் ஒரு கூண்டு. ஆத்மா ஒரு பட்சி. ஒருமுறை கூண்டின் கதவைத் திறந்துகொண்டு, தப்பியோடிய பட்சி மீண்டும் அதற்குள் எதற்காக வரப்போகிறது! அதை மெல்ல மயக்கி, ஏமாற்றித்தான் அதற்குள் மீண்டும் வரவழைக்க வேண்டும்.

லியாங்மோ மிருதுவான குரலில், "அம்மா, உன்னுடைய பிள்ளைகள் எல்லோரும் இங்கிருக்கிறோம். உனக்காகக் காத்துக் கொண்டு நிற்கிறோம்" என்றான்.

ஆனால் ஸ்ரீமதி ஊ, மெய்மறந்த நிலையிலிருந்தாள். இதை அவள் காதில் விழவில்லை.

அவளுடைய பிள்ளைகள் திகிலுடன் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றனர்.

"அப்பாவைக் கூப்பிடு" என்று லியாங்மோ த்ஸேமோவைப் பணித்தான்.

த்ஸேமோ உடனே விரைந்து சென்று, சில நிமிஷ நேரத்திற்குள் ஸ்ரீமான் ஊவுடன் திரும்பி வந்தான். அவன் வரும் வரை இவர்கள், தப்பியோடிய அப்பறவை எங்கு மேலும் வெகு தூரம் சென்று விடப்போகிறதோ என்ற பயத்தால் மௌனமாக நின்றுகொண்டிருந்தனர். அவசரத்துடன் வந்த ஸ்ரீமான் ஊவிற்குப் பின்னால் ஒருவருமறியாத வண்ணம் சியூமிங்கும் மெல்ல வந்தாள்.

"இதெல்லாம் எப்படி நேர்ந்தது?" என்று ஸ்ரீமான் ஊ இங்கைப் பார்த்துக் கோபத்துடன் கேட்டார்.

"அந்த அயல்நாட்டுப் பாதிரியார் போனதிலிருந்து அம்மா இப்படித்தான் இருக்கிறார்கள்" என்றாள் இங்.

அவர்கள் முன்னிலும் அதிக பயத்துடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

"என் பிள்ளைகளினுடைய தாயே" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டார் ஸ்ரீமான் ஊ. அவருடைய முகம் காகிதத்தைப்போல் வெளுத்துக் கிடந்தது.

ஸ்ரீமதி ஊவிடமிருந்து பதில் வரவில்லை.

"ஏய்லியன்" என்று மீண்டும் அழைத்தார் அவர். அவளைத் தொடுவதற்கு அவருக்குத் துணிவுண்டாகவில்லை. வெண்மையான அவளுடைய மலர்க்கரங்கள் இருபுறமும் இரு புஷ்பங்களைப்போல் துவண்டு கிடந்தன.

சியூமிங் வாய் திறவாமல், ஸ்ரீமதி ஊவின் காலடியில் உட்கார்ந்து, அவளுடைய பாதங்களிலிருந்த சிறிய சேலன் பாதரக்ஷைகளையும் வெள்ளை மேஜோடுகளையும் கழற்றினாள். பிறகு அப்பாதங்களை மெல்ல தேய்க்கலானாள். சில்லிட்டிருந்த அவைகளை அவள் தன் மார்புற அணைத்துக் கொண்டாள். அதைப் பார்த்த ஸ்ரீமான் ஊ, "நீ மிகவும் சீக்கிரம் அவளை எழுப்பி விடுவாய் போலிருக்கிறதே" என்று கூறினார்.

"மாட்டேன், ஏனெனில் என்னிடம் அவர்களுக்குச் சிறிதும் பயம் கிடையாது" என்றாள் சியூமிங். மண்டியிட்டபடி

உட்கார்ந்திருந்த அவள் தந்தையும் தனயர்களுமாகிய அவர்கள் எல்லோரையும் நிமிர்ந்து பார்த்தாள்.

"அவளுக்கு ஒருவரிடமுமே பயம் கிடையாதுதான்" என்று பெருமையுடன் கூறிக் கொண்டார் ஸ்ரீமான் ஊ.

"அவருக்கு ஏன் என்னிடம் பயம் இல்லையென்றால், அவர் என்னைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை என்பதுதான் காரணம்" என்று விசித்திரமாகப் பதிலளித்த சியூமிங் தன் கையில் பிடித்திருந்த அச்சிறிய பாதங்களை நோக்கினாள்.

அச்சமயம் நட்சத்திரங்களிலிருந்து தன் கண்களையெடுத்த ஸ்ரீமதி ஊ அருகே, தனது மூன்று பிள்ளைகளும் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். "நீங்கள் மூவருமா? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

சியூமிங் அவசர அவசரமாக மறுபடியும் அவளுடைய பாதரக்ஷைகளை அணிவித்தாள். ஸ்ரீமதி ஊ அவளைக் கவனிக்கவில்லை என்று தோன்றியது. ஆனால் அவள் ஸ்ரீமான் ஊவைப் பார்த்தாள்.

"நீங்கள் எதற்கு இங்கு வந்திருக்கிறீர்கள்?" என்று வினவினாள். தொலைவிலிருந்து வருவது போலிருந்த அவளது குரலில் விரக்தி நிறைந்திருந்தது.

அவளுடைய ஆத்மா மீண்டும் தங்களிடம் வருவதற்கு இச்சைப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது.

லியாங்மோ அவசரத்துடன், "அம்மா, மெங்கிற்கு குழந்தை பிறக்கும் நேரம் வந்து விட்டது போலிருக்கிறது" என்றான்.

த்ஸேமோ, "அம்மா, நீ ருலானுக்கு தேன் கேக்குகள் செய்வது எப்படி என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்றான்.

பெங்மோ தாழ்ந்த குரலில், "அம்மா, நான் உன்னிடம் இன்று ஒரு பொய்யைச் சொல்லி விட்டேன்" என்றான்.

ஒவ்வொருவராக அவளை எல்லோரும் திரும்பி வரும்படி அழைத்தனர். இப்போது ஸ்ரீமான் ஊவின் முறை வந்தது.

"என்னுடைய பிள்ளைகளின் தாயே! நீ இல்லாமல் இந்த வீட்டில் என்ன நடக்கும்? நிலத்தில் கோதுமை விதைக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்பதை மறந்து விட்டாயா நீ?" என்று கேட்டார்.

இவ்விதம் கடைசியாக அவள் திரும்பி வந்தாள். "நீங்களும் உங்கள் கஷ்டங்களும்! அதற்கு ஒன்றும் முடிவே கிடையாதா?" என்று முனகினாள் அவள்.

"கிடையாது; கிடையவே கிடையாது" என்றான் லியாங்மோ.

அவள் தனது முழங்காலின் மீது போடப்பட்டிருந்த கம்பளிப் போர்வையை விலக்கி விட்டு எழுந்து நின்றாள். போர்வை தரையில் விழுந்தது. நட்சத்திர மண்டலத்திலிருந்து திரும்பி வந்த அவள் தான் முன்போலவே அவ்வீட்டிலிருப்பதைக் கண்டாள். ஒன்றும் புரியாதவளாய்ச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"இங் எங்கே? எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. நான் தூங்க வேண்டும். நாளைக்கு.....நாளைக்குப் பார்க்கலாம்."

புருஷர்கள் நால்வரும் பின்னே நகர்ந்து கொள்ள இங் அவளை அறைக்குள் அழைத்துச் சென்றாள். சியூமிங் மட்டும் இருளில் நழுவிச் சென்று விட்டாள். மற்றவர்கள் உட்காரும் அறைக்குள் சென்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு இங் வரும் வரை உட்கார்ந்திருந்தனர். இங் வந்து, "இப்போது ஒன்றும் பயமில்லை. எஜமானி தூங்கி விட்டார்கள்" என்று அறிவித்தாள்.

யாவரும் வெளியே சென்றனர். "அப்பா, இதற்குக் காரணம் என்னவென்று உங்களால் கூறமுடியுமா? அம்மாவின் ஆத்மா இதுபோல் முன் எப்போதும் வீட்டை விட்டுச் சென்றதில்லையே?" என்று கேட்டான் லியாங்மோ போகும் வழியில்.

ஸ்ரீமான் ஊ, அதிருப்தியுடன், "அவளுக்கு என்ன வந்து விட்டதென்றே எனக்குப் புரியவில்லை. அவளுடைய நாற்பதாவது பிறந்த நாளிலிருந்தே அவள் செய்வதெல்லாம் மிக மிக விசித்திரமாகத் தானிருக்கிறது" என்றார்.

பெங்மோ தலையாட்டிக் கொண்டு, "உங்களில் ஒருவராலும் அம்மாவை நான் புரிந்து கொண்டிருப்பது போல் புரிந்து கொள்ள முடியவில்லை. அம்மாவின் மனம் எப்படியிருக்கிறது என்பதை நான் அறிவேன். அவள் தனக்கு இறக்கைகள் இருப்பது போலவும், ஆனால் தான் பறந்து போக முடியாத வண்ணம் அவை கட்டப்பட்டிருப்பது போலவும் உணர்கிறாள். இது தான் அவளது நிலை" என்றான்.

அவனுடைய தந்தையும் லியாங்மோவும் த்ஸேமோவும் அவன் புத்தி சுவாதீனமின்றி பேசுகிறான் என்று எண்ணிக் கொண்டனர். பிறகு அவர்கள் வருத்தத்துடன் ஒருவரோடு ஒருவர் விடை பெற்றுக் கொண்டு, தத்தமது இடத்தை நோக்கிச் சென்றனர்.

* * *

மறுநாள் காலையில் கண்விழித்த ஸ்ரீமதி ஹுவிற்கு, முந்நாள் இரவு நடந்தவற்றை நினைந்து மனக்கலக்கம் உண்டாயிற்று. சரீரத்தின் ஆசாபாசத்திலிருந்து பூரண விடுதலை பெற்றுப் பேரானந்தம் அடைந்த அச் சில நிமிஷங்களைப் போல் அவள் வாழ்க்கையில் என்றுமே இன்பமடைந்ததில்லை. ஆனால் இவ்வானந்தம், ஒரு குடிகாரனுக்கு ஏற்படக்கூடிய குடி வெறியைப் போல், ஆத்மாவிற்கு வெறியை ஊட்டி, அதை அடைய வேண்டும் என்ற ஆசையைத் தடுக்கவொண்ணாததாகச் செய்து விடும். அவளுடைய ஆத்மா தாரகைக் கணங்களிடையே சென்று உலாவிக் கொண்டிருக்கையில், அவள் எல்லாவற்றையுமே உதறித் தள்ளி விடத் துணிந்து விட்டாள் அல்லவா? இப் பிரம்மாண்டமான வீட்டின் சுமைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டாள் அல்லவா! ஒரு கன்னிகா ஸ்திரீ பெண்மையின் அல்லல்களிலிருந்து தப்பித்துக் கொள்வது போலவும் ஒரு துறவி ஆண்மையின் சுமையைத் தாங்க வேண்டிய பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்வது போலவும் அவ்வளவு எளிதாக அவள் அப்போது எல்லாவற்றையும் துறக்கத் துணிந்து விட்டாள். தன்னை இத்தகைய நிலையை அடையும்படித் தூண்டிய சகோதரர் ஆண்ட்ரூவின் மீது அவளுக்கு மிகுந்த கோபம் வந்தது. அதற்கு இடம் கொடுத்து விட்டோமே என்று தன் மேலேயும் அவளுக்குக் கோபம் வந்தது. அவள் எழுந்த போது, கள்ளக் காதலனுடன் உறவாடிவிட்ட குற்றத்தைத் தான் செய்து விட்டது போல் அவள் நெஞ்சில் பாரம் அழுத்தியது.

அவள் தன்னையே கடிந்து கொண்டவளாய் வேகமாக எழுந்தாள். இங்கைக் கூப்பிட்டு, சிறு சிறு குற்றங்களுக்காக அவளைக் கண்டித்தாள். நகர்த்தாமல் வைத்திருந்த ஒரு பெரிய நாற்காலியில் பின்னல் தூசிபடிந்திருந்ததையும் வர்ணம் பூசப்பட்ட ஒரு சரத்திலிருந்து ஒட்டடை தொங்கியதையும் காண்பித்து, அவளைத் திட்டினாள். காலை ஆகாரத்திற்குப் பின் அவள் சமையல்காரனைக் கூப்பிட்டு, கணக்கு களைப் பார்த்த பின், அவன் அடுத்த ஸீஸனில் இன்னின்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிக் கூறினாள். "இனி குளிர்காலம் வருவதற்கு அதிக நாட்கள் இல்லையாதலால்,

மூலாம்பழம், வெள்ளரிக்காய் மற்ற குளிர்ச்சியுள்ள வஸ்துக்கள் இவற்றை நீ அதிகம் சேர்க்க வேண்டியதில்லை. இனி மாமிச வகைகளை அதிகமாக உணவில் கலக்க வேண்டும்" என்று கூறினாள்.

இதைக் கேட்டதும் அவனுடைய சிறிய கண்கள் பெரிதாக விரிந்தன. "அம்மா, தினமும் தாங்கள் எங்கு சாப்பிடுகிறீர்கள்? நான் இவற்றையெல்லாம் இப்போதே செய்ய ஆரம்பித்து விட்டேன் என்பதைத் தாங்கள் கவனிக்க வில்லையா? இத்தனை வருஷங்களுக்குப் பிறகு, தாங்கள் எனக்கு இதெல்லாம் சொல்ல வேண்டுமா, என்ன?" என்றான்.

அவன் ஸ்ரீமதி ஹுவின் கோபத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அவன் தான் ஒரு சிறந்த சமையல்காரனுதலால் தனக்கு அவ்வீட்டில் நிச்சயம் இடம் உண்டு என்பதை உணர்ந்தவனாய் தனக்கு இஷ்டமில்லாத நேரத்திலெல்லாம் அலட்சியத்துடன் நடந்து கொள்ளலானான். சிறந்த சமையற் காரர்களின் குணங்களில் ஒன்றான முன்கோபம் அவனுக்கு மட்டும் இராமற் போய் விடுமா? ஆனால் ஸ்ரீமதி ஹுவின் கடுமை சிறிதும் குறையவில்லை. "சரி, போ, நீ செய்வதையும் செய்யாததையும் பற்றி இங்கு அதிகம் பேச வேண்டாம்" என்று கூறினாள்.

அவள் தனக்காகச் சிறிது நேரம் கூட எடுத்துக் கொள்ள வில்லை. ஒருவன் போனதும் மற்றொருவன் உடனே வந்தான். சமையல்காரனின் பேரில் வந்த கோபத்தை அவள் தணித்துக் கொள்ளுமுன்னரே ஸ்ரீமான் ஹு வழக்கத்திற்கு முன்பாக எழுந்து அவளுடைய அறையை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"உள்ளே வாருங்கள். நான் இப்போதுதான் சமையல் காரனுடைய கணக்கு வழக்குகளையெல்லாம் பார்த்து முடித்தேன். நாம் அவனைப் போகச் சொல்லி விட வேண்டுமென்றே சில சமயங்களில் தோன்றுகிறது. அவன் மிகவும் அதிகப்பிரசங்கியாகி விட்டான்" என்றாள்.

திடுக்கிட்ட ஸ்ரீமான் ஹு, "ஆனால் இவன் ஒருவனுக்குத் தான் நாள் விரும்புகிறபடி 'கிராபுகள்' செய்யத் தெரியும். இவனைக் கண்டு பிடிப்பதற்கு முன் நான் எத்தனை பட்டணங்களில் இப்போர்ப்பட்ட ஆளுக்காகத் தேடினேன் என்பது தான் உனக்குத் தெரியுமே. அவனைப் போகாமல் இருக்கும்படி

தெரிவதற்குத் தான் அவனுக்கு உன்னுடைய தாதிப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்தேன்" என்றார்.

"இங்கிற்கும் தான் வாய்த்துடுக்கு அதிகமாகி விட்டது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

வழக்கத்திற்கு விரோதமாக அவள் பேசிய இத்தோரணை ஸ்ரீமான் ஊவிற்குக் கலக்கத்தைக் கொடுத்தது. அவர் உட்கார்ந்து தமது புகைக்குழாயைச் சட்டைப் பையிலிருந்து எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். "இன்று உனக்கு உடம்பு சௌகரியமில்லை போலிருக்கிறது. உன் கண்களில் கருமை படர்ந்திருக்கிறது" என்றார்.

"எனக்கு ஒன்றுமில்லை" என்று மறுத்துக் கூறினாள் ஸ்ரீமதி ஊ.

ஸ்ரீமான் ஊ புகைக்குழாயை இருமுறை இழுத்து விட்டுக் கீழே வைத்தார். பின் இந்தப்புறமும் அந்தப்புறமும், யாரும் கேட்காமலிருக்கிறார்களா என்று முதலில் பார்த்துக் கொண்டு அவர் தாழ்ந்த குரலில் ஆரம்பித்தார். "ஏய்லியன், நீ இந்த மாதிரி என்னிடமிருந்து அறவே விலகிப் போவது மிகவும் தவறு. உண்மையில் ஆணும் பெண்ணும் பிரிந்திருப்பதில் இருவருக்கும் ஒரு சுகமும் இருப்பதில்லை. குழந்தை பெறுவது மட்டும் தான் முக்கியம் என்பதல்ல. இயற்கை நியதியே இருவரையும் சேர்ந்திருக்கத்தான் சொல்கிறது. நீயே பாரேன் உன்னுடைய நிலையை! உனக்கு என்ன பற்கள் விழுந்து விட்டனவா! தலைமயிர் தான் நரைத்து விட்டதா! உன்னுடைய சரீரமானது இன்னமும் சக்தியும் உற்சாகமும் குன்றுமலிருக்கிறது. நாமிருவரும் எவ்வளவு இன்பமாக வாழ்ந்து வந்தோம் என்பதை நீ மறந்து விட்டாயா!"

"போதும், நிறுத்துங்கள். நான் சிறிதும் மாறவில்லை என்பது உங்களுக்கே தெரியும். நான் என்னுடைய வாழ்க்கையை ஒரு விதமாக வகுத்துக் கொண்டு விட்டேன். உங்களுக்கு ஏதேனும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறதா என்ன? நீங்கள் இப்படி என்னிடம் வந்து பேசுகிறீர்கள்?" என்று கேட்டாள் அவள் உறுதி தளராமல்.

அவர் ஒளிவின்றி, "உண்மையில் நான் உன்னை வரவேற்கத் தான் செய்கிறேன். ஏனெனில் மற்றவர்களைவிட நான் உன்னைத் தான் அதிகமாக நேசிக்கிறேன். சாகுமளவும் என் அன்பு குறையாது. ஆனால் நான் இப்போது எனக்காகச் சொல்லவில்லை" என்று கூறினார்.

"நீங்கள் என்னைப் பற்றி கவலை கொள்ள வேண்டியதில்லை" என்றாள் அவள்.

"நான் உன்னைப்பற்றி எப்படி கவலை கொள்ளாமல் இருப்பது?" என்றார் அவர். ஒரு கணம் அவருக்கு ஒரு பெரும் சந்தேகம் தோன்றியது. இயற்கையின் விசித்திரமான வழிகளில் ஏதாவது ஒன்றினால்—அல்லது ஆத்ம சம்பந்தத்தினால்—அந்த அந்நியப் பாதிரியாருடன் பிணைக்கப் பட்டிருப்பாளோ அவள்! ஆனால் இதை அவளிடம் வெளியிடுவதற்கு அவருக்கே வெட்கமாகயிருந்தது. எல்லா விஷயங்களிலும் அவளுக்கிருந்த நுண்ணிய அறிவையும் சூக்ஷ்ம புத்தியையும் அவர் அறியாதவரல்ல. அம் மனிதர் பாதிரி என்பதோடல்லாமல் அயல் தேசத்தவரும் கூட. ஸ்ரீமான் ஊ இளைஞராக இருந்தபோது, தாம் கோபமாகயிருக்கும் சமயங்களில் கூட அவளை அணுக மாட்டார். மெல்லத் தமது கோபத்தைத் தணித்துக் கொண்டு, ஒரு முறை குளித்து விட்டுத் தமது சுவாசத்தை இனிமையாக்கிக் கொண்ட பிறகுதான் செல்வார். அந்நிய தேசத்தவர்களோ அருவருக்கத் தக்கவர்களாய் இருக்கின்றனர். மதர்ப்பான உடலும் பெருகும் வியர்வையும் முரட்டுத்தனமான ரோமமும் படைத்தவர்கள். அவர் இந்த பயங்கரமான எண்ணத்தைத் தமது மனத்திலிருந்து அகற்றி வைத்தார். தம் மனத்தில் உதித்த எண்ணத்தை அவள் தனது மாயமந்திர சக்தியினால் அறிந்து கொண்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் ஏற்பட்டது அவருக்கு!

அவள் மனத்தை இளகச் செய்வதற்கு அவருக்கு இன்னும் ஒரே ஒரு வழி தான் இருந்தது. அவர் முகத்தைச் சிணுக்கிய வாறு தமது உடல்நிலை சரியாகயில்லை யென்று சொல்லிக் கொண்டார்.

அவர் பெருமூச்சு விட்டு, "ஆம். நீ சொல்வது சரிதான். எனக்கும் வயதாகி விட்டது. வயிறே சரியாகயில்லை. இரவில் நல்ல தூக்கம் வருவதே கிடையாது. காலையில் எழுந்தால் மிகவும் அயர்வாக இருக்கிறது" என்று கூறினார்.

ஆனால் அவள் மனம் இளகவில்லை. "இரவில் அதிகமாகச் சாப்பிடாதீர்கள். இன்னும் சில தினங்களுக்குத் தனியாகப் படுத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

அவர் இம்முயற்சியைக் கைவிட்டவராய் தமது உதட்டைப் பிதுக்கியவண்ணம் உட்கார்ந்திருந்தார். அவள் தரையில் கால்களால் இரண்டு மூன்று முறை தட்டி விட்டு ஒரு

பெருமூச்சொரிந்தாள். பிறகு அவருக்குத் தேநீர் ஊற்றிக் கொடுப்பதற்காக எழுந்தாள். தேநீர் ஜாடியின் மூடியைப் பிடித்திருந்த அவளது மெல்லிய விரல்கள் நடுங்குவதைக் கண்டார் அவர். ஆனால் அவர் ஒன்றும் கூறவில்லை. மௌன மாகத் தேநீரை அருந்தினார். அவளும் மற்றொரு கிண்ணத்தில் ஊற்றிப் பருகினாள். பிறகு அவர் எழுந்து சென்றார். அவர் வாசலை அடையுமுன்னரே அவள் மிகத் தெளிவான குரலில் அவரை விளித்து, "உங்களுடைய புகைக் குழாயை மறுபடியும் மறந்து விட்டுச் செல்கிறீர்களே" என்றாள் கடுமையுடன்.

திரும்பிப் பார்த்த அவருடைய முகம் சிவந்து விட்டது. "உண்மையாகவே நான் மறந்து தான் போய் விட்டேன்" என்றார்.

ஆனால் கதவருகே நின்ற அவள் ஒரு அசிங்கமான வஸ்துவைப் பார்ப்பது போல் அதைச் சுட்டிக் காட்டியவாறே நின்றாள். அவர் தண்டிக்கப்பட்ட சிறுவனைப் போல் வேக மாகச் சென்று அதை எடுத்துக் கொண்டு அவளைத் தாண்டிச் சென்றார். முகம் சிவக்க, உதடுகளைக் கடித்தவாறு அவர் சென்றதை அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருந்த அவளது நெஞ்சில், ஒரு பலத்த அடி விழுந்து விட்டது போல் வலி தோன்றியது.

அவள் அதைப் பற்றிச் சிந்திக்கும் முன் அங்கு யாரோ வந்து விட்டனர். அது வேறு யாருமல்லாமல் சிறிய சகோதரி ஹேஷியாவாகவா இருக்க வேண்டும்? இன்று பார்த்து தானே இந்த வெள்ளைக்காரி வரவேண்டும் என்றிருந்தது ஸ்ரீமதி ஊவிற்கு. ஆனால் அவளை வரவேற்று உள்ளே வந்து உட்காரும் படிச் சொல்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

சகோதரி ஹேஷியா, வழக்கப்படி அவசரத்துடன் குழறிக் கொண்டு, "உங்களைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டன" என்றாள். ஸ்ரீமதி ஊ அவளுடைய வார்த்தைகள் இன்ன தென்பதைத் தெரிந்து கொள்ளாமலே அதன் அர்த்தத்தை மட்டும் கண்டு பிடித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டிருந்தாள். ஏனெனில் சகோதரி ஹேஷியா, நாவையோ அல்லது சுவாசத் தையோ கட்டுப்படுத்தும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை. சப்தம் அவளுடைய வாயிலிருந்து அழுத்தமாக இருக்க வேண் டிய இடத்தில் மேலாகவும், மேலாக இருக்க வேண்டிய இடத் தில் அழுத்தமாகவும் இருந்தன. வார்த்தைகளுக்குத் தகுந்த மாதிரி குரலின் உயர்வும் தாழ்வும் வராமல் கண்டபடி வந்தன.

"உங்களுக்கு உடம்பு சுகமில்லாமல் இருந்ததா என்ன, சகோதரி ஹேஷியா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"இல்லை, ஆனால் எனக்கென்னவோ...போன தடவை... நான் உங்கள் விஷயத்தில் அலுவசியமாகத் தலையிட்டு விட் டேன் என்று தோன்றியது" என்றாள் சகோதரி ஹேஷியா.

"உங்களால் எப்படித் தலையிட முடியும்?" என்றாள் ஸ்ரீமதி ஊ பணிவுடன்.

வெகுளியான சகோதரி ஹேஷியா அதைப் பணிவாகவே கருதி ஏற்றுக் கொண்டாள். "தாங்கள் மிகவும் அன்புள்ள வர். நான் இன்று ஒரு முக்கியமான காரியத்திற்காக வந்திருக் கிறேன். நான் ஒன்று செய்ய உத்தேசித்திருக்கிறேன். நீங்கள் தயவுசெய்து அதற்கு ஒப்புக் கொண்டால்....." என்றாள்.

"என்ன உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

"நீங்கள் அந்தப் பாதிரியாரை அறிவீர்களல்லவா?" என்று கேட்டாள் சகோதரி ஹேஷியா.

"என்னுடைய மகனின் ஆசிரியரையா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அவர் ஒரு அனுதை ஆஸ்ரமத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அங்கிருக்கும் பெண்களையெல்லாம் மேற்பார்வை பார்ப்பதற்கு ஒரு ஸ்திரீ இருக்க வேண்டியது அவசியம் என்று நான் எப் போதுமே கருதியதுண்டு. அவரிடம் ஒரு கிழ வேலைக்காரி தான் இருக்கிறாள். அவர்களுக்குப் பாடம் கற்பிப்பதும் அவசி யம் தானே! தாங்கள் அவ்விதம் கருதவில்லையா? அதாவது நீங்களும் அதை உசிதம் என்று கருதினால், நான் அங்கு ஒரு உபாத்தியாயினியைப் போல் தொண்டாற்றக் காத்திருக் கிறேன். இதை நீங்கள் அவரிடம் தெரிவிக்கிறீர்களா?" என்றாள் சகோதரி ஹேஷியா.

"நீங்களாகவே ஏன் அவரைக் கேட்கக் கூடாது?" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

சகோதரி ஹேஷியா தீவிரத்துடன், "அவருடைய மதமும் என்னுடைய மதமும் ஒன்றல்ல என்பது தான் உங்களுக்குத் தெரியுமே" என்றாள்.

"உங்கள் தேசத்தில் எத்தனை வகையான மதங்கள் இருக்கின்றன? ஒவ்வொரு முறையும் ஒரு புதிய மதத்தைப்

பற்றி நான் கேள்விப் படுகிறேனே!" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

சகோதரி ஹோஷியா கம்பீரத்துடன், "ஒரே ஒரு உண்மையான கடவுள்தான் இருக்கிறார்" என்றாள்.

"உங்களுக்கு அந்தக் கடவுளின்மீது நம்பிக்கை இருக்கிறதா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

சகோதரி ஹோஷியாவின் வெளுத்த நீல நிறமான கண்கள் விரிந்தன. அவள் கன்னத்தில் வந்து விழுந்த ஒரு கொத்து செம்பட்டை மயிரைத் தனது கையால் பின்புறம் தள்ளி விட்டுக் கொண்டு, "பின் எதற்காக நான் என் வீடு வாசல்களை விட்டு, சொந்த நாட்டை விட்டு, இவ்விசித்திரமான தேசத்திற்கு வந்திருக்கிறேன் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"எங்களுடைய நாடு விசித்திரமானதா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ சிறிது ஆச்சரியத்துடன்.

"எனக்குப் புதுமையானது தான்" என்றாள் ஹோஷியா.

"உங்களுடைய கடவுள் உங்களை இங்கு வரச் சொன்னாரா?" என்று மேலும் கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"ஆம்" என்றாள் ஹோஷியா.

"நீங்கள் அவருடைய குரலைக் கேட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

சகோதரி ஹோஷியாவின் முகம் சிவந்தது. அவள், வெளுத்து மெலிந்திருந்த தனது கரங்களை மார்பின்மீது வைத்துக் கொண்டு, "நான் உணர்ந்தேன்—அது இங்கு ஒலித்தது" என்றாள்.

ஸ்ரீமதி ஊ அவளைப் பார்த்து, "உங்களுடைய பெற்றோர், உங்களுக்கு மணம் முடித்து வைக்கச் சிறிதும் பிரயாசைப் படவில்லையா?" என்று கேட்டாள்.

சகோதரி ஹோஷியா மார்பை அழுத்திக் கொண்டாள். "எங்களுடைய நாட்டில் பெற்றோர்கள் கல்யாணத்தை முடித்து வைப்பதில்லை. ஆண்களும் பெண்களும் காதலுக்காகக் கல்யாணம் செய்து கொள்கிறார்கள்."

ஸ்ரீமதி ஊ அமைதியான குரலில், "நீங்கள் யாரையாவது காதலித்தது உண்டா?" என்று கேட்டாள்.

சகோதரி ஹோஷியாவும் சாதாரண முறையில், "உண்டு" என்றாள்.

"ஆனால் பின் கல்யாணம் செய்து கொள்ளவில்லையே" என்றாள் ஸ்ரீமதி ஊ.

சகோதரி ஹோஷியா வேதனையுடன், "என்னுடைய நாட்டில் ஆண் பிள்ளை தான் முதலில் பெண்ணைக் கேட்க வேண்டும்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ மௌனமானாள். அவள் அடுத்த கேள்வியை எளிதாகக் கேட்டிருக்கலாம். ஆனால் அதற்கு அவள் மனம் இணங்கவில்லை. ஒருவனும் சகோதரி ஹோஷியாவிடம் தன்னை மணந்து கொள்ளும்படி கேட்கவில்லை என்பது அவளுக்குத் தெளிவாக விளங்கியது.

சகோதரி ஹோஷியா நனைந்திருந்த தனது இமைகளை மீண்டும் துணிவுடன் உயர்த்தி, "கடவுள் எனக்கு வேறு விதமான பணிகளை விதித்திருந்தார் போலும்" என்றாள். அவளுடைய குரலில் உறுதி நிறைந்திருந்தது.

ஸ்ரீமதி ஊ அவளை அன்புடன் பார்த்து சிரித்தவாறு, "உங்களை நான் அறிய மாட்டேனா?" என்றாள்.

பிறகு அவள் தனது சிறிய வெள்ளிப் புகைக் குழாயை எடுத்துப் பற்றவைத்து இருமுறை புகையிழுத்தாள். "இங்கே எங்களுடைய நாட்டில், கல்யாணத்தைப் போன்ற முக்கிய விஷயங்களை நாங்கள் ஆண்களிடமோ பெண்களிடமோ அல்லது கடவுளிடமோ விடுவதில்லை. திருமணம் என்பதும் உணவு, துணி, வீடு இவைகளைப் போன்ற ஒரு விஷயம். அதற்கும் ஒரு நியதி இருக்க வேண்டும். இல்லாவிடில் ஒரு சிலரே அதிகம் எடுத்துக் கொள்வார்கள். மற்றவர்கள் பட்டினியாகக் கிடக்க வேண்டியதுதான். என்னுடைய வீட்டில் நான்தான், வேலைக்காரர்கள் உள்பட எல்லோருக்கும் இன்னின்ன ஆகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறேன். அவரவருடைய பாகத்தை எடுத்துக் கொள்ள அவரவருக்கு உரிமை இருக்கிறது. சிலவகை உணவுகள் மற்றவைகளைக் காட்டிலும் அதிகமாக விரும்பப் படுவது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால் அவர்களை இஷ்டப்படி சாப்பிட அனுமதிப்பேனாகில், குழந்தைகள் இனிய பண்டங்களைத்தவிர வேறொன்றையும் தொடமாட்டார்கள். என்னுடைய பிள்ளைகளின் தந்தையோ இராபுகளையும் கொழுப்பு நிறைந்த பண்டங்களையும் தவிர

வேறொன்றையும் கண்ணெடுத்துக்கூட பார்க்கமாட்டார். வேலைக்காரர்களில், பேராசைப் பிடித்தவர்கள் சற்று சாது வானவர்களுக்கு ஒன்றும் வைக்காமல் சாப்பிட்டு விடுவர். அவர்கள் பசியால் வருந்துவர். ஒவ்வொரு வேலைக்காரனுக் கும் இவ்வளவுதான் கொடுக்கப்பட வேண்டுமென்றும், வீட்டு நபர்கள் ஒவ்வொருவருக்கும் இன்ன வகைதான் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் நான் வகுத்து வைத்திருக்கிறேன். இவ்விதமாக என்னுடைய பொறுப்பின் கீழ் யாவரும் போஷிக்கப் படுகிறார்கள்" என்றாள்.

சகோதரி ஹோஷியாவினுடைய விரல்கள் ஒன்றோ டொன்று பின்னிக் கொண்டன. "நாம் எவ்விதம் இதைப் பற்றியெல்லாம் பேச நேர்ந்தது என்றே எனக்கு விளங்க வில்லை. உங்களை ஒன்று கேட்பதற்காக நான் இங்கு வந்தேன். உண்மையில் அது என்னவென்றே எனக்கு அடியோடு மறந்து விட்டது" என்றாள்.

ஸ்ரீமதி ஊ இரக்கத்துடன், "ஏனெனில் நீங்கள் அதை உண்மையாகவே உங்கள் மனதில் விரும்பவில்லை. நீங்கள் கேட்டதற்கு நான் பதிலளிக்கிறேன். சகோதரி ஹோஷியா, நீங்கள் சகோதரர் ஆண்ட்ரூவைத் தனியாக விட்டுவிட வேண்டும். அவர் ஒரு உயர்ந்த மலையைப் போன்றவர் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். உயரமாக இருப்பதன் காரணமாகவே மலை அவ்வளவு உறுதியாகவும் இருக்கிறது. அப் பாறையின் மீது சென்று மோதிக்கொள்வ தால் உங்களுக்கு ஒருவித பயனும் ஏற்படப் போவதில்லை. வீணே புண்பட்டுப் போவீர்கள். உங்கள் சரீரம் துகள் துகளாகச் சிதறிப் போய்விடும். ஆனால் அதை அவர் அறியக் கூடமாட்டார். உங்களுடைய சொந்தக் கடவுளுடனேயே நீங்கள் சுகமாயிருப்பது நல்லது. இதுவே எனது புத்திமதி" என்றாள்.

சகோதரி ஹோஷியாவின் முகம் வெளுத்து விட்டது. அவள் திக்கியவாறு, "நீங்கள் சொல்வதே எனக்குப் புரிய வில்லை. சில சமயங்களில் உங்களை, ஒரு பொல்லாத ஸ்திரீ என்று நான் எண்ணியதுண்டு. எவ்விதமோ உம் எண்ணங்களை யெல்லாம் என்னுள் புகுத்தி விடுகிறீர்கள்—இம்மாதிரியான எண்ணங்களே எனக்கு இதுவரை இருந்தது கிடையாது" என்றாள்.

ஸ்ரீமதி ஊ அன்புடனேயே "உங்களுடைய எண்ணங் களைப் பற்றி நீங்கள் வெட்கம் கொள்ள வேண்டியதில்லை.

நீங்கள் ஒரு நல்ல பெண்மணியாகையால் உம் எண்ணங்களும் நல்லவை தாம். நீங்கள் தனிமையில் வாழ்ந்து வருகிறீர்கள். அதை நீர் விரும்பாத போதிலும் அதுவே உங்களது விதியாக அமைந்திருக்கிறது. வாழ்க்கையை அனுபவிக்க உமக்குக் கொடுத்து வைக்கவில்லை. கொடுமை நிறைந்த உங்களுடைய நூதனமான தேசத்தில் வாழ்க்கையானது உமக்குச் சுகத்தை அளிக்கத் தவறிவிட்டது. உங்களது பெற்றோரும் அதற்கு எவ்வித முயற்சியும் செய்யாதிருக்கின்றனர். சகோதரி ஹோஷியா, என்னால் மட்டும் முடிந்திருந்தால் நானே உங்களுக்கு ஒரு கல்யாணம் செய்து வைத்திருப்பேன். ஆனால் உங்கள் இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் யாரும் இங்கில்லையே" என்றாள்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு வந்த ஹோஷியா வாயைத் திறப்பதும் மூடுவதும் திணறுவதுமாக இருந்தாள். திடீரென்று அவளுடைய கண்களில் கோபத்துடன் கூடிய கண்ணீர் ததும்பியது. ஸ்ரீமதி ஊவைப் பார்த்து அவள், "நீர் மிகவும் வெறுக்கத்தக்கவர். நான் ஒன்றும் அப்படிப் பட்டவளில்லை...நீங்கள்...நீங்கள்...சீனர்களாகிய நீங்கள் எல் லோரும் ஒரே மாதிரிதானிருக்கிறீர்கள். எப்போது பார்த் தாலும் இந்த மாதிரியான எண்ணங்களையே மனதில் வைத்துக் கொண்டு"...என்று திணறினாள்.

ஸ்ரீமதி ஊ ஆச்சரியமடைந்தாள். "சகோதரி ஹோஷியா, நான் வாழ்க்கையைப் பற்றிப் பேசினேன். ஆண்களும் பெண் களும் எப்படி வாழ வேண்டும் என்பதைச் சொன்னேன். உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. என்னால் முடிந்தால் நான் உங்களுக்கு எந்த உதவியும்..."

சகோதரி ஹோஷியா விம்மியவாறு, "எனக்கு உங்க ளுடைய உதவி தேவையில்லை. நான் கடவுளுக்குச் சேவை செய்யவே விரும்புகிறேன்" என்றாள்.

"ஐயோ, பாவம். அப்படியானால் போய் உங்களுடைய கடவுளுக்கே தொண்டாற்றிக் கொண்டிரு" என்று வாய்க்குள் முணுமுணுத்த ஸ்ரீமதி ஊ. பிறகு எழுந்து அவளுடைய கையைப் பிடித்து அவளை வாசல் வரை கொண்டு விட்டு அவளுக்கு வணக்கம் கூறினாள். அவளை இனி பார்ப்பதேயில்லை என்று மனத்துள் தீர்மானித்துக் கொண்டாள். அவள் கண்களில் இன்னும் இரக்கம் தோன்ற உள்ளே சென்று உட்கார்ந்தாள். அப்போது இங் ஒடி வந்தாள்.

"சிறிய எஜமானரின் மனைவிக்கு இடுப்பு வலி ஆரம்பித்து விட்டது" என்ருள் அவசரத்துடன்.

ஸ்ரீமதி ஊ, "ஆ! முதலில் அவளுடைய தாயாருக்குச் சொல்லியனுப்பு. அதற்குள் நான் அங்கு போகிறேன்" என்று கூறி எழுந்து படுக்கையறைக்குச் சென்ருள். அங்கு கைகளைச் சுத்தமாகக் கழுவிக் கொண்டு, தனது சில்க் கோட்டை கழற்றி விட்டுச் சுத்தமான நீலவர்ண லினன் கோட்டு ஒன்றை எடுத்து அணிந்து கொண்டாள். பிறகு கைகளில் சிறிது பவுடரைப் பூசிக்கொண்டு லியாங்மோவின் பகுதியை நோக்கிப் புறப் பட்டாள்.

அவள் இச் செய்தியை வரவேற்ருள். ஒரு வீட்டில் குழந்தை பிறக்கும் வைபவத்தைப் போல் உற்சாகமூட்டக் கூடியது வேறென்றுமில்லை. அவளுக்குத்தான் குழந்தைகளைப் பெற்றபோது அதனல் இன்பம் உண்டாகவில்லை. ஆயினும் ஒவ்வொரு முறையும் பிரசவத்திற்குப் பிறகு அவளுக்குத் தான் புத்துயிர் பெற்று விட்டது போன்ற உணர்ச்சி ஏற்படும். அவளுக்கு மெங்கைப் பற்றிச் சிறிதும் கவலை கிடையாது. மெங் இளமையும் வலிமையும் கொண்டிருந்தாள். அவளது சரீரம் குழந்தை பெறுவதற்கு ஏற்றதாக இருந்தது.

எல்லா பிரசவ தினத்தையும் போல் அன்றைய தினமும் பெண்களுக்குரிய நாளாக இருந்தது. அவளுடைய மகனின் பகுதியில் முன்புறமிருந்த பெரிய அறையில் வீட்டிலுள்ள எல்லாப் பெண்மணிகளும் வேலைக்காரிகளும் கூடியிருந்தனர். எல்லோரும் ஒரே பரபரப்புடன் காணப்பட்டனர். குழந்தை கள் கூட பரபரப்படைந்தவர்களாய், தண்ணீர் கொண்டு வருவதிலும் தேநீர் கொண்டு கொடுப்பதிலும் உதவி செய்ய முன் வந்தனர். இப் பெரிய வீட்டில் ஏற்கெனவே அதிகம் பேர் இருந்தனர். ஆயினும் இன்னெரு குழந்தை பிறக்கப் போவதை எல்லோரும் வரவேற்றனர். அதுவுமல்லாமல், மெங் வீட்டின் மூத்த பிள்ளையின் மனைவியாதலால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு அதிக பெருமையும் மதிப்பும் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீமதி ஊ அவ்வறையை அடைந்தபோது உறவினளான ஒரு வயதான ஸ்திரீ, "இன்னெரு மகன் பிறந்தால் மிகவும் நல்லது. அப்போதுதான் முதல் மகனுக்கு ஏதாவது ஏற்பட் டாலும் இரண்டாவது பிள்ளை இருக்கிறது என்ற ஆறுதல் இருக்கும். ஒரு வீட்டிற்குப் பல பிள்ளைகள் இருப்பது எப்போதும் நல்லது" என்று கூறிக்கொண்டிருந்தாள்.

ஸ்ரீமதி ஊ உள்ளே நுழைந்ததும் யாவரும் எழுந்து நின்றனர். எல்லாவற்றையும் விட ஒரு உயர்ந்த ஆசனம் அவளுக்காக வைக்கப்பட்டிருந்தது. அவள் அதில் அமர்ந்து கொண்டாள். திடீரென்று அங்கு மௌனம் நிலவியது. ஒன்றிரண்டு பேர் மெல்லிய குரலில் வணக்கம் தெரிவித்தனர். இரண்டாவது மருமகள் என்ற முறையில் ருலான் எழுந்து தேநீர் ஊற்றிக் கொடுத்தாள். அவள்கூடப் பேசாதிருந்தாள்.

"ஆ! ருலானு" என்ருள் ஸ்ரீமதி ஊ.

அவள் ஒரு கணம் அப் பெண்ணை மிக்க கவனத்துடன் கூர்ந்து நோக்கினுள். அவள் வெளுத்துக் காணப்பட்டாள். ருலானைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவளுக்கு அவள் ஒரு நாள் இரவில் வாய்விட்டு அழுது கொண்டிருந்தாள் என்பது ஞாபகம் வந்தது. பிறகு லின்யி சற்று தூரத்தில் தள்ளி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். அவள் வெள்ளரி விதை களைப் பற்களால் கடித்து உறித்துத் தின்றுக் கொண்டிருந் தாள். அதன் தோலை அங்கேயே கீழே போட்டு வைத்திருந் தாள். அதற்காக அவளைக் கண்டிக்க வேண்டும் என்று எழுந்த எண்ணத்தை அடக்கிக் கொண்டாள் ஸ்ரீமதி ஊ. இன்னும் சிறிது நேரத்தில் ஸ்ரீமதி கேங் இங்கு வந்து விடுவாள். அதற்குள் லின்யியை ஏதேனும் சொல்வானேன் என்று விட்டு விட்டாள். ஸ்ரீமதி ஊ தன்னைப் பார்ப்பதைக் கண்டு லின்யி எழுந்து நின்ருள்.

"ஆ! லின்யி" என்ருள் ஸ்ரீமதி ஊ.

பிறகு அவள் பிரசவக் காரியத்தைக் கவனிப்பதில் ஈடுபட் டாள். அவளுடைய வருகையை அங்கு ஏற்பட்ட அமளியால் அறிந்த மருத்துவச்சி படுக்கையறையிலிருந்து ஓடி வந்தாள். "இப்போது எப்படியிருக்கிறது?" என்று அவளை விசாரித்தாள் ஸ்ரீமதி ஊ.

"கவலைப் படுவதற்கு ஒன்றுமில்லை" என்ருள் அத் தடித்த பெண்மணி. பலத்த குரலும் முரட்டுத்தனமான உடலும் கொண்டவள் அவள். ஆனல் நல்ல சுபாவம் படைத்தவள். எல்லா வீட்டிற்கும் இவள் மருத்துவம் செய்வதற்காகச் சென்று வந்தாள். ஒரு செல்வந்தர் வீட்டில் குழந்தை பிறந் தால் அவளுடைய மகிழ்ச்சிக்கு கேட்கவே வேண்டியதில்லை. ஏனெனில் அங்கு அதிகமான பணம் கிடைக்கும். அதுவும் குழந்தை முழுதாகவும் உயிரோடும் ஆண் குழந்தையாகவும் இருந்து விட்டால் அவளுக்கு நல்ல அதிர்ஷ்டம் தான்!

அவளுடைய அகன்ற முகம் மலர்ந்திருந்தது. "இது நிச்சயம் ஒரு ஆண்குழந்தைதான்" என்றாள்.

ஆனால் அதற்குள் மெங்கின் கூக்குரல் கேட்டது. உடனே அவள் அங்கிருந்து உள்ளே ஓடினாள். அரைமணி நேரத்திற்குள் ஸ்ரீமதி கேங் அவசர அவசரமாக உள்ளே வந்தாள். அவள் பீதியினால் உருக்குலைந்து காணப்பட்டாள். அவள் உள்ளே நுழைந்ததும் மீண்டும் நிசப்தம் உண்டாயிற்று. எல்லோருடைய மனத்திலும் பரிதாபமும் ஆச்சரியமுமுண்டாயிற்று. அதை உணர்ந்த அவள் தனது வெட்கத்தை மறைப்பதற்காகப் பேசினாள்.

"சகோதரிகளே! நீங்கள் எல்லோரும் இங்கு இருக்கிறீர்களா? என்னுடைய குழந்தையை இவ்வளவு கவலையுடன் கவனிப்பதற்கு உங்கள் மனம் எப்போர்ப்பட்டதாக இருக்க வேண்டும்!" என்று மொழிந்தாள்.

பிறகு ஸ்ரீமதி ஊவை நோக்கி, "ஆ! ஏய்லியன்! அவள் எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"நான் உனக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன். வா. இருவருமாக உள்ளே போவோம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இருவருமாக உள்ளே சென்றனர். மெங் ஒரு குறுகலான பலகையின் மீது படுத்திருந்தாள். அவளுடைய கன்னங்களிலிருந்து வியர்வை வழிந்தோடி அவளுடைய நீண்ட கூந்தலை நனைத்தது. இரண்டு பெண்மணிகளும் அவளுக்கு இருபக்கத்திலும் சென்று நின்று அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டனர்.

மெங் திணறிக் கொண்டு, "அம்மா, அம்மா—இது போன தடவையைக் காட்டிலும் மோசமாக இருக்கிறதே" என்றாள்.

ஸ்ரீமதி கேங் ஆதரவுடன், "கண்டிப்பாக இல்லை. இம்முறை மிகவும் சீக்கிரம் ஆகிவிடும்" என்றாள்.

"பேசாதீர்கள். இதோ நேரம் வந்து விட்டது" என்று அதட்டினாள் ஸ்ரீமதி ஊ.

ஸ்ரீமதி ஊவின் குளிர்ந்த சிறிய கையை விட ஸ்ரீமதி கேங்கின் உஷ்ணமான தடித்த கைகள் மெங்கிற்கு இதமாயிருந்தன. அவளுக்குத் தன் தலையைத் தாயின் மார்பின்மீது சாய்த்துக் கொண்டு விம்மியழ வேண்டும் போலிருந்தது. ஆனால் அப்படிச் செய்வது தனது கணவனுடைய தாய்க்குச்

செய்யும் அவமரியாதையாகி விடுமே என்பதால் அவளுக்கு அதற்குத் துணிவுண்டாகவில்லை. மருத்துவச்சி பரபரப்பாக வேலை செய்யலானாள்.

மெங் சரீரத்தை உலுக்கிக் கொண்டு வீலென்று கத்தினாள். தான் பிடித்திருந்த இரு கைகளையும் வளைத்து முறுக்கினாள். ஆனால் இருவரும் பின் வாங்காமல் நின்றனர். அவள் தலையைக் குனிந்து தாயின் கையைப் பிடித்[illegible] கையைக் கடித்துக் கொண்டாள். ஸ்ரீமதி தேங் அவளுடைய கையைப் பிடித்து அதைத் தனது மார்பேடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"ஏன் உன்னை இந்தப் பாடு படுத்திக் கொள்கிறாய்?" என்றாள்.

மெங் தனது சரீரத்தைப் போட்டு வளைத்து எடுத்து மிகவும் வேதனைப்பட்டாள். கடைசியாக ஒரு முறை அவள் வாயைப் பெரிதாகப் பிளந்து கொண்டு கதறக் கத்தினாள். அதுவே கடைசிக் கூச்சல்.

அக் குழந்தையைத் தனது கரங்களில் எடுத்து [illegible] கொண்ட ஸ்ரீமதி கேங் பக்தி பூர்வமாக, "இன்னொரு [illegible] குழந்தை" என்றாள். ஒரு முறை மூச்சை உள்ளே இழுத்த அக்குழந்தை, அதைச் செவியுற்றவன் போன்று, ஒரு கத்தலுடன் சுவாசத்தை வெளியே விட்டான்.

ஸ்ரீமதி ஊ கோபத்துடன் சுருங்கிக் காணப்பட்ட அக் குழந்தையைப் பார்த்துப் புன்னகை செய்தாள். "பிறந்து விட்டோமே என்று உனக்குக் கோபம் வருகிறதா? மெங், அவனைக் கேள். நம் எல்லோரையும் வைகிறான் அவன்" என்றாள். மெங் பதிலளிக்கவில்லை. வேதனை நீங்கிய அவள், கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். மழையில் அடிபட்டுக் கீழே விழுந்த புஷ்பத்தைப் போல் காணப்பட்டாள் அவள்.

* * * *

அன்று இரவு ஸ்ரீமதி கேங்கும் ஸ்ரீமதி ஊவும் சாவதானமாகப் பேச உட்கார்ந்தனர். வீட்டில் யாவும் நன்றாக நடந்தேறி விட்டன. குழந்தை சுகமாகயிருந்தது. இளம் தாய் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். இருவரும் பரிபூரண திருப்தியடைந்திருந்தனர். ஸ்ரீமதி ஊ தன்னுடைய சிநேகிதிக்குத் துன்பத்தை உண்டாக்க விரும்பாதவளாய் நாளுக்கு நாள் பெருத்து வரும் அவளுடைய உடலைப் பற்றி அன்று

முழுவதும் பேச்செடுக்காதிருந்தாள். அவர்களிருவரும் குடும்பத்தைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும், இடையிடையே தங்களுடைய பால்ய காலத்தின் நினைவுகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது வாசற்கதவிலிருந்து ஒரு நீண்ட நிழல் தோன்றியது. தினமும் போல் அன்றும் பெங்மோவிற்குக் கல்வி போதிப்பதற்காகச் சகோதரர் ஆண்ட்ரூ வந்தார்.

"அந்த அந்நியப் பாதிரியாரா?" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"பெங்மோவிற்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக அவர் இன்னமும் வருகிறார்" என்றாள் ஸ்ரீமதி ஹ. முதல் நாள் இரவு அவளுடைய ஆத்மா அவ்வீட்டை விட்டு வெகு தூரம் சென்று வந்ததற்குப் பிறகு இப்போது வெகு காலமாகி விட்டது போல் அவளுக்குத் தோன்றியது. இன்றிரவோ அது இவ்வீட்டை மீண்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது. இன்றைக்குப் பிறந்த அச்சிறு குழவி மீண்டும் அத்தனையை இறுக்கி விட்டது. இச் சிசுவின் உள்ளத்தையும் வயிற்றையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் இனி அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

ஸ்ரீமதி கேங், "எனக்கு அந்நிய பாஷைகள் எவ்விதம் புரிவதில்லையோ, அதே போல் இந்தப் பாதிரிமார்களையும், கன்னிகா ஸ்திரீகளையும் கூடப் புரிந்து கொள்ள முடிவதில்லை" என்றாள்.

ஸ்ரீமதி ஹ அவளைப் பார்த்து புன்னகை செய்து, "உன்னால் எப்படி புரிந்து கொள்ள முடியும்?" என்றாள்.

ஸ்ரீமதி கேங் கள்ளத்தனமாக நகைத்துக் கொண்டு தன்னுடைய வயிற்றைத் தடவி கொடுத்துக் கொண்டாள். "நான் தனிமையில் இருக்கும்போது எனக்கு மிகவும் இன்பமாகத்தானிருக்கிறது. இன்னொரு குழந்தை பிறக்கப் போவதைக் குறித்து எனக்கு மகிழ்ச்சியே உண்டாகிறது என்பதை என்னால் மறுக்க முடியாது" என்றாள்.

இளமையை வெகு காலத்திற்கு முன்பே இழந்து விட்ட ஸ்ரீமதி கேங்கின் சிவந்த முகத்தில், முந்நாள் இரவு சகோதரர் ஆண்ட்ரூவின் முகத்தில் தோன்றிய ஆத்ம திருப்தியைப் போன்ற ஏதோ ஒன்று தோன்றியதைக் கண்டு ஸ்ரீமதி ஹ அளவில்லா ஆச்சரியம் கொண்டாள். அவர்களுடைய சிநேகம், இருவரும் பெண்மணிகள் என்ற சாதாரண முறையிலேயே எப்போதும் இருந்து வந்திருக்கிறது. ஸ்ரீமதி ஹவிற்கு

தனது சிநேகிதிக்குப் படிக்கக்கூடத் தெரியாது என்பது தெரியும். உண்மையில், தனக்கு ஒரு குழந்தையைப் பெறும் சக்தியிருக்கும் போது, படித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது பெரும் மடமை என்பதே ஸ்ரீமதி கேங்கின் கருத்து.

ஸ்ரீமதி ஹ பாதி குறும்பும் பாதி அன்பும் கலந்த குரலில், "மேய்ச்சன், உன்னுடைய பசி என்றுமே அடங்காது போலிருக்கிறதே. பிள்ளை பெறும் வேலையை இனியும் இளம் பெண்களிடம் விட உனக்கு மனது வரவில்லையா? உன்னுடைய பேரக் குழந்தைகளைக் கூட நீயே பெற்றுக் கொடுத்து விடுவாய் போலிருக்கிறதே" என்றாள்.

ஸ்ரீமதி கேங் சற்றே அவமானமடைந்தவளாய், "ஐயோ, நான் என்ன செய்வது! எனக்கு அதில் இத்தனை மகிழ்ச்சி தோன்றுகிறதே" என்றாள் பெருமூச்சுடன்.

ஸ்ரீமதி ஹ வியப்போடு, "உண்மையில் நீ இப்போது நடத்தும் வாழ்க்கையைத் தவிர வேறெதுவும் வேண்டுமென்று உனக்கு விருப்பம் எழுந்ததில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை. வருஷத்திற்கொரு குழந்தையைப் பெற என்னால் முடிந்தால் எனக்கு வேறெதுவும் வேண்டியதில்லை. அதில்லாவிடில் என்னால் வேறு என்ன பிரயோசனம் இருக்கிறது?" என்றாள் ஸ்ரீமதி கேங்.

அப்போது பெங்மோவின் நெடிய கம்பீரமான உருவம் வாயிற்கதவைக் கடந்து செல்வது தெரிந்தது. அவன் செல்லும் வரை பார்த்துக் கொண்டேயிருந்தாள் ஸ்ரீமதி ஹ. "பெங்மோ படிப்பதற்காக வந்து விட்டான்" என்றாள்.

இரு பெண்மணிகளும் அவனது மெல்லிய உருவத்தின் நிழல் மறையும் வரை பார்த்துக் கொண்டேயிருந்தனர். பிறகு இருவரும் ஒரே சமயத்தில், "லின்யி..." என்று ஆரம்பித்தனர். பிறகு இருவரும் நிறுத்தி விட்டு மற்றவள் முதலில் சொல்லட்டு மென்று காத்திருந்தனர்.

"நீயே சொல்லு" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"இல்லை, நீ தான் அவளைப் பெற்றவள். நீயே முதலில் சொல்லு" என்று வற்புறுத்தினாள் ஸ்ரீமதி ஹ.

"இல்லை. நான் மாட்டேன்" என்றாள் ஸ்ரீ மதி கேங்.

பிறகு ஒரு கணம் சென்று, "சரி, அப்படியானால் நானே ஆரம்பிக்கிறேன். மேய்ச்சன், பெங்மோ உன்னுடைய

மகளுடன் சந்தோஷமாக வாழவில்லை. அவனை எப்படி மகிழ்விப்பது என்பதை நீ உன் மகளுக்குச் சொல்லிக் கொடுக்காமற் போனது மிகவும் வருந்தத் தக்கது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"பெங்மோவா?" என்று கூறிய ஸ்ரீமதி கேங்கின் குரல் தொனித்த விதத்தைக்கேட்டு ஆச்சரிய மடைந்தாள் ஸ்ரீமதி ஊ. ஸ்ரீமதி கேங் மீண்டும் குத்தலாக, "பெங்மோ சந்தோஷமாக இல்லையா? ஏய்லியன், முதலில் விஷயத்தைத் தெரிந்து கொள். லின்யிதான் சந்தோஷமாகயில்லை. அது தெரியுமா உனக்கு?" என்றாள்.

ஸ்ரீமதி ஊ கடுமையான குரலில், "மேய்ச்சன், நீ அறிவிழந்து பேசுகிறாய்" என்றாள்.

ஸ்ரீமதி கேங், "ஆம், நீ பெங்மோவிற்கு எல்லாம் கற்றுக் கொடுத்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறாய் போலும்! ஆனால் லின்யி அவனுடன் வாழ்வதில் எவ்வித சுகத்தையும் காணவில்லை. கல்யாணம் என்றால் இருவரும் மனமொன்றினால் தான் இன்பமாக வாழ முடியும். ஒரு கையைத் தட்டி ஓசை யெழுப்ப முடியுமா? மணவாழ்க்கையில் அவனுடைய பாகம் இன்னது என்பதை நீதான் பெங்மோவிற்குக் கற்பிக்கத் தவறி விட்டாய்" என்றாள்.

"நானா?" என்றாள் ஸ்ரீமதி ஊ கோபத்துடன்.

"ஆம். லியாங்மோ அவனுடைய அப்பாவைப் போலிருக்கிறான். அவன் உணர்ச்சி வயப்பட்ட மனிதன். ஆதலால் மெங் அவனுடன் சந்தோஷமாக வாழ்கிறாள். ஆனால் பெங்மோ உன்னைக் கொண்டிருக்கிறான்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"அதாவது சாதாரணமாகக் கிடைப்பதைக் காட்டிலும் சற்று அதிகமாக வேண்டுமென்கிறான் போலும்" என்றாள் ஸ்ரீமதி ஊ கசப்புடன்.

ஸ்ரீமதி கேங் தலையை ஆட்டியவாறு, "அப்படியானால் அதை வெளியில் பார்த்துக் கொள்ளச் சொல்லு. எப்போதும் புத்தகத்தையே கட்டியழச் சொல்லு; அல்லது அவனுடைய அதிருப்தியைக் காட்டுவதற்கு வேறு ஏதேனும் ஒரு வேலையை எடுத்துக் கொள்ளச் சொல்லு. அதற்கும் லின்யியிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது" என்றாள்.

"மேய்ச்சன், நீயா என்னை எதிர்த்துப் பேசுகிறாய்?" என்று கூவினாள் ஸ்ரீமதி ஊ.

"லின்யி சிறிது நாட்களுக்கு என்னுடன் வந்து இருக்கட்டும். நீயும் பெங்மோவுமாகச் சேர்ந்து புத்தகம் படித்துக் கொண்டே யிருங்கள். உங்களுக்கு அவளுடைய அருமை தெரியும்வரை அவள் அங்கேயே இருக்கட்டும்" என்று பதிலிறுத்தாள் ஸ்ரீமதி கேங்.

இத்தனை நாளும் போற்றப்பட்டு வந்த இந்த சிநேகம் முறிந்து போகும் தறுவாயில் இருப்பதைக் கண்ணுற்றாள் ஸ்ரீமதி ஊ. "மேய்ச்சன், நாம் என்ன சண்டையா பிடித்துக் கொள்கிறோம்?" என்றாள் வியப்புடன்.

ஸ்ரீமதி கேங் ஆதுரத்தோடு பதிலளித்தாள். "நான் இதுநாள் வரை உனக்கு உற்ற சிநேகிதியாக இருந்து வந்திருக்கிறேன். நீ பெண்கள் நினைக்கக் கூடாத விஷயங்களைப் பற்றியெல்லாம் எண்ணுகிறாய் என்பதை அறிந்த போதிலும்கூட உன்னைப்பற்றி ஒரு குறையும் கூறாதிருந்தேன். ஆனால் எனக்கு எப்போதுமே தெரியும் உனக்கு அளவுக்கு மிஞ்சிய அறிவும் ஞானமும் இருப்பதால் நீ சந்தோஷத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவளாய்தான் இருப்பாயென்று. உன்னுடைய பிள்ளைகளின் தகப்பனிடம்கூட நான் இதைத்தான் சொன்னேன்" என்றாள்.

"நீங்கள் இருவரும் என்னைப் பற்றிப் பேசினீர்களா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ அமைதியான குரலில்.

"உன்னுடைய நன்மையை உத்தேசித்துத்தான்" என்று கூறிய ஸ்ரீமதி கேங் எழுந்து, தனது ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு, தனது பெரும் உடலைத் தூக்கிக்கொண்டு வேகமாக அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

அன்று இரவு நேரம் கழித்து ஸ்ரீமதி ஊ படுக்கைக்குச் சென்றபோது, இங், "அம்மா, இன்று ஸ்ரீமதி கேங் உங்களுடைய மூன்றாவது மருமகளைத் தன்னுடன் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும் எனக்கு" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவள் தூங்க விரும்புகிறவள்போல் கண்களை மூடிக் கொண்டாள். ஆனால் அவள் தூங்கவில்லை. ஸ்ரீமதி கேங் இந்த வீட்டிற்குள் புகுந்து தனது மகளை இன்னும் தனக்கே சொந்தமானவளாகப் பாவித்து திருப்பித் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றதை அவளால் நம்ப முடிய

வில்லை. அசையாமல் படுத்திருந்த போதிலும் அவளது நெஞ்சில் பொங்கிய கோபத்தின் காரணமாக அவளால் இரவு முழுவதும் தூங்க முடியவில்லை.

ஸ்ரீமதி ஊ அறிவீனமுள்ள ஒரு பெண்மணியாக இருந்தால் தான் செய்ததெல்லாம் சரிபோலவும், தன்னுடைய சிநேகிதியின்மீதுதான் தவறு எல்லாம் இருப்பதாகவும் எண்ணி அவள்மீது கோபம் கொண்டிருப்பாள். ஆனால் அவள் அப்படிப்பட்டவளல்ல. தன்னுடைய அஜாக்கிரதையான நடத்தைக்காக அவள் தன்னையே கடிந்து கொண்டாள். தனக்கும் ஸ்ரீமதி கேங்கிற்கும் இடையேயுள்ள சிநேகம் குடும்பத்தையும் வீட்டையும் பொருத்தது. அது பூமியையும் மண்ணையும் போன்ற உலக வஸ்துக்களைப் பற்றுக் கோடாகக் கொண்டது என்பதை அவள் அறியாதவளல்ல, அதோடு அவள் ஏன் திருப்தியாக இருந்திருக்கக் கூடாது? அவளுடைய சிநேகிதியைப் பயமுறுத்தும்படியான புதிய வழியை அவள் ஏன் திறந்து காட்ட வேண்டும்? எந்த ஆத்மாவையும் அதன் எல்லையை மீறிச் செல்லும்படிக் கட்டாயப்படுத்தினால் அது பீதியடைகிறது. அவளுடைய அஜாக்கிரதையினால் பெங்மோவிற்கும், லின்யியிக்கும் இடையே இருந்த பிளவு அதிகமாகி விட்டது. உண்மையில் ஒரு இளம் மணவியை, புருஷன் வீட்டிலிருந்து அழைத்துச் சென்று சிறுபிராயத்தின் உறைவிடமாகிய தாய் வீட்டில் கொண்டு வைத்துக் கொள்வது மிகவும் வருந்தத்தக்க விஷயமே. பெங்மோ சென்று அவளை அழைத்துவர வேண்டும். ஆகவே அவள் பெங்மோவிற்குச் சொல்லியனுப்பினாள்.

பெங்மோ உள்ளே வந்தான். அமைதியாகக் காணப்பட்ட போதிலும் அவனது முகம் வெளுத்துப் போயிருந்தது.

"மகனே, நான் என்னுடைய தவறை உன்னிடம் ஒப்புக் கொள்வதற்காகவே உனக்குச் சொல்லியனுப்பினேன். லின்யியுடைய தாயும் நானும் சண்டையிட்டுக்கொண்டோம். மூடப் பெண்மணிகளைப்போல் இருவரும் அவரவருடைய குழந்தையின் சார்பாகப் பேசினோம். அவள் தன்னுடைய மகளை வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டாள். நான் இதை எதற்குச் சொல்கிறேனென்றால் இதில் லின்யியின் தவறு ஒன்றுமில்லை யென்பதை உனக்குத் தெரிவிப்பதற்காகத்தான். இப்போது நாம் அவளைத் திரும்பிவரும்படி அழைத்துவர வேண்டும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பெங்மோ அதை மறுத்து தலையை ஆட்டியது அவளுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. "நான் அவளைக் கூப்பிடப்

போவதில்லை அம்மா. இப்படியேதான் இருக்கட்டுமே! லின்யியிக்கும் எனக்கும் சிறிதுகூட ஒத்துவரவில்லை" என்றான் பெங்மோ திடமாக.

"எப்படி நீ அவ்விதம் கூறலாம்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. அவள் அணிந்திருந்த சில்க் கோட்டிற்குள் அவளுடைய மார்பு அதிவேகத்துடன் அடித்துக் கொண்டது. "அறிவு படைத்த எந்த மனிதனும் எந்தப் பெண்மணியும் ஒருவரோடொருவர் ஒத்து வாழ முடியும். கல்யாணம் என்பது ஒரு குடும்ப விஷயம், பெங்மோ. அது ஒரு ஒழுங்கு முறை. ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி மட்டிலும் எண்ணிக் கொண்டால் போதாது" என்று கூறினாள்.

"அம்மா, அவ்விதம்தான் உங்களுக்குக் கற்பிக்கப் பட்டிருக்கிறது. எங்களுக்கும் நீ அதைத்தான் கற்பித்திருக்கிறாய். நான் உன்னுடைய ஒரே மகனையிருந்தால் நானும் அதை என் கடமையாக எண்ணி ஏற்றுக் கொள்ள வேண்டி நேரிட்டிருக்கும். ஆனால் எனக்கு முன்னால் என்னுடைய சகோதரர்கள் இருவர் இருக்கிறார்கள். ஆகவே எனக்கு விடுதலை கொடுத்து அனுப்பு அம்மா" என்றான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊ முன்புறம் சாய்ந்து கொண்டாள். "பெங்மோ உனக்கும் லின்யியிக்கும் இடையே என்ன நடந்தது என்பதை எனக்குச் சொல்லு. நான் உன்னுடைய தாயல்லவா?" என்று கேட்டாள்.

"ஒன்றும் இல்லை" என்றான் பெங்மோ முரட்டுப் பிடிவாதத்துடன்.

ஆனால் ஸ்ரீமதி ஊ அதை அப்படியே எடுத்துக் கொண்டாள். அவள் வியப்புடன் ஒன்றுமேயில்லையா? நீ கூறுவதன் அர்த்தம் என்ன? நீங்கள் இருவரும் ஒரே அறைக்குள் வசிக்கிறீர்கள். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லையா?" என்று கேட்டாள்.

"ஐயோ, அம்மா. அது வொன்றுதான் ஆண் பெண்களுக்கிடையே நடக்கக் கூடியது என்று நீ ஏன் எண்ணுகிறாய்?" என்று அலறினான் பெங்மோ.

"ஆனால் அதுதான் முதலில் நடக்க வேண்டியது" என்றாள் ஸ்ரீமதி ஊ அழுத்தம் திருத்தமாக.

பெங்மோ அதைப் பிடித்துக் கொண்டான். "அப்படியானால் சரி அம்மா. அதுதான் முதல் விஷயம் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் நான் அதற்கு மேல் சில வற்றையும் எதிர்பார்த்தேன் என்றுகிறதல்லவா!" என்றான் பெங்மோ.

"நீ எதை எதிர்பார்த்தாய்?" என்றாள் அவள்.

அவன் தனது மெலிந்த கைகளை மெல்ல வீசியவாறு, "ஏதாவது பேச்சு, உள்ளன்போடு கூடிய சிநேகம், ஆழ்ந்த அன்பு—அதாவது முதல் காரியத்திற்குப் பிறகு இவை யெல்லாம் கிடைக்குமென்று எதிர்பார்த்தேன். அதாவது சரீர சம்பந்தமானவற்றை முடித்துக் கொண்டபிறகு, வேறு என்ன இருக்கக்கூடுமோ, அதை..." என்றான்.

"ஆனால் உன்னுடைய வயதில், அதற்குள் நீ எப்படி சரீர இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்?" என்றாள் ஸ்ரீமதி ஊ. பெங்மோவைத் தான் நன்கு புரிந்து கொள்ளவில்லை என்பது அவளுக்குப் புலப்பட ஆரம்பித்தது. எல்லா ஆண்களுமே ஆண்தன்மை மட்டும்தான் படைத்தவர்களாய் இருப்பார்கள் என்பதை அவள் பொதுவிதியாக எடுத்துக் கொண்டு விட்டாள். அவள் முன்பு ஒரு முறை ஒரு பழைய கிரேக்க கதையைப் படித்துவிட்டு நகைத்திருக்கிறாள். அதில் ஒரு பெண் தன்னுடைய கணவனல்லாத ஒரு அந்நிய மனிதனிடம், அவனுடைய சுவாசம் இனிமையாகயிருக்கிறது என்ற காரணத்திற்காகக் காதல் கொள்கிறாள். அவள் தன்னுடைய புருஷனைத்தவிர வேறு மனிதனை அறிந்தவளில்லை. தன்னுடைய கணவனுடைய துர்நாற்றமான சுவாசத்தைப் போல்தான் எல்லா ஆண்களுக்கும் இருக்கும் என்றும் அது ஆண்களின் இயற்கைகளில் ஒன்று என்பதாகவும் நம்பினாள். ஸ்ரீமதி ஊ எல்லா ஆண்களுமே ஒரே மாதிரியானவர்கள் என்று தான் நம்பியது, இக்கதையைப் போலவே அவ்வளவு முட்டாள்தனமாக இருந்ததை அறிந்து கொண்டாள். ஆண்மை என்ற ஒரு தன்மையை மட்டும் கொள்ளாமல் அதற்கு மேம்பட்ட குணங்களையுடைய ஒரு ஆடவனுக்கு அவளே பிறப்பை அளித்திருக்கிறாள். இதை யெண்ணித் திகைத்துப்போன அவள் சிறிது நேரம் பேசாமல் தனது மகனையே பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

பெங்மோவோ அவளது சிந்தனை தோய்ந்த கண்களைக் கவனியாதவனைத் தோன்றினான். அவன் குனிந்தவாறு முழங்கைகளைத் தொடைகளின் மீது ஊன்றியவாறு கைகளைக் கோர்த்துத் தொங்கவிட்டபடி உட்கார்ந்திருந்தான்.

கடைசியில் அவள் தாழ்ந்த குரலில், "உனக்கு இனி என்னால், 'இதைச் செய்' 'அதைச் செய்' என்று உத்திரவிட முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. நான் உன்னை வீணே ஹிம்சித்து விட்டேன்..." என்றாள்.

பெங்மோ நிமிர்ந்து பார்த்தான். அவனது கண்களில் நீர் நிறைந்திருந்தது.

"நீ எதைச் சுதந்திரம் என்று எண்ணுகிறாய் என்று சொல்லு. நான் அதை உனக்கு அளிக்கிறேன்" என்றாள் தாய்.

"எனக்கு இந்த வீட்டிலிருந்து வெளியேறிச் சென்று விட்டால் போதுமென்றிருக்கிறது" என்றான் அவன்.

இவ்வார்த்தைகள் அவளுடைய இதயத்தைக் கசக்கிப் பிழிந்தன. ஆனால் அவள் அடுத்தபடியாக, "நீ எங்கே செல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டாள்.

"சகோதரர் ஆண்ட்ரூ, நான் கடலைக் கடந்து செல்வதற்கு உதவி செய்வதாகக் கூறியிருக்கிறார்" என்றான் பெங்மோ.

அவள் தன்னையே மிகவும் நொந்து கொண்டவளாய், "சகோதரர் ஆண்ட்ரூ இந்த வீட்டிற்குள் வந்திராவிட்டால், நீ இதைப் பற்றி எண்ணியிருப்பாயா?" என்று கேட்டாள்.

"நான் இதைப் பற்றி எண்ணியிருப்பேன். ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதை அறிந்திருக்கமாட்டேன். சகோதரர் ஆண்ட்ரூ எனக்கு வழி காட்டி யிருக்கிறார்" என்று பதிலளித்தான் பெங்மோ.

அவள் இதற்கு ஒன்றும் கூறவில்லை. சிந்தனையில் தோய்ந்தவளாய் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பிறகு ஒரு பெருமூச்செறிந்து, "நல்லது, மகனே, நீ சுதந்திரமாகப் போ" என்று கூறினாள்.

* * *

9

இதற்குப் பிறகு ஒரு மாதத்திற்குள்ளாகவே பெங்மோ புறப்பட்டுச் சென்று விட்டான். அப்போதுதான் பனிலேசாகப் பெய்ய ஆரம்பித்திருந்தது. வீட்டிலுள்ள அனைவரும் அவனை வாசல்வரை வந்து வழியனுப்பினர். வீட்டிலிருந்து சென்ற அப்பாதை நதிக்கரையில் சென்று முடிவடைந்தது. ஆண்

பிள்ளைகள் எல்லோரும் நதிவரைகூடச் சென்றனர். அவர்களுடன் பெண்களில் ஸ்ரீமதி ஊ மாத்திரம் சென்றுள். அவனுடைய சாமான்களை ஏற்றுவதிலும் படகில் அவனை உட்கார வைப்பதிலும் எல்லோரும் உதவி செய்தனர். அச் சிறிய படகு அவனை ஸ்டீமம் லாஞ்சிற்குக் கொண்டுவிடும். அது அவனை ஒரு பெரிய ஸ்டீமருக்கு அழைத்துச் செல்லும். அதில் ஏறி அவன் சமுத்திரத்தில் காத்திருக்கும் பெரிய கப்பலை அடைவான். பனியினால் மூடப்பட்டு வெண்மையாகக் காணப்பட்ட நிலப்பரப்புக்கு மேல், வெளுத்த நீல நிறம் கொண்ட ஆகாயம் தெள்ளென விளங்கியது. படகு செல்ல ஆரம்பித்ததும், தண்ணீரில் மிதந்த பனித்துகள்கள் படகோட்டியின் துடுப்புபட்டு சிதறிப் போயின. பெங்மோவைத் தொடர்ந்து பல குரல்கள் வாழ்த்தொலிகளைக் கிளப்பின. ஸ்ரீமதி ஊ உரக்கக் கத்தவில்லை. கம்பளிப் போர்வையை போர்த்து, ஒரு சிறு உருவமாக நின்ற அவள், தன்னுடைய இந்த மகன் வீட்டின் கரைகளிலிருந்து வெளியேறிச் செல்வதை நோக்கியவாறு நின்றிருந்தாள். அவள் பயமும் வருத்தமும் கொண்டாள். ஆனால் தனக்குள் 'அவன் சுதந்திரமாகப் போகிறான்' என்று கூறிக்கொண்டு, அதன் மூலம் ஆறுதல் பெற்றாள்.

தனது மேலாடையை இழுத்துப் போர்த்துக்கொண்டு, அவள் தனது சொந்த இடத்தை நோக்கித் திரும்பச் சென்றாள்.

பெங்மோ போனதோடு சகோதரர் ஆண்ட்ரூவும் அவ் வீட்டிற்கு வருவதை நிறுத்தியிருக்கலாம். ஆனால் ஸ்ரீமதி ஊ பெங்மோவிற்குப் பதில் லின்யியை மாணவியாக ஏற்றுக் கொண்டு கல்வி போதித்து வரும்படி அவரைக் கேட்டுக் கொண்டாள்.

அவள் தனது அமைதியும், அழகும் ததும்பும் முறையில் சகோதரர் ஆண்ட்ரூவிடம், "என்னுடைய மகன் அயல் நாடுகளுக்கெல்லாம் சென்று விட்டுத் திரும்பி வருவதற்குள், அவனுடைய மனைவி அவனுக்குத் தெரிந்திருக்கும் விஷயங்களில் ஒரு சிறிதேனும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது என்னுடைய அவா" என்றாள்.

பெங்மோ, லின்யி இவர்களது மனஸ்தாபம் தீர்ந்த விதம் இது: ஒரு நாள் ஸ்ரீமதி ஊ, கேங் வீட்டிற்குச் சென்று, லின்யியுடன் அவளது தாயையும் வைத்துக்கொண்டு, மிக நல்லதனமாகப் பேசினாள். அவள் லின்யியிடம் பெங்மோ தூரதேசம் போகப் போவதைப் பற்றிக் கூறி, போகுமுன்னர்

அவன் ஒரு வேளை அவளை ஒரு குழந்தையுடன் விட்டுச் செல்லலாம் என்றும் கூறி அவளைத் திரும்பி வீட்டிற்கு வரும்படி அழைத்தாள்.

"நான் இதைக் குடும்பத்தின் நலனை மட்டும் உத்தேசித்துச் சொல்லவில்லை. உன்னுடைய வாழ்க்கை பூரணமாகாமற் போகக் கூடாதே என்று உன்னுடைய நன்மையையும் உத்தேசித்துத்தான் சொல்கிறேன்" என்று அவள் லின்யியிடம் கூறினாள்.

பேசும்பொழுதே அவள் லின்யியின் முகத்தைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். சுயநலம் நிறைந்த அழகிய முகம் என்று எண்ணிக் கொண்டாள். நல்ல குணம் படைத்த தாயார்களுக்கு சுயநலம் பிடித்த பெண்கள் இருப்பது சகஜம்தான். மேய்ச்சன் ரொம்பவும் நல்லவள். அவள் தன் குழந்தைகளை மிக மிக அதிகமான சுகத்தில் வைத்திருந்தாள். அவர்கள் வீட்டைச் சுவர்க்கமாகவும் தாயாரை பூமியாகவும் எண்ணி இருந்தனர்.

"கணவன் தூரதேசம் செல்லும்போது இளம் மனைவியை வெறுமே விட்டுச் செல்வது நல்லதல்ல" என்றாள் அவள் மேலும் தொடர்ந்து.

இதை ஸ்ரீமதி கேங் முழுமனதோடு ஆமோதித்தாள். அவள் தான் கோபம் கொண்டு தனது சிநேகிதியுடன் சண்டையிட்டு விட்டதை யெண்ணி பிறகு வருத்தம் கொண்டாள். லின்யி நடந்து கொண்ட விதம் இதற்குத் தூபம் போடுவதாகயிருந்தது. தனது பரிவு முழுவதையும் காட்டி தனது மகனை அழைத்து வந்த ஸ்ரீமதி கேங், சில நாட்களுக்குள்ளாகவே, தனது மகள் பிடிவாதமும் அகம்பாவமும் கொண்ட ஒரு பெண்ணாக இருப்பதைக் கண்டு கொண்டாள். அவள் இன்னும் ஒரு அறியாப் பெண்ணல்லவே! மணம் செய்து கொண்டு மனைவி என்ற ஸ்தானத்தை அடைந்திருக்கும் பெண்மணி. ஆனால் அவள் பணக்கார தகப்பன் வீட்டில் வளரும் செல்ல மகள் போலவே இப்போதும் நடந்து கொண்டாள். நேரம் கழித்து எழுந்திருப்பதும் வீடு முழுவதும் வீணே சுற்றி அலைவதுமாக இருந்தாள். தனது கைக்குட்டை கீழே விழுந்தால்கூட அதை எடுத்துக் கொள்ளாமல், அதை எடுத்துக் கையில் கொடுப்பதற்காக ஒரு வேலைக்காரியைக் கூப்பிட்டாள் அவள். ஸ்ரீமதி கேங் சிற்சில விஷயங்களில் குறுக்கிடத்தொடங்கினாள். பெங்மோ இவளைப்பற்றிக் குறை கூறுவதிலும் சிறிதுநியாயம் இருக்குமோ என்று எண்ண

ஆரம்பித்தாள். பெங்மோ வெளிநாடு செல்கிறான் என்பதைக் கேள்வியுற்றதுமே அவள் லின்யியை மீண்டும் அவனிடம் அனுப்புவதற்கு விரும்பினாள்.

அவள் மகளிடம் அநேக முறை, "நீ இனியும் இவ் வீட்டைச் சேர்ந்தவள் என்று எண்ணிக் கொள்ளாதே. ஊ குடும்பம்தான் இனி உனக்குச் சொந்தமானது" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ தனக்குள், 'குறும்புத்தனமும் பிடிவாதமும் கொண்ட இவ்வழகிய பெண்ணை ஒரு மனைவியாகவும், பொறுப்பு தெரிந்த பெண்மணியாகவும் எப்படி ஆக்குவது? என்னுடைய குடும்பத்தின் பொருட்டு மாத்திரமல்லாமல் அவளுடைய சந்தோஷத்தையும் உத்தேசித்து, நான் இவளை எப்படி மாற்றுவேன்?' என்று இக் கேள்விகளை இரகசியமாகத் தனக்குள் தானேகேட்டுக்கொண்டாள்.

மீண்டும் சகோதரர் ஆண்ட்ரூதான் அவள் மனத்தில் தோன்றினார். பொறுமையே உருவெடுத்த அவருடைய சரீரமும், அன்பு குடிகொண்ட அவரது கருத்த முகமும் அவள் கண்முன் தோன்றின. ஆனால் அவரால் ஒரு இளம் மனைவிக்குப் பாடம் கற்பிக்க முடியுமா?

"நீ உன்னுடைய கணவன் வீட்டிற்கு இன்றே போயாக வேண்டும்" என்று கூறிவிட்டாள் ஸ்ரீமதி கேங். முன்பு எவ்வளவு ஆவலுடன் அவளைத் தன்னிடம் அழைத்து வந்தாளோ, அதே ஆவலுடன் இப்போது திரும்ப அனுப்ப முனைந்தாள். லின்யி மௌனமாகக் கீழ்ப்படிந்தாள். அவள் ஒரு முட்டாளல்ல. தனது தாயிவிடமே ஏற்பட்டிருந்த மாறுதலை அவள் நன்கு அறிந்து கொள்ளாமல் போகவில்லை. தனது சுவர்க்க வாசமும், ஆனந்தக் கனவுகளும் முடிவுக்கு வந்துவிட்டன என்பதை உணர்ந்து கொண்டாள். மனம் நோவ, அவள் மௌனமாகத் திரும்ப பெங்மோவினிடம் சென்றாள். அவன் தனது பிரயாணத்திற்காக மிக மிக உற்சாகத்துடன் தயார் செய்து கொண்டிருந்தான். ஆனால் தான் சீக்கிரமே விடுதலை பெற்றுப் போகப்போகிறோம் என்பதை அறிந்திருந்ததால், மிகக் குதூகலம் கொண்டவனாகவும் அவளைப் பொருட்படுத்தாதவனாகவும் இருந்தான். அவ்வீட்டைவிட்டே அவன் போகப்போவதால் அவள் இங்கு இருக்கிறாளா அல்லது போகப்போகிறாளா என்பதும் அவனுக்கு ஒன்றும் முக்கியமல்லவே!

"நான் திரும்ப வந்து விட்டேன்" என்று அவள் அவனிடம் கூறினாள்.

அவன் அதனால் தான் மகிழ்ச்சியடைந்ததாகக் கூறவில்லை. அவளும் அவன் மகிழ்ச்சியடைந்தானா என்று கேட்கவில்லை. இருவரும் ஒருவர் மற்றொருவருடைய அன்பை எதிர்பார்க்கவில்லை. அவள் புதிய பணிவுடன் அவனுடைய ஆடைகளை மடித்துக் கொடுத்தாள். புத்தகங்களைத் தூசி தட்டிக் கொடுத்தாள். இரவு இருவரும் ஒன்முக உறங்கினர். அவன் அவளை அணைத்துக்கொண்டான். அவளும் அதற்கு இணங்கினாள். குடும்பத்திற்குத் தாங்கள் செலுத்தவேண்டிய கடமையை உத்தேசித்தும், இருவரும் பருவத்தினராயும் பரிமிகுந்தவர்களாகவும் இருந்ததாலும் இருவரும் ஒத்துப் போயினர். காலையிலும் அவர்கள் வேறு பேச்சின்றி பிரிந்தனர். மரியாதையை உத்தேசித்து அவள் தனது பகுதியைக் கடந்து வெளியே வரவில்லை.

"நான் போய் வருகிறேன்" என்முன் அவன்.

"கடவுள் உங்களுக்குச் சுகமான பிரயாணத்தை அளிக்கட்டும்" என்று அவள் பதிலளித்து, கதவின் மீது சாய்ந்தவாறு நின்றுகொண்டு அவன் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது நெஞ்சில் இனம் தெரியாத ஒரு வேதனை எழுந்து இதயத்தைப் பிழிந்தது. ஆனால் அவள் தன் மீது எவ்விதக் குற்றத்தையும் காணத் தயாராக யில்லை.

"எனக்கு இன்னும் தூக்கமே கலையவில்லை!" என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டு, பெரிதாக ஒரு கொட்டாவி விட்டாள். வாயைக் கையால்கூட மறைக்காமல் அவள் மீண்டும் அப்பெரிய படுக்கையில் சென்று பட்டு மெத்தைகளினூடே ஒரு சிறிய புழுவைப்போல் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

பெங்மோ போனவுடன் திரும்பி வந்த ஸ்ரீமதி ஊ, அவளை இத் தூக்கத்திலிருந்து எழுப்பினாள். "எழுந்திரு, லின்யி. நீ இதுவரை வேண்டிய நேரம் தூங்கியாகிவிட்டது. இனி நீ எழுந்து உன்னுடைய கல்வியைக் கற்க ஆரம்பித்துவிட வேண்டியதுதான்" என்முள்.

"என்ன, நான் கல்வி கற்க வேண்டுமா?" என்று திகைப்புடன் கேட்டாள் லின்யி.

"ஆம். காலையில் நீ சமையல், தையல் ஆகிய வேலைகளைச் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். பெரியம்மாள் உனக்கு

இவற்றைக் கற்றுக் கொடுப்பாள். பிறகு சாப்பிடுவதற்கு முன்பு ஒரு மணி நேரம் என்னிடம் வந்து உயர்ந்த ரகப் புத்தகங்களைப் படிக்க வேண்டும். மாலையில் சகோதரர் ஆண்ட்ரூ உனக்கு அந்நிய பாஷைகளைப் போதிப்பார். இரவில் பணிப்பெண்களோடு கூட நீயும் குழந்தைகளுக்குப் படுக்கை விரித்துப் படுக்க வைப்பது போன்ற வேலைகளைச் செய்ய வேண்டும். குழந்தைகளைப் பராமரிக்கும் முறைகளை நீயும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் தானே!" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

லின்யி படுக்கையிலிருந்தபடியே, திடுக்குற்றவளாய் தனது பெரிய விழிகளை அகல விரித்தாள். அவள் தலையெல்லாம் அலங்கோலமாகயிருந்தது. "இப்போதேவா?" என்றாள்.

"ஆம். இப்பொழுதேதான்!" என்று திடமாகக் கூறிய ஸ்ரீமதி ஊ தனது கையில் பிடித்திருந்த பிரம்பினால் தரையில் தட்டினாள். "முதலில் குளித்து விட்டுத் தலையை வாரிக்கொள். பிறகு என்னிடம் வா" என்று கூறினாள்.

பிறகு அவள் தன் பகுதியை நோக்கித் திரும்பிச் சென்றாள். தனது அழகிய உதட்டை இறுகக் கடித்தவாறு, "நான் இதை பெங்மோவிற்காகச் செய்கிறேன். இது முடிந்ததும் நான் என்னுடைய சொந்த விடுதலையைப் பற்றி மீண்டும் யோசிக்கலாம்" என்று எண்ணிக்கொண்டாள்.

லின்யியின் மீது அவளுக்கு உறுதியான நம்பிக்கையில்லாத தால் அன்று மாலை சகோதரர் ஆண்ட்ரூ வந்தபோது அவளும் கூட இருந்தாள். லின்யியைச் சோம்பேறியாக யிருக்க விடக் கூடாது. அதுவுமன்றி மகன் வீட்டிலே இல்லாதபோது தனது மருமகளை அவ்வந்நியப் பாதிரியுடன் தனித்திருக்கும்படி விடக் கூடாது. அது குடும்பத்தின் மதிப்பைக் குறைப்பதாகும். சகோதரர் ஆண்ட்ரூ ஒரு பெரிய ஆத்ம ஞானி என்பது அவளுக்குத் தெரியாததல்ல. அப்பெரிய சரீரம் அவரைப் பொறுத்தவரை ஒரு காய்ந்த சருகிற்கு ஒப்பானது என்பதை அவளைத் தவிர வேறு யாரால் புரிந்துகொள்ள முடியும்?

இவ்விதமாக அவள் தினமும் மாலையில் அவர்களுடைய பாடம் நடக்கையில், உயர்ந்த ஒரு ஆசனத்தில், பாம்புத் தலையுடைய பிரம்பைத் தன் கைகளுக்கிடையே பிடித்தவாறு, அமர்ந்திருக்கலானாள். பெரிய எஜமானி இறந்ததிலிருந்து அந்தக் கைத்தடியை இவள் உபயோகிக்கலானாள். லின்யியிக்கு சகோதரர் ஆண்ட்ரூ போதித்த எல்லாவற்றையும் ஒன்று விடாது அவள் கவனித்து வந்தாள். சில கடினமான இடங்

களில் லின்யி அதைப் புரிந்துகொள்ள முடியாமல் வேண்டா வெறுப்பாகப் படிப்பாள். ஆனால் அதைப் புரிந்துகொள்ளும் சக்திகொண்ட ஸ்ரீமதி ஊவின் உள்ளமோ அதிசயத்தில் மூழ்கி ஆயிரம் ஆயிரம் கேள்விகளை எழுப்பியது.

இவ்விதம் அவள் பூமியும் கடலும் சேர்ந்து எவ்விதம் ஒரு கோளமாகி அவை வான மண்டலத்தில் நட்சத்திரங்களினூடே சுற்றிச் சுற்றி வருகின்றன என்பதையும், சந்திரன் சூரியன் இவைகளின் கதி என்ன என்பதையும், காற்று, மேகம் இவற்றின் போக்கு என்ன என்பதையும் அறிந்து கொண்டாள். ஆனால் மனிதர்களால் பேசப்படும் பற்பல பாஷைகளைப் பற்றி அவள் அறிய நேர்ந்தபொழுது அவளுடைய ஆச்சரியம் பதின்மடங்கு பெருகியது. அவளுக்கு மிகவும் பிடித்தமான காரியம் இதுதான். அவள் ஏதாவது ஒரு வார்த்தையை, வாழ்க்கை, மரணம், அன்பு, பகைமை, உணவு, காற்று, தண்ணீர், பசி, தூக்கம், வீடு, பூ, மரம், புல், பறவை இது போன்ற ஒன்றை எடுத்துக்கொண்டு, சகோதரர் ஆண்ட்ரூ அறிந்த அத்தனை மொழிகளிலும் அதற்கு உண்டான பெயரைக் கேட்டுத் தெரிந்துகொள்வாள். இம்மொழிகளெல்லாம் மானிட வர்க்கத்தின் பல்வேறு குரல்கள். இவையெல்லாவற்றையும் அவள் லின்யியிக்கு உதவி செய்யும் பாவனையிலேயே கற்றுக்கொண்டாள்.

அவளுடைய அறிவு பெருகப் பெருக, இதுவரை அவள் வாழ்க்கையில் இடம் பெற்றிருந்த எல்லாவற்றின் பொருளும் அவளுக்குத் தெளிவாக விளங்க ஆரம்பித்தது. முன்பு அவள் அநேக முறை தான் ஏன் பிறப்பு, இறப்பு என்றதாகிய இந்த முடிவில்லா சுழலிலேயே சிக்கி காலம் கழித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதாக எண்ணி வியந்ததுண்டு. இந்த நான்கு சுவர்களுக்குள்ளே வாழ்ந்து வந்த ஆண்களும் பெண்களும் ஊ இனத்தாருடைய குடும்பம் அழிந்து விடக் கூடாதே என்பதற்காக மேலும் மேலும் குழந்தைகளைப் பெற்றுப் பெருக்கி வந்தார்கள். அவள் இந்த ஒரு குடும்பம் அழிந்துவிட்டதாலே என்ன உலகமே மூழ்கிவிடப் போகிறதா என்று தன்னையே கேட்டுக்கொள்வாள். அதிகப் பெண் குழந்தைகளாகப் பிறக்கும் வருஷங்களிலும் குழந்தைகள் முழுதாகப் பிறக்காத சமயங்களிலும் அவளுடைய மனம் மிகவும் விட்டுப் போய் விடும். அதுவும் அவள் தனது நாற்பதாவது பிறந்த நாளை எதிர்பார்க்க ஆரம்பித்ததிலிருந்து தனது உள்ளத்தில் எழுந்து வந்த இத்தகைய கேள்விகளுக்குப் பதில் கூறுமலே புறக்கணித்து வந்தாள். இத்தகைய நாட்களில் ஒரு நாள் சிறிய சகோதரி லோஷியா அவளுடன் இருக்க நேரிட்டது.

"நான் இப்புண்ணிய வேதத்திலிருந்து உங்களுக்குப் படித்துக் காண்பிக்கட்டுமா, அம்மா?" என்று கேட்டாள் சகோதரி ஹேஷியா.

ஸ்ரீமதி ஊ அன்று மிகவும் மனச்சோர்வும் அலுப்பும் அடைந்திருந்தாள். இருப்பதெல்லாம் பற்றுதென்பதுபோல் அவளுக்குத் தான் மீண்டும் கர்ப்பமடைந்திருக்கும் விஷயம் தெரிந்திருந்தது. ஆனல் வீட்டிற்கு வந்திருப்பவர்களுடைய ஆசையை நிறைவேற்ற அவள் ஒருபோதும் மறுத்ததில்லை. "உனக்குப் பிரியமானல் சிறிது படி" என்று கூறினுள்.

சகோதரி ஹேஷியா பக்தி சிரத்தையோடு அவ்வேதப் புத்தகத்தை எடுத்துத் தனது குழந்தையைப் போன்ற மழலைச் சொற்களினுல் படிக்க ஆரம்பித்தாள்.

"மனித வாழ்வில் என்ன இருக்கிறது என்று நீ அதைப் பெரிதாகப் பாராட்டுகிறுய். மனிதனுடைய வாழ் நாட்கள் புல்லைப்போல்..." என்று படித்துக்கொண்டு போனுள்.

"போதும். நிறுத்து!" என்று கூவினுள் ஸ்ரீமதி ஊ.

அவளுடைய அக்குரலைக் கேட்டு திடுக்கிட்டுப்போன சகோதரி ஹேஷியா படிப்பதைவிட்டு அவளை விறைத்து நோக்கினுள்.

ஸ்ரீமதி ஊ மிகத் தீவிரமாக "ஒரு ஆத்மாவிற்கு ஆறுதல் அளிக்கக் கூடிய வார்த்தைகளா இவை? கடவுளின் அருள் வாக்குகளா இவை? என்னைக் கேட்டால், இவை சைத்தானின் வார்த்தைகள் என்றுதான் சொல்லுவேன்! இவ் வார்த்தைகளைக் கேட்டேனுனல், நிச்சயம் நான் என்னைத் தூக்கிலிட்டுக்கொண்டு விடுவேன். சகோதரி ஹேஷியா, இந்தப் புத்தகத்திலிருந்து எனக்கு இனி படித்துக் காட்ட வேண்டாம். இதைக் கேட்டால் எனக்கு உயிர் வாழ்வதே பெரும் சிரமமாகிவிடும்" என்றுள்.

ஆனல் அவள் அவ்வார்த்தைகளைப் பின்னர் சிந்தித்துப் பார்த்தாள். இப்போதும் அவளுக்கு அவை நினைவிற்கு வந்தது. ஆம், அது உண்மையே. மனிதனுடைய தேகம் ஒரு புல்லைப்போல் அவ்வளவு திரணமானதுதான். பிறகு அவளுடைய குழந்தை வயிற்றிலேயே இறந்து பிறந்தது. அச்சிறிய உயிரற்ற உடலைத் தனது கையில் எடுத்தபோது அவளுக்கு அவ்வார்த்தைகள்தாம் நினைவுக்கு வந்தது. ஆனல் இன்று அவள் மனிதர்கள் தங்களுடைய பற்பல விதமான மொழிகளின் மூலம் ஒரே பொருளை நோக்கி ஒரே விதமாகக் கூவி

அழைப்பதை அறிந்தபோது அவளது உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது.

"எல்லா மனிதர்களுமே கடவுளை அழைக்கிறுர்களா? அவர்கள் என்னவென்று அழைக்கிறுர்கள்?" என்று அவள் சகோதரர் ஆண்ட்ரூவைக் கேட்டாள்.

"ஆம் எல்லோரும் தான் கடவுளை நோக்கிக் கூவியழைக் கிறுர்கள்" என்று கூறிய அவர் இருபது மொழிகளில் கடவுளின் பெயரை வரிசையாகக் கூறினுர். யாவும் மனித னுடைய பல்வேறு குரல்களே. இவ்வோசைகள் அவளுடைய காதில் சென்று ரீங்காரம் செய்தன.

"பூமியின் மீதுள்ள நாம் யாவரும் இந்த நெடுங்காலத்திய வானுலகத்தை நோக்கியே கதறுகின்றேரும் அல்லவா!" என்று அவள் ஆழ்ந்த சிந்தனையுடன் கூறினுள். கடவுளின் அவ் விதவிதமான நாமங்கள் அவளுடைய உள்ளத்தில் எதிரொலித்தன.

இத்தகைய இரவுகளில் அவளால் தூங்கமுடியாது. மௌனமாக இங்கைத் தன்னைத் தயார் செய்ய விடுத்துப் பிறகு அவ்வுயர்ந்த படுக்கையில் சென்று படுத்துக்கொள்வாள். பட்டுத் திரைகளின் மறைவில் சென்று படுத்ததும் அவள் தன்னை ஆத்ம சிந்தனையில் லயிக்க விட்டுவிடுவாள். தான் அன்று அறிந்துகொண்ட விஷயங்களைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்வாள். சகோதரர் ஆண்ட்ரூ கல்வியும் அறிவும் நிறைந்த ஒரு அகண்ட ஆழமான கிணற்றிற்கு ஒப்பாக அவளுக்குக் கிடைத்திருந்தார். இரவில் அவளுடைய உள்ளத்தில் அநேகக் கேள்விகள் எழும். இவையெல்லாவற் றிற்கும் அவளுக்குப் பதில் கிடைத்தாகவேண்டும். சிற்சில சமயங்களில் நினைவில் வைத்துக்கொள்ள முடியாதவாறு அநேக சந்தேகங்களும் கேள்விகளும் எழும். அப்போது அவள் எழுந்து மெழுகுவர்த்தியைப் பற்றவைத்துக்கொண்டு, ஒட்டகத்தின் மயிராகிய தனது எழுதுகோலினுல் ஒரு காகிதத்தில் அக்கேள்விகளை வரிசையாக அச்சுபோன்ற எழுத்துக் களில் எழுதி வைத்துக் கொள்வாள். மறுநாள் பிற்பகலில் சகோதரர் ஆண்ட்ரூ வந்ததும் அவள் அதிலிருந்து ஒவ்வொரு கேள்வியாக வாசித்துக் காண்பித்து, அதற்கு அவர் கூறும் பதில்களைக் கவனமாகக் கேட்டுக் கொள்வாள்.

அவர் இவைகளுக்குப் பதில் அளிக்கும் முறையோ மிக மிக எளிதாகயிருக்கும். ஆனல் அதற்குக் காரணம் அவர் அதிகமாகப் படித்திருந்ததுதான். அறிவில் குறைந்த மற்ற

மனிதர்கள் செய்வதைப்போல் சாரத்திற்கு மேற்பட்ட மற்ற விஷயங்களை அனுவசியமாகப் பேசவேண்டிய தேவை அவருக்கு ஏற்படவில்லை. பழைய காலத்துப் பேரறிஞர்களைப்போல் அவர் உண்மைகளின் சாரமாகிய சாரத்தை ஒரு சில வார்த்தைகளால் விளக்கிக் கூறும் திறனைப் பெற்றிருந்தார். அவர் வேண்டாத இலைகளையெல்லாம் கிள்ளியெறிந்து, பழத்தைப் பறித்து அதன் தோலை உரித்து அதற்குள் இருந்த ஒட்டை உடைத்து உள்ளிருந்த பரிசுத்தமான பருப்பை அப்படியே எடுத்துக் கொடுத்தார்.

ஸ்ரீமதி ஊவின் வாழ்க்கையில் இத்தருணம் அவளது மனம் சாணை பிடிக்கப்பெற்ற கத்தியைப்போல் அவ்வளவு கூர்மையாகவும் எதையும் ஊடுருவிச் செல்லும்படியாகவும் இருந்தது. அவள் அப் பருப்பைப் பெற்று அதன் மூலம் மற்ற யாவற்றின் சுவையையும் அறிந்துகொண்டாள். இவர்கள் இருவரும் இம்மாதிரியான வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்க, லின்யி கண்களை அகல விரித்தபடி உட்கார்ந்திருப்பாள். இவையெல்லாம் அவளது கருத்திற்கு எட்டாத மிக மிக உயர்ந்த விஷயங்கள் என்பது தெள்ளென விளங்கியது. அவளுடைய உள்ளமோ இன்னும் யௌவனத்தின் சுக நித்திரையில் ஆழ்ந்து கிடந்தது.

சகோதரர் ஆண்ட்ரூ ஸ்ரீமதி ஊவின் அறிவுக் கூர்மையைக் கண்டு மலைத்தார். ஒரு நாள் அவர், "நீங்கள் இந்த வீட்டிற்குள்ளேயேயிருந்து வாழ்நாள் முழுவதையும் கழித்திருக்கிறீர்கள். ஆனால் நான் இங்கு பேசுவதுபோல், என்னுடன் கூட படித்த பண்டிதர்களில், ஒருவர் இருவர் கூடத்தான் பேசியிருக்கிறேன். நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதல்லவா?" என்று கூறினார்.

அதற்கு அவள், "நீங்கள், சிறிய வஸ்துக்களைப் பெரிதாகக் காட்டும்படியான ஒரு அதிசயமான கண்ணாடியிருக்கிறதென்று கூறியிருக்கிறீர்கள். ஒரு தூசியின் ஒரு பாகத்தை நாம் ஒரு பாலைவனத்தைப்போல் அவ்வளவு பெரிதாகக் காண முடியுமென்றும், அத்தூசியைப் பற்றி நாம் நன்கு அறிந்து கொண்டால் அப்பாலைவனம் முழுவதையுமே அறிந்ததுபோலாகும் என்றும் கூறினீர்கள். இவ்வீடு ஒரு அணுமாத்திரமான தூசியைப் போன்றது. அதை அறிந்துகொண்டதன் மூலம் நான் யாவற்றையும் அறிந்து கொள்கிறேன். இவ்வீட்டிற்குள்ளேயே வாழ்க்கையின் தத்துவம் முழுவதும் அடங்கியிருக்கிறது" என்றாள். இதைக் கூறியதும் அவளது பார்வை லின்யியின் வெறுப்பு ததும்பும் முகத்தில் விழுந்தது.

"நாம் எல்லோரும் தூசியைப் போன்றவர்கள் என்று சொல்கிறீர்கள், அம்மா?" என்று வினவினாள் அவள்.

"இல்லை, குழந்தாய்! உங்களுக்குள்ளேயே வாழ்க்கையின் தத்துவம் முழுவதும் அடங்கியிருக்கிறது என்று கூறினேன்" என்று ஸ்ரீமதி ஊ பதிலிறுத்தாள்.

அவ்விளம் நங்கையின் தலைக்கு மேல் அவளுடைய பார்வை சகோதரர் ஆண்ட்ரூவினுடையதைச் சந்தித்தது. "இக்குழந்தைக்குப் பாடம் கற்பியுங்கள்" என்றாள் அவள்.

"அம்மா, நான் ஒன்றும் குழந்தையல்ல" என்றாள் லின்யி உதட்டைப் பிதுக்கிக்கொண்டு.

ஸ்ரீமதி ஊவின் முகத்தில் புன்னகை அரும்பியது. அன்று சகோதரர் ஆண்ட்ரூ போவதற்காகப் புத்தகங்களையெல்லாம் எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தபோது அவள் பணிவுடன், "உங்களுடைய சிஷ்யையாக என்னையும் ஏற்றுக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

"அப்படிச் செய்தால் நான் பெரும் பேறு பெற்றவனாவேன்" என்றார் அவர் தமது கம்பீரமான குரலில்.

"அப்படியானால் லின்யியின் படிப்பு முடிந்த பிறகு தினமும் ஒரு மணி நேரம் வைத்துக்கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

அவர் தமது தலையை அசைத்தார். அதற்குப் பிறகு தினமும் ஒரு மணி நேரம் ஸ்ரீமதி ஊவின் கேள்விகளுக்கு அவர் பதில் அளித்து வந்தார். தன்னுடைய வயதை ஒரு பாதுகாப்பாக யிருந்தபோதிலும் அவள் முன் ஜாக்கிரதையுடன், தானும் சகோதரர் ஆண்ட்ரூவும் பேசிக்கொண்டிருக்கையில், இங்கை அங்கேயே இருக்கும்படிப் பணித்தாள்.

* * * *

"அம்மா, உங்களிடம் நான் ஒன்று கேட்க வேண்டும். அதனால் உங்களுக்குக் கோபம் உண்டானால் என்னை இங்கிருந்து அனுப்பி விடுங்கள்" என்றாள் இங் ஒருநாள் காலை.

"இத்தனை வருஷங்களாக நீ என்னிடம் உன் இஷ்டப்படியெல்லாம் பேசித்தானே வருகிறாய்? இப்போது மட்டும் ஏனக்கு எதற்குக் கோபம் வரப்போகிறது?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவள் தான் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்தாள். ஆலை அதன் நடுவே தனது விரலை வைத்த வாறு, அவள் கூறி முடித்ததும் மீண்டும் படிப்பதற்குத் தயாராயிருந்தாள்.

இங் ஆரம்பித்தாள்: "நான் இப்போது சொல்லப் போகும் விஷயம் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்காது. நீங்கள் பாட்டிற்கு அந்தப் பெரிய பாதிரியாருடன் உலகம் முழுவதும் சுற்றி வலம் வந்துகொண்டிருக்கிறீர்கள். இங்கே வீட்டிலேயோ எல்லாம் தாறுமாறுதப் போய்க்கொண்டிருக் கிறது. உங்களுடைய இரண்டாவது பேரனுக்குப் பாலூட்டும் தாதிக்கு எதிரே பால் வற்றிக்கொண்டே போகிறது. குழந்தை மிகவும் இளைத்துப் போகிறது. உங்களுடைய இரண்டாவது மகனின் பருதியிலோ தினமும் இரவில் சச்சரவு நடந்துவரு கிறது. அவருடைய மனைவியின் தாதி அவளுடைய எஜமானி இன்னும் கர்ப்பம் தரிக்கவில்லை என்று கூறுகிறாள். பிறகு எஜமானரும் இரண்டாவது எஜமானியும்—நல்லது, நான் அந்தக் கதையைச் சொல்லாமலிருப்பதே நல்லது! ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். உங்களோப்போன்ற ஒரு வீட்டு எஜமானி வீட்டு விஷயங்களிலிருந்து ஒதுங்கிக்கொண்டு புத்தகம் படிப்பதிலேயே காலம் கழிப்பது மிகவும் தவறு. பெண்கள் படிக்கக் கூடாது என்று நம் முன்னோர்கள் தடை செய்து வைத்திருந்தது ஒன்றும் முற்றிலும் தவறல்ல" என்று கூறினாள்.

இவற்றையெல்லாவற்றையும் இங் தனது கடமைக்காக சொல்லி முடித்துவிட்டவள்போல் கூறிமுடித்தாள். ஸ்ரீமதி ஊ, பழையபடி, முகத்தில் குறுநகை அரும்பக் கேட்டுக்கொண் டிருந்தாள். அவளுடைய விரல் புத்தகத்திலிருந்து நழுவி விட்டது. அதை மூடி எடுத்து மேஜைமீது வைத்தாள். "நீ இதையெல்லாவற்றையும் எனக்குத் தெரியப்படுத்தியதற்காக மிக்க வந்தனம், இங்" என்று கூறினாள்.

பிறகு எழுந்து படுக்கையறைக்குச் சென்றாள். காலை நேரம் சிலு சிலுவென்றிருந்ததால் அவள் ஒரு கம்பளிக் கோட்டை எடுத்து அணிந்துகொண்டு வெளியே புறப் பட்டாள். வாசற்புறத்தில் ஆர்ச்சிட் புஷ்பங்களெல்லாம் பனி யில் மூடிக்கிடந்தது. இலைகள் மண்ணில் சென்று புதைந்து கிடந்தன. அங்கு இருந்த இந்திய நாட்டு மூங்கிற் செடி களில் சிவப்பான சிறுசிறு காய்கள் நிறையக் காய்த்திருந்தன. ஒரு கருங்குருவி பாறைமீது உட்கார்ந்து அப்பழங்களைத் தின்றுக்கொண்டிருந்தது. பின்னால் வந்த இங் ஓடிச் சென்று

அப் பறவையைத் துரத்தினாள். அவளுக்குத் தான் அவ்வளவு கடுமையாகப் பேசியதை எஜமானி பொறுமையுடன் ஏற்றுக் கொண்டதைப் பார்த்ததும் தான் மிகவும் மரியாதை யில்லாமல் நடந்து கொண்டு விட்டோம் என்ற எண்ணம் உறுத்த ஆரம்பித்தது. ஆதலால் அவள் அதற்குச் சமாதானம் செய்வதுபோல் சளசளவென்று பேசிக்கொண்டே வந்தாள். ஸ்ரீமதி ஊ பதில் கூறுமல் எல்லாவற்றிற்கும் செவிசாய்த்தாள். பெரிய எஜமானியின் பகுதியைக் கடந்து சென்றுகொண் டிருந்தபோது அவளுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. லியாங்மோவும் அவனது குடும்பமும் அங்கே அவளுடில் வந்துவிட்டால் குழந்தைகளை அவள் கவனித்துக் கொள்வதற்குச் சௌகரியமாக இருக்கும். த்ஸேமோவையும் ருளையும் அவர்களுடைய இடத்திற்கு வந்துவிடும்படிச் சொல்லலாம். விசாலமான அப்பகுதியில் அவர்கள் சிறிது சமாதானம் அடையலாம் என்று எண்ணிக்கொண்டாள்.

அத் தினம் மிக அழகாக இருந்தது. குளிர்ந்த அக் காலை நேரத்தில் நிறைந்த உள்ளத்துடன் தன்னையறியாத ஒரு இன் பத்துடன் அவள் அங்கு சென்றாள். நான்கு சுவர்களுக்கு மிடையே இருந்த இச்சிறு பாகத்தில் இருக்கும் மனிதர்கள் எப்படி பலவித இன்னல்களால் அவதிப்பட்டு வருகின்றனர்! ஆனால் அவள் ஒருசிறிதும் சஞ்சலப்படாமல் அவற்றைத் தான் இனி எதிர்நோக்கலாம், ஏன் அவற்றைத் தவிர்க்கவும் தவிர்க்கலாம் என்று எண்ணினாள். ஏனெனில் அவள் இப் பொழுது அவர்களில் ஒரு பாகமல்ல. ஸ்ரீமான் ஊவிற்கும் தனக்கும் இருந்த சரீர சம்பந்தமான தன்னை அறுத்தறி திருந்து அவள் தன்னைக் கட்டியிருந்த மற்ற எல்லா தளைகளை யும் அறுத்து எறிந்து விட்டாள். சரீரத்தோடு சரீரம் கொள் ளும் உறவால் உண்டாகும் இவ்விந்தையைக் குறித்து அவள் சிந்தித்தாள். அவ்வுறவு அறுபட்டால் சரீரமட்டுமல்லாமல் ஆத்மாவும் சேர்ந்து விடுதலை பெறுகிறது. விடுபட்ட அவ ளுடைய ஆத்மா உலகெங்கும் தங்கு தடையின்றி சுற்றிவரும் சக்தியைப் பெற்றது. இவ்விதம் அவள் லியாங்மோவின் அறையில் காலெடுத்து வைத்தபோது, ஒரு தேவதையே அங்கு வருவதுபோல் இருந்தது. அத்தேவதை அவர்களுடைய கஷ் டத்தை நிவர்த்திக்கத்தான் வந்திருக்கிறதே ஒழிய அதில் பங் கெடுத்துக் கொள்வதற்காக வரவில்லை.

ஆனால் குழந்தையின் பரிதாபகரமான அழுகை காதில் விழுந்ததும் அவள் நெஞ்சு பிளந்துவிடும்போல் ஆயிற்று. உடனே பாவத்தையும் மறந்தவளாய் விரைவாக உள்ளே சென்றாள். அங்கு மெய் உட்கார்ந்திருந்தான். அந்த இளம்

தாதியும் பசியுடன் துடித்த அக் குழந்தையை வெறுமையான தனது மார்பில் பிடித்தவாறு உட்கார்ந்திருந்தாள். வெளிறிய அவளது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அக் குழந்தை பால் குடித்துப் பார்த்துவிட்டுப் பால் இல்லாததால் கோபத்துடன் முகத்தைத் திருப்பிக்கொண்டு கத்தியது.

"என்ன இப்போது? ஏன் உன் பால் வற்றிப்போய் விட்டது?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

அப்பெண் குழந்தையை மெங்கின் கையில் கொடுத்து விட்டு விசித்து விசித்து அழுதாள்.

"அவளுக்கு முட்டைகள் போட்ட கிராப் சூப் செய்து கொடுத்தாயா?" என்று மெங்கைக் கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"நாங்கள் எல்லாம் செய்து பார்த்து விட்டோம். முதலில் அது ஒன்றுமில்லை. அவளுக்கு ஜலதோஷம் பிடித்திருக்கலாம் அல்லது அதிகமாகச் சாப்பிட்டிருக்கலாம் என்று எண்ணி அரிசிக் கஞ்சியைப் போட்டு குழந்தைக்கு இரண்டு வேளை கொடுத்தேன். ஆனால் இப்பொழுது இரண்டு நாட்களாகிறது. இன்னும் குழந்தைக்குக் கொடுக்க அவளிடம் பால் வரவில்லை. குழந்தை எலும்பும் தோலுமாக ஆகிவிட்டான்" என்று பதில் கூறினாள்.

பெரிய குழந்தையின் தாதி உள்ளே வந்தாள். "நான் என்னுடைய பாலைக் கொடுத்துப் பார்த்தேன். ஆனால் மிகவும் நாளாகி விட்டதால் இக்குழந்தைக்கு அது உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை. பாலை வாந்தி எடுத்து விட்டது" என்று கூறிய அவள் தன்னைப்பற்றி மிகவும் திருப்தி கொண்டவளாய், மேலும், "எனக்கு ஒரு போதும் பால் வற்றிப் போனதே கிடையாது, பெரியம்மா. ஆதலால் என்ன செய்ய வேண்டுமென்பதை நான் எவ்விதம் அறிவேன்" என்றாள்.

அவளுடைய கர்வத்தையும், தனக்குப் பரிசு கிடைக்கும் என்ற அவளது பேராசையையும் கண்ட ஸ்ரீமதி ஊ, "நீ வெளியே போ" என்று உத்திரவிட்டாள்.

அப்பெண்ணே நிறுத்தாமல் அழுதுகொண்டே யிருந்தாள். ஸ்ரீமதி ஊ உட்கார்ந்துகொண்டு, பாம்புத் தலையுடைய தனது கைத்தடியின்மீது இரண்டு கைகளையும் ஊன்றியவாறு அவளை நோக்கினாள்.

"பெண்ணே நீ துயரமடைந்தவள்போல் காணப்படுகிறாய்! அதனால்தான் உன்னுடைய பால் வற்றிப்

போயிருக்கிறது. உனது கஷ்டம் என்ன என்று என்னிடம் சொல்லு" என்று பணித்தாள் ஸ்ரீமதி ஊ.

முதலில் அப்பெண் பதிலே கூறவில்லை. தனது கன்னங்களில் வழிந்த நீரை சட்டைத் துணியால் துடைப்பதும் பிறகு தலைகுனிந்து நிற்பதும் மறுபடியும் கண்களில் நீர் நிறைந்ததும் துடைப்பதுமாக யிருந்தாள்.

"இது மிகவும் விசித்திரமாகத் தானிருக்கிறது. உனது கண்ணீருக்காக எவ்வளவு வேண்டுமானாலும் உன்னிடம் தண்ணீர் இருக்கிறதுபோலிருக்கிறது. என் மகனுக்குப் பால் கொடுக்கும்போதுதான் உன் தேகத்தில் நீரெல்லாம் வற்றி விடும்போலிருக்கிறது" என்றாள் மெங் மிக வெறுப்புடன்.

"சட், பேசாதிரு. அவளும் ஒரு மனிதப் பிறவிதானே. பெண்ணே, நீ பயப்படாமல் சொல்லு" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இவ்விதம் சிறிது துணிவு பெற்ற அப்பெண், காதிலேயே விழுமாறு அவ்வளவு மெல்லிய குரலில் தட்டுத் தடுமாறிக் கொண்டு கூறினாள்: "நான் என்னுடைய சொந்தப் பெண் குழந்தையைப் பார்க்கவேயில்லை. அவள் எப்படி யிருக்கிறாளோ தெரியவில்லை...நான் இங்கு வந்து ஒரு மாதத்திற்குப் பக்கமாகிவிட்டது. அடுத்த வாரம் இந்தக் குழந்தைக்கு ஒரு மாதம் பூர்த்தியாகப் போகிறது. என்னுடைய குழந்தை அங்கு என்ன செய்கிறதோ என்று எனக்கு வேதனையாக யிருக்கிறது" என்றாள்.

இதைக் கேட்ட மெங்கிற்கு கட்டுக்கடங்கா கோபம் உண்டாயிற்று. சிவந்த வாயை இறுகக் கடித்தவாறு கண்களை அகல விழித்தாள். "உன் குழந்தையை நினைத்துக் கொண்டு, பாலை வற்றும்படிச் செய்ய உனக்கு எவ்வளவு துணிவு இருக்கவேண்டும்?" என்று கேட்டாள் சினத்துடன்.

"சட், இதென்ன பேச்சு! அவளுடைய குழந்தையும் இங்கேயே வந்து இருக்கட்டும்" என்றாள் ஸ்ரீமதி ஊ மீண்டும்.

"என்னுடைய குழந்தையுடன் சேர்த்துப் பாலூட்டுவதற்காகவா?" என்று கூவினாள் மெங்.

"இல்லை. உன்னுடைய குழந்தையைக் காப்பாற்றுவதற்காக?" என்று பதில் கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அத் தாதிப் பெண் முழந்தாளிட்டு ஸ்ரீமதி ஊவின் முன் விழுந்தாள். "ஓ எழுமாளியம்மா, நீங்கள் கொடுமையானவர்

களாக இல்லையே...நீங்கள் கொடூரமானவர் என்று அவர்கள் என்னிடம் கூறினர்கள்..." என்றாள் திணறியவாறு.

"யார் அப்படிச் சொன்னது?" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

"நிலத்திலிருக்கும் காரியஸ்தன். உங்களுடைய உத்திரவிற்குக் கீழ்ப்படியாமல் இருக்கக்கூடாது, யாரும் உங்களுக்குக் கீழ்ப்படியாமலிருக்கத் துணியமாட்டார்கள்...என்று கூறினான். நான் இங்கு வருவதற்குச் சிறிதும் விரும்பவில்லை, அம்மா. என்னுடைய சொந்த சிறிய வீடு இருக்கிறது. என்னுடைய கணவர் உங்களுடைய நிலத்தில் உழைத்து வேலை செய்கிறார். எங்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. ஒரு பெண்தானென்றாலும் எங்களுடைய முதல் குழந்தை அது. எனக்கு அவளைப் பற்றி மிகவும் பெருமையாக இருந்தது. என்னிடம் நிறைய பால் இருந்தது. காரியஸ்தன், நான் கண்டிப்பாக இங்கே வரவேண்டும், இல்லாவிட்டால் என்னுடைய மனிதரை நாங்கள் குத்தகையெடுத்து ஓட்டும் நிலத்திலிருந்து விரட்டியடித்து விடுவேன் என்று கூறினான்" என்றாள்.

"நான் அம்மாதிரியான உத்திரவு ஒன்றும் அவனுக்குத் தரவில்லையே. பால் கொடுக்கும் தாதி ஒருத்தி வேண்டும் என்று மட்டும் கூறினேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அத் தாதி மேலும் தொடர்ந்து, "கிராமத்தில் நாங்கள் எல்லோரும் உங்களை நினைத்து நடுங்கும்படியாக அவன் செய்து வைத்திருக்கிறான். அவன் மூலமாக நாங்கள் உங்களுக்குப் பயந்து நடுங்கி வருகிறோம், அம்மா" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ இதைக் கேட்டுச் சிறிது கலக்கமடைந்தாள். ஆனால் அவள் அதை இந்த வேலைக்காரப் பெண்ணின் எதிரில் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. இம்மாதிரியான பெரிய வீடுகளில் அதிகாரம் செலுத்துபவர்கள், தங்களிடம் அடங்கி நடப்பவர்களின் கருணைக்குப் பாத்திரமாகும் நிலையில் நடந்து கொள்ளக்கூடாது. அவள் தனது தலையைச் சற்றே சாய்த்துக் கொண்டு, அன்புடன், "உன்னுடைய குழந்தையை இங்கே கொண்டு வந்து விடும்படி இன்றே சொல்லியனுப்புகிறேன். அவளை உன்னருகே வேண்டுமானால் தூங்க வைத்துக்கொள். ஆனால் என்னுடைய பேரனுடன் அதே அறையில் வைத்திருக்கக் கூடாது. தெரிந்ததா?" என்றாள்.

"நீங்கள் ஒரு உயிரைக் காப்பாற்றினீர்கள்" என்று கூறிய அப்பெண் கீழே ஸ்ரீமதி ஊவின் முன்னர் விழுந்து, தனது நெற்றி தரையில் படும்படி குனிந்து வணங்கினாள்.

ஆனால் குழந்தை மீண்டும் அழ ஆரம்பித்தது. அத் தாதி எழுந்து அதை வாங்கிக் கொண்டாள். அவளுடைய கண்ணீரெல்லாம் மாயமாய் மறைந்து விட்டது. குழந்தையை எடுத்துப் பால் கொடுக்கவும் இப்போது பால் நிறைய சுரந்தது.

"நீ உன் பாலை வேண்டுமென்று இதுவரை விடாமல் பிடித்து வைத்திருக்கிறாய்" என்று கோபத்துடன் கத்தினாள் மெங்.

அவ் வேலைக்காரப்பெண் ஆச்சரியத்துடன் அவளை நிமிர்ந்து நோக்கினாள். சூதுவாதறியாத ஒரு பட்டிக்காட்டுப் பெண் அவள். "இல்லையம்மா, நான் அப்படிச் செய்யவில்லை. என் பால் ஏன் வற்றிவிட்டது என்பதோ அல்லது இப்போது திரும்பி வந்துவிட்டது என்பதோ எனக்கு ஒன்றும் தெரியாது. பெரியம்மாள், என்னுடைய குழந்தை இங்கு வந்து விடும் என்று கூறியதும் என்னுடைய நெஞ்சில் ஏதோ ஒன்று இளகி விட்டதுபோல் தோன்றியது. உடனே பாலும் வந்து விட்டது" என்றாள்.

ஆனால் மெங்கின் கோபம் சிறிதும் தணியவில்லை. "பட்டிக்காட்டு கழுதை, அடிமுட்டாளாக யிருக்கிறது" என்றாள்.

ஸ்ரீமதி ஊ எழுந்து விட்டாள். "உன்னுடைய மகனது சுகவாழ்க்கை அவளைச் சார்ந்திருப்பதால், நீ வீணுக்கு கோபமடைவதில் பயனில்லை, மகளே. இதோ நீ கவனித்துக்கொள். பெண்ணே, உன் குழந்தை இங்கே வந்த பிறகு, என்னுடைய பேரனுக்கு நீ செய்யவேண்டிய உன் கடமையை மறந்து விடாதே" என்றாள்.

அப்பெண் பணிவுடன் ஸ்ரீமதி ஊவைப் பார்த்து, மெல்லிய குரலில், "நான் மறக்கவே மாட்டேன், எஜமானியம்மா. நான் முதலில் அதற்குத்தான் பாலூட்டுவேன்" என்று கூறினாள்.

அவளுடைய பார்வையிலும் குரலிலும் காணப்பட்ட ஏதோ ஒன்று ஸ்ரீமதி ஊவை நிற்கச் செய்தது. அம்மெல்லிய குரலில் ஏதோ ஒரு வேதனையும் உறுதியும் தொனித்தது. ஆனால் அதை என்னவென்று அவள் விசாரிக்கப் புகவில்லை. எப்போதுமே அவள் தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்களுடைய துன்பங்களைப் பற்றி அதிக தூரம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பியதில்லை. அப்படிக்

கேட்டால் ஒரு வேளை அதில் தானும் சிக்கிக்கொள்ள நேரிடுமோ என்ற பயம்தான் அதற்குக் காரணம். ஆதலால் அவள் மெங்கை நோக்கிப் பேசலானாள்.

"பெரிய எஜமானியின் அறைகளை என்னுடைய பெரிய மகனுக்கும் உனக்கும் கொடுத்து விடலாமென்றிருக்கிறேன். அப்போது என்னுடைய பேரன்மார்கள் எனது அருகிலேயே இருப்பார்கள்" என்றாள்.

இதைக் குறித்து மெங்கிற்கு மகிழ்ச்சி உண்டானதாகத் தெரியவில்லை. ஸ்ரீமதி ஊ தனது உத்தேசத்தை மேலும் உறுதியாக்கிக் கொண்டாள். "இன்றே அங்கு சாமான்களைக் கொண்டு போவதில் உனக்கு உதவி செய்வதற்காக ஆட்களை அனுப்புகிறேன்" என்று கூறிவிட்டு, மெங்கின் பதிலுக்காகக் காத்திராமல், இரண்டாவது மகன் த்ஸேமோவைப் பார்ப்பதற்காக மேலே சென்றாள்.

இந்நேரத்திற்குள் த்ஸேமோ தனது வேலைக்காக வீட்டை விட்டுக் வெளியே சென்றிருக்கவேண்டும். விளையும் தானியங்களையெல்லாம் கடையில் கொண்டு போடுவதை மேற்பார்வையிடுவதுதான் அவனுடைய வேலை. ஆனால் அவன் இன்னும் வெளியே கிளம்பாமலே யிருந்தான். ஸ்ரீமதி ஊ சென்ற போது, அப்போதுதான் சாப்பிட்டு முடித்தவன்போல் வாயைக் கொப்பளித்துக் கொண்டிருந்தான்.

அவள் சென்றதும், அவன் அவசரமாக நீரை உமிழ்ந்து விட்டு, கையிலிருந்த கிண்ணத்தைக் கீழே வைத்தான்.

"மிக நேரத்திலேயே எழுந்து வந்துவிட்டாயே, அம்மா" என்றான்.

"எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிறேன். உனக்கு லியாங்மோவின் பகுதியைக் கொடுத்து விடலாமென்று நினைக்கிறேன். லியாங்மோவை உங்கள் பாட்டியின் அறைகளுக்கு வந்துவிடும்படிக் கூறியிருக்கிறேன். அங்கு வந்து விட்டால் பேரக்குழந்தைகள் என் அருகிலேயே இருப்பார்கள். இவ்விஷயத்தை உனக்குச் சொல்லிவிட்டுப் போவதற்காகவே இங்கு வந்தேன்" என்றாள்.

"நான் ருலானிடம் சொல்கிறேன்" என்றான் அவன்.

அவளுடைய பெயரைச் சொல்லும்போதே அவனது முகத்தில் கடுமை தோன்றியது போல் அவளுக்குப் புலப் பட்டது. ஏதேனும் தகராறு ஏற்பட்டால் அதை உடனே

நேரிடையே கேட்டு விடுவது அவள் வழக்கம். "ருலான் தினமும் இரவில் அழுவதாகச் சொல்கிறார்கள்" என்றாள்.

"யார் சொன்னது?" என்றான் அவன் சுருக்கமாக.

"வீட்டில் நடக்கும் தகராறுகளெல்லாம் வேலைக்காரர்களின் பேச்சாகும்படி நடந்து கொள்வது மிகவும் வெட்கக் கேடான விஷயம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"நீ முன்பு கூறியது சரிதான். நான் இந்தப் பெண் பிள்ளையை மணந்து கொண்டிருக்கவே கூடாது" என்றான் அவன்.

"உங்களுடைய காதலெல்லாம் இதற்குள்ளேயே முடிந்து போய் விட்டதா?" என வினவினாள் அவள்.

அவன் இதற்கு ஆம் என்றோ, இல்லையென்றோ கூறவில்லை. அந்தச் சிறிய வாசலில் இந்தப்புறம் பத்தடி நடப்பதும் அந்தப்புறம் பதினைறு அடி நடப்பதுமாக யிருந்தான்.

"நாங்கள் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் முடிவில் அது சண்டையில் கொண்டு போய் விடாமல் இருப்பதில்லை. சண்டை போடாமல் பேசுவதற்கு எங்களுக்குள் ஒரு விஷயமுமே யில்லை" என்றான் கடைசியில்.

"ஏன் அவள் இன்னும் குழந்தை உண்டாகாமல் இருக்கிறாள்? குழந்தையில்லாமலிருப்பதுதான் புருஷனுக்கும் மனைவிக்கும் சண்டை வருவதற்குக் காரணம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவன் தனது தோளைக் குலுக்கிக் கொண்டு, "என்னால் எப்படிச் சொல்ல முடியும்? அவள் குழந்தை பெறவில்லை. அது நிச்சயம் என்னுடைய தவறல்ல" என்றான்.

"சண்டை போட்டுக் கொண்டிருக்கும் வரை குழந்தை பிறக்க வழியே யில்லை. கொந்தளித்துக் கொண்டிருக்கும் இருதயங்களை உடம்பிலிருக்கும் நீரை யெல்லாம் வற்றச் செய்து இரத்தத்தில் விஷத்தை உண்டு பண்ணி விடுகின்றன. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உயிர் வாழ்க்கையாகிய ஜீவ நதியின் சக்தி தெளிவாக ஓடிக்கொண்டிருக்க வேண்டும்" என்று கூறிவிட்டுக் கட்டழகனை தன் மகனைப் பார்த்தாள்.

மேலும் தொடர்ந்து, "ஆணுக்கும் பெண்ணுக்கும் சண்டையிட்டுக் கொள்வது மிக எளிதான காரியம்தான். இயற்கை அவர்களை முற்றிலும் வெவ்வேறு விதமாகப் படைத்திருப்பதால் அவர்கள் புதிய சந்ததியை உண்டாக்கு

வதில் இருவருமாகச் சேர்ந்து ஒத்துழைக்காவிடில், தண்ணீரையும் எண்ணெயையும் போல் ஒருவரிடமிருந்து ஒருவர் பிய்த்து கொள்ளப் பார்ப்பார்கள். குழந்தை பெறுமலிருக்கும் ஒரு மனைவி இயற்கைக்கு விரோதமானவள். அவள் தெய்வத்தின் கட்டளையையும் இயற்கையின் விதியையும் எதிர்க்கத் துணிகிறாள். அவள் கணவனை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கும் வரை நீ அவளிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அவள் முற்றிலும் புதிய பெண்ணாக மாறி விடுவாள்" என்று கூறினாள்.

"அப்படியானால் ருலாவுக்கு என்மேல் அன்பே யில்லையா?" என்று த்ஸேமோ ஆங்காரத்துடன் கேட்டான்.

"உன் மீது அவள் அபரிமிதமான அன்பு கொண்டிருக்கிறாள். ஆதலால்தான் அவள் உன் மீது வெறுப்பும் கொள்கிறாள். அவளுடைய அன்பிற்கு ஒரு பயனும் கிடைக்காதிருப்பதுதான் அவளை வதைத்தெடுக்கிறது. உன்னை எதிர்த்துப் போராடுவதற்கு உன்னிடமிருந்து எதிர்ப்பே வருவது கிடையாது. ஆதலால் உன்னிடமிருந்து தன்னையே மறைத்துக் கொள்ள எவ்வித புகலுமின்றி அல்லற்படுகிறாள்" என்று மறுமொழி கூறினாள் ஸ்ரீமதி ஊ.

தான் கூறியவற்றைக் கேட்டு அவனது மனம் பெரிதும் புண்பட்டுப் போயிற்றென்பதை அறிந்தாள். அவள் மேலும், "நீ சிறிது நாட்களுக்கு எங்காவது வெளியூர் போய் வரலாம். திரும்பிவந்த பிறகு அவளிடம் பிரியமாக நடந்து கொள். கொடூரமாக இராதே. அவள் உன்னைவிடப் பெரியவள் என்பதையோ, அவள்தான் முதலில் உன்னை நாடி வந்தாள் என்பதையோ நினைவூட்டும்படி நடந்து கொள்ளாதே" என்றாள்.

"அவள் என்னை நாடி வந்தாள் என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்ட அவன் நடப்பதை நிறுத்திவிட்டு அவளை நோக்கி விழித்தான். பிறகு பாதி சிரிப்பும் பாதி துக்கமும் நிறைந்த குரலில், "உனக்கு எப்படி எல்லாம் தெரிகிறது?" என்று கேட்டான்.

"என்னுடைய கண்களால் பார்த்துத் தெரிந்து கொள்கிறேன்" என்று பதிலளித்த அவள் பிரம்பின்மீது வைத்திருந்த இரண்டு கைகளின் மீதும் தனது கன்னத்தை வைத்துக் கொண்டாள். "அவள் உன்னிடம் பயப்படுகிறாள். ஆனால் அம்மாதிரி பயப்படுவதை வெறுக்கிறாள். உன்னிடம் அதிக அன்பு கொண்டிருக்கிறாள். அவளே அவ்வன்பைக் கண்டு பயப்படுகிறாள். ஆம், நீ அவளை என்னிடம் சிறிது நாட்களுக்கு விட்டு விட்டு, எங்காவது போய் வா. ஆணும் பெண்ணும் அனுசரித்து நடக்க வேண்டிய ஒரு விதி இருக்கிறது. நீயும் ருலாவும் அதை மீறி நடந்து விட்டீர்கள். மெங்கைப் பார்—அவளைப் பொறுத்த வரை எல்லா விஷயங்களும் தெய்வத்தின் ஆணைப்படி ஒழுங்காக நடக்கிறது. அவளுடைய வீட்டில்தான் எத்தகைய அமைதியும் அழகும் குடிகொண்டிருக்கிறது. அவளுக்குப் பிள்ளைக் குழந்தைகளாக வரிசையாகப் பிறக்கிறது. லியாங்மோ அவளுடன் சந்தோஷமாக வாழ்கிறான். இருவரும் ஒருவரை ஒருவர் அளவுக்கு மேல் அதிகமாகக் காதலிப்பதில்லை. இருவரும் ஒற்றுமையுடன் புதிய சந்ததியை உருவாக்குவதில் ஈடுபடுகிறார்கள்" என்றாள்.

த்ஸேமோ பொறுமை யற்றவனாய், "மெங் ரொம்பவும் பழைய காலம். கொஞ்சம் முட்டாளும் கூட. ருலான் மூடமாகவாவது இல்லாமலிருக்கிறாளே" என்றான்.

"ஒரு பெண் முட்டாளாக யிருக்க வேண்டுமென்பதோ இல்லாதிருக்க வேண்டுமென்பதோ அவசியமில்லை" என்று பொறுமையுடன் பதிலிறுத்த ஸ்ரீமதி ஊ மீண்டும், "இந்த விஷயமெல்லாம் ஒரு நியதிப்படி நடக்க வேண்டும். கல்யாணம் என்பதில் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் ஏற்றவர்களாக யிருக்க வேண்டும். ஆதலால்தான் நான் லியாங்மோவிற்கு மெங்கைத் தேர்ந்தெடுத்தேன். அவளை விட அவன் புத்தியில் உயர்ந்தவன். ஆனால் அவளும் அவனுடைய தேவைகளையும் விருப்பங்களையும் புரிந்து கொள்ளும் அளவுக்குப் புத்தியுடையவளாக இருக்கிறாள். உங்களுடைய கல்யாணத்தில் நீங்கள் இருவரும் சரிசமமாக யிருக்கிறீர்கள். ஆதலால்தான் எப்போதும் சச்சரவிட்டுக் கொண்டே யிருக்கிறீர்கள்" என்றாள்.

"நீ அப்பாவைவிட அதிக புத்திசாலியாக யிருக்கிறாயே?" என்று கூறிய த்ஸேமோ கடுமையும் கேலியும் தோன்ற ஒரு பார்வை பார்த்தான். அப் பார்வை அவளைச் சிறிது நிலை குலையச் செய்தது.

அவள் அவசரத்துடன், "ஓ! நான் என்னுடைய அறிவை வாழ்க்கையிலிருந்துதான் கற்றுக் கொண்டேன். மேலும் உனது தகப்பனாருக்கும் எனக்குமிடையே சண்டை ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு வேண்டிய அறிவும் எனக்கு இருந்தது. வயதான காலத்திலும் அவர் மிகவும்

சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சியூமிங்கை நான் அவரிடம் அனுப்பினேன்" என்று மொழிந்தாள்.

"அப்படியானால் நீ...?" என்று அவன் மேலும் குத்திக் கேட்டான்.

"நானும்தான் சந்தோஷமாக யிருந்து வருகிறேன்?" என்றாள் அவள் அமைதியுடன்.

இப்போது ருலான் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தாள். அச் சிறிய பகுதியில் தன் ஜன்னலுக்கு அருகேயே நடக்கும் இச்சம்பாஷணையைத் தான் கேட்கவில்லை என்பதாக இனியும் பாசாங்கு செய்ய முடியாது என்பதை உணர்ந்தாள் போலும்! ஸ்ரீமதி ஊவிற்கும் அவள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள் என்பது நன்முகத் தெரிந்திருந்த போதிலும் மரியாதையை உத்தேசித்து ஒன்றும் தெரியாதவள் போல், "நான் இப்போதுதான் த்ஸேமோவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். மகளே, உங்களுக்குப் பிரியமானால் நீங்கள் இனி லியாங்மோவின் பருதியை எடுத்துக் கொள்ளலாம். இதை விடப் பெரிதாக யிருக்கும். லியாங்மோ என்னுடைய அறைக்குப் பக்கத்தில் வந்து விடப் போகிறான். அப்போது எனக்குப் பேரக் குழந்தைகளை நன்முகக் கவனித்துக் கொள்ளச் சௌகரியமாக யிருக்கும்" என்று கூறினாள்.

"மிக்க வந்தனம், அம்மா, உங்களுக்கு" என்றாள் ருலான். ஆனால் அவளுடைய குரலிலோ, பார்வையிலோ எவ்வித நன்றியுணர்ச்சியும் இருந்ததாகத் தோன்றவில்லை. அவள் சிறிதும் அக்கறையின்றி ஆடையணிந்திருந்தாள். பச்சைக் கட்டமும் வெளுத்த நீல நிறக் கட்டமும் மாறி மாறிப் போட்டிருந்த ஒரு அசங்கியமான ஆடையை அணிந்திருந்தாள். அது அவளுடைய வயதை மேலும் அதிகப்படுத்திக் காட்டியது.

'த்ஸேமோ வெளியூருக்குப் போனதுமே இவளுக்கு இவ்வளவு அருவருக்கத் தக்க தோற்றத்துடன் காட்சியளிக்காமலிருக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள். ஸ்ரீமதி ஊ உட்கார்ந்தபடியே தனது மருமகளைச் சிந்தனையுடன் நோக்கினாள். அவளுடைய பார்வையைத் தொடர்ந்து சென்ற த்ஸேமோ, தன்னுடைய மனைவியிடம் மற்றுமொரு புதிய குற்றத்தைக் கண்டு பிடித்தான்.

"இந்த உடையைப் பார்த்தாலே எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது" என்றான், ஆக்ரோஷத்துடன்.

அவள் அதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், தனது குட்டை மயிரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுக்கொண்டு, "இன்னொன்று வாங்கித் தருவதுதானே!" என்றாள்.

ஸ்ரீமதி ஊ உட்னே எழுந்து விட்டாள். அங்கு உட்கார்ந்து அவர்கள் இருவரும் சண்டையிடுவதைப் பார்த்துக் கொண்டு அவள் உட்கார்ந்திருக்கமாட்டாள்—பின்னர் அவர்களுக்குள் மத்தியஸ்தம் செய்து வைக்கவேண்டி நேரிடும். ஆனாலும் அவளால் தன்னுடைய அதிருப்தியை முற்றிலும் மறைத்து வைக்க முடியவில்லை.

ருலானிடம் அவள், "த்ஸேமோ சிறிது நாட்களுக்கு எங்காவது வெளியூர் சென்று வரப் போகிறான். நான் என்னுடைய அனுமதியைக் கொடுத்து விட்டேன். அவன் போகும்வரை இன்னும் சில தினங்களுக்குச் சண்டையிடாமல் இரு. நாளைக்கு அவ்விடத்திற்குப்போக வேண்டிய வேலைகளைக் கவனி. சாமான்களை யெல்லாம் எடுத்துவை" என்றாள்.

"த்ஸேமோ போவதென்றால் நானும்தான் போவேன்" என்றாள் ருலான்.

அவள், அசங்கியமான அந்த ஆடையில் விறைத்துக் கொண்டு கைகளை இருபுறமும் இறுகப் பிடித்தவாறு நின்றாள். தனது கைத்தடியின் மீது கைகளை வைத்துக்கொண்டு நின்ற ஸ்ரீமதி ஊ அதேபோல் நிமிர்ந்து நின்றாள்.

அவள் மிகத் தெளிவாக, "நீ போக முடியாது. நீ என்னுடன் இங்கே தங்கியிருக்க வேண்டும். நீ கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. அவற்றை நான் உனக்குக் கற்பிக்கிறேன்" என்றாள்.

மறுமுறையும் அவள் தன் மருமகள் கூறப்போகும் பதிலுக்காகக் காத்துக்கொண்டு நிற்கவில்லை. அவள் அவ்வாசலை விட்டு, ஒரு முறைகூட திரும்பிப் பாராமல் சென்று விட்டாள்.

'ஐயோ! இந்த நாட்டுப் பெண்கள் வேறு! இவர்களால் எவ்வளவு தொந்திரவாயிருக்கிறது! முன்பே, சிறு பெண்களை என்னுடைய வீட்டில் கொண்டுவந்து, மகன்களுக்கு மனைவிகளாக யிருப்பதற்குத் தகுந்தபடியும், குடும்பத்தை அனுசரித்து நடக்கும்படியும் பழக்கி வளர்த்திருந்தால் இவ்வளவு கஷ்டம் வருமா? நம்முடைய பேரக் குழந்தைகளைப் பெறுவதற்காக முன்பின் தெரியாத அந்நியர்களை உள்ளே கொண்டு

வருவது எவ்வளவு தொல்லையைக் கொடுப்பதாயிருக்கிறது' என்று எண்ணமிட்டாள் ஸ்ரீமதி ஊ.

அவளுடைய மனத்தில் மாலை நேரமும் அந்த அமைதியும் எப்போது வரும், சகோதரர் ஆண்ட்ரூவின் உதவியால் இச் சடலத்தைப் பின்னே விட்டு ஆத்மவயமாகி உலக முழுவதும் பறக்கப்போகும் அந்நேரம் எப்போது வரும் என்ற ஏக்கம் உண்டாயிற்று.

* * *

அங்கு அவள் அவர்களைவிட்டு வந்ததும், ருலான் தன்னுடைய இளம் கணவனைத் துன்பமும் கோபமும் நிறைந்த விழிகளால் நோக்கினாள். "என்னை விட்டுவிட்டு நீங்கள் போய்விட வேண்டுமென்று பார்க்கிறீர்கள்" என்று முனகினாள்.

"இது முற்றிலும் என்னுடைய அம்மாவின் யோசனை தான்" என்று அவன் மிக சாதாரணமாகக் கூறிவிட்டுத் தன் தலையைப் பின்புறம் சாய்த்துக்கொண்டு, கைகளால் முன்புற மயிர்களைத் நடவி விட்டுக் கொண்டான். அந்த வெண்மையான கரங்களைக் காண அவளது உள்ளத்தில் முள் தைத்தது போன்ற வேதனை உண்டாயிற்று. இம்மாதிரியான உணர்ச்சிகளுக்காக அவள் இப்போது தன்னையே மிகவும் வெறுத்துக் கொண்டாள். அவள் மீண்டும் அதே எரிச்சலுடன், "நான் ஓடிவிடப் போகிறேன்" என்றாள்.

அவன் நகைத்துவிட்டு "என்னோடு அல்லவே—அப்படியானால் நான் ஒருபோதும் திரும்பி வீட்டிற்கு வரத் துணியமாட்டேன்" என்றான்.

"உங்கள் தாயாரிடம் நீங்கள் நடுங்குகிறீர்கள்!" என்று அவள் கூவினாள்.

"ஆம், அது வாஸ்தவம்தான்" என்று அவன் ஒப்புக் கொண்டான்.

இவ்விதம் சுலபமாக ஒத்துக்கொள்வதுதான் அவனுடைய தந்திரம். இம்முறையும் அவன் அவளுக்கு விட்டுக் கொடுத்து, அவளுடைய ஆயுதத்தினால் பிடிப்பதற்குத் தன்னிடம் ஒன்றுமில்லாமற் போகும்படி செய்துவிட்டான்.

"எனக்கு பயந்து நடுங்கும்படியான இத்தகைய பிள்ளைகள் இருப்பதைவிட பிள்ளைகள் இல்லாமலிருப்பதையே நான் வரவேற்பேன்" என்று ஆங்காரத்துடன் கூறினாள் அவள்.

"நல்லது; உனக்குத்தான் பிள்ளைகள் இல்லையே" என்றான் அவன் மிக அமைதியான குரலில்.

பழைய காலத்தவர்களின் நிந்தனையாகிய இதைக் கேட்டு அவளது மனம் விண்டு போயிற்று. எத்தனைதான் முயன்ற போதிலும் அவளால் அதன் சக்தியிலிருந்து விடுபட முடியவில்லை. "த்ஸேமோ, உண்மையிலேயே என்னை நீங்கள் வெறுக்கிறீர்கள்" என்று அவள் அவனருகில் வந்து நின்று மெல்லிய குரலில் வினவினாள். அவன் அவள் முகத்தைக் குனிந்து நோக்கினான்.

"ஏன் என்னை இப்படித் துளைத்துப் புண்படுத்தி அமைதியற்றுப் போகும்படி செய்கிறாய்?" என்று அவன் வாய்க்குள் முணுமுணுத்தான்.

"அமைதியா! என்னிடமிருந்தா?" என்று அவள் கத்தினாள்.

"இல்லை, அமைதி! வெறும் அமைதி மட்டும் கிடைத்தால்போதும்" என்றான்.

"அமைதியாகயிருந்து, என்னை மறந்துவிடலாம் என்று பார்க்கிறீர்களோ?" என்றாள் அவள் குரோதத்துடன்.

"நீ அதற்காகத்தான் என்னை உன்னிடம் கோபம் கொள்ளச் செய்கிறாய் என்பது எனக்குத் தெரியும்" என்று அவள் முகத்தில் அடித்தாற்போல் கூறிவிட்டு, கசப்புடன் சிரித்தான். "நீ என்னை எதற்காக உன்னிடம் கோபம் கொள்ளும்படி செய்கிறாயென்றால், அந்தக் காரணத்தைக் கொண்டாவது என் மனம் உன்மீது செல்லட்டும் என்பதற்காகத்தான்" என்றான்.

அவன் உண்மையை அவளிடமிருந்து அப்படியே பறித்து எடுத்துவிட்டான், இத்தனை நாள் அவள் தன்னிடமிருந்தே ஒளித்து வைத்திருந்த அவ்வுண்மையை! ஆம், அவன் இராப் பகலாக அவளை மறந்திருக்கவும், கல்யாணத்திற்குப் பிறகு அவளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இருக்கவும் ஆரம்பித்ததிலிருந்து, அவள் அவனை வம்பு சண்டைக்காவது இழுத்துக் கோபமூட்டினாள். அப்படியாவது அவன் தன்னிடம் திரும்ப வரட்டுமே என்பதற்காகத்தான், அவனிடமிருந்து அவள் துன்பத்தை வேண்டினாள். ஒன்றுமில்லாமல் இருப்பதைக் காட்டிலும் வேதனையாவது கிடைப்பது மேல் என்று எண்ணினாள்.

தன்னிடமிருந்து அவன் தன் தலையை வெறுப்புடன் மறுபுறம் திருப்பிக்கொள்வதைப் பார்த்தாள். அது அவளுக்கு

மிக்க பயங்கரமாகக் காட்சியளித்தது. 'நான் என்னை எப்படியாவது அவரிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இந்தக் காதல் என்பதான அடிமை விலங்கிலிருந்து நான் எவ்விதமாவது விடுதலை பெறவேண்டும். எனக்கு இது மிகவும் கசந்து விட்டது' என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

இவ்விதம் அவனிடமிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற ஏக்கம் அவளது நெஞ்சில் எழவும் அவளுக்கு உடனே ஸ்ரீமதி ஊவின் நினைவு வரவேண்டியதும் மிகவும் விசித்திரம் தான்! உணர்ச்சியே உருவாகிய அவள் உடனே அவனை விட்டு விட்டு, ஒவ்வொரு பகுதியாகக் கடந்து ஓட ஆரம்பித்தாள். புத்தக அறையில் உட்கார்ந்து தனது சிறிய புகைக் குழாயைப் பிடித்துக் கொண்டிருந்த ஸ்ரீமதி ஊவின் முன்னால் சென்று தான் நின்றாள்.

"அம்மா, என்னையும் விடுதலை செய்து அனுப்புங்கள்" என்று அலறினாள்.

ஸ்ரீமதி ஊவிற்கு இது நன் அந்தராத்மாவிலிருந்து எழும் எதிரொலியேபோல் தோன்றியது. ஆனால், அவள் தனது திகைப்பைக் காட்டிக்கொள்ளவில்லை. அவள் புகைக் குழாயை மேஜைமீது வைத்துவிட்டு, பனைமரம்போல் இருந்த மருமகளை உற்று நோக்கினாள். "பொறு, உன்னைச் சிறிது நிதானப் படுத்திக்கொள். முதலில் உட்கார்ந்து கண்களில் விழும் மயிர்களை ஒதுக்கி விட்டுக்கொள். நான் யோசித்துச் சொல்வதற்கு முன் உனக்கொன்று சொல்லி விடுகிறேன். இந்த அவலட்சணமான ஆடையை இனி அணியாதே. உன் போன்ற பெண்கள் எப்போதும் பளிச்சென்ற துணிகளைத் தான் உடுத்த வேண்டும். அவை உனது நிறத்தைக்கூட சிறிது எடுத்துக் காட்டும். சரி இப்போது சொல்லு. உன்னை எவ்விதம் நான் விடுதலை செய்வது?" என்றாள்.

"நான் இந்த வீட்டை விட்டே வெளியே போய்விட விரும்புகிறேன்—த்ஸேமோவிடமிருந்து விலகிச் சென்றுவிட வேண்டும்" என்றாள் ருலான். ஸ்ரீமதி ஊ அவளை உட்காரும்படி கையைக் காட்டியதற்குக் கீழ்ப்படியாமல் அவள் நின்று கொண்டே யிருந்தாள். ஸ்ரீமதி ஊ கூறியது ஒன்றுமே அவள் காதில் ஏறவில்லையென்று தோன்றியது. இரண்டு பெண்மணிகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"த்ஸேமோ போகப் போகிறான் என்றுதான் நான் உன்னிடம் முன்னமே கூறினேனே. அவனிடமிருந்து உனக்கு விடுதலை கிடைத்து விடும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அவரிடமிருந்து என்றென்றைக்கும் விடுதலை பெற்றுச் சென்றுவிட விரும்புகிறேன். நான் கல்யாணமே செய்து கொண்டிருக்கக்கூடாது. அவருக்காக நான் படும் அவஸ்தையைக் கண்டு எனக்கே என் மீது வெறுப்பு தோன்றுகிறது. உணர்ச்சிகளுக்கு அடிமையாக யிருக்கிறேன் நான். அவர் தன்னிஷ்டப்படி என்னை ஆட்டி வைக்கிறார். நான் என்னிஷ்டப்படி இருக்க வேண்டுமென்றால் அது முடியவில்லை" என்றாள் ருலான் பரிதாபகரமாக.

"இதற்கு அவனா குற்றவாளி?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"என்னைப் போக விடுங்கள்" என்றாள் ருலான் மீண்டும் பிடிவாதமாக.

இவ் விசித்திரமான கோபக்கார பெண்மணியின் மீது ஸ்ரீமதி ஊவிற்குத் தன்னையறியாது மீண்டும் பிரியம் உண்டாயிற்று. "நீ எங்கே போவாய்? கணவனுடைய வீட்டைவிட்டு வெளியே செல்லும் பெண்ணிற்கு என்ன சுகம் இருக்கிறது? நான் இந்த வீட்டிலிருந்து உன்னை விடுவித்து அனுப்பி விட்டாலும், பிறகு உன்னால் சுதந்திரமாக இருக்க முடியுமா? கணவனற்ற ஒரு பெண்—எல்லோருடைய அவமதிப்பிற்கும் ஆளாகிறாள். கணவன் மூலமாகவும் குழந்தையின் மூலமாகவும் ஒரு பெண் உண்மையான விடுதலையைப் பெறுகிறாள்" என்றாள்.

ருலான் திகிலுடன் அவளை நோக்கினாள். "நான் எவ்விதம் விடுதலை பெறுவது என்று எனக்குக் கூறுங்கள்" என்று வினவினாள்.

ஸ்ரீமதி ஊவிற்கு அப்பெண்ணிடம் மிகுந்த பரிதாபம் உண்டாயிற்று. அவள் அன்புடன், "ஐயோ, குழந்தாய்! என்னால் கூறமுடியாது. ஏனெனில் எனக்குத் தெரியாது" என்றாள்.

"நீங்கள் ஒருவரையுமே காதலித்ததில்லையா?" என்று கேட்டாள் அப்பெண்.

மேலே நோக்கிய ஸ்ரீமதி ஊ இதற்குப் பதிலளிக்கவில்லை. த்ஸேமோ இப்பெண்ணை எவ்விதமோ வஞ்சித்து விட்டான் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தது. ஆனால் அவன் என்ன வேண்டுமென்கிறாள் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? அவன் தான் இருப்பது போல்தான் இருக்கிறான். அது பெண்ணுக்குத் திருப்தியளிக்கவில்லை யென்றால் அதற்கு அவன் என்ன செய்யக்கூடும்? அவனுக்கு ஸ்ரீமான்

ஊவைத் தான் அளவுக்குமேல் காதலிக்கும்படி நேராமற் போனது எவ்வளவு பெரும் பாக்கியம் என்ற உண்மை நன்கு புலப்பட ஆரம்பித்தது. ஒரு காலத்தில், அவள் இளம் பெண்ணாக இருந்தபோது, இதைப் பற்றின அபாயம் இருந்தது. ஆனால் அவளுடைய நுண்ணிய அறிவும் அதி நுட்பமாக ஆராயும் சக்தியும் அவளைக் காப்பாற்றின. ருலான் நுட்ப புத்தியுள்ளவளல்ல.

அவள் கடைசியில், "உனக்கு ஒரு குழந்தை இருந் திருந்தால் நீ அவனிடம் இவ்விதம் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டாய். அதனால் உன் அன்பு பிரிந்து போகிறதல்லவா? ஒரு குழந்தை அதிக பராமரிப்பைக் கோருகிறது. அதை செய்யும்படியான நிர்ப்பந்தம் உனக்கு ஏற்படுகிறது. அல்லது உனக்கு குழந்தை இல்லாவிட்டால், நீ படிப்பது, சித்திரம் வரைவது போன்ற ஏதாவது வேலைகளை மேற்கொள்ளலாம். நீ உன் அன்பைப் பகிர்ந்து கொள்ளவேண்டும், குழந்தாய்! நீ உன்னுடைய சக்திகள் முழுவதையும் ஒரு சிறிய குறுகிய நதியில் சென்று விழும்படி செய்து விட்டாய். இப்போது, வாய்க்கால்கள் வெட்டி, அதன் மூலமாக உன் அன்பைப் பல கிளைகளாகப் பிரிந்து போகும்படிச் செய்" என்று கூறினாள்.

"பலவந்தமான வேலையா?" என்றாள் ருலான் கசப்புடன்.

ஸ்ரீமதி ஊ அன்புடன், "அதாவது அவசியம் ஏற் பட்டால்...! ஆனால் உனக்கு அமைதியைக் கொடுக்கக் கூடிய வழி இது ஒன்றுதான். இதை விட்டால் நீ சாகவேண்டியது தான். ஏனெனில் அவன் உன்னை நஞ்சென வெறுப்பான். அதற்கு நான் உத்திரவாதம் அளிக்கிறேன். அவன் வெறுப் பின் எல்லையை அடைந்து துடித்துக் கொண்டிருக்கிறான் இப்போது. அதனால்தான் உன்னை விட்டுச் சில நாட்களுக்குப் பிரிந்திருக்கட்டும் என்று எங்காவது பிரயாணம் சென்று வரும்படி அவனுக்கு உத்திரவிட்டேன்" என்றாள்.

ருலான் உலர்ந்திருந்த தனது உதடுகளை நனைத்து விட்டுக் கொண்டாள். "எல்லா ஆண்களும் இவரைப்போல்தான் இருப்பார்களா?" என்று வினவினாள்.

ஸ்ரீமதி ஊ மணியடிப்பது போன்ற தனது இனிய குரலில், "ஆண்கள் எல்லோரும், கயல்மீன்கள் எப்படி ஒரே மாதிரியாக இருக்கின்றனவோ, அதேபோல் ஒரே தன்மை யுடையவர்கள்தாம். இதை ஒரு பெண் எப்போது கண்டு கொள்கிறாளோ, அப்போதுதான் அவள் மோகத்திலிருந்து விடுபடுகிறாள்" என்றாள்.

"பின், நான் ஏன் த்ஸேமோவை மட்டும் காதலிக் கிறேன்?" என்றாள் ருலான் சாதுரியமாக.

அதே அழகிய குரலில் ஸ்ரீமதி ஊ, "அவனுடைய தோற் றத்தில் காணப்படும் சில விசேஷங்கள்தாம் அதற்குக் காரணம். அவனுடைய புருவங்கள் அசையும் விதம், அவனுடைய வாயின் அமைப்பு, கோட் அணிந்திருக்கும் போது மிக அழகாகக் காணப்படும் அவனுடைய தோள்களின் கட்டு, அவனுடைய கைகள்..."

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?" என்றாள் ருலான் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்தவளாய்.

ஸ்ரீமதி ஊ நகைத்தாள். "நம்முடைய இனத்தை சரி கட்டிக்கொண்டு போவதற்காகத் தெய்வம் நூறு வகையான வலைகளை வீசி வைத்திருக்கிறது" என்று பதில் கூறினாள். அவளால் இப்பெண்ணிடம் கோபம் கொள்ள முடியாது. பாவம், அவளுக்கு என்ன தெரியும்? வலியிலகப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பிராணி அவள். ருலான் எவ்வளவு பரிதபிக்கத் தக்க விதத்தில் த்ஸேமோவைக் காதலிக்கிறாள் என்பதை உணர்ந்ததும், அவள் அவளுடைய எல்லா குற்றத் தையும் மன்னித்து விட்டாள்.

அவள் தனது குறுகிய சிறு கைகளை நீட்டி ருலானின் கைகளைப் பிடித்துஇழுத்து அவைகளை ஒவ்வொன்றாகத் தட்டிக் கொடுத்தாள். "இனி இந்தத் துன்பங்களெல்லாம் ஒழிய வேண்டும். இந்த வீட்டில் இருப்பவர்களில் எவரும் துன்ப மடைந்து விசனப்படுவதை நான் விரும்பவில்லை. பார், நான் உங்கள் எல்லோரையும் இன்பமாக வாழச் செய்ய வேண்டும் என்பதற்காக என் வாழ்நாள் முழுவதையும் செலவழிக் கிறேன். குழந்தாய், நீ இங்கு சந்தோஷமாய் வாழ்வதற்கு உனக்கு என்ன வேண்டுமென்று விரும்புகிறாய்?" என்றாள்.

இந்த அழகிய அன்பு ததும்பும் முகத்தையும் மயங்க வைக்கும்படியான எழில் நிறைந்த அக்குரலையும் கேட்ட ருலானுக்கு மனம் நெகிழ்வதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. ஸ்ரீமதி ஊ தன்னை அருகே இழுத்து முன்னால் ஒரு குழந்தையைப் போல் நிற்க வைத்துக் கொள்வதற்கு விடுத்துப் பொறுத்திருந்தாள். அதே ஆதரவளிக்கும் குரலில் அவள் மேலும், "அவன் போய் வரட்டும். அவன் பேரும் பொழுது நீ அழாதே. சாமான்களை யெல்லாம் மூட்டை கட்டி வைப்பதில் நீ அவனுக்கு உதவி செய்... போதும்

சமயத்தில், உன் இதயம் எவ்வளவு புலம்பியழுதாலும் அதைக் காட்டாமல் சந்தோஷமாக அவனுக்கு விடை கொடுத்தனுப்பு. இரவில் நடு நடுவே விழித்துக் கொள்ளாமல் நன்றாகத் தூங்கு. தூக்கமில்லாமல் அவஸ்தை படும்படி அவனை விடு. குழந்தாய், நீ அவஸ்தை படாதே" என்றாள்.

"அவரில்லாமல் என்னால் தூங்க முடியாமல் போய் விட்டால்...?" என்று ருலான் வெகுளியாகக் கேட்டாள்.

இவ் வெகுளித் தனத்தை ரசித்தவளாய் ஸ்ரீமதி ஊ வாய் விட்டுச் சிரித்தாள். "எழுந்து உன்னுடைய வாசலுக்குச் சென்று நட. இப்போது இரவில் குளிர் அதிகமாகயிருக்கிறது. உன் உடல் குளிரினால் சில்லிட்டால் அப்போது படுக்கையில் சென்று படுத்ததும் சுகமான நித்திரை வந்து விடும். தனியாகப் படுத்தால்கூட மீண்டும் விழிப்பு ஏற்படாது" என்றாள்.

இரண்டு பெண்மணிகளும் ஒருவரையொருவர் சிறிது நேரம் நிலையாகப் பார்த்தபடி இருந்தனர். அவ்விளம் பெண்ணின் கொதிக்கும் உள்ளம் துன்பத்தினால் கசக்கிப் பிழிந்தெடுக்கப்படுவதை உணர்ந்த ஸ்ரீமதி ஊவின் உள்ளத்தில் கருணை வெள்ளம் புரண்டோடியது. ஊ குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதற்காக மட்டுமல்லாமல், அவளும் ஒரு பெண் என்ற முறையில் ஸ்ரீமதி ஊவின் உள்ளத்திலிருந்த ஆதரவும் அன்புமளிக்கும் சக்திகள் யாவும் திரண்டு வந்து அப் பெண்ணின் ஆத்மாவைக் குளிரச் செய்தன.

"உன் மனத்தை உன் வசப்படுத்தி விட்டாயானால் உனக்குச் சுதந்திரம் கிடைத்து விடுகிறது. இந்த நான்கு சுவர்களுக்குள்ளேயே நீ உலகெல்லாம் சுற்றித் திரிவது போன்ற சுதந்திரத்தை யடையலாம். அப்படி யில்லாமல், அவனுடைய நினைவை விடாது சதா சர்வ காலமும் மனத்தில் வைத்துக் கொண்டு நீ எவ்வளவு தொலைவில் தான் சென்று திரிந்தாலும், உனக்கு விடுதலை எங்கே கிடைக்கப் போகிறது? வாழ்க்கையின் வெள்ளப் பெருக்கில் உனக்குரிய ஸ்தானம் எது என்பதை அறிந்து கொள். அதை உன் மூலமாக தடை செய்யாது குளிர்ந்ததாகவும் சக்தியுள்ளதாகவும் பாயும்படி செய். உன்னுடைய கைகளால் அதை அணை போட்டு தடை செய்ய முயலாதே. அப்போது அவன் அவ்வணையை உடைத்து விட்டு உன்னிடமிருந்து தப்பிச் சென்று விடுவான். அவனைச் சுதந்திரமாகப் போக விடு. அப்போது நீயும் சுதந்திரமடைவாய்" என்று பகர்ந்தாள்.

"அவருடைய அன்பை யடையாமல் என்னால் வாழ முடியாது" என்றாள் ருலான் நடுமாற்றத்துடன்.

"அப்படியானால் இன்றிரவே சென்று தூக்குப் போட்டுக் கொள்" என்றாள் ஸ்ரீமதி ஊ அமைதியாக. "ஏனெனில் அவனை நீ முதலில் சுதந்திரமாகப் போக விட்டாலொழிய, அவன் உன்னை ஒரு நாளும் நேசிக்க மாட்டான். நான் வேண்டு மானால் ஆணையிட்டுச் சொல்கிறேன். சுதந்திர நிலையில்தான் காதல் வாழ முடியும்" என்றாள்.

"அவர் மட்டும் என்னைக் காதலித்தால் நான் அவருக்கு அடிமையாக இருப்பேன்" என்றாள் ருலான்.

"அடிமையாயிருப்பவள் நீயல்ல. உன்னுடைய அன்பின் மூலமாக நீதான் எஜமானியாக யிருக்க வேண்டுமென்று பார்க்கிறாய். அதை அவன் உணர்கிறான். ஆனால் அவ்விதம் ஏற்படுவதை அவன் அனுமதிக்க மாட்டான். நீ அவனை அளவுக்கு அதிகமாக நேசிப்பதால் அவன் அதிலிருந்து விடுபட விரும்புகிறான். ஐயோ, மூடப் பெண்ணே! சந்தோஷமாக வாழ்வது எப்படி என்பதை நான் உனக்கு எவ்விதத்தில் உணர்த்தட்டும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

ருலான் மண்டியிட்டுக் கீழே உட்கார்ந்தாள். "எனக்குப் புரிகிறது; நீங்கள் சொல்வதை நான் அறிகிறேன்...ஆனால்... அதைச் செய்வதற்கு எனக்குப் பயமாக இருக்கிறது" என்று விம்மினாள்.

ஆனால் ஸ்ரீமதி ஊ அவள் அழுவதை அனுமதிக்கவில்லை. "எழுந்திரு...எழுந்திரு" என்று கூறியவாறு அவள் எழுந்து ருலானைத் தூக்கி, எழுந்து நிற்கும்படிச் செய்தாள். பிறகு உறுதியான குரலில், "உனக்குப் பயமாயிருக்கிறதென்றால், என்னாலாவது இனி ஒன்றுமில்லை. இனி ஒருபோதும் என்னிடம் வராதே. உனக்காகச் செலவழிக்க இனி எனக்கு நேரமில்லை. ஆம்; நீ இவ் வீட்டை விட்டே திரும்பி வராமற் போவதென்றாலும் நான் உன்னை அனுப்பி விடுகிறேன்" என்றாள்.

உலமையற்றதும், எவருடைய சக்திக்கும் உட்படாததுமான தோன்றிய இந்த மெல்லிய உருவத்தைக் காணக் காண, தனது துடி துடிக்கும் நெஞ்சத்தின் கசப்பும் துன்பமும் குறைவதை உணர்ந்தாள் ருலான். தான் அறிந்த வரை, உணர்ச்சி வசப்படாமல் தனிமையில் வாழ்ந்து வந்த இப் பெண்மணி ஒருத்திதான் உண்மையில் சந்தோஷமாக இருப்பவள் என்று அவளுக்குத் தோன்றியது. அவளுடைய தாம்

வெடு வெடுப்பான சுபாவமும் திருப்தியடையாத மனமும் கொண்டவள். அவளுடைய சகோதரிகளும் அமைதியற்றவர் களாகவும் சச்சரவிடுபவர்களாகவும் இருந்தனர். ஆனால் ஷாங்காய் பெண்மணிகள் யாவருமே அமைதியற்றவர்களாய் தான் இருந்தனர். இந்த ஸ்ரீமதி ஹுவோ, மலையருவியின் கீழ் இருக்கும் குளத்தைப் போல் அவ்வளவு ஆழமும் அமைதி யும் குடி கொண்டவளாக யிருந்தாள்.

"நீங்கள் கூறிய விதமே நடக்கிறேன், அம்மா" என்றாள் அவள் பணிவுடன்.

அவள் சென்றதும் ஸ்ரீமதி ஹு தனக்குள்ளாகவே வியப் புடன் சிந்தித்தாள். அவள் தான் சிறிதும் விரும்பாத இந்த இரு பெண்மணிகளின் காரணமாக தனது பிள்ளைகள் இருவரை வெளி தேசத்திற்கு அனுப்பி விட்டாள். இவ்விதம் செய்ததன் மூலம் அவள் மேலும் இரண்டு பாரங்களைத் தன் மீது ஏற்றிக் கொண்டிருக்கிறாள்.

"நானே சுதந்திரத்திற்காக ஏங்கித் துடித்துக் கொண் டிருக்கிறேன்! இதில் இவர்களுக்கெல்லாம் வேறு விடுதலையைத் தர வேண்டுமாம்" என்று வியந்தாள்.

ஒன்றுக்கொன்று ஏறுமாறான இவ் விஷயங்களால் திகைத்துப் போன அவள், படுக்கையில் சென்று படுப்பதற் காகத் தன்னை தயார் செய்யும்படி இங்கைப் பணித்தாள்.

* * *

மறுநாள் சகோதரர் ஆண்ட்ரூ வந்தபொழுது, ஸ்ரீமதி ஹு, "எனக்கே என் நிலையைப் பற்றி என்ன கூறுவது என்று தெரியவில்லை" என்றாள். த்ஸேமோ போகப் போவதைப் பற்றி அவள் அவரிடம் கூறியிருந்தாள்.

அவர் புன்னகை புரிந்து, "கூற வேண்டியது அவசியம் தானா?" என்று கேட்டார்.

இப் புன்னகையை அவள் அநேக முறை கவனித்திருக் கிறாள். அவருடைய அடர்ந்த புருவத்திலும் தாடியினூடேயும் அது ஆரம்பித்து, காட்டில் ஒளி சிறிது சிறிதாகப் படர்ந்து செல்வதுபோல் அவருடைய முகத்தில் பரவிற்று. இம் மனித ருடைய பெரிய தலையும், பருமனான அவருடைய நெடிய உருவமும், ரோமம் அடர்ந்த உடலும் அவளை ஒரு சமயம் பயப்படச் செய்ததுண்டு. ஆனால் இப்போது அது அவளுக்குப் பழக்கமாகி விட்டது.

"நீங்கள் எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக் கிறீர்கள்?" என்று அவர் பாதி வேடிக்கையாகவும் பாதி கூச்சத்துடனும் கேட்டார்.

"இப் பூமியில் நாமெல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று நீங்கள் அடிக்கடி கூறுகிறீர்களே. ஆனால் உங்களுடைய உருவத்தைப் பற்றி நீங்கள் எவ்விதம் வியாக்கி யானம் செய்ய முடியும்?" என்று கேட்டாள்.

அவர் தமது சுபாவமான கூச்சத்துடன், "என்னிடம் அப்படி விசித்திரமானதை நீங்கள் என்ன கண்டீர்கள்?" என்று கேட்டார்.

"உங்கள் உருவம் மிகப் பெரிதாக யிருக்கிறது. மேலும் ரோமம் அடர்ந்ததாக யிருக்கிறது" என்றாள் அமைதியாக.

"உங்களால் தன்னைப் பற்றி விளக்கிச் சொல்ல முடிய வில்லை—ஆனால் என்னைப் பற்றி விளக்க முடிகிறது போலும்" என்று திருப்பிக் கேட்டார் அவர்.

அடர்ந்த காட்டில் தோன்றிய வெளிச்சம் இப்போது மிகவும் பிரகாசமாக யிருந்தது. அவருடைய கரிய தாடிக்கு மத்தியில் வெண்மையான பற்கள் ஒளி வீசின. கண்களில் குறுநகை தாண்டவமாடின.

"அயல் தேசத்தவர்கள் மயிரடர்ந்தவர்களாக இருப் பதற்குக் காரணம் அவர்கள் மிருக சுபாவம் படைத்திருப்பது தான் என்று நான் படித்திருக்கிறேன்" என்றாள் அவள்.

"இருக்கலாம்" என்று கூறிய அவர் தமது பெரிய வாயைத் திறந்து, கடகட வென்று உரக்கச் சிரித்தார். நள்ளிரவில் அவர் தனியே பிரம்பு கட்டிலின் மீது படித்துக் கொண்டிருக்கும் சமயங்களில், ஸ்ரீமதி ஹுவை, அவள் இளம் பெண்ணாகயிருந்தபோது தாம் பார்க்க நேரிடாததற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவார். 'ஆ, கடவுளே! அப்போது நான் ஒரு நாளும் என் ஆத்மாவைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தியைப் பெற்றிருக்க மாட்டேன்' என்று இருளில் தமக்குள்ளே முணுமுணுத்துக் கொள்வார். ஆனால் இப் போதோ அப் பெரிய சரீரத்தை அடக்கித் தம் வசப்படுத்தி விட்டார் அவர். அவனைப் பார்க்க வேடிக்கையாக மட்டும் இருந்தது அவருக்கு.

அவர் ஸ்ரீமதி ஹுவை நோக்கி, "அப்படியிருக்கும் பட்சத்தில், கடவுள் என்னைப் படைத்து விட்டுப் பிறகு,

உங்களை படைக்கும்போது, தமது முதல் சிருஷ்டியையே சீர்திருத்தி அமைத்திருக்க வேண்டும் அல்லவா?" என்று கேட்டார்.

இதற்கு அவளும் சிரித்து விட்டாள். அவருடைய நகைப்பின் பேரொலியும் அவளுடைய மணியடிப்பதைப் போன்ற மெல்லிய நகையும் சேர்ந்து ஒலித்தன. வெளியே வாசலில் ஒரு பணிப்பெண் ஸ்ரீமதி ஊவின் உள்ளே அணியும் பட்டாடைகளைத் துவைத்துக்கொண்டிருந்தாள். இங் அருகே நின்று கொண்டு அதை எப்படி செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள். அப் பெண் ஆச்சரியத்துடன் முகத்தை உயர்த்திப் பார்ப்பதைக் கவனித்தாள் இங்.

"சில்க் துணியின் மீது சோப்பை உறையாதே, பிச்சைக் காரப் பிணமே! உன் வேலையில் கவனம் வைத்துச் செய்" என்று கத்தினாள் இங். ஆனால் அவளுக்கும் அதிசயம் உண்டாகாமற் போகவில்லை. அந்த கரிய நிறம் படைத்த நெடிய பாதிரியால், தன் எஜமானியை எவ்விதம் இவ்வளவு குதூகலத்துடன் சிரிக்க வைக்க முடிகிறது என வியந்தாள். தான் இவ்விதம் வியப்படைவதை அவள் உணராமற் போக வில்லை.

வீட்டில் பல தொல்லைகள் நேர்ந்த போதிலும் ஸ்ரீமதி ஊ தனிமையில் காணும் ஏதோ ஒரு இன்பத்தினால் பூரிப்படைந்து வந்தாள் என்பது என்னவோ வாஸ்தவம் தான். ஒவ்வொரு நாளையும் அவள் புதிய இன்பத்துடனும் ஆவலுடனும் எதிர் நோக்கினாள். வீட்டு வேலைகளினால் அவளுக்கு எரிச்சல் உண்டாயிற்று. ஆனால் அவள் அதை அடக்கிக் கொண்டு ஒவ்வொரு கடமையையும் ஒழுங்குடனும் உறுதியுடனும் கவனித்து வந்தாள். ஆனால் தன்னுடைய எஜமானியின் ஒவ்வொரு சுவாசத்திலும் ஏற்படும் மாறுதலைக் கூட அறிந்து வைத்திருந்த இங், வீட்டுக் கடமைகளில் அவளுக்கிருந்த உற்சாகமெல்லாம் என்றோ பறந்தோடி விட்டது என்பதை நன்கு உணர்ந்தாள்.

அந்தப் பாதிரியார் ஸ்ரீமதி ஊவுடன் நீய வழியில் தொடர்பு கொண்டிருப்பார் என்று ஒரு கணம்கூட எண்ண அவள் துணியவில்லை. எஜமானியோ மிக திடசித்தம் படைத் தவள். அதுவுமன்றி அவள் முன்னைக் காட்டிலும் அதிக பற்றற்றவளாயும், மனவுறுதி அதிகம் கொண்டவளாகவும் காணப்பட்டாள். அவளுடைய கண்களில் அதிகத் தெளிவு காணப்பட்டது. அவளுடைய நடத்தையிலும் அதிக தன்னம்

பிக்கை காணப்பட்டது. இத்தனையிருந்த போதிலும் அவள் முன்னைவிட இப்போது அதிக இன்பத்தை அடைந்து வந்தாள் என்பதும் புலப்பட்டது. ஒரிரண்டு நாட்கள் சகோதரர் ஆண்ட்ரூ வர முடியாமற் போக நேரிட்டு அவளுக்கு செய்தி அனுப்பி விட்டபோது, இங் அவளை உன்னிப்பாகக் கவனித்து வந்தாள். ஸ்ரீமதி ஊவின் நடத்தையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. அவள் தன்னுடைய குருநாதர் அன்று உட்கார்ந்திருக்கும்போது இருப்பது போலவே, அன்றும் தனியே இன்பத்தில் மூழ்கியவளாய் அமர்ந்திருப்பாள். இதை யெல்லாம் எவ்விதம் விளக்கிச் சொல்ல முடியும்?

அப் பணிப்பெண் கனைத்துக் கொண்டாள். "ஊ குடும்பம் கூட ஆரம்பித்து விட்டது! நீ கேள்விப் பட்டாயா?" என்றாள் ரகசியக் குரலில்.

இங் கோபத்துடன், "என்னத்தைக் கேட்டாயா? பூனைகள் ஒலமிடுவதை நான் ஒருபோதும் கவனிப்பதில்லை" என்றாள்.

"நம்முடைய எஜமானி இங்கு உட்கார்ந்து ஒரு பாதிரி யிடம் கல்வி பயின்று கொண்டிருக்கும்போது, எஜமானர் பாட்டுக்கு உல்லாச விடுதிகளுக்குச் சென்று கொண்டிருக் கிறார். இதை நீ அறிவாய் என்று எண்ணுகிறேன்" என்றாள் அப் பெண்.

"அவர் போவதில்லை" என்றாள் இங் திண்ணமாக.

அவள் ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அவள் குனிந்து அப் பெண்ணின் கன்னத்தில் ஒரு அறை அறைந்தாள். அப் பெண்ணினுடைய கன்னம் சிவந்து போயிற்று. ஆனால் அவள் கண்கள் பளபளக்க, தன்னுடைய மறு கன்னத்தைக் காட்டினாள்.

"எனக்கு இன்னொரு அறை வேண்டுமானாலும் கொடு. ஏனெனில் அவர் போகிறார் என்பது உண்மைதான். கிழட்டு கேங்கும் அவருமாகச் சேர்ந்து போகிறார்கள். இதற்கு என்ன சொல்கிறாய் நீ?" என்றாள்.

இப்போது இங் தானென்றும் கேள்விப்படாததுபோல் பாசாங்கு செய்த போதிலும், முன்பே அவள் காதிலும் மற்றவர்கள் கசமுச வென்று பேசிக்கொண்ட இவ்விஷயம் விழுந்திருந்தது. மற்ற வேலைக்காரர்களுக்கு அவளிடம் இருந்த பயத்தினால் அவளெதிரே யாரும் அதைப் பற்றி வெளிப்படையாகப் பேசத் துணியவில்லை. இவள் சென்றதுமே

அவர்களுடைய பேச்செல்லாம் அடங்கி விடும். அவள் தனக்குள்ளாகவே, 'அந்தக் கிழட்டு கேங் இருக்கிறதே, அதுதான் இந்த விஷமத்திற்கெல்லாம் காரணம்!' என்று எண்ணிக் கொண்டாள். ஆண்களின் தன்மையைப் பற்றியும் தன்னுடைய சொந்த புருஷனிடம் கூடத்தான் இனி அதிக உயர்ந்த குணங்களை எதிர்பார்க்கக் கூடாது என்றும் விசனத்துடன் எண்ணமிட்டாள் இந்.

அவ்வமைதியான அறையில் அமர்ந்திருந்த ஸ்ரீமதி ஊ தனது குடும்பத்தையே முற்றிலும் மறந்து விட்டாள். வெய்யிலினால் கறுத்திருந்த சகோதரர் ஆண்ட்ரூவின் முகத்தை நோக்கியபடியே உட்கார்ந்திருந்தாள். அவளுடைய ஆவல் மிகுந்த பார்வையால் மிக உற்சாகமடைந்த அவர், அவளுக்கு, வேறு ஒருவருக்குமே தாம் போதிக்காத அளவு, கல்வி போதித்தார். அவளுடைய ஆன்மா மிக்க பரிசுத்தமானதாகவும் யாவற்றையும் கிரகித்துக் கொள்ளக் கூடியதாயும் இளமை நிறைந்ததாயும் இருந்தது. இந்த வீட்டிலேயே வாழ்ந்து வாழ்ந்த அவள் தனது சொந்த வாழ்க்கையின் மூலமாக எவ்வளவோ விஷயங்களைக் கற்றிருந்தாள். அவளுடைய அறிவு முற்றி நல்ல பக்குவமடைந்திருந்தது. அவளுடைய மனம், ஒரு பளிங்கு கிண்ணத்தை ஒத்திருந்தது. அதன் வேலையெல்லாம் பூர்த்தியாகி அது நன்கு உருவாக்கப்பட்டு விட்டது. அதை நிரப்ப வேண்டியதுதான் பாக்கி.

தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் அவளுக்குப் போதிக்காதிருக்க அவரால் எங்ஙனம் கூடும்? அந்த அழகிய கிண்ணத்திற்குள் அவர் தமது அறிவாகிய ஊற்றிலிருந்து எடுத்த அமுதத்தைப் பொழிந்தார். இதுவரை அவர் அவற்றையெல்லாம் தாமே வைத்துக்கொண்டிருந்தார். ஏனெனில் அதை அவருடன் பகிர்ந்து கொள்ள எவரும் முன்வரவில்லை. அவர் அவளுக்கு உலகச் சரித்திரத்தைப் புகட்டினார். மனிதர்களின் எழுச்சிகளைப் பற்றியும் வீழ்ச்சிகளைப் பற்றியும் புதிய தேசங்கள் உருவாகியதைப் பற்றியும் கூறினார். மின்சாரமும் ரேடியமும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் கூறினார். காற்றில் இருக்கும் அலைகளைப் பற்றியும், எவ்விதம் ஒருவனுடைய பேச்சு சங்கீதம் இவை உலக முழுமைக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது என்பதையும் விவரித்துக் கூறினார்.

"இம்மாதிரி சப்தங்களையும் பாட்டுக்களையும் பிடிக்கும் படியான கருவி உங்களிடம் இருக்கிறதா?" என்று விசாரித்தாள் அவள்.

"ஆம். இருக்கிறது. நானே அக் கருவியைச் செய்தேன்" என்றார் அவர்.

அவள் ஆவலுடன், "அதை எனக்குக் கொண்டுவந்து காண்பிக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

அவர் தயங்கினார். "ஆ, அது முடியாதே. அது பலகம்பிகளுடன் சுவரோடு இணைக்கப் பட்டிருக்கிறது. தாங்கள்—என்னுடைய சிறிய குடிலுக்குவந்து அதைப் பார்க்கிறீர்களா?" என்று கேட்டார் பதிலுக்கு.

அவள் யோசித்தாள். ஒரு அந்நியருடைய வீட்டிற்கு யாராவது கூடவந்த போதிலும், எப்படி அவள் செல்லமுடியும்? அவளுக்கு திடீரென்று சிறிது கூச்சம் உண்டாயிற்று. "பார்க்கலாம்" என்று கூறிவிட்டுத் தனது தலையை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

"நீங்கள் கலவரமடையாதீர்கள். என்னிடம் தங்களைக் கலவரமடையச் செய்யும்படியாக ஒன்றுமில்லை. இவ்வீட்டில் குடியிருந்த மனிதன் என்றோ இறந்துவிட்டான். கடவுள் அவனைக் கொன்றுவிட்டார்" என்று கூறினார்.

இவ்விசித்திரமான வார்த்தைகளைக் கூறிவிட்டு அவர் சென்றுவிட்டார். அவர் சென்றதும் அவள் மனம் எப்பொழுதும் அமைதியுறுவது போல் அன்றும் அமைதியுற்றது. அவர் அவளுடைய மனத்தில் எவ்வளவோ விஷயங்களைத் திணித்துவிட்டுப் போயிருந்தார். அவள் புன்னகை தவழ, தனது சிறு புகைக் குழாயினால் புகை பிடித்தவாறு சிந்தனையில் ஆழ்ந்தாள். அவர் கூறிவிட்டுச் சென்ற பொருட்களை நாடி அவள் மனம் உலகெலாம் சுற்றித் திரிந்தது.

அவள் தனது மனத்திற்குள், 'நான் என்றுவது இந்நகரத்தைக் கடந்து வெளியே செல்வேனா? அந்தக் கப்பல்களில் ஏறிக் கடலில் செல்லும் பாக்கியமும், அவ்விமானங்களில் ஏறிப் பறந்து செல்லும் பாக்கியமும் எனக்கு என்றேனும் கிடைக்குமா?' என்று எண்ணி வியந்தாள்.

இப்போதுதான் முதன்முறையாக, அவளுக்கு வாழ்க்கையின் குறுகிய காலத்தை எண்ணி வருத்தம் உண்டாயிற்று. அதிகமாகப் போனால், அவள் இன்னும் நாற்பது வருஷகாலம் ஜீவிக்கலாம். நாற்பது வருஷங்களில் என்ன என்ன செய்து விட முடியப்போகிறது? ஏற்கெனவே நாற்பது வருஷங்களை அவள் தனது வீட்டிற்குள்ளேயே இருந்து கழித்துவிட்டாள்.

'என்னுடைய சொந்த பட்டணத்தைப்பற்றி மட்டும் எனக்கு என்ன தெரியும்? மேலும் இக் கடல்களுக்கும் மலைகளுக்குமிடையே அமைந்திருக்கும் நமது தேசம் வேறு இருக்கிறது' என்று எண்ணமிடலானாள். இவ்விதம் உலகைச் சுற்றிவர வேண்டும் என்ற பேரவா அவளை ஆட்கொண்டது.

நாட்கள் ஒவ்வொன்றுகச் சென்றுகொண்டிருந்தன. அவள் முகத்தில் புன்னகை தவழ, எதிலும் பற்றற்றவளாய் தனது குடும்பத்தை வளைய வந்துகொண்டிருந்தாள். சாப்பிடும் நேரங்களில் எல்லோரும் ஒன்று கூடுவார்கள். அவள் தனது வழக்கமான இடத்தில் எல்லோருக்கும் நடுவில் அமர்வாள். எல்லோரையும் அவள் கண்கள் நோக்கினவேதவிர அவள் ஒருவரையுமே பாராதவளாகத்தான் காணப்பட்டாள்.

இதைக் கண்ட இங் ஒருநாள் அவளை மிகவும் கடிந்து கொண்டாள். இங், எஜமானியின் நகைகளையெல்லாம் தேய்த்துக் கழுவிக்கொண்டிருந்தாள். குளிர்காலம் ஆரம்பித்துச் சிறிது நாட்களாகி யிருந்தன. ஸ்ரீமதி ஊ மேஜையருகே உட்கார்ந்து, பளிங்கு கற்கள் நிரம்பிய ஒரு பாத்திரத்தில் அல்லிப் புஷ்பங்களைப் பொதிந்து வைத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் ஜன்னல் கம்பிகளின் வழியே வந்த சூரிய வெளிச்சம் அப்புஷ்பங்களின் மீதும் ஆபரணங்களின் மீதும் விழுந்தது.

"இங்கு பார்! எவ்விதம் இந்தப் புஷ்பங்களும் நகைகளும் ஒன்றுபோல் காணப்படுகின்றன! முத்துக்களும் மரகதங்களும் புஷ்பராகங்களும், இந்த மஞ்சள், வெள்ளை, பச்சை வர்ண அல்லிகளைப் போலவே காணப்படுகின்றன அல்லவா!" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

இங் கழுவிக் கொண்டிருந்த வளையல்களிலிருந்து தன் பார்வையை மேலே உயர்த்தினாள். "அம்மா, இந்த விஷயங்களை யெல்லாம் கவனிப்பதில் நீங்கள் மிகவும் துடியாகத்தான் இருக்கிறீர்கள்! உங்கள் வீட்டில் என்ன நடக்கிறது என்பதை உங்களால் பார்க்க முடியாமற் போனதுதான் அதிசயமாக யிருக்கிறது" என்றாள்.

"நான் என்னத்தைப் பார்க்கவில்லை?" என்றாள் அவள் குற்றம் செய்துவிட்டவளைப்போல். அவளுக்கு முதலில் அவளுடைய இரண்டு நாட்டுப் பெண்களின் நினைவுதான் வந்தது.

"நம் எஜமானர்" என்றாள் இங்.

"அவருக்கென்ன?" என்றாள் ஸ்ரீமதி ஊ வேகத்துடன்.

"உல்லாச விடுதிகள்" என்றாள் இங் சுருக்கமாக.

"அவர் ஒருக்காலும் போகமாட்டார்!" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இங் வற்புறுத்தலோடு, "ஆம். அவர் போகிறார். அது ஒன்றும் பெரிய காரியமல்ல. ஏனெனில் அநேகம் பேர் அப்படித்தானே செய்கிறார்கள்! ஆனால் இங்கு இருக்கத்தகாத ஒன்றை அவர் பிடித்து இழுத்துக்கொண்டு வந்துவிட்டால் என்ன செய்வது?" என்றாள்.

ஸ்ரீமதி ஊ ஒருகணம் தீவிரமாக யோசித்தாள். "இரண்டாவது எஜமானியை நான் இங்கு வரச்சொன்னதாகச் சொல்" என்றாள்.

இங் எழுந்து, மிக முக்கியமான செய்தியைக் கொண்டு போகும் கம்பீரத்துடன் வெளியே சென்றாள். ஸ்ரீமதி ஊ நகைகளை எடுத்து ஒவ்வொன்றுகப் பார்க்க ஆரம்பித்தாள். அவ்வகையல்களைத் தவிர மற்ற எல்லா நகைகளும் ஸ்ரீமான் ஊவைப் பற்றிப் பேசின. வளையல்கள் கல்யாணத்தின்போது அவளுடைய தாயாரால் பரிசளிக்கப்பட்டவை. இந்த மரகதத் திலுலான காதணிகள், கல்யாண தினத்தின் இரவு கழிந்த மறுநாள் காலை, தமக்கு அவளிடத்தில் எவ்வளவு இன்பம் உண்டாயிற்று என்பதைக் காண்பிப்பதற்காக அவர் அவளுக்கு அளித்தவை. இந்த கோமேதக மோதிரம், அவர் ஷாங்காயிலிருக்கும் ஒரு வெளிநாட்டுக் கடையிலிருந்து வாங்கி வந்தது. அதுவரை அவள் கோமேதகத்தைப் பார்த்ததில்லை. இந்த வைர கற்கள் பொதிந்த பட்சியோ, அவர் மற்றொரு முறை ஷாங்காயிலிருந்து வாங்கி வந்தார். அதுவரை அவள் வைரத்தைப் பார்த்ததில்லை. இந்தச் சிவப்பு கற்கள் வைத்த ஆபரணம் அவர் வெகு தூரத்திலிருந்த ஒரு மாகாணத்திலிருந்து வாங்கி வந்தது. இம்மரகதம் வைத்த கொண்டை ஊசிகள் யுன்னனிலிருந்து அவரால் வாங்கி வரப்பட்டவை.

மற்றும் இருந்த சிற்சில சிறிய நகைகள் அவனாகவே வாங்கியவை. அபூர்வமாக சிற்சில சமயங்களில் நகை வியாபாரிகளை அவள் வீட்டிற்குள் வரவழைப்பதுண்டு. அவன் தனக்காக ஏப்போதும் வாங்கிக் கொண்டதில்லை. வெள்ளியினால் மயிரிழையைப் போன்று செய்யப்பட்ட

சிறிய பச்சைக் கற்கள் வைக்கப்பட்ட பட்டுப் பூச்சியைப் போன்ற இரு கொண்டையூசிகள் அவளுடைய கவனத்தைக் கவர்ந்தன. அன்றொரு நாள் பெண்கள் எல்லோரும் கூடி பட்டுப் பூச்சிகளைப் பிடித்துக் கதவுகளில் குத்திவைத்ததை அவை நினைவூட்டின. அவ்வூசியை தனது கையில் மீண்டும் மீண்டும் திருப்பியவாறு உட்கார்ந்திருந்தாள். அவ்வூசி கான்டனில் செய்யப்பட்டது. மிக நாசூக்காகவும் அழகாகவும் செய்யப்பட்டிருந்தது. பட்டுப் பூச்சியின் தேன் உறிஞ்சும் சுழல் மயிரிழை போன்ற வெள்ளிக் கம்பிகளால் செய்யப் பட்டிருந்தது. அது, ஆடியபோது அப்பட்டுப் பூச்சி உயிரோடு இருப்பதுபோல் காணப்பட்டது.

இச்சமயம் சியூமிங் உள்ளே வந்தாள். அவளுடைய வயிறு மிகவும் பருத்திருந்தது. அவளுடைய முகம் சற்று மாறுதலடைந்து காணப்பட்டது. கண்கள் முன்னிலும் பெரியதாகவும் உதடுகள் சிவந்தும் காணப்பட்டன.

ஸ்ரீமதி ஊ அப் பட்டுப்பூச்சிகளை நீட்டி, "நான் இவைகளை உனக்குக் கொடுத்து விடுகிறேன். நான் இவற்றை இப்போது உபயோகிப்பதில்லை" என்று கூறினாள்.

சியூமிங் கையை நீட்டி அவற்றைப் பெற்றுக்கொண்டு அவற்றை மௌனமாக ஆராய்ந்தாள். "இவை மிக மிக அழகாகயிருக்கின்றன. இவற்றை எப்படி அணிந்துகொள்வது என்பதுகூட எனக்குத் தெரியாது" என்றாள்.

"இருந்தாலும் இவற்றை வைத்துக்கொள்" என்றாள் ஸ்ரீமதி ஊ. அவள் பெட்டியிலிருந்த நகைகளை ஒரு விரலால் புரட்டி விட்டுக்கொண்டிருந்தாள். ஸ்ரீமான் ஊ கொடுத்த நகைகள் யாவற்றையும் சியூமிங்கிற்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற அவா எழுந்தது அவளுக்கு. ஆனால் தான் அவ்விதம் செய்யக்கூடாது எனபது அவளுக்குத் தெரியும்! அப்போது சிவப்புக் கற்களாலும் முத்துக்களாலும் செய்யப் பட்ட இரண்டு புஷ்பங்கள் அவளுடைய கண்களில் தென் பட்டன. அவை வட்டவடிவமாக சாதாரண வேலைப் பாடுடன் செய்யப்பட்டிருந்தன. "இதோ, இவைகளைக்கூட நீ எடுத்துக்கொள். இவை உனக்கு மிக அழகாகயிருக்கும். அவர் உனக்கு நகைகள் கொடுக்கிறார் என்று நினைக்கிறேன்" என்றாள்.

சியூமிங் மெதுவாக, "இல்லை, ஆனால் நகைகள் வேண்டு மென்று நான் விரும்பவில்லை" என்றாள்.

ஸ்ரீமதி ஊ தனது சிறிய புகைக் குழாயை நிரப்பி இரு முறை புகை இழுத்துவிட்டு மேஜைமீது வைத்தாள். அதி லிருந்து சிறிது சாம்பல் மேஜைமீது விழுந்தது. சியூமிங் முன்னால் குனிந்து அதைத் தனது கையில் தள்ளி விட்டுக் கொண்டாள்.

"இப்போது அவர் உல்லாச விடுதிகளுக்குச் செல்ல ஆரம்பித்து விட்டாராமே?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

சியூமிங்கின் முகம் சிவந்துவிட்டது. அவள் மிகச் சாதாரணமாக "அவர் போகிறாரென்றுதான் நான் கேள்விப் படுகிறேன். ஆனால் அவர் என்னிடம் ஒன்றும் கூறுவதில்லை" என்றாள்.

"இவற்றையெல்லாம் நீயாகவே கவனித்துக் கொள்ளக் கூடாதா? அவர் உன்னிடம் எவ்வளவு தூரம் அன்பு கொண் டிருக்கிறார்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

சியூமிங் கீழே நோக்கினாள். "அது எவ்வளவாக யிருந் தாலும் எனக்கு அது அதிகமாகத்தானிருக்கிறது. ஏனெனில் என்னால் அவரை நேசிக்க முடியவில்லை" என்றாள்.

இவ்வார்த்தைகளைச் சோகம் நிறைந்த ஓர் உறுதியுடன் கூறினாள் அவள். இவற்றைச் செவியுற்ற ஸ்ரீமதி ஊவின் இதயத்தில் அவளே அதிசயிக்கும்படி ஸ்ரீமான் ஊவின்பால் பேரிரக்கம் உண்டாயிற்று.

"நானும் நீயும் இருவருமாகச் சேர்ந்து அவருக்குப் பெருத்த தீமையைச் செய்து விட்டோம். நான் என்னுடைய வயதாலும், நீ உன்னுடைய இளமையாலும் திங்கிழைத்து விட்டோம்! நீ அவரை நேசிக்க முயற்சித்தாயா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

சியூமிங் தன்னுடைய கரிய, உண்மை நிறைந்த விழிகளை உயர்த்தினாள். "ஓ, நான் முயற்சித்தேன். அது என் கடமை யில்லையா?" என்றாள்.

"அது உன் கடமைதான், வாஸ்தவம்" என்றாள் ஸ்ரீமதி ஊ எகத்தாளமாக.

"அதுதான் என் கடமை என்பது எனக்குத் தெரியும்" என்று கூறிய சியூமிங் மேலும், அதே பணிவும் சோகமும் நிரம்பிய குரலில், "நான் அவருக்கு எல்லா விதத்திலும் பணிந்து நடக்கிறேன். அதைத்தான் என்னால் செய்ய முடி கிறது" என்றாள்.

அடுத்தபடியாக ஸ்ரீமதி ஊ, "நீ அவரை நேசிக்கவில்லை என்பது அவருக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஆம். அவர் என்னைக் கேட்டார். நான் சொல்லிவிட்டேன்" என்றாள் சியூமிங்.

"ஐயோ, மூடப் பெண்ணே. அதுதான் நீ செய்திருக்கக் கூடாது! எல்லாப் பெண்களும் இம்மாதிரி புருஷர்களிடம் உண்மையைப் பேச ஆரம்பித்துவிட்டால் என்னவாகும்?" என்று மொழிந்தாள் ஸ்ரீமதி ஊ.

"நான் ஒரு முட்டாள்" என்றாள் சியூமிங்.

"ஆதலால் அவர் இப்போது உல்லாச விடுதிகளுக்குப் போய்விடுகிறாராக்கும்" என்று சிந்தனையுடன் கூறிய ஸ்ரீமதி ஊ ஒரு நீண்ட பெருமூச்செறிந்தாள். "நல்லது, ஆண் பெண்களுக்குள் ஏற்படும் சண்டைகளுக்குத்தான் ஒரு முடிவு ஏது? உனக்குக் குழந்தை எப்போது பிறக்கும்?" என்று கேட்டாள்.

"அடுத்த மாதம்" என்றாள் சியூமிங்.

ஸ்ரீமதி ஊ சட்டென்று "உனக்கு அது மகிழ்ச்சியைக் கொடுக்கின்றதா?" என்று கேட்டாள்.

சியூமிங் பதில் பேசாத நேரங்களிலெல்லாம் எப்போதும் கைகளை மடியில் லேசாகக் கோர்த்து வைத்தவாறு தோளைக் குறுக்கியவாறு, கண்களைத் தாழ்த்திக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். அவளிடம் ஏதாவது கூறப்பட்டபோது அவளுடைய கைகள் இறுகின. கண்கள் உயர்ந்தன.

"அதன் மூலமாக இவ்வீட்டில் எனக்கு சிறிது உரிமை ஏற்படக்கூடும்" என்று அவள் கூறிவிட்டு மீண்டும் கண்களைத் தாழ்த்திக்கொண்டாள்.

ஸ்ரீமதி ஊவிற்கு இனி அவளிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியது ஒன்றுமில்லையென்று தோன்றியது. "நீ திரும்பிப் போ. நான் அவரைப் பார்த்துப் பேசி அவருடைய மனம் எங்கிருக்கிறது என்பதை அறிகிறேன்" என்றாள்.

சியூமிங் எழுந்து, அவளுடைய பொறுமையும் எளிமையும் ததும்பிய பாணியில் அவளுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுச் சென்றாள். அடுத்த கணம் அவள் மீண்டும் திரும்பி வந்தாள். அவள் தனது கையில் வைத்திருந்த நகைகளைக் காட்டி, "நான் இதற்காக உங்களுக்கு நன்றி செலுத்த மறந்து விட்டேன்" என்றாள்.

"எனக்கு நீ நன்றி செலுத்த வேண்டியதில்லை. நீ இவற்றை அணிந்துகொண்டால் அதுவே எனக்கு நன்றி செலுத்துவதாகும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"என்னால் தங்களுக்கு நன்றி செலுத்தாது இருக்க முடியாது அக்கா" என்று கூறிவிட்டு சியூமிங் மறுபடியும் சென்றுவிட்டாள்.

அன்று ஸ்ரீமதி ஊ, சகோதரர் ஆண்ட்ரூவிற்கு ஏதோ காரணம் கூறி அனுப்பிவிட்டாள். பின், இரவுச் சாப்பாட்டிற்கு முன்பாக ஸ்ரீமான் ஊவிற்குத் தான் அவரைப் பார்க்க வருவதாக இங் மூலமாக தகவல் கொடுத்து அனுப்பினாள். அச்செய்தியைக் கேட்ட அவர் விரைந்து தாமாகவே அவளிடம் வந்தார்.

"உனக்குச் சிரமம் கூடாதென்று நானே வந்து விட்டேன். என்னுடைய பிள்ளைகளின் தாயே" என்றார் மரியாதையுடன்.

அவர் சிறிது இளைத்து முன்னைவிட வெளுத்துப்போய் காணப்பட்டதைக் கண்டு அவள் துணுக்குற்றுத் தன்னையே நொந்துகொண்டாள். அவள் எழுந்து அவருக்கு முகமன் கூறியதும் இருவரும் அமர்ந்து கொண்டனர். அவரைப் பார்க்கப் பார்க்க அவளுடைய உள்ளத்தில் கவலை அதிகரித்தது. அவரது உடல்நிலை நன்றாகயிருப்பதாகக் காணப்படவில்லை. எப்போதும் பளபளவென்றும் துருதுருவென்றும் இருக்கும் அவருடைய கண்கள் மங்கிப் போயிருந்தன. அவருடைய உதடுகள் வெளுத்திருந்தன.

"உங்களைப் பார்த்தால் சௌக்கியமாக இருப்பதாகத் தெரியவில்லை. உங்களுக்கு உடம்பு சுகமில்லையா?" என்று கேட்டாள்.

"அப்படி ஒன்றுமில்லையே" என்றார் அவர்.

"இல்லை, உங்கள் உடம்பு சரியாகத்தானில்லை" என்றாள் அவள் மீண்டும்.

"இல்லை நன்றாகத் தானிருக்கிறேன்" என்று பதிலளித்தார் அவர்.

"இரண்டாவது எஜமானி...?" என்று விசாரித்தாள் அவள்.

"அவளால் முடித்ததை அவள் எனக்குச் செய்கிறாள்."

"ஆனால் அவளால் உங்களுக்குச் சுகம் உண்டானதாகத் தெரியவில்லை."

ஸ்ரீமான் ஊ குழப்பமடைந்தவராய், "ஒன்று சொல்கிறேன். என்னுடைய பிள்ளைகளின் தாயே, ஒரு இளம் பெண்ணுக்கு அது ஒரு கடினமான காரியம் தானே. நான் இன்னும் ஒரு வாலிபனல்லவே" என்றார்.

அவள் உண்மையைக் கழுத்தைப் பிடித்து வெளியே கொண்டு வந்து விடுவதற்குத் தீர்மானித்துக் கொண்டாள். "ஆனால் நீங்கள் உல்லாச விடுதிகளுக்குச் செல்வதாக நான் கேள்விப் படுகிறேன்" என்றாள்.

அவர் தமது உடலைக் குலுக்கிக் கொண்டாரே யொழிய, சிறிதாவது வெட்கமடைந்ததாகத் தெரியவில்லை. "ஆம். கேங்குடன் சேர்ந்து சில சமயம் போகிறேன். பெண்களை, அவர்கள் நம்மை நேசிக்கவேண்டும் என்று எதிர்பாராமல், பேசாமல் விலைகொடுத்து வாங்கிவிடுவது சுலபமான காரியமாகயிருக்கிறது. இதில் ஒன்றும் வெளிவேஷமும் பாசாங்கும் இருப்பதில்லை. ஒரு விஷயத்தை மேலுக்காகப் பண்ணுவதுதான் மிகவும் சிரமமாக யிருக்கிறது. நான் உன்னிடம் ஒரு வித பாசாங்கும் செய்யவில்லை. ஏய்லியன், உண்மையிலேயே உன்னை நான் மிகவும் நேசித்தேன். இந்த இரண்டாவது பெண்ணுடன்—என்னால் அவளை நேசிக்கவும் முடியவில்லை. நேசிக்காமலிருக்கவும் முடியவில்லை..." என்று கூறிய அவர் திகைப்புடன் தமது தலையைவிடாமல் தடவிக்கொண்டே யிருந்தார். "பேசாமல் உல்லாச விடுதிகளுக்குச் சென்று விடுவது மிகவும் சுலபமாக யிருக்கிறது" என்றார்.

"அடுத்தமாதம் உங்களுக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது!" என்று அவருக்கு நினைவூட்டினாள் அவள்.

"ஆம். நல்லது" என்று கூறிவிட்டு மீண்டும் அவர் திகைப்புடன் தமது தலையைத் தேய்த்துக்கொண்டார். "இதில் வேடிக்கை என்னவென்றால் எனக்கு அது என் குழந்தையாகவே தோன்றவில்லை. அதுவுமல்லாமல், உனக்கும் எனக்குமாகத்தான் நான்கு பிள்ளைகள் இருக்கின்றார்களே" என்றார்.

அவள் சிறிது நேரம் கழித்து, "இந்த சியூமிங்கினால் ஒரு வித உபயோகமும் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது" என்றாள்.

அவர் மீண்டும் தனது தலையைத் தேய்த்துக் கொண்டார். "ஆம். அவளால் ஒரு பயனுமில்லைதான்" என்று ஆமோதித்தார்.

"நீங்கள் அவளை நன்றாக நடத்தவில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன்" என்றாள் அவள் கடுமையாக.

அவர் மன்னிப்புக் கோறும் முறையில் அவளைப் பார்த்து, "நான் அவளிடம் மிகவும் அன்பாக யிருக்கிறேன்" என்றார்.

"நீங்கள் அவளுக்கு ஒன்றுமே பரிசளிக்கவில்லையே" என்றாள்.

அவர் ஆச்சரியமடைந்தவராய் காணப்பட்டார். "ஆம். அது உண்மையே. நான் மறந்துவிட்டேன். நான் அவளை அடியோடு மறந்து விடுகிறேன்" என்றார்.

ஸ்ரீமதி ஊ பொறுமையிழந்தாள். "சொல்லுங்கள், நீங்கள் ஒரு பெண்ணிடம் என்னத்தை விரும்புகிறீர்கள்?" என்றாள்.

அவர் குழப்பமடைந்தவராய் "எந்தப் பெண்ணிடம்?" என்று கேட்டார்.

"எந்தப் பெண்ணிடமும்தான்" என்றாள் அவள்.

அவள் பொறுமையிழப்பதை உணர்ந்த ஸ்ரீமான் ஊ, எப்போதும்போல் அவளைத் திருப்தியுறச் செய்வதில் ஆவலுள்ளவராய், அவ்விஷயத்தில் தமது மனதைச் செலுத்தினார்.

"நல்லது. நான்..." என்று ஆரம்பித்தார். ஆனால் தாம் ஆரம்பித்தது அவ்வளவு நன்றாகயில்லை என்று எண்ணியவராய் மீண்டும் ஆரம்பித்தார். "நான் ஒரு பெண்ணிடம் வேண்டுவது அதிகம் ஒன்றுமில்லை. நான் வேண்டுவது இதுதான். அதாவது...எனக்கு நன்றாகச் சிரிக்கவேண்டும்...இதுதான் உனக்குத் தெரியுமே. கேட்பதற்குச் சுவாரஸ்யமாக ஏதாவது சொல்லவேண்டும். நீ என்னிடம் எத்தனை விஷயங்களைப் பற்றி வேடிக்கையாகப் பேசுவாயே. நீ சொல்வதற்கெல்லாம் நான் எவ்வளவு சிரிப்பேன், என்பதைத்தான் நீ அறிவாயே! ஆம். இதுபோல்தான்..." என்று இழுத்து விட்டு நிறுத்தினார்.

"வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு வேடிக்கை காட்டிக் கொண்டிருக்க முடியாதே, என்னால்" என்றாள் அவள் கூடவே.

"ஆம். அது முடியாதுதான்" என்று அங்கீகரித்த ஸ்ரீமான் ஊ, "அதனால்தான் பார், நான் உல்லாச விடுதிகளுக்குச் சென்று விடுகிறேன்" என்றார்.

"அங்கு என்ன நடக்கிறது?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. தன் உள்ளத்தில் அதைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டதைக் கண்டு அவளுக்கே ஆச்சரியம் உண்டாயிற்று.

"அதிகம் ஒன்றுமில்லை. எப்போதும் எங்களுக்கு ஏதாவது சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும் கொடுப்பார்கள். பெண்கள் எல்லோரும் ஏதாவது வாசிப்பார்கள். நாங்கள் சீட்டாடிக் கொண்டிருப்போம்" என்றார்.

"பெண்களா? அங்கு எத்தனை பேர் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஐந்து, ஆறு பேர்—அதாவது அப்போதைக்கு வேலையில்லாமல் இருப்பவர்கள்...கேங்கும் நானும் இளகிய மனம் படைத்தவர்களாதலால் அவர்கள் எப்போதும்..." என்று கூறிய அவரது குரல் மறுமுறையும் தடைபட்டு நின்று விட்டது.

"பிறகு?" என்று கேட்டாள் அவள்.

அவர் மீண்டும் சிறிது முயற்சியுடன் ஆரம்பித்தார். "பிறகு என்ன, மாலை நேரம் வெகு விரைவில் பறக்கிறது. அப்பெண்கள் யாவரும் வேடிக்கையும் தந்திரமும் நிறைந்தவர்கள்" என்றார். அவரையறியாது அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"நீங்கள் இரவு முழுவதும் அங்கு தங்குகிறீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை. எப்போதும் தங்குவதில்லை" என்றார்.

அவள் அவருடைய சாதுவான முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். முகத்தில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. அதை அவள் விரும்பவில்லை. அந்த யௌவனம் என்றென்றைக்கும் சாஸ்வதமாக இருக்கப்போகிறது என்று அவள் ஒரு காலத்தில் உறுதியாக நம்பியது பொய்த்து வருகிறது. பெருமூச்செறிந்த அவள் தனது கோபம் வரவர அதிகமாவதை உணர்ந்தாள்.

அவள் சட்டென்று, "அந்தப்பெண்களில் ஒருத்தியை [illegible] விரும்புகிறீர்களா? நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இருந்தாலும் உங்களுடைய விருப்பத்தைக் கேட்கிறேன்" என்றாள்.

அவர் அதிசயம் கொண்டவராய், "நான் எதற்கு அவ்விதம் செய்ய வேண்டும்?" என்றார்.

"அப்படியானால் உண்மையில் நீங்கள் அங்கு விளையாடுவதற்காகத்தான் போகிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"ஆம். இருக்கலாம்" என்றார் அவர்.

"என்ன குழந்தைத் தனம் உங்களுக்கு!" என்றாள் அவள்.

அவர் மிகத் தாழ்மையுடன், "நான் உன்னைப்போல் அவ்வளவு புத்திசாலி அல்ல. ஏய்லியன், என்னால் எப்போதுமே புத்தகங்களில் மனம் செலுத்த முடிவதில்லை. நான் செய்ய வேண்டிய வேலைகளும் இப்போது அதிகம் ஒன்றுமில்லை. லியாங்மோ யாவற்றையும் கவனித்துக் கொள்கிறான். இப்போது த்ஸேமோவும் பெங்மோவும் இல்லாதிருந்தும்கூட அவனே எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொள்கிறான். நான் கவனிக்கக்கூடியது ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு சிறிது நேரம் கழித்து மேலும் அதே தாழ்மையுடன், "நான் செய்யவேண்டியது ஏதேனும் உண்டென்று நீ கருதினால், சொல்லு. நான் கண்டிப்பாகச் செய்கிறேன். என்னுடைய கடமையை நான் செய்துவிட விரும்புகிறேன்" என்றார். ஆனால் அது ஏனோ அவளுக்குச் சகிக்கவொண்ணாததாகயிருந்தது.

அவள் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. எவ்வித வேலைக்கும் அவர் தேவையாயில்லை என்பது என்னமோ உண்மைதான். அழகும் கருணையும் உவப்பும் படைத்தவராய் குழந்தைத் தனம் நிறைந்தவராய் வீற்றிருந்தார் அவர் அவர்கள் மத்தியிலே. அவரை நொந்துகொள்ள அவள் மனம் சிறிதும் இடம் கொடுக்கவில்லை.

அவர்கள் பிரிந்து சென்றபோது, அவள் துயரத்தோடு, அவர் தன்னுடன் பேசிவிட்டுச் சென்றதால் மீண்டும் குதூகல மடைந்திருக்கிறார் என்பதைக் கவனித்தாள். தான் உயிரோடு இருக்கும்வரை அவரிடமிருந்து ஒரு நாளும் விடுதலை பெற முடியாது என்பதை அவள் நன்கு உணர்ந்தாள். அவளுடைய சரீரத்தின் மூலமாக அவளுடைய ஆத்மாவையும் தன்னுடன் பிணைத்துக்கொண்டு விட்டார் அவர். அவள் அவரை ஒரு போதும் நேசிக்காமல் இருந்து விட்டால் மட்டும் போதாது. காதலுக்கும் பொறுப்புக்கும் ஒன்றும் சம்பந்தமில்லை.

ஸ்ரீமதி ஊ சொல்லொணு மன வேதனையுடன், "ஐயோ, கடவுளே நான் என்றைக்கும் இவரிடமிருந்து விடுதலே பெறப் போவதில்லேயா!" என்று புலம்பினுள்.

அகல சிறகை விரித்துக் கொண்டு மேலே பறந்து கொண் டிருந்த அவளது ஆத்மா, சிறகொடிந்த பட்சியைப் போல் கீழே நோக்கி விரைந்து வருவதை ஒத்திருந்தது அவள் நிலே.

* * *

ஸ்ரீமதி ஊவிடமிருந்து சென்ற, ஸ்ரீமான் ஊ அவள் எங்கு செல்வதை ஆட்சேபித்தாளோ, அதே இடத்திற்கு நேரே சென்ருர். முதலில் ஸ்ரீமான் கேங்குடன் உல்லாச விடுதிக்குச் செல்வதற்கு அவர் சிறிது தயங்கினர். தமது இஷ்டத்திற்கு விரோதமாக, அதைவிட அதிகமாக மனச்சாட்சிக்கு விரோதமாகச் சென்ருர். பிறகு சிறிது நாட்களில் இவ்விரண்டையும் அடக்கி வெற்றி வீரராக வெளி வந்தார். அவருடைய மனம் அதற்கு முற்றிலும் இணங்கி விட்டது. வர வர அங்கு செல்வதை மிக ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தார். அவருடைய மனச் சாட்சியோ குழப்பமடைந்து அப்போதைக்கு மௌனமாகக் கிடந்தது.

10

அவரால் சியூமிங்கைப் புரிந்து கொள்ள முடியவில்லே. அவள் ஸ்ரீமதி ஊவைப்போல் அவ்வளவு புத்தி சூன்மை வாய்ந்தவளல்ல. ஸ்ரீமதி ஊவிடமோ அவர், கோவிலில் ஒரு பூசாரி தினமும் தான் வழிபடும் தேவியிடம், எவ்வித பக்தி சிரத்தையுடன் அன்பு செலுத்துவானே, அதைப்போல் அன்பு செலுத்தி வந்தார். சியூமிங் தேவியாகவுமில்லே; சாதாரணப் பெண்ணுகவுமில்லே. அவளே அவர் ஒரு தேவியாகப் பாவித்து நடந்தபோது அவள் குழப்பமடைந்தாள். அதுவும் தவிர அவள் முற்றிலும் தெய்வப் பிறவியாகவும் தோன்றவில்லே. அவளேச் சாதாரணப் பெண்ணேப்போல் நடத்தியபோது, தாம் அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்து விட்டதாகத் தோன் றியது அவருக்கு. குழப்பமடைந்து திகைத்துப்போன அவரால் மேலே ஒன்றும் செய்ய முடியவில்லே. அவர்களுக்கிடையே இருந்து வந்த உறவு முற்றிலும் அற்றுப் போக ஆரம்பித்தது. அவளே எவ்விதம் நடத்துவது என்பதை அறியாத அவர் அவளேத் தனியே விட்டு விட்டார்.

இந்த அனுபவம் அவருக்கு ஸ்ரீமதி ஊவிடமிருந்த மதிப் பையும் பக்தியையும் பன்மடங்கு அதிகமாக்கியது. அவள் ஒரு தேவியாகவும் ஒரு சாதாரணப் பெண்மணியாகவும் மாறி

மாறி இருக்கும் சக்தியைப் பெற்றிருந்தால் என்பதை அவர் இப்போதுதான் அறிந்து கொண்டார். ஒரே சமயத்தில் இரண்டாகவும் இருந்து அவள் அவரைத் திகைக்க வைத்த தில்லே. ஆனுல் மீண்டும் சாதாரணப் பெண்மணியாவதற்கு மறுத்து, தேவியாகவே எப்போதும் இருந்து விடுவதற்கு அவள் உறுதியாகத் தீர்மானித்து விட்டதால், அவருக்குத் தனக்கென ஒரு பெண்ணே எங்கேனும் தேடிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

இத்தகைய ஒரு அழகிய, சிறிய பெண்ணே அவர் பியோனி பூக்களின் விடுதியில் சுண்டு பிடித்துக் கொண்டார். அது ஒரு பழைய வீடு. வெளியே பார்ப்பதற்கு ஒரு தேநீர் கடைபோல் காணப்பட்டது. ஆனுல் அதனுள் சூதாட்டம் ஆடும் இடமும் வேசிகளின் விடுதியும் கூட இருந்தன. அங்கிருந்த பெண்கள் எல்லோரும் சுத்தமாகவும் இளமையும் குதூகலமும் நிறைந்த வர்களாகவும் இருந்தனர். ஸ்ரீமான் கேங், தாம் எத்தனேயோ வருடங்களாக அவ் விடுதிக்கு வழக்கமாக வருபவரென்றும் அங்கு இத்தகைய பெண்களேத் தவிர வேறு யாரையும் காண முடியாதென்றும் உறுதி கூறினர். அதுவும் தவிர, அவ்விடத் தில் யாரையும் வீணுக நிர்ப்பந்தம் செய்வதில்லே.

ஒருவன் தான் உண்ணும்போதும் குடிக்கும்போதும் ஒரு பெண்ணே வெறுமே மட்டும் பார்க்க விரும்பினுல், அதுமட்டும் அவனுக்கு அனுமதிக்கப்பட்டது. சிறிது நேரம் பொழுது போக்குவதற்காக மட்டும் ஒரு பெண்ணேக் கூட இருக்கும்படி விரும்பினுல் அதுவும் பூர்த்தி செய்யப்பட்டது. யாரையும் அவரவர் இஷ்டத்திற்கு விரோதமாக வற்புறுத்துவதில்லே. உண்மையில், இதற்கு மேல் தேவைப்படுமானுல் அதற்கான சில ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது. ஏனெனில், அவ் விடுதியின் பெண்களுக்காகக் காத்திருப்பவர்களின் எண் ணிக்கை எப்போதும் அதிகமாகவே இருந்துவந்தது. ஆனுல் ஸ்ரீமான் ஊவிற்கு அதில் உடனே ஒரு இடம் பெறுவது ஒன்றும் கடினமாகயில்லே. ஒரு பெரிய செல்வம் நிறைந்த குடும்பத்தின் தலேவர் என்ற அவருடைய பதவி அவருக்குச் செல்வாக்கை அளித்தது.

மிக அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருந்த அந்த ஹாலுக்குள் மிக பழக்கமானவர் போல் அவர் நுழைந்தார். நாலாபுறமிருந்தும் அவருக்கு முகமன் கூறப்பட்டது. அவ் விடுதியின் சொந்தக்காரன் தனது உதவி காரியஸ்தனிடம் ஜாடை காட்ட, "ஸ்ரீமான் ஊ வந்து விட்டாரென்று மல்லிகாவிடம் கூறு" என்ருர்.

ஸ்ரீமான் ஊ, சர்வ சாதாரணமாக உள்ளே இருக்கும் அறையை நோக்கிச் சென்றார். அங்கு உடனே அவருக்கு தேநீர் வழங்கப்பட்டது. சில நிமிஷங்களுக்குப் பிறகு மது பானமும் ஒரு கிண்ணத்தில் பலகாரமும் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அவர் அதைச் சாப்பிட ஆரம்பித்தார். பாதி சாப்பிடுவதற்குள்ளாகவே, மல்லிகா அறைக்குள் நுழைந்தாள்.

அவளைக் கூப்பிட்ட பொழுது, அவள் தனது நீண்ட கரிய கூந்தலுக்கு வாசனை திரவியம் தடவிக் கொண்டிருந்தாள். இப்போது அவற்றை காதுகளுக்கு மேல் இரண்டு கொண்டை களாக முடித்துக் கொண்டு வந்திருந்தாள். அவளுடைய பெயர் மல்லிகாவாதலால், அவள் எப்போதும் அப்பூவின் வாசனை திரவியத்தையும் தைலத்தையும் தான் உபயோகித்து வந்தாள். அவள் அதை அபரிமிதமாக உபயோகித்து வந்த தால் இவ் வாசனையே அவளுக்குரியதாகி விட்டது என்று தோன்றியது. அவள் எப்போதும் தனது கொண்டையில் ஒன்று அல்லது இரண்டு மல்லிகைப் புஷ்பங்களைச் செருகி யிருப்பாள். அவள் முகம் முழுவதும் ஒரே வெள்ளையாகும்படி பவுடர் பூசியிருந்தாள். அவளுடைய உதடு சிவப்பாகவும், கண்கள் வட்டமாகவும் மிகவும் கரியதாகவும் இருந்தன. அவள் நன்முகக் கொழுந்து இருந்தாள். உதடுகளில் எப் போதும் புன்னகை தவழ்ந்தது. அவள் தனது சிறிய பாதங் களால் ஓடி வந்து, ஸ்ரீமான் ஊவின் நாற்காலியின் கைமீது பாய்ந்து உட்கார்ந்து, தனது வாசனை மிகுந்த கன்னத்தை அவருடையதோடு வைத்துப் பொருத்தினாள்.

அவர் அவளைக் கவனியாதவர்போல் பாசாங்கு செய்தார். அவள் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, "எனக்கு மிகவும் பசிக்கிறது" என்று சிணுங்கினாள். அவர் பீங்கான் ஸ்பூனால் அக் கிண்ணத்திலிருந்த பதார்த்தத்தை எடுத்து அவளுக்கு ஊட்டினார் மௌனமாக. அவள் ஒரு குழந்தையைப் போல் முன்னால் குனிந்து அதை வாங்கிக் கொண்டாள். இருவரும் மௌனமாக அதைச் சாப்பிட்டு முடித்தனர். பிறகு அவர் தமது நாற்காலியை மேஜையருகிலிருந்து பின்னால் தள்ளிக் கொண்டார். அவள் நாற்காலியின் கையிலிருந்து நழுவி அவருடைய மடிமீது உட்கார்ந்து கொண்டாள்.

"நீ இன்று முழுவதும் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று கேட்டார் ஸ்ரீமான் ஊ.

அவள் சிவப்பு வர்ணம் பூசிய தனது நகங்களை ஆராய்ந்த படியே, "ஒ...உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருந் தேன்...நான் செய்வதெல்லாம் அது ஒன்றுதான்" என்றாள்.

"நான் முழுவதும் என்னால் இங்கு வந்து இருக்க முடியுமா? எனக்கு வேலைகள் இருக்கின்றன. எத்தனையோ அலுவல்கள்! கடைகள், நிலங்கள், வியாபாரம் எல்லா வற்றையும் மேற்பார்வையிட வேண்டும். நானில்லாமல் அவர்களால் ஒன்றும் முடியாது" என்றார் அவர்.

"நீங்கள் மிகவும் அதிக வேலை செய்கிறீர்கள். உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு உதவி செய்யக் கூடாதா?" என்றாள் அவள் முறையிடும் குரலில்.

"ஐயோ, என் பிள்ளைகளா? அவர்களுக்குத் தங்களையும் தங்கள் குடும்பத்தைப் பற்றியும்தான் நினைப்பு. இரண்டு பேர் வீட்டைவிட்டே போய்விட்டார்கள். மூத்தவன் ஏதோ செய்கிறான். ஆனால் அவனை முழுவதும் நம்பி எதை யும் விடுவதற்கில்லை" என்றார் ஸ்ரீமான் ஊ.

அவளுடைய உருண்டையான சிறிய தேகம் தமது மார்பின்மீது அழுத்திக் கொண்டிருப்பது அவருக்கு இன்பத்தை அளித்தது. அவளுடைய தலையில் பூசியிருந்த மல்லிகை மலரின் வாசனைத் தைலம் அவருக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது. அவளுடைய மூச்சுக்களில் கூட வாசனை கலந்திருந்தது. அவருக்கு ஸ்ரீமதி ஊவின் கேள்வி நினைவுக்கு வந்தது. அவர் அவளைத் தமது வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறாரா? அவரை மட்டும் பொருத்தவரை, அது அவருக்கு மிக்க மகிழ்ச்சியூட்டும். ஆனால் தம்முடைய முன்னோர்கள் வாழ்ந்து வந்த வீட்டில் ஒரு வேசிப் பெண்ணைக் கொண்டுபோய் வைத் துக்கொள்ள அவருடைய மனமே இடம் தரவில்லை. அவரு டைய தந்தையின் நிழல் அவர் அப்படிச் செய்வதைத் தடுத்தது.

அவருடைய எண்ணங்களை அறிந்துகொண்டவள்போல், மல்லிகா அவரை இறுகத் தழுவிக்கொண்டு, தனது கையை அவருடைய கழுத்தில் போட்டுக் கொண்டாள். "நான் உங் களுடன் கூடவந்து வாழவேண்டுமென்று எவ்வளவு விரும்பு கிறேன் தெரியுமா? நான் மிகவும் நல்ல பெண்ணையிருப் பேன். வீட்டிலுள்ள எஜமானிகளுக்கு நான் ஒருவித தொந்தர வும் கொடுக்க மாட்டேன். நீங்கள் வரும்வரை உங்களுக்காக காத்துக்கொண்டு, நான் என் பாட்டிற்கு இருப்பேன்" என்றாள்.

அவர் அவசரத்துடன், "இல்லை, இல்லை. நீ அங்கு வரக் கூடாது. நான் வீட்டைவிட்டு வெளிவந்து உன்னை இங்கே பார்ப்பதைத்தான் விரும்புகிறேன். நீ அந்த வீட்டிற்கு

வந்தால், நீயும் அதில் ஒரு பாகமாகிவிடுவாய். அப்புறம் என் சொந்த மகிழ்ச்சிக்காக வேறெங்கும் போவதற்கு எனக்கு இடமிராது. ஒரு மனிதனுக்குப் போவற்கு ஒரு இடம் வேண்டாமா?" என்ருர்.

இது அவள் எதிர்பார்த்தது தான். அவளுடைய வயதான தாய் ஒருத்தி இருந்தாள். அவளும் சிறுவயதில் உல்லாச விடுதிகளில் இருந்தவள்தான். அவள் அவளுக்குப் புத்திமதி கூறியிருக்கிருள். "முதலில் தன்னைப் பற்றித் தானே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்! முடியுமானுல் வைப்பாட்டி களாகப் போயிருப்பதுதான் நல்லது. இல்லா விட்டால் உனக்கென ஒரு வீடாவது சம்பாதித்துக் கொள்ளவேண்டும்" என்று கூறியிருக்கிருள் அக்கிழவி செந்தாமரை.

அவள் ஸ்ரீமான் ஊவிடம், "எனக்காக ஒரு சிறு வீட்டை உங்களால் விலைக்கு வாங்க முடியாதா? உங்களைத் தவிர வேறு எந்த மனிதனையும் உள்ளே வரவிடமாட்டேன். நான் இராப் பகலாக உங்களுக்காகக் காத்து கிடப்பேன். உங் களுக்கு விருப்பமான சமயங்களில் நீங்கள் அங்கு வந்து இன்ப மடையலாம்" என்ருள்.

ஸ்ரீமான் ஊ இவ்விஷயத்தைப் பற்றி முன்பே ஆலோ சனை செய்து வைத்திருந்தார். அந்த வீடுதிக்குள் வந்ததும் தம்முடைய பெயர் அவ்வளவு சகஜமாக எல்லோராலும் அழைக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. என்ன இருந்தாலும் அவர் ஊ குடும்பத்தின் தலைவர் அல்லவா! அவருடைய அந்தஸ்து என்ன! அந்தப் பட்டணத்திலேயே அவருக்கிணை யான அந்தஸ்துடையவர்கள் வேறு ஒருவரும் கிடையாதே!

ஆனுல் வரவு செலவு கணக்குகளையெல்லாம் ஸ்ரீமதி ஊ தான் பார்த்து வந்தாள். மல்லிகாவை ஒரு தனி வீடு வாங்கி குடிவைப்பதென்ருல், ஒரு பெரிய தொகை வேண்டியிருக் குமே! இதை எப்படி அவளிடம் சென்று கேட்பது? அவர் அன்புடன், "இங்கே பார். என் கண்ணே, என்னுடைய பிள்ளைகளின் தாய் இருக்கிருளே அவள் மிக அபூர்வமான ஒரு பெண்மணி. அவள்தான் வரவு செலவு கணக்குகளையெல் லாம் வைத்துக் கொண்டிருக்கிருள். உனக்கு வீடு வாங்குவ தென்ருல், நான் அவளிடம் என்ன சொல்வது?" என்ருர்.

"உங்களால் ஒரு சிறிய நிலத்தை விற்றுப் பணம்பெற முடியாதா? அவளுக்குச் சொல்லவேண்டியதில்லையே!" என்று கூறிவிட்டு, கெஞ்சும் பாவத்துடன் அவரை நோக்கினுள்.

அவளுடைய குழந்தைத்தனமான மெல்லிய குரல் அவருடைய நெஞ்சில் ஊடுருவிச் சென்றது.

"நான் அவளை ஒருபோதும் ஏமாற்றியதில்லை" என்ருர் ஸ்ரீமான் ஊ சிறிது சஞ்சலத்துடன்.

மல்லிகா ஆச்சரியமடைந்தவளாய், "என்னைப் பற்றி அந்தம்மாளுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஒரு மாதிரியாகத் தெரியும்" என்று பதில் கூறினர் ஸ்ரீமான் ஊ.

"ஒரு மாதிரியாக என்ருல்?" என்ருள் மல்லிகா.

"அதாவது முக்கால்வாசி தெரிந்திருக்கலாம்". என்ருர் அவர்.

அவள் மீண்டும், "ஒருமாதிரியாக எப்படித் தெரிந்திருக்க முடியும்? ஒன்று தெரிந்திருக்க வேண்டும் அல்லது தெரியா திருக்க வேண்டும்" என்ருள்.

"அப்படியானுல் அவளுக்குத் தெரியும் என்றே வைத்துக் கொள்வோம். ஏனெனில் எப்போதும் அவளுக்குத் தெரி யாது என்று எண்ணிக்கொள்வதைவிட தெரியும் என்று எண் ணிக்கொள்வதே நல்லது" என்ருர்.

மல்லிகா மேலும் முயற்சித்தாள். அவள் தனது முகத்தை அவரது மார்பில் புதைத்துக்கொண்டு, 'மெல்லிய குரலில் "நான் என்னுள் மகிழ்ச்சியைக் கொண்டிருக்கிறேன் என்று தோன்றுகிறது. அதனுல்தான் நான் ஒரு வீடு வேண்டுமென் கிறேன். இங்கு எப்படி நான் குழந்தை பெற முடியும்?" என்ருள்.

ஸ்ரீமான் ஊ விழித்துக்கொண்டார். அவளை தனது மடியி லிருந்து அகற்றி முன்னுல் நிற்க வைத்தார். அவள் கரங்க ளால் தனது முகத்தை மூடியவாறு நின்ருள். அவர் கடுமை யுடன், "இதோ பார். எனக்கு முன்னுல் எத்தனையோ போர் கள் இருந்திருக்கிறார்கள். இளம் பெண்ணுகிய நீ, நான் வரு வதற்கு முன்னுல் ஒரு கன்னியாக இருக்கவில்லையே!" என்ருர்.

அவள் முகத்தை மூடியிருந்த தனது கைகளை எடுத்தாள். பவுடர் அப்படியே அழியாமல் இருந்தது. "ஆனுல் நீங்கள் வந்தபிறகு வேறு ஒருவரும் வரவில்லை என்பதை என் அம்மா வால் நிரூபிக்க முடியும். இது இப்போதுதான் மூன்று மாத மாக. நீங்கள் அதற்குமுன்பே வந்தீர்கள்" என்ருள்.

அவள் வேறுபுறம் திரும்பிக்கொண்டு தனது ஆடையின் முனையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். பின் குழந்தைத் தனமான குரலில் சோகம் ததும்ப, "பரவாயில்லை, விடுங்கள். இது என்னுடைய தலைவிதி. என்னைப்போன்ற பெண்களுக்கு—சில சமயங்களில் இவ்விதம் நேர்ந்துவிடுகிறது, எங்களையும் மீறி. அதுவும் உண்மையாகவே ஒரு மனிதரைக் காதலிக்கும்போது நேர்ந்துவிடுகிறது. அதுதான் என்னுடைய தவறு" என்றாள்.

அவள் மேலும் வற்புறுத்தித் தொந்திரவு செய்திருந்தால், அவர் எழுந்து இனி ஒருபோதும் அங்கு வருவதில்லை யென்று ஒரேயடியாகப் போயிருப்பார். ஆனால் அவருடைய இதயம் இளகி யிருந்தது. "இதோ பார், அது என்னாலான தவறே இல்லையோ, அது எப்படி யிருந்தாலும், உனக்குநான் அதைப் போக்கிக் கொள்ள எத்தனையோ வழிகள் தெரியுமே. இதோ அதற்கு வேண்டியதை நான் தருகிறேன்" என்றார்.

அவர் தமது கையை பைக்குள் விட்டுப் பணத்தை எடுத்து அவளிடம் நீட்டினார். ஆனால் அவள் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. தனது சிறிய கரங்களால் அவருடைய நீட்டிய கையைப் பிடித்துத் தள்ளிவிட்டு, "தயவு செய்து வேண்டாம். நான் அக் குழந்தையைப் பெற விரும்புகிறேன்" என்றாள்.

"கூடாது. அப்படிச் செய்யக் கூடாது" என்று அவர் வற்புறுத்தினார்.

இதற்குள் வெளி அறையிலிருந்து வந்த கூக்குரல்கள் அவர்களுடைய பேச்சை தடை செய்தன. விடுதியின் சொந்தக்காரன், "ஸ்ரீமான் ஊ, ஸ்ரீமான் ஊ" என்று உரக்கக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். அறைக் கதவு அகல திறந்தது. ஸ்ரீமான் ஊவின் வேலைக்காரனான பெண்ணர் அங்கு வந்து நின்றான்.

"எஜமான், எஜமான், வீட்டில் உங்களைக் கூப்பிடு கிறார்கள். இரண்டாவது எஜமானி பழைய மாதுளை மரத்தில் ஏறித் தூக்கிலிட்டுக் கொண்டு விட்டார்" என்று கூக்குரலிட்டான்.

"ஐயோ, அம்மா" என்று முனகிய ஸ்ரீமான் ஊ உடனே குதித்தெழுந்து மல்லிகாவை அப்படியே விட்டு விட்டு வேகமாகச் சென்று விட்டார். அவள் கோபத்துடன் உறுமிய வளாய் அவர் போவதைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள்.

அவர் தமது தெருவை அடைந்ததுமே, அவர் வீட்டில் ஏற்பட்ட அமளியின் சப்தம் அவர்களையெல்லாம் தாண்டி வந்து அவர் காதில் விழுந்தது. புரோகிதர்கள் எல்லோரும் வரவழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தாரை தம்பட்டங்களை முழக்கிக் கொண்டு, பறந்துபோகும் சியூமிங்கின் ஆத்மாவிற்காக மந்திரம் ஓதிக்கொண்டிருந்தனர். திறந்திருந்த கேட்டில் ஒருவருமே காணப்படவில்லை. அவர் வாசலைக் கடந்து பியோனி பூக்களின் பகுதியை நோக்கி ஓடினார். அங்கே புரோகிதர்களும் வீட்டிலுள்ள அத்தனை பேரும் கூடியிருந்தனர். எல்லோரும் சியூமிங்கின் பெயரைச் சொல்லிச் சொல்லி கூவியழுதனர். அவர் எல்லோரையும் தள்ளிக்கொண்டு உள்ளே புகுந்து போனார். அங்கே மத்தியில் வாசலில் ஒரு பாயின்மீது சியூமிங்கைக் கிடத்தி வைத்திருந்தார்கள். ஸ்ரீமதி ஊ அவள் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து, தனது கையில் அவளுடைய தலையை ஏந்திப் பிடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் சியூமிங்கின் முகம் சவக்களை படிந்ததாய் அவள் கையிலிருந்து தொங்கியது.

"அவளுடைய உயிர் போய் விட்டதா?" என்று கத்தினார் ஸ்ரீமான் ஊ.

"உயிர் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த அயல் நாட்டு பாதிரியாருக்கு நான் சொல்லியனுப்பி யிருக்கிறேன். இந்த புரோகிதர்கள் எல்லோரும் வந்திருக்கும்போது அவர் மட்டும் ஏன் வரக்கூடாது?" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அதே சமயம் சகோதரர் ஆண்ட்ரூ அங்கு தோன்றினார். அக்கூட்டம், ஒரு காற்றின் முன் அலைகடல் பிரிந்து கொடுப்பதுபோல், அவர் முன் விலகி வழிவிட்டது. புரோகிதர்கள் அனைவரும் பொறுமையால் கொதித்தவர்களாய் பேசாமல் நின்றனர். இந்த அமைதியின் நடுவே சகோதரர் ஆண்ட்ரூ கீழே உட்கார்ந்து, சியூமிங்கின் கையில் ஒரு ஊசியைச் செலுத்தி, அதை அங்கு சிறிது நேரம் வைத்திருந்தார்.

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று நான் கேட்கப் போவதில்லை. எதுவாயிருந்தாலும் அது, ஒரு அறிவுள்ள செயல் என்பது மட்டும் எனக்குத் தெரியும்" என்று அவரிடம் கூறினாள் ஸ்ரீமதி ஊ.

"உணர்வு வரும்படி செய்யக்கூடிய மருந்து இது. ஆனால் இதை முன்பே கொடுத்திருக்க வேண்டும். இப்போது மிகவும் தாமதமாகி விட்டதோ என்னவோ" என்றார் அவர். பிறகு

அவர் அவ்வுசியை வீரைவில் எடுத்து விட்டார். ஆதலால் ஸ்ரீமான் ஊவையும் ஸ்ரீமதி ஊவையும் தவிர வேறு யாரும் அதைப் பார்க்கவில்லை.

ஆனல் உண்மையில் தாமதமாகி விடவில்லை. சியூமிங்கின் உதடுகள் அசைந்தன. அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவளுடைய கண்கள் படபடத்தன. ஸ்ரீமதி ஊ பெருமூச்செறிந்து, "ஆ! அவளுக்கு உயிர் இருக்கிறது. அப்படியானல் குழந்தையும் பிழைத்து விடும்" என்ருள்.

"ஆனல் அவள் எதற்கு இப்படி தூக்குப் போட்டுக் கொண்டாள்?" என்று கேட்டார் ஸ்ரீமான் ஊ.

"அவளால் பேச முடிகிறபோதுதான் அது நமக்குத் தெரிய வேண்டும்" என்று பதில் கூறிய ஸ்ரீமதி ஊ மேலும், "அந்தப் புரோகிதர்களுக்கு அவள் பிழைத்து விட்டாள் என்பதைத் தெரியப்படுத்துங்கள். அவர்களுக்கு நிறைய சன்மானம் கொடுத்து அனுப்புங்கள். என் பிள்ளைகளின் தகப்பனரே, அவர்களால்தான் அவளுடைய உயிர் தப்பியது என்று கூறுங்கள். அப்போதுதான் அவர்களும் திருப்தியாகப் போவார்கள். நாமும் திருப்தியாக இருக்கலாம்" என்ருள்.

ஸ்ரீமான் ஊ, அவள் கூறியபடியே, புரோகிதர்களை அழைத்துக் கொண்டு வெளி வாசலுக்குச் சென்ருர். பெண்கள் மட்டும் பின் தங்கினர். வயதான பெண்மணிகள் புரோகிதர்களைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். மெங், ருலான், லின்யி மூவரும் நின்று மௌனமாக சியூமிங்கின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவள், அவர்களுடைய சொந்த வீட்டிலே அவர்களுடனே வாழ்ந்து வந்த போதிலும் அவர்களுக்கு, அவளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவளும் அவர்களையொத்த வயதுள்ளவள்தான். ஆனல் அவள் முந்திய தலை முறையைச் சேர்ந்தவர்களோடு பிணைக்கப்பட்டிருந்ததால் அவர்களால் அவளுடன் சகஜமாகப் பழக முடியவில்லை. ஆதலால் அவர்கள் அவளை அடியோடு மறந்து விட்டனர்.

ஆனல் இச்செய்கையால் அவள் அவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தாள். அவள் துக்கமடைந்திருந்தாள். பெரியவர்களோடு தன்னைப் பிணைத்துக்கொள்ள அவள் விரும்பவில்லை. இது ஒவ்வொரு இளம் பெண்ணின் உள்ளத்தையும் ஒவ்வொரு விதத்தில் தொட்டது. மெங்கின் இதயத்தில் இரக்கம் தோன்றியது. லின்யியின் உள்ளத்தில் அது ஆச்சரியத்தை எழுப்பியது. ருலானின் உள்ளத்தில் அது ஒரு புரட்சிக்

குமுறலைக் கிளப்பியது. ஒவ்வொரு பெண்ணும், தன்னுடைய சொந்த முறையில் சியூமிங்கை நன்ருக அறிந்து அவள் ஏன் இவ்விதம் செய்தாள் என்பதை அறிய வேண்டுமென்று உறுதி செய்து கொண்டனர்.

ஆனல் இந்த உணர்ச்சிகளையெல்லாம் காட்டுவதற்குப் போதிய நேரம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் சியூமிங்கிற்குத் தன் நினைவு வந்ததுமே, அவளுக்கு அப்போதே குழந்தை பிறக்கப்போகிறது என்பது தெளிவாகப் புலப்பட்டது. அவளை அவளுடைய படுக்கைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். மருத்துவச்சிக்கு ஆள் அனுப்பவேண்டும். இவையெல்லாம் செய்தானதும், சகோதரர் ஆண்ட்ரூ கிளம்புவதற்குத் தயாராஞர்.

சியூமிங் பலஹீனமாக குரலில், "நான் இப்போது பார்த்தது, அந்த அயல் தேசத்துப் பாதிரியாரையா?" என்று கேட்டாள்.

"ஆம். அவர் போகப்போகிறர் இப்போது" என்ருள் ஸ்ரீமதி ஊ. அவள் படுக்கையின் அருகே நின்று கொண்டிருந்தாள். பணிப்பெண்கள் சியூமிங்கிற்கு வேண்டியவற்றைச் செய்து கொண்டிருந்தனர்.

"அவரை இங்கு வரச்சொல்லுங்கள் - ஒரே ஒரு நிமிஷம்" என்று கெஞ்சினுள் சியூமிங்.

ஸ்ரீமதி ஊ ஆச்சரியமடைந்தாள். சியூமிங்கிற்கு அந்த உயரமான அயல் தேசத்து மனிதரைத் தெரிந்திருக்கும் என்று கூட அவள் எண்ணவில்லை. ஆனல் அப்பெண் இன்னும் மரணத்திற்கு வெகு சமீபத்திலேயே இருந்ததால், அவளுடைய வேண்டுகோளைப் புறக்கணிக்க அவள் துணியவில்லை. அவள் தானே சென்று, போவதற்காகப் புறப்பட்ட சகோதரர் ஆண்ட்ரூவை நிறுத்தினுள். "அவள் உங்களைப் பார்க்க வேண்டுமென்கிறுள். ஒரு நிமிஷம் உள்ளே வந்து விட்டுப் போங்கள்" என்ருள்.

சகோதரர் ஆண்ட்ரூ திரும்பி வந்தார். குறுகிய அறைக் கதவின் வழியே தமது தலையைக் குனிந்துகொண்டு, சியூமிங் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தார். ஸ்ரீமான் ஊ பின் தங்கி விட்டார். அவர் ஒரே குழப்பத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தார். குடும்பத்தை அவர் எந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டார். மல்லிகாவின் காரணமாகத்தான் சியூமிங் தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும் என்று

அவருக்கு உறுதியாகப்பட்டது. தன்னுடைய மௌனமான முறையில் அவள் தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறாள்.

சகோதரர் ஆண்ட்ரூ படுக்கையருகே சென்று குனிந்ததும் சியூமிங் ஏதோ கூறினாள். ஆனால் அவளுடைய குரல் மிகவும் பலஹீனமாக இருந்ததால் அவருக்கு ஒன்றும் காதில் விழ வில்லை. அவர் மேலும் குனிந்து, காது கொடுத்துக் கேட்டார்.

அவள் கூறிய வார்த்தைகள் இவைதான். "இப்போது பிறப்பது ஒரு பெண்ணுகையிருந்தால்—நான் சாகும்போது அதை உங்களிடம் ஒப்புவித்துவிட்டுப் போகிறேன்—அது ஒரு அனுதைக் குழந்தைதான்."

"இந்த வீட்டில் எப்படி ஒரு அனுதைக் குழந்தை வந்து பிறக்கும்?" என்று கேட்டார் அவர் மிருதுவாக.

"ஆனால் நான் ஒரு அனுதைதான். ஆதலால் இது ஒரு அனுதையின் குழந்தைதான்" என்றாள்.

இதைக் கூறிவிட்டு அவள் வேதனையின் காரணமாக, கண்களை மீண்டும் மூடிக்கொண்டாள். அவர் சிந்தனை தோய்ந்த முகத்துடன், யாரிடமும் அவள் என்ன சொன்னாள் என்பதைத் தெரிவிக்காமல் சென்று விட்டார். அவளுடைய குரல் மிகவும் மெல்லியதாக இருந்ததால் வேறு யாராலும் அதைக் கேட்கவும் முடியவில்லை.

அன்றிரவு வெகு நேரத்திற்குப் பிறகு, சியூமிங் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அது மிகவும் சிறியதாக இருந்தது. அதை உயிரோடு வைத்திருப்பதற்காக, ஸ்ரீமதி ஊ அதை ஒரு கம்பளி துணியில் சுற்றித் தனது மார்போடு அணைத்து வைத்துக்கொண்டாள். சியூமிங்கை மருத்துவச்சியிடமும், இங்கினிடமும் பார்த்துக் கொள்ளும்படி விட்டு விட்டு, அக் குழந்தையை எடுத்துக்கொண்டு தன் அறையை நோக்கிச் சென்றாள். அறையில் அச் சிசுவைத் தன்னருகே படுக்கவைத்து அணைத்துக் கொண்டாள். ஒரு வேலைக்காரி என்ன வேண்டுமென்பதைப் பார்ப்பதற்காக அங்கு வந்தாள்.

"செங்கற்களை சூடு பண்ணி இங்கே கொண்டுவா. இச் சிறிய மொட்டை ஜாக்கிரதையாக மலர வைக்கவேண்டும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"ஐயோ, அம்மா இதைச் சாகடித்து விட்டால் என்ன? ஒரு பெண்தானே—இது வளர்ந்து பெரிதானால் வீட்டில்

தொல்லைகளைத் தவிர வேறு என்ன ஏற்படப்போகிறது?" என்றாள் அவ்வேலைக்காரி.

"நான் கூறியபடி செய்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

வேலைக்காரி முனகிக் கொண்டே போய்விட்டாள். ஸ்ரீமதி ஊ அச் சின்னஞ் சிறு சிசுவை நோக்கினாள். அதற்கு இன்னும் சுவாசம் இருந்தது.

* * *

இரண்டு நாட்களுக்குப் பிறகு சகோதரர் ஆண்ட்ரூ சியூமிங்கின் விசித்திரமான வேண்டுகோளைப் பற்றி ஸ்ரீமதி ஊவிடம் கூறினார். அக்குழந்தை இறந்துவிடவில்லை. அதனால் தாய்ப்பாலைச் சப்பி சாப்பிட முடியவில்லை. மிகவும் இளைய தாகிய அக்குழந்தைக்கு தாய்ப்பாலை ஒரு ஸ்பூனால் சிறிது ஊட்டினார்கள். சியூமிங் மிகவும் பலஹீனமாக இருந்ததால் அவளால் பேசக்கூட முடியவில்லை. குழந்தை உயிரோடு இருக்கிறது என்று ஸ்ரீமதி ஊ அவளுக்குத் தெரிவித்தபோது கூட அவள் ஒன்றும் பேசவில்லை.

சகோதரர் ஆண்ட்ரூவிடம் ஸ்ரீமதி ஊ மிகப் பெருமையுடன், "நிச்சயம் இக்குழந்தை ஒரு அனுதைக் குழந்தையல்ல. அவள் எங்கள் வீட்டில் வந்து பிறந்திருக்கிறாளே" என்றாள்.

"நீங்கள் அப்படிச் சொல்வீர்களென்று எனக்குத்தெரியும். நீங்கள் கூறுவதுதான் சரி. ஆனால் அப்பெண் எதற்காகத் தான் ஒரு அனுதை என்று சொல்கிறாள்?" என்று கேட்டார் அவர்.

"இங்கு வருவதற்கு முன், அவள் அனுதையாகத்தான் இருந்தாள்" என்று கூறிய ஸ்ரீமதி ஊ சிறிது தயங்கினாள். பிறகு அவள் தன்னையறியாது, சகோதரர் ஆண்ட்ரூவிடம் தான் இதுவரை தெரிவிக்காதிருந்த விஷயங்களையெல்லாம் கூற ஆரம்பித்தாள். சியூமிங் இவ்வீட்டிற்கு வந்ததற்கான மூலகாரணம் தானே தான் என்பதைக் கூறினாள்.

சகோதரர் ஆண்ட்ரூ, தாழ்த்திய கண்களுடன், இரு கைகளையும் கோர்த்து மடிமீது வைத்தபடி உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். அக்கைகளை நோக்கும் போதெல்லாம் அவை ஏன் இவ்வளவு வைரம் பாய்ந்திருக்கிறது என்று அவருக்கு வியப்பு உண்டாகாமலிருப்பதில்லை.

இப்போது அவள் திடீரென்று "ஏன் உங்களுடைய கைகள் இப்படி முரடு பாய்ந்திருக்கின்றன?" என்று கேட்டாள்.

அவளுடைய இத்தகைய திடீர் மாறுதலெல்லாம் அவருக்குப் பழக்கமாகியிருந்தன. "நான் இக் கைகளால் தான் குழந்தைகளின் உணவின் பொருட்டு நிலத்தை உழுகிறேன்" என்றார். அவர் அவளுடைய பார்வையிலிருந்து தமது கைகளை அகற்றிக் கொள்ளவில்லை.

அவள் அவருடைய கைகளைப் பார்த்தவாறே, தனது கதையைத் தொடர்ந்து கூறினாள்.

தன் கதையைக் கூறி முடித்ததும், "நீங்கள் ஒரு பாதிரியாதலால் உங்களுக்கு ஆண்களைப் பற்றியோ பெண்களைப் பற்றியோ ஒன்றும் புரியாது என்று நினைக்கிறேன்" என்றாள்.

"பாதிரியாயிருக்கும் காரணத்தால் தான் என்னால் ஆண் பெண்களைப்பற்றி மிக நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது" என்றார்.

"அப்படியானால் நான் செய்ததில் என்ன தவறு இருக்கிறது என்று சொல்லுங்கள்" என்று கூறி தனது கண்களை கைகளிலிருந்து முகத்திற்கு உயர்த்தினாள். இந்த உலகம் முழுவதிலும் அவளது முழு உள்ளத்தையும் திறந்து காட்டுவதற்கு இந்த அன்னிய மனிதரைத்தான் அவள் தேர்ந்தெடுக்க வேண்டுமா? அவர் கடல் கடந்த எந்த நாட்டில் பிறந்தவரோ? அவருடைய நாட்டின் நீரையும் நிலத்தையும் அவள் ஒருபோதும் காணப்போவதில்லை. இவ்விதம் எண்ணி அவள் அதிசயம் கொண்டாள்.

"மனிதன் வெறும் சரீரத்தால் மட்டும் ஆனவன் அல்ல என்பதை தாங்கள் ஒருபோதும் சிந்திக்கவில்லை போலும்! தங்களுடைய கணவரைப் போன்ற ஒரு மனிதர்கூட கடவுளின் நினைவு கொண்டவராய் இருக்க வேண்டுமென்பதை நீங்கள் அடியோடு மறந்து விட்டீர்கள். அவரை வெறுப்போடு புறக்கணித்திருக்கிறீர்கள்" என்றார் சகோதரர் ஆண்ட்ரூ.

"நானா? ஆனால் அவருடைய சுகத்தைத் தவிர வேறெதையும் நான் சிந்தித்ததில்லையே?" என்றாள் அவள் திகைப்புடன்.

சகோதரர் ஆண்ட்ரூ தெளிவாக, "அவருடைய வயிற்றை நிரப்புவதிலும் படுக்கையைச் சுகமானதாக வைப்பதிலும்

மட்டும்தான் நீங்கள் கவனம் செலுத்தியிருக்கிறீர்கள். இதைவிட மோசமானது ஒரு பவுண்டு மாமிசத்தை வாங்குவதுபோல் ஒரு இளம் பெண்ணை விலைக்கு வாங்கியிருக்கிறீர்களே அதுதான். ஆனால் எந்தப் பெண்ணும் அவ்வளவு தாழ்ந்தவளல்ல. எல்லாப் பெண்களைப் பற்றியும் இவ்வுண்மையை நீங்கள் முதலில் உணர வேண்டும். இப்போது உங்கள் மீது மூன்று பாவங்களைச் செய்த குற்றம் சார்கிறது" என்றார்.

"குற்றமா?" என்றாள் அவள் திருப்பி.

"உங்களுடைய கணவரை உதாசீனம் செய்திருக்கிறீர்கள். மேலும் சகோதரியாகிய ஒரு பெண்ணை தாழ்வாக மதித்திருக்கிறீர்கள். மேலும் மற்ற பெண்களை விட நாம் உயர்ந்தவர்கள், ஒரு தனிப் பிறவி என்பதாக எப்போதும் தங்களைப் பற்றி எண்ணி வந்திருக்கிறீர்கள். இந்தப் பாபச் செயல்கள் தாம் உங்கள் குடும்பத்தை நிலைகுலையச் செய்கின்றன. ஏனென்ற காரணம் தெரியாமலே உங்களுடைய பிள்ளைகள் அமைதியை இழந்திருக்கின்றனர். அவர்களுடைய மனைவிகளும் துன்பமடைந்திருக்கின்றனர். நீங்கள் இத்தனை திட்டங்களை வகுத்தும், அதனால் ஒருவரும் பயனடையவில்லை. உங்களுடைய நோக்கம்தான் என்ன, அம்மா, சொல்லுங்கள் பார்ப்போம்?" என்றார் அவர்.

அவருடைய சாந்தம் நிறைந்த கண்களை ஏறிட்டுப் பார்த்த அவளுக்கு நடுக்கம் ஏற்பட்டது. தடுமாறிக் கொண்டே, "விடுதலை பெற வேண்டும் என்பதுதான். எல்லோருக்கும் நான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்து விட்டால், நான் விடுதலை பெறுவது சாத்தியமாகும் என்று எண்ணினேன்" என்றாள்.

"தாங்கள் விடுதலை என்று எதைக் கருதுகிறீர்கள்?" என்று கேட்டார் அவர்.

அவள் பணிவுடன், "நான் கேட்பது மிக சொற்பம்தான். எனக்கே நான் உரியவளாகவும் என்னுடைய நேரம் எனக்கே சொந்தமாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் என் அவா" என்றாள்.

"உங்களுக்காக மிக அதிகம் கேட்கிறீர்களே! எல்லாவற்றையுமே அல்லவா கேட்கிறீர்கள்!" என்றார் அவர்.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு இப்போது அவள் கண்ணீர் விடும் நிலைக்குக் கலங்கி விட்டாள். அவளுடைய

உள்ளத்தின் அமைதியை அவர் அடியோடு தகர்த்து விட்டார். தான் செய்வது சரி என்ற தன்னம்பிக்கையை அவளிடம் குலைத்து விட்டார். அவள் பீதியடைந்து போனாள். இந்த வீட்டில் இருக்கும் யாவரும் அவளைத்தானே சார்ந்து வாழ்ந்து வருகின்றனர் இத்தனை காலமும். அவள் செய்தது முழுவதும் தவறாக இருந்திருக்கும் பட்சத்தில் அவர்களுடைய கதி என்ன ஆவது?

"நான் இனி என்ன செய்வது?" என்றாள் அவள் தீனமான குரலில்.

"உங்களைப் பற்றிய நினைவையே அடியோடு விட்டு விடுங்கள்" என்றார் அவர்.

"ஆனால், இத்தனை வருஷ காலமாக, நான் என்னுடைய கடமைகளை எவ்வளவு கவனமாகப் பூர்த்தி செய்து வந்திருக்கிறேனே" என்றாள் சிறிது ஆவலுடன்.

"எப்போதும் உங்களுடைய சொந்த விடுதலையைப் பற்றிய எண்ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதானே?" என்றார்.

அவளால் இதை மறுக்க முடியவில்லை. அசையாமல் தனது கைகளை, வெண்ணிற சேலை ஆடைகளின் மீது வைத்தவாறு உட்கார்ந்திருந்தாள். பின், கடைசியாக, "எனக்கு ஒரு வழி காட்டுங்கள்" என்றாள்.

"உங்களுடைய விடுதலையைப் பற்றிய எண்ணத்தை விட்டு, மற்றவர்களை விடுபடச் செய்வது எப்படி என்பதைப் பற்றி யோசியுங்கள்" என்றார் அவர் அன்புடன்.

அவள் தலையை உயர்த்தினாள்.

"அதாவது மற்றவர்களை, உங்களிடமிருந்து" என்றார் அவர் மேலும் கருணையுடன்.

அவளுக்கு எப்போதும் மத சம்பந்தமான விஷயங்களில் பற்று கிடையாது. சந்தேகத்துடன் அவரை நோக்கி, "உங்களுடைய அந்நிய மதத்திலிருந்து எதையாவது எடுத்துக் கூறுகிறீர்களா? அப்படியானால், அதை என்னால் புரிந்து கொள்ள முடியாது" என்றாள்.

"நான் எந்த அந்நிய மதத்தைப் பற்றியும் பேசவில்லை" என்றார்.

"நான் கன்னிகா ஸ்திரீயாகி விட வேண்டும் என்று விரும்புகிறீர்களா?" என்று கேட்டாள்.

அவர் சிறிதும் லட்சியமின்றி, "நீங்கள் எதுவாகவும் ஆக வேண்டுமென்று நான் விரும்பவில்லை" என்றார்.

அவர் எழுந்து, வழக்கப்படி அவளை நோக்கி ஒரு புன்னகை செய்து விட்டு, விடை பெற்றுக் கொள்ளாமலே சென்று விட்டார். வேறு யாராவதாக இருந்தால் இதை முரட்டுத்தனமான செய்கையாகக் கருதியிருப்பார்கள். ஆனால் ஸ்ரீமதி ஹவிற்கு இப்போது தாங்கள் இருவரும் சேர்ந்து சுழிக்கும் நேரத்திற்கும், மறுபடி அவர்கள் சந்திக்கப் போகும் நேரத்திற்கும் இடையே பிரிவு என்பதே கிடையாது என்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது.

அவள் சிறிது நேரம் அசையவே இல்லை. ஜன்னல் கம்பிகளின் சித்திரத்தை, சூரிய ஒளியும் நிழலுமாகச் சேர்ந்து, ஒட்டுத் தரையின் மீது சித்திரமெழுதி யிருந்தன. காற்று குளிர்ந்திருந்தது. ஆனால் அறையில் அதிகக் குளிர் தெரிய வில்லை. ஒரு பெரிய கணப்புச் சட்டி மேஜைக்கு எதிரே சுவரோரம் வைக்கப்பட்டிருந்தது. நீறு பூத்திருந்த தணல்களிலிருந்து ஒளியற்ற சிறுசிறு நெருப்புப் பொறிகள் பறந்தன. அவள் நினைத்தது போல் எதுவும் அவ்வளவு சுலபமாக நடந்து விடவில்லை. சுதந்திரம் என்பது நாம் ஏற்பாடு செய்து கொள்ளக் கூடிய ஒரு விஷயமல்ல. அவள் சுதந்திரத்தை மரத்தில் தொங்கும் ஒரு பழத்திற்குச் சமமாக எண்ணி விட்டாள். அவள் அம்மரத்தை இத்தனை காலமாக வளர்த்து வந்தாள். அது பழுத்ததும் அவள் போய் பறிக்க, அது காயாக இருப்பதைக் கண்டாள்.

அவள் பெருமூச்செறிந்தாள். அடுத்த அறையிலிருந்து சியூமிங்கின் சிறு குழந்தை அழும் சப்தம் கேட்டது. அவள் எழுந்து சென்று, அதைக் கையில் எடுத்துக்கொண்டு வந்து கணப்புச் சட்டியின் அருகே அமர்ந்தாள். நெருப்பின் அருகே இருந்ததால் ஏற்பட்ட சுகத்தாலோ அல்லது அவளது ஆதரவான அணைப்பினாலோ சமாதானமடைந்த அக் குழந்தை அழுவதை நிறுத்தி விட்டு அவளுடைய முகத்தை நோக்கியபடி படுத்திருந்தது.

'நான் இந்தக் குழந்தையை நேசிக்கவில்லை. ஏன், எந்தக் குழந்தையையுமே நேசித்ததில்லை என்று கூறலாம். ஒரு வேளை ஒருவரையுமே நேசிக்க முடியாதிருக்கும் என்னுடைய சுபாவந்தான் எனக்கு இடைஞ்சலாக இருக்கிறதோ?' என்று அவள் எண்ணி விட்டாள்.

ஆனால் அதில் ஒரு விசேஷம் என்னவென்றால், அன்பில்லாத போதிலும் அவள் அக் குழந்தையை மிக ஜாக்கிரதை

யுடன் கையில் அணைத்து வைத்துக் கொண்டிருந்தாள். இங் உள்ளே வந்து அக் குழந்தையை எடுத்து அதற்குப் பாலூட்டியபோது அவள் கூட இருந்து கவனித்தாள். அக் குழந்தை பாலை நன்முக வயிறு நிறையக் குடித்ததைப்பற்றி அவளுக்கு மகிழ்ச்சி கூட உண்டாயிற்று.

பால் கொடுத்தானதும் அவள் இங்கிடம், "குழந்தையை என்னிடம் கொடு. நான் அவளை அவளுடைய தாயிடம் எடுத்துச் செல்கிறேன். இந்தச் சிறு பெண் உயிரோடு வாழ்வாள். அவளுடைய தாயின் உயிரையும் காப்பாற்றுவாள்" என்முள்.

சிறிது நேரத்திற்குப் பின் அவள் அக் குழந்தையைத் தன் கையில் அணைத்து எடுத்துக்கொண்டு, சூரிய ஒளி படர்ந்த வாசலின் வழியாக தனது பழைய பருதியை நோக்கிச் சென்முள். சியூமிங் அறைக்குள் அவ்வுயர்ந்த கட்டிலின் மீது படுத்திருந்தாள். இன்னும் செழிப்பைக் குறிக்கும் பின்னங்களுடன், படுக்கையைச் சுற்றி அதே திரைகள் போடப்பட்டிருந்தன. சியூமிங் கண்களை மூடிக்கொண்டு உதடுகளை இறுகக் கடித்தவாறு படுத்திருந்தாள். அவள் மிகவும் பலஹீனமாக யிருந்தாள். பட்டு விரிப்புகளிலூடே அவளுடைய கைகள் தளர்ந்து கிடந்தன. அவள் வந்த இத்தனை மாதங்களுக்குள் அவளுடைய கைகள் மிகவும் மாறுதலடைந்திருந்தன. அவள் வந்தபொழுது, வேலை செய்து வந்ததனால் அவளுடைய கைகள் முரடாகவும் பலம் வாய்ந்ததாகவும் இருந்தன. இப்போது அவை வெளுத்து மெலிந்து காணப்பட்டன.

ஸ்ரீமதி ஊ அன்புடன், "இதோ உன்னுடைய குழந்தை வந்திருக்கிறது, பார்! அவள் நன்முகச் சாப்பிட்டு போதிய பலம் பெற்றிருக்கிறாள். உன்னுடைய அணைப்பில் படுத்திருப்பதற்காக வந்திருக்கிறாள்" என்முள்.

சியூமிங் அசையவில்லை. ஸ்ரீமதி ஊ அவளுடைய கையைத் தூக்கி, குழந்தையை அவளருகே படுக்க வைத்து, அவளுடைய கையை அணைத்தாற் போல் எடுத்து விட்டாள். குழந்தைக்குப் போர்த்து விட்டாள். சியூமிங் குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள். பிறகு கண்களைத்திறந்து, "நீங்கள் செய்ததற்குக் கைமாறாக நான் ஒரு மகனைப் பெற்றுக் கொடுக்காததற்காக என்னை மன்னியுங்கள்" என்முள் பணிவுடன்.

"ஆண்களைப் போல் தான் பெண்களும் கடவுளால் அனுப்பப்படுகிறார்கள் என்பதை நான் அறியமாட்டேனா?

அதையும் தவிர, இந்தக்காலத்தில் பெண்களுக்கும் தான் பெருமை தருகிறார்களே" என்று பதில் கூறினாள் அவள்.

பிறகு அவளுக்குச் சகோதரர் ஆண்ட்ரூ கூறியது நினைவுக்குவந்தது. உடனே அவள், "நீ எனக்கு ஏதோ கடமை பட்டிருப்பதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. அப்படியெல்லாம் ஒன்றுமே கிடையாது தெரியுமா?" என்முள்.

சியூமிங் ஆச்சரியத்துடன் அவளை நோக்கி "ஆனால், பின் எதற்கு நான் இங்கு இருக்கிறேன்?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ படுக்கையின்மீது ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டாள். "நான் உனக்கு எத்தகைய தீங்கு இழைத்து விட்டேன் என்பது எனக்கு இப்போதுதான் விளங்குகிறது. நீ என்னுடைய சகோதரியைப் போன்றவள். ஒரு பவுண்ட் மாமிசத்தை விலை கொடுத்து வாங்குவது போல் உன்னை நான் விலைக்கு வாங்கி விட்டேன். எவ்விதம் எனக்கு அத்தகைய துணிவு ஏற்பட்டதென்றே எனக்குப் புரியவில்லை, உன்னுடைய ஆத்மாவைப்பற்றிய எண்ணமே எனக்கு இல்லாமற் போய்விட்டது. இதற்குப் பரிகாரமாக என்னால் என்ன செய்யக்கூடும்?" என்று கேட்டாள்.

இதை அவள் தனது இனிய குரலில், சிறிதும் பட படப்போ, அல்லது அழுத்தமோ இன்றியே கூறினாள். சியூமிங்கின் முகத்தில் பீதி காணப்பட்டது. அவள் தடுமாற்றத்துடன், "ஆனால் நான் எங்கே போவது?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ, சியூமிங்கால் தன்னை முற்றிலும் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதைக் கண்டாள். சியூமிங், பணக்கார சீமான்களின் முறையில் தான் அவ்வீட்டில் இருப்பதால் ஒருவித உபயோகமுமில்லை என்பதை அவள் நாசூக்காகத் தெரிவிக்கிறாளாக்கும் என்று எண்ணி விட்டாள்.

"நான் உன்னை எங்கும் போகும்படி சொல்லவில்லை. என்னால் உனக்கு பெருந்தீங்கு நேர்ந்து விட்டது என்றுதான் சொல்லுகிறேன். அதை இப்படி எடுத்துக் கொள்ளேன்: இப்போது நீ உன்னிஷ்டப்படி நடப்பதாக யிருந்தால், அதாவது வேறு ஒருவரையும் பொருட்படுத்தாமல் செய்வதாயிருந்தால், நீ என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

சியூமிங் திகைப்படைந்தவளாய், "ஒருவரையும் பொருட்படுத்தாமல் எப்படி இருக்க முடியும்? முதலாவதாக, எஜமானரும் தாங்களும் இருக்கிறீர்கள். மேன்மை தங்கிய

உங்கள் இருவரையும் தவிர, குடும்பமே வேறு இருக்கிறது" என்றுள்.

"நீ எதற்காக அந்த அயல் நாட்டுப் பாதிரியாரிடம், நீ இறந்து விட்டால் உன் குழந்தையை எடுத்துக் கொள்ளும்படி சொன்னாய்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"ஒரு பெண்ணைக் கொடுத்து உங்களுக்கு வீண் சிரமம் தருவதை நான் விரும்பவில்லை" என்றுள் சியூமிங்.

"நீ எதற்காகத் தற்கொலை செய்து கொள்ள முயன்றாய்?" என்று மீண்டும் கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"இங் என்னிடம், என்னுடைய வடிவத்தைப் பார்த்தால் நிச்சயம் ஒரு பெண் தான் பிறக்கும் என்று தெரிகிறது என்று கூறினாள். ஆதலால் நான் எனக்குள், 'அபாக்யவதிகளான நாம் இவ்விருவரும் ஒன்றுகப் போய் விடுவோம். நம்மால் ஒருவருக்கும் தொந்திரவு வேண்டாம்' என்று கூறிக் கொண்டேன்" என்றுள்.

"உயிரோடு இருப்பதைப் போல் மரணமும் தொந்திரவு கொடுக்கக் கூடியது தான்" என்றுள் ஸ்ரீமதி ஊ.

பேதையான சியூமிங், "இல்லை, என்னுடைய மரணத்தால் தொந்திரவு ஏற்படாது. ஏனெனில் என்னால் யாருக்கும் எவ்வித பிரயோஜனமும் இல்லை" என்றுள்.

ஸ்ரீமதி ஊ இதற்குப் பதிலளிக்கவில்லை. அவளுக்கு இன்னது செய்வதென்றே விளங்கவில்லை. அவள் எழுந்து, "இம்மாதிரியான எண்ணங்களை யெல்லாம் விட்டு விடு. நீ இறந்து போனால், இந்தக் குழந்தையை வளர்க்கும் பாடு பெரிய பாடாகிவிடும். ஒரு பெண் குழந்தை இறந்து போனால் பரவாயில்லை என்று நினைப்பவர்களில் ஒருத்தி அல்ல நான் என்பது உனக்குத் தெரியும்" என்றுள்.

"தாங்கள் கருணை நிறைந்த உள்ளம் படைத்திருக்கிறீர்கள்" என்று கூறிய சியூமிங், மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள். அவளுடைய மூடிய இமைகளிலிருந்து, கண்ணீர் துளிர்த்து வெளிவந்தது. ஸ்ரீமதி ஊ இதைப் பார்த்தாள். ஆனால் அதே சமயம் சியூமிங்கின் கை அக் குழந்தையை இறுக அணைத்துக் கொண்டதையும் கவனித்தாள். ஆதலால் அதை ஒரு நல்ல அறிகுறியாகவே எடுத்துக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றுள்.

அவள் வாசலைக் கடந்து சென்றபோது, ஸ்ரீமான் ஊ, எங்கோ வெளியே போய்விட்டு அப்போதுதான் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர்கள் சிறிதும் எதிர் பார்க்காத வாறு யொருவரை ஒருவர் நேரே சந்தித்து விட்டனர். ஆனால் அவர் தான் ஒப்புக்கொள்ளக் கூடாத ஏதோ ஒரு காரியத்தைச் செய்திருக்க வேண்டும் என்று அவளுக்கு விளங்கியது. ஏனெனில் அவளைக் கண்டவுடன் அவர் முகம் சிவந்து, நெற்றியில் சிறு சிறு வியர்வைத் துளிகள் அரும்பின.

"என் பிள்ளைகளின் தாயே" என்று கூப்பிட்டார் அவர்.

அவள் மிக சகஜமாக, "நான் இப்பொழுதுதான் இரண்டாவது எஜமானியைப் பார்த்துவிட்டு வருகிறேன். நாம் அவளைப்பற்றிக் கவனிக்க வேண்டும். அவள் ஏன் தற்கொலை செய்துகொண்டாள் என்றால், அவள் தனக்கு ஒரு பெண் குழந்தைதான் பிறக்கும் என்று பயந்து, தானும், அப்பெண்ணும் இருவருமாகச் சேர்ந்து இவ்வீட்டிற்கு ஒரு பாரமாக இருப்பானேனென்று எண்ணிவிட்டாளாம்" என்றுள்.

"என்ன முட்டாள் தனம்! அதாவது நாம் ஏதோ சாதாரணப் பட்டவர்களைப் போலவும், ஒருவர் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதைப் பொருட்படுத்துபவர்கள் போலவும் எண்ணிவிட்டாள் போலும்!" என்றார் ஸ்ரீமான் ஊ.

"நான் உங்களுடன் திரும்ப வருகிறேன். உங்களுடைய புத்திமதி இப்போது எனக்குத் தேவையாயிருக்கிறது" என்றுள் ஸ்ரீமதி ஊ. இருவருமாகத் திரும்பி அப்பெரிய அறைக்குள் நுழைந்தனர். இருவரும் சேர்ந்து வாழ்ந்துவந்த நாட்களில் அவர்கள் இந்த அறையில் எத்தனையோ மணி நேரங்களைக் கழித்திருக்கின்றனர். அந்த அறைக்கு அடுத்த அறையில்தான் சியூமிங் தன் குழந்தையை அணைத்துக்கொண்டு படுத்திருந்தாள். ஆனால் அவர்கள் பேசுவது அங்கு கேட்டு விடுமோ என்று பயப்படுவதற்கில்லை. அவர்களுக்கு உயரே மிக நெடிதாக எழும்பிய சுவர்களும், அகன்ற கூரையின் உத்தரங்களும் எந்த மனிதக் குரலையும் விழுங்கிவிடக் கூடியதாயிருந்தன.

ஸ்ரீமதி ஊ, "அவளோ இப்போது இவ்வீட்டிலிருக்கிறாள். அவளையும், அவள் பெற்றிருக்கும் அக் குழந்தையையும் நாம் என்ன செய்வது? அவள் உங்களுடைய மனத்திற்கு ஒத்த வளாயில்லை என்பதை நான் நன்றாக அறிகிறேன். ஆயினும்,

அவள் இன்னும் இங்குதானிருக்கிறாள். அதற்காக நான் தங்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்" என்றாள்.

ஸ்ரீமான் உஷா ஒன்றும் தோன்றாது விழித்தார். காலை நேரமாதலால், அவர் கம்பளி ஆடை அணிந்திருந்தார். ஆனால் நேரம் ஆக ஆக குளிர் சற்று குறைந்து வந்தது. ஆயினும் சிறிது மனக் கலக்கம் ஏற்பட்டவுடனே அவருக்கு வியர்த்து வழிந்தது.

அவர் தடுமாற்றத்துடன், "எனக்கு நிஜமாகவும் அவமானமாக இருக்கிறது...நீ அவ்வளவு யோசனையுடன் எல்லாவற்றையும் செய்தும்கூட நான்....ஆனால் அவள் மிகவும் நல்லவள்தான். ஆனால் உனக்குத்தான் தெரியுமே. நல்லவளாயிருப்பது ஒரு பெண்ணிடம் இருக்கக் கூடிய சிறந்த குணம்தான். ஆனால்..." என்றார்.

"நான் சுயநலமாக நடந்துகொண்டு விட்டேன்" என்றாள் அவள். அவள் எப்போதும்போல் தன் மடிமீது இரு கைகளையும் கோர்த்து வைத்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவள் அவரைப் பாராமல், தரையில் விழுந்த நிழல்களைப் பார்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அறைக்கு வெளியே ஒன்னிலோரமாக இருந்த மரங்கில் மரங்கள் சூரிய ஒளியில் மினிர்ந்தன. அதன் நீண்ட நீண்ட இலைகள் காற்றில் அசைந்தாடின. அவள் சகோதரர் ஆண்ட்ரூவை நினைத்துக் கொண்டாள். திடீரென்று அப்போது அவளுக்கு அவர் கூறியதன் பொருள் என்ன என்பது விளங்கியது. அவள் தன்னைத்தானே மற்றவர்களுக்கு முழுவதும் அர்ப்பணம் செய்யாத வரை அவளுக்கு விடுதலை கிடைக்கப் போவதில்லை. ஆனால் இதைச் செய்ய வேண்டுமென்றால், அவள் எக்காரியத்தை இதுவரை மிகமிக வெறுத்து வந்தாளோ, அதையே இப்போது எடுத்துக்கொள்வது ஒன்றுதான் வழி.

அவள் கண்களை உயர்த்தாமலே, "நான் என்னுடைய தவறை இப்போது அறிந்து கொண்டேன். நீங்கள் விரும்புகிறபடியே, இனி யாவும் இருக்கட்டும். நீங்கள் விரும்பினால் சியூமிங்கை நாம் அனுப்பி விடுவோம். நானே திரும்ப வந்து விடுகிறேன். நீங்களும் நானும் இந்த சில மாதங்களாக நடந்ததையெல்லாம் மறந்துவிடுவோம்" என்றாள்.

அவரிடமிருந்து ஆனந்தக் கூச்சல் கிளம்பும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தாள் அவள். ஆனால் அது வரவில்லை. அந்த மௌனம் மிகக் கடூரமானதாகப் போகவே, அவள் நிமிர்ந்து நோக்கினாள். அவருடைய சிவந்த முகத்தில்

வியர்வை பொங்கி வழிந்தது. அவள் தன்னைப் பார்ப்பதை அறிந்ததும் அவர், துன்பம் நிறைந்த ஒரு சிரிப்பு சிரித்து விட்டு, தமது காலரின் மடிப்பில் வைத்திருந்த சில்க் கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

"எனக்கு மட்டும் தெரிந்திருந்தால்...எனக்கு இவ்விதம் கனவிலாவது தோன்றியிருந்தால்..." என்று திணறினார்.

அவள் உள்ளத்தில் உறைந்த பனிக்கட்டியை வைத்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவருக்கு இனி அவள் வேண்டியதில்லை! அவள் காதில் விழுந்தது என்னமோ உண்மை! அவர் தாமாகவே வேறொருத்தியை விரும்பி ஏற்றுக் கொண்டுவிட்டார்!

"அவளைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்றாள் அவள் மிருதுவான குரலில்.

அவர், திக்கித்திக்கி, நடுநடுவே நிறுத்தி நிறுத்திச் சொல்லலானார். இடை இடையே இளைப்பு நிறைந்த ஒரு சிரிப்பு சிரித்தவாறு அவர், தாம் அவளை இப்போது ஒரு தனி வீட்டில் வைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பதாகக் கூறினார். அவள் குழந்தைத்தனமும் இளமையும் படைத்த ஒரு பெண் என்பதாகவும் கூறினார்.

"இந்த வீட்டில் கொண்டுவந்து வைத்து, உன்னுடைய பொறுப்பை மேலும் அதிகரிக்கச் செய்ய நான் விரும்பவில்லை" என்றார் அவர்.

அவள் தன்னுடைய அழகிய நீண்ட விழிகளை அகல விழித்தவாறு, மணியடிப்பதுபோன்ற குரலில், "நீங்கள் சந்தோஷமடைந்தால், அது என்னுடைய பொறுப்பை அதிகரிக்கச் செய்யுமா? அவளை இங்கேயே வந்து உங்களுடைய சொந்த வீட்டிலேயே வாழச் சொல்லுங்கள். உங்களுடைய வீடு எதற்காகப் பிரிக்கப்பட வேண்டும்?" என்றாள்.

அவர் எழுந்து அவளிடம் சென்று அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டார். அவருடைய தடித்த கையில் அவளது மெல்லிய குளிர்ந்த கரம் படிந்தது. அவர் மன நெகிழ்ச்சியுடன், "நீ மிகவும் நல்ல பெண்மணி. எல்லா மனிதர்களுக்கும் இந்தப் பாக்கியம் கிடைக்காது. ஒரு மனிதனுக்குத் தான் விரும்புவதையும் அடைந்து அதே சமயம் தனது சொந்த வீட்டிலேயே அமைதியாகவும் வாழக் கிடைப்பது அரிது" என்றார்.

அவள் ஒரு புன்னகை செய்துவிட்டுத் தன் கரத்தை எடுத்துக் கொண்டாள்.

ஆனால் அவர்கள் பிரிந்த பின் வெகுநேரம் வரை, அவள் தன் உள்ளத்தில் ஏற்பட்ட சந்தோஷத்தோடு கூட ஏற்பட்ட கடூரத்தை கண்டும் வியந்தவண்ணமிருந்தாள். தன்னுடைய ஸ்தானத்தை வகிப்பதற்காக அவளாகவே ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு விஷயம்! அவராகவே தமக்காக ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதோ முற்றிலும் வேறானது! ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சிக்கல் நிறைந்த தொடர்புகளை எண்ணி வியப்புற்றாள். தான் அவரைக் காதலிக்காததால் தான் அவரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டதாக எண்ணினாள் அவள். ஆனால் அவர் தன்னை நேசிப்பதை நிறுத்திவிட்டார் என்பதை அறிய தன்னுள்ளத்தில் ஏற்பட்ட கர்வபங்கத்தை உணர நேரிட்டதும், அவளுக்குத் தான் இன்னும் அவரிடமிருந்து முற்றிலும் விடுதலை பெறவில்லை என்பது புலப்பட்டது. சகோதரர் ஆண்ட்ரூ கூறியது உண்மை! அவள் எப்போதும் தன்னைப் பற்றி மாத்திரமே எண்ணி வந்திருக்கிறாள்!

* * *

"நான் என்னுடைய நினைவை ஒழிப்பது எப்படி?" என்று அவள் சகோதரர் ஆண்ட்ரூவைக் கேட்டாள்.

"மற்றவர்களைப்பற்றி மட்டுமே எண்ணுங்கள்" என்று பதில் கொடுத்தார் அவர்.

"அப்படியானால் நான் எப்போதுமே மற்றவர்களுக்கு விட்டுத் தரவேண்டும் என்று கூறுகிறீர்களா?" என்றாள் அவள்.

"விட்டுக் கொடுப்பதில்லை என்றால் அப்போது நீங்கள் உங்களைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தமாகும். மற்றவர்களுக்காக நாம் தியாகம் செய்துதான் ஆக வேண்டும்" என்றார்.

"என்னுடைய பிள்ளைகளின் தகப்பனார் மற்றொரு பெண்ணை இவ்வீட்டிற்குள் கொண்டுவர விரும்புகிறார். நான் அதற்குச் சம்மதிக்க வேண்டுமா?" என்று கேட்டாள் அவள்.

"நீங்கள் செய்த பாவம்தான் முதல் பெண்ணை இங்கே கொண்டு வந்தது" என்றார் அவர்.

அவளுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அவளுடைய உள்ளத்தில், திடீரென்று தோன்றும் ஒரு சிறிய புயலைப்போல் கோபம் பொங்கி யெழுந்தது.

அவள் எரிச்சலோடு, "நீங்கள் இப்போதுதான் அசல் ஒரு பாதிரியைப்போல் பேசுகிறீர்கள்! நம்முடைய உடலை, நம்முடைய விருப்பம் சிறிதும் இன்றி ஒரு மனிதருடைய கையில், வருடக் கணக்கில், பலவந்தப்படுத்திக் கொடுப்பதென்றால் அது எத்தகைய காரியம் என்பதை உங்களால் சிறிதும் புரிந்துகொள்ள முடியாது" என்றாள்.

அவளுடைய உள்ளத்தில் தான் அனுபவித்து வந்த துயரங்களையெல்லாம் அவரிடம் கூறி அவரையும் அதில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டுமென்ற விசித்திரமான ஆவல் எழுந்தது. ஆதலால் அவள் எதையும் ஒளிக்காமல் கூறிக் கொண்டே போனாள். "மிக நாசூக்கான சரீரத்தை அருமை தெரியாத கைகளில் ஒப்படைக்க வேண்டும்! ஒருவருக்கு மோகவெறி ஏறஏற மற்றவரின் சரீரம் சில்லிட்டு விறைத்துப் போகிறது! இதயம் துன்புற்றுத் தளர்ந்து போகிறது! மனத்திலோ அருவருப்பு நிறைகிறது! ஆயினும் இத்தனை நேர்ந்த போதிலும், குடும்பத்தில் சமாதானம் நிலவவேண்டும் என்பதற்காக பலவந்தமாக உடலைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம்!" என்றாள்.

அவருடைய முகம் பரிசுத்தமாக, ஒரு சிறிதும் மாறுதலின்றி விளங்கியது. "ஆன்மாவிற்குப் பலியாக சரீரத்தை வழங்குவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன" என்றார் அவர்.

அவள் பெருமூச்செறிந்தாள். "நான் இந்த இரண்டாவது பெண்மணியை இங்கு அழைத்து வருவதற்கு அனுமதித்து விடட்டுமா?" என்று கேட்டாள்.

"உங்களுடைய அனுமதியில்லாமல் வேறொரு இடத்தில் இருப்பதைக் காட்டிலும் உங்களுடைய அனுமதியுடன் இங்கே இருப்பது நல்லதல்லவா?" என்றார் அவர்.

"ஒரு அந்நியப் பாதிரியார் இவ்விதம் எனக்கு புத்திமதி கூறுவார் என்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை" என்றாள் அவள் மிகுந்த எரிச்சலுடன்.

அவள் மேலே பேசுவதை நிறுத்தி விட்டுப் புத்தகத்தைத் திறந்தாள். அவர் கூறியபடி அன்று 'ஹீப்ரு' பாடல்களைப் படிக்க ஆரம்பித்தாள். நேரம் செல்லச் செல்ல, அவற்றில்

பொதிந்திருக்கும் கருத்து இன்னதென்று விளங்க விளங்க அவள் மனம் அதில் லயிக்க ஆரம்பித்தது. இங்கே மனித னுடைய இதயம், தான் வணங்கும் பொருளை நோக்கிக் கூவி அழைத்தது. பூஜிப்பது என்பதுதான் என்ன? வாழ்வு, பிறப்பு, இறப்பு யாவும் இறைவனுல் படைக்கப்பட்டவை. அவனுல் வகுக்கப்பட்டவை; ஆதலால் அவற்றிற்குப் பொரு ளுண்டு என்பதை உணர்ந்து எல்லாம் வல்ல அந்த இறை வனின் மீது நம்பிக்கை வைத்து வாழ்வைச் சுவையுடன் எதிர் பார்ப்பதைத் தவிர பூஜை என்பது வேறு என்ன!

"உங்களுடைய கடவுளும் எங்களுடைய தெய்வமும் எல்லாம் ஒன்றுதானே?" என்று கேட்டாள்.

"ஆம். எல்லாம் ஒன்றுதான். வேறுபட்டவையல்ல" என்று அவர் பதில் கூறினர்.

அதை அவள் மறுத்து "ஆனுல், சகோதரி வேறெனியா அப்படியல்லவென்று எனக்குக் கூறியிருக்கிருளே. அவள் எப்போதும் எங்களோயெல்லாம் அவளுடைய உண்மையான கடவுளின்மீது நம்பிக்கை வைக்கும்படி கூறுவாள். எங்க ளுடைய தெய்வத்தை நாங்கள் நம்பக் கூடாது என்றும், அவை யிரண்டும் ஒன்றல்ல என்றும் கூறியிருக்கிருள்" என்ருள்.

அவர் பிரதிவாலை குரலில், "ஒரு கோவில் என்ருல் அதில் சில மூட ஆச்சாரங்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். உண்மையில் கடவுள் ஒருவரே ஒருவர்தான் இருக்கிறார். அவருடைய நாமங்கள்தான் அநேகம்" என்ருர்.

"அப்படியாயின் இந்தப் பூமியில், எந்த இடத்தில் இருப் பவர்களாயினும், எந்தக் கடவுளின்மீது நம்பிக்கை வைத்திருப் பவர்களாயினும் அவர்கள் இந்தக் கடவுள் ஒருவரின் மீதுதான் நம்பிக்கை வைப்பவர்களாகிறார்களா?" என்று கேட்டாள்.

"ஆம். ஆதலால் சகோதரர்களும் ஆகிறர்கள்" என்ருர் அவர்.

அவள் பிடிவாதத்துடன், "எனக்கு ஏதன் மீதுமே நம்பிக்கை யில்லையென்ருல்?..." என்று கேட்டாள்.

"கடவுள் பொறுமையாக யிருக்கிறார். அவர் பொறுமை யுடன் காத்திருப்பார். ஆயிரந்தமில்லாத காலம் ஒன்று இருக்கிறதல்லவா?" என்று கூறினர் அவர்.

ஏதோ ஒருவகை சக்தி, அவரையும் தன்னையும் ஊடுருவிப் பாய்ந்து செல்வதைப் போன்ற உணர்ச்சி உண்டாயிற்று அவளுக்கு. ஆனுல் அது அவரிடமிருந்து ஆரம்பமாகவில்லை. அவளிடம் சென்றதுடன் முடிந்து விடவில்லை. அவர்கள் அது ஊடுருவிச் செல்லும் சாதனப் பொருளாக மட்டுமே விளங்கி னர்கள்! அச்சக்தி வெள்ளமோ, பூமியின் ஒரு துருவத்தில் ஆரம்பித்து மற்றெரு துருவம் வரை சென்றது.

அவள் திரும்ப, "தெய்வம் பொறுமையாக யிருக்கிறது. பொறுமையுடன் காத்திருக்கிறது" என்று கூறினுள்.

இந்த வார்த்தைகளோடு அவர்கள் பிரிந்தனர். சகோ தரர் ஆண்ட்ரூ ஒரு பழைய கருப்புத் துணியில், புத்தகங்களை எடுத்துக் கட்டி தமது கைக்கடியில் வைத்துக்கொண்டு கிளம்பினர். அவள் புத்தக அறையின் வாசற்படியில் நின்று, அவர் வாசலைக் கடந்து செல்வதைப் பார்த்துக் கொண் டிருந்தாள். அவருடைய பேருருவம் முன்புறமாக சாய்ந்து சாய்ந்து நடந்தது. அவ்வகன்ற தோள்கள் மேலிருந்த தலையைத் தாங்குவதற்குச் சிரமப்படுவது போல் தோற்ற மளித்தது. அல்லது, ஒருவேளை அவர் தமக்கு முன்னுலிருக்கும் பாதையிலேயே கண்களை ஊன்றியவராய் நடந்து செல்வதால் அப்படித் தோன்றலாம் என்று எண்ணினுள். அவர் ஒரு போதும் தமது தலையை உயர்த்தி தெருவின் மறுகோடியில் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்தவரில்லை.

அவள் திரும்பச் சென்று புத்தக அறையில் அமர்ந்தாள். இனமும் பாடம் முடிந்த பிறகு, சுமார் ஒரு மணி நேரத்திற்கு அங்கேயே உட்கார்ந்து, சகோதரர் ஆண்ட்ரூ கற்பித்து விட்டுச் சென்றதையெல்லாம் மீண்டும் நினைவுறுத்திப் பார்ப்பாள். அவர்கள் இருவருமாகச் சேர்ந்து படித்ததை மீண்டும் படிப்பாள். அவர் கொடுத்துச் சென்ற பாடங்களை யெல்லாம் பார்ப்பாள். அவர் கூறிச் சென்ற வார்த்தைகளைச் சிந்தனை செய்து பார்ப்பாள்.

ஆனுல் இன்று அவள் உட்கார்ந்து ஒருமணி நேரம் கூட ஆகியிருக்காது. அதற்குள் வெளியே முன்புற வாசலில் ஏதோ கூச்சலும் சப்தமும் வருவதைக் கேட்டுத் தனது தலையை உயர்த்தி, அதைக் கூர்ந்து கேட்டாள். எதுவாகயிருந்தாலும் இன் இப்போதே செய்தி கொண்டு வந்து விடுவாள். அதைப் பற்றி அவள் நன்ருக நினைத்துப் பார்ப்பதற்குள், இன் அங்கு ஓடி வருவதைக் கண்ணுற்ருள். அவள் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தாள். வந்தவள் முன் துணியால் முகத்தை மூடிக்கொண்டு விம்மினுள்.

ஸ்ரீமதி ஊ உடனே எழுந்துவிட்டாள். அவள் கையி லிருந்த புத்தகம் நழுவி கீழே விழுந்தது. ஏதோ பெரிய துக்ககரமான சம்பவம் நடந்திருக்கிறது. அவள் தனது மூத்த மகனுகிய லியாங்மோவை நினைத்துக் கொண்டாள். ஆனல் இன்று காலே அவன் வழக்கம்போல் தான் வீட்டைவிட்டுச் சென்றான். பிறகு அவள் ஸ்ரீமான் ஊவை நினைத்துக்கொண் டாள். அதற்குள் இங் வாசற்படிக்கு வந்து விட்டாள். அவள் துணியை முகத்திலிருந்து எடுத்துவிட்டு "ஐயோ, அம்மா! அந்தப் பாதிரியார்..." என்று கத்தினுள்.

"அவருக்கு என்ன? இங்கிருந்து சென்று இப்போது சிறிது நேரம்தானே ஆயிற்று?" என்று வேகமாகக் கேட்டாள்.

"தெருவில் அவரை அடித்துப் போட்டு விட்டார்கள். அவருடைய மண்டை பிளந்து விட்டது" என்று கூவினுள் இங்.

"அடித்துப்போட்டு விட்டார்களா?" என்று கேட்ட ஸ்ரீமதி ஊவின் குரல் எதிரொலியே போல் கேட்டது.

இங் விம்மியவாறு, "இதெல்லாம் அந்தத் திருட்டுப் பயல்களின் வேலே. அந்தக் கொள்ளேக் கூட்டத்தினர் இருக் கிறர்களே—பாவிகள்! அவர்கள் பணம் லேவாதேவி செய்யும் கடைக்காரனுடைய கடையைக் கொள்ளேயிட்டுக் கொண்டி ருந்தனராம். அக் கடைக்காரன் கத்தியழுதுகொண்டு கடவுளேச்சபித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட பாதிரியார் அவனேக் காப்பதற்காகச் சென்றராம். அந்த இளேஞர்கள் வெளியே வந்து அவர் தலேமீது நன்றாக அடித்து விட்டன ராம்" என்றுள்.

ஸ்ரீமதி ஊ அந்தக் கொள்ளேக் கூட்டத்தைப் பற்றி அதிகம் கேள்விப்பட்டதில்லே. ஆனல் இந்தத் திருட்டுக் கூட்டத்தினர் பட்டணத்தின் தெருக்களிலும் நாட்டுப்புறங் களின் ரோடுகளிலும் திரிந்து கொண்டிருக்கின்றனர் என்ப தைக் கேட்டிருக்கிறுள். நிலத்துக் காரியதரிசி கொண்டு வந்து காட்டும் கணக்கில் எப்போதும் ஒரு தொகை, கொள்ளேக் கூட்டத்தினருக்காகக் கொடுக்கப்பட்டது என்று தனியாக எழுதப்பட்டிருக்கும்.

"சகோதரர் ஆண்ட்ரூ இப்போது எங்கே இருக்கிறார்?" என்றுள்.

"அவரை அவருடைய வீட்டிற்கு எடுத்துச் சென்று விட் டார்களாம். அவர் படுக்கையில் படுத்திருக்கிறாராம். வாசல்

காப்போன் தகவல் கொண்டு வந்திருக்கிறன். உங்களே அவர் பார்க்க வேண்டுமென்று கூறினராம்" என்றுள் இங்.

"நான் இப்போதே போகவேண்டும். புறப்படுவதற்குச் சிறிது உதவி செய், பார்ப்போம்" என்றுள் ஸ்ரீமதி ஊ.

"நான் பல்லக்குத் தூக்கும் ஆட்களே வரச்சொல்லு கிறேன்" என்று கூறினுள் இங்.

"வேண்டாம். அதற்கு நேரமில்லே. தெருவிற்குச்சென்று ஒரு ரிக்ஷாவைப் பிடித்துக் கொள்ளலாம்" என்றுள் ஸ்ரீமதி ஊ.

அவள் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் வீட்டினருக்கு, ஸ்ரீமதி ஊ தனது வாழ்விலேயே முதன் முறையாக இன்று ஒரு அன்னியருடைய வீட்டிற்குச் சென்றிருக்கிறுள் என்ற விஷயம் தெரிந்தது. ரிக்ஷாவில் நேராக நிமிர்ந்து உட்கார்ந்திருந்த அவள் ரிக்ஷா இழுப்பவனே விளித்து, "உன்னுடைய வழக்கமான வேகத்தை இரட்டிப்பாக்கினு யானுல் நான் உனக்கு இரண்டு பங்காகச் சேர்த்து பணம் கொடுப்பேன்" என்று கூறினுள்.

அவன் தனது கழுத்தைத் திருப்பி "நீங்கள் மூன்று மடங் காக்கினுல் நான் மூன்று மடங்கு வேகத்துடன் செல்வேன்" என்று கத்தினன்.

அவளுக்கு வெகு தூரத்திற்குப் பின்னல் இங் இரண் டாவது ரிக்ஷாவில் வந்துகொண்டிருந்தாள். ஆனல் ஸ்ரீமதி ஊ ஜனங்கள் என்ன சொல்வார்கள் என்பதை ஒரு முறைகூட எண்ணிப் பார்த்தவளில்லே. அவளுடைய மனத்தில் அப்போது ஒரே ஒரு எண்ணம்தான் வியாபித்திருந்தது. எப்படியாவது காலம் தப்புமுன் அவரிடம் விரைந்து சென்று, தனது மிகுதி நாட்களுக்காக வேண்டிய உபதேசத்தைப் பெற்றுவிட வேண்டும் என்ற ஒரே அவா அவள் உள்ளத்தில் குடிகொண் டிருந்தது.

ஆதலால் அவள் அவ்வீட்டின் செங்கற் சுவருக்கு மத்தி யில் அமைக்கப்பட்டிருந்த ஒரு எளிய மரக்கதவு வாயிற் படியில், வேறு எதையுமே கவனிக்காதவளாய் புகுந்து உள்ளே சென்றுள். அங்கு ஒரு கிழவி அழுதவாறு காத்துக் கொண்டுநின்றிருந்தாள்.

"எங்கே இருக்கிறார் சகோதரர் ஆண்ட்ரூ?" என்று கேட்டாள் அவளே நோக்கி.

அக்கிழவி அவளை ஒரு தாழ்ந்த செங்கற் கட்டிடத்திற்குள் அழைத்துச் சென்றாள். அங்கே முன்னாலிருந்த கூடத்தில் அநேக குழந்தைகள் நின்று அழுதுகொண்டிருந்தன. அதன் வழியாக அவளை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றாள் அக் கிழவி.

அங்கே ஒரு சுறுகிய ஒரு மூங்கிற் கட்டிலில் சகோதரர் ஆண்ட்ரூ படுத்திருந்தார். கந்தல் துணிகளை அணிந்த பல ஆண்களும் பெண்களும் அவரைச் சுற்றி நின்றிருந்தனர். ஸ்ரீமதி ஊவிற்காக அவர்கள் விலகி வழிவிட்டு நின்றனர். அவளுடைய வருகையை உணர்ந்தவர்போல அவர் கண்களைத் திறந்து பார்த்தார். அவருடைய தலையை ஒரு முரட்டுத் துணியால் கட்டியிருந்தனர். அதற்கடியிலிருந்து பெருகிய இரத்தம் அவருடைய கன்னத்தில் வழிந்தோடி வந்தது. அவரது தலைக்கடியில் வைத்திருந்த தலையணை ரத்தந்தால் தோய்ந்து கிடந்தது.

"இதோ நான் இங்கிருக்கிறேன்; நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்" என்றாள் அவள்.

அவரால் பிறகு நேரம் வரை பேசவே முடியவில்லை. அவருடைய பிராணன் போய்க்கொண்டிருந்தது. அவருடைய கரிய விழிகளில் தோன்றிய ரூபியப் பார்வையை அவள் புரிந்து கொண்டாள். பிறகு அவருடைய இச்சா சக்தியின் பலத்தினால் அவைகளில் ஒரு ஒளி தோன்றியதையும் கண்டாள். அவளை நோக்கியபடி படுந்திருந்த அவரது உதடுகள் அசைந்தன. மார்பு ஒரு பெரும் மூச்சினால் மேலெழும்பி கீழே தணிந்தது.

அவர் மிகத் தெளிவாக, "என்னுடைய ஆட்டுக்குட்டி களைக் காப்பாற்றுங்கள்" என்றார்.

பிறகு மரணம் அவரை எடுத்துச் செல்வதைப் பார்த்தாள் அவள். சுவாசம் நின்றது. கண் இமைகள் படபடத்தன. கண்களில் தோன்றிய அவ்வொளி மறைந்தது. அவருடைய பெரிய சரீரம் ஒருமுறை வெடவெடத்தது. அவர் வீசிய கைகள் இரண்டும் கட்டிலின் இரண்டு புறமும் விழுந்து கீழே தில்லென்றிருந்த செங்கல் தரையைச் சென்று தொட்டன. அவள் குனிந்து அவரது வலது கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள். கந்தல் துணியைக் கட்டிக்கொண்டிருந்த ஒரு மனிதன் முன்னால் வந்து அவருடைய இடது கையை எடுத்துக் கொண்டான். இரண்டு கைகளையும் பிடித்தவாறு இருவரும் நின்றனர். கட்டிலின் மறுபுறத்தில் நின்றிருந்த

அம்மனிதனை அவள் ஊடுருவிப் பார்த்தாள். அவன் ஒன்றுமேயில்லை, ஒரு வேலைக்காரன், ஒரு ஏழை, ஒரு பிச்சைக் காரன். அவன் பணிவோடு அவளைப் பார்த்துவிட்டு, தான் பிடித்திருந்த கையை, அசைவற்றுக் கிடந்த அவரது மார்பின் மீது மெல்ல வைத்தான். அவளும் மற்ற கையை அதன்மீது வைத்தாள்.

குழந்தைகளெல்லாம் அறைக்குள் ஓடி வந்தன. இப்போது சவப்படுக்கையாகிவிட்ட அவரது கட்டிலை சூழ்ந்து கொண்டு, "அப்பா, அப்பா" என்று கதறியழுதன. அவை யெல்லாம் பெண் குழந்தைகள்தாம் என்பதை அவள் கவனித் தாள். எல்லோரையும் விட மூத்த பெண்ணிற்குப் பதினைந்து வயதுதானிருக்கும். பெரிய பெண்கள், நடக்க முடியாத சிறிய குழந்தைகளைத் தூக்கிக் கொண்டிருந்தனர். அப்பெண் கள் சகோதரர் ஆண்ட்ரூவின் மீது சாய்ந்துகொண்டு அவரைத் தங்களது சிறு கரங்களால் தொட்டுத் தொட்டுப் பார்த்தனர். அவரது தாடியைத் தடவிக் கொடுத்தனர். அழுதவண்ணம் தங்களது ஆடையின் முனையை எடுத்து அவரது முகத்தில் வழிந்து வந்த இரத்தத்தைத் துடைத்து விட்டனர்.

"நீங்கள் எல்லோரும் யார்?" என்று அவள் அதிசயத் துடன் தணிந்த குரலில் கேட்டாள்.

அக்குழந்தைகளெல்லாம் ஒன்றுகச் சேர்ந்து, "நாங்கள் எல்லோரும் அவருடைய ஆட்டுக் குட்டிகள்" என்று கூக்குர லிட்டன.

கந்தல் துணிகளை உடுத்தியிருந்த அம்மனிதன், "அனை தைக் குழந்தைகள். நகரத்தின் சுவற்றிற்கு வெளியே எறியப் பட்டிருந்த இக்குழந்தைகளை அவர் எடுத்துவந்து காப்பாற்றி வந்தார். இந்தப் பெரிய பெண்களெல்லாம் தப்பியோடி வந்து விட்ட அடிமைப் பெண்கள். அவர் எல்லோரையும் ஏற்றுக் கொண்டார்" என்றான்.

அவர் இறந்து போய் விட்டதற்காக ஒரு மூச்சு உட் கார்ந்து தனக்குத்தானே அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு. ஆனால் அக் குழந்தைகள் அவர்மீது விழுந்து அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கதறின.

ஒரு சிறு பெண் விம்மியவாறு, "ஐயோ, அவர் உடல் சில்லிட்டுப் போயிருக்கிறது" என்று கூறினாள். கண்ணீர் அவளது கன்னங்களில் வழிந்தோடியது. அவள் அவருடைய கையைத் தனது கன்னத்தின் மீது எடுத்து வைத்துக்கொண்டு,

"ஹா, அவருடைய கை எப்படி ஜில்லென்றிருக்கிறது" என்று விம்மினாள்.

இந்த விசித்திரமான குடும்பத்தின் நடுவே, ஸ்ரீமதி ஊ செயலற்றவளாய் நின்று கொண்டிருந்தாள். பிறகுதான் அவளுக்கு நடந்ததெல்லாவற்றையும் இன்னும் தான் விவரமாகக்கூடக் கேட்டுக் கொள்ளவில்லை என்பது நினைவுக்கு வந்தது.

"இங்கு அவரை யார் எடுத்து வந்தது?" என்று அவள் மெல்லிய குரலில் கேட்டாள்.

கந்தலாடைகளை அணிந்திருந்த அந்த மனிதன் மார் தட்டிக் காட்டினான். "நான்தான்! அவர் விழுவதைப் பார்த்தேன். தெருவிலிருந்த அனைவரும் பயந்து ஓடிவிட்டனர். அவர் மடிந்து விழுவதைப் பார்த்த அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் ஓட்டம் பிடித்தனர். கடைக்காரன் கடையை இழுத்துப் பூட்டிக்கொண்டு தன் வீட்டுக்குள் போய் புகுந்து கொண்டான். ஆனால் நானே ஒரு பிச்சைக்காரன். பயப்படுவதற்கு என்னிடம் என்ன இருக்கிறது? இந்த அந்நியப் பாதிரியார் எனக்கு எத்தனையோ முறை பணம் கொடுத்திருக்கிறார். முக்கியமாக மழைக் காலங்களில் எனக்கு அதிக உதவி செய்வார். சில சமயங்களில் இரவில் என்னை இந்த வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிறார். நான் இரவில் இங்கு படுத்திருந்து விட்டுக் காலையில் எழுந்து போவேன். எனக்கு உணவும் கொடுப்பார்" என்றான்.

"நீ அவரை இங்கு தூக்கிக்கொண்டு வந்தாயா?" என்றாள் அவள்.

"இந்த மற்ற பிச்சைக்காரர்களும் நானுமாகத் தூக்கிக் கொண்டு வந்தோம். ஒருவர் இருவரால் இவரைத் தூக்கிக் கொண்டு வருவது முடியாத காரியம்" என்றான் அவன். அவனுடன் கூட ஐந்தாறு பிச்சைக்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

அவள் சகோதரர் ஆண்ட்ரூவின் சாந்தம் தவழும் முகத்தைப் பார்த்தாள். அவர் தனக்காகவென்று சில வார்த்தை கூறுவார் என்று நம்பி அவள் வந்திருந்தாள். அவரோ அதற்குப் பதில், "என்னுடைய ஆட்டுக் குட்டிகளைக் காப்பாற்று" என்று கூறிவிட்டார். இங்கே, இந்தக் குழந்தைகள் வேறு இருக்கின்றன. அவள் அவர்களைப் பார்த்தாள். அவர்கள் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள். குழந்தைகளுக்கியல்பான

அந்த நுண்ணுணர்ச்சியுடன், அவர்கள் தங்கள் நம்பிக்கையை சகோதரர் ஆண்ட்ரூவின் உயிரற்ற உருவத்திலிருந்து, அவளுடைய உயிருடன் கூடிய உருவத்தில் செலுத்தியவர்களாய் அவளையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவள் உறுதியற்ற குரலில், "நான் உங்களை என்ன செய்வது?" என்றாள்.

ஒல்லியாகயிருந்த ஒரு சிறிய பெண், "அம்மா, எங்கள் அப்பா உங்களை என்ன செய்யச் சொன்னார்?" என்று கேட்டாள் ஆவலுடன். அவள் இடுப்பில் ஒரு கொழுத்த அழகிய குழந்தையை வைத்திருந்தாள்.

ஸ்ரீமதி ஊவால் உண்மையைத் தவிர வேறென்றும் சொல்ல முடியவில்லை. "நான் உங்களையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார்" என்றாள்.

குழந்தைகள் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன. அந்த ஒல்லியான பெண், அக் குழந்தையை மற்றொரு கைக்கு மாற்றிக்கொண்டு, "எங்களுக்கெல்லாம் கொடுப்பதற்கு வேண்டிய உணவு உங்களிடம் இருக்கிறதா?" என்று கேட்டாள் விசாரத்துடன்.

"ஓ, இருக்கிறது!" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பிறகும் அவள் அவர்களை நோக்கியபடியே நின்றுகொண்டிருந்தாள்.

அந்தப் பெண் மீண்டும், "நாங்கள் இருபது பேர் இருக்கிறோம். எனக்குப் பதினைந்து வயதாகிறது—பதினாறு வயதானதும் அவர் எங்களுக்குத் தக்க ஏற்பாடு செய்கிறார்" என்று கூறினாள்.

"ஏற்பாடு செய்கிறாரா?" என்று கேட்டாள் அவள்.

கிழவி இப்போது பேச முன் வந்தாள். "பதினாறு வயதானதும் தான் அவர் அவர்களுக்கு ஒரு நல்ல வீட்டையும் ஒரு நல்ல கணவனையும் தேடிக் கொடுக்கிறார்" என்றாள்.

அசைவற்றிருந்த அப் பெரிய உருவம் இன்னமும் உயிரோடு இருப்பது போலவே அவர்கள் பேசினார்கள்.

ஸ்ரீமதி ஊ சகோதரர் ஆண்ட்ரூவைப் பார்த்தாள். அவருடைய கண்கள் மூடியிருந்தன. கைகள் மார்பின் மீது சேர்த்து வைக்கப்பட்டிருந்தன.

அவள் சட்டென்று, "எல்லோரும் இந்த அறையைவிட்டு வெளியே செல்லுங்கள். எல்லோரும் அவரை அமைதியாக விடுங்கள்" என்று கூறினாள்.

பிச்சைக்காரர்கள், குழந்தைகள், கிழவி எல்லோரும் உடனே பணிவாக வெளியே சென்றனர். அவள்மட்டும் தனியே விடப்பட்டாள். கதவருகே இங் விறைப்பாக நின்று கொண்டிருந்தாள். "நீ போ, இங்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

"நான் கதவிற்கு வெளியே நிற்கிறேன்" என்று பதிலளித் தாள் இங்.

ஸ்ரீமதி ஊ கதவைச் சாத்தினாள். அவள் செய்வது வம்பு பேசுவதற்கு இடம் கொடுக்கக் கூடியதாகும். ஒரு அந்நியப் பாதிரியுடன், அவர் இறந்து போயிருக்கும்பொழுது கூட, தனியே இருக்கவேண்டுமென்று எதற்காக ஒரு பெண்மணி விரும்பவேண்டும்? ஆனால் அவள் அதையொன்றும் பொருட் படுத்தவேயில்லை. அவர் இப்போது அவளுக்கு ஒரு அந்நியரு மல்ல, பாதிரியுமல்ல. அவள் சந்தித்த மனிதர்களுள், அவள் வணங்கும்படியாகத் திகழ்ந்தவர் இவர் ஒருவர்தான்! அவர் ஒருவரைத்தான் அவள் போற்றி வணங்கினாள். அவளுடைய மாமனார் அவளுக்கு எவ்வளவோ சுற்பித்தார். ஆனால் அவர் எத்தனையோ விஷயங்களுக்குப் பயந்து வந்தார். சகோதரர் ஆண்ட்ரூ எதற்குமே அஞ்சவில்லை. அவர் வாழ்வைக் கண்டும் அஞ்சவில்லை; மரணத்தைக் கண்டும் அஞ்சவில்லை. அவர் உயிரோடு இருந்தவரை அவள் அவரை ஒரு ஆடவராகவே பாவித்ததில்லை. ஆனால் இப்போது அவர் இறந்து விட்டதால், அவரை இறந்துபோன ஒரு ஆடவராகக் கண்டாள். இளமை யில் அவர் கட்டழகு வாய்ந்த ஒரு யுவனாக இருந்திருக்க வேண்டும். நிமிர்ந்து படுத்திருந்த அவருடைய பெரிய சரீரம் மிகக் கம்பீரத்துடன் விளங்கியது. அவருடைய நிறம் வெளுப் பாயிருந்தது. மரித்துப்போன அச்சரீரம் மேலும் வெண்மை யாகிக் கண்ணுடியைப் போலாகிக் கொண்டிருந்தது.

திடீரென்று அவள் அவரை நன்கு அறிந்து கொண்டாள். அவள் சொல்லொணு அதிசயத்துடன் 'ஆ, தாங்கள்தான் நான் மனமார நேசிக்கும் மனிதர்' என்று முணு முணுத்துக் கொண்டாள்.

இதை உணர்ந்ததுமே, இதை அவள் ஒப்புக்கொண்ட அக்கணத்திலேயே தன்னுள் ஒரு பெரிய மாறுதல் ஏற்படுவ தைக் கண்டாள். அவள் அசையாது நின்ற போதிலும்

அவளுடைய உடல் புல்லரித்தது. இருதயத்தில் இரத்தம் குப்பென்று பொங்கியெழுந்தது. அவளுடைய மூளை மிகத் தெளிவாகியது. அவளுடைய உடலே லேசாகி விட்டது போல் தோன்றியது. மனத்தில் என்றுமில்லாத் தெம்பு ஏற்பட்டது. தலையை உயர்த்தி அறையைச்சுற்றி நோக்கினாள். சுற்றி நான்கு சுவர்கள் நின்ற போதிலும் அவள் பூரண விடுதலை பெற்றவளானாள். அவள் உள்ளம் நிறைந்தது. அக்கட்டிலின் மீது அவருடைய உடல், இறந்து போனதிலிருந்து இருந்த படியே இருந்தது. ஆனால் அதை நோக்கியபோது, அவர் அவ்வுடலிலிருந்து தப்பித்துக் கொண்டு சென்று விட்டார் என்ற உண்மை அவளுக்குப் புலப்பட்டது. அவள் ஒரு பெரிய நாஸ்திக வாதி. இத்தனை வருடங்களில் அவள் ஒரு முறையாவது கோவிலுக்குப் போனவளில்லை. கடவுளின் முன் ஒரு தீபம் ஏற்றியவளில்லை. அவருடைய தகப்பனார், பெண் களுக்குச் சாதாரணமாக இருக்கும் மூடநம்பிக்கை அவளுக்கு உண்டாகா வண்ணம் பார்த்துக் கொண்டார். பிற்காலத்தில் அவளுடைய மாமனார் அக் கைங்கரியத்தைப் பூரணமாக நிறைவேற்றி வைத்தார். அவளுக்குக் கண்ணுக்குப் புலப் படாத இடத்திலிருக்கும் ஒரு கடவுளின் மீது நம்பிக்கை கிடையாது. ஆனால், இம்மனிதர் நிச்சயம் தொடர்ந்து வாழ்வார். அவருடைய வாழ்வு அத்தோடு அழிந்து போக வில்லை என்பதை அவள் உறுதியாக நம்பினாள்.

"ஆண்ட்ரூ" என்று அவள் அவரைப் பெயரிட்டு மெல்லிய குரலில் அழைத்தாள். அவள் இனி ஒரு போதும் அவரைச் சகோதரர் என்று அழைக்கமாட்டாள். "நீ என்னில் வாழ்கிறாய்! உன்னுடைய வாழ்வைப் பாதுகாப்பதற்காக நான் என்னால் முடிந்தவரை பாடுபடுவேன்" என்றாள்.

அவள் இதைச்சொன்ன அக்கணமே அவளுடைய உள்ளத்திலும் ஆத்மாவிலும் அளவற்ற அமைதி குடி கொண்டது. அதன் சுகத்தையும் நிறைவையும் ஆனந்தத் தையும் சொல்லக்கூடவில்லை! இதற்கு முன் தன் வாழ்வில் தான் அமைதி என்பது என்ன என்பதை ஒருபோதும் அனுபவித்ததில்லை என்பதை அவள் இன்று அறிந்து கொண் டாள். அசையாது அவ்வறையில், உயிரற்ற உடலின் முன் நின்று கொண்டிருந்த அவளது உள்ளத்தில் பேரானந்தம் குடி கொண்டது.

ஆனால் இந்த ஆனந்தம் தன் வயமிழந்த நிலையில் ஏற் பட்டதல்ல. அது ஒரு சக்தியாகக் கிளம்பி அவளுடைய உட லிலும் உள்ளத்திலும் வேலைசெய்ய ஆரம்பித்தது. இப்போது

தான் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னின்ன தென்று அவளுக்குத் தெளிவாகப் புலப்பட்டது. அவருடைய உடலைப் புதைத்தாக வேண்டும். ஆனால் புரோகிதர்களும் மந்திரங்களும் அதற்குத் தேவையில்லை. அவருக்குச் சொந்தமாக இருந்த வெகு சில பொருள்களை அவள் பார்த்துக் கொடுத்து விடவேண்டும். அதற்குப்பிறகு அவர் செய்து கொண்டிருந்த செயல்களையெல்லாம் அவள் தொடர்ந்து நடத்த வேண்டும். இதுவே அவள் செய்ய வேண்டிய பணி!

அவள் அமைதியுடன், இந்த அறையிலிருந்து, இங், கிழவி, மற்ற எல்லோரும் காத்துக்கொண்டு நின்றிருந்த அடுத்த அறைக்குச் சென்றாள். அங்கிருந்த மர நாற்காலி ஒன்றில் அவள் உட்கார்ந்து கொண்டாள்.

"அவருடைய கடைசி கர்மங்களை எவ்விதம் செய்வது? அவர் அதைப்பற்றி ஏதாவது சொல்லிச் சென்றிருக்கிறாரா?" என்று கேட்டாள்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பீதியும் திகைப்பும் கொண்டிருந்த குழந்தைகள் ஒன்றும் சொல்லவில்லை. கிழவி விசித்து அழுதவாறு பொங்கி எழுந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "உண்மையில் அவர் சாவைப்பற்றி எண்ணவேயில்லை. எங்களுக்கும் அவருக்கு மரணம் என்று ஒன்று ஏற்படுமென்று தோன்றவே யில்லை" என்றாள்.

"அவருக்கு யாராவது உறவினர்கள் இருக்கிறார்களா? இருந்தால், இவருடைய உடலை நாம் அவர்களுக்குத்தான் அனுப்ப வேண்டும் என்று எண்ணுகிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவருடைய உறவினர்களைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. அவர் எத்தனையோ வருடங்களுக்கு முன்பு தாமாகவே அங்கு வந்து வசிக்கலானார். திரும்ப அவர் எங்குமே செல்லவில்லை.

"அவருக்குக் கடிதங்கள் ஏதேனும் வந்து கொண்டிருந்தனவா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"அவருக்குக் கடிதங்கள் வந்தாலும் அவர் அவற்றைப் பிரித்து ஒரு நாளும் படிப்பதில்லை. பிரிக்காமலே அதைப் போட்டு விடுவார். நான் சிறிது நாட்களுக்குப் பிறகு அவற்றை எடுத்து குழந்தைகளின் செருப்புகளுக்கு அடியில் வைத்துத் தைத்து விடுவேன்" என்றாள் கிழவி.

"அவர் கடிதம் கூட எப்போதும் எழுதுவதில்லையா?" என்று மேலும் விசாரித்தாள் ஸ்ரீமதி ஊ.

"கிடையாது" என்று கூறினாள் கிழவி.

அவள் அந்தப் பிச்சைக்காரன் பக்கம் திரும்பி, "உனக்கு ஏதேனும் தெரியுமா? அவர் உன்னிடம்கூட ஒன்றுமே கூறினதில்லையா?" என்று கேட்டாள்.

"அவரைச் சேர்ந்தவர்களைப் பற்றிய பேச்சே எடுப்பதில்லை. அவர் இந்த ஊர் ஜனங்களைப் பற்றியும் சுற்றிலுமுள்ள நாட்டுப்புறத்தவர்களைப் பற்றியும் அவர்களுக்கு ஏதேனும் ஒரு விதத்தில் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டியதைப் பற்றியும் தான் பேசுவார்" என்று பதிலளித்தான் அவன்.

ஸ்ரீமதி ஊ யோசித்தாள். சகோதரர் ஆண்ட்ரூ முற்றிலும் அவளுக்கே சொந்தமானவராக இருந்தார். அவரைச் சேர்ந்தவர்கள் வேறு யாரும் இல்லை. அவள் சாதாரணமான ஒரு கறுப்பு சவப்பெட்டியை வாங்கிவிடலாம். அடக்கம் செய்வதோ, அவள் தனது சொந்த நிலத்திலேயே அடக்கம் செய்து விடுவாள். அங்கு உள்ள தனக்குப் பிடித்தமான இடத்தை அவள் நினைத்துக் கொண்டாள். நெல்வயல்களைச் சுற்றி மலைப்பாங்கான ஒரு இடம் இருந்தது அவளது நிலத்தில். அங்கு வெகு நாளைய ஜிங்கோ மரம் ஒன்று இருந்தது. வசந்த ருதுவில் பயிர் நடவு நடக்கும் போது அவள் அங்கு செல்லும் சமயங்களில் அம்மரத்தின் கீழ்தான் தங்கி இளைப்பாறுவாள்.

அவள் எழுந்து, "நாளைக்குச் சென்று புதைப்பதற்கான இடத்தைப் பார்த்து ஏற்பாடு செய்கிறேன்" என்றாள்.

அவள் எழுந்து விட்டதைப் பார்த்துக் குழந்தைகளும், அக்கிழவியும், ஆவலும் கவலையும் தோன்ற அவள் முகத்தை நோக்கினர். அவளுக்கு அவர்களுடைய கவலை இன்னதென்று விளங்கிவிட்டது. தங்கள் எல்லோருக்கும் என்ன நேரிடப் போகிறதோ என்பதே அவர்களது கவலை.

அவள் அந்த காலி அறைகளைச் சுற்றி நோக்கியவாறு, "இந்த வீடு அவருக்குச் சொந்தமானதா?" என்று கேட்டாள்.

கிழவி இல்லையென தலையை அசைத்து, "இது ஒரு வாடகை வீடு. இதில் பேய் உலாவுவதால் இது எங்களுக்கு

மிகக் குறைந்த வாடகைக்குக் கிடைத்தது. பேய் பிசாசுகள் நடமாடுகிறது என்பதற்காகப் பயந்து இதற்கு வேறு யாரும் குடிவருவதில்லை. ஆனால் இந்தப் பிசாசுகள் எல்லாம் அவரிடம் பயப்பட்டு வந்தன. ஆகையால் நாங்கள் இங்கு மிக சௌக்கியமாக வாழ்ந்து வந்தோம்" என்றாள்.

"அவருக்குச் சொந்தமான பொருள் ஒன்றுமே யில்லையா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"இரண்டு மாற்று உடைகளைத் தவிர அவருக்குச் சொந்தமானது வேறென்றும் கிடையாது. ஒன்றை அவர் அணிந்திருப்பார். மற்றொன்றை நான் துவைத்து வைப்பேன். அவரிடம் சில புத்தகங்களும் ஒரு சிலுவையும் இருக்கிறது. முன்பு ஒரு மரச் சிலுவையில் அடிக்கப்பட்ட ஒரு அழகிய சிலை இருந்தது. அதைத் தமது அறையில் படுக்கைக்கு மேற்புறம் சுவற்றில் தொங்க விட்டிருந்தார். ஆனால் ஒரு நாள் இரவு அது கீழே விழுந்து உடைந்துபோய் விட்டது. அதைப்போல் வேறொன்றை அவர் மறுபடியும் வாங்கவில்லை. அவரிடம் ஒரு ஜபமாலை இருந்தது. ஒரு குழந்தை அதை வைத்து விளையாடி அறுத்துவிட்டது. அவர் அதை மறுபடியும் சரிசெய்யவில்லை. அதன் மணிகள்கூட சில எங்கோ உருண்டோடி தொலைந்து விட்டன. அது இனி தமக்குத் தேவையில்லை என்று அவர் கூறிவிட்டார்" என்று கூறினாள் கிழவி.

கிழவி பேசுவதைக் கவனித்தவாறே ஸ்ரீமதி ஊ அவ்வறையைச் சுற்றி நோக்கினாள்.

"அந்தக் கறுப்புப் பெட்டியில் என்ன இருக்கிறது?" என்று அவள் அதை விரலால் சுட்டிக் காட்டி கேட்டாள்.

கிழவி அதைப் பார்த்துவிட்டு, "அது ஒரு மந்திரப் பெட்டி. அவர் இரவில் அதன்மூலம் பல குரல்களைக் கேட்பது வழக்கம்" என்றாள்.

அவர் அதைப் பற்றி தனக்குக் கூறியிருப்பது அவளுடைய நினைவிற்கு வந்தது. அப்பெட்டியை அணுகி, அதில் தனது காதை வைத்துக் கேட்டுப்பார்த்தாள். ஆனால் ஒன்றும் கேட்கவில்லை.

"அது வேறு ஒருவருக்காகவும் பேசுவதில்லை" என்று கிழவி விளக்கிக் கூறினாள்.

"ஆ! அப்படியானால் இதையும் நாம் அவரோடு சேர்த்து புதைத்து விடுவோம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

கிழவி சிறிது தயக்கத்துடன், "அவருக்குச் சொந்தமான இன்னும் ஒரு பொருள் இருக்கிறது. அதுவும் ஒருவித மந்திரப் பொருள்தான். நாங்கள் அதைத் தொடவே கூடாது என்று சொல்லியிருக்கிறார்" என்று கூறினாள்.

"அது எங்கே இருக்கிறது?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

கிழவி கட்டிலுக்கடியில் குனிந்து, ஒரு நீண்ட மரப்பெட்டியை பிடித்து வெளியே இழுத்தாள். அதைத் திறக்கவும் அதற்குள் குழாயைப் போன்ற நீண்ட ஒரு கருவி இருந்தது.

"வானம் தெளிவாகயிருக்கும் இரவுகளில் அவர் தமது வலது கண்ணை இதில் வைத்து, தேவலோகத்தைப் பார்ப்பார்" என்றாள் கிழவி.

ஸ்ரீமதி ஊவிற்கு உடனே, இதுதான் அவர் நக்ஷத்திரங்களைப் பார்ப்பதற்காக உபயோகிக்கும் கருவி என்று தெரிந்து விட்டது.

"நான் இதை என்னுடு எடுத்துச் செல்கிறேன். எங்கே, அவருடைய புத்தகங்களைக் கொண்டு வாருங்கள். அவருடைய துணிகளையும் சிலுவையையும் அப்பெட்டிக் குள்ளேயே வைத்து விடுவோம். இவ் வீட்டை, அதன் சொந்தக்காரரிடமே விட்டுவிடுங்கள். இந்த வீட்டிலிருந்த கெட்ட ஆவிகளெல்லாம் விரட்டப்பட்டு விட்டதென்றும், வீடு இப்போது பரிசுத்தமாகி விட்டது என்றும் நான் சொன்னேனென்று அவ வீட்டுக்காரனிடம் சொல்லுங்கள். அவன் இதை மறுபடியும் நல்ல வாடகைக்கு விட்டுக்கொள்ளட்டும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

குழந்தைகள் யாவரும் கிழவியின் மேல் சென்று ஒட்டிக் கொண்டு பீதியுடன் மூச்சுவிடக்கூட பயந்தவர்களாய் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வீடு போய் விட்டது. அவர்களுக்கு மிஞ்சுவது ஒன்றுமில்லை.

ஸ்ரீமதி ஊ அவர்களைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். அவள் உள்ளத்தில், இதுவரை யில்லாத ஒரு புதிய கனிவு தோன்றியிருந்தது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது அவளுக்கு நன்கு விளங்கியது.

"நீங்கள் எல்லோரும் செய்யவேண்டியது என்னவென்றால் பெரியம்மா, நீயும்தான்—எல்லோருமாக என்னுடைய வீட்டில் வந்து இனி வசிக்க வேண்டும்" என்றாள்.

குழந்தைகள் கவலை நீங்கியவர்களாய் ஒரு பெருமூச்சு விட்டனர். அவர்களுக்குப் பாதுகாப்பான இடம் கிடைத்து விட்டது. இக்குழந்தைகளுக்குரிய, எளிதில் ஆசையும் நம்பிக் கையும் வைத்துவிடும் சுபாவத்தோடு அவர்கள் தங்களுடைய புதிய ஆதரவை உடனே ஏற்றுக்கொண்டு, அதை நிஜத்துக் குதூகலமும் கொண்டனர்.

"எப்போது—எப்போது" என்று எல்லோரும் ஒருங்கே கூவினர்.

"நீங்கள் அவருடன் நாலைவரை இங்கேயே தங்கியிருங் கள். நாலைக்கு எல்லோருமாகச் சேர்ந்து சுடுகாட்டுக்குச் செல்லுவோம். ஆனால் திரும்பவும் நீங்கள் இங்கே வரவேண் டியதில்லை. என்னுடன் கூட எங்கள் வீட்டிற்கு வந்து விடுங் கள்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

கிழவி விம்மியவாறு, "எத்தனை நல்ல மனசு! எத்தனை பெரிய மனசு! அவருக்குத் தெரியும்...எல்லாம் தெரிந்துதான் வைத்திருக்கிறார்!" என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ இதற்குப் பதிலளிக்காமல் புன்னகை செய் தாள். "இவர்களுடைய சாப்பாட்டிற்கு வேண்டிய அரிசி இருக்கிறதா, உன்னிடம்? இன்றிரவிற்கும் நாலை காலைக்கும் அவர்களுக்கு உணவு வேண்டுமே! நாலை மத்தியான சாப் பாட்டிற்கு என் வீட்டிற்குப் போய்விடலாம்" என்றாள்.

"அவர் எப்போதும் வீட்டில் ஒரு நாளைக்கு வேண்டிய உணவை அதிகமாக வைத்திருப்பது வழக்கம். ஒரு நாளைய உணவையாவது நாங்கள் எப்போதும் மிச்சமாக வைத்திருப் போம்" என்று விசனத்துடன் கூறினாள் கிழவி.

"சரி, நான் போய்விட்டு நாலை திரும்பவும் வருகிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அக்குழந்தைகள் அவளைச் சூழ்ந்து அணைத்துக் கொண்ட னர். அவரிடம் அவர்கள் அவ்விதம் செல்லம் கொண்டாடி மகிழ்வது வழக்கமா யிருந்தது. அதே அன்பையும் ஆதரவை யும் இவளிடம் எதிர்பார்த்து அக் குழந்தைகள் உரிமை கொண்டாடின. அதை உணர்ந்தவளாய் அவளும் அதை அனுமதித்து சிறிது நேரம் பேசாதிருந்தாள். பிறகு அன்புடன், "நாலைவரை பொறுங்கள், என் கண்மணிகளே!" என்று கூறி விட்டு, அவருடைய உயிரற்ற பிணமாகிக் கிடந்த அவ் விடத்தைவிட்டுத் தன் வீட்டை நோக்கிச் சென்றாள். அவள்

அவ் வீட்டில் வந்து நுழைந்தபோது இருந்த பெண்மணியே அல்ல இப்போது! அவளது உள்ளத்தில் அத்தகைய பெரும் மாறுதல் நிகழ்ந்திருந்தது!

தனது பகுதிக்குத் திரும்பிச் சென்ற அவள், அங்கு மாறுதலடைந்த தனது உள்ளத்துடன் வெகு நேரம் தனியே உட்கார்ந்திருந்தாள். அவள் ஆண்ட்ரூவின் மரணத்தை வரவேற்றாள். அவர் உயிரோடிருந்தால், ஒரு சமயமில்லா விடில் இன்னொரு சமயம் தான் அவரை நேசிக்கும் விஷயத்தை அவர் அறிய நேரிட்டிருந்திருக்கும். அப்போது அவள் செய் திருக்கக் கூடிய காரியங்கள் இரண்டுதான். ஒன்று அவரை இனி என்றும் பார்ப்பதேயில்லை என்று தீர்மானம் செய்திருக்க வேண்டும். இல்லாவிடில் தனது ஆத்மாவை அவருக்கு அர்ப்பணம் செய்து தன்னுடைய அன்பை அவருக்குத் தெரி வித்திருக்க வேண்டும். இது நிச்சயம் அவர்கள் இருவரையும் பிரித்திருக்கும்!

அன்றிரவு மணிக்கணக்காக அவள் விழித்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவளைப் படுக்கைக்குச் செல்லுமாறு அழைக்க வந்த இங்கையும் புறக்கணித்து அனுப்பிவிட்டாள். அவள் படுக்கையில் சென்று படுக்க விரும்பவில்லை. அவள், உயிருடன், விழிப்போடு, தனித்து உட்கார்ந்து தனது புதிய அறிவுச் செல்வத்தை ஆராய்ந்து கொண்டிருக்கவே விரும் பினாள். அவள் ஒரு மனிதனை, ஒரு அந்நியனை, ஒரு அயல் நாட்டானை நேசித்தாள்! அம்மனிதனை அவளைத் தீண்டு வதற்காகத் தனது கையை ஒரு முறைகூட நீட்டியதில்லை! அப்படித் தொட அவர்கள் கனவில்கூட நினைக்கக்கூடிய விஷயமல்ல. வெகு நேரம் கழித்து அவள் இருளிலே உட்கார்ந்தவாறு, புன்னகை செய்துகொண்டாள். வீடு முழுவதும் இருளில் மூழ்கிக் கிடந்தது. அவளைச் சுற்றிலும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. அவளுக்கருகில் ஒரு மெழுகு வர்த்தி எரிந்து கொண்டிருந்தது. அவளுடைய மனது உரக்கப் பேச ஆரம்பித்தது.

'நான் என்னுடைய கரத்தை உங்களிடம் நீட்டி யிருந்தால் தாங்கள் பயந்திருப்பீர்களா?' என்றாள்.

ஆனால் ஆண்ட்ரூவிற்கு எவரிடமும் பயமில்லை என்பது அவளுக்குத் தெரியும். அவருக்கு அவருடைய கடவுள் இருந்தார்! ஆண்களின் கடவுள் எப்போதும் பெண்களின் விரோதியாக யிருக்கிறார் என்று அவளுக்குத் தோன்றியது. அவளுக்கு இப்போதுதான் முதல் தடவையாக பொறுமை தோன்றியது.

"நமக்கென்று தனியே ஒரு கடவுள் இல்லையே" என்று எண்ணமிட்டாள்.

ஆனால் பெண்களுக்கு உண்மையான கடவுள் இருப்பது இயலாத காரியம். கடவுள் பக்தியுள்ள பெண்களில் தனக்குத் தெரிந்தவர்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தாள். சிறிய சகோதரி ஹேஷியா தன்னுடைய கடவுளைப் பற்றிச் சதாகால மும் பேசி வந்தாள். ஆனால் உண்மையில், அவளுக்குப் பேசு வதற்கான விஷயம் வேறு ஒன்றுமே கிடையாது. அவளுக்குப் புருஷனுமில்லை. குழந்தைகளுமில்லை. உற்றார் உறவினரில்லை. நண்பர்கள் இல்லை. யாருமே இல்லை! இந்த சூன்ய வாழ்க்கை யில் புகுந்து தேடி அவள் தனக்கென ஒரு கடவுளைக் கண்டு பிடித்துக் கொண்டாள். இல்லை, பெண்களுக்குக் கொடுக்கக் கூடிய நிஜப் பரிசை எதுவென்றால், அவர்களுக்கு எல்லா விதமான சுகபோகங்களும் கிடைத்திருந்தும், ஆண்களைப் போல் எல்லாவற்றையும் உதறிவிட்டுக் கடவுளைத் தேடிக் கொண்டு போகிறார்களா என்று பார்ப்பதுதான்! அவளுக்குத் தெரிந்திருந்த பெண்களில், உண்மையாகக் கடவுளைத் தேடிய வர்கள் எவரையும் அவள் தன் வாழ்வில் கண்டதில்லை. அதாவது ஆண்ட்ரூ செய்ததைப்போல் ஒருவருமே செய்த தில்லை. அவர் தமது வாலிபத்தில், நாம் காதலித்த பெண்ணையும் தமக்கு வரக்கூடிய செல்வத்தையும், தமது அறிவினால் கிடைத்திருக்கக்கூடிய புகழையும் யாவற்றையும் துறந்து வந்து விட்டார். தமது வாழ்வையே கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விட்டார்.

தனது சிந்தனை ஓட்டத்தை நிறுத்தி ஒரு கணம், ஆண்ட்ரூ தமது வாலிபப் பருவத்தில் காதலித்த அப்பெண்ணைப் பற்றி நினைத்துப் பார்த்தாள். அவர் தன்னைமையையே அதிகம் விரும்பியவராய் அவளைத் துறந்து சென்று விட்டார். அவள் இளமையும், சந்தேகமில்லாமல் நல்ல அழகும் கொண்ட வளாக இருந்திருக்கவேண்டும். அவளுடைய பொறுமை அதிகரித்தது. ஆண்ட்ரூ அப்பெண்ணைக் காதலித்தார் என்பதற்காக அல்ல. வெகு நாளைக்கு முன்பே மறக்கப்பட்டு விட்ட, முன்பின் தெரியாத அப்பெண் ஆண்ட்ரூவை, அவளுடைய இளம் வயதில் அவர் பாதிரியாவதற்கு முன்பு பார்த்திருக்கிறாள் என்பதற்காக.

"அவர் ஒரு இளம் சிங்கமாயிருந்தபோது நான் அவரைப் பாராமல் போனேனே" என்று எண்ணிக் கொண்டாள். தன் கைகளைக் கோர்த்து மடிமீது வைத்தவாறு அவள் அமைதியும் நிறைவும் கொண்ட உள்ளத்தோடு உட்கார்ந்திருந்தாள்.

அவள் விரல்களில் அணிந்திருந்த மோதிரங்கள் லேசாக ஒளி வீசின. ஆம், ஆண்ட்ரூ இளைஞராகயிருந்தபோது அவருடைய தோற்றம் பெண்களின் கண்ணுக்கு ஒரு அரிய விருந்தாகத் தானிருந்திருக்க வேண்டும். அவருடைய நடுத்தர வயதில் கூட அவர் அழகுடன்தான் விளங்கினார். இளைஞராகயிருந்த போது அவரே ஒரு கடவுளாகத்தானிருந்திருக்க வேண்டும். பின், அவர் நிராகரித்துவிட்ட அப்பெண்ணை நினைத்து அவள் பேரில் இரக்கம் கொண்டாள். அவள் நிச்சயம் வேறொருவனைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பாள். அநேக குழந்தைகள் கூட அவளுக்கு இருக்கலாம் இப்போது! ஏனெனில் ஒரு மனிதன் தன்னை நிராகரித்து விட்டதற்காகப் பெண்கள் உடனே தங்கள் உயிரை விட்டு விடுவதில்லை. ஆனால் அவளுடைய இதயத்தின் ஒரு மூலையில் இப்போதும் ஆண்ட்ரூவின் நினைவு, அன்புடனே வெறுப்புடனே கூடியதாக உறைந்து வரலாம். அவள் சிறிய உள்ளம் படைத்த பெண் மணியாக யிருந்தால் அவரை வெறுப்பாள். அல்லது பரந்த மனமுடையவளாக யிருந்தாலோ அவரைக் குறை கூறு திருப்பாள். ஆதலால் இன்னமும் அவரிடம் அன்பு வைத் திருக்கலாம். அல்லது அவள் அவரை அடியோடு மறந்து மிருக்கலாம்! எவ்வித உணர்ச்சிகளும் கொள்ள முடியாதபடி வாழ்க்கையில் அவ்வளவு அலுப்படைந்திருக்கலாம்! பெண்கள் தங்களுடைய உள்ளமும் உடலும் மிக அதிகமாக உபயோ கிக்கப்பட்டு விட்டால், அந்த நிலையை அடைந்து விடுகிறார்கள் அல்லவா? பெண்ணினுடைய இதயமும் சரீரமும் ஒன்றை டொன்று பிணைக்கப்பட்டிருப்பதுதான் பெண்ணினுடைய பலவீனம்! உடல் அதிக தூரம் கசக்கப்பட்டு விட்டால் அவளுடைய மனதும் சலிப்படைந்து உற்சாகமிழந்து போய் விடுகிறது. ஆனால் ஒரு பெண்ணிடம், அவளுக்கு இப்போது ஆண்ட்ரூவிடம் இருந்த அன்பு மட்டும் இருந்தால் அவளுக்கு இந்நிலை ஏற்படுவதில்லை. மரணம் அவருடைய உடலை நீக்கி, அதனால் அவளுக்கு ஏற்படக்கூடிய தகராறுகளைத் தவிர்த்து விட்டது. அவர் உயிரோடிருந்திருந்தால் அவர்கள் இருவரும் சரீரம் என்ற மாயக் குழியில் விழுந்து தங்கள் ஆத்மாவை இழந்திருப்பர். அச்சமயத்தில் தன்னுடைய ரத்தக் குழாய் களில் ஓடும் இரத்தம் புதிய சக்தியும் வேகமும் கொண்டது போல் துடித்து ஓடியதைக் கண்டு அவளுக்கு வியப்பு உண் டாயிற்று.

"இத்தனைக்குப் பிறகும் என்னிடமும் பெண்மை குணம் இருக்கத்தான் செய்கிறது" என்று அவள் வியப்புடன் கூறிக் கொண்டாள். ஆண்ட்ரூவின் பெரிய சரீரத்தை நினைத்த

மாத்திரத்திலும்கூட அவளுள் இத்தகைய உள்ள நிறைவும் புதிய சக்தியும் உண்டாயிற்று. உயிரோடிருந்த காலத்து அவருடைய உருவம் அவளுடைய நிம்மதியை எவ்வளவு குலைத்து வந்தது? அவளுக்கு ஏற்பட்டிருந்த இந்த அபாயத்தைப் போக்கிய அந்தக் கொள்ளைக் கூட்டத்தாரிடம் அவளுக்கு நன்றி பெருகியது. கதவின் வழியே வெளியே நோக்கினாள். அழகிய நிலவு அவளுடைய ஆர்ச்சிட் தோட்டத்தையும் மூங்கிற் மரங்களையும் சோபிக்கச் செய்தது. அதைக் கண்டதும் அவள் உள்ளம் வேதனையை அடைந்தது. ஆண்ட்ரூவின் கண்கள் மூடிவிட்டன என்பதை எண்ணி அவள் சந்தோஷப்படுவது எவ்வளவு கொடூரமானது!

'நீங்கள் இறந்துவிட்டதற்காக நான் மகிழ்கிறேன் என்பது உண்மையல்ல. உங்களுக்கும் எனக்கும் நேரவிருந்த ஒரு பெருந் துன்பத்தை இம்மரணம் தவிர்த்துவிட்டதல்லவா? நம்முடைய ஆனந்தத்தை நாம் எவ்வித இடையூறுமின்றி முன்போலவே வைத்திருக்கலாம் அல்லவா? நான் தங்களை எவ்விதம் நேசிக்கிறேன் என்பது தங்களுக்குத் தெரியாதா?' என்று அவள் அவருக்கு விளக்கிக் கூறினாள்.

அவள் இவ்வார்த்தைகளைத் தன் வாய்க்குள் முணு முணுத்தபோது அவர் அதை முற்றிலும் புரிந்து கொண்டார் என்ற பூரண நம்பிக்கை அவளுக்கு இருந்தது. இந்த நினைவு அவளுக்கு கொடுத்த பூரண ஆனந்தத்தையும் நிறைவையும் வேறு ஒன்றினாலும் கொடுக்க முடியாது. அவளுக்குத் தனது குடும்ப தர்மத்தை விட்டு விலகுவது எவ்வளவு வேதனையைத் தந்திருக்குமோ ஆண்ட்ரூவிற்கும் தமது துறவறத்தை விட்டு விலகுவது அத்தனை துன்பத்தைக் கொடுத்திருக்கும் என்பதை அவள் அறிவாள். அவர்கள் இருவரும் தியாகத்தைப் பற்றி ஒருவருக்கொருவர் உபதேசம் செய்துகொண்டிருப்பார்கள். ஆனால் அதை அனுஷ்டிப்பதற்காக அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்காமலே இருக்கும்படி நேர்ந்திருக்கும். இப்பொழுதோ எவ்வித தியாகத்திற்கும் அவசியமே இல்லாது போய்விட்டது. அவரைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும், ஒருவித பயமுமின்றி அவள் நினைக்கலாம்.

'ஆனால் நான் எவ்வளவு மாறிப்போயிருக்கிறேன்' என்று எண்ணமிட்டாள். வெளிப் பார்வைக்கு, அவளிடம் சிறிதும் வித்தியாசம் தோன்றவில்லை. தான் மாறுதலடைந்தது எவ்விதம் என்று வியந்தவாறிருந்தாள். அவளுக்கு அதன் காரணம் விளங்கவில்லை. அவளாகவே அதைக் கண்டுபிடிக்க வேண்டும். அவளுடைய உள்ளம் முற்றிலும் வேறுபட்டு

இருந்தது. அவள் அதிசயத்துடன், 'நான் இப்போது எனக்கே அந்நியளாகயிருக்கிறேன். இனி நான் எவ்விதம் நடந்துகொள்வேன், எவ்வித உணர்ச்சிகளைக் கொள்வேன் என்பதொன்றும் எனக்குத் தெரியாது' என்று எண்ணினாள்.

இந்தப் புதிய விஷயத்தைக் கண்டுபிடித்த பிறகு ஒருமணி நேரம்வரை அதேபோல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். "நான் எப்படி நடந்துகொள்வேன் என்று எனக்கே தெரியவில்லை. என்னுடைய உள்ளத்தினுள் தழைத்திருக்கும் அரும்புகளே புதியவையாக யிருக்கின்றன. நான் இனி சுடமைக்காக வாழமாட்டேன். அன்பிற்காகத்தான் வாழ்வேன்" என்று விரதம் கொண்டாள் அவள். இந்த அன்பின் மூலமாகத்தான் அவள் தன்னைத்தானே அறிந்துகொண்டாள்.

மீண்டும் அவளுடைய உள்ளம், ஆத்மா யாவற்றையும் நிறைத்துக்கொண்டு ஒரு இன்பகரமான அமுதவெள்ளத்தில் பாய்ந்தோடியது.

இச்சமயத்தில்தான் அவளுக்கு நட்சத்திரங்களைப் பார்ப்பதற்காக உபயோகிக்கும் அந்தக் கருவியின் நினைவு வந்தது. அவள் அதைத் தன்னுடன் எடுத்து வரும்படி உத்தரவிட்டிருந்தாள். அது இப்போது புத்தக அறையில் வைக்கப்பட்டிருந்தது. அவள் சென்று அதை எடுத்தாள். அது மிகக் கனமாயிருந்தது. சிரமத்துடன் அதைப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து வந்தாள். பெட்டிக்குள்ளே இருந்த அதனுடைய மூன்று கால்களை எடுத்து அதன்மீது அக்கருவியை நிற்க வைத்தாள். அதன் மூலமாக வானுலகை நோக்கினாள்.

அதன் மூலமாக நட்சத்திரங்களின் வடிவங்களும், சந்திரன் செல்லும் பாதையும் யாவும் உடனே தெரியும் என்று அவள் எதிர்பார்த்தாள். மேகமில்லாத இரவாயிருந்தபோதிலும் அதில் ஒன்றுமே தெரியவில்லை. அவள் மிக ஏமாற்றமடைந்தாள். இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். ஆனால் தேவலோகம் அவளுக்காகத் திறக்கப்படவில்லை. அவள் பெருமூச்செறிந்தவாறு, அக்கருவியை அப்பால் வைத்தாள். அதை உபயோகிக்கக் கூடிய அறிவு அவளுக்கில்லாமற் போய்விட்டது. 'அது அவருக்கு மட்டுமே சொந்தமானது. இதை அந்தக் குரல்கள் கேட்கும் பெட்டியுடன் வைத்து, அவருடனே புதைத்துவிடச் செய்யலாம்' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

இந்தத் தீர்மானத்துடன் அவள் படுக்கைக்குச் சென்று படுத்து உறங்கி விட்டாள்.

* * *

இதைப் போன்ற வேறு அந்திமக் கிரியையை அப்பட்டணத்திலேயே எவரும் கண்டதில்லை. ஸ்ரீமதி ஊ, அதைச் சாதாரணமாகக் குடும்பச் சடங்கைப்போல் நடத்திவிட விரும்பவில்லை. ஆனால் தன்னுடைய மகனின் கல்வியாசிரியர் என்ற முறையில் அதற்குத் தக்க மரியாதை செய்தாள். குழந்தைகள் அனைவரும் தூய வெள்ளையாடைகளை அணிந்தனர். சகோதரர் ஆண்ட்ரூவை அவருடைய வீட்டிற்குத் தூக்கிச் சென்ற அந்த எளிய பிச்சைக்காரர்கள் அனைவரும் தாங்களாகவே அம் மகானிற்காகத் துக்கம் காக்க முன் வந்தனர். ஸ்ரீமதி ஊ, துக்கத்தின் சின்னமாக, வெளிப்படையாக எதையும் அணிந்து கொள்ளவில்லை.

பின்பு அவளுக்கு அந்நகரத்திலிருக்கும் வெகு சிலரேயான மற்ற அயல் நாட்டினருக்கு இவருடைய மரணச் செய்தியை அறிவிக்க வேண்டுமா வேண்டாமா என்ற யோசனை உண்டாயிற்று. சிறிய சகோதரி ஹோஷியாவிற்கும், அந்த அந்நிய டாக்டர் ஒருவருக்குமாவது அவசியம் அறிவிக்கத்தான் வேண்டும்.

ஸ்ரீமதி ஊ அந்த டாக்டரைப் பார்த்ததில்லை. இப்போதும் அவள் அவரைப் பார்க்க விரும்பவில்லை. அவர்கள் எப்போதும் தங்கள் கையில் கத்தியை வைத்தபடி, நோய் வாய்ப்பட்டவர்களை அறுத்துத் தள்ளுவதற்குத் தயாராகயிருக்கிறார்கள் என்று அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். சில சமயங்களில் கட்டி, புண் முதலியவற்றை அறுத்துக் குணப்படுத்துவதில் அவர்கள் வெற்றியடைந்தார்களென்றாலும் அநேகமாக ஜனங்களைக் கொன்றே வந்தனர். மக்கள் தங்களுடைய வைத்தியர்கள் குணப்படுத்த முடியாமல் சாகடித்துவிட்ட சமயங்களில் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் அந்நிய வைத்தியரின் திறமையில் உடனே அவநம்பிக்கை கொண்டனர். இந்தக் காரணத்தினால் அந்நகரத்தினர் யாவரும் அந்த டாக்டரின் அருகேகூட நெருங்குவதில்லை. மரணம் நிச்சயம் என்று தெரிந்து போன கேசுகளையே அவரிடம் எடுத்துச் சென்றனர்.

அங்கிருந்த சில அந்நியர்களுக்கு ஒரு ஆள் மூலமாகச் செய்தியனுப்பினாள் அவள். ஆனால் அம்மனிதன், சகோதரர் ஆண்ட்ரூ அவர்களுக்கு முற்றிலும் வேற்று மனிதர் என்றும்,

அவர் அவர்களுடைய மதத்தைச் சேர்ந்தவர் அல்லராதலால் அதற்கு வரமாட்டார்களென்றும் தகவல் கூறியதாக வந்து பதில் கூறினான்.

முடிவில், ஸ்ரீமதி ஊவின் சொந்த யோசனையின்படியே அந்திமக் கிரியைகள் நடத்தப்பெற்றன. ஆனால் அவள் எண்ணியபடி மறுநாளே அதைச் செய்ய முடியவில்லை. ஏனெனில் அவ்வளவு பெரிய சவப்பெட்டி ஒன்றுகூட அகப்படாமற் போகவே, ஒன்று செய்யவேண்டி ஏற்பட்டது. ஒருவன் இரண்டு இரவுகள் ஒரு பகல் விடாது வேலை செய்து அதை முடித்துக் கொடுத்தான். அடுத்த நாள் ஊரெல்லாம் விழித்து எழுமுன் அவர்களுடைய ஊர்வலம் புறப்பட்டு விட்டது. ஸ்ரீமதி ஊ தனது பல்லக்கில் அமர்ந்து தலைமை வகித்து அவ் ஊர்வலத்தை நடத்திச் சென்றாள். அவளுக்குப் பின்னால் மற்றவர்களுடன், ஆண்ட்ரூவின் சவப்பெட்டியும் கொண்டு வரப்பட்டது. அவருடைய பெரிய சரீரத்தைப் பெட்டிக்குள் வைக்கும்போது அவளே அருகிலிருந்து பார்வையிட்டாள்.

ஆட்களெல்லாருமாக அச்சரீரத்தைத் தூக்கிப் பெட்டிக்குள் வைக்கும்போது அவள் அருகே நின்று கொண்டிருந்தாள். மூடியை வைத்து ஆணிகளை முடுக்குமுன் அவள் தன் கையால், அக் குரல் ஒலி கேட்கும் பெட்டியையும் நட்சத்திர லோகத்தைக் காட்டும் பெட்டியையும் அதற்குள் வைத்தாள். அக் கருவியை அவள் இவ் வீட்டிற்கே எடுத்து வந்து விட்டாள். அதை அவருடனேயே வைத்துப் புதைத்து விடவேண்டியது தானே! அவள் பேசாமற் நின்றிருந்தாளேயொழிய, வார்த்தையாலோ, சைகையாலோ, அப் பெட்டி மூடுவதைத் தாமதப்படுத்தவில்லை. அவர் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவள் நெஞ்சம் சொல்லொணா ஏக்கத்தால் பரிதபித்தது. ஆனால் அவள் வாய் திறக்கவில்லை. மூடியை வைத்துப் பொருத்தியதும் அவர் முகம் என்றென்றைக்குமாக அவள் கண்ணெதிரிலிருந்து மறைந்துவிட்டது!

அவள் விசிக்கவுமில்லை. அவள் எதற்காக அதன்மூலம் தன்னையே காட்டிக்கொள்ள வேண்டும்? ஆணிகள் மூடுக்கப்படும் சப்தம் அவள் காதில் விழுந்தது. அப் பெட்டியைச் சுற்றி கயிறுகள் வரிந்து கட்டப்படும் காட்சி அவள் கண்களில் பட்டது. அப் பிரம்மாண்டமான பெட்டியைத் தூக்கிச் செல்வதற்காக இருபது ஆட்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் அதைச் சுமந்து கொண்டு தெரு வழியாக, நகரத்தின் வாசற் கதவைக் கடந்து மேற்குப் புறம் இருந்த மலைப்

பிரதேசத்தை நோக்கிச் சென்றனர். இக் கூட்டத்தைத்தான் அவள் தலைமை தாங்கி அழைத்துச் சென்றாள். அம்மலைப் பிரதேசமும் அந்த ஜிங்கோ மரமும் அவரை வரவேற் பதற்காகக் காத்திருந்தன.

பெட்டி, அதற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் இறக்கப்பட்ட பொழுது யாவரும் மௌனமாக யிருந்தனர். குழந்தைகள் மட்டும் அழுதன. கிழவி விசும்பினாள். ஸ்ரீமதி ஊ, மௌனமாக அசைவற்று நின்றிருந்தாள். குழிமூடப்பட்டு அதன்மீது ஒரு மேடை கட்டப்பட்டது.

அவள் இதயமே பிழிந்தெடுக்கப்படுவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது ஒரு கணம். அவளுக்கு அவளுடைய நினைவில் அவர் வாழ்வதைத் தவிர அவரை இனி ஒரு நாளும் அவள் காணப் போவதில்லை.

காரியங்கள் அனைத்தும் முடிந்ததும், ஸ்ரீமதி ஊ ஊர் வலத்தைத் திரும்ப வீடு நோக்கி அழைத்துச் சென்றாள். அக் குழந்தைகளை தன் சொந்த வீட்டிற்கே அழைத்துச் சென்றாள். அதற்குப் பிறகு அவர்கள் ஒருநாளும் வீட்டையிழந்த அனுதைகளாக நிற்கவில்லை.

* * *

மறுநாள், காலையில் அவள் தன் அறையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டாள். உலகம் மற்ற நாட்களெல்லாம் இருந்தது போல் தான் இன்றும் இருந்தது. இதுவரை, காலையில் எழுந்ததும் அவள் உள்ளத்தில் உடனே சோர்வும், இந்நாளை ஆரம்பிக்க வேண்டுமே என்ற அலுப்புமதான் ஏற்பட்டு வந்தது. ஆனால் இப்போது தன்னுள்ளே ஒரு புதிய சக்தி, வேகத்துடன் பாய்ந்து செல்வதை உணர்ந்தாள். இத்தகைய சக்தியை அவள் முன்பு அறிந்ததில்லை. அது எங்கிருந்து வருகிறது என்பதையும் அவளால் அறியக் கூடவில்லை. இளம் வயதில் அவள் தன் கணவனிடம் கொண்ட ஆசையும் பாசமும் நிச்சயம் ஒருவகை அன்புதான். ஸ்ரீமான் ஊவை அவருடைய காளைப் பருவத்தில் பார்த்த எவரும் அவரிடம் காதல் கொள்ளாமலிருக்க முடியாது. அவருடைய அழகும், உடல் கட்டும், குணமும் அப்படி அமைந்திருந்தன. அவளுடைய ஆவலும் தாபமும் நிறைந்திருந்த உள்ளத்தில் அவை இடம் பெற்றதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் அந்த அன்பிற்கும் அவளுக்கும் ஒன்றும் சம்பந்தமிருக்க வில்லை. மற்ற உறுப்புக்கள் வெளிச் செயல்களுக்கு ஈடு கொடுத்துச் செயல் புரிவதுபோல் துவும் இய ஏ பாகத் தோன்றக் கூடிய ஒரு உணர்ச்சி தானே!

11

இதயம் என்பது என்ன? சரீரத்தின் மத்திய பாகத்தில் இருக்கும் ஒரு உறுப்பு தானே!

இதை அவள் அறிவாள். அவள் பாட்டனார் ஒரு முறை தமது கையில் உயிரோடு துடித்துக்கொண்டிருக்கும் ஒரு புலியின் இருதயத்தை வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த் திருக்கிறாள். அப்போது, புலியின் இருதயத்தைச் சாப்பிட்டால் அதனுடைய பலம் முழுவதும் ஒரு மனிதனுக்குக் கிடைத்து விடும் என்பதாக நம்பப்பட்டு வந்தது. அக் காட்சி, இப் போதும் கண்ணெதிரே நடப்பதுபோல் அவ்வளவு தெளிவாக அவளுக்கு நினைவிருந்தது. அப்போது அவளுக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கலாம். வேடர்கள் அதை ஒரு வலையினுல் பிடித்துக் கட்டியிழுத்துக் கொண்டு வந்திருந்தனர். கறு வர்ணக் கோடுகளையுடைய அம்மிருகம் உறுமியவாறு அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது. அவர்கள் அனைவரும் அதைப் பார்ப்பதற்காக வெளியே வந்து நின்றனர். அவர் களைக் கண்டதும் அது பெருங் குரோதத்துடன் தனது சிவந்த வாயைப் பெரிதாகத் திறந்து கர்ஜனை செய்தது. பெண்கள் பயத்தால் கூக்குரலிட்டனர். ஆனால் அவள் அசையாமல் நின்ற வண்ணம் அம் மிருகத்தினுடைய வெறி நிறைந்த மஞ்சள் கண்களை உற்றுப் பார்த்தாள். அதன் சக்தியை உணர்ந்ததுபோல் அம் மிருகம் வாயை மூடிக்கொண்டு அவளை உற்றுப் பார்த்தது. அவள் அதை நோக்கிக் குருட்டுத் தனமாக ஒரு அடி எடுத்து வைத்தாள். அதற்குள் அவளுடைய தாத்தா ஒரு சப்தம் போட்டார். வேடர்களில் ஒருவன் பாய்ந்து சென்று புலியின் நெஞ்சில் கத்தியைப் பாய்ச்சினான். அதன் ரோமத்தை ஊடுருவிக் கொண்டு கத்தி உள்ளே பாய்ந்தது. புலி பின் வாங்கியது. அவ்வேடன் அதன் துடிக்கும் இருதயத்தை அப்படியே முழுதாக எடுத்து, எஜமானரின் கண் முன்னர் பிடித்துக் காட்டினான்.

ஆனால் இப்போது அவளுக்கு ஆண்ட்ரூவிடம் ஏற்பட் டிருந்த உணர்ச்சிக்கும், படபட வென்று அடித்துக்கொள்ளும் இருதயத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லை. இந்த அன்போ, அமைதியும் சக்தியும் நிறைந்ததாகயிருந்தது. நடுப்பகலில் வீசும் சூரிய ஒளிக்குச் சமமாகயிருந்தது. அதனுல் அவளுக்கு இன்பமும் சுகமும் உண்டாயிற்று. தன்னம்பிக்கை அதிக மானியது. இந்த ஒளியும், தென்பும் அவள் உள்ளத்தில் நிறைந்திருக்கும்போது அவள் எதைச் செய்தாலும் அது மிக சரியாகவேயிருக்கும். அன்பு அவளுடைய உள்ளத்தில் வியாபித்திருந்தது போல் அறிவிலும் வியாபித்திருந்தது. ஆண்ட்ரூ சாகவில்லை, அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அவள் அவரை நேசிப்பதால் அவர் அவளுடனே இருக்கிறார். சரீரத்தினுல் ஏற்பட்டு வந்த இடையூறு நீங்கி விட்டது. அவ் வன்பிற்குச் சரீரத்தின் அவசியம் இருக்கவில்லை. அவள் தன் வாழ்க்கையில் எப்போதும் நாஸ்திகத் தன்மையையே தான் கொண்டிருக்கிறாள். பூசாரிகளையும் கோவில்களில் நடக்கும் வேடிக்கைகளையும் பார்த்து நகைத்திருக்கிறாள். வானத்தைப் பார்த்திருக்கிறாள். ஆனால் ஒரு கடவுளும் அவளுக்குத் தென்பட்டதில்லை. ஆவிகள், பிசாசுகள் என்பதெல்லாம் குழந்தைத்தனமான கற்பனைகள் என்று கருதி வந்திருக்கிறாள். அவள் இப்போது ஆண்ட்ரூ வாழ்வதாகவும் அதுவும் தன்னுடனேயே வாழ்வதாகவும் நம்பினாள்.

'அவர் இந்த அறைகளுக்குள்ளே வந்து போய்க்கொண்டிருந்தபோது நான் அவரை நேசித்துத் தான் வந்திருக்கிறேன். ஆனால் அது எனக்கே தெரியாமலிருந்திருக்கிறது. நான் அவரை எவ்விதம் நேசிக்கிறேன் என்பதை அறிந்துகொள்வதற்கு எனக்கு, அவருடைய உயிரற்ற உடலைப் பார்க்க வேண்டியிருந்தது போலும்' என எண்ணமிட்டாள்.

அவள் ஒரு பெண்ணுகையால், அவர் தன்னை நேசித்தாரா என்ற கேள்வி அவளிடம் எழுந்தது. தன்னுடைய அன்பிற்கு அவரிடமிருந்து மறுமொழி கிடைத்ததா என்று யோசித்த பொழுதுதான் அவள் தனது தனிமையை வெகுவாக உணர்ந்தாள்.

'இனி அவருடைய குரலை எப்போது கேட்கப் போகிறேம்? ஆதலால் இதை நான் ஒரு நாளும் அறிந்து கொள்ளப் போவதில்லை' என்று எண்ணிய அவள் திரும்பி, அவர் நடந்து வரும் அவ்வாசல் கற்பாதையை நோக்கி, மிக்க விசனமுற்றாள். அக் காலடியோசை கேட்குமோ என்று காது கொடுத்துக் கேட்டாள். மூங்கிற் செடிகளில் வாழ்ந்த பட்சிகள் உண்டாக்கிய சிறு சப்தங்களைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை. அப்போது அவளுடைய நினைவு என்பதாகிய கரிய திரையில் அவருடைய முகம் மெல்ல மெல்லத் தோன்றியது. அவளை நோக்கிய அவருடைய கண்களில் குதூகலம் நிறைந்திருந்தது. தாடிகளினூடே அவருடைய உதடுகள் புன்னகை புரிந்தன. அவருடைய தீர்க்கமான திருஷ்டியும் அமைதி நிலவும் முகமும் அவள் முன்னர் தெளிவாகத் தோன்றியது. அவள் அவரை நோக்கிப் பதிலுக்குப் புன்னகை செய்தாள். அவளால் அவருடைய குரலைக் கேட்க முடியவில்லை. ஆனால் திடீரென்று அவளுக்கு ஆண்ட்ரூ தன்னை உண்மையில் நேசித்தார் என்ற உறுதியான எண்ணம்

ஏற்பட்டது. துறவறம் என்பதாகிய சுவற்றிற்குப் பின்னுல் இருந்தபடி, அவர் உயிர் வாழ்ந்தவரை அவளை நேசித்து வந்தார். அச் சுவர் அவர்களைப் பிரித்து வைத்தது. இனி அவர் ஒரு பாதிரியுமல்ல. அச் சுவரும் மறைந்து விட்டது. இப்போது எந்த நிமிஷம் வேண்டுமானுலும் அவரிடம் செல்லலாம். ஒரு இடையூறும் இடையாது. அவரும் ஏங்கிய எச்சரிக்கையுமின்றி அவளை அணுகலாம். அவருடைய சரீரம் அழிந்து போய்விட்டது. இனி அவளுடைய சரீரத்திலேயே இருவருமாக வாழலாம்.

அவள் இதுவரை அறிந்திராத புது ஞானத்தோடு எதையும் செய்யும் திறனைப் பெற்றாள்.

கட்டிலின் நீலத்திரைகளை நோக்கியபடி அவள், 'நான் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொண்டிருக்கிறேன். என் வீட்டில் இருக்கும் ஆண்கள் பெண்கள் அனைவரையும், நான் எவ்வளவு குழப்பமடையச் செய்துவிட்டேன்' என்று சிந்தித்தாள்.

தான் அவர்களிடமிருந்து விலகிக் கொள்வதால், அவர்களுடைய பந்தத்திலிருந்து விடுபட்டு விடலாம் என்ற எண்ணத்தோடு, அவள் அவ்விதம் சுயநலமாக நடந்து கொண்டாள். அவர்களெல்லோரும் அவரவர் விருப்பப்படி சந்தோஷமாக வாழட்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் அவர்களைச் சந்தோஷப்படுத்தும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை. சந்தோஷமாக வாழ்வது எப்படி என்பதையும் அவர்களுக்கு உணர்த்த அவளால் இயலவில்லை. உணவும் உடையும் அவள் எல்லோருக்கும் அளித்தாள். வீட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலவும்படி பார்த்துக் கொண்டாள். அப்படியிருந்தும் வீடு முழுமையுமே கலவரத்தில் ஆழ்ந்திருந்தது. ஒருவராவது இன்பமாக இருக்கவில்லை. அவர்கள் அவ்விதம் மகிழ்ச்சியுடன் வாழவில்லை என்பதற்காக அவள் அவர்கள் மீது கோபம் கொண்டாள். இது எத்தகைய முட்டாள்தனம் என்பதை இப்போது கண்டு கொண்டாள் அவள்.

இச்சமயம் இங், அதிருப்தியுடன் காணப்பட்டவளாய் அங்கு தோன்றினாள். "நீங்கள் இன்று காலை எழுந்திருக்கப் போவதேயில்லையா?" என்று கேட்டாள். அவள் குரல் சன்னமாயிருந்தது.

"இன்று மழை பெய்யப் போகிறது" என்றாள் அவள் புன்சிரிப்புடன்.

இங் அதை ரசிக்காதவளாக "அது எப்படித் தெரியும் அம்மா உங்களுக்கு? இன்னும் படுக்கைத் திரையைக்கூட அகற்றவில்லையே நீங்கள்!" என்றாள்.

"உன்னுடைய குரலிலிருந்தே கண்டுபிடித்து விட்டேன். உன் முகத்தில் மேகங்கள் கூடியிருக்கின்றனவே!" என்று பதிலளித்தாள் ஸ்ரீமதி ஊ.

"இவ்வீட்டிற்குள் ஒரு வேசிப்பெண் வந்து நிற்பாள் என்று நான் எண்ணவேயில்லை. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க நேரிடும் என்று நான் கண்டேனா? இந்த வீட்டில் பிறந்த பிள்ளைகள் இப்படி வெளியே சுற்றித் திரிவார்கள். ஒரு விலைமகள் இருப்பது போதாமல் இன்னுமொன்று வேண்டியிருக்கும் என்றெல்லாம் யார் எண்ணினார்கள்?" என்றாள் இங் கோபத்துடன்.

"ஓ, அந்தப் பெண் மல்லிகா வந்திருக்கிறாளா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அவள் பின்புறம் காத்துக்கொண்டிருக்கிறாள்" என்று கூறிய இங், மேலே பேசியபடி, அலங்கரித்துக்கொள்ளும் மேஜையைத் தயார் செய்வதில் ஈடுபட்டாள். "அவளை என்ன செய்வது என்று எல்லோரும் கேட்டார்கள். அவளை என்ன செய்வது என்று எனக்கும் தெரியவில்லை" என்று கூறிவிட்டு இங் தனது உதட்டைப் பிதுக்கிக் கொண்டாள். "அந்தப் பெண் அவளை இங்கு யாரோ வரச்சொன்னதாகக் கூறினாள். உன்னை ஒருவரும் வரச்சொல்லவில்லை என்று நான் கூறிவிட்டேன்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ படுக்கையை விட்டு எழுந்து, பூவேலைப் பாடுகள் செய்திருந்த தனது சிறிய பாதரக்ஷைகளைக் காலில் மாட்டிக்கொண்டு "அவள் தனியாகவா வந்திருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"சிங்கப்பல் கொண்ட ஒரு கிழவிகூட வந்தாள். ஏதோ அவசரமென்று உடனே போய்விட்டாள். ஆமாம், அவளை நம் தலையில் கட்டிவிட்டுப் போயிருக்கிறாள்" என்றாள் இங் மிக்க கசப்புடன்.

ஸ்ரீமதி ஊ ஒன்றும் கூறாமல், குளிப்பதற்காகச் சென்றாள். குளித்துவிட்டு உள்ளே மெல்லிய சில்க் ஆடைகளையும் மேலே பூக்கள் நிறைந்த வெளிறிய வர்ணமுடைய ஸேடன் ஆடைகளையும் அணிந்துகொண்டாள். இங் மிகக் கவனத்துடன்

அவளது தலை மயிரை வாரிமுடித்தாள். ஆனால் அவள் உதடு இன்னும் கோபத்தில் துடித்துக் கொண்டேயிருந்தது.

"என்னுடைய காலியுணவை எடுத்து வா" என உத்திரவிட்டாள் ஸ்ரீமதி ஊ. சில நிமிஷங்களுக்குப் பிறகு அவள் உட்கார்ந்து நன்கு ருசித்துச் சாப்பிடலானாள். உணவின் மீது அவளுக்கு ஒரு புதிய ஆசை உண்டாகியிருந்தது. அதைக் கண்டு அவளுக்கே நகைப்பு உண்டாயிற்று. காதல் என்பது ருசியைப் போக்கிவிடும் என்று அவள் கேட்டிருக்கவில்லையா? ஆனால் உடனே நிறைவேறுத காதல்தான் பசியைப் போக்கும் என்பதையும் நினைவு கூர்ந்தாள்.

'ஆண்ட்ரூ என்னை நேசிக்கத்தான் செய்கிறார்' என்று வெற்றி கண்டவள்போல் பெருமிதம் கொண்டாள்.

அரைமணி நேரத்திற்குள் அவள் அப்பெண்ணைப் பார்ப்பதற்காக வீட்டின் பின்கட்டிற்குச் செல்வதற்காகப் புறப்பட்டாள்.

"அவளை இங்கு அழைத்து வருகிறேனே, அம்மா? நீங்கள் அவளைத் தேடிச் சென்றால் அவளுக்கு மிகவும் திமிர் ஏறிப் போய்விடும்" என்று கூறினாள் இங்.

ஸ்ரீமதி ஊ சாந்தமாக, "இல்லை, நானே அவளைச் சென்று பார்க்கிறேன்" என்றாள். இனி தன்னுடைய அறையில் கூடியவரை ஒருவரையும் வரவிடாது பார்த்துக்கொள்ள விரும்பினாள் அவள். ஆண்ட்ரூவின் ஆத்மா அங்கு வாழ்கிறது. அதை எவரும் தொந்திரவு செய்யாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணிக்கொண்டாள். வாசலில் இருக்கும் அச்சிறிய கதவைத் தாண்டிச்செல்லும்போது அவள் கால் வழுக்கிவிட்டது. தடுக்கி நின்றபோது அவள் மனத்தில் வேறு எண்ணம் உதித்தது.

'ஆனால் ஆண்ட்ரூ எவரையும் தன்னிடமிருந்து ஒதுக்கித் தள்ளவில்லை. இப்பெண்ணைப் பார்த்து அவளுக்குத் தம்மால் என்ன செய்யக் கூடும் என்றுதான் பார்த்திருப்பார். இங்கிருக்கும் அவருடைய ஆவி எனக்கு அதற்கு உதவி செய்யும்' என்ற எண்ணம் ஏற்பட்டது.

அவள் இங்கை நோக்கி, "அவளை இங்கே தான் அழைத்து வந்துவிடேன்" என்றாள்.

இங் சென்றிருந்தபோது அவள் உள்ளே போய் உட்கார்ந்தாள். அந்த வழியாக யாரேனும் சென்றிருந்தால், அக் கதவின் வழியாக, அம்மெல்லிய உருவம் தலையைக் குனிந்தபடி

பால்போல் வெளுத்த முகத்தில் புன்னகை தவும்பவீற்றிருந்ததைப் பார்த்திருக்கலாம். ஆனால் ஒருவரும் அவ் வழியே வரவில்லை. சிறிது நேரத்திற்குள் இங், ஒரு கட்டைக் குட்டையான, சிவந்த நிறமுடைய ஒரு இள நங்கையை அழைத்துக் கொண்டுவந்தாள்.

ஸ்ரீமதி ஊ நிமிர்ந்து மல்லிகாவைப் பார்த்தாள். இந்த மாதிரியான பெண்ணைத்தான் அவள் இயற்கையாகவே வெறுத்தாள். நன்றுகக் கொழுத்து, ஆசாபாசங்களும், மூரட்டுத்தனமும் நிறைந்த பெண்கள் இவர்கள். அவள் தன் கண்களை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள். அவளுடைய ஆத்மா நேற்றைய நிலைக்கும் இன்றைய நிலைக்குமிடையே தடுமாறியது. அவளுடைய மெல்லிய தேகம் சிலிர்த்தது.

தன்னுள் தோன்றிய வெறுப்பு நீங்குவதை உணர்ந்தாள் அவள். ஆண்ட்ரூ அவள் மனத்தை அமைதியுறச் செய்தார். அவளுடைய உள்ளமாகிய திரையில் அவருடைய முகம் தோன்றியது. அவருடைய முகத்தை நோக்கியபடி அவள் அப்பெண்ணை, அன்பும் ஆதரவும் நிறைந்த குரலில் கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள். இங் சிறிது தள்ளிச் சென்று நின்றுகொண்டு, வெறித்துப் பார்த்தபடி இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். இது ஸ்ரீமதி ஊவின் வழக்கமான கண்டிப்பும் தெளிவும் நிரம்பிய குரலே அல்ல. இதில் சிறிதும் கடுமையேயில்லையே! ஆனால் ஸ்ரீமதி ஊ குழந்தைகளிடம் பேசும் குரலும் அல்ல அது. இந்தக் குரல்—இது ஏதோ புதியதாக அல்லவோ இருக்கிறது!

"நீ ஏன் இங்கு வந்து வசிக்க விரும்புகிறாய் என்பதை எனக்குச் சொல்லு" என்றாள் ஸ்ரீமதி ஊ.

மல்லிகா கீழே கல்தரையை நோக்கியபடி நின்றாள். அவள் தான் இந்தப் பச்சை சேடன் துணியை அணியாமல், சாதாரண நூலாடையை அணிந்து கொண்டு வராமற் போனோமே என்று மனத்திற்குள் அவமானமடைந்தாள்.

"குழந்தை பிறப்பதற்கு முன்னால் நான் ஒரு ஏற்பாடு செய்துகொள்ள விரும்புகிறேன்" என்றாள் மல்லிகா.

"உனக்குக் குழந்தைப் பிறக்கப்போகிறதா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

மல்லிகா தலையை உயர்த்தி அவளை வேகமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு பிறகு உரக்க "ஆம்" என்று கூறினாள்.

"குழந்தை இருப்பதாகத் தெரியவில்லையே" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அதை எதிர்த்துப் பேசுவதற்காக மல்லிகா தன் தலையை மீண்டும் உயர்த்தினாள். வாயைத் திறந்தவள் ஸ்ரீமதி ஊவின் கண்களை உற்று நோக்கினாள். ஒளியெனத் திகழ்ந்த அக் கண்கள் அவளுடைய நெஞ்சை ஊடுருவிச் சென்றன. அவளுடைய கண்களில் கண்ணீர் துளித்தன.

"ஆம் உன்னிடம் குழந்தை இல்லை அல்லவா?" என்றாள் ஸ்ரீமதி ஊ மீண்டும்.

"அம்மா, அப்படியானால் இவளை நாம் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை" என்று கத்தினாள் இங்.

ஸ்ரீமதி ஊ தனது நீண்ட மெல்லிய கரத்தை உயர்த்திக் காட்டினாள். "இதைத் தீர்மானிக்க வேண்டியவளை நான் இங், தயவு செய்து நீ வெளியே போ" என்றாள்.

"இந்த அழுகிண பிண்டத்துடன் உங்களை விட்டுவிட்டா?" என்று கோபத்துடன் கேட்டாள் இங்.

"அந்த வாசற் கதவுக்கு வெளியே நீ நிற்கலாம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பின் இங் செல்லும்வரை பொறுத்திருந்தாள். பிறகு அப் பெண்ணைத் தோட்டத்து நாற்காலி ஒன்றில் உட்காரும்படி பணித்தாள். மல்லிகா கண்களைத் துடைத்தவாறு உட்கார்ந்து மெல்ல தனது விக்கல்களைத் தொண்டைக்குள் அடக்கிக் கொண்டாள். ஸ்ரீமதி ஊ பேச ஆரம்பித்தாள்.

"ஒரு மனிதனுடைய வீட்டில் சென்று வசிப்பதென்பது ஒரு சாமான்ய காரியமல்ல. அதுவும் எங்களுடையதைப் போன்ற கௌரவமும் பெருமையும் வாய்ந்த பெருங்குடும்பங்களில் வசிப்பது என்பது கஷ்டந்தான். நீ இங்கு வந்து இங்குள்ள சந்தோஷத்தை முழுதும் நாசம் செய்தாலும் செய்யலாம். அல்லது நீ வருவதால் சிறிது சந்தோஷம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். இவை உன்னுடைய உண்மையான உள்ளத்தைப் பொறுத்திருக்கிறது. நீ சாப்பாட்டையும் பாதுகாப்பையும் வேண்டி வருகிறாய் என்றால் அதை என்னிடம் கூறிவிடு. நான் அவற்றை உனக்கு அளிக்கிறேன். நீ உன் உடலை விற்றுத்தான் இதைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டு மென்பதில்லை. நான் இவற்றை உனக்கு இலவசமாகக் கொடுக்கிறேன்" என்றாள்.

மல்லிகா அவளைத் தீவிரமாகப் பார்த்தாள். "ஒரு பெண்ணுக்கு அவளிடமிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ளாமல் யார் கொடுக்கிறார்கள்?" என்றாள்.

ஸ்ரீமதி ஊவிற்குத் தன்னைப்பற்றியே பெரும் வியப்பு உண்டாயிற்று. இம்மாதிரி ஒரு மாதத்திற்கு முன்பு நடந்திருக்குமானால் அப்பெண்ணிடம் அப்போது அவள் மிக்க அருவருப்பு கொண்டிருப்பாள். ஆனால் இப்போதோ, அவள் தன்னை நன்கு புரிந்து கொண்டாள்.

"உணவும் உடையும் பாதுகாப்பும் உனக்கு ஒருபோதும் இலவசமாகக் கிடைத்திராது. ஆதலால் நான் சொல்வதை நம்புவது உனக்குக் கடினமாகத்தான் இருக்கும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"நான் ஒருவரையும் நம்புவதில்லை" என்றாள் மல்லிகா. அவள் தனது சட்டையிலிருந்து ஒரு சிகப்பு சில்க் கைக்குட்டையை உருவி எடுத்தாள். அதன் ஒரு முனை பித்தானில் பொருத்தப்பட்டிருந்தது. மற்றொரு முனையை அவள் விரலால் சுற்றவாரம்பித்தாள்.

"அப்படியானால் பாதுகாப்பு வேண்டும் என்றுதான் நீ இங்கு வருகிறாயா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

மல்லிகா தலையை அசைத்துவிட்டு, "இல்லை, நான் அப்படிச் சொல்லவில்லை" என்று கூறினாள். அவள் தனது இமைகளை உயர்த்தியபோது, அவளது வட்டக்கரிய விழிகளில் கூச்சம் தென்பட்டது. "எத்தனையோ பேர் அதை எனக்குக் கொடுக்க முன் வந்திருக்கின்றனர்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ, விடாது மேலும், "அப்படியானால் நீ வேறு எதையோ விரும்புகிறாய் அல்லவா? கௌரவமும் பெருமையும் வாய்ந்த இக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக வேண்டுமென்று விரும்புகிறாயோ? அதற்காக இவ்வீட்டின் பின் பகுதியில் வசித்தால்கூடப் பரவாயில்லை என்று எண்ணுகிறாயா?" என்றாள். மல்லிகாவின் முகம் அவள் பூசியிருந்த பவுடரையும் மீறிச் சிவந்து காணப்பட்டது. அவள் பாமர ஜனங்கள் பேசும் பாஷையில், "நான் இந்தக் கிழவரை மிகவும் விரும்புகிறேன்" என்றாள்.

அவள் ஸ்ரீமான் ஊவைப் பற்றித்தான் பேசுகிறாள் என்பது ஸ்ரீமதி ஊவிற்கு விளங்கியது. ஆனால் அவள் அப்பெண்ணைக் கண்டிக்கவில்லை. அப்பெண்ணின் எண்ணம்

மனத்திலிருந்து அவளையும் அறியாதவாறு வெளிப்பட்டு வந்தது.

"உன்னைவிட அவர் வயதில் மிகவும் பெரியவராயிற்றே. குழந்தாய்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எனக்கு வயதானவர்களைத்தான் பிடிக்கும்" என்றாள் அப்பெண். அவளுடைய குரல் நடுங்கியது.

"நீ எதற்குப் பயப்படுகிறாய்? என்னிடம் நீ நடுங்க வேண்டிய அவசியம் இல்லை" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"இவ்வளவு உயர்ந்த குணமுள்ளவரை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. இவர் உண்மையில் மிகவும் உயர்ந்த மனிதர்" என்றாள் மல்லிகா உணர்ச்சியுடன்.

"எந்த விதத்தில் அவர் உயர்ந்தவர் என்று சொல்கிறாய் நீ?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. அவள் இவ்வார்த்தையை ஸ்ரீமான் ஊவிற்காக என்றும் உபயோகித்ததில்லை. ஆசாபாசம் உடையவர்; பொறுமை அற்றவர்; பிடிவாதமும் மூடத்தனமும் கொண்டவர். சில சமயங்களில் மிக நல்லவராகவும் நடந்து கொள்பவர்; ஆனால் பெரும்பாலும் கயநலமே குடிகொண்டவர் என்றெல்லாம் வேண்டுமானால் கூறலாமே ஒழிய உயர்ந்த குணமுடையவர் என்ற வார்த்தை அவருக்கு ஒவ்வாதது.

"மிகப் பெருந்தன்மையுள்ளவர்" என்று கூறிய மல்லிகா தனது கையை நீட்டிக் காண்பித்தாள்.

"இந்த வளையல் இருக்கிறது. இது அப்படியே பொன்னானது. ஒரு இளைஞனை இருந்தால் தங்கமுலாம் பூசிய ஒரு பித்தளை வளையலைக் கொடுத்துவிட்டு அது சுத்தமான தங்கம் தான் என்று சாதித்திருப்பான். அந்த தங்க கில்ட் அவன் என்னைவிட்டுப் போகும்வரை அழியாதிருக்கும். ஆனால், இவரோ, எனக்குச் சுத்தமான பவுன் நகையைக் கொடுத்திருக்கிறார்" என்று கூறிவிட்டு, அவள் அதைப் பற்களால் கடித்து, அதில் பல்லின் அடையாளத்தைக் காட்டினாள். "இதோ பார்த்தீர்களா?" என்றாள்.

"ஆம் இது பொன்தான்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அப்பெண் மேலும் உணர்ச்சியோடு, "அவர் மிகவும் பொறுமையுள்ளவர். எனக்கு ஏதேனும் உடம்பு சுகமில்லையென்றால் உடனே அதைக் கவனிப்பார். அப்போது என்னை

வற்புறுத்துவதில்லை. ஆனால், வாலிபர்களோ அவ்விதம் செய்வதில்லை. அவர்கள் தங்களுக்கு வேண்டியதைத்தான் பார்க்கிறார்கள். ஆனால் இந்தக் கிழவரோ எனக்கு எப்படி இருக்கிறது என்று எப்போதும் கேட்காமல் இருப்பதில்லை" என்றாள்.

"ஓ, அப்படியா!" என்றாள் ஸ்ரீமதி ஊ. இந்த ஸ்ரீமான் ஊ அவளுக்குப் புதியவராக இருந்தார். அந்தப் பெண் மீண்டும் உட்கார்ந்து அவ்வளையலைச் சுற்றிக்கொண்டே ஆரம்பித்தாள்: "எனக்குக் குழந்தை இல்லாவிட்டால்..."

"குழந்தை விஷயம் ஒன்றும் முக்கியமானதல்ல" என்றாள் ஸ்ரீமதி ஊ.

மல்லிகா அவளைக் கடைக்கண்ணால் பார்த்தாள். ஸ்ரீமதி ஊ தொடர்ந்து, "நீ இந்த வீட்டிற்கு வந்தால் சந்தோஷத்தை அளிப்பாயா? அல்லது இருக்கும் சந்தோஷத்தையும் போக்கி விடுவாயா என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்" என்றாள்.

மல்லிகா ஆவலுடன் தன் தலையை நிமிர்த்தி "நான் சந்தோஷத்தைக் கொடுப்பேன். அம்மா உங்களுக்கு நான் வாக்குறுதி அளிக்கிறேன்" என்றாள்.

"சரி நாளைக்கு நான் தீர்மானமாகச் சொல்கிறேன்" என்று கூறியவாறே ஸ்ரீமதி ஊ எழுந்துவிட்டாள். இங் வேகமாக உள்ளே வந்து அப்பெண்ணை அழைத்துச் சென்று விட்டாள்.

அவள் சென்றதும் ஸ்ரீமதி ஊ அறைக் கதவை நோக்கி நடந்தாள். அவள் சென்ற பாதையை சூரிய கிரணம் ஒன்று விழுந்து அதை ஒளியால் நிரப்பியது. அவ்வொளி அவளுடைய கண்களைக் கூசச் செய்தது. ஆனால் பாதங்களுக்கு அந்த உஷ்ணம் இதமாய் இருந்தது. அவள் அதிசயத்துடன் தனக்குள் "நான் நன்றாகச் செய்து முடித்துவிட்டேன். இவ்வளவு நன்றாகச் செய்ய எனக்கு எப்படித் தெரிந்தது?" என்று வினவிக் கொண்டாள்.

பின்பு அவளுக்குப் புரிந்தது. மல்லிகா, ஸ்ரீமான் ஊவை மனப்பூர்வமாக நேசிப்பாளேயாகில், அந்த அன்புக்கும் இடங்கொடுக்க வேண்டியது அவசியம்தான். ஸ்ரீமான் ஊவும் உண்மையில் அவளை நேசிக்கிறாரோ? அப்படியாயின் அன்பு குடும்பத்தில் உண்மையான மகிழ்ச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. வீடுகளில் ஏற்படும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன? உண்மையான அன்பு இல்லாததுதானே!"

இங் கையை உதறிக்கொண்டு உள்ளே வந்தபோது, ஸ்ரீமதி ஊ அவளிடம், "நான் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு, எனது பிள்ளைகளின் தகப்பனாரைப் பார்க்கச் செல்லவேண்டும்" என்றாள்.

இங்கின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. "அப்படியே செய்யுங்கள் அம்மா. ஒருவேளை நீங்கள் கூறுவதால் அவருக்கு அறிவு உண்டாகலாம். நம் வீட்டில் ஏற்கனவே அதிகப் பெண்கள் இருக்கிறார்கள்" என்றாள்.

மல்லிகாவை அழைத்துச் சென்றபோது அவள் அவளிடம் "நீ இங்கு இருக்கப் போகிறாயா?" என்று கேட்டாள்.

மல்லிகா தடுமாறிக்கொண்டு "எனக்குத் தெரியாது. நாளைக்குச் சொல்கிறேன் என்று அந்த அம்மாள் கூறியிருக்கிறார்கள்" என்றாள்.

"எங்கள் எஜமானி எதையும் விரைவில் முடிவு செய்து விடுவார்கள்" என்று கூறினாள் இங். ஆனால் மேலும் தன் மனத்திற்குள் எண்ணியதை அவள் வெளியே கூறவில்லை. தன்னுடைய எஜமானி இன்றைக்கு ஆம் என்று சொல்லாவிட்டால் அது நாளைக்கு இல்லை என்பதுதான் பொருள் என்று அவள் எண்ணினாள். பின்புறக் கதவிற்கு வெளியே அப்பெண்ணைத் தள்ளிவிட்டு, அவ்விரும்புக் கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு வந்தாள்.

"அம்மா நான் இப்போதே சென்று அறிவிக்கிறேன்" என்றாள் இங். அலட்சியம் குடிகொண்டிருந்த அவளது விழிகளில் பழைய ஒளி திரும்ப வீசியது. அதைக் கண்ணுற்ற ஸ்ரீமதி ஊ அதைப் புரிந்துகொண்டவளாய் முறுவல் செய்தாள்.

* * *

ஸ்ரீமதி ஊ, விழித்துக்கொண்டபோது, அவளுடைய உள்ளம் நிறைந்திருந்தது. அவள் வாழ்நாள் முழுவதும், இத்தகைய அமைதியும் நிறைவும் அடைய வேண்டுமென்றே பாடுபட்டிருக்கிறாள். இதுவரை, தன்னுடைய மனவைராக்கியம் என்பதாகிய சிறையில் தன்னையே அவள் அடைத்து வைத்திருந்தாள். சரீரத்தையும் அதன் ஆசைகளையும் உட்படுத்தி வந்தாள். அதன் அதிகாரத்திற்குட்பட்டே

அவளுடைய உடல் தன் சொந்த விருப்பு, வெறுப்புகளைப் பாராமல் செயல் புரிந்து வந்தது. இனித் தன்னைத் தானே எந்த விதத்திலும் பலவந்தப்படுத்த வேண்டிய நிலை ஏற்படாது என்பதை அவள் உணர்ந்தாள்.

அவள் தனக்குள், 'ஆண்ட்ரூ, நான் தங்களை அறிந்து கொள்ளும் முன்னரே தாங்கள் இறந்து விட வேண்டுமென்று இருந்தது அதிசயமல்லவா?' என்று கேட்டுக் கொண்டாள்.

உடனே அவளுள்ளிருந்த குரலிடமிருந்து பதில் வந்தது. 'அதில் அதிசயமொன்றுமில்லை. நம் இருவருக்குமிடையே என்னுடைய பெருத்த சரீரம் ஒரு இடையூறாக இருந்தது. எனக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு உருவத்தையும் சரீரத்தையும் நான் என்பதாக எண்ணிக்கொண்டு நீ பார்க்க வேண்டியிருந்தது. ஏதோ சந்தர்ப்ப வசமாக அது எனக்கு முன்னோர்களால் அளிக்கப்பட்டது. அவர்களே எனக்கு முற்றிலும் வேற்று மனிதர்கள்தாம். நான் அவர்களை அந்நியர்களாகப் பாவித்து அவர்களிலிருந்து வெளியேறிச் செல்ல விரும்பிய போதிலும், நான் சரீரத்தின் மூலமாக அவர்களுடைய இணைப்பை அறுக்க முடியாதவனாக இருந்தேன். ஆனால் இப்போது நான் என்னுடைய உண்மையான நிலையை அடைந்திருக்கிறேன்' என்றது உள் மனம்.

'ஆண்ட்ரூ, நான் உங்களை இன்னமும் சகோதரர் என்று அழைக்க வேண்டுமோ?' என்று கேட்டாள் மீண்டும்.

'நம்முடைய உறவை இன்ன விதத்தில் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இனி நமக்குக் கிடையாது' என்று பதில் வந்தது.

ஸ்ரீமதி ஊ செயலற்றவளாய் அசையாமல் படுத்திருந்தாள். தன் மனத்திற்குள்ளாகவே நடைபெற்ற இச் சம்பாஷணை அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. அவள் ஒரு நாஸ்திக வாதியாதலால் தான் நேசிப்பவரேயாயினும் கூட, அவரிடமிருந்து ஏதாவது விசித்திரமான காட்சிகள் தோன்றியிருந்தால் நகைத்திருப்பாள். ஆனால் அப்படி மாயமான ஒரு காட்சியோ ஓசையோ எதுவும் தோன்றவில்லை. அவள் தூங்குவதற்கு முன்பு அந்தப் பரிசுத்தமான அறை எப்படி இருந்ததோ அதேபோல்தான் இப்பொழுதும் இருந்தது. அவளுடைய மூளைக்குள்ளிருந்துதான் ஆண்ட்ரூவின் குரல் அவள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடையளித்தது. அது அவருடைய மரணத்தாலும் அவரைத் தான் நேசிக்கிறோம் என்ற உண்மையை அறிந்ததாலும் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாகவும் இருக்கலாம். ஒரு சில கணங்களுக்குள் அப்போதே இறந்துவிட்ட ஒரு மனிதனை நாம் நேசிக்கிறோம் என்ற உண்மையை அறிந்து கொள்வதானது உலகத்தையும் தேவலோகத்தையும் அதிரச் செய்யக்கூடியது. அதனால் மூளை குழப்பமடைந்து திகைத்துப்போவது ஒன்றும் ஒரு பெரிய அதிசயமல்லவே! எப்படி மூளையிலிருந்து நம்மூடைய எண்ணங்கள் பலவித நரம்புகளின் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி ஆண்ட்ரூ முன்பு கூறியது அவளுக்கு நினைவு வந்தது. அவரை அவள் அறிந்து கொண்டதானது அவளுடைய கடந்துசென்ற நாட்களின் சிந்தனை ஓட்டத்தையே முற்றிலும் மாற்றி அமைத்திருக்கிறது என்பதில் ஐயமேது!

'இனி நான் எப்படி இருப்பேன் என்பது எனக்கே தெரியாது' என்று எண்ணிக் கொண்டாள்.

பதிலளிக்கும் குரல் வருகிறதா என்று கவனித்துப் பார்த்தாள். அதற்குள் அவர் சிரிக்கும்போது அவர் முகம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தாள். அவருடைய கரிய விழிகளில் ஒளி பரவுவதைப் பார்த்தாள். அவள் பதிலுக்கு ஒரு புன்னகை செய்தாள்.

இங், மிக்க பரபரப்படைந்தவளாய் உள்ளே வந்தாள். அவள் கோபத்துடன், "முன்புற வாசல் நிறைய பிச்சைக்கார குழந்தைகளாய் வந்து நிறைந்திருக்கின்றன. அந்த வேசிப்பெண் மீண்டும் இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறாள். நீங்கள் அவளை வரச்சொல்லி அனுப்பியதாகக் கூறுகிறாள்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ நகைத்தாள். "இந்தக் காலை நேரத்தில் எனக்குக் கொஞ்சம் கோதுமை ரொட்டி கிடைத்தால் நன்றாக இருக்கும்" என்றாள்.

இங் அவளைக் கண் கொட்டாமல் பார்த்தாள். "அம்மா, நீங்கள் என்னவோபோல் இருக்கிறீர்கள். முகமெல்லாம் குழந்தையினுடையதைப்போல் சிவந்து காணப்படுகிறது. காய்ச்சல் இருக்குமோ, என்னமோ?" என்றாள்.

அவள் படுக்கை அருகே வந்து ஸ்ரீமதி ஊவின் மெல்லிய கையை எடுத்துத் தனது கன்னத்தில் வைத்துப் பார்த்தாள்.

"காய்ச்சலுமில்லை. ஒன்றுமில்லை. சுகத்தைத் தவிர வேறு எதுவும் கிடையாது" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ. அவள் மெல்ல தன் கையை எடுத்துக்கொண்டு மேலே இருந்த போர்வையை அகற்றிவிட்டு எழுந்தாள். இங்

அவளைக் குளிப்பாட்டி அலங்காரம் செய்வித்தாள். ஆனால் இந்த அவளுக்காக எடுத்து வைத்திருந்த வெளிறிய நிறமுடைய ஆடையை அவள் வேண்டாமென ஒதுக்கிவிட்டுத் தனது நாற்பதாவது பிறந்த நாளுக்கு முன்பு தான் அணிந்து வந்த ரோஜா நிறமுடைய ஒரு அழகிய ஆடையை எடுத்து அணிந்து கொண்டாள். அப்போது அவற்றைத் தான் இனி அணிவதில்லை என்று அவள் தீர்மானித்திருந்தாள்.

இன்று, அது முன்பு எப்போதையும்விட அவளுக்கு அழகாயிருந்தது. கடைசி தடவை அதை அவள் அணிந்து கொண்டபோது தனது வெளுத்த நிறத்தை மேலும் அது அதிகப்படுத்துவதாக அவளுக்குத் தோன்றியது. ஆனால் இன்று காலை அது அவளுடைய நிறத்தை அழகுறச் செய்தது.

'இதை வேண்டாமென்று நான் ஒதுக்கி வைத்தது பிசகு' என்று அவள், தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்த போது எண்ணிக் கொண்டாள். அவளுடைய இயற்கையான கர்வம் தலைதூக்கியது.

'அவர் என்னை இந்த உடையில் பார்க்காமல் போனது எவ்வளவு வருந்தத்தக்கது' என்று எண்ணினாள். கண்ணாடியில் தோன்றிய தனது உருவத்தைப் பார்த்து முறுவல் செய்து கொண்டாள். பிறகு இதையெல்லாம் இன்று கவனித்து விட்டாளோ என்று பார்ப்பதற்காக இங்கைப் பார்த்தாள். ஆனால் இன் முதலில் எடுத்து வைத்த ஆடையை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீமதி ஹா புத்தக அறையை நோக்கி நடந்தாள். நியாயமாகப் பார்த்தால், அவள் இன்றுதான், தனது வாழ்க்கையில் தீராத பிரச்னைகள் பல சூழ்ந்துகொண்டு தன்னைப் பாடுபடுத்துகின்றன என்று எண்ணியிருக்க வேண்டும். வாசலில் இருபது குழந்தைகள் காத்துக்கொண்டிருந்தன. அந்த வேசிப்பெண் பின்புற வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஸ்ரீமான் ஹாவின் விஷயமோ இப்போது பெரும் பாரமாகிவிட்டது. புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தையும் அவளுடைய தாய் சியூமிங்கும் வேறு இருக்கிறார்கள். இதைத் தவிர அவளுடைய சொந்தப் பிள்ளைகளும் அவர்களுடைய மனைவிகளும் வேறு; ஆனால், இப்போது மனிதர்களைக் கண்டு சுசும் அவளுடைய சுபாவம் எங்கோ போய்விட்டது! இப்போதுதான் முதல் முறையாக அவள் ஒரு மனிதரிடமும் வெறுப்பு கொள்ளாமலிருக்கிறாள்.

மனிதர்களிடம் அவள் எப்போதும் அருவருப்புக் கொள்வது வழக்கம். அதைப் போக்குவதற்காக அவள் முயற்சியும் எடுத்துக்கொண்டிருக்கிறாள். அவள் விரும்பும்படி முற்றிலும் ஒருவருமே இருக்கவில்லை. அவளுடைய தாயினிடம் அவள் வெறுத்த அறியாமையும் மூட நம்பிக்கையும் இருந்தது. தன் தகப்பனாரை அவள் நேசித்தாள் என்றுதான் எண்ணியிருந்தாள். அவருடைய மனம் எப்போதும் வெகு தூரத்தில் சஞ்சரித்து வந்ததினால் அவரிடம் தான் ஒருபோதும் அவரை நெருங்க முடியாது என்பதற்காக வெறுப்பு கொண்டாள். ஸ்ரீமான் ஹாவை அவள் மணந்தபோது அவர் ஒரு அழகிய யுவராக இருந்தபோதிலும் அவர் ரகசியமாக தம்முள் எதையோ வைத்திருந்தார் என்பதால் அவளால் அவரை முழு மனதோடு நேசிக்க முடியவில்லை. அவர்கள் இருவரும் குலாவி மகிழ்ந்த போதிலும் அவருடைய உடலில் இருக்கும் துர்க்கந்தங்களும் துர்சுபாவங்களும் அவளுக்கு மிக்க வேதனையைக் கொடுக்கும். அவருடைய ஸ்பரிசத்தை அவள் அநுமதித்த போதிலும் அது அவளுக்கு வேம்பாகத்தான் இருந்தது. பெரிய எஜமானரை அவள் மிகவும் விரும்பினாள். மிக்க சூட்சுமமான உணர்ச்சியோடு, படைக்கப்பட்டிருந்த அவளால், தான் விரும்புவது எது என்பதை அறிந்தபோது தான் விரும்பாதது எது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அவருடைய உள்ளம் மென்மையானது. அவருடைய புத்தி தெளிவாய் இருந்தது. ஆனால் அவருடைய பற்கள் கெட்டுப் போயிருந்தன. அதனால் வாய் நாற்ற முடையதாய் இருந்தது.

'நான் அவரை நேசிக்கிறேன் என்பதை அறிந்த பின்பும் ஆண்ட்ரூ உயிரோடிருந்திருந்தால் நான் அவரையும்கூட'...

இவ்விதம் எண்ணுவதற்குள் வேறொரு எண்ணம் குறுக்கிட்டது. 'மரணத்தினால் ஏற்படும் நன்மையைப் பார்த்தாயா? அது ஒரு மனிதனுடைய சரீரத்தை விலக்கி அவனுடைய ஆவியைச் சுதந்திரமாகப் போக விடுகிறது' என்றது.

'ஆனால் நான் ஒரு இளம்பெண்ணாக இருந்திருக்கும் பட்சத்தில் நான் உங்களுடைய ஆவியோடு திருப்தியடைந்திருப்பது சாத்தியமாகுமா?' என்று அவருக்கு நினைவுறுத்தினாள் அவள்.

வழவழப்பான அவ்வோட்டுத் தரையை நோக்கியவாறு அவள் சிந்தித்தாள். அவள் ஒரு இளம் பெண்ணாக இருக்கையில், ஒரு அன்னிய மனிதனைக் காதலிப்பதென்பது சாத்திய

மாக இருக்குமா? என்ன இருந்தாலும் ஆண்ட்ரு ஒரு அந்நிய மனிதர்தானே? வேறொரு நாட்டைச் சேர்ந்தவர். வேறொரு இனத்தைச் சேர்ந்தவர். அவரை இளைஞராகவும், இளமையின் வெறிமிக்கவராகவும் கற்பனை செய்து பார்க்க முயற்சித்தாள். ஏனெனில் ஆண்கள் இளமையில் அப்படித் தானே இருக்கிறார்கள்? ஆனால் உடனே அவளுடைய ரத்தம் கொதித்தெழுந்தது.

'வேண்டாம் எண்ணாதே!' என்று அவளுடைய மனது கூவிற்று.

'இல்லை இனி மாட்டேன்' என்று அவள் அதற்கு உறுதி கொடுத்தாள்.

இங் காலை உணவை எடுத்து வந்து அக் கிண்ணங்களை மேஜைமீது வரிசையாக வைத்தாள். ஸ்ரீமதி ஊ தந்தக் கோல்களைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

"வாசலில் இருக்கும் அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் உணவு அளிக்கப்பட்டதா?" என்று கேட்டாள்.

இங் கடுமையுடன் "இல்லை. இவ்வளவு உணவு சமைக்கப் படுவதற்காக உத்திரவு எப்பொழுது கொடுக்கப்பட்டது?" என்றாள்.

ஸ்ரீமதி ஊ மெதுவான குரலிலேயே "அப்படியானால் நான் இப்போது உத்திரவு அளிக்கிறேன். இப்போதே சாதம் வடிக்கச் சொல். அவர்களுக்கு வேண்டிய அளவு ரொட்டியைக் கடையிலிருந்து வாங்கி வரச்சொல். தேநீரும் தயாரா கட்டும்" என்றாள்.

"மழை பெய்யாதிருப்பது ஒரு நல்ல காலம்தான். இல்லாவிடில் இந்தக் கூட்டங்களையெல்லாம் நம்மோடு கொண்டு வந்து அடைத்துக்கொள்ள வேண்டியதுதான்" என்றாள் இங்.

"இங்கு எல்லோருக்கும் வேண்டிய இடம் இருக்கிறது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இங் அழ ஆரம்பித்ததைக் கண்டு ஆச்சரியமுற்றாள், அவள். இங் தன் ஆடையால் கண்களை மூடிக்கொண்டு விம்மியவாறு அறையைவிட்டு ஓடினாள். "நீங்கள் முன் பிருந்தவர்களே அல்ல. முற்றிலும் மாறிவிட்டீர்கள்" என்று விம்மலுக்கிடையே கூறிக்கொண்டு போனாள்.

ஆனால் நடுப்பகலுக்குள் அவள் அநேக பக்கட்டுகள் நிறைய சமைத்த சாதத்தைத் தயாராக அவ்வாசலில் கொண்டு வைத்துவிட்டாள். ஸ்ரீமதி ஊ அங்கு சென்றபோது, அக் குழந்தைகளெல்லாம் ஆனந்தமாகச் சாப்பிட்டுக் கொண் டிருந்தன. தாங்களாகவே சாப்பிடத் தெரியாத குழந்தை களுக்கு மற்ற குழந்தைகள் சாதத்தை ஊட்டின. அவர்களை யெல்லாம் மேற்பார்த்துக் கொள்வதற்காக இருந்த அக்கிழவி வாய் நிறைய சாதத்தை வைத்தவாறு, அக்குழந்தைகளைப் பார்த்து, ஸ்ரீமதி ஊவைத் தாயாகப் பாவித்து அவளுக்கு வணக்கம் செய்ய வேண்டும் என்று கூவினாள்.

"உங்கள் அப்பா இறந்து விட்டதனால், நான் இனி உங்க ளுடைய அம்மா" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ புன்னகை யோடு. அந்த அனைதைக் குழந்தைகள் அவளை அன்போடு பார்த்தன. திடீரென்று அவளுக்குத் தான் இப்போதுதான் உண்மையாக குழந்தைகளுக்குப் பிறப்பளிப்பதாகத் தோன் றியது. தன்னுடைய உள்ளம் இப்போதுதான் பிரிக்கப் படுகிறது என்று தோன்றியது. அப்பிரிவுகள் தன்னைவிடப் பெரிய வேறொரு பொருளில் சென்று கலப்பதையும் உணர்ந் தாள். இந்தக் குழந்தைகள் ஆண்ட்ரூவிற்கும் அவளுக்கு மாகக் கொடுக்கப்பட்டவை.

"நீங்களெல்லோரும் என்னுடைய குழந்தைகள்தாம்" என்றாள் அவள். இந்த வார்த்தை தன்னுடையதுதானா என்று அவளுக்கு வியப்பு உண்டாயிற்று. இக் குரலைக் கேட்டதும் குழந்தைகள் ஓடிச் சென்று அவளை அணைத்துக் கொண்டன. தொட்டுப் பார்த்தன. அவள் மீது சாய்ந்து கொண்டன. அவர்களைக் குனிந்து நோக்கிய அவளுக்கு அவர் களுடைய சிறு சிறு குற்றங்குறைகளும், எழிலும் ஒருங்கே தென்பட்டன. ஆனால் அவளுக்கு வெறுப்பு என்பது சிறிதும் தோன்றவில்லை.

அவள் குறுநகையுடன், "உங்கள் அப்பா தம்மால் இயன்றதை உங்களுக்குச் செய்தார். ஆனால் உங்களுக்கு ஒரு அம்மாவும் இருக்கவேண்டியது அவசியம்தான்" என்றாள். ஒரு குழந்தையின் கன்னத்தில் இருந்த சிவந்த தழும்பைத் தொட்டுப் பார்த்து, "இது இன்னும் வலிக்கிறதா?" என்று கேட்டாள்.

"கொஞ்சம்" என்றது அப்பெண்.

"அது எதனால் ஏற்பட்டது?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

அக் குழந்தை தலையைக் கவிழ்த்துக்கொண்டு "என்னுடைய எஜமானி அவளுடைய சுருட்டின் முனையை என்னுடைய கன்னத்தின்மீது பிடித்தாள்" என்றது.

"ஆ!...ஏன்?"

"நான் அவளுடைய அடிமை—என்னால் வேகமாக நடக்க முடியவில்லை" என்றது.

அவள் ஸ்ரீமதி ஊவின் கையைப் பிடித்துக்கொண்டு "நீங்கள் எனக்கு ஒரு பெயர் வைக்கமாட்டீர்களா? அவர் எனக்கு ஒரு பெயர் கொடுப்பதாக இருந்தார். அதற்குள் மறைந்து விட்டார். மற்றவர்கள் எல்லோருக்கும் பெயர் இருக்கிறது" என்று கெஞ்சினாள்.

"அவர்களெல்லாம் முதலில் தங்களுடைய பெயர்களைச் சொல்லட்டும். அப்போதுதான் உனக்கு என்ன பெயர் கொடுப்பது என்று எனக்குத் தெரியும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

ஒவ்வொருவராக அப்பெண்கள் தங்கள் பெயரைச் சொன்னார்கள். ஒவ்வொரு பெயரும் ஆண்ட்ரூவால் கொடுக்கப்பட்டது. தயா, ஆஷா, கருணை, சத்தியா, அருணா, சந்திரா, தாரா, கீதா, ஆனந்தா இப்படியாக பெரிய பெண்களுக்கெல்லாம் அவர் பெயரிட்டிருந்தார். குழந்தைகளுக்கு அவர் வேடிக்கையாகப் பெயரிட்டிருந்தார். பூனைக்குட்டி, சிட்டுக் குருவி, தங்கம், வெள்ளி என்றவாறு! தங்கம், வெள்ளி என்ற இரு பெண்களும் "நாங்கள் வரும்வரை அவரிடம் தங்கமும், வெள்ளியும் கிடையவே கிடையாது என்று அவர் சொல்வார்" என்று கூறினர்.

இந்தச் சிறு விஷயத்திற்காக உடனே எல்லாக் குழந்தைகளும் சிரித்தன. தங்கம் "அவர் தினமும் எங்களை நிறைய சிரிக்க வைப்பார்" என்றாள். தடித்த அச் சிறுபெண் வெள்ளியினுடைய கையைப் பிடித்துக் கொண்டாள்.

"நீங்கள் இருவரும் சகோதரிகளா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"நாங்கள் எல்லோரும் சகோதரிகள்தாம்" என்று உடனே இருபது குரல்கள் கத்தின.

"ஆம், நான் ஒரு முட்டாள்" என்று ஒப்புக்கொண்டாள் ஸ்ரீமதி ஊ.

கன்னத்தில் தழும்புடன் இருந்த பெண் அவளை நெருங்கி அணைத்துக்கொண்டு "என்னுடைய பெயர்?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ அவ்விளம் முகத்தைப் பார்த்தாள். அக் குழந்தை மிக அழகான ஒரு மொட்டைப்போல் இருந்தது. பின்னால் வரப்போகும் எழிலையெல்லாம் தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டிருந்தது. உடனே அதன் பெயர் அவள் உள்ளத்தில் எழுந்தது. "நான் உன்னை ப்ரேமா என்று கூப்பிடப்போகிறேன்" என்றாள்.

"என் பெயர் ப்ரேமா!" என்று திருப்பிக் கூறியது அப்பெண்.

அதற்குள் அவ்வாசலில் வேடிக்கை பார்ப்பதற்காக அனைவரும் வந்து கூடிவிட்டனர். வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் அந்தப் பக்கம் ஏதோ வேலை இருப்பதாக நடித்துக் கொண்டு அங்கு வந்து வேடிக்கை பார்த்தனர். குழந்தைகளும் மற்ற உறவினர்களும் எந்தவித சாக்கும் கூறாமல் வந்து நின்று இந்தப் புதிய ஸ்ரீமதி ஊவை விறைத்துப் பார்த்த வண்ணம் நின்றனர். பின்புற வாசல் அறையில் காத்திருந்து அலுத்துப்போன மல்லிகா கடைசியாக இங்கு வந்தாள். அவள் பின்னால் அவளுடைய வேலைக்காரியும் வந்தாள். மல்லிகா தன்னுடைய உரிமைகளை எல்லாம் முற்றிலும் கொண்டாடும் எண்ணத்துடன் வந்திருந்தாள். அக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை தனக்குப் பிறக்கப் போகிறது என்ற உரிமையுட்ன் சண்டையிடத் தீர்மானித்திருந்தாள்.

கர்வம் நிறைந்த ஒரு பெரிய வீட்டு எஜமானியைப் பார்க்கப்போகிறோம் என்று எதிர்பார்த்து வந்த அவள், இங்கே அன்புருவாகிய அழகிய ஒரு பெண்மணி பிச்சைக்காரக் குழந்தைகளின் மத்தியில் சிரித்து விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டாள். தாழ்வாரத்திலிருந்து தூண்களுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த மல்லிகாவை ஸ்ரீமதி ஊ பார்த்தாள்.

"இதோ பார்! எனக்கு எத்தனை குழந்தைகள் இருக்கின்றனவென்று! ஆனால் நான் உன்னை மறந்து விடவில்லை. இவர்கள் வசிப்பதற்காக ஒரு இடத்தைத் தீர்மானித்த பிறகு நான் உன்னோடு வந்து பேசுகிறேன்" என்றாள். அவள் தனது உறவினர்களாகிய அப்பெண்மணிகளைப் பார்த்தாள். அவருடைய பிள்ளைகளோ, அல்லது அவர்களுடைய மனைவிமார்களோ ஒருவரும் அங்கு வரவில்லை. இவர்கள் சில வயதான

பெண்மணிகள். மற்றும் பலர் ஏழ்மையால் பீடிக்கப்பட்டு வேறு எங்கும் தங்குவதற்கு இடம் அகப்படாமல், தங்களது முன்னோர்களுடைய வீடாகிய அவ்வீட்டில் புகல் தேடி வந்தவர்கள்.

"என்னுடைய குழந்தைகள் எல்லோரையும் எங்கே தங்கச் சொல்வோம்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ அவர்களிடம்.

ஒரு வயதான அம்மாள் "நீ இம்மாதிரியான நல்ல காரியங்களைச் செய்ய விரும்புவாயானால், இப்பெண்களுக்கு நமது கோவிலில் வசிப்பதற்கு இடங்கொடுக்கலாம்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ, இதற்காகக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கவில்லை. இவர்களுக்கு எங்கு இடம் கொடுப்பது என்று மட்டும் அவளுக்குத் தெரியாமலிருந்தது. ஆகவே இக்கிழவியின் யோசனையை உடனே ஒத்துக்கொண்டாள். நன்றியுடன் அவளை நோக்கி "உங்களுடைய யோசனையே யோசனை! நமது கோவிலைவிட வேறு நல்ல இடம் எங்கே இருக்கப் போகிறது? அங்கு இவர்கள் விளையாடப் போதுமான இடம் இருக்கிறது. குளம், அருவி முதலியவைகளும் இருக்கின்றன. நமது குடும்பத்துக் கடவுளுக்கும் இனிச் சிறிது வேலை இருக்கும்" என்றாள்.

அவள் பேசிக்கொண்டே அவர்களை அழைத்துக்கொண்டு நடக்கலானாள். குழந்தைகளும் அவளுக்குப் பின்னால் ஓடி வந்தன. கிழவியும் அவர்களைத் தொடர்ந்தாள். ஊவின் வீட்டிற்குப் பின்புறத்தில் பழைய காலத்திய பெரிய கோவில் ஒன்று இருந்தது. இருநூறு வருடங்களுக்கு முன்பு அக் குடும்பத்துப் பெண்மணி ஒருத்தியால் அக்கோவில் கட்டப்பட்டது. அவள் தன் கணவன் இறந்ததும், ஒரு சந்நியாசினி ஆகிவிட விரும்பினாள். ஆயினும் தன் குடும்பத்தை விட்டு வெளியே சென்று பொது மடங்களில் வசிக்க விரும்பவில்லை. ஆதலால் அவள் அவ்வீட்டுச் சுவர்களுக்குள்ளேயே அடங்கியிருக்கும்படியான ஒரு அழகிய கோவிலை நிர்மாணித்தாள். அவள் சுமார் நூறு வயதுவரை இருந்து அத்தெய்வங்களோடு வாழ்க்கை நடத்தினாள். அவள் காலத்திற்குப் பிறகு கோவிலைக் கவனித்துக் கொள்வதற்காகப் பூசாரி ஒருவன் நியமிக்கப்பட்டான். ஆனால், அவ்வீட்டில் இளம் பெண்கள் அநேகர் இருந்ததால், ஐம்பது வயதிற்கு மேற்பட்ட மனிதனைத்தான் பூசாரியாக நியமித்தனர்.

ஸ்ரீமதி ஊவிற்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாதிருந்த போதிலும் அவள் இவற்றைத் தடைசெய்யவில்லை. ஒரு

பூசாரி நியமிக்கப்பட்டிருந்தான். கோவிலுக்கானவைகளெல்லாம் கொடுக்கப்பட்டன. பத்து வருஷங்களுக்கு ஒரு முறை அத்தெய்வங்களெல்லாம் சாயம் பூசப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டன. வருஷத்திற்கொருமுறை ஊதுபத்திக்காக ஒரு தொகை கொடுக்கப்பட்டது. குடும்பத்தில் விரும்பியவர்கள் இங்கு வந்து தெய்வத்தை வழிபடலாம். வெளியே போகாதிருப்பதும், தீய குணம் நிறைந்த பூசாரிகளின் அபாயம் இல்லாதிருப்பதும் ஒரு புண்ணியமாகக் கருதப்பட்டது.

இந்தக் கோவிலுக்குள் அவள் அக் குழந்தைகளை அழைத்துச் சென்றாள். கோவிலின் கல்தளம் போட்ட வாசற்படியின்மீது சற்று நின்றாள். துவாரபாலகர்களாய் இரண்டு பொம்மைகள் ஒன்று வெள்ளையும் ஒன்று கறுப்புமாய் அவளைப் பயமுறுத்தியவண்ணம் நின்றன.

அவள் தன்னுள், 'ஆனால் இந்தத் தெய்வங்களை ஆண்டாரு விரும்புவாரோ? அவருடைய மதத்தில் இத்தகைய தெய்வங்கள் கிடையாதே!' என்று வினவிக்கொண்டாள்.

அத்தெய்வங்களுக்கு மேலே யிருந்த கூரையிலிருந்து அவருடைய இடிபோன்ற சிரிப்பின் ஒலி அவளுடைய காதில் வந்து நுழைந்தது.

அவள் பதிலுக்கு ஒரு புன்னகை செய்துவிட்டு, தான் ப்ரேமா என்று பெயரிட்டிருந்த அக் குழந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு, கோவில் வாசற்படியைத் தாண்டி உள்ளே சென்றாள். ஊதுபத்தியின் மணமும் மல்லிகையின் மணமும் காற்றில் மிதந்து வந்தது. கடவுளின் முன்னால் ஊதுபத்தி கொளுத்தி வைக்கப்பட்டிருந்தது. வாசலில் மல்லிகை மலர்கள் பூத்திருந்தன. கிழப் பூசாரி இவர்களுடைய சந்தடியைக் கேட்டுவிட்டு, சமையலறையிலிருந்து ஓடி வந்தான். அவன் அப்போதுதான் சமையல் செய்வதற்காக அடுப்பை மூட்டிக்கொண்டிருந்தான். அவனுடைய முகத்திலும் கைகளிலும் கரி படிந்திருந்தது.

அவன் ஸ்ரீமதி ஊவையும் அக் குழந்தைகளின் கூட்டத்தையும் பார்த்து மலர மலர விழித்தான். "நான் உனக்கு பரிசுகள் கொடுக்க வந்திருக்கிறேன்" என்றவள் சிறுமிகளைப் பார்த்து "எங்கே உங்களுடைய பெயர்களையெல்லாம் சொல்லுங்கள்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

மகிழ்ச்சி நிறைந்த இனிய குரலில் அச்சிறுமிகள் ஒவ்வொருவராகத் தமது பெயரைக் கூறினர்.

"இந்தப் பெண் பெயர் ப்ரேமா. இவர்கள் எல்லாம் கோவிலுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கின்றனர்" என்று முடித்தாள் ஸ்ரீமதி ஊ.

பூசாரியும் அங்கு நடப்பதையெல்லாம் முன்பே அறிந்திருந்தான். ஸ்ரீமதி ஊ தர்ம கைங்கர்யங்கள் செய்ய விரும்புகிறாள். ஆகவே கடவுளுக்கு ப்ரீதியாக அவள் செய்ய விரும்பும் காரியங்களுக்கும் அதனால் எத்தனை இடையூறுகள் தனக்கு நேரிட்ட போதிலும் தடை சொல்லக் கூடாது. கைகளைக் கட்டிக்கொண்டு அவன் ஸ்ரீமதி ஊவின் முன்னால் பின்புறமாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துச் சென்றான். அக் குடும்பத்தாரைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அத் தெய்வங்களின் அறைகளில் ஸ்ரீமதி ஊவும் அவளது குழந்தைகளும் ஒரு புயலைப்போல் புகுந்தனர்.

"இந்த அறை சிறிய குழந்தைகளுக்கு. ஏனெனில் இங்குதான் அன்னையாகிய கருணைமயி இருக்கிறாள். அவள் எனக்காக இரவுகளில் உங்களைப் பாதுகாப்பாள். இந்த அறை பெரிய பெண்களுக்கு. ஏனெனில் இதில் நிறைய இடம் இருக்கிறது. ஆனால் இதைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும்" என்றாள்.

அப்போது ப்ரேமா என்ற சிறுமி அவளை வந்து கட்டிக் கொண்டாள். "நான் உங்களோடு வந்து விடுகிறேன். உங்களுடைய துணிகளையெல்லாம் துவைத்துக் கொடுப்பேன். உங்களுக்கு உணவு கொண்டு வந்து கொடுப்பேன். நான் எல்லாம் செய்வேன்" என்று கெஞ்சினாள்.

ஸ்ரீமதி ஊவின் உள்ளத்தில் உவகை பொங்கியது. ஆனால் அவள் நீதி தவறமாட்டாள். ஆண்ட்ரூ கண்டிப்பாக ஒரு பெண்ணிற்காக மட்டும் மற்றவர்களைக் காட்டிலும் அதிக சலுகை காட்டமாட்டார். ஆதலால் அவள் தலையை அசைத்து, "நீ இங்கு இருந்து மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதைத்தான் உங்கள் தந்தை விரும்புவார்" என்றாள். ஆனால் நியாயத்துக்காக மட்டிலும்தான் அம்மாதிரி செய்யவில்லை என்பது அவளுக்குத் தெரியும். அவள் தன்னுடன் யாரையும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அவருடன் அவள் நடத்தும் வாழ்க்கையில் யாரும் குறுக்கிடுவதை அவள் விரும்பவில்லை.

"நாங்கள் எங்கே படுத்துக் கொள்வது அம்மா?" என்று கேட்டனர் அச்சிறுமிகள். "இரவுக்குள் உங்களுக்கு இங்கே

படுக்கைகள் வந்துவிடும். ஆனால் நாள் முழுவதும் நீங்கள் விளையாடவேண்டும்" என்றாள்.

அவர்கள் குதூகலமாய் இருப்பதைக் கண்டு அவர்களை அத்தெய்வங்களிடம் விட்டுவிட்டுச் சென்றாள்.

* * *

மல்லிகா தனது சிவந்த வாயை இறுக மூடியவாறு, தனது பளபளப்பான கைக்குட்டையின் ஒரு முனையைப் பார்த்தவாறு நின்றாள். அதன் ஒரு முனை அவளது இடது தோளுக்கு அருகே ஒரு பித்தானில் பொருத்தப்பட்டிருந்தது. அவள் அத்துணியால் தனது முகத்தை மூடிக்கொண்டாள். அதாவது தான் யாருடன் பேசிக்கொண்டிருந்தாளோ அவளுடைய முகத்தைப் பாராமல் இருக்க விரும்பியபோது அவ்விதம் செய்தாள்.

"என்னால் ஒன்றுமே பேசமுடியவில்லை" என்றாள் அவள் ஸ்ரீமதி ஊவிடம்.

"சொல்வதற்கும் அதிகமாக ஒன்றுமில்லையே" என்றாள் ஸ்ரீமதி ஊ பதிலுக்காக.

மல்லிகா வெடுக்கென்று "ஏன் இல்லை? நிறைய இருக்கிறது சொல்வதற்கு. இப்போது எனக்குக் குழந்தை இல்லை என்றாலும் இனிமேல் பிறக்கும்" என்று கூறி தனது வயிற்றைப் பிடித்துக் கொண்டாள்.

ஸ்ரீமதி ஊ அவளை உற்சாகத்தோடு பார்த்தாள். "உனக்குப் பிறக்கும் குழந்தை நிச்சயம் மிக ஆரோக்கியமாகவும் அழகாகவும் இருக்கும். ஏனெனில் நீ பலமுள்ளவளாக இருக்கிறாய்" என்றாள்.

மல்லிகா திடுக்கிட்டாள். "இந்த வீட்டில் என்னுடைய ஸ்தானம் என்னவாக இருக்கும் என்பதை முதலில் கூறுங்கள்" என்றாள் அதிகாரத்துடன்.

"எந்த ஸ்தானத்தை நீ விரும்புகிறாய்?"

அவன் கடூரமாக "நான் மூன்றாவது மனைவியாக இருக்க வேண்டும்" என்றாள். இத்தனை யௌவனமும் அழகும் பூண்டத அப்பெண் கடூரமாகக் காணப்பட்டது வேடிக்கையாக இருந்தது. அவளுடைய வட்டமான விழிகள், சிறிய மூக்கு, சிவந்த கன்னங்கள், சிறிய வாய் யாவும் ஒருங்கே கோபத்துடன் துடித்து எழுந்தன.

"ஏன் கூடாது?" என்றாள் ஸ்ரீமதி ஊ சகஜமாக.

"நீங்கள் அதை ஆட்சேபிக்கவில்லையா?" என்றாள் மல்லிகா. அவளுடைய குரல் ரகசியம் பேசுவதுபோல் இருந்தது. அவளுடைய முகத்திலிருந்த கடுமை எல்லாம் எங்கோ மறைந்து விட்டது.

"நான் எதற்கு ஆட்சேபிக்கவேண்டும்?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அப்படியானால் நான் இவ்வீட்டில்...இப்பெரிய குடும்பத்தில் வந்து...மூன்றாவது எஜமானி என்ற ஸ்தானத்தில் வசிக்க முடியும் என்கிறீர்களா?... என்னுடைய குழந்தை..."

"எங்கள் குலத்தைச் சேர்ந்த குழந்தைகள் ஊர் பேர் இல்லாத அனுதைகளாகத் திரிவதை நான் ஒரு போதும் விரும்பமாட்டேன். அது எங்களுடைய பெயருக்கே இழி வாகும். நீ அவ்விதையை வாங்கிக்கொள்ளும் ஒரு பாத்திரம். ஆதலால் அந்த முறையில் உனக்கு மதிப்பு கண்டிப்பாகக் கொடுக்கப்படும்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

மல்லிகா ஒன்றும் அறியாதவளாய் சிறிதுநேரம் விழித்து அழ ஆரம்பித்து விட்டாள். திணறியவாறு, "தாங்கள் என்னை வெறுப்பீர்கள் என்று எண்ணினேன். தங்களுடைய கோபத்தை ஏற்பதற்குத் தயாராக வந்தேன். இப்போது என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை" என்றாள்.

ஸ்ரீமதி ஊ சாந்தமாக, "நீ செய்ய வேண்டியது ஒன்று மில்லை. உன்னுடைய அறைக்கு உன்னைக் கொண்டு விடும்படி சொல்கிறேன். இரண்டு அறைகள் இருக்கின்றன. சிறிய அறைகள்தான். அவை, எஜமானரின் அறைகளுக்கு இடது புறத்தில் இருக்கின்றன. அவருடைய இரண்டாவது மனைவி அதற்கு வலது பக்கத்தில் வசிக்கிறாள். நீ அவளைச் சந்திக்க வேண்டிய தில்லை. நான் இப்போதே சென்று என்னுடைய எஜமானரிடம் நீ வருவதைப் பற்றிச் சொல்கிறேன்" என்றாள்.

அவள் சிறிது தயங்கி விட்டுப் பிறகு, நாசூக்காகவும் தெளிவாகவும், "அவர் தம்முடைய புகைக் குழாயை மேஜை மீது விட்டுச் சென்றால் அதுதான் அவர் உனக்குக் கூறும் செய்தி. அவர் அதை தமது கையில் எடுத்துக் கொண்டு சென்று விட்டால் அதற்காக நீ கோபமடையாதே. உனக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக உன்னைச் செய்யும்படி நான் வேண்டிக் கொள்வது இதுதான். எக் காரணத்தைக்

கொண்டும் இவ்வீட்டிற்குள் கோபத்தைக் கொண்டு வராதே" என்று கூறினாள்.

இத்தனை நேரமும் மல்லிகாவின் கூட வந்த கிழவி, வாய் பேசாமல் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அவளைப் பார்த்து, "இது யார்? இவள் உன்னுடைய தாயா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அக் கிழவி பேசுவதற்காக வாயைத் திறந்தாள். ஆனால் அதற்குள் மல்லிகா, "நான் இப்போது விட்டு வந்திருக்கும் வீட்டைச் சேர்ந்தவள் இவள்" என்று கூறினாள்.

"அப்படியானால் அவளை அங்கேயே திரும்பப் போகச் சொல்லி விடு" என்று கூறி விட்டு ஸ்ரீமதி ஊ, தனது பைக்குள் கையை விட்டு, நிறைய வெள்ளி நாணயங்களை எடுத்து மேஜைமீது வைத்தாள். அதன் அளவைக் கண்டு திகைத்துப்போன கிழவி ஒன்றும் தோன்றாமல் எழுந்து அவளை நூறு முறை வணங்கினாள்.

இதற்குள் மல்லிகா குறுக்கிட்டாள். அவள் ஸ்ரீமதி ஊவின்முன் முழங்காலிட்டு தன் தலை கீழே படும்படி விழுந்து வணங்கினாள். "தாங்கள் நீதி வழங்குவதில் சிறந்தவர் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் தாங்கள் கருணை உள்ளவர் என்பதை இப்போது அறிந்து கொண்டேன்" என்றாள்.

ஸ்ரீமதி ஊவின் கழுத்து, முகம் யாவும் சிவந்தன. அவள் ஒலியின்றி "நீ இதற்கு முன்பு எப்போதாவது வந்திருந் தாயானால் நான் மிகுந்த கோபமுற்றிருப்பேன். ஆனால் இன்றைய தினம் இத்தனை நாட்களாகக் கழிந்த தினங்களைப் போன்றதல்ல" என்றாள்.

அவள் எழுந்து, அப்பெண்ணைத் தூக்கி நிறுத்தாமல், விரைவாக அவ்வறையை விட்டு வெளியே சென்றாள்.

'நான் மிகவும் கொடியவள். இந்த வீட்டிற்குள் எத்தனை பெண்கள் வேண்டுமானாலும் வரட்டும் என்று நான் அலட்சிய மாக இருக்கிறேன். என்னுடைய மனமோ நிறைந்திருக் கிறது' என்று அவள் தனக்குள் கூறிக் கொண்டாள்.

அவள் பதிலை எதிர்பார்த்துச் சிறிது பொறுத்துப் பார்த் தாள். ஆனால் அதற்குப் பதில் வரவில்லை. அவளுடைய பதிலில் நிறைந்திருந்த அமைதிதான் இதற்கு மறுமொழி போலும்! 'உங்களை நீங்கள் உயிரோடிருக்கும்போதே நான்

அறிந்திருந்தால், இத்தகைய மௌனம் நிலவியிருக்குமா?" என்று கேட்டாள் அவள்.

இப்போதும் அவளிடமிருந்து வார்த்தைகள் வரவில்லை. அம் மௌனத்தைக் கண்டு அவள் குறுநகை செய்தாள். ஆவி ரூபத்தில் இருந்த போதிலும்கூட அன்பைப் பற்றிப் பேச அவர் வெட்கமடைகிறார் போலும். அவர் கடைப்பிடித்து வந்த வழக்கங்கள் இன்னும் மறையவில்லை. ஒரு கணத்திற்குப் பிறகு அம்மௌனம் கலைந்தது. அவள் பிரதான வாசலுக்குள் காலடி எடுத்து வைத்ததும் அங்கு மூன்று மனிதர்கள் நின்று கொண்டிருப்பதைக் கண்ணுற்றாள். அவர்கள் நன்கு உடை யணிந்தவர்களாகவும் சிறிது நாகரிகமுள்ளவர்களாவும் காணப்பட்டனர். அவளைப் பார்த்ததும் அவளை இளம் பெண்ணாகப் பாவித்தவர்களாய் அவர்கள் அவளைப் பாராதது போல் மறுபுறம் திரும்பிக் கொண்டனர். அது ஒரு நல்ல மரியாதையே ஆயினும் அவள் அதைப் பாராட்டவில்லை.

"நான்தான் ஸ்ரீமதி ஊ. உங்களுக்கு வேண்டியது ஏதேனும் இங்கு இருக்கிறதா?" என்று கேட்டாள்.

அவர்கள் சற்றே திரும்பினர். இருப்பவர்களுள் பெரிய வனைக் காணப்பட்டவன், மிக்க மரியாதைதோடு அவளை இன்னும் ஏறிட்டுப் பாராமலே பதிலளித்தான்.

"நாங்கள் அவர்களைத்தான் தேடி வந்திருக்கிறோம். இறந்து போன அம் மனிதரின் சார்பாக நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டாமா என்பதைக் கேட்பதற்காக வந்திருக்கிறோம். அந்தக் கொள்ளைக் கூட்டத் தாரால் நம் நகரத்துக்கே பெரும் விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆயினும் இதுவரை அவர்கள் ஒருவரை யும் கொலை செய்ததில்லை. அவர் ஒரு அந்நியர்தான். ஒரு பாதிரியார்தான். ஆனால் இன்று ஒரு அந்நியரைக் கொல் பவன் நாளைக்கு நம்மையே கொல்வான். ஆதலால் நாம் இதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டாமா? நீதி வேண்டும் என்று கோர வேண்டாமா? அப்படிச் செய்வ தாயிருக்கும் பட்சத்தில் ஸ்ரீமதி ஊ அவ் வழக்கைத் தொடரு வாரா?" என்று கேட்டான்.

அவளுடைய மனத்தில் ஒரு எதிர்ப்பு எழுந்தது. ஆண்டரு வின் கண்கள் பழி வாங்குவதை உறுதியாக மறுத்துக் கூறுவதை அவள் கண்டாள். உடனே அவள், "நிச்சயம் அவர் தமக்காகப் பழி வாங்கப்படுவதை விரும்ப மாட்டார். இன்னதுதான் செய்கிறோம் என்பதை அறியாமல் செய்

மாறப்போகின்றனவே என்கிறார்கள். அவர்களுக்குப் புதிய வழிகளும் ஒன்றும் தென்படமாட்டேன் என்கிறது. ஆதலால் அவர்கள் பழைய சட்டத்தையும் விட்டு புதியதும் இல்லாமல் இப்பொழுது சட்டம் ஒன்று இல்லாமலே வாழ்கின்றனர்" என்று கூறினன்.

அவள் அம்மனிதர்களை நோக்கினாள். மற்ற எதைப்பற்றி அவளுக்குச் சந்தேகம் இருந்தாலும் அவளுக்கு ஆண்ட்ரூவைப் பற்றிச் சிறிதும் சந்தேகம் கிடையாது.

"அவர் பழி ஒன்றும் வாங்க விரும்ப மாட்டார்" என்று கூறி விட்டாள்.

அவர்கள் வணங்கிவிட்டுச் சென்று விட்டனர். ஆனால் அவள் மனத்தில் கவலை உண்டாயிற்று. அவள் ஸ்ரீமான் ஹவை, அவர் என்ன நிலையில் இருக்கிறார் என்று பார்த்துத் தெரிந்து கொள்வதற்காகத் தேடிச் சென்றாள்.

அம் மனிதன் கூறியதைப் பற்றிச் சிந்தித்தவாறே நடந்தாள்.

காலம் இருக்கும் நிலையில் அவள் தன்னுடைய பிள்ளைகளை வெளியே அனுப்பியது சரியாகுமா?

'நான் தனியாக இருந்திருந்தால் மிகவும் பயந்து போயிருப்பேன்' என்று எண்ணமிட்டாள் அவள்.

ஆனால் அவள் தனியாக இல்லை. இச்சமாதானத்துடன் மல்லிகாவின் வருகையை ஸ்ரீமான் ஹவிற்குத் தெரியப் படுத்துவதற்காக அவரைத் தேடி விரைந்து சென்றாள்.

* * *

அவள் அப் பகுதியின் சிறிய முன் வாசற்கதவை அடைந்த பொழுது அங்கு ஸ்ரீமான் ஹ பியோனிச் செடிகளின் பூமியைத் தமது பித்தளை பிடிபோட்ட மூங்கிற் குழாயால் இளைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவர் நீலத்தில் கோடுபோட்ட ஸேடின் ஆடைகளை அணிந்திருந்தார். காலில் வெல்வெட் பூட்சுகள் அணிந்திருந்தார். அவர் முன்னைவிட இப்போது இளைத்திருந்தார். இளமையில் அவர் தாட்டியாகத் தான் இருந்தார். நடு வயதிலும் சற்று பருத்துத்தானிருந்தார். இப்போது ஒல்லியாகி விட்டாலும் உள்ளுக்குள்ளிருந்த சதையெல்லாம் வற்றி வந்தன. அவருடைய மிருதுவான தோல் அதன் உறுதியை இழுக்க ஆரம்பித்திருந்தது.

அவள், விநயத்துடன், "நீங்கள் நன்றாகயிருக்கிறீர்களா, என் பிள்ளைகளின் தகப்பனாரே?" என்று கேட்டாள்.

"ஓ! நன்றாகத் தானிருக்கிறேன்" என்று அவர் பதிலளித்துவிட்டு மேலும் மண்ணைக் கிளறி கொண்டேயிருந்தார்.

"உங்களுடைய குழாய் கெட்டுப்போய் விடும்" என்று அவள் குறிப்பிட்டாள்.

"இப் 'பியோனிச் செடிகளின் வேர் உறுதியாக இருக்கின்றனவா என்று நான் பரீட்சித்துப் பார்க்கிறேன். ஏனெனில் இப்போது அதிகமாக மழை பெய்வதால் அவை அழுகிவிடுகின்றனவோ என்னவோ என்று எண்ணினேன்" என்று மறுமொழி கூறினர்.

"இந்தத் தளமெல்லாம் நன்றாகப் போடப்பட்டிருக்கிறது. த்ஸேமோ பிறந்த வருஷம் இவைகளுக்கு ஒடு போட்டோமே உங்களுக்கு நினைவு இருக்கிறதா? ஆர்ச்சிட் புஷ்பங்களை என்னுடைய படுக்கையிலிருந்தபடியே நான் பார்க்க வேண்டும் என்பதற்காக இந்தத் தளத்தை அப்போது உயர்த்தினோம்" என்றாள் ஸ்ரீமதி ஹ.

"உனக்கு எல்லாம் நினைவிருக்கிறது. நாம் வெளியே உட்காருவோமா அல்லது உள்ளே செல்வோமா? உள்ளேயே உட்கார்ந்து கொள்ளலாம் இல்லையா? ஊதக் காற்றாக அடிக்கிறது இங்கே, தரையில் காலை வைத்தால் பாதமெல்லாம் ஜில்லிட்டுப் போகிறது" என்றார் அவர். அவளுக்கு ஸ்ரீமான் ஹவிடம் தான் நடந்து கொள்வதில் ஒருவித மாறுதலும் ஏற்படாததைக் கண்டு அதிசயம் உண்டாயிற்று. தான் ஆண்ட்ரூவினிடம் எத்தகைய உணர்ச்சிகளைக் கொண்டாள் என்பதை அவளால் ஒரு நாளும் அவருக்கு எடுத்துக்கூறி விளங்க வைக்க முடியாது. அவள் தன் புத்தியையே அடியோடு இழந்து விட்டாள் என்றுதான் அவர் கருதுவார். ஒரு அந்நியரா? ஒரு பாதிரியாரா? அதுவும் இறந்துபோன மனிதர்!... இது என்ன விசித்திரம்!

அவள் ஸ்ரீமான் ஹவைத் தொடர்ந்து அறைக்குள் சென்றாள். கதவின் வழியாகச் சூரிய வெளிச்சம் சதுரமாக தரையில் விழுந்திருந்தது. அவள் முன்பு எப்படி அவரிடம் நடந்து கொண்டாளோ அதே போன்ற உணர்ச்சியைத்தான் இப்போதும் கொண்டாள். இந்த எண்ணம் எழுந்ததும் அவரிடம் அவளுக்குப் பேரிரக்கம் உண்டாயிற்று. அவளால் அவரைக் காதலிக்க முடியாமற் போனது அவருடைய துர்பாக்கியம்

தான்! இம்மனிதரை, வாழ்க்கையின் பூரணத்துவத்தை அடைவமுடியாதபடி செய்துவிட்டாள் அவள். அவளுடைய அன்பற்ற இருதயத்திற்கு, அவள் கொடுத்த மற்ற சுகமெல்லாம், அவளுடைய உடல், பிள்ளைகள் இவையெல்லாம் ஒரு போதும் ஈடாகாது. அவள் இதற்குக் கூறிக்கொள்ளக் கூடிய சமாதானம் ஒன்றுதான். அவர்கள் தாங்களாக ஒருவரை ஒருவர் விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. சந்தர்ப்ப வசத்தால் ஒருவருக்கு ஒருவர் அளிக்கப்பட்டனர். அந்த விதத்தில் அவள் தன்னுடைய கடமைகள் யாவற்றையும் பூரணமாக நிறைவேற்றி விட்டாள். ஆனால் அவளாகவே அவரை விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கும் பட்சத்தில் அவளால் ஒருபோதும் தன்னை மன்னிக்கவே முடியாது. ஒரு மனிதனுக்குத் தான் மணந்து கொண்ட ஒரு பெண்ணிடமிருந்து அன்பு கிடைக்காமற் போனால், அக்குறையை வேறெதனாலும் அவனால் நிறைவு செய்துகொள்ள முடியாது.

'ஆதலால் எவ்விதத்திலாவது நான் அவருக்கு அந்த அன்பைக் கொடுக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

"நான் இப்போதுதான் அந்தப்பெண் மல்லிகாவுடன் பேசிவிட்டு வந்தேன்" என்றாள். அவள் அமைதியுடன் அவ்வறையின் நடுவே கவரோரமாகப் போடப்பட்டிருந்த மேஜையின் இடது பக்கத்தில் அவள் அமர்ந்து கொண்டாள். வலது பக்கத்தில் அவர் அமர்ந்து கொண்டார். மணமான புதிதில் மாலை நேரங்களில் அவர்கள் இருவருமாக இவ்விதம் அமர்ந்து கொள்வது வழக்கம். அமர்ந்துகொண்டு தங்கள் இருவருக்கும் சொந்தமான அல்லவிட்டின் பிரச்னைகளை எல்லாம் விவாதிப்பார்கள்.

ஸ்ரீமான் ஹ தமது குழாயில் மிகக் கவனமாக இருந்தார். அவள் தனது நுண்ணிய அறிவால் அவர் தன்னிடம் பயம் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து கொண்டாள். மற்ற நாட்களைப்போல் இருந்தால் இந்த எண்ணம் அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். மற்றவர்கள் தன்னிடம் பயங்கொண்டதை அவள் இத்தனை நாளும் விரும்பாமல் இருந்ததில்லை. அது தன்னுடைய உயர்வுக்கு உரிய மரியாதையே என்றெண்ணி அதை ஏற்று வந்திருக்கிறாள். ஆனால் அவருடைய கண்களின் மருண்ட பார்வையையும், கைகளில் ஏற்பட்ட நடுக்கத்தையும் காண இன்று அவளது மனத்தில் மிகுந்த துக்கம் உண்டாயிற்று. பயம் எங்கிருந்தாலும் அங்கு அன்பு இருப்பதற்கு நியாயமில்லை தான்.

ஆண்டாவிற்கு அவளிடம் பயம் ஏற்பட்டதில்லை. அவளுக்கும் அவரிடம் பயம் ஏற்பட்டதில்லை. அவள் சோகத்துடன் ஸ்ரீமான் ஹவும் தன்னை உண்மையாக ஒரு போதும் காதலித்ததில்லை என்பதை இன்று புரிந்து கொண்டாள். ஏனெனில் அவருக்கு இப்போது அவளிடம் பயம்தானிருக்கிறதே!

"அப் பெண்ணிடம் நீங்கள் என்ன உணர்ச்சி கொண்டீர்கள் என்பதை எனக்குச் சொல்லுங்கள்" என்றாள் அவள் ஸ்ரீமான் ஹவிடம்.

அவளுடைய குரலிலிருந்த கனிவைக் கேட்டு அவர் நிமிர்ந்து அவளை நோக்கினார். அவருடைய கண்களில் இது நாள்வரை தான் கண்டிராத ஒரு கூச்சம் தென்படுவதை அவள் கண்ணுற்றாள். "இந்தப் பெண்ணைப் பற்றி நீ எவ்விதம் நினைப்பாய் என்பது எனக்குத் தெரியும். உண்மையில் இவள் எல்லா விதத்திலும் தாழ்ந்தவள்தான். எனக்கும் அது தெரியாமல் இல்லை. ஆனால் அவளைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. போயும் போயும் வாழ்க்கையில் அவளுக்குக் கிடைத்திருப்பதுதான் என்ன சொல் பார்க்கலாம்? அவளுடைய கதையே துக்ககரமானது. பாவம், பேதைப்பெண்!" என்றார் அவர்.

"அவளுடைய கதையைச் சொல்லுங்கள்" என்றாள் ஸ்ரீமதி ஹ.

அந்தப் பிரும்மாண்டமான வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது. இவர்கள் இருவர் மட்டும்தான் அதில் இருக்கின்றனரோ என்று தோன்றியது. ஒவ்வொரு பகுதிக்கும் இடையே இருந்த சுவர்கள் மிகக் கனமாய் இருந்தன. இந்த விசாலமான அறைக்குள் போடப்பட்டிருந்த நாற்காலி, மேஜைகள் யாவும் பல ஆண்டுகளாக இருந்தது போலவே இருந்தன. இந்த அகன்ற கூரையின் அடியில் வசித்து வந்த எத்தனையோ மனிதர்களில் இவர்கள் இருவர். ஆனால் இப்போது புதியதாக என்னமோ ஒன்று நேரப்போகிறது! தொன்று தொட்டு வந்த கட்டுப்பாடெல்லாம் குலைந்துபோய் விட்டது!

"இந்தப் பெண்ணிடம் உண்மையில், விசேஷமாகச் சொல்லும்படி ஒன்றுமே இல்லை" என்றார் ஸ்ரீமான் ஹ, ஏதோ மன்னிப்பைக் கோருகிறவரைப்போல.

ஸ்ரீமதி ஹ, புதிதாகத் தான் அடைந்துள்ள அந்தத் தனிமையுடன், "அவள் உங்கள் அன்பைப் பெற்றிருக்கிறாள்

வேண்டும் அவளிடம் ஏதாவது விசேஷமாக இருக்கத்தான் வேண்டும்" என்றாள்.

ஸ்ரீமான் ஹா நிடுக்கிட்டார். "நீ நன்றாகத்தான் இருக்கிறாயா? உன்னுடைய குரல் நான் முன்பு கேட்டதைவிட பலஹீனமாக இருக்கிறதென்று தோன்றுகிறதே" என்றார்.

"என்னுடைய வாழ்நாளில் இதைவிட பலமுள்ளவளாய் நான் என்றுமே இருந்ததில்லை. நீங்கள் நேசிக்கும் இப் பெண்ணைப் பற்றி எனக்கு மேலும் கூறுங்கள்" என்றாள் ஸ்ரீமதி ஹா.

அவர் தயங்கினார். "நான் அவளை நேசிக்கிறேனா இல்லையா என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. அதாவது, உன்னிடம் நான் எவ்வித மனோபாவம் கொண்டேனோ, அந்த மாதிரியெல்லாம் ஒன்றுமே கிடையாது. உன்னிடம் நான் கொண்ட மரியாதை இவளிடம் எனக்குக் கிடையாது. நான் அவளைப் பார்த்து அதிசயமோ ஆனந்தமோ படுவதில்லை. அவளுக்குக் கல்வி அறிவு கிடையாது. நான் அவளை எந்த விஷயத்திலும் யோசனை கேட்பது கிடையாது" என்று கூறிக்கொண்டே போனார்.

ஸ்ரீமதி ஹாவின் முகம் வழக்கத்தைவிட இன்னும் அதிகமான மலர்ச்சியுடன் காணப்பட்டதாலும் அவளுடைய கண்கள் அவரை உற்சாகமூட்டியதாலும் அவருக்குச் சிறிது துணிவு ஏற்பட்டது. அவள் சிறிதும் கோபமடையவில்லை. "உன்னுடைய அறிவுத் திறனைப் பற்றி யாரே சொல்ல முடியும்?" என்றார். பிறகு, "மேலும் சொல்லட்டுமா?" என்று கேட்டார்.

"தயவுசெய்து சொல்லுங்கள். எவ்விதம் அவளால் உன்னை மணம் பாதிக்கப் படுகிறது என்று சொல்லுங்கள். அப்போது ஒருவேளை நீங்கள் உண்மையாக அவளை நேசிக்கிறீர்களா என்பதை என்னால் அறிந்து கொள்ளமுடியும்" என்றாள்.

"உனக்கு ஏன் இதில் இவ்வளவு சிரத்தை?" என்று கேட்டார் அவர்.

"ஏனெனில் நான் சௌமிய்யை வரவழைத்ததால் உன் களுக்குப் பெரிய நிந்தை இழைத்து விட்டேன் அல்லவா?" என்றாள் அவள்.

"நீ நல்லதை உத்தேசித்துத்தானே செய்தாய்!" என்றார் அவர் விநயத்துடன்.

"நான் சுயநலத்துடன் நடந்துகொண்டு விட்டேன்" என்றாள் அவள் மேலும் பணிவுடன்.

இதுதான், அவள் ஒரு தவறை செய்துவிட்டாள் என்று முதல் தடவையாக ஒத்துக் கொள்வது! ஆகவே அவர் மனம் மிகவும் நெகிழ்ந்து விட்டது.

அவர் பழைய ஆர்வத்துடன், "இப்போதும் உன்னைப் போல் ஒருவர் இருக்க முடியுமா? இன்னமும் நான் இதைத் தான் சொல்லுகிறேன். உன்னுடைய நாற்பதாவது பிறந்த நாள் மட்டும் வராதிருந்தால், உலகத்தில் வேறொரு பெண் இருக்கிறாள் என்பதைக் கூட நான் அறிந்திருக்க மாட்டேன்" என்றார்.

அவள் புன்னகை புரிந்தாள். "அந்தோ! பெண்களுக்கு இந்த நாற்பதாவது வயதைவிட்டால்...மறுபடி சாவைத் தவிர வேறு வழியில்லை" என்றாள். அவரை அவள் சாகவித் திருக்கும் பட்சத்தில் அவள் மல்லிகாவை இவ் வீட்டிற்குள் வரும்படி அழைப்பதற்குப் பதில் மரணத்தைத் தேர்ந்தெடுத் திருப்பாள்.

அவர் மிக்க விநயத்தோடு, "சாவைப் பற்றிப் பேசாதே. நல்லது, இத்தப் பெண்ணிடம் எனக்கு என்ன சுகம் கிடைக் கிறது என்று கேட்கிறாய் அல்லவா? அதாவது அவள்—என்னுடைய தன்னம்பிக்கையை அதிகப்படுத்துகிறாள். அதுதான் அவளிடம் எனக்குக் கிடைப்பது" என்றார்.

"அப்படியா?" என்றாள் ஸ்ரீமதி ஹா.

"அவள் அறியாத பெண். அவளுக்கு ஒன்றும் தெரியாது. அவளுக்குப் போதிய சக்தி கூடக் கிடையாது" என்றார் ஸ்ரீமான் ஹா. அவருடைய உதடுகள் புன்சிரிப்பால் நெகிழ்ந்தன. "அவளை யார் அக்கறையாகக் கவனித்திருக்கிறார்கள்? உண்மையில் அவள் ஒரு குழந்தையின் தன்மையை உடையவள்தான். அவளுக்குப் பாதுகாப்பான ஒரு இடம் கிடைத்த தில்லை. அவளை ஒருவரும் புரிந்துகொண்டிருக்கக்கூட மாட்டார்கள். அவள் பார்ப்பதற்குச் சாதாரணமாயும், எவ்வளவோ யும் இருந்தாலும் கூட அவளிடம் பல நற்குணங்கள் இருக்கின்றன. அவளுக்கு உயர்ந்த அறிவு கிடையாது என்பது மட்டுமல்ல, அவளுடைய உள்ளத்தில் அன்பு நிறைந்து வழிகாட்டி அழைத்துச் செல்ல யாராவது ஒருவர் இருப்பதும் தேவையாக இருக்கிறது" என்றார்.

ஸ்ரீமதி ஊ அதிசயத்தோடு இவற்றிற்குச் செவி சாய்த்துக் கொண்டிருந்தாள். இது நாள் வரை, ஸ்ரீமான் ஊ தம்முடைய ஆசைகளையும் தேவைகளையும் தவிர வேறு எதையும் பற்றி பேசி அவள் கேட்டதில்லை.

"நீங்கள் உண்மையில் அவளைக் காதலிக்கிறீர்களா?" என்றாள் அவள்.

அவளுடைய குரலில் அதிசயமும் ஆமோதிப்பும் கலந்திருந்தன. அதை உணர்ந்த அவர், பெருமையுடனும் அடக்கத்துடனும் பதில் கூறினார்.

"நான் கூறியதுதான் காதல் என்றால் நான் உண்மையில் அவளை நேசிக்கத்தான் செய்கிறேன்" என்றார்.

அவர்கள் இருவரும் இப்போது கொண்டிருந்த பரஸ்பர அன்பைப் போல் முன்புகூடக் கொண்டதில்லை. அவரிடம் இத்தகைய இருதயம் ஒன்று இருந்தது என்பது அவளுக்குத் தெரியவே தெரியாது. அவரிடத்திலும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது! இந்தப் புதிய உண்மை அவளை ஆச்சரியக் கடலில் ஆழ்த்திவிட்டது. ஆண்பிள்ளையைப் போன்ற ஒரு மகான் அவள் உள்ளத்திலிருந்த அன்புக் கண்ணைத் திறந்து விடுவதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், இந்த அறிவற்ற மோன பெண்மணியான மல்லிகா, கேவலம் ஒரு பேதைப் பெண்ணாகிய அவள், ஸ்ரீமான் ஊவிடம், இதே இளகிய மனதைச் சேர்ந்த அன்பைக் கண்டுபிடித்து விட்டிருப்பது விந்தையிலும் விந்தை அல்லவா!

"நீ இதை ஜோக்கடிக்கமாட்டாயே?" என்றார் ஸ்ரீமான் ஊ. அவருடைய முகத்தில் பணிவும் வேண்டுதலும் நிறைந்திருந்தன.

"நான் ஆனந்த சாகரத்தில் அல்லவா மூழ்கியிருக்கிறேன்!" என்றாள் அவள் உடனே.

அவர்கள் இருவரும் ஒரே சமயத்தில் எழுந்து அறையின் நடுவே சந்தித்தனர். அவளுடைய ஆனந்தம் பாய்ந்து சென்று அவரையும் தாக்கிற்று. அவர் அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டார். ஒருவரை ஒருவர் ஊடுருவிப் பார்த்த வண்ணம் ஒரு கணம் இருவரும் ஒன்றுகி நின்றனர். அவளுக்கு தான் இவ்விதம் பரவசமடைந்தது, ஏன் அவர்களிடையே இவ்வித அன்னியோன்யம் ஏற்பட்டது என்பதை அவரிடம் கூறவேண்டும் என்ற ஏக்கம் உண்டாயிற்று. அவருடைய உள்ளத்தில் உதித்திருக்கும் காதலை அவள்

புரிந்துகொண்டாள் என்பதை அவர் அறிய வேண்டுமென்ற பேரவா அவள் உள்ளத்தில் எழுந்தது. அன்பு ஒரு மகான் மூலம் கிடைத்தால் என்ன? தெருவில் அலையும் வேலிப் பெண்ணால் கிடைத்தாலென்ன? துரதிர்ஷ்டசாலியாயிருந்தாலும் தாசியாயிருந்தாலும் அவர்கள் செய்திருக்கும் அற்புதம் என்னவோ ஒன்றுதான்! அவளுடைய பருநிலைத் தன்மை இரகசியமாக வந்தடைந்தது அன்பு. அவருக்கு வெளியே சென்றபோது, ஒரு விபசார விடுதியில் அது கிடைத்தது. ஆகவே இருவரும் மறுமலர்ச்சி பெற்றிருக்கின்றனர். ஆனால் இந்த அற்புதத்தை அவரையும் புரிந்து கொள்ளச் செய்ய முடியாது என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே அதை அவருக்குப் பூரணமாகக் கிடைக்கும்படி செய்வதே அவளுடைய கடமை.

"உன்னைப்போல் இவ்வுலகில் வேறு ஒருவரும் இருக்க முடியாது" என்றார் அவர்.

"ஒருவேளை அப்படியும் இருக்கலாம்" என்று கூறிவிட்டு அவள் மெல்ல தன் கையை விடுவித்துக் கொண்டாள்.

இந்தச் சமயத்தில் இங் அங்கு வந்து சேர்ந்தாள். அவள் தனது வழக்கப்படி கதவருகே யிருந்து மெல்ல எட்டிப் பார்த்து அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தாள். அவர்கள் கைகோர்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவளுக்கு முதலில் சிறிது ஆச்சரியமும் பிறகு குதூகலமும் உண்டாயிற்று. அப்படியானால் அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு விட்டது. விபசார விடுதியிலிருந்து வந்த அந்தப் பெண்ணை நிச்சயம் திருப்பி அனுப்பி விடுவார்கள்! அவள் இரண்டடி பின்னால் சென்று ஒருமுறை இருமிவிட்டு, மீண்டும் தன்னுடைய அவசரமான செய்தியுடன் தோன்றினாள்.

"அம்மா, கேங் வீட்டிலிருந்து ஒரு ஆள் வந்திருக்கிறான். ஸ்ரீமதி கேங்கிற்கு வேதனை எடுக்க ஆரம்பித்திருக்கிறதாம். அந்த அம்மாளின் நிலை அபாயகரமாக இருக்கிறதாம். ஸ்ரீமான் கேங் உங்களை அங்கு வரும்படி சொல்லி அனுப்பியிருக்கிறார்" என்றாள்.

இங்கின் இருமல் சப்தம் கேட்டதுமே, ஸ்ரீமதி ஊ நாற்காலிக்குச் சென்று உட்கார்ந்து கொண்டாள். அவளுடனே எழுந்து, "ஐயோ கடவுளே! அப்படியா சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்? எதனால் கஷ்டம் ஏற்பட்டதென்று தீர்வது அந்த மனிதன் கூறினானா?" என்று கேட்டான்.

"குழந்தை கர்ப்பத்தை விட்டு வெளியே வரவில்லையாம்" என்றாள் இங்.

"நான் இப்போதே போக வேண்டும்" என்று இளம் பிஞ்சு ஸ்ரீமதி ஊ. கதவுவரை சென்றுவிட்டு மீண்டும் ஸ்ரீமான் ஊவினிடம் பேசுவதற்காக ஒரு நிமிஷம் நின்றாள். "என் பிள்ளைகளின் தகப்பனாரே, நீங்கள் ஒரு கவலையுமின்றி நிம்மதியாக இருங்கள். அந்தப் பெண் உங்கள் அறைக்கு வந்து விடுவாள். எல்லோரையும் பேசாமல் இருக்கும்படி நான் பார்த்துக் கொள்கிறேன். ஒன்றே ஒன்று மட்டும் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்—சியூமிங்கைத் தனியே விட்டு விடுங்கள்" என்றாள்.

ஸ்ரீமான் ஊ அன்புடன், "அவள் இருப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. அவள் மிகவும் நல்லவள். நீ அவளை இப்போது அனுப்பி விட்டால் அவள் எங்கே போவாள்?" என்று கேட்டார்.

"அவளை நான் எங்கும் அனுப்பப் போவதில்லை. நான் திரும்பி வந்ததும் அவளைப் பற்றி யோசிக்கிறேன். இப்போதைக்கு, அவள் என்னுடைய அறையிலேயே வந்து இருக்கட்டும்" என்று பதிலளித்துவிட்டு, இங்கைப் பார்த்து, "இங் நான் சொல்வதைக் கேட்டாய் அல்லவா? அப்படியே பார்த்து ஏற்பாடு செய்து விடு" என்றாள்.

சுவரோடு ஒட்டி நின்றுகொண்டிருந்த இங் சுவரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவள் பொறுமையுடன், "அந்த வேசிப் பெண் இங்கே இருக்கப் போகிறாளா?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஊ கண்டிப்புடன், "இப்போது அவள் வேசி அல்ல. அவளை என்னுடைய எஜமானரே தேர்ந்தெடுத்திருக்கிறார்" என்றாள்.

இதைக் கூறியதும் அவள் வேகமாகச் சென்று விட்டாள். சில நிமிஷங்களுக்குப் பிறகு அவள் பல்லக்கில் அமர்ந்து புறப்பட்டு விட்டாள்.

தெருவழியே அவளைச் சுமந்து சென்ற ஆட்கள், "உங்கள் கண்ணொளியைக் கொடுங்கள்; உங்கள் கண்ணொளியைக் கொடுங்கள்" என்று கூவியவாறு சென்றனர். அவர்களுடைய அவசரத்தைக் கண்ட கூட்டத்தினர் விலகி வழி விட்டனர்.

* * *

கேங் வீடு ஒரே கலவரத்தில் ஆழ்ந்திருந்தது. தன்னுடைய பல்லக்கை அவ்வீட்டு முன்வாசலில் இறக்கி வைத்ததுமே இதைக் கண்ணுற்றாள் ஸ்ரீமதி ஊ. சிறு பணிப் பெண்களும் அடிமைப் பெண்களும் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். வேலைக்காரர்கள் ஒன்றும் தோன்றாதவர்களாய் திகைத்து நின்றனர். வீடு முழுவதும் கூச்சலும் குழப்பமும் நிறைந்திருந்தது. தலைமைக் காரியஸ்தன் அவளைப் பார்த்ததும் ஓடி வந்து அவளை வணங்கி, உடனே உள்ளே வரும்படி அழைத்தான். அவள் அவனைத் தொடர்ந்து சென்றாள். அவளைக் கண்டதுமே குழப்பங்களெல்லாம் அடங்கி விட்டன. எல்லாக் கண்களும் அவளைப் புதிய நம்பிக்கையோடு பார்த்தன. அவளுடைய அறிவுத் திறமையைப் பற்றி யாவரும் அறிந்திருந்தனர். அவ்வீட்டு எஜமானி அவளுடைய ஆப்த சிநேகிதி என்பது வேறு அவர்களுக்கு அவளிடம் அதிக நம்பிக்கையை உண்டாக்கிற்று.

"இந்த அம்மாள் நிறைய புத்தகங்கள் படித்திருக்கிறார்களாம்" என்று ஒருத்தி மற்றொருத்தியிடம் ரகசியமாகக் கூறினாள். அதிக புத்தகங்களைப் படித்திருப்பதால் அவளுக்கு என்ன செய்ய வேண்டுமென்பது தெரிந்திருக்குமென்பதாக அவர்களது எண்ணம்.

ஸ்ரீமான் கேங் பின்பகுதியின் முன்னறையில் அழுத வண்ணம் உட்கார்ந்திருந்தார். ஸ்ரீமதி ஊ அவரை அநேக முறை பார்த்திருக்கிறாள். ஆனால் இதுவரை அவள் அவரிடம் ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை. அவரும் அவளுடன் பேசியதில்லை. தூரத்திலிருந்தபடியே வணக்கம் தெரிவித்துக் கொள்வதோடு சரி. மெங், லின்யி இருவர்களின் திருமணத்தின்போதுகூட அவர்கள் தூரத்து உறவினர்களைப் போலவே சந்தித்தனர். அவரைப் பற்றி அவள் அறிந்திருப்பதெல்லாம் தன்னுடைய சிநேகிதியான அவருடைய மனைவியின் மூலம் தான்.

ஆனால் இதன் பொருள் அவள் அவரை வெகு நன்றாக அறிவாள் என்பதே. அவருக்குச் சாப்பிடுவதில் எது பிரியம், எவ்வகை உணவு பிரியம் என்பதும் தெரியும். எலுமிச்சம்பழம் கலந்த முட்டைகள் அவருக்குப் பிடிக்காது. பன்றி மாமிசத்தால் செய்யப்பட்ட பதார்த்தம் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுவார். இரண்டு பாட்டில் ஒயின் குடித்தாலே அவர் நினைவிழந்து விடுவார். ஆனால் குடிவெறியினால் வெறி கொள்ளாமல் பேசாமல் உறங்கி விடுவார் என்பன போன்ற இவை எல்லாம் அவளுக்குத் தெரியும். தனக்கு இத்தனை

குழந்தைகள் இருப்பதைப் பற்றி அவருக்கு மிகவும் பெருமை. ஆனால் அவர் எதிரில் ஒரு குழந்தை அழுதால் அதை உடனே அப்பால் அனுப்பி விடுவார்.

அவர் தமது பாதரக்ஷைகளை தமது மனைவியின் படுக்கை யருகே விட்டுச்செல்வார். அப்படி விடாத அன்று அவர் உல்லாச விடுதிக்குச் சென்றிருக்கிறார் என்று அர்த்தமாகும். அன்றிரவு முழுவதும் அவர் மனைவி கண்ணீர் வடித்தவண்ணம் இருப்பாள். இதை அறிந்த அவர் மிகக் கோபம் கொள்வார். அவருடைய மார்பில் ஒரு மச்சம் இருக்கிறது. அது நீண்ட ஆயுளைக் குறிக்கும் ஒரு அடையாளம். அவருக்கு வயிற்றில் அடிக்கடி உப்புசம் ஏற்படும். வடக்கே பாலைவனத்திலிருந்து வரும் வறட்சியான காற்றுக்கள் வீசும் காலத்தில் அவருடைய கண்களில் அரிப்பு ஏற்படும். கிராப்புகள் தின்பதால் அவருடைய கன்னங்களில் தடிப்பு ஏற்படும். ஆனால் அதற்காக அவர் அதைச் சாப்பிடாமல் இருப்பதில்லை. அதாவது, தம் மனைவி இறக்கும் தருவாயில் இருக்கிறாளே என்று அழுது கொண்டு உட்கார்ந்திருந்த இம் மனிதரைப் பற்றி அவளுக்கு எல்லாம் தெரியும். ஆனால் அவருக்கு அவளைப் பற்றி ஊராருக் கெல்லாம் எவ்வளவு தெரிந்ததோ அவ்வளவுதான் தெரிந் திருந்தது. அவள் தனது நாற்பதாவது வயதில், தனது புருஷனுக்கு ஒரு விலை மகளை மணம் செய்வித்தாள் என்பதைத் தான் அவர் அறிவார்.

அவள் வருவதைக் கண்டதும் அவர் எழுந்தார். அவரு டைய பருத்த கன்னங்களில் கண்ணீர் உருண்டோடின. "அவள்...அவள்..." என்று ஆரம்பித்தார்.

ஸ்ரீமதி ஊ, அவரைப் பாராமல், "ஆம், எனக்குத் தெரியும்" என்றாள். தன் சிநேகிதியால் எப்படி இந்த மனிதனை நேசிக்க முடிகிறது என்று அவளுக்கு இப்போது ஆச்சரியம் ஏற்பட்டிருக்கும். காதல் என்பது எவ்வளவு விசித்திரமானது என்பதைத்தான் அவள் இப்போது அறிந்து கொண்டு விட்டாளே! அவள், அந்த அறைக்கும் படுக்கை அறைக்கும் நடுவே தொங்கிய பட்டுத் திரையின் அருகே சென்றாள். அவசரத்துடன், "நீங்கள் அனுமதித்தால், நான் இப்போதே சென்று பார்க்கிறேன்" என்றாள்.

"போங்கள்...உள்ளே போங்கள்...அவளை எப்படியா யினும் காப்பாற்றுங்கள்" என்று திணறினார் அவர்.

அவள் ஸ்ரீமதி கேங்கின் அறைக்குள் விரைந்து சென்றாள். அறைக்குள் உதிரத்தின் நெடி பலமாகயிருந்தது. அவளுடைய

படுக்கைக் கருகே ஒரு எண்ணெய் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. கட்டிலில் படுத்திருந்த ஸ்ரீமதி கேங்கை ஒரு கிழவி குனிந்து பார்த்துக் கொண்டிருந்தாள். வேலைக்காரிகள் இரண்டுபேர், தலைமாட்டில் ஒருத்தியும் கால்மாட்டில் ஒருத்தி யுமாக நின்று தத்தளித்துக் கொண்டிருந்தனர். தலைப் பக்கம் நின்று கொண்டிருந்தவளை அப்பால் தள்ளிவிட்டு, ஸ்ரீமதி ஊ, பிணத்தைப்போல் கிடந்த தனது தோழியின் முகத்தைப் பார்த்தாள்.

"மேய்ச்சன்" என்று மெல்ல அழைத்தாள்.

ஸ்ரீமதி கேங், மெல்ல கண்ணைத் திறந்து பார்த்தாள். "நீயா, நீ வந்திருக்கிறாயா?" என்று மெல்லிய குரலில் வினவினாள். அவளுடைய முகம் பரிதாபகரமாக இருந்தது. "என் உயிர் போய்க்கொண்டிருக்கிறது..." என்று கூறினாள்.

ஸ்ரீமதி ஊ அவளுடைய கையைப் பிடித்து நாடி பார்த் தாள். உண்மையில் நாடி மிகவும் விழுந்து போயிருந்தது. அவள் கூறியதற்கு ஸ்ரீமதி ஊ ஒன்றும் பதிலளிக்கவில்லை.

"குழந்தையைப் பிடித்து இழுப்பதை முதலில் நிறுத்து" என்று அவள் மருத்துவச்சிக்கு உத்திரவிட்டாள்.

கிழவி நிமிர்ந்து பார்த்தாள். "ஆனால் இது ஆண் குழந்தை" என்று கூறினாள்.

"எங்களைத் தனியே விட்டுப் போங்கள். எல்லோரும் வெளியே போங்கள்" என்று உத்திரவிட்ட ஸ்ரீமதி ஊ, தன் மெல்லிய தேகத்தை நிமிர்த்திக்கொண்டாள்.

அவர்கள் அவளை விழித்துப் பார்த்தனர். அந்தக் கிழ மருத்துவச்சி, "நீங்கள் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறீர் களா?" என்று கத்திவிட்டுத் தனது உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"ஆம், எடுத்துக் கொள்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பின் அவர்கள் செல்லும்வரை காத்திருந்தாள். அறை காலியானதும் அவள் தனது சிநேகிதியிடம் குனிந்து, தெளிவாக, "மேய்ச்சன், இதோ, நான் சொல்வது தெரி கிறதா?" என்று கேட்டாள்.

ஸ்ரீமதி கேங் கண்களை மூடிக்கொண்டிருந்தாள். வெகு சிரமத்துடன் மீண்டும் அவற்றைத் திறந்தாள். அவள் பேச

வில்லை. ஆனால் அவளுக்குச் சுய நினைவு இருந்தது என்பதை ஸ்ரீமதி ஊ அறிந்து கொண்டாள்.

அவள் மேலும், "நீ பேசாமல் படுத்திரு. நான் சென்று உனக்குக் குடிப்பதற்குச் சிறிது கஞ்சி கொண்டு வருகிறேன். அதைக் குடித்துவிட்டு சிறிது இளைப்பாறு, அப்போது உனக்கு கொஞ்சம் பலம் வரும். சிறிது தென்பு வந்ததும் அக் குழந்தையை வெளியே கொண்டு வருவதற்கு நான் உதவி செய்கிறேன். இருவருமாகச் சேர்ந்து சுலபமாகச் செய்துவிடலாம்" என்று கூறினாள்.

அவளுடைய இமைகள் ஒரு கணம் துடித்துவிட்டு மூடிக் கொண்டன. புன்னகையின் சாயல் வெகு லேசாக அவளது முகத்தில் தோன்றி மறைந்தது. ஸ்ரீமதி ஊ, அமைவாக அவளுக்குப் போர்த்து விட்டு, அடுத்த அறைக்குச் சென்றாள். மருத்துவச்சி, கோபம் கொண்டவளாய் அங்கிருந்து சென்று விட்டாள். ஆனால் வேலைக்காரிகள் அங்கு இருந்தனர். ஸ்ரீமான் கேங்கிற்கு ஊற்றிக் கொடுத்துக் கொண்டும் விசிறிக் கொண்டும் உபசரித்த வண்ணமிருந்தனர். ஸ்ரீமதி ஊ உள்ளே வந்ததும் அவர்கள் திரும்பிப் பார்த்தனர். ஆனால் அவள் அவர்களிடம் பேசாமல் ஸ்ரீமான் கேங்கை விளித்துக் கூறினாள்.

"உங்களுடைய உதவி எனக்குத் தேவையாக யிருக்கிறது" என்றாள்.

"அவள் பிழைத்துக் கொள்வாளா?" என்று கூவினார் அவர்.

"நீங்கள் மட்டும் உதவி செய்தால் கண்டிப்பாகப் பிழைப்பான்" என்று பதில் கூறினாள் அவள்.

"எது வேண்டுமானாலும் செய்கிறேன்...எது வேண்டுமானாலும் செய்கிறேன்" என்று பதைபதைப்புடன் குழறினார் அவர்.

"சரி, போதும்" என்று கூறி அவள் அவருடைய குழறலை நிறுத்தினாள்.

பிறகு அவள் ஒரு பணிப்பெண்ணை நோக்கி, "இன்றைக்குச் செய்திருக்கும் லேசான ஆகாரங்களில் எது சிறந்ததோ அதில் ஒரு கிண்ணம் எடுத்துக்கொண்டு வா" என்று பணித்தாள்.

"மாட்டிறைச்சியும், கோழிக் குஞ்சும் போட்ட சூப்கள் இருக்கின்றன. தனியாக மீன் சூப்பும் செய்யப்பட்டிருக்கிறது" என்றாள் அவள்.

"மீன் சூப்பையே கொண்டு வா. அதில் இரண்டு கரண்டி சிவப்புச் சர்க்கரையைப் போட்டுக்கொண்டு வா. சூடாக இருக்கட்டும்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அவள் ஸ்ரீமான் கேங்கைத் திரும்பி நோக்கினாள்.

"நீங்கள் அதை உள்ளே கொண்டு வாருங்கள்—வேலைக்காரி கொண்டு வரவேண்டாம்" என்று கூறினாள்.

"ஆனால் நான்—எனக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாதே" என்று தடுமாறினார் அவர்.

"நீங்களே உள்ளே வாங்கி வாருங்கள்" என்றாள் அவள் மீண்டும்.

அவள் இருண்டிருந்த அவ்வறைக்குள் மறுபடி சென்றாள். ஸ்ரீமதி கேங்கின் நாடியை இன்னொரு முறை பிடித்துப் பார்த்தாள். நாடி முன்பு இருந்ததுபோல் தானிருந்தது. பலஹீனமடையவில்லை. அவள் சிறிது நேரம் காத்திருந்தாள். விரைவிலே ஸ்ரீமான் கேங்கின் சுனத்த காலடி யோசை லேசாக வருவதைக் கேட்டாள். அவர் இரண்டு கைகளாலும் சூடான பானம் இருந்த ஜாடியைப் பிடித்து வந்தார்.

"இதைத் தேநீர்க் கிண்ணத்தில் ஊற்றிக் கொள்வோம்" என்று கூறிவிட்டு, அவள் தேநீரை, எச்சல் உமிழும் பாத்திரத்தில் கொட்டி, அதைக் காலி செய்தாள். பிறகு ஜாடியை அவரிடமிருந்து வாங்கி அக்கிண்ணத்தில் பானத்தை ஊற்றினாள்.

பிறகு கட்டிலை நோக்கிச் சென்றாள்.

"மேய்ச்சன், மெல்ல இதை விழுங்கு" என்று கூறினாள். முதலில் கொஞ்சம் தனது வாயில் ஊற்றி சூடு சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டாள். பின் அக் கிண்ணத்தின் மூக்கை ஸ்ரீமதி கேங்கின் வாயில் வைத்துப் பானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றினாள். ஸ்ரீமதி கேங்கண்களைத் திறக்கவில்லை. ஆனால் ஐந்தாறு முறை அதை விழுங்கினாள்.

"சரி, இப்போது இளைப்பாறு" என்று கட்டளையிட்டாள் ஸ்ரீமதி ஊ.

ஸ்ரீமான் கேங்கிடம் அவள் பேசவில்லை. அவரை வெறுமே பார்த்துக்கொண்டு நிற்கும்படி விட்டிருந்தாள். தேநீர் பாத்திரத்தை மேஜைமீது வைத்து விட்டுத் தனது சட்டையின் கைகளை மடித்துவிட்டுக் கொண்டாள். நாற் காலியின் மீது கிடந்த ஒரு துண்டை யெடுத்துத் தனது இடுப் பைச் சுற்றிக் கட்டிக்கொண்டாள். அவர் பீதி நிறைந்தவ ராய் அவளையே விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நான் இங்கே இருக்கக் கூடாது" என்றார் மெல்லிய குரலில்.

ஆனால் அவள் அவரை அருகே வரும்படி செய்கை செய்தாள். அவர் செயலற்றவராய் அவளுக்குக் கீழ்ப்படிந் தார். அவர் எத்தனையோ பிள்ளைகளுக்குப் பிறப்பை அளித் திருக்கிறார். ஆனால் அவருடைய அச்செய்கை என்ன விளைவை ஏற்படுத்தியது என்பதை அவர் பார்த்தவரில்லை. அவர் கவலையற்றவராக, குதூகலத்துடனும் இவற்றைச் செய்திருக்கிறார்.

ஸ்ரீமதி ஊ, போர்வைகளை விலக்கி விட்டுத் தன் சிநேகிதி யிடம் குனிந்தாள்.

"மேய்ச்சன், நீ வீணுகச் சிரமப்படாதே. உனது உடலுக்கு ஓய்வு கொடு. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள்.

அவள் இதைக் கூறியபோதிலும், புண்ணுகியிருந்த சதையில் அவளுடைய கை பட்டதுமே, ஸ்ரீமதி கேங் வேதனை யுடன் உறுமினாள். ஸ்ரீமான் கேங் கைகளால் வாயைப் பொத்திக்கொண்டு மறுபுறம் திரும்பிக் கொண்டார்.

"அவளுடைய கையைப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்க ளுடைய பலத்தை அவளுக்குக் கொடுங்கள்" என்றாள் ஸ்ரீமதி ஊ அவரிடம்.

அவரால் இதற்குப் பணியாமல் இருக்க முடியவில்லை. அவளுடைய பெரிய விழிகள் அவர் மீது உறுதியுடன் நிலைத் திருந்தன. அவர் முன்னால் சென்று, தமது மனைவியின் கை களைப் பிடித்துக்கொண்டார். இது ஒன்றுதான்—இது ஒன்றி னால்தான் அச்சமயம் ஸ்ரீமதி கேங்கை விழித்துப் பார்க்கும்படி செய்திருக்க முடியும். தான் வெகு நன்றாக அறிந்திருந்த அந்தக் கைகளின் ஸ்பரிசம் பட்டவுடனே, அவள் கண்களைத் திறந்து பார்த்தாள்.

"தாங்களா—தாங்கள் என்னுடைய பிள்ளைகளின் தகப்பனாரா?" என்று திக்கினாள்.

அவளுடைய அறிவு நன்றாக விழிப்படைந்திருந்த இத் தருணத்திலேயே ஸ்ரீமதி ஊ, தனது பலம் பொருந்திய சிறிய கைகளால் குழந்தையைச் சற்றுப் பிடித்துக் கொண்டாள். ஸ்ரீமதி கேங் வீறிட்டாள்.

ஸ்ரீமான் கேங்கின் உடல் முழுவதும் வியர்வை பொங்கி வழிந்தது. அவர் உறுமிய வண்ணம் தமது மனைவியின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டார். "நீ மட்டும் இப்போது பிழைத்துக் கொண்டாயானால்—நான் சத்தியமாகச் சொல் கிறேன்..." என்று கூற ஆரம்பித்தார்.

"ஒன்றையும் சத்தியம் செய்யாதீர்கள்...நான் மகிழ்ச் சியே யடைகிறேன்...உங்கள் குழந்தைதானே" என்று அவள் தினறிக் கொண்டே கூறினாள்.

"உன்னைவிட எனக்குக் குழந்தைகள் ஒன்றும்பெரிதில்லை. நீ செத்துப் போனால் நான் தூக்குப் போட்டுக் கொண்டு விடுவேன்" என்று கத்தினார் அவர். அவருடைய முகத்தில் வியர்வை வெள்ளமாக ஓடியது.

"அப்படியானால் என்னை நீங்கள் நேசிக்கிறீர்களா?" என்று கேட்டாள் அவள். அவளுடைய மிக மிக பலஹீன மாக குரலையும், மூச்சுத் தினறலையும் கேட்ட ஸ்ரீமதி ஊ, ஒரு வினாடி, தான் எடுத்துக் கொண்ட காரியம் விபரீதமாகி விடுமோ என்று பயந்து போனாள்.

ஸ்ரீமான் கேங் அழுகுரலில், "என்னுடைய உயிருக் குயிரானவளல்லவா நீ, என்னை விட்டுப் போய் விடாதே... என்னை விட்டுப் போய் விடாதே..." என்றார்.

"நான் சாக மாட்டேன்" என்று கூறினாள் ஸ்ரீமதி கேங் பலமாக.

இதே சமயத்தில் ஸ்ரீமதி ஊ குழந்தையை வெளியே எடுத்து விட்டாள்.

ஸ்ரீமான் கேங் இன்னும் தமது மனைவியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தார். "எல்லாம் ஆகி விட்டதா?" என்றார் திகிலுடன்.

"முடிந்து விட்டது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"குழந்தை...?" என்று வினவினாள் ஸ்ரீமதி கேங்.

ஸ்ரீமதி ஊ அச் சிறு உடலைத் தனது இடுப்பில் கட்டியிருந்த துண்டால் சுற்றினாள். அவள் அமைதியாக "குழந்தை இறந்து விட்டது. ஆனால் உங்கள் இருவருக்கும் அது தேவையில்லையே" என்றாள்.

ஸ்ரீமான் கேங் குழறலுடன், "ஆம், வேண்டியதில்லை. மேய்ச்சன், நான் உன்னை வேண்டிக்கொள்கிறேன்—இனிக் குழந்தைகளே வேண்டாம்—ஒரு போதும் வேண்டாம். நான் சத்தியம் செய்கிறேன்" என்றார்.

ஸ்ரீமதி ஊ, கடுமையுடன், "போதும் உம்மால் ஆகாதை எதற்குச் சத்தியம் செய்கிறீர்" என்றாள். தேநீர் இண்ணத்தைத் தொட்டுப் பார்த்தாள். அது இன்னும் சூடாக இருந்தது. அதைத் தன் தோழியின் வாயில் வைத்து, "இப்போது குடி. உயிரோடிருப்பதாக வாக்களித்திருக்கிறாய் அல்லவா?" என்றாள்.

மீண்டும் கண்களை மூடிக்கொண்டே, ஸ்ரீமதி கேங் அப்பானத்தைக் குடித்தாள். ஸ்ரீமதி ஊ அவளுடைய நாடியைப் பிடித்துப் பார்த்தாள். அது சற்றே பலமடைந்திருந்தது.

ஸ்ரீமதி ஊ, ஸ்ரீமான் கேங்கிடம் அவளுடைய கையை விட்டுவிடும்படி கூறினாள். "அவள் தூங்க வேண்டும். நான் இங்கேயே இருந்து பார்த்துக் கொள்கிறேன். இந்தக் குழந்தையைப் புதைப்பதற்கு எடுத்துச் செல்கிறீர்களா?" என்று கேட்டாள்.

அக் குழந்தையின் உயிரற்ற உடலை எடுத்து அவள் அவருடைய கையில் வைத்தாள். அவர் அதை ஏந்தியபடி நின்றார்.

"நீங்கள் அவளிடம் கூறியதற்குப் பிரமாணமாக இருக்கட்டும் இக் குழந்தை. உங்கள் கையில் பிடித்திருக்கும் இச் சிசுவின் பாரம் என்றென்றும் உங்கள் மனத்தில் இருக்கட்டும். தன்னுடைய தாயை—உங்களுக்கு—காப்பாற்றிக் கொடுக்கும் பொருட்டு அது தன் உயிரை விட்டது என்பதை என்றும் மறவாதீர்கள்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"நான் என்றும் மறக்க மாட்டேன். நான் சத்தியமாகச் சொல்கிறேன்—ஒரு நாளும் மறக்க மாட்டேன்" என்றார் ஸ்ரீமான் கேங்.

"உங்களால் காப்பாற்ற முடியாத வாக்குறுதியைக் கொடுக்காதீர்கள்" என்று இப்போதும் கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அன்று பகலும் அன்று இரவும் அவள் அங்கேயே தங்கினாள். வேலையாட்கள் அவளுக்கு ஆகாரமும், தேநீரும் அங்கேயே கொண்டுவந்து கொடுத்தனர். அவர்களையெல்லாம் அவள் கதவைத் தாண்டி உள்ளே வர அனுமதிக்கவில்லை. ஸ்ரீமான் கேங் அவளுக்கு நன்றியைத் தெரிவிக்கவும் தமது மனைவியைப் பார்ப்பதற்கும் உள்ளே வந்தார். ஸ்ரீமதி கேங் தூங்கிக்கொண்டே -யிருந்தாள். கஞ்சி, மருந்து இவைகளை உட்கொண்டபோதுகூட அவள் கண்களைத் திறக்கவேயில்லை. கஞ்சியில் சில மூலிகைகளைப் போட்டுக் கொடுத்தாள் ஸ்ரீமதி ஊ. அவை இரத்தத்தைக் கனப்படுத்தக் கூடியவை. ஆதலால் இரத்தம் பெருகுவது நின்றது. விஷம் கலந்து விடாமலிருப்பதற்காக சில பொடிகளையும் கலந்து கொடுத்தாள். பண்டைய காலத்துப் புத்தகங்கள் சிலவற்றிலிருந்து அவள் இதையெல்லாம் படித்துத் தெரிந்து கொண்டிருந்தாள். எல்லோரும் அறிந்திருக்கக்கூடிய சாதாரண முறைகள் அல்ல இவை.

மெங், லின்யி இருவரும் தங்களுடைய தாயைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர். ஆனால் அவர்களைக்கூட அறைக்குள் வரவிடவில்லை அவள். தனக்கும் தனது சிநேகிதிக்கும் வேண்டிய காற்றை மட்டும்தான் ஜன்னல் வழியே வரும்படி விட்டாள். காற்று குளிர்ந்திருந்தது. கணப்புச் சட்டி வைத்தால்அதனால் காற்று அசுத்தமாகி விடுமென்று அதை அவள் வேண்டாமென்று கூறிவிட்டாள்.

பட்டு மெத்தைகளினூடே சுத்தமாகவும் நன்கு கழுவப்பட்டும் படுத்திருந்த ஸ்ரீமதி கேங் நன்றாகத் தூங்கினாள். மணிக்கொரு முறை கஞ்சியும், மருந்தும் கொடுக்கப்பட்டது. அவள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்த உயிரை மீண்டும் பெற்றாள்.

இரண்டாவது நாள் காலை, தனது சிநேகிதியின் நாடி சரியான நிலைக்கு வந்து விட்டது என்பதை நிச்சயமாக உணர்ந்ததும், ஸ்ரீமதி ஊ அவ்வறையைவிட்டுக் கிளம்பினாள். அறைக்கு வெளியே ஸ்ரீமான் கேங் தனியே உட்கார்ந்து காத்துக் கிடந்தார். அவர் குளிக்கவுமில்லை, உறங்கவுமில்லை, சாப்பிடவுமில்லை. எல்லா வெளிமரியாதைகளும், பாசாங்கும், வேஷங்களும் அவரை விட்டுச் சென்று விட்டன. அவர் கிலி பிடித்தவராய் சோர்ந்து நிக்கற்றவராய் உட்கார்ந்திருந்தார்.

ஸ்ரீமதி ஊ, இதைக்கண்டு அவர்மீது இரக்கம்கொண்டு, அங்கே கிடந்த மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"அவளுக்கு உயிரளித்ததற்காக நான் உங்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்" என்றார் ஸ்ரீமான் கேங் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு.

"அவளுடைய உயிருக்கு இம்மாதிரியான ஆபத்து மீண்டும் ஏற்படக் கூடாது" என்றாள் ஸ்ரீமதி ஊ இளகிய குரலில்.

"நான் சத்தியமாக..." என்று ஸ்ரீமான் கேங் ஆரம்பித்தார். ஸ்ரீமதி ஊ கையை உயர்த்தி அவரை நிறுத்தினாள்.

"அவள் மறுபடியும் குணமடைந்ததும், இந்த வாக்கை உங்களால் காப்பாற்ற முடியுமா? அப்படி முடிந்தாலும், அதை எவ்விதம் காப்பாற்றப் போகிறீர்கள்? நீங்கள் இங்கு மங்கும் வேசிகளைத் தேடிக்கொண்டு ஓடுவீர்கள். இதைக் கண்டு அவள் துக்கமடைவதற்காகவா, நான் அவளைப் பிழைக்க வைத்தேன்? இதனால் அவளுக்கு என்ன சுகம்? தனக்குக் குழந்தைகள் பிறக்காமலிருப்பது, வேறு எங் கெங்கோ குலம் நாதியற்ற குழந்தைகள் பிறப்பதற்காகத்தான் என்பதால் அவள் என்ன சந்தோஷம் அடையப் போகிறாள்? அவள் உங்களை ரொம்பவும் அதிகமாக நேசிப்பது அவளுடைய துர்ப்பாக்கியம் தான். அதாவது நீங்கள் அவளை நேசிக்காதிருக்கும் பட்சத்தில்..." என்று கூறிமுடித்தாள் ஸ்ரீமதி ஊ.

"நான் அவளை நேசிக்கத்தான் செய்கிறேன்" என்று வற்புறுத்தலாகக் கூறினார் ஸ்ரீமான் கேங்.

"ஆனால் எவ்வளவு தூரம்? அவளுடைய வாழ்க்கையை சுகமானதாகச் செய்யக்கூடிய அளவுக்கு அன்பு இருக்கிறதா?" என்று மேலும் குத்திக் கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

அவர் அவளை விழித்துப் பார்த்தார். அவளும் தன் கண்களைச் சிறிதும் தாழ்த்தவில்லை. அவளுடைய கரிய பெரிய விழிகள் அவர்மீது பதிந்திருந்தன. "எப்போதும் துக்கமாகவே இருந்து காலம் கடத்துவதைவிட அவள் இறந்து போவதே மேல்" என்றாள் மிக்க அமைதியாக.

"நான் அவளை இனித் துக்கமடையச் செய்ய மாட்டேன்" என்றார் அவர்.

அவருடைய பேச்சு தடுமாறியது. அவர் தமது உதட்டை இரண்டு விரல்களால் பிடித்து இழுத்துக் கொண்டார்.

"எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் இப்படி யிருக்குமென்று எண்ணியதே யில்லை. அவளும் எனக்குச் சொன்னதில்லை—" என்று தடுமாற்றத்துடன் கூறினார்.

"எதை?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ ஒன்றுமறியாதவளைப் போல. தனக்கு விளங்கிய போதிலும் அதை மனம் விட்டுச் சொல்வதால் அவருக்கும் நன்மை உண்டாகும் என்பதை உத்தேசித்து அவள் அவரைத் தூண்டிக் கேட்டாள்.

"எனக்கு வாழ்க்கை இவ்விதமானது என்பதே தெரியாது. என்ன கஷ்டம்—உயிரையேயல்லவா பலி கேட்கிறது?" என்றார் அவர் வருத்தமுற்ற குரலில்.

"ஆம், உயிரைக் கொடுத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. ஆனால் அவள் அதற்குமேலாக உங்களை நேசித்து வந்திருக்கிறாள்" என்றாள் அவள்.

"ஒவ்வொரு தடவையும் இதைப்போலவேயா அவள் கஷ்டப்படுகிறாள்?" என்று கேட்டார் அவர்.

"எதைப்போல?" என்று மீண்டும் கிண்டினாள் அவள்.

"மரணபயம் உண்டாகக் கூடியதாக..."

"எந்தப் பெண்ணுக்கும் பிரசவம் என்பது உயிருக்கே ஆபத்தைக் கொடுக்கக்கூடியதுதான். ஆனால் இப்போது அவள் நிலை, ஒன்று பிறப்பது அல்லது இறப்பது என்பதில் இருக்கிறது. நீங்கள் ஏதாவது ஒன்றைத்தான் எடுத்துக் கொள்ள முடியும். இரண்டையும் இனி வைத்துக்கொள்ள முடியாது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவர் தமது கையால் கண்களை மூடிக்கொண்டார். "நான் அவளுடைய உயிரைத்தான் பாதுகாக்க முயலுகிறேன். என்றைக்கும்—எப்போதும்—" என்று முணு முணுத்தார்.

அவர் கண்களை மூடிக்கொண்டிருந்தபோது அவள் சப்தமில்லாமல் எழுந்து அறையை விட்டுச் சென்றுவிட்டாள். அவரை இனி அவள் மறுபடியும் எங்கே சந்திக்கப்போகிறாள்? அவர்களுடைய வாழ்க்கையில் ஆண்களும் பெண்களும் ஒருவரை விட்டு ஒருவர் விலகியே இருந்து வருகின்றனர். அவருடைய முன்னிலையில் அவள் மீண்டும் வரப்போவதில்லை. அது அவசியமுமில்லை. முரட்டுத் தனமான, எளிய மனம் படைத்த இவர், பாவம், தம்முடைய மனைவியிடம் தாம் கொண்ட காதலைக் கண்டே பயமுற்றிருக்கிறார்!

ஸ்ரீமதி ஊ மிகவும் சோர்வுற்றவளாய் வீடு திரும்பினாள். ஆனால் இத்தனையெல்லாம் செய்ததற்காக அவள் மனம் சிறிதும் சோர்வடையவில்லை. மீண்டும் சுத்தமும் அமைதியும் நிறைந்த தனது பகுதியை அடைந்தது, அவளது ஆத்மாவுக்கே ஸ்நானம் செய்விப்பதுபோல் இருந்தது, அவளுக்கு! இங்கே ஆண்ட்ரூ அவளுடன் இருந்திருக்கிறார்! அவர் இங்கு நடந்து சென்றிருக்கிறார். எத்தனையோ விஷயங்களைப் பேசியிருக்கிறார்! அவள் அவரிடம் கொண்டிருக்கும் அன்பிற்கும் அறிவற்ற உள்ளத்தையுடைய ஸ்ரீமான் கேங் தம்முடைய மனைவியிடம் கொண்டிருக்கும் அன்பிற்கும் எவ்விதத்திலாவது சிறிதேனும் ஒற்றுமை இருக்கக்கூடுமா?

புத்தக அறையில் காலெடுத்து வைத்ததுமே, அங்கிருந்த இதமான உஷ்ணம் அவளை அரவணைத்துக் கொண்டது. இங், கணப்புச் சட்டியை பற்ற வைத்திருந்தாள். அதிலிருந்த தணல் தகதகவென்று எரிந்து கொண்டிருந்தது. அப்பாலிருந்த ஜன்னல் வழியாக சூரிய வெளிச்சம் உள்ளே வந்து நிறைந்தது.

அவள் மட்டும் இப்போது, காதலின் தத்துவத்தை நன்கு உணராதிருக்கும் பட்சத்தில் அவளால் ஒருகாலும் மேய்ச்சனின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாது. ஊற்றைச் சரீரத்தின் ஆபாசமும், இரத்தத்தின் நாற்றமும், மரணத்தின் பயங்கரமும் அவளைத் திணற அடித்திருக்கும். ஸ்ரீமான் கேங்கின் தட்டை போன்ற முகமும், அவருடைய அழுகையும், அவருடைய கனத்த சரீரமும், புத்தியற்ற மனமும், அவளுக்கு மிக்க வெறுப்பைத்தான் உண்டாக்கி யிருக்கும். ஆனால் பிரேமையானது தன்னை, பழைய நிலையிலிருந்து வெகு தூரத்திற்கு உயரே கொண்டு சென்று விட்டது என்பதை அவள் அறிந்தாள்.

இங், கடிந்துகொண்டே உள்ளே வந்தாள். "அம்மா, அம்மா, நீங்கள்...உங்களுடைய சட்டையைப் பாருங்கள். இரத்தக் கறை படிந்திருப்பதைப் பாருங்கள். மேலும் உங்கள் முகம் எப்படி வாடிப்போயிருக்கிறது..." என்று இரைந்தாள்.

அவள் குனிந்து தன்னையே பார்த்துக்கொண்டாள். தனது ஸேடன் சட்டையில் இரத்தக்கறை படிந்திருப்பதைக் கண்டாள். ஒரு துளி அசுத்தத்தைச் சகிக்க முடியாதவளாக இருந்த அவள், இப்போது, "நான் என்னையே மறந்து விட்டேன்" என்று மட்டும் வாய்க்குள் கூறிக்கொண்டாள்.

* * *

ஆனால் ஸ்ரீமதி ஊ, தன்னுள் ஏற்பட்டிருந்த மாறுதலை முற்றும் அறிந்து கொண்டாள் என்று சொல்ல முடியாது. அடுத்த கணம் தான் இன்னது செய்யப்போகிறோம் என்று நிச்சயமில்லாதவளாக இருந்தாள். அவள் இன்னும் ஒரு உறுதியான வழியைக் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் தான் ஏதோ ஒரு ஒளிமயமான பாதையில் சென்றுகொண்டிருப்பதாக உணர்ந்தாள். அப்பாதையில் அவள் சென்றுகொண்டிருக்கும் வரை எல்லாக் காரியங்களும் ஒழுங்காகவே நடைபெறும். அப்பாதையைவிட்டு ஏதாவது ஒருபுறம் இறங்கிச் சென்றாலோ, அவள் வழி தவறி விடுவாள். அப்பாதையில் ஒளி வீசும் விளக்கு ஆண்ட்ரூவிடம் அவள் கொண்டிருந்த அன்புதான். தான் அடுத்தபடி செய்யவேண்டியது இன்னதென்பதைத் தீர்மானிக்க, அவள் அவரை நினைக்க வேண்டியதுதான். உடனே அவளுக்கு அது உதயமாகிவிடும்.

மறுநாள், இங் சியூமிங்கின் சிறு குழந்தையை எடுத்து வந்தபோது அவளுக்கு அதனிடம் அன்பு பெருகியது. இந்தக் குழந்தையின் மூலமாக அந்நியளான சியூமிங்கை அவள் ஊ குடும்பத்தாருடன் பிணைத்திருக்கிறாள். இதற்கு முன்பு, இக் குழந்தை ஒரு புதிய சுமையாகத் தோன்றியிருந்ததாக அவளுக்குப் பட்டது. சியூமிங்கின் விஷயமே ஒரு பெருங் குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லையென்று எண்ணியிருந்தாள். ஆனால் இப்போது அச்சுமை, குழப்பமெதுவுமே இருப்பதாகத் தோன்றவில்லை. அவள் தாய் சேய் இருவரிடமும், ஆண்ட்ரூ இருந்தால் எப்படி நடந்துகொண்டிருப்பாரோ அதேபோல் நடந்துகொள்ளத் தீர்மானித்தாள்.

"சியூமிங் எங்கே?" என்று இங்கைக் கேட்டாள்.

"அவள் தோட்டத்தையும், சமையலறையையும் கவனிப்பதில் ஈடுபட்டிருக்கிறாள்" என்றாள் இங்.

"அவள் சந்தோஷமாக இருக்கிறாளா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"அவளால் என்றுமே சந்தோஷமாக இருக்க முடியாது. நாம் அவளை அனுப்பி விடுவது நல்லது. சோகமான முகத்தை எப்போதும் பார்த்துக்கொண்டிருப்பது ஒரு வீட்டிற்கு துர்பாக்கியத்தைத்தான் கொடுக்கும். பால் கொடுக்கும் தாதிகளின் பாலை அது முறித்து விடுகிறது. குழந்தைகள் சண்டித்தனம் செய்ய ஆரம்பிக்கின்றன" என்று பதிலளித்தாள் இங்.

"சியூமிங்கை என்னிடம் வரச்சொல்லு" என்ருள் ஸ்ரீமதி ஊ.

இது, ஸ்ரீமதி கேங்கின் வீட்டிலிருந்து அவள் வந்த மறு நாள். அவள் எழுந்ததுமே தன் தோழியின் உடல் நிலை எவ்விதம் இருக்கிறது என்பதைப் பார்த்துவர ஒரு ஆளை அனுப்பினுள். நல்ல செய்திகளே கிடைத்தன. ஸ்ரீமதி கேங் இரவு முழுவதும் நன்ருகத் தூங்கினுள். இரத்தம் ஒழுகுவது அடியோடு நின்றுவிட்டது. இன்று காலை அவள் ஒரு கிண்ணம் அரிசிக் கஞ்சியும், சிவப்புச் சர்க்கரையும் கலந்த ஆகாரத்தை உட்கொண்டாள். இப்போது மீண்டும் தூங்குகிருள் என்று செய்தி வந்தது.

அந்த நாள் அமைதியாக இருந்தது. வானம் சற்றே மூடியிருந்தது. முதல் நாள் இருந்த சூரிய ஒளி இன்றில்லே. நதியிலிருந்து வந்த வாடைக் காற்று, காற்றில் கலந்து வீசியது. ஸ்ரீமதி ஊவின் நாசியில் அக்காற்று சுறுசுறுவென்று ஏறியது.

அவளருகே ஒரு சிறிய தொட்டிலில் அக் குழந்தை படுத்துக்கொண்டு தன் கைகளோடு விளையாடிக்கொண்டு இருந்தது. அது சற்றைக்கொருதரம் தனது கைகளைப் பார்வையிலிருந்து இழந்துவிட்டது. அப்போது அதன் சிறிய முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றியது. மீண்டும் கைகளை வீசியபோது அவை அதன் பார்வைக்குக் கிடைத்தன. அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவை மறுபடியும் மறைந்து விட்டன. அந்த விளையாட்டை பார்த்துக்கொண் டிருந்த ஸ்ரீமதி ஊ, மெல்ல நகைத்தாள்.

'நம்முடைய வாழ்க்கை, எவ்வளவு சிறிது சிறிதாக ஆரம்பிக்கிறது. இதைப்போலதானே நானும் ஒரு நாள் தொட்டிலில் படுத்திருந்திருப்பேன். ஆண்ட்ரூவும் அப்படித் தானே' என்று எண்ணமிட்டாள். ஆண்ட்ரூவை ஒரு குழந்தையாக, சிறு குழந்தையாக இருப்பதைப்போல் கற்பனை செய்ய முயற்சித்தாள். அவருடைய தாயாரைப் பற்றி எண்ணி வியந்தாள். தாய் முதலில் இருந்தே தன் மகன் எப்போர்ப்பட்டவன் என்பதை அறிந்திருக்கவேண்டும். தன் மகன் தனது வாழ்வின் மூலம் மற்றவர்களையெல்லாம் உய்விக்கப் போகிறுன் என்பதை அவன் அறிந்திருப்பானோ!

அமைதியான இவ்வேளையில் சியூமிங், மூடியிருந்த இரு கதவுகளின் சந்தின் வழியே புகுந்து வந்து நின்ருள். சுவிராக

இருக்கிறது என்று கதவுகள் மூடப்பட்டிருந்தன. அவளை நிமிர்ந்து பார்த்தாள் ஸ்ரீமதி ஊ. கலகலப்பற்றிருந்த அக் காலைவேளையின் ஒரு பகுதியேபோல் காணப்பட்டாள் அப் பெண். அவள் முகத்தில் சோகமும் விரக்தியும் குடிகொண் டிருந்தன. அவளுடைய வெளுத்த முகம் உணர்ச்சியற்று இருந்தது. உதடு, கண்கள் யாவும் வெளுத்திருந்தன. அவளுடைய கண்ணிமைகள் கனத்தவையாய் அவளுடைய கரிய விழிகளை மூடின.

"உன்னுடைய பெண்ணைப்பார் அங்கே! இவள் கைகளைப் பார்ப்பதும் பிறகு அவற்றை இழப்பதும் மறுபடியும் பெறு வதுமாக யிருக்கிருள். இவ்விதம் செய்து என்னைச் சிரிக்க வைக்கிருள்!" என்ருள் ஸ்ரீமதி ஊ.

சியூமிங் அருகே வந்து நின்று குழந்தையைப் பார்த்தாள். அவள் அக்குழந்தையை நேசிக்கவில்லை என்பது ஸ்ரீமதி ஊவிற்குத் தெளிவாக விளங்கியது. அக்குழந்தை அவளுக்கு அந்நியளாகத் தோன்றியது.

இதுவே முன்னெரு சமயமாக இருந்திருந்தால் ஸ்ரீமதி ஊ இதைப்பற்றிப் பேசவே விரும்பியிருக்க மாட்டாள். அல்லது தன் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டிருப்பாள். இந்த மூடப்பெண் தன் குழந்தையை நேசித்தால் என்ன, நேசிக்காவிட்டால் என்ன, எனக்கென்ன போகிறது என்று தனக்குள் கூறிக்கொண்டு அதை ஒதுக்கித் தள்ளியிருப்பாள். ஆனல் இப்போது, "உன்னல் நீ பெற்ற குழந்தையையே நேசிக்காதிருப்பது சாத்தியமா? அப்படியும் இருக்க முடியுமா?" என்று கேட்டாள்.

"அவள் எனக்குச் சொந்தமானவளாகவே தோன்ற வில்லே" என்று மறுமொழி கூறினுள் சியூமிங்.

"ஆயினும் நீதானே அவளைப் பெற்றிருக்கிருய்!" என் ருள் ஸ்ரீமதி ஊ.

"அது என் இஷ்டத்துக்கு விரோதமாக நடந்தது" என் ருள் சியூமிங்.

இருவரும் மௌனமாக, அந்த அறியாக் குழந்தையைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தனர். வேருெரு நாளாயிருந் தால் ஸ்ரீமதி ஊ, தன் குழந்தையையே நேசிக்காதிருப்ப தற்காக அதன் தாயைக் கடிந்து கொண்டிருப்பாள். ஆனல் அன்பு இப்போதுதான் அவளுக்குப் பாடம் கற்பித்துக்

கொண்டிருந்தது. அவள் மௌனமாக அதை செவிமடுத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு முறை ஆண்ட்ரூ அவளுக்குக் கூறியிருக்கிறார். ஒரு இளம் பெண்ணுக்கும் ஊர் பேர் தெரியாத ஒருவனுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. தகப்பனரற்ற அந்தக் குழந்தையினிடம் ஒரு அபூர்வமான ஒளி வீசியது. அன்பினால் விளைந்த அமுத மல்லவா என்பதற்காக அக் குழந்தையை தெய்வப் பிறவி யாகக் கருதி ஊரார் வணங்கினர் என்று கூறினர்.

"ஏன் தகப்பனரின் பெயர் தெரியவில்லை?" என்று கேட் டாள் அவள்.

"ஏனெனில் அப்பெண் அவளுடைய பெயரை வெளியிட வில்லை" என்றார் ஆண்ட்ரூ.

"யார் அவர்களை ஆதரித்துக் காப்பாற்றினர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"ஒரு புண்ணியாத்மா, ஜோஸப் என்று அவர் பெயர். அவர் அவர்களிடம் ஒன்றையும் எதிர்பாராமல், அவர்களைப் போற்றிக் காப்பாற்றினர்" என்றார்.

"அக் குழந்தை பிறகு என்னவாயிற்று?" என்று கேட் டாள் அவள்.

"அவன் சிறு வயதிலேயே இறந்து விட்டான். ஆனால் மற்றவர்கள் அவனை மறக்கவே யில்லை" என்று பதிலளித்தார் ஆண்ட்ரூ.

அவர் கூறியதை நினைத்துக் கொண்டதும் அவள் மனத் தில் பளிச்சென்று ஒரு எண்ணம் தோன்றியது. சியூமிங் ஏன் இக் குழந்தையை நேசிக்கவில்லை? அவள் அதனுடைய தந்தை யான ஸ்ரீமான் ஊவை நேசிக்கவில்லை என்பதைத்தவிர வேறு காரணம்? அவளுக்குத் தான் ஸ்ரீமான் ஊவை நேசிக்க வில்லை என்பது எப்படித் தெரியும்? அப்படியானால் அவள் நேசிக்கும் படியான வேறு ஒருவர் இருக்க வேண்டுமல்லவா? அதை அவள் அறிந்திருக்க வேண்டுமல்லவா? அவள் சட் டென்று சியூமிங்கைப் பார்த்து, "நீ யாரைக் காதலிக்கிறாய்?" என்று கேட்டாள்.

அவ் விளம்பெண்ணின் முகம் உடனே குப்பென்று சிவந்ததைக் கண்டு அவளுக்கு வியப்புண்டாகவில்லை. அவ ளுடைய சிறு காதுகள் கூட சிவந்து போயின.

"நான் ஒருவரையும் காதலிக்கவில்லை" என்று அவள் பச்சையாகப் புளுகினாள். ஸ்ரீமதி ஊ நகைத்தாள்.

"நான் எப்படி உன்னை நம்புவது? உன்னுடைய கன்னங் களும் காதுகளும்கூட உண்மையைப் பறை சாற்றுகின்ற னவே! அதை வாயால் சொல்ல அஞ்சுகிறாயா? இந்தக் குழந்தையிடம் உனக்கு அன்பு இல்லை. அப்படியானால் உனக்கு இதன் தந்தையிடம் அன்பில்லை என்பது தெளிவாக விளங்குகிறது. சரி, அது அப்படியே யிருக்கட்டும். அன்பைப் பலாத்காரத்தாலோ, கெஞ்சுவதாலோ வரவழைக்க முடி யாது. அது தெய்வத்தினிடமிருந்து, சற்றும் எதிர்பாராத விதத்தில், எதிர்பாராத இடத்தில் அனுப்பப்பட்டு விடுகிறது. அதற்காக நான் உன்னைக் குறை கூறமுடியுமா? இந்தத் தவ றெல்லாம் என்னால் ஏற்பட்டதுதான். ஆனால் நான் உன்னை இங்கு கொண்டு வந்தபோது எனக்கு அன்பைப் பற்றிச் சிறிதும் தெரியாது. மிருகங்களைப் போலவே ஆண் பெண்கள் ஒருவரோடொருவர் ஒத்து வாழ முடியுமென்று எண்ணி விட்டேன். மிருகங்களைப் போலவே, உள்ளத்தின் உணர்ச்சி களில்லாமல் வாழ்க்கை நடத்துவதென்றால் ஆண் பெண் இருவரும் ஒருவரை யொருவர் நஞ்சென வெறுக்க ஆரம்பிக் கிறார்கள் என்பது எனக்கு இப்போதுதான் விளங்கியது. ஏனெனில் நாம் மிருகங்களல்லவே! ஒருவரை யொருவர் தொடாமல்கூட, ஒருவரை யொருவர் பாராமலே கூட காதல் கொள்ள முடியும் நம்மால்! சரீரம் மறைந்த பிறகு கூட நம்மால் ஒருவரைக் காதலிக்க முடியும்! நம்மை ஒருவரோடு ஒருவரைப் பிணைப்பது இந்தச் சரீரமல்ல" என்று கூறி முடித்தாள் ஸ்ரீமதி ஊ.

இது எத்தகைய விசித்திரமான வார்த்தைகள்! அதுவும் எப்போதும் தெளிவாகவும் நடைமுறைக்கு ஒத்ததையும் பேசும்படியான ஸ்ரீமதி ஊவிடமிருந்து இத்தகைய வார்த்தை கள் வருவதென்றால் அது நம்பக்கூடியதாக இல்லையே! சியூ மிங், அவளை ஒரு பேயையோ பிசாசையோ பார்ப்பதுபோல், விறைத்துப் பார்த்தாள். ஆனால் ஸ்ரீமதி ஊ உண்மையில் பேயோ, அல்லது பிசாசோ இல்லை. அவளுடைய கண்களில் ஒளி வீசியது. அவளுடைய மெல்லிய தேகத்தில் சக்தியும் தென்பும் காணப்பட்டது. பொதுவாக, அவள் ஏதோ ஒரு புதிய அனுபவமடைந்து வருகிறாள் என்பது மட்டும் சியூமிங் கிற்குப் புலப்பட்டது.

"சொல்லு, உன் மனதில் இருக்கும் அப்பெயரை என்னி டம் சொல்லு" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"எனக்கு வெட்கத்தால் உயிரே போய்விடும்போல் இருக்கிறது" என்ருள் சியூமிங் தனது ஆடையின் முனையை இரு விரலால் திரித்துக் கொண்டே.

"நீ அதற்காக அவமானம் அடையாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன்" என்ருள் ஸ்ரீமதி ஊ கருணையுடன். இவ்விதம் வற்புறுத்தப்பட்டதால், சியூமிங் மிகுந்த தயக்கத்துடனும் சந்தேகத்துடனும் குழறியபடி பேசினுள். "நீங்கள் என்னைப் பெரிய எஜமானருக்கு மனைவியாகக் கொடுத்தீர்கள். ஆனால்..." என்று கூறி நிறுத்தினுள்.

"ஆனால் வேறு ஒருவருக்கு உன்னைக் கொடுத்திருந்தால் நன்ருக இருந்திருக்கும் அல்லவா?" என்று மேலே கூறி ஸ்ரீமதி ஊ அவளுக்கு உதவி செய்தாள். சியூமிங் தலையை ஆட்டினுள்.

"அவன் இந்த வீட்டிலா இருக்கிருன்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. இதற்கும் சியூமிங் "ஆம்" என்று தலையை அசைத்தாள்.

"அவன், என்னுடைய பிள்ளைகளில் ஒருவனு?" என்ருள் ஸ்ரீமதி ஊ. இதற்கும் சியூமிங் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு விசிக்கலானுள். "அவன் பெங்மோ அல்லவா?" என்ருள் ஸ்ரீமதி ஊ. அதை அவள் முன்னமே அறிவாள். சியூமிங் விசித்துக் கொண்டே யிருந்தாள்.

"இது என்ன குழப்பம்! என்ன சிக்கல்! ஆண் பெண்களுக்கிடையேதான் எத்தகைய தாறுமாருன சம்பவங்கள் நடைபெறுகின்றன!" என்று ஸ்ரீமதி ஊ தனக்குள் சொல்லிக் கொண்டாள். இதெல்லாம், அவளுடைய முட்டாள்தனத்தினுல், அன்பில்லாமல் அவள் செய்த காரியத்தால் ஏற்பட்ட பலன்!

அவள் சியூமிங்கை நோக்கி, "நீ இனி அழாதே. இதெல்லாம் நான் செய்த பாவத்தினுல் விளைந்த விளைவு. நான் எல்லாவிதத்திலாவது இதற்குப் பரிகாரம் செய்தாக வேண்டும். ஆனால் இன்னும் எனக்கு, நான் செய்ய வேண்டியது இன்னதென்று தெளிவாக விளங்கவில்லை" என்ருள்.

இதைக் கேட்டதும் சியூமிங் மேலே விழுந்து தனது கைகளின் மீது தலையை வைத்துக் கொண்டு "வெட்கத்தால் நான் உயிரைவிட்டு விடவேண்டும். என்னை சாகவிடுங்கள். என் போன்ற ஒரு ஜன்மத்தால் ஒருவருக்கும் நன்மை கிடையாது" என்று முனகினுள்.

ஸ்ரீமதி ஊ அவளை எழுப்பியவாறு, "எந்தப் பிராணியாயினும் அதனுல் ஒரு பிரயோஜனமாவது இல்லாமற் போகாது. நீ இதைத் தெரிவித்ததற்காக நான் மகிழ்ச்சி யடைகிறேன். எனக்குத் தெரிந்திருப்பதே நல்லது. நான் உன்னை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வீட்டிலேயே இன்னும் கொஞ்ச நாள் பொறுமையாக இரு. எனக்கு ஒரு வழி காட்டப்படும். அப்பொழுது உனக்காக நான் செய்ய வேண்டியது இன்னதென்பதை அறிந்து கொள்வேன். அதுவரை, நான் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கும் இந்த அலுவலைக் குழந்தைகளைக் கவனித்து வா. நீ எனக்காக அவர்களைக் கவனித்துப் பராமரித்தாயானுல் எனக்கு மிகவும் உபயோகமாக யிருக்கும். அவர்கள் இங்கிருக்கிறார்கள் பாவம், எனக்கு அவர்களைக் கவனிக்கப் போதிய நேரம் இருப்பதில்லை" என்ருள்.

அவர்களைக் குறித்துப் பேச வந்ததுமே சியூமிங் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "நான் அந்த அலுவலுக்கு வேண்டியதைக் கவனித்துச் செய்கிறேன். அம்மா! ஏன் செய்யக்கூடாது? அவர்கள் என்னுடைய சகோதரிகள் அல்லவா?" என்று கூறி தொட்டிலில் கிடந்த தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். "இந்தக் குழந்தையையும் நான் என்னுடு வைத்துக் கொள்கிறேன். இவரும் ஒரு அலுவல் தான்—ஏனெனில் இவரைப் பெற்றவளால்கூட இவரை நேசிக்க முடியவில்லை அல்லவா? துர்பாக்கியம் பிடித்த பெண்!" என்ருள்.

ஸ்ரீமதி ஊ ஒன்றும் கூறவில்லை. சியூமிங்கிற்கு இன்பம் எவ்விதம் கிடைக்கக் கூடும் என்பது அவளுக்குத் தெரியவில்லை. காலம்தான் அதைக் கண்டுபிடித்துச் சொல்லவேண்டும்!

* * *

நாட்கள் சென்றன. வாரங்கள் ஓடின. மாதங்கள் கழிந்தன. வீட்டின் மத்திய பாகத்தில் குடியிருந்த ஸ்ரீமதி ஊ குடும்ப விஷயங்களையெல்லாம் கவனித்து மேற்பார்த்து வந்தாள்.

ஒரு நாள், 'நான் மட்டும் கொடியவளாக யிருந்தால், அது ஒரு எட்டுக்கால் பூச்சி தன்னைச் சுற்றி வலை விரித்து வைப்பதைப்போல் நானும் இவ்வீட்டை வலைபோட்டு பிடித்து வைப்பது போலிருக்கும்' என்று எண்ணமிட்டாள்.

மூங்கில் மரங்களிலிருந்து ஒரு பட்சி கூவியது. இதன் புதிய குரலைக் கேட்டு அவள் அறிந்து கொண்டாள். வருஷத்திற்கிருமுறை இந்தியாவிலிருந்து வரும் கருங்குயில்கள் இவ்

வழியே செல்வது வழக்கம். அதன் குரலில் இசையின் அழகு இருந்தபோதிலும் இனிமை இருக்கவில்லை. வசந்த ருது வரப் போவதை இப் பறவை அறிவித்தது. அவ்வளவுதான்.

அவள் மேலும் சிந்தித்தாள். 'நான் கெட்டவள் இல்லை என்பது எனக்கு எப்படித் தெரியும்? நான் நல்லது என்று நினைப்பது நிஜமாகவே நல்லதுதான் என்பது என்ன நிச்சயம்?'

வழக்கம்போல் இந்தக் கேள்வியையும் தன் நினைவில் உறைந்து வரும் ஆண்ட்ரூவிடம் கேட்டாள்.

அவளுக்கு நன்றாக நினைவிருந்தது. ஒரு நாள் அவர்கள் இருவரும் இதே புத்தக அறையில் உட்கார்ந்திருந்தனர். நன்கு இழைக்கப்பட்டு வேலைப்பாடுகளுடன் கூடியிருந்த அம்மேஜையின் ஒரு புறத்தில் அவளும் மற்றொரு பக்கத்தில் அவருமாக உட்கார்ந்திருந்தனர். ஆனால் எதிரெதிராக உட்கார்ந்தால் ஒருவர் முகத்தை ஒருவர் நேருக்கு நேர் பார்த்துக்கொண்டிருக்க நேரிடுமென்று இரண்டு நாற்காலி களையும் வாசற்கதவை நோக்கி யிருக்கும்படி போட்டுக்கொண் டனர். அந்நாளும் இன்றைய தினத்தைப்போல இவ்வளவு பிரகாசமாகவும் அழகாகவும் இருந்தது. ஆகாயம் நிர்மலமாக இருந்தது. காற்று சுத்தமாக யிருந்தது. சூரிய ஒளி மிகுந்த கிரணங்கள் வாசலில் இருந்த கற்பாறைகளின் மீதுபட்டு அதன் கரிய வர்ணத்திலிருந்து ஊதா, சிவப்பு, வெண்மை முதலிய வர்ணங்கள் தோன்றும்படிச் செய்தன. அவளுடைய ஆர்ச்சிட்கள் கரும்சிவப்பு வர்ணமுடைய பூக்களைப் புஷ்பித் திருந்தன. குளத்திலிருந்த பொன்வண்ணமுடைய மீன்கள் சூரியனின் சாய்வான கிரணங்கள் தண்ணீரில் விழுவதைக் கண்டு துள்ளிக் குதித்து ஆனந்தப் பரவசமடைந்தன.

ஆண்ட்ரூ அவளுக்கு மனிதனின் ஆரம்பத்தைப் பற்றிய பழைய கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார். முதலில் மனிதன் தீமையைச் செய்ய ஆரம்பித்தது எப்படி என்று கூறினார். அது ஈவ் என்ற ஒரு பெண்மணியால் ஏற்பட்டது என்றும் கடவுளால் சாப்பிடக் கூடாதென்று தடுக்கப்பட் டிருந்த ஒரு பழத்தை அவள் அவனுக்குக் கொடுக்க அதி லிருந்து தீமைகள் யாவும் உண்டாயின என்றும் கூறினார் அவர்.

"அந்தப் பழத்தைச் சாப்பிடக் கூடாதென்று விலக்கப் பட்டிருந்தது அவளுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவி னாள் ஸ்ரீமதி ஊ.

"ஒரு கெட்ட ஆவி பாம்பின் உருவில் வந்து அவளுக்கு அதைக் கூறிற்று?" என்றார் ஆண்ட்ரூ.

"ஏன் அது அந்த 'மனிதனிடம் சொல்லாமல் அவனிடம் மட்டும் கூறிற்று?" என்று கேட்டாள் அடுத்தபடியாக.

"ஏனெனில், பெண் உள்ளமும் மனமும் மனிதனிடம் பதிந்திருக்கவில்லை யென்பதை அது அறிந்து கொண்டது. அவளுடைய உள்ளம் வாழ்க்கையை எப்படி நீடித்திருக்கச் செய்யமுடியும் என்பதிலேயே ஈடுபட்டிருந்தது. மனிதனு டைய மனமோ தன்னைப் பற்றிய சிந்தனையிலேயே மூழ்கி யிருந்தது. அவன் அதிலேயே சந்தோஷமடைந்து இருந்தான். நமக்கு இந்தப்பெண் இருக்கிறாள், இந்தத் தோட்டம் இருக் கிறது. இதற்குமேல் நமக்கு வேண்டியது என்ன யிருக்கிறது என்று எண்ணினான். ஆனால் பெண், இத் தோட்டத்தை மேலும் அழகாக்குவது எப்படி, இன்னும் அதிக இடமும் பொருள்களும் இருந்தால் எவ்வளவு நன்றாக யிருக்கும் என்று நினைப்பவளாக யிருந்தாள். ஏனெனில் தன்னுடைய உடலி லிருந்து வேறு எத்தனையோ ஜீவன்கள் உதிக்கக் கூடும் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அவர்களுக்காக அவள் எதிர்காலத்தைப் பற்றிய யோசனையிலும் திட்டம் வகுப்ப திலும் ஈடுபட்டாள். அவள் தன்னைப் பற்றி எண்ணவில்லை. தான் பிறப்பிக்கப்போகும் ஜீவன்களை உத்தேசித்து அவ் விதம் நடந்து கொண்டாள். அதற்காக அவள் மயக்கப் பட்டாள். அவர்களுக்காக அவள் எக்காலத்திலும் மயங்கத் தான் செய்வாள்" என்று கூறினார் ஆண்ட்ரூ.

அவள் அவரைப் பார்த்தாள். அவருடைய கம்பீரமும், சாந்தமும், சோகமும் நிறைந்த கரிய விழிகள் அவளுக்கு இப்போது நன்றாக ஞாபகம் யிருந்தது. "உங்களுக்கு எப்படி பெண்களைப் பற்றி இவ்வளவு நன்றாகத் தெரிகிறது?" என்று கேட்டாள்.

"நான் தனியாக வாழ்ந்து வருவதால்தான். நான் சீக்கிரத்தில் என்னை விடுவித்துக்கொண்டு விட்டேன்" என்று பதிலளித்தார் அவர்.

"எதற்காக உங்களை நீங்கள் தனியாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்? வாழ்க்கையின் வெள்ளத்திலிருந்து நீங்கள் ஒருவர் மட்டும் ஏன் தப்பிச் செல்ல வேண்டும்? நாம் எல்லோரும் அதைச் சேர்ந்தவர்கள்தானே? அதிலிருந்து ஒருவர் தம்மைத் தனியாகப் பிரித்துக் கொள்வது சரியாகுமா?" என்று கேட்டாள் அவள்.

இத்தனை நாட்களாக அவள் அவரை அறிந்ததில் இன்று தான் அவர் சந்தேகத்தில் ஆழ்ந்ததை அவள் பார்த்தாள். "நீங்கள் கேட்ட இந்தக் கேள்விக்குத்தான் என்னால் எப் போதும் பதில்கூற முடிந்ததில்லை. முதன் முதலில் நான் என்னை அகங்காரத்திலிருந்து விடுவித்துக் கொண்டேன். ஆம். அதை நான் அறிவேன். அதை நான் ஒப்புக்கொள்ளவும் செய்கிறேன். மற்றவர்களைப் போல் நானும் கல்யாணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற வேண்டிய நிலையில் யிருந்தபோது ஒரு பெண் என்னைக் காதலித்ததைப்பற்றி யோசித்துப் பார்த்தேன். மனிதர்களுடைய தன்மைகளை வெகு விரைவில் ஊடுருவிப் பார்த்து அறிந்து கொள்ளும் சக்தியை எனக்குக் கடவுள் அளித்திருந்தார். அதன் காரண மாக என்னால் என்னுடைய உடலுக்குரியதான இன்பங்களை அனுபவிக்கக் கூடமுடியாமற் போயிற்று. நான் அவளைப்பற்றி சிந்தித்துப் பார்த்தபோது அவளும் சுவைப்போல் மற்ற உயிர் களைப் பிறப்பிக்கும் இட்டங்களுடன் இருந்ததை நான் கண்டு கொண்டேன்—அதற்கு நானும் ஒரு சிறு உதவி செய்த போதிலும் அவள்தானே அதை தன் உடலிலிருந்து சிருஷ் டிக்கப் போகிறவள். ஆகவே நான் என்னுடைய இந்தச் சிறு கடமையையும் உடலிற்குக் கிடைக்க கூடியதான இந்த துச்ச மான இன்பத்தையும் எண்ணிப் பார்த்தேன். இதற்காக என் வாழ்நாள் முழுவதையும் பூமியைக் கொத்துவதிலும் பண் படுத்துவதிலும் தோட்டத்தைச் செழிக்கச் செய்வதிலும், மேலும் மேலும் செல்வம் ஈட்டுவதிலுமே ஆதாமைப்போல் பாடுபட்டுக் கழிக்கவேண்டி வரும். ஆகவே அவள் உண்மை யில் என்னைத்தான் நேசித்தாளா என்று ஆலோசித்தபோது— ஒருவேளை அப்படியும் இருந்திருக்கலாம்—ஆனால் இந்த கணத் தில் அவள் நம்மை நேசித்தபோதிலும் அதுகூட தன்னுடைய உண்மையான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற் காகத் தான் என்று தோன்றியது. ஆதலால், நான், 'இவளுக்குப் பணி செய்வதைக் காட்டிலும் கடவுளுக்குப் பணி செய்வது சிறந்ததல்லவா? நான் நேர்மையாக நடப் பதையும் பணிவாக வாழ்வதையும் தவிர அவர் என்னிட மிருந்து வேறென்னதையும் கேட்க மாட்டாரல்லவா?' என எண்ணினேன். அன்றைய தினமே நான் துறவியாகிவிட் டேன்" என்றார்.

"நீங்கள் இத்தனை காலமும் சந்தோஷமாக யிருந்து வந்திருக்கிறீர்களா"? என்று கேட்டாள் சற்றே ஏளனத் துடன் அவள்.

"என் மனத்தை நான் கட்டுப்படுத்தி விட்டேன்" என்று பதிலளித்தார் அவர்.

புத்தக அறையில் இப்போது அவள் தனியாக உட்கார்ந் திருந்தாள். அவருடைய நினைவு அங்கேதான் நன்றாக இருக்கு மென்று அவள் இப்போதெல்லாம் அங்கேயே உட்கார்ந்து கொள்வது வழக்கமாகி விட்டது. ஆண் பெண்களின் இயற் கையைப் பற்றிச் சிந்தனை செய்தாள் அவள். அந்த ஆதிப் பெண் ஏவாளை குறைகூறுவது தவறு. அவள் என்ன செய்வாள்? அவளிடமல்லவா வாழ்வைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற முடிவற்ற ஆசை படைக்கப்பட்டிருக்கிறது? மனிதனைத் தனியே விட்டால் அவன் தன்னைத் தவிர மற்றதை பற்றி எண்ணமாட்டான். பெண்ணைத் தன்னில் ஒரு பாக மாகக் கருதி அவளிடமிருந்து கிடைக்கும் சுகத்தையும் இன்பத் தையும் பெற்றுக் கொள்வதோடு திருப்தியடைந்துவிடுகிறான். ஆனால், அவளோ, இத்தனை அறியாமைக்கும் மடமைக்கும் இடையே யிருந்தும், அவனைப் பயன்படுத்திக் கொண்டு, மீண்டும் மீண்டும் வாழ்கையை துளிரவைப்பதிலேயே ஈடுபட்டு வந்திருக்கிறாள். இருவரும் பிரபஞ்சம் நடைபெறுவதற்காக உபயோகப் படுத்தப்படும் இரு சாதனங்களேயன்றி வேறல்ல. அதில் பெண்ணொருத்தியே, அவ்வுண்மையை அறிந்தவளாய், அதன் பொருட்டுத் தன்னை அர்ப்பணம் செய்துவிடுகிறாள்.

அவள் ஆண்ட்ரூவினிடம், "இங்குதான், ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே, ஏன் உங்களுக்கும் எனக்கும் இடையே கூட வித்தியாசம் உண்டாகிறது" என்றாள்.

மந்தமாருதம் லேசாக வீசிற்று. காற்று பலமாக வீச வில்லை. ஒரு சிறிய, நீலநிற வாலுடன் கூடிய பல்லி கவற்றுக் கும் தரைக்கும் நடுவே இருந்த ஒரு சந்திலிருந்து வெளியே வந்து சூரிய வெளிச்சத்தில் நின்றது. அவள் அசைவற்று உட்கார்ந்திருந்ததால், அது அவளையும் அவ்வறையின் ஒரு பாகமாக எண்ணி, தன்னுடைய அற்பமான முறையில் சுதாரகமாக இந்தப்புறமும் அந்தப் புறமுமாக தனது தலையையும் வாலையும் ஆட்டிக்கொண்டு விளையாட ஆரம் பித்தது. அதனுடைய பளபளப்பான கண்கள் சுவரைப் பார்வையுடன் காணப்பட்டது. அவள் அசைவில்லை. ஒரு வீட்டைச் சுற்றி சாதுவான பிராணிகள் பல வசிப்பது நல்லது தான். அவை அவ்வீட்டை சால்வதாமாக எண்ணி அங்கே குடியிருக்கின்றன.

பல்லி விளையாடிக்கொண்டே யிருந்தது. அவள் சித்தனை செய்தபடி அசையாது உட்கார்ந்திருந்தாள். இதனால் தான் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே இத்தனை துன் பங்கள் நேருகின்றன. ஆண் தன் வாழ்க்கையை வாழ்வதற்

குத்தான் பிறந்திருக்கிறோம் என்று நினைக்கிறான். ஆனால் பெண் தனக்காகத் தான் வாழ்வதில்லை என்பதை நன்றாக அறிகிறாள். மற்ற உயிர்களைப் பிறப்பிப்பதுதான் தன்னுடைய வாழ்வின் தத்துவம் என்பதை அவள் உணர்கிறாள். ஆண், பெண்ணைத் தன்னில் ஒரு பாகமாகக் கருதி நேசிக்கிறான். ஆனால் பெண்ணோ, வாழ்க்கையின் இக் கடமைக்காக அன்றி அவனை வேறு எதற்காகவும் நேசிப்பதில்லை. இந்தக் காரணத்தால் மனிதன் எப்போதும் அதிருப்தி யுடையவனாகவே யிருக்கிறான். அவனால் பெண்ணைப் பூரணமாக தனக்கே உரியவளாகச் செய்துகொள்ள முடிவதில்லை. ஏனெனில் அவனுடைய ஆசையைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த வேறொரு பொருளால் அவள்தான் ஏற்கனவே ஆட்கொள்ளப் பட்டிருக்கிறாளே!

அவனைப் படைத்தவள்கூட அவளே யல்லவா? அதன் காரணமாகத் தானே என்னவோ அவன் அவளை ஒருபோதும் மன்னிப்பதில்லை! அவளை வெறுத்து, ரகசியமாக அவளுடன் போராடுகிறான். அவளை அடக்கி யாண்டு வீட்டிற்குள் வைத்துப் பூட்டுகிறான்! அவளுடைய பாதங்களையும் இடுப்பையும் கட்டிப் போடுகிறான்! அவளுடைய சிறப்புக்களையும் சாமர்த்தியங்களையும் வெளிவர விடாது தடுக்கிறான்! கல்வியறிவைப் புகட்டாதிருக்கிறான்! தான் இறந்ததும் அவள் விதவையாக வேண்டும் என்று சட்டம் போடுகிறான்! சில சமயம் அவளையும் கூடவே வைத்து எரித்துவிட்டு, அவளுடைய பக்தி சிரத்தையால் அவள் அவ்விதம் செய்கிறாள் என்கிறான். இவ்விதமெல்லாம் அவன் அவளை பழிவாங்குகிறான் போலும்! ஸ்ரீமதி ஜா ஆண்களைப்பற்றி எண்ணி, வாய் விட்டுச் சிரித்தாள். பல்லி உடனே ஓடி மறைந்து விட்டது.

ஒரு முறை ஆண்ட்ரூ இங்கே அவள் எதிரே உட்கார்ந்திருந்தபோது அவள், "ஆணிடம் ஆண்மையைத் தவிரவும் பெண்ணிடம் பெண்மையைத் தவிரவும் வேறொன்றுமில்லையா? அப்படியிருக்கும் பட்சத்தில் அவர்களால் ஒரு போதும் இணங்கி வர முடியாது. ஏனெனில் அவன் தனக்காக வாழ்கிறான். அவள் உலகத்திற்காக வாழ்கிறாள். இவை ஒன்றிற்கொன்று விரோதமானது" என்றாள்.

ஆண்ட்ரூ ஆழ்ந்த யோசனையோடு கூறினார். "கடவுள் நம்முடையதென்று தனியாக எல்லோருக்கும் ஒன்றை கொடுத்திருக்கிறார். அதில் மனிதத் தன்மை மட்டுமே இருக்கிறது. ஆண் பெண் என்ற பேதங்களுக்கு அப்பாற்பட்டது அது. அதைத்தான் ஆத்மா என்கிறோம். அது என்றும்

மாறாதது. மாற்றக் கூடாதது. அதன் மூலம் புத்தி, அறிவு எல்லாவற்றையும் நாம் பெறுகிறோம்" என்றார்.

"ஆனால் ஒரு பெண்ணினுடைய மூளை ஆணினுடைய தற்குச் சமமானதா?" என்று கேட்டாள் அவள்.

"சரீரத்தின் தளைகளிலிருந்து விடுபட்டால் எவருடைய மூளையும் மேம்பட்டதாகி விடுகிறது. பெண் தன்னுடைய பெண்மையின் கடன்களை நிறைவேற்றுவதற்காக மட்டிலும் அறிவை உபயோகப் படுத்திக் கொள்ளலாம். ஆண், பெண்ணைத் தொடர்ந்து சென்று அவளைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்வதற்கு மட்டும் உபயோகிக்கலாம். மூளை என்பது ஒரு கருவிதானே! அதை ஒருவர் தமது இஷ்டப்படி எவ்விதமாக வேண்டுமானாலும் உபயோகப் படுத்திக்கொள்ளலாம். நான் இப்போது ஒரு கூரிய கத்தியால் ஒரு காயை நறுக்குகிறேன் என்றால் அதனால் அக் கத்தியைக்கொண்டு கடவுளின் அழகிய உருவத்தைச் செதுக்க முடியாது என்று பொருளாகுமா? கடவுளின் உருவம் என் மனத்திலிருந்து என்னுடைய அகக் கண்ணுக்கு அவருடைய காட்சியும் கிடைத்திருந்தால், நான் என்னுடைய சாதனத்தை, அதாவது மூளையை உபயோகப் படுத்தி அதனைத் தெளிவாக உருவாக்கலாம்" என்று கூறினார் ஆண்ட்ரூ.

"அப்படியாயின் ஆத்மா என்பது ஆண் பெண் என்ற பேதங்களுக்கு அப்பாற் பட்டதல்லவா?" என்று கூறினாள் அவள்.

"ஆம், அப்படித்தான்" என்றார் அவர்.

"ஆத்மாவின் குணாதிசயங்கள் என்ன?" என்று அவள் அவரை மேலும் துருவினாள்.

"ஆத்மா என்பதை நாம் வேறு ஒருவரிடமிருந்தும் வம்ச மூலமாகவோ, வேறு எதன் மூலமாகவோ அடைவதில்லை. எனக்கே உரித்தான ஒரு இயல்பையும் தோற்றத்தையும் அது எனக்குக் கொடுக்கிறது. எவ்வளவோ பேரை நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். எவ்வளவுதான் ஒற்றுமையா யிருந்த போதிலும் என்னைப் போலவே முற்றிலும் இருக்கும்படியான ஒருவனை என்னால் கண்டுபிடிக்கவே முடியாது. இத்தனை தன்மையை அளிப்பதுதான் ஆத்மா. எனக்கு என்று கடவுளால் அளிக்கப்பட்ட வரம் அது" என்றார் ஆண்ட்ரூ.

"கடவுளின்மீது எனக்கு நம்பிக்கை இல்லை யென்றால்...?" என்று வினவினாள் ஸ்ரீமதி ஊ.

"நீங்கள் நம்புவதும் நம்பாததும் ஒரு முக்கியமான விஷய மல்ல. நீங்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே! உங்களைப் போன்ற ஒரு பிரகிருதியை நீங்கள் எங்கும் காணமுடியாது. இது உங்களுக்கு மட்டுந்தான் என்பதல்ல. மிக மிக கேவலமான ஒரு மனிதனை, அழகற்ற ஒரு ஜீவனை எடுத்துக்கொண்டால் அதற்குக் கூட இந்த அபூர்வமான பாக்கியம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த நியதி ஒரு அரிய உண்மை என்பதை நீங்கள் அறிவீர்கள். இதை அறிந்து கொண்டாலே போதுமானது! இதைக் கொடுத்தவன்மீது நம்பிக்கை வருவதற்கு அவசரப்பட வேண்டியதில்லை. கடவுள் அறிவற்றவரல்ல! நாம் ஒன்றை நம்ப வேண்டுமென்றால் அதைக் கண்ணால் பார்த்து, காதால் கேட்டு, கையால் தொட்டுப் பார்த்தால் தான் நம்ப முடியுமென்று எண்ணுகிறோம். ஒரு குழந்தையிருக்கிறது! அது தன் ஐம்பொறிகளால் எதை எதை உணருகிறதோ அதைத்தான் நம்புகிறது. ஆனால் இன்னும் எத்தனையோ அறிவைக் கொடுக்கக் கூடிய சாதனங்கள் இருக்கின்றன. ஜீவன் வளர வளர அவைகளும் முதிர்ச்சியடைகின்றன. அவை முற்றிலும் பக்குவமடைந்ததும் நாம் ஒரு காலத்தில் நமது ஐம்பொறிகளை நம்பியதுபோல் அவற்றை அப்போது நம்ப ஆரம்பிக்கிறோம்" என்று கூறினார் ஆண்ட்ரூ.

இவ் வார்த்தைகளை நினைத்துக் கொண்டு, அவள் மேஜைக் கப்பாலிருந்த அந்த நாற்காலியைப் பார்த்தாள். அது சூனியமாக இருந்தது. அவளுக்கு அவருடைய குரலும் கேட்கவில்லை. ஆனால் அவருடைய முகம், அந்த கம்பீரமான சிரிப்புடன் தெளிவாகத் தோன்றியது. பின் அவருடைய கனத்த குரலும் அவள் காதில் ரீங்காரம் செய்தது.

"நான் இப்போதுதான் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறேன். ஆனால் எப்படியும் ஆரம்பித்து விட்டேனல்லவா! என்னுடைய ஆத்ம பூர்வமான பக்தியை உங்களுக்கு நான் செலுத்துகிறேன்" என்று அவள் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

ஆத்மாக்கள் ஒன்றோடொன்று நிரந்தரமும் அன்பும் கொள்வதென்பது நடவாத காரியமா?

"அது நடவாத காரியமல்ல" என்று அவள் கூறினாள் அவரிடம்.

ஸ்ரீமதி ஊ செய்கையில் எல்லாவற்றையும் செய்து காட்டுபவளாதலால் இப்போதும் தான்கற்றவற்றை நடைமுறையில் உபயோகப்படுத்திக் கொண்டாள். அவளுடைய உலகமாகிய இந்த வீட்டுக்குள் ஒழுங்குமுறைக்கு விரோதமான இரண்டு பேர்கள் இருந்தார்கள்—அதாவது அவ்விருவரும் அவ்விட்டில் தாங்கள் முறைப்படி கொள்ள வேண்டிய தொடர்பைக் கொள்ளாதவர்கள்—அதன் மூலம் அவர்கள் உலகிற்கே விரோதமாகிறார்கள். இவ்விருவர்—ருலான், லின்யி.

அவள் அவசரப்படவில்லை. நாட்கள் பலவற்றைக் கழிய விட்டாள். ஆயினும் தக்க சமயம் வந்ததும் அவள் அவர்களுடன் பேசத் தீர்மானித்துக் கொண்டாள். ஆனால் முதலில் மூத்தவளாகிய ருலானிடம்தான் பேசவேண்டும்.

த்ஸேமோவும் பெங்மோவும் வீட்டை விட்டுச் சென்று பலமாதங்கள் கழிந்து விட்டன. இருவரும் சத்புத்திரர்களாதலால் இருவரிடமிருந்தும் கடிதங்கள் தவறாமல் வந்து கொண்டிருந்தன. அவை ஸ்ரீமான் ஊவிற்கும் அவளுக்குமாக எழுதப் பட்டிருந்தன. முதலில் அவள் அதைப் படித்து அதைப்பற்றி யோசனை செய்துவிட்டுப் பிறகு ஸ்ரீமான் ஊவிற்கு அனுப்புவாள். அவர் அவற்றைப் பார்த்துவிட்டு லியாங்மோவிற்கு அனுப்புவார். இப்போது சிறிது சிறிதாக லியாங்மோ எல்லா விவகாரங்களையும் தான் ஒருவனுக்கே மேற்பார்க்க ஆரம்பித்திருந்தான். கடைகள், நிலங்கள் முதலியவைகளை அவனே நிர்வகித்தான். அக் குடும்பத்தின் தலைவனுக முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டி வரக்கூடிய நாளுக்காக அவன் தன்னைத் தயார் செய்து வந்தான். அவன் அவற்றைப் படித்துப் பார்த்து விட்டுக் குடும்பக் காகிதங்களோடு பத்திரப் படுத்தி விடுவான்.

இந்தக் கடிதங்களின் மூலம், தன் பிள்ளைகள் இருவரும் ஒருவருக் கொருவர் நேர் எதிரான பாதையில் போய்க் கொண்டிருந்தனர் என்பதை ஸ்ரீமதி ஊ அறிந்து கொண்டாள். பெங்மோ படிப்பதற்காக அயல்நாடு செல்ல வேண்டுமென்று விரும்பினான். அவள் அதற்கு அனுமதி கொடுத்து அதற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து அனுப்பினாள். யுத்தம் வருவதால் சீக்கிரமே புறப்பட வேண்டுமென்றும் இல்லாவிடில் பிறகு கப்பல் மார்க்கமாக போவது முடியாதென்றும் வீட்டுக்கு வந்துவிட்டுப் போவதென்றால் தரை மார்க்கமாக வந்து செல்வதற்கு அதிக நாளாகுமாதலால் அதற்குப் பிறகு மறுபடியும் செல்வது ஆபத்தான காரியமென்றும் எழுதியிருந்தான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊவிற்கு இருப்பது அவன் ஒரே மகனாக இருந்திருந்தால் இதை அவள் ஒரு நாளும் அனுமதிக்க மாட்டாள். ஆனால் அவளுக்குப் பல பிள்ளைகள் இருந்ததால் அவள் அவனைத் தூர தேசம் போவதற்கு முன் கண்டிப்பாக வந்து விட்டுப் போகவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. அவன் கார்காலத்தின் கடைசியில் ஒரு நாள் கப்பலேறிக் கடல்களையெல்லாம் கடந்து பத்திரமாகப் போய்ச்சேர்ந்தான். இப்பொழுதெல்லாம் அவனுடைய தபால்களில் வரும் முத்திரைகளும் ஸ்டாம்புகளும் விசித்திரமாகயிருந்தன. அவை அமெரிக்காவிலிருந்து வருபவை. ஆனால் ஸ்ரீமதி ஊ இதைப் பற்றியெல்லாம் சிறிதும் கவனிக்கவில்லை. கடல்களுக்கப்பாலுள்ள எல்லா நாடுகளுமே அவளுக்கு ஒன்றுபோல்தான் தோன்றியது. இதிலெல்லாம் அவளுக்கு உற்சாகம் உண்டாகவில்லை. ஆண்ட்ரூ ஆரம்பித்த கல்வியைப் பெங்மோ தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கும் துறவுக்கும் மதத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை என்பதை அறிந்து ஸ்ரீமதி ஊ கவலை நீங்கினாள். அவன் மத விஷயங்களில் ஈடுபடவில்லை. அவனுடைய நாட்டமெல்லாம் மனிதர்களைப் பற்றிய விஷயங்களில் தானிருந்தன.

ஆனால் த்ஸேமோ கடல் கடந்து செல்லவேண்டுமென்று கேட்கவில்லை. அதற்குப் பதில் அவன் தலை நகரத்திற்குச் சென்று தங்கள் குடும்பத்தின் அந்தஸ்தினாலும் செல்வாக்கினாலும் ஒரு உயர்ந்த பதவியை அடைந்திருந்தான். இது ஸ்ரீமான் ஊவிற்கோ, ஸ்ரீமதி ஊவிற்கோ சிறிதும் ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. அவளுடைய மனம் எவ்வளவுதான் பரந்த தன்மை உடையதாயிருந்த போதிலும், தங்களுடைய குடும்பத்தைப்பற்றி எல்லோருக்கும் தெரிந்திருப்பது மிகவும் நியாயமே என்றுதான் எண்ணினாள். பிறகு த்ஸேமோ, தனக்கு அவ்வளவு சலுகை கிடைத்ததன் உண்மையான காரணம் இன்னதென்பதை எழுதினான். யுத்தம் கூடிய விரைவில் வரப்போவதால், சர்க்கார் படைகள் ஒரு வேளை பின்வாங்க வேண்டிவரலாம். அப்போது உள் நாட்டிலுள்ள செல்வந்தர்களுடைய உதவி அவர்களுக்கு மிகவும் தேவையாகயிருக்கும். இந்த மாகாணத்தில் செல்வத்திலும் அந்தஸ்திலும் மிக மிக உயர்ந்த பழைமையான குடும்பம் இவர்களுடையதே யாகையால், த்ஸேமோவிற்கு அதிக சலுகை காட்டப்பட்டது. ஆதலால் அப்பதவியை அடைய விருந்த மற்ற அனைவருடைய பொறுமைகளையும், தூஷணைகளையும் அவன் பொறுத்துக்கொள்ள வேண்டி வந்தது. ஆனால் இளமைச் செருக்கும் சக்தியும் படைத்திருந்த அவன் எதற்கும்

அஞ்சாமல் தன் வழியைத் தானே சரிப்படுத்திக்கொள்ளத் தயங்கவில்லை.

அவனுடைய கடிதங்களின் மூலமாக அவனை இன்ன விதத்திலிருக்கிறான் என்பதை ஸ்ரீமதி ஊவால் கண்டுபிடிக்க முடியவில்லை. பெங்மோவை அவள் ஒருவாறு புரிந்து கொண்டாள். அவள் செய்ததைப் போலவே, அவனும் தன்னுடைய சொந்த முறையில் தனது அறிவையும் உள்ளத்தையும் வளர்த்து வந்தான். அவன் ஒரு மனிதனை உருவாகிக் கொண்டிருந்தான். அவனுடைய தனித்தன்மையும், ஆண்ட்ரூ கூறியதுபோல் வளர்ச்சியடைந்து வந்தது. ஆனால் த்ஸேமோவின் மனம் வேறெதிலோ லயித்திருப்பதுபோல் தோன்றியது. ஆனால் அது எதிலென்பதை அவளால் அறியக் கூடவில்லை.

ஆனால் த்ஸேமோவின் வருகை விரைவிலேயே வந்து சேர்ந்தது. கிழக்குக் கடற்கரை ஜனங்கள் திடீரென்று படையெடுத்ததால் கடலோரத்திலிருந்த பட்டணங்களில் குழப்பம் ஏற்பட்டது. இவ்விஷயத்தைக் கேள்வியுற்றதுமே தினசரிப் பத்திரிகைகளைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டாள் ஸ்ரீமதி ஊ. அவள் வழக்கமாகச் செய்தித் தாள்களைப் படிப்பதில்லை. இப்போது நிலவரம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக அவள் அதைப் படித்துப் பார்த்தாள். அந்த நாட்டின் சரித்திரத்தில் எப்போதும் நடைபெற்றதுதான் இப்போதும் நடந்தது. எத்தனையோ மக்கள், பல நூற்றாண்டுகளாக இந்த நாட்டின்மீது படையெடுத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இந்நாடும் அதையெல்லாம் எதிர்த்துத்தான் நின்றிருக்கிறது. இப்போதும் அது தளராது. ஆகவே அவள் அதைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. மேலும், எதிரிகள் இத்தனை ஆயிரம் மைல்களையும் கடந்து இவ்வந்நாட்டுக்குள் வந்து இத்தனை காலமாக இருந்து வந்திருக்கும் இவ்விட்டைத் தாக்குவார்கள் என்று அவள் எண்ணவில்லை. தங்கள் முன்னோர்கள் மற்றவர்களைப் பின்பற்றி, நவீன காலத்துக் கேற்றபடி கடற்கரைப் பட்டினங்களுக்குச் சென்று புதிய வீடுகளைக் கட்டிக் கொள்ளாமல் இருந்ததற்காக அவள் அவர்களுக்கு நன்றி செலுத்தினாள். ஊ குடும்பத்தார் தங்களுடைய முன்னோர்களின் நிலத்திலேயே வீடுகட்டி வாழ்ந்து வந்தனர். இன்று அவர்கள் மிகவும் பத்திரமாக இருந்தனர். ஆனால் இந்த எதிரி ஆகாயமார்க்கமாகவும் வந்து தாக்குகிறான் என்பதும் உண்மைதான். ஆயினும் இங்கே அருகே பெரிய பட்டணம் எதுவும் இல்லாததால், அந்த முட்டாள் ஜனங்களான கிழக்கத்தியார், ஒவ்வொரு குடும்பத்தையும் அறிந்துகொண்டு இங்கே வந்து தாக்க மாட்டார்களே!

ஸ்ரீமதி ஊ, தன் வீட்டிலே ஒரு சிறிதும் அபாயம் இல்லை யென்று நிச்சிந்தையாக இருந்தாள்.

ஆனால் இந்தத் தாக்குதலினால் பெரும் மாறுதல்கள் ஏற்படத்தான் செய்தன. சர்க்காரின் காரியாலயங்கள் உள் நாட்டை நோக்கி வந்தன. த்ஸேமோ அவர்களுடன் வந்தான். இலையுதிர் காலத்தின் ஆரம்பத்தில் த்ஸேமோ, தான் ஒரு பத்து அல்லது பன்னிரண்டு நாட்களுக்காக வீட்டிற்கு வரப்போவதாக எழுதி யிருந்தான்.

இந்தக் கடிதத்தைக் கண்டதுமே இனி தான் ருலானின் விஷயத்தில் தாமதம் செய்யக்கூடாது என்று ஸ்ரீமதி ஊ தீர்மானித்துக் கொண்டாள். இங்கிடம் அவளை வரச்சொல்லச் சொல்லி அனுப்பினாள்.

ஆனால், இதனால் ஸ்ரீமதி ஊ இத்தனை நாட்களும் தனது மருமகளைப் பார்க்கவேயில்லை என்று கொள்ளக் கூடாது. ருலானை அவள் அடிக்கடி சந்தித்தாள். சாப்பிடும் சமயங்களில் மற்றவர்களோடு அவளும் இருப்பதைப் பார்ப்பாள். குடும்ப விசேஷங்கள், பண்டிகைகள் வரும்பொழுதும், ருலான் தனது கவர்ச்சியற்ற உடையில், அதிகப் பேச்சற்றவளாய் இருப்ப தையும் பார்ப்பாள். சில சமயங்களில் குடும்பக் கணக்குகள், மற்ற எழுத்து வேலைகள் ஏதாவது இருந்தால் அதை ருலானைக் கூப்பிட்டு எழுதச் சொல்வாள். ஏனெனில் எல்லோருடைய தையும்விட ருலானின் எழுத்துக்கள்தான் தெளிவாக இருந்தன. அவள் எப்போதும் தன் மருமகளிடம் அன்பாகவே நடந்து கொண்டாள். ஒரு சமயம், "ஒரு படித்த மருமகள் இருப்பதும் ஒரு விதத்தில் நல்லதுதான்" என்றுகூட கூறினாள்.

இதற்கு ருலான், ஒரு சில வார்த்தைகளையே கூறி தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

ஆனால் இத்தனை நாட்களிலும், குடும்பக் காரியத்திற்கு மேற்பட்ட வேறெதற்காகவும் ஸ்ரீமதி ஊ அவளை அழைக்க வில்லை. இப்போது த்ஸேமோவின் கடைசிக் கடிதம் வந்ததும், அதற்கு நேரம் வந்துவிட்டது என்பதை அறிந்துகொண்டாள்.

ருலான், சப்தமில்லாது எல்லாப் பகுதிகளையும் கடந்து வந்தாள். அவள் இப்போது, ஷாங்காயிலிருந்து கொண்டு வந்த தோல் பூட்களை அணிவதில்லை. அதற்குப் பதில் துணியால் தைக்கப்பட்ட வெல்வெட் பாதரக்ஷைகளையே அணிந்தாள். ஸ்ரீமதி ஊவிற்கு அவளது காலடியோசை கேட்கவில்லை. ஒரு நீண்ட நிழல் தரையில் விழுந்ததைப்

பார்த்ததும்தான் அவள் அதிசயத்தோடு நிமிர்ந்து பார்த் தாள்.

முகமன் கூறியானதும், "மகனே, நீ எவ்வளவு சப்தமில் லாமல் நடக்கிறாய்?" என்று கூறினாள்.

"நான் தோல் பூட்களை இப்போது அணிவதை விட்டு விட்டேன்" என்று ருலான் கூறினாள். அவள் நாற்காலியில் நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். சுவற்றின் ஓர மாகப்போட்டிருந்த அந்த நாற்காலி ஸ்ரீமதி ஊவினுடையதை விடச் சிறிது தாழ்ந்திருந்தது. அவர்கள் உட்காரும் அறையில் அமர்ந்து கொண்டனர். புத்தக அறையில் உட்காரவில்லை.

ஸ்ரீமதி ஊ, தன் மனத்திலிருந்ததை உடனே விட்டுவிட வில்லை. அவள் பரிவுடன், "இத்தனை நாட்களாக உன்னைக் கேட்க வேண்டுமென்றிருந்தேன். ஷாங்காயிலிருந்த உங்கள் குடும்பம் என்னவாயிற்று? தாக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னரே அவர்கள் தப்பி வந்துவிட்டார்களா?" என்று கேட்டாள்.

"என்னுடைய தந்தை குடும்பத்தோடு ஹாங்காங்கிற்கு வந்து விட்டார்" என்றாள் ருலான்.

"ஆ! வெகு தூரம் வந்துவிட்டார்கள் போலிருக்கிறது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

ருலான் வேகமாக, "இல்லை, இல்லை, இதை அதிக தூரம் என்று சொல்லமுடியாது. நான் என் தகப்பனாருக்கு அப்படித்தான் எழுதியிருக்கிறேன்" என்றாள்.

"அப்படியானால் எதிரிகள் அவ்வளவு தூரம் உன்னை வருவதற்குத் துணிவார்கள் என்று எண்ணுகிறாயா நீ?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ. அந்தப் பெண்ணின் அவசரமும் வேகமும் அவளுக்கு மகிழ்ச்சியே உண்டு பண்ணியது.

"இந்த யுத்தம் வெகுநாளைக்குத் தொடர்ந்து நடக்கும்" என்று பதில் கூறினாள் ருலான்.

"அப்படியா?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"ஆம். ஏனெனில் இதற்காக எத்தனையோ நாட்களாக தயார் செய்து வந்திருக்கின்றனர்" என்றாள் ருலான் மேலும்.

"அப்படியானால் எனக்கு இதைப்பற்றி விவரமாகச் சொல்லு" என்றாள் ஸ்ரீமதி ஊ. அந்தப் பெண் அவ்வளவு நிச்சயமாகக் கூறியது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

ருலான் விளக்கிச் சொல்ல ஆரம்பித்தாள். "அம்மா, இந்தக் கிழக்குத் தீவுகளைச் சேர்ந்த ஜனங்கள் வெகுகாலமாக, பல நூற்றாண்டுகளாக பயத்துடனே வாழ்ந்து வந்திருக்கின்றனர். எதற்காகத் தெரியுமா? அன்னியர்கள் படையெடுத்து வந்து விடுவார்களே என்றுதான். மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து ஒவ்வொரு நாடாகப் படையெடுத்துத் தங்கள் ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். செங்கிஸ்கான் நம் நாட்டை ஆக்ரமித்துக்கொண்ட காலத்திலிருந்தே அவர்களைக் கிலி பிடித்துக் கொண்டது. பிறகு, போர்ச்சுக்கல், ஸ்பெயின், ஹாலந்து, பிரான்ஸ் முதலிய தேசத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு படையெடுத்து வந்து ஒவ்வொரு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். இங்கிலாந்து இந்தியாவைக் கைப்பற்றிக் கொண்டது. நம்மையும், இந்தப் பேராசை பிடித்த மேற்கத்தியர், மீண்டும் மீண்டும் வந்து தாக்கிக்கொண்டே யிருந்தனர். இதைக் கண்ட கிழக்கத்தியர் 'ஏன் நாம் மட்டும் சும்மாயிருக்க வேண்டும்' என எண்ணிக் கொண்டு தாங்கள் கொண்ட பயத்தின் காரணமாகவே மற்ற நாடுகளைக் கைப்பற்றத் தீர்மானித்துக் கொண்டனர். நாம்தான் அவர்களுக்கு மிகவும் அருகில் இருப்பவர்கள். ஆதலால் முதலில் நம்மைத் தாக்குகிறார்கள்" என்று கூறி முடித்தாள்.

ஓர் இளநங்கை இத்தகைய வார்த்தைகளைப் பேசுவது பெரும் அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. ஸ்ரீமதி ஊ மிகவும் ஆச்சரிய மடைந்தாள். ஆண்ட்ரூ கூட இவ்விஷயங்களை அவளுக்குக் கூறியதில்லை.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"த்ஸேமோ எனக்கு வாரந்தோறும் எழுதுகிறார்" என்றாள் ருலான்.

ஸ்ரீமதி ஊவின் உள்ளத்தில் ஏற்பட்ட பளு குறைந்தது. அவள் புன்னகையுடன், "நீங்கள் இருவரும் இப்போது சிநேகமாகி விட்டீர்களா?" என்று கேட்டாள்.

ருலானின் கன்னங்கள் சிவந்தன. அவளுடைய முகம் வெளுத்த நிறமுடையதாதலால் அது வெட்கத்தால் சிவந்தது நன்றாகத் தெரிந்தது. ஆனால் அவள் தன் தலையை அப்பால் திருப்பிக்கொள்ளவில்லை.

"நாங்கள் தூரத்தில் இருக்கும்போது மிகவும் அதிசயிக்கும்படி ஒருவருக் கொருவர் பணிந்து போகிறோம். ஆனால் அவர் இங்கு வந்தாரோ இல்லையோ நாங்கள் மறுபடியும் சச்சரவிட ஆரம்பித்து விடுவோம்—அது எனக்கு நன்றாகத் தெரியும். அவரிடமும் நான் அப்படித்தான் கூறினேன். எங்கள் இருவருக்குமே அது தெரியும்" என்றாள் ருலான்.

ஸ்ரீமதி ஊ சிரித்துவிட்டு, "உனக்கு அது தெரிந்திருக்கும் போது நீ ஏன் அதைத் தடுத்துக்கொள்ளக் கூடாது? முதலில் சண்டையை துவக்குவது யார்? நீயா அவனா?" என்றாள். அவளுக்கு இதனால் நகைப்பு உண்டானபோதிலும் இப்பெண் எதையும் மறைக்க முயலுவதில்லை என்பதைப்பற்றி மகிழ்ச்சி உண்டாயிற்று.

"அதுதான் எங்களுக்குத் தெரிவதில்லை. இந்தத் தடவை, கடிதத்தில் இருவரும் பிரமாணம் செய்து கொண்டிருக்கிறோம். முதலில் யார் ஆரம்பித்தாலும், அதை மற்றொருவர் உடனே தடுப்பதென்று. ஆனால் எங்களுடைய திறமையில் எனக்கு சிறிதும் நம்பிக்கையில்லை. த்ஸேமோவின் கோபத்தை நான் அறிவேன். அது கோடைகாலத்து இடிமழையைப்போல் வரும்; காரணமில்லாமல் அது வந்து விடுகிறது. அவருக்குக் கோபம் வந்தால் எனக்கும் கோபம் வந்து விடுகிறது" என்று கூறிவிட்டு ஒருமுறை தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். பிறகு தனக்குள்ளே சோதனை போடுபவள்போல் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். ஸ்ரீமதி ஊ அவளுக்கு நேரம் கொடுத்தாள். அவள் மேலும், "என்னிடம் இருக்கும் ஏதோ ஒன்றை அவர் வெறுக்கிறார். ஆம், அது உண்மைதான். அவர் இல்லையென்று சொன்னபோதிலும் ஏதோ ஒன்று இருக்கத் தான் செய்கிறது. நாங்கள் பிரிந்திருக்கும்போது அவர் அதை உணர்வதில்லை. அருகே வந்ததும் அது வந்து விடுகிறது. அது மட்டும் இன்னது என்று எனக்குத் தெரிந்தால், நான் அதை ஒரு கத்தியால் வெட்டி எடுத்து விடுவேன்" என்றாள்.

"ஒருகால் பிடிக்காதது ஏதோ ஒன்று இருப்பதால் அல்லாமல் பிடித்தது ஒன்று இல்லாமலிருப்பதற்காகவும் இருக்கலாமல்லவா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

ருலான் தலையை உயர்த்தினாள். அவளுடைய அழகிய கண்களில் மருட்சி தோன்றியது. "ஆம், எனக்கு அது தோன்றவேயில்லை" என்று கூறி மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள். "ஆனால் அது இன்னும் கஷ்டமாகிவிடும். என்னிடம் இருப்பதை வேண்டுமானால் எடுத்து விடலாம். இல்லாததை எப்படி அடைவது?" என்றாள்.

"இது உண்மையாக இருக்க வேண்டுமென்பதில்லை. த்ஸேமோவிடம் உனக்குள்ள அன்பைப் பொருத்திருக்கிறது—இவையெல்லாம்! உங்களுடைய கல்யாணம், உங்கள் இருவரை மட்டிலும் பொருத்தவிஷயம் என்று எண்ணினாலும் நல்லது. நீங்கள் எப்போதுமே சண்டையிட்டுக் கொண்டேயிருக்க வேண்டியதுதான். அல்லது இருவரும் எப்போதுமே பிரிந்திருப்பதற்கு முடிவு செய்துகொள்ள வேண்டியதுதான்" என்றாள் ஷீமதி ஊ.

"நீங்கள் கூறுவதன் பொருள்....." என்று ஆரம்பித்த ருலானால் மேலே சொல்ல முடியவில்லை. பெண்மையின் விஷயத்தில் அவள் பெரும் சங்கோஜப் பிராணியாக இருந்தாள்.

"ஆம், அதைத்தான் நான் சொல்கிறேன்" என்றாள் ஷீமதி ஊ. அவள், தான் புதியதாக அனுபவித்து வந்த அன்பின் மூலமாகக் கற்றுக்கொண்ட தத்துவங்களைக் கூறினாள். புருஷன் மனைவி என்பவர்களிடையே எவ்வித கடமையுணர்ச்சியும் இருக்கவேண்டுமென்பதில்லை. ஒன்று அன்பு இருக்கலாம்—அல்லது இல்லாமலுமிருக்கலாம்!

அவள் தனது வெள்ளிப் புகைக் குழாயை எடுத்து மெதுவாக நிரப்பலானாள். சற்று நேரம் அவள் தனது மருமகளைப் பார்க்கவேயில்லை. வாசலிலிருந்த ஆர்ச்சிட்மலர்களை நோக்கியவாறு இருந்தாள். இப்போது மஞ்சள் புஷ்பங்கள் பூக்கும் காலம். நிறைய பூக்கள் மலர்ந்திருந்தன. மூங்கிற் மரங்களின் இலைகள் காற்றில் படபடவென்று அடித்துக்கொண்டன. இத்தகைய தினத்தை, அதன் அமைதிக்காக அவளும் ஆண்ட்ரூவும் மிகவும் விரும்புவார்கள்.

கடைசியாக அவள், "முதலாவதாக, நீங்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் ஏதோ கடமைப் பட்டிருப்பதாக எண்ணிக் கொள்ளக்கூடாது" என்று ஆரம்பித்தாள்.

ருலான் அதிசயமிக்கவளாய் குறுக்கிட்டாள். "அம்மா, இவ்விதம் ஒரு மாமியார் தன் மருமகளை நோக்கி சொல்லியதாக நான் இதுவரை எங்குமே கேட்டதில்லை" என்றாள்.

"நானும் இந்தப் புதிய ஞானத்தை இப்போதுதான் கற்றுக் கொண்டேன்" என்றாள் ஷீமதி ஊ. பின் அவள் குறும்பாகச் சிரித்துக்கொண்டு, "குழந்தாய்! நான் இன்னும் கற்றுக் கொண்டிருப்பதற்காக நீ எனக்கு மதிப்பு கொடுத்துத் தான் ஆகவேண்டும்" என்றாள்.

அவளுடைய செய்கை ருலானின் இதயத்தையே பற்றி இழுப்பதுபோல் இருந்தது. அந்தப் பேதைப் பெண்ணே தன் மாமியாரிடமிருந்து கோபத்தை எதிர்பார்த்து அதை ஏற்றுக் கொள்வதற்காக பணிவாகவே வந்திருந்தாள். அவளுக்கு சிறிது நம்பிக்கை துளிர்த்தது. அவள் வாங்கிக்கொள்ள வேண்டியது கோபமல்ல. அறிவாகிய செல்வம்! ஒரு நீண்ட வில்வப் புஷ்பம் மழைக்காகக் காத்திருப்பதுபோல் அவள் ஆவலோடு காத்திருந்தாள்.

"ஆண் பெண்கள் இருவரும் தங்களுக்குள் ஏதோ கடமையிருக்கிறது என்று நினைத்துக் கொள்வதாலேயே அவர்களிடம் கலகம் உண்டாகிறது. ஆனால் அந்தத் தவறான நம்பிக்கையை விட்டால்தான் பாதை தெளிவாகும். ஒவ்வொருவரும் தனக்குத்தான் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது எவ்விதம்? தன்னைத்தானே பூர்த்தி செய்துகொள்வதுதான் ஒருவருடைய கடமை. ஒருவருடைய உள்ளம் நிறைந்தால் மற்றொருவருக்கும் தானாக நிறைவு உண்டாகிறது" என்றாள் ஷீமதி ஊ.

அவள் சிறிது நிறுத்தி, தனது புகைக் குழாயைப் பற்ற வைத்து இருமுறை புகையை உள்ளுக்கு இழுத்தாள். பிறகு சாம்பலை உதிர்விட்டு தொடர்ந்து "இது எதனால்? பெரியோர்களின் வாக்கில் வந்திருக்கிறது. கணவனை மனைவி அவனுக்காக வென்று நேசிப்பதில்லை. தன்னுடைய ஆத்மாவின் திருப்திக்காகவே நேசிக்கிறாள். அதேபோல் கணவன் அவனை அவளுடைய நன்மைக்காக அல்லாமல் தனது சொந்த நலத்தை உத்தேசித்தே நேசிக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் மகிழ்ச்சி யடைந்தால் மற்றொருவருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இருவருக்கும் இன்பம் கிடைக்கக் கூடிய வழி இது ஒன்றுதான்" என்றாள்.

ருலான் அசையாமல் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஷீமதி ஊ மேலும் தொடர்ந்து, "குழந்தைகளைப் பெறும் விஷயமோ அது உன்னுடைய கடமையும் அல்ல. அவனுடையதுமல்ல. மனித ஜாதிக்கு நாம் எல்லோரும் செய்ய வேண்டிய பொதுக் கடன் அது. உன்னுடைய தவறு எங்கிருக்கிறது என்றால் நீ பிள்ளைப் பேற்றையும் த்ஸேமோவினிடம் நீ கொண்டுள்ள காதலையும் ஒன்றாகச் சேர்த்து குழப்பிக் கொண்டு விடுகிறாய். உன்னுடைய கலக்கத்தால் த்ஸேமோவையும் குழப்பத்தில் ஆழ்த்தி விடுகிறாய்! ஆதலால்தான்

அவன் வெகு சுலபமாக உன்னிடம் கோபம் கொண்டுவிடுகிறான்" என்றாள்.

"அம்மா, மேலும் சொல்லுங்கள். உங்கள் வார்த்தைகளால் என் உள்ளம் தெளிவடைந்து வருகிறது" என்றாள் ருலான் கெஞ்சியவாறு.

ஸ்ரீமதி ஊ மிகவும் தெளிவாக, "நீயும் த்ஸேமோவும் வழக்கமாக யாவரும் செல்லும் நியதியிலிருந்து விலகினீர்கள். நீங்கள் ஒருவரை யொருவர் காதலித்து உங்களுடைய சுய தேவைக்காகவே தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள். இதனால் ஏற்படும் ஆபத்து என்னவென்றால் சந்தோஷம் என்று சொல்லக் கூடியவைகளெல்லாம் இதனால் அதிகம் கிடைக்காமற் போய்விடுகிறது. நீங்கள் இருவரும் உங்களைப் பற்றி மட்டிலும் எண்ணிக்கொண்டீர்கள். குழந்தைகளைப் பற்றி நினைக்கவில்லை. குடும்பத்தைக் குறித்து கவலை கொள்ளவில்லை. மனித வர்க்கத்தை மதிக்கவில்லை. நீங்கள் உங்களைப் பற்றி மட்டிலும் எல்லாவற்றிலுமிருந்து தனியாகப் பிரித்து எண்ணி வந்தீர்கள். நீங்கள் இருவர் மட்டும் அவ்விதம் தனிப்பட்டவர்கள் இல்லை. உங்களுக்கென்று ஒரு சிறு தனி பாகம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அச்சிறு பாகத்தில் சகலத்தையும் கொண்டுபோய் திணித்துவிட முயல்கிறீர்கள். குழந்தை பெறுவது, வளர்ப்பது, உண்பது, உடுப்பது, ஓரிடத்திற்குப் போவது வருவது ஆகிய எல்லாவற்றையும் அச்சிறிய தனி இடத்தில் கொண்டுபோய் புகுத்த முயல்கிறீர்கள். ஆனால் அது இவ்வளவையும் கொள்ளாது. உங்களால் நெருக்கப்பட்ட அது திரும்பவும் உங்களையே தாக்குகிறது. நீங்கள் ஒருவருக் கொருவர் மிகவும் அருகாமையில் இருக்கிறீர்கள். நீங்கள் ஒருவரை யொருவர் வெறுப்பதன் காரணம் அதுதான். உங்களுடைய தனித்தன்மை அதாவது உங்களுடைய ஆத்மா—வளருவதற்குப் போதிய இடமில்லாது தவிக்கிறது. அதன் காரணமாக இவ்வளவு சஞ்சலங்களும் உண்டாகின்றன" என்றாள்.

பிறகு ருலாவை நோக்கினாள். அவள் அந்தக் காரணங்களையும் ஒருமுகப்படுத்தி அவளுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"உன்னைத் தனியாகப் பிரித்துக்கொள் குழந்தாய்! அவனைத் தனியாகப் போகும்படி விடு. நம்முடைய வர்க்கத்தின் பொது விதிக்கேற்ப நானும் குழந்தைகள் பெறுவேன் என்ற உறுதியை மேற்கொள். அவர்கள் அவனுடைய குழந்தைகளோ அல்லது உன்னுடைய குழந்தைகளோ அல்ல.

அவர்கள் மனித குலத்திற்கு உரியவர்கள். உண்பது, வசிப்பது, உறங்குவது போன்ற மற்ற காரியங்களைச் செய்வது போல் இதையும் செய்து முடி. ஆத்மாவிற்கும் இந்த விஷயங்களுக்கும் சிறிதும் சம்பந்தமில்லை. அவனுடைய சரீரத்தில் ஏற்படும் உஷ்ணத்தை டிகிரி போட்டு அளந்து அதன் மூலம் அவனுக்கு உன்னிடமுள்ள அன்பை நிர்ணயம் செய்யாதே. அந்நேரங்களில் அவன் உன்னைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதில்லை. அவன் தன்னைப் பற்றி நினைக்கிறான். அந்த வேளைகளில் நீயும் உன்னைப்பற்றி எண்ணமிட்டுக்கொள். ஆண்களின் காமம் ஒவ்வொருவனிடமிருந்தும் வித்தியாசமாகத் தோன்றுகிறதா என்ன? இல்லை. அதேபோல் ஒரு பெண்ணும் மற்ற எல்லோரையும்போல் தான் பிள்ளை பெறுகிறாள். இந்த விஷயங்களில் நாம் எல்லோரும் ஒன்றுபோலத் தான் இருக்கிறோம். இவற்றில் நீயோ அவனோ, மிக மிகச் சாதாரணமானவர்களிடமிருந்துகூட வேறுபடுவதாக எண்ணிக் கொள்ளாதே" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

இதைக் கூறி முடித்ததும் மிகவும் களைப்படைந்துபோனது போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

ருலான் மெதுவாக, "நீங்கள் சொல்வதைக் கேட்டால் கல்யாணமே ஒன்றுமில்லை என்று சொல்வதாகவல்லவா தோன்றுகிறது? அப்படிப் பார்த்தால், த்ஸேமோவைப்போல் வேறு யாரை வேண்டுமானாலும் நான் மணந்து கொண்டிருக்கலாம் என்றாகிறதே" என்றாள்.

ஸ்ரீமதி ஊவிற்கு மறுபடியும் சக்தி வந்தது. "இரு. நான் இன்னும் முடிக்கவில்லையே. ஒரு விதத்தில் நீ சொல்வதும் சரிதான். இளமையும் சக்தியும் படைத்த எந்த ஆணும் அத்தகைய பெண் ஒருத்தியை மணந்து வாழ்க்கையைச் சுகமாக நடத்த முடியும். இந்தக் கருத்துடன் பார்த்தால், நமது பெரியோர்கள் இதுவரை கையாண்டு வந்த முறைகளே நல்லது. ஏனெனில், இளைஞர்களைவிட பெரியவர்கள் வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் வல்லவர்களாயிருப்பர். லியாங்மோவையும் மெங்கையும் எடுத்துக்கொள்—அவர்கள் சுகமாக யிருக்கின்றனர். ஆனால் நீயும் த்ஸேமோவும் வேண்டுமென்று கேட்கிற அத்தகைய பூரண இன்பத்தை அவர்கள் கேட்பதில்லை. குழந்தை பெறுவதோடு அவர்கள் வாழ்க்கையில் பூரண திருப்தியடைந்து விடுகின்றனர். லியாங்மோ, ஒரு நல்ல கணவனாகவும், நல்ல தகப்பனாகவும் இருப்பதை தவிர வேறெதையும் வேண்டுவதில்லை. இருவரும் அதற்குமேல் ஒன்றையும் கேட்பதில்லை. லியாங்மோ, மெங்

இவர்களைப் போன்றவர்களுக்குப் பெரியோர்களே வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பது நல்லது."

"ஆனால் நாங்கள் அவர்களைப் போன்றவர்கள் அல்லவே" என்றாள் ருலான் சிறிது காரமாக.

"ஆம். அது உண்மையே. நீங்கள் உங்களுடைய ஆத்மார்களிடையே, சிநேகம், தோழமை ஆகியவை உண்டாக வேண்டுமென்று கேட்கிறீர்கள். ஆ! ஆனால், குழந்தாய், நீங்கள் அதிகம் கேட்கிறீர்கள். கல்யாணம் என்பது இந்த அதிகப்படியான சுமையைத் தாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அப்படியானால் நாங்கள் என்ன செய்திருக்க வேண்டும். கல்யாணம் செய்துகொள்ளாமலே வாழ்ந்திருக்கவேண்டுமா?" என்றாள் ருலான் ஒளிவில்லாமல்.

"ஆம், ஆம்—" என்று கூறிய ஸ்ரீமதி ஊவிற்கு தானே இவ்விதம் பேசுவது என்ற வியப்பு உண்டாயிற்று. "ஆனால் அதிலும் கஷ்டம் இருக்கிறது. நீங்கள் ஆணுகவும் பெண்ணுகவுமிருப்பதால், சரீரம் தனக்குரிய பங்கைக் கேட்கிறது" என்றாள்.

அவள் சிறிது நிறுத்தி, தனக்குள்ளே இதுவரை தோன்றியிராத அவ் வார்த்தைகளைச் சோதனை செய்தாள். மேலே கூறினாள். "நீயும் த்ஸேமோவும் பெரும் பாக்கியசாலிகள். நீங்கள் எல்லாவிதத்திலும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறீர்கள். அப்படியே நேசித்துக் கொண்டிருங்கள். குழந்தாய்! இத்தகைய அன்பிற்கு இந்த சொற்ப ஆயுள் போதாது. இருவரும் ஒரு நிமிடத்தைக்கூட கோபத்தில் வீணுக்காது அன்பிலே மூழ்கியிருங்கள். உன்னுடைய காதலை, காமத்திலிருந்து பிரித்து எடு. இரண்டையும் ஒன்றுக்கிக் குழப்பாதே. ஒரு நாள், இந்தப் பிரிவினை, பழக்கத்தின் காரணமாக நன்றாக நிலைத்து விடும். உங்களுக்குக் குழந்தைகள் பிறந்து, வளர்ந்து, உங்களுக்கு வயதாகும்போது, இந்தக் காமம் மறைந்துவிடும். தெய்வத்தின் இருபையால் எல்லோருக்குமே வயதான பிறகு அது மறைந்து விடுகிறது. அப்போது உங்களுடைய அன்பின் சிறப்பு மேலோங்கி நிற்கும்."

அவளுக்குத் திடீரென்று, ஆண்ட்ரூ தன்னைப் பிரிந்து சென்றுவிட்டதற்காக, துயரம் உண்டாயிற்று. இனி அவருடைய உயிருடன் கூடிய முகத்தைப் பார்க்கவே முடியாதென்ற நினைவு அவனது நெஞ்சை ஈட்டிகொண்டு தாக்குவது

போல் தாக்கிற்று. அவள் தன் கண்களை மூடிக்கொண்டு, அவ்வேதனையை சகித்துக்கொண்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு, ருலான் தனது கையை எடுத்து அவளது கன்னத்தில் ஒத்திக் கொண்டதை உணர்ந்தாள். முதலில் அவள் ஒரு கன்னத்தில் வைத்துக் கொண்டாள். பிறகு மற்றதில் ஒத்திக் கொண்டாள். ஆனால் இப்போதும் அவள் கண்களைத் திறக்க வில்லை.

"ஆனால் பெண்தான் முன்னிருந்து நடத்திச் செல்ல வேண்டும். ரகசியமாக, எக்காலத்திலும் பெண்தான் வழி நடத்திச் செல்கிறாள். அப்படி அவள் செய்துதானாக வேண்டும். ஏனெனில் மனிதர்களின் வாழ்வே அவளைச் சார்ந்துதானே இருக்கிறது! அவள் ஒருத்தியால்தான் நடத்திச் செல்லப்படுகிறது. நான் உன்னை இப்போது எச்சரிக்கிறேன். உன்னுடைய மணவாழ்க்கையை சந்தோஷமாகச் செய்வதில் என்னுடைய மகனால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவள் மீண்டும் கண்களைத் திறந்து பார்த்தபொழுது அறை காலியாக இருந்தது. ருலான் சென்று விட்டாள்.

அன்றிரவு, ஸ்ரீமதி ஊ, இங் தன்னை படுக்கைக்குச் செல்வதற்காக தயார் செய்து கொண்டிருந்தபோது, வெகு நேரம் ஆழ்ந்த மௌனத்தில் ஈடுபட்டிருந்தாள். இங்கிற்குகூட வழக்கம்போல் அரட்டையடிக்கத் துணிவு உண்டாகவில்லை. வெகு நேரத்திற்குப் பிறகு ஸ்ரீமதி ஊ, "இங்" என்று அவனை விளித்தாள்.

"அம்மா?" என்று கேட்ட இங், நிமிர்ந்து கண்ணுடியில் தோன்றிய அவளது முகத்தைப் பார்த்தாள். அவள் அந்த நீண்ட கரிய கூந்தலை வாரிக்கொண்டிருந்தாள். இப்போது தான் முன்புறத்தில் ஒன்றிரண்டு வெள்ளி மயிர்கள் காணப்பட ஆரம்பித்திருந்தன. ஸ்ரீமதி ஊ, "உனக்கு ஒரு வேலை கொடுக்கப் போகிறேன் நான்" என்றாள்.

"நல்லது, அம்மா?"

"இன்னும் ஒரு மாதத்திற்குள் என்னுடைய இரண்டாவது மகன் வீட்டிற்குத் திரும்பி வந்துவிடுவான்."

"எனக்குத் தெரியும், அம்மா. நாங்கள் யாவரும் அதை அறிவோம்."

"நீ செய்ய வேண்டியது என்னவென்றால், நிலமும் இரவு எனக்கு எல்லாம் செய்தானதும் நீ என்னுடைய இரண்டாவது

மருமகளிடம் போகவேண்டும். போய் நீ எனக்கு என்ன வெல்லாம் செய்தாயோ, அதையெல்லாம் நீ அவளுக்குச் செய்துவிட வேண்டும்."

இங் கண்ணடியில் அவளைப் பார்த்து சிரித்தாள். ஆனால் ஸ்ரீமதி ஊ பதிலுக்கு சிரிக்கவில்லை. அவள் இங்கின் கண்களை சந்திக்காமல் மேலே கூறிக்கொண்டு போனாள். "ஒன்றையும் நீ மறந்து விடக்கூடாது—வாசனை திரவியங்களைக் குளிக்கும் தண்ணீரில் கலப்பது, ஏழுவித வாசனைகளைத் தெளிப்பது, தலையை நன்றாக வாசனைத் தைலமிட்டு வாருவது—எதையும்—நான் செய்து வந்த எதையும் நீ விட்டுவிடக்கூடாது" என்றாள்.

"எனக்குத் தெரியும், அம்மா" என்றாள் இங். அவளுடைய குரலில் மகிழ்ச்சியும் பரிவும் கலந்திருந்தது. பிறகு அவள் வாருவதை நிறுத்தி விட்டு, "அந்த அம்மாள் என்னை செய்யக் கூடாதென்று தடுத்து விட்டால் என்ன செய்வது! அந்தப் பெண் தன் அழகிற்காக எதையுமே செய்துகொள்வ தில்லையே" என்றாள்.

"அவள் தடுக்க மாட்டாள். பாவம், சிறு பெண்! அவளுக்கு உதவி தேவையாக யிருக்கிறது. எல்லா பெண் களுக்குமே அது தேவையாகத்தானிருக்கிறது. அதை இப்போதுதான் அவள் அறிந்து கொண்டிருக்கிறாள்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"நல்லது அம்மா!" என்றாள் இங்.

ஒன்பதாவது மாதத்தின் ஐந்தாவது நாளன்று த்ஸேமோ வீட்டிற்கு வந்தான். இந்தச் செய்தி அவர்களுக்கு முதலில் ஒரு மின்சார தந்தியின் மூலமாக கிடைத்தது. அந்த தந்தி பட்டணத்திற்கு முதலில் அனுப்பப்பட்டு, பிறகு ஒரு ஆள் மூலமாக ஊ வீட்டிற்கு கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் ஊ, கடிதத்தை எடுத்துக்கொண்டு தாமே ஸ்ரீமதி ஊவிடம் சென்றார். அவர் இப்போதெல்லாம் அவளிருக்கும் இடத் திற்கு அதிகமாகச் செல்வதில்லை. அவரைப் பார்த்ததுமே அவர் ஏதோ தங்கள் பிள்ளைகள் ஒருவனின் விஷயமாகத்தான் வந்திருக்க வேண்டுமென்று அவள் ஊகித்துக் கொண்டாள். அவர் தந்தியை அவளிடம் நீட்டினார்.

அவர் குதூகலமாக, புன்னகை செய்தவாறு, "நம் முடைய இரண்டாவது மகன் வரப்போகிறான்" என்றார்.

13

அவள் தந்தியைப் படித்து விட்டுத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். மின்சாரக் கடிதத்தை அவள் இப்போதுதான் முதன் முதலில் பார்க்கிறாள். அவளுக்கு இதைப் பற்றி ஆண்ட்ரூ விளக்கிக் கூறியிருக்கிறார். அந்தக் காகிதத்தை அப்படியே பறக்க விட்டு விடுவதில்லை, அவள் எண்ணி யிருந்தபடி! அல்லது பேச்சின் மூலமாகவும் வார்த்தைகள் அனுப்பப்படுவதில்லை. வார்த்தைகளின் சின்னங்களை ஒரு யந்திரத்தின் மீது தட்டுகிறார்கள். அதை மற்றவர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

"காட்டில் வாழும் காட்டு மிராண்டிகள் தகரத்தில் தட்டுவதன் மூலம் பாஷைகளைப் பரிமாறிக் கொள்வார்களே, அதைப் போல்" என்று கூறினாள் அவள் இப்போது.

"காட்டுமிராண்டித் தனத்தைக் கொஞ்சம் நாகரீகமாக வெளிக் காட்டுவதுதான் இப்போதைய மனிதனின் இயல்பு" என்றார் அவர்.

அந்தத் தந்தியைப் பற்றி யோசித்த வண்ணம் அவள் இவ் வார்த்தைகளை நினைவு படுத்திக் கொண்டாள். பிறகு உரக்க, "நாம் அவனுக்காக ஒரு பெரிய வரவேற்பு வைபவத்தை நடத்த வேண்டும்" என்றாள்.

"நான் என்னுடைய நண்பர்கள் எல்லோரையும் அழைக்கப் போகிறேன்" என்றார் ஸ்ரீமான் ஊ.

அவள் திட்டமிடுவதில் முனைந்தாள். "கடை குமாஸ் தாக்களுக்கும் நிலத்து வேலையாட்களுக்கும் கூட ஒரு விருந் தளிக்க வேண்டும்" என்றாள்.

"ஆம், ஆம், எல்லோருக்குந்தான்" என்றார் தமது பெருந் தோரணையில்.

அவள் அவரை அரைக் கண்ணால் நோக்கினாள். அவர் பழையபடி ஆகி விட்டார். மல்லிகா அவருக்கு நன்மையே செய்திருக்கிறாள். அவர் மீண்டும் தனது தன்னம்பிக்கையை யடைந்தவராய் உவகையுடன் காணப்பட்டார். அவளிடம் அவர் தோல்வியடைந்து போனார். ஏனெனில் அவர் தமது மனதிற்குள்ளாகவே அவள் தன்னை நிராகரித்து விட்டாள் என்பதை எண்ணி மருகிப் போயிருந்தார். சியூமிங்கிடம் ஏற்பட்ட தோல்வியோ அவருக்குப் பெரும் தீமையைச் செய்து விட்டது. அவரைப் போன்ற மனிதர்களுக்கு தங்களுடைய மனைவிமார்களிடம் எப்போதும் வெற்றி

கிடைக்க வேண்டும். இதை அவள் எவ்வளவு நன்றாக அறிவாள்! இதையே தன் கடமையாக எண்ணி அவள் இத்தனை வருடங்கள் இதைச் செய்திருக்கவில்லையா? ஆனால் இளமையும் மடமையும் கொண்ட சியூமிங்கிற்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது! ஆனால் மல்லிகாவிடம் வேறு எத்தனையோ குறைகள் இருந்தபோதிலும் இந்த வித்தையில் அதாவது எதன் மூலமாக அவள் தனது உணவையும் வீட்டையும் சம்பாதித்துக் கொண்டிருந்தாளோ அந்த வித்தையில் கைதேர்ந்தவளாக இருந்தாள். ஸ்ரீமதி ஊவின் மனம் கவலையினின்று விடுபட்டது. ஆனால் அதே சமயம் அதில் கடுமையும் வெறுப்பும் தோன்றியது. இந்த வெறுப்புணர்ச்சி தன்னிடம் ஏற்பட்டதற்காக அவள் அவமானமடைந்தாள். அதையே முன்பெல்லாம், மனித சுபாவத்தின் தன்மைகளில் அதுவும் ஒன்று என்பதாக எண்ணி ஏற்றுக் கொண்டிருந்தாள்.

அவள் ஒரு முறை ஆண்ட்ரூவிடம், "நான் பாவமே செய்தறியாதவள் என்று என்னால் சொல்ல முடியாது. அதாவது நீங்கள் பாவம் என்பதற்குப் பொருள் கொள்ளும் முறையில் பார்த்தால்—அதாவது மனத்தில் ரகசியமாகக்கூட எந்த தீய எண்ணமும் ஏற்படக் கூடாது என்றால் வெளி நடவடிக்கையைப் பற்றி நாம் சமாதானம் கூறி விடலாம். ஆனால் உள்ளே யிருக்கும் இதயத்திற்கு எவ்விதம் பதில் சொல்வது?" என்று கூறியிருக்கிறாள்.

"ஒரு சிலரால் அதையும் செய்ய முடியும். அதில் நீங்களும் ஒருவர்" என்றார் அவர் பதிலுக்கு.

அவருடைய சமீபத்திலேயே எப்போதும் வாழ வேண்டுமானால், அவர் வாழ்ந்து வந்த அந்த உயர்ந்த நிலைக்குத்தான் தான் செல்ல வேண்டுமென்பதை அவள் அறிவாள். அவளுக்காக அவர் ஒருபோதும் கீழே யிறங்கி வரமாட்டார்.

இப்போது அவள் தனது பிள்ளைகளின் தந்தையாகிய ஸ்ரீமான் ஊவிடம் மிக்க பொறுமையுடன் பேசினாள். "எல்லாம், உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்" என்றாள்.

அவர் தமது கைகளை மடி மீது வைத்தவாறு முன்புறம் சற்றே சாய்ந்து கொண்டு புன்னகை புரிந்தார். பிறகு தமது குரலைச் சற்றுத் தாழ்த்திக் கொண்டு,

"த்ஸேமோதான் எல்லோரிலும் எனக்கு மிகவும் பிரியமான பிள்ளை என்பது உனக்குத் தெரியுமோ என்னமோ! அதனால்தான், அவன் மனைவி ஒரு கோபக்கார பெண்மணியாக வாய்த்திருக்கிறாளே என்று எனக்கு வருத்தம் ஏற்படுவது உண்டு. த்ஸேமோவிற்கு அன்பும் அடக்கமும் குடிகொண்ட பெண்ணாக ஒருத்தி வாய்த்திருக்க வேண்டும்" என்றார்.

ஸ்ரீமதி ஊவால், தனது வெறுப்பைக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

"நீங்கள் த்ஸேமோவைத் தவறாக எண்ணி விட்டீர்கள்." அவருடைய காதுகளிலேயே அவள் குரல் சற்றுக் கடுமையாக விழுந்தது.

"த்ஸேமோ புத்திசாலி. ருலானும் அறிவுடைய பெண். காலப் போக்கில் பார்த்தால் அவளிடம் எனக்கு நன்மதிப்பே தோன்றுகிறது" என்றாள்.

ஸ்ரீமான் ஊ நிகைப்படைந்தார். அறிவைப் பற்றிய பேச்சை பெடுத்தாலே அவர் நிகைத்துப் போய் உடனே பேச்சை மாற்றி விடுவார். அவர் அவசரத்துடன் "ஓ, நல்லது. நல்லது. நீ சொன்னால் அது சரியாக இல்லாமற் போய் விடுமா? நீயே எல்லா ஏற்பாடுகளையும் செய்து விடுகிறாயா அல்லது நான் செய்வதா?" என்று கேட்டார்.

"வீட்டிற்குள் செய்ய வேண்டியதை யெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் விருந்தாளிகளை வரவேற்பதையும் மதுபானங்கள் வாங்கும் விஷயங்களையும் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

அவர்கள் இருவரும் வணங்கி விடை பெற்றுக் கொண்டு பிரிந்தனர். அவர்களிடையே யிருந்த தொடர்பு முற்றிலும் சரீரத்தையே சார்ந்திருந்தது என்பது அவளுக்கு நன்றாக விளங்கியது. சரீர சுகத்திலேயே மூழ்கி யிருந்த அவரைக் காண அவளுக்கு வெறுப்பு மேலோங்கியது. ஆயினும் ருலானுக்கு அவள் புத்திமதி கூறியபடி அவர்கள் தங்களுடைய கடமையை முறையாகப் பூர்த்தி செய்திருக்கிறார்கள் அல்லவா? தங்களுடைய வம்சாவளியை அவர்கள் பூர்த்தி செய்து விட்டனர். தங்களுடைய வம்சத்தின் உணர்ச்சிகளையெல்லாம் காரியத்தில் நிறைவேற்றி விட்டனர். இக் கடமை முற்றுப் பெற்றதும், இருவரும் ஒருவரிடமிருந்து ஒருவர் விலகி, விடுதலை பெற்றுக் கொண்டனர். அவளுக்கு இப்போது, ஆண்ட்ரூ எப்படித் தனக்கு நிறைவைக் கொடுத்தாரோ அதே போல் ஸ்ரீமான் ஊவிற்கு மல்லிகா அதைக் கொடுத்திருக்கிறாள் என்பது புலப்பட்டது. எந்த உறவும் முறிபட்டுப் போகவில்லை. குடும்பம் வழக்கம்போல் நடந்து கொண்

டிருந்தது. ஒருவருடைய ஸ்தானமும் மாறிப் போகவில்லை. மல்லிகாவை இவ் வீட்டிற்குள் கொண்டு வந்தது எவ்வளவு விவேகமான செய்கை என்பதை அவள் உணர்ந்தாள். இந்த ஊ வீட்டின் கூரைக்கடியில், அதில் தொடர்புற்ற மிக மிகக் கேவலமான பிராணிக்கும் இடம் கொடுக்கும்படியாக அவ்வளவு இடம் இருந்தது. ஒரு ஊர், பேர் தெரியாத குழந்தைக்குப் பிறப்பை அளிக்கும்படியான மகா பாதகம் அவர்களைச் சேராது. மல்லிகாவிற்குப் பிறக்கும் குழந்தைகளும் அவற்றிற்குரிய இடத்தைப் பெறும்.

அன்றைய கடமைகளைச் செய்வதற்கு ஆயத்தம் செய்து கொண்ட அவளுடைய உள்ளத்தில் அமைதி நிறைந்திருந்தது. இன்று அவள் தனக்கென்று சிறிது நேரமும் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. சமையல்காரனையும், காரியஸ்தனையும் வரச் சொல்லி உத்தரவிட்டாள். மற்ற வேலையாட்களுக்கும், வேலைக்காரிகளுக்கும் சொல்லி யனுப்பினாள். குழந்தைகளின் உடைகளை யெல்லாம் பரிசிலனை செய்ய வேண்டும். உடைகள் இல்லாத குழந்தைகளுக்கு வேண்டியவற்றைப் புதிதாகத் தைத்துக் கொடுக்க வேண்டும். அவளுடைய நான்காவது பிள்ளையான என்மோவை, கிராமத்திலிருந்து வர வழைக்க வேண்டும்.

அவள் நிலத்துக் காரியஸ்தனிடம், "என்னுடைய நான்காவது மகனும் வீட்டிற்குத் திரும்பி வர வேண்டிய காலம் வந்து விட்டது. குடும்பத்து விவகாரங்கள் தான் இப்போது ஒரு வழியாகி விட்டனவே" என்று கூறினாள்.

காரியஸ்தன் நகைத்து விட்டு, "அம்மா, இந்த மகன் தான் உங்களுக்குப் பின்னால் நிலங்களை யெல்லாம் மேற் பார்க்கப் போகிறார். நம்முடைய சின்ன எஜமானர் முதலாமவர்) கடை கண்ணிகளை மிகச் சாமர்த்தியமாகப் பார்த்துக் கொள்கிறார். ஆனால் இந்தச் சிறிய நான்காவது எஜமானர் நிலங்களுக்காகவே பிறந்தவர்" என்றான்.

ஸ்ரீமதி ஊ, என்மோவைப் பார்த்து பல மாதங்களாகி விட்டன. அவளுக்கு அவனைப் பற்றி இப்போது வியப்பு தோன்றியது. பால பருவத்திலிருந்து காளைப் பருவத்திற்குச் செல்வதில் எல்லா ஆண் பிள்ளைகளும் ஒரு மாதிரிதான் இருக்கிறார்கள் என்று அவள் கூறுவது வழக்கம். அவர்களை நன்முகப் பராமரித்து அதே விஷயங்களைப் போதித்து வர வேண்டியதுதான் நம் கடமை. அவர்களைக் கூடிய வரையில் திறந்த வெளிகளில் வளர்க்க வேண்டும். வம்பு பேசும் இடங்

களிலும், சூதாட்டம், விபசாரம், இவை நடக்குமிடங்களிலும், குடும்பத்துக் கலவரங்களிலும் அவர்கள் கலவாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே அவள் என்மோவை, கிராமத்தில் உறவினர்களுடனும் குடியானவர்களிடமும் வளரட்டும் என்று கிராமத்திற்கு அனுப்பியிருந்தாள். இப்போது அவன் வீட்டிற்கு வர வேண்டிய நாளாகி விட்டது. அவன் எவ்விதம் இருக்கிறான் என்பதை அவள் பார்க்க வேண்டும்.

அவள் இங்கிருந்து, "எனது பெரிய மகனின் அறைகளுக்குக் கிழக்குப் புறத்தில் இருக்கும் இரண்டு அறைகளையும் தயார் செய்து வை. அவற்றில் பெட்டிகளும் வேண்டாத சாமான்களும் நிறைந்து கிடக்கின்றன. அவற்றை ஒருவரும் உபயோகிப்பதில்லை. அந்த இரண்டு அறைகளிலும் நாற்காலி, மேஜை முதலியவைகளைப் போட்டு என்மோவிற்காகத் தயாரித்து வை. அவனுக்குக் கல்யாணம் ஆகும்வரை அவன் அங்கேயே இருக்கலாம்" என்று உத்தரவிட்டாள்.

நியாயமாக என்மோவை அவனது தந்தையின் அருகாமையில் இருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கவேண்டும். ஆனால் அது அவளுக்குச் சம்மதமில்லை. அல்லது தன்னருகிலேயே அவனை வைத்துக் கொள்ளவும் அவள் விரும்பவில்லை. அவன் ஆசையும் உற்சாகமும் கூடிய இளமையின் வெறியோடு வளர்கிறவன்! ஆனால் லியாங்மோவும் மெங்கும் அவனிடம் அன்பாக இருப்பார்கள். குழந்தைகள் அவனிடம் விளையாடி மகிழ்வார்கள்.

இவ்விதமாக யாவும் தயாரிக்கப்பட்டது. கடைசியாக ஸ்ரீமதி ஊவே ருலாவைப் பரிசிலனை செய்ய வேண்டும். த்ஸேமோ வரும் தினம் வந்துவிட்டது. த்ஸேமோ அன்று மத்தியானத்திற்கு மேல் வருவானென்று தெரிவிக்கப்பட்டது. அவன் படகின் மூலமாக வரப்போவதால் நேரத்தை நிச்சயமாக அறியக்கூடவில்லை. மோட்டார் கார் இருந்தும் அவனுக்கு அனுப்ப முடியாமல் இருந்தது. ரஸ்தாக்கள் ரொம்பவும் குறுகியவைகளாய் இருந்ததால் இந்தக் கார் போவதால் நிலங்கள் மிதிபட்டன. அதைக் கண்ட உழவர்கள் பதைத்துக் கூவினர். ஆதலால் வாசற்புறம் இருந்த ஒரு அறையில் மோட்டார் கார் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. பார்ப்போர்கள் அதிசயிப்பதற்கும் வியப்பதற்குமாக அது இருந்ததே தவிர அதனால் உண்மையில் ஒரு பிரயோசனமும் இருக்கவில்லை. ஆயினும் அதை வாங்காதிருப்பது மிகவும் அநாகரிகமாகவும் பிற்போக்காகவும் ஸ்ரீமான் ஊ அவர்களால்

கருதப்பட்டதால் அது ஒரு பிரயோஜனமில்லாமலே அங்கே யிருந்தது. த்ஸேமோவிற்குக்கூட, நண்பர்களின் மத்தியில் மிக அலட்சியமாக, "என்னுடைய தகப்பனாரின் அயல் தேசத்துக் கார்..." என்று அதைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு மிகவும் பெருமையாக யிருந்தது.

ருலான், புதிய மணப் பெண்ணைப்போல் வெட்கத்துடன் ஸ்ரீமதி ஊவின் முன்னால் வந்து நின்றாள். அன்று கருஞ்சிவப்பு நிறமுடைய ஒரு புத்தாடையை அவள் அணிந்திருந்தாள். அவளுடைய வெளுத்த நிறத்திற்கும் சிவந்த வாய்க்கும், அந்த பளிச்சென்ற வர்ணம் மிக ஏற்றதாக இருந்தது. ஸ்ரீமதி ஊ, அந்த உடையின் குறுகலான வெட்டையும் நீளத்தையும் அங்கீகரித்தாள். சட்டையின் கைகள் குட்டையாக இருந்ததைக் கூட அவள் ஆக்ஷேபிக்கவில்லை. ஏனெனில் ருலானின் கைகள் மிக அழகாக இருந்தன. அவள் இங்கை, நகைப் பெட்டியைக் கொண்டுவரச் சொல்லி, அதிலிருந்து சிவப்புக் கற்கள் வைத்த ஒரு கனமான தங்க மோதிரத்தை யெடுத்து, ருலானின் வலது கை நடுவிரலில் அணிவித்தாள். ருலான் கையை உயர்த்தி அதை மகிழ்வோடு பார்த்து, "அம்மா, எனக்குப் பொதுவாக மோதிரங்களே பிடிக்காது. ஆனால் இது மிகவும் நன்றாக யிருக்கிறது" என்றாள்.

"இது உனக்கு மிகவும் பொருந்துகிறது. ஒரு பெண்ணுக்கு ஒரு நகை பொருந்தினால் அது அவளை மேலும் அழகுறச் செய்கிறது" என்றாள் ஸ்ரீமதி ஊ.

ருலான் அன்று தலைக்குக் குளித்திருந்தாள். ஆனால் தலைக்கு எண்ணெய் தடவாமல் அப்படியே தோள்மீது விட்டிருந்தாள். மிருதுவான பட்டைப்போல் அவளுடைய கேசம் படிந்து கிடந்தது. இங் அதன் நுனியை ஒழுங்காக வெட்டி விட்டிருந்தாள். பெண்கள் தலைமயிரை கட்டாமல் வெறுமேவிட்டு விடுவது மிகமிக நவநாகரிகமாய் யிருந்தது. அதை ஸ்ரீமதி ஊ சிறிதும் விரும்பவில்லை. மெங் இதைப் பார்த்துத் தானும் செய்துகொண்டிருந்தால் அவள் அதைக் கண்டித்திருப்பாள். ஆனால் ருலானின் முகத்தில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் குடிகொண்டிப்பதைப் பார்த்ததும் அவளுக்கு அவளை கண்டிக்க மனம் வரவில்லை. ஒரு பெண்ணின் அழகு எந்த விதத்திலாவது அதிகப்படுத்தப்படுமானால் அந்த முறையையும் ஒத்துக் கொள்ள வேண்டியது தானே?

"உன் வாயைத் திறந்து காட்டு" என்று அவள் ருலானுக்கு உத்தரவிட்டாள். அப்பெண் வாயைத் திறக்கவும்

ஸ்ரீமதி ஊ அதற்குள் எட்டிப் பார்த்தாள். அது வெப்பாகவும் சுத்தமாகவும் ஒரு குழந்தையினுடையதைப்போல் யிருந்தது. பற்கள் வெண்மையாகவும், உறுதியாகவும் இருந்தன. அவ் வாயிலிருந்து ஒரு இனிய சுகந்தம் வந்தது.

அவள் ருலானின் மேலாடைகளைத் தூக்கி உள்ளாடைகளைப் பரிசோதித்துப் பார்த்தாள்; எல்லாம் பனியைப்போல் தூயதாகவும், மணம் நிறைந்ததாகவும், அழகிய பூ வேலைப் பாடுகள் செய்யப்பட்டவையாகவும் இருந்தன.

அவள் அப்பெண்ணின் கைகளை எடுத்து உள்ளங்கைகளை முகர்ந்து பார்த்தாள். அவற்றிலும் வாசனைத் திரவியங்கள் பூசப்பட்டிருந்தது. அவளுடைய தலையிலிருந்து சுகந்தமான மணம் வந்தது. அவள் முன்பு உபயோகித்து வந்த அந்த இனிய மணம் இப்போது ருலானின் உடலிலிருந்து வீசியது.

ஸ்ரீமதி ஊ அன்புடன், "நீ நிச்சயமாய் தேர்ந்து விடுவாய் குழந்தாய்! உன்னுடைய சரீரத்தில் ஒரு குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியாது. உன் இருதயத்தையும் உள்ளத்தையும்தான் என்னால் பரிசோதிக்க முடியாது. நீ எனக்காக அவற்றைச் சோதனை செய்ய வேண்டும். முதலில் சரீரம்தான் வருகிறது. ஆனால் பின்னால் நிற்கப்போவது உன்னுடைய ஆத்மாதான்" என்றாள்.

ருலான் சிரத்தையுடன், "நீங்கள் கூறியது ஒன்றைக்கூட நான் மறக்க மாட்டேன் அம்மா!" என்றாள்.

த்ஸேமோ இன்னும் நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்குள் வந்துவிடுவான் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவையெல்லாம் இங்கு நடந்துகொண்டிருக்கும் போதே, அவன் நீர் மார்க்கமாக அல்லாமல் ஆகாயமார்க்கமாக அவ்விட்டை அணுகி வந்துகொண்டிருந்தான் என்பதை யாரே அறிவர்? அவன் நதி மார்க்கமாக வராமல் ஆகாய விமானத்தில் வந்து நகரத்தின் தென்புறத்து சுவருக்கு அருகே இறங்கினான். தலை நகரத்திலுள்ள மேலதிகாரி, அவன் வீட்டிற்குத் திரும்பும் விஷயத்தைத் தெரிவித்தார், அவனுக்காக ஒரு சர்க்கார் விமானத்தையும் ஒரு மாலுமியையும் அனுப்பி வைத்தார். ஊ குடும்பத்தின் பெயர் அவ்வளவு பிரக்யாதி பெற்றிருந்தது!

மாலுமி, ஒருவருமற்ற ஒரு வயற்காட்டில் தனது பிரயாணியை இறக்கிவிடும்போது, அவனைச் சந்திப்பதற்குக்கூட ஒரு வரும் வரவில்லையே என்று நினைத்துப் போனான். ஆனால் த்ஸேமோ அதற்கு நகைத்தான்.

"இது என்னுடைய சொந்த ஊர். என் வீட்டிற்கு நானே சென்று விடுவேன்" என்றான்.

ஆதலால் அந்த விமானம் ஒட்டுபவன் மீண்டும் ஆகாயத்தில் எழும்பிச் சென்றுவிட்டான். த்ஸேமோ மௌனமாக வீட்டை நோக்கி நடக்க வாரம்பித்தான். பார்த்தவர்கள் அவனைக் குசலப்பிரசனம் விசாரித்தார்கள். சிலர் அதிசயத்துடன் விழித்தவாறு அவன் எப்படி வந்தான் என்று விசாரித்தனர். "நான் காற்றிலே பறந்து வந்தேன்" என்று அவன் கூறியதைக் கேட்டு அவர்கள் ஆச்சரியமும், திகைப்பும் அடைந்தனர்.

குழந்தைகளும், பொழுது போக்கற்றவர்களும் இரண்டாவது சின்ன எஜமானர் வருகிறார் என்னும் விஷயத்தைத் தெரிவிப்பதற்காக முன்னால் ஓடினர். ஆனால் த்ஸேமோ நடந்த வேகத்தில் அவன் அவர்களுக்குப் பின்னாலேயே வந்து கொண்டிருந்தான். ஆகவே வாசற் காப்போனின் மணியை இறைக்க இறைக்க ஓடிவந்து கூறிக்கொண்டிருந்த செய்தியை ஸ்ரீமதி ஊவும் ருலானும் கேட்டுக் கொண்டிருக்கும்போதே த்ஸேமோ அவள் பின்னாலேயே வந்து விட்டான்.

நியாயமாக அவன் முதன் முதலில் தன் தந்தையைப் பார்க்கச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவனுக்குத் தான் முன்னமேயே லியாங்மோ தனது தந்தையின் வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பதை எழுதியிருக்கிறானே! அவன் தன் தாயைப் பார்ப்பதற்கு முன்னால் வேறு ஒருத்தியின் முகத்தில் விழிக்க விரும்பவில்லை. ஆகவே அவன் வந்ததும் நேராக ஸ்ரீமதி ஊவின் அறையை நோக்கிச் சென்றான். அவளுடன் தனது சொந்த மனைவியான ருலான் இருப்பதைக் கண்டதும் மிகுந்த ஆச்சரியம் கொண்டான்.

ஒரு கணம், அங்கு சங்கடமான நிலை ஏற்பட்டது. ஏனெனில் பழைய வழக்கப்படி அவன் தனது தாயின் முன்பு மனைவிக்கு முகமன் கூறக்கூடாது. அவனை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும்படி ருலான் அவனுடைய உதவிக்கு வந்தாள். அவன் மிக்க அடக்கத்துடன் பின்புறம் தள்ளி நின்றுகொண்டு அவனுக்குச் சமாளித்துக்கொள்ள இடைவெளி கொடுத்தான்.

"அப்பா, மகனே, கடைசியாக வந்து சேர்ந்தாயா?" என்று கூறி ஸ்ரீமதி ஊ அவனை வரவேற்றாள்.

அவள் தனது கைகளை நீட்டி எல்லா தாய்மார்களும் செய்வதுபோல் அவனுடைய தோள்களையும் கைகளையும்

பிடித்துப் பார்த்தாள். "நீ முன்னைக் காட்டிலும் இப்பொழுது இளைத்திருக்கிறாய்! ஆனால் உடம்பு ஆரோக்யத்துடன் நன்றாக இருக்கிறதுபோல் தோன்றுகிறது" என்று கூறி அவனுடைய சிவந்த முகத்தை நோக்கினாள்.

"நான் நன்றாகயிருக்கிறேன். ஆனால் ரொம்பவும் வேலையிருக்கிறது...மூச்சு விடுவதற்குக்கூட நேரமிருப்பதில்லை. அம்மா, நீ—சுகமாக இருப்பதாகத் தோன்றுகிறது. நான் போனபொழுது இருந்ததைவிட இப்போது நன்றாக இருக்கிறாய்" என்றான் த்ஸேமோ.

அவர்கள் இன்னும் என்ன என்னவோ பேசிக்கொண்டனர். ருலான் காத்திருந்தபடி இத்தனை நேரமும் நின்றிருந்தாள். இந்த பொறுமையைக் கண்டு த்ஸேமோ அதிசயக் கடலில் மூழ்கினான். ருலானு இவ்வளவு பொறுமையாக இருக்கிறாள்? அவனுக்கு மேலும் அதிசயம் உண்டாகும்படி அவனுடைய தாய் பின்புறம் திரும்பி ருலானின் கையைப் பிடித்து இழுத்து அவனை முன்னால் கொண்டு வந்தாள்.

"இவள் மிகவும் நன்றாக நடந்து கொண்டாள். மிகவும் பணிவாக இருந்தாள். இப்போது மிகவும் கஷ்டப்பட்டுத் தேர்ந்திருக்கிறாள்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

தனது தாயின் வாயிலிருந்து தனது மனைவியைப்பற்றி இவ்வார்த்தைகளைக் காட்டிலும் த்ஸேமோவிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கக்கூடியது வேறென்ன இருக்கிறது! சக்தி வாய்ந்த தாய்மார்களின் புதல்வர்களின் இயல்பின்படி, அவளுடைய புகழ்ச்சி அவனுக்கு மிகவும் தேவையாக இருந்தது. தான் செய்த காரியத்தை அவள் புகழவில்லையே என்ற வருத்தம் அவனுக்கு உள்ளூர இருந்து வந்தது. இதற்கு முன்பு அவள் ருலானைப் புகழ்ந்ததேயில்லை. தன் தாய் அவனைப் புகழவில்லையே என்பதுகூட அவன் ருலானிடம் கொண்ட கோபத்திற்கு ஒரு காரணமாக இருந்தது. இதை ஸ்ரீமதி ஊ இப்போது புரிந்துகொண்டாள். அவனுடைய மகிழ்ச்சியை அவனுடைய அழகிய முகத்தில் தோன்றிய புன்னகையிலும், பளபளவென்று பிரகாசித்த கண்களிலும் அவள் கண்டாள். அவன் மிகவும் அசிரத்தையுடன் பேசுவது போல் ருலானுடன் இரண்டொரு வார்த்தைகள் பேசினான். பெரியவர்கள் முன்னிலையில் அவர்கள் தாராளமாகப் பழகக் கூடாதல்லவா!

"நீ நன்றாக இருக்கிறாயா?"

"மிக்க வந்தனம். நான் நன்றாக இருக்கிறேன்...நீங்கள்?"

இந்தச் சில வார்த்தைகளே அவர்கள் வாயால் பேசிக் கொண்டது. ஆனால் அவர்களுடைய கண்கள் அதிகம் பேசிக் கொண்டன. ருலான் தனது விழிகளை உயர்த்தி அவனுடைதைச் சந்தித்தாள். அவளை இவ்வளவு அழகாக அவன் முன்பு ஒருபோதும் பார்த்ததில்லை. சிவப்பு பட்டாடை அவளுக்கு மிக்க பொருத்தமாக யிருந்தது. பிடிப்பாக தைத்திருந்த கழுத்து அவளுடைய கழுத்தின் முன்புறத்தை மிக அழகாகக் காட்டிற்று.

அவன் தன் கண்களை அப்பால் எடுத்துக்கொண்டு, முகம் சிவக்கத் திடுமாற்றத்துடன் தன் தாயை நோக்கினான். "அம்மா, உனக்கு என் மனப்பூர்வமான நன்றி. நீ அவளுக்குக் கற்பிப்பதற்காக இத்தனை சிரமம் எடுத்துக் கொண்டு...."

அவனைப் புரிந்துகொண்ட ஸ்ரீமதி ஊ பதிலளித்தாள். "மகனே, கடைசியாக இப்போது நான் சொல்கிறேன். நீ நல்ல பெண்ணுக்குப் பார்த்துத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய்" என்றாள்.

ருலானின் கண்களில் நீர் நிறைந்ததைக் கண்டான், அவள். அவளுடைய உள்ளத்தில் இதுவரை இருந்திராத ஒரு கருணை வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இந்த இளைஞர் கள்தாம், எவ்வளவு நிர்கதியாகக் கிடக்கிறார்கள்! என்னதான் ரூரத்தனமாக அவர்கள் பேசியபொழுதிலும் பெரியவர்களின் ஆமோதிப்பு கிடைக்காவிட்டால், எப்படித் தவிக்கிறார்கள்?

'இளையவர்களிடம் பொறுமை காட்டுங்கள். ஏனெனில் அவர்கள் தங்களைப் பிறப்பிக்கச் சொல்லி நம்மிடம் கூறுவ தில்லையே' என்று ஒருமுறை ஆண்ட்ரூ அவளுக்குக் கூறினார். அன்று பெங்மோ, நேரங்கழித்து வந்தான் என்பதற்காக அவனிடம் அவள் கோபம் கொண்டாள்.

'நானும் என்னைப் பிறப்பிக்கச் சொல்லி யாரிடமும் கேட்கவில்லையே' என்றாள் அவள் தணியாத கோபத்துடன்.

அவர் அவளை ஒரு நீண்ட பார்வை பார்த்தார். 'ஆம் நீங்கள் கஷ்டப்பட்டிருக்கிறீர்கள் என்ற ஒரு காரணத்தால் தான் நீங்கள் அந்தக் கஷ்டம் மற்றவர்களுக்கு ஒருபோதும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அல்ப புத்தி படைத்த வர்கள்தாம் அம்மாதிரி பழிக்குப் பழி செய்ய வேண்டு மென்பர். நீங்கள் இதற்கு மிகவும் அப்பாற்பட்டவர், அம்மா' என்றார்.

அவள் கோபத்தை விழுங்கியவாறே, இதை ஒப்புக் கொண்டாள். அவர் அவளுடைய விஷயத்தை விட்டுவிட்டு, உலகத்தின் இயல்புகளில் ஈடுபட்டார். 'துன்பம் என்பது என்ன? பலமுள்ளவர்களுக்கு அது ஒரு படிப்பினையாக அமையாவிட்டால் அதன் பொருள்தான் என்ன? எளியவர் களுடைய துன்பத்தை வலியவர்கள் நீக்க வேண்டாமா? நமக்கு எதற்காக அது கொடுக்கப்படுகிறது? அதன் கசப்பான அனுபவத்தை நாம் உணர்ந்து அதை உலகத்தை விட்டே நீக்கவேண்டும் என்று பாடுபடுவதற்காகத்தானே? இல்லா விடில் இவ்வுலகமே ஒரு நரகம் ஆகிவிடாதா?' என்றார்.

இந்த வார்த்தைகளை நினைத்துக் கொண்டதும், இந்த இரண்டு பேரையும் எவ்விதமாவது இன்பமாக வாழச் செய்ய வேண்டுமென்ற பேராவல் அவள் மனத்தில் எழுந்தது. அவள் ருலானுடைய கையையும் த்ஸேமோவினுடைய கையையும் எடுத்துப் பிணைத்து விட்டாள்.

"எனக்காக நீ செய்யவேண்டிய கடமை தீர்ந்து விட்டது. மகனே, அவளை அழைத்துக்கொண்டு உன்னுடைய அறைக்குச் சென்று அடுத்த அரைமணி நேரத்தை அவளோடு தனியே கழி. பிறகு நீ உன் தந்தையைப் பார்த்துப் பேசலாம்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவர்கள் இருவரும் கைகோர்த்த வண்ணமே செல்வதைப் பார்த்தவாறு அவள் புன்னகையோடு உட்கார்ந்திருந்தாள். பிறகு சற்று நேரம் புகை பிடித்தாள்.

* * *

அடுத்து வந்த பத்து நாட்களுக்கும் வீடு ஒரே கோலா கலத்தில் மூழ்கியிருந்தது. தூரத்து உறவினர்கள், நெருங்கிய உறவினர்கள் யாவரும் த்ஸேமோவைப் பார்க்கவும் அவளோடு பேசவும் விரும்பி வந்தனர். வரப்போகும் யுத்தத்தைப் பற்றியும் சர்க்கார் உள்நாட்டில் வந்து இனி அமையப் போவதைப் பற்றியும் அவனுடைய அபிப்பிராயம் என்ன வென்று விசாரித்தனர். இந்தக் கலவரங்களினால் அரிசியின் விலை உயருமா? அன்னியர்களாகிய வெள்ளையர் கிழக்குக்கரை குள்ளர்களோடு சேர்ந்து போரிடுவார்களா அல்லது எதிர்த்துப் போரிடுவார்களா, என்பது போன்ற பிரச்னைகளை அவனிடம் கேட்டுத் தீர்த்துக்கொள்ள விரும்பினர்கள். எதிரியால் தோற்கடிக்கப்படுவோம் என்று ஒருவரும் எண்ணவில்லை. நேரே எதிர்த்து நின்று போரிடுவதா, அல்லது ரகசிய வழி களில் அவர்களைத் தாக்குவதா என்பதுதான் கேள்வியாக

இருந்தது. இளைஞனை த்ஸேமோ நேருக்கு நேர் தாக்கு வதையே ஆதரித்தான். இதைப் பற்றி ஒன்றும் அறியாத ஸ்ரீமான் ஊ, அவன் கூறுவதையே ஆமோதித்தார்.

குடும்பத்தாரின் மத்தியில் அமர்ந்து கொண்டிருந்த ஸ்ரீமதி ஊ இதையெல்லாம் கவனிப்பதும் தனது சிறிய புகைக் குழாயைப் பிடிப்பதுமாக இருந்தாள். சிறு குழந்தைகளுக் காகச் செய்ய வேண்டியதைப் பற்றியும் அல்லது பணிப் பெண்களை அடக்கமாக இருக்கும்படி உத்தரவிடுவதும் போன்ற சிறு சிறு காரியங்களுக்காக தவிர வேறெதற்கும் அவள் பேசவில்லை. அவள் மனத்திற்குள் இத்தனை நாட்கள் வந்த விரோதிகளைப் போல் இப்போது வந்திருக்கும் விரோதி களையும், காலம் தாமதித்து ரகசியமாக எதிர்ப்பதில்தான் வெற்றி கிடைக்கும் என்று நம்பினாள். அவள் தன் மனத் திற்குள் வெள்ளையர்களை உதவிக்காக தங்கள் நாட்டிற்குள் வரும்படி அழைப்பதை ஆதரிக்கவில்லை. இந்த உலகில் தன் இனத்தைச் சேராத ஒருவனுக்கு மற்றவன் உதவி செய்வ தென்றால் பதிலுக்கு அவனிடமிருந்து மிக அதிகமான ஒன்றை எதிர்பாராமல் ஏதேனும் செய்வானா? அது நியாயமும் ஆகாது. தன்னைச் சேராத ஒருவனிடமிருந்து ஒன்றையும் பெற்றுக் கொள்ளாமல் உதவி செய்வது நீதிக்கு மாறானது.

ஆனால் அவள் மௌனத்தையே கடைபிடித்தாள். என்னதான் அவளுக்கு அவ்வீட்டில் மதிப்பு இருந்தாலும், அவள் ஒரு பெண்தானே? பல நாட்களுக்கு முன்பு, ஆண்ட்ரூ வோடு அவள் அனுபவித்த அச் சுதந்திர நிலையில் இருந்த போது, அவள் மனித இயற்கைகளைப் பற்றி அவரோடு வாதித் திருக்கிறாள்.

'நீங்கள் கடவுள்மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். நான் தர்மத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். உங்களு டைய இலட்சியம் வேறு; என்னுடைய இலட்சியம் வேறு' என்று கூறினாள் அவள்.

'அவை இரண்டும் ஒன்றுதான்' என்றார் அவர்.

குடும்பத்தாரின் மத்தியில் உட்கார்ந்திருந்தபோதும், இன்று அவளுடைய மனத்தில் தனிமை யுணர்ச்சி பரவி அவளுக்கு ஏக்கத்தைக் கொடுத்தது. இங்கு ஆண்ட்ரூ வந்ததே யில்லை. இனி வரப்போவதுமில்லை.

அவள் திடீரென்று த்ஸேமோவை நோக்கி, "இந்த வெள்ளையர்கள் இருக்கிறார்களே, அவர்கள் இப்போது நம்

நாட்டிற்குள் வந்து புகுந்து கொண்டாலும், பிறகு நம்மால் அவர்களை விரட்ட முடியுமா?" என்று கேட்டாள்.

"இப்போது இருக்கும் நிலையைத்தான் நம்மால் யோசிக்க முடியும்" என்றான் அவன்.

"அது நம்முடைய மக்களின் முறையல்லவே. நாம் எப்போதும் நூறாண்டுகளுக்கு நடக்க வேண்டியதைப் பற்றி யல்லவா சிந்திப்போம்" என்று பதிலுக்குக் கூறினாள் அவள்.

"சில நூற்றாண்டுகளுக்குள், நாம் எப்படியும் அவர்களை விரட்டி விடலாம்" என்றான் அவன்.

அவள் ஆண்ட்ரூவை ஒரு முறை, 'இந்த ஆத்மாவின் தனித்தன்மைக்கு நிறபேதம், பழக்க வழக்கம், தேசபக்தி, பகைமை இவையெல்லாம் உண்டா?' என்று கேட்டாள்.

'இல்லை. இவையெல்லாம் பக்குவமடைவதற்கு முன் நிற்கும் பல படிகள். பல நிலையிலுமிருக்கும் ஜனங்களை, நீங்கள் எல்லா நிறத்தவர்களிலும், மதத்தவர்களிலும் காண லாம்' என்று கூறினார்.

'அப்படியானால், மக்களுக்கும் மக்களுக்கும் தேசத்திற்கு தேசமும் ஏன் யுத்தம் ஏற்படுகிறது?' என்று கேட்டாள்.

'மிகக் கீழ்த்தரமான ஜனங்களுக்கிடையே யுத்தம் ஏற் படுகிறது. எந்த தேசத்தில் வேண்டுமானாலும் பாருங்கள், எத்தனை சொற்ப ஜனங்கள் யுத்தத்தில் கலந்து கொள் கிறார்கள்! அவர்களும் எவ்வளவு வேண்டா வெறுப்போடு சண்டை செய்கிறார்கள்! பக்குவமடையாத தாழ்ந்த நிலையி லுள்ளோர்தான் யுத்தத்தை விரும்புகின்றனர்' என்றார்.

இந்தப் பேச்சின் பிரதிபலிப்பு ஸ்ரீமதி ஊவின் மனத் திரையில் நிழலாடியது.

த்ஸேமோ, மிக உற்சாகமாக, படைகளின் அணிவகுப்பு களைப் பற்றியும் டாங்கி, குண்டு போடும் ஆகாய விமானங்கள் ஆகியவைகளைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தான். அவன் மனமோ இதில் கலவாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. அவளுக்கு இதிலெல்லாம் சிறிதும் உற்சாகம் ஏற்படவில்லை. கடைசியாக, அவள் தன்னை மறந்து பெரிதாகக் கொட்டாவி விடவும், எல்லோரும் திரும்பி பார்த்தனர்.

அவள் சிரித்துவிட்டு, "நீ என்னை மன்னிக்க வேண்டும். எனக்கோ வயதாகிக் கொண்டு வருகிறது. இளமையின்

உற்சாகம் நிறைந்த இந்த போர் விஷயங்களெல்லாம் எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை" என்று கூறி எழுந்தாள். இன் உடனே அவளுக்கு உதவியாக வந்தாள். எல்லோருக்கும் புன்னகையின் மூலமாகவும் தலையை அசைத்தும் வந்தனம் கூறிவிட்டு, அவள் தன் அறையை நோக்கிப் புறப்பட்டாள்.

பதினேழாம் நாள் த்ஸேமோ திரும்பிச் சென்றான். ஆகாய விமானம் அவனை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தது. இம்முறை, அவன் பறந்து செல்வதைப் பார்ப்பதற்காக, உறவினர்கள் ஊரார் யாவரும் ஒருங்கே வந்து குழுமினர். ஸ்ரீமதி ஊ அவர்களோடு செல்லவில்லை. இந்த பத்து நாட்களும் அவன் பேசிய பேச்சுக்களெல்லாம் அவளுக்கு அலுப்பை தான் மூட்டின. ஒரு இளைஞன் இம்மாதிரி யுத்தத்திலும் மரணத்தின் வாயிலிலும் இருந்து தன் காலத்தைக் கழிப்பது மிகவும் பாவமான செயல் என்று அவளுக்குத் தோன்றியது. இதில் பயனென்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. இதனால் அவனுக்கும் பலனில்லை. அவனுடைய குடும்பத்துக்கும் பலனில்லை. வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதே ஒரு பெரும் வெற்றிதான். பகைவனை எதிர்ப்பதும் மரணத்தின் முன் சென்று நிற்பதும், வாழ்க்கைக்கு அதிகப்படியானது. ஆனால் இதை அவள் கூறியபோது, அவன் பொறுமையை இழந்து, "அம்மா, இதெல்லாம் உனக்கு ஒன்றும் புரியாது" என்று கத்தினான்.

இளைஞர்களின் இவ்வழக்கமான கூச்சலைக் கேட்டு அவள் புன்னகை புரிந்துவிட்டு மௌனமானாள். அவனுக்குத் தன் ஆசிகளைக் கூறி, அவனுடைய வந்தனங்களைப் பெற்றுக் கொண்டு, அவனுக்கு விடை கொடுத்தனுப்பினாள். அவன் மறுபடியும் போவதைப் பற்றி அவளுக்கு வருத்தம் உண்டாக வில்லை. அவனுடைய பேச்சுக்கள் குடும்பம் முழுவதையும் ஒரு கலக்கு கலக்கிவிட்டது. முக்கியமாக சிறிய சகோதரனாகிய என்மோவை, மிகவும் பயமுறுத்தி விட்டது. என்மோ கறுப்பாகவும் தடித்தும் ஒரு குடியானவப் பையனைப்போல் வீட்டிற்கு வந்திருந்தான். அவன் முன்பு பார்த்தபோது இருந்ததைவிட இப்போது சிறிது உயர்ந்திருந்தான். அவள் அவனுடன் சாதாரணமாகப் பேசிக்கொள்ளும் வார்த்தைகளைத் தவிர வேறெதுவும் பேசவில்லை. இந்தக் கலவரங்கள் எல்லாம் ஓயட்டும் என்று காத்திருந்தாள். வீடு அமைதி யடைந்ததும் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் அவன் பிதியடைந்திருக்கிறான் என்பது அவளுக்குப் புலப்பட்டது.

அவள் தனியே தன்னறையில் அமர்ந்திருந்தாள். த்ஸேமோ சென்றதும் ருலான் அவளைத் தேடி வந்தான். அவள் ஸ்ரீமதி ஊவின் காலடியில் உட்கார்ந்து தனது தலையை அவளது மடிமீது சாய்த்துக்கொண்டாள். ஸ்ரீமதி ஊ தனது மேடன் ஆடை கண்ணீரால் நனைக்கப்படுவதை உணர்ந்தாள்.

"இதென்ன கண்ணீர்?" என்றாள் ஸ்ரீமதி ஊ அன்புடன்.

"நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தோம்" என்றாள் ருலான் தாழ்ந்த குரலில்.

"அப்படியானால் இது ஆனந்தக் கண்ணீர்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவள் அப்பெண்ணின் தலையை அன்புடன் தடவிக் கொண்டிருந்தாள். ஆனால் மேலே ஒன்றும் கூறவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் ருலான் எழுந்து தனது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ஒரு புன்முறுவல் செய்து விட்டுச் சென்று விட்டாள்.

* * *

வாழ்க்கையில், அடுத்த கணத்தில் நடக்கப்போவது இன்னதென்று நமக்கு முன்னமே தெரிந்து விட்டால், வாழ்க்கையை நாம் சகிப்பதுதான் எப்படி? கோலாகலமும் கொண்டாட்டமுமாக இருந்த வீடு, ஒரே கணத்தில் துயரக் கடலில் மூழ்கியது. ஆகாயத்தில் மேகங்களுக்கு இடையே என்ன நடந்ததென்பதை யாரே அறிவர்? அன்று காலை நேரத்தில் த்ஸேமோ விமானத்தில் ஏறிச்சென்று அரைமணி நேரமே ஆகியிருக்கும். நிலத்துக் காரியஸ்தன் பதைபதைப்புடன் ஓடி வந்தான். அவன் பின்னால் பண்ணை வேலையாட்கள் இராமத்தார் யாவரும் அழுது புலம்பியவாறு ஓடி வந்தனர். பெண்கள் தலைவிரி கோலமாகக் கதறிக்கொண்டு வந்தனர். அவர்கள் போட்ட இரைச்சல் ஸ்ரீமதி ஊவின் அறைக்கும் எட்டியது. ருலான் தன்னை விட்டுச்சென்றதுமே, அவள் சிறிது நேரம் தனித்திருக்க எண்ணி புத்தக அறைக்குச் சென்றாள். இந்த அழுகுரலையும் தன்னுடைய பெயரைச் சொல்லிக் கூச்சலிடுவதையும் அவள் கேட்டாள். உடனே என்ன நடந்தது என்பது அவளுக்குப் பளிச்சென விளங்கி விட்டது.

அவள் எழுந்து தன்னுடைய அறையை விட்டு வெளியே சென்றாள். அவர்கள் அதற்குள் அங்கு வந்து சேர்ந்தனர்.

ஸ்ரீமான் ஊ தமது கண்களிலிருந்து தாரை தாரையாக நீர்வழிய முதலில் வந்து கொண்டிருந்தார். மல்லிகாகூட மற்றவர்களுக்குப் பின்னல் அங்கு வந்து நின்று கொண்டிருந்தாள். அனுதைக் குழந்தைகள், அவர்களுடைய கிழவி, வேலைக்காரர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் யாவரும் வந்து கூடி விட்டனர். திறந்தபடியே யிருந்த வாசற்கதவின் வழியாக தெருவில் போகிறவர்களும் வந்து நிறைந்து விட்டனர்.

"நம்முடைய பிள்ளை..." என்று ஆரம்பித்த ஸ்ரீமான் ஊவினால் மேலே ஒன்றும் கூற முடியவில்லை.

காரியஸ்தன் அதைக் கூறி முடித்தான். "நம்முடைய கடைசி வயலில் ஆகாயத்திலிருந்து ஏதோ நெருப்புப் பற்றிக் கொண்டு வந்து கீழே விழுவதைப் பார்த்தோம். நாங்கள் அது என்ன வென்று ஓடிப்போய்ப் பார்த்தோம், ஐயோ அம்மா! நாலைந்து கம்பிகளும் ஒரு யந்திரமும் இன்னும் ஏதோ சில சாமான்களும் விழுந்து கிடப்பதைப் பார்த்தோம். வேறு ஒன்றும் தென்படவில்லை, சரீரம்கூட அகப்படவில்லை" என்றான்.

இவ்வார்த்தைகள் இடிவிழுந்தது போல் அவள் நெஞ்சில் விழுந்தன. ஆனால் அவள் அதை முன்னமே அறிவாள்.

"புதைப்பதற்குக் கூட ஒன்றும் மிஞ்சவில்லை" என்றார் ஸ்ரீமான் ஊ துக்கத்துடன். அவர் அவளைத் திகைப்புடன் பார்த்து, "ஒரு மணி நேரத்துக்கு முன்னால் உயிரோடு நம் முடைய பிள்ளை என்று இருந்தவன் அதற்குள் எப்படி ஒன்றுமில்லாமல் போக முடியும்?" என்று கேட்டார்.

அவளுக்கேற்பட்ட துக்கம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் உடனே அவளுக்கு குலானின் ஞாபகம் வந்தது- "அவனுடைய இளம் மனைவியைத்தான் நாம் இப்போது முதலாவதாகக் கவனிக்க வேண்டும்" என்று அவருக்கு நினை ஊட்டினாள் அவள்.

"ஆம், ஆம்" என்று எல்லோரும் ஆமோதித்தனர். "ஒரு வேளை அவள் தன்னுள் மகிழ்ச்சியைக் கொண்டிருக்கலாம். அவர்கள் பத்து நாட்களாகக் கூடி யிருந்திருக்கின்றனர். என்னே கடவுளின் கருணை! அவளுக்குப் பிள்ளைப் பேறு உண்டாகுமானால் அது உங்களுக்குப் பெருத்த ஆறுதலைக் கொடுக்கும், அம்மா, ஐயா—" என்றனர்.

இந்தப் புதிய நம்பிக்கையில் ஸ்ரீமான் ஊவின் கண்ணீர் சிறிது வற்றியது. "நீ அவளிடம் போ. அவளுக்கு ஆறுதல் கூறி அவளைப் பார்த்துக் கொள்" என்று உத்தரவிட்டார் ஸ்ரீமான் ஊ.

ஆகவே ஸ்ரீமதி ஊ, த்ஸேமோ சிறிது நேரத்திற்கு முன்பு தன் இளம் மனைவியோடு ஆனந்தமாக வாழ்ந்த அம்மறைவை நோக்கித் தனியே சென்றாள். மெல்ல மெல்ல கூட்டமும் கலைந்தது. ஸ்ரீமான் ஊ மல்லிகாவோடு தம் மறைக்குச் சென்று விட்டார். வாசற் கதவு சார்த்தப்பட்டது. காரியஸ்தன் வேலையாட்களைத் திரும்ப நிலங்களுக்குச் செல்லும்படி உத்தரவிட்டான். தான் மட்டும் ஸ்ரீமதி ஊவின் உத்தரவுகள் கிடைக்கும்வரை பொறுத்திருந்து பார்த்து வருவதாகக் கூறினான். வாசற் கதவருகே இருக்கும் அறையில் உட்கார்ந்து அவளுடைய உத்தரவை எதிர்பார்த்திருந்தான்.

குழந்தைகள் கோவிலுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். அங்கே அக்கிழ பூசாரி, ஊதுபத்திகளைக் கொளுத்தி வைத்து, இறந்து போன மகனின் பொருட்டு, மந்திரங்களை ஓதி பூசை செய்தான்.

பழம் பெரும் கடவுள்களாகிய அவர்களை நோக்கி அவன், "இந்த நாட்களில் காரியங்கள் எல்லாம் கண் மூடித்திறக்கு முன் நடந்து விடுகின்றன. இறந்து போகிறவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வதற்குக்கூட நேரம் கிடைப்பதில்லை. இந்த க்ஷணம் உயிரோடு இருக்கிறார்கள். அடுத்த கணம் மறைந்து விடுகிறார்கள். இதுதான் நமக்குத் தெரிகிறது. அவளுடைய ஆத்மாவைத் தேடிக் கண்டு பிடியுங்கள். ஆகாயத்தில் சஞ்சரிக்கும் அதிதேவதைகளே! அவனைக் கண்டுபிடித்து, அவனைச் சேர்ந்தவர்களோடு சேர்த்து அவனுடைய ஆத்மா சாந்தி அடையும்படி செய்யுங்கள். ஓ, தெய்வங்களே! அவன் மறுபடியும் பிறப்பதாக இருந்தால், இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனாகிய அவனை, இங்கேயே வந்து பிறக்கும்படி அருளுங்கள்" என்று பிரார்த்தனை செய்தான் கிழ பூசாரி.

* * *

தான் மிக மிக சந்தோஷமாக வாழ்ந்த அதே இடத்தில் குலான் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளருகே உட்கார்ந்திருந்த ஸ்ரீமதி ஊ அவளுடைய தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள். இருவரும் மௌனமாக யிருந்தனர். பேசுவதற்கு என்ன இருக்கிறது! இந்த இரண்டு பெண்மணிகளும் அன்பினாலும் சோகத்தினாலும் பிணைக்கப்பட்டிருந்தனர். ஸ்ரீமதி ஊவிற்குத் தன்

அனுபவத்தை ருலானுக்குச் சொல்ல வேண்டுமென்ற ஆவல் தோன்றியது. அவள் எவ்விதம் ஆண்ட்ரூவின் மறித்த உடலைப் பார்த்தாள்; என்ன உணர்ச்சி கொண்டாள் என்பதை கூற அவளுள்ளத்தில் பெரும் ஆவல் எழுந்தது. ஆனால் அவனால் அதைப்பற்றி இப்பொழுதோ அல்லது வேறெப்பொழுதோ பேச முடியாது. ஆனால் ருலானுடைய நிலை அவளுடைய திலும் கேவலமாக யிருந்தது. அவளாவது ஆண்ட்ரூவின் உடலைப் புதைத்து வைத்திருக்கிறாள். த்ஸேமோவினுடைய உடல்கூட ருலானுக்குக் கிடைக்கவில்லை. பாவம்! அவனுடைய சரீரம் துகள் துகள்களாகி, காற்றுகளினால் அடித்துச் செல்லப்பட்டு பூமியில் புதையுண்டிருக்கும். காற்றுகள் அவற்றை எங்கெங்கு எடுத்துச் சென்று சிதறி விட்டனவோ! த்ஸேமோவின் வாழ்விலிருந்து எஞ்சியிருப்பது என்ன? அவனைப் பெற்ற தாயாகிய அவளுக்கு, அவனுடைய பிறப்பும், குழந்தைப் பருவமும், பிள்ளைப் பருவமும், காளைப் பருவமும் நினைவிருந்தது. வாதம் செய்யும் அவனுடைய உறுதியான குரல் அவள் காதில் ஒலித்தது. சிரத்தையும் தன்னம்பிக்கையும் பொருந்திய அவனுடைய அழகிய முகம் அவளது கண்முன் நின்றது. இப்பொழுது அவன் இறந்து விட்டான் என்ற உண்மையும் அவளுக்குத் தெரிந்துவிட்டது. அவளுக்கும் அவளுடைய மகனுக்கும் இருந்த தொடர்பு முற்றிலும் சரீரத்தைச் சார்ந்ததாகவே இருந்திருக்கிறது! அவளுடைய சரீரம் அழியாதிருக்கும்வரை அவனுடைய நினைவு அவளது உள்ளத்தில் என்றும் குடிகொண்டிருக்கும்.

ருலானுக்கு எஞ்சியிருப்பது என்ன? அவர்கள், இந்த பத்து நாட்களில், சரீரத்தைக் கடந்து சென்று, ஆத்ம சிநேகத்தில் இணைந்திருப்பார்களா? பெற்ற தாய்க்குக் கிடைக்காதது, இந்த இளம் மனைவிக்குக் கிடைத்திருக்குமா?

இதைக் கேட்பதற்கு இச்சமயம் வாய்ப்பாக இல்லை. அவள் மௌனமாக சிறிதும் அசைவின்றி உட்கார்ந்திருந்தாள். அவளுள்ளத்திலிருந்த சலனமற்ற தன்மை அவளருகே கவிந்து கொண்டு உட்கார்ந்திருந்த அப்பெண்ணிற்கும் சென்று ஆறுதலைக் கொடுத்தது.

முதலில் ருலான்தான் அசைந்தாள். அவள் எழுந்து, விசிப்பதை நிறுத்திவிட்டுத் தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள். "அம்மா, உங்களுக்கு நான் என்றென்றைக்குமாகக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த பத்து நாட்களில் ஒருமுறைகூட நாங்கள் சண்டையிட வில்லை" என்றாள்.

"உன்னால் இனி தனியே இருக்க முடியுமா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ அப் பெண்ணைப் பார்த்து. அவளுக்கு வியப்பு உண்டாயிற்று. அவளுக்கு அவளிடமேற்பட்ட அன்பு அதிகமாயிற்று.

"என்னால் முடியும். நான் சிறிது நேரம் தனியே இருந்து விட்டு உங்களிடம் வருகிறேன். அம்மா! உங்களிடம் நான் ஒன்று கேட்டுக்கொள்ளப் போகிறேன்" என்றாள் ருலான்.

"என்னுடைய அறையின் கதவுகள் உனக்காக எப்போதும் திறந்திருக்கும்" என்று பதிலளித்தாள் ஸ்ரீமதி ஊ. ருலான் உதவிக்காக கைகொடுத்ததைப் பற்றிக்கொண்டு எழுந்தாள் அவள். ருலானின் கை உஷ்ணமாக இருந்தது. ஆனால் அதில் நடுக்கமோ பலஹீனமோ காணப்படவில்லை. "இரவும் பகலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நீ என்னிடம் வரலாம்" என்றாள் ஸ்ரீமதி ஊ மீண்டும்.

"நான் இதை மறக்க மாட்டேன், அம்மா" என்றாள் ருலான்.

வெளியே வந்த ஸ்ரீமதி ஊ, தான் வந்ததும் த்ஸேமோவின் அறைக் கதவு தாளிடப்படும் சப்தத்தைக் கேட்டாள். அவள் நின்று சற்றே திரும்பினாள். இந்தப் பெண் கதவை தாளிட்டுக் கொண்டு தனக்கு ஏதாவது தீங்கு செய்து கொள்ளப் போகிறாளா என்ன? இல்லை, ருலானின் வழி அதுவாயிராது. அவள் தனியே உட்கார்ந்து, தனியே உறக்கமில்லாமல் தவித்து, பிறகு தானாகவே எவ்விதத்திலாவது புத்துயிர் பெற்று விடுவாள். த்ஸேமோ உயிரோடிருந்தால் அவர்கள் மீண்டும் மீண்டும் சண்டை போட்டுக்கொண்டே தானிருப்பார்கள். இந்தப் பத்து நாட்களில் அவர்கள் அடைந்த பேரின்பத்தின் பெருமை அப்போது மறைந்திருக்கும். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மிகவும் சரிநிகராக இருந்தனர். ஒருவரையொருவர் பயங்கரமாகக் காதலித்தனர். ஒருவரை ஒருவர் அடக்கியாளப் பார்த்தனர். மற்றொருவருக்குச் சுதந்திரம் அளிப்பதை இருவரும் விரும்பவில்லை. ஆனால் இனி இருவரும் எல்லையற்ற அமைதியில் மூழ்கியிருப்பார்கள்.

"அமைதி, அமைதி" என்று முணு முணுத்தது அவள் வாய். மனிதர்களின் நாவால் உரைக்கக் கூடிய எத்தனை இனிமையான வார்த்தை அது!

* * *

துக்கம் காப்பதற்கு, இறந்த உடல் இல்லாத போதிலும், முறைப்படி எத்தனை நாட்கள் துக்கம் கொண்டாட வேண்டுமோ அத்தனை நாள் கொண்டாடப்பட்டது. வீட்டில் ஒரு சவப்பெட்டி தயார் செய்யப்பட்டது. அதற்குள் த்ஸேமோவின் உடைமைகள், அவனுக்கு மிகவும் பிரியமான பொருள்கள் யாவும் வைக்கப்பட்டு, பெட்டி நன்றாக மூடப் பட்டது. புதைப்பதற்கான தினம், ஊரிலுள்ள குருக்கள்மார் களால் பார்த்துக் குறிக்கப்பட்டது. செய்ய வேண்டிய காரியங்கள் செய்யப்பட்டன. அந்திமக் கிரியைகள் நடத்தப் பெற்றன. குடும்பத்திற்குச் சொந்தமான தனி மயானத்தில் த்ஸேமோவின் சவப்பெட்டி புதைக்கப்பட்டது. அவனுடைய மரண சாஸனம் ஊ குடும்பத்தினரின் முன்னோர்கள் யாவரு டைய சாஸனமும் வைக்கப்பட்டிருந்த அறையில் வைக்கப் பட்டது.

இவையெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது, ஊரில் எங்கெங்கும் எல்லோராலும் துக்கம் காக்கப்பட்டது. ஸ்ரீமதி ஊ அதை அதன் போக்கில் விடுத்துப் பேசாதிருந்தாள். அவளும் துக்கம் காத்தாள். அப்படிச் செய்வதில் அவளுக்கு உதவி செய்வதற்கு ஸ்ரீமதி கேங் முன் வந்தாள். இரண்டு குடும்பங்களுக்கும் இடையே இருந்த போக்குவரத்து மிகவும் குறைந்து விட்டது. ஸ்ரீமதி ஊ, கடந்த பல மாதங்களிலும் அதைக் கவனித்துத்தான் வந்தாள். ஆனால் அதைத் திருத்தி அமைக்க அவள் விரும்பவில்லை. அவளுடைய உள்ளத்தில் ஏற்பட்ட புத்துணர்ச்சி, அவளுடைய மனத்தில் சதா இருந்து வந்த ஆண்ட்ரூவின் நினைவு அவளை அவளது சிநேகிதியிட மிருந்து பிரித்துவிட்டது. மேலும் குழந்தை பிறந்த இரவின் அருவருப்பான நினைவு அவளுடைய மனத்திலிருந்து இன்னும் அகலவில்லை.

ஒரு மகனையே இழப்பதாகிய இந்த துக்ககரமான சம்பவம் அவர்களை எந்த முறிவிலிருந்தும் சேர்க்கக் கூடிய தாக இருந்தது. இரு பெண்மணிகளும் முன்போல் அன்னி யோன்யத்துடன் இல்லாவிட்டாலும், மீண்டும் கூடினர். ஸ்ரீமான் கேங்கும் அந்திமக் கிரியைகளுக்கு வந்திருந்தார். இந்த மரணம் நேர்ந்திராவிட்டால் ஸ்ரீமதி கேங்கால், அவ்வளவு சகஜமாக அவ்விட்டிற்குள் வந்திருக்க முடியாது. அவள் தன்னுடைய மனஸ்தாபங்கள் யாவற்றையும் அறவே அகற்றிவிட்டுப் பழைய சிநேக பாவத்துடன் ஸ்ரீமதி ஊவைப் பார்க்க வந்தாள். வரும்போதே உரக்க அழுதுகொண்டு வந்தாள்.

"நம்முடைய குழந்தைகள் எல்லோரும் ஒன்றாக வளர்ந் தனர். என் சொந்த மகனையே இழந்து விட்டதுபோல் இருக் கிறது எனக்கு" என்றாள் அவள்.

ஸ்ரீமதி ஊ, இது உண்மை என்பதை அறிவாள். அவள் தனது தோழியை வரவேற்றாள். அவர்கள் இருவரும் முன்னுட்களைப் போலவே சிறிது நேரம் சேர்ந்து உட்கார்ந் திருந்தனர். அந்திம ஊர்வலத்தின்போது துக்கத்தைக் குறிக்கும் ஆடையை அணிந்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினாள் ஸ்ரீமதி கேங்.

ஆயினும் தங்களுடைய நட்பு ஒரு முடிவை அடைந்து விட்டது என்பதை ஸ்ரீமதி ஊ அறிவாள். அவள் தன்னுடைய சிநேகிதியின் சொந்த வாழ்க்கையில் அதிக தூரம் தலையிட்டு விட்டாள். இதன் காரணமாக ஸ்ரீமதி கேங்கால் ஒருகாலும் அவளை மன்னிக்க முடியாது. அவளுக்கு நன்றி உணர்ச்சியும் இல்லாமற் போகவில்லை. அதை அவள் தெரிவித்துக் கொண்டாள்.

"நீ அன்று மட்டும் வந்திராவிட்டால் நான் நிச்சயம் இறந்திருப்பேன். என் உயிரை நீதான் எனக்கு அளித்தாய்" என்றாள்.

அவள் பேசியபொழுது அவளுடைய பார்வையில் சிறிது கூச்சம் தென்பட்டது. தான் உயிர் பிழைத்ததற்காக அவள் நன்றி செலுத்தியபோதிலும், தான் மிகுந்த பலஹீனமான நிலையிலிருந்த அத்தேரத்தில் தன் தோழி அங்கு இருந்து விட்டாளே என்பதற்காக அவளுக்குக் கோபம் ஏற்பட்டது. ஸ்ரீமதி ஊவிடம் அவளுக்குப் பொறுமை தோன்றிய தென்னவோ உண்மைதான். இதை ஸ்ரீமதி ஊவும் அறிந்துகொண்டாள். ஆனால் இதற்காக அவள் தனது சிநேகிதியைக் குறைகூறவில்லை. ஆனால் அவளுடைய மனத்தி லிருந்த பற்றுதல் இப்போது மிகவும் குறைந்து விட்டது. ஸ்ரீமதி கேங் த்ஸேமோ இறந்து விட்டான் என்பதற்காக மனதார வருந்தினாலும் ஊ குடும்பம் ஒரு பிள்ளையை இழந்து விட்டதே என்பதற்காக முழு மனதோடு வருந்தவில்லை. இத் துயரத்தில் மட்டும் அவள் எப்போதும் ஸ்ரீமதி ஊவை மிஞ்சி நிற்பாள். முன்போல் இருந்திருந்தால் ஸ்ரீமதி ஊ இதைப் பற்றிக் கோபம் கொண்டிருப்பாள். ஆனால் இனி அதெல்லாம் இடையாது. ஸ்ரீமதி கேங்கின் பலஹீனத்தை அறிந்த அவள், அவளைக் குறைகூற விரும்பவில்லை.

முன்னொருமுறை அவள் ஆண்ட்ரூவிடம், 'சிறியவர் களுடைய மூடத்தனத்தையும் பொறுமையையும் நாம் பொறுத்துக்கொள்ள வேண்டுமா?' என்று கேட்டாள்.

அவர் பதிலுக்கு, 'ஆம், ஏனெனில் அவர்களைத் துன் புறுத்துவதால் நாம் நம்மையே துன்புறுத்திக் கொள்கிற வர்கள் ஆகிறோம். நாம் ஒருவரும், நம்மையே துன்புறுத்திக் கொள்ளாமல் அல்லது நம்மில் ஒரு பாகத்தை அழித்துக் கொள்ளாமல் மற்றவர்களை அழிக்கும்படியான இறைமை பெற்றிருக்கவில்லை. அப்படிப்பட்ட பரிபக்குவமும் நிறைவும் ஒருவரிடமும் கிடையாது' என்றார்.

'பின்னே, நாம் எப்படி அவர்களைச் சகித்துக்கொள்வது?' என்றாள் அவள். அவளுக்கு, ஒருமுறை தன் வீட்டில் பிறந்த ஒரு வேலைக்காரனின் குழந்தை ஒன்று கொல்லப்பட்டது நினைவுக்கு வந்தது. அதற்கு அவளே தன் சம்மதத்தை அளித் திருந்தாள். அது அங்கஹீனமடைந்திருந்த ஒரு பெண் குழந்தை. இவ் அதன் பிறப்பைப் பற்றி அறிவித்து அதை கொன்றுவிட அனுமதி கேட்டாள். அவள் தன் தலையை அசைத்து அதற்கு அனுமதி கொடுத்தாள். இப்போது அந் நினைவால் அவளுடைய நெஞ்சில் வேதனை படர்ந்தது.

'ஒரு அறியாப் பிராணியைக் கொல்வதற்குக்கூட நமக்கு உரிமை கிடையாது' என்றார் ஆண்ட்ரூ.

அவளுக்கு அவரிடம் அக் குழந்தையைப்பற்றி சொல்வ தற்குத் துணிவு உண்டாகவில்லை. இப்போது, தனது பல்லக்கில் அமர்ந்து தனது சொந்த மகனின் பிணக்கோல ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த இச்சமயத்தில், தான் அதை ஆண்ட்ரூ வினிடம் சொல்லாமற்போனதே என்ற வருத்தம் உண்டா யிற்று. தன் மகனை இழந்ததும் இப்போது அக்குழந்தையைக் கொன்ற பாவத்தின் சுமையை அவள் தனது நெஞ்சில் உணர்ந்தாள். முன் செய்த வினைதான் இப்போது இவ்வாறு கொண்டிருக்கிறது என்ற ஒரு மூடத்தனமான எண்ணம் அவளது மனத்தில் தோன்றியது. பிறகு அவள் அம்மூடக் கொள்கையை உதறித் தள்ளினாள். இம்மாதிரியான காரண காரியங்களில் அவளுக்கு நம்பிக்கை கிடையாது. ஆத்மாவின் ஆனந்த நிலையை அடையாதிருக்கும்வரை யாவும் சந்தர்ப்ப வசமாக, நம் வசமில்லாததாக நடைபெறுகின்றன. ஆத்மா ஒன்றில்தான் காரண காரியங்கள் அடங்கி யிருக்கின்றன. அக் குழந்தையைக் கொன்றதன் பயனாக அவளுக்குக் கிடைத்த தண்டனை என்ன? ஒன்றுமில்லை. ஏனெனில் அவள் அச்

TAMIL NADU ARCHIVES LIBRARY No. MADRAS

செயலில் புரிந்தபோது, அவளுக்குத் தான் இன்னது செய்கிறோம் என்பதே தெரியாது. ஆனால் இப்போது எல்லாவற்றையும் புரிந்துகொள்ளும்படியான நிலையில் அவள் இருக்கும்போது, அவள் தன் சிநேகிதியின் உண்மை [illegible] தான் குழந் தையானதாக இருந்தாலும், அதற்காக [illegible] வெறுப்பை மாட்டாள்.

'இனி என்னால் அவளை மீண்டும் நேசிப்பது என்பதும் முடியாத காரியம்' என்று அவள் மனம் வெகுண்டு எழுந்தது.

இந்த எழுச்சி அவளுக்கு மீண்டும் ஆண்ட்ரூவையும் அவரோடு அவள் பேசிய வார்த்தைகளையும் நினைவூட்டின. அவர் தம்முடைய வேதப் புத்தகத்திலிருந்து சில மொழிகளை வாசித்துக் காண்பித்துக் கொண்டிருந்தார்.

'நீ உன்னை நேசிப்பதுபோல் உனது பக்கத்து வீட்டுக் காரனையும் நேசி' என்று அவர் மெல்லப் படித்தார்.

'நேசிப்பதா? அது நடவாத பேச்சு' என்று அவள் மொழிந்தாள்.

அவள் எப்போதுமே அவருடைய வேதப் புத்தகத்தின் அருள் வாக்குகளை எதிர்த்துப் பேசுவதற்குத் தயாராகவே யிருப்பாள். ஒருவேளை அவளுக்குச் சிறிது பொறுமையும் இருந் திருக்கலாம்! ஏனெனில் அவர் அதிகமாக அப்புத்தகத்தையே படித்தும், அதனுடைய உபதேசங்களையே வழிகாட்டியாகவும் வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அவள் கூறியதை அவரும் ஆமோதித்தார்.

அவர் தமது தலையை உயர்த்தி, 'நீங்கள் கூறுவது சரிதான். அன்பு என்ற வார்த்தை அதற்குப் பொருத்த மல்ல. எவனாலும் தன்னுடைய அண்டை வீட்டுக்காரனை நேசிக்க முடியாது. அதைவிட உன்னை நீ அறிந்து கொள்வது போல அவனையும் அறிந்துகொள் என்று சொல்லலாம். அதாவது அவனுடைய கஷ்ட நஷ்டங்களையும் சூழ்நிலைகளையும் புரிந்துகொண்டு, அவனுடைய தவறுகளை, உன்னுடையதை எவ்வளவு எளிதாகப் பொறுத்துக்கொள்வாயோ அதைப் போல் பொறுத்துக்கொள். உன்னை நீ மன்னித்துவிட எவ்விதம் தயாராக யிருக்கிறாயோ அதைப்போல அவனையும் மன்னித்துவிடு என்று கூறலாம். அம்மா, இதுதான் அன்பு என்ற வார்த்தைக்குப் பொருள்' என்று கூறினார். பிறகு அவர் தமது ஆழ்ந்த கம்பீரமான குரலில் மேலும் தொடர்ந்து படிக்கலானார். அக் குரல் அவளுடைய காதில் இப்போதும் ஒலித்துக்கொண்டே யிருந்தது.

அன்றைய தினத்தின் அழகு, வாலிபனின் மரணத்தை மேலும் கோரமாக்கிக் காட்டியது. குளங்களில் நீர் தெளிந்திருந்தது. சூரிய ஒளியில் தண்மை நிறைந்திருந்தது. பட்சிகள் பாடிக்கொண்டிருந்தன. கண்ணடி ஜன்னலின் வழியாக இக்காட்சியைக் கண்ணுற்ற ஸ்ரீமதி ஊவிற்கு, துக்கம் பன்மடங்காகப் பெருகியது. அவளுக்கு ருலானின் நினைவு வந்தது. அவளும் இப்படிப் புறக்காட்சிகளை யெல்லாம் பார்க்கிறாளோ என்று பார்ப்பதற்காக, அவள் பல்லக்கின் பின்புறம் இருந்த கண்ணடி ஜன்னலின் வழியாகப் பார்த்தாள். ஆனால் அவளுக்குப் பின் வந்த ருலானின் பல்லக்கில் திரை நன்றாக இழுத்து மூடப்பட்டிருந்தது. அவளுடைய மனம் இறந்துவிட்ட தன்னுடைய மகனின்பால் சென்றது. வானத்தில் மேகங்களுக்கிடையே, அவன் மரணத்தை எவ்விதம் சந்தித்திருப்பான்? அவன் யமனை அறிந்து கொண்டிருப்பானா? அவள் த்ஸேமோவின் நினைவில் ஒன்றியவளாய், பூமியிலிருந்து மேலெழுந்து சென்று ஆகாயத்தில் வேகமாகவும் சுதந்திரமாகவும் அவன் சென்ற நிலையை சிறிது நேரம் அனுபவித்தாள். பிறகு அந்த யந்திரம் மோசம் செய்து விட்டது. அந்த மெஷின்களின் மீது அவன் அபார நம்பிக்கை வைத்து விட்டான்.

அவன் புறப்படுவதற்கு முன் அவள், "அந்த மெஷின் உன்னை பத்திரமாகக் கொண்டு சேர்த்து விடுமா?" என்று கேட்டாள் கவலையோடு.

அவளுடைய அறியாமையைக் கண்டு அவன் நகைத்து விட்டு, "அம்மா, அதெல்லாம் மந்திரசக்தி வாய்ந்தவை!" என்றான்.

அவன் அவ்விதம் கூறினானே ஒழிய, அந்த மந்திரம் இப்போது பலிக்காமல்தான் போய்விட்டது. அவனுக்குத் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் நினைத்துப் பார்க்க ஒரு சில நிமிஷங்களேனும் கிடைத்தனவோ என்னவோ! அவனுடைய பயமும் கோபமும், முடிவும் அவள் கண்முன் தோன்றின. அகண்டாகாரமாய் இருந்த வானத்திலிருந்து அவனுடைய சரீரம் பூமியை நோக்கிச் சுழன்று விழுந்தது. அவள் தனது தலையைக் குனிந்து, கையால் கண்களை மூடிக் கொண்டாள்.

பின னார்வலம் வழக்கம்போல் நடைபெற்றது. அக் குடும்பத்தில் எத்தனையோ சாவுகள் நேர்ந்து அவர்களுக்காகக் கிரியைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. தன்னுடைய சொந்த மகனுடையதாகிய இது ஒன்றையும் அவள் பொறுத்தாக

வேண்டும் போலும்! சென்ற வருஷத்து கோடையில் ஒரு நாள், பெரிய எஜமானியின் சவப்பெட்டி கோவிலிலிருந்து, இந்தக் குடும்பத்து மயானத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதன் இடத்தில், பெரிய எஜமானருடையதைக் காட்டிலும் சற்று சிறியதாக ஒரு சலவைக்கல் ஸ்தம்பம் நிறுத்தப்பட்டது. பெரிய எஜமானருக்கு அடுத்தபடியாக ஸ்ரீமான் ஊவிற்கென்று ஒரு இடம் விடப்பட்டது. அதற்கு அடுத்தது ஸ்ரீமதி ஊவிற்கும் அதற்கும் அடுத்த இடங்கள் லியாங்மோ, மெங் இவர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தன. அதற்கும் அடுத்த படியாகத்தான் இப்போது த்ஸேமோவின் காலியான சவப் பெட்டிக்காகக் குழி தோண்டப்பட்டிருந்தது. பெட்டியை குழியில் இறக்கினார்கள். ஒரு வெள்ளை சேவலைக் கொன்று அதன் இரத்தத்தைத் தெளித்தார்கள். காகிதத்தால் செய்த சில பொருள்களை எரித்தனர். ஒரு காகித விமானம் செய்யப் பட்டு அதுவும் எரிக்கப்பட்டது. இதெல்லாம் முடிந்ததும் குழியை மூடி, அதன் மீது காகிதத்தாலான கப்பல்களை வைத்தனர். சடங்குகள் யாவும் முடிந்ததும் குடும்பத்தினர் வீடு திரும்பினர். கூலிக்காக அமர்த்தப்பட்டிருந்தவர்கள், பின்னால் தங்கி பிரார்த்தனம் பாடிக்கொண்டிருந்தனர்.

* * *

அன்றிரவு தனியே தன்னறையில் இருந்த ஸ்ரீமதி ஊ, தனது துயரத்தைப் பற்றிச் சிந்தனை செய்யலானாள். அவர்கள் வீட்டிற்குத் திரும்பியதும் அவள் வேறு யாருடனும் இருப்பதை விரும்பவில்லை. ஸ்ரீமான் ஊ, உடனே சிறிது சிரமப் பரிகாரம் செய்துகொள்ள விரும்புவார் என்பதை அவள் அறிவாள். ருலான் அவள் இருதயப் புண் ஆறும்வரை அதன் வேதனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஸ்ரீமதி ஊ தனது படுக்கையில் படுத்தபடி தனது இரண்டாவது மகனைப் பற்றி எண்ணமிட்டாள். ஊ குடும்பத்தில் அவனுடைய ஸ்தானம் இப்போது காலியாகி விட்டது. அவனுடைய உடலிலிருந்து எத்தனை குழந்தைகள் தோன்றியிருப்பார்களோ? அவர்களெல்லோரும் தோன்றுமலே அல்லவோ போய்விட்டார்கள்! இதற்காகத்தான் அவள் மிகவும் துயருற்றாள். ஒவ்வொரு வம்சத்திலும் ஏற்பட்ட காலியிடங்களுக்காக அவள் மிகவும் வருந்தினாள். ஒரு இளைஞன் செத்துப்போனால் அவனோடு எத்தனையோ பேர் செத்துப் போகிறார்கள். அவள் வெள்ளையர்களுடைய அபாயகரமான யந்திரங்களையும் யுத்தங்களையும் அதன் புதிய முறைகளையும் மனதார சபித்தாள். அவற்றின் காரணமாகத் தானே எண்ணற்ற இளைஞர்கள் உயிரை இழக்கின்றனர்! பின், தான்

தன் பின்னோகள் எல்லோரையும் வீட்டிலேயிருந்து ஆயுளோடு வாழும்படி செய்யாததற்காகத் தன்னையே நொந்துகொண்டாள்.

அவளுடைய நினைவாகிய கரிய திரையில் ஆண்ட்ரூவின் நெடிய உருவம் தோன்றியது. அவர்கள் ஒருமுறை பெண்மோவின் கல்வியைப் பற்றி விவாதித்தனர். 'என்னுடைய மூன்றாவது மகனுக்குக் கல்வி போதியுங்கள். ஆனால் எங்களிடமிருந்து பிரிக்கும்படியான ஒரு விஷயத்தையும் அவனுக்குப் போதிக்காதீர்கள்' என்று கூறினாள் அவள்.

'அம்மா, நீங்கள் உங்கள் மகனை அடக்கி வைக்கப் பார்த்தால், அவன் அப்போதுதான் நிச்சயம் உங்களிடமிருந்து தப்பிச் சென்று விடுவான். நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு அடக்குகிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு அவன் விலகிச் செல்வான்' என்று கூறினார் ஆண்ட்ரூ.

தன்னுடைய நினைவில் மிகத் தெளிவாகத் தோன்றிய அவரது உருவத்தை நோக்கி அவள் இப்போது, 'நீங்கள் கூறியது தவறுயிற்று. நான் அவனை அடக்கி வைக்கவில்லை. அவன்தான் எல்லோரைக் காட்டிலும் அதிக தொலைவிற்குச் சென்றிருக்கிறான்' என்று கூறினாள்.

மறுநாள் என்றும்போல் அதிகாலையில் அவள் எழுந்திருந்தாள். அன்றைய தினம் முந்தின தினத்தைப் போலவே தெளிவாக யிருந்தது. ஆனால் அவள் மனம் அமைதியின்றி தவித்தது. நேற்றைய துக்கத்தினிடையே தான் கண்ட நாட்டுப்புறக் காட்சிகள் அவளுக்கு நினைவுக்கு வந்தன. இந்த நான்கு சுவர்களையும் கடந்து வெளியேறிச் செல்ல வேண்டுமென்ற ஏக்கம் அவளது உள்ளத்தை வாட்டியது. ஆனால் துக்கம் காத்துக்கொண்டிருக்கும் இவ்வீட்டை விட்டுச் செல்ல அவள் என்ன காரணத்தைக் கூறுவாள்? அவள் அங்கு இருக்கவும் பிடிக்காமல், அதை விட்டுப் போகவும் தோன்றாமல் சஞ்சலத்துடன் அறையில் உலாவலானாள். வீட்டில் நிசப்தம் குடி கொண்டிருந்தது. முந்தின தினத்தினால் ஏற்பட்ட கனப்பு நீங்காதவர்களாய் எல்லோரும் இன்னும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். இரு நேரம் கழித்து வந்தாள். அவளுடைய பேச்சுக்கள் ஒடுங்கிக் கிடந்தன. அவளுடைய முகம் வெளுத்துக் கண்கள் சிவந்தும் காணப்பட்டன. அவள் தன் வேலைகளைச் செய்து முடித்ததும் ஸ்ரீமதி ஊ அவளை அனுப்பி விட்டு, புத்தக அறைக்குச் சென்று புத்தகங்களை எடுத்தாள்.

திறந்திருந்த ஜன்னல்களின் வழியாக, குளிர்ந்த இனிய காற்று வந்தது. அது தனது தேகத்தின்மீது வாசனைத் தைலத்தைப் பூசுவதுபோல் தோன்றியது அவளுக்கு!

சுமார் பத்துமணி இருக்கும் பொழுது, அவள் ஏதோ காலடி யோசையைக் கேட்டுவிட்டு, நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தாள். வாசலில் அவளுடைய நான்காவது மகனுடைய என்மோ வந்து கொண்டிருந்தான்.

அவன் நாகரிகமற்ற முறையில், நாகுக்கின்றி அவளுக்கு வணக்கம் தெரிவித்தான். அவள் அவனைத் திருத்த முயலவில்லை. அவனுக்கு இப்பழக்கங்களெல்லாம் குடியானவர்களிடமிருந்து வந்திருக்கின்றன.

"உள்ளே வா, மகனே!" என்று அவள் அன்புடன் அழைத்தாள்.

அவள் அவனுடைய முரட்டுத்தனமான கையைத் தனது மிருதுவான கையில் எடுத்துக்கொண்டாள். அவன் அவளுடைய உயரத்திற்கு வளர்ந்திருந்தான் இப்போது.

"நீ என்ன, இத்தனை வேகமாக வளர்ந்து கொண்டு போகிறாய்?" என்றான் அவள் கேலியுடன்.

அவளுடைய மற்ற பின்னைகளைப் போலிருக்கவில்லை இவன். அவனிடமிருந்து வார்த்தைகளும் லேசில் வருவதாகயில்லை. சிரிப்பும் சுலபத்தில் வருவதாகயில்லை. ஆனால் அவனுடைய கண்களில் அமைதி குடிகொண்டிருப்பதையும், அவன் வெட்கப் படவில்லை என்பதையும் அவன் கண்டான். உண்மையில் அவன் எவரையும் சந்தோஷப்படுத்த முயலவில்லை. அதை அவசியம் என்றும் கருதவில்லை. அவள் அவனுடைய கைகளை விட்டு விட்டாள். அவன் அவள் முன் நின்று கொண்டிருந்தான். நீல நிற நூலாடைகளும் காலில் மொத்தத் துணியால் தைத்த செருப்புகளையும் அணிந்திருந்தான் அவன்.

"அம்மா, நான் திரும்பவும் கிராமத்திற்கே சென்றுவிட விரும்புகிறேன். நான் இங்கு இருக்க மாட்டேன்" என்றான் அவன்.

அவன் நல்ல பலசாலியாகவும் கறுகறுப்பாகவும் இருந்தான். அவனுடைய வட்டக்கரிய விழிகளையும், வெட்டி விடப்பட்ட தலைமயிரையும் வெண்மையான பற்களையும் பார்க்க அவனுக்கு அவனை நோக்கிச் சிரிக்க வேண்டும்போல் தோன்றியது.

"நீ புத்தகங்களை எவ்வளவு தூரம் படித்திருக்கிறாய்?" என்று கேட்டாள் அவள்.

"நான் ஐந்தாவது புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

அவனுடைய வயதிற்குத் தகுந்தவையே அவை! "ஆனால் நீ இனி உயர்தரப் பள்ளிக்குச் செல்ல வேண்டிய காலம் வந்து விடவில்லையா?" என்று கேட்டாள் அவள்.

"நான் புத்தகங்களை வெறுக்கிறேன்" என்றான் அவன் அவசரத்துடன்.

"புத்தகங்களை வெறுக்கிறாயா? ஆ! அப்படியானால் நீ உன்னுடைய தகப்பனாரைப் போல் இருக்கப் போகிறாய்போல் இருக்கிறது" என்றாள்.

அவனுடைய முகம் சிவந்தது. அவன் தலையைக் குனிந்து கொண்டு, "அம்மா, இல்லை. நான் அப்படியிருக்கப் போவதில்லை. நான் ஒருவர் மாதிரியும் இருக்கப் போவதில்லை. என்னை மீண்டும் கிராமத்திற்குப் போவதற்கு அனுமதிக்காவிட்டால், நான் எங்காவது ஓடி விடுவேன்" என்றான்.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் தலை குனிந்து கொண்டான். அவள் துக்கத்தையும் மறந்தவளாய் சிரித்தாள். "நான் என் பிள்ளைகளில் யாரையாவது அவன் தனக்கு இஷ்டமானதைச் செய்யக் கூடாதென்று எப்போதேனும் தடுத்திருக்கிறேனா?" என்றாள்.

"இந்த வீடு சிறையைப் போல் இருக்கிறது!" என்றான் அவன் குறையுடன்.

"ஆம், அது வாஸ்தவம்" என்றாள் அவள்.

"நான் இப்போதே கிளம்ப வேண்டும்" என்றான் அவன்.

"நானும் உன்னோடு வருகிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

அவன் சந்தேகத்துடன் தன் தாயைப் பார்த்தான். "நீங்கள் எங்கே தூங்குவீர்கள்?" என்று கேட்டான்.

"ஓ, நான் இன்றிரவே திரும்பி விடுவேன். நானும் வந்து நிலங்களையும் பார்வையிட்டு விட்டு, நீ தங்கும் இடத்தையும் நேரில் பார்த்து, உன்னுடைய உபாத்தியாயரிடமும் பேசி விட்டு வந்து விட்டேனானால், உன்னைப் பற்றி என் மனம் நிம்மதி யடைந்து விடும்" என்று கூறினாள்.

அவன் தன் துணிமணிகளை எடுத்து வைப்பதற்காகச் சென்றான். அவள் பல்லக்கைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டாள். இங்கைக் கூட தன்னுடன் வரவேண்டாமென்று கூறிவிட்டாள்.

இங், தனது கண்களை அகல விரிக்கவும், "நாட்டுப் புறத்தில் என்னை ஒருவரும் ஒன்றும் செய்து விடமாட்டார்கள்" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அவர்கள் இருவரும் புறப்பட்டனர். அவள் பல்லக்கிலும், என்னுடைய செல்லக் குதிரையான சாம்பல் நிறக் குதிரையிலும் அமர்ந்து புறப்பட்டனர். அவர்கள் தெருவில் சென்றதும் ஜனங்கள் அவர்கள் யார் என்பதையும் எங்கு செல்கிறார்கள் என்பதையும் அறிந்தவர்களாய் மரியாதையுடன் ஒதுங்கி நின்றார்கள்.

நகரத்தின் சுவர்களைக் கடந்ததும் நாட்டுப் புறங்களின் அமைதி நிறைந்த காட்சிகள் தோன்றின. அங்கு நிலவிய அமைதி ஸ்ரீமதி ஊவின் கலக்கமுற்றிருந்த உள்ளத்தைச் சாந்தப் படுத்தியது. அவள் மற்ற நினைவுகளை யெல்லாம் இன்று அகற்றிவிட்டு தனது நான்காவது மகனுடைய கட்டு மஸ்தான உடலையும் அவன் தனக்கு முன்னால் குதிரையின்மீது சவாரி செய்து சென்ற அழகையும் பார்த்த வண்ணமிருந்தாள். அவனுடைய தோற்றத்தில் அதிக கம்பீரம் தோன்றிவிடினும், அவன் நன்றாகவே சவாரி செய்தான். அவன் விறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது அவனும் அம்மிருகத்தின் ஒரு பகுதியோ என்று எண்ணும்படியாக இருந்தது. குதிரையின் ஓட்டத்திற்குத் தகுந்தாற்போல் அவனுடைய உடலும் எழும்பி எழும்பி தாழ்ந்தது. ஆனால் அவன் அஞ்சாநெஞ்சம் படைத்தவனாக இருந்தான். கையில் சாட்டையைச் சுழற்றிய படியே அவன் பாடிக்கொண்டு சென்றான். பொதுவாக அவன் மிக குதூகலமாக இருந்தான். அவன் எதில் மகிழ்ச்சியடைகிறானோ அதை அவன் கண்டிப்பாக அடையும்படி செய்ய வேண்டுமென்று அவள் தன் மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டாள். லியாங்மோவைப்போல் இவனும் குடும்பத்தின் எல்லைக்குள்ளிருந்தே இன்பத்தைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறான் என்பதை எண்ணி அவள் உவகை கொண்டாள்.

அன்றைய தினம் அவன் ஒரு முக்கியமான கிராமத்தில் தங்கினான். காரியஸ்தனின் வீட்டில் அவனுக்காக மத்தியான சாப்பாடு தயாரிக்கப்பட்டது. அவனைக் கண்டு பேசுவதற்கென்று அநேகர் வந்தனர். சிலர் வந்தனம் செலுத்துவதற்

காகவும் சிலர் முறையிட்டுக் கொள்வதற்காகவும் வந்தனர். அவள் அவர்களுடைய குறைகளை யெல்லாம் காதுகொடுத்துக் கேட்டாள். அன்றைய நாள் மிகவும் நல்ல நாள். அந்த எளிய மக்களைப் பார்க்க அவளுக்கு மனத்தில் உற்சாகம் ஏற்பட்டது. அவர்கள் புத்தி சாதுர்யமும் உண்மை உள்ளமும் படைத்தவர்களாக யிருந்தனர். ஒளிவு மறைவு என்பது அவர்களிடம் சிறிதும் இல்லை. தாய்மார்கள் குழந்தைகளை எடுத்துக்கொண்டு அவளைப் பார்க்க வந்தனர். ஆரோக்கியம் நிறைந்திருந்த அக் குழந்தைகளை அவள் புகழ்ந்து பேசினாள்.

கிராமத்திற்கருகே இருந்த நிலங்களையும், அவைகளில் விதைப்பதற்காக வைத்திருந்த பற்பல வகை தானியங்களையும் அவள் பார்வையிட்டாள். கிணற்றை எட்டிப் பார்த்து, அதை இன்னும் ஆழமாக வெட்ட வேண்டியது அவசியம் என்று அதற்கு அங்கீகாரம் கொடுத்தாள். முட்டைக்கோள் பயிராக்கும் நிலங்களுக்குப் போடுவதற்காக வைக்கப் பட்டிருந்த எருக்கள் எத்தனை பாகைகளில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தாள். பின்னர், பள்ளிக் கூடத்திற்குச் சென்று அங்கிருந்த உபாத்தியாயரைப் பார்த்துப் பேசினாள். அவள் வரவைக் கண்டு அவர் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் ஒருங்கே அடைந்து போனார். அவர் பெங்மோவின் படிப்பைப் பற்றி புகழ்ந்து பேச முயன்றபோது அவள் நகைத்து, தன்னுடைய மகனுக்கு புத்தகத்தின்மீது சிறிதும் ஆசையில்லை என்பது தனக்குத் தெரியும் என்று கூறினாள். காரியஸ்தனின் வீட்டில் என்மோவிற்காகக் கொடுக்கப் பட்டிருந்த அறையைப் பார்வையிட்டாள். அது மண் சுவற்றாலான அறை. சுத்தமாகவும் அகன்ற கட்டிலின்மீது மெத்தைகளும் சுத்தமான உறைகளும் போடப்பட்டு அறை ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது. சூரியன் அஸ்தமிக்க ஆரம்பிக்குமுன் அவள் என்மோவிடம் விடை பெற்றுக் கொண்டு தன் பல்லக்கிற்குச் சென்றாள்.

இப்போது தனியே விடப்பட்டதும் அவள் தான் வெகு காலமாக விரும்பியிருந்த ஒரு காரியத்தைச் செய்தாள். மலைக்கருகே ஆண்ட்ரூவைப் புதைத்த இடத்திலிருந்த ஜிங்கோ மரம் அவளுக்குத் தென்பட்டது. அவள் அதைப்பற்றி ஒன்றும் கூறாமல் அங்கு சென்றிருந்தால், அது எல்லோருக்கும் மிக விசித்திரமாகப் பட்டிருக்கும். நாட்டுப் புறத்திலும், நகரத்திலும், வீட்டிலும் அது பற்பல விதமான பேச்சிற்கு இடம் கொடுத்திருக்கும். ஏனெனில் அவள் வருவதையும் போவதையும் அறியாதவர்கள் யாருமில்லை. மூ குடும்பத்தில் நடக்கும் எதையும் ரகசியமாக வைத்திருப்பது என்பது சாத்தியமில்லை.

ஆதலால் அவள் பல்லக்குத் தூக்கும் ஆட்களிடம் துணிவாக, "என் பின்னுக்கு உபாத்தியாயராக இருந்த அந்த அன்னிய பாதிரியின் சமாதி இருக்கும் இடத்திற்கு பல்லக்கைக் கொண்டு செல்லுங்கள். நான் அவருக்கு மரியாதை செலுத்தி விட்டு வருகிறேன். அவருக்குத்தான் வேறு யாரும் உற்றார் களில்லையே. இவ்வளவு அருகில் வந்துவிட்டு நான் போகாம லிருப்பது நன்றாகயில்லை" என்று கூறினாள்.

இதனால் அவர்களுக்குச் சிறிதும் திகைப்பு உண்டாக வில்லை. அவளுடைய இம்மாதிரியானதையைக் கண்டு அவர்கள் வியந்தனர். சமாதிக்கு சிறிது தூரத்திலேயே அவள் பல்லக்கை விட்டு இறங்கிக்கொண்டாள். அப்போதுதான் தனியே அங்கு சற்றிருக்க முடியும் என்பதே அவள் எண்ணம்! வயல்களுக் கிடையே இருந்த ஒற்றையடிப் பாதையின் வழியாக அவள் நடந்து சென்று அம்மேட்டின் மீது ஏறி ஜிங்கோ மரத்தின்மேற் வந்தாள். அம்மரத்தின் விசிறியைப் போன்ற இலைகள் மாலை வெயிலுடன் விளையாடிக் கொண்டிருந்தன. அதனுடைய நிழல்கள் புல் தரையில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. அவள் மூழந்தாளிட்டு, மூன்று முறை மேலே விழுந்து, சமாதியின் முன்பு வணங்கினாள். தூரத்தில் நின்ற அவளுடைய ஆட்கள் இதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சமாதியைச் சுற்றிக் கட்டியிருந்த தாழ்ந்த சுவற்றின் மீது அவள் உட்கார்ந்து, தன் கண்களை மூடி அகக் கண்ணால் அவரைப் பார்க்கலானாள். அவர் தமது வழக்கமான வேகத்துடன், தமது ஆடைகள் பறக்க, காற்றில் தாடி பறக்க வந்தார். அவருடைய கண் களில் ஒளி நிறைந்திருந்தது.

அவள், வினோபாட்டாக, 'இந்தத் தாடிதான் உங்களுடைய முகத்தை முழுவதும் காட்டாமல் மறைத்து விட்டது' என்றாள்.

ஆனால் அவர் தமது சரீரத்தையும் எப்பொழுதும் மறைத் துத்தான் வைத்திருந்தார். அப் பெரிய சரீரத்தின் அமைப்பு களை காவி வஸ்திரம் முழுவதும் மறைத்து விட்டது. துளியாவது தைக்கப்பட்ட பெரிய பாதரக்ஷைகள் அவரது பாதங்களை மறைத்தன.

'உங்களுடைய பாதங்கள்! அதைப் பார்த்து அக் குழந்தைகள்தான் எப்படிச் சிரிக்கின்றன' என்றாள் அவள் முறுவலுடன்.

அது உண்மையே. அந்த அழகைக் குழந்தைகளைப் பார்ப்பதற்காக அவள் மாலை நேரங்களில் கூடியவரை,

அடிக்கடி செல்வது வழக்கம். அப்போது அப்பெண்கள் அவருடைய செருப்பின் அடித் தோலுக்காக எவ்வளவு பெரிய துணி தைக்கவேண்டி யிருந்தது என்று தங்களுடைய சிறிய கரங்களால் அளந்து அளந்து காட்டுவார்கள்.

"இது மாதிரி—இவ்வளவு பெரியது—" என்று கூறி நகைப்பார்கள்.

மெவி, கந்தல், பழைய துணி இவைகளை எடுத்துச் சேர்த்து வைத்துவிட்டு பிறகு இதை ஒரே துணியால் மூடுவதற்காக ஒரு துணியை சிரமப்பட்டு கண்டு பிடிப்பாள். "அதை நான் மிகவும் சிரமப்பட்டுத் தைப்பேன்" என்று கூறினாள் அவள் ஸ்ரீமதி ஊவிடம்.

"ஆனால் நாங்கள் எல்லோரும் உதவி செய்வோம்" என்று அவளுக்கு நினைவூட்டின அக் குழந்தைகள்.

மெவி, "ஆம். எல்லோரும் தைப்பார்கள். மிகவும் சிறிய குழந்தைகள்கூட, நான் துணியைப் பிடித்துக்கொண்டால், ஒரு முறை இரு முறை ஊசியைப் பிடித்துத் தள்ளுவார்கள்" என்றாள்.

சிறிது நேரம் அங்கு உட்கார்ந்தபடி அவள் அவரைப் பற்றித் தியானித்துவிட்டுப் பிறகு வீடு திரும்பிச் சென்றாள். அவளுடைய இதயம் நன்றி உணர்ச்சியினால் நிறைந்திருந்தது. அவளுடைய வாழ்வில், முற்றிலும் நற்குணமே உருவாகிய ஒரு மனிதரை அறிந்து கொள்ளும் வாய்ப்பும் அவரை நேசிக்கும் பாக்கியமும் அவளுக்கு அருளப் பட்டிருக்கிறதே!

சில தினங்களுக்குப் பிறகு ஒருநாள், நகரத்திலுள்ள கடையைச் சேர்ந்த சைத்ரிகன் ஒருவன் ஸ்ரீமதி ஊவைத் தேடி வந்தான். அவளிடம் காண்பிப்பதற்காக, ஒரு சிறு பலகையின் மீது தான் எழுதியிருந்த ஆண்ட்ரூவின் சித்திரம் ஒன்றை எடுத்து வந்திருந்தான்.

அதைப் பார்த்த ஸ்ரீமதி ஊ சற்று பயந்து விட்டாள். "என்னிடம் எதற்காக நீ இதைக் கொண்டு வந்தாய்?" என்று அவனைக் கேட்டாள். தன்னுடைய அந்தரங்கமான வாழ்க்கையைப் பற்றி மற்றவர்கள் அறிந்திருக்க முடியும் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. ஆயினும் இப்பாமர ஜனங்களின் இந்த விசித்திரமான அறிவை அவள் அறியாதவள் அல்ல.

சைத்ரிகன் கபடமில்லாது, "அந்த மனிதரிடம் எனக்கு ஏற்பட்டிருந்த மதிப்பினால் நான் இதைச் செய்தேன். ஒரு முறை எங்கள் குடும்பத்திற்கு பெரும் கஷ்டம் வந்து விட்டது. என்னுடைய தொழிலும் போய்விட்டது. அப்போது அவர் தான், நாங்கள் மீண்டும் நல்லநிலை அடையும் வரை, உதவி செய்தார். அப்போது, அவரை என்றைக்கும் மறவாதிருக்கும் பொருட்டு நான் இந்தப் படத்தை எழுதினேன். நேற்று என்னுடைய பின்னிகளின் தாய், 'நாம் இதை ஊ வீட்டிலிருக்கும் கோவிலில் கொண்டுபோய் வைக்க வேண்டாமா? அங்கு அந்த அழகைக் குழந்தைகள் வாழ்கின்றனவே! அவர்கள் தங்கள் தந்தையாகிய இவரைப் பார்த்து மகிழ்வார்கள் அல்லவா?' என்றாள். ஆகவே இதை நான் இங்கு கொண்டு வந்தேன்" என்றான்.

அவளுடைய மனம் நிம்மதியுற்றது. அதை அவளுக்காக அவன் கொண்டுவரவில்லை. அப்படத்தை அவள் மேஜைமீது வைத்தாள். படத்தை ஒரு மரச்சட்டத்தின்மீது பொருத்தி வைத்திருந்தான் அம்மனிதன். அதற்கு நடுவில் ஆண்ட்ரூவின் சித்திரம் திகழ்ந்தது. அவருடைய சாயலே நன்றாக வடித்திருந்தான் அவன். அதில் சிற்சில மாறுதல்களும் இருந்தன. கண்களில் சிறிது மாறுதலும், கைகள் சற்றே மெல்லியதாகவும் அவருடைய முழு உருவம் மிகவும் மெலிந்தும் காணப்பட்டது. ஆனால் அவர் ஆண்ட்ரூ என்பது தெளிவாகப் புலப்பட்டது.

"இதற்காக உனக்கு நான் என்ன விலை கொடுப்பது?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"இது நான் பரிசாகக் கொடுப்பது. இதை என்னால் ஒரு நாளும் விற்கமுடியாது" என்றான் அவன்.

"அப்படியானால், அந்தக் குழந்தைகளின் பொருட்டு இதை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றாள் அவள்.

அதை அவன் வாங்கிக் கொண்டதும், அம்மனிதன் விடை பெற்றுச் சென்று விட்டான். அப்படத்தை ஒரு நாள் முழுவதும் தன்னிடம் வைத்திருந்து விட்டு, மறுநாள் மாலை அதை எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றாள். குழந்தைகள் இராச் சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். வாசலைக் காக்கும் தெய்வங்களுக்கு எதிரே அவர்களுடைய மேஜைகள் போடப்பட்டிருந்தன. அவன் கதவருகே நின்று இக்காட்சியைக் கண்டு பரவசமானான். வெப்பு வர்ண நீண்ட மெழுகுவர்த்திகள் கடவுளுக்கு அருகே ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. முன்னால் கொளுத்தி வைக்கப்

பட்டிருந்த ஊதுபத்திகளிலிருந்து சுருள் சுருளாக வாசனை நிறைந்த புகை வெகு உயரமாகக் கிளம்பியது. அந்த ஒளிக்கும் புகைக்கும் நடுவே, மண்ணிலுலான வர்ணம் பூசப் பட்ட அப்பிரம்மாண்டமான தெய்வங்கள் தங்கள் காலடியில் உட்கார்ந்திருந்த அக் குழந்தைகளை நோக்கிய வண்ண மிருந்தன.

இத்தனை நாட்களுக்குள் அவர்கள் அவ்விடத்தில் நன்றாக பழகி விட்டார்கள். வந்த புதிதில் இந்த தெய்வங்களிடம் அவர்கள் பயம் கொண்டிருந்தனர். ஆனால் இப்போது அந்த பயம் தெளிந்து விட்டது. அவர்கள் சாப்பிட்டவாறு, அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். கிழவியும் கிழப் பூசாரியும் அவர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்தனர். பெரிய பெண்கள் சிறு குழந்தைகளைப் பராமரித்தனர். ஸ்ரீமதி ஊவைக் கண்டதும் அவர்களிடையே ஆனந்தக் கூச்சல் கிளம்பியது. அவள் புன்னகையுடன் அவர்களுடைய வரவேற்பை ஏற்றுக் கொண்டவாறு நின்றிருந்தாள். இதில் ஒரு விசித்திரம் இருந்தது. அவளுக்குத் தன் குழந்தைகளே தன்னைத் தொட்டால் கூட எப்பொழுதும் பிடிக்காது. ஆனால் இந்தக் குழந்தைகளை அவள் ஒரு போதும் தன்னிடமிருந்து ஒதுக்கவில்லை. இவர்கள் அவளுக்கோ, ஆண்ட்ரூவிற்கோ சரீரத்தால் பந்தப்பட்டவர்களல்ல. ஆனால் அவருடைய ஆத்மாவின் கருணையினால் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வர்கள். அவர்களோடிருக்கும் போது, அவருடைய முன்னிலை யிலிருப்பது போன்ற அனுபவம் ஏற்பட்டது அவளுக்கு. அவர் களோடு வேறு ஒரு குழந்தையை அவள் சேர்த்துக் கொள் வாளோ என்னவோ, அவளுக்கே அது தெரியாது. வேறு அனைதைக் குழந்தைகளை அவன் சேர்த்துக் கொண்டாலும் கொள்ளலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். அது யாருக்குத் தெரியும்!

அவன், அப்படத்தை யாவரும் பார்க்கும் படியாக உயரே தூக்கிப் பிடித்தான். "உங்களுக்காக நான் ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்" என்றான். அவர்கள் விலகிக்கொண்டு அவனுக்கு உள்ளே வர வழிவிட்டனர். அப் படத்தை எடுத்துச் சென்று, அத் தெய்வங்களுக்குக் கீழே மேஜைமீது வைத்தான். ஆண்ட்ரூ மேஜையின்மீது நின்றபடி குழந்தைகளை நோக்கினார். அவர்கள் அவரை நோக்கினர். முதலில் ஒரு வரும் பேசவில்லை. அவர்கள் அவரை உற்று நோக்குவதில் ஈடுபட்டிருந்தனர். பிறகு அவர்களிடமிருந்து பெரு மூச்சும், மூணு முணுப்பும், மெல்லிய நகைப்பும் தோன்றின.

"ஆ! இது எங்களுடைய அப்பா—ஆம்! இது அவரேதான்—" என்று கூறிக்கொண்டனர்.

அவர்கள் ஏக்கமுற்றவர்களாய் அப்படத்தையே பார்த்த வண்ணம் நின்றனர். அவள் அன்புடன், "இனி அவர் எக்காலமும் உங்களுடனேயே இருப்பார். நீங்கள் தினமும் காலையிலும் இரவில் தூங்கப் போகும் முன்னரும் அவரைப் பார்க்கலாம்" என்றாள்.

பிறகு அவள் அப்படத்திற்குப் பின்னால் இருந்தது என்ன என்பதை அவர்களுக்குக் காட்டினாள். சைத்ரிகன் அதன் பின் புறம் நான்கு வார்த்தைகளை வெட்டி அதைக் கறுப்பு மையால் எழுதியிருந்தான். "பெருந்தன்மை வாய்ந்த ஒரு அன்னிய இருதயம் இது" என்பதுதான் அவ் வார்த்தைகள்.

அதைக் காண்பித்து விட்டு அவள் மீண்டும் அதை அந்த இடத்திலேயே வைத்து விட்டாள். அன்றைய தினத்திலிருந்து அப்படம் அங்கேயே இருக்கலாயிற்று.

தன்னுடைய அறைகளுக்குத் திரும்பிச் சென்றதும் தான் அவளுக்கு, கோவிலில் சிறுமிங்கைத் தான் பார்க்க முடிய வில்லையே என்ற எண்ணம் உதித்தது. இதைப் பற்றி இரவு இங்கிடம் கேட்டாள். "இரண்டாவது எஜமானியை அவளுடைய குழந்தையுடன் கோவிலிலேயே வசித்து வரும்படி கூறியிருந்தேன். ஆனால் நான் அவளை அங்கு பார்க்க வில்லையே" என்றாள்.

"அங்கேதான் அவள் இருக்கிறாள், அம்மா. ஆனால் அடிக்கடி உங்களுடைய இரண்டாவது மருமகளுடைய அறைக்குச் செல்கிறாள். அவர்கள் இருவரும் மிகவும் நேசமாக அக்கான் தங்கைகளைப் போல பழகுகிறார்கள். இருவரும் ஒருவர்க்கொருவர் ஆறுதல் கூறிக் கொள்ளுகிறார்கள். மூன்று வது எஜமானி வந்ததிலிருந்து நம் இரண்டாவது எஜமானி ஒரு விதவையைப் போலவே வாழ்க்கை நடத்துகிறாள். நம் எஜமான் அவள் இருக்கும் பக்கம்கூட செல்வதில்லை" என்று பதில் கூறினாள் இங்.

ஸ்ரீமதி ஊ இதற்கு ஒன்றும் கூறவில்லை. அவள் அமைதி யுடன் சிந்திக்கலானாள். ஸ்நானம் முடிந்து, இங் அப்போது அவளுடைய உடலில் ஒரு தைலத்தைத் தேய்த்துக் கொண் டிருந்தாள். இம்மாதிரியான பெரிய வீடுகளில், ஒரே மாதிரி யான உள்ளம் படைத்தவர்கள் ஒருவரோடொருவர் கூட நீங்களாகவே ஒரு அன்னியோன்னிய நேசத்தை உண்டாக்

இக்கொள்வது சகஜம்தான். சியூமிங்கால் ருலானுக்குச் சிறிது ஆறுதல் அளிக்கக் கூடுமானால், அப்படியே இருக்கட்டுமே! இதன் மூலம், ருலானுக்குக் கூட, கோவிலிலிருக்கும் அக் குழந்தைகளுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்படலாம். அதன் மூலம் அவளுக்குச் சிறிது சாந்தி ஏற்பட இடமிருக்கிறது. அக் குழந்தைகளுக்கு கல்வி போதிக்க வேண்டியதும் மிக்க அவசியமல்லவா! ஆண்ட்ரூ அவர் களுக்குப் படிக்கவும் எழுதவும் தெரியவேண்டும் என்றுதான் விரும்புவார். தையல், சமையல் முதலிய வேலைகளும் இவர் களுக்குப் போதிக்கப் படவேண்டும். உலக வாழ்க்கைக்கு அவசியமானவற்றை அவர்களுக்குப் போதித்து, அவர்களுக்கு உலகில் ஓர் தக்க இடத்தைப் பார்த்துக் கொடுப்பதும் அவளுடைய கடமையே அல்லவா! அக் குழந்தைகளுக்கு செய்ய வேண்டியதைப் பற்றித் திட்டம் வகுத்தவாறு அவள் படுப்பதற்குச் சென்றாள். தன்னுடைய வீட்டிலேயே அவர் களுக்குக் கல்வி போதிக்கவென்று ஒரு பள்ளியை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள். ஆனால் எதையும் அவசரப்பட்டு செய்யும் வழக்கமே அவளிடம் இடையாது. அவளுடைய திட்டங்களும் தீர்மானங்களும் தெளிவாக உருவாகியிருந்தன. தக்க சந்தர்ப்பத்தை எதிர் பார்த்தவளாய் நாட்களைக் கழிய விட்டு வந்தாள்.

14

அதற்கு அடுத்த வருஷம் மின்சாரத்தின் மூலம் அனுப்பப் பட்ட கடிதம், பெங்மோவிடமிருந்து வந்தது. அதை வாங்கிய ஸ்ரீமான் ஹ, தாமே நேரில் வராமல் ஒரு வேலையாளின் மூலமாக அவளுக்கு அனுப்பி வைத்தார். அது ஒரு விசித்திரமான கடிதம். அவள் பலமுறை அதைத் திரும்பத் திரும்பப் படித் தாள். அப்போதும் அவளால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் தான் வரப்போவதாக எழுதியிருந்தான். அவ்வளவுதான். அலைகளும் காற்றுகளும் பிரயாணத்தைத் தடை செய்யாதிருந்தால், தான் குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்குள்ளாகவும் அதிகமானால் இரண்டு மாதத்திற் குள்ளாகவும் வீடு திரும்பி வருவதாகவும் எழுதியிருந்தான். அவன் கேட்டுக் கொண்டிருந்த காலம் இன்னும்முடியவில்லை. தான் கூறிய காலத்திற்கு முன்னால் வருவதன் காரண மென்ன என்பதை அவன் தெரிவிக்கவில்லை.

இந்தச் சில வார்த்தைகளை திரும்பப் படிக்கப் படிக்க, ஸ்ரீமதி ஹவின் உள்ளத்தில் கலக்கம் உண்டாயிற்று. இப்போது ஆண்ட்ரூ இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்

என்று எண்ணினாள். ஏனெனில் இந்த மகனுடன் அவர் உறவு கொண்டிருக்கிறார் அல்லவா?

'நீங்கள் மட்டும் அவனுடைய முகத்தை ஒருமுறை பார்த்து, அவன் ஏன் திடீரென்று வீட்டிற்கு வருகிறான் என்பதை அறிந்து எனக்குச் சொல்ல மாட்டீர்களா? அவன் ஏதாவது நெறியற்ற காரியத்தைச் செய்து விட்டானோ' என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள்.

ஆனால் அவள் தன் கண்களை மூடிக்கொண்டு, உள்ளமாகிய திரையில் ஆண்ட்ரூவைப் பார்த்தபோது அவளுடைய முகம் சலனமற்று விளங்கியது. அவர் மௌனமாக யிருந்தார். அவருடைய குரல் ஒலியை அவளால் கேட்க முடியவில்லை.

இந்த மகனைப் பற்றி அவள் ஸ்ரீமான் ஹவிடமும் பேச விரும்பவில்லை. அல்லது ருலானுடனோ, அல்லது நிச்சயமாக சியூமிங்கிடமோ பேச விரும்பவில்லை. இவ்விஷயத்தைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கச் சிந்திக்க, அவள் அதிகக் குழப்பத்திலும் சஞ்சலத்திலும் ஆழ்ந்தாள். முடிவில், அது வேறு இன்னும் என்னென்ன புதிய தொல்லைகளைக் கொண்டு வரப் போகிறதோ என்று அவனுடைய வருகையைப் பற்றியே அஞ்ச ஆரம்பித்தாள். இப்போது, மற்ற எல்லோரையும் விட தான் கலந்து பேசவேண்டியது, லின்யியின் தாயாகிய ஸ்ரீமதி கேங்கிடம்தான் என்று அவளுக்குத் தோன்றியது.

இந்த இரண்டு குடும்பங்களுக்கு மிடையே இருந்த உறவு இப்போது முற்றிலும் அற்றுப்போய் விட்டது. நாட்டுப் புறமாயிருந்தால், இவ்வீடுகளுக்கு இடையே இருந்த பாதை புல் மூடிப் போயிருக்கும். ஸ்ரீமதி கேங்கைச் சென்று பார்க்க வேண்டுமென்று அவள் தீர்மானித்துக் கொண்ட போதிலும், அவளுக்கே விளங்காத ஒரு வெறுப்பு அவளது உள்ளத்தில் இளம்பியது. அவள் உட்கார்ந்து, இன்னும் தனக்குள் இருக்கும் தவறுதான் என்ன என்பதைக் கண்டு கொள்ள முயன்றாள். தன்னுடைய பழைய சிநேகிதியான அவளிட மிருந்து அவள் ஏன் இவ்வளவு தூரம் விலகிக் கொள்ள வேண்டும்! அப்படியும் அவள் அவளுடைய சிறுமதியைக் குறை கூறவில்லையே! அவர்கள் இருவருக்கு மிடையே பெரும் வித்தியாசம் இருந்தது. ஸ்ரீமதி கேங், இவள் எப்படி ஆண்ட்ரூவை நேசித்தாளோ, அதைப்போலவே தனது கணவ னிடம் அளவற்ற பிரேமை கொண்டிருந்தாள். இந்த இருவித மான காதலும், வானுலகையும் பூமியையும் போல் அவ்வளவு வெவ்வேறாக இருந்த போதிலும், அது இரண்டும் ஒரே

தன்மையை உடையனவாக இருந்தன. இரண்டு பெண்மணிகளும், தன்னை விட மற்றொருவரை அதிகமாக நேசிக்கும்படியான அன்பு எத்தகையது என்பதை அறிந்து கொண்டிருந்தனர். ஸ்ரீமதி ஊவிற்கு, ஸ்ரீமதி கேங் அந்தத் தகுதியற்ற கிழவனை, சுயநலமற்ற அன்புடன் நேசித்தாள் என்பது பொருமையை உண்டாக்கிற்று. அன்பை இவ்வளவு முரட்டுத்தனமாக உபயோகப்படுத்துவதானது, உயர்ந்த, சிறப்பு பொருந்திய பக்தியின் மகிமையைக் குறைப்பதாகயிருந்தது. ஆயினும் உண்மையுள்ளத்துடன் பார்க்குங்கால், ஸ்ரீமதி கேங் தன்னைப் போன்ற அனுபவத்தையே அடைந்தாள் என்ற உண்மையை அவளால் பாராமல் இருக்க முடியவில்லை. இந்த இரண்டு வித அன்புகளும் தரத்திலோ, சிறப்பிலோ வித்தியாசப் படவில்லை. அவையிருந்த நிலைகள்தாம் மாறுபட்டன. ஸ்ரீமதி கேங், அந்தக் கிழவரை தன்னால் கூடிய வரை உயர்வாக நேசித்தாள். அதற்காக அவள் எந்த விதத்திலும் வெட்கப்படத் தயாராகயில்லை.

'ஆயினும் இந்தக் கிழட்டு கேங், ஆண்ட்ரூ இருக்கும் அதே தேவலோகத்தில் இடம் பெறுவது தகாது' என்று கோபத்துடன் எண்ணிக் கொண்டாள் ஸ்ரீமதி ஊ.

தெளிந்த அக்காலை வேளையில், அவள் புத்தக அறையில் உட்கார்ந்தவாறு இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் மெல்ல வாய்விட்டுச் சிரித்துக் கொண்டாள். ஒருவரிடம் ஒருவர் அன்பு கொண்டிருப்பதைப் பற்றி அவள் ஏன் கோபப்பட வேண்டும்? அது சூரிய ஒளியையும் மழையையும் போல் வானத்திலிருந்து, நியாயமானவர்கள், அநியாயமானவர்கள் என்று பாராமல், ஏழை, பணக்காரர், முட்டாள், அறிவாளி என்ற வித்தியாசங்களைப் பாராமல் எல்லோருக்கும் பொதுவாக பொழிகிறது. இதற்காக அவள் கோபப்படுவது எதற்கு?

இந்தச் சிரிப்பு அவளுடைய இதயத்திலிருந்து பொங்கி எழுந்தது. அவள் கண்களை மூடி, ஆண்ட்ரூவும் தன்னோடு சேர்ந்து சிரிப்பதை அகக் கண்களால் பார்த்தாள். மனக் கண்ணிலிருந்து அவர் முகம் மறையும் வரை அவள் பார்த்துக் கொண்டே யிருந்தாள். பிறகு ஒரு புதிய உற்சாகத்துடனும் சக்தியுடனும் அவள் கண்களைத் திறந்தாள். அதற்குள் இரவு அவள் வெளியே செல்வதற்காக அணியும் ஆடைகளை எடுத்து வந்தாள். அதை அவளுக்கு அணிவித்து, கிளம்புவதற்கு தயார் செய்தாள். பிறகு அவளுடைய வருகையைத் தெரி

விப்பதற்காக முன்னதாக ஒரு ஆள் அனுப்பப்பட்டான். பின் அவள் ஸ்ரீமதி கேங்கைப் பார்க்கப் புறப்பட்டாள்.

கேங் வீட்டின் ஒழுங்கினைத்தில் ஒரு சிறிதும் மாறுதல் ஏற்படவேயில்லை. வேடிக்கை பார்க்கும் குழந்தைகள் கூட்டமோ முன்னிலும் அதிகரித்திருந்தது. ஸ்ரீமதி ஊ முன் தடவை இந்த வீட்டிற்கு வந்துபோன பிறகு, ஒவ்வொரு மருமகளுக்கும், ஒவ்வொரு வைப்பாட்டிக்கும் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் பிறந்திருந்தன. வழக்கமான அலங்கோலத்துடனும் வழக்கமான குதூகலத்துடனும் எல்லோரும் குதித்துக் கொண்டிருந்தனர். ஒரு பணிப்பெண், மலர்ந்த முகத்துடன் வந்து ஸ்ரீமதி ஊவை அழைத்துச் சென்றாள். ஸ்ரீமதி கேங், ஒரு சிறு குளத்தருகே இருந்த வில்லோ மரத்தின் கீழ் ஒரு சாய்வு நாற்காலியைப் போட்டு அதில்தான் அமர்ந்திருந்தாள். அந்தச்சாய்வு நாற்காலி, ஸ்ரீமதி கேங்கின் கனத்த சரீரத்தைத் தாங்கித் தாங்கி, நாளுக்கு நாள் பெருகி வரும் அவளுடைய சரீரத்தின் வடிவத்தை எடுத்துக் கொண்டிருந்தது. அவள் காலையில் அதில் உட்கார்ந்து மழை பெய்தாலொழிய, இரவுவரை அதிலிருந்து எழுந்திருப்பதேயில்லை.

அவளைச் சுற்றிலும் குழந்தைகள் விளையாடிக் கொண்டும் கத்திக்கொண்டும் இருந்தன. அங்கேயே தாதிகள் அவர்களுக்குப் பால் கொடுத்தனர். பணிப் பெண்கள் அங்கேயே உட்கார்ந்து தைப்பது, காய்கறி, அரிசி முதலியவற்றைக் கழுவுவது போன்ற சகல வேலைகளையும் செய்தனர். நாட்டுப் பெண்கள் அங்கு உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருந்தனர். அக்கம்பக்கத்துப் பெண்கள் ஏதோ செய்தி சொல்வதற்காக வந்து போயினர். வியாபாரக்காரர்கள் வந்து வியாபாரம் நடத்தினர். மற்ற உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகள் மாஜாங் என்ற விளையாட்டு விளையாடுவதற்கு வந்திருந்தனர். இந்த சந்தைக் கடையில் உட்கார்ந்திருந்தாள் ஸ்ரீமதி கேங். ஸ்ரீமதி ஊ உள்ளே வருவதைப் பார்த்ததும் அவளைக் கூவி வரவேற்றாள். தான் எழுந்திருக்க முடியாததற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டாள்.

"என்னுடைய சரீரம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. காலையிலிருப்பதை விட இரவு என் எடை அதிகமாகி விடுகிறது" என்று கத்திக் கூறினாள்.

அங்கிருந்த அனைவரும் சிரித்தனர். உள்ளே இருந்து வந்த ஒரு சிரிப்புச் சப்தம் ஸ்ரீமான் கேங் கூட அவள் கூறியதைக் கேட்டார் என்பதைத் தெரியப்படுத்தியது. ஆனால் அவர் வெளியே வரவில்லை. அவர் ஒரு ஆண் பிள்ளையாதலால்,

உள்ளிருந்தபடியே, படிப்பதாகவோ தூங்குவதாகவோ பாசாங்கு செய்தபடி இவர்களைக் கவனித்துக் கொண்டும் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டும்தான் இருக்க முடியும்.

இத்தனை பேர்களுக்கு மத்தியில், தான் பெங்மோ, லின்யி இவர்கள் விஷயத்தைப் பற்றி பேச முடியாது என்பதைக் கண்டு கொண்டாள் ஸ்ரீமதி ஹு. ஆனால் அவள் அவசரப் படாமல், தன்னுடைய கம்பீரம் பொருந்திய முறையில், பணிப் பெண் ஒருத்தி கொண்டு வந்து போட்ட ஆசனத்தில் அமர்ந்தாள். ஸ்ரீமதி ஹு ஏதேனும் ஒரு காரியமாகத்தான் வந்திருப்பாள் என்பதை நன்கறிவாள் ஸ்ரீமதி கேங். ஆதலால் அவள் தனது தடித்த கைகளை ஆட்டியவாறு, அவர்களைத் தனியே விட்டு எல்லோரையும் வெளியே போகும்படி பணித்தாள். ஏகப்பட்ட கூச்சலுக்கும், குழப்பத்துக்கும், ரகளைக்கும் பிறகு, ஒரு வழியாக அவர்களைத் தனியே விட்டு அனைவரும் சென்றனர்.

ஸ்ரீமதி ஹு பெங்மோவின் தந்தியை எடுத்துத் தன் தோழி யிடம் நீட்டினாள். ஸ்ரீமதி கேங் நகைத்து, அதைத் தூரத் தள்ளி விட்டு, "எனக்கு தெரிந்திருந்த ஒன்றிரண்டு வார்த்தை களையும் நான் மறந்து வெகு நாட்களாகி விட்டது. எனக்கு அதன் அவசியமே நேரிட்டதில்லை. இப்போது உன்னிடம் அதன் அவசியம் ஏற்படக் காரணம் என்ன, ஏய்லியன்?" என்றாள் குதூகலமாக சிறிதும் கபடமின்றி.

அவர்களிடையே இருந்த தூரம் எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும், ஸ்ரீமதி கேங்கின் சகஜமான சுபாவம் அதைத் தகர்த்தெறிவதாக யிருந்தது. அவள் தனது சிநேகிதியை தினம் தினம் பார்த்து வருவதுபோலவும் முந்தின தினம் கூட சந்தித்தது போலவும் நடந்து கொண்டாள்.

ஸ்ரீமதி ஹு புன்னகை செய்தாள். அவளுக்கு இத்தப் பெண்மணியிடம் எத்தனைதான் வெறுப்பு இருந்தபோதிலும், அவளைப் பார்த்துச் சிரிக்காதிருப்பது முடியாத காரியம். அவள் பெங்மோவின் கடிதத்தை உரக்கப் படித்தாள். "நான் சீக்கிரத்தில் திரும்பி வருகிறேன்."

"இதற்கு மேல் அவன் ஒன்றும் எழுதவில்லையா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி கேங் அக் கடிதத்தையே வெறித்துப் பார்த்தவாறு.

"இவ்வளவேதான்" என்று பதிலளித்த ஸ்ரீமதி ஹு, அதை மடித்துத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக்

கொண்டாள். பிறகு அருகிலிருந்த மேஜையின் மீதிருந்த தேநீர் பாத்திரத்தை எடுத்துப் பார்த்தாள். அங்கிருந்த தேநீர் கிண்ணம் அழுக்காக யிருந்தது. அதைப் பேசாமல் திரும்ப வைத்து விட்டாள்.

"ஏதாவது நடந்திருக்க வேண்டும். அவன் ஐந்து வருடங்கள் அங்கிருக்கப் போவதாகக் கூறியிருந்தான்" என்றாள்.

"உடம்பு சுகமில்லாமல் இருக்கலாம்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"இருக்கலாம். ஆனால் அப்படியிருந்தால் அதை அவன் நமக்கு சொல்லலாமே!" என்றாள் ஸ்ரீமதி ஹு.

"அவன் ஏதாவது நெறி தவறிய காரியத்தைச் செய் திருக்கலாமென்று நீ எண்ணுகிறாயா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி கேங்.

"என்னால் அப்படி நினைக்க முடியவில்லை" என்றாள் ஸ்ரீமதி ஹு. ஆண்ட்ருவின் அத்தனை நாளைய போதனைக்குப் பிறகு பெங்மோ அத்தகைய ஒரு குற்றத்தைச் செய்வான் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. அவள் மேலும், "லின்யியைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் நான் வந்தேன். அவளுடைய ஆசிரியர் இறந்து போனதும், நான் அவளுடைய கல்வியைத் தொடர்ந்து நடத்தாமல் விட்டு விட்டேனே என்று மிகவும் வருந்துகிறேன்" என்றாள்.

இவ் வார்த்தைகளைக் கூறியபொழுது அவள் மறுபுறம் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஏனெனில், ஸ்ரீமதி கேங், ஆண் பெண்களின் விஷயத்தில் மட்டும், வார்த்தைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டு கொள்வதில் மிகவும் கைதேர்ந்தவள் என்பதை அவள் அறிவாள்.

ஸ்ரீமதி கேங் தனது மகிழ்ச்சியைச் சிறிதும் இழக்காத வளாய், "லின்யி அதற்காக வருத்தப்படவில்லை. அவளுக்கு உன்னிடம் சொல்லப் பயமாக யிருந்ததாம். ஏய்லியன், அவளுக்கு அந்தப் பாடமும் பிடிக்கவில்லையாம். அந்தப் பாதிரியாரையும் பிடிக்கவில்லையாம். அவர் எப்போதும் மத விஷயங்களைப் பற்றியே சொல்லிக் கொடுத்தார் என்று சொல்கிறாள் அவள்" என்றாள்.

ஸ்ரீமதி ஹு, சற்று எரிச்சலுடன், "அவர் அவளுக்கு மதத்தைப் பற்றியே ஒன்றும் போதிக்கவில்லையே. நான்

பெங்மோவிற்கே மதத்தைப் பற்றி போதனை செய்யக் கூடாது என்று தடை செய்திருந்தேனே. அவர் நிச்சயம் லின்யியிக்கு அதையும் போதித்திருக்க மாட்டார். என்னுடைய உணர்ச்சிகளை அவர் நன்றுகப் புரிந்து கொண்டிருந்தார்" என்றாள்.

"அவர் கடவுளைப் பற்றி ஒன்றும் பேசவில்லையாம். ஆனால் அவள் எப்படி எண்ணவேண்டும், கணவனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், உண்ணவேண்டும், அந்த வீட்டிலிருக்கும் மற்றவர்களோடும், இன்னும் அவள் சந்திக்கும் எல்லோருடனும் எப்படிப் பழக வேண்டும் என்றெல்லாம் உபதேசம் செய்தவண்ணமாக இருந்தாராம்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"இது மத சம்பந்தமான விஷயமல்லவே!" என்றாள் ஸ்ரீமதி ஹு.

"ஆனால் எப்படியோ அதனால் அவளுக்கு சங்கடமேற் பட்டது என்னவோ நிச்சயம். அவளுக்கு உறங்குவதும், உண்பதுங் கூட சிரமமாகி விட்டதாம்" என்றாள் ஸ்ரீமதி கேங்.

"ஆம், ஒரு நல்ல ஆசிரியர் ஆத்மாவைத் தட்டி எழுப்பத் தான் செய்கிறார்" என்றாள் சாந்தமாக ஸ்ரீமதி ஹு.

ஸ்ரீமதி கேங் கொட்டாவி விட்டுக்கொண்டு, "பெங்மோ, அந்தப் பாதிரியைப் போலாகியிருந்தானால், அவர்களுக்குள் மிகுந்த சங்கடங்கள்தான் உண்டாகும்" என்றாள்.

அவள் வாசல்புறம் நோக்கினாள். அவளுக்கு ஏதோ தேவையாக இருக்கிறது என்பதை ஸ்ரீமதி ஹு அறிந்தாள்.

"உனக்கு ஏதாவது வேண்டுமா, மேய்ச்சன்?" என்றாள் விநயத்துடன்.

"இந்த நேரத்தில் நான் ஒரு கிண்ணம் குழம்பு சாதமும் பீன்ஸ் கறியும் சாப்பிடுவது வழக்கம். வயிறு காலியாக இருக்கிறது" என்றாள் ஸ்ரீமதி கேங்.

அங்கிருந்து துரத்தப்பட்டவர்கள் அனைவரும் ஒவ்வொரு வராக மறுபடியும் மெல்ல வர ஆரம்பித்தனர். முதலில் குழந்தைகள் விளையாடுவதற்காக உள்ளே ஓடி வந்தனர். கேங் வீட்டில் எப்போதும் குழந்தைகளை அதிக நேரத்திற்குக் கட்டுப்படுத்தி வைக்கும் வழக்கமே கிடையாது. தாதிகள் பின்னால் ஓடி வந்து, அக் குழந்தைகளைத் தூக்கிச் செல்ல முயன்றனர். அப்போது அக்குழந்தைகள் வீரிட்டலறவும்

ஸ்ரீமதி கேங், "சரி, விட்டுவிடு அவர்களை!" என்று கூறி விட்டாள்.

பணிப்பெண்கள் உள்ளே வந்ததும், சாதம் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. ஸ்ரீமதி ஹு அதை உண்ண மறுத்து விட்டாள். ஸ்ரீமதி கேங் பலமாக சப்தம் செய்தவாறு சாப்பிட்டாள். நடு நடுவே, அருகேயிருந்த குழந்தைகளுக்கு, ஊதி ஆறவைத்து ஒவ்வொரு வாய் கொடுத்தபடி சாப்பிட்டு முடித்தாள்.

ஸ்ரீமதி ஹு போவதற்காக எழுந்து விட்டாள். இதுவே தனது கடைசி விஜயமாக இருக்கும் என்று அவள் மனத்திற்குள் எண்ணிக் கொண்டாள். ஏன், இதுவே அவள் தனது சிநேகிதியைப் பார்க்கும் கடைசி முறையாகவும் இருக்கலாம். அவர்கள்தான் வெகு நாட்களுக்கு முன்னமே பிரிந்து விட்டார்களே!

எப்படியும் அவள் வந்ததில் சில விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது. வந்ததற்காக வருந்த வேண்டிய அவசியமில்லை. ஆண்ட்ரூ லின்யியிக்கு அவளுடைய கடமையை அறிவுறுத்தியிருக்கிறார். அவர் என்ன போதித்தார் என்பதை அவள் அவளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

* * *

பெங்மோவின் எதிர்பாராத வருகையின் காரணமாக ஸ்ரீமதி ஹு மற்ற எல்லாவற்றையும் தூர ஒதுக்கி வைத்தாள். அனைத்துக் குழந்தைகளின் படிப்பிற்கு இப்போது ஒன்றும் அவசரமில்லை. குலான், சியூமிங் இவர்களும் காத்திருக்கலாம்! இப்போது அவள் செய்ய வேண்டிய முதல் கடமை, லின்யியை அவளுடைய கணவனுக்காகத் தயார் செய்து வைப்பதுதான்.

இது அவள் சுலபமாகச் செய்யக் கூடியதே. தன்னுடைய மருமகளைத் தன்னைப் பார்க்க வரும்படிச் சொல்வதற்கு அவளுக்கு உரிமை இருக்கிறது. இத்தனை பெரிய குடும்பத்தில், சில சமயங்களில், ஸ்ரீமதி ஹு ஒரு நபரிடம் நாள்கணக்காக பேசாமலே இருக்கும்படி நேரிடும். லின்யியிடமும் அப்படியே ஆகிவிட்டது. தினமும் அவள் அப்பெண்ணை சாப்பிடும் வேளைகளில் பார்ப்பாள். குடும்ப விசேஷங்கள், பண்டிகைகள், முன்னோர்களின் தினம் இது போன்ற நாட்களிலும் காண்பாள். ஆனால் தன்னை வந்து பார்க்கும்படிச் சொல்வதற்கு ஒரு காரணமும் ஏற்படவில்லை. அப்பெண் இந்த வீட்டில் தான் இருந்து வந்தாள். பணியாட்கள் அவளுக்கு வேண்டி

யதைச் செய்ய இருந்தனர். அவள் தனது சகோதரியைச் சென்று பார்ப்பதும் மிகுதிப் பொழுதை வீணைக் சுழிப்பது மாக இருந்தாள். ஒவ்வொரு ருதுவின் ஆரம்பத்தில் மட்டிலும் அவளுக்குச் சில வேலைகள் இடப்பட்டிருந்தன. குளத்திலிருக் கும் சிறு மீன்களுக்கு ஆகாரம் கொடுத்தல், முன் வாசல் ஹாலில் புஷ்பங்களைக் கொண்டு வைத்தல், பெங்மோவின் கம்பளி, சில்க் ஆடைகள் இவற்றை வெயிலிலே உலர்த்தி எடுத்து வைத்தல், அவள் இருந்து வந்த அறைகளை மேற்பார்த்துக் கொள்ளுதல் ஆகிய வேலைகளை ஸ்ரீமதி ஊ அவளுக்கென்று குறித்திருந்தாள். பெங்மோ இல்லாததால், லின்யி தன் தாய் வீட்டிலிருந்து அழைத்து வந்த ஒரு கிழவியைத் துணைக்கு வைத்துக்கொண்டு அப்பகுதியில் இருந்தாள். இரண்டொரு முறை அவளுக்கு உடம்பு அசௌக்கியம் ஏற்பட்டது. அச்சமயங்களில் மெங் அவளைக் கவனித்துக் கொண்டாள். குணமானதும் அச்செய்தியை ஸ்ரீமதி ஊவிற்கு சொல்லியனுப்பினாள். ஸ்ரீமதி ஊ அவளைப் பற்றி அறிந்திருந்தது இவ்வளவுதான்.

இப்போது அவள் அதிகம் அறிந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. இது முற்றிலும் தன்னுடைய மகனின் நலத்தை உத்தேசித்தே அல்லவென்பது அவளுக்குத் தெரியும். ஆண்ட்ரூ அவளுக்கு என்ன கற்பித்தார் என்பதை லின்யியின் வாயினாலேயே கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பினாள் அவள். அவருடைய சொந்த வார்த்தைகளைக் கேட்க ஆவலுற்றாள். அதோடுகூட அவ் வார்த்தைகள் லின்யியின் மனத்தில் எத்தனை தூரம் வேர்விட்டிருக்கின்றன என்பதையும் அறிந்துகொள்ள விரும்பினாள்.

லின்யி வந்தாள். பகட்டாக உடுத்து முகத்திற்கு பவுடர் பூசி, உதடு, நகம் இவைகளுக்கு வர்ணம் பூசிக்கொண்டு வந்தாள். அவளுடைய தலைமயிர் முனையில் வளைத்துவிடப் பட்டிருந்தது. ஸ்ரீமதி ஊ புன்னகையோடு அவளை வர வேற்றாள். வந்து உட்கார்ந்து கொள்ளும்படி அன்புடன் கையைக் காட்டி சைகை செய்தாள். பேசுவதற்கு முன் லின்யியைத் தலையில் இருந்து கால்வரை உற்றுப் பார்த்தாள் ஸ்ரீமதி ஊ. அவ்விளம் பெண் மிக்க எழிலுடையவளாக இருந்தாள். அதை உணர்ந்திருந்த அவள் ஸ்ரீமதி ஊவின் பார்வையைக் கண்டு அஞ்சவில்லை. பயமின்றி அவளை நேரே நிமிர்ந்து நோக்கினாள். கபடமற்ற அக் கண்களைக் கண்டு, குறுநகை செய்தாள் ஸ்ரீமதி ஊ. ஆம். சூதறியாத கண்கள் தாம் அவை. ஆனால் அதில் குறும்பும், சோம்பேறித்தனமும், அலட்சியமும், குதூகலமும் மிதந்தன.

ஸ்ரீமதி ஊ, "காலத்தின் மாறுதல்களை எண்ணிப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்புதான் வருகிறது. நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில், என் தலைமயிர் சுருண்டு கொண்டிருந்தால் நான் அதற்காக விம்மி அழுதிருப்பேன். நீண்டு, கரியதாகவும் வழவழவென்றிருப்பதும் அப்போது அழகென்று கருதப்பட்டது. ஆனால் இப்போது சுருட்டை மயிர்தான் அழகாகத் தோன்றுகிறது. மெங், அவளது கேசம் தானாகவே சுருண்டு கொள்வதற்காக சந்தோஷப்பட வேண்டும் அல்லவா! ஆனால் மெங் அதை விரும்ப மாட்டான் என்றுதான் நான் நினைக்கிறேன்" என்றாள்.

லின்யி, தனது முத்து போன்ற பல்வரிசைகளும் சிவந்த நாவும் தெரியும்படி சிரித்தாள். பின், அவளது மெல்லிய சீக்கு குரலில், "ஆனால் பெங்மோவிற்கு சுருட்டை மயிர்களைப் பார்த்துப் பார்த்து பழக்கமாகி யிருக்கும் என்று நான் நினைக் கிறேன். வெள்ளைக்காரப் பெண்மணிகள் எல்லோரும் சுருள் சுருளாகத்தான் வைத்துக் கொள்கின்றனர்" என்றாள்.

"ஆ!" என்று கூறிய ஸ்ரீமதி ஊவின் முகத்தில் சிந்தனைக் குறி தோன்றியது. "நீ ஏன் எப்போதும் அன்னிய பொருட் களையே விரும்புகிறாய் என்பதை எனக்குச் சொல் பார்ப் போம்" என்றாள்.

லின்யி முகத்தைச் சுளித்துக் கொண்டு, "நான் எல்லா வற்றையும் விரும்புவதில்லையே. எனக்கு ரோமமடர்ந்த அந்தக் கிழப்பாதிரியாரைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது" என்றாள்.

"ஆனால் அவர் கிழவர் அல்லவே" என்றாள் ஸ்ரீமதி ஊ தாழ்ந்த குரலில்.

"எனக்கு அவர் கிழவர்தானே! ரோமம் அடர்ந்த மனிதர்களைக் கண்டாலே எனக்கு வெறுப்புதான் உண்டா கிறது" என்றாள் லின்யி.

இந்தப் பேச்சு இருவருக்குமே நன்றாக இல்லை என்பதை உணர்ந்த ஸ்ரீமதி ஊ வேறு விதமாகத் திருப்ப முயன்றாள். "ஆனால் அவர் உனக்கு மிக நன்றாகக் கற்பித்தாரல்லவா! அவர் முற்றிலும் நல்ல விஷயங்களையே உனக்குப் போதித் திருப்பார் என்று நான் நினைக்கிறேன். உன்னால் அவர் கூறிய விஷயங்களையெல்லாம், எனக்காக நினைவுபடுத்திக் கொண்டு சொல்ல முடியுமா?" என்று கேட்டாள்.

அவள் உன்னால் முடியுமா என்று கேட்டது, "உனக்கு இஷ்டமா?" என்று கேட்பது போல் இருந்த போதிலும் அவளுடைய குரலில் கண்டிப்பாகச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற தொனி இருந்தது. இதற்குப் பணிந்துதான் ஆகவேண்டும் என்பதை உணர்ந்த லின்யி தனது புருவங்களை நெறித்துக்கொண்டு தலைமயிரின் ஒரு பக்கத்து நுனியை விரலால் சுற்றிக்கொள்ள ஆரம்பித்தாள்.

"நான் அவற்றை நினைவு படுத்திக் கொள்ள முயன்ற தில்லை. ஆனால் அவர் பெங்மோ ஒரு பெரிய காரியத்தைச் செய்வதற்காக பிறந்திருப்பதாகவும் நான் என்னால் கூடிய வரை அவரைச் சந்தோஷப்படுத்த முயற்சிக்க வேண்டு மென்றும் அப்போது தான் அவரால் அவ் வேலையை இன்னும் நன்றாகச் செய்து முடிக்கமுடியும் என்றும் அடிக்கடி கூறுவார்" என்றாள் லின்யி.

"நீ எப்படி அவனை சந்தோஷப்படுத்த வேண்டுமாம்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

லின்யி விருப்பமின்றியே மேலும், "பெங்மோவினுடைய வாழ்க்கையின் ஜீவநதியை நான் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டுமாம். அதன் பிரவாகத்திற்குத் தடையாகயிருக்கும் குப்பை, கூளங்கள், குச்சிகள் இவற்றை நான் அப்புறப்படுத்த வேண்டுமாம். அந்த வெள்ளத்தின் வேகம் சிறிதும் குறைந்து போகாவண்ணம் நான் பார்த்துக் கொள்ள வேண்டுமாம். ஒரு தெளிந்த ஓடையில் போடப்பட்ட ஒரு பாறையைப் போல் நான் வழியை அடைத்துக் கொண்டு ஆற்றில் நீரைப் பிரிந்து போகும்படி செய்யக் கூடாதாம். பெங்மோவின் வாழ்க்கையில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடாதென்றும் அந்தப் பாதிரி சொன்னார்" என்றாள்.

ஆம். இவை ஆண்ட்ரூவின் வார்த்தைகளாக இருக்கக் கூடும் என்று எண்ணினாள் ஸ்ரீமதி ஊ. இந்தப் பெண்ணின் அறிவிற்கு எட்டக் கூடிய முறையில் இத்தனை எளிய முறையில் எளிய உதாரணங்களைத் கொண்டுதான் அவர் கூறியிருப்பார். "மேலே சொல்லு, குழந்தாய்! இவையெல்லாம் நல்ல வார்த்தைகள்" என்றாள் அன்புடன்.

லின்யி தொடர்ந்து கூறினாள். அவளுடைய கை தலை மயிரை விட்டு விட்டது. அவளது கண்கள் பேசும் பொழுது ஒரே நிலையாக நின்றன. "பெங்மோ செய்யும் காரியங்களைப் பற்றிய புத்தகங்களை நான் படித்து அவருடைய எண்ணங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமாம். நான் அவரை விடாமல்

பின்பற்றிச் செல்லாவிடில் அவர் தனிமையில் மிகவும் வாடு வாராம். பெங்மோவிற்கு நான் தேவையாக இருக்கிறேன் என்று அவர் கூறினார்" என்றாள்.

அவள் ஸ்ரீமதி ஊவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து "நான் அவருக்குத் தேவையாக இருக்கிறேன் என்பதை பெங்மோ அறிவாரா என்பதுதான் எனக்குச் சந்தேகம்" என்றாள்.

ஸ்ரீமதி ஊ அக் குழந்தைத்தனமான பார்வையைச் சந்தித்து, "நீ அவனை நேசிக்கிறாயா?" என்று கேட்டாள்.

ஒரு பெண்மணி தனது மகனுடைய மனைவியைப்பார்த்துக் கேட்கும்படியான கேள்வியா இது? ஸ்ரீமதி ஊ வைத் தவிர வேறு யார் இவ்விதம் கேட்டிருக்க முடியும்? லின்யியின் கண்களில் நீர் நிறைந்தது. "அவர் என்னை நேசிக்கும் பட்சத்தில் என்னால் அவரை நேசிக்க முடியும்" என்றாள் தாழ்ந்த குரலில்.

"அவன் உன்னைக் காதலிக்கவில்லையா?" என்று கேட் டாள் ஸ்ரீமதி ஊ.

லின்யி தன் தலையை வேகமாக ஆட்டினாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் உருண்டோடி அவளுடைய நீலநிற சேடன் ஆடையின் மீது முத்து முத்தாகத் தேங்கி நின்றது.

"இல்லை. பெங்மோ என்னை நேசிப்பதில்லை" என்றாள் லின்யி.

இதைக் கூறிவிட்டு அவள் தலை குனிந்து, கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி அழ ஆரம்பித்தாள். ஸ்ரீமதி ஊ பேசாதிருந்தாள். ஒரு பெண்ணின் துயரத்திற்குக் கண்ணீர் விடுவதைப் போன்ற மருந்து வேறு என்ன இருக் கிறது? அவளே எத்தனை முறை விம்மிஅழ விரும்பி, அது அவளுக்குச் சாத்தியமில்லாமல் போயிருக்கிறது!

அவள் லின்யியின் விம்மல் குறைந்து, அடங்கும் வரை பேசாமல் காத்திருந்தாள். பின்னர், "ஆ! பெங்மோ ஒரு வரையுமே நேசிப்பதில்லை! அதுதான் அவனிடமுள்ள குறை. நாம் அதைச் சரிப்படுத்த வேண்டும். நான் அதில் உனக்கு உதவி செய்கிறேன் குழந்தாய்" என்றாள்.

எளிய, இந்தச் சில வார்த்தைகள் தான் அவள் கூறியவை. ஆனால் அவ்விட்டினர் ஒவ்வொருவரும் அவளிடம் கொண்டி ருந்த நம்பிக்கை கொஞ்ச நஞ்சமல்ல—லின்யி தனது கைகளை

முகத்திலிருந்து எடுத்து விட்டு, நனைந்திருந்த இமைகளோடு அவனை நோக்கிப் புன்னகை செய்தாள்.

"உங்களுக்கு வந்தனம், அம்மா! நான் உங்களுக்குக் கோடி வந்தனம் செலுத்துகிறேன்" என்றாள்.

* * *

பெங்மோ மழைக்காலம் வருமுன் திரும்பி வந்து விட்டான். இலையுதிர் காலத்தின் வெப்பம் இன்னும் தணியவில்லை. அறுவடையாகி தானியங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. ஊ குடும்பமும், அவர்களுடைய யோசனையையும் உதவியையும் எதிர்பார்த்திருந்த அவ்வூராரும், கிராமங்களில் வேலை செய்தோரும், எல்லோரும் தங்களுடைய முன்னோர்கள் வாழ்ந்தது போலவே அமைதியாக வாழ்ந்து வந்தனர். கிழக்கிலோயுத்தத்தின் கொந்தளிப்பு மிக அதிகமாகயிருந்தது. எத்தனையோ இடங்களில், வீடுகள் நாசமாக்கப்பட்டு, ஜனங்கள் விரட்டப்பட்டு இங்குமங்கும் அலைந்து அவதிப்பட்டனர். நிலங்கள் பாழாகிக் கிடந்தன. ஆனால் உள்நாட்டுப் பிரதேசமாகிய இங்கு, ஊ குடும்பத்தின் வாழ்க்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் வழக்கம் போல் சென்றுகொண்டிருந்தது.

ஸ்ரீமதி ஊ, தனது மகனுடைய வரவிற்காகக் காத்திருந்தாள். வந்தனோபசாரங்களெல்லாம் முடிந்ததும், முதல் முதலில் பெங்மோ குறிப்பிட்டது இந்த அமைதியைப் பற்றித்தான். சற்றும் மாறுதலின்றி காணப்பட்ட அவ்வறையை, தன் கண்களையே நம்ப முடியாதவனைப் போல் சுற்றிச் சுற்றிப் பார்த்தான்.

"ஒன்றுகூட மாறவில்லையே!" என்றான் அதிசயத்துடன்.

"நாங்கள் எதற்கு மாறவேண்டும்?" என்றாள் ஸ்ரீமதி ஊ.

இதைக் கூறும் போதே அவளுக்கு அது உண்மையல்ல என்பது நன்கு தெரியும். ஏன், அவள் உள்ளத்திலேயே எத்தகைய பெரும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே! தினம் தினமும் அவள் செய்யும் காரியங்களிலும் பேச்சுக்களிலும், ஆதரவிற்காகவும் புத்திமதிக்காகவும் தன்னைச் சார்ந்திருந்த அத்தனை பெயரையும் பரிபாலிப்பதிலும் தான் எவ்வளவு மாறுதல்கள் காணப்படுகின்றன. ஆனால் அதைப் பற்றி இப்போது பேசுவது உசிதம் என்று அவள் கருதவில்லை.

"நீ மிகவும் மாறிப் போயிருக்கிறாய், மகனே" என்று மட்டும் கூறினாள்.

அவள், வெள்ளியின் நிறத்தையுடைய பட்டாடையை அணிந்து புத்தக அறையில் உட்கார்ந்திருந்தாள். ஆண்ட்ரூவுடன் தானும் பெங்மோவுமாக உட்கார்ந்திருந்த இவ்வகன்ற அறையிலேயே இப்போது அவனை வரவேற்கத் தீர்மானித்தாள் அவள். ஆண்ட்ரூவைப் பற்றி அவள் ஒன்றும் கூறப்போவதில்லை. கடந்த காலத்தின் நினைவு அதைப்பற்றி பேசும். ஆதலால் வரவேற்பு வைபவங்கள் வாசலில் நடந்தேறிப் பின்னர் வேடிக்கை விளையாட்டுகளெல்லாம் முடிந்து கூட்டம் கலையும் வரை அவள் காத்திருந்தாள். பின்னர் விருந்துக்குப் போவதற்கு முன்னர், அன்றிரவு பெங்மோவிற்கு தான் அளிக்கப் பார்ப்பதற்குக் காத்திருப்பதாகச் சொல்லியனுப்பினாள்.

அவன் வந்து அவள், கூறுவதற்கு முன்பே உட்கார்ந்து கொண்டான். அவன் வந்தபோது அணிந்து கொண்டிருந்த மேனாட்டு உடைகளையெல்லாம் களைந்து விட்டுத் தன் சொந்த ஆடைகளை அணிந்து கொண்டிருந்தான். தான் அணிந்திருந்த அயல்நாட்டு பூட்சுகளைக் கூட கழற்றிவிட்டு, தனது கறுப்பு வெல்வெட் பாதரக்ஷைகளை அணிந்து கொண்டிருந்தான். அவனிடம் இதுவரை யாரும் த்ஸேமோவைப் பற்றிப் பேசவில்லை. ஏனெனில் உயிரோடு வாழ்பவனிடம், மேலும் இப்போதே வீட்டிற்குத் திரும்பி வந்திருக்கும் ஒருவனிடம் இறந்தவனைப் பற்றிப் பேசுவது சுபமானதல்ல. ஆனால் பெங்மோ தானே இப்போது தனது சகோதரனைப் பற்றிய பேச்சை எடுத்தான்.

"எனது இரண்டாவது அண்ணன் இல்லாததை நான் மிகவும் உணர்கிறேன்" என்றான்.

ஸ்ரீமதி ஊ தனது கண்களை மெல்ல துடைத்து விட்டுக் கொண்டாள். த்ஸேமோ உயிரோடு இருந்தபோது அவள் அவனைப் பற்றி அதிகம் எண்ணியதில்லை. ஆனால் இப்போது அவன் இல்லாததை வெகுவாக உணர்ந்து, அவனைப் பற்றி அடிக்கடி சிந்திக்கலானாள். அவள் அவனைப் பற்றித் தனக்குத் தெரிந்ததை எண்ணி அதற்காக வருந்தவில்லை. அவனைப்பற்றி அவள் அறிந்து கொள்ளாமற் போனவற்றை எண்ணியே மிகவும் வருந்தினாள். தான் தன் வீட்டிலேயே ஒரு மகனைப் பெற்று வளர்த்திருந்தும் கூட, அவனைத் தான் சரியாக அறிந்து கொள்ளாமல் விடுத்ததற்காக தன்னையே அவள் மிகவும் நொந்து கொண்டாள். தான் பெற்று வளர்த்த மகன் என்ற முறையிலே அவனை அறிந்திருந்தாளே ஒழிய, அவனுடைய

உண்மையான ஆத்மநிலை எது என்பதை அவள் அறிந்து கொள்ளாமல் போனுள்.

"அவனுள் என்னென்ன சிறப்புகள் அடங்கியிருந்தனவோ! நான் அதை அறியாமற் போனேன்! இனி நான் அவற்றை அறிவது எங்ஙனம்?" என்று அடிக்கடி தனக்குள் கூறிக்கொண்டாள்.

"என்னுடைய இரண்டாவது அண்ணனின் மனைவி எப்படியிருக்கிறுள்?" என்று கேட்டான் பெங்மோ அடுத்தபடியாக.

"ருலான்.....அவள்பாட்டிற்கு இருக்கிறுள். காலம் செல்லச் செல்லத்தான் அவளுக்கு வாழ்வதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தாக வேண்டும். அவள் வயதில் மிகவும் சிறியவள். அதற்குள் கன்னிகா ஸ்திரீயைப் போலாவது கடுமையான காரியம்" என்றுள் ஸ்ரீமதி ஊ.

"ஆனால் இன்னொரு கல்யாணம் மட்டும் நிச்சயம் செய்து கொள்ளமாட்டாள் அல்லவா?" என்றுன் பெங்மோ.

"அவள் விரும்பினுல், நான் செய்து வைப்பேன்" என்றுள் ஸ்ரீமதி ஊ.

இது பெங்மோவிற்கு மிக்க ஆச்சரியத்தை அளித்தது. தன்னுடைய தாய், குடும்பத்திற்கும் மேலாக ஒரு பெண்ணின் சுகத்தைக் கருதக்கூடும் என்பதை அவன் கற்பனைகூட செய்து பார்க்கவில்லை.

அவனுடைய ஆச்சரியத்தைக் கண்டு, ஸ்ரீமதி ஊ, அவளது மிருதுவான முறையில் தொடர்ந்து, "வயதாக ஆக நானும் எவ்வளவோ கற்றுக்கொண்டு வருகிறேன். உள்ளேயிருக்கும் வாழ்க்கை ஊற்றுக்கள் தெளிவாகயில்லாவிட்டால், வாழ்க்கையை வாழ்வதன் பயனே இல்லாமல் போகிறது. ஒவ்வொரு ஆத்மாவிடமும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. அதை அடைந்து உண்மையான ஆனந்தத்தை அடைவதற்கு அதற்கு உரிமை இருக்கிறது" என்றுள்.

"இதைத்தான் சகோதரர் ஆண்ட்ரூ அடிக்கடி சொல்வார்" என்றுன் பெங்மோ திடீரென்று. இந்த வார்த்தையால், ஏதோ ஒரு சக்தியாலோ, அல்லது மறைந்திருக்கும் ஒருவருடைய நினைவாலோ மிக விரைவில் ஒருவர்க்கொருவர் மிகச் சமீபமாக வந்து விட்டதைப் போல் இருவரும் உணர்ந்தனர்.

"அம்மா, சகோதரர் ஆண்ட்ரூவை நீ நினைவு வைத்திருக்கிறுயா?" என்று கேட்டான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊ தயங்கினுள். எவ்வளவு தூரம் அவன் சொல்லலாம்? அவளுடைய பழைய சுபாவம் இப்போதும் வந்தது. இல்லை, தம்முறைகளுக்கிடையே நிலவும் மௌனத்தை முற்றிலும் கலைப்பது அழகல்ல. வாழ்க்கையே இந்த விந்தி யாசத்தைப் பிறப்பித்திருக்கிறது. காலமாயை இரண்டும் அதை எப்போதும் மறைத்தே வந்திருக்கிறது. இயற்கையின் நியதியை மாற்றுவதற்கு அவளுக்கு ஏது உரிமை? அவளும் ஆண்ட்ரூவும் ஒரு தம்முறையைச் சேர்ந்தவர்கள். பெங்மோ மற்றொரு தம்முறையைச் சேர்ந்தவன்.

"நான் அவரை நன்றாக நினைவு வைத்திருக்கிறேன்" என்று மட்டுமே அவள் கூறினுள்.

பெங்மோ, தான் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தானே, என்னவோ, அதை அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. "அம்மா, அவர் என்னைப் பெரிதும் மாற்றிவிட்டார்" என்று தாழ்ந்த குரலில் கூறி விட்டு, ஆண்ட்ரூவின் வெறுமையான நாற்காலியை நோக்கினுன். "உண்மையான இன்பம் எது என்பதை என்னைப் புரிந்துகொள்ளும்படிச் செய்தார். என்னுடைய ஞானக் கண்ணை அவர்தான் திறந்து விட்டார். அதன் காரணமாகவே நான் விரைந்து வீடு திரும்பி வந்தேன்" என்றுன்.

அவள் பேசவில்லை. மகனுடைய குரலின் நெகிழ்ச்சியைச் செவியுற்ற அவள் தான் பதில் சொல்வது கூட மிகையாகி விடும் என்று, இனிய புன்னகையுடன் கைகளைச் சேர்த்து மடிமீது வைத்துக்கொண்டு அவன் கூறுவதை கேட்கத் தயாராகக் காத்திருந்தாள்.

"நான் ஏன் சீக்கிரமாக வந்துவிட்டேன் என்பதை ஒருவராலும் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் கேட்டாலும் என்னால் சொல்ல முடியாது. அவர்களுக்கு எப்படிச் சொல்வதென்பதை நானறியேன். ஆனால் உன்னிடம் நான் அதைச் சொல்ல விரும்புகிறேன் அம்மா. இந்த வீட்டிற்குள் சகோதரர் ஆண்ட்ரூவைக் கொண்டு வந்தது நீயே அல்லவா!" என்றுன் பெங்மோ.

ஆண்ட்ரூ தன் நினைவிலேதான் உறைந்திருக்கிறுர் என்றும், அவர் அங்கு தன் முன்னிலையிலேயே இருப்பதாக அவளுக்கு உறுதியாகப்பட்டது. அவளுக்குப் பேசுவதற்கு

துணிவு உண்டாகவில்லை. அவள் நினைவு வைத்திருந்தால் ஆண்ட்ரூ அங்கு இருக்கவில்லை. அவள் அவரை நேசித்த தாலேயே அங்கு உறைகிறார்.

"அம்மா!" என்று அழைத்தான் பெங்மோ. அவன் அவ்வார்த்தைகளைச் சொல்லித் தீர்த்து விடவேண்டும் என்ற அவசரத்துடன் வேகமாக நிமிர்ந்து பார்த்தான். "நான் அங்கு ஒரு அன்னியப் பெண்ணைக் காதலிக்கக் கற்றுக்கொண் டேன். அவளும் என்னைக் காதலித்தாள். ஆனால் இருவரும் பிரிந்து விட்டோம். நான் விரைவாக வீடு திரும்பி வந்து விட்டேன்."

பழைய ஸ்ரீமதி ஊவாக இருந்தால், இதற்கு உடனே கோபத்துடன் கூச்சலிட்டிருப்பாள். இப்போது மிகவும் சாந்த மாக, "என்ன துயரம்! மகனே! என்ன துயரம்!" என்றாள்.

ஆம்! அது எத்தகைய துன்பம் என்பதை அவள் அறிவாள்!

"உனக்குப் புரிகிறதா?" என்றான் பெங்மோ முதுமை யைக் கண்டு இளமை கொள்ளும் வியப்புடன்.

அவன் இப்போது நன்றாக வளர்ந்திருந்தான். உயரத்தில் சில அங்குலம் வளர்ந்திருந்தான். பெரிய எஜமானரைப் போல் ஒல்லியாக உயரமாக இருந்தான். ஸ்ரீமதி ஊ இப்போதுதான் அதைக் கவனித்தாள். இத்தனை நாள் வரை அது அவளுக்குத் தெரியவில்லை. பெங்மோ துளிகூட தன் தகப்பனாரைப் போல் இல்லை. ஆனால் பாட்டனாரை மிகவும் ஒத்திருந்தான். அவரிடமிருந்த அதே கம்பீரமும் பற்றற்ற தன்மையும் இவனிடம் காணப்பட்டன. அவன் அழகாக இருந்தான். ஆனால் அவனிடம் மலர்ச்சி இல்லை. யாங்மோ வின் தெள்ளிய அழகும் த்ஸேமோவின் வீரம் செறிந்த கட்டழகும் இவனிடம் இல்லை. பெங்மோ ஒரு இளம் மேதை யைப்போல் விளங்கினான்.

"வயதாக ஆக நானும் எவ்வளவோ கற்றுக்கொண் டேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

பெங்மோ பெருமூச்செறிந்து, "ஆ, அம்மா, இந்த வீட்டில் என்னைப் புரிந்து கொள்ளக்கூடியவர் ஒருவராவது இருப்பார்களா என்று நான் எண்ணிக்கொண்டே வந்தேன்" என்றான். இப்போது அவனிடம் அவனுக்கு நல்ல நம்பிக்கை ஏற்பட்டு விட்டதால், அவனிடமிருந்து வெள்ளமெனப் பொழிந்தன வார்த்தைகள். "என்னைப் போல் அவரும் ஒரு

மானவி. அங்கெல்லாம் ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து படிக்கின்றனர். அவளுக்கு என்னைப் பற்றிய வியப்பும் என்னைப் பற்றி அறியவேண்டும் என்ற ஆவலும் உண்டாயிற் றும். அவளாகவே என்னைத் தேடி வந்தாள். ஆனால் துணி வுடன் நேரே வந்துவிடவில்லை. ஏனெனில் என்னைப் போன்ற ஒருவனை அவள் எங்குமே கண்டதில்லை என்று கூறினாள் அம்மா. அவள் நம்மை பற்றியும் நமது நாட்டைப் பற்றியும் வீட்டைப் பற்றியும் ஆயிரமாயிரம் கேள்விகள் கேட்டாள். நான் என்னையுமறியாது அவளிடம் எல்லாவற்றையும் கூற ஆரம்பித்தேன். என்னைப் பற்றிக்கூட நான் அவளிடம் கூற ஆரம்பித்து விட்டேன். அவளும் தன்னுடைய வாழ்க்கை யைப் பற்றி அனைத்தையும் எனக்குக் கூறினாள். நாங்கள் எவ்வளவு விரைவில்—ஒருவரை ஒருவர் எவ்வளவு நன்றாக அறிந்து கொண்டோம் தெரியுமா!" என்றான்.

"கடைசியாக வின்யினைப் பற்றியும் அவளிடம் சொல்ல வேண்டி வந்திருக்கும்" என்று மெல்ல குறிப்பிட்டாள் ஸ்ரீமதி ஊ.

அவன் தோள்களை குலுக்கிக்கொண்டு, முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான். "ஆம். கூறவேண்டி வந்தது. பின் வீட்டிற்கும்கூட திரும்பி வரவேண்டி நேர்ந்தது" என்றான்.

"உங்களைப் பிரிக்கக் கடலை நடுவே விட்டு வந்தாயோ மகனே?" என்றாள் ஸ்ரீமதி ஊ அதே சாந்தமான குரலில்.

"எங்களுக்கிடையே சகலமும் இருந்து எங்களைப் பிரிக்கும் படி விட்டு வந்தேன்" என்றான் பெங்மோ.

அவள் சாந்தி நிறைந்த உள்ளத்துடன் உட்கார்ந்திருந் தாள். இப்போது அந்நிலையே அவள் எப்போது மிருக்கும் நிலையாகிவிட்டது. ஆண்ட்ரூ அவளுடைய மகனுடைய ஆத்மாவை நன்றாகப் பண்படுத்தி விட்டார். அவன் உள்ளம் நல்லதையே எப்போதும் விரும்பி நாடும்வண்ணம் செய்து விட்டார். அவன் சந்தோஷமாக வாழவேண்டுமே என்ற ஏக்கம் அவள் மனத்தில் உண்டாயிற்று. ஆயினும் இந்தப் பிள்ளை மற்றவர்களைப் போன்றவன் அல்ல. பெண்களிட மிருந்தும் தனது சொந்த சரீரத்தின் மூலமாகவும் இவன் ஒருபோதும் இன்பம் பெறமாட்டான். அவள் ஆண்ட்ரூவை அவனுக்கு ஆசிரியராக இருக்கும்படி கேட்டபோது, குருட்டுத் தனமாகக் கேட்டுவிட்டாள். ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டாள். அவள் ஒரு கதவைத் திறந்து விட்டு விட்டாள். ஆனால் அவளுடைய கையின் கீழ் ஒரு பிரம்மாண்டமான

கதவு திறந்துகொண்டு விட்டது. அதன் வழியாக அவளுடைய மகன் ஒரு புதிய உலகத்திற்குச் சென்று விட்டான்.

அவன் இப்போது வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டானு? வந்ததும் அக் கதவை மீண்டும் நன்றாகச் சாத்திப் பூட்டி விட்டானு?

"மகனே, இனி.....இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"நான் வீடு வந்து சேர்ந்தாகிவிட்டது. நான் மறுபடியும் ஒருபோதும் இதை விட்டுச் செல்லப் போவதில்லை. இனி என் வாழ்க்கையை இங்கேயே ஒருவிதமாகச் சரிசெய்து கொள்ள வேண்டியதுதான்" என்றான் அவன்.

இருவரும் ஒருவரை ஒருவர் பூரணமாக அறிந்துகொண்டவர்களாய் மௌனமாக வெகுநேரம் உட்கார்ந்திருந்தனர்.

"நீ லின்யியிக்கு உதவி செய்யவேண்டும், மகனே" என்றாள் அவள்.

"அதை நான் அறிவேன் அம்மா. நான் அவளைப் பற்றியும் அதிகம் யோசித்தேன். நான் அவளுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்" என்றான்.

ஸ்ரீமதி ஊ மேலும், "அவள் உனக்கு மிகவும் தேவையாக இருப்பதுபோல் நீ நடந்துகொள்ள வேண்டும். நீ செய்யும் சிறுசிறு காரியங்களிலும் அவளுடைய உதவியை நாட வேண்டும். உன்னுடைய சாமான்களை ஒழுங்காக வைக்கும் படி அவளிடம் கூறு. உன்னுடைய புத்தகங்களை அடுக்கி வைக்கச் சொல்லு. உனக்காக அவளை தேநீர் கொண்டு வரும் படி உத்தரவிடு. அவளால் செய்ய முடிந்த எந்தக் காரியத்தையும் நீயாகச் செய்துகொள்ளாதே மகனே. அவளை எப்போதும் ஏதாவது ஒன்றில் கருத்தை வைக்கும்படிச் செய்தாயானால் அவளுக்கு மற்ற எதைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய அவசியம் நேராது" என்றாள்.

"அப்படியே செய்கிறேன், அம்மா" என்றான் பெங்மோ.

அவர்கள் இருவரும் மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தனர். தாயும் மகனும், ஆத்மானந்தத்திலும் பிணைக்கப்பட்டவர்களாய் இன்பமயமான மெய்ம்மறந்து உட்கார்ந்திருந்தனர். சியுமிங் மட்டும் தன்னுடைய வெகு நாளைய விருப்பமான ஒரு வேண்டுகோளை ஸ்ரீமதி ஊவிடம் சமர்ப்பிப்பதற்கு

சமயத்தைத் தேர்ந்தெடுத்திராவிடில் அவர்கள் பாட்டிற்கு நேரம் கழிவதே தெரியாமல் உட்கார்ந்திருப்பார்கள்.

இத்தனை மாதங்களாக சியுமிங் குலானுடனேயே வாழ்ந்து வந்தாள். அவ்வினம் விதவை தனது மடிந்துபோன கணவனைப் பற்றியும் அவனிடம் தான் கொண்டிருந்த அன்பைப் பற்றியும் கூறும் சோகக் கதைகளை யெல்லாம் கேட்டு வந்தாள். அதைக் கேட்கக் கேட்க தன் எண்ணமெல்லாம் அதிகமாக பெங்மோவை நோக்கித் திரும்புவதை உணர்ந்தாள் சியுமிங். இதை உணர உணர அவ்வீட்டை விட்டு தான் தன் குழந்தையுடன் சென்று விடவேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு அதிகமாயிற்று. ஆயினும் அவள் எங்கே போவது?

ஒருநாள் இரவு குலான் வெகுநேரம் உறக்கம் கொள்ள முடியாதவளாய் பேசிக்கொண்டே யிருந்தாள். அவர்கள் இருவரும் பெண்களின் உள்ளத்தில் எழக்கூடிய கரை காணாத காதலைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, சியுமிங் இது நாள் வரை தான் காத்து வந்த மௌனவிரதத்தைக் கைவிட்டு பெங்மோவிடம் தான் கொண்டிருந்த காதலைப் பற்றி குலானிடம் கூறினாள்.

"நான் மிகவும் கெட்டவள். அவரை நினைப்பதற்கு நான் என் மனத்திற்கு இடம் கொடுக்கிறேன்" என்றாள் குலானிடம்.

குலான் முழு கவனத்தோடு கேட்டு வந்தாள். முடிவில் அவள் தனது தலை மயிரைப் பின்னுக்குத் தள்ளி விட்டுக் கொண்டு, "நாம் இந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று நான் மிகவும் விரும்புகிறேன். இந்த உயர்ந்த சுவர்களுக்குப் பின்னால் நாம் எல்லோரும் சிறை படுத்தப் பட்டிருக்கிறோம். யாவரும் குடும்பத்திற்காகப் பலியாகிறோம். நமது அன்பு எங்கே இருக்கக் கூடாதோ அங்கேதான் செல்கிறது. நாம் யாரை வெறுக்கக் கூடாதோ அவர்களைத்தான் நாம் வெறுக்கிறோம். இந்த அன்பிற்கும் வெறுப்பிற்கும் இடையே நாம் ஒருவர்க்கொருவர் மிகவும் நெருங்கி இருக்கிறோம்" என்றாள் வேகத்துடன்.

"ஆனால் இந்த சுவர்களுக்குள்ளே நாம் பாதுகாப்புடன் இருக்கிறோம். இல்லையா?" என்று கேட்டாள் சியுமிங். குலானின் துணிச்சலைக் கண்டு அவளுக்கு உள்ளூரப் பயம் ஏற்பட்டது. ஆயினும் அவளுடைய துணிவைக் கண்டு அவள் வியக்காமலில்லை.

"நமக்குள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பாதுகாப்பு இருக்கவில்லையே அதற்கு என்ன செய்வது?" என்றாள் ருலான் கோபத்துடன்.

இந்தச் சமயத்தில் அவர்கள் இருவருக்கும் ஏக காலத்தில் ஒரு யோசனை தோன்றியது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"நாம் எதற்கு இங்கு இருக்கவேண்டும்?" என்று கேட்டாள் ருலான்.

"நாம் எப்படி துணிந்து போகமுடியும்?" என்று கேட்டாள் சியூமிங்.

இருவரும் உடனே புதிய திட்டம் வகுப்பதில் முனைந்தனர். சியூமிங் முதலில் அவ்வீட்டின் மூதாதைகள் இருந்து வந்த கிராமத்தில் சென்று வசிப்பதற்காக அனுமதி கேட்பாள். அவளுடைய பழைய கிராமத்திற்கு திரும்பவும் செல்வது நன்றாக இராது. ஊரார் அவளை ஊ விட்டினர் வெளியே அனுப்பிவிட்டனர் என்று எண்ணிக்கொள்வார்கள். மேலும் ஸ்ரீமதி ஊ இதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டாள். ஆதலால் ஊ குடும்பத்தினருக்குச் சொந்தமான கிராமத்திலேயே சென்று வசிக்க அனுமதி கோருவாள். கிராமத்தில் குடியானவர்களிடையே ஒரு இளம் பெண் தனியாக இருக்கக் கூடாதென்று ஸ்ரீமதி ஊ தடை செய்தால் அப்போது, ருலானையும் அனுப்பும்படி கேட்டுக் கொள்வாள். ருலானை நேரே கேட்கும் போது அவள், தான் கிராமத்துச் சிறு குழந்தைகளுக்காக ஒரு பள்ளியை ஆரம்பித்து நடத்த விரும்புவதாகவும் தன்னுடைய நிலைமைக்கு அது பொருத்தமான காரியமென்றும் அவள் கூறிக்கொள்ளலாம். விதவைகள் நல்ல காரியங்களில் ஈடுபட வேண்டுமென்பதை யாவரும் அறிவார்கள். வெகுநேர விவாதத்திற்குப் பிறகு அவர்கள் இந்த முடிவிற்கு வந்தனர். ருலானே, அப்போதே, அவளாகவே சென்று ஸ்ரீமதி ஊவிடம் பேசவேண்டுமென்று துடிதுடித்தாள். ஆனால் அது மரியாதை குறைவான காரியம் என்பதை சியூமிங் குறிப்பிட்டான். ஒருகால் ஸ்ரீமதி ஊவிற்கு இவ்விஷயம் பிடிக்காதிருக்கும் பட்சத்தில், தனது மருமகளின் வேண்டுகோளை நேருக்கு நேர் மறுக்கவேண்டி வந்தால் அது அவளுக்கு விண் சிரமத்தைத் தானே கொடுக்கும்? ஆதலால் அப்படி மறுத்து அனுப்பும் பட்சத்தில் அதை சியூமிங் முதலில் சென்று வாங்கிக் கொள்வது உசிதம் அல்லவா! அப்போது மாமியாருக்கும் மருமகளுக்குமிடையே ஒருவித மனஸ்தாபமும் ஏற்பட வேண்டிய அவசியமிராது.

ருலான், இதெல்லாம் பழைய மூட வழக்கத்தைச் சேர்ந்தது என்று கோபத்துடன் கத்தினாள். ஆனால் இதுதான் மரியாதைக்கு உகந்தது என்று சியூமிங் கூறிவிட்டாள். ஆகவே அது ஒரு நிர்மானத்திற்கு வந்தது.

இப்போது சியூமிங்கிற்கு பெங்மோ எங்கிருக்கிறான் என்பது நன்றாகத் தெரியும். அவன் இருக்கும்போதே ஸ்ரீமதி ஊ விடம் சென்று, அவளுடைய முன்னிலையிலேயே அவனுக்கு வணக்கம் கூறிவிட்டு பிறகு அவளிடம் வேறொன்றும் பேசவில்லை யென்று தன் மனத்திற்குள் நிர்மானித்துக் கொண்டிருந்தாள். ஆதலால் அவள் தன் குழந்தையைக் குளிப்பாட்டி, ஒரு வெப்பு நிலக் சட்டையை அணிவித்து, நிலகமிட்டு, தலையை வாரி இரண்டு புறமும் புதிய நாடாக்கள் வைத்துப் பின்னி அலங்கரித்து அழகிய சிறு பெண்ணை வினங்கிய அவனை எடுத்துக்கொண்டு, சிறிதும் முன்னறிவிப்பில்லாமல் வந்து நின்றாள்.

கதவருகே சியூமிங் வந்து நிற்பதைப் பார்த்தான் ஸ்ரீமதி ஊ. அந்தி மயங்கும் நேரம் அது. பெங்மோ காலையிலேயே வந்து விட்டான். சூரியன் அப்பகுதியை விட்டுச் சென்றுவிட்டான். ஆனால் மஞ்சள் வெயில் அவ்விடத்தைச் சூழ்ந்திருந்தது. அந்த ஒளியில் சியூமிங், கையில் குழந்தையோடு வந்து நின்றாள். ஒன்றும் தோன்றாதவளாய் அவள் எழிலுற நிற்கும் அழகைப் பார்த்துக்கொண்டிருந்தாள் ஸ்ரீமதி ஊ. சியூமிங்கினுடைய ரகசியமான காதல், நிறைவேறாத போதிலும், அவளைப் பொலிவுறச் செய்திருந்தது. தன் மகன் இதைப் பார்க்கிறானா என்று ஸ்ரீமதி ஊ உடனே கவனித்தாள். ஆனால் அவன் எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. சியூமிங், மிக்க கவனத்தோடு பெங்மோவிற்கு வந்தனம் தெரிவித்தாள்.

"ஆ! மூன்றாவது எஜமானரே! தாங்கள் வீட்டிற்கு வந்து விட்டீர்களா?" என்றாள்.

பெங்மோ சாதாரணமாக, "ஆம்.ஆம். நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா?" என்று விசாரித்தான்.

"நன்றாக இருக்கிறேன்" என்றாள் சியூமிங்.

அவனை ஒருமுறை பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டவள் மீண்டும் அவன் பக்கம் திரும்பவில்லை. அவள் ஸ்ரீமதி ஊவைப் பார்த்து, "எங்கள் அம்மா, உங்களிடம் நான் ஒரு சிறு வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்ள வந்திருக்

றேன். இச்சமயத்தில் வந்து உங்களைத் தொந்திரவு செய்வதற்காக என்னை மன்னித்தருள்வீர்களா?" என்றாள்.

சியூமிங், இந்தச் சமயம் பார்த்து வந்திருப்பதில் ஏதோ ஒரு நோக்கம் இருக்கவேண்டும் என்பதை ஊகித்த ஸ்ரீமதி ஹு தலையைச் சற்றே சாய்த்து, "வா. இப்படி வந்து உட்கார். அக் குழந்தையைக் கீழே நிற்கும்படி விடு" என்று கூறினாள்.

சியூமிங் மிகுந்த வெட்கத்தோடு அப்படியே செய்தாள். அவள் தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தாள். ஸ்ரீமதி ஹு அதற்கு செவி சாய்த்திருந்து விட்டு முடிவில், "மிகவும் நல்லது. மிகவும் நல்லது" என்று கூறினாள்.

சியூமிங் இத்தருணத்தில் வந்ததற்கான நோக்கத்தை உடனே புரிந்து கொண்டாள் ஸ்ரீமதி ஹு. பெங்மோ வீட்டிற்கு வந்து விட்டதால் இனித் தான் அங்கிருந்து கிளம்பிவிட வேண்டும். தன்னால் குடும்பத்திற்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படக் கூடாது என்று தான் விரும்பியதை ஸ்ரீமதி ஹுவிற்குத் தெளிவு படுத்திவிட விரும்பினாள் அப்பெண். இவ்வுதார குணத்தை அறிந்த ஸ்ரீமதி ஹுவின் உள்ளத்தில் நன்றி பெருக்கெடுத் தோடியது.

ஸ்ரீமதி ஹுவிடமிருந்து தனக்கு அனுமதி கிடைத்ததும் சியூமிங் ருலானின் சார்பாக அடுத்தபடி வேண்டிக் கொண்டாள். "குடும்பத்தில் துக்கம் காக்க வேண்டிய நாட்கள்தான் தீர்ந்து விட்டன. அவளுடைய துக்கமோ என்றென்றைக்கும் தீரப் போவதில்லை. பிறருக்குத் தொண்டு செய்வதன் மூலம் தனது துயரை ஒருவாறு மறக்க அவள் விரும்புகிறாள். கிராமத்துக் குழந்தைகளுக்காக அவள் ஒரு பள்ளி ஆரம்பிக்க விரும்புகிறாள்" என்றாள் சியூமிங்.

இதுவரை தரையைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்த பெங்மோ, இதைக் கேட்டதும் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தான். "நான் அதைச் செய்வதற் காகத்தானே வீட்டிற்கு வந்திருக்கிறேன்" என்றான்.

மீண்டும் குழப்பம்! சியூமிங் ஸ்தம்பித்தாள். ஸ்ரீமதி ஹு குழப்பமடைந்தாள்.

அவள் சற்று கடுமையாக, "இதைப் பற்றி நீ என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே, மகனே!" என்றாள்.

"நான் அதைச் சொல்வதற்குள் வேறு பேச்சு ஏதோ வந்துவிட்டது. அதெல்லாம் நடந்த பிறகு, நான் செய்யக்

கூடிய காரியம் இன்னது என்பதைத் தீர்மானிக்க வேண்டிய அவசியம் நேரிட்டது" என்று மொழிந்தான்.

ஸ்ரீமதி ஹு, தனது மெல்லிய கரத்தை உயர்த்தி, "போது" என்று கட்டளையிட்டாள். பிறகு சியூமிங்கிடம் திரும்பி அன்புடன், "நீ கேட்க வேண்டியது வேறு ஏதேனும் இருக் கிறதா?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என்று பதிலளித்தாள் சியூமிங்.

"நீயும் ருலானும் இருவரும் போவதற்கு நான் அனுமதி கொடுக்கிறேன். இன்னும் சில தினங்களில் நான் காரியஸ்தரை வரவழைத்து, அங்கு வசிப்பதற்கும் பள்ளிக்கூடம் ஏற்படுத்து வதற்கும் தகுதியான வீடுகளைப் பார்க்கச் சொல்லுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் எப்போது வேண்டுமானாலும் போகலாம். ஆனால் உங்களுக்கு நாற்காலி மேஜைகளும் மற்ற சாமான்களும் தேவையாக இருக்கும். அங்கிருக்கும் பொருட் கள் அவ்வளவு சௌகரியமாக இராது. உங்களுக்கு வேண்டி யதைத் தெரியப்படுத்துங்கள். இங்கை நான் தயார் செய்யச் சொல்கிறேன். ஒரு சமையல்காரனும் இரண்டு பணிப்பெண் களும் உங்களுக்கு வேண்டியிருக்கும். தலைமைச் சமையல்கார னிடம் அவனுக்குக் கீழே வேலை செய்பவர்களில் ஒருவனை அனுப்பச் சொல்லலாம்" என்றாள் ஸ்ரீமதி ஹு.

பெங்மோ மறுபடியும், "இவர்கள் கிராமத்தில் வசிப்ப தாகயிருந்தால், மற்றவர்களைக் காட்டிலும் ரொம்பவும் படா டோபமாக வாழக்கூடாது. ஏனெனில் அவர்களோடு மற்றவர்கள் அதிகம் பழகத் தயங்குவார்கள்" என்றான்.

சியூமிங் ஒன்றும் கூறாமல் வேகமாக கடைக்கண்ணால் அவனை ஒரு பார்வை பார்த்தாள். வாழ்க்கை முழுவதையும் ராஜபோகத்தில் கழித்த இவருக்கு எப்படி இதெல்லாம் தெரியும் என்று எண்ணி வியந்தாள் அவள். எளிய மக்களின் மனத்தில் இருப்பதை இவர் எப்படி அறிந்தார்? உடனே அவள் அக்கேள்வியை தூர அகற்றினாள். அவரைப் பற்றி ஒரு கேள்வி கேட்பதற்குக்கூட அவளுக்கு என்றும் உரிமை இடையாது.

அவள் எழுந்து, குழந்தையை எடுத்துக்கொண்டு, ஸ்ரீமதி ஹுவிற்கு வந்தனம் தெரிவித்துவிட்டு சென்று விட்டாள். ருலான் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அனுமதி கிடைத்ததைக் கேட்டதுமே, அவளும் சியூமிங்கும் சேர்ந்து தங்கள் புதிய வாழ்க்கையைப் பற்றிப் பற்பல திட்டங்கள்

வருக்க ஆரம்பித்தனர். முதல்நாள் கூட அவர்கள் தங்களுக்கு இத்தகைய சந்தோஷம் கிடைக்கும் என்று நினைக்கவேயில்லை.

சியூமிங் அறையை விட்டுச் சென்றதும், ஸ்ரீமதி ஊ, மகனைப் பார்த்து, "உன்னுடைய மனத்திலிருப்பதை எனக்கு விளக்கமாகக் கூறு" என்று உத்தரவிட்டாள்.

அவன் எழுந்து, அமைதியின்றி நடந்துசென்று, திறந்திருக்கும் கதவருகே சென்று வெளியே பார்த்தான். இரவின் அமைதி அவ்விடத்தைச் சூழ ஆரம்பித்திருந்தது. உலகம் முழுவதும் மாறி வருவதைப்போல் பருவ காலங்கள் இங்கும் மாறி மாறி வந்தன.

"ஏதாவது ஒரு காரியத்தில் நான் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். சகோதரர் ஆண்ட்ரு எனக்குப் போதித்தது அதுதான். ஒன்றிற்காக அல்லாவிட்டால் மற்றொன்றிற்காக வாழ்க்கையை அர்ப்பணம் செய்யவேண்டும். நான் இங்கிருந்து சென்றதும் வேதாந்த விஷயங்களில் என் மனத்தைச் செலுத்த முயன்றேன். ஆனால் மதம் எனக்கு ஒத்து வருவதாக இல்லை. துறவியாவதற்கு ஏற்றவன் அல்ல, அம்மா, நான். ஒரு மனிதனாக இருந்து எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவுதான் செல்வதற்கு சகோதரர் ஆண்ட்ரு எனக்கு போதித்திருக்கிறார். அதற்கு மேல் போக என்னால் முடியாது" என்றான் பெங்மோ.

"நல்லது, மகனே" என்று கூறி ஸ்ரீமதி ஊ, அவன் மேலே சொல்லப் போவதை எதிர்பார்த்திருந்தாள்.

அவன் மறுபடியும் உட்கார்ந்து கொண்டான். "எனக்கு தற்செயலாகத்தான் இந்த வழி காண்பிக்கப்பட்டது" என்றான். பிறகு தன் பையிலிருந்த அயல் தேசத்துப் புகையிலையையும், ஒரு சிறு அயல் நாட்டுப் புகைக் குழாயையும் எடுத்து, அதை நிரப்பி, புகை பிடிக்க ஆரம்பித்தான். ஸ்ரீமதி ஊ இதுவரை இவற்றைப் பார்த்ததில்லை. ஆயினும் இப்போது தன்னுடைய ஆச்சரியத்தினால் அவன் கூறப் போவதில் குறுக்கிட அவள் விரும்பவில்லை.

"நான் மேனூட்டில் வசித்து வந்த பட்டணத்தில், நம்முடைய ஊர்க்காரனை ஒரு வண்ணான் சலவைக் கடை வைத்திருந்தான். நான் என்னுடைய துணிகளை நான்கு நாட்களுக்கொருமுறை வெளுப்பதற்காக அவனிடம் கொண்டு போய் கொடுப்பேன்" என்றான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊ அதிசயத்துடன், "அவன் மற்றவர்களுடைய துணியையும் வெளுத்துக் கொடுப்பானா?" என்று கேட்டாள்.

"கொஞ்சம் பேருக்கல்ல; அநேகருக்கு வெளுத்துக் கொடுப்பான். அதுதான் அவனுடைய தொழில்" என்றான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊ கோபத்துடன், "அவன் அன்னியர்களுடைய துணிகளைக்கூட வெளுத்துக் கொடுத்தான் என்று சொல்கிறாய்?" என்று கேட்டாள்.

பெங்மோ சிரித்து விட்டு, "யாராவது சிலர் வெளுத்துத் தானே ஆகவேண்டும்?" என்றான்.

ஆனால் ஸ்ரீமதி ஊ சிரிக்கவில்லை. "கண்டிப்பாக நம்முடைய மக்கள் அன்னியர்களுடைய அழுக்கடைந்த துணிகளை வெளுக்கவே கூடாது" என்று கூறினாள். அவளுடைய அதிருப்தியினால் பெங்மோ சொல்ல வந்ததைக் கூட மறந்து விட்டான்.

அவன் அவளைச் சமாதானப்படுத்த முயன்றான். "நல்லது, நல்லது! அந்த மனிதன் நம்முடைய மாகாணத்தைச் சேர்ந்தவனல்ல. தெற்கத்தியான். ஒரு நாள் என்னுடைய துணிகளை வாங்கி வருவதற்காகச் சென்றேன்..."

"உன்னுடைய துணிகளை வாங்கி வருவதற்கு நீயே சென்றாயா? ஏன் உன்னிடம் வேலைக்காரர்கள் இல்லையா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

"இல்லை, அம்மா. அங்கு எங்களில் ஒருவனுக்கும் வேலையாள் கிடையாது."

அவள் தன்னுடைய வியப்பை இப்போது கட்டுப்படுத்திக் கொண்டாள். "அது ஒரு விசித்திரமான நாடுபோல் இருக்கிறது. பிறகு நீ எனக்கு அதைப்பற்றி விவரமாகக் கூறவேண்டும். இப்போது நீ தொடர்ந்து சொல்லு மகனே" என்று பணித்தாள்.

பெங்மோ கூறலானான். "நான் என்னுடைய துணிகளை வாங்கிவரச் சென்றபோது அந்த மனிதன் அவனுடைய வீட்டிலிருந்து அவனுக்கு வந்திருந்த ஒரு கடிதத்தை என்னிடம் காண்பித்தான் அம்மா. அவன் தன் வீட்டை விட்டு வந்து இருபது வருஷங்களாகின்றன. அவனால் தனக்கு வந்த கடிதத்தைக் கூடப் படிக்க முடியவில்லை. அவனுக்கு எழுதவும்

தெரியாது. நான்தான் அவனுக்காகக் கடிதத்தை எழுதியும் படித்தும் காண்பிப்பேன். அவர்கள் கிராமத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் கிடையாதென்றான்! வேண்டு மென்றால் நகரத்திற்குச் சென்று ஒரு படித்தவனைக் கண்டு பிடித்தால் தான் உண்டென்று அவன் என்னிடம் கூறினான். அவனைப் பார்க்கும்வரை இதனுடைய பரிதாபத்தை நான் அறிந்து கொள்ளவேயில்லை. அவன் ஒரு நல்ல மனிதன் அம்மா! அப்படியும் அவன் ஒரு முட்டாளுமல்ல. நல்ல புத்திசாலி. 'எனக்கு மட்டும் எழுதப் படிக்கத் தெரிந்திருந் தால் எவ்வளவு நன்றாகயிருக்கும்! ஆனால் நான் இப்போது ஒரு குருடனை ஒத்திருக்கிறேன்' என்று அவன் கூறுவான். நான் மீண்டும் என் அறைக்குச் சென்று ஜன்னல் வழியாகப் பார்த்தால், எதிரே பிரும்மாண்டமான கட்டிடம் தென்படும். அங்கு ஆயிரக் கணக்கான மாணவர்கள் வந்து குழுமி, எண் ணிறந்த விஷயங்களைத் தெரிந்து கொள்வதையும் இந்தக் கிழவன் தன்னுடைய சொந்த கடிதத்தைக் கூடப் படிக்கத் தெரியாதிருக்கும் நிலையையும் எண்ணிப் பார்ப்பேன். நம்முடைய சொந்தக் கிராமங்களின் நிலையும் இதுவேதான் என்பதை நான் பிறகு உணர்ந்தேன். நம்முடைய நிலங்களில் வசிக்கும் ஒருவனுக்குக் கூட எழுதவோ படிக்கவோ தெரி யாது" என்றான்.

"எதற்கு அவர்களுக்குத் தெரியவேண்டும்? அவர்கள் எங்கு போகிறார்கள்? எங்கு வருகிறார்கள்? அவர்கள் பாட் டிற்கு நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள்" என்றாள் ஸ்ரீமதி ஊ.

"அம்மா, அம்மா. ஆனால் கல்வியைக் கொடுப்பது மனத்தில் ஒரு விளக்கை ஏற்றி வைப்பதற்குச் சமமாகும். அது ஆத்மாவைச் சிறையிலிருந்து விடுவிக்கிறது. பரந்த உலகத்தின் கதவைத் திறந்து வைக்கிறது" என்றான் பெங்மோ.

இவ்வார்த்தைகள் ஸ்ரீமதி ஊவின் செவி வழியாகப் பாய்ந்து அவளது உள்ளத்தைச் சென்று தாக்கின. "ஆ! இவை உன்னுடைய ஆசிரியரின் மொழிகள் அல்லவா?" என்றாள்.

"நான் அவற்றை மறக்கவேயில்லை" என்றான் பெங்மோ.

இதைக் கேட்ட பிறகு அவள் எவ்விதம் பெங்மோவை தடை செய்வாள்? அவன் வீட்டை விட்டு வெளியே வசிக்கக் கூடாதென்றுதான் எப்படிக் கூறுவாள்?

அவன் உற்சாகத்தோடு, "ருலான்தான் எனக்கு இதில் பெரும் உதவி செய்யக் கூடியவன். அவனைப் பற்றி எனக்கு

மூன்பு தோன்றவேயில்லை. லின்யியும் எனக்கு உதவி செய்ய லாம். நாங்கள் யாவரும் எங்களை மறந்து வேலை செய்வோம்" என்றான்.

அவன் மறுபடியும் எழுந்து நின்றுகொண்டு, "அம்மா, நான் மட்டும் இங்கு நம் கிராமத்தில் வெற்றி பெற்றால், அது எல்லா இடத்திலும் பரவ ஆரம்பித்து விடும். அதனால் எவ்வளவு நன்மை ஏற்படும்!" என்றான்.

அவனுடைய ஒல்லியான இளம் முகத்தில், ஆண்ட்ருவின் கண்களில் என்றென்றும் தோன்றி வந்த அபூர்வ ஒளியைப் போன்ற ஒரு ஒளி கூடி விடுவதைக் கண்டாள் அவள். அவ்வொளியை அணைப்பதில் அவள் ஒரு நாளும் ஈடுபட மாட்டாள்.

"மகனே, உனக்கு எது நல்லது என்று படுகிறதோ, அதையே செய்" என்று அவனுக்குத் தன் பூரண சம்ம தத்தைத் தெரிவித்தாள்.

* * *

ஸ்ரீமதி ஊ, படுக்கையில் விழித்தவாறே படுத்திருந்தாள். இம்மாதிரி அவள் விழித்திருப்பது இப்போது அவளுக்குச் சகஜ மாகிவிட்டது. இதனால் அவளுக்கு வருத்தமும் உண்டாக வில்லை. பயமும் உண்டாகவில்லை. இளைஞர்கள் உறங்க வேண்டியதுதான். அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளும் நீண்ட ஆயுளும் அவர்களை எதிர் நோக்கி நின்று கொண்டிருக் கிறது. ஆனால் முதியவர்கள் தூங்க வேண்டிய அவசியமில்லை. இவ்வுடல் மீளா நித்திரையில் ஆழ்வதற்கு இன்னும் வெகு நாட்கள் இல்லையே! இதை அறிந்த சரீரமும் மனமும் கூடிய வரை இப்போதாவது விழித்திருக்கலாமே!

அவ்விதம் விழித்தவாறு படுத்திருக்கையில், அவளுக்குப் பகலிலிட இரவிலேயே அவ்வீட்டின் வாழ்வு பூர்ணத்வம் பெற்றிருப்பதாகத் தோன்றியது. தன் மனத்தை அவ்வீட்டின் பற்பல பகுதிகளிலும் உலவி வரும்படி விடுத்தாள். வயதான உறவினர்கள் தூரத்திலிருந்த பகுதிகளில் வசித்து வந்தனர். அதற்குச் சமீபத்தில் இளம் பெண்கள், ஆடவர்களாக இருந்த உறவினர்கள் வசித்து வந்தனர். அவர்களில் பலர் எப்போதும் அங்கேயே இருப்பவர்களில்லை. அச்சமயத்திற்கு வேறு ஒரு இடமும் இல்லாததால் அங்கு வந்து தங்கி இருந்தனர். அவர் கள் யாவருக்கும் புகல் அளிக்கக் கூடிய அவ்வளவு பெரியதாக இருந்தது ஊ வீடு. அதற்கு முன்னால் உள்ள ஸ்ரீமான் ஊவும் மல்லிகாவும் வசித்து வந்த பகுதியிலிருந்து அவன்மனம்

விரைந்து ஓடியது. அங்கு எத்தகைய வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது என்பதை அவள் நன்கு அறிவாள். அதைப் பற்றி நிர்ணயிக்க அவளுக்குத் தெரியாது. அவள் மனத்தில் அலுப்பு மட்டுமே உண்டாயிற்று. அந்தக் கிழவரின் உடல் நன்கு போஷிக்கப்பட்டு நன்முக வளர்ந்திருந்தது. அப்பெண் நன்முகத் தின்று கொழுத்து, இரவு பகல் எக்காலமும் தூங்குவதற்குத் தயாராகயிருந்தாள். மல்லிகாவால் ஒரு விதத் தொந்திரவும் ஏற்படவில்லை. அவள் மலடியாக இருந்தாள். அவளுக்குக் குழந்தைகள் ஒன்றும் பிறக்கவில்லை. இந்த விஷயத்தில் ஸ்ரீமதி ஊ பூரணதிருப்தி அடைந்தாள். மல்லிகாவின் ரத்தம் கீழ்த்தரமானது. அது அவளுடைய உடலிலேயே தங்கியிருப்பதுதான் நல்லது. ஸ்ரீமான் ஊவிற்கு அவள் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவர செய்து வந்தாள். பல விதத்திலும் இன்பம் அடைந்து வந்த அவள் எப்போதும் அக் கிழவரை சந்தோஷப்படுத்துவதில் கவனமாக இருந்தாள். அவர் அவளுக்கு நகைகளும் பட்டாடைகளும் நிறைய வாங்கிக் கொடுத்தார். வகை வகையான தின்பண்டங்களை வழங்கினர். அவளைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்து அன்பாக வைத்திருந்தார். அவளுடைய வாழ்நாள் முழுவதும் அவள் தெருவில் எறியப்பட்ட ஒரு மலராகவே இருந்திருக்கிறாள். வழிப்போக்கர்களின் தொந்திரவுக்கு ஆட்பட்டவளாகவே இருந்திருக்கிறாள். இப்போது இந்த வீட்டிற்குள் தன்னை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாது என்ற தைரியமே அவளது வாழ்க்கைக்குப் போதிய மகிழ்ச்சியை அளிப்பதாக இருந்தது. கிழவர் இறந்து போன பின்பும் அவள் அவ்வீட்டிலேயே பத்திரமாக இருக்கலாம். தான் உயிரோடிருக்கும் வரை இனி அவளுக்குப் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

ஸ்ரீமான் ஊவைப் பொறுத்தவரை, அவரது தாயார் அவரது இளமையில் ஆரம்பித்து வைத்ததை, இந்த இளம் விலைமகள் முடித்து வைத்தாள். ஸ்ரீமதி ஊ அவரிடம் வளர்த்திருந்த சிற்சில மேன்மைகள் அடியோடு மறைந்து விட்டன. நெருப்பிற்கு மேலே மேலே விறகை வைத்துப் போஷிக்காவிடில் அது அணைந்து விடுகிறதல்லவா? அதைப்போல அதிக உணவினாலும் குடியினாலும் அவரது தேகம் நாளுக்கு நாள் பெருத்துக் கனமாகிக் கொண்டே இருந்தது. ஆனால் எப்போதும் அவர் மல்லிகாவின் கூடவே இருந்தார். அவர் இப்போது உல்லாச விடுதிக்குச் செல்வதில்லை. மல்லிகாவே அவருக்கு சகல விதமான வித்தைகளையும் செய்துகாட்டி வந்தாள். சிநேகிதர்களுடன் அளவளாவ வேண்டும் என்ற பிரியம் கூட அவருக்கு இல்லாமல் போய்விட்டது. ஊர் விஷயங்கள்,

உலக விஷயங்களைப் பற்றி அரட்டையடிப்பதற்காகக் கூட அவர் இப்பொழுதெல்லாம் தேநீர் கடைகளுக்கோ பொது விடுதிகளுக்கோ போவது கிடையாது. இந்தச் செய்திகளெல்லாம் அவருக்கு மல்லிகாவின் மூலமே கிடைத்து வந்தன. வேலைக்காரர்களிடமிருந்து அவள் இவற்றைத் தெரிந்துகொண்டாள். அவர்களுடைய பகுதியில் அவர்கள் இருவரும் ஒன்முக இணைந்து, மற்றவர்களிடமிருந்து முற்றிலும் விலகி வாழ்ந்து வந்தனர். உண்டு, உறங்கி, குடித்து மகிழ்ந்து வந்தனர். வெறும் உடல் வாழ்க்கையிலேயே அவர்கள் பரிபூர்ண திருப்தி கொண்டு வாழ்ந்தனர். வர வர அவரது சொந்த வீட்டிலேயே அவரது பெயர் வழங்கப்படுவது குறைந்து வந்தது. வேலைக்காரர் ஒருவருக்கொருவர் வெறுப்புடன் முணுமுணுத்துக் கொண்டார்கள். அவ்வளவுதான்.

இவற்றை யெல்லாம் நேரில் பாராமலே, ஸ்ரீமதி ஊ, யாவற்றையும் ஊகித்தறிந்து கொண்டிருந்தாள். அவளுடைய சொந்த வீடாக ஒரு காலத்திலிருந்த அப்பகுதிக்கு அவள் செல்வதை அடியோடு நிறுத்தி விட்டாள். மல்லிகாவும் அவளுடைய அறைகளுக்கு ஒருமுறைகூட வரவில்லை. மல்லிகா இங்கு வருவதற்கு முன் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வளவு தூரத்தில் வாழ்ந்து வந்தார்களோ அதேபோல் தான் இப்போதும் வாழ்ந்து வந்தனர்.

இதையெல்லாம் சிந்தனை செய்து பார்த்த ஸ்ரீமதி ஊ, படுக்கையில் படுத்தவாறே 'என்னுடைய மண வாழ்க்கையில் நான் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து வழுவிவிட்டேனே' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள். அவளது கடமைகளில் ஏதாவது ஒன்றை அவள் நிறைவேற்முது விட்டு விட்டாளா? இந்தக் கேள்வியை அவள் ஆண்ட்ரூவிடம் கேட்டாள். ஆனால் அவரிடமிருந்து அதற்குத் தக்க பதில் ஒன்றும் வரவில்லை. அதற்குப் பதில் அவளுடைய நினைவாகிய திரையில் பெரிய எஜமானரின் முகம் தெளிவாகத் தோன்றியது. அம் முகத்தில் சிறிதும் மாறுதல் காணப்படவில்லை. முன்பு எப்படிப் பார்த்தாளோ அதேபோல் இப்போதும், அப் பொன்னிற முகத்தைத் தெளிவாகக் கண்டாள். அவருடைய அழகிய தலையும் அவளது நினைவுக்கு வந்தது. அவருடைய மண்டை ஓடு இப்போதும், சவப்பெட்டியில் உறங்கிக் கொண்டிருக்கும் இச் சமயத்திலும் அழகுடன் கூடிய ஒரு பொருளாகத்தானிருக்க வேண்டும்!

அவள் துக்கத்துடன் தனக்குள், 'அப்பா, உங்களுடைய முனிடம் எனக்குள்ள கடமைகளை நான் சரியாக நிறைவேற்முது விட்டுவிட்டேனே?' என்று கூறிக்கொண்டாள்.

அந்த முதியவரின் அன்பு ததும்பும் முகத்தை நோக்கிய படியே அவள், தான் தனது நாற்பதாவது பிறந்த நாளன்று ஸ்ரீமான் ஹாவிடமிருந்து பிரிந்து வந்திராவிடில் அவர் இப் போது இருக்கும் இந்த இழிந்த நிலைக்கு வந்திருக்கமாட்டார் என்று எண்ணிக் கொண்டாள். ஆனல் அவளுடைய இளமையின் நினைவுகளிலிருந்து அவளுடைய மாமனூர் பேசினர்.

அன்றைய தினம் அவரும் அவளுமாகச் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அவர் அவளுக்குச் சொல்லி அனுப்பி யிருந்தார். அவள் வந்தபோது, புத்தகத்துக்கு நடுவே ஒரு விரலை அடையாளமாக வைத்துக் கொண்டிருந்தார். அவர் அவள் வந்ததும் அவ்வரிகளைச் சுட்டிக்காட்டி அவளைப் படிக் கச் சொன்னர்.

"ஒரு ஆத்மாவை அதன் எல்லைக்கு மேல் பிடித்து உயர்த்துவது அபாயகரமான காரியம். ஒவ்வொரு ஆத்மா விற்கும், அருவியைப் போல் அதற்கென்று உரித்தான ஒரு பிறப்பிடம் இருக்கிறது. அதை அதன் சக்திக்கு மேல் கட்டுப் படுத்துவது இயற்கைக்கு விரோதமான காரியம். ஆதலால் அபாயகரமானதும்கூட! ஒரு ஆத்மாவை மேலே பிடித்து இழுக்கும் போது, அது தன்னுடைய பழைய நிலைமையையே நாடிச் செல்கிறது. ஆதலால் இரண்டு சக்திகளுக்குமிடையே கிடந்து அல்லற்படுகிறது. ஒரு ஆத்மாவின் தரத்தை அறிந்து அதற்கு தக்க இன்பத்தை அது அடையுமாறு விடுப்பதுதான் விவேகமான செயல்" என்ருர்.

இவ்வீட்டிலே, அப்போது அவளுடைய கண்களும் அக் கிழவருடைய கண்களும் எப்படிச் சந்தித்துக் கொண்டனவோ அதேபோல் இப்போது இத்தனை வருஷங்களையும் கடந்து சென்று சந்தித்துக் கொண்டன.

'நான் அவரிடமிருந்து என்னைப் பிரித்துக் கொண்டிரா விடில்...' என்று சிந்தித்த அவளால் மேலே தொடர்ந்து எண்ண முடியவில்லை. அவள் செய்தது தவிர்க்க முடியாத ஒரு காரியம். கடமைக்காகக் கட்டுப்பட்டு அவள் தனது ஆத் மாவை எத்தனை வருடங்கள் அடக்கி வைத்திருந்தாள்! கடமையினுல் அது சற்றே வளர்ச்சியடைந்திருந்த போதிலும் எத்தனை வருஷ காலங்கள், நாளுக்கு நாள் பெருகும் பந்த மாகிய கயிற்றுல் கட்டுண்டு, சுதந்திரமடையப் போகும் நாள் என்று வருமோ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது!

எங்கும் நிசப்தம் ஆழ்ந்திருக்கும் இந் நள்ளிரவில், அவளுக்குத் திடீரென்று விசித்திரமாக தனது மூத்த மகளுகிய லியாங்மோவைப் பற்றிய கவலை உண்டாயிற்று. அவள் எதற்கு அவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? அவன்தான் எல்லா பிள்ளைகளைக் காட்டிலும், அதிக திருப்தியோடு வாழ் கின்ருன். அவளைக் கூட, சந்தர்ப்பம் வரும்பொழுது, அவள் நன்ருக அறிந்துகொள்ள வேண்டும்.

பெங்மோவின் அறைகளில் அவள் சற்றும் நிற்கவில்லை. பெங்மோ ஒரு மனிதன். ஒரு பக்குவமடைந்த மனிதனைப் போல் அவன் தன் வாழ்வைச் செவ்வையாக வகுத்துக்கொண் டிருந்தான். அவன் தன் ஆத்மாவை எதற்காகவும் பலி கொடுத்து விடவில்லை. இந்த ஆறுதலுடன் அவள் மனம், வெண்ணிலாவில் கடலில் மிதக்கும் ஒரு காலிப் படகைப் போல், தூக்கத்திற்கு விரைந்து சென்றது.

* * *

"எங்கே என்னுடைய இங்கிலீஷ் புத்தகங்களைக் கொண்டு வா" என்று உத்தரவிட்டான் பெங்மோ.

லின்யி, பெட்டியிலிருந்து அவற்றை எடுத்து வருவதற் காக விரைந்து ஓடினுள். இரண்டு அடுக்குகள் இருந்தன அவை. "இத்தனை புத்தகங்களா?" என்ருள் அவள் வாயைப் பிளந்து.

அவன் அலட்சியமாக, "இதெல்லாம் முக்கியமானவை மட்டுமே. இன்னும் வரவேண்டிய பெட்டிகள் இருக்கின்றன" என்ருன்.

அவன் புத்தகக் கட்டுகளுக்கருகே மண்டியிட்டு உட் கார்ந்து கொண்டு, அவள் கொண்டு வரவர, அவற்றை வாங்கி அடுக்கி வைத்தான். வெளிப் பார்வைக்கு அவன் அமைதியாக வும் சதா சிரித்த வண்ணமாகவும் காணப்பட்ட போதிலும் உள்ளுக்குள் அவன் மனம் வேதனையால் குமுறிக் கொண்டிருந் தது. தான் இனி நிம்மதியாகத் தூங்கவே முடியாது என்று எண்ணிக்கொண்டான். இச் சாமான்களை அதனதன் இடங் களில் ஒழுங்காக வைப்பதான இக்காரியம் அவனுக்கு அலுப் பாக இருந்தது. பிராயணத்திற்காக எடுத்துச் செல்லும் இப் பெட்டிகளை இனி தான் ஒருபோதும் உபயோகிக்கப் போவ தில்லை என்ற எண்ணமானது அவனுக்கு வேதனையைக் கொடுத்தது.

"இன்றிரவே எல்லாவற்றையும் எடுத்துவைத்துவிட வேண்டுமா?" என்று கேட்டாள் லின்யி.

"ஆம். நான் வீட்டிற்கு வந்து விட்டேன். இனி எங்கேயும் போகப் போவதில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றான் பெண்மோ.

இவ் வார்த்தைகளைக் கேட்டு அவள் உள்ளம் பூரித்தது. ஆனால் அவன் ஏன் தன்னைப் பாராமலே அவ்விதம் கூறினான் என்பதைப் புரிந்துகொள்ள அச்சிறு பெண்ணால் முடியவில்லை. உண்மையில், அவன் அவ்விதம் கூறியபோது, அவளுடைய முகத்திற்கு முற்றிலும் வேறுபட்ட ஒரு முகத்தைத் தன் மனக் கண்ணால் நோக்கிக் கொண்டிருந்தான். அவன் மார்கரேட்டினுடைய நீலநிறக் கண்களையும் செங்கூந்தலையும், அவனது வெண்மையான மேனியையும் பார்த்தான். அவளுடைய மேனியின் ஸ்பரிசத்தை அவனால் என்றும் மறக்க முடியாது. கடல் கடந்த அப்பிரதேசத்தில் ஒரு நாள் காட்டில், தான் செய்த அக் காரியத்திற்காக அவன் என்றைக்கேனும் வருந்த நேரிடுமோ? ஏனெனில் அவன் அவளை அணைத்துக் கொண்ட அக்கணமே, தன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளை விடுவித்து விட்டான்.

"என்னால் இனி முடியாது" என்றான் அவன்.

அவள் பேசவில்லை. தனது நீலநிற விழிகளால் அவனைப் பார்த்தவாறு நின்றாள். நீல நிற விழிகளுக்கே ஒரு அதிசயமான தனி குணம் இருந்தது. தமக்குப் பின்னால் இருப்பதை அவற்றால் ஒளித்து வைக்க முடிவதில்லை. கரிய விழிகள் திரையை இழுத்து மூடியது போன்றிருக்கின்றன. ஆனால் நீலநிற விழிகளோ திறந்த ஜன்னல்களை ஒத்திருக்கின்றன.

அவன் அவளிடம் வெடுக்கென்று "நான் கல்யாணமானவன். எனக்காக என் மனைவி வீட்டில் காத்திருக்கிறாள்" என்றான்.

சீனர்களின் கல்யாணத்தைப் பற்றி அவள் ஒருவாறு அறிவாள். "நீங்களாவே விரும்பி அவளை மணந்து கொண்டீர்களா? அல்லது உங்களுடைய குடும்பத்தாரின் ஏற்பாட்டால் நடந்ததா?" என்று கேட்டாள்.

அவன் வெகுநேரம் இதற்குப் பதிலளிக்கவில்லை. அவர்கள் ஒரு தேவதாரு மரத்தினடியில் உட்கார்ந்திருந்தார்கள். அவன் தன் கைகளால் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அதன் மீது தலையைச் சாய்த்தவாறு உட்கார்ந்திருந்தான். அவன் தனக்குள் உண்மையைத் தேடிப் பார்த்தான். "நான் அவளைத் தேர்ந்தெடுக்க வில்லை" என்று சொல்வது அவனுக்குச் சுலபமாக இருந்திருக்கும். ஒரு விதத்தில் அது உண்மையும்

கூட. ஆனால் அவன் இதைக் கூற ஆரம்பிக்கு முன், சகோதரர் ஆண்ட்ரூ அவனது உள்ளத்தில் தோன்றினார்.

"பொய் சொல்வது ஒரு பாவம். கடவுளுக்கு அது எவ்வளவு விரோதமானதோ அதைக் காட்டிலும் நமக்கே அது அதிக விரோதமானது. பொய்யை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படுவது எதுவும் துகள் துகளாகச் சிதறிப் போய்விடும். பொய்யானது, அதைச் சொல்பவனை ஏமாற்றுவது போல் மற்றவர்களை ஏமாற்றுவதில்லை" என்று அவர் போதித்திருக்கிறார்.

அவளிடம் பொய்யை உரைக்க அவனுக்குத் துணிவுண்டாக வில்லை. ஏனெனில் அதனால் அவர்களுடைய அன்பு ஒரு நாள் அடியோடு தகர்ந்து போய்விட நேரிடலாம். அவ்வன்பை நிந்தனையுடன் குழி தோண்டிப் புதைக்க நேரிடலாம்!

"என்னை யாரும் வற்புறுத்திக் கல்யாணம் செய்து வைக்க வில்லை. நானாகவே தேர்ந்தெடுத்தேன் என்றே வைத்துக் கொள்ளலாம்" என்றான்.

அவள் அசையாமல் உட்கார்ந்து அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தங்கள் குடும்பத்தில் கல்யாணம் என்பது எதைக் குறிக்கிறது என்பதை அவளுக்கு விளக்கிக் கூற முயன்று கொண்டிருந்தான் அவன்.

"எங்களுடைய நாட்டில், கல்யாணம் என்பது குடும்பத்திற்காக நாங்கள் செலுத்த வேண்டிய கடமை! எங்களுடைய சுயநலத்திற்காகவோ, தனி இன்பத்திற்காகவோ செய்து கொள்வதல்ல. என்னுடைய தாய் என்னுடைய தகப்பனாரைச் சிறிதும் காதலிக்கவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் அவள் தன் குடும்பத்திற்காகச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றி விட்டாள். அவள் ஒரு சிறந்த மனைவியாகவும் ஒரு சிறந்த தாயாகவும் இருந்து வந்திருக்கிறாள். ஆனால் இவளுக்கு நாற்பது வயதானதும் தன்னுடைய ஸ்தானத்தில் என்னுடைய தந்தைக்காக வேறு ஒரு பெண்ணை வைத்து விட்டு தான் தனியே வசிக்க ஆரம்பித்து விட்டாள். இது எங்களுக்கெல்லாம் மிக்க வருத்தத்தைக் கொடுத்தது. ஆனால் எல்லோரும் அதன் நியாயத்தை உணராமலிருக்கவில்லை. இப்போதும் அவள் வீட்டிற்குள்ளேயே இருந்தபடி தனது தனி வழியில் இன்பமடைந்து வருகிறாள். அவளைச் சூழ்ந்திருந்து அவளைத் தாங்கி மரியாதை செய்வதற்கு நாங்கள் எல்லோரும் இருக்கிறோம்.

குடும்பத்திற்குச் செலுத்த வேண்டிய கடமைகள் எனக்கும் இருக்கின்றன" என்றான்.

அவன் தான் மறைமுகமாக ஒரு விதத்தில் மார்க்ரேட்டைப் புண்படுத்துகிறோம் என்பதை நன்கு உணர்ந்தான்.

"நான் காதலுக்காகக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று கூறினாள் அவள்.

அவன் மட்டும் சுதந்திரமுள்ளவனாக இருந்திருந்தால்—லின்யியிடமிருந்து மட்டுமல்ல, ஊர் குடும்பத்தின் முன்னோர்கள் யாவர்க்கும் இனி வரப்போகும் சந்ததியார் அத்தனை பேருக்கும் அவன் கடன்பட்டிராவிடில், அவளிடம், நாம் இருவரும் மணம் செய்துகொள்வோம். லின்யியை நான் விட்டு விடுகிறேன் என்று கூறியிருப்பான்.

ஆனால் அவன் சுதந்திரமாக இல்லை. அவனுடைய முன்னோர்களின் கைகள் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தன. இனி பிறக்கப் போகும் அவனுடைய பேரக் குழந்தைகளும் அவர்களுடைய குழந்தைகளும் அவனைப் போகவிடாது தடுத்தனர். ஆகவே அவளுக்கு அவன் மேலும் அக் கசப்பான உண்மையைத் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

"என்னை நான் நன்றாக அறிவேன்" என்றான் அவன். அவன் தலையை உயர்த்தி அவளைப் பாராமல், தொலைவில், இருந்த நதியையும் அதில் சென்ற கப்பல்களையும், இரு கரைகளுக்கு மிடையே போடப்பட்டிருந்த பாலத்தையும் நோக்கினான்.

"நான் கடவுளால் மட்டும் சிருஷ்டிக்கப்படவில்லை. என்னுடைய முன்னோர்களாலும் நான் உருவாக்கப் பட்டிருக்கிறேன். ஆகையால் என்னுடைய தனி இன்பத்திற்காக நான் வாழ முடியாது. அவர்களால் எனக்கு அளிக்கப் பட்டிருக்கிற சரீரம் எனக்கே உரியதல்ல. ஆனால் எனக்கே சொந்தமான ஒரு பொருள் என்னுள் இருக்கிறது—அதை ஆத்மா என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்—நான் உன்னை மனதார நேசிப்பதால் என்னால் அதை உனக்கு கொடுக்க முடியும். ஆனால் எனக்கு உரித்தாயில்லாத உடலை உனக்கு அளிப்பேனாகில் அது, என்னுடைய சந்ததிகளுக்கு நான் செய்யும் கூரோகமாகும்" என்று கூறினான்.

"நீங்கள் கூறுவது தவறு—தவறு! காதலும் கல்யாணமும் ஒன்றாக இருக்க முடியும்" என்று கூவினாள் அவள்.

"ஆம். சிற்சில சமயங்களில்—கடவுளின் அருளால் அவ்விதம் தற்செயலாக நேருகிறது. சில சமயங்களில் எங்களுடைய ஜனங்களிலே கூட, ஒருவன் மணவறையில், முன் பின்னறியாத தனது மணவியின் முகத்திலிருக்கும் திரையைக் களைந்தெடுக்கும்போது, தான் தன் விருப்பப்படியே தேர்ந்தெடுத்திருந்தால் யாரை விரும்பி ஏற்றுக் கொண்டிருப்பானோ அப் பெண்ணே தன் எதிரே நிற்பதைக் காண்கிறான். ஆனால் இதெல்லாம் கடவுளருளால் ஏதோ சில சமயங்களில் நேருகிறது" என்றான் அவன்.

"இங்கே, நாங்கள் எப்போதும் காதலுக்காகத் தான் மணம் செய்து கொள்கிறோம்" என்றாள் அவள் பெருமையுடன்.

தங்களுக்குள்ளே ஏற்பட்டு வரும் வித்தியாசத்தை அவன் நன்குணர்ந்தான். "இல்லை, நீங்கள் அப்படிச் செய்வதில்லை" என்று பதில் கூறினான். அவர்கள் இருவருக்கும் எத்தனை வேதனையைக் கொடுத்தாலும் அவன் உண்மையைச் சொல்லாமலிருக்க மாட்டான். "நீங்களும் எங்களைப்போல்தான் உங்கள் வர்க்கத்தைப் பெருக்குவதற்காக மணம் புரிந்து கொள்கிறீர்கள். ஆனால் நீங்கள் உங்களையே ஏமாற்றிக் கொண்டு அதைக் காதல் என்று கூறிக் கொள்கிறீர்கள். நீங்கள் உங்களை ஏமாற்றிக் கொண்ட போதிலும், நீங்கள் உங்கள் சுய ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதாக எண்ணுகிறீர்கள். நீங்கள் காதலைப் பூஜிக்கிறீர்கள். ஆனால் நாங்கள்தான் உண்மையாக நடந்து கொள்கிறோம். நாங்கள் ஆண்கள், பெண்கள் எல்லோரும் மணம் புரிந்து வாழவேண்டும் என்ற கொள்கையை அனுஷ்டிக்கிறோம். இது எல்லோருக்கும் பொதுவாக ஏற்பட்ட ஒரு கடமை. அதோடு காதலும் சேர்ந்தால் கடவுள் அருளால் கொடுக்கப்பட்ட பாக்கியமே அது. ஆனால் வாழ்க்கைக்கு காதல் என்பது அவசியமில்லை" என்று கூறினான்.

"ஆனால் அது எனக்கு அவசியம்" என்றாள் அவள் தாழ்ந்த குரலில்.

அவன் இதற்குப் பதிலளிக்காமலே மேலே கூறிக்கொண்டு போனான். "திருப்தி அவசியம். திருப்தி என்பது வாழ்க்கையில் நமது கடமைகளையும், பிறர் நம்மிடம் எதிர் பார்ப்பதையும் பூர்த்தி செய்வதாலேயே உண்டாகிறது!—ஆனால்

நம்முடைய சுயநலமான காதலே அல்ல, நமது குடும்பத்தாரும் குழந்தைகளும் சந்ததியாரும் நம்மிடம் எதிர்பார்ப்பது" என்றான்.

அவன் தன்னுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசினான். அவன் பேசும் பொழுது இதை யெல்லாம் சகோதரர் ஆண்ட்ரூ ஆமோதிப்பார் என்ற நிச்சயம் அவனுக்கு இருந்தது. ஆனால் இந்த அங்கீகாரம் அவன் கூறும் வார்த்தைக்காக அல்ல. அவன் தன் உள் மனதிலிருந்து பேசுகிறான் என்பதற்காவே.

அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் வெகு நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர்! அவன் அதைக் கலைக்க முயலவில்லை. அதை மேலும் ஆழ்ந்து அகண்டு செல்லும்படி யாக விடுத்துப் பேசாதிருந்தான்.

முடிவில் அவள் தன் கையை நீட்டி "அப்படியானால் இனி நாம் முடிவாக விடை பெற்றுக் கொள்ள வேண்டியது தானே?" என்று கேட்டாள்.

அவன் அவளுடைய கையைச் சிறிது நேரம் பிடித்தபடி நின்றான். பிறகு மற்றொரு கையையும் அவள் கைமீது வைத்து, "ஆம். விடைபெற்றுக் கொள்ள வேண்டியதுதான்" என்று கூறி அவளைப் போக விடுத்தான்.

கடைசி புத்தகத்தையும் அடுக்கியாகி விட்டது. கடைசி ஆடையும் மடித்து வைக்கப்பட்டு விட்டது. அவன் பைகளை எடுத்து, மறுநாள் அவ்வழியே செல்லும் வேலைக்காரர்கள் பார்த்து எடுத்துச் செல்லும் படியாக வெளியே, தாழ்வாரத் தில் எடுத்து வைத்தான். பிறகு அவன் தங்களுடைய படுக் கையறைக்குச் சென்றான். லின்யி தயக்கத்துடன் அறையின் மத்தியில் நின்று கொண்டிருந்தாள். அவன் சிறிதும் தயக்க மின்றி அவளிடம் சென்று அவளுடைய தோள்களைத் தன் கை களால் பற்றிக் கொண்டான்.

"நீ எனக்கு இனி பெரும் உதவி செய்யப் போகிறாய். என்னுடைய பிறந்த பூமியில் நான் செய்ய வேண்டிய காரி யங்கள் நிறைய இருக்கின்றன. அதில் எனக்கு உன்னுடைய உதவி தேவையாக யிருக்கிறது. அதை நான் தனியே செய்து முடிப்பதென்பது முடியாத காரியம். நீ எனக்கு உன்னாலான உதவிகளை யெல்லாம் செய்வதாக வாக்களிக்க வேண்டும்" என்று கூறினான்.

அவனுடைய கண்களில் தோன்றிய வேகம் அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. ஆனால் அந்தப் பயம் இன்பம் நிறைந்த

தாக இருப்பதைக் கண்டாள் அவள். அவனிடம் பயப்படு வதை அவள் விரும்பினாள். அவனுடைய அதிகாரம் அவளுக்குத் தேவையாக யிருந்தது.

'நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். நீங்கள் சொல் வது எதுவானாலும் நான் செய்வேன்' என்று வாய்க்குள் முணகினாள் அவள்.

* * *

பெங்மோ, வீட்டில் விரைந்து பரவும் ஒரு பெரும் தீயை ஒத்திருந்தான். இந்த தீக்கு யாவும் இரையாக வேண்டி யிருந்தது. அவன் விடிவதற்கு முன் எழுந்து மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் சாப்பிட்டு விட்டு, குதிரை மீதேறிச் சென்று விடுவான். வயற்காடுகளில் வழியாகத்தான் பள்ளிகள் ஏற் படுத்துவதாகத் தேர்ந்தெடுத்த கிராமத்தை நோக்கிச் செல் வான். இளையவர் முதியவர் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்று உறுதியாகக் கூறிவிட்டான். அவன் குழந்தைகளுக் காக தனிப் பள்ளியும் வயதான ஆண், பெண், கிழவர்கள் முதலியோர்க்கு தனியாகவும் பள்ளிகள் ஏற்படுத்தத் திட்டம் வகுத்திருந்தான்.

இதைப் பற்றி முதியவர்களிடையே ஏகப்பட்ட புகார் கிளம்பியது. அவர்கள் இதுவரை புத்தகங்களைத் தீண்டிய வர்களே அல்ல. அதற்கு அவசியம் இருப்பதாகவும் அவர்கள் கருதவில்லை. "எங்களுக்கு இன்னும் சில வருஷங்கள்தானே இருக்கிறது. அதற்குள் நாங்கள், மற்ற மனிதர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டு என்ன செய்யப் போகிறோம்" என்று முறையிட்டனர். "எங்களுக்கு மட்டும் சுயஅறிவு இல்லையா? இத்தனை வருஷ அனுபவத்தில் நாங் களும் சிறிது அறிவை அடைந்திருக்கவில்லையா? எங்களுக்கு இப்போது இருக்கும் அறிவே எங்களுக்குப் போதுமானது" என்று அழாக் குறையாகக் கூறினர்.

ஆனால் பெங்மோ, தனது ஆவலின் வேகத்தால் இதை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டான். கடைசியாக முதியவர் களான குடியானவர்கள், ஸ்ரீமதி ஹுவிடம் வந்து அவளைத் தன் மகனிடமிருந்து தங்களைத் தப்புவிக்கும்படி கேட்டுக்கொள் வதற்காக வந்தனர். ஸ்ரீமதி ஹு அவர்களை வந்து பார்த் தாள். அந்தஸ்தில் தாழ்ப்பட்டவர்களுக்கு எப்போதும் தக்க மரியாதை செய்வதில் அவள் தவறுவதில்லை. அவளை விட உயர்ந்தவர்கள் அவளுக்கு யாரும் இல்லை. சமமானவர் களாகிலும் சற்று அலட்சியமாக நடத்தலாம். ஆனால் தாழ்ந்த

வர்களிடம் அவள் மிக்க கௌரவமாகத்தான் நடந்து கொள்வாள். ஆதலால் அவள் உயர்ந்த முன் ஹாலில் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்து அவர்களை வரவேற்றாள். ஸ்ரீமான் ஹவையும் வந்து அவருக்கு உரிய ஸ்தானத்தை வகிக்கும்படி அழைத்திருந்தாள். அவர் மேஜைக்கு வலது பக்கத்தில் வந்து அமர்ந்து கொள்ள அவள் இடது பக்கத்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். தங்களுடைய குடி ஜனங்களுக்கு முன்னால் தங்களுடைய வீட்டின் பெருமையைச் சற்றும் தாழ்த்தலாகாது என்பது அவளுடைய எண்ணம். ஸ்ரீமான் ஹ கம்பீரமாக வந்தார். அவர் கரும் சிவப்பில் ஒரு சில்க் காலங்கியும் மேலே ஒரு கறுப்பு வெல்வெட்டில் ஒரு குட்டையான அங்கியையும் அணிந்திருந்தார். இவையெல்லாம் இப்போது புதிதாகத் தைக்கப்பட்டிருந்தன. ஏனெனில் அவர் மிகவும் பருத்து விட்டதால் பழைய சட்டைகள் அங்கிகள் யாவும் அவருக்கு பற்றுமல் போய்விட்டன. அவருடைய பருமனைக் கண்டு ஸ்ரீமதி ஹ ஆச்சரியமடைந்து போனாள். ஏனெனில் கொஞ்சநாளாக அவள் அவரை சாப்பிடும் வேளைகளில் மேஜைக்கு அருகே உட்கார்ந்திருக்கும் சமயங்களில் தவிர மற்ற நேரங்களில் பார்க்கவேயில்லை. சாப்பாட்டிற்கு கூட அவர் மற்றவர்களோடு அங்கு வந்து உட்காருவது இப்போது குறைந்து விட்டது. அவருடைய உப்பியிருக்கும் கன்னங்களைப் பார்த்தவாறு, இந்த நிலையில் போய்க்கொண்டிருந்தால் அவருக்கு மரணம் சீக்கிரமே சம்பவித்து விடுமென்று எண்ணிக் கொண்டாள் ஸ்ரீமதி ஹ. ஆனால் மரணம் விரைவிலேயே வந்து சந்தோஷமாகவே இருக்கும் போதே போவது துக்கத்துடன் அதிககாலம் இருந்து போவதைக் காட்டிலும் மேல் என்று எண்ணிக் கொண்ட அவள் அவருக்கு எவ்வித எச்சரிக்கையும் செய்ய வேண்டும் என்பது அவசியம் இல்லை யென்று கருதி, தன் மனஅமைதியைக் குலைத்துக் கொள்ளாமல் பேசாதிருந்து விட்டாள்.

வீட்டின் தலைவர்களாகிய அவர்கள் இருவரும் அமர்ந்து கொண்டதும், குடியானவர்கள், நீல நிற உடைகளையும் புதிய செருப்புகளையும் அணிந்தவர்களாய் உள்ளே வந்தனர். அவர்கள் ஜாதித்தால் சுற்றப்பட்ட சிறுசிறு கேக்குகளைக் கொண்டு வந்திருந்தனர். அதன்மீது சுற்றப்பட்டிருந்த கயிற்றில், நல்ல அதிர்ஷ்டத்தைக் குறிப்பதற்காக சிவப்பு காகித துண்டுகளைச் செருகியிருந்தனர். இதை அவர்கள் ஸ்ரீமான் ஹவிடம் காணிக்கையாக செலுத்தவும் அவர் எதற்காக இத்தனை சிரமங்களை எடுத்துக் கொண்டனர் என்று கேட்டுக்கொண்டே அவற்றை ஏற்றுக்கொண்டார்.

தங்கள் எஜமானரின் முன்னால் பணிவுடன் நின்று குடியானவர்கள் தங்கள் கஷ்டத்தை முறையிட்டுக் கொண்டனர். ஸ்ரீமதி ஹ கவனமாகக் கேட்டாள். ஸ்ரீமான் ஹ அதிக சிரத்தை இல்லாமற் போனாலும் அதற்கு செவி சாய்த்தார். குடியானவர்கள் சொல்வதை அவர் முழு மனதோடு ஆதரித்தார். "இவர்கள் சொல்வது முற்றிலும் சரியே, என்னுடைய மகன் ஒரு முட்டாளைப் போல் நடந்து கொள்கிறான். நான் இன்றே அவனை வீட்டிற்கு வரும்படி கூறி உங்களைத் தொந்திரவு செய்யாதிருக்கும்படி கட்டளையிடுகிறேன்" என்று கூறினார்.

ஆனால் ஸ்ரீமதி ஹ இவ்விவகாரத்தின் பலதரப்பையும் அறிந்தவள். ஸ்ரீமான் ஹ அறியாமையால் சொல்வதை அனுமதிப்பதாக அவளுக்கு உத்தேசமில்லை. ஆதலால் முதலில் அவர் கூறியவை ஆமோதிப்பது போல் கூறிவிட்டுப் பிறகு மாற்றிக் கூறினாள்.

"எஜமானர் கூறுவது மிகவும் நியாயமான வார்த்தைகள். அதற்கு எல்லோரும் கீழ்ப்படிய வேண்டியதுதான். உங்கள் எல்லோருக்கும் வயது நாற்பதுக்கு மேலாகி விட்டது. இனி உங்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாக ஒன்றை செய்யச் சொல்லி உங்களை வற்புறுத்துவது அழகல்ல. ஆனால் உங்கள் கிராமத்திலேயே இளைஞர்களாகவும் சிறியவர்களாகவும் இருப்பவர்களுக்குச் சிறிது கல்வி கற்றுக்கொள்வதால், சிறிது லாபம் கிடைக்கலாம்—அதாவது கொஞ்சம் படிப்பு தெரிந்து கொள்வதன் மூலம், உங்களுடைய கணக்கு வழக்குகளை நீங்களே பார்த்துக் கொள்ளலாம் அல்லவா! அப்போது மற்றவர்களால் உங்களை ஏமாற்ற முடியாது" என்றாள்.

அவள் ஸ்ரீமான் ஹவிடம் திரும்பி, வயதாவதின் காரணமாக நாளுக்கு நாள் மேலும் கனிவாகி வரும் தனது குரலில், "நாற்பது வயதிற்கு மேல் ஆனவர்களை, அவர்களே இஷ்டப்பட்டாலொழிய அவர்களைப் படிப்பதற்காக வற்புறுத்தக் கூடாதென்று நாம் நம்முடைய மகனுக்கு உத்தரவிட்டா லென்ன?" என்று கேட்டாள்.

இது நேர்மையான உடன்படிக்கை. ஆகையால் இதுவே தீர்மானிக்கப்பட்டது. அதற்குப் பிறகு வயதானவர்களில் படிக்க விரும்பாதவர்கள் பெங்மோவிடமிருந்து விடுதலை பெற்றனர். ஆனால் படிக்காத காரணத்திற்காக அவர்கள் செலுத்தும் வாடகைகளிலோ, வாங்கிக்கொள்ளும் தானியங்

களிலோ எத்தகைய வித்தியாசமும் அவன் காண்பிக்கமாட்டான் என்ற தைரியமும் அவர்களுக்குக் கூறப்பட்டது.

வயதான இக்குடியானவர்கள் வந்து போனதைப் பற்றி ஸ்ரீமதி ஊ பெங்மோவிடம் கூறியபொழுது அவன் சிரித்தான். "இவர்களே வெல்லும் வழி எது என்பது எனக்குத் தெரியும்" என்று உற்சாகத்தோடு கூறினான். இந்தத் தடங்கல்களை அவன் முழுமனதோடு வரவேற்றான். அவனுடைய வேலை மிக மும்மரமாக நடந்துகொண்டிருந்தது. இளைஞர்கள் கல்வியின் மூலமாகப் பெறும் லாபத்தைக் கண்டு, முதியவர்களும் கல்வி கற்கவேண்டும் என்று விருப்பம் கொள்ள ஆரம்பித்தனர். ஒரு இளம் விவசாயி, தன்னுடைய கல்வியின் காரணமாக, கணக்கில் நேர்ந்த ஒரு தவறைக் கண்டுபிடித்து அதன்மூலம் லாபத்தை அடைந்தானெனில், அதை உடனே எல்லோருக்கும் ஒரு உதாரணமாக எடுத்துக்காட்ட பெங்மோ தவறியதில்லை. கடைசியில், படிக்கக் கற்றுக் கொள்வது ஒரு நாகரிகம் என்ற எண்ணம் எங்கும் பரவ ஆரம்பித்தது. மற்ற கிராமங்களிலிருந்தும் பள்ளிகள் வேண்டுமென்ற கூப்பாடு எழுந்தது. பெங்மோ அவ்வேலையிலேயே ஆழ்ந்து போனான். மாதங்கள் பறந்தன. அவன் செய்யும் வேலையை ஸ்ரீமதி ஊவும் முழுவதும் அறியவில்லை.

பெங்மோவிற்கு இது எல்லாம் மிக நன்றாக இருந்தது. ஆனால் இது வீட்டிற்குள் பெரும் கலக்கத்தை விளைவித்தது. சியூமிங்கும் குலாலும் கூட கிராமத்தில் வசிப்பதற்காகச் சென்றுவிட்டனர். இது ஸ்ரீமதி ஊவிற்குச் சிறிது கலக்கத்தைக் கொடுத்தது. பெங்மோ அவர்கள் இருவரையும் பாமர ஜனங்களிடையே கல்வியைப் பரப்பும்படியான இத்தொண்டு செய்யும் காரியத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு வற்புறுத்தினான். சியூமிங்கால் தன் காதலை பெங்மோவிடமிருந்து எப்படி மறைக்க முடியும்? ஸ்ரீமதி ஊவிற்குக் கவலை அதிகரித்தது. ஏனெனில் சியூமிங்கும் பெங்மோவும் ஒரே வயதினராயினும் அவர்கள் இருவரும் வெவ்வேறு தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள். இவர்களிடையே ஏதாவது விபரீதமாக ஏற்பட்டால் அது ஊ குடும்பத்தைப் பற்றி ஒரு பெரும் அபவாதம் உண்டாவதற்கு இடம் கொடுத்துவிடும். ஸ்ரீமதி ஊ இவ்விதம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு நாள் பெங்மோ அவளைப் பார்ப்பதற்காக வந்தான்.

அவள் அவனை மகிழ்வோடு வரவேற்றாள். இப்போதெல்லாம் அவனுக்கு வேறெதற்கும் நேரமே இல்லை என்பது அவளுக்குத் தெரியும். மிக முக்கியமான ஒரு விஷயுத்

திற்காகத்தான் அவன் வந்திருக்கவேண்டுமென்று ஊகித்தாள். அவளுக்கு ஒரு கணம் பெங்மோ எங்கே, தான் சியூமிங்கைப் பற்றி எதைக் கேட்க விரும்பவில்லையோ, அதையே சொல்ல வந்திருக்கிறானே என்ற பயம் தோன்றியது. உண்மையில் அது அவளைப் பற்றியதுதான். ஆனால் அவன் கூறியது வேறு. அவன் வந்ததும் நாற்காலியில் அமர்ந்துகொண்டு, விஷயத்தை உடனே ஆரம்பித்து விட்டான். அவனுடைய கண்களில் துயரத்தின் சாயை தெரிந்தபோதிலும் அவனுடைய குரல் உறுதியாக இருந்தது. அவன் பேசிய பொழுது, அவனுடைய தோற்றத்தைக் கண்டு அவளால் உவகைகொள்ளாமல் இருக்க முடியவில்லை. கிராமத்தின் சுத்தமான காற்று அவனுடைய ஆரோக்கியத்தையும், நிறத்தையும் அதிகப்படுத்தி யிருந்தது. அவன் தன்னுடைய வேலையில் கண்ட வெற்றி அவனைத் துணிவுடன் பேசச் செய்தது.

"அம்மா" என்று ஆரம்பித்தான். "நான் உன்னிடம் ஒன்று சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஆனால் அதை எப்படிச் சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. ஆதலால் அதை நான் எங்கிருந்து வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம்" என்று கூறினான்.

"சொல் மகனே" என்று கூறினாள் அவள்.

அவன் குட்டையாக வெட்டி விட்டிருந்த தனது கிராப் தலையைத் தடவி விட்டுக் கொண்டான். அவன் வீட்டிற்கு வந்தபோது அவனுடைய தலைமயிர் நீளமாகவும், அழுகாகவும் வாரிவிடப்பட்டிருந்தது. ஆனால் இப்போது எந்த ஒரு குடியானவனும் வைத்துக் கொண்டிருப்பதுபோல் தலைமயிரைக் குட்டையாக வைத்துக்கொண்டிருந்தான்.

"நீ சியூமிங்கைப் பற்றியா பேச வந்திருக்கிறாய்?" என்று ஸ்ரீமதி ஊ வினவினாள்.

அவன் ஆச்சரியம் அடைந்தவனாய், "எப்படி உனக்கு எல்லா விஷயங்களும் தெரிகிறது?" என்று கேட்டான்.

"அதற்கெல்லாம் என்னுடைய சொந்த வழிகள் இருக்கின்றன. அது இருக்கட்டும், மகனே, நீ இப்போது சொல்ல வந்தது என்ன?" என்று கேட்டாள் அவள்.

இவ்விதம் ஆரம்பிக்கப் பட்டதும் அவனால் மேலே பேச முடிந்தது.

"அம்மா, உனக்கே தெரியும். எந்தப் பெண்ணாலும் என்னை அசைக்க முடியாதென்று!" என்று ஆரம்பித்தான்.

அவனுடைய இளமையை நோக்கி அவள் குறுநகை செய்தாள். அவனுடைய சிரத்தை நிறைந்த முகத்திலிருந்த ஏதோ ஒன்று அவளுடைய மனத்தை நெகிழச் செய்தது. ஆ! பழைய காதல் கொள்கைகளும் கல்யாணங்களும் ஒருவேளை தவறே என்னவோ! யார் கண்டார்கள்? அவள் சிறிது முன்னுல் சாய்ந்தாள்.

"எனக்கு நினைவிருக்கிறது" என்று ஏதோ கூற ஆரம்பித்தவள் தன்னையே அடக்கிக் கொண்டாள். அப்போது அச் சம்பவம் நடந்தபோது அவளுக்குப் பெங்மோவின் வயதிற்கு மேல் இருந்திராது. அவள் ஒரு நாள் விடியற்காலையில் விழித்துக் கொண்டு அருகே தூங்கிக் கொண்டிருந்த தன் கணவனின் முகத்தைப் பார்த்தாள். அப்போதே அவளுக்கு தான் இவரை ஒரு நாளும் முழு மனத்தோடு நேசிக்க முடியாது என்ற உண்மை புலப்பட்டது. ஆயினும் அவள் தன் கடமையைச் செவ்வனே செய்து முடித்து அதன் மூலம் வாழ்க்கையின் நிறைவையும் பெற்றிருக்கிறுள். அதற்குரிய தான பற்பல இன்பங்களையும் அவள் நுகராமல் போகவில்லை.

ஆனுல் பெங்மோவின் முகத்தில் காணப்பட்ட அந்த இளமையே அவளைக் கூறவொட்டாமல் தடை செய்தது. அவள் மீண்டும் பின்புறமே சாய்ந்து கொண்டாள். கூடாது! அவள் தன்னைப்பற்றி தன் மகனிடம் பேசுவது பொருத்தமற்ற காரியம்!

"நாம் இனி என்ன செய்வது?" என்று கேட்டான் அவன்.

"எது உசிதம் என்று யோசித்துச் செய்வோம்" என்று பதிலளித்தாள் அவள்.

ஆனுல் அவன் ஏற்கனவே ஒரு வழியைத் தீர்மானித்திருந்தான்.

"நான் லின்யியையும் என்னுடு அழைத்துப் போகிறேன். நாங்களும் இனி கிராமத்திலேயே வசிக்கிறோம். அதற்கு நீ அனுமதி கொடுக்கவேண்டும், அம்மா" என்றுன்.

அவன் கூறியதில் அடங்கியிருந்த விவேகத்தை ஸ்ரீமதி ஹுவால் உணராமல் இருக்க முடியவில்லை. ஆனுல் அவ் வீட்டிற்குள் காலியாகக் கிடக்கப்போகும் மற்றொரு பகுதியை எண்ணியதும் அவள் மனதில் சோகம் உண்டாயிற்று. ஆனுல் அவன் லின்யியைத் தனக்கு ஒரு பாதுகாப்பாக எண்ணி

அழைத்துப்போக விரும்பியது அவளுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அவன் கூறியதை யோசிக்க அதன்படி நடப்பதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தாள்.

முடிவில் அவள், "நான் இதை ஒப்புக்கொள்கிறேன். ஆனுல், ஒரு நிபந்தனை. அவள் உன்னுடைய குழந்தைகளுக்குப் பிறப்பை அளிக்கும்போது பிரசவ சமயத்தில் இங்கு வந்து தங்கி அதற்குப் பிறகும் சில மாதங்கள் நீங்கள் இங்கு இருந்துவிட்டுப் போகவேண்டும். நமது பேரக் குழந்தைகள் இவ்வீட்டிலேதான் பிறக்கவேண்டும்" என்று கூறினுள்.

பெங்மோ இதற்கு இணங்கினுன். சில தினங்களுக்குப் பிறகு பெங்மோவும் லின்யியும் தங்கள் பகுதியைப் பூட்டிவிட்டுப் புறப்பட்டனர். கிராமத்திற்குச் சென்று அங்கு ஒரு மண் வீட்டில் குடியிருக்கலாயினர். ஸ்ரீமதி ஹு, அது அப்படியே நடக்கட்டுமென்றெண்ணி, மன அமைதியோடு இருந்தாள். சில சமயம் அவளுக்குத்தான் சியூமிங்கை அழைத்து, அவளுக்கு புத்திமதியும் ஆறுதலும் கூறவேண்டுமா என்று தோன்றும். ஆனுல் பிறகு அவ்விதம் செய்யக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டாள். அந்தப் பெண் வாழ்க்கையில், எல்லோரும் அடிபட்டுத் தேர்வதைப்போல், தானுக அடிபட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். தனக்கு கிடைக்கக் கூடியது எது, தனக்கு கிடைக்கக் கூடாதது எது என்பதை அவளாகவேதான் தெரிந்துகொள்ள வேண்டும்.

அப்படியே சியூமிங்கும் கற்றுக்கொண்டாள். ஆனுல் அதற்கு

15

அடுத்த வருஷம் ஒரு விசித்திரமான சம்பவம் நடந்தது. லின்யியிக்கு அப்பொழுதுதான் முதல் குழந்தை பிறக்கும் தருணமாக இருந்தது. அடுத்த வருஷம் இவர்களுடைய படைகள் யுத்தத்தில் வெகுவேகமாகப் பின்வாங்கிக் கொண்டிருந்தன. கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தவர்கள் வெற்றிக்குமேல் வெற்றியாகப் பெற்று அநேக ஜனங்களை அவர்களது வீட்டையும் நிலங்களையும் விட்டுவிட்டு ஓடுமாறு விரட்டியடித்தனர். இவர்களது ஊரின் வழியாகவும், கிராமங்களின் வழியாகவும் அநேக அகதிகள் சென்றனர். அந்த நகரத்தில் ஹு குடும்பம் இருந்ததால் அங்கு வழிப்போக்கர்கள் அநேகர் வந்தனர்.

அதிக நாள் தங்கி இருந்தவர்களில் ஒருத்தி விதவையான ஒரு வயதான பெண்மணி. அவள் தன்னுடைய மகன், அவனுடைய மனைவி, குழந்தைகள் முதலியவர்களோடு

அங்கிருந்த ஒரு சாப்பாட்டு விடுதியில் மற்ற எல்லோரும் சென்ற பிறகும் கூட தங்கியிருந்தாள். அவன் அவளுக்கு இருந்த ஒரே மகன். அவன் அவர்கள் அதிகநாள் தங்கியிருக்கும் காரணத்தை அவ்விடுதியின் சொந்தக்காரனிடம் கூறினான்.

"அநேக வருஷங்களுக்கு முன் என்னுடைய தாயார் ஒரு பெண் குழந்தையை இங்கு இழந்துவிட்டாள். காணுமற் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்க ஏதேனும் வழியிருக்கிறதா?" என்று கேட்டாள்.

விடுதியின் சொந்தக்காரன், "அந்தக் குழந்தை உயிரோடு இருந்ததா?" என்று கேட்டான். இந்த விருந்தாளிகள் நல்ல நிலையில் இருப்பவர்களாகத் தெரிந்ததால் அவன் மரியாதையோடு நடந்துகொண்டான்.

"அக் குழந்தை இறந்துபோகவில்லை. ஆனால் என்னுடைய பாட்டி மிகவும் கொடுமைக்காரியாம். என்னுடைய தாய்க்கு ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பெண் குழந்தை பிறந்துவிட்டதற்காக அவள் மிகவும் கோபம் கொண்டு இக் குழந்தையைத் தூக்கி எறிந்துவிட்டாளாம்" என்று பதிலளித்தான் அம்மனிதன்.

"நீங்கள் அப்போது இங்கு எதற்காக வந்திர்கள்?" என்று அந்த விடுதியின் சொந்தக்காரன் கேட்டான்.

"அப்பொழுது வடக்கே ஒரு பெரும் பஞ்சம் வந்திருந்தது. விளைச்சல் எல்லாம் குறைந்துவிட்டது. அப்போது நாங்கள் செழிப்பாக இருந்த இப்பிரதேசங்களுக்கு வந்தோம். நாங்கள் வந்த வழியில் என்னுடைய தாய்க்கு ஒரு குழந்தை பிறந்தது" என்று கூறினான் அவன்.

அவ்விடுதிக்காரன் சிறிது யோசித்தான். "அப்படியானால் நீங்கள் அப்பொழுதும் இந்த விடுதியிலேயேதான் தங்கி இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இந்த நகரத்தில் இதைத் தவிர வேறு விடுதியே கிடையாது. நான் என்னுடைய வாழ்நாள் முழுவதும் இங்கேயேதான் இருந்திருக்கிறேன். எனக்கு முன் என் தகப்பனார் இருந்தார்" என்றான்.

"இதே விடுதியில்தான் என்று என் தாய் சொல்கிறாள். அதற்காகத்தான் நாங்கள் இங்கே இவ்வளவு தாமதம் செய்கிறோம். என்னுடைய இரண்டு சகோதரிகளும் இறந்து விட்டனர். என்னுடைய தாய் காணுமற்போன அக்குழந்தையைக் காணவேண்டுமென்று ஏங்குகிறாள்" என்றான் அவன்.

"நான் இதை இவ்வூரிலுள்ள பிரபுக்களிடம் தெரிவித்துப் பார்க்கிறேன். இதை 'யாருக்காவது தெரிவிக்க வேண்டுமானால் அது ஸ்ரீமதி ஹாவிற்குத்தான் தெரிவிக்கவேண்டும்'" என்று அவ் விடுதிக்காரன் சொன்னான்.

ஆதலால் அவ்விடுதியின் சொந்தக்காரன் ஒருநாள் மாலை, வந்த விருந்தாளிகளுக்கெல்லாம் செய்யவேண்டியவைகளைச் செய்துவிட்டு, தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு ஸ்ரீமதி ஹாவைப் பார்க்கச் சென்றான். இப்போது அவளுக்குப் பார்க்க சௌகரியப்படுமா என்றும் கேட்டனுப்பினான்.

அவள் பார்ப்பதற்கு அனுமதி கொடுத்தாள். இந்த விடுதியின் சொந்தக்காரரின் குடும்பத்தார் அவர்களது பழைய நாளைய வேலைக்காரர்கள். ஒருமணி நேரத்திற்குப் பிறகு ஸ்ரீமதி ஹா முன் ஹாலில் வீற்றிருந்தபடி அவனுக்குப் பேட்டி அளித்தாள். இம்முறை அவள் ஸ்ரீமான் ஹாவை வரும்படி அழைக்கவில்லை. ஏனெனில் அது அவருக்கு அசௌகரியமான நேரம். ஸ்ரீமான் ஹா இரவு சாப்பாட்டிற்குப் பிறகு எதற்காகவும் தம்மைத் தொந்திரவுபடுத்திக் கொள்ள விரும்புவதில்லை. ஆயினும் அவ்விடுதிக்காரனால் இந்நேரத்தில்தான் வரமுடியும். அவனுடைய விருந்தாளிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிக்கொண்டிருந்ததால் அவனுக்கு நேரம் கிடைப்பது அபூர்வமாக இருந்தது.

அவன் ஸ்ரீமதி ஹாவிற்கு முன்னால் வந்ததும் தன்னுடைய கதையை அவளிடம் கூறினான். இதை அவள் கேட்டுக் கொண்டு தனக்குத் தெரிந்த எல்லா விஷயங்களையும் ஒன்று சேர்த்துப் பார்த்தாள். அவள் தன்னுடைய எண்ணங்களை அம் மனிதனிடம் வெளியிடவில்லை. "அந்த அம்மாளை இங்கு வந்து என்னிடம் எல்லா விவரத்தையும் கூறும்படி சொல்லு" என்று மட்டும் கூறினாள்.

"அதுதான் மிகவும் சிறந்த காரியம், அம்மா" என்று அந்த விடுதியின் சொந்தக்காரன் கூறிவிட்டு இச் செய்தியுடன் சென்றான்.

மறுநாள் அந்த மகன் தன்னுடைய தாயை அழைத்துக் கொண்டு வந்தான். ஸ்ரீமதி ஹா அவளைத் தன்னுடைய அறையிலேயே வரவேற்றாள். மகன் முன்புற ஹாலில் காத்துக் கொண்டிருந்தான்.

ஸ்ரீமதி ஹா தன்னைப் பார்க்க வரும் இப்பெண்மணி எந்த ரகத்தைச் சேர்ந்தவள் என்பதை அறிந்திருக்கவில்லை. அவள்

ஏதோ ஒரு சாதாரண பெண்மணியாக இருப்பாள் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவள் ஒரு பணிப் பெண்ணின் மீது சாய்ந்துகொண்டு நடந்து வருவதைப் பார்த்ததும் இவள் சாதாரண பெண்மணி அல்ல. வயதாகி யிருந்தபோதிலும் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று அறிந்துகொண்டாள்.

அவள் அந்த அம்மாளுக்கு வந்தனம் கூறிவிட்டு உயரிய ஆசனத்தில் உட்காரும்படி உபசாரம் செய்தாள். அந்த அம்மாள் அதை மறுத்துக் கூறினாள். கடைசியாக இருவரும் உட்கார்ந்து கொண்டனர். தேநீர் வழங்கப்பட்டது. பிறகு பேசுவதற்கு ஆரம்பிக்க வேண்டியவை அனைத்தும் செய்யப் பட்டது. அந்தப் பணிப்பெண்ணும், இங்கும் இவர்கள் பேசு வது கேட்காத தூரத்தில் நின்றனர். முதலில் சொல்லிக் கொள்ளவேண்டிய உபசார வார்த்தைகள் யாவும் சொல்லி முடிந்ததும் அந்த அம்மாள் விஷயத்தைக் கூறினாள்.

"நாங்கள் மேற்கே இருந்து இங்கு வருவதற்காகவே வெகு தூரம் வந்திருக்கிறோம். இந்த இடத்தில் அபாயம் சிறிதும் இல்லை யென்றாலும் நாங்கள் வரவேண்டியதற்கு மேலாக இருநூறு மைல்கள் தூரம் அதிகமாகவே வந்திருக் கிறோம். ஆனால் அதற்குக் காரணம் இருக்கிறது" என்றாள்.

அவள் தன் கண்களை சில்க் கைக்குட்டையால் மெல்ல துடைத்துக்கொண்டாள்.

ஸ்ரீமதி ஊ அன்புடன், "நீங்கள் சொல்ல விரும்புவதைச் சொல்லுங்கள்" என்றாள்.

இதனால் துணிவுபெற்ற அப்பெண்மணி தன் குழந்தை காணுமற்போன விதத்தைக் கூற ஆரம்பித்தாள். "அந்தக் குழந்தை இறக்கவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவள் மற்ற குழந்தைகளைக் காட்டிலும் மிக புஷ்டியாக இருந்தாள். அக்குழந்தையின் தகப்பனாருக்கு தாயின் வற் புறுத்தலின் பேரில்கூட அதைக் கொல்வதற்குச் சிறிதும் மனம் இருக்கவில்லை. அவர் மிகவும் நல்லவர். அவருடைய தாய் தான் பொல்லாதவள். அவர் அவளுக்கு முன்னால் இறந்து விட்டார். தாய்க்கு விரோதமாகச் சொல்வதற்கு பயந்த வராய் அவர் என்னிடம் ஒன்றுமே கூறாமல் போய்விட்டார்."

அவள் நிறுத்திவிட்டு மறுபடியும் சிறிது நேரம் அழுதாள். பிறகு "எங்களுக்கு எத்தகைய தண்டனை கிடைத்தது! ஒன்றன் பின் ஒன்றாக ஆணும் பெண்ணுமாக என்னுடைய குழந்தைகள் அனைவரும் இறந்து விட்டனர். என்னுடைய

கடைசி மகன் தான் எனக்கு மிஞ்சினான். இப்போது காணாமற் போன அக் குழந்தையைத் தேடி அலைகிறேன். அதற் காகவே நாங்கள் இங்கு வந்தோம்" என்று கூறினாள்.

"அந்தக் குழந்தை கொல்லப்படவில்லை என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என்று கேட்டாள் ஸ்ரீமதி ஊ.

அந்த அம்மாள், "எனக்கு அது நிச்சயமாகத் தெரியும். நான் அப்போது படுக்கையில் படுத்திருந்தபோதுகூட அவர் தன் தாயிடம் மன்றாடுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். முடிவில் அவள் குழந்தையைக் கொல்லாமல் நகரத்தின் சுவற் றுக்கு அப்பால் எறிந்துவிட்டு வருவதற்கு ஒப்புக்கொண் டாள்" என்று கூறினாள்.

"அந்தக் குழந்தையை ஒரு சிகப்பு சில்க் கோட் ஒன்றினால் போர்த்தியிருந்தீர்களா?" என்று ஸ்ரீமதி ஊ கேட்டாள்.

அந்த அம்மாள் ஸ்தம்பித்துப் போனாள். "என்னுடைய பழைய சிகப்பு கோட் அது. அவளை அதில் போர்த்து வைத் தால் ஒருகால் யாரேனும் பார்க்கக் கூடும் என்று எண்ணி னேன்" என்றாள் தினறிக் கொண்டே.

ஸ்ரீமதி ஊ எழுந்து டிராயரை நோக்கிச் சென்றாள். அவளுடைய உடைகளுக்கு நடுவே வெகு நாட்களுக்கு முன் சியூமிங் அவளிடம் கொடுத்து வைத்திருந்த அப்பட்டுத்துணி மடித்து வைக்கப்பட்டிருந்தது. "இதோ இருக்கிறது அந்தக் கோட்டு" என்று எடுத்துக் கொடுத்தாள்.

அந்த அம்மாளின் முகம் ஒரேயடியாக வெளுத்துப் போய் விட்டது. "இதே கோட்தான்" என்று முனகினாள். அதை வாங்கிக் கையால் இறுகப் பிடித்துக் கொண்டாள். "ஆனால் குழந்தை...?"

ஸ்ரீமதி ஊ, "உயிரோடு இருக்கிறாள்" என்றாள்.

பிறகு அவள் சியூமிங்கின் கதையையும் அவள் எப்படி இந்த வீட்டிற்குள் வந்தாள் என்பதையும் கூறினாள். அந்த அம்மாள் விம்மியவாறு பயமும் அதிர்ச்சியும் கொண்டவளாய் கேட்டுக் கொண்டிருந்தாள். சியூமிங் ஸ்ரீமான் ஊவை இருப்பிப் படுத்தவில்லை என்பதையும், ஸ்ரீமதி ஊ அவளை நன்கு மதித்த போதிலும் எவ்வாறு அவளை கிராமத்திற்கு அனுப்பும்படி நேர்ந்தது என்பதையும் கூறுவது அவளுக்கு கடினமாகத்தான் இருந்தது. அந்த அம்மாளுக்குச் சிறிது நன்றி ஏற்பட்ட போதிலும் சிறிது மனத்தாங்கலும் உண்டா

யிற்று. கடைசியாக ஸ்ரீமதி ஊ, "நாம் இருவரும் கிராமத்திற்குச் செல்வோம். நீங்களாகவே உங்கள் குழந்தையை நன்றாக வைத்திருந்தோமா இல்லையா என்று பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினாள்.

ஆதலால் மேலும் தாமதம் செய்யாமல் பல்லக்கை வர வழைத்து இரண்டு பெண்மணிகளுமாக உடனே கிராமத்திற்குப் புறப்பட்டனர். ஸ்ரீமதி ஊ வெகு நாட்களாக பெங்மோ என்ன செய்திருக்கிறான் என்பதைத் தான் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் அதிகக் குளிராய் இருக்கிறது. அதிக வெயிலாய் இருக்கிறது. சிறிது உடம்பு சௌக்கியமில்லை என்று ஏதேதோ காரணங்கள் வந்து கொண்டிருந்தன. ஆனால் முக்கிய காரணம் அவள் புத்தகங்களுடன் தனியே இருக்க விரும்பியதுதான். இன்று அவள் பார்த்தது அவளை ஸ்தம்பிக்க வைத்தது. கிராமத்தில் எங்கும் சுத்தமும் ஒழுங்கும் குடிகொண்டிருந்தது. முன்னை விட ஜனங்கள் அதிக ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் காணப்பட்டனர். குழந்தைகளின் மூக்குகளும் தலைகளும் சுத்தமாகக் காணப்பட்டன. கிராமத்தார் பெருமையுடன் ஒரு புதிய மண்கட்டிடத்தை தங்கள் பள்ளிக்கூடம் என்று காட்டிக்கொண்டனர். பெங்மோ அவளுக்கு முன்னமே இதைப் பற்றி யெல்லாம் சொல்லியிருக்கிறான். ஆனால் அவள் அவன் செய்திருக்கக்கூடிய வேலைகளை அறிந்து கொள்ளாதவளாய், "ஓ! ஆம், ஆம், மகனே" என்று அசிரத்தையுடன் கூறியிருக்கிறாள்.

பள்ளிக்கு அடுத்த படியாக அவர்களுடைய வீடு இருந்தது. அவர்கள் வருவதைப்பற்றி முன்னமே அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருந்ததால். அவர்கள் தயாராக காத்துக் கொண்டிருந்தனர். லின்யி கர்ப்பமாக இருந்தாள். இது ஸ்ரீமதி ஊவுக்கு முன்னமே அறிவிக்கப் பட்டிருந்தது. ஆயினும் அவள் லின்யி இத்தனை ஆரோக்கியத்துடன் இருப்பாள் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவளுடைய கன்னங்கள் சிவந்திருந்தன. அவளுடைய உதடுகள் வர்ணமில்லாமலேயே சிவந்திருந்தன. அவளுக்கு கொஞ்சம் சதையும் போட்டிருந்தது. அவளுடைய சுருண்ட கேசமெல்லாம் எங்கோ மறைந்து விட்டது. இது ஸ்ரீமதி ஊவிற்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால் அதைவிட லின்யியின் நடத்தையில் காணப்பட்ட விசேஷ மாறுதல் அவளுக்கு மேலும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அந்தப் பெண் மரியாதையாகவும் கனிவுடனும் காணப்பட்டாள். அவளுடைய சோம்பேறித்தனம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது.

அவர்கள் பெங்மோவின் வீட்டிற்குச் சென்று உட்கார்ந்தனர். பெங்மோவிற்கு சொல்லி அனுப்பப்பட்டது. அவன் வந்ததும் இந்தக் கதை முழுவதையும் அவனுக்காக மீண்டும் ஒரு முறை கூறினார்கள். சியூமிங்கையும் அவள் குழந்தையையும் வரச்சொல்லி அனுப்பினார்கள். சியூமிங்குடன் கூட ருலானும் வந்தாள்.

சியூமிங் உள்ளே நுழைந்த அக்கணமே, தாயும் மகளும் ஒருவரை யொருவர் பார்த்து, அவர்கள் யாரென்பதைத் தெரிந்து கொண்டனர். தாய்க்கும் மகளுக்கும் இடையேயன்றி வேறு ஒருவரிடமும் இத்தகைய முகவொற்றுமையைக் காணமுடியாது. அவர்களைப் பார்த்த யாவரும் இந்த விசித்திரமான கதையின் முடிவை எண்ணி வாய்விட்டுச் சிரித்தனர். ஸ்ரீமதி ஊ மௌனமாக இருந்த போதிலும் அவள்தான் மிகவும் அதிக பூரிப்படைந்தாள்.

"அம்மா!" என்று கூறினாள் சியூமிங்.

"இவளே என் குழந்தை" என்று அந்த அம்மாள் கூறினாள்.

இருவரும் விம்மியழுதனர். அந்த அம்மாள் தனது பேத்தியை அணைத்துக் கொள்ள முயல, இப்போது சற்று பெரிதாகியிருந்த அக்குழந்தை கத்திக்கொண்டு உதைக்க, சியூமிங் அதை அடிக்க, அவளுடைய தாயார் அவளைத் தடுக்க எல்லாம் ஒரே அமர்க்களமாகி விட்டது. பிறகு சிறிது நேரத்தில் யாவும் சரியாயிற்று. அந்த அம்மாள் சியூமிங்கையும் அவளுடைய குழந்தையையும் தன்னுடைய குடும்பத்தோடு அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தாள். இதற்காக சியூமிங் ஸ்ரீமதி ஊவிடம் உத்தரவு கேட்கச் சென்றாள்.

"நான் போகலாமா அக்கா?" என்று பணிவுடன் கேட்டாள். ஸ்ரீமதி ஊ, சியூமிங் இப்போது அவ்வளவு சந்தோஷமாக இல்லையென்பதை தெளிவாகக் கண்டாள். கிராமத்து சுத்தமான காற்றிலும் புஷ்டியான ஆகாரத்தை உண்டு வசித்தும் கூட சியூமிங் வெளுத்துக் காணப்பட்டாள். பல நாட்கள் தூங்காதிருந்தவளைப் போல் அவளுடைய கண்கள் குழி விழுந்திருந்தன. மேலும் அவள் லின்யியின் பக்கம் பாராமலே இருந்ததையும் ஸ்ரீமதி ஊ கவனித்தாள். சியூமிங் வீட்டை விட்டுச் செல்வதே நல்லது. அதுவே அவளுக்கு நன்மையை உண்டாக்கும். ஸ்ரீமதி ஊ தனது அனுமதியைக் கொடுத்து விட்டாள்.

"இது மட்டும் உன் தாயாராக இல்லாமல் வேறு யாராக வாவது இருந்தால் நான் ஒரு நாளும் உன்னை அனுப்பச் சம்மதிக்க மாட்டேன். ஆனால் கடவுளாகப் பார்த்து தாயையும் மகளையும் ஒன்று சேர்த்திருக்கிறார். நான் உங்களைப் பிரித்து வைக்க எவ்வாறு துணிவேன்? ஆனால் நான் உனக்கும் குழந்தைக்கும் புதிய துணிமணிகளையும், பிரயாணத்திற்குத் தேவையான மற்ற பொருட்களையும் தயார் செய்து கொடுக்கும் வரை நீங்கள் இங்கேயே இருக்கவேண்டும். எங்கள் வீட்டிலிருந்து நீ வெறுங் கையோடு போகக்கூடாது" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

அந்த அம்மாள் இதெல்லாம் அவசியமில்லை என்று தடுத்துக் கூறினாள். ஆனால் ஸ்ரீமதி ஊ விடுவதாகயில்லை. பிறகு சியூமிங் தனது குழந்தையோடு, இவர்களுக்கு பல முறை வணக்கம் செலுத்திவிட்டு அவர்களோடு அவ்விடுதிக்குச் சென்று விட்டாள். அதற்குப் பிறகு அவள், அவர்களிடமிருந்து ஒரு நாளும் பிரியவில்லை.

ஸ்ரீமதி ஊ வேறு ஒன்றும் கூறவில்லை. அவளுடைய தாயாரை மட்டும் தனியே அழைத்து, "உங்களுடைய இந்தப் பெண்ணைத் தனியே வாழும்படி விட்டு விடாதீர்கள். அவளுக்கு ஒரு நல்ல கணவனைப் பார்த்துக் கொடுத்து மீண்டும் ஒரு புதிய வாழ்வை ஆரம்பிக்கச் செய்யுங்கள்" என்று கூறினாள். அந்த அம்மாள் அப்படியே செய்வதாகக் கூறினாள். சில வாரங்களுக்குப் பிறகு வேண்டிய சாமான்களெல்லாம் தயாரிக்கப் பட்டதும் சியூமிங் ஊ வீட்டை விட்டு விட்டு அவளது தாயுடன் சென்றுவிட்டாள். சியூமிங் தன்னிடம் தனியே விடைபெற்றுக் கொள்வதற்காக வராதது பற்றி ஸ்ரீமதி ஊ மகிழ்ச்சியே அடைந்தாள். அந்தப் பெண்ணின் தூய உள்ளத்தை அவள் அறிவாள். நன்றியில்லாமையினாலோ, மறதியினாலோ அவள் அவ்விதம் செய்யவில்லை. சியூமிங் ஏன் வரவில்லையென்றால் இனி அவளுக்கும், பெங்மோவின் தாய்க்கும், இடையே சொல்லிக் கொள்வதற்கு என்ன இருக்கிறது!

ஸ்ரீமதி ஊவிற்கு அச் சிறு துயரத்தைக் கூட கொடுக்க விரும்பவில்லை அவள். தன்னுடைய இதயத்திலேயே தன்னுடைய காதலை மூடி எடுத்துச் சென்றுவிட்டாள் அப்பெண்.

அதற்குப் பிறகு ஸ்ரீமதி ஊ சியூமிங்கை மறுபடியும் பார்க்கவே இல்லை. வருஷத்திற் கொருமுறை கடிதம் மட்டும் வந்து கொண்டிருந்தது. யாரையாவது எழுதச் சொல்லி, சியூமிங்,

கையெழுத்து மாத்திரம் போட்டு அனுப்புவாள். வருடா வருடம் வந்து கொண்டிருந்த அக்கடிதங்களில் வணக்கம் தெரிவித்தும் சியூமிங் தான் நன்றாகயிருப்பதாகவும், குழந்தை நன்றாக வளர்ந்திருப்பதாகவும் எழுதுவாள். கடைசியாக யுத்தம் முடிந்ததும் அவள் ஒரு வியாபாரியை மணந்து கொண்டாள். அவன் உள்நாட்டுச் சரக்குகள், வெளி நாட்டுச் சரக்குகள் முதலியவற்றை வாங்கி விற்பவனென்றும் அவனுடைய முதல் மனைவி இறந்து விட்டாள் என்றும், இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் எழுதினாள். அவள் அக் குழந்தைகளையும் விரைவிலேயே அன்புடன் நடத்தக் கற்றுக் கொண்டாள். அவளுடைய தாயும் சில வருஷங்களுக்குப் பிறகு இறந்து விட்டாள். சியூமிங்கிற்கு முதலில் ஒரு பிள்ளையும், பிறகு இரட்டை ஆண் குழந்தைகளும் பிறந்தன. அவளுடைய வீடு நிறைந்து விட்டது.

இந்தக் கடிதங்களுக்கு ஸ்ரீமதி ஊ மிக்க கவனத்துடனும், விவேகத்துடனும் பதில் எழுதினாள். ஒவ்வொரு கடிதத்திலும் அன்பின் காரணமாக அவள் பெங்மோவையும் அவனுடைய குடும்பத்தையும் பற்றி தவறாது எழுதி வந்தாள்.

* * *

பெங்மோவின் குடும்பம் பெருகியது. அவனுடைய ஆத்மீக வாழ்க்கை எப்படியிருந்தபோதிலும் அவனுடைய உடல் வாழ்க்கை வெற்றிகரமாகவே இருந்தது. லின்யியிக்கு முதலில் ஒரு மகனும் பிறகு ஒரு மகளும் அதற்குப் பிறகு இரண்டு மகன்களும் பிறந்தார்கள். ஒவ்வொரு முறையும் குழந்தை பிறக்கும் சமயத்தில் அவள் ஊ வீட்டிற்குச் சென்று ஒரு மாதம் தங்கி விட்டு உடனே குழந்தையை எடுத்துக் கொண்டு மீண்டும் பெங்மோவோடு கிராமத்தில் வசிப்பதற்காக வந்து விடுவாள். அவளுக்கு விளையாடுவதற்கோ, சிணுங்குவதற்கோ, தலையலங்காரம் செய்வதற்கோ, நகங்களில் வர்ணம் பூசுவதற்கோ நேரம் இருப்பதில்லை. பெங்மோ அவளை கண்டிப்பாகவும் அதே சமயத்தில் நியாயமாகவும் நடத்தினான். அவனால் லின்யியை ஒரு நாளும் மனப்பூர்வமாக நேசிக்க முடியாது என்பதை ஸ்ரீமதி ஊ அறிவாள். ஆனால் அது அவனுக்கு அவசியமும் இல்லை என்பதும் அவளுக்குத் தெரியும். அவனுடைய மனத்தைக் கவர வேறு விஷயங்கள் இருந்தன. அவை காதலிலிடப் பன்மடங்கு வேகத்துடன் அவனை ஆட்கொண்டன. மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று அவன் துடிதுடித்தான். சில பள்ளிகள் நிர்மாணித்தால் போதாது. ஆயிரமாயிரம் பள்ளிகளை நாடெங்கும் நிர்மாணிக்க வேண்டுமென்ற பேராவல் கொண்

டான். அதோடு அவன் திருப்தி அடையவில்லை. ஆஸ்பத்திரி களைப் பற்றி கனவுகள் காண ஆரம்பித்தான். அவன் விலையுயர்ந்த ஆடைகள் அணிவதை அடியோடு விட்டு விட்டான். அவையெல்லாம் அவனுடைய வீட்டில் ஒரு மூலையில் பெட்டியில் தூங்கிக்கொண்டிருந்தன. அவன் எப்பொழுதும் எளிய முறையில் தைக்கப்பட்ட சாதாரண ஆடைகளையே உடுத்தான். அவனுடைய உற்சாகமும் சிரத்தையும் நிறைந்த முகத்தில் காணப்பட்ட ஒளி ஸ்ரீமதி ஹாவிற்கு சதா ஆண்ட்ரூவின் நினைவையே உண்டாக்கிற்று. ஆனால் பெங்மோவிடம் ஆண்ட்ரூவிற்கு இருந்த ஹாஸ்ய உணர்ச்சி இல்லாமல் இருந்தது. அவனுடைய உள்ளம் அடி வரை வயிரம் பாய்ந்திருந்தது. அவன் தன்னிடமும் அதே உறுதியுடன்தான் நடந்து கொண்டான். அவன் கடலுக்கப்பா லிருந்த அந்தப் பெண்மணிக்கு ஒரு கடிதம் எழுதியவனே அல்லது அவளைப்பற்றி மீண்டும் ஒரு முறையாகிலும் பேசிய வனே அல்ல. பெங்மோவால் எதையும் அரைகுறையாகச் செய்யமுடியாது. அவனுடைய மனத்திலிருந்த ஆர்வம் நாலா பக்கங்களிலும் ஒரே சமயத்தில் சென்றது.

இந்த உற்சாகம் கரை கடந்து போயிற்று. எல்லோரும் அதைக் கண்டு வியந்த போதிலும் அது தங்கள் வீட்டில் உள்ளவர்களையே பாதிக்க ஆரம்பித்தபோது அது அதிகமாகி விட்டது. அவன் பாமர ஜனங்களுக்கு கல்வி அளிப்பதோடு நின்று விடவில்லை. என்மோவையும் தன் வழிக்குக் கொண்டு வந்துவிட்டான். அதோடு நில்லாமல் அவன் லியாங்மோவின் விஷயத்திலும் தலையிட்டபோதுதான் லியாங்மோவிற்கு அது பொறுக்க முடியாமல் போய்விட்டது.

உண்மை யென்னவெனில் பெங்மோவிற்குப் பள்ளிக் கூடத்திற்காகப் போதிய உபாத்தியாயர்கள் கிடைக்கவில்லை. லியாங்மோவின் மனைவியாகிய மெங் சோம்பேறித்தனமாக நாளுக்கு நாள் பெருத்த வண்ணமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டு ஒருநாள் அவன் அவளிடம் அவளும் ஏன் லின்யி, ருலான் இவர்களுக்கு உதவியாக வயதான பெண்மணிகளுக்கு எழுதக் கற்றுக் கொடுப்பதிலும், தையல் முதலியன சொல்லிக் கொடுப்பதிலும் உதவி செய்யக்கூடாது என்று கேட்டான். மெங் தனது வட்டமான விழிகளை அகல விரித்தாள்.

"நானா? நான் இந்த வீட்டைவிட்டு என் தாயாரைப் பார்ப்பதற்குத் தவிர வேறு எதற்கும் வெளியே சென்றதுகூட இல்லையே" என்று கூறினாள்.

"ஆனால் நீ செய்யவேண்டும், அண்ணி. அது உன்னுடைய கடமை. உன்னுடைய குழந்தைகளை தாதிகள் பார்த்துக்கொள் கிறார்கள். உன்னுடைய பெரிய மகனை அவனுடைய ஆசிரி யரிடம் ஒப்படைத்தாகி விட்டது. உன்னுடைய வீட்டை பார்த்துக் கொள்ளத்தான் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். நீ தினமும் ஒரு மணி நேரமாவது அங்கு வந்து எங்களுக்கு உதவி செய்யவேண்டும்" என்று பெங்மோ கூறினான்.

மெங்கிற்கு ஒன்றும் புரியவில்லை. அவள், "என்னால் முடியாது. லியாங்மோ அதற்கு அனுமதிக்க மாட்டார்" என்று கூறினாள்.

"உனக்கு எழுதப் படிக்கத் தெரியும். நம்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த யாரும் அதைத் தன்னுடனேயே வைத்துக் கொள்வது மகாபாவம்" என்றான் பெங்மோ வற்புறுத் தலுடன்.

இதைக் கேட்ட மெங்கின் உருண்டையான முகம் பீதியால் மாறுதல் அடைந்தது. இப்பொதெல்லாம் பெங்மோ பிரசாரம் செய்து செய்து அதே பழக்கத்தால் எப்போதும் உரத்த குரலிலேயே பேசி வந்தான். அவன் ஒரு முறை பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டானானால் பிறகு அவனை நிறுத்துவதற்கு யாராலும் முடியாது. அவனுடைய எல்லையற்ற நல்லெண்ணத்தின் காரணமாகவே அவனிடம் எல்லோரும் விடாது பிரியம் செலுத்தி வந்தனர்.

முடிவில். மெங் தடுமாற்றத்துடன், "நான் லியாங் மோவைக் கேட்கிறேன்" என்று கூறினாள். பெங்மோவும் தன்னுடைய பேச்சு அவளுடைய உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது என்ற திருப்தியுடன் சென்று விட் டான்.

மெங், பெங்மோ தன்னுடன் பேசிய விதத்தைப் பற்றி லியாங்மோவிடம் கூறியபொழுது அவன் கோபாவேசமடைந் தான். அவள் விம்மிக்கொண்டே, "அவன் என்னை அவமானம் அடையும்படி செய்துவிட்டான்" என்று கூறினாள்.

லியாங்மோ தான் அணிந்து கொண்டிருந்த மூக்குக் கண்ணுடியைக் கழற்றி மடக்கி தனது பைக்குள் வைத்துக் கொண்டான். அவன் இப்போதெல்லாம் கண்ணுடி அணிய ஆரம்பித்திருந்தான். பிறகு கோபத்துடன் மேஜை மீது ஒங்கி ஒரு குத்துக் குத்தினான். "பெங்மோவினால் வரவர தொந்திரவு மிகவும் அதிகமாகிறது. பாமர ஜனங்களை மிகவும் கிளப்பி

விட்டுவிட்டான். நேற்றுதான் தலைமைக் குடியானவர்கள் எல்லோரும் என்னிடம் வந்து இனி தானியங்கள் விற்பதற்கு நடுவே ஒரு தரகன் வேண்டியதில்லை என்றும் தாங்களாகவே விற்றுக்கொள்வார்கள் என்றும் கூறினார்கள். நான் உங்களுக்கு கணக்கு வழக்குகள் எப்படித்தெரியும் என்று கேட்டேன். அவர்கள் எல்லாம் தங்களுக்குத் தெரியும் என்று கூறினர். பெங்மோ இதையெல்லாம் அவர்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிறான் போல் இருக்கிறது. இப்படிச் செய்தால் அந்த தரகர்களும் அவர்களுடைய குடும்பங்களும் வாழும் வழிதான் என்ன? கடவுளால் படைக்கப்பட்ட எல்லோருக்கும் அவரவர்க்கென்று ஒரு இடம் கிடையாதா?" என்று கூறினான்.

சிறிது நேரம் கோபத்துடன் உறுமிவிட்டுப் பிறகு அவன், "மெங், நீ இனிமேல் என்னுடைய சகோதரனுடன் பேச வேண்டியதில்லை. நானே அவனுடன் பேசிக்கொள்கிறேன்" என்றான்.

அப்படியே செய்தான் லியாங்மோ. அவன் பெங்மோவைப் பார்ப்பதற்காகச் சிறிதுநேரம் எடுத்துக்கொண்டு சென்றான். கிராமத்தில் அவன் கண்ட காட்சி அவனை வியப்புகொள்ளச் செய்தது. பெங்மோவினுடைய முயற்சியின் பலன் எங்கும் காணப்பட்டது. கிராமத்தில் ஒழுங்கும், சுத்தமும் குடிகொண்டிருந்தது. ஆனால் அவன் தன்னுடைய வியப்பை வெளிக்காட்டிக்கொள்ளாமல் உதட்டை இறுகக் கடித்துக்கொண்டான். அதற்குப் பதில் இதற்கெல்லாம் பணம் கொடுத்தது யார் என்று தெரியவில்லையென்றும் ஏழை மக்கள் பணக்காரர்களைப் போல் இவ்வளவு சுத்தமாக இருக்கவேண்டியது இயற்கையின் நியதியே அல்ல என்றும் ஏழை மக்களுக்கு ஆஸ்பத்திரிகளின் அவசியம் என்ன இருக்கிறது என்றும் அவர்கள்தான் இப்பொழுது எண்ணிக்கையில் மிக அதிகமாக இருக்கிறார்களே! ஆதலால் சிலர் இறந்து போனால்தான் என்ன என்றும் முணமுணத்தான்.

இந்த இரண்டு சகோதரர்களின் சந்திப்பு ஒரு பெரும் சச்சரவில் சென்று முடிந்தது. லியாங்மோ லின்யியின் தோற்றத்தைக் கண்டதும் கோபத்தால் தன் வயமிழந்து விட்டான். அவளைப் பார்த்தால் ஒரு உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைப் போலவே அல்ல என்றும், ஒரு சாதாரண பள்ளிக்கூடத்து உபாத்தியாயினியை ஒத்திருக்கிறாளென்றும் இப்பொழுதே மெங்கைவிட மிக அதிக வயதானவளைப்போல் தோற்றமளிக்கிறாள் என்றும் கூறினான். இதைக் கேட்ட

லின்யியிக்கு தன் மீதே பரிதாபம் தோன்ற ஆரம்பித்தது. அதற்குள் ருலான் வாதத்தில் புகுந்து பெங்மோவினுடைய கட்சியையும் ஜனங்களுடைய கட்சியையும் எடுத்துக்கொண்டு வாதாடினாள். லியாங்மோவிற்கு இந்தக் கிராமத்து முன்னேற்ற காரியங்களில் ஈடுபட்ட ருலான் தன்னுடைய துக்கத்தை முற்றிலும் மறந்து விட்டாள் என்பது மிக்க அதிருப்தியைக் கொடுத்தது. முடிவில் எல்லோரும் மனத்தாங்கலுடன் பிரிந்தனர். லியாங்மோ ஸ்ரீமதி ஊவிடம் முறையிடுவதற்காகச் சென்றான்.

இப்போதெல்லாம் ஸ்ரீமதி ஊ தனது அறையை விட்டு வெளியே செல்வதே யில்லை. கோவிலிலுள்ள குழந்தைகளை மட்டும் பார்ப்பதற்காக எப்போதாவது செல்வாள். அவள் அவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவில்லை. ஆண்ட்ரூவின் விருப்பம் எதுவாயிருந்தாலும், அவள் வேறு ஒரு குழந்தையையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு காரியம் மட்டும் அவள் செய்தாள். நகரத்தின் தெற்குப் பகுதியிலுள்ள பெண்களின் பௌத்த சங்கத்திற்கு சிறிது பணம் நன்கொடையாக வழங்கி அவர்கள் தினமும் காலையில் இரண்டு கன்னிகாஸ்திரீகளை அனுப்பி நகரத்தின் சுவற்றுக்கு அப்பால் அனுதைக் குழந்தைகள் யாரேனும் எறியப்பட்டு இருக்கிறார்களா என்று தேடிப்பார்த்து அப்படி யிருந்தால் அவர்களை எடுத்து வந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு ஏற்பாடு செய்திருந்தாள். ஆனால் அவர்களை கன்னிகா ஸ்திரீகளாக ஆக்கக்கூடாதென்றும் அவர்களை வளர்த்து நன்கு கல்வி போதித்து பின் வயது வந்தவுடன் நல்ல மனிதர்களாக இருக்கும் விவசாயிகளாகப் பார்த்து மணம் செய்துகொடுக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தாள். இதை அவள் ஆண்ட்ரூவுக்காகச் செய்தாள்.

ஆண்ட்ரூவின் குழந்தைகளை அவள் கோவிலிலேயே வைத்திருந்தாள். ஒவ்வொரு பெண்ணும் பதினாறு வயதை அடைந்ததும் அவளை ஒரு இளைஞனுக்கு மணம் முடித்துவிட்டாள். அந்தப் பெண்களுடைய புகழ் எங்கும் பரவி இருந்தது. அவர்களை மனைவியாக அடைய விரும்பிய இளைஞர்களின் எண்ணிக்கை எப்பொழுதும் அதிகமாகவே இருந்தது. ஒவ்வொரு பெண்ணினுடைய பதினாறும் பிறந்தநாள் வந்ததும் ஸ்ரீமதி ஊ அவளைத் தன் அருகே அழைத்து அவளோடு அவளை மணக்கக் காத்திருக்கும் வாலிபர்களைப்பற்றிப் பேசுவாள். ஸ்ரீமதி ஊ அம்மனிதர்களுடைய பெயர், ஊர், வயது இவைகளை மட்டும் தெரிவிக்காமல் அவர்களுடைய போட்டோக்

களைக் காட்டினாள். இந்தப் புதிய வழிகளைப் பற்றி ஊரில் பேச்சு எழாமல் போகவில்லை.

யாராவது அவளை இதைப்பற்றி கேட்க வந்தால், "ஆண்கள் மட்டும்தான் பெண்களுடைய போட்டோக்களைப் பார்க்கவேண்டுமா? பெண்களும் அவர்களுடைய முகத்தைப் பார்ப்பது நியாயமாகாதா?" என்று கேட்பாள்.

ஸ்ரீமதி ஊவைப் பற்றி தீர்ப்புக்கூற ஒருவருக்கும் துணிவு இருக்கவில்லை. ஆதலால் இதுவே பெருமையும், போட்டியும் உண்டாக்கக் கூடிய ஒரு விஷயமாகிவிட்டது. இளம் வாலிபர்கள் போட்டி போட்டுக்கொண்டு தங்களுடைய படத்தை அவளுக்கு அனுப்பினர். அப்பெண்களுக்கு தக்க பருவம் வந்ததும் அவள் தானாகவே அப்படங்களை அவர்களுக்குக் காண்பித்தாள். அந்தப் பெண் ஒருவனைத் தேர்ந்தெடுத்ததும் அவள் அவனுக்கு அப்பெண்ணினுடைய படத்தை அனுப்புவாள். அந்தப் பெண்கள் தேர்ந்தெடுத்தவர்களில் இதுவரை ஒருவரும் அவர்களை வேண்டாமென்று மறுத்ததில்லை. அவர்களுடைய புகழ் அவ்வளவு தூரம் பரவியிருந்தது.

இந்தப் பெண்களை ஸ்ரீமதி ஊ தன்னுடைய சொந்தப் பெண்களாகவே கருதினாள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவள் கணவன், மனைவி இவர்களுடைய நல்ல உறவுக்கு வேண்டிய அனைத்தையும் கற்பித்தாள். அவர்கள் யாவரும் நல்ல மனைவிகளாக இருந்தார்கள். இந்தப் பெண்களால் ஸ்ரீமதி ஊ மிகவும் பிரசித்தி பெற்றாள்.

ஒவ்வொருவருடைய திருமணத்தையும் நேர்த்தியாக நடத்தினாள். தாய் என்ற ஸ்தானத்தை அவள்தான் வகித்தாள். அவளுடைய முகத்தில் அச்சமயம் பொலிந்த புன்னகையையும் அவளுடைய கண்களில் தோன்றிய தூரப் பார்வையையும் ஒருவரும் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் அவள் அதை எதிர்பார்க்கவுமில்லை. ஒருவர் பின் ஒருவராக ஆண்ட்ரூவின் குழந்தைகளாகிய அவ் வழகைப் பெண்களை, அமைதியும் பாதுகாப்பும் நிறைந்த ஒரு வீட்டிற்கு அனுப்பியபோது அவளுக்குத் தன் அருகே ஆண்ட்ரூவே வந்து நிற்பது போல் தோன்றியது. ஸ்ரீமதி ஊ இப்பெண்களை தயார் செய்ததோடு நின்றுவிடவில்லை. அந்தப் பெண் மணக்கப் போகும் யுவனுடன் தானே முதலில் பேசி பார்த்துவிட்டுத்தான் விவாகத்திற்கு அனுமதித்தாள். அவனுக்கு ஒரு தாய் இருந்தால் அவளோடும் பேசிப் பாராமல் பெண்ணைக் கொடுத்து விடமாட்டாள். தீய குணமுடைய ஒரு மாமியாரால் திருமண

வாழ்க்கையே பாழாகிவிடக் காரணங்கள் இருக்கின்றன. மூன்றுமுறை இதன் காரணமாக விவாகத்தைத் தடை செய்ய நேர்ந்தது. அதில் இரண்டுமுறை அந்த யுவர்கள் இந்த பாக்கியத்தை இழந்துவிட மனமில்லாதவர்களாய் தங்களுடைய தாயிடமிருந்து தனியே பிரிந்து வந்துவிட்டனர்.

இது ஸ்ரீமதி ஊவிற்கு சிறிது கலக்கத்தைக் கொடுத்தது. ஒரு மகன் தன்னுடைய தாயின் வீட்டை விட்டு வருவது தவறு என்பதை அவள் நன்கு அறிவாள். ஒரு முறை ஆண்ட்ரூ அவளிடம் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். அவளுக்கு வயதாக, வயதாக அவர் அவளுடைய உள்ளத் திரையில் மேலும் மிகத் தெளிவுடன் தோன்றலானார். ஒரு மழைக் கால தினத்தில் பெங்மோவின் பாடங்கள் முடிந்ததும் அவர் கூறியதை அவள் நன்றாக நினைவு வைத்திருந்தாள். வாசலில் பனிநிறைந்து கிடந்தது. அந்த வெண்மையான பனியினூடே அவருடைய பெரிய காலடிகள் மட்டும் காணப்பட்டன. பெங்மோ, இங் ஆகியவர்கள் கூட தாழ்வாரத்தின் வழியாகவே நடந்து வந்தார்கள். ஆனால் ஆண்ட்ரூ பனியின் மீதே நடந்து வந்தார்.

அவள் அவரைக் கடிந்து கொண்டாள். "உங்களுடைய கால்கள் முற்றிலும் நனைந்து போய் விட்டனவே!"

அவர் அவள் என்ன சொன்னாள் என்பதையே அறியாதவர் போல் தமது கால்களைப் பார்த்துக் கொண்டார். பிறகு ஒன்றும் கூறாமல் புத்தகக் கட்டை அவிழ்த்தார். பிறகு பெங்மோ வந்ததும் அவர் பாடத்தை ஆரம்பித்து விட்டார். அவள் அன்று அங்கேயே உட்கார்ந்து ஒன்றும் பேசாமல் அவர் கூறுவதைக் கேட்டபடி உட்கார்ந்திருந்தாள். ஆனால் பெங்மோ எழுந்து சென்றதும், "ஒரு மகன் தன்னுடைய தந்தையின் வீட்டை விட்டுச் செல்வதை அனுமதிக்கலாமா? அதற்கு எவ்வளவு தூரம் அவனுக்கு சுதந்திரம் இருக்கிறது" என்று கேட்டாள்.

ஏனெனில் அவருடைய கல்வியின் காரணமாக பெங்மோ இங்கும், அங்கும் சுற்றி அலைய விரும்புவான் என்பதை அவள் முன்னமே அறிந்தாள். "அவனுடைய தந்தையின் வீடு அவனுடைய பிறந்த இடமே தவிர வேறென்றுமில்லை" என்று பதிலளித்தார் அவர். அவர் தமது புத்தகங்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார்.

"அப்படியானால் ஒரு மனிதனுக்கு அவன் தன் பெற்றோர்களுக்குச் செலுத்த வேண்டிய கடமைகள் ஒன்றுமில்லையா?" என்று கேட்டாள்.

"நான் அப்படிச் சொல்பவன் அல்ல" என்று அவர் பதில் கூறினார். அவர் அவளை ஒரு கணம் பார்த்து விட்டுத் தமது பார்வையை அப்பால் திருப்பிக் கொண்டார். புன்னகை அவருடைய முகத்தில் ஒளியைப்போல் பரவியது. "நான் எவ்வளவு தூரம் அலைந்து வந்திருக்கிறேன் பாருங்கள்! ஆயினும் என்னுடைய வாழ்க்கை வெனிஸ் நகரத்திலுள்ள ஒரு வீட்டில் தான் ஆரம்பமாயிற்று என்பதை நான் மறப்பதே யில்லை" என்றார்.

"வெனிஸ் நகரத்திலா?" என்று திருப்பிக் கேட்டாள். அவர் இதற்கு முன் தமது பிறந்த ஊரின் பெயரை சொன்னதில்லை.

"சூயெஸவை போன்ற நகரம் அது. அதன் தெருக்களில் எல்லாம் தண்ணீர் ஓடும். ஆனால் நாங்கள் பல்லக்குகளுக்குப் பதில் படகுகளைத்தான் உபயோகிப்போம். நான் சூரியோதய வேளையிலும் சூரியன் அஸ்தமிக்கும் பொழுதிலும் தண்ணீர் பொன்னிறமாக ஓடுவதைப் பார்த்துக் கொண்டு இருப்பேன்" என்று அவர் கூறினார்.

அவர் சற்று நேரம் மௌனமாக எதிரே இருந்த வெள்ளைச் சுவற்றை வெறித்துப் பார்த்தவாறு நின்றார். ஆனால் அவர் தன் மனக்கண்ணால் அப் பொன் நீர் ஓடும் தெருக்களைப் பார்த்தார் என்பதை அவள் அறிவாள். பிறகு அவர் தம்மனத்தை மீண்டும் இங்கே கொண்டுவந்து அவளிடம் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டார்.

இவ்விதமாகத்தான் அவள் வசித்து வந்த வீட்டிற்கு சுற்றிலும் இருந்த சுவர்களை யெல்லாம் இடித்து தகர்த்து அவளை அவர் உலகமெங்கும் சுற்றி வரும்படிச் செய்திருந்தார். ஆதலால் இப்போது ஒரு இளைஞன் தனது கொடுமையுள்ள, தாயாரை விட்டு வந்தபோது கூட அவளால் மன அமைதியுடன் இருக்க முடிந்தது. இளைஞர்களும் வாழ வேண்டியவர்கள் தாமே. ஆம்! எல்லோரும் வாழ வேண்டியது தான்!

அவளுக்கு இருந்த இந்தப் பரந்த அறிவு இப்போதும் லியாங்மோ தன்னுடைய உதடுகளை கோபத்துடன் கடித்துக் கொண்டு தனது சகோதரன் பெங்மோவைப்பற்றி முறையிட வந்த பொழுதும் அவளுக்குப் பெரும் துணை புரிந்தது. அவள் தன் பிள்ளைகளை தினம் தினமும் பார்ப்பதில்லை. ஏன், மாதத்திற்கு ஒருமுறை கூட பார்ப்பதில்லை. ஆகவே ஒவ்வொரு முறையும் அப்போது தான் அவர்களைப் புதிதாகச் சந்திப்பது போல் பார்த்தாள். அதுபோல் இன்றைய தினம் லியாங்மோ

வைப் பார்த்ததும் அவன் வெளிகில விஷயங்களில் கைதேர்ந்த வனுகவும் வருங்காலத்தில் ஒரு பெரிய கும்பத்திற்குத் தலைவனுக இருக்கவும் வியாபார தந்திரத்திலும் பணம் சம்பாதிப்பதிலும் அதிசாமர்த்தியசாலியாகவும் இருப்பான் என்பதை அறிந்து கொண்டாள்.

வணக்கங்கள் தெரிவிக்கப் பட்டதும் லியாங்மோ, வந்த விஷயத்தை உடனே ஆரம்பித்து விட்டான். "என்னுடைய தம்பி வரவர ஒரு பெரும் பைத்தியக்காரனுகி விட்டான். மெங் வெளியே சென்று பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறான். அது முடியாத காரியம். லின்யி ஒரு பள்ளிக்கூடத்து உபாத்தியாயினியைப் போல் இருக்கிறாள். தலைமயிரை வெட்டி விட்டுக் கொண்டிருக்கிறாள். அவளுடைய தலைமயிர் வெயிலினால் செம்பட்டையாகிக் கிடக்கிறது. ருலாகைப் பார்த்தால் ஒரு கம்யூனிஸ்ட் பெண்பிள்ளை யென்று சொல்லலாம். இதெல்லாம் எனக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. இதெல்லாம் நம்முடைய குடும்பத்திற்கு தகுதியாய் இருக்கிறதா?" என்று கேட்டான் லியாங்மோ.

ஸ்ரீமதி ஹ புன்னகை செய்து, "நீ அந்த கிராமமெல்லாம் வெகு சுத்தமாக இருப்பதைப் பார்க்கவில்லையா?" என்று கேட்டாள்.

ஆனால் லியாங்மோ எந்த நன்மையையும் காணத் தயாராக இல்லை. அவன் திடமாக, "நான் முதலில் நமது குடும்பத்தைப் பற்றிதான் எண்ணுகிறேன். அந்நியர்களைப் பற்றியும், பாமரர்களைப் பற்றியும் நான் சிந்திப்பதில்லை அம்மா. உங்களுக்கும் என் தகப்பனுருக்கும் பிறகு இந்த குடும்பத்தின் பொறுப்பு என்னைத்தானே சார்ந்திருக்கிறது?" என்றான்.

ஸ்ரீமான் ஹவின் பிள்ளைகள் கூட அவரைப் பற்றி அதிகம் பேசுவதில்லை. அவருடைய ஸ்தானம் எதுவாக இருந்தாலும் அவர் இப்போது பெயருக்குத்தான் இருந்து வந்தார். அவர் உண்டு களித்திருப்பதோடு தம்மை தனியே விட்டால் அதுவே போதுமென்று இருந்து வந்தார். ஆனால் அவருடைய பேரக் குழந்தைகள் அவரிடம் மிக அன்பாய் இருந்தன. அவர்கள் அவருடைய பகுதிக்குச் சென்று கும்மாளம் போடுவார்கள். அவர் அவர்களுக்கு அநேக தின்பண்டங்கள் கொடுத்து அவர்களோடு விளையாடிக் களித்து மகிழ்வார். மல்லிகாவும் தனக்கு குழந்தை இல்லாததால் அவர்களை அன்புடன் தன்னுடைய சொந்த குழந்தைகளைப் போல் நடத்தினாள். ஏனெனில், அப்போதுதான் அவளுக்கு குழந்தை இல்லாத குறையை அவர்

உணரமாட்டார். மேலும், கிழவர்களுக்கு அருகே எப்பொழுதும் குழந்தைகள் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் மரண பயத்தை மறந்திருப்பார்கள் என்பதையும் அவள் அறிவாள்.

லியாங்மோ மூத்த மகன் என்ற முறையில் எப்பொழுதும் தனது தந்தைக்குரிய மரியாதையை, பேச்சளவிலாவது கொடுப்பதற்குத் தவறுவதில்லை. அதன் மூலம் அவருடைய பலஹீனத்தையும் மறைக்க முயன்றான். இப்போது பெங்மோவைப் பற்றிய முறையீட்டை மேலும் தொடர்ந்தான்.

"என்னுடைய சிறிய தம்பி என்மோ இன்னும் பள்ளிக் கூடம் போகவில்லையே, இது நன்றாக இருக்கிறதா?"

"என்மோ படிப்பதை விரும்பவில்லை" என்று கூறினாள் ஸ்ரீமதி ஊ.

"இது ஒரு காரணமா? அவனை ஏன் போகவேண்டுமென்று கண்டிக்கக் கூடாது? அவனைப் பார்த்தால் நமது வீட்டுப் பையன் மாதிரியாகவா இருக்கிறான்? அவனுக்கும் ஒரு குடியானவப் பையனுக்கும் ஒரு சிறிது வித்தியாசம் கூட இருப்பதாகத் தெரியவில்லை" என்றான் லியாங்மோ.

"நல்லது. நல்லது..." என்றாள் அவள் மிகமிக மிருதுவான குரலில். லியாங்மோ, அவள் தன்னைப் பேசாதிருக்கும்படி சொல்கிறாள் என்பதை உணர்ந்து தனது கோபத்தை ஒரு கப் டீயைக் குடித்துத் தணித்துக் கொண்டு வெறுப்பு தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான்.

ஸ்ரீமதி ஊ அதிக நேரம் பேசவில்லை. அவளுக்கு மௌனத்தினுடைய விலை தெரியும். அது ஒரு அழகிய தினம். வானம் நிர்மலமாக இருந்தது. குளத்திலிருந்து ஒரு மெல்லிய பனிப் படலம் கிளம்பி இருந்தது. பூமியிலிருந்து கிளம்பிய மண்வாடை அறைகளில் பரவியது.

முடிவில் ஸ்ரீமதி ஊ, "உன்னுடைய வீட்டில் நீ நன்றாக சந்தோஷமாக இருக்கிறாயா மகனே?" என்று கேட்டாள்.

லியாங்மோ தேநீர் கிண்ணத்தைக் கீழே வைத்து விட்டு "கண்டிப்பாக! எனக்கு அங்கே எல்லாரும் பணிந்து நடக்கிறார்கள். என்னுடைய குழந்தைகள் சுகமாகவும் புத்திசாலிகளாகவும் இருக்கின்றனர். அம்மா, உனக்குத் தெரியுமா. என்னுடைய மூத்தமகன் மேற்கத்திய பள்ளிப் படிப்பை முடித்து விட்டான்" என்றான்.

"ஓ, அப்படியா" என்றாள் ஸ்ரீமதி ஊ. "ஊரில் எல்லாம் நன்றாக நடக்கிறதா?"

"நன்றாகத்தான் நடக்கிறது. வியாபாரம் கொஞ்சம் மந்தமாக இருக்கிறது. ஆனாலும், இந்தப் பருவத்திற்கு அப்படி ஒன்றும் மோசமாகவும் இல்லை. யுத்தம் முடிந்து விட்டதால் வெளி நாட்டுச் சரக்குகள் எல்லாம் வருகின்றன. அந்நியர்கள் ஆஸ்பத்திரிக்காக ஒரு புதிய கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அநேக வெள்ளைக்காரர்கள் வரப் போவதாகக் கேள்வி" என்று கூறினான் லியாங்மோ. "இது நல்லதா?" என்று ஸ்ரீமதி ஊ கேட்டாள்.

லியாங்மோ வறட்சியாக, "பெங்மோ ரொம்ப சந்தோஷப் படுகிறான். என்னைப் பொறுத்தவரை நான் மிகவும் அதிர்ஷ்டக்காரன். மெங்கிற்கு எந்த வெள்ளைக்காரவைத்தியனும் தேவையில்லை. என்னுடைய குழந்தைகளுக்கும் ஒரு நோயும் வருவதில்லை" என்றான்.

"ஒரு முறை கேங் வீட்டின் பேரன் ஒருவனுக்கு நம்முடைய பாட்டியின் மூலிகை ஒன்றைக் கொடுத்து வியாதியைச் சரிப்படுத்தினேன். அவன் இப்பொழுது ஒரு பெரிய பையனாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்" என்றாள் ஸ்ரீமதி ஊ மெல்லக் கூறினாள்.

இதற்கு முந்திய வருஷம் ஸ்ரீமதி கேங் இறந்து விட்டாள். அவள் சவப்பெட்டியில் படுத்திருந்த காட்சி ஸ்ரீமதி ஊவின் கண்முன் தோன்றியது. அப்பெட்டி சாதாரண சவப்பெட்டிகளைப் போல் இரண்டு மடங்கு பெரியதாக செய்யப்பட்டிருந்தது. அதில் ஸ்ரீமதி கேங் ஸேடன் ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டு தனது பருத்த கைகளை இருபுறமும் வைத்தபடி படுத்திருந்தாள். அவள் இறந்த பிறகு, ஸ்ரீமதி ஊ சில சமயங்களில் பழைய இனிய நினைவுடன் அவளைப்பற்றி எண்ணலானாள். ஸ்ரீமதி கேங் குதூகலம் நிறைந்த ஒரு சிறு பெண்ணாக இருந்தாள். சில சமயங்களில் மட்டும் தனது மூக்கு இவ்வளவு அகலமாக இருக்கிறது, அல்லது இவ்வளவு தட்டையாக இருக்கிறது என்பது போன்ற சிறு விஷயங்களுக்காகத் துயர் கொள்வாள்.

ஸ்ரீமான் கேங் விரைவிலேயே இன்னொரு இளம் பெண்ணை மணந்து கொண்டார். அவளுடைய குணமற்ற தன்மை அப்பெரிய குடும்பத்தை மிகவும் ஆட்டி வைத்தது. ஆனால் இப்போதெல்லாம் இது ஸ்ரீமதி ஊவிற்கு சம்பந்தப்

பட்ட விஷயமல்லவே. அவளுக்குத் தலைவாரி விடும்போது, அவள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், இந்தான் இதைப் பற்றி வம்பளந்து கொண்டிருப்பாள்.

லியாங்மோ தனது தாயின் வார்த்தையை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தான். அவள் இந்த எண்ணங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அவனை நோக்கி ஒரு புன்னகையுடன், "நல்லது, மகனே. ஒவ்வொருவருடைய ஆத்மாவும் அதற்குத் தக்க வளர்ச்சியை அடைய வேண்டும். ஒருவரை மற்றொருவர் பலவந்தப் படுத்தக் கூடாது. அதனால் பலவந்தப் படுத்துபவர்களுக்கும் நீமை உண்டாகாதிருப்பது இல்லை. நீ உன்னுடைய வீட்டில் வாழ்ந்து வா. பெங்மோவை அவனுடைய வீட்டில் வாழும்படி விடு" என்று கூறினாள்.

லியாங்மோ கோபத்துடன், "அம்மா, பெங்மோவிடம் மட்டும் ஒரு விஷயம் சொல்லிவிடு. அவனுடைய கை நீளத்தை மட்டும் என்னிடம் காட்ட வேண்டா மென்று சொல்லி விடு" என்றான்.

"அப்படியே செய்கிறேன்" என்று ஸ்ரீமதி ஊ வாக்களித்தாள். லியாங்மோ சென்று விட்டான். அடுத்த தடவை ஸ்ரீமதி ஊ பெங்மோவைப் பார்த்தபோது அவள் இவ்விதம் புத்திமதி கூறினாள்.

"மகனே, உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு ஆத்மாவிற்குப் போதிப்பதானது அதை சொர்க்கத்திற்கு அழைப்பதாகும். அதைப் பலவந்தப் படுத்துவது அல்ல என்று உன்னுடைய ஆசிரியர் ஒரு முறை கூறியிருக்கிறாரே?"

பெங்மோவின் கோபத்திலிருந்து ஆண்ட்ரூ கூறிய அவ்வார்த்தைகளை அவன் நினைவு வைத்திருக்கிறான் என்பது அவளுக்குப் புலப்பட்டது. ஆண்ட்ரூவினிடமிருந்த விசேஷ குணமே அதுதான். அவருடைய வாழ்க்கையே மற்றவர்களை சொர்க்கத்திற்கு அழைப்பதாக இருந்தது.

பெங்மோ தனது கைகளின் மீது தலையைச் சாய்த்துக் கொண்டு, "நீ ஏன் இதை நினைவு படுத்துகிறாய் என்பது எனக்குத் தெரியும். எனக்கு அதைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்ட தென்பதையும் நானறிவேன். என்னுள் அடங்கியிருக்கும் சக்தியின் வேகத்தை நான் எவ்வளவுதான் கட்டுப் படுத்த முயன்ற போதிலும் என்னையும் அறியாது அது கரை புரண்டு ஓடி மற்றவர்களுக்குத் தொல்லை கொடுத்து விடுகிறது" என்று கூறினான்.

அவள் அவனைப் பேசவிடுத்து மௌனமாக உட்கார்ந்திருந்தாள். தன் உள்ளத்திலிருப்பதை அவன் யாரிடமாவது திறந்து பேசுவது நல்லது. அது அவளிடமல்லாது வேறு யாரிடம் சென்று பேசப்போகிறான்! மீண்டும் இந்த மகனிடம் ஆண்ட்ரூவைப் பற்றிப் பேசவேண்டு மென்ற விசித்திரமான ஆவல் அவளுக்கு ஏற்பட்டது. அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மிகவும் நெருங்கி இருந்தனர். இந்த மகனும் அவனுமாகத்தான் இந்த வீட்டிற்குள் ஆண்ட்ரூ கொண்டு வந்த அறிவுச் செல்வத்தைப் பகிர்ந்து கொண்டனர். இப்போதும் அவள் அந்த ஆவலைக் கட்டுப் படுத்திக் கொண்டாள். ஆனால் இதைமாத்திரம் சொல்வதற்குத் துணிந்தாள்.

"அந்த நெட்டைப் பாதிரியார் இவ் வீட்டிற்குள் அப்படி எதைக் கொண்டு வந்தாரென்று நான் அடிக்கடி சிந்தித்துப் பார்க்கிறேன். நம்முடைய குடும்பம் இன்றைக்கு நேற்றைக்கு ஏற்பட்டதல்ல. ஆதலால் வாழ்வதற்கே நமக்கு ஞானம் பற்றுமல் இருக்கிறது என்று சொல்ல முடியாது. பல நூற்றாண்டுகளாக நமது முன்னோர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர் என்ன மாறுதலைக் கொண்டு வந்தார் என்று தெரியவில்லை. ஆயினும் நமக்குள் ஏதோ மாறுதல் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. அதுவும் நீயும் நானும் தான் இவ்வீட்டிற்குள் இம்மாறுதலைக் கொண்டு வந்திருக்கிறோம். அது என்னவென்று உனக்குத் தெரிகிறதா?" என்று கேட்டாள்.

"ஒவ்வொரு ஆத்மாவும் சுதந்திரத்தோடு வாழவேண்டும் என்ற நியதியை அவரிடமிருந்து நாம் கற்றுக் கொண்டோம்" என்றான் பெங்மோ.

"எவ்வளவு தெளிவாகவும், சுலபமாகவும் நீ கூறி விட்டாய் அதை!" என்றாள் அவள். அவளுடைய குரலிலிருந்து அவன் அக்கணம் ஆண்ட்ரூ அவ்வறையில் தனது மகனின் அருகே நின்று கொண்டு தங்கள் இருவரையும் எல்லையற்ற அன்புடன் நோக்கிக் கொண்டிருந்தார் என்பதை உணர்ந்தாள் என்று ஒருவராலும் சொல்லியிருக்க முடியாது. இதற்கு முன் அவள் தனியே இருக்கும்போது தான் ஆண்ட்ரூ அடிக்கடி காட்சியளித்திருக்கிறார். ஆனால் மற்றொருவர் இருக்கும்போது அவர் அவளுக்குத் தோன்றியதேயில்லை.

அவள் பெங்மோவை நோக்கி "உயிரோடிருந்தால் நீ இப்போது சொல்வதையெல்லாம் அவர் ஆமோதிப்பார் என்று நினைக்கிறேன்" என்று கூறினாள்.

"நீ அப்படியா நினைக்கிறாய்?" என்றான் பெங்மோ நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு. அவள் கூறியதால் ஏற்பட்ட மகிழ்ச்சி அவனுள் புதிய சக்தியை உண்டு பண்ணிற்று. "அம்மா, நான் ஒரு புதிய விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். அந்நியர் ஆஸ்பத்திரியிலிருக்கும் டாக்டர்களைக் கூப்பிட்டு நம்மூர் வைத்தியர்களுக்கு, சாதாரண வியாதிகளைப் போக்கும்படியான முறைகளைக் கற்பிக்க ஏற்பாடு செய்தாலென்ன? நம்முடைய ஜனங்களில் அனு வசியமாக எவ்வளவுபேர் இறந்துபோகிறார்களே, நீ அதற்கு என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

அவன் உற்சாகத்துடனும் ஆவலுடனும் ஆர்வம் நிறைந்த குரலில் சொல்லிக்கொண்டேபோனான். ஆனால் அவள் காதில் ஒன்றுமே விழவில்லை. அவள் ஆண்ட்ரூவைப் பற்றி எண்ண மிட்டுக்கொண்டிருந்தாள். அவருடைய அழகிய பெரிய கைகளைத் தன் மனக்கண்ணால் பார்த்தாள். அவருடைய ஒரு கை எப்போதும் அவரது மார்பில் இதாங்கிய சிலுவையைப் பிடித்துக்கொண்டிருக்கும். அவருடைய ஜபமாலை அறுந்து போனதும் அவர் அதை ஒரு நூலால் கட்டி வைத்திருந்தார். அந்த சிலுவையும் இப்போது உடைந்துவிட்டது. அவர் தமது சவப் பெட்டியில் படுத்திருந்த பொழுது இதை அவள் கண்டாள்.

"நல்லது மகனே—நல்லது—நல்லது" என்று அவளுடைய வாய் முணு முணுத்தது.

அவன் தன்னுடைய எண்ணற்ற புதிய திட்டங்களுடன் எழுந்துபோக ஆரம்பித்ததும்தான் அவளுக்கு லியாங்மோ விற்குத் தான் கொடுத்த வாக்குறுதியைப் பற்றி நினைவு வந்தது. அவள் தனது கையை நீட்டி பெங்மோவின் கையைப் பிடித்து நிறுத்தி "இதை மட்டும் நினைவுவைத்துக் கொள்வாய் மகனே—ஒருவரையும் பலவந்தப் படுத்தாதே—லியாங்மோ, மெங் இவர்களைக் கூட—" என்றாள்.

"ஓ! அவர்கள் இருவருமா! நான் அவர்களை எப்பொழுதோ விட்டு விட்டேனே" என்று கூறினான் பெங்மோ.

அவன் சென்று விட்டான். ஆண்ட்ரூவும் சென்று விட்டார். அவள் தனியே தன்வயமாகி உட்கார்ந்திருந்தாள்.

* * *

வருடங்கள் உருண்டோடின. ஸ்ரீமதி ஊ தன் அறைகளை விட்டு வெளியே வருவதையே விட்டு விட்டாள். ஆயினும் அவள் வெளி உலகில் நடக்கும் காரியங்களை ஒருவாறு அறிந்து தான் வந்தாள். பிறருடைய துக்கங்களைப் பொறுமையாகக் கேட்பதற்கும் பாரபட்சமற்ற தீர்ப்பு கூறுவதற்கும் அவள் பிரசித்தி பெற்றவளாக இருந்தாள். அவளுடைய புத்திமதியைக் கோரி அனேகர் அவளிடம் வந்தனர். நாட்டிலும் நகரத்திலும் முக்கியமான விஷயங்கள் யாவற்றிலும் அவளுடைய தீர்ப்பே தீர்ப்பாக இருந்தது. உதாரணமாக சிறிய சகோதரி ஹேஷியா ஒருநாள் குளிர்கால இரவு ஒன்றில் தன்னுடைய வீட்டில் தனிமையில் இறந்து கிடந்தபொழுது அவளுடைய உடலை என்ன செய்வது என்ற பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஸ்ரீமதி ஊவிடம்தான் வந்தார்கள். அவளுடைய மெல்லிய தேகத்தை ஸ்ரீமதி ஊ, தன் வீட்டின் கோவிலுக்கே வரவழைத்து கடைசிச் சடங்குகளை தானே முன்நின்று நடத்தினாள். ஏனெனில் சகோதரி ஹேஷியா தன் இனத்தாரிடமே சண்டையிட்டுக்கொண்டு பிரிந்து வந்து விட்டாள். அதனால் அவளுக்காகத் துக்கப்படுவதற்கு அவளுடைய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர்கூட அங்கு இல்லை. அவ்வூரில் இருந்த அந்நியர்களில் ஒருவர்கூட அவளுக்கு வேண்டியவர்களாக இல்லை. அவளுடைய கிழச் சமையல்காரன் ஒருவன் மட்டும் தான் அவளுக்காகத் துக்கம் கொண்டாடினான். அவன்தான் ஸ்ரீமதி ஊவிடம் வந்து தனது எஜமானி பழைய கந்தல் போர்வையைப் போர்த்தவாறு மடியில் அவளுடைய வேத புத்தகத்தை வைத்தவாறு நாற்காலியிலேயே இறந்து கிடந்தாள் என்று கூறினான்.

கோவிலில் மண் தெய்வங்களுக்குக் கீழே, ஆண்ட்ரூவின் படம் வைத்திருந்த மேஜைக்கு அடியில் சிறிய சகோதரி ஹேஷியாவின் சவப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது! கோவிலில் பெண்கள் எல்லோரும் சென்று விட்டனர். பிரேமா என்ற பெண் மாத்திரம்தான் அங்கு இருந்தாள். அவள்தான் தினமும் மெழுகு வர்த்தியை ஏற்றி வைத்து வந்தாள்.

அக்கிழப் பூசாரி வயது மிகுதியினால் தள்ளாடிக் கொண்டிருந்ததால் அவள் அவனுக்கு உதவி செய்து வந்தாள். அந்தக் கிழவிக்கு உதவி செய்வதற்காகவும் ஒரு ஆள் நியமிக்கப் பட்டிருந்தான். ஸ்ரீமதி ஊ, தன் இனத்தாரை எல்லாம் பிரிந்து வந்து தனியே வாழ்க்கை நடத்திய அந்த அந்நிய பெண்ணின் முகத்தைப் பார்த்தபொழுது அவள் முன்பு அடிக்கடி கூறிய உபதேச மொழிகளை நினைவுக்கு கொண்டுவர முயன்றாள். ஆனால் அது அவளுக்கு நினைவு வரவில்லை. தான் நினைத்துக்

கொண்டிருக்க விரும்பாத விஷயங்களோடு சேர்த்து அதையும் அவள் மறந்து விட்டாள். அதனால் தெய்வங்களின் முன்னால் ஒரு ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்துவிட்டு தெய்வத்தை நோக்கி அந்த அந்நிய ஆத்மாவையும் ஏற்றுக் கொள்ளும்படி பிரார்த்தித்துக் கொள்ளத்தான் முடிந்தது. ஒரு நல்ல நாள் வரும்வரை சகோதரி ஹோஷியாவின் சவப்பெட்டி கோவிலிலேயே மூடி வைக்கப்பட்டு இருந்தது. பிறகு அந் நன்னாளில் நகரத்திற்கு வெளியே இருந்த மலைப்பாங்கான பிரதேசத்தில் புதைக்கப்பட்டது. ஸ்ரீமதி ஊ அதன் மீது ஒரு கல் நாட்டி அதில் அவளைப் பற்றிய விஷயங்களைப் பொறித்து வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டாள். ஒரு சமயம் அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது அப்பக்கம் வர நேர்ந்தால் அவர்கள் அதைப் பார்க்கக் கூடும் என்பது அவள் எண்ணம்.

ஒரு விசித்திரமான சம்பவம் மட்டும் நடந்திராவிட்டால் அவள், இப்படி எங்கே நடக்கப் போகிறது என்றுதான் எண்ணியிருப்பாள்.

யுத்தம் முடிந்ததும் நாட்டுப் புறங்களிலெல்லாம் ஒரே கலவரமும் குழப்பமுமாக இருந்தது. வெள்ளையர்கள் அநேகர் இந்தக் குழப்பத்தை நிவர்த்திக்கவும், சீர்திருத்தங்கள் செய்வதற்காகவும் வந்தனர். ஆனால் இவை ஒன்றும் ஊ குடும்பத்தைப் பாதிக்கவில்லை. இவர்களுடைய நகரம் கலவரமடைந்த பிரதேசத்துக்கு வெகு தூரத்தில் இருந்தது. ஆயினும் அந்நியர்கள் ஏதோ காரணங்களால் அங்கு வருவதும், போவதுமாக இருந்தார்கள். அதில் பெங்மோ அவர்களை அழைத்து வரவேற்றதும் ஒரு காரணம். வெள்ளையர்கள் யாராவது வந்தால் பெங்மோ உடனே அவர்களை அழைத்து வந்து தன்னுடைய வேலையைப் பற்றி அவர்களுடைய யோசனையைக் கேட்டுக் கொண்டான். அவர்களும் வந்தனர். இவ் வேலை எங்கும் பரவி விட்டதால் பெங்மோவின் பெயர் பிரபலமடையாமல் போய்விட்டது.

இந்த வெள்ளையர்களை ஸ்ரீமதி ஊ பார்ப்பது இடையாது. அவளுக்கு அவர்களுடைய பாஷை தெரியாததாலும் அவர்களுடன் சம்பாஷிப்பது மிகவும் கடினமாக இருந்தது. மேலும் அவள், "என்னுடைய வாழ்க்கை நிறைவு பெற்று விட்டது. அதில் மற்றவர்களை எதற்கு அனுவசியமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று மொழிந்தாள்.

ஆனால் ஒருநாள் பெங்மோ அவளுக்கு விசேஷமான செய்தி ஒன்று அனுப்பினான். கடல் கடந்த நாட்டிலிருந்து

ஒருவர் வந்திருப்பதாகவும் அவரை அவள் பார்க்க வேண்டுமென்று தான் விரும்புவதற்கு ஒரு முக்கிய காரணம் இருப்பதாகவும் செய்தி அனுப்பினான். அவள் இதற்குச் சம்மதிக்கவே சில மணி நேரத்திற்குப் பிறகு பெங்மோ தன்னுடன் ஒரு அந்நிய மனிதனை அழைத்துக்கொண்டு வந்தான். இளைஞனை அவன் உயரமாகவும், கறுப்பாகவும் இருந்தான். அவனுடைய நிறத்தைக் கண்டு ஸ்ரீமதி ஊ ஆச்சரியமடைந்தவளாய் வந்தனோபசாரம் கூறி முடிந்ததும், பெங்மோவை நோக்கி, "இவர் ஒரு அந்நிய மனிதரா? இவ்வளவு கறுப்பாக இருக்கிறாரே!" என்று கேட்டாள்.

"இவர் அந்நியர்தான். இவருடைய முன்னோர்கள் இத்தாலியைச் சேர்ந்தவர்கள். சகோதரர் ஆண்ட்ரூவின் பிறப்பிடம் அதுதான் என்று உனக்கு நினைவிருக்கிறதா, அம்மா?" என்றான் பெங்மோ.

ஸ்ரீமதி ஊவின் உள்ளம்தான் எப்படி நெகிழ்ந்தது! தனக்கு அம்மனிதனுடைய பாஷை தெரியாதென்பதையும் மறந்து தன் கைகளை வெள்ளிப் பூண்போட்ட கைத்தடியின் மேல் ஊன்றியவாறு ஆவலுடன் முன்புறம் நகர்ந்து, "உங்களுக்கு அந்தப் பாதிரியாரைத் தெரியுமா?" என்று கேட்டாள்.

பெங்மோ அவசரத்துடன் அதை மொழி பெயர்த்துச் சொல்ல முன் வந்தான். பிறகு ஸ்ரீமதி ஊவும் அந்த மனிதனும் பெங்மோவின் மூலம் பின்வருமாறு பேசினர்.

அந்த இளைஞன், "எனக்கு அவரைத் தெரியாது. ஆனால் என் பெற்றோர்கள் அவரைப்பற்றி எனக்குக் கூறியிருக்கிறார்கள். அவர் என்னுடைய சிற்றப்பா" என்று கூறினான்.

"உம்முடைய சிற்றப்பாவா! அவருடைய நெருங்கிய பந்துவா நீர்?" என்று அவள் அந்த இளைஞனை உற்று நோக்கினாள்.

ஒவ்வொன்றாக அவருடைய சாயல் இவனிடம் தென்பட ஆரம்பித்தன. இதோ, ஆண்ட்ரூவினுடைய கரிய விழிகள். ஆனால் அவ்வளவு அகன்றதாக இல்லை. இதோ, ஆண்ட்ரூவினுடைய தலையினுடைய வடிவமும் கைகளும் தென்படுகின்றன. அந்த இளைஞனுடைய கைகள் சற்று மெல்லியதாக இருந்த போதிலும் ஆண்ட்ரூவினுடைய கைகளைப் போலவே இருந்தன. அவனுடைய முழு உருவமே ஆண்ட்ரூவினுடையதை விட மெலிந்து இருந்தது. ஆனால் கண்களில் தோன்றிய பார்வை மட்டும் அவருடையதே அல்ல. உள்ளே இருக்கும் ஆத்மா அத்தனை முற்றிலும் வேறுபட்டது.

அவள் பெருமூச்செறிந்து விட்டுப் பின்புறம் சாய்ந்து கொண்டாள், இல்லை. இந்த ஆத்மா அவருடையதை ஒத்தி தல்ல.

"நீர் உமது சித்தப்பாவைப் பார்ப்பதற்காக இங்கு வந்தீரா?" என்று கேட்டாள்.

அம்மனிதன், "ஆம், என்னுடைய பெற்றோர்களுக்கு அவர் இருப்பிடம் தெரியும். ஆனால் அவர் கடைசி கடைசியாக எங்களுக்குக் கடிதமே எழுதவில்லை. நான் இவ்விடத்திற்குச் சமீபமாக வந்ததால் அவர் இங்கு இருக்கிறாரா என்று பார்த்து என் தகப்பனாருக்கு எழுதுவதாகச் சொல்லிவிட்டு வந்தேன்" என்றான்.

"அவரை எங்கள் நிலத்தில் புதைத்திருக்கிறோம். என்னுடைய மகன் உம்மை அச் சமாதிக்கு அழைத்துச் செல்வான்" என்று கூறினாள்.

ஒரு கண நேரம் அவர்கள் எல்லோரும் மௌனமாக இருந்தனர். ஸ்ரீமதி ஊவின் உள்ளத்தில் பொறுமை உண்டாயிற்று. அவள் தன் கண்களை மூடித் தனது உள்ளத் திரையில் தோன்றிய ஆண்ட்ரூவின் முகத்தை நோக்கினாள். "நீங்கள்...நீங்கள் எங்களுக்கு மட்டுமே உரியவர்" என்று அவரை நோக்கிக் கூறினாள்.

அவள் கண்களைத் திறந்து எதிரே உட்கார்ந்திருந்த அவரது உறவினரைப் பார்த்தாள். ஆ! ஆண்ட்ரூவிற்கும் குடும்பமும் சொந்தக்காரர்களும் வெகு தூரத்தில் இருந்திருக்கிறார்கள்!

அந்த இளைஞன் புன்னகை செய்து, "அம்மா, அவர் ஏன் எங்களை எல்லாம்விட்டு பிரிந்து வந்து இவ்வளவு தூரத்தில் வசித்து வந்தார். ஏன் எங்களுக்கு கடிதம்கூட எழுதுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்" என்றான்.

பெங்மோ அவனுக்காக பதிலளித்தான். "எங்களுக்குத் தெரியாது."

அவ் வாலிபன், "அவர் ஒரு மதத் துரோகி என்று கூறப் பட்டார். மத குருமார்கள் அவரை மதத் துரோகி என்று கூறி தேசப்பிரஷ்டம் செய்து விட்டனர். அதற்குப் பிறகு அவரிடமிருந்து எங்களுக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை. நாங்கள் அனுப்பிய பணத்தையும் அவர் திருப்பி அனுப்பி விட்டார். வீட்டிற்கும் திரும்பி வரவும் மறுத்து விட்டார்" என்று கூறினான்.

பெங்மோ அதிர்ச்சி அடைந்தவனாய், "ஆனால் அவர் ஒரு தீய காரியமும் செய்ததில்லையே" என்று கூறினான்.

அவ்வாலிபன், "அவர் செய்ததற்காக அல்ல. அவர் என்ன எண்ணினார் என்பதற்காக அவர் அவ்விதம் தண்டிக்கப் பட்டார். அவர் ஆண், பெண் இவர்களுள்ளே தான் தெய்வம் இருக்கிறது என்ற கொள்கை உடையவராக யிருந்தார். நம் முடைய காலத்தில் இதை ஒரு பாவமென்று கருதுவதே ஒரு வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் அவருடைய காலத்தில் அது ஒரு பெரும் பாவமாகக் கருதப்பட்டது. அவர் இதைப் பற்றி தலைமை குருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அவர் எனது தந்தைக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் எல்லா கதையையும் எழுதியிருந்தார். அவருடைய கடிதத்தை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னுடைய தாய் அவர் வெகு நாட்களாக தனிமையில் வாழ்ந்து வந்ததன் காரணமாக பைத்தியமாகி விட்டார் என்று கூறினாள்" என்றான்.

இவற்றை பெங்மோ ஸ்ரீமதி ஊவிற்கு மொழி பெயர்த்துக் கூறினான். அவள் ஒரு வார்த்தையும் கூறாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். அவர்கள் அவரை, ஒதுக்கித் தள்ளி விட்டனர்—அவருடைய சொந்த ஜனங்கள்!

அவள் கண்களை மூடித் தனது இதயத்துள், "ஆனால் நாங்கள் உங்களை வெறுத்து ஒதுக்கவில்லை" என்று அவரிடம் [illegible]

அவள் கண்களை மூடியவாறு ஒரு நிமிஷம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அவ்விரு வாலிபர்களும் அவளையே வெறித்துக் கொண்டிருந்தனர். அவள் வெகு நேரம் அப்படி உட்கார்ந்திருக்கவே பெங்மோ கலக்க மடைந்தவனாய் சற்று நகரவும் அவள் கண்களைத் திறந்தாள்.

"இந்த அந்நியனிடம், சமாதிக்குப் போவதற்கு வெகு தூரம் இருக்கிறது. பாதையும் கரடு முரடான குறுகிய பாதை என்று சொல்லு. அப்படி சென்றாலும் அங்கு வெறும் சமாதிதான் இருக்கிறதே ஒழிய வேறொன்றுமில்லை என்று தெரிவி" என்றாள்.

இதைத் தெரிவித்ததும் அவ்விளைஞன், "அது அவ்வளவு தூரமாயிருந்தால், நான் போக வேண்டியது கூட இல்லை. நான் சீக்கிரமே சென்று படகைப் பிடிக்க வேண்டும். நீங்கள் சொல்வது போல் அது வெறும் சமாதிதானே!" என்று கூறினான்.

அவர்கள் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டனர். அவர்கள் சென்றது ஸ்ரீமதி ஜாவிற்கு மகிழ்ச்சியே கொடுத்தது. ஆண்ட்ருவைப் பற்றி இப்போது தெரிந்து கொண்டதை நன்கு ஆலோசித்துப் பார்ப்பதற்காக அவளுக்கு தனிமை வேண்டியிருந்தது. எத்தனை வருடங்களாக அவர் தனிமையில் இங்கு வாழ்ந்து வந்திருக்கிறார்.

'தனிமையில் இல்லை. அவர் வளர்த்து வந்த அக்குழந்தைகளும், அவர் காப்பாற்றிய அப் பிச்சைக்காரர்களும் தான் அவருடன் இருந்தார்களே' என்று எண்ணிக் கொண்டாள்.

பின் அவள் — எவ்விதம் அவருக்காக தன் வீட்டின் வாயிலைத் திறந்து விட்டாள்? அதை அவள் ஒரு நாளும் அறிந்து கொள்ளப் போவதில்லை. அவர் அவளுக்காகவென்று அனுப்பப்பட்டார். அவள் வரவேற்று அவரை உள்ளே அழைத்துக்கொண்டாள். அவரும் தன்னுடனே அழியா வாழ்வை எடுத்துக் கொண்டு வந்து அவளுக்கு அளித்தார்.

ஆம். இப்போது அவள், தன் உடல் மறைந்து போன பின்னரும் தனது ஆத்மா வாழும் என்று நம்பினாள். அவளுக்குக் கடவுளின் மீது நம்பிக்கையில்லை. மதங்களின் மீது பற்றில்லை. ஆனால் அழியா அன்பு ஒன்று. என்றும் நிலையாய் இருக்கும்படி அவளிடத்தில் குடிகொண்டது. அந்த அழியா அன்பே அவளுடைய உறங்கிக் கிடந்த ஆத்மாவை எழுப்பி அதற்கு என்றும் மரணமே ஏற்படாதபடி செய்[illegible]

ஆத்மா [illegible] என்பதை அவள் உணர்ந்தாள்.

TAMIL [illegible] LIBRARY
110731
[illegible] MADRAS